வேத ஆராய்ச்சி: புத்தகம் - 4

எண்ணாகமம்

கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரகாசிக்கப்பண்ணி,
உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். (எண். 6:25)

N.எமில் ஜெபசிங்

கெய்ரோஸ் வெளியீடு, 2020

வேத ஆராய்ச்சி புத்தகம்

எண்ணாகமம்

வேத ஆராய்ச்சி

எண்ணாகமம்

N. எமில் ஜெபசிங்

தொகுத்தவர்

Dr. (Mrs.) ஆனந்தி ஜெபசிங்

கெய்ரோஸ் வெளியீடு

தூத்துக்குடி

2020

Veda Aaraychi - Numbers
வேத ஆராய்ச்சி - எண்ணாகமம்

©Kairos Multimedia Private Limited
First Publication - 2018 (500 Copies)
Second Publication - 2020 (1000 Copies)

Published by:
Kairos Multimedia Pvt. Ltd.,
49/C, Bryant Nagar,
Tuticorin,
Tamil Nadu - 628 008.
Phone No. 0461-4002913, 94444-80250.

Price: 500/-

Printed at:
VST Associated Graphics Private Limited,
No.7, Kamarajar Salai,
Thanthai Periyar Nagar (Alwarthirunagar),
Chennai - 600 087.
Phone: 044-23774230,
Mobile: 98400 37147,
E-mail: vst_smv@yahoo.com

உள்ளடக்கம்

தொகுதி 1

எண்ணாகமம் புத்தகம் என்றால் என்ன?

அத்தியாயம் 1 - எண்ணாகமம்-முகவுரை

1.1 எண்ணாகமம் என்று ஏன் பெயர் கொடுக்கப்பட்டது? - 1
1.2 எண்ணாகமம் எப்பொழுது எங்கே எழுதப்பட்டது? - 1
1.3 எண்ணாகமம் சம்பவங்கள் நிகழ்ந்த காலங்கள் - 2
1.4 எண்ணாகமம் புத்தகத்தின் வடிவமைப்பு - 2
1.5 எண்ணாகமம் புத்தகத்தின் ஆசிரியர் யார்? - 3
1.6 எண்ணாகமம் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற புத்தகங்கள் - 3
1.7 எண்ணாகமம் புத்தகத்தின் சாராம்சம் என்ன? - 3
1.8 எண்ணாகமம் புத்தகத்தில் கர்த்தராகிய தேவன் - 4
1.9 எண்ணாகமம் புத்தகத்தில் மோசே - 5
1.10 மோசேக்கும் தேவனாகிய கர்த்தருக்கும் உள்ள தொடர்பு - 5
1.11 மீட்கப்பட்ட ஜனங்கள் கடந்து சென்ற ஆன்மீக பாதைகள் - 6
1.12 வனாந்தர வாழ்வும், வாழ்வில் ஆன்மீக கல்வியும் - 6

தொகுதி 2

சீனாய் மலையில் இருந்து வாக்குதத்த பூமியான கானான் தேசம் செல்ல ஆயத்தங்கள்

அத்தியாயம் 2 - வம்சவாரியாக ஜனத்தொகை கணக்கெடுப்பு

2.1 எண்ணாகமம் சம்பவங்கள் துவங்கும் காலம் - 7
2.2 இஸ்ரவேல் மக்களின் கணக்கெடுப்பிற்கு கட்டளை - 8
2.3 கோத்திர வாரியாக கணக்கெடுப்பு - 10
2.4 லேவியருக்கு விசேஷித்த பிரகாரமாக கர்த்தரின் பணி - 13

அத்தியாயம் 3 - வழியில் பாளயம் இறங்க ஒழுங்கு முறைகள்

3.1 பிரயாணம் செய்யும் இடங்களில் இறங்கி பாளயம் அமைக்க ஒழுங்குகள் - 15
3.2 கோத்திர கொடிகளுடன் பாளயம் இறங்க வேண்டும் - 16
3.3 கோத்திரங்கள் பாளயம் இறங்க வேண்டிய இடங்கள் - 18

அத்தியாயம் 4 - லேவியர் ஜனத்தொகை கணக்கெடுப்பும் அவர்கள் பணிகளும்

4.1 பிரயாணத்திற்கு முன் லேவி கோத்திரத்தார் பொறுப்புகள் - 26
4.2 ஆசாரியருக்கு உதவியாக லேவி கோத்திரத்தார் - 27
4.3 தலைப்பிள்ளைகளுக்கு பதிலாக லேவியர்கள் - 30
4.4 லேவி கோத்திர வாரிசு கணக்கெடுப்பும் பணிபிரிவுகளும் - 30
4.5 இஸ்ரவேலின் முதல் பேறானவை லேவியரால் மீட்கப்பட வேண்டும் - 34

4.6 பரிசுத்த பணிமுட்டுகள் சுமக்க கோகாத் புத்திரர் - 36
4.7 திரைகள் சுமக்க கெர்சோன் புத்திரர் - 41
4.8 தூண்கள், தூண்களின் பாதங்கள் சுமக்க மெராரி புத்திரர் - 42
4.9 ஆசரிப்பு கூடாரத்தை சுமந்து செல்ல கூடியவர்களின் தொகை கணிப்பு - 42

அத்தியாயம் 5 - பாளயத்தை பரிசுத்தமாக காத்து கொள்ள கட்டளை

5.1 தீட்டுள்ளவர்களை பாளயத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் - 45
5.2 பிறனுக்கு விரோதமான பாவம் - 46
5.3 குடும்பத்தின் நடுவில் எழும்பும் குரோதம் விலக்கபட வேண்டும் - 48

அத்தியாயம் 6 - நசரேயருக்கு கட்டளைகள்

6.1 நசரேய விரதம் என்றால் என்ன? - 56
6.2 முதலாம் நிபந்தனை: நசரேயர் திராட்ச ரசம் அருந்தலாகாது - 57
6.3 இரண்டாம் நிபந்தனை: நசரேயர் தலைமயிரை கத்தரிக்கலாகாது - 58
6.4 மூன்றாம் நிபந்தனை: நசரேயர் பிரேதங்களை தொட கூடாது - 59
6.5 நசரேய விரதம் பூரணம் பெற்றதும் செலுத்த வேண்டிய பலிகள் - 60

அத்தியாயம் 7 - ஆசீர்வாதங்களை அள்ளி கொடுக்கும் கர்த்தர்

7.1 ஆசாரியன் கொடுக்க வேண்டிய முப்பெரும் ஆசீர்வாதங்கள் - 63

தொகுதி 3

கர்த்தரின் சேவைக்காக கொடுக்கபடும் காணிக்கைகள்

அத்தியாயம் 8 - பலிபீட பிரதிஷ்டைக்கு கோத்திரவாரியாக காணிக்கை

8.1 கோத்திர தலைவர்களின் காணிக்கை - 67
8.2 பலிபீடத்தின் பிரதிஷ்டைக்கு பிரபுக்களின் காணிக்கை - 71
8.3 ஆராதனைக்கு வந்த காணிக்கைகளின் மொத்த விபரம் - 79

அத்தியாயம் 9 - இஸ்ரவேல் புத்திரரின் காணிக்கை லேவியர்

9.1 குத்து விளக்கு ஏற்ற கட்டளை - 82
9.2 லேவியர்களின் பிரித்தெடுப்பும் பிரதிஷ்டையும் - 83
9.3 லேவியர் கர்த்தருடைய பணியை செய்ய பணிக்க படுகின்றனர் - 86
9.4 ஊழியம் செய்ய லேவியர்களின் வயது வரையறுப்பு - 87

தொகுதி 4

பிரயாணத்திற்கு முன் மேலும் ஆயத்தங்கள்

அத்தியாயம் 10 - சீனாய் வனாந்தரத்தில் பஸ்கா ஆசரிக்க கட்டளை

10.1 பஸ்கா பண்டிகை ஆசரிக்க கட்டளை - 89
10.2 முதலாம் மாதம் பதினான்காம் நாள் பஸ்கா பண்டிகை ஆசரிப்பு - 91

10.3 பஸ்கா ஆசரிக்க தடைபட்டவர்கள் - 92
10.4 இரண்டாம் மாதம் பதினாலாம் தேதி பஸ்கா ஆசரிக்க அனுமதி - 93
10.5 தகுதி பெற்றும் பஸ்கா ஆசரிக்காதவனுக்கு தண்டனை - 93
10.6 பரதேசியும் விரும்பினால் பஸ்கா ஆசரிக்கலாம் - 94

அத்தியாயம் 11 - வனாந்தர பிரயாணத்தில் வழி நடத்த போகும் கர்த்தரின் மேகம்

11.1 வாசஸ்தலத்தில் கர்த்தரின் பிரசன்னத்தை காட்டும் மேகம் - 95
11.2 பிரயாணம் புறப்படவும், பாளயம் இறங்கவும் வழி நடத்த போகும் மேகம் - 96

அத்தியாயம் 12 - நிர்வாக தொடர்புகள் வரையறுக்க படுகின்றன

12.1 பாளயங்களை பிரயாணபடுத்த பூரிகைகள் - 99

தொகுதி 5

இஸ்ரவேல் மக்கள் கானானை நோக்கி முதல் கட்ட பிரயாணம்

அத்தியாயம் 13 - மனித உதவியை நாடிய மோசே

13.1 முதல் கட்ட வனாந்தர பிரயாணம் புறப்பட்ட வரிசை ஒழுங்குகள் - 103
13.2 பிரயாணத்தில் ஓபாவின் உதவியை தேடும் மோசே - 107
13.3 இஸ்ரவேல் மக்களை வழிநடத்தும் கர்த்தர் - 109

அத்தியாயம் 14 - மோசேயின் கோபமும் கர்த்தரின் தண்டனையும்

14.1 தங்கள் முறையீட்டால் கர்த்தரை வருத்தும் மக்கள் - 112
14.2 உணவின் இச்சையால் கர்த்தரை வருத்தும் மக்கள் - 116
14.3 மோசேயின் தடுமாறுதலும் தேவனின் தேற்றுதலும் - 122
14.4 70 நிர்வாக தலைவர்களை தெரிந்தெடுக்க கர்த்தரின் கட்டளை - 126
14.5 கர்த்தர் தலைவர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறார் - 129
14.6 காடை உணவும் இச்சையினால் வந்த வாதையும் - 131

அத்தியாயம் 15 - மோசேக்கு விரோதமாக எழும்பும் சொந்த குடும்பம்

15.1 மோசே மேல் பொறாமை கொள்ளும் மிரியாமும் ஆரோனும் - 135
15.2 கர்த்தர் மோசேக்காக பேசுகிறார் - 142
15.3 பகை, பொறாமை இவைகளின் விளைவு - 148
15.4 மிரியாமுக்காக கர்த்தரிடம் பரிந்து பேசும் மோசே - 151

அத்தியாயம் 16 - கானானை வேவு பார்த்து வந்தவரின் அறிக்கைகள்

16.1 பாரான் வனாந்தர பிரயாணம் - 153
16.2 கானான் தேசத்தை சுற்றி பார்க்க கர்த்தரின் கட்டளை - 155
16.3 கானான் தேசத்தை சுற்றி பார்க்க அனுப்பப்பட்ட 12 பேர் - 157
16.4 வேவுகாரர்கள் கொண்டு வந்த இருவித செய்திகள் - 166

அத்தியாயம் 17 - வாக்குதத்த பூமிக்கு அருகில் வந்தும் அவிசுவாசத்தினால் இழந்த ஆசீர்வாதம்

17.1 இஸ்ரவேல் ஜனங்களின் கூக்குரல் - 172
17.2 காலேபும் யோசுவாவும் ஜனங்களுக்கு கூறிய 7 அறிவுரைகள் - 175
17.3 குறுக்கிடும் கர்த்தர் - 176
17.4 மோசேயின் மன்றாடுதலுக்கு கர்த்தரின் பதில் - 182
17.5 ஆசீர்வாதம் பெறுவோரும் தண்டனைக்கு உள்ளாவோரும் - 185

தொகுதி 6

வனாந்தரத்தில் அலைந்து திரிந்த 38 வருடங்கள்

அத்தியாயம் 18 - கானான் தேசத்தில் செலுத்த வேண்டிய பலிகள்

18.1 திருந்தி வாழ குறிப்புகள் - 196
18.2 சுகந்த வாசனையான தகனபலி - தனி மனிதனாக உன்னை அர்ப்பணித்து விடு - 197
18.3 போஜனபலி-ஐக்கியமாக வாழ் - 200
18.4 பானபலி-உறுதியாய் நிலைத்து நில் - 201
18.5 சமாதானபலி-பின் வாங்கியது போதும், முன்னாக செல் - 202
18.6 ஏறெடுத்து படைக்கும் காணிக்கை-குடும்பமாக அர்ப்பணித்து விடு - 204
18.7 சகல பலிகள்-முழு சமுதாயமாக அர்ப்பணித்து விடு - 207
18.8 செய்ய தக்கதை செய்யாமல் இருக்காதே - 208
18.9 செய்ய தகாததை செய்யாதே - 210
18.10 துணிகரமான பாவத்தை விட்டு விலகு - 213
18.11 உன் கண்களை என்மேல் பதித்து வாழ் - 216

அத்தியாயம் 19 - கர்த்தருடைய பணியில் பதவிக்கு எழும்பும் போட்டிகள்

19.1 சொந்த கோத்திரத்தில் இருந்து எதிர்ப்பு - 221
19.2 பதவிக்கு ஆசைபட்ட தலைவர்களை பூமி விழுங்கியது - 227
19.3 பட்சிக்கும் அக்கினியினால் 250 தலைவர்களும் மடிந்தார்கள் - 234
19.4 வாதையினால் முறுமுறுத்த ஜனங்கள் செத்தார்கள் - 236
19.5 துளிர்க்கும் கோல் ஆரோனே தெரிந்து எடுக்கபட்டவன் என்று காட்டியது - 240

அத்தியாயம் 20 - ஆசாரியருக்கும் லேவியருக்கும் கர்த்தர் கொடுக்கும் சம்பளம்

20.1 ஆசாரியரின் பணிகள் - 248
20.2 லேவியரின் பணிகள் - 249
20.3 ஆசாரியருக்கு கர்த்தர் கொடுக்கும் சம்பளம் - 249
20.4 லேவியருக்கு கர்த்தர் கொடுக்கும் சம்பளம் - 253
20.5 லேவியர் கர்த்தருக்கு திரும்ப கொடுக்க வேண்டியது - 254

அத்தியாயம் 21 - ஜனங்களின் பாவத்தை பரிகரிக்க கர்த்தர் தரும் கிடாரி

21.1 அசுத்தத்தை சுத்தமாக்க கிடாரி - 256
21.2 தீட்டு பட்ட மனிதன் - 260
21.2 தீட்டுபட்டவனுக்கு பரிகாரம் - 260

தொகுதி 7

சீன் வனாந்தரத்திலிருந்து வாக்குதத்த பூமியை நோக்கி

அத்தியாயம் 22 - காதேஸில் இருந்து கானான் புறப்பாடு

22.1 மிரியாமின் மரணம் - 263
22.2 தண்ணீர் இல்லை என்று மக்களிடம் இருந்து எதிர்ப்பு - 266
22.3 மோசேயும் ஆரோனும் கானானுக்குள் செல்வதில்லை - 268
22.4 மோசே ஏதோமிடம் கடந்து செல்ல வழிவிட கோருகின்றான் - 274
22.5 காதேசில் இருந்து ஓர் என்னும் மலைக்கு வருதல் - 280
22.6 ஆரோனின் மரணம் - 282

அத்தியாயம் 23 - மோவாப் நோக்கி பிரயாணம்

23.1 தெற்கே வாசம் பண்ணும் கானானியரிடமிருந்து எதிர்ப்பு - 285
23.2 திரும்பவும் சிவந்த சமுத்திர வழியே பாரான் வனாந்தர பிரயாணம் - 287
23.3 சர்ப்பத்தினால் சாவும் உயர்த்தபட்ட சர்ப்பமும் - 288
23.4 பாரான் வனாந்தரத்தில் இருந்து இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் - 292
23.5 எமோரியரின் தேசத்தை கர்த்தர் இஸ்ரவேலருக்கு கொடுத்தார் - 295

அத்தியாயம் 24 - மோவாப் சமவெளியில் இராஜாவின் எதிர்ப்பும் பிலேயாமின் ஆசீர்வாதமும்

24.1 மோவாபின் சமவெளியில் பாளயமும் பாலாக்கின் எதிர்ப்பும் - 300
24.2 இஸ்ரவேல் மக்களை சபிக்க பிலேயாமுக்கு அழைப்பு - 301
24.3 கீரியாத் ஊசோத் மேடையில் இருந்து பிலேயாமின் ஆசீர்வாதம் - 316
24.4 பிஸ்காவின் கொடுமுடியில் இருந்து பிலேயாமின் இரண்டாம் ஆசீர்வாதம் - 320
24.5 பேயோரின் கொடுமுடியில் இருந்து பிலேயாமின் மூன்றாவது ஆசீர்வாதம் - 325
24.6 பேயோரின் கொடுமுடியில் இருந்து பிலேயாமின் நான்காவது ஆசீர்வாதம் - 330
24.7 பிலேயாம் கொடுக்கும் முன் அறிவிப்பு - 331
24.8 ஏதோம், சேயீருக்கு நேரான பிலேயாமின் ஐந்தாவது தீர்க்கதரிசன பாடல் - 332
24.9 அமலேக்கிற்கு எதிரான பிலேயாமின் ஆறாவது பாடல் - 333
24.10 கேனியன், அசீரியருக்கு எதிராக பிலேயாமின் ஏழாவது தீர்க்கதரிசனம் - 334
24.11 பிலேயாம் திரும்பி தன் இடம் நோக்கி செல்கின்றான் - 335

அத்தியாயம் 25 - மோவாபின் பெண்களால் வஞ்சிக்கபட்ட இஸ்ரவேலர்

25.1 பேயோரில் இருந்து ஆசை வலை வீசபட்டது - 338
25.2 இச்சையில் விழுந்த இஸ்ரவேலர் மேல் கர்த்தரின் கோபம் - 342
25.3 மீதியானியர் தண்டிக்க படுகின்றனர் - 346

தொகுதி 8

கானானுக்குள் பிரவேசிக்க ஜனங்களை ஆயத்தபடுத்தும் கர்த்தர்

அத்தியாயம் 26 - கானானை பங்கிட இரண்டாவது கணக்கெடுப்பு

26.1 நாற்பது வருட பிரயாணத்திற்கு பின் இரண்டாவது கணக்கெடுப்பு - 347
26.2 ரூபன் பாளயத்தினரின் கணக்கெடுப்பு - 349
26.3 யூதா பாளயத்தினரின் கணக்கெடுப்பு - 350
26.4 எப்பிராயீம் பாளயத்தினரின் கணக்கெடுப்பு - 353
26.5 தாண் பாளயத்தினரின் கணக்கெடுப்பு - 355
26.6 சுதந்தரிக்க போகும் தேசத்தில் சுதந்திரம் பங்கிட வேண்டிய முறை - 356
26.7 கர்த்தருடைய சேவையாளரான லேவி கோத்திர கணக்கெடுப்பு - 357
26.8 புதிய தலைமுறை - 358
26.9 குமாரர் இல்லையாயின் குமாரத்திகளுக்கு சுதந்தரம் - 360

அத்தியாயம் 27 - மோசேக்கு அடுத்த தலைவன் யோசுவா

27.1 மோசேக்கு கானானை கண்களினால் காண மட்டும் வாய்ப்பு - 364
27.2 அடுத்த தலைவன் தேர்ந்தெடுக்கப்பட மோசேயின் ஜெபம் - 367
27.3 புதிய தலைவனை கர்த்தர் தெரிந்து கொள்கிறார் - 370

அத்தியாயம் 28 - பலிகளும், அவை குறிக்க பட்ட நாட்களும்

28.1 தினந்தோறும் செலுத்த வேண்டிய சுகந்த வாசனையான தகனபலி - 373
28.2 வாரந்தோறும் செலுத்த வேண்டிய சர்வாங்க தகனபலி - 376
28.3 மாதந்தோறும் செலுத்தப்பட வேண்டிய சர்வாங்க தகனபலி - 377

அத்தியாயம் 29 - வருடாந்திர பண்டிகைகளும் செலுத்த வேண்டிய பலிகளும்

29.1 முதலாம் மாதம் பதினாலாம் தேதி, எழு நாட்கள் பஸ்கா பண்டிகை - 378
29.2 ஏழு வாரங்கள் சென்ற பின்னர் முதற்கனி படைக்கும் பண்டிகை - 379
29.3 ஏழாவது மாதத்தின் முதல் நாள் எக்காளம் ஊதும் பண்டிகை - 380
29.4 ஏழாம் மாதம் பத்தாம் நாள் பாவ நிவிர்த்தி ஆராதனை பண்டிகை - 382
29.5 ஏழாம் மாதம் பதினைந்தாம் நாள் ஏழுநாள் கூடார பண்டிகை - 383
29.6 எட்டாம் நாள் விசேஷித்த ஆசரிப்பும் செலுத்த வேண்டிய பலிகளும் - 386

அத்தியாயம் 30 - கர்த்தருக்கு பண்ணிய பொருத்தனைகளை குறித்த கட்டளை

30.1 ஆண் மக்கள் கர்த்தருக்கு செய்யும் பொருத்தனைகள் - 387
30.2 திருமணம் ஆகாத பெண்ணின் பொருத்தனை - 388
30.3 திருமணம் ஆன பெண்ணின் பொருத்தனை - 389

அத்தியாயம் 31 - மக்களை பாவத்தில் விழ செய்த மீதியானியர் மீது தீர்ப்பு

31.1 மோசேக்கு கர்த்தர் கொடுத்த கடைசி பணி, மீதியானுக்கு விரோதமாக யுத்தம் - 391
31.2 கொள்ளை இட்டதை மோசே பங்கிடுதல் - 394
31.3 தலைவர்களின் விசேஷித்த நன்றி நவிலும் காணிக்கை - 397

தொகுதி ⁹

இஸ்ரவேல் மக்களுக்கு யோர்தானின் இருபுறமும் சுதந்தரம்

அத்தியாயம் 32 - யோர்தானின் கிழக்கு பகுதியிலும் இஸ்ரவேலருக்கு சுதந்தரம்

32.1 யோர்தானை கடக்க விரும்பாத ரூபன், காத் கோத்திரங்கள் - 400
32.2 மோசேயின் எச்சரிப்பு - 401
32.3 யோர்தானுக்கு கிழக்கே கீலேயாத் தேசத்தை சுதந்தரிக்க தீர்மானம் - 403
32.4 கடமை தவறாத கோத்திரங்களுக்கு கீலேயாத் தேசம் - 404
32.5 மனாசேயின் பாதி கோத்திரத்திற்கு யோர்தானுக்கு கிழக்கே பங்கு - 404
32.6 மூன்று பிரிவாக தேசம் பகிர்ந்து கொடுக்கபடுகிறது - 405

அத்தியாயம் 33 - இஸ்ரவேலரின் பிரயாண தொகுப்பு

33.1 மோசே இஸ்ரவேலர் பிரயாணங்களை குறித்து எழுதுகிறான் - 408
33.2 ராமசேசில் இருந்து சீனாய் மலை அடிவாரம் வரை - 413
33.3 சீனாய் மலை அடிவாரம் முதல் காதேஸ் பர்னேயா வரை - 414
33.4 காதேஸில் 38 வருடங்கள் - 417
33.5 காதேசில் இருந்து மோவாப் சமவெளி வரை - 418
33.6 யோர்தானை கடக்கும் முன்னதாக சுதந்தரங்களை பங்கிட ஆலோசனை - 421

அத்தியாயம் 34 - கானான் தேசத்தின் எல்லைகள் கணிக்க படுகின்றன

34.1 கானான் தேசத்தின் எல்லைகள் - 423
34.2 தெற்கு எல்லை: உப்புக் கடல் - அக்ராபீம் மேடு - 423
34.3 மேற்கு எல்லை: மத்திய தரைகடல் - 425
34.4 வடக்கு எல்லை: பெருங்கடல் - ஓர் மலை - ஆத்சார் ஏனான் - 425
34.5 கிழக்கு எல்லை: ஆத்சார் ஏனான் - கின்னரேத் - 425
34.6 நிலம் பங்கிட படல் - 427

அத்தியாயம் 35 - லேவி கோத்திரத்தினருக்கு சுதந்தரம்

35.1 லேவியர்களின் குடியிருப்புக்கு பட்டணங்கள் - 432
35.2 தெரியாமல் கொலை செய்தவருக்கு அடைக்கல பட்டணங்கள் - 437
35.3 கொலை பாதகனை குறித்த கட்டளைகள் - 441

அத்தியாயம் 36 - கோத்திரங்களின் சுதந்தரம் காக்கபட வேண்டும்

36.1 குமாரத்திகளின் சுதந்தரம் கோத்திர சுதந்தரத்தை பாதிக்கலாகாது - 447
36.2 கீழ்படிந்த செலோப்பியாத்தின் பிள்ளைகள் - 452

அத்தியாயம் 37 - எண்ணாகம புத்தகம் தரும் ஆசீர்வாதங்கள்

37.1 கர்த்தர் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிறார் - 453
37.2 கர்த்தர் மனித வாழ்வில் அற்புத கிரியைகள் செய்கிறவராய் இருக்கிறார் - 456
37.3 எண்ணாகம புத்தகம் தந்த ஆசீர்வாதங்களை அலட்சியம் செய்தவர்கள் யார்? - 459

படங்களும் வரை படங்களும்

1	பன்னிரண்டு கோத்திரங்களின் கொடிகள்	16
2	யூதா, இசக்கார், செபுலோன் கோத்திரத்தாரின் கொடிகள்	18
3	ரூபன், சிமியோன், காத் கோத்திரத்தாரின் கொடிகள்	20
4	லேவி கோத்திரத்தாரின் கொடி	21
5	எப்பிராயீம், மனாசே, பென்யமீன் கோத்திர கொடிகள்	22
6	தாண், ஆசேர், நப்தலி கோத்திரத்தாரின் கொடிகள்	23
7	இஸ்ரவேலின் கோத்திர அட்டவணை	24
8	இஸ்ரவேல் புத்திரர் பாளயம் இறங்க வேண்டிய முறையின் வரைபடம்	25
9	நாதாப், அபியூ	26
10	ஆசாரியன், பிரதான ஆசாரியன், லேவியன்	27
11	லேவியன் ஆசாரியனுக்கு உதவி செய்தல்	28
12	பாளயத்திற்கு வெளியே குஷ்டரோகிகள்	46
13	கூண்டு வண்டில்கள்	69
14	பரிசுத்த பணிமுட்டுகளை தோளில் சுமந்து செல்லும் கோகாத்தியர்	70
15	காணிக்கையும் பலிகளும்	72
16	குத்துவிளக்கு	82
17	வெள்ளி பூரிகைகள்	100
18	இந்த மன்னாவை தவிர வேறொன்றும் இல்லையே என்றார்கள்	116
19	எகிப்து தேசத்தின் விதவிதமான உணவுகள்	117
20	மன்னாவை சமைக்கும் மக்கள்	120
21	பாளயத்தில் விழுந்த காடைகள்	133
22	பார்வோன் குமாரத்தி, மிரியாம், குழந்தை மோசே	140
23	தம்புருகளோடும் நடனத்தோடும் மிரியாமை பின்செல்லும் பெண்கள்	140
24	முதல், இரண்டாவது கட்ட பிரயாணங்கள்	153
25	பன்னிரண்டு வேவுகாரர் தேசத்தை சுற்றி பார்த்த இடங்கள்	160
26	டெல் சுல்தான், ஆதிகால எபிரோன் பட்டணம் இருந்த மேடு	160
27	ஒட்டாமன் காலத்து எபிரோன்	161
28	பன்னிரண்டு வேவுகாரர்களும் கானான் தேசத்தை வேவு பார்க்க சென்று வந்த பாதை	162
29	சாராளை மக்பேலா குகையில் ஆபிரகாம் அடக்கம் பண்ணுதல்	164
30	எபிரோனில் ஆபிரகாம் கல்லறை	164
31	மக்பேலா குகையில் ஈசாக்கு கல்லறை	164
32	எபிரோனில் ஆபிரகாமின் கல்லறையின் மேல் எழுப்ப பட்டிருக்கும் கிறிஸ்தவ ஆலயமும் இஸ்லாமிய தொழுகை ஸ்தலமும்	164
33	யாக்கோபின் கல்லறை	164
34	எஸ்கோல் பள்ளதாக்கு	135

35	திராட்சை குலை சுமந்து வரும் இருவர்	165
36	ஒரே குலையுடைய திராட்சை செடி	165
37	மாதளம் பழங்கள், அத்தி பழங்கள்	166
38	வேவுகாரர்கள் மோசே, ஆரோன் முன்பு சபையாரிடத்தில் தாங்கள் கொண்டு வந்தவைகளை காட்டுகிறார்கள்	167
39	ஜனங்களை அமர்த்தும் காலேப்	169
40	ஆதிகால இராட்சதர்களின் அளவுகள்	170
41	ஓர்மா	193
42	காதேஸ்	194
43	சேயீர்	195
44	கோராகும், தாத்தான் அபிராம் குடும்பமும் பூமி பிளந்து பாதாளத்தில் இறங்கினார்கள்	233
45	அக்கினி தூபம் காட்டினவர்களை பட்சித்தது	234
46	வாதையை நிறுத்த ஆரோன் பாவநிவிர்த்தி செய்கிறான்	239
47	துளிர்த்த ஆரோனின் கோல்	240
48	கிடாரி (Heifer)	258
49	சாம்பல் போட்டு ஊற்று ஜலம் வார்க்கப்பட்ட பாத்திரம்	261
50	மோசே கன்மலையை கோலினால் அடித்தல்	271
51	காதேஸ், ஏதோம், ஓர்மலை வரைப்படம்	275
52	ராஜபாதை	277
53	ஏதோம் தேசத்தில் சேயீர்	278
54	ஓர் என்னும் மலை, மொசேரா மலைதொடர்	281
55	எலெயாசாருக்கு ஆசாரிய பொறுப்பு, ஆரோனின் மரணம்	283
56	ஓர் மலையில் ஆரோனின் கல்லறை	284
57	ஓர்மா	286
58	கொள்ளிவாய் சர்ப்பங்கள்,	289
59	மனிதரை பாய்ந்து கடிக்கும் கொள்ளிவாய் சர்ப்பங்கள்	289
60	வெண்கல சர்ப்பம்	290
61	கி.மு. 15ம் நூற்றாண்டை சேர்ந்த வெண்கல சர்ப்பங்கள்	290
62	ஏதோமை சுற்றி கானான் நோக்கி கடந்து சென்ற இடங்கள்	291
63	அர்னோன் ஆறு	292
64	கானானியரின் ஒரு அரண்மனை, அபாரீமின் மேடுகள்	293
65	சாரேத் ஆறு, சாரேத் பள்ளத்தாக்கு	293
66	பேயோர், பாமோத், பிஸ்கா, எஷிமோன் வரைபடம்	294
67	எஸ்போன் பட்டணத்து அழிவுமேடு	296
68	எஸ்போனின் வழியே செல்லும் இராஜபாதை	296
69	திபோன் பட்டண அழிவுகள்	298

70	பாசான் அரசன் ஓக் என்ற ராட்சதன்	298
71	எமோரியரின் தேசமும், பாசானின் தேசமும்	298
72	இதற்கேல் (யூப்ரடீஸ்) நதி அருகே உள்ள பெத்தூர்	302
73	பிலேயாமை வழிமறிக்கும் கர்த்தரின் தூதனானவர்	308
74	பிலேயாம் முகம் குப்புற விழுந்து பணிந்தான்	311
75	அர்னோன் நதி	313
76	கீரியாத் ஊசோத்	315
77	கீரியாத் ஊசோத், பாலாக் பலிபீடத்தின் முன்னால்	315
78	பிஸ்காவின் கொடுமுடி, நேபோ மலை	320
79	பாலாம் இஸ்ரவேலரின் பாளயத்தை பார்க்கிறான்	327
80	மோவாப் சமவெளி	338
81	சித்தீம் சமவெளி	339
82	பெத் எசிமோத், ஆபேல் சித்தீம், பெத் பாகால் யேயோர்	340
83	பாகால் பேயோர், பாகால் பேயோர் வணக்கம்	341
84	எலெயாசாரின் மகன் பினெகாஸ் வேசித்தனம் பண்ணுபவர்களை கொன்றான்	341
85	மோசே எடுக்கும் இரண்டாவது கணக்கெடுப்பு	347
86	எலெயாசருடன் மக்களிடம் பேசும் மோசே	348
87	செலோப்பியாத்தின் குமாரத்திகள் மோசேயிடம் வருகிறார்கள்	359
88	அபாரீம் மலை தொடர்,	364
89	நேபோ பர்வதத்தில் மோசேயின் நினைவுசின்னம்	365
90	கொள்ளையாக கொண்டு வந்த வகைகளின் பங்கீடு விபரம்	396
91	கிறிஸ்துவுக்கு முன் 15-ம் நூற்றாண்டான மோசேயின் காலத்தை சேர்ந்த மீதியானிய நகைகள்	398
92	ரூபன், காத், மேலும் மனாசேயின் பாதி கோத்திர சுதந்திரங்கள்	406
93	வாக்குதத்த பூமியின் தெற்கு எல்லை	423
94	கோத்திர வாரியாக பெற போகிற (சதந்தரம்) பூமி	424
95	வாக்குதத்த பூமியின் எல்லைகள்	426
96	12 கோத்திரங்களின் இடங்கள்	428
97	கோத்திரங்களும் அதின் தலைவர்களும்	429
98	லேவியரின் பட்டணத்தின் இருவிதமான தரைப்படம்	432
99	அடைக்கல பட்டணத்தில் தஞ்சம் புகும் கொலைகாரன்	437
1006	அடைக்கலப் பட்டணங்கள்	438

தொகுதி - 1
எண்ணாகமம் புத்தகம் என்றால் என்ன?

அத்தியாயம் - 1
எண்ணாகமம் - முகவுரை

1.1 எண்ணாகமம் என்று ஏன் பெயர் கொடுக்கப்பட்டது?

வேதாக புத்தகத்தில் நான்காவது புத்தகமாக அமைவது எண்ணாகம புத்தகம் ஆகும். மோசேயால் எழுதப்பட்ட முதல் 5 ஆகமங்களில் எண்ணாகமம் புத்தகம் என்பது நான்காவது இடத்தை பெறுகின்றது. எண்ணாகமம் புத்தகம் எபிரெய மொழியில் இருவிதமாக பெயர் கொண்டுள்ளது.

முதலாவதாக 'வனாந்தரத்தில்' (பெமிட்பார் Bemidbar) என்ற தலைப்பில் அழைக்க படுகின்றது. ஏனெனில் எபிரெய மொழியில் இந்த புத்தகம் 'வனாந்தரத்தில்' என்ற வார்த்தையோடு ஆரம்பமாகிறது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பான செப்துவ கிந்தா என்ற நூலில் இந்த புத்தகத்திற்கு எண்ணாகமம் என்று பெயர் கொடுக்கப்பட்டு உள்ளது. ஏனெனில் எண்ணுங்கள், தொகை இடுங்கள் என்று கர்த்தர் கூறுவதும், புள்ளி விபர கணக்குகள் எடுக்கப்படுவதும் இந்த புத்தகத்தில் வருகின்றது. லத்தீன் வல்கேட் என்ற மொழி பெயர்ப்பிலும் 'எண்ணுதல்' என்று பொருள்படும் *(Numeri)* எண்ணாகமம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இதில் இருந்தே 'எண்ணாகமம்' என்ற பெயர் வந்தது. ஜனங்களை எண்ணுதல் அல்லது தொகையிடுதல் இப்புத்தகத்தில் 1 முதல் 3 அதிகாரங்களிலும் 26-வது அதிகாரத்திலும் காணப்படுகின்றது. அதாவது சீனாய் மலையில் இருந்து மக்கள் புறப்படும் முன்னும் மோவாப் சமவெளியில் இருந்து கானான் தேசத்திற்குள் செல்லும் முன்னும் ஆக மக்கள் தொகை இருமுறை கணிக்க பட்டது. ஆகவே இந்த புத்தகத்திற்கு எண்ணாகமம் என்ற பெயர் பொருத்தமானதாக கருத பட்டது.

எபிரெய மொழியில் எண்ணாகம புத்தகத்திற்கு கொடுக்கப்பட்ட இரண்டு பெயர்களில் இரண்டாவது பெயர் வாய்தாபர் (Vaidabber) என்பது ஆகும். வாய்தாபர் என்ற எபிரெய வார்த்தையின் பொருள் 'கர்த்தர் பேசினார்' என்பதே ஆகும். இதுவே எண்ணாகமம் புத்தகத்தின் ஆரம்ப வார்த்தை ஆகும். ஆசரிப்பு கூடாரத்திலிருந்து கர்த்தர் பேசினார். மோசேயை மிக அருகில் வரவழைத்து கர்த்தர் பேசினார். ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட இரண்டாவது வருடம் இரண்டாவது மாதம் முதல் நாள் கர்த்தர் பேசினார். இவ்வாறு இந்த புத்தகத்தில் அதிகமாக கர்த்தர் பேசுவது எல்லாம் கூறபட்டுள்ளதால் இது 'வாய்தாபார்' என்றும் பெயர் பெற்றது.

1.2 எண்ணாகமம் எப்பொழுது எங்கே எழுதப்பட்டது?

எண்ணாகமம் புத்தகத்தின் முதல் வசனமே இந்த புத்தகம் எப்பொழுது, எங்கே துவக்கம் கண்டது என்பதை குறிப்பிடுகின்றது. அது இஸ்ரவேல் மக்கள் எகிப்து தேசத்தில் இருந்து

புறப்பட்ட இரண்டாம் வருஷம், இரண்டாம் மாதம், முதல் தேதி ஆகும். அப்பொழுது அவர்கள் இன்னும் சீனாய் வனாந்தரத்தில் தான் இருந்தார்கள். அவர்களுடைய கர்த்தராகிய தேவனுக்கு ஆசரிப்பு கூடாரம் அமைக்கப்பட்டு, ஆசாரியர் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதனைகளும் துவங்கி விட்டது. மக்கள் தேவனாகிய கர்த்தருடைய எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி வாழ்வதற்கு பிரமாணங்கள் யாவும் கொடுக்கப்பட்டு விட்டன. இதனை லேவியராகம புத்தகத்தில் பார்த்தோம். இனி அவர்கள் வாக்குதத்த தேசத்திற்கு புறப்பட்டு செல்ல வேண்டியதுதான். அதற்கு வேண்டிய ஆயத்தங்களை பற்றி கட்டளைகள் கொடுப்பதற்கே கர்த்தர் மோசேயை கூப்பிடுகிறார். அவன் ஆசரிப்பு கூடாரத்தில் அவர் சமுகத்தில் விழுந்து கிடக்கையில் கூப்பிடுகிறார். அவர்கள் சீனாய் மலையில் இருந்து புறப்படுவதற்கு ஆயத்தம் செய்ய வேண்டிய விபரங்களை கொடுக்கிறார்.

1.3 எண்ணாகமம் சம்பவங்கள் நிகழ்ந்த காலங்கள்

யாத்திராகம புத்தகம் 40-வது அதிகாரம் 17-வது வசனத்தில் இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தலம் ஸ்தாபனம் பண்ணப்பட்டது என்று கூறப்பட்டு உள்ளது. எண்ணாகம புத்தகம் முதல் அதிகாரம் முதல் வசனம் இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் முதல் தேதியில் என்று துவங்குகின்றது. யாத்திராகமம் 40-வது அதிகாரம் 17-வது வசனம் முதல் எண்ணாகமம் முதல் அதிகாரம் முதல் வசனம் வரை சம்பவித்த அனைத்து நிகழ்ச்சிகளும் ஒரு மாத கால இடைவெளியில் இடம் பெற்று உள்ளது.

ஆரோன், அவனது நான்கு புத்திரர்களின் பிரதிஷ்டை, முதல் இரண்டு ஆண் மக்களின் பிரிவு, பலி முறைகளை பற்றிய விதிகள் மற்றும் லேவியராகம புத்தகத்தின் 27 அதிகாரங்களிலும் இடம் பெற்ற அனைத்து நிகழ்ச்சிகளும் அந்த ஒரு மாத கால இடைவெளியில் இடம் பெற்று உள்ளன. தொடர்ந்து எண்ணாகம புத்தகம் முதல் அதிகாரம் முதல் வசனம் முதல் 10-வது அதிகாரம் 10-வது வசனம் வரை நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் 20 நாட்களில் இடம் பெற்று உள்ளன. எண்ணாகமம் 1-வது அதிகாரம் 1-வது வசனம் இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் முதல் தேதி என்று துவங்குகின்றது. எண்ணாகமம் 10-வது அதிகாரம் 11-வது வசனம் இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் 20-ம் தேதி என்று கூறுகின்றது.

1.4 எண்ணாகமம் புத்தகத்தின் வடிவமைப்பு

எண்ணாகம புத்தகத்தை ஏற்ற முறையில் அறிந்து கொள்ளுவதற்கு அந்த புத்தகத்தை ஐந்து பகுதிகளாக பிரித்து பார்க்க இருக்கின்றோம். முதலாவது பகுதியாக முதல் அதிகாரம் முதல் 10-வது அதிகாரம் 10-வது வசனம் வரை அடங்கி உள்ளது. இரண்டாவது பகுதியாக 10-வது அதிகாரம் 11-வது வசனம் முதல் 14-வது அதிகாரம் 45-வது வசனம் வரை அடங்கியுள்ளது. மூன்றாவது பகுதியாக 15-வது அதிகாரமும் நான்காவது பகுதியாக 16-வது அதிகாரம் முதல் 19-வது அதிகாரம் 22-வது வசனம் வரையும் அடங்கியுள்ளது. ஐந்தாவது பகுதியாக 20-வது அதிகாரம் முதல் 36-வது அதிகாரம் 13-வது வசனம் வரை அடங்கியுள்ளது. இவ்வாறாக எண்ணாகம புத்தகத்தை ஐந்து பகுதிகளாக பிரிக்கின்றனர்.

இன்னும் அநேக வேத வல்லுனர்கள் எண்ணாகமத்தின் நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களை ஆதாரமாக கொண்டு எண்ணாகமம் புத்தகத்தை மூன்று பிரிவுகளாக

பிரிக்கின்றனர். அவையாவன: சீனாய் மலை, காதேஸ் பர்னேயா, மோவாப் சமவெளி என்பவையே.

இன்னும் சிலர் எண்ணாகமம் புத்தகத்தில் வரும் இரண்டு தலைமுறை இஸ்ரவேலரை ஆதாரமாக கொண்டு, வனாந்தரத்தில் உயிர் இழந்த கீழ்ப்படியாத தலைமுறை என்றும், புதிதாக துளிர்த்து எழும்பும் கர்த்தருக்கு கீழ்ப்படிதலுள்ள புதிய தலைமுறை என்றும் இரண்டு பிரிவாக பிரிக்கின்றனர்.

1.5 எண்ணாகமம் புத்தகத்தின் ஆசிரியர் யார்?

தேவனுடைய மனுஷனாகிய மோசே எண்ணாகமம் புத்தகத்தை எழுதினார். இதனை எண்ணாகமம் புத்தகம் 33-வது அதிகாரம் 2-வது வசனம் தெளிவாக தெரிவிக்கின்றது. மோசே கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே அவர்கள் புறப்பட்ட பிரகாரமாக அவர்களுடைய பிரயாணங்களை எழுதினான். உபாகம புத்தகம் 31-வது அதிகாரம் 9-வது வசனம் நியாயப் பிரமாணத்தை எழுதியவர் மோசே என்பதை தெளிவு படுத்துகின்றது.

1.6 எண்ணாகமம் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற புத்தகங்கள்

புதிய ஏற்பாட்டு நூலில் எண்ணாகம புத்தகம் பற்பல இடங்களில் எடுத்து காட்டப்படுகின்றது. எண்ணாகமம் 21-வது அதிகாரத்தில் மோசே என்பவரால் வெண்கலத்தினால் ஒரு சர்ப்பம் செய்யப்பட்டது. இந்த விபரத்தை பரிசுத்த யோவான் எழுதின சுவிசேஷத்தில் 3-வது அதிகாரம் 14-வது வசனத்தில் சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டது என்று இயேசு கூறுவதை பார்க்கின்றோம்.

அப்போஸ்தலர் 7-வது அதிகாரத்தில் ஸ்தேவானும் அப்போஸ்தலர் 13-ம் அதிகாரத்தில் பரிசுத்த பவுலும் எண்ணாகமம் புத்தகத்தை சுட்டி காட்டி பேசுவதை நாம் பார்க்கலாம். 1 கொரிந்தியர் 10-வது அதிகாரம் 1 முதல் 11 வசனங்களிலும், எபிரெயருக்கு எழுதின நிரூபம் 3-வது அதிகாரத்திலும் எண்ணாகமம் புத்தகத்தின் சம்பவங்கள் எடுத்து கூறப்பட்டு உள்ளன. எண்ணாகம புத்தகத்தில் இடம் பெறும் பிலேயாம், கோராகு என்ற தனி நபர்கள் யூதா என்பவர் எழுதின நிரூபம் 11-வது வசனத்திலும் இடம் பெற்று உள்ளனர்.

1.7 எண்ணாகமம் புத்தகத்தின் சாராம்சம் என்ன?

மேலும் மீட்கப்பட்ட ஜனங்கள் சீனாய் மலையில் இருந்து கானான் நோக்கி செய்த பிரயாணத்தை எண்ணாகம புத்தகம் எடுத்து கூறுகின்றது. அவர்கள் புறப்பட்ட இடமான சீனாய் மலை அடிவாரத்தில் இருந்து கானான் என்ற இடம் நீண்ட தூரத்தில் இல்லை. ஆயினும் அதனை அடைவதற்கு நீண்ட காலம் எடுத்தது. சுமார் 38 வருடங்கள் 10 மாதங்கள் அவர்கள் பிரயாணத்தில் செலவு செய்தார்கள். அந்த வருடங்களில் அவர்களுடைய வாழ்க்கையில் இடம் பெற்ற பற்பல விவரங்கள் எண்ணாகம புத்தகத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது.

எண்ணாகமம் புத்தகத்தில் 36 அதிகாரங்கள் உண்டு. இந்த 36 அதிகாரங்களில் மீட்கப்பட்ட ஜனங்கள் சுமார் 38 வருடம் 10 மாதங்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை பார்க்க இருக்கிறோம். எண்ணாகமம் புத்தகத்தில் அநேக புள்ளி விவர கணக்குகள் கொடுக்கப்பட்டு உள்ளன. மேலும் லேவி கோத்திரத்தார் கர்த்தரின் சேவைக்காக பிரித்து எடுக்க படுவதையும்,

அவர்களில் ஆரோனின் வம்சத்தினர் மட்டும் ஆசாரிய ஊழியத்திற்காக பிரித்து எடுக்க படுவதையும், அந்த இரு தரப்பினருக்கும் பணிகளும் பொறுப்புகளும் கொடுக்கபடுவதையும், அவர்களுக்கு ஜீவனாம்சம் வழங்கபடுவதையும் பற்றிய குறிப்புகளும் இடம் பெற்று உள்ளன.

மீட்கப்பட்ட ஜனங்களின் மன நிலை போராட்டம் நிறைந்த சூழ்நிலைகள் நடுவில் எப்படி அமைகின்றது என்பதை எண்ணாகமம் புத்தகம் எடுத்து கூறுகின்றது. அவர்களின் மன மடிவுகள், விசுவாச துரோகங்கள் நிறைந்த அநேக சம்பவங்கள் எண்ணாகமம் புத்தகத்தில் இடம் பெறுவதை நாம் காணலாம். கானான் நோக்கி புறப்பட்ட ஜனங்கள், செங்கடல் கடந்து வந்த ஜனங்கள், கற்பனைகளும், பிரமாணங்களும் பெற்ற ஜனங்கள், கானானின் கதவு வரை வந்தார்கள், ஆனால் கதவிற்குள் பிரவேசிக்காமல் போனார்கள். பின் வாங்கி போனதற்கு காரணங்களையும் எண்ணாகமம் புத்தகம் எடுத்து உரைக்கின்றது. கானான் என்ற வாக்குதத்த பூமிக்கு மிகவும் அருகில் வந்தும் அதன் உள்ளாக பிரவேசிப்பதற்கு முடியாமல் சுமார் 38 வருடங்கள் வனாந்தரத்தில் கானானின் அருகில் உள்ள காதேஸ் பர்னேயா என்ற இடத்தில் அலைந்து திரிவதை எண்ணாகமம் புத்தகத்தில் நாம் பார்க்க இருக்கின்றோம். அவிசுவாசம் என்ற பாவத்தினால், மீட்கப்பட்ட ஜனங்கள் என்ற அவர்களுடைய வாழ்க்கையில் அநேக வருடங்கள் விருதாவில் சென்று விட்டதை நாம் எண்ணாகமம் புத்தகத்தில் காண இருக்கின்றோம். நடந்தும் சேர வேண்டிய இடத்தை சேராதவர்களாக அவர்கள் மாறினார்கள். புறப்பட்டும் அடைய கூடாதவர்களாக அவிசுவாசம் கொண்டார்கள். ஆயினும் விசுவாசித்தவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேரும் கானானின் பலனை கண்டு அனுபவித்தார்கள்.

1.8 எண்ணாகமம் புத்தகத்தில் கர்த்தராகிய தேவன்

எண்ணாகமம் புத்தகம் கர்த்தராகிய தேவனின் ஒப்பற்ற குணாதிசயங்களையும் அதிசயமான செயல்களையும் நமக்கு விளக்குகின்றது.

முதலாவதாக தம்மை உத்தமத்துடன் விசுவாசிக்கிறவர்களுக்கு கர்த்தர் தம்மை வெளிப்படுத்தி கொண்டே இருக்கின்றார் என்பதை எண்ணாகமம் புத்தகம் கூறுகின்றது. எண்ணாகமம் 9, 35 ஆகிய அதிகாரங்களில் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு கர்த்தர் தாராளமாக தம்மை வெளிப்படுத்துகின்றார் என்பதை அறிந்து கொள்ள இருக்கின்றோம்.

இரண்டாவதாக கர்த்தர் தம்மை உத்தமத்துடன் பின் பற்றுகிறவர்களின் வாழ்க்கை வளம் பெற்று ஓங்குவதற்கு விருப்பம் உள்ளவராக இருக்கிறார் என்பதையும் எண்ணாகம புத்தகத்தில் காண இருக்கிறோம். தம்மை மதித்து வாழ்கின்றவர்கள் பெரும் மதிப்புடன் உலகத்தில் வாழ வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார் என்பதை எண்ணாகமம் 14-வது அதிகாரம் 24-வது வசனத்தில் இருந்து திட்டவட்டமாக நாம் பார்க்க இருக்கின்றோம். கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் ஒரு போதும் வெட்கப்பட்டு போவது இல்லை என்பது அங்கு உறுதி படுத்தப்படுகின்றது. தம்மை விசுவாசிக்கும் மக்களை கர்த்தர் ஒரு பொழுதும் கைவிடவே இல்லை என்பதையும் எண்ணாகம புத்தகத்தில் நாம் அறிந்து கொள்ள இருக்கின்றோம்.

மூன்றாவதாக உத்தமம் தவறும் பொழுது கர்த்தர் தமது ஜனங்களை கண்டிக்கிறார் என்றும், கண்டித்தும் அவர்கள் திருந்தவில்லை என்றால் கர்த்தர் தண்டிக்கிறார் என்றும் நாம்

பார்க்க இருக்கின்றோம். எண்ணாகமம் 11,21,25 ஆகிய பல அதிகாரங்களில் இருந்து கர்த்தர் கண்டிக்கிறவர் என்றும் தண்டிக்கிறவர் என்றும் ஆனால் ஒருபோதும் தமது ஜனங்களை கைவிடுகிறவர் இல்லை என்பதையும் அறிந்து கொள்ளுகின்றோம்.

நான்காவதாக எண்ணாகம புத்தகம் கர்த்தராகிய தேவனை பற்றி கூறும் குறிப்பு, கர்த்தர் தமது ஜனங்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் ஒரு பொழுதும் பின் வாங்கவே இல்லை என்பதே ஆகும். ஜனங்கள் விசுவாசத்தில் குன்றி போனாலும், அவர்கள் கூறிய வீர சபதங்களில் ஈரம் இழந்தாலும், கர்த்தர் தாம் அருளிய வாக்குறுதிகளை மாற்றவே இல்லை என்பதை எண்ணாகமம் 11,20 ஆகிய அதிகாரங்களில் இருந்து தெரிந்து கொள்ள இருக்கின்றோம்.

ஐந்தாவதாக கர்த்தர் தமது ஜனங்களுக்கு எதிராக வரும் எல்லா விதமான எதிர்ப்புகளையும் முறித்து போடுவதற்கு முன் வருகிறார் என்பதை எண்ணாகமம் புத்தகம் எடுத்து கூறுகின்றது. கர்த்தர் முற்றும் வழி நடத்துகிறவராக இருக்கிறார். வழுவாதபடி விசுவாசிகளை பாதுகாக்கிறவராக இருக்கிறார் என்பதை எண்ணாகமம் புத்தகம் தெளிவு படுத்துகின்றது. 21 முதல் 24 அதிகாரங்களிலும் 31-வது அதிகாரத்திலும் இதனை காண இருக்கின்றோம்.

1.9 எண்ணாகமம் புத்தகத்தில் மோசே

எண்ணாகமம் புத்தகத்தில் மோசே மிகவும் வல்லமை மிக்க ஒரு தேவனுடைய மனிதனாக காணப்படுகின்றான். மோசேயின் வாழ்க்கையில் காணப்பட்ட தனிபெரும் தன்மைகள் எண்ணாகமம் புத்தகத்தை அலங்கரிக்கின்றது. மோசே பூமியில் உள்ள சகல மனிதரிலும் மிகவும் சாந்த குணம் உள்ளவனாக இருந்தான் என்பதை எண்ணாகமம் 12-வது அதிகாரத்தில் அறிய இருக்கின்றோம். மோசேக்கும், ஆண்டவருக்கும் நடுவில் இருந்த ஐக்கியம் அசாதாரணமான ஐக்கியம் என்பதை அந்த அதிகாரம் எடுத்து கூற இருக்கின்றது.

மோசே என்பவனுக்கு ஆண்டவர் மீது அன்பு பொங்க பொங்க அதே விதமாக அவனுடைய அன்பு ஜனங்களின் மீதும் பொங்கி கொண்டே இருந்தது என்பதை 11, 21 ஆகிய அதிகாரங்களில் இருந்து அறிய இருக்கின்றோம். ஆயினும் எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்திற்குள் நாம் வரும் பொழுது மோசே இழைத்த பிழையையும் பார்க்க இருக்கின்றோம்.

1.10 மோசேக்கும் தேவனாகிய கர்த்தருக்கும் உள்ள தொடர்பு

கர்த்தர் தங்களை வழி நடத்தட்டும் என்று முன் வருகின்றவர்களின் வாழ்க்கை, தொழில், ஊழியம் அனைத்தும் அற்புதம் அடையாளம் நிறைந்ததாகவே இருக்கின்றது. இந்த அற்புதங்கள் அனைத்தும் அவர்கள் வாழ்வில் இடம் பெறுவதற்கு கர்த்தர் மிக மிக அற்புதமாக மோசே என்ற ஒரு தனி மனிதனை தமக்கு என்று கண்டு கொண்டார். அச்சத்துடன் ஒளிந்து ஒளிந்து வாழ்ந்தவனை எழும்பி பிரகாசிக்க செய்தார். கர்த்தர் ஆசரிப்பு கூடாரத்திலிருந்து மோசேயை கூப்பிட்டு அவனை நோக்கி பேசினார் என்று லேவியராகம புத்தகம் முதல் அதிகாரம் முதல் வசனம் துவங்கியது. மேலும் கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் இருக்கிற ஆசரிப்பு கூடாரத்திலே மோசேயை நோக்கி பேசினார் என்று எண்ணாகம புத்தகம் முதல் அதிகாரம் முதல் வசனம் துவங்குகின்றது. கர்த்தர் உற்று நோக்கி பேசும் ஒரு மனிதனாக

மோசே காணப்பட்டான். கர்த்தரின் சமுகத்திற்கு அடிக்கடி விரைந்து செல்லும் மனிதனாக மோசே காணப்பட்டான்.

கர்த்தாதி கர்த்தர் மோசேயினிடத்தில் அடிக்கடி நேரடியாக பேசினார். எண்ணாகமம் முதலாவது அதிகாரத்திலிருந்து அந்த புத்தகத்தின் கடைசி அதிகாரம் கடைசி வசனம் வரை சுமார் 150 தடவை சுமார் 20 வித்தியாசமான முறைகளில் கர்த்தர் மோசேயுடன் பேசுவதை நாம் பார்க்க இருக்கின்றோம். நான் அவனுடன் மறை பொருளாக அல்ல முக முகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன். அவன் கர்த்தரின் சாயலை காண்கிறான் என்று எண்ணாகமம் புத்தகம் 12-வது அதிகாரம் 8-வது வசனத்தில் மோசேயை குறித்து கர்த்தர் சாட்சி கொடுக்கின்றார்.

1.11 மீட்கப்பட்ட ஜனங்கள் கடந்து சென்ற ஆன்மீக பாதைகள்

மீட்கப்பட்ட அந்த ஜனங்கள் வாக்குதத்தம் செய்யப்பட்ட பூமியை சுதந்தரிப்பதற்கு முன்னதாக எத்தனையோ அக போராட்டங்களையும், புற போராட்டங்களையும் கடந்து சென்றனர். நாம் அநேக உபத்திரங்கள் வழியாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று பரிசுத்த பவுல் அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகம் 14:22-வது வசனத்தில் கூறுகின்றார். மிகுந்த பலனுக்கு ஏதுவான உங்கள் தைரியத்தை விட்டு விடாதேயுங்கள் என்று விசுவாசிகளை எண்ணாகம புத்தகம் உற்சாகபடுத்துகின்றது.

விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று எண்ணாகம புத்தகம் மீட்கப்பட்ட ஜனங்களை ஊக்கப்படுத்துகின்றது. நமது விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. எண்ணாகம புத்தகம் ஜனங்களின் தொகை எத்தனை அதிகம் என்று எண்ணுவதை விட ஜனங்களின் விசுவாசத்தின் உயரம் எவ்வளவு என்பதையே எடுத்து உரைக்கின்றது.

1.12 வனாந்தர வாழ்வும், வாழ்வில் ஆன்மீக கல்வியும்

எண்ணாகம புத்தகத்தில் மீட்கப்பட்ட ஜனங்களின் சுமார் 38 வருட கால வனாந்திர வாழ்வை நாம் காண இருக்கின்றோம். கானான் தேசம் என்பது அவர்களுக்கு அதிக தூரத்தில் இல்லை. தற்சமயம் அவர்கள் தங்கி இருக்கும் இடமான சீனாய் வனாந்தரத்திலிருந்து ஒரு சில மாதங்களில்தானே கானானுக்குள் அவர்கள் பிரவேசிப்பதற்கு முடியும். ஆனாலும் அவ்விதம் நடைமுறையில் இடம் பெறவில்லை. 38 வருடங்கள் 10 மாதங்கள் சென்ற பின்னரே கானான் சேர்ந்தார்கள் என்பதை எண்ணாகம புத்தகம் நமக்கு தெரிவிக்கின்றது.

முற்றிலும் புடமிடப்பட்ட பின்னரே அவர்கள் சுத்த பொன்னாக விளங்க முடிந்தது. அதற்கு காரணங்கள் என்ன என்பதை எண்ணாகம புத்தகத்தின் அதிகாரங்களில் நாம் பார்க்க இருக்கின்றோம்.

தொகுதி - 2
சீனாய் மலையில் இருந்து வாக்குதத்த பூமியான கானான் தேசம் செல்ல ஆயத்தங்கள்

அத்தியாயம் - 2
வம்சவாரியாக ஜனத்தொகை கணக்கெடுப்பு

2.1 எண்ணாகமம் சம்பவங்கள் துவங்கும் காலம்

எண்ணாகமம் புத்தகத்தை ஐந்து பகுதிகளாக பிரித்து நாம் பார்க்க இருக்கிறோம். முதல் பகுதியில் முதலாவது அதிகாரம் முதல் வசனம் முதல் 10-வது அதிகாரம் 10-வது வசனம் வரை உள்ள சம்பவங்கள் அடங்கியுள்ளன. இந்த பகுதியில் மூன்று முக்கிய விவரங்கள் கூறப்படுகின்றன. கானான் என்ற வாக்குதத்த பூமியை நோக்கி செல்லுகின்ற அந்த மக்களின் பிரயாணம் ஒழுங்கும், கிரமமுமாக இருக்க வேண்டும் என்பது முதல் குறிப்பு. மீட்கப்பட்ட ஜனங்கள் தங்களுடைய ஐக்கியத்தை காத்து கொள்ள வேண்டும் என்பது அடுத்த குறிப்பு. கர்த்தரை நடுவாக வைத்து வாழ்க்கை அமைத்து கொள்ள வேண்டும் என்பது கடைசி குறிப்பு. இந்த மூன்று குறிப்புகளையும் நாம் இந்த பகுதியில் பார்க்க இருக்கின்றோம்.

இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் முதல் தேதியில், கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் இருக்கிற ஆசரிப்பு கூடாரத்திலே மோசேயை நோக்கி: (எண். 1:1)

எண்ணாகம புத்தகம் முதல் அதிகாரம் முதல் வசனம் நமக்கு ஏராளமான தகவல்களை தருகின்றது. இஸ்ரவேலர் என்ற அந்த ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு இதுவரை எவ்வளவு நாட்கள் ஆகிவிட்டது என்பது முதல் வசனத்திலிருந்து தெரிய வருகின்றது. ஒரு வருடம் ஒரு மாதம் கடந்து விட்டது. யாத்திராகமம் 40:17-ம் வசனத்தின்படி இரண்டாம் வருஷம் முதல் மாதம் முதல் தேதியிலே வாசஸ்தலம் ஸ்தாபனம் பண்ண பட்டது. இடையில் உள்ள ஒரு மாத கால அளவில் லேவியராகமம் சம்பவங்கள் இடம் பெற்றன.

ஒரு யூத நாட்காட்டி ஒரு சந்திர நாட்காட்டி. அதின் பிரகாரம் ஒரு மாதம் 28 நாட்கள் கொண்டது.

இந்த ஒரு வருடம் ஒரு மாதத்தில் எத்தனையோ வித்தியாசமான சம்பவங்கள் இடம் பெற்று உள்ளன. தேவனுடைய அற்புதங்களையும், அடையாளங்களையும் அவர்கள் கண்கள் கண்டன. அற்புதமாக அடிமைத்தன வாழ்வில் இருந்து அவர்கள் வெளியே வந்தார்கள். மிகவும் அற்புதமாக சிவந்த சமுத்திரத்தின் கரைகளில் இறங்கி காலால் நடந்து மறு கரை ஏறினார்கள். அற்புதமாக மாராவின் கசப்பான தண்ணீர் மதுரமாக கண்டார்கள்.

அவர்கள் மாராவில் வந்த போது மாராவின் தண்ணீர் கசப்பாக இருந்ததினால் அதை குடிக்க அவர்களுக்கு கூடாது இருந்தது என்று யாத்திராகம புத்தகம் 15-வது அதிகாரம்

23-வது வசனம் கூறுகின்றது. அற்புதமாக அந்த வனாந்திரத்தில் வளம் மிக்க நிலம் ஒன்று கண்டார்கள். 12 நீரூற்றுகளும் 70 பேரீச்சை மரங்களும் உள்ள ஏலீம் என்ற இடம் கண்டனர் என்பதை யாத்திராகமம் 15-வது அதிகாரத்தில் காண்கின்றோம். ஏலீமை விட்டு பிரயாணம் பண்ணி ஏலீமிற்கும் சீனாய் மலைக்கும் நடுவாக அமைந்த சீன் வனாந்திரம் சேர்ந்தார்கள் என்று யாத்திராகமம் 16-வது அதிகாரம் முதல் வசனம் கூறுகின்றது. சீன் வனாந்தரத்தில் அற்புதமாக அவர்களது பசி நீக்க பட்டது. அற்புதமாக வானத்திலிருந்து உணவு வருஷிக்கப்பட்டது. சீன் வனாந்தரத்திலிருந்து ரெவிதீம் என்ற இடம் வந்தனர். அங்கு தாகத்தால் தவித்தபோது அற்புதமாக கன்மலையில் ஊற்று கண்டனர் என்று யாத்திராகமம் 17-வது அதிகாரம் தெரிவிக்கின்றது.

ரெவிதீமில் இருந்து சீனாய் மலை அடிவாரம் வந்தார்கள் என்று யாத்திராகமம் 19-வது அதிகாரம் முதல் வசனம் கூறுகின்றது. எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் முதல் நாளிலே சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்தார்கள் என்று அந்த வசனத்தில் எழுதப்பட்டு உள்ளது. அற்புதமாக 10 கற்பனைகள் சீனாய் மலையில் கொடுக்கப்பட்டன. அவர்கள் அமைத்த ஆசரிப்பு கூடாரத்தில் அற்புதமாக கர்த்தர் இறங்கி வந்ததை அவர்கள் கண்கள் கண்டன. அற்புதமான விடுதலை, அற்புதமான வழி நடத்துதல், அற்புதமான போஷிப்பு, அற்புதமான அன்பு, அற்புதமான மன்னிப்பு, அற்புதமான பிரசன்னம் அனைத்தும் கடந்த ஒரு வருடம் ஒரு மாத வாழ்க்கையில் கண்டார்கள்.

2.2 இஸ்ரவேல் மக்களின் கணக்கெடுப்பிற்கு கட்டளை

> ***நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் முழு சபையாயிருக்கிற அவர்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள புருஷர்களாகிய சகல தலைகளையும் பேர் பேராக எண்ணி தொகையேற்றுங்கள். (எண். 1:2)***

முழு சபையாய் இருக்கிற அவர்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள புருஷர்களாகிய சகல தலைகளையும் பேர் பேராக எண்ணி தொகை ஏற்றுங்கள் என்று இரண்டாவது வசனத்தில் கர்த்தர் கட்டளையிடுகின்றார். மொத்தமாக அல்ல, பேர் பேராக எண்ணும்படி கூறுகின்றார். மனிதர்களை மொத்தமாகவும், கூட்டமாகவும் கர்த்தர் பார்க்கிறவர் அல்ல. ஒவ்வொரு மனித வாழ்க்கையையும் கர்த்தர் தனித்தனியாக கவனிக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். தனித்தனியாக பெயர் பட்டியல் தயாரிக்கும் படி கூறுகின்றார். நல்ல மேய்ப்பன் தமது ஆடுகளை பெயர் சொல்லி கூப்பிடுகின்றார்.

> ***இஸ்ரவேலிலே இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்துக்கு புறப்படத் தக்கவர்கள் எல்லாரையும் அவர்கள் சேனைகளின்படி நீயும் ஆரோனும் எண்ணி பார்ப்பீர்களாக.*** **ஒவ்வொரு கோத்திரத்துக்கு ஒவ்வொரு மனிதன் உங்களோடே இருப்பானாக அவன் தன் பிதாக்களின் வம்சத்துக்கு தலைவனாயிருக்க வேண்டும். (எண். 1:3-4)**

20 வயதிற்கு மேற்பட்டவர்களிடமிருந்து பெயர் பட்டியல் துவங்குகள் என்று கூறுகின்றார். உடல் பெலனும் வேலை திறனும் கொண்டவர்கள் எத்தனை பேர் என்பது முதலாவதாக அறியப்படுகின்றது. கோத்திரம் கோத்திரமாக ஜனங்கள் பிரிக்கப்படுகின்றனர். கோத்திர பிதாக்களின் பெயர்கள் கொண்டு ஜனங்கள் அழைக்கப்படுகின்றனர். கோத்திரம்

உருவாகுவதற்கு காரணமாக இருந்த கோத்திர பிதாக்களை மறக்க வேண்டாம் என்று கர்த்தர் கூறுகின்றார். மீட்கப்பட்ட அனைத்து ஜனங்களும் ஆண்டவரின் சொந்தம். எனவே நபர் நபராக பெயர் சொல்லி எழுதுங்கள் என்று கூறுகின்றார். மீட்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் ஆண்டவரே பொறுப்பு எடுக்கின்றார். எனவே குடும்பம் குடும்பமாக எண்ணுங்கள் என்று கூறுகின்றார்.

எண்ண முடியாத நட்சத்திரங்களை பெயர் சொல்லி அழைக்கும் கர்த்தர் எண்ண முடியாத ஆசீர்வாதங்களை மீட்கப்பட்ட ஜனங்களுக்கு வாரி வழங்குவதற்கு எண்ணுகிறார். தம்மிடம் வாஞ்சையாக இருக்கிறவர்களை விடுவிப்பதற்கு கர்த்தர் எண்ணுகிறார். தமது நாமத்தை அறிந்தவர்களை உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பதற்கு கர்த்தர் எண்ணுகிறார்.

குழந்தைகளையும், சிறுவரையும், வயோதிபரையும் விட்டு விட்டு, யுத்தத்திற்கு செல்ல தக்கவர்களை மட்டும் எண்ணும்படி மோசேக்கும் ஆரோனுக்கும் கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். கணக்கு எடுப்பதிலும் ஒழுங்கு தேவை. அவர்கள் யுத்தத்தில் ஈடுபட விதவிதமான திறமை பெற்றவர்கள். ஆகவே அவர்கள் ஒவ்வொருவரும் சேனைகளின்படி எண்ணப்பட வேண்டும். மேலும் கோத்திர வாரியாகவும் எண்ணப்பட வேண்டும்.

ஆசரிப்பு கூடாரம் அமைக்கப்பட்டு ஒரு மாதம் கடந்து விட்டது (யாத். 40:2,17). இஸ்ரவேல் மக்கள் கைக்கொள்ள வேண்டிய எல்லா கட்டளைகளும், பிரமாணங்களும் சீனாய் மலையில் இருந்து கொடுக்கப்பட்டு விட்டன (லேவி. 27:34).

குடிமதிப்பு எடுக்க படுகிறது. ஆனால் அது புதியதாக மக்களை ராணுவத்தில் சேர்ப்பதாக இல்லாமல், ஏற்கெனவே அவர்கள் இலக்கத்தின்படி கணக்கு பார்க்கும் போது தன் ஆத்துமாவுக்காக கர்த்தருக்கு அரை சேக்கல் கொடுத்தவர்களின் கணக்கின்படி எண்ண பட்டது (யாத். 30:12; 38:26). அவர்களுக்கு ஒரு பத்திரம் கொடுக்க பட்டு இருந்திருக்கலாம். ஒவ்வொரு பத்திரமும் ஒரு குடும்பத்திற்காகவோ ஒரு குழுவிற்காகவோ கொடுக்கப் பட்டு இருந்திருக்கலாம். ஆகவே இந்த குடிமதிப்பு மிக சுலபமாக எடுக்க பட்டது (எண் 1:18). அது ஒரே நாளில் எடுக்க பட்டது. அது மட்டுமல்ல தங்கள் பிதாக்களின் வம்சத்திற்கு தலைவனாகிய ஒருவன் மோசேயுடனும் ஆரோனுடனும் கூட இருந்து தன் வம்சங்களின் எண்ணிக்கையை அவர்களுக்கு கொடுத்தான்.

சரித்திரத்தின் பிற்காலங்களில் பல நாடுகளில் ராணுவ கணக்கெடுப்பு இந்த முறையையே பின்பற்றியதாக தெரிகிறது.

> ***உங்களோடே நிற்க வேண்டிய மனிதருடைய நாமங்களாவன: ரூபன் கோத்திரத்தில் சேதேயூருடைய குமாரன் எலிசூர். சிமியோன் கோத்திரத்தில் சூரிஷதாயின் குமாரன் செலூமியேல். யூதா கோத்திரத்தில் அம்மினதாபின் குமாரன் நகசோன். இசக்கார் கோத்திரத்தில் சுவாரின் குமாரன் நெதனெயேல். செபுலோன் கோத்திரத்தில் ஏலோனின் குமாரன் எலியாப். யோசேப்பின் குமாரராகிய எப்பிராயீம் கோத்திரத்தில் அம்மியூதின் குமாரன் எலிஷாமா மனாசே கோத்திரத்தில் பெதாரிரின் குமாரன் கமாலியேல். பென்யமீன் கோத்திரத்தில் கீதெயோனின் குமாரன் அபீதான். தாண் கோத்திரத்தில் அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர். ஆசேர் கோத்திரத்தில்***

ஓகிரானின் குமாரன் பாகியேல். காத் கோத்திரத்தில் தேகுவேலின் குமாரன் எலியாசாப். நப்தலி கோத்திரத்தில் ஏனானின் குமாரன் அகீரா. இவர்களே சபையில் ஏற்படுத்த பட்டவர்களும், தங்கள் தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களில் பிரபுக்களும், இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்கு தலைவருமாய் இருப்பவர்கள் என்றார். (எண். 1:5-16)

கோத்திர வாரியாக மோசேயுடனும் ஆரோனுடனும் நிற்க வேண்டியவர்களின் பெயர் பட்டியல், அவர்கள் பிறப்பின் வரிசைபடியும், கோத்திரத்தின் முக்கியத்துவத்தின் வரிசைபடியும் கொடுக்க பட்டுள்ளது. முதலில் லேயாளின் பிள்ளைகளும் இரண்டாவது ராகேலின் பிள்ளைகளும் பின்னர் வேலைக்காரிகளின் பிள்ளைகளும் வருகின்றனர்.

தலைவர்களின் பெயர் பட்டியலை நாம் பார்க்கையில் 'கடவுள்,' 'என் தேவன்' 'சர்வ வல்லவர்' என்ற பொருட்களை கொண்ட 'ஏல்', 'ஏலி' 'ஷடாய்' (Shaddai) என்ற தொடர்கள் அதிகமாக பெயர்களில் உபயோகிக்க பட்டு இருப்பதை நாம் காணலாம். ரூபன் கோத்திர தலைவன் ஏலிசூர் ஆகும். சிமியோன் கோத்திரத்தின் தலைவன் சூரிஷதாயின் குமாரன் செலுமியேல்.

இவர்கள் தலைவர்களாக யுத்தத்தில் மற்றவர்களை நடத்தி செல்பவர்கள். லேவி கோத்திரம் மட்டும் எண்ணப்படவில்லை. மோசேயும் ஆரோனும் லேவி கோத்திரத்தினரே.

அப்படியே மோசேயும் ஆரோனும் பேர் பேராக குறிக்கப்பட்ட இந்த மனிதரை கூட்டி கொண்டு, இரண்டாம் மாதம் முதல் தேதியில் சபையார் எல்லாரையும் கூடிவர செய்தார்கள். அப்பொழுது அவர்கள் தங்கள் தங்கள் குடும்பத்தின்படிக்கும், பிதாக்களுடைய வம்சத்தின்படிக்கும், நாமத் தொகையின்படிக்கும், இருபது வயதுள்ளவர்கள் முதல் தலைதலையாக தங்கள் வம்ச உற்பத்தியை தெரிவித்தார்கள். இப்படி கர்த்தர் கட்டளையிட்டபடியே, மோசே அவர்களை சீனாய் வனாந்தரத்தில் எண்ணி பார்த்தான். (எண். 1:17-19)

இஸ்ரவேல் மக்கள் இன்னும் சீனாய் வனாந்தரத்தில்தான் இருக்கிறார்கள். மோசேயும் ஆரோனும் கர்த்தர் தலைவர்களாக தெரிந்து எடுத்த மனிதருடன் நின்று சபையினர் எல்லாரையும் கூடி வர செய்தார்கள். ஒவ்வொரு தலைவனிடமும் அவனது வம்சத்தில் இருபது வயது முதல் ஐம்பது வயது வரை உள்ள மனிதர்களின் பெயர் பட்டியல் இருந்தது. அந்த பட்டியல் ஒவ்வொன்றாக வாசிக்க பட்டது. இந்த முறையான ஜனத்தொகை கணக்கெடுப்பு இரண்டாம் முறையாக சீனாய் வனாந்தரத்தில் எடுக்க பட்டது. அவர்கள் போகும் வழியில் யுத்தம் செய்ய நேரிடலாம். அநேகர் மரித்தும் போகலாம். மேலும் அவர்கள் கானான் போய் சேர்ந்ததும் தேசம் முறையாக ஒவ்வொரு வம்சத்தினருக்கும் பிரித்து கொடுக்கபட வேண்டும்.

2.3 கோத்திர வாரியாக கணக்கெடுப்பு

இஸ்ரவேலின் மூத்த குமாரனாகிய ரூபன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க

புருஷர்கள் எல்லாரும் தலைதலையாக எண்ணப்பட்டபோது, ரூபன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பத்தாறாயிரத்து ஐநூறுபேர். (எண். 1:20-21)

இஸ்ரவேலின் முதல் பேறான ரூபன் கோத்திரத்தில் 20 வயதிற்கு மேற்பட்ட, யுத்தத்திற்கு போக தக்கவர்களின் எண்ணிக்கை 46,500 பேர் என்று பார்க்கிறோம். அநேகர் இந்த எண்ணிக்கைகள் சரியாக இருக்குமோ என்று ஐயம் கொண்டாலும், வேதாகமத்தில் எழுதப்பட்டதை நம்புவதே மேலானது.

சிமியோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் தலைதலையாக எண்ணப்பட்டபோது, சிமியோன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்தொன்பதினாயிரத்து முந்நூறுபேர். (எண். 1:22-23)

இஸ்ரவேலின் இரண்டாவது மகனாகிய சிமியோனின் கோத்திரத்தில் 59,300 பேர் என்று கணக்கெடுக்க பட்டார்கள்.

காத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, காத் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பத்தையாயிரத்து அறுநூற்று ஐம்பதுபேர். (எண். 1:24-25)

காத் கோத்திரத்தினர் 45,650 பேர். மற்ற எல்லா கோத்திரங்களிலும் நூறு என்ற எண் வரை தொகுக்க பட்டது. ஆனால் இங்கு மட்டும் 50 என்று வருவதை காண்கிறோம்.

யூதா புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, யூதா கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், எழுபத்து நாலாயிரத்து அறுநூறுபேர். (எண். 1:26-27)

யூதா கோத்திரத்தாரில் 20 வயதிற்கு மேற்பட்டவர்களாக எண்ண பட்டவர்கள் 74,600 பேராகும்.

இசக்கார் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, இசக்கார் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்து நாலாயிரத்து நானூறுபேர். (எண். 1:28-29)

இசக்கார் கோத்திரத்தில் யுத்த வீரர்களாக செல்ல கூடியவர்கள் 54,400 பேர் என்று எண்ண பட்டார்கள்.

செபுலோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும்

எண்ணப்பட்டபோது, செபுலோன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்தேழாயிரத்து நானூறுபேர். (எண். 1:30-31)

செபுலோன் கோத்திரத்தில் 57,400 பேர் யுத்தத்திற்கு போக தகுதியுள்ள 20 வயதிற்கு மேற்பட்டவர்களாய் இருந்தார்கள்.

யோசேப்பின் குமாரரில் எப்பிராயீம் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, எப்பிராயீம் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பதினாயிரத்து ஐநூறுபேர். (எண். 1:32-33)

எப்பிராயீம் கோத்திரத்தில் 40,500 பேர் 20 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருந்தனர்.

மனாசே புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, மனாசே கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், முப்பத்தீராயிரத்து இருநூறுபேர். (எண். 1:34-35)

மனாசே கோத்திரத்தில் 32,200 பேர் இருந்தனர்.

பென்யமீன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, பென்யமீன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், முப்பத்தையாயிரத்து நானூறுபேர். (எண். 1:36-37)

பென்யமீன் கோத்திரத்தில் 35,400 பேர் எண்ணப்பட்டனர்.

தாண் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, தாண் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், அறுபத்தீராயிரத்து எழுநூறுபேர். (எண். 1:38-39)

தாண் கோத்திரத்தில் 62,700 பேர் யுத்தத்திற்கு செல்ல கூடியவர்களாய் இருந்தனர்.

ஆசேர் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, ஆசேர் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பத்தோராயிரத்து ஐந்நூறுபேர். (எண். 1:40-41)

ஆசேர் கோத்திரத்தில் 41,500 பேர் இருந்தனர்.

நப்தலி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, நப்தலி கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்து மூவாயிரத்து நானூறுபேர். (எண். 1:42-43)

நப்தலி கோத்திரத்தில் 53,400 பேர் யுத்தம் செய்ய கூடியவர்களாய் இருந்தனர்.

எண்ணப்பட்டவர்கள் இவர்களே; மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலுடைய பிதாக்களின் வம்சத்தில் ஒவ்வொரு வம்சத்துக்கு ஒவ்வொரு பிரபுவாகிய பன்னிரண்டுபேரும் எண்ணினார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களின் வம்சத்தில் இருபது வயதுள்ளவர்கள் முதல், இஸ்ரவேலில் யுத்தத்திற்கு புறப்படத்தக்கவர்களாகிய எண்ணப்பட்ட பேர்கள் எல்லாரும், ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேராயிருந்தார்கள். (எண். 1:44-46)

இஸ்ரவேலில் 11 புத்திரர்களின் கோத்திரங்களில் 20 வயதிற்கு மேலானவர்கள் யுத்தத்திற்கு செல்ல கூடியவர்கள் என்று பார்த்து கணக்கிடுகையில் மொத்த சேனைகள் 6,03,550 பேராக இருந்தனர். 12 கோத்திரங்கள் என்பது யோசேப்பின் இரு பங்கான மனாசே கோத்திரமும் எப்பிராயீம் கோத்திரமும் தனி தனியாக எண்ணபட்டதினாலே ஆகும். எண்ணாக புத்தகத்தின் கடைசியில் 38 வருங்களுக்கு பிறகு திரும்பவும் கணக்கெடுக்க பட்டது. அதில் உள்ள எண்ணிக்கை மாறுபட்டது. அதில் இருந்து ஒவ்வொரு கோத்திரமும் எவ்வாறு பாதிக்க பட்டது என்பதை காணலாம்.

2.4 லேவியருக்கு விசேஷித்த பிரகாரமாக கர்த்தரின் பணி

லேவியர் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின்படியே, மற்றவர்களுடனே எண்ணப்படவில்லை. கர்த்தர் மோசேயை நோக்கி: நீ லேவி கோத்திரத்தாரை மாத்திரம் எண்ணாமலும், இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே அவர்கள் தொகையை ஏற்றாமலும், லேவியரை சாட்சியின் வாசஸ்தலத்திற்கும், அதினுடைய சகல பணிமுட்டுகளுக்கும், அதிலுள்ள சமஸ்த பொருள்களுக்கும் விசாரிப்புக்காரராக ஏற்படுத்து. (எண். 1:47-50a)

இந்த கணக்கெடுப்பு விசேஷமாக யுத்தத்திற்கு செல்ல கூடிய மனிதர்களின் கணக்கெடுப்பானதால் லேவி புத்திரர் கணக்கில் சேர்த்து கொள்ளப்படவில்லை. அவர்கள் யுத்தத்திற்கு போகாமல் ஆசரிப்பு கூடாரத்திற்கும், அதன் பணிமூட்டுகளுக்கும் பொறுப்பாக இருந்து, அதின் ஊழியத்தை மட்டும் செய்ய வேண்டும். ஆதலால் அவர்கள் பாளயம் இறங்கும் போது வாசஸ்தலத்தை சுற்றிலும் தங்கள் கூடாரங்களை போட்டு கொள்ள வேண்டும்.

அவர்கள் வாசஸ்தலத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் சுமப்பார்களாக அதினிடத்தில் ஊழியம் செய்து, வாசஸ்தலத்தை சுற்றிலும் பாளையமிறங்கக்கடவர்கள். வாசஸ்தலம் புறப்படும்போது, லேவியர் அதை இறக்கி வைத்து, அது ஸ்தாபனம் பண்ணப்படும் போது, லேவியர் அதை எடுத்து நிறுத்தக்கடவர்கள். அந்நியன் அதற்கு சமீபத்தில் வந்தால் கொலை செய்யப்படக்கடவன். (எண். 1:50b-51)

லேவியருடைய வேலை பெரியது. பாளயம் ஒரு இடத்தில் இருந்து மறு இடத்திற்கு போகையில் ஆசரிப்பு கூடாரத்தை ஒழுங்காக, கிரமமாக, மோசே கட்டளையிட்டபடி இறக்கி வைப்பதும், பிரயாணத்தில் அதை சுமந்து செல்வதும், பின் பாளயம் இறங்கும் இடத்தில் கிரமமாக அதனை நிலைப்படுத்தி மக்கள் கர்த்தரை ஆராதிக்க எல்லா ஆயத்தங்கள்

செய்வதும் லேவியரின் பொறுப்பாகும். லேவியர் மேலும் கூடாரத்தை சுற்றிலும் பாளயம் இறங்கி அதனை காத்து கொள்வதும் அவர்கள் பொறுப்பாகும்.

> *இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தங்கள் பாளயத்தோடும், தங்கள் தங்கள் சேனையின் கொடியோடும் கூடாரம் போடக்கடவர்கள். இஸ்ரவேல் புத்திரராகிய சபையின் மேல் கடுங்கோபம் வராதபடிக்கு லேவியர் சாட்சியின் வாசஸ்தலத்தை சுற்றிலும் பாளயமிறங்கி, லேவியர் சாட்சியின் வாசஸ்தலத்தை காவல்காப்பார்களாக என்றார். (எண். 1:52-53)*

இங்கே இஸ்ரவேல் மக்களின் பாளயத்தின் அமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்று தெளிவாக கொடுக்க பட்டுள்ளது. பாளயத்தின் நடுவில் ஆசரிப்பு கூடாரம், அதனை சுற்றிலும் லேவியர் கிரமமாக பாளயம் இறங்க வேண்டும். அதின் பின்னாலும், இரு பக்கங்களிலும் மூன்று மூன்று கோத்திரங்களாக பாளயம் இறங்க வேண்டும். முன் பக்கம் இருபுறமும் இரு கோத்திரங்களும் நடுவில் பாதை விட்டு பாளயம் இறங்க வேண்டும்.

> *கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடி எல்லாவற்றையும் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள். (எண். 1:54)*

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் கட்டளைகளுக்கு முழுவதுமாக கீழ்ப்படிந்து, அவர்கள் முன்னிருக்கும் பெரிய பிரயாணத்திற்கு, வாக்குதத்த பூமிக்கு செல்கிறோம் என்ற நம்பிக்கையோடு ஆயத்தமானார்கள்.

அத்தியாயம் - 3
வழியில் பாளயம் இறங்க ஒழுங்கு முறைகள்

3.1 பிரயாணம் செய்யும் இடங்களில் இறங்கி பாளயம் அமைக்க ஒழுங்குகள்

எண்ணாகமம் 2-வது அதிகாரம் 34 வசனங்களை கொண்டது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்தை நோக்கி செல்ல இருக்கும் மீட்கப்பட்ட ஜனங்களுக்கு அவசியமான விவரங்கள் இந்த அதிகாரத்தில் கூறப்பட்டு உள்ளது. வனாந்திர பிரயாணத்தில் பாதை தவறாமல் நடக்க, கர்த்தர் மீது அவர்களுடைய கவனம் சிதையாமல் இருக்க, அவசியமான ஒரு அமைப்பு அவர்களுக்கு கூறப்படுகின்றது. அந்த அமைப்பு கர்த்தர் ஒருவரையே நடுவாக கொண்ட அமைப்பாக அமைய வேண்டும். அப்பொழுது மட்டுமே தூய்மை, உண்மை, அன்பு நீதி, நேர்மை அனைத்தும் நிலை நாட்டப்படும். எனவே அவ்விதமான ஓர் ஒழுங்கு கர்த்தரால் அறிமுகம் படுத்தப்படுவதை எண்ணாகம புத்தகம் 2, 3 ஆகிய அதிகாரங்களில் நாம் பார்க்க இருக்கின்றோம்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: (எண். 2:1)

மிக முக்கியமாக இந்த அமைப்பினை கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் அழைத்து கூறுவதை முதலாவது வசனத்தில் நாம் பார்க்கின்றோம்.

ஆசரிப்பு கூடாரத்தில் கர்த்தரின் உடன்படிக்கை பெட்டி இருக்கின்றது. கேரூபீன்கள் நடுவில் இருந்து கர்த்தர் பேசுகிறார். ஆசரிப்பு கூடாரம் கர்த்தரின் பிரசன்னம் தங்கும் இடம். அதனை நடுவாக வைத்து 12 கோத்திரங்களும் லேவியர்களும் தங்க வேண்டும், புறப்பட வேண்டும், பிரயாணம் செய்ய வேண்டும். இதுவே மீட்கப்பட்ட ஜனங்களுக்கு கொடுக்க பட்ட ஒழுங்கு அமைப்பு என்பது ஆகும். கர்த்தரை நடுவாக கொண்டு வாழ்வதற்கு உரிய ஒரு அமைப்பாக அது இருக்கிறது. கர்த்தர் ஒரு உன்னதமான அமைப்பை அவர்களுடைய பாளயத்திற்கு கட்டளை இடுகிறார். அது அவர்களுக்கு பாதுகாப்பையும் தங்களை தாங்களே காத்து கொள்ள கூடிய அமைப்பாக இருப்பதுடன், கர்த்தரை நடுவாக கொண்டு வாழ்வதற்கு உரிய ஒரு அமைப்பாகவும் மாறுகின்றது. அவர்களது சொந்த அறிவு சாமர்த்தியம், மனித பெலன் இவைகளை நடுவாக வைத்து அவர்கள் செய்ய இருக்கும் பிரயாணத்தை செய்ய துணிந்து விட்டால் அவர்களுக்கு எதிராக வரக் கூடிய பிரச்சனைகள், கஷ்டங்கள், எதிர்ப்புகள் ஏமாற்றங்கள் அனைத்திலும் அவர்கள் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்ட துவங்கி விடுவார்கள். அவர்களுடைய ஐக்கியம் அதனால் பாதிக்கப்படும். அவர்களுக்குள் இருக்கும் அன்பு மறைந்து போகும். அவர்கள் இது வரை கண்ட வெற்றிகள் அனைத்தும் தோல்வி ஆகும்.

எனவே கர்த்தரை மட்டும் நடுவாக கொண்ட ஒரு பாளயமாக அந்த அமைப்பு இடம் பெறுவதை இரண்டாம் அதிகாரத்திலும் தொடர்ந்து மூன்றாவது அதிகாரத்திலும் நாம் பார்க்க இருக்கின்றோம். எண்ணாகம புத்தகம் இரண்டாவது அதிகாரம் இரண்டாவது வசனத்தில் அவர்கள் அனைவருக்கும் நடுவாக ஆசரிப்பு கூடாரம் இடம் பெறுவதை நாம் பார்க்கின்றோம். அதனை தொடர்ந்து 12 கோத்திரங்களும் யூதா, ரூபன், எப்பிராயீம், தாண் கோத்திரங்களின் தலைமையில் நான்கு பிரிவுகளாக நிறுத்தப்படுகின்றது. எண்ணாகமம் 2-வது அதிகாரம்

3 முதல் 9 வசனங்களில் ஆசரிப்பு கூடாரத்தின் கீழ் பகுதியில் இருக்க வேண்டியவர்கள் யார் என்றும், 10 முதல் 16 வசனங்களில் ஆசரிப்பு கூடாரத்தின் தெற்கு பகுதியில் முகாம் இட வேண்டியவர்கள் யார் என்றும், 18 முதல் 24 வசனங்களில் மேற்கு பகுதியில் நிறுத்தப்பட வேண்டியவர்கள் யார் என்றும், 25-வது வசனம் முதல் 31-வது வசனம் வரை வடக்காக தங்க வேண்டியவர்கள் யார் என்றும் கூறப்பட்டு உள்ளது. ஆசரிப்பு கூடாரம் கிழக்கு நோக்கி அமைக்கப் பட வேண்டும்.

3.2 கோத்திர கொடிகளுடன் பாளயம் இறங்க வேண்டும்

இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின் விருதாகிய தங்கள் கொடியண்டையிலே தங்கள் கூடாரங்களை போட்டு, ஆசரிப்பு கூடாரத்திற்கு எதிராக சுற்றிலும் பாளயமிறங்க கடவர்கள். (எண். 2:2)



பன்னிரண்டு கோத்திரங்களின் கொடிகள்

இவ்வளவு பெரிய மக்கள் கூட்டம் பிரயாணப்பட்டு பாளயம் இறங்குவது என்பது சுலபமானதல்ல. அது ஒழுங்கும் கிரமமுமாக நடைபெற கர்த்தரால் கொடுக்கப்படும் முதல் குறிப்பு. அவர்கள் தங்கள் தங்கள் வம்சத்தின்படி தங்கள் தங்கள் கொடியை நட்டு அதனண்டையிலே தங்கள் கூடாரங்களை போட வேண்டும் என்பதாகும்.

இரண்டாவது குறிப்பாக அவர்கள் ஆசரிப்பு கூடாரத்தை சுற்றி பாளயம் இறங்க வேண்டும் என்று கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தராகிய தேவனே அவர்களது அரசனும்

தலைவனும் ஆனவர். ஆகவே அவரையே மையமாக கொண்டு ஆனால் கூடாரத்தில் இருந்து நல்ல தூரம் விட்டு அவர்கள் பாளயம் இறங்க வேண்டும்.

12 கோத்திரங்களும் நான்கு பிரிவாக பிரிக்கப்படுவதையும் நான்கு பிரிவுகளும் ஆசரிப்பு கூடாரத்தின் நான்கு பகுதிகளில் இடம் பெறுவதையும் நாம் காண்கின்றோம். ஒவ்வொரு பிரிவிலும் மூன்று கோத்திரங்கள் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு பிரிவையும் தலைமை தாங்கி நடத்துவதற்கு ஒரு கோத்திரம் நியமிக்கப்படுகின்றது. அவ்விதம் தலைமை பொறுப்பு எடுத்தவர்கள் யூதா, ரூபன், எப்பிராயீம், தாண் என்பவர்களின் கோத்திரங்கள் ஆகும். நான்கு பிரிவுகளும் தங்களுக்கு என்று ஒரு சின்னம் பெற்று கொண்டதாக கூற படுகின்றது. இதனை விருது என்று 2-வது வசனம் அழைக்கின்றது. ஆயினும் இந்த சின்னங்கள் எவை எப்படிப் பட்டவை என்பதை பற்றிய விவரம் எண்ணாகம புத்தகத்தில் கொடுக்கப்படவில்லை. அவை ஆதியாகமம் 49-வது அதிகாரத்தை அடிப்படையாக கொண்டவை.

பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் கொடுக்கப்பட்ட சின்னங்கள், யாக்கோபு தன் மரண படுக்கையில் இருக்கையில் தன் குமாரரை கூடி வர செய்து அவர்கள் ஒவ்வொருவரையும் குறித்து தீர்க்க தரிசனமாக ஆதியாகமம் 49:3-25 வசனங்களில் கூறியதை சார்ந்தது.

யூதா கோத்திரத்தின் சின்னம் சிங்கம் ஆகும் (ஆதி. 49:9). இசக்கார் கோத்திரத்தின் சின்னம் கழுதை (வச. 14). செபுலோன் கோத்திர சின்னம் கப்பல் (வச. 15). லேவி கோத்திர சின்னம் பிரதான ஆசாரியன் அணியும் 12 கோமேதக கற்கள் பதித்த தும்மீம். ரூபன் தண்ணீரை போல தளம்பினவன் (வச. 4) என்பதினால் அவனது சின்னம் தளம்பும் நீர் ஆனது. சிமியோன் கோத்திர சின்னம் இரு வாள்கள் அல்லது கோட்டை ஆகும். காத் கோத்திர சின்னம் ராணுவ கூடாரம். எப்பிராயீம் கோத்திர சின்னம் காளை. மனாசே கோத்திர சின்னம் கனிதரும் செடி. பென்யமீன் கோத்திர சின்னம் ஓநாய் (வச. 27). தாண் கோத்திர சின்னம் சர்ப்பம் (வச. 17). இந்த கொடிகளின் நிறம் அவர்களின் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் கொடுக்கப்பட்ட கோமேதக கற்களின் நிறம் ஆகும்.

அதனை பற்றிய ஒரு குறிப்பு எசேக்கியேல் தீர்க்க தரிசன புஸ்தகத்தில் உள்ளது. அதில் கூறி உள்ளபடி யூதாவின் சின்னம் சிங்கம் என்றும், ரூபனின் சின்னம் மனித முகம் என்றும், எப்பிராயீமின் சின்னம் எருது என்றும் தாண் பிரிவின் சின்னம் கழுகு என்றும் கூறப்பட்டு உள்ளது. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புஸ்தகம் முதலாம் அதிகாரம் 10-வது வசனத்தை பாருங்கள். ''அவைகளுடைய முகங்களின் சாயலாவது, வலது பக்கத்தில் நாலு மனுஷ முகமும், சிங்க முகமும், இடது பக்கத்தில் நாலு எருது முகமும் கழுகு முகமுமாய் இருந்தன.'' தொடர்ந்து வெளிப்படுத்தின விசேஷம் 4-வது அதிகாரம் 7-வது வசனத்தையும் பாருங்கள்: ''முதலாம் ஜீவன் சிங்கத்திற்கு ஒப்பாகவும் இரண்டாம் ஜீவன் காளைக்கு ஒப்பாகவும் மூன்றாம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவும் இருந்தன.''

மேலும் 12 கோத்திரங்களுக்கும் 12 விதமான நிறங்கள் கொடிகளுக்கு இருந்தன. இதை பற்றிய குறிப்பு எண்ணாகம புத்தகம் முதல் அதிகாரம் 52-வது வசனத்திலும், இரண்டாம் அதிகாரம் இரண்டாவது வசனத்திலும் வருகின்றது. அந்த கொடிகளின் நிறங்கள் எது என்று எண்ணாகம புத்தகத்தில் கூறப்படவில்லை. ஆரோனின் வஸ்திரத்தில் மார் பதக்கம் என்று ஒன்று உண்டு. அதில் 12 கோமேதக கற்கள் பதிக்கப்பட்டு இருந்தன. ஒவ்வொரு கல்லிலும் ஒரு கோத்திரத்தின் பெயரும் அந்த கோத்திரத்திற்குரிய ஒரு குறிப்பிட்ட நிறமும் இருந்தது

என்று நாம் அறிவோம். இதனை பற்றிய விவரம் யாத்திராகம புத்தகம் 28-வது அதிகாரம் 15-வது வசனம் முதல் 21-வது வசனம் வரை கூறப்பட்டு உள்ளது. கோத்திரத்தின் பெயர் எழுதப்பட்ட கோமேதக கல்லின் நிறம் எதுவோ அதுவே அவர்களது கொடியின் நிறமாகவும் இருக்க வேண்டும் என்று ஒரு குறிப்பு கூறுகின்றது. ''தங்கள் தங்கள் கொடி அண்டையில் தங்கள் கூடாரங்களை போட்டு ஆசரிப்பு கூடாரத்திற்கு எதிராக சுற்றிலும் பாளயம் இறங்க கடவர்கள்'' என்று இரண்டாவது அதிகாரம் இரண்டாவது வசனம் கூறுகின்றது. எதிராக என்பதின் சரியான பொருள் ஏற்ற இடைவெளிவிட்டு என்பது ஆகும். யோசுவாவின் புத்தகம் 3-வது அதிகாரம் 4-வது வசனத்தில் இந்த இடைவெளி இரண்டாயிரம் முழம் என்று கூறப்பட்டு உள்ளது. ''உங்களுக்கும் அதற்கும் இடையில் இரண்டாயிரம் முழ தூரமான இடம் இருக்க வேண்டும்'' என்று பார்க்கிறோம். 12 கோத்திரங்களும் நான்கு பிரிவாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு குறிப்பிட்ட கோத்திரம் தலைமை பொறுப்பை ஏற்று கொண்டது.

3.3 கோத்திரங்கள் பாளயம் இறங்க வேண்டிய இடங்கள்



யூதா, இசக்கார், செபுலோன் கோத்திரத்தாரின் கொடிகள்

யூதாவின் பாளயத்து கொடியையுடைய சேனைகள் சூரியன் உதிக்கும் கீழ்புறத்திலே பாளயம் இறங்க வேண்டும். அம்மினதாபின் குமாரனாகிய நகசோன் யூதா சந்ததிக்கு சேனாபதியாய் இருக்க கடவன். எண்ணப்பட்ட அவனுடைய சேனை எழுபத்து நாலாயிரத்து அறுநூறு பேர். அவன் அருகே இசக்கார் கோத்திரத்தார் பாளயமிறங்க வேண்டும். சுவாரின் குமாரன் நெதனெயேல் இசக்கார் சந்ததிக்கு சேனாபதியாய் இருக்க கடவன். எண்ணப்பட்ட அவனுடைய சேனை ஐம்பத்து நாலாயிரத்து நானூறு பேர். அவன் அருகே செபுலோன் கோத்திரத்தார் பாளயமிறங்க வேண்டும், ஏலோனின் குமாரனாகிய எலியாப் செபுலோன் சந்ததிக்கு சேனாபதியாய் இருக்கக் கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்தேழாயிரத்து நானூறு பேர். எண்ணப்பட்ட யூதாவின் பாளயத்தார்

எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நானூறு பேர், இவர்கள் பிரயாணத்திலே முதல் பாளயமாய் போகக்கடவர்கள். (எண். 2:3-9)

முதல் பிரிவு அல்லது பாளயம் லேயாளின் மகன் யூதாவின் தலைமையில் அமைந்தது. யூதாவின் தலைமையில் இரண்டு கோத்திரங்கள் இயங்கின. அவைகள் இசக்கார், செபுலோன் என்ற கோத்திரங்கள் ஆகும். இவர்கள் மூவரும் லேயாளுக்கு பிறந்த பிள்ளைகள் ஆகும். ஆசரிப்பு கூடாரத்தின் கிழக்கு பகுதியில் யூதாவின் பிரிவு முகாமிடுவதற்கு கட்டளை பிறந்தது. யூதா கோத்திரமே எல்லா கோத்திரங்களுக்கும் முன்னாக முதலில் அணிவகுத்து சென்று, ஆசரிப்பு கூடாரம் அமைக்கப்பட இருக்கிற இடத்திற்கு கிழக்காக பாளயம் இறங்க வேண்டும். தொடர்ந்து இசக்கார், செபுலோன் கோத்திரங்கள் கிழக்கே பாளயம் இறங்க வேண்டும். ஆசரிப்பு கூடாரம் கிழக்கே பார்த்து அமைக்கபட வேண்டும் என்று பார்த்தோம். ஆகவே யூதா பாளயம் ஆசரிப்பு கூடாரத்தின் வாசல் புறத்திற்கு முன்னால் அமைக்க வேண்டும்.

யூதாவின் பாளயத்தின் யுத்த வீரர்களின் எண்ணிக்கையாவது:

கோத்திரம்	எண்ணிக்கை	தலைவன்
யூதா கோத்திரம்	74,600 பேர்	நகசோன்
இசக்கார் கோத்திரம்	54,400 பேர்	நெதெனெயேல்
செபுலோன் கோத்திரம்	57,400 பேர்	எலியாப்
மொத்தம்	1,86,400 பேர்	

ரூபனுடைய பாளயத்து கொடியையுடைய சேனைகள் தென் புறத்தில் பாளயம் இறங்க வேண்டும்; சேதேயூரின் குமாரனாகிய எலிசூர் ரூபன் சந்ததியாருக்கு சேனாபதியாய் இருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்து ஆறாயிரத்து ஐந்நூறு பேர். அவன் அருகே சிமியோன் கோத்திரத்தார் பாளயமிறங்க வேண்டும்; சூரிஷதாயின் குமாரனாகிய செலூமியேல் சிமியோன் சந்ததியாருக்கு சேனாபதியாய் இருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்து ஒன்பதினாயிரத்து முந்நூறு பேர். அவன் அருகே காத் கோத்திரத்தார் பாளயமிறங்க வேண்டும். தேகுவேலின் குமாரனாகிய எலியாசாப் காத் சந்ததியாருக்கு சேனாபதியாய் இருக்க கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்து ஐயாயிரத்து அறுநூற்று ஐம்பது பேர். எண்ணப்பட்ட ரூபனின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து நானூற்று ஐம்பது பேர், இவர்கள் பிரயாணத்தில் இரண்டாம் பாளயமாய் போகக்கடவர்கள். (எண். 2:10-16)



ரூபன், சிமியோன், காத் கோத்திரத்தாரின் கொடிகள்

இரண்டாவது பிரிவு லேயாளின் மகன் ரூபன் தலைமையில் அமைந்தது. ரூபனின் சகோதரர் சிமியோனும் லேயாளின் பணிவிடை பெண்ணிடம் பிறந்த காத் என்பவன் கோத்திரமும் இந்த பிரிவில் இடம் பெற்றது. ரூபனின் தலைமையின் கீழ் இருந்த பிரிவு ஆசரிப்பு கூடாரத்தின் தென் புறத்தில் தங்குவதற்கு கட்டளை பிறந்தது. அவர்கள் வரிசைப்படி ரூபன் கோத்திரம் முதலாவதாகவும், பின் சிமியோன் கோத்திரமும், காத் கோத்திரமும் தங்கள் தங்கள் கொடியின் அருகே பாளயம் இறங்க வேண்டும்.

ரூபன் பாளயத்தின் யுத்த வீரர்களின் எண்ணிக்கையாவது:

கோத்திரம்	எண்ணிக்கை	தலைவன்
ரூபன் கோத்திரம்	46,500 பேர்	எலிசூர்
சிமியோன் கோத்திரம்	59,300 பேர்	செலுமியேல்
காத் கோத்திரம்	45,650 பேர்	எலியாசாப்
மொத்தம்	1,51,450 பேர்	

பின்பு ஆசரிப்பு கூடாரம் லேவியரின் சேனையோடே பாளயங்களின் நடுவே பிரயாணப்பட்டு போகவேண்டும். எப்படி பாளயம் இறங்குகிறார்களோ, அப்படியே அவரவர் தங்கள் வரிசையிலே தங்கள் கொடிகளோடே பிரயாணமாய் போகக்கடவர்கள். (எண். 2:17)

இஸ்ரவேலின் ஆறு கோத்திரங்கள் அணி அணியாய் சென்ற பின்பு, ஆசரிப்பு கூடாரம், அதிலுள்ள எல்லா பொருட்களுடன் மிகுந்த பயத்துடன், பரிசுத்தமாக லேவியரால் தென் கிழக்காக பாளயம் இறங்கி இருந்த கோத்திரங்களின் நடுவாக கொண்டு வரப்பட வேண்டும்.



லேவி கோத்திரத்தாரின் கொடி

திரும்ப அவர்கள் பிரயாண படுகையில் அதே வரிசையில்தான் கொண்டு செல்லப்படவும் வேண்டும்.

எண்ணாகம புத்தகம் 2:17-வது வசனம் பிரயாண நேரங்களில் ஆசரிப்பு கூடாரம் பாளயங்களின் நடுவில் பிரயாண பட்டு போக வேண்டும் என்று கூறுகின்றது. ஆசரிப்பு கூடாரத்தை நடுவாக வைத்தே அவர்களுடைய பிரயாணங்கள் இடம் பெற வேண்டும் என்பதை அந்த வசனம் வலியுறுத்தி கூறுகின்றது.

> *எப்பிராயீமுடைய பாளயத்து கொடியையுடைய சேனைகள் மேல் புறத்தில் இறங்க வேண்டும்; அம்மியூதின் குமாரனாகிய எலிஷாமா எப்பிராயீமின் சந்ததிக்கு சேனாபதியாய் இருக்க கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பதினாயிரத்து ஐந்நூறு பேர். அவன் அருகே மனாசே கோத்திரத்தார் பாளயமிறங்க வேண்டும்; பெதாசூரின் குமாரனாகிய கமாலியேல் மனாசே சந்ததிக்கு சேனாபதியாய் இருக்க கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் முப்பத்தீராயிரத்து இருநூறு பேர். அவன் அருகே பென்யமீன் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; கீதெயோனின் குமாரனாகிய அபீதான் பென்யமீன் சந்ததிக்கு சேனாபதியாய் இருக்கக் கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் முப்பத்தையாயிரத்து நானூறு பேர். எண்ணப்பட்ட எப்பிராயீமின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து எண்ணாயிரத்து நூறுபேர். இவர்கள் பிரயாணத்தில் மூன்றாம் பாளயமாய் போகக்கடவர்கள். (எண். 2:18-24)*

மூன்றாவது பிரிவு ராகேலின் மகனான யோசேப்பின் குமாரன் எப்பிராயீம் தலைமையில் அமைந்தது. யோசேப்பின் மற்றொரு மகனான மனாசேயும் யோசேப்பின் சகோதரரான பென்யமீனும் இந்த பிரிவில் சேர்ந்து கொண்டார்கள். எப்பிராயீம் பிரிவு ஆசரிப்பு



எப்பிராயீம், மனாசே, பென்யமீன் கோத்திர கொடிகள்

கூடாரத்திற்கு மேற்கு பகுதியில் பாளயம் இறங்க வேண்டும் என்ற கட்டளை பிறப்பதை நாம் பார்க்கிறோம்.

எப்பிராயீம் பாளயத்தின் யுத்தவீரரின் எண்ணிக்கையாவது:

கோத்திரம்	எண்ணிக்கை	தலைவன்
எப்பிராயீம் கோத்திரம்	40,500 பேர்	எலிஷாமா
மனாசே கோத்திரம்	32,200 பேர்	கமாலியேல்
பென்யமீன் கோத்திரம்	35,400 பேர்	அபீதான்
மொத்தம்	**1,08,100 பேர்**	

தாணுடைய பாளயத்து கொடியையுடைய சேனைகள் வடபுறத்தில் இறங்க வேண்டும்; அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேர் தாண் வம்சத்திற்கு சேனாபதியாய் இருக்கக் கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் அறுபத்தீராயிரத்து எழுநூறு பேர். அவன் அருகே ஆசேர் கோத்திரத்தார் பாளயம் இறங்கவேண்டும்; ஓகிரானின் குமாரனாகிய பாகியேல் ஆசேர் சந்ததிக்கு சேனாபதியாய் இருக்கக் கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தோராயிரத்து ஐந்நூறு பேர். அவன் அருகே நப்தலி கோத்திரத்தார் பாளயமிறங்க வேண்டும்; ஏனானின் குமாரனாகிய அகீரா நப்தலி சந்ததியாருக்கு சேனாபதியாய் இருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்து மூவாயிரத்து நானூறு பேர். எண்ணப்பட்ட தாணின் பாளயத்தார் எல்லாரும் இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து அறுநூறு பேர், இவர்கள் தங்கள் கொடிகளோடே பின்பாளயமாய் போகக்கடவர்கள். (எண். 2:25-31)



தாண், ஆசேர், நப்தலி கோத்திரத்தாரின் கொடிகள்

பில்காளுக்கு பிறந்த தாண் என்பவன் தலைமையில் நான்காவது பிரிவு இடம் பெற்றது. தாண் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரமாக மாறி தன் ஜனத்தை நியாயம் விசாரிப்பான் என்று யாக்கோபு முன் உரைத்தது உண்மையாயிற்று. அவனுடன் ஆசேர், நப்தலி கோத்திரங்கள் இடம் பெற்றன. தாண் பிரிவினர் ஆசரிப்பு கூடாரத்தின் வடக்கு பகுதியில் தங்குவதற்கு கட்டளை பெற்றார்கள் என்பதை 25-வது வசனத்தில் பார்க்கலாம்.

தாண் பாளயத்தின் யுத்தவீரரின் எண்ணிக்கையாவது:

கோத்திரம்	எண்ணிக்கை	தலைவன்
தாண் கோத்திரம்	62,700 பேர்	அகியேசர்
ஆசேர் கோத்திரம்	41,500 பேர்	பாகியேல்
நப்தலி கோத்திரம்	53,400 பேர்	அகீரா
மொத்தம்	1,57,600 பேர்	

இவர்களே தங்கள் தங்கள் பிதாக்களின் வம்சத்தின்படி இஸ்ரவேல் புத்திரரில் எண்ணப்பட்டவர்கள். பாளயங்களிலே தங்கள் தங்கள் சேனைகளின்படியே எண்ணப்பட்டவர்கள் எல்லாரும் ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேராயிருந்தார்கள். லேவியரோ, கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடி, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே எண்ணப்படவில்லை. கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடி எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்து, தங்கள் தங்கள் கொடிகளின் கீழ் பாளயமிறங்கி, தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சங்களின்படியே பிரயாணப்பட்டு போனார்கள். (எண். 2:32-34)

இந்த வசனங்கள் யுத்தத்திற்கு புறப்பட்டு செல்ல தக்கதாக எண்ணப்பட்ட ஆண் மக்களின் மொத்த தொகை பற்றிய விவரங்களை நமக்கு கொடுக்கின்றது. எண்ணாகமம் முதல் அதிகாரம் 47-வது வசனத்திலும் 2-வது அதிகாரம் 33-வது வசனத்திலும் இந்த புள்ளி விவர கணக்குகள் எடுக்கையில் லேவியர்கள் சேர்த்து கொள்ளப்படவில்லை என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். பெரிய ஒரு எண்ணிக்கை கொண்ட மீட்கப்பட்ட ஜனங்கள் மீட்பரை நடுவாக வைத்து வாழ்வதற்கு எதிர்பார்க்கப்பட்டார்கள்.



கர்த்தரை நடுவாக கொண்டு வாழ்வதற்கு ஜனங்கள் கையாள வேண்டிய ஒழுங்கு முறைகள் எண்ணாகமம் 2-வது அதிகாரத்தில் கூறப்பட்டு உள்ளது. ஒவ்வொரு கோத்திரத்தாரும் அவரவர் இடத்தில் இருப்பதற்கு தங்களை முற்றிலுமாக ஒப்பு கொடுத்தார்கள். தங்களுக்கு கொடுக்கப்பட்ட இடம் மோசேயினால் கொடுக்கப்பட்டது என்று அல்ல, கர்த்தரால் கொடுக்கப்பட்டது என்று ஏற்று கொண்டார்கள். அவரவரின் ஸ்தானத்தில் மன ரம்மியமாக இருக்க கற்று கொண்டார்கள். நல்ல இடம் வேண்டும் என்று யாரும் வாதாடவே இல்லை. கொடுக்கப்பட்ட இடம் எந்த இடம் என்றாலும் கர்த்தர் நடுவாக இருந்து விட்டால் ஆசீர்வாதம் என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். கர்த்தரை மட்டும் நடுவாக வைத்த குடும்பங்களாகவும், கோத்திரங்களாகவும், சமூகமாகவும் அவர்கள் காணப்பட்டார்கள். அவரவருக்கு என்று கொடுக்கப்பட்ட இடங்கள் கர்த்தரால் மட்டுமே கொடுக்கப்பட்டது. கர்த்தருடைய நாம மகிமைக்காக மட்டுமே கொடுக்கப்பட்டது. பரிசுத்த

பவுல் ரோமர் என்பாருக்கு எழுதிய நிரூபம் 12-வது அதிகாரம் 6,7,8 ஆகிய வசனங்களை பார்ப்போம். ''நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்கள் உள்ளவர்கள் ஆனபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்தை உடையவன் விசுவாச பிரமாணத்துக்கு ஏற்றதாக சொல்ல கடவன். ஊழியம் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்து இருக்க கடவன். பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனை இல்லாமல் கொடுக்க கடவன். முதலாளியானவன் ஜாக்கிரதையாய் இருக்க கடவன். இரக்கம் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்ய கடவன்.''



இஸ்ரவேல் புத்திரர் பாளயம் இறங்க வேண்டிய முறையின் வரைபடம்

அத்தியாயம் - 4

லேவியர் ஜனத்தொகை கணக்கெடுப்பும் அவர்கள் பணிகளும்

4.1 பிரயாணத்திற்கு முன் லேவி கோத்திரத்தார் பொறுப்புகள்

சீனாய் மலையில் கர்த்தர் மோசேயோடே பேசின நாளிலே, ஆரோன் மோசே என்பவர்களுடைய வம்ச வரலாறாவது: (எண். 3:1)

ஆரோன் மோசே என்பவர்களின் வம்ச வரலாறு பற்றிய விவரத்துடன் இந்த அதிகாரம் துவங்குகின்றது. அதனை தொடர்ந்து ஆரோனின் வம்சம் மட்டும் மிகவும் விரிவாக எடுத்து கூறப்படுகின்றது. ஆரோனின் வம்சம் என்று முதலாவது கூறப்படுவதை நாம் இங்கு சீனாய் மலையில் காண்கிறோம். ஏனெனில் கர்த்தருக்கென்று பரிசுத்த சேவை செய்ய ஆரோனும் அவன் சந்ததியாரும் இங்குதான் தெரிந்து எடுக்க பட்டனர். மோசேயின் சந்ததியை குறித்து தெளிவாக கொடுக்க படாத காரணம் அவர்கள் லேவியர்களில் தனி மதிப்பு பெற்றிருந்தாலும் அவர்களுக்கு ஆசாரிய ஊழியம் கொடுக்க படவில்லை என்பதால் ஆகும்.

ஆரோனுடைய குமாரர், முதல் பிறந்தவனாகிய நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்பவர்களே. ஆசாரிய ஊழியம் செய்கிறதற்கு அவனால் பிரதிஷ்டை செய்யப்பட்டு அபிஷேகம் பெற்ற ஆசாரியரான ஆரோனுடைய குமாரரின் நாமங்கள் இவைகளே. நாதாபும் அபியூவும் சீனாய் வனாந்தரத்தில் அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்த போது, கர்த்தருடைய சந்நிதியில் மரித்து போனார்கள். அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை. எலெயாசாரும் இத்தாமாருமே தங்கள் தகப்பனாகிய ஆரோனுக்கு முன்பாக ஆசாரிய ஊழியம் செய்தார்கள். (எண். 3:2-4)

நாதாப், அபியூ

எண்ணாகம புத்தகம் 3-வது அதிகாரம் 2, 3, 4 ஆகிய வசனங்களில் எடுத்து கூறப்பட்ட சம்பவம் லேவியராகம புத்தகம் 10-வது அதிகாரத்திற்கு நேராக நம்மை எடுத்து செல்லுகின்றது. சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு நடந்த ஒரு சோக நிகழ்ச்சி நினைவு திரையில் தெரிய வருகின்றது. பிரதிஷ்டை செய்ய பட்டவர்கள் பின் வாங்கி போனார்கள் என்றும் அபிஷேகம் பெற்றவர்கள் விழுந்து போனார்கள் என்றும் வசனங்கள் கூறுகின்றன. பிரதிஷ்டை என்று

இரண்டாவது வசனத்தில் வரும் எபிரெய வார்த்தையின் பொருள் உள்ளங்கை நிரப்ப படுதல் என்பது ஆகும். தேவனுடைய கற்பனைகளினாலும், தேவனின் அதிகாரத்தினாலும் நாதாப், அபியூ ஆகிய ஆரோனின் முதல் இரண்டு மக்களின் உள்ளங்கைகளும் நிரப்பப்பட்டன. ஆனாலும் அந்த அற்புத கிருபை அவர்கள் நினைவில் நிலைத்து நிற்கவில்லை. மனதில் ஆழமாக பதியவில்லை. நாதாபும் அபியூவும் சீனாய் வனாந்திரத்தில் அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்த போது மரித்து போனார்கள் என்று அந்த வசனங்கள் எடுத்து கூறுகின்றன. ''கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்'' என்று எரேமியா தீர்க்க தரிசியின் புஸ்தகம் 48-வது அதிகாரம் 10-வது வசனம் கூறுகின்றது. அவ்விதமே நாதாப், அபியூ என்ற இரண்டு ஆண் மக்களின் முடிவும் இடம் பெற்றது என்பதை லேவியராகமம் 10-வது அதிகாரத்தில் நாம் ஏற்கெனவே பார்த்தோம்.

எண்ணாகமம் 3-வது அதிகாரம் 6-வது வசனம் முதல் 38-வது வசனம் வரை ஆரோனுக்கும் அடுத்த இரண்டு குமாரர்களுக்கும் மற்றும் லேவி கோத்திரத்து அனைத்து மக்களுக்கும் கர்த்தரால் கொடுக்கப்படும் புதிய பொறுப்புகள் கூறப்படுகின்றன. புதிய பொறுப்புகள் கொடுக்கப்படுவதற்கு முன்னதாக கடந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு கொண்டு வரப்பட்டது. இனிமேல் கர்த்தரை பயத்தோடும், நடுக்கத்தோடும் சேவிக்க வேண்டும் என்று ஒரு எச்சரிப்பாக பழைய காலத்து சம்பவம் திரும்பவும் கூறப்பட்டது.

4.2 ஆசாரியருக்கு உதவியாக லேவி கோத்திரத்தார்

கர்த்தர் மோசேயை நோக்கி: நீ லேவி கோத்திரத்தாரை சேர்த்து, அவர்கள் ஆசாரியனாகிய ஆரோனுக்கு பணிவிடை செய்யும்படி அவர்களை நிறுத்து. (எண். 3:5-6)

கர்த்தர் மோசேயை நோக்கி லேவி கோத்திரத்தார் அனைவரும் முழு நேர ஊழியம் செய்யும்படி பிரத்தியேக படுத்து என்று கூறுகின்றார். ஆரோனின் பொறுப்பில் லேவியர்கள் ஒப்படைக்க பட வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். 'லேவி கோத்திரத்தாரை சேர்த்து' என்பதன் எபிரெய பதம் 'அருகில் வரவழைத்து' என்று பொருள்படும். அது பலியை குறிக்கும்

ஒரு பதம். ஆகவே அது லேவியரை கர்த்தருக்கு என்று சிறப்பாக படைப்பதை குறிக்கிறது. ஆனால் அவர்கள் ஆசாரியர்களுக்கு கீழ்பட்டவர்கள்.

முதல் முதலாக ஆசரிப்பு கூடாரம் அறிமுகம் படுத்த பட்டது. அதனை தொடர்ந்து ஆசரிப்பு கூடாரத்தில் பணி புரிய வேண்டிய ஆசாரியர்கள் அறிமுகம் படுத்த பட்டார்கள். இப்பொழுது ஆசாரியர்களுக்கு உதவியாக இருக்க வேண்டிய லேவியர்கள் அறிமுகம் படுத்த படுகின்றார்கள்.

அவர்கள் ஆசரிப்பு கூடாரத்துக்கு முன்பாக அவனுடைய காவலையும் எல்லா சபையின் காவலையும் காத்து, வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைகளை செய்ய கடவர்கள். அவர்கள் ஆசரிப்பு கூடாரத்தின் தட்டுமுட்டு முதலானவைகளையும், இஸ்ரவேல் புத்திரரின் காவலையும் காத்து, வாசஸ்தலத்தின் பணிவிடைகளை செய்ய கடவர்கள். (எண். 3:7,8)

லேவியன் ஆசாரியனுக்கு உதவி செய்தல்

லேவியர்கள் என்பார் இரண்டு பகுதிகளாக இங்கு பிரிக்க படுகின்றார்கள். ஒன்று ஆசாரியர்கள். மற்றொன்று ஆசாரியர்களுக்கு உதவியாக இருக்க வேண்டிய உதவியாளர்கள். ஆசாரியர்கள் மட்டுமே ஆசரிப்பு கூடாரத்தில் பிரவேசிக்க அழைக்க பட்டவர்கள். லேவியர்கள் அங்கு பிரவேசிக்க கூடாது. உதவியாளர்களின் வேலைகள் என்ன என்று 7-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. முதலாவதாக உதவியாளராகிய லேவியர்கள் ஆசரிப்பு கூடாரத்தினை பத்திரமாக பாதுகாக்க வேண்டும். இரண்டாவது ஆரோனையும், ஆசாரியர்களையும், முழு சபையினரையும், பாளயத்தையும் பத்திரமாக பாதுகாக்க வேண்டும். மூன்றாவது பரிசுத்த ஸ்தலத்திற்கு உரிய அனைத்து பணிவிடைகளையும் முறைப்படி செய்ய வேண்டும். ஆசரிப்பு கூடாரமும், ஜனங்கள் தங்கும் பாளயமும் எவ்விதத்திலும் பரிசுத்தம் இழந்து விடாமல் பாதுகாப்பதே அவர்களின் பிரதான வேலையாக கருதப்பட்டது. அவர்கள் எதையும் செய்ய தயாராக இருக்க வேண்டும். எதை செய்தாலும் மனிதருக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்று மனம் உவந்து செய்ய வேண்டும்.

ஆகையால் லேவியரை ஆரோனிடத்திலும் அவன் குமாரரிடத்திலும் ஒப்பு கொடுப்பாயாக. இஸ்ரவேல் புத்திரரில் இவர்கள் முற்றிலும் அவனுக்கு ஒப்பு கொடுக்க பட்டிருக்கிறார்கள். (எண். 3:9)

ஏற்ற பணிவிடைகளை செய்ய அழைக்கப்பட்ட லேவியர் தங்கள் பணிவிடைகளுக்கு கட்டளை பெற்று அதனை கிரமமாகவும் ஒழுங்காகவும் செய்ய பிரதான ஆசாரியனான ஆரோனிடமும், அவனது குமாரரிடமும் ஒப்படைக்க பட்டார்கள். மேலும் லேவியரை அவனுக்கும் அவன் குமாரருக்கும் தத்தமாக கொடுத்தேன் என்று எண்ணாகம புத்தகம் 8-வது அதிகாரம் 19-வது வசனமும், 18-வது அதிகாரம் 6-வது வசனமும் கூறுகின்றன.

ஆரோனையும் அவன் குமாரரையுமோ, தங்கள் ஆசாரிய ஊழியத்தை செய்வதற்காக நியமிக்க கடவாய், அந்த ஊழியத்தை செய்யும்படி சேருகிற அந்நியன் கொலை செய்யப்பட கடவன் என்றார். (எண். 3:10)

ஆரோனும் அவனது குமாரரும் யாத்திராகமம் 28-வது அதிகாரத்தில் முதல் வசனத்தில் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டார்கள். தாம் தெரிந்து கொண்ட ஆரோன் என்று 105-வது சங்கீதம் 6-வது வசனம் கூறுகின்றது. ''ஆரோனை போல தேவனால் அழைக்கப்பட்டால் ஒழிய ஒருவனும் இந்த கனமான ஊழியத்திற்கு தானாய் ஏற்படுகிறது இல்லை'' என்று எபிரெயர் நிரூபம் 5-வது அதிகாரம் 4-வது வசனம் கூறுகின்றது.

அழைப்பு பெறாத எவரும் ஆசரிப்பு கூடார சம்பந்தப்பட்ட பணிவிடைகள் எதுவும் செய்து விடுவதற்கு அருகில் வர கூடாது என்றும், அதனை தெரிந்தும் துணிந்து அருகில் வந்து விட்டால் உயிரே பாதிக்கப்படும் என்றும் எண்ணாகமம் 3-வது அதிகாரம் 10-வது வசனம் கூறுகின்றது. ஆசரிப்பு கூடார சம்பந்த பட்ட பணிகள் ஒரு வேலை வாய்ப்பு அல்ல என்றும், அது சேவை செய்ய வரும் ஒரு அழைப்பு என்றும் கூறப்படுகின்றது. முழு நேர பணி என்பது மனிதரின் சிபாரிசினால் அல்ல, பரலோக தேவனின் தெரிந்து எடுப்பினால் இடம் பெறுகின்றது என்பது தெளிவுபடுத்த படுகின்றது. அந்த ஊழியத்தை செய்யும்படி சேருகிற அந்நியன் கொலை செய்யப்பட கடவன் என்று எண்ணாகமம் 5-வது அதிகாரம் 10-வது வசனத்தின் பின் பகுதியும், 38-வது வசனமும் 18-வது அதிகாரம் 7-வது வசனமும் திரும்ப திரும்ப கூறுகின்றன.

கர்த்தருடைய ஊழியம் என்பதை துச்சமாக எண்ணும் அளவிற்கு மனிதர் மாறவே முடியாது என்பதற்காக முன்னதாக ஏராளமான எச்சரிப்புகள் கொடுக்க படுகின்றன. அப்படி கொடுக்கப்பட்டும் அநேகர் அதை மீறி இருக்கிறார்கள் என்பதை நாம் பின்னாக வரும் புத்தகங்களில் பார்க்க இருக்கிறோம். இராஜாக்களின் புத்தகங்களில் கர்த்தர் கூறியதை மீறியவர்களை பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. 1 இராஜாக்களின் புத்தகத்தில் யெரோபெயாம் என்ற அரசன் செய்த தவறு கூறப்பட்டு உள்ளது. அவன் மேடையாகிய ஒரு கோவிலையும் கட்டி லேவியின் புத்திரரல்லாத, ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியனாக்கினான் என்று 1 இராஜாக்களின் புத்தகம் 12:31-வது வசனம் கூறுகின்றது. தொடர்ந்து 1 இராஜாக்கள் 13:33-வது வசனத்தையும் பாருங்கள். யெரோபெயாம் தன் பொல்லாத வழியை விட்டு திரும்பாமல் மறுபடியும் ஜனத்தில் ஈனமானவர்களை மேடைகளின் ஆசாரியனாக்கினான். எவன் மேல் அவனுக்கு மனம் இருந்ததோ அவனை பிரதிஷ்டை பண்ணினான். அப்படிப்பட்டவர்கள் மேடைகளின் ஆசாரியர்கள் ஆனார்கள். எனவே யெரோபெயாம் குடும்பத்தை பூமியின் மேல் வைக்காமல் அழிக்கும்படி கர்த்தர் அதம் பண்ணுவதை அடுத்த வசனம் எடுத்து கூறுகின்றது. அரசனுக்கு அவசியப்பட்டவர்கள் அல்ல, தேவனால் அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே பரிசுத்தமான தேவனின்

பணிவிடைகளை செய்ய முடியும் என்பதை அறியாதவர்கள் தேவ கோபத்திற்கு உட்பட்டதை ராஜாக்களின் புத்தகமும், நாளாகம புத்தகமும் எடுத்து கூறுகின்றன.

4.3 தலைப்பிள்ளைகளுக்கு பதிலாக லேவியர்கள்

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் புத்திரரில் கர்ப்பம் திறந்து பிறக்கிற முதல் பேறான யாவுக்கும் பதிலாக, நான் லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து எடுத்து கொண்டேன்; அவர்கள் என்னுடையவர்களாய் இருக்கிறார்கள். முதல் பேறானவை எல்லாம் என்னுடையவை. நான் எகிப்து தேசத்தில் முதல் பேறான யாவையும் சங்கரித்த நாளில், இஸ்ரவேலில் மனிதர் முதல் மிருகஜீவன் மட்டுமுள்ள முதல் பேறான யாவையும் எனக்கு என்று பரிசுத்த படுத்தினதினாலே, அவைகள் என்னுடையவைகளாய் இருக்கும். நான் கர்த்தர் என்றார். (எண். 3:11-13)

இஸ்ரவேல் புத்திரரின் முதல் பேறான ஆண்மக்கள் யாவரும் கர்த்தருக்கு உரியவர்கள் என்று யாத். 13:12, 22:29 முதலிய வசனங்களில் நாம் கண்டோம். ஆகவே ஒவ்வொரு குடும்பத்திலும் முதற் பேரான ஆண்மகன் தலைவனாக இருந்து கர்த்தருக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்ய வேண்டும் என்ற கட்டளை இருந்தது. அதற்கு இங்கு கர்த்தர் விதி விலக்கு கொடுக்கிறார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஈடாக லேவியரின் ஒரு ஆண் மகன் கர்த்தரின் பரிசுத்த வேலைகளை செய்வதற்காக எடுத்து கொள்ளப்பட வேண்டும். ''நான் கர்த்தர்'' என்று கர்த்தர் கூறுவதின் பொருள், நான் இதை கட்டளையாக கொடுக்கிறேன், ஏனெனில் எல்லா அதிகாரமும் எனக்கு உண்டு, முழு கீழ்படிதலை நான் எதிர்பார்க்கிறேன் என்பதாகும்.

எல்லா கோத்திரங்களிலும் பிறந்த தலைப்பிள்ளைகள் அல்ல, லேவியர்களின் குடும்பங்களில் பிறந்த ஆண் மக்கள் மட்டுமே கர்த்தருடைய ஊழியத்தை செய்ய முடியும் என்பது கூறப்படுகின்றது. கர்த்தர் மீது விசுவாசம் கொண்ட அனைவரும் கர்த்தருடைய பிள்ளைகள் என்ற சிலாக்கியத்தை பெற்று கொள்ளுகின்றார்கள். ஆனால் கர்த்தரால் அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே முழு நேர ஊழியம் என்ற பாக்கியத்தை பெற்று கொள்ளுகின்றார்கள்.

4.4 லேவி கோத்திர வாரிசு கணக்கெடுப்பும் பணிபிரிவுகளும்

பின்னும் கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் மோசேயை நோக்கி: லேவி புத்திரரை அவர்கள் பிதாக்களின் வம்சங்களின் படியே எண்ணுவாயாக. அவர்களில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளை எல்லாம் எண்ணுவாயாக என்றார். அப்பொழுது கர்த்தருடைய வாக்கின்படி, மோசே தனக்கு கற்பிக்கப்பட்ட பிரகாரம் அவர்களை எண்ணினான். (எண். 3:14-16)

14 முதல் 39 வசனங்களில் லேவியர்களின் கோத்திரம் குடும்பம் குடும்பமாக பிரிக்கப்பட்டு லேவியின் ஆண் மக்கள் தொகையிட படுகின்றனர். லேவியின் குமாரர் மூன்று பேர் என்றும் அவர்களுக்கு பிறந்த பிள்ளைகள் யார் யார் என்றும் யாத்திராகம புத்தகம் 6-ம் அதிகாரம் 16-வது வசனம் முதல் 26-வது வசனம் வரை விரிவாக கூறப்பட்டு உள்ளது.

ஆனால் லேவி புத்திரரின் ஆண் மக்களை தொகையிடும் பொழுது ஒரு வித்தியாசம் தெரிகிறது. இஸ்ரவேல் மக்களில் 20 வயதிற்கு மேற்பட்ட யுத்த சன்னத்தரான ஆண் மக்கள் மட்டுமே தொகை இடப்பட்டனர் (1 கொரி. 1:3). ஆனால் லேவி கோத்திரத்தாரில் ஒரு மாதம் மட்டுமே நிரம்பிய குழந்தைகளில் இருந்து ஆண் மக்கள் தொகை இடப்பட கட்டளை கர்த்தரிடத்தில் இருந்து பிறக்கின்றது. லேவி கோத்திரம் மிக சிறிய ஒரு கோத்திரம். மற்ற கோத்திரத்தினர் யுத்தத்திற்கு செல்ல வேண்டியது. லேவி கோத்திரமோ அதிலிருந்து முழுவதுமாக விலக்க பட்டவர்கள். சிறிய வயதிலேயே அவர்கள் கர்த்தருக்கு வேலை செய்ய பழக்குவிக்க பட்டனர். ஆகவேதான் ஒரு மாதம் கடந்து விட்ட அனைத்து ஆண் மக்களும் தொகையிட படுதலில் சேர்த்து கொள்ள படுகின்றார்கள் என்பதை 15-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம்.

> ***லேவியின் குமாரர் தங்கள் நாமங்களின் படியே, கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்கள். தங்கள் வம்சத்தின்படியே கெர்சோனுடைய குமாரரின் நாமங்கள், லிப்னீ, சீமேயி என்பவைகள். தங்கள் வம்சங்களின்படியே கோகாத்துடைய குமாரர், அம்ராம், இத்சேயார், எப்ரோன், ஊசியேல் என்பவர்கள். தங்கள் வம்சங்களின்படியே மெராரியினுடைய குமாரர், மகேலி, மூசி என்பவர்கள். இவர்களே லேவியருடைய பிதாக்களின் வம்சத்தார். (எண். 3:17-20)***

எண்ணாகமம் 3-வது அதிகாரம் 17-வது வசனம் லேவியின் குமாரர் கெர்சோன், கோகாத், மெராரி என்று கூறுகின்றது. எண்ணாகம புத்தகம் 1,2 ஆகிய அதிகாரங்களில் மற்ற அனைத்து கோத்திர ஆண் மக்களும் தொகையிட பட்டதை நாம் பார்த்தோம். 20 வயதிற்கு மேற்பட்டவர் 50 வயதிற்கு உட்பட்டவர்கள் என்ற அடிப்படையில் மற்ற கோத்திரத்து ஆண் மக்கள் தொகையிட பட்டார்கள். கர்த்தருடைய ஊழியமான முழுநேர ஊழியத்திற்கு அழைப்பு, பிறக்கும் சமயத்தில் தானே வந்து விடுவதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். நான் உன்னை தாயின் வயிற்றில் உருவாக்கும் முன்னே உன்னை அறிந்தேன். நீ கர்ப்பத்தில் இருந்து வெளிப்படும் முன்னே நான் உன்னை பரிசுத்தம் பண்ணி உன்னை ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாக கட்டளையிட்டேன் என்று எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் முதல் அதிகாரம் 5-வது வசனம் கூறுகின்றது. கெர்சோன், கோகாத், மெராரி என்ற மூன்று பிள்ளைகளின் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட அனைத்து ஆண் வாரிசுகளும் எண்ணப்பட்டார்கள்.

கர்த்தருக்கு என்று அல்ல கர்த்தருக்காக எண்ணப்பட்டார்கள். பின் வாங்க முடியாத ஒரு ஊழியத்திற்காக எண்ணப்பட்டார்கள். ஆசரிப்பு கூடாரத்தை நடுவாக கொண்டு கெர்சோன், கோகாத், மெராரி என்பவரின் குடும்பங்கள் தங்க வேண்டும் என்று கட்டளை பிறந்தது. ஆசரிப்பு கூடாரத்தின் காவலை காக்க வேண்டிய அவர்கள் அதன் மிக சமீபமாக தங்குவதற்கு இடத்தை பெற்று கொண்டார்கள். எவ்வித கால தாமதமும் செய்யாமல் கர்த்தரின் வாசஸ்தலத்தை பராமரிப்பதற்கு பரிசுத்தரின் அருகில் பங்கு பெற்று கொண்டார்கள்.

லேவியின் மூன்று குமாரர்களாகிய கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்களின் நாமங்களின் படியே, லேவியர் மூன்று பிரிவாக பிரிக்க பட்டனர். அவர்களுக்கு தனித்தனியாக பொறுப்புகளும் கொடுக்க பட்டது. லேவியின் கோத்திரத்தில் கொடுக்க பட்ட மூன்று

பிரிவுகளிலும், இன்னும் சிறிய பிரிவுகள் பிரிக்க படுகின்றன. கோகாத்தின் குமாரனான அம்ராமின் குமாரரே ஆரோனும் மோசேயும் ஆவார்கள்.

கெர்சோன் வம்சம்

> *கெர்சோனின் வழியாய் லிப்னீயரின் வம்சமும் சீமேயியர் வம்சமும் தோன்றின; இவைகளே கெர்சோனியரின் வம்சங்கள். அவர்களில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகள் எல்லாம் எண்ணப்பட்ட போது, எண்ணப்பட்டவர்கள் ஏழாயிரத்து ஐந்நூறு பேராயிருந்தார்கள். கெர்சோனியரின் வம்சங்கள் வாசஸ்தலத்தின் பின்புறத்தில் மேற்கே பாளையமிறங்க வேண்டும். கெர்சோனியருடைய தகப்பன் வம்சத்துக்கு தலைவன் லாயேலின் குமாரனாகிய எலியாசாப் என்பவன். (எண். 3:21-24)*

மிகவும் தெளிவாக லேவியின் முதல் குமாரனாகிய கெர்சோனின் வம்சத்தினர் எங்கே பாளயம் இறங்க வேண்டும், அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்ற விபரங்கள் கொடுக்க பட்டுள்ளன. அவர்கள் ஆசரிப்பு கூடாரத்தின் பின்புறத்தின் மேற்கே பாளயம் இறங்க வேண்டும். அவர்களுக்கு பின்னால் எப்பிராயீம் கோத்திர தலைமையில் மனாசே, பென்யமீன் கோத்திரங்கள் பாளயம் இறங்கும்.

> *ஆசரிப்பு கூடாரத்திலே கெர்சோன் புத்திரரின் காவலாவது: வாசஸ்தலமும், கூடாரமும், அதின் மூடியும், ஆசரிப்புக்கூடார வாசல் மறைவும், வாசஸ்தலத்தண்டையிலும் பலிபீடத்தண்டையிலும் சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தின் தொங்கு திரைகளும், பிரகார வாசல் மூடுதிரையும், அவைகளின் வேலைகளுக்கு எல்லாம் உரிய அவைகளின் கயிறுகளுமே. (எண். 3:25,26)*

கெர்சோன் குடும்பத்தார் வாசஸ்தலத்தில் அவர்களின் பொறுப்பும் மற்ற கட்டளைகளும் கூறப்பட்டுள்ளன. எல்லா விதமான திரைகளும், தொங்கு திரைகளும், மூடு திரைகளும், கயிறுகளும், பிரயாணம் படும் நேரங்களில் அவர்கள் சுமக்க வேண்டும். அவைகளின் முழு பொறுப்பும் கெர்சோன் வம்சத்தார் உடையது ஆகும். எலியாசாப் அவர்களுக்கு எல்லாம் தலைவன். அவர்கள் எண்ணிக்கை 7,500 ஆகும்.

கோகாத் வம்சம்

> *கோகாத்தின் வழியாய் அம்ராமியரின் வம்சமும் இத்சேயாரின் வம்சமும் எப்ரோனியரின் வம்சமும் ஊசியேலரின் வம்சமும் தோன்றின; இவைகளே கோகாத்தியரின் வம்சங்கள். ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண் பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்ட போது, பரிசுத்த ஸ்தலத்துக்கு உரியவைகளை காப்பவர்கள், எண்ணாயிரத்து அறுநூறு பேராயிருந்தார்கள். கோகாத் புத்திரரின் வம்சங்கள் வாசஸ்தலத்தின் தென்புறமான பக்கத்திலே பாளயமிறங்க வேண்டும். அவர்களின் தலைவன், ஊசியேலின் குமாரனாகிய எல்சாபான். (எண். 3:27-30)*

கோகாத் வம்சத்தினர் ஆசரிப்பு கூடாரத்தின் தென்புறமாக பாளயம் இறங்க வேண்டும். இவர்களுக்கு பின்னால் ரூபன் கோத்திர தலைமையில் சிமியோன், காத் கோத்திரங்கள் பாளயம் இறங்க வேண்டும். கோகாத் வம்சத்திற்கு தலைவன் எல்சாபான். அவர்கள் எண்ணிக்கை 8,600 ஆகும்.

கோகாத்தின் குமாரனாகிய அம்ரானின் வம்சத்தினரே மோசேயும் ஆரோனும் ஆவார்கள். மோசேயின் வம்ச வரலாறு வேறு எங்கும் கொடுக்க படவில்லை என்றாலும், அது இதில் அடங்கி உள்ளது. அவர்களுக்கு தனி இடம் ஒதுக்கப்பட்டது.

அவர்களுடைய காவலாவது: பெட்டியும், மேஜையும், குத்துவிளக்கும், பீடங்களும், ஆராதனைக்கேற்ற பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுகளும், தொங்குதிரையும், அதினுடைய எல்லா வேலைகளுக்கும் ஏற்றவைகளுமே. (எண். 3:31)

கோகாத் கோத்திரம் ஆசரிப்பு கூடாரத்தின் எந்த எந்த பொருட்களுக்கு பொறுப்பானவர்கள் என்று இங்கே கொடுக்க பட்டு உள்ளது. அவர்கள் பொறுப்பில் ஆசரிப்பு கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திலும், பரிசுத்த ஸ்தலத்திலும் உள்ள மகா பரிசுத்தமான உடன்படிக்கை பெட்டியும், மற்ற எல்லா பொருட்களும் கொடுக்க பட்டன.

ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசார் என்பவன் லேவியருடைய தலைவர்களுக்கு தலைவனாய் பரிசுத்த ஸ்தலத்தை காவல்காக்கிறவர்களுக்கு விசாரிப்புக்காரனாய் இருக்க வேண்டும். (எண். 3:32)

கோகாத் கோத்திரத்தில் எலெயாசார் ஆரோனின் குமாரன். ஆரோனுக்கு பிறகு பிரதான ஆசாரிய பொறுப்பு எடுக்க வேண்டிய ஆசாரியன். ஆசாரியனாய் இருக்கும் அவனுக்கு அடியில் மற்ற லேவியர்கள் தங்கள் வேலைகளை செய்ய வேண்டும் என்ற தலைமை பொறுப்பு இவனுக்கு கொடுக்க படுகிறது.

மெராரி வம்சம்

மெராரியின் வழியாய் மகேலியரின் வம்சமும் மூசியரின் வம்சமும் தோன்றின. இவைகளே மெராரியின் வம்சங்கள். அவர்களில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகள் எல்லாம் எண்ணப்பட்ட போது, எண்ணப்பட்டவர்கள் ஆறாயிரத்து இருநூறு பேராய் இருந்தார்கள். அபியாயேலின் குமாரனாகிய சூரியேல் என்பவன் அவர்களுக்கு தலைவனாயிருந்தான். இவர்கள் வாசஸ்தலத்தின் வடபுறமான பக்கத்தில் பாளயமிறங்கவேண்டும். (எண். 3:33-35)

மெராரியின் குடும்பம் வடக்கு பக்கத்தில் தங்க வேண்டும். மெராரி வம்சத்தின் பாளயத்திற்கு பின்னாக தாண் கோத்திர தலைமையில் ஆசேர், நப்தலி கோத்திரங்கள் பாளயம் இறங்க வேண்டும். அவர்களுடைய ஆண் மக்களில் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட யாவரும் சேர்ந்து 6,200 பேர் மட்டுமே. அவர்கள் தலைவன் சூரியேல் ஆவான்.

அவர்களுடைய காவல் விசாரிப்பாவது: வாசஸ்தலத்தின் பலகைகளும், தாழ்ப்பாள்களும், தூண்களும், பாதங்களும், அதினுடைய எல்லா பணிமுட்டுகளும், அதற்கடுத்தவைகள் அனைத்தும், சுற்றுப்பிரகாரத்தின் தூண்களும், அவைகளின் பாதங்களும், முளைகளும், கயிறுகளுமே. (எண். 3:36-37)

மெராரி வம்சத்தினர் ஆசரிப்பு கூடாரத்தின் எந்த எந்த பொருட்களுக்கு பொறுப்பானவர்கள் என்பதை இங்கு காண்கிறோம். அவர்கள் எல்லாவித பலகைகளுக்கும், தூண்களுக்கும், பாதங்களுக்கும் பொறுப்பு ஆனவர்கள்.

மோசேயும் ஆரோனும்

ஆசரிப்பு கூடாரமாகிய வாசஸ்தலத்துக்கு முன்பாக, சூரியன் உதிக்கும் கீழ்புறத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரரும் கூடாரங்களை போட்டு இறங்கி, இஸ்ரவேல் புத்திரரின் காவலுக்கு பதிலாக பரிசுத்த ஸ்தலத்தை காவல் காக்க வேண்டும். வாசஸ்தலத்தில் சேருகிற அந்நியன் கொலை செய்யப்பட கடவன். (எண். 3:38)

கர்த்தரின் வாசஸ்தலத்திற்கு ஒரே ஒரு வாசல் கிழக்கு திசை நோக்கி இருக்கின்றது. அந்த கிழக்கு பக்கத்தில் மோசேயும் ஆரோனும் அவனுடைய குமாரரும் தங்கள் கூடாரங்களை போட வேண்டும் என்று 38-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. முழு நேர ஊழியர்களான மோசே ஆரோன் அவனுடைய குமாரர், லேவி குடும்பத்தார் அனைவரும் கர்த்தரின் வாசஸ்தலத்தின் மிக அருகாமையில் இருந்து அனைத்து பணிகளையும் முழு கவனத்துடன் செய்ய வேண்டும் என்றும், வாசஸ்தலத்தை காக்க வேண்டும் என்றும் கட்டளை பிறக்கின்றது.

மோசேக்கும் ஆரோனுக்கும் கர்த்தரின் ஆசரிப்பு கூடார வாசலில் விசேஷித்த இடங்கள் ஒதுக்க படுகின்றன.

மோசேயும் ஆரோனும், கர்த்தருடைய வாக்கின்படி, லேவியரில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளை எல்லாம் அவர்களுடைய வம்சங்களின்படியே எண்ணினார்கள். அவர்கள் இருபத்தீராயிரம் பேராய் இருந்தார்கள். (எண். 3:39)

லேவி கோத்திரத்தில் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட அனைத்து ஆண்களின் தொகையும் 22,000 என்று 39-வது வசனம் கூறுகின்றது.

4.5 இஸ்ரவேலின் முதல் பேறானவை லேவியரால் மீட்கப்பட வேண்டும்

அதன் பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள முதல் பேறான ஆண் பிள்ளைகளை எல்லாம் எண்ணி, அவர்கள் நாமங்களை தொகையேற்றி, இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதல் பேறான யாவுக்கும் பதிலாக லேவியரையும், இஸ்ரவேல் புத்திரரின் மிருக ஜீவன்களிலுள்ள தலை

ஈற்றான யாவுக்கும் பதிலாக லேவியரின் மிருக ஜீவன்களையும் எனக்கென்று பிரித்தெடு. நான் கர்த்தர் என்றார். அப்பொழுது மோசே, கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே, இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதல் பேறான யாவரையும் எண்ணினான். ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள முதல் பேறான ஆண் பிள்ளைகள் எல்லாரும் பேர் பேராக எண்ணப்பட்ட போது, இருபத்தீராயிரத்து இருநூற்று எழுபத்து மூன்று பேராயிருந்தார்கள். (எண். 3:40-43)

மற்ற கோத்திரங்களில் உள்ள ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட ஆண் தலை பிள்ளைகளின் தொகை மட்டும் 22,273 என்று 43-வது வசனம் கூறுகின்றது. லேவியின் ஆண் மக்கள் தொகையும், மற்ற கோத்திரங்களின் தலை பிள்ளைகளின் தொகையும் சமமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க பட்டது.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதல் பேறான யாவருக்கும் பதிலாக லேவியரையும், அவர்களுடைய மிருகஜீவன்களுக்கு பதிலாக லேவியரின் மிருகஜீவன்களையும் பிரித்தெடு. லேவியர் என்னுடையவர்களாய் இருப்பார்கள்; நான் கர்த்தர். இஸ்ரவேல் புத்திரருடைய முதற்பேறுகளில் லேவியரின் தொகைக்கு அதிகமாயிருந்து, மீட்கப்படவேண்டிய இருநூற்று எழுபத்து மூன்று பேரிடத்திலும், நீ தலைக்கு ஐந்து சேக்கல் வீதமாக பரிசுத்த சேக்கல் கணக்கின்படி வாங்குவாயாக. அந்த சேக்கலானது இருபது கேரா. லேவியருடைய தொகைக்கு அதிகமானவர்கள் மீட்கப்படும் திரவியத்தை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுப்பாயாக என்றார். (எண். 3:44-48)

ஏற்கெனவே ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட லேவி கோத்திரத்து ஆண் பிள்ளைகள் 22,000 என்று பார்த்தோம். எனவே மற்ற கோத்திரங்களில் தலை பிள்ளைகளாக இருந்தவர்களில் 273 பேர் பரிசுத்த சேக்கல் கணக்குப்படி மீட்க படுகின்றார்கள் என்பதை 46,47,48 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கின்றோம்.

அதாவது மற்ற கோத்திரங்களில் இருந்து 273 ஆண் மக்கள் முதற் பலனாக தெரிந்து எடுக்கப்பட்டு லேவியர்களின் எண்ணிக்கைக்கு நேர்ந்து கொள்ளப்பட்ட பின்னர் மீண்டும் அவர்கள் மீட்கப்பட்டு கொள்ளுகின்றார்கள் என்பதை அந்த வசனங்கள் கூறுகின்றன. நேர்ந்து கொண்டதை மீட்டு கொள்ளுவதற்கு ஒரு நபருக்கு கொடுக்க வேண்டிய தொகை 5 சேக்கல் என்பது ஆகும். எண்ணாகமம் 18-வது அதிகாரம் 16-வது வசனத்தை பார்ப்போம். மீட்கப் பட வேண்டியவைகள் ஒரு மாதத்திற்கு மேற்பட்டதானால் உன் மதிப்பிற்கு இசைய பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி 5 சேக்கல் பணத்தாலே அவைகளை மீட்க வேண்டும் என்று வசனம் கூறுகின்றது. எண்ணாகமம் 1,2 ஆகிய அதிகாரங்களில் 12 கோத்திரங்களின் தொகையிடுதலும் கர்த்தரின் வாசஸ்தலம் நடுவாக கொண்டு 12 கோத்திரங்களும் தங்கும் இடங்களும் கூறப்பட்டு உள்ளது. எண்ணாகமம் 3-வது அதிகாரத்தில் லேவி புத்திரரின் தொகையிடுதலும் லேவியின் மூன்று குடும்பங்களும் தங்கும் இடங்களும் அவர்களுடைய ஊழிய விவரங்களும் கொடுக்க பட்டு உள்ளது. லேவியரின் மூன்று குடும்பங்களின் ஊழியம் வாசஸ்தலத்தை பாதுகாப்பதும் பராமரிப்பதும் ஆகும்.

அப்படியே லேவியரால் மீட்கப்பட்டவர்களின் தொகைக்கு அதிகமாயிருந்து, இன்னும் மீட்கப்பட வேண்டியவர்களுக்கு ஈடாக மோசே இஸ்ரவேல் புத்திரருடைய முதல் பேறானவர்களிடத்தில், ஆயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து சேக்கலாகிய திரவியத்தை, பரிசுத்த ஸ்தலத்து சேக்கல் கணக்கின்படி வாங்கி, கர்த்தருடைய வாக்கின்படியே மீட்கப்பட்டவர்களின் கிரயத்தை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும், கர்த்தர் தனக்கு கட்டளை இட்டபடியே கொடுத்தான். (எண். 3:49-51)

கெர்சோனியரின் குடும்பம் செய்ய வேண்டிய ஊழியம் எண்ணாகமம் 3-வது அதிகாரம் 25 முதல் 26 வசனங்களிலும், கோகாத் குடும்பத்தினர் ஊழியம் 31-வது வசனத்திலும், மெராரி குடும்பத்தினர் ஊழியம் 36,37 ஆகிய வசனங்களிலும் கொடுக்கப்பட்டு உள்ளது. அவர்களது ஊழியங்களை அவர்கள் முறையாகவும், முழுமையாகவும் செய்கின்றார்களா என்பதை கவனிக்கும் பொறுப்பு எலெயாசாரின் பொறுப்பு என்று 32-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. லேவியின் புத்திரர் 22,000 பேர் என்று கணிக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் முழு நேர ஊழியர்கள் என்ற பட்டத்தை பெற்று கொண்டார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஊழியம் எது என்பது மிகவும் தெளிவாக அறிந்து கொண்டார்கள். அனைத்தும் எவ்வித குழப்பமும், கலக்கமும் இல்லாமல் நடந்தது. கர்த்தரை நடுவாக கொண்டு நடைபெறும் ஊழியங்கள் ஒழுங்கும் கிரமமுமாக நடைபெறும் என்பதை அறிந்து கொள்ளுகின்றோம்.

4.6 பரிசுத்த பணிமுட்டுகள் சுமக்க கோகாத் புத்திரர்

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: லேவியின் புத்திரருக்குள்ளே இருக்கிற கோகாத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில், ஆசரிப்பு கூடாரத்திலே வேலை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க முப்பது வயது முதல் ஐம்பது வயதுவரைக்கும் உள்ள எல்லாரையும் எண்ணி, தொகையிடுவாயாக. (எண். 4:1-3)

லேவியராகம புத்தகத்தில் ஆசரிப்பு கூடாரத்தில் இடம் பெறும் ஆராதனை முறைகளை ஆசாரியர்கள் எவ்வாறு நடத்த வேண்டும் என்று நாம் பார்த்தோம். எண்ணாகம புத்தகம் 4-வது அதிகாரத்தில் பிரயாணம் செய்யும் நேரங்களில் ஆசரிப்பு கூடாரத்து பணிமூட்டுகளை ஆசாரியர்கள் எவ்வாறு காத்து கொள்ள வேண்டும் என்று பார்க்கிறோம். பிரயாண நேரங்களில் ஆசாரியர்கள் மட்டுமல்ல, ஆசாரியர்களின் பொறுப்பில் கொடுக்கப் பட்ட மற்ற லேவியர்களும் என்ன செய்ய வேண்டும் என்பதும் எண்ணாகம புத்தகம் 4-வது அதிகாரத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது.

கோகாத் புத்திரர் முதலில் எடுத்து கொள்ளபடுவதின் காரணம், மோசேயும் ஆரோனும் அந்த வம்சத்தை சார்ந்தவர்களாக இருப்பதினாலேயே, இங்கு ஆசரிப்பு கூடாரத்தில் வேலை செய்யும் சேனை என்று குறிப்பிட பட்டுள்ளது. அவர்கள் 30 வயது முதல் 50 வயதுள்ளவர்களாக ஆசரிப்பு கூடாரத்தில் வேலை செய்ய பெலன் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று பார்க்கிறோம். எண்ணாகமம் 8:24-ல் லேவியர்கள் 25-வது வயதில் ஆசரிப்பு கூடார வேலையில் இறங்க வேண்டும் என்றும், 1 நாளாகமம் 23:24-ல் லேவியர்கள் தங்கள் 20-வது வயதில் ஆசரிப்பு கூடார வேலை தொடங்க வேண்டும் என்றும்

கூறபட்டுள்ளது. மோசேயின் காலத்தில் லேவியரின் பணி மிக கடினமான ஒரு பணியாக காண பட்டது. 25-வது வயது நியமிக்கபட காரணம், அவர்கள் சிறிய பணிகளில் 5 வருடங்கள் ஈடுபட்டு அதில் தேறினவர்கள் 30-வது வயதில் முழு பணியில் ஈடுபடுத்த படுகிறார்கள். விசேஷமாக அவர்கள் ஆசரிப்பு கூடாரத்தோடு பிரயாணமாக போகையில் உத்தரவாதம் உள்ளவர்களாக இருக்க 30-வயதிற்கு மேல்பட்டவர்களை மட்டுமே கணக்கெடுக்க கர்த்தர் கூறுகின்றார்.

ஆசரிப்பு கூடாரத்திலே கோகாத் புத்திரரின் பணிவிடை மகா பரிசுத்தம் ஆனவைகளுக்கு உரியது. (எண். 4:4)

பிரயாணப்படும் நேரம் வரும் பொழுது ஆரோனும் அவன் குமாரரும் செய்ய வேண்டிய வேலைகள் பற்றி 4 முதல் 14 வசனங்களில் ஒன்று ஒன்றாக கூறப்பட்டு உள்ளது. யாத்திராகமம் 40-வது அதிகாரத்தில் ஆசரிப்பு கூடாரம் நிறுத்த பட்டது. அதன் உள்ளாக வைக்கப்பட வேண்டிய பரிசுத்த பொருட்கள் ஒன்று ஒன்றாக வைக்கப்பட்டன. சாதாரணமாக ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்திலும் மகா பரிசுத்த ஸ்தலத்திலும் பிரதான ஆசாரியர்கள் மட்டுமே நுழையலாம். சாதாரண ஆசாரியர் வர கூடாது. ஆனால் வாசஸ்தலத்தை விட்டு மேகம் எழும்புகையில் அவர்கள் பிரயாணப்படும் நேரம் வந்து விட்டது என்று அறிந்து கொள்கிறார்கள். அப்பொழுது ஆசரிப்பு கூடாரத்தின் பணி மூட்டுகளை எடுத்து செல்ல சாதாரண ஆசாரியர்களின் உதவியும், மற்ற லேவியரின் உதவியும் தேவைபடுகிறது. இங்கு கோகாத் வம்சத்தினருக்கு குறிக்கபட்ட பணி மகா பரிசுத்த ஸ்தலத்தை சேர்ந்தது என்று பார்க்கிறோம்.

பாளயம் புறப்படும் போது, ஆரோனும் அவன் குமாரரும் வந்து, மறைவின் திரைச்சீலையை இறக்கி, அதினாலே சாட்சியின் பெட்டியை மூடி, அதின் மேல் தகசுத்தோல் மூடியை போட்டு, அதின் மேல் முற்றிலும் நீலமான துப்பட்டியை விரித்து, அதின் தண்டுகளை பாய்ச்சி, (எண். 4:5-6)

பிரயாணம் துவங்கும் வேளையில் ஆசரிப்பு கூடாரம் கழற்றப்பட வேண்டும். அதன் உள்ளாக இருக்கும் பொருட்கள் ஒன்று ஒன்றாக மிகவும் கவனமாக பத்திரம் படுத்தப்பட வேண்டும். எவ்வித அவசரமோ அலட்சியமோ இடம் பெற முடியாது. இன்னும் ஒரு சில நாட்களில் அந்த பெருங் கூட்ட மக்கள் புறப்பட இருக்கின்றனர். எனவே ஏற்ற கட்டளைகள் இந்த அதிகாரத்தில் கொடுக்க படுகின்றன.

ஆசரிப்பு கூடாரத்தில் மிகவும் பரிசுத்தமானது உடன்படிக்கை பெட்டி ஆகும். அது சாட்சியின் பெட்டி என்று கூறப்படுகிறது. அது மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கபட்டு அதற்கு இரு கேரூபின்கள் பொருத்தபட்ட மூடியும் உண்டு. அதற்கு முன்னால் பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரிக்க தொங்குதிரை உள்ளது. இந்த தொங்கு திரையின் உள்ளே செல்ல மோசேக்கும், பிரதான ஆசாரியனாகிய ஆரோனுக்கும் மட்டுமே உரிமை உண்டு. ஆனால் பிரயாணத்துக்கு புறப்படுகையில் மட்டும் ஆசாரியர்களான ஆரோனின் குமாரர்கள் அவனுக்கு உதவி செய்யலாம். பாளயம் புறப்படும் பொழுது ஆரோனும் அவன் குமாரரும் வந்து மறைவின் திரைச் சீலையை இறக்கி அதினாலே சாட்சி பெட்டியை மூடிவிட வேண்டும் என்று 5-வது வசனம் கூறுகின்றது. வருடம் ஒரு முறை இடம் பெறும் பாவ நிவிர்த்தி ஆராதனை வேளையில் ஆரோன் கூட கண்ணால் பார்க்க

முடியாத சாட்சி பெட்டியினை உற்று பார்க்கிற எவரும் உயிரற்று போவார்கள். எனவே பிரயாணப் படும் வேளையில் ஆரோனும் அவன் குமாரரும் செய்ய வேண்டிய முதலாவது வேலை, மறைவின் திரையை விலக்கி சாட்சி பெட்டியை மூடி விடுவதே ஆகும். திரைச் சீலையை வைத்து மூடி பின்னர் தகசுத் தோலினால் மூட வேண்டும். தகசுத் தோல் என்பது கடல் மிருகத்தின் தோல். மிக அரிதாக கிடைக்கும் தோல் என்பது ஆகும். பின்னர் நீல நிறமான துப்பட்டியை விரித்து மூடிவிட வேண்டும் என்று 6-வது வசனத்தில் பார்க்கின்றோம். நீல நிறம் என்பது தேவ அன்பிற்கு அடையாளம் ஆகும். மகா வல்லமையும் மகா பரிசுத்தமும் நிறைந்த ஆண்டவராக இருந்தாலும் கர்த்தர் மகா அன்பும் நிறைந்தவராகவே இருக்கிறார் என்பதை நீல நிற துப்பட்டி காட்டியது. நீல வானமும், நீல கடலும் இன்றும் அதனை காட்டுகின்றன.

சமுகத்தப்ப மேஜையின் மேல் நீல துப்பட்டியை விரித்து, தட்டுகளையும் தூப கரண்டிகளையும் கிண்ணங்களையும், மூடுகிற தட்டுகளையும் அதின் மேல் வைப்பார்களாக; நித்திய அப்பமும் அதின் மேல் இருக்க கடவது. அவைகளின் மேல் அவர்கள் சிவப்பு துப்பட்டியை விரித்து, அதை தகசுத்தோல் மூடியால் மூடி, அதின் தண்டுகளை பாய்ச்சி, (எண். 4:7,8)

பிரயாண வேளையில் சமுகத்து அப்ப மேஜையை ஆரோன் ஆயத்தப் படுத்த வேண்டிய முறையை பற்றி பார்க்கிறோம். சமுகத்தப்ப மேஜையை நீல துப்பட்டியால் மூடின பின்னே, கரண்டிகள், கிண்ணங்கள், தட்டுகள் முதலியவை வைக்கப்பட வேண்டும். சமுகத்து அப்ப மேஜை மீது 12 அப்பங்களும் வைக்கப்பட வேண்டும். அந்த அப்பங்களை நித்திய அப்பம் என்று 7-வது வசனம் கூறுகின்றது. பின் சிவப்பு துப்பட்டியை விரிக்க வேண்டும்.

சிவப்பு துப்பட்டி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தை சிந்தி நம்மை மீட்டு கொண்டதை காட்டுகிறது. ஜீவ அப்பமான இயேசு நித்தியர் நித்தியர் என்று அவைகள் முன் உரைக்கின்றன. நித்திய அப்பம் பெற்ற சமுகத்து அப்ப மேஜை சிவப்பு துப்பட்டியினால் மூடப்பட்டது என்று 8-வது வசனம் கூறுகின்றது. மனிதருக்கு ஜீவ அப்பமாக மாறும்படி இயேசு சிந்த இருக்கும் தமது சொந்த இரத்தத்திற்கு சிவப்பு துப்பட்டி ஒரு அடையாளமாக மாறியது.

இளநீல துப்பட்டியை எடுத்து, குத்துவிளக்கு தண்டையும், அதின் அகல்களையும், அதின் கத்திரிகளையும், சாம்பல் பாத்திரங்களையும், அதற்கு உரிய எண்ணெய் பாத்திரங்களையும் மூடி, அதையும் அதற்கு அடுத்த தட்டுமுட்டுகள் யாவையும் தகசுத்தோல் மூடிக்குள்ளே போட்டு, அதை ஒரு தண்டிலே கட்டி, (எண். 4:9-10)

சாட்சி பெட்டி மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரயாணத்திற்கு ஆயத்த படுத்த பட்டு விட்டது. பின்னர் பரிசுத்த ஸ்தலத்தில் முன்னாக இருக்கும் சமூகத்தப்ப மேஜையும் ஆயத்த படுத்த பட்டு விட்டது. அடுத்ததாக குத்துவிளக்கு ஆயத்தப்படுத்த பட வேண்டும்.

குத்து விளக்கு பிரயாணத்திற்கு ஆரோனாலும் ஆசாரியராலும் ஆயத்தமாக்க படுகிறது. அவர்கள் குத்து விளக்கையும் அதனுடன் சேர்ந்த எல்லா பொருள்களையும் நீலதுப்பட்டியால் மூடி, தகசு தோல் சுற்றி தண்டிலே கட்ட வேண்டும்.

பொற் பீடத்தின் மேல் இளநீல துப்பட்டியை விரித்து, அதை தகசுத்தோல் மூடியால் மூடி, அதின் தண்டுகளை பாய்ச்சி, பரிசுத்த ஸ்தலத்தில் வழங்கும் ஆராதனைக்கு ஏற்ற சகல தட்டு முட்டுகளையும் எடுத்து, இளநீல துப்பட்டியிலே போட்டு, தகசுத்தோல் மூடியினால் மூடி, தண்டின்மேல் கட்டி, (எண். 4:11-12)

பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள 3 பொருட்களில் மூன்றாவது பசும் பொன்னால் செய்த தூபபீடம் ஆகும். 11,12 ஆகிய வசனங்களில் பொற்பீடம் அல்லது தூபபீடம் என்ற பீடத்தையும், அதனோடு சேர்ந்த எல்லா பொருள்களையும் இளநீல துப்பட்டியாலும் தகசு தோலாலும் மூட வேண்டும் என்று கூறபட்டு உள்ளது.

பலிபீடத்தை சாம்பலற விளக்கி, அதின் மேல் இரத்தாம்பர துப்பட்டியை விரித்து, அதின் மேல் ஆராதனைக்கேற்ற சகல பணிமுட்டுகளாகிய கலசங்களையும், முள் துறடுகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், கலசங்களையும், பலிபீடத்திற்கடுத்த எல்லா பாத்திரங்களையும், அதின் மேல் வைத்து, அதின் மேல் தகசுத்தோல் மூடியை விரித்து, அதின் தண்டுகளை பாய்ச்சக்கடவர்கள். (எண். 4:13-14)

மகா பரிசுத்த ஸ்தலத்திலும், பரிசுத்த ஸ்தலத்திலும் உள்ள பொருட்கள் ஆயத்தம் செய்யபட்டு விட்டாயிற்று. இப்பொழுது பிரகாரத்தில் உள்ள வெண்கல பலிபீடம் ஆயத்தம் செய்யபடுகிறது. 13,14 ஆகிய வசனங்களில் தகன பலிபீடமும் அது சம்பந்தப் பட்ட பொருட்களும் ஆயத்தமாக்க படுகின்றன. ஆசரிப்பு கூடாரத்தின் அதி முக்கியமான பலிபீடம் நன்றாக சுத்தம் செய்ய பட்ட பின்னர் இரத்தாம்பர துப்பட்டியால் மூடப்பட வேண்டும். இரத்தாம்பரம் பலியையும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்மையே மனிதரின் பாவ மன்னிப்பிற்காக பலியாக செலுத்த போவதையும் முன் குறிக்கின்றது.

பாளயம் புறப்படும் போது, ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்தையும் அதினுடைய சகல பணிமுட்டுகளையும் மூடி தீர்ந்த பின்பு, கோகாத் புத்திரர் அதை எடுத்து கொண்டு போகிறதற்கு வரக்கடவர்கள்; அவர்கள் சாகாதபடிக்கு பரிசுத்தமானதை தொடாதிருக்க கடவர்கள். ஆசரிப்பு கூடாரத்திலே கோகாத் புத்திரர் சுமக்கும் சுமை இதுவே. (எண். 4:15)

அனைத்து பரிசுத்த பொருட்களும் முதலாவது ஆரோன் மற்றும் ஆசாரியர்களால் மூடப்பட வேண்டும் என்று பார்க்கின்றோம். தூக்கி செல்லுவதற்கு தண்டுகள் பூட்டப்பட வேண்டும் என்றும் பார்க்கின்றோம். அதன் பின்னர் லேவியின் புத்திரனான கோகாத் குடும்பத்தார் குடும்பம் குடும்பமாக அழைக்க படுகின்றார்கள். ஒவ்வொரு குடும்பமும் அவர்களுக்கு என்று குறிக்கப்பட்டதை தூக்கி செல்ல வேண்டும். ஆசரிப்பு கூடாரத்தின் பொருட்களை தூக்கி செல்லுவது எளிதானது அல்ல. ஆசரிப்பு கூடாரத்தின் பொருட்கள் அனைத்தும் சுமார் 15 டன் எடை உள்ளது ஆகும். ஒரு சிறு கவன குறைவும் அவர்கள் உயிரை பாதித்து விடும். உடலில் வலிமையும், உள்ளத்தில் தூய்மையும், கடமையில் கவனமும் கொண்டவர்கள் மட்டுமே இந்த பொறுப்பை ஏற்க முடியும் என்பது தீர்மானிக்க படுகிறது. லேவியின் புத்திரர் மூன்று பேர் ஆவார்கள். அவர்கள் கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்கள் என்று எண்ணாகம புத்தகம் 3-வது அதிகாரம் 17-வது வசனம் கூறியது. இந்த

மூன்று குடும்பங்களில் இருந்தும் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரும் கர்த்தரின் பணிவிடைக்காக எண்ணப்பட்டார்கள். அவ்விதம் எண்ணப்பட்டவர்களின் மொத்த தொகை 22,000 என்று எண்ணாகமம் 3-வது அதிகாரம் 39-வது வசனம் கூறியது. 22,000 ஆண் மக்களின் நடுவில் கர்த்தரின் கனமான வேலையை, கடினமான வேலையை கருத்துடன் செய்ய கூடியவர்கள் யார் என்று எண்ணாகமம் 4-வது அதிகாரம் 3-வது வசனத்தில் முடிவு கட்டப் படுகின்றது. 30 வயது முதல் 50 வயது வரை உள்ள அனைத்து ஆண் மக்களும் முன் வரிசை ஊழியர்களாக தேர்ந்து எடுக்க படுகின்றார்கள். லேவியின் பிள்ளைகள் என்ற வரிசையில் கெர்சோன் குடும்பத்தின் பெயர் முதன் முதலாக வந்தாலும் இரண்டாவது பிறந்த கோகாத் குடும்பம் கடின உழைப்பாளிகள் என்ற தேர்வில் முதல் இடம் பெற்று விட்டனர் என்பதை எண்ணாகமம் 4-வது அதிகாரம் 2-வது வசனத்தில் பார்க்கிறோம்.

மோசே ஆரோன் என்பவர்களும் கோகாத் குடும்பத்தை சேர்ந்தவர்களே என்று நாம் யாத்திராகமம் 6-வது அதிகாரம் 18, 20 ஆகிய வசனங்களில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். கோகாத் குடும்பத்தில் 30 முதல் 50 வயதிற்கு உட்பட்டவர்கள் இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது பேர் என்று எண்ணாகமம் 4-வது அதிகாரம் 36-வது வசனம் கூறுகின்றது. பாளயம் புறப்படும் போது ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்தையும் அதனுடைய சகல பணிமூட்டுக்களையும் மூடி தீர்த்த பின்பு என்று 15-வது வசனம் துவங்குகின்றது. கோகாத் புத்திரர் மகா பரிசுத்தம் ஆனவைகளை தோளில் சுமந்து செல்லும் பொறுப்பை பெற்று கொள்ளுகின்றனர் என்பதை 15-வது வசனத்தில் பார்க்கின்றோம். எண்ணாகமம் 4-வது அதிகாரம் 5,6,7,9,11 ஆகிய வசனங்களில் இருந்து கோகாத் புத்திரரில் தெரிந்து எடுக்கப்பட்ட இரண்டு ஆயிரத்து எழுநூற்று ஐம்பது ஆண்களும் உடன்படிக்கை பெட்டி, திரைச்சீலை, தூப பீடம், குத்து விளக்கு, சமூகத்து அப்ப மேஜை ஆகிய பரிசுத்த பொருட்களை சுமப்பார்கள் என்று அறிந்து கொள்ளுகின்றோம்.

> *ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசார், விளக்குக்கு எண்ணெயையும், சுகந்த தூபவர்க்கத்தையும், தினந்தோறும் இடும் போஜனபலியையும், அபிஷேக தைலத்தையும், வாசஸ்தலம் முழுவதையும், அதிலுள்ள யாவையும், பரிசுத்த ஸ்தலத்தையும் அதின் பணிமுட்டுகளையும், விசாரிக்கக்கடவன் என்றார். (எண். 4:16)*

ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்தமானதும், மகா பரிசுத்தமானதும் ஆன பொருட்களின் பொறுப்பும் அவற்றில் உபயோகபடுத்த படும் எண்ணெய், தூபவர்க்கம், போஜனபலி, அபிஷேக தைலம் முதலியவற்றின் தனி பொறுப்பும், யார் யார் எதை எதை எடுத்து செல்வார்கள், அவை எப்படி மூடப்பட வேண்டும் என்பன எல்லாவற்றையும் மேல் பார்வை இடும் பொறுப்பும் ஆரோனின் குமாரனும் ஆசாரியனுமான எலெயாசாரிடம் ஒப்படைக்க பட்டது.

> *கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: லேவியருக்குள்ளே கோகாத் வம்சமாகிய கோத்திரத்தார் அழிந்து போகாதபடி பாருங்கள். அவர்கள் மகா பரிசுத்தமானவைகளை கிட்டுகையில், சாகாமல் உயிரோடிருக்கும் படிக்கு, நீங்கள் அவர்களுக்காக செய்ய வேண்டியதாவது: ஆரோனும் அவன் குமாரரும் வந்து, அவர்களில் அவனவனை அவனவன் செய்யும் வேலைக்கும் அவனவன் சுமக்கும் சுமைக்கும் நியமிக்க கடவர்கள்;*

அவர்களோ சாகாதபடிக்கு பரிசுத்தமானவைகள் மூடப்படும் போது பார்க்கிறதற்கு உட்பிரவேசியாமல் இருப்பார்களாக என்றார். (எண். 4:17-20)

மோசேக்கும் ஆரோனுக்கும் கர்த்தர் திட்டவட்டமாக கூறுவதாவது: கோகாத் புத்திரர் தெரியாமல் பரிசுத்தமானவைகளை உள்ளே வந்து பார்த்து சாகாதபடிக்கு பார்க்க வேண்டியது முழுதும் ஆசாரியருடைய பொறுப்பே. எல்லா பரிசுத்த பொருட்களும் மூடப்பட்ட பின்னரே அவற்றை தூக்க அவர்கள் ஆசரிப்பு கூடாரத்திற்குள் பிரவேசிக்க வேண்டும்.

4.7 திரைகள் சுமக்க கெர்சோன் புத்திரர்

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: கெர்சோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்பு கூடாரத்திலே பணிவிடை வேலை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயது முதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணி, தொகை ஏற்றுவாயாக. பணிவிடை செய்கிறதிலும் சுமக்கிறதிலும் கெர்சோன் வம்சத்தாரின் வேலையாவது: அவர்கள் வாசஸ்தலத்துக்கும் ஆசரிப்பு கூடாரத்துக்கும் உரிய தொங்கு திரையையும், மூடியையும், அவைகளின் மேல் இருக்கிற தகசுத்தோல் மூடியையும், ஆசரிப்பு கூடார வாசல் மறைவையும், பிரகாரத்தின் தொங்கு திரைகளையும், வாசஸ்தலத்தண்டையிலும் பலிபீடத்தண்டையிலும் சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தினுடைய வாசல் தொங்கு திரையையும், அவைகளின் கயிறுகளையும், அவைகளின் வேலைக்கடுத்த கருவிகள் யாவையும் சுமந்து, அவைகளுக்காக செய்ய வேண்டிய யாவையும் செய்யக்கடவர்கள். (எண். 4:21-26)

லேவி கோத்திரத்தினரின் கணக்கெடுப்பு ஒரு மாத குழந்தையில் இருந்து ஆரம்பித்தது. ஆனால் இங்கே ஆசரிப்பு கூடாரத்தின் கனமான திரைகள் யாவற்றையும் சுமந்து செல்வதற்காக கெர்சோன் புத்திரரின் 30 வயது முதல் 50 வயது வரை உள்ள ஆண்மக்களை மட்டும் கணக்கு எடுக்க கர்த்தர் பணிக்கிறார். கெர்சோன் குடும்பத்தில் 30 முதல் 50 வயதிற்கு உட்பட்டவர்கள் இரண்டாயிரத்து அறுநூற்று முப்பது பேர் என்று அறிந்து கொள்ளுகின்றோம். அவர்கள் தோள்களில் சுமக்க வேண்டியவைகள் எவைகள் என்பது எண்ணாகமம் 4-வது அதிகாரம் 25,26 ஆகிய வசனங்களில் கூறப்பட்டு உள்ளது.

கெர்சோன் புத்திரர் சுமக்க வேண்டிய சுமைகளும் செய்ய வேண்டிய பணிவிடைகளாகிய சகல வேலைகளும் ஆரோனும் அவன் குமாரரும் சொல்லுகிறபடியே செய்ய வேண்டும். அவர்கள் சுமக்க வேண்டிய சகல சுமைகளையும் நீங்கள் நியமித்து, அவர்களிடத்தில் ஒப்புவியுங்கள். கெர்சோன் புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்பு கூடாரத்திலே செய்யும் பணிவிடை இதுதான். அவர்களை வேலை கொள்ளும் விசாரணை, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் இத்தாமாருடைய கைக்குள் இருக்க வேண்டும். (எண். 4:27-28)

லேவியர்கள் யாவரும் ஆசரிப்பு கூடாரத்தின் வேலைகளில் ஈடுபடுகையில் ஆசாரியர்களின் அதிகாரத்தின் கீழேயே செயல்பட வேண்டும். ஆகவே கெர்சோனியரை வழி நடத்துவதின் பொறுப்பு ஆரோனின் குமாரனாகிய இத்தாமாருக்கு கொடுக்க பட்டது.

4.8 தூண்கள், தூண்களின் பாதங்கள் சுமக்க மெராரி புத்திரர்

மெராரி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்பு கூடாரத்திலே பணிவிடை வேலை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயது முதல் ஐம்பது வயது வரைக்கும் உள்ள எல்லாரையும் எண்ணக்கடவாய். ஆசரிப்பு கூடாரத்தில் அவர்கள் செய்யும் எல்லா பணிவிடைக்கும் அடுத்த காவல் விசாரிப்பாவது: வாசஸ்தலத்தின் பலகைகளும், தாழ்ப்பாள்களும், தூண்களும், பாதங்களும், சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தின் தூண்களும், அவைகளின் பாதங்களும், முளைகளும், கயிறுகளும், அவைகளின் சகல கருவிகளும் அவற்றிற்கு அடுத்த மற்றெல்லா வேலையும்தானே. அவர்கள் சுமந்து காவல் காக்கும்படி ஒப்புவிக்க படுகிறவைகளை பேர் பேராக எண்ணக்கடவீர்கள். ஆசாரியனாகிய ஆரோனுடைய குமாரனான இத்தாமாருடைய கைக்குள்ளாக மெராரி புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்பு கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு அடுத்த எல்லா வேலையும் இதுவே என்றார். (எண். 4:29-33)

மூன்றாவதாக வரும் குடும்பம் மெராரி என்பவரின் குடும்பம் ஆகும். தெரிந்து எடுக்கப்பட்ட ஆண்களின் தொகை மெராரி குடும்பத்தில் 3200 பேர் என்று 44-வது வசனம் கூறுகின்றது. அவர்கள் சுமக்க வேண்டிய சுமைகள் என்ன என்பது 31,32 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது.

வாசஸ்தலத்தின் பலகைகளையும், தாழ்பாள்களையும், தூண்களையும், பாதங்களையும் மற்றும் சகல கருவிகளையும் மெராரி குடும்பத்தை சேர்ந்த 3,200 ஆண்களும் கொண்டு சென்றார்கள் என்று பார்க்கின்றோம். சுமந்து செல்லுவதற்கு பதிலாக சக்கர வண்டிகளில் ஏற்றி சென்றனர். எண்ணாகமம் 3-வது அதிகாரம் 39-வது வசனத்தில் லேவி கோத்திரத்தின் அனைத்து ஆண் மக்களும் 22,000 பேர் என்று கூறப்பட்டு உள்ளது.

4.9 ஆசரிப்பு கூடாரத்தை சுமந்து செல்ல கூடியவர்களின் தொகை கணிப்பு

அப்படியே மோசேயும் ஆரோனும் சபையின் பிரபுக்களும் கோகாத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களின்படி ஆசரிப்பு கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணினார்கள். அவர்கள் வம்சங்களில் எண்ணப்பட்டவர்கள் இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பதுபேர். கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே, மோசேயினாலும் ஆரோனாலும் கோகாத் வம்சத்தாரில் ஆசரிப்பு கூடாரத்தில் வேலை செய்கிறதற்காக எண்ணி தொகை இடப்பட்டவர்கள் எல்லாரும் இவர்களே. (எண். 4:34-37)

கோகாத் வம்சத்தில் பரிசுத்தமும் மகா பரிசுத்தமுமான ஆசரிப்பு கூடார பொருட்களை சுமக்க எண்ண பட்டவர்கள் 2750 பேர். இவர்களுக்கு சுமக்க வேண்டிய பொருள்களும், நேரங்களும் பிரித்து கொடுக்க பட்டது.

கெர்சோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்பு கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயது முதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரும் எண்ணப்பட்டார்கள். அவர்களில் எண்ணப்பட்டவர்கள் அவரவர் குடும்பத்தின்படிக்கும், பிதாக்களுடைய வம்சத்தின்படிக்கும் இரண்டாயிரத்து அறுநூற்று முப்பதுபேர். மோசேயினாலும் ஆரோனாலும் கர்த்தர் கட்டளை இட்டபடியே கெர்சோன் புத்திரரின் வம்சத்தாரில் ஆசரிப்பு கூடாரத்தில் வேலை செய்ய எண்ணி தொகை இடப்பட்டவர்கள் இவர்களே. (எண். 4:38-41)

கெர்சோன் வம்சத்தில் 30 முதல் 50 வயதிற்கு உட்பட்டவர்கள் 2630 பேர் என்று பார்க்கிறோம்.

மெராரி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்பு கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயது முதல் ஐம்பது வயதுள்ளவர்கள் எல்லாரும் எண்ணப்பட்டார்கள். அவர்களில் எண்ணப்பட்டவர்கள் தங்கள் குடும்பங்களின்படியே மூவாயிரத்து இருநூறு பேர். கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே மோசேயினாலும் ஆரோனாலும் மெராரி புத்திரரின் குடும்பத்தாரில் எண்ணி தொகையிடப்பட்டவர்கள் எல்லாரும் இவர்களே. (எண். 4:42-45)

மெராரி குடும்பத்தினரில் 3200 பேர் ஆசரிப்பு கூடார வேலை செய்ய தகுதியானவர்கள்.

லேவியருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில் முப்பது வயது முதல் ஐம்பது வயது வரைக்கும் உள்ளவர்கள் ஆசரிப்பு கூடாரத்திலே செய்யும் பணிவிடை வேலைக்கும் சுமையின் வேலைக்கும் உட்படத்தக்கவர்களும், மோசேயினாலும் ஆரோனாலும் இஸ்ரவேலின் பிரபுக்களாலும் எண்ணப்பட்டவர்களும் ஆகிய எல்லாரும், எண்ணாயிரத்து ஐந்நூற்று எண்பது பேராயிருந்தார்கள். கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே, அவர்கள் தங்கள் தங்கள் பணிவிடைக்கென்றும் தங்கள் தங்கள் சுமைக்கென்றும் மோசேயினால் எண்ணப்பட்டார்கள். இவ்விதமாய், கர்த்தர் மோசேக்கு கட்டளை இட்டபடியே அவர்கள் அவனால் எண்ணப்பட்டார்கள். (எண். 4:46-49)

22,000 ஆண் மக்களில் மிக கடினமான வேலைகளையும் மிக கவனத்துடன் செய்யக் கூடியவர்கள் எண்ணாயிரத்து ஐந்நூற்று எண்பது (8580) பேர்கள் மட்டுமே என்று கொடுக்கப்பட்டு உள்ளது. மற்றவர்கள் மற்ற வேலைகளை செய்வதில் மன மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. முன்னாக நின்று செய்யும் வேலைகளை 30 முதல் 50 வயது உள்ளவர்கள் மட்டுமே செய்ய முடியும் என்று தீர்ப்பிடப்பட்டது. பின்னதாக நின்று செய்யும் வேலைகளை மற்றவர்கள் பெற்று கொண்டனர். இந்த வேலை செய்வதற்கு

மட்டும் தான் நான் தகுதி உடையவனா என்று பின்னாக நின்றவர்கள் சோர்வு அடையவில்லை. எனக்கு முன்னாக நின்று செய்யும் வேலை கிடைத்து விட்டது என்று முதன்மையாக நின்றவர்கள் பெருமை கொள்ளவும் இல்லை. சிறிய வேலை, பெரிய வேலை என்று எவரும் பேசி கொள்ளவும் இல்லை. கர்த்தருக்காக செய்யும் வேலையாகவே அனைத்து வேலைகளையும் அவர்கள் ஏற்று கொண்டார்கள். தங்கள் தங்கள் ஸ்தானங்களில் மிகவும் திருப்தியுடன் நின்றார்கள். அவரவருக்கு கொடுக்கப்பட்ட கிருபைகளை இரு கையேந்தி பெற்று கொண்டார்கள். எவ்வித போட்டியும் பொறாமையும், பெருமையும் அவர்கள் நடுவில் காணப்படவில்லை. ஆண்டவர் அளித்த கிருபைகளை வரங்களை ஊழியங்களை உண்மையாக காத்துக் கொண்டார்கள். 1 கொரிந்தியர் 12-வது அதிகாரம் 4 முதல் 6 வசனங்களை பார்ப்போம். ''வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு. கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு. எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.''

அத்தியாயம் - 5

பாளயத்தை பரிசுத்தமாக காத்து கொள்ள கட்டளை

5.1 தீட்டுள்ளவர்களை பாளயத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும்



பாளயத்திற்கு வெளியே குஷ்டரோகிகள்

பாளயத்தை பரிசுத்தமாக காத்து கொள்ள மூன்றுவித கட்டளைகள் இங்கு கொடுக்கபடுகின்றன. முதலாவது சரீர சுத்தத்தையும் இரண்டாவது உள்ளத்தின் சுத்தத்தையும் மூன்றாவது குடும்ப உறவின் சுத்தத்தையும் குறிக்கும் கட்டளை ஆகும்.

பாவத்தை இதயத்தில் பதுக்கி வைத்து பரிசுத்தரின் மேல் பாசம் காட்ட முடியாது என்றும் பாவம் அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்றும் கர்த்தர் கூறுகின்றார். பழைய புளித்த மாவுடன் அல்ல, துப்புறவு, உண்மை என்ற புளிப்பு இல்லாத பரிசுத்தம் நிறைந்த இதயத்துடன் கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும் என்று கர்த்தர் எதிர் பார்க்கின்றார். பழைய புளித்த மாவுடன் துப்புறவு, உண்மை என்ற புளிப்பு இல்லாத மாவு இணைய முடியாது என்று பரிசுத்த பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாவது நிருபம் 5-வது அதிகாரம் 8-வது வசனத்தில் கூறுகின்றார். அவிசுவாசிகளுடன் விசுவாசிகள் இணைய முடியாது என்று 2 கொரிந்தியர் 6-வது அதிகாரம் கூறுகின்றது.

> ***கர்த்தர் மோசேயை நோக்கி: குஷ்டரோகிகள் யாவரையும், பிரமியமுள்ளவர்கள் யாவரையும், சவத்தினால் தீட்டுப்பட்டவர்கள் யாவரையும் பாளயத்திலிருந்து விலக்கிவிட இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளையிடு. ஆண் பிள்ளை ஆனாலும் பெண் பிள்ளை ஆனாலும் அப்படிப்பட்டவர்களை நீங்கள் விலக்கி, நான் வாசம் பண்ணுகிற தங்கள் பாளயங்களை அவர்கள் தீட்டு படுத்தாதபடிக்கு, நீங்கள் அவர்களை பாளயத்திற்கு புறம்பாக்கிவிட கடவீர்கள் என்றார். கர்த்தர் மோசேக்கு சொன்னபடியே, இஸ்ரவேல் புத்திரர் செய்து, அவர்களை பாளயத்திற்கு புறம்பாக்கி விட்டார்கள். (எண். 5:1-4)***

கோத்திர வாரியாக பாளயம் ஒழுங்கு படுத்தபட்டு விட்டது. கொடிகள் யாவும் தைக்க பட்டு, கோத்திர தலைவர்களின் கூடாரங்கள் அருகே நட்ட பட்டு விட்டன. இப்பொழுது கர்த்தர் அவர்கள் நடுவே அசுத்தம் இல்லாமல் பரிசுத்தம் காணப்பட வேண்டும் என்று அதற்கான பலவித கட்டளைகளை கொடுக்கிறார். கர்த்தருடைய கட்டளைகளை மீறினால்

அவரது கோபத்திற்கு தப்பிக்க முடியாது. பாளயத்தில் அசுத்தம் காணப்பட்டால் அநேக வியாதிகளும் மற்ற கஷ்டங்களும் வரலாம். தொற்று நோய்களும் கொள்ளை நோய்களும், அதி வேகமாக பரவலாம். குஷ்டரோகிகள் என்று பொதுவாக குறிக்கப்பட்ட தோல் வியாதிகள் உள்ளவர்கள், பிரமியம் உள்ளவர்கள், மேலும் மரித்து போன சரீரத்தை தொட்டவர்கள் யாவரும் சுத்திகரிக்க பட வேண்டும் என்று லேவியராகமத்தில் பார்த்தோம். இங்கு அவர்கள் பாளயத்திற்கு புறம்பே கொண்டு செல்லப்பட வேண்டும் என்று தெளிவாக காண்கிறோம். அங்கே அவர்களுக்கு ஆகாரம் கொடுக்க படும். கர்த்தர் கொடுத்த இந்த விதமான ஒழுங்கே பிற்காலத்தில் மருத்துவமனைகள் ஸ்தாபிக்கபட கூடிய மூல கருத்தை கொடுத்தது என்று அநேக அறிஞர்கள் கருதுகின்றனர்.

மேலும் கர்த்தர் இவ்வாறு கூறுவதில் ஆன்மீக பிரகாரமான அர்த்தங்களும் பல உண்டு. உலகில் வாழ்ந்தாலும் உண்மை உள்ளவைகள் எவைகளோ அவைகளை சார்ந்து மட்டுமே வாழ முடியும் என்று கர்த்தர் கூறுகின்றார். இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் தீட்டான ஒன்றும் தேவ சமுகத்தில் பிரவேசிக்க முடியாது என்று வெளிப்படுத்தின விசேஷம் 21-வது அதிகாரம் 27-வது வசனம் கூறுகின்றது. மீட்கப்பட்ட ஜனங்கள் கர்த்தர் கூறும் எதற்கும் தயங்காமல் அடி பணிகின்றார்கள். எவ்வித கேள்வியும் கேட்காமல் கீழ்படிய துவங்கி விட்டார்கள் என்பதை நாம் பார்க்கின்றோம். கர்த்தர் மோசேக்கு சொன்னபடியே இஸ்ரவேல் புத்திரர் செய்து அசுத்தம் ஆனவர் அனைவரையும் பாளயத்திற்கு புறம்பாக அனுப்பி வைத்தார்கள்.

5.2 பிறனுக்கு விரோதமான பாவம்

மேலும் கர்த்தர் மோசேயை நோக்கி: (எண். 5:5)

இந்த வசனம் நம்மை அடுத்த குறிப்பிற்கு எடுத்து செல்லுகின்றது. எண்ணாகம புத்தகம் 5-வது அதிகாரத்தில் வரும் 2-வது குறிப்பு விசுவாசிகளின் ஐக்கியத்தில் ஒருவருக்கு ஒருவர் மிகவும் உண்மையாக இருக்க வேண்டும் என்பதே ஆகும். ஒருவரோடு ஒருவர் ஏக சிந்தையாக இருங்கள் என்பதே ஆகும்.

ஒருவருக்கு ஒருவர் பொய் சொல்லாதிருங்கள் என்ற விபரம் 5 முதல் 10 வசனங்களில் விரிவாக பகிர்ந்து கொடுக்கப்படுகின்றது. பிறரின் உடைமைகளை தந்திரமாக எடுத்து கொள்ளுதல், களவு செய்து அபகரித்தல், தரம் குறைந்த பொருட்களை மிகவும் தரம் உயர்ந்ததாக கூறி வஞ்சித்து ஏமாற்றி விற்று விடுதல் ஆகிய மூன்று தவறுகளையும் செய்கின்ற ஜனங்களுக்கு ஏற்ற குறிப்புகள் இங்கு கொடுக்கப்படுகின்றது. மனிதனின் கண்களுக்கு மறைவாக செய்யும் எதுவும் கர்த்தரின் கண்களுக்கு மறைவானவைகள் அல்ல என்பதை இங்கு நாம் பார்க்கின்றோம். அவ்விதமான தவறு செய்கின்றவர்களுக்கு ஏற்ற தீர்ப்பும் 2-வது பகுதியில் திட்ட வட்டமாக அருளப்படுகின்றது. ஒருவருக்கு ஒருவர் உண்மையாக இருக்க வேண்டும் என்ற விபரம் ஏற்கெனவே லேவியராகம புத்தகம் 6-வது அதிகாரம் 1 முதல் 7 வசனங்களில் நாம் பார்த்தோம். எண்ணாகம புத்தகத்தில் இந்த மூன்று குற்றங்களும் மனிதன் செய்யும் பாவங்கள் என்று கூறப்பட்டு உள்ளது.

நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: ஒரு புருஷனானாலும் ஸ்திரீயானாலும், கர்த்தருடைய கட்டளையை மீறி மனிதர் செய்யும் பாவங்களில் யாதொரு பாவத்தை செய்து குற்றவாளியானால், (எண். 5:6)

எண்ணாகமம் 5-வது அதிகாரம் 6-வது வசனம் சாதாரண மனிதர் செய்யும் பாவங்களை நீங்கள் செய்ய வேண்டாம் என்று அழைக்கின்றது. மனிதர் செய்யும் பாவங்களை மனம் திரும்பிய மக்கள் செய்ய முடியாது என்பது தெளிவாக்க படுகின்றது. மீட்கப்பட்ட ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் மிகவும் உண்மையாக இருக்க வேண்டும் என்றும் ஒருவருடைய பாரங்களை ஒருவர் சுமக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்க பட்டது. ஒருவருக்கு ஒருவர் உண்மை இல்லாமல் போகும் பொழுது மீட்கப்பட்ட ஜனங்கள் நடுவில் ஒற்றுமையும், ஐக்கியமும் பாதிக்க படுகின்றது.

அவர்கள் தாங்கள் செய்த பாவத்தை அறிக்கையிட கடவர்கள். அப்படிப்பட்டவன் தான் செய்த குற்றத்தின் நிமித்தம் அபராதத்தின் முதலோடே ஐந்தில் ஒரு பங்கை அதிகமாய் கூட்டி, தான் குற்றம் செய்தவனுக்கு செலுத்தக்கடவன். (எண். 5:7)

பிறரின் உடைமைகளை, உத்தியோகங்களை, உயர்வுகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ பறித்து விடுவதற்கு முயற்சி செய்கின்றவர்கள் மீட்கப்பட்ட ஜனங்கள் நடுவிலும் கூட தோன்ற முடியும் என்பதை இந்த வசனங்கள் முன்னதாக தெரிவிக்கின்றது. உள்ளத்தில் உண்மை இழந்தவர்கள் மீட்கப்பட்டவர்களின் ஐக்கியத்தில் பிறந்து விடுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்பது ஓர் முன் அறிவிப்பாக இந்த வசனங்களில் வருகின்றது. அந்த உணர்வு உடையவர்கள் விசுவாசிகளின் ஐக்கியத்தை உடைய செய்வார்கள். எண்ணாகம புத்தகத்தில் சற்று பின்னான அதிகாரங்களில் இவைகள் இடம் பெறுவதை நாம் பார்க்க இருக்கின்றோம். அவ்விதம் செய்கின்றவர்களுக்கு ஒரு தீர்ப்பு கூறப்படுகின்றது. மீட்கப்பட்ட ஜனங்களின் ஐக்கியத்தில் உண்மையின் அடிப்படையான வாழ்வில் பின் வாங்கும் மக்களுக்கு ஏற்ற ஆலோசனை கொடுக்கப்படுகின்றது. அவர்கள் செய்த குற்றத்தை மனதார உணர வேண்டும். மனதார ஒப்பு கொள்ள வேண்டும். உடன் சகோதரருடன் ஒப்புரவு ஆக வேண்டும்.

தேவனிடம் தங்கள் குற்றங்களை அறிக்கை செய்ய வேண்டும் என்று அநேக ஆலோசனைகளை 7,8 ஆகிய வசனங்கள் கொடுக்கின்றன. செய்த பாவங்களையும், பாதகங்களையும் கர்த்தரிடம் மன்றாடி அறிக்கை செய்கின்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும், அப்படி செய்ய மனம் அற்றவர்கள் வாழ்வு காண்பது இல்லை என்றும் நீதிமொழிகளின் புத்தகம் 28-வது அதிகாரம் 13-வது வசனம் உரைக்கின்றது.

''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை இட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரிப்பதற்கு கர்த்தர் உண்மையும் நீதியும் உள்ளவராக இருக்கிறார்'' என்று புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் 1 யோவான் முதலாவது அதிகாரம் 9-வது வசனம் கூறுகின்றது. கர்த்தரிடம் அறிக்கை செய்வதுடன் நின்று விடாமல் அபகரித்த பொருட்களையும், உடைமைகளையும் உரிமையாளர்களிடம் திருப்பி கொடுத்துவிட வேண்டும் என்பதும், நல்மனம் பொருந்திவிட வேண்டும் என்பதுமே கர்த்தரின் எதிர்பார்ப்பு. உரிமையாளர் உயிரோடு இல்லை என்றால் அவர்கள் எடுத்த பொருளை அவருடைய நெருங்கிய உறவினரிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

அதை கேட்டு வாங்குகிறதற்கு இனத்தான் ஒருவனும் இல்லாதிருந்தால், அப்பொழுது அவனுக்காக பாவநிவிர்த்தி செய்யும்படி ஆட்டுக்கடா செலுத்த படுவதும் அல்லாமல், கர்த்தருக்கு அந்த அபராதம் செலுத்த

பட்டு, அது ஆசாரியனை சேர வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுத்து படைக்கும்படி ஆசாரியனிடத்தில் கொண்டு வருகிற எல்லா பரிசுத்தமான படைப்பும் அவனுடையதாயிருக்கும். ஒவ்வொருவரும் படைக்கும் பரிசுத்தமான வஸ்துக்கள் அவனுடையதாய் இருக்கும். ஒருவன் ஆசாரியனுக்கு கொடுக்கிறது எதுவும் அவனுக்கே உரியது என்று சொல் என்றார். (எண். 5:8-10)

அவ்விதம் நெருங்கிய உறவினர் இல்லை என்றால் ஆசாரியனை அணுகி அவனிடம் அனைத்தையும் திருப்பி கொடுத்துவிட வேண்டும் என்றும் வசனம் கூறுகின்றது.

ஆசாரியனின் கையில் ஒப்படைக்கப்பட்ட அனைத்தும் ஆசாரியனுக்கு சொந்தமாக இருக்கும். தூய்மை, உண்மை என்ற இரண்டு தூண்களை நடுவாக வைத்து மீட்கப்பட்டவர்களின் ஐக்கியம் வளர்ந்து ஓங்குவதற்கு உரிய வாய்ப்புகளை கர்த்தர் கொடுக்கின்றார். மீட்கப்பட்ட ஜனங்களின் ஐக்கியம் உறுதி பெறுவதற்கும் ஓங்கி வளருவதற்கும் தூய்மையும் இழக்கப்பட முடியாது, உண்மையும் இழக்கப்பட முடியாது என்பதை எண்ணாகம புத்தகம் 5-வது அதிகாரம் வலியுறுத்தி கூறுகின்றது. மிக திரளான கூட்டமான மீட்கப்பட்ட ஜனங்கள் நடுவில் தீட்டான ஒன்றும் பிரவேசிக்க முடியாது என்பதே முதல் குறிப்பு. பரிசுத்தரின் சமுகத்தில் எவ்வித அசுத்தமும் பங்கு பெற முடியாது என்று அறிந்து கொள்ளுகின்றோம். ஒவ்வொருவரும் தங்களுக்கு உரியவைகளில் தன் நிறைவு கொண்டு வாழ வேண்டும் என்றும் தவறான முறையில் பிறருடைய உடைமைகளை அபகரிக்க கூடாது என்றும் அடுத்த குறிப்பு கூறுகின்றது. நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருப்பீர்களாக என்று லேவியராகம புத்தகம் 11-வது அதிகாரம் 45-வது வசனத்தில் கர்த்தர் கூறுவது காலத்திற்கு ஏற்ப மாற்றப்பட முடியாது என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். அதை கவனத்துடன் காத்து கொள்ளாவிட்டால் கானானை இழக்க நேரிடும் என்பதை அறிந்து கொள்ளுகின்றோம்.

இருதயத்தில் சுத்தம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் என்றும் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் என்றும் அறிந்து கொள்ளுகின்றோம். அதுவே முதல் குறிப்பு. உன்னில் நீ அன்பு கூறுவது போல பிறனிலும் அன்பு கூறுவாயாக என்று லேவியராகம புத்தகம் 19-வது அதிகாரம் 18-வது வசனத்தில் கொடுக்கப்பட்ட கட்டளை காலத்திற்கு ஏற்ப மாற்ற முடியாது என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். பிறனில் அன்பு கூறுகிறவர் பிறரது உடைமைகளை களவு செய்யமாட்டார்கள் என்பது தெரிய வருகின்றது. பிறரை வஞ்சித்து வாழ முற்படமாட்டார்கள் என்பது அறிய வருகின்றது. மீட்கப்பட்டவர்கள் சகோதர சிநேகத்தில் நிலைத்து நிற்க வேண்டும் என்பதே 2-வது குறிப்பு.

எண்ணாகமம் 5-வது அதிகாரத்தில் மீட்கப்பட்ட மக்கள் தங்களது மீட்பின் பாக்கியத்தை காத்து கொள்வதற்கு மூன்று முக்கிய குறிப்புகள் கொடுக்கப்பட்டு உள்ளன. எண்ணாகம புத்தகம் 5-வது அதிகாரம் 11 முதல் 31 வசனங்களில் வரும் மூன்றாவது குறிப்பை பாருங்கள்.

5.3 குடும்பத்தின் நடுவில் எழும்பும் குரோதம் விலக்கபட வேண்டும்.

நீ இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்ல வேண்டியது என்னவென்றால்: ஒருவனுடைய மனைவி பிறர் முகம் பார்த்து, புருஷனுக்கு துரோகம் பண்ணி, ஒருவனோடே சம்யோகமாய் சயனித்திருந்த விஷயத்தில் அவள்

தீட்டு பட்டவளாயிருந்தும், அவளுடைய புருஷன் கண்களுக்கு அது மறைக்கப்பட்டு வெளிக்கு வராமல் இருக்கிற போதும், சாட்சி இல்லாமலும் அவள் கையும் களவுமாக பிடிக்கப்படாமலும் இருக்கிறபோதும், எரிச்சலின் ஆவி அவன் மேல் வந்து, அவன் தன்னுடைய மனைவி தீட்டு படுத்தப்பட்டிருக்க, தீட்டு படுத்தப்பட்ட தன் மனைவியின் மேல் குரோதம் கொண்டிருந்தாலும், அல்லது அவன் மனைவி தீட்டு படுத்த படாதிருக்க, எரிச்சலின் ஆவி அவன் மேல் வந்து, அவன் அவள் மேல் குரோதம் கொண்டிருந்தாலும், அந்த புருஷன் தன் மனைவியை ஆசாரியனிடத்தில் அழைத்து கொண்டு வந்து, அவள் நிமித்தம் ஒரு எப்பா அளவான வாற்கோதுமை மாவிலே பத்தில் ஒரு பங்கை படைப்பாக கொடுக்க கடவன்; அது எரிச்சலின் காணிக்கையும் அக்கிரமத்தை நினைப்பூட்டும் காணிக்கையுமாய் இருப்பதினால், அதின் மேல் எண்ணெய் வார்க்காமலும் தூபவர்க்கம் போடாமலும் இருப்பானாக. (எண். 5:11-15)

கணவன் மனைவி என்ற ஒரு சம்பந்தத்திற்குள் வந்தவர்கள் 'குடும்பம்' என்று பெயர் பெறுகின்றனர். குடும்பம் என்பது ஒரு சமுதாயத்தின் அடிப்படை கட்டுமானம் ஆகும். இதில் விரிசல் ஏற்பட்டால் சமுதாயத்திற்கே ஆபத்து. ஆகவே அதனை உடனே அகற்ற வேண்டும். சுமுகமான உறவு உடனே கணவன் மனைவிக்கு இடையே வர வேண்டும் என்று கர்த்தர் கட்டளை இடுகிறார். எண்ணாகம புத்தகம் 5-வது அதிகாரத்தில் வரும் 3-வது குறிப்பு கணவன் மனைவி நடுவில் எவ்வித சந்தேக உணர்ச்சியும் இல்லாமல் உள்ளம் ஒருமித்து வாழ வேண்டும் என்பதே ஆகும்.

இந்த பகுதியில் தன் மனைவியின் மீது சந்தேகம் கொள்ளும் ஒரு கணவனை பற்றி நாம் பார்க்க இருக்கின்றோம். இந்த பகுதி கர்த்தரால் மீட்கப்பட்ட ஜனங்களுக்கு என்று கொடுக்கப்பட்டது. மீட்கப்பட்ட ஜனங்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய குடும்ப வாழ்க்கையில் ஒருவர் மீது ஒருவர் சந்தேகம் கொள்வது தவறாகும். ஒவ்வொருவரும் தங்களுடைய குடும்ப வாழ்க்கையில் ஒருவர் மீது ஒருவர் பரிபூரண நம்பிக்கை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை இந்த பகுதி வலியுறுத்துகின்றது. தன் மனைவி பிறர் முகம் பார்த்தாள் என்றும், தனக்கு துரோகம் செய்தாள் என்றும் கணவனுக்கு மனதில் ஏற்பட்ட சந்தேக உணர்ச்சி பற்றி நாம் காண்கிறோம். அவனது சந்தேகத்தை நிரூபிக்க எவ்வித சாட்சிகளும் அவனுக்கு இல்லை என்று வசனம் கூறுகின்றது. ஆயினும் அவனது மனதில் எழும்பிய கேள்வி குறி கோபத்தில் வெறி கொள்ளும் மனிதனாக அவனை மாற்றுவதற்கு ஏதுவாக இருக்கின்றது. எரிச்சலின் ஆவி அவன் மேல் வந்தது. மனைவியின் மீது குரோதம் கொண்டான்.

எரிச்சலின் ஆவி என்பது சந்தேகத்தின் ஆவி என்று பொருள்படும். எரிச்சல் என்ற வார்த்தை 15,18,25,29 ஆகிய வசனங்களில் திரும்ப திரும்ப வந்து கொண்டே இருக்கின்றது. அந்த வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரெய சொல் பன்மையை குறிக்கும் சொல் ஆகும். முதலில் எழும்பிய ஒரு சிறு சந்தேகம் பலத்த சந்தேகமாக மாறி விடுகின்றது. மனதில் எழும்பிய ஒரு சிறு சந்தேக உணர்ச்சி மனைவியை பார்க்கும் போது எல்லாம் எதற்கும் அவள் மீது சந்தேகத்தை பெருக செய்யும் உணர்ச்சிகளாக மாற்றி விடுகின்றது. மனைவியை சந்தோஷத்துடன் பார்க்கிறவனாக அல்ல, பல பல சந்தேக உணர்வுகளுடன் பார்க்கும் மனிதனாக கணவன் மாறி விடுகின்றான். சந்தேகங்கள் அவனை பதட்டம் அடைய செய்கின்றது. ஆயினும் அவனிடத்தில் எழும்பிய அனைத்து

சந்தேகங்களையும் நிரூபிப்பதற்கு அவனால் முடியவே இல்லை. இரவிலும் பகலிலும் குழம்பிய ஒரு சூழ்நிலையில் அவன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றான்.

அப்பொழுது அவன் ஓர் தீர்மானம் செய்கின்றான். ஆண்டவருடைய சமூகத்திற்கு சென்று அனைத்தையும் சரி செய்து விடுவதற்கு அவன் இருதயத்தில் தீர்மானிக்கின்றான். இருதயத்தில் சந்தேகத்தோடும், கசப்போடும் வாழ்ந்து கொண்டிருக்க அவன் விரும்பவில்லை. அவன் தன் மனைவியுடன் இரண்டு காணிக்கைகள் எடுத்து ஆசரிப்பு கூடாரம் புறப்படுவதை 15-வது வசனத்தில் நாம் பார்க்கிறோம்.

அந்த இரண்டு காணிக்கைகளின் பெயர்களும் கொடுக்கப்பட்டு உள்ளன. ஒரு காணிக்கையின் பெயர் எரிச்சலின் காணிக்கை என்பதாகும். அடுத்த காணிக்கையின் பெயர் அக்கிரமத்தை நினைப்பு ஊட்டும் காணிக்கை என்பது ஆகும். இந்த இரண்டு காணிக்கைகளையும் செலுத்துவதற்கு அவர்கள் எடுத்து சென்றது ஒரு எப்பா அளவான வாற்கோதுமை மாவில் பத்தில் ஒரு பங்கு ஆகும். பொதுவாக தங்கள் உணவிற்கு கோதுமை என்பதையே அவர்கள் பயன்படுத்துவார்கள். மிகுந்த வறுமையில் உள்ள குடும்பங்கள் மட்டுமே வாற்கோதுமை என்பதை தங்கள் உணவிற்கு பயன்படுத்துவார்கள். மிகுந்த ஏழ்மை உள்ளவர்களாக அவர்களுடைய குடும்பம் மாறிவிட்டது என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். வாற்கோதுமை மாவு காணிக்கையாக படைக்கப்படுவது அவர்களது குடும்பம் வறுமையில் வாடுகிறது என்பதற்கு ஒரு எடுத்து காட்டாக கூறப்பட்டு உள்ளது. பொதுவாக கோதுமை மாவில் உணவு தயாரித்து வாழ்ந்த அவர்கள் சந்தேகம் என்ற சமுத்திரத்தில் கணவன் விழுந்து விட்டதால் அவனுடைய கவனம் சிதைந்து விட்டது. வரவு குறைந்து விட்டது. வாற்கோதுமை உணவாக கொள்ளும் நிலைமைக்குள் அவர்கள் குடும்பம் வந்து விட்டது.

எரிச்சலின் காணிக்கை என்பது சந்தேகத்தின் காணிக்கை என்பது ஆகும். ஆசரிப்பு கூடாரம் வரை வந்து அவன் இருதயத்தில் உள்ள சந்தேகத்தை தீர்த்து விடுவதற்கு அவன் எரிச்சலின் காணிக்கை செலுத்த வந்து இருக்கிறான். அக்கிரமத்தை நினைவு ஊட்டும் காணிக்கை என்பது அடுத்த காணிக்கை ஆகும். தன்னுடைய மனைவி செய்த தவறுகள் அனைத்தையும் கர்த்தர் நினைக்க வேண்டும் என்பது அதன் பொருள் ஆகும். அந்த காணிக்கையில் எண்ணெய் வார்க்கப்படவில்லை என்றும் தூபவர்க்கம் இடப்படவில்லை என்றும் நாம் பார்க்கின்றோம்.

எண்ணெய் என்பது சந்தோஷத்தை தெரிவிக்கின்றது. எண்ணெய் என்பது மகிழ்ச்சி என்பதற்கு அடையாளமாக உள்ளது. தூபவர்க்கம் என்பது ஜெபம், மன்றாட்டு, நறுமணம் என்பதற்கு அடையாளமாக உள்ளது. சந்தேக காணிக்கையில் சந்தோஷம் காணப்படுவதே இல்லை என்பதை குறிப்பதற்கு எண்ணெய் வார்க்க படவில்லை. மனைவியின் அக்கிரமத்தை கர்த்தர் நினைக்கட்டும் என்ற காணிக்கைக்கு தூபவர்க்கம் இடப்படுவது இல்லை என்பதை வசனம் காட்டுகின்றது. தன் மனைவியின் அக்கிரமத்தை கர்த்தர் நினைக்க வேண்டும் என்ற காணிக்கையை கணவன் செலுத்துவதைவிட தன் மனைவியின் சுகத்தை கர்த்தர் காத்து கொள்ளட்டும், தன் மனைவியின் நலத்தை கர்த்தர் தேடட்டும் என்று கணவன் ஓர் காணிக்கை படைக்கும் நாள் வரவேண்டும் என்பதை அந்த வசனம் கூறுகின்றது. என் பாவங்களை கர்த்தாவே நீர் நினைக்க வேண்டாம் என்றும், கர்த்தாவே என்னை நினைக்கும் பொழுதெல்லாம் உம்முடைய கிருபையை மட்டும் நினைத்து கொள்ளும் என்றும் தாவீது என்பவர் 25-வது சங்கீதம் 7-வது வசனத்தில் மன்றாடுகின்றார்.

எரிச்சலின் காணிக்கை, அக்கிரமத்தை நினைப்பூட்டும் காணிக்கை என்ற காணிக்கைகளை கொண்டு வருகின்றவர்களுக்கு ஆசாரியன் ஏற்ற உதவி செய்வதற்கு ஆயத்தம் உள்ளவனாக இருக்கின்றான். குடும்பங்கள் எப்படியாவது சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும் கணவன் மனைவி என்பவர்கள் நடுவில் சகல நம்பிக்கையோடும் வாழ வேண்டும் என்பதே ஆசாரியனுடைய வாஞ்சை. முற்றிலும் வித்தியாசமான காணிக்கையுடன் வந்து இருக்கும் தம்பதிகளுக்கு ஆசாரியன் முற்றிலும் வித்தியாசமான ஒரு ஆராதனையை நடத்துகின்றான் என்பதை வசனங்கள் கூறுகின்றன. மனைவி மீது கொண்ட சந்தேகத்திற்கு ஏற்ற பிரமாணம் என்று அந்த ஆராதனையை எண்ணாகமம் 5-வது அதிகாரம் 30-வது வசனம் கூறுகின்றது.

முற்றிலும் வித்தியாசமான பிரமாணத்தை கொண்ட இந்த ஆராதனையில் ஆசாரியன் 12 நிலைகளை கடந்து செல்ல வேண்டியது இருக்கின்றது என்பதை வசனங்கள் கூறுகின்றன.

ஆசாரியன் அவளை சமீபத்தில் அழைத்து, கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி, (எண். 5:16)

முதலாவது தன்னிடம் அழைத்து வரப்பட்ட பெண்ணை ஆசாரியன் கர்த்தரிடம் அழைத்து செல்லுகிறான். ஒருவரும் சாட்சி இல்லை என்றாலும் உன் வாழ்க்கையின் அனைத்தையும் கர்த்தர் பார்த்து கொண்டே இருக்கிறார். நமக்கு நடுவில் கர்த்தரே சாட்சி என்பதற்கு அது அடையாளமாக மாறுகின்றது. ஆதியாகம புத்தகம் 16-வது அதிகாரம் 13-வது வசனத்தில் ஆகார் என்ற பெண் நீர் என்னை காண்கிற தேவன் என்று சாட்சி கூறினாள்.

ஒரு மண்பாண்டத்திலே பரிசுத்த ஜலம் வார்த்து, வாசஸ்தலத்தின் தரையிலிருக்கும் புழுதியிலே கொஞ்சம் எடுத்து, அந்த ஜலத்திலே போட்டு, (எண். 5:17)

ஆசாரியன் கடந்து செல்லும் இரண்டாவது நிலை ஆசாரியன் ஒரு மண்பாண்டத்தை கையில் எடுத்து கொள்ளுகின்றான். உன் வாழ்க்கை உலகத்தில் மிகவும் தற்காலிகம் என்பதையும் உன்னுடைய சரீரம் ஒரு நொடியில் உடைந்து போகும் மண்பாண்டத்திற்கு சமமானது என்பதையும் ஆசாரியன் கையில் வைத்து கொண்டு இருக்கும் மண்பாண்டம் காட்டுகின்றது.

மூன்றாவது நிலை மண் பாண்டத்தில் ஆசாரியன் பரிசுத்த ஜலத்தை ஊற்றுகிறான் என்று பார்க்கின்றோம். ஆசரிப்பு கூடாரத்தில் வெண்கல தொட்டி என்பது உண்டு. அந்த வெண்கல தொட்டியில் எப்பொழுதும் ஜலம் இருந்து கொண்டே இருக்கும். ஆசரிப்பு கூடாரத்தில் உள்ள வெண்கல தொட்டியில் இருந்து ஜலத்தை எடுத்து ஆசாரியன் அந்த மண்பாண்டத்தில் ஊற்றுகின்றான். அப்பொழுது அந்த ஜலம் பரிசுத்த ஜலம் என்று அழைக்கப்படுகின்றது. வெறும் மண்பாண்டமான உன்னுடைய சரீரத்தை பரிசுத்தத்துடன் நீ காத்து கொள்ள வேண்டும் என்பதற்கு அது அடையாளமாக மாறுகின்றது.

நான்காவதாக ஆசரிப்பு கூடாரத்தின் முன்பாக உள்ள தரையில் இருந்து ஆசாரியன் கையில் புழுதியை எடுக்கின்றான். எடுத்த புழுதியை ஜலத்திலே கலந்து விடுகின்றான். அந்த நிகழ்ச்சி ஆதியாகம புத்தகம் 3-வது அதிகாரம் 19-வது வசனத்தை ஞாபகப்படுத்துகின்றது. நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய் என்று கர்த்தர் கூறினார். பாவம்

மனிதனை மரண தூளில் போடுகின்றது என்று 22-வது சங்கீதம் 15-வது வசனம் உரைக்கின்றது.

ஸ்திரீயை கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி, அவள் முக்காட்டை நீக்கி, எரிச்சலின் காணிக்கையாகிய நினைப்பூட்டுதலின் காணிக்கையை அவள் உள்ளங்கையிலே வைப்பானாக. சாப காரணமான கசப்பான ஜலம் ஆசாரியன் கையில் இருக்க வேண்டும். (எண். 5:18)

ஆசாரியன் கடந்து செல்லும் 5-வது நிலை ஸ்திரீயை கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி அவள் முக்காட்டை ஆசாரியன் நீக்குகிறான். கர்த்தருடைய சந்நிதியில் முக்காடு நீக்கப்படுவது ஸ்திரீயானவளுக்கு கனவீனம் தரும். ''ஜெபம் பண்ணுகிற போதாவது தீர்க்கதரிசனம் சொல்லுகிற போதாவது தன் தலையை மூடி கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையை கனவீனம் படுத்துகிறாள்'' என்று 1 கொரிந்தியர் 11-வது அதிகாரம் 5-வது வசனம் கூறுகின்றது. பாளயத்திற்கு புறம்பாக அனுப்பப்பட்டவர்கள் தங்கள் தலைகளை மூடி கொள்வது இல்லை என்பதை லேவியராகம புத்தகம் 13:45-வது வசனத்தில் ஏற்கெனவே நாம் பார்த்தோம். கர்த்தருடைய சந்நிதியிலிருந்து பாளயத்திற்கு புறம்பாக அனுப்பப்பட இருக்கும் நிலையை அந்த ஸ்திரியானவள் பெற்று விடுகின்றாள். அவளது கணவன் கொண்டு வந்த எரிச்சலின் காணிக்கை அக்கிரமத்தை நினைப்பூட்டும் காணிக்கை என்ற இரண்டு காணிக்கைகளும் அவளுடைய இரண்டு உள்ளங்கைகளிலும் வைக்கப்படுகின்றது.

லேவியராகமம் 8-வது அதிகாரம் 27-வது வசனத்தில் ஆசாரியன் பிரதிஷ்டை செய்யப்பட்ட பொழுது அவனது உள்ளங்கைகள் நிரப்பப்பட்டதை நாம் அறிந்தோம். ஆசாரியருடைய உள்ளங்கைகள் தேவனுடைய அதிகாரத்தினால் நிரப்பப்பட்டன. அந்த அதிகாரத்தை முன்னிட்டு தூய்மையான பாதையில் செல்லுகின்றவர்களுடைய உள்ளங்கைகளை ஆசாரியன் நன்மையினால் நிரப்புவதற்கும், தவறான பாதையில் செல்கின்றவர்களின் உள்ளங்கைகளை ஆசாரியன் தேவனுடைய நியாயத் தீர்ப்பினால் நிரப்புவதற்கும் உரிமை பெற்று இருக்கின்றான். அந்த தேவ அதிகாரங்கள் ஆசாரியனுக்கு கொடுக்கப்பட்டு இருக்கின்றது என்பதையும் எண்ணாகமம் 5-வது அதிகாரம் 18-வது வசனம் காட்டுகின்றது.

பின்பு ஆசாரியன் அவளை ஆணை இடுவித்து: ஒருவனும் உன்னோடே சயனியாமலும், உன் புருஷனுக்கு உட்பட்டிருக்கிற நீ தீட்டுப்பட தக்கதாய் பிறர் முகம் பாராமலும் இருந்தால், சாப காரணமான இந்த கசப்பான ஜலத்தின் தோஷத்துக்கு நீங்கலாய் இருப்பாய். (எண். 5:19)

ஆசாரியன் கடந்து செல்லும் 7-வது நிலை ஆசாரியன் அவளை பார்த்து திட்டவட்டமான தீர்ப்புகளை கூறும் நிலை என்பது ஆகும். ஆசாரியன் அவளை தேவ சமுகத்தில் நிறுத்தி தீர்ப்புகளை கூறுகின்றான். அவளது கணவனின் சந்தேகம் நியாயம் அற்றதாக இருந்தால் ஆசாரியன் கூறும் எந்த தீர்ப்பும் பலிப்பது இல்லை. கர்த்தர் தடைசெய்து விடுவார். கர்த்தர் நிரபராதிகள் தண்டிக்கப்படுவதற்கு இடம் கொடுப்பதே இல்லை. மேலும் அவளுடைய கணவனின் சந்தேகம் வீணாண சந்தேகமாக இருந்து அதன் பயனாக அவள் இதுவரை அடைந்த இம்சை, நிந்தை அனைத்திற்கும் தக்கதாக கர்த்தர் அவளை மேன்மைப்படுத்தி உயர்த்துவார் என்று 19-வது வசனம் கூறுகின்றது. குடும்பத்திலும் பொது இடத்திலும் அவள் அடைந்த அவமானம், வருத்தம், மனவேதனைகள் அனைத்திற்கும் ஈடாக முன்பிலும் அதிகமாக அவள் ஆசீர்வதிக்கபடுவாள்.

உன் புருஷனுக்கு உட்பட்டிருக்கிற நீ பிறர் முகம் பார்த்து, உன் புருஷனோடே அன்றி அந்நியனோடே சம்யோகமாய் சயனித்து தீட்டு பட்டிருப்பாயானால், கர்த்தர் உன் இடுப்பு சும்பவும், உன் வயிறு வீங்கவும் பண்ணி, உன்னை உன் ஜனங்களுக்குள்ளே சாபமும், ஆணையிடும் குறியுமாக வைப்பாராக. சாப காரணமான இந்த ஜலம் உன் வயிறு வீங்கவும் இடுப்பு சும்பவும் பண்ணும்படி, உன் குடலுக்குள் பிரவேசிக்க கடவது என்கிற சாப வார்த்தையாலே ஸ்திரீயை ஆணை இடுவித்து சொல்வானாக. அதற்கு அந்த ஸ்திரீ ஆமென், ஆமென், என்று சொல்லக்கடவள். (எண். 5:20-22)

ஆனால் அவள் கணவனின் சந்தேகம் உண்மையாக இருக்கும் என்றால் ஆசாரியன் கூறும் தீர்ப்புகள் பூரணமாக பலித்து விடும் என்றும் வசனம் கூறுகின்றது. 20 முதல் 22 வசனங்கள் ஆசாரியன் கூறும் தீர்ப்புகளை விவரிக்கின்றது.

ஆசாரியனுடைய கையில் இருக்கும் மண்பாண்டத்தில் பரிசுத்த ஜலம் ஊற்றப்பட்டது என்று பார்த்தோம். அதனை தொடர்ந்து அதில் புழுதியும் பின்னர் கலக்கப்பட்டது என்றும் பார்த்தோம். அந்த ஜலத்தை சற்று நேரத்தில் அவள் குடிக்க இருக்கின்றாள். அவள் நிரபராதி என்றால் அந்த ஜலம் அவள் குடிக்கும் பொழுது அவளுக்கு பெரும் ஆசீர்வாதமான ஜலமாக மாறும். சுத்தம் உள்ளவர்களுக்கு சகலமும் சுத்தமாகவே இருக்கும் என்று பரிசுத்த பவுல் தீத்து என்பவருக்கு எழுதின நிரூபம் முதல் அதிகாரம் 15-வது வசனத்தில் கூறுகின்றார். அவள் உண்மை தவறி இருந்தால் குடிக்கும் ஜலம் சாபத்திற்கு ஏதுவான ஜலமாக மாறும் என்றும் வசனம் கூறுகின்றது. அதுவும் குடித்தவுடன் அவளது இடுப்பு சும்பிப் போகும். அவளது வயிறு வீங்கி போகும். ஜனங்கள் நடுவில் அவள் ஒரு சாபமாக இருப்பாள் என்று மூன்று தீர்ப்புகள் கொடுக்கப்படுகின்றது.

ஆசாரியன் கூறும் தீர்ப்புகள் முடிந்தவுடன் ஸ்திரீயானவள் ஆமென் ஆமென் என்று இரண்டு முறை கூறுவது ஆசாரியன் கூறும் தீர்ப்புகளை நான் ஏற்று கொள்ளுகின்றேன் என்பதற்கு இசைவாகும். தீர்ப்பு என்பது திணிக்கப்படவில்லை. தவறு என்பதை செய்து இருக்கும் பொழுது ஏற்று கொள்ளப்படுகின்றது என்பதற்கு அது அடையாளமாக இருக்கின்றது. ஆமென் என்றால் அப்படியே ஆகக்கடவது என்று பொருள்படும்.

பின்பு ஆசாரியன் இந்த சாப வார்த்தைகளை ஒரு சீட்டில் எழுதி, அவைகளை கசப்பான ஜலத்தினால் கழுவி போட்டு, சாப காரணமான அந்த கசப்பான ஜலத்தை அவள் குடிக்கும்படி பண்ணுவான்; அப்பொழுது சாப காரணமான அந்த ஜலம் அவளுக்குள் இறங்கி கசப்பாகும். (எண். 5:23-24)

எட்டாவதாக தான் வாயினால் கூறிய அனைத்தையும் ஆசாரியன் ஒரு சீட்டில் எழுதுகின்றான். பின்னர் ஆசாரியன் தன் கையில் உள்ள மண்பாண்டத்தின் ஜலத்தில் சீட்டை எடுத்து நனைத்து கழுவுகின்றான். சாபமான இந்த வார்த்தைகள் பரிசுத்த ஜலத்தில் கலந்து விடட்டும் என்று அவன் முடிவு செய்கின்றான். பரிசுத்த ஜலம் என்பது கசப்பான ஜலமாக மாறி விடுகின்றது.

பின்பு ஆசாரியன் எரிச்சலின் காணிக்கையை அந்த ஸ்திரீயின் கையிலிருந்து வாங்கி, அதை கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டி, பீடத்தின் மேல்

செலுத்தி, ஞாபக குறியாக அதிலே ஒரு கைப்பிடி நிறைய எடுத்து, பீடத்தின் மேல் தகனித்து, பின்பு ஸ்திரீக்கு அந்த ஜலத்தை குடிக்கும்படி கொடுக்கக்கடவன். (எண். 5:25-26)

ஆசாரியன் கடந்து செல்லும் ஒன்பதாவது நிலை அவர்கள் எடுத்து வந்த காணிக்கையை பலிபீடத்தில் தகனிப்பது ஆகும்.

அந்த ஜலத்தை குடிக்க செய்த பின்பு சம்பவிப்பதாவது: அவள் தீட்டு பட்டு, தன் புருஷனுக்கு துரோகம் பண்ணி இருந்தால், சாப காரணமான அந்த ஜலம் அவளுக்குள் பிரவேசித்து கசப்பு உண்டானதினால், அவள் வயிறு வீங்கி, அவள் இடுப்பு சும்பும். இப்படியே அந்த ஸ்திரீ தன் ஜனங்களுக்குள்ளே சாபமாக இருப்பாள். அந்த ஸ்திரீ தீட்டுப்படாமல் சுத்தமாய் இருந்தால், அவள் அதற்கு நீங்கலாகி, கர்ப்பந்தரிக்க தக்கவளாய் இருப்பாள். (எண். 5:27-28)

அதன் பின்னர் 10-வது நிலை இடம் பெறுகின்றது. ஸ்திரீயினிடம் மண்பாண்டத்தின் கசப்பான நீர் கொடுக்கப்படுகின்றது. அவள் குடிக்கின்றாள். கணவனின் சந்தேகம் உண்மை என்றால் அவள் வாதிக்க படுவாள். உண்மை இல்லை என்றால் அவள் ஆசீர்வதிக்கப்படுவாள். குடும்ப வாழ்க்கை என்பது எவ்வளவு முக்கியமானது என்பதை இந்த வசனங்கள் கூறுகின்றன. கர்த்தருடைய சந்நிதானத்தில் குடும்பமாக, சமூகமாக கர்த்தருடைய பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற எதிர் பார்ப்பு கொடுக்கப்பட்டது. அந்த எதிர் பார்ப்பிற்கு இசைவு கொள்ளுகின்றவர்கள் இந்த மூன்று அழைப்பினையும் ஏற்று கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றார்கள்.

ஒரு ஸ்திரீ தன் புருஷனோடேயன்றி அந்நிய புருஷனோடே சேர்ந்து தீட்டு பட்டதினால் உண்டான எரிச்சலுக்கும், புருஷன் மேல் எரிச்சலின் ஆவி வருகிறதினால், அவன் தன் மனைவியின் மேல் அடைந்த சமுசயத்துக்கும் அடுத்த பிரமாணம் இதுவே. அவன் கர்த்தருடைய சந்நிதியில் தன் மனைவியை நிறுத்துவானாக. ஆசாரியன் இந்த பிரமாணத்தின்படி எல்லாம் அவளுக்கு செய்யக்கடவன். புருஷனானவன் அக்கிரமத்துக்கு நீங்கலாயிருப்பான். அப்படிப்பட்ட ஸ்திரீயோ, தன் அக்கிரமத்தை சுமப்பாள் என்று சொல் என்றார். (எண். 5:29-31)

மூன்று அழைப்புகள் அவர்களுக்கு நேராக வருகின்றது. வந்த முதலாவது அழைப்பு அசுத்தமான அனைத்தையும் அப்புறப்படுத்தி வாழுங்கள் என்பது ஆகும். வந்த 2-வது அழைப்பு ஒருவருக்கு ஒருவர் உண்மையுள்ளவர்களாக வாழுங்கள் என்பது ஆகும். கர்த்தரால் கொடுக்கப்பட்ட மூன்றாவது அழைப்பு கணவன் மனைவி நடுவில் எவ்வித சந்தேகமும் ஏற்பட இடம் கொடுக்காதேயுங்கள் என்பதே ஆகும். கசப்பு கலந்த ஜலம் கையில் எடுக்க இடம் கொடுக்க வேண்டாம் என்பதே ஆகும். கர்த்தரை நன்றாக அறிந்தவர்கள் ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்து வாழுவார்கள் என்பதை அது காட்டுகின்றது. கர்த்தர் குடும்பத்தின் தலைவராக மாறும் பொழுது கணவன் மனைவி என்பவர் நடுவில் முழு நம்பிக்கை ஓங்கி கொண்டே இருக்கும் என்பதை அது காட்டுகின்றது.

புதிய ஏற்பாட்டின் காலத்தை நமக்கு உருவாக்கி தந்த நமது இரட்சகராகிய இயேசு கசப்பு கலந்த காடியை இனிமேல் யாருடைய கையிலும் கொடுக்கவே வேண்டாம் என்றும்,

என்னுடைய கையிலே அதை ஏற்று கொள்ளுகிறேன் என்றும் சிலுவையிலே அவர் கசப்பு கலந்த காடியை ஏற்று கொண்டார். தவறு செய்யும் எவரையும் தண்டிக்கவே வேண்டாம் என்று நம் அனைவருடைய தண்டனைகளையும் இயேசு சிலுவையில் ஏற்று கொண்டார். எனவே அன்று ஆசாரியன் அருளிய கசப்பான ஜலம் இன்று அருளப்பட வேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று. ஜீவ தண்ணீரான இயேசு கசப்பான வாழ்வுகளை மதுரமாக மாற்றிவிட வல்லவராக இருக்கின்றார்.

எண்ணாகம புத்தகத்தில் கணவனும் மனைவியும் ஆசாரியனிடம் சென்றார்கள். புதிய ஏற்பாட்டின் காலத்தில் கணவனும் மனைவியும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடம் சென்று முழங்கால் படியிடுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் மன்னித்து மகிழ வேண்டுமென்று பரிசுத்த வேதாகமம் வரவேற்கின்றது. ஒருவர் மீது ஒருவர் பூரண அன்பும், பூரண நம்பிக்கையும் கொண்டு சிறப்புற்று வாழ வேண்டும் என்று ஒவ்வொரு தம்பதிகளையும் பரிசுத்த வேதாகமம் வாழ்த்துகின்றது.

அத்தியாயம் - 6
நசரேயருக்கு கட்டளைகள்

6.1 நசரேய விரதம் என்றால் என்ன?

எண்ணாகமம் 6-வது அதிகாரம் லேவியரல்லாத இஸ்ரவேல் மக்களில் ஒருவர் எடுத்து கொள்ளும் ஒரு விசேஷித்த பொருத்தனையை பற்றி நமக்கு எடுத்து உரைக்கின்றது. பொதுவான பொருத்தனை, சிறப்பான பொருத்தனை என்று பொருத்தனைகள் இரண்டு விதமாக இருப்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். பொதுவான பொருத்தனைகளை பற்றி நாம் ஏற்கெனவே லேவியராகம புத்தகம் 27-வது அதிகாரத்தில் படித்தோம். விசேஷமான ஒரு பொருத்தனையை பற்றி எண்ணாகம புத்தகம் 6-வது அதிகாரம் 1 முதல் 21 வசனங்களில் பார்க்க இருக்கின்றோம்.

> *கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று விரதம் பண்ணி கொண்டவர்களாய் இருக்கும்படி நசரேய விரதமாகிய ஒரு விசேஷித்த பொருத்தனையை பண்ணினால், (எண். 6:1,2)*

நசரேய விரதம் ஒரு விசேஷித்த பொருத்தனை என்று இங்கு பார்க்கிறோம். புருஷனாகிலும், ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று விரதம் பண்ணி கொண்டவர்களாய் இருக்கும் படி நசரேய விரதமாகிய ஒரு விசேஷித்த பொருத்தனையை பண்ணினால் என்று இந்த வசனம் கூறுகின்றது. இந்த விரதம் ஒரு அசாதாரணமான விரதமாக கொடுக்கப்பட்டு உள்ளது.

'நசரேயன்' என்ற பதம் எபிரெய மொழியின் 'நாசிர்' என்ற பதத்தை சார்ந்தது. 'நாசிர்' என்ற பதம் 'பிரித்து எடுக்க படுதல்' என்று பொருள்படும் 'நாசர்' (Nazar) என்ற பதத்தில் இருந்து வந்தது. அது ஒரு தனி விதத்தில் கர்த்தருடைய சேவைக்காக அர்ப்பணித்ததால் உலக பிரகாரமான வேலைகளில் இருந்து பிரித்து எடுக்கபட்ட ஒருவரை குறிக்கிறது.

ஆகவே நசரேய விரதம் என்றால் பிரித்து எடுக்கப்பட்ட விரதம் என்று பொருள் ஆகும். மற்ற அனைத்து பொருத்தனைகளையும் விட நசரேய விரதம் என்பது முற்றிலும் பிரித்து எடுக்கப்பட்ட விரதமாக காணப்படுகின்றது. நசரேய விரதம் என்பது 2 அல்லது 3 நபர்கள் சேர்ந்து செய்யும் ஓர் விரதம் அல்ல. தனித்தனியாக செய்யும் விரதம் ஆகும். ஆண்கள் மட்டும் செய்யும் விரதமும் அல்ல. நசரேய விரதம் என்பதை ஆண்களும் செய்யலாம், பெண்களும் செய்யலாம் என்று வசனம் கூறுகின்றது. நசரேய விரதம் என்பது பிறருக்காக செய்யப்படும் விரதமும் அல்ல. அது தனது சொந்த நலனுக்காக, தனித்தனியாக செய்யப்படும் விரதமாக தெரிகின்றது. மனுஷனுக்கு என்று அல்ல. கர்த்தருக்கு என்று செய்யப்படும் விரதமாக காணப்படுகின்றது. நசரேய விரதம் என்பது கர்த்தருடன் ஒரு சாதாரண ஐக்கியம் அல்ல, கர்த்தருடன் ஒரு அசாதாரண ஐக்கியத்தை தேடி, தனி நபர் செய்ய முற்படும் விரதம் என்பது ஆகும். தனக்கு மிகவும் அவசியப்படும் ஒரு நன்மையை கர்த்தரிடம் பெற்று கொள்வதற்காக

நசரேய விரதம் செய்யப்பட்டது. மேலும் பெற்ற நன்மைக்கு கர்த்தருக்கு நன்றி தெரிவிக்கவும் நசரேய விரதம் மேற்கொள்ளப்பட்டது.

நசரேய விரதம் என்பதை ஒருவர் வலிய செய்ய வேண்டும். எவரும் வற்புறுத்தி அல்ல. தானாக மனம் உவந்து நசரேய விரதத்தை மேற்கொள்ள வேண்டும். நசரேய விரதம் செய்வதற்கு முன்வந்த பின்னர் எவரும் பின் வாங்கவும் முடியாது. அதனை முடித்தே தீர வேண்டும் என்று எண்ணாகமம் 6-வது அதிகாரம் கூறுகின்றது. ஒரு குறிப்பிட்ட மாதங்கள், வருடங்கள் என்று குறித்து நசரேய விரதம் மேற்கொள்ளப்பட்டது என்பதை எண்ணாகமம் 6-வது அதிகாரம் 13- வது வசனத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். அவன் விரதம் காக்கும் நாட்கள் நிறைவேறின அன்றே என்று அந்த வசனம் கூறுகின்றது. ஆயினும் தற்காலிகமாக மட்டுமல்ல நிரந்தரமாகவும், ஒரு மாதம் ஒரு வருடம் என்று மட்டுமல்ல, தங்கள் வாழ்நாள் முழுவதுமாக நசரேய விரதம் அநேகரால் மேற்கொள்ள பட்டும் உள்ளது என்பதை பரிசுத்த வேதம் தெரிவிக்கின்றது. நசரேய விரதம் மேற்கொண்டவர்கள் எந்த அளவிற்கு உண்மையாகவும், முழுமையாகவும் அதனை காத்து கொள்ளுகின்றார்களோ அந்த அளவிற்கு அவர்களுடைய இருதயத்தின் வாஞ்சைகள் கர்த்தரால் நிறைவேற்றப்பட்டது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். நசரேய விரதம் மூன்று விதங்களில் முழுமையாகவும் உண்மையாகவும் காக்கப்பட வேண்டும் என்று 6-வது அதிகாரத்தில் நாம் பார்க்கிறோம்.

6.2 முதலாம் நிபந்தனை: நசரேயர் திராட்ச ரசம் அருந்தலாகாது

அப்படிப்பட்டவன் திராட்ச ரசத்தையும், மதுபானத்தையும் விலக்க கடவன்; அவன் திராட்ச ரசத்தின் காடியையும் மற்ற மதுபானத்தின் காடியையும், திராட்ச ரசத்தினால் செய்த எவ்விதமான பானத்தையும் குடியாமலும், திராட்ச பழங்களையாவது திராட்ச வற்றல்களையாவது புசியாமலும், தான் நசரேயனாய் இருக்கும் நாளெல்லாம் திராட்ச செடி விதை முதல் தோல் வரையில் உள்ளவைகளினால் செய்யப்பட்ட யாதொன்றையும் புசியாமலும் இருக்கக்கடவன். (எண். 6:3-4)

முதலாவதாக இந்த விரதத்தை மேற்கொள்ளுகின்றவர்கள் தங்கள் உணவில் கவனமாக இருக்க வேண்டும், கருத்தாக இருக்க வேண்டும் என்று பார்க்கிறோம். நசரேய விரதத்தை மேற்கொள்ளுகின்றவன் தனது மாம்சீக உணர்ச்சிகளை பாதிக்கும் அல்லது தூண்டி விடும் எவ்வித உணவையும் உட்கொள்ள முடியாது என்று வசனம் கூறுகின்றது. அவனது சிந்தனை சக்தியை சிதறடிக்கும், அல்லது கூர்மை இழக்க செய்யும் எவ்வித பானங்களையும் அவன் குடிக்க முடியாது. பாவம் எது என்றும் பரிசுத்தம் எது என்றும் தெளிவாக அறிந்து கொள்வதற்கு தூய்மையும் கூர்மையுமான சிந்தனை தேவைப்படுகின்றது.

அவனது சிந்தனைகளை சிதற செய்யும், எண்ணத்தை கலங்கடிக்கும் எதையும் அவன் உணவாக உட்கொள்ள முடியாது. அவனுடைய பார்வை தூய்மையாகவும், நேர்மையாகவும் இருக்க தடையாக அமையும் எந்த உணவையும் உட்கொள்ள முடியாது. அவனுடைய வாயின் வார்த்தைகளில் தடுமாற்றம், பதட்டம், முரண்பாடு உருவாக்கும் எந்த உணவையும் அவன் ஏற்க முடியாது. போதை வஸ்துக்கள் எதையும் அவன் ருசிக்க முடியாது. மதிமயங்கியவன் பிரித்து எடுக்கப்பட்டவன் அல்ல. அப்படிபட்டவனது நல் விருப்பங்கள் கர்த்தரால் அங்கீகரிக்கப்படவும் மாட்டாது என்று 2, 3 ஆகிய வசனங்களில் இருந்து நாம் அறிந்து

கொள்ளலாம். திராட்ச ரசம் குடிப்பது ராஜாக்களுக்கு தகுதி அல்ல. மதுபானம் பண்ணினால் அவர்கள் நியாயப் பிரமாணத்தை மறந்து நியாயத்தை புரட்டுவார்கள் என்று நீதிமொழிகளின் புத்தகம் 31-வது அதிகாரம் 4,5 வசனங்கள் கூறுகின்றன.

நசரேய விரதத்தை செய்கின்ற ஒருவனின் இருதயம் உறைந்த மழையை பார்க்கிலும் சுத்தமாகவும், பாலை பார்க்கிலும் வெண்மையாகவும் இருக்க வேண்டும் என்று ஏரேமியா தீர்க்கதரிசியின் புலம்பல் புத்தகம் 4-வது அதிகாரம் 7-வது வசனம் எடுத்து கூறுகின்றது. உண்ணும் உணவிலும் உட்கொள்ளும் பானத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது முதலாவது நிபந்தனையாக நசரேய விரதம் ஏற்று கொள்பவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

6.3 இரண்டாம் நிபந்தனை: நசரேயர் தலைமயிரை கத்தரிக்கலாகாது

அவன் நசரேய விரதம் காக்கும் நாளெல்லாம் சவரகன் கத்தி அவன் தலையின் மேல் படலாகாது, அவன் கர்த்தருக்கென்று விரதம் காக்கும் காலம் நிறைவேறுமளவும் பரிசுத்தமாயிருந்து, தன் தலை மயிரை வளரவிடக்கடவன். (எண். 6:5)

இரண்டாவதாக நசரேய விரதம் மேற்கொள்ளுகின்றவர்கள் தலை முடியை கத்தரிக்க முடியாது என்று பார்க்கின்றோம். நியாயாதிபதிகளின் புத்தகத்தில் கர்த்தரால் தெரிந்து எடுக்கப்பட்ட சிம்சோன் என்பவன் வாழ்நாள் முழுவதும் ஓர் நசரேயனாக வாழ்வற்கு கர்த்தரால் அழைப்பு பெற்றான். சிம்சோனின் தலைமுடி வெட்டப்பட முடியாது என்று கட்டளை பிறந்தது. நியாயாதிபதிகளின் புத்தகம் 13-ம் அதிகாரம் 5-வது வசனம் ''அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படலாகாது. அந்த பிள்ளை பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனாய் இருப்பான்'' என்று கூறுகின்றது. ஆனால் அவ்வித சிறப்பான நசரேய விரதத்தை சிம்சோன் காத்து கொள்ளவில்லை. அவனது முடி வெட்ட பட்டதை நியாயாதிபதிகளின் புத்தகம் 16:17-18 வசனங்களில் பார்க்கிறோம். அதனை தொடர்ந்து அவன் எடுத்த நசரேய விரதம் கலைந்தது. அவன் பெலன் அவனை விட்டு நீங்கியது என்றும் வேத வசனம் கூறுகின்றது. ''உன் தலைமயிரை சிரைத்து எறிந்து விட்டு உயர்ந்த ஸ்தலங்களில் புலம்பி கொண்டு இரு'' என்று எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் 7-வது அதிகாரம் 29-வது வசனம் கூறுவது போன்று சிம்சோனின் தலைமுடி வெட்டப்பட்ட பின்னர் புலம்பி கொண்டே இருப்பதே அவனது வாழ்நாள் முழுவதும் அவன் பங்கு ஆயிற்று என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

நசரேய விரதம் செய்தவர்கள் அதற்கு ஏற்ற முறையில் நடந்து கொள்ளாவிட்டால் புலம்பலும் தவிப்பும் வாழ்வின் பங்காக மாறி விடுகின்றது என்பதை தெரிந்து கொள்ளுகின்றோம். நசரேய விரதம் என்பது உயர்ந்த இடங்களுக்கு உரியவர்களுடைய விரதம் என்று அறிகின்றோம். அப்படிப்பட்டவர்கள் பெரியவர்களாக கருத பட்டார்கள். பரிசுத்த லூக்கா என்பவர் எழுதின சுவிசேஷம் முதல் அதிகாரம் 15-வது வசனம், ''அவன் கர்த்தருக்கு முன்பாக பெரியவனாக இருப்பான் திராட்ச ரசமும் மதுவும் குடியான். தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பபட்டு இருப்பான்'' என்று யோவான் ஸ்நானகனை பற்றி கூறப்பட்டு உள்ளது.

6.4 மூன்றாம் நிபந்தனை: நசரேயர் பிரேதங்களை தொட கூடாது

அவன் கர்த்தருக்கென்று விரதம் காக்கும் நாளெல்லாம் யாதொரு பிரேதத்தண்டையில் போக கூடாது. அவன் தன் தேவனுக்கென்று செய்த நசரேய விரதம் அவன் தலை மேல் இருக்கிறபடியால், மரணமடைந்த தன் தகப்பனாலாகிலும் தாயினாலாகிலும் சகோதரனாலாகிலும் சகோதரியினாலாகிலும் தன்னை தீட்டு படுத்தலாகாது. அவன் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம் கர்த்தருக்கு பரிசுத்தமாய் இருப்பான். (எண். 6-8)

மூன்றாவதாக நசரேய விரதம் மேற்கொள்ளுகின்றவர்கள் தங்களது தொடர்பில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று எண்ணாகமம் 6-வது அதிகாரம் 6 முதல் 12 வசனங்களில் பார்க்கின்றோம். அவர்கள் மரித்து போன சரீரங்களை தொடக்கூடாது. நசரேய விரதம் செய்தவன் தன் தாய் தகப்பனின் சடலங்களை கூட தொட முடியாது. இவ்விதமான கடினமான ஒரு நிபந்தனை பிரதான ஆசாரியன் பட்டத்திற்கு வருகின்றவனுக்கு மட்டுமே முன்பு கொடுக்க பட்டது. இதனை லேவியராகம புத்தகம் 21-வது அதிகாரம் 11,12 ஆகிய வசனங்களில் நாம் பார்த்தோம். தெரியாமல் தொட்டு விட்டால் நசரேய விரதமே குலைந்து போய் விடுகின்றது. அடுத்த 7 நாட்களும் அவன் தீட்டு பட்டவனாக இருக்கின்றான் என்பதையும் நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

அவனண்டையிலே ஒருவன் சடுதியில் மரணமடைந்ததினால், நசரேய விரதமுள்ள அவனுடைய தலை தீட்டு பட்டதேயாகில், அவன் தன் சுத்திகரிப்பின் நாளாகிய ஏழாம் நாளில் தன் தலை மயிரை சிரைத்து கொண்டு, எட்டாம் நாளில் இரண்டு காட்டு புறாக்களையாவது இரண்டு புறா குஞ்சுகளையாவது ஆசரிப்பு கூடாரவாசலில் ஆசாரியனிடத்தில் கொண்டு வரக்கடவன். அப்பொழுது ஆசாரியன் ஒன்றை பாவ நிவாரண பலியாகவும், மற்றொன்றை சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தி, பிணத்தினால் அவனுக்கு உண்டான தீட்டை நிவிர்த்தி செய்து, அவன் தலையை அந்நாளில் பரிசுத்தப்படுத்துவானாக. அவன் திரும்பவும் தன் விரத நாட்களை கர்த்தருக்கென்று காத்து, ஒரு வருஷத்து ஆட்டுக்குட்டியை குற்றநிவாரண பலியாக கொண்டு வரக்கடவன். அவனுடைய நசரேய விரதம் தீட்டு பட்டதினால் சென்ற நாட்கள் விருதாவாகும். (எண். 6:9-12)

நசரேய விரதத்தை மேற்கொள்ளுகின்றவர்கள் ஒருவனது சடுதி மரணத்தினால் தீட்டு படும் பொழுது பின் வாங்கி போனவர்களாக கருதப்படுகின்றார்கள். அவனது தீட்டு தெரிந்து, வேண்டும் என்று செய்த ஒரு தீட்டாக இல்லாததினால், அவனுக்கு நிவாரணம் செய்து கொள்ளவும் ஒரு வழி திறக்க படுகிறது. அவ்விதமான தீட்டு பட்டவர்கள் 7 நாட்கள் சென்ற பின்னர் தலை முடியை முற்றிலுமாக அகற்றி விட்டு இன்னும் ஒரு முறை வளர செய்ய வேண்டியது அவசியப்படுகின்றது. ஆசரிப்பு கூடாரம் வந்து அதற்கு ஏற்ற பலிகளை அவன் செலுத்த வேண்டும். கர்த்தருடன் மறுபடியும் ஒப்புரவு ஆக வேண்டும். பின்னர் மறுபடியும் ஒரு முறை முற்றிலும் புதிதாக அவன் நசரேய விரதத்தை துவங்க வேண்டும் என்பது அந்த வசனங்களில் இருந்து அறிய படுகின்றது. நசரேய விரதத்தை துவங்கியவன் தனது

அஜாக்கிரதையினால் அசுத்தமானதை தொட்டு விட்டான். எனவே அவன் அதுவரை கடந்து வந்த நசரேய விரத நாட்கள் விருதாவாக போய் விட்டது என்று 12-வது வசனம் கூறுகின்றது.

ஒவ்வொரு பின் வாங்குதலும் இதுவரை அவன் எடுத்த முயற்சிகளை, இது வரை அவன் பெற்ற உயர்வுகளை இழக்க செய்கின்றது. மேலான ஒரு நிலையை அடைவதற்கு கால தாமதம் ஏற்படுகின்றது.

6.5 நசரேய விரதம் பூரணம் பெற்றதும் செலுத்த வேண்டிய பலிகள்

உட்கொள்ளும் உணவில் ஏற்ற கவனம், சரீரத்தை தூய்மையாக காத்து கொள்வதில் ஏற்ற கவனம், தனது தொடர்புகளில் ஏற்ற கவனம் என்று மூன்று முக்கிய கவனத்துடன் நசரேய விரதம் மேற்கொள்ளுகிறவர்கள் வாழ வேண்டும். அவர்களது விரத நாட்கள் முடிந்த பின்னர் ஏற்ற பாவநிவிர்த்தி பலிகளை அவர்கள் செலுத்த வேண்டும் என்று 6-வது அதிகாரம் 13 முதல் 21 வசனங்கள் விளக்குகின்றது. மிகவும் கடினமாக பிரயாசப்பட்டு அதிக கட்டுபாடுகளுடன் அவன் மேற்கொண்ட நசரேய விரதம் முடிந்த உடன் பாவ நிவிர்த்தி செய்யும் பலிகளை அவன் செலுத்த வேண்டும் என்று எதிர் பார்க்கப்பட்டது. நசரேய விரதம் என்பது பாவ மன்னிப்பு தருவது இல்லை என்பதை அதில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். எந்த கிரியை செய்தாலும் கர்த்தரின் நீதி கிட்டுவது இல்லை என்பதை புரிந்து கொள்ளுகின்றோம். பாவ மன்னிப்பு என்பது மனித முயற்சிகளுக்கு அப்பால் பட்டது என்பதை தெரிந்து கொள்ளுகின்றோம்.

> *நசரேயனுக்குரிய பிரமாணமாவது: அவன் விரதம் காக்கும் நாட்கள் நிறைவேறின அன்றே, அவன் ஆசரிப்பு கூடாரவாசலிலே வந்து, சர்வாங்க தகனபலியாக ஒரு வருஷத்து பழுதற்ற ஒரு ஆட்டு குட்டியையும், பாவநிவாரணபலியாக ஒரு வருஷத்து பழுதற்ற ஒரு பெண்ணாட்டு குட்டியையும், சமாதானபலியாக பழுதற்ற ஒரு ஆட்டு கடாவையும், ஒரு கூடையில் எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களையும், எண்ணெய் தடவப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும், அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் கர்த்தருக்கு தன் காணிக்கையாக செலுத்தக்கடவன். அவைகளை ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, அவனுடைய பாவநிவாரண பலியையும் அவனுடைய சர்வாங்க தகனபலியையும் செலுத்தி, ஆட்டுக் கடாவை கூடையிலிருக்கும் புளிப்பில்லாத அப்பங்களோடுங்கூட கர்த்தருக்கு சமாதான பலியாக செலுத்தி, அவனுடைய போஜனபலியையும் பானபலியையும் படைப்பானாக. (எண். 6:13-17)*

நசரேய விரதம் செய்தவன் ஏராளமான பலிகளை செலுத்துகின்றான். லேவியராகம புத்தகத்தில் ஐந்து பிரதான பலிகள் கூறப்பட்டது. அதில் குற்ற நிவாரணபலி தவிர மற்ற நான்கு பலிகளாக தகனபலி, போஜனபலி, சமாதான பலி, பாவநிவாரணபலி என்ற அனைத்து பலிகளையும் நசரேய விரதம் முடித்தவுடன் அவன் செலுத்த வேண்டும். அவன் உட்கொள்ளும் உணவில் மிகவும் கவனமாக இருந்தான். அவனுடைய தலைமுடியை கத்தரிக்கவே இல்லை. எவ்வித அசுத்ததையும் அகற்றி வாழ்ந்தான். ஆனாலும் அவைகள்

எதுவும் அவனது பாவத்தை மன்னிக்க வழி செய்யவில்லை. அவனது ஆத்தும தேவைகளுக்கு முடிவு கொடுக்கவில்லை. இருதயத்தின் இருளை அகற்றவில்லை. காரணம் பாவம் என்பது இதயத்திலிருந்து புறப்படுகின்றது.

நசரேய விரதம் மேற்கொண்டவனோ அவன் எடுத்த மூன்று பிரயாசங்களிலும் இருதயத்திற்கு உள்ளாக இருந்து எதுவுமே செய்யவில்லை. நசரேய விரதம் மேற்கொண்ட அவன் எடுத்த அனைத்து பிரயாசங்களும் புறம்பான பிரயாசங்களாகவே தெரிந்தது. உள்ளத்தின் அலங்கோலங்களை புற அலங்காரங்கள் சீர் செய்ய முடியாது என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளுகின்றோம்.

எனவே உள்ளம் பாவமற கழுவப்படுவதற்கு ரத்தம் சிந்தப்பட வேண்டியதாக மாறிவிட்டது. அவன் நசரேய விரதம் செய்யும் பொழுது பெரும் பக்திமான் போல தெரிந்தாலும் உள்ளத்தில் படுபாவியாகவே வாழ்ந்தான் என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

பற்பல பலிகள் செலுத்தி பாவ மன்னிப்பு தேடுகின்றான். காரணம் ரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு என்பது கிடைப்பது இல்லை. பாவ மன்னிப்பு என்பது மனித பிரயாசங்களுக்கும் அப்பால் பட்டது என்பதையும், தேவ கிருபைக்கு உட்பட்டது என்பதையும் எண்ணாகமம் 6-வது அதிகாரம் 1 முதல் 21 வசனங்கள் எடுத்து இயம்புகின்றன. பாவ மன்னிப்பு மனிதனால் உண்டானது அல்ல. தேவனுடைய ஈவு என்பதே பரிசுத்த வேதம் கூறுவது ஆகும். இது கிரியைகளினால் உண்டானது அல்ல. கிருபையாக கிடைக்க பெறுவது என்று பரிசுத்த வேதம் கூறுகின்றது. அந்த கிருபையை பெற்றவர்களுக்கு முப்பெரும் ஆசீர்வாதங்கள் எண்ணாகமம் 6-வது அதிகாரம் 22 முதல் 27 வசனங்களில் கூறப்படுகின்றன.

> *அப்பொழுது நசரேயன் ஆசரிப்பு கூடாரவாசலிலே, பொருத்தனை செய்யப்பட்ட தன் தலையை சிரைத்து, பொருத்தனை செய்யப்பட்ட தன் தலைமயிரை எடுத்து, சமாதானபலியின் கீழ் எரிகிற அக்கினியில் போடக்கடவன். நசரேயன் பொருத்தனை செய்யப்பட்ட தன் தலைமயிரை சிரைத்து கொண்ட பின்பு, ஆசாரியன் ஆட்டு கடாவினுடைய வேவிக்கப்பட்ட ஒரு முன்னம் தொடையையும், கூடையில் இருக்கிறவைகளிலே புளிப்பில்லாத ஒரு அதிரசத்தையும் புளிப்பில்லாத ஒரு அடையையும் எடுத்து, அவனுடைய உள்ளங்கைகளில் வைத்து, அவைகளை கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்ட கடவன்; அது அசைவாட்டப்பட்ட மார்க்கண்டத்தோடும், ஏறெடுத்து படைக்க பட்ட முன்னம் தொடையோடும், ஆசாரியனை சேரும், அது பரிசுத்தமானது. பின்பு நசரேயன் திராட்சரசம் குடிக்கலாம். பொருத்தனைபண்ணின நசரேயனுக்கும், அவன் தன் கைக்கு உதவுகிறதை அல்லாமல், தன் நசரேய விரதத்தின் நிமித்தம் கர்த்தருக்கு செலுத்தும் காணிக்கைக்கும் அடுத்த பிரமாணம் இதுவே. அவன் செய்த பொருத்தனையின்படியே தன் பொருத்தனையின் பிரமாணத்துக்கு ஏற்க செய்து தீரவேண்டும் என்று சொல் என்றார். (எண். 6:18-21)*

நசரேயனது கர்த்தருக்காக பிரித்தெடுக்கப்படும் அழைப்பு அவனது தலையின் மேல் உள்ளது. வளர்க்கப்பட்ட அவனது மயிரே அதற்கு ஒரு சின்னமாக உள்ளது. குறிப்பிட்ட காலத்திற்கு உரிய நசரேய விரதம் ஒரு நசரேயன் எந்த இடத்தில் இருக்கும் போது நிறைவேறினாலும் அந்த இடத்தில் அவன் தன் தலை மயிரை எடுக்கலாம். ஆனால் அந்த மயிரை அவன் ஏற்ற காலத்தில் கர்த்தரின் சந்நிதியில் கொண்டு வர வேண்டும். நசரேயன், நசரேய விரத காலங்களில் கர்த்தருக்கு சமர்ப்பிக்க பட்ட ஒரு பரிசுத்த பலியாகிறான். அவனது மாமிசம் பலி செலுத்தப்பட முடியாததாகையால் தனது மயிரை பலியாக செலுத்த வேண்டும் என்று கட்டளை பெறுகிறான். இந்த சடங்கு இன்னும் பூமியில் இருப்பதை பல சமுதாயங்களில் நாம் காண்கின்றோம். அப்போஸ்தலர் 19:23-26 வசனங்களில் பவுல் அப்போஸ்தலன் தான் நியாய பிரமாணத்தை கடை பிடிப்பவன் என்பதை காட்ட, நசரேய விரதம் எடுத்திருந்த நாலு பேரை கூட்டி கொண்டு தேவாலயத்திற்குள் சென்று, அவர்களோடு தானும் சுத்திகரிப்பு செய்து கொண்டு அவர்கள் தலைச்சவரம் பண்ணும் செலவை கொடுத்தான் என்று பார்க்கிறோம்.

அத்தியாயம் - 7
ஆசீர்வாதங்களை அள்ளி கொடுக்கும் கர்த்தர்

7.1 ஆசாரியன் கொடுக்க வேண்டிய முப்பெரும் ஆசீர்வாதங்கள்

தங்கள் வாழ்வை கர்த்தருக்காக அர்ப்பணித்தவர்களின் சுத்திகரிப்பும், அதற்கு அடையாளமாக அவர்கள் கொடுக்கும் பலிகளும் ஒரு பெரிய ஆசீர்வாதத்திற்கு நேராக எடுத்து செல்லுகின்றது. ஆசீர்வாதம் என்பது மனிதனால் வருவது அல்ல. கர்த்தரால் மட்டும் கிடைக்க பெறுவது என்பதை 23-வது வசனத்தில் காண்கிறோம்.

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால்: நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும் போது, அவர்களை பார்த்து சொல்ல வேண்டியதாவது: (எண். 6:22-23)

மனித வாழ்வில் ஒவ்வொரு மனிதனும் காண விரும்பும் வசனங்கள் இந்த வசனங்கள் ஆகும். சொல்ல முடியாத ஆசீர்வாதங்களை அள்ளித் தூவும் வசனங்களாக இந்த வசனங்கள் காணப்படுகின்றன. கர்த்தர் மோசேயை நோக்கி கூப்பிட்டார் என்பதை 22-வது வசனத்திலிருந்து அறிந்து கொள்ளுகின்றோம். எதற்காக கர்த்தர் மோசேயை கூப்பிடுகின்றார்? தம்மை உத்தமத்துடன் பின்பற்றும் தமது ஜனங்களை எவ்வாறு ஆசீர்வதிக்க வேண்டுமென்று பிரதான ஆசாரியனுக்கும் மற்ற ஆசாரியர்களுக்கும் கற்று கொடுப்பதற்காக கர்த்தர் கூப்பிடுகின்றார்.

''நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது'' என்று பரிசுத்த யாக்கோபு தன்னுடைய நிரூபத்தில் 1:17-வது வசனத்தில் கூறுகின்றார். பார்க்க இருக்கும் ஆசீர்வாதங்கள் மனிதனிடம் இருந்து அல்ல. கர்த்தரிடமிருந்து வரும் ஆசீர்வாதங்களே ஆகும். மனித வார்த்தைகள் அல்ல, கர்த்தரின் வார்த்தைகளே அந்த ஆசீர்வாதங்களை அறிவிக்கின்றன. கர்த்தர் காட்டும் பாதையில் உத்தமத்துடன் செல்லும் மக்களுக்கு கர்த்தர் தமது ஆசீர்வாதங்களை வாரி வழங்குகின்றார்.

கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னை காக்க கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்க பண்ணி, உன்மேல் கிருபையாய் இருக்க கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்கு சமாதானம் கட்டளை இடக்கடவர் என்பதே. (எண். 6:24-26)

24, 25, 26 ஆகிய மூன்று வசனங்களும் கர்த்தர் என்று துவங்குகின்றன. கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து உன்னை காக்க கடவர் என்று 24-வது வசனம் கூறுகின்றது. கர்த்தர் தமது முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி உன் மேல் கிருபையாய் இருக்கக் கடவர் என்று 25-வது வசனம் கூறுகின்றது. கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கி உனக்கு சமாதானம் கட்டளையிடக்கடவர் என்று 26-வது வசனம் கூறுகின்றது. கர்த்தர் என்று மூன்று வசனங்களும் துவங்கியது. அது பிதாவாகிய கர்த்தர், குமாரனாகிய கர்த்தர், பரிசுத்த ஆவியானவராகிய கர்த்தர் என்ற திரியேக தேவனை குறிக்கிறது.

கர்த்தர் என்பது முதலில் யாவே என்று அழைக்கப்பட்ட யேகோவாவை குறிக்கின்றது. கொடுக்கப்படும் ஆசீர்வாதங்கள் அனைத்தும் வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள் ஆகும். குமாரனாகிய கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள் ஆகும். பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிற பரிசுத்த ஆவியானவராகிய கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள் ஆகும்.

கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து உன்னை காக்க கடவர் என்று 24-வது வசனம் கூறுகின்றது. பிதாவாகிய கர்த்தரின் ஆசீர்வாதம் உன்னை என்று உனக்கு நேராக வருகின்றது. என்னை உத்தமமும், உண்மையுமாக பின்பற்றும் உன்னை ஆசீர்வதிப்பேன், காப்பாற்றுவேன் என்று கர்த்தர் கூறுகின்றார். அனைவரையும் அல்ல, அவருக்கு பயந்து நடக்கிறவர்களை பேர் பேராக நபர் நபராக கர்த்தர் ஆசீர்வதிக்கின்றார்.

வானத்தையும் பூமியையும் படைத்து ஆளும் சர்வ வல்லவராகிய கர்த்தரின் பாதுகாப்பு என்பது சாதாரணமான ஒன்று அல்ல. அது உலகம் தர கூடிய எல்லா விதமான பாதுகாப்புகளையும் விட மேலான, நிச்சயமான ஒன்றாகும். உன்னை என்ற இடத்தில் கர்த்தரை விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் தங்கள் பெயர்களை இடுவதற்கு வழி இருக்கிறது, வாய்ப்பு இருக்கிறது என்று கூறுகின்றார்.

கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து உன்னை காக்க கடவர் என்று கூறுகின்றார். தம்மை விசுவாசிக்கின்றவர்களை கர்த்தர் ஐந்து முறைகளில் காக்க விரும்புகிறார்.

முதலாவதாக மனிதனை நாசம் செய்யும் பிசாசின் உபத்திரவங்களில் இருந்தும் பிசாசின் உபாயங்களில் இருந்தும் கர்த்தர் தமது பிள்ளைகளை காத்து கொள்வதற்கு முன் வருகின்றார். எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித் திரிகின்றான். அவனது உபாய வலைகளில் கர்த்தருடைய பிள்ளைகளின் கால்கள் சென்று விடாதபடிக்கு கர்த்தர் காத்து கொள்கின்றார்.

இரண்டாவதாக பாவத்தை கசந்து வாழும் தம் மக்களுக்கு பாவ அழைப்புகள் மறுபடியும் வரும் பொழுது சோதனைகளில் தடுமாறி விழுந்து விடாதபடிக்கு கர்த்தர் காத்து கொள்ளுவதற்கு முன் வருகின்றார். திராணிக்கு மேல் சோதனை வந்து விடாதபடிக்கு கர்த்தர் காத்து கொள்வார். வழுவாதபடிக்கு கர்த்தர் காத்து கொள்வார்.

மூன்றாவதாக விசுவாசம் நம்பிக்கை என்பதை அடிப்படையாக கொண்ட ஜீவியத்திற்கு எதிராக வரப்போகும் போராட்டங்கள், உபத்திரவங்கள், ஏமாற்றங்கள் அனைத்தின் நடுவிலும் கர்த்தரை விசுவாசிக்கிற பிள்ளைகள் பின்வாங்கி போகாமல் கர்த்தர் அவர்களை காத்து கொள்ளுவதற்கு முன் வருகின்றார். நாம் அநேக உபத்திவங்களின் வழியாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று கர்த்தர் ஆற்றி தேற்றி காத்து கொள்ளுகின்றார். சோர்ந்து போகிறவனுக்கு கர்த்தர் பெலன் கொடுத்து, சத்துவம் இல்லாதவனுக்கு கர்த்தர் சத்துவத்தை பெருக செய்வதற்கு முன் வருகிறார்.

நான்காவது தம்மை விசுவாசிக்கிறவர்களின் வாழ்வில் எந்தவித பற்றா குறைகளும் வந்து விடாதபடி கர்த்தர் காத்து கொள்ளுவதற்கு முன் வருகின்றார், அவர்களது முயற்சிகளில், தொழில்களில், வியாபாரங்களில், வயல்களில் எவ்வித நஷ்டங்களும் நாசமோசங்களும் வந்து விடாதபடிக்கு அவர்களை கர்த்தர் காத்து கொள்வதற்கு முன் வருகிறார்.

ஐந்தாவதாக பூமியில் ஏற்படும் பஞ்சங்களுக்கும், சேதங்களுக்கும், அழிவுகளுக்கும் தம்மை நம்புகிற பிள்ளைகளை விலக்கி காத்து கொள்வதற்கு கர்த்தர் முன் வருகின்றார். அவர்களுடைய வயல்களும் மிருக ஜீவன்களும் பாதிக்கப்பட்டு போகாதபடிக்கு கர்த்தர் காத்து கொள்ளுகின்றார். தம்மை உத்தமமாக நம்பும் ஒவ்வொருவரையும் கர்த்தர் கண்மணியைப் போல காத்து கொள்ளுகின்றார். தேவனுடைய சர்வ ஆயுத வர்க்கத்தை அணிவித்து காத்து கொள்ளுகின்றார். கர்த்தர் உன்னை எல்லா தீங்கிற்கும் விலக்கி காப்பார். கர்த்தர் உன் ஆத்துமாவை காப்பார். கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இது முதற்கொண்டு என்றைக்கும் காப்பார். இம்மட்டும் உன்னை காத்தவர் தொடர்ந்து உன்னை காப்பாற்றுவார். தொடர்ந்து உன்னை ஆதரிப்பார். இவைகளே பிதாவாகிய கர்த்தரின் ஆசீர்வாதம் என்பதை எண்ணாகம புத்தகம் 6-வது அதிகாரம் 24-வது வசனம் பறைசாற்றுகின்றது.

ஆசாரியன் கர்த்தர் சமுகத்தில் தாழ்மையோடு வந்து நிற்பவர்களுக்கு கொடுக்க வேண்டிய இரண்டாம் ஆசீர்வாதம்: கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரகாசிக்க பண்ணி உன்மேல் கிருபையாய் இருக்க கடவர் என்பதாகும். நேற்றும், இன்றும், என்றும் மாறாத குமாரனாகிய கர்த்தர் தரும் அனைத்து ஆசீர்வாதங்களையும் முன் கூட்டியே 25-வது வசனம் கூறுகின்றது. ஆசீர்வாதங்களை அள்ளி கொடுக்கும் கர்த்தர் வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தர் மட்டுமல்ல. பின் ஒரு நாள் வானத்திற்கும் பூமிக்கும் நடுவாக சிலுவையில் தொங்கிய கர்த்தரும் ஆவார். இருளில் இருக்கிறவர்களுக்கு பிரகாசம் அருள, பாவத்தில் இருக்கிறவர்களுக்கு பரிசுத்தம் அருள, பரத்தில் இருந்து வந்த ஜோதியாகிய கர்த்தரின் பிரகாசம் உன்னை பிரகாசிக்க செய்யும். உன் குடும்பத்தை பிரகாசிக்க செய்யும். பிரகாசிக்கப்பண்ணி என்று 25-வது வசனத்தில் வரும் எபிரெய வார்த்தையின் சரியான பொருள் கர்த்தர் மலர்ந்த முகத்துடன் உன்னை பார்ப்பாராக. கர்த்தர் மலர்ந்த முகத்துடன் உன் குடும்பத்தை பார்ப்பாராக என்பதே ஆகும். கோபத்துடன் அல்ல, கர்த்தர் மிகவும் சந்தோஷத்துடன் உன்னை பார்ப்பாராக என்பதே அந்த வசனத்தின் பொருள் ஆகும். ராஜாவின் முகக்களையில் ஜீவன் உண்டு. அவனுடைய தயை பின்மாரி பெய்யும் மேகத்தை போல் இருக்கும் என்று நீதிமொழிகள் 16:15-வது வசனம் கூறுகின்றது. கர்த்தர் மலர்ந்த முகத்துடன் உன்னை பார்ப்பதற்கு கர்த்தரின் கிருபை உனக்கு தேவை. கோபம் கொண்டாலும் இரக்கத்தை சிநேகிக்கிறவராக கர்த்தர் உனக்கு காணப்படுவாராக. நீ தீமை செய்து விட்டாலும் நன்மை மட்டுமே உனக்கு செய்யும் அளவிற்கு கர்த்தர் உன்மேல் கிருபையாய் இருக்க கடவர் என்று 25-வது வசனம் பொருள்படுகின்றது.

நீ தவறி விட்டாலும் தண்டிக்க மறுக்கும் கிருபை. நீ தூரமாக சென்று விட்டாலும் ஓடி வந்து உன்னை தூக்கி கொள்ளும் கிருபை. நீ பாவத்தில் விழுந்து விட்டாலும் உன்னை மன்னித்து ஏற்று கொள்ளும் கிருபை. எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டாலும் நீ ஒடுங்கி போகாமல் உன்னை பாதுகாக்கும் கிருபை. கலக்கம் வந்தாலும் உன் மனம் குழப்பம் அடையாதபடிக்கு உன்னை காத்து கொள்ளும் கிருபை. குமாரனாகிய கர்த்தரின் அன்பு மாறாத அன்பு. அவர் மீது அழியாத அன்பு கொள்ளும் உன்னை கிருபை சூழ்ந்து கொள்ளும் என்று கர்த்தர் கூறுகின்றார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்பு கூறுகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக என்று எபேசியர் நிரூபம் 6-வது அதிகாரம் 24-வது வசனம் கூறுகின்றது. கர்த்தர் மீது அழியாத அன்பு வைக்கின்ற உனக்கு எவராலும் அழிக்க முடியாத ஆசீர்வாதங்களும் கிருபைகளும் அருளப்படுகின்றன.

26-வது வசனம்: கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கி உனக்கு சமாதானம் கட்டளை இடக்கடவர் என்று கூறுகின்றது. பகலில் மேக ஸ்தம்பம் இரவில் அக்கினி ஸ்தம்பம் என பரிசுத்த ஆவியானவரின் இடைவிடாத பிரசன்னம் உன்னை சூழ்ந்து கொள்வதாக. எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பின் வழி காட்டும் தேவ பிரசன்னம் உன்னை வழி நடத்துவதால் கர்த்தரின் பிரசன்னம் உனக்கு சமாதானம் கட்டளையிடுவதாக. அந்த சமாதானம் மிகவும் அசாதாரணமான சமாதானம் ஆகும். நீ கையிட்டு செய்யும் எதிலும் பலன் கிடைப்பதினால் வரும் சமாதானம் ஆகும். கர்த்தரை நோக்கி நீ ஏறெடுக்கும் ஜெபத்திற்கு பதில் வந்து கொண்டே இருக்கின்றது என்ற சமாதானம் ஆகும். உன்னுடைய உழைப்பில் வரும் வருமானம் வீட்டில் நிலைத்து நிற்கிறது என்ற சமாதானம் ஆகும். உன் பிள்ளைகள் வயதிற்கு ஏற்ற வளர்ச்சி பெற்று ஞானம் உயர்வு பெற்று ஓங்கி வளருவதை உன் கண்கள் பார்ப்பதினால் வரும் சமாதானம் ஆகும். சூழ்நிலை பதட்டமாக தெரிந்தாலும் உன் உள்ளம் சற்றும் கலங்கவில்லை என்ற சமாதானம் ஆகும். கர்த்தரை உண்மையுடன் பின்பற்றும் உனக்கு மட்டுமாக சிறப்பாக கிடைக்கும் சமாதானம் ஆகும். உம்மை உறுதியாய் பற்றி கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பி இருக்கிறபடியால் நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்து கொள்வீர் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் 26-வது அதிகாரம் 3-வது வசனம் கொடுக்கும் சமாதானம் ஆகும். எண்ணாகம புத்தகம் 6-வது அதிகாரம் 24,25,26 ஆகிய மூன்று வசனங்களும் மூவராகிய தேவனின் முப்பெரும் ஆசீர்வாதங்களை அருளுகின்றன.

இவ்விதமாய் அவர்கள் என் நாமத்தை இஸ்ரவேல் புத்திரர் மேல் கூறக்கடவர்கள். அப்பொழுது நான் அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல் என்றார். (எண். 6:27)

இவ்விதமாய் என் நாமத்தை கூறக்கடவீர்கள். நான் அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் அதே வசனத்தில் கூறுகின்றார். எந்த மனிதரும் மிகுந்த வாஞ்சையுடன் விரும்பும் ஆசீர்வாதங்கள் இங்கே கொடுக்கப்படுகின்றன. பரிசுத்தராகிய கர்த்தரை நடுவாக வைத்து வாழ்கின்றவர்களுக்கு நன்மையும் கிருபையும் துணையாக நிற்கின்றன. உன்னதமானவரின் மறைவில் வந்து சேருகின்றவர்களுக்கு சர்வ வல்லவரின் நிழல் கிடைக்க பெறுகின்றது.

எண்ணாகம புத்தகம் 6-வது அதிகாரம் 24 முதல் 26 வசனங்கள் வழங்கும் ஐந்து ஆசீர்வாதங்களும் இன்றும் இதனை வாசிக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் அருளப்படுவதாக! கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து காத்து கொள்ளுவாராக! கர்த்தர் தமது முகத்தை உன் மேல் பிரகாசிக்க செய்வாராக! கர்த்தர் உனக்கும் உன் அனைத்திற்கும் கிருபை வழங்குவாராக! கர்த்தர் தமது பிரசன்னத்தினால் உன்னை நிரப்புவாராக! கர்த்தர் உன்னையும் உன் எல்லைகளையும் சமாதானத்துடன் இன்றும் என்றும் காத்து கொள்வாராக!

தொகுதி - 3
கர்த்தரின் சேவைக்காக கொடுக்கபடும் காணிக்கைகள்

அத்தியாயம் - 8
பலிபீட பிரதிஷ்டைக்கு கோத்திரவாரியாக காணிக்கை

இந்த அதிகாரத்தில் ஒரு பிரம்மாண்டமான, விசேஷித்த ஆரவாரிப்பு கொண்ட, ஆனால் ஒழுங்கும் கிரமமுமாக கர்த்தரின் சேனைகள் சீனாய் மலை பாளயத்தில் இருந்து புறப்படுவதற்கான ஒரு ஒத்திகையை நாம் பார்க்க இருக்கிறோம். சுமார் 4 இலட்சம் யுத்தசன்னத்தராக புறப்பட கூடிய திடகாத்திரமான சரீரம் கொண்ட கூட்டம் தங்கள் குடும்பங்களுடனும் குழந்தைகளுடனும் பாலைவனத்தின் வழியே பிரயாணம் செல்வதற்காக ஆயத்தங்கள் யாவும் செய்தாகி விட்டது. கர்த்தர் கொடுத்த பிரமாணத்தின்படி நான்கு தலைமை பொறுப்பு எடுக்கும் கோத்திரங்களும் ஆசரிப்பு கூடாரத்தின் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு திசைகளில் தங்கள் கூடாரங்களை அமைத்து விட்டனர். அவர்களுக்கு இருபுறமும் அவர்களுக்கு அடியில் உள்ள இரு கோத்திரங்களும் தமது கூடாரங்களை அமைத்து விட்டனர். அந்தந்த கோத்திரத்திற்குரிய சின்னங்கள் வேலைப்பாடு செய்யப்பட்டு அவர்களது நிறங்களில் கொடிகளும் தயார் செய்யப்பட்டு நிறுத்தப்பட்டு விட்டன. இது பார்க்க ஒரு கண்கொள்ளா காட்சியாக இருந்தது. இப்பொழுது அவர்கள் பிரயாணம் பண்ண போகும் வரிசையின்படி ஒவ்வொரு கோத்திரமும் தங்கள் பலிகளை கர்த்தர் முன்னால் கொண்டு வர அவர்கள் பிரபுக்கள் பணிக்க படுகிறார்கள். அவர்களது காணிக்கை சம்பிரதாயமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தலைவரால் கர்த்தர் பணித்த பிரகாரம் கொண்டு வரப்பட இருக்கின்றது.

8.1 கோத்திர தலைவர்களின் காணிக்கை

எண்ணாகம புத்தகம் 6-வது அதிகாரத்தின் கடைசி பகுதியில் கர்த்தர் அருளிய ஆசீர்வாதங்கள் கொடுக்கபட்டுள்ளன. எண்ணாகம புத்தகம் 7-வது அதிகாரத்தில் கர்த்தரிடம் நன்மை பெற்ற மக்கள் கர்த்தருக்கு நன்றி தெரிவிக்க போவதை நாம் பார்க்க இருக்கின்றோம்.

கர்த்தரின் ஆசீர்வாதங்களினால், அவருடைய கட்டளைகளை கைக்கொள்ளுவதினால், அவர்களுடைய வசதியும் வருமானமும் உயர்ந்தது. அவர்களின் சுகமும் பெலனும் வளர்ந்தது. இப்பொழுது கர்த்தரின் ஆலயத்திற்கு அவர்கள் கைகளில் காணிக்கைகளுடன் புறப்படுகின்றார்கள். நன்மை செய்தவருக்கு நன்றி தெரிவிப்பதற்காக புறப்படுகின்றார்கள். எத்தனை அதிகம் கர்த்தரிடம் அவர்கள் வாங்கினார்களோ அத்தனை அதிகம் கர்த்தருக்கு காணிக்கை கொடுப்பதற்கு புறப்படுகின்றார்கள். அவர்களுடைய காணிக்கை தேவனுடைய ஈவுக்கு நன்றி தெரிவிப்பதாக அமைகின்றது.

அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் எண்ணாகம புத்தகம் 6-வது அதிகாரம் 24,25,26 என்ற மூன்றே மூன்று வசனங்களில் முடிந்து விட்டது. ஆனால் நன்றி கூறுதல் என்பதோ 7ம் அதிகாரம் 89 வசனங்களிலும் நீண்டு காணப்படுகின்றது. பெற்ற நன்மை

மிக சிறியதாக இருந்தாலும் மிகப்பெரிய நன்றி வழங்கப்பட வேண்டுமென்று எண்ணாகம புத்தகம் 7-வது அதிகாரம் எடுத்து உரைக்கின்றது. மூன்றே மூன்று வசனங்களில் இருந்து பிறந்த ஆசீர்வாதம் ஒரு சில நிமிடங்களில் கூறி முடிக்கப்பட்டது. அதற்கு பாராட்டு ஆராதனை 12 நாட்களுக்கு நீடிக்கின்றது. ஒரே ஒரு நாள் பெற்ற நன்மைக்கும் வாழ்நாள் முழுவதும் நன்றி உள்ளவர்களாக வாழ வேண்டும் என்று எண்ணாகம புத்தகம் 7-வது அதிகாரம் அறிவிக்கின்றது.

மோசே வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணி, அதையும் அதின் எல்லா பணிமுட்டுகளையும், பலிபீடத்தையும் அதின் எல்லா பணி முட்டுக்களையும் அபிஷேகம் பண்ணி, பரிசுத்தப்படுத்தி முடித்த நாளில், தங்கள் பிதாக்களுடைய வம்ச தலைவரும், எண்ண பட்டவர்களின் விசாரிப்புக்கு வைக்கப்பட்ட கோத்திர பிரபுக்களுமாகிய இஸ்ரவேலின் பிரபுக்கள் காணிக்கைகளை செலுத்தினார்கள். (எண். 7:1-2)

மோசே வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணி, அதின் எல்லா பணிமுட்டுகளையும், பலிபீடத்தையும் அபிஷேகம் பண்ணி, பரிசுத்தப் படுத்தி முடித்த நாளில் என்று முதல் வசனம் கூறுகின்றது. எகிப்தில் இருந்து அவர்கள் புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தலம் ஸ்தாபனம் பண்ணப்பட்டது என்று யாத்திராகம புத்தகம் 40-வது அதிகாரம் 17-வது வசனம் கூறுகின்றது. ஸ்தாபனம் பண்ணப்பட்ட வாசஸ்தலத்தில் இருந்து எண்ண முடியாத ஆசீர்வாதங்கள் ஜனங்களுக்கு வழங்கப்படுகின்றது. கர்த்தருக்கு கைமாறு செலுத்த கர்த்தர் கேட்கும் அனைத்தையும் அர்ப்பணிக்க ஜனங்கள் இப்பொழுது ஆயத்தமாகி விட்டோம் என்று ஆலயத்தை நோக்கி புறப்படுகின்றார்கள்.

வம்சத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் அதற்கு தலைமை வகிக்கின்றார்கள். விசாரிப்புக்கு வைக்கப்பட்ட கோத்திர பிரபுக்களாகிய இஸ்ரவேலின் பிரபுக்கள் காணிக்கைகளை செலுத்தினார்கள் என்று எண்ணாகமம் 2-வது வசனம் கூறுகின்றது. பிரபுக்கள் என்ற எபிரேய வார்த்தையின் சரியான பொருள் மூப்பர்கள் அல்லது தலைவர்கள் என்பது ஆகும். இரண்டு விதமான காணிக்கைகள் இந்த அதிகாரத்தில் செலுத்தப்படுகின்றன. முதலாவதாக கொடுக்கப்பட்ட காணிக்கை 1 முதல் 9 வசனங்களில் கூறப்பட்டு உள்ளது. இரண்டாவதாக கொடுக்கப்பட்ட காணிக்கை 10 முதல் 83 வசனங்கள் வரை கொடுக்கப்பட்டு உள்ளது. 84 முதல் 88 வசனங்களில் இரண்டாவதாக வந்த காணிக்கையின் மொத்த வரவு எவ்வளவு என்பதும் தெரிவிக்கபடுகின்றது.

தங்கள் காணிக்கையாக, ஆறு கூண்டு வண்டில்களையும், பன்னிரண்டு மாடுகளையும், இரண்டிரண்டு பிரபுக்களுக்கு ஒவ்வொரு வண்டிலும், ஒவ்வொரு பிரபுவுக்கு ஒரு மாடுமாக, கர்த்தருக்கு செலுத்த வாசஸ்தலத்திற்கு முன்பாக கொண்டு வந்தார்கள். (எண். 7:3)

இங்கு படைக்கப்பட்ட காணிக்கை ஆராதனை கூடத்தை பாலைவன பிரயாணத்தில் எடுத்து செல்வதற்கு அவசியப்படும் காணிக்கைகளாக தெரிகின்றது. ஆனால் 10 முதல் 83 வசனங்களில் படைக்கப்பட்ட அடுத்த காணிக்கை ஆராதனைக்கு அவசியப் படும் காணிக்கைகளாக தெரிகின்றது. ஆராதனை கூடத்திற்கு ஏற்ற காணிக்கைகளையும், ஆராதனை கூடத்தில் தவறாமல் இடம் பெற வேண்டிய ஆராதனைக்கு ஏற்ற காணிக்கைகளையும் வழங்கினார்கள்.

முதலாவதாக படைக்கப்பட்ட காணிக்கையில் வந்த நன்கொடைகள் ஆறு கூண்டு வண்டிகள் 12 மாடுகள் என்று பார்க்கிறோம். 12 கோத்திரங்களும் ஒன்றாக சேர்ந்து வந்து அவைகளை படைத்தார்கள். இரண்டு கோத்திரங்கள் ஒன்று சேர்ந்து ஒரு கூண்டு வண்டில் அன்பளிப்பு செய்தார்கள். ஒவ்வொரு பிரபுக்கு ஒவ்வொரு மாடாக 12 கோத்திர தலைவர்களும் வாசஸ்தலத்திற்கு முன்பாக கொண்டு வந்தார்கள்.



கூண்டு வண்டில்கள்

இன்னும் ஒரு சில தினங்களில் அவர்கள் கானானை நோக்கி பிரயாணத்தை துவங்க வேண்டும். அப்பொழுது ஆசரிப்பு கூடாரத்தை அவர்கள் மிகவும் கவனமாக கழற்றி மிகுந்த கவனத்துடன் எடுத்து செல்ல வேண்டும். அதற்கு வாகன வசதி தேவைப்பட்டது. 12 கோத்திரங்களும் சேர்ந்து அந்த தேவையை சந்தித்து விட்டார்கள். அவர்கள் கொடுத்த வாகனங்களை யார் பயன்படுத்த வேண்டும் என்றும் எந்த நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்றும் கர்த்தரே கூறுகின்றார்.

> ***அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ அவர்களிடத்தில் ஆசரிப்பு கூடாரத்தின் ஊழியத்திற்காக அவைகளை வாங்கி, லேவியருக்கு அவரவர் வேலைக்கு தக்கவைகளாக பங்கிட்டு கொடு என்றார். அப்பொழுது மோசே அந்த வண்டில்களையும் மாடுகளையும் வாங்கி, லேவியருக்கு கொடுத்தான். (எண். 7:4-6)***

லேவியின் குடும்பத்தார் ஆசரிப்பு கூடாரத்தின் பொறுப்பை முற்றிலுமாக பெற்று இருக்கின்றார்கள் என்பதை எண்ணாகம புத்தகம் 3,4 ஆகிய அதிகாரங்களில் நாம் பார்த்தோம். லேவியின் 3 பிள்ளைகளான கெர்சோம், கோகாத், மெராரி என்பவர்கள் ஆசரிப்பு கூடாரத்தினை பாதுகாக்கவும், பராமரிக்கவும் பிரயாண காலங்களில் அதனை பத்திரமாகவும் பரிசுத்தத்தோடும் எடுத்து செல்லவும் அழைப்பு பெற்றார்கள். மோசே அவர்களது அழைப்பிற்கு ஏற்றபடி வாகனங்களை பிரித்து கொடுக்க வேண்டும்.

இரண்டு வண்டில்களையும் நான்கு மாடுகளையும் கெர்சோன் புத்திரருக்கு, அவர்கள் வேலைக்குத்தக்க பங்காக கொடுத்தான். (எண். 7:7)

கெர்சோன் புத்திரர் ஆசரிப்பு கூடாரத்தின் அனைத்து தொங்கு திரைகளுக்கும் பொறுப்பு ஏற்று உள்ளனர். ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரத்தில் உள்ள தொங்கு திரைகளையும் வாசஸ்தலத்தை சுற்றிலும் இருக்கிற தொங்குதிரைகளையும் பிராகாரத்தின் நுழைவாசலில் உள்ள தொங்கு திரைகளையும் கெர்சோன் புத்திரர் பிரயாணப்படும் பொழுது ஏற்ற விதமாக கழற்றி எடுத்து செல்ல வேண்டும் என்பதை எண்ணாகம புத்தகம் 4-வது அதிகாரம் 5, 26 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கலாம். அதனை உகந்த முறையில் எடுத்து செல்வதற்கு 2 வண்டிகள் அவர்களுக்கு கொடுக்க பட்டன என்பதை 7-வது வசனம் தெரிவிக்கின்றது.

நான்கு வண்டில்களையும் எட்டு மாடுகளையும் மெராரியின் புத்திரருக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் இத்தாமாருடைய கையின் கீழிருக்கிற அவர்களுடைய வேலைக்குத்தக்க பங்காக கொடுத்தான். (எண். 7:8)



பரிசுத்த பணிமுட்டுகளை தோளில் சுமந்து செல்லும் கோகாத்தியர்

கிடைக்கப் பெற்ற 6 வண்டிகளில் 2 வண்டிகள் கெர்சோன் புத்திரருக்கு கொடுக்க பட்டது. மீதியாக இருந்த 4 வண்டில்களும் மெராரி புத்திரருக்கு கொடுக்க பட்டன. ஆசரிப்பு கூடாரத்தில் மெராரி புத்திரருடைய வேலை 4-வது அதிகாரம் 31,32 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளன.

பலகைகள் தூண்கள் பாதங்கள் முதலிய கூடாரத்தின் சகல பகுதிகள் அனைத்தையும் அவர்கள் கழற்றி எடுத்து செல்ல வேண்டும். மிகவும் அதிகமானதும் கனமானதும் ஆகிய பொருட்கள் அவர்களுடைய பொறுப்பில் கொடுக்க பட்டது. எனவே அவர்களுக்கு மீதியாக இருந்த 4 வண்டில்களும் கொடுக்கப்பட்டன.

முதல் காணிக்கையில் பெற்ற 6 வண்டில்களில் 2 வண்டில்கள் கெர்சோன் குடும்பத்திற்கும் 4 வண்டில்கள் மெராரி குடும்பத்திற்கும் கொடுக்கப்பட்டன.

கோகாத்தின் புத்திரருக்கோ ஒன்றும் கொடுக்கவில்லை. தோள் மேல் சுமப்பதே அவர்களுக்குரிய பரிசுத்த ஸ்தலத்தின் வேலையாயிருந்தது. (எண். 7:9)

ஆனால் லேவி கோத்திரத்தில் பிறந்த 3-வது குடும்பமான கோகாத்தியரின் குடும்பத்திற்கு வண்டிகள் ஏதுவும் கொடுக்கப்பட வில்லை. கோகாத் புத்திரர் கர்த்தருடைய

உடன்படிக்கை பெட்டி, தூப பீடம், பொன் குத்துவிளக்கு, சமூகத்து அப்ப மேஜை, தகனபலிபீடம், வெண்கல தொட்டி மற்றும் பரிசுத்த பணிமூட்டுகள் அனைத்தையும் பத்திரமாக எடுத்து அவைகளை எப்படி மூட வேண்டும் என்று கட்டளை பெற்றார்களோ, அப்படியே மூடி தங்கள் தோளில் சுமந்து செல்ல வேண்டும். இது 4-வது அதிகாரம் 4 முதல் 14 வசனங்களில் விவரமாக கொடுக்கப்பட்டு உள்ளது. அவர்களுடைய வேலை மிகவும் பழுவானது. மிகவும் பரிசுத்தமானது. ஆயினும் வாகன வசதிகள் கொடுக்க படவில்லை. ஆனால் கோகாத் புத்திரர்கள் சற்றும் முறு முறுக்கவில்லை. அவசியம் இல்லாதவர்களுக்கு அதிகம் கொடுக்கப்பட்டது என்றும் அவசியம் உள்ளவர்களுக்கு ஒரு வண்டி கூட கொடுக்கப்பட வில்லை என்றும் கோபிக்கவில்லை. விரும்பியவைகள் கிடைக்கவில்லை என்று வருந்தவில்லை. வண்டிகள் பெற்றவர் மீது பொறாமையும் கொள்ளவில்லை. பெற்ற ஊழியத்தில் வெறுப்பும் தட்டவில்லை.

கர்த்தர் அவர்கள் தோள்களை கேட்டார். அவை மகா பரிசுத்தமான பொருட்கள். அவர்கள் தங்கள் தோள்களை மனம் உவந்து கொடுத்தார்கள். எந்த நிலைமையிலும் மன ரம்மியமாக இருப்பதற்கு கோகாத்தியர் கற்று கொண்டார்கள். கர்த்தருடைய ஊழியத்திற்கு தங்களை பரிபூரணமாக தத்தம் செய்தார்கள்.

8.2 பலிபீடத்தின் பிரதிஷ்டைக்கு பிரபுக்களின் காணிக்கை

பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்ட நாளிலே, பிரபுக்கள் அதின் பிரதிஷ்டைக்காக காணிக்கைகளை செலுத்தி, பலிபீடத்துக்கு முன்பாக தங்கள் காணிக்கைகளை கொண்டு வந்தார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக ஒவ்வொரு பிரபுவும் தன்தன் நாளில் தன்தன் காணிக்கையை செலுத்தக்கடவன் என்றார். (எண். 7:10-11)

ஆசரிப்பு கூடாரத்தின் பலிபீடம் அபிஷேகம் பண்ண பட்டு விட்டது. இப்பொழுது பலிபீடம் பிரதிஷ்டை பண்ண பட வேண்டும். அதன் மீது முதல் முறையாக பலிகள் செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு கோத்திரமும் பலிசெலுத்த வேண்டியவற்றை காணிக்கையாக கொண்டுவர கர்த்தர் பணிக்கின்றார்.

12 கோத்திரங்களும் இரண்டாவது முறை படைக்கும் காணிக்கை விவரத்தை இந்த வசனங்கள் நமக்கு கூறுகின்றன. இரண்டாவது முறையாக படைக்கப்பட்ட இந்த காணிக்கை ஆசரிப்பு கூடாரத்தில் நடைபெறும் ஆராதனைகளின் தேவைகளை சந்திக்க கொடுக்கப்பட்ட காணிக்கையாக அமைகின்றது. இதன் முழு விபரமும் 10 முதல் 88 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. இந்த அதிகாரத்தின் கடைசி வசனமான 89-வது வசனத்தில் கர்த்தர் மோசேயிடம் பேசுவதை குறித்து கூறப்பட்டு உள்ளது. 12 கோத்திரத்து மக்களும் ஆராதனை கூடத்தில் இடம் பெறும் ஆராதனைக்கு அவசியப்படும் அனைத்தையும் கொடுப்பதற்கு ஆயத்தமாகி விட்டார்கள். அதன் விவரங்கள் கோத்திரம் கோத்திரமாக கொடுக்கப்பட்டு உள்ளது.

அவர்கள் அளித்த காணிக்கையில் 7 தனிப் பெறும் தன்மைகள் காணப்படுகின்றன. முதலாவதாக அவர்கள் அளித்த காணிக்கை ஏகோபித்து வந்த காணிக்கை ஆகும். 12 கோத்திரங்களும் பங்கு எடுத்தார்கள். யாரும் பின் தங்கி நிற்கவில்லை.

ஒரு கோத்திரம் அதிகமாகவும் பிரிதொரு கோத்திரம் குறைவாகவும் காணிக்கை படைக்கவில்லை. அனைத்து கோத்திரங்களும் அனைத்து குடும்பங்களும் கொடுத்த காணிக்கை ஒரே அளவான காணிக்கையாக இருந்தது. அதற்கு காரணம் கர்த்தர் எவ்வித வித்தியாசமும் இன்றி 12 கோத்திரங்களையும் ஒரே சீராக ஆசீர்வதித்தார். கர்த்தர் அருளிய ஆசீர்வாதம் ஏகமாக இருந்தது. எனவே ஆசீர்வாதத்தை பெற்றவர்களின் நன்றி தெரிவிப்பும் ஏகமாக இருந்தது. 12 கோத்திரங்களுக்கும் 12 தலைவர்கள் கொடுக்கப்பட்டதை எண்ணாகம புத்தகம் முதலாவது அதிகாரம் 5 முதல் 18 வசனங்களிலும், இரண்டாவது அதிகாரம் 3 முதல் 32 வசனங்களிலும் நாம் பார்த்தோம். இப்பொழுது காணிக்கை படைப்பதற்கு அந்தந்த தலைவர்களின் தலைமையில் கோத்திரங்கள் புறப்பட்டு வருகின்றது. காணிக்கை படைப்பதற்கு ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒரு முழு நாள் எடுத்தது.

யூதா கோத்திரத்தினர் காணிக்கை

> *அப்படியே முதலாம் நாளில் தன் காணிக்கையை செலுத்தினவன் யூதா கோத்திரத்தானாகிய அம்மினதாபின் குமாரன் நகசோன். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும் பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளி தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளி கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்து சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், (எண். 7:12-14)*

நாம் இங்கு பார்ப்பது வெள்ளியினால் செய்த பெரிய தாலமும், அதனோடு மெல்லிய பிசைந்த மாவும், வெள்ளியினால் செய்த பெரிய கலமும், பொன்னினால் செய்த தூப கரண்டியும் ஆகும்.



காணிக்கையும் பலிகளும்

சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டு கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டு குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டு கடாக்களும், ஐந்து வெள்ளாட்டு கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டு குட்டிகளுமே. இது அம்மினதாபின் குமாரனாகிய நகசோனின் காணிக்கை. (எண். 7:15-17)

இங்கு நாம் 3 விதமான காணிக்கைகள் கொண்டு வரப்படுவதை பார்க்கிறோம். முதலாவது நாம் பார்ப்பது சர்வாங்க தகன பலிக்குரிய காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஆட்டு குட்டியும்; இரண்டாவது பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டு கடா; மூன்றாவது சமாதான பலியாக இரண்டு மாடுகள், ஐந்து ஆட்டு கடாக்கள், ஐந்து வெள்ளாட்டு கடாக்கள், ஒரு வயதான ஐந்து ஆட்டு குட்டிகள்.

எண்ணாகமம் 7-வது அதிகாரம் 12-வது வசன முதல் யூதா கோத்திரம் குடும்பம் குடும்பமாக வந்து காணிக்கை படைப்பதை நாம் பார்க்கின்றோம். ஒவ்வொரு பாளயத்தின் கோத்திரங்களாக வரிசையாக காணிக்கை படைத்தலை கர்த்தர் மோசே மூலமாக ஒழுங்கு செய்தார். அதே வரிசையிலேயே அவர்கள் புறப்பட்டு செல்வதும் அமைய வேண்டும்.

இசக்கார் கோத்திரத்தினர் காணிக்கை

இரண்டாம் நாளில் இசக்காரின் பிரபுவாகிய சூவாரின் குமாரன் நெதனெயேல் காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும் பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்து சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டு கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டு குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டு கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டு கடாக்களும், ஐந்து வெள்ளாட்டு கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டு குட்டிகளுமே; இது சூவாரின் குமாரனாகிய நெதனெயேலின் காணிக்கை. (எண். 7:18-23)

18-வது வசனம் முதல் இசக்கார் கோத்திரம் புறப்பட்டு வருவதை நாம் பார்க்கின்றோம். பாளயம் புறப்படுகையில் யூதா கோத்திரமே யாவருக்கும் முன்னால் செல்ல வேண்டும். அவர்களுக்கு பின்னால் இசக்கார் கோத்திரம் செல்ல வேண்டும். அந்த வரிசையின்படியே இப்பொழுது காணிக்கை செலுத்த வருகிறார்கள். இசக்கார் கோத்திரம் கர்த்தருக்கு படைத்தது, யூதா கோத்திரம் படைத்த படியே ஆகும்.

செபுலோன் கோத்திரத்தினர் காணிக்கை

மூன்றாம் நாளில் ஏலோனின் குமாரனாகிய எலியாப் என்னும் செபுலோன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும் பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய

மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்து சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது ஏலோனின் குமாரனாகிய எலியாபின் காணிக்கை. (எண். 7:24-29)

செபுலோன் கோத்திரம் யூதா தலைமையில் உள்ளது. அவர்கள் யூதா, இசக்கார் கோத்திரங்களுக்கு பின்னால் மூன்றாவதாக, முதல் பாளயத்தில் செல்ல வேண்டியவர்கள். அவர்களும் அதே அளவு காணிக்கை படைத்தனர். காணிக்கை படைப்பு பண்டிகையின் மூன்று நாட்கள் கடந்து விட்டன.

ரூபன் கோத்திரத்தினர் காணிக்கை

நான்காம் நாளில் சேதேயூரின் குமாரனாகிய எலிசூர் என்னும் ரூபன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும் பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது சேதேயூரின் குமாரனாகிய எலிசூரின் காணிக்கை. (எண். 7:30-35)

இரண்டாவது செல்ல வேண்டிய பாளயத்தின் தலைமை ரூபன் கோத்திரத்தை சேர்ந்தது. அந்த மூன்று கோத்திரத்தாரும் வரிசையாக வந்து தங்கள் காணிக்கைகளை படைக்கின்றனர்.

சிமியோன் கோத்திரத்தினர் காணிக்கை

ஐந்தாம் நாளில் சூரிஷதாயின் குமாரனாகிய செலூமியேல் என்னும் சிமியோன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும் பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்து சேக்கல் நிறையுள்ள

பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டு குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டு கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டு கடாக்களும், ஐந்து வெள்ளாட்டு கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டு குட்டிகளுமே. இது சூரிஷதாயின் குமாரனாகிய செலூமியேலின் காணிக்கை. (எண். 7:36-41)

சிமியோன் கோத்திரர் ரூபனுக்கு அடியில் உள்ளவர்கள். அவர்களும் குறிக்க பட்ட காணிக்கைகளை படைக்கின்றனர்.

காத் கோத்திரத்தினர் காணிக்கை

ஆறாம் நாளில் தேகுவேலின் குமாரனாகிய எலியாசாப் என்னும் காத் புத்திரனின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும் பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டு கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டு குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டு கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டு கடாக்களும், ஐந்து வெள்ளாட்டு கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டு குட்டிகளுமே. இது தேகுவேலின் குமாரனாகிய எலியாசாபின் காணிக்கை. (எண். 7:42-47)

காத் கோத்திரமும் ரூபனுக்கு அடியில் உள்ளவர்கள். அவர்கள் பிரயாணத்தில் ஆறாவதாக செல்ல வேண்டியவர்கள். அவர்களும் குறிக்கப்பட்ட காணிக்கைகளை படைக்கின்றனர். காணிக்கை படைக்கும் வைபவத்தின் ஆறு நாட்கள் முடிவடைந்து விட்டன.

எப்பிராயீம் கோத்திரத்தினர் காணிக்கை

ஏழாம் நாளில் அம்மியூதின் குமாரனாகிய எலிஷாமா என்னும் எப்பிராயீம் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும் பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டு கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டு குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டு கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டு கடாக்களும், ஐந்து வெள்ளாட்டு கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டு

குட்டிகளுமே இது அம்மியூதின் குமாரனாகிய எலிஷாமாவின் காணிக்கை. (எண். 7:48-53)

மூன்றாவது பாளயத்தின் தலைவன் எப்பிராயீம். அவனடியில் மனாசே கோத்திரமும் பென்யமீன் கோத்திரமும் உண்டு. எப்பிராயீம் கோத்திர பிரபுக்கள் முதலில் காணிக்கை படைக்கின்றனர்.

மனாசே கோத்திரத்தினர் காணிக்கை

எட்டாம் நாளில் பெதாசூரின் குமாரனாகிய கமாலியேல் என்னும் மனாசே புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும் பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டு கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டு குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டு கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டு கடாக்களும், ஐந்து வெள்ளாட்டு கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டு குட்டிகளுமே. இது பெதாசூரின் குமாரனாகிய கமாலியேலின் காணிக்கை. (எண். 7:54-59)

மூன்றாவது பாளயத்தில் இரண்டாவதாக செல்ல வேண்டிய மனாசே கோத்திரத்தின் பிரபுவான கமாலியேல் காணிக்கை படைக்கின்றான்.

பென்யமீன் கோத்திரத்தினர் காணிக்கை

ஒன்பதாம் நாளில் கீதெயோனின் குமாரனாகிய அபீதான் என்னும் பென்யமீன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும் பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது கீதெயோனின் குமாரனாகிய அபீதானின் காணிக்கை. (எண். 7:60-65)

ஒன்பதாம் நாள் மூன்றாவது பாளயத்தில் மூன்றாவதாக செல்ல வேண்டிய பென்யமீன் கோத்திரத்தார் காணிக்கை படைக்கின்றனர். இதோடு ஒன்பது நாட்கள் காணிக்கை படைப்பு வைபவம் நடந்தேறிற்று.

தாண் கோத்திரத்தினர் காணிக்கை

பத்தாம் நாளில் அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேர் என்னும் தாண் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும் பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டு கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டு குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டு கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டு கடாக்களும், ஐந்து வெள்ளாட்டு கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டு குட்டிகளுமே. இது அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேரின் காணிக்கை. (எண். 7:66-71)

பத்தாவது நாளில் நாலாவது பாளயத்தின் தலைவரான தாண் புத்திரர் காணிக்கை செலுத்தினார்கள்.

ஆசேர் கோத்திரத்தினர் காணிக்கை

பதினோராம் நாளில் ஓகிரானின் குமாரனாகிய பாகியேல் என்னும் ஆசேர் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும் பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டு கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டு குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டு கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டு கடாக்களும், ஐந்து வெள்ளாட்டு கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டு குட்டிகளுமே. இது ஓகிரானின் குமாரனாகிய பாகியேலின் காணிக்கை. (எண். 7:72-77)

இது ஆசேர் புத்திரரின் காணிக்கை. இறுதியாக 78-வது வசனம் முதல் நப்தலி கோத்திரமும் குடும்பம் குடும்பமாக வந்து காணிக்கை படைத்தார்கள்.

நப்தலி கோத்திரத்தினர் காணிக்கை

பன்னிரண்டாம் நாளில் ஏனானின் குமாரனாகிய அகீரா என்னும் நப்தலி புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாக படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது

சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டு கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டு குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டு கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டு கடாக்களும், ஐந்து வெள்ளாட்டு கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டு குட்டிகளுமே. இது ஏனானின் குமாரனாகிய அகீராவின் காணிக்கை. (எண். 7:78-83)

12 நாட்கள் பிரயாணம் புறப்படுவதற்கு முன் காணிக்கை செலுத்தி 12 கோத்திரத்தாரும் கர்த்தருக்கு விழா கொண்டாடினார்கள். முறையாக வந்து படைத்தார்கள். காணிக்கை படைப்பில் பங்கு எடுக்காத குடும்பமும் இல்லை. கோத்திரமும் இல்லை. அனைவரும் கொடுத்தார்கள். மிக அன்பாக கொடுத்தார்கள். காணிக்கை படைப்பதற்கு கோத்திரம் கோத்திரமாக எந்த வரிசையில் வந்தார்களோ அதே வரிசை முறையில்தான் கானான் நோக்கி செய்த பிரயாணத்திலும் நடந்து சென்றார்கள். ஆராதனை தடை படாமல் நடக்க தகுந்த காணிக்கைகளை அவர்கள் கொண்டு வந்தார்கள். அதன் விவரமும் அந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது.

முதலாவதாக 12 கோத்திரங்களும் 12 வெள்ளி தாலங்கள் கொண்டு வந்தார்கள். போஜனபலி என்ற ஆராதனைக்கு 12 வெள்ளி தாலங்களும் பயன்படுத்தப்பட்டது. போஜனபலி என்பது இயேசுவின் சரீரத்திற்கு ஓர் அடையாளமாக அமைந்தது. இரண்டாவதாக 12 கோத்திரங்களும் 12 வெள்ளி கலங்கள் எடுத்து வந்தார்கள். பானபலி என்ற ஆராதனைக்கு அவைகள் அவசியப்பட்டன. பானபலி என்பது இயேசு சிலுவையில் சிந்தும் இரத்தத்திற்கு அடையாளமாக மாறியது. மூன்றாவதாக 12 கோத்திரங்கள் 12 பொன் கரண்டிகள் கொண்டு வந்தார்கள். தூபவர்க்கத்தை தூவி விடுவதற்கு அவைகள் உதவியாக அமைந்தது. தூபவர்க்கம் பரிசுத்தவான்களின் ஜெபத்திற்கு அடையாளமாக இருக்கின்றது.

2-வதாக வரும் குறிப்பு அவர்கள் அர்ப்பணித்த அனைத்து காணிக்கைகளும் தரம் உயர்ந்ததாக இருந்தது என்பது ஆகும். இரண்டாம் தரமான எதுவும் அவர்கள் எடுத்து வரவில்லை. மிச்சமானதை கர்த்தருக்கு காணிக்கையாக கொடுக்கவில்லை. மிக உச்சிதமானவைகளை கொடுத்தார்கள். காரணம் கர்த்தர் அற்பமாக அவர்களை ஆசீர்வதிக்கவில்லை. மிக அற்புதமாக அவர்களை ஆசீர்வதித்தார்.

3-வதாக வரும் குறிப்பு அவர்கள் அர்ப்பணித்த அர்ப்பணிப்புகளில் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை. கொடுத்தார் இன்னும் கொடுப்பார் என்று அல்ல. ஏராளம் ஏற்கெனவே கொடுத்துவிட்டார். எனவே தாராளமாக நாங்கள் கொடுக்கிறோம் என்று கொண்டு வந்தார்கள். அவர்கள் கொடுத்த காணிக்கை கர்த்தரை பிரியப்படுத்துவதற்கு கொடுத்த காணிக்கையாக அல்ல, கர்த்தரை பின்பற்றுவதற்கு கொடுத்த காணிக்கையாக மாறிற்று.

4-வதாக வரும் குறிப்பு அவர்கள் கொடுத்த காணிக்கை வற்புறுத்தி கொடுக்கப்பட்ட காணிக்கை அல்ல. வலிய கொடுக்கப்பட்ட காணிக்கை ஆகும். மனிதனின் முகத்திற்காகவும் கொடுக்கப்பட்ட காணிக்கை அல்ல. மனிதனின் தயவையோ நல் மதிப்பையோ பெறுவதற்கு கொடுத்த காணிக்கை அல்ல. சுய விளம்பரத்திற்காக கொடுத்த காணிக்கையும் அல்ல. கர்த்தருக்கு என்று கொடுத்த காணிக்கை. எவ்வித சன்மானமும் கருதாமல் கொடுத்த

காணிக்கை. யாரும் நினைவு ஊட்டாமல் கொடுத்த காணிக்கை. உற்சாகத்துடன் கொடுத்த காணிக்கை. கர்த்தர் தங்கள் மீது கொண்ட அன்பினால் அளித்த பரிசு.

5-தாவது வரும் குறிப்பு அவர்கள் அளித்த காணிக்கை ஆலயத்தின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்த காணிக்கை ஆகும். 84-வது வசனம் முதல் 88-வது வசனங்களில் இந்த விபரத்தை நாம் பார்க்கின்றோம்

8.3 ஆராதனைக்கு வந்த காணிக்கைகளின் மொத்த விபரம்

பலிபீடம் அபிஷேகம் பண்ணப்பட்ட போது, இஸ்ரவேல் பிரபுக்களால் செய்யப்பட்ட பிரதிஷ்டையாவது: வெள்ளித்தாலங்கள் பன்னிரண்டு, வெள்ளிக்கலங்கள் பன்னிரண்டு, பொன் தூபகரண்டிகள் பன்னிரண்டு. ஒவ்வொரு வெள்ளித்தாலம் நூற்றுமுப்பது சேக்கல் நிறையும், ஒவ்வொரு கலம் எழுபது சேக்கல் நிறையுமாக இந்த பாத்திரங்களின் வெள்ளியெல்லாம் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி இரண்டாயிரத்து நானூறு சேக்கல் நிறையாயிருந்தது. தூபவர்க்கம் நிறைந்த பொன் தூபகரண்டிகள் பன்னிரண்டு, ஒவ்வொன்று பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி பத்துச்சேக்கல் நிறையாக, தூபகரண்டிகளின் பொன்னெல்லாம் நூற்றிருபது சேக்கல் நிறையாயிருந்தது. (எண். 7:84-86)

12 வெள்ளி தாளங்கள், 12 வெள்ளி கலங்கள், 12 பொன் கரண்டிகள். இவைகள் யாவும் அன்றாடக ஆராதனையில் ஆசாரியர்களால் உபயோக படுத்த படுபவை.

சர்வாங்க தகனபலியாக செலுத்தப்பட்ட காளைகளெல்லாம் பன்னிரண்டு, ஆட்டு கடாக்கள் பன்னிரண்டு, ஒரு வயதான ஆட்டு குட்டிகள் பன்னிரண்டு, அவைகளுக்கடுத்த போஜனபலிகளும் கூட செலுத்தப்பட்டது; பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்ட வெள்ளாட்டு கடாக்கள் பன்னிரண்டு. சமாதான பலியாக செலுத்தப்பட்ட காளைகளெல்லாம் இருபத்து நான்கு, ஆட்டு கடாக்கள் அறுபது, வெள்ளாட்டு கடாக்கள் அறுபது, ஒரு வயதான ஆட்டு குட்டிகள் அறுபது; பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்ட பின்பு செய்யப்பட்ட அதின் பிரதிஷ்டை இதுவே. (எண். 7:87-88)

நீதிமான்களின் ஜெபம் தேவைகளை சந்திக்கின்றது. நீதிமான்களின் காணிக்கை தேவைகளை பூர்த்தி செய்கின்றது. ஆசரிப்பு கூடாரத்தின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யும் காணிக்கைகளாக அவர்கள் காணிக்கை மாறியது. அவர்களது ஆராதனை கூடம் கெம்பீரமாக நின்றது. ஆராதனை கூடத்தில் எவ்வித பழுதும் இல்லை. எவ்வித தூசிகளும் ஒட்டடைகளும் காணப்படவில்லை. ஆலயத்தின் உள்ளும் புறமும் சீராகவும் சிறப்பாகவும் இருந்தது.

ஆராதனைகளை எடுத்து நடத்த தேவையான அனைத்தும் நேர்த்தியாக படைக்கப்பட்டது. போஜனபலி, சர்வாங்க தகனபலி, பாவ நிவாரண பலி, சமாதான பலி என்று பொதுவாக இடம் பெறும் பலிகள் அனைத்தும் தவறாது செலுத்தப்படுவதற்கு அவர்கள் செலுத்திய பொருட்களும் மிருக ஜீவன்களும் மிகவும் உதவியாக அமைந்தது. எனவே

ஆராதனை கூடம் அழகு பெற்று காணப்பட்டது போல, அதில் இடம் பெற்ற ஆராதனைகள் அர்த்தம் மிக்க ஆராதனைகளாக காணப்பட்டது.

6-வதாக வரும் குறிப்பு காணிக்கையாக வந்த அனைத்து படைப்புகளும் சரியாகவும் முறையாகவும் வரவு எவ்வளவு என்பதும் 12 கோத்திரங்களுக்கும் தெரிவிக்கவும் பட்டது. ஒரே நாளில் அத்தனை கோத்திரங்களின் காணிக்கைகளையும் பெற்று அவசர அவசரமாக வரவு எழுதப்படவில்லை.

ஒரே நாளில் ஒரே ஒரு கோத்திரம் மட்டும் காணிக்கை படைக்க வாய்ப்பு பெற்றது. கொடுத்த அனைத்தும் விரிவாக விளக்கமாக எழுதப்பட்டது என்பதை எண்ணாகமம் 7-வது அதிகாரம் 10 முதல் 88 வசனங்களில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

எந்த நோக்கத்திற்காக காணிக்கை கொடுக்கப்பட்டதோ அந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காக மட்டுமே காணிக்கை பயன் படுத்தவும் பட்டது.

7-வதாக வரும் குறிப்பு அவர்கள் கொடுத்த காணிக்கை கர்த்தரை கனம் பண்ணுவதற்காக கொடுக்கப்பட்ட காணிக்கை என்பது ஆகும். மகன் தகப்பனை கனம் பண்ணுவது போன்று, பணிவிடைக்காரர்கள் எஜமான்களை கனம் பண்ணுவது போன்று, மீட்கப்பட்ட ஜனங்கள் கர்த்தரை கனம் பண்ணினார்கள். தங்களுக்கு அருமையாக தெரிந்தவைகளை அன்பாக எடுத்து வழங்கினார்கள். கர்த்தர் நடுவாக வீற்றிருக்கும் பொழுது ஒரு நன்மையும் அவர்களுக்கு குறைவுபடாது என்று அறிந்து கர்த்தரை கனம் பண்ணினார்கள். கர்த்தரை துதித்து வாழுவதும், கர்த்தரை மதித்து வாழுவதுமே வாழ்வின் சிறப்பு என்பதை அறிந்து அவர்கள் கர்த்தரை கனம் பண்ணினார்கள். என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் என்று 1 சாமுவேலின் புத்தகம் 2-வது அதிகாரம் 30-வது வசனம் கூறுகின்றது.

கர்த்தரை காணிக்கைகளால் கனம் பண்ணுவதற்கு அவர்கள் முந்தி கொண்டதற்கு காரணம் அதற்கு முன்னதாக அவர்கள் தங்களையே கர்த்தருக்கு காணிக்கையாக ஒப்படைத்து விட்டார்கள். கர்த்தரை கனம் பண்ணுகின்றவர்களை கர்த்தர் கனம் பண்ணுகின்றார். கர்த்தருக்கு கொடுக்கின்றவர்களுக்கு கர்த்தர் ஏராளம் திருப்பி கொடுக்கின்றார்.

மோசே தேவனோடே பேசும்படி ஆசரிப்பு கூடாரத்திற்குள் பிரவேசிக்கும் போது, தன்னோடே பேசுகிறவரின் சத்தம் சாட்சி பெட்டியின் மேலுள்ள கிருபாசனமான இரண்டு கேருபீன்களின் நடுவிலிருந்து உண்டாக கேட்பான்; அங்கே இருந்து அவனோடே பேசுவார். (எண். 7:89)

ஒரு இராஜா, தனக்கு உகந்த ஒரு மந்திரிக்கு தனியாக அவரிடம் பேச அனுமதி வழங்குவது போல, அண்ட சராசரங்களையும் படைத்த கர்த்தாதி கர்த்தர் மோசேக்கு அவ்விதமான ஒரு விசேஷித்த சலுகையை காட்டுகிறார். மோசே ஒரு ஆசாரியன் அல்ல. ஆனாலும் தேவனிடத்திலிருந்து என்ன செய்ய வேண்டும் என்ற கட்டளைகளை பெற்று கொள்ள அவரிடம் செல்லுகிறான். கர்த்தர் ஒவ்வொரு முறையும் யாத்திராகமம் 25:22ல் கொடுத்த வாக்குதத்தத்தை நிறைவேற்றுகிறார். ''அங்கே நான் உன்னை சந்திப்பேன்; கிருபாசனத்தின் மீதிலும் சாட்சி பெட்டியின் மேல் நிற்கும் இரண்டு கேரூபீன்களின் நடுவிலும் இருந்து நான் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்கு கற்பிக்க போகிறவைகளை எல்லாம்

உன்னோடே சொல்லுவேன்'' என்று அவர் உரைத்தபடியே அவன் ஆசரிப்பு கூடாரத்தின் உள் பிரவேசிக்கும் சமயம் கேட்பான். அது மோசேயின் கீழ்ப்படிதலுக்கு கர்த்தர் கொடுத்த வெகுமதி ஆகும். யோவான் 14:21-ல் நாம் பார்ப்பது போல் அவரிடத்தில் அன்பாக இருந்து, அவருடைய கற்பனைகளை கை கொள்ளுகிறவனுக்கு அவர் தம்மை வெளிபடுத்துகிறார்.

வார்த்தை மாமிசமாகி, நம் நடுவில் வாசம் பண்ணும் வரை கர்த்தர் இவ்வாறுதான் மனிதனிடம் பேசினார். அவர் இருந்து பேசிய கிருபாசனம், நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது. ''பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார்'' (எபி. 1:1,2a)

அத்தியாயம் - 9

இஸ்ரவேல் புத்திரரின் காணிக்கை லேவியர்

9.1 குத்து விளக்கு ஏற்ற கட்டளை

கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: நீ விளக்குகளை ஏற்றும் போது ஏழு விளக்குகளும் விளக்குத்தண்டிற்கு நேரே எரிய வேண்டும் என்று சொல் என்றார். கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்ட பிரகாரம் ஆரோன் செய்து, விளக்கு தண்டிற்கு நேரே ஒழுங்காக அதின் விளக்குகளை ஏற்றினான். இந்த குத்துவிளக்கு, அதின் பாதமுதல் பூக்கள் வரைக்கும் பொன்னினால் அடிப்பு வேலையாய் செய்யப்பட்டிருந்தது. கர்த்தர் மோசேக்கு காண்பித்த மாதிரியின்படியே அவன் குத்துவிளக்கை உண்டாக்கினான். (எண். 8:1-4)

குத்துவிளக்கு

குத்து விளக்கு சம்பந்தப்பட்ட ஒரு புதிய கட்டளை கர்த்தரிடமிருந்து வருகின்றது. கர்த்தர் மோசேயை அழைத்து அந்த விபரத்தை கூறுகின்றார். ஆரோனிடம் தான் கூறியதை சொல்லும்படியும் கேட்டு கொள்ளுகின்றார். குத்து விளக்கு செய்வது எப்படி என்றும் அதனை எரிய செய்வது எப்படி என்றும் யாத்திராகம புத்தகம் 25-வது அதிகாரம் 31 முதல் 40 வசனங்களில் பார்த்தோம். அதில் 37ம் வசனத்தில் குத்துவிளக்கின் ஏழு அகல்களும் நேரெதிராய் எரியும்படிக்கு ஏற்றப்பட வேண்டும் என்றும் பார்த்தோம்.

குத்து விளக்கை எரிய வைக்க வேண்டியது எப்படி என்று முன்னாக கூறப்பட்டது. இப்பொழுது குத்து விளக்கு பிரகாசிக்க வேண்டிய விதம் எப்படி என்று கூறப்படுகின்றது. எரிவதினால் உஷ்ணம் ஏற்படுகின்றது. யோவான் எரிந்து பிரகாசிக்கிற விளக்காக இருந்தான் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுவதை பரிசுத்த யோவான் 5-வது அதிகாரம் 35-வது வசனம் கூறுகின்றது. விசுவாசிகள் எரிந்து பிரகாசிக்க வேண்டும் என்பதை எண்ணாகம புத்தகம் 8-வது அதிகாரம் 1 முதல் 4 வசனங்கள் தெரியப்படுத்துகின்றது. குத்து விளக்கின் பிரகாசம் விளக்கு தண்டின் நேராக தெரிய வேண்டும் என்பது 2,3 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. குத்து விளக்கின் பிரகாசம் விளக்கு தண்டின் நேராக தெரியும் பொழுது முன்னாக இருக்கும் சமுகத்து அப்ப மேஜை பளிச்சிட்டு தெரியும். சமுகத்து அப்ப மேஜை ஜீவ அப்பமாகிய இயேசுவிற்கு அடையாளமாக இருக்கின்றது. விசுவாசிகள் எரிந்து பிரகாசிக்கும் பொழுது ஜீவ அப்பமாகிய இயேசு அனைவருக்கும் தெரிய வருவார். என் சிறு ஒளியை பிரகாசிக்க செய்வேன் என்று இதயத்தில் வாஞ்சை கொள்ளுவதற்கு விசுவாசிகளை

எண்ணாகம புத்தகம் 8-வது அதிகாரம் 1-4 வசனங்கள் உற்சாகப்படுத்துகின்றது. வெளிச்சம் மனுஷருக்கு முன்பாக பிரகாசிக்க வேண்டும் என்பதே எதிர் பார்ப்பு.

9.2 லேவியர்களின் பிரித்தெடுப்பும் பிரதிஷ்டையும்

எண்ணாகம புத்தகம் 8-வது அதிகாரம் 5-முதல் 22 வசனங்களில் கர்த்தருடைய ஊழியம் செய்வதற்கு லேவியர்களின் சுத்திகரிப்பு, அர்ப்பணிப்பு, ஊழியர் படைப்பு அனைத்தும் இடம் பெறுகின்றது. லேவியராகம புத்தகம் 8-வது அதிகாரத்தில் ஆரோனும் அவன் குமாரரும் ஆசாரியர்களாக படைக்கப்பட்டார்கள் என்பதை நாம் பார்த்தோம். இங்கு எண்ணாகம புத்தகம் 8-வது அதிகாரத்தில் லேவியர்கள் அவர்களது ஊழியர்களாக படைக்கப்படுகின்றார்கள். லேவியராகம புத்தகம் 8-வது அதிகாரத்தில் ஆசாரியர்களாக படைக்கப்பட்டவர்கள் மொத்தம் 5 பேர்கள் என்று பார்த்தோம். எண்ணாகம புத்தகம் 8-வது அதிகாரத்தில் ஊழியர்களாக படைக்கப்படுகின்றவர்கள் மொத்தம் 22 ஆயிரம் பேர்கள் என்று பார்க்கிறோம்.

ஓர் மாபெரும் பிரதிஷ்டை வைபவம் இடம் பெறுகின்றது. எண்ணாகமம் 3-வது அதிகாரத்தில் லேவியர்கள் எத்தனை பேர் என்று எண்ணப்பட்டார்கள். எண்ணாகம புத்தகம் 3-வது அதிகாரம் 39-வது வசனத்தில் அவர்கள் மொத்தம் இருபத்து இரண்டு ஆயிரம் பேர் என்று குறிக்க பட்டு உள்ளது. எண்ணாகம புத்தகம் 4-வது அதிகாரத்தில் 22 ஆயிரம் லேவியர்களில் மிகவும் கடினமாக உழைக்க கூடியவர்கள் எத்தனை பேர் என்று குறித்து எடுக்கப்பட்டார்கள். தொடர்ந்து வேலைகளை நேர்த்தியாக செய்து முடிப்பதற்கு தேவைப்பட்ட அனைத்து வாகன வசதிகளும் வழங்கப் பட்டன. லேவியராகம புத்தகம் 8-வது அதிகாரத்தில் அதிகார பூர்வமாக ஓர் வேலை நியமன கடிதம் அவர்கள் கையில் கொடுக்கப்படுகின்றது.

> ***பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் சந்ததியாரினின்று லேவியரை பிரித்தெடுத்து, அவர்களை சுத்திகரிப்பாயாக. அவர்களை சுத்திகரிக்கும்படி அவர்களுக்கு செய்ய வேண்டியதாவது: அவர்கள் மேல் சுத்திகரிக்கும் ஜலத்தை தெளிப்பாயாக. பின்பு அவர்கள் சர்வாங்க சவரம்பண்ணி, தங்கள் வஸ்திரங்களை தோய்த்து, தங்களை சுத்திகரிக்க கடவர்கள். (எண். 8:5-7)***

திட்டவட்டமான முறையில் கர்த்தருடைய பணியை நிறைவேற்றுவதற்கு திட்ட வட்டமான முறையில் அனைத்தும் செய்யப்படுகின்றது. நீ இஸ்ரவேல் சந்ததியாரினின்று லேவியரை பிரித்து எடுத்து அவர்களை சுத்திகரிப்பாயாக என்று பார்க்கிறோம். மீட்கப் பட்ட மக்கள் நடுவில் இருந்து முழு நேர ஊழியர்கள் தெரிந்து எடுக்கப்படுகின்றார்கள் என்பது தெளிவுபடுத்த படுகின்றது. எண்ணாகம புத்தகம் 8-வது அதிகாரம் 6,7 ஆகிய வசனங்களில் லேவியர்கள் பிரித்து எடுக்க படுவதையும் சுத்திகரிக்க படுவதையும் நாம் பார்க்கின்றோம்.

ஆரோனும் அவன் பிள்ளைகளும் ஆசாரியர்களாக அழைப்பு பெற்றார்கள் என்பதை லேவியராகமம் 8-வது அதிகாரத்தில் நாம் பார்த்தோம். அப்பொழுது அவர்கள் அபிஷேகம் செய்யப்பட்டார்கள். ஆனால் எண்ணாகம புத்தகம் 8வது அதிகாரத்தில் லேவியர்கள் அபிஷேகம் செய்யப்பட வில்லை. பிரித்து மட்டும் எடுக்க பட்டார்கள். பிரதிஷ்டை மட்டும் செய்யப்பட்டார்கள். அபிஷேகம் என்பது ஆசாரியர்களுக்கு மட்டுமே உரியது. பிரதிஷ்டை

என்பது சாதாரண முழுநேர ஊழியர்கள் எவருக்கும் உரியது. ஆசாரியர்கள் அபிஷேகம் செய்யப்படும் பொழுது கழுவப்பட்டார்கள் என்று லேவியராகமம் 8-வது அதிகாரத்தில் நாம் பார்த்தோம். ஊழியர்கள் பிரதிஷ்டை செய்யப்படும் பொழுது அவர்கள் மீது சுத்திகரிக்கும் ஜலம் தெளிக்க பட்டால் போதும் என்று எண்ணாகம் 8-வது அதிகாரம் 7-வது வசனம் கூறுகின்றது. ஆசாரியன் அபிஷேகம் செய்யப்படும் பொழுது புதிய வஸ்திரம் உடுத்துவிக்க பட்டார்கள் என்று லேவியராகமம் 8-வது அதிகாரம் 13-வது வசனம் கூறுகின்றது. ஆனால் ஊழியக்காரர்களாக பிரதிஷ்டை செய்யப்படும் பொழுது அப்படி எதுவும் இடம் பெறவில்லை. ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் உள்ளாக சென்று ஆராதனைகளை எடுத்து நடத்தும் அதிகாரத்தினை அவர்களுடைய உள்ளங்கைகளில் பெற்றார்கள். லேவியர்கள் பரிசுத்த ஸ்தலத்தின் முன்னாகவும் சுற்றிலும் நின்று ஆசாரியர்கள் கட்டளையிடும் அனைத்தையும் செய்வதற்கு கட்டளை பெற்றார்கள். சுத்திகரிக்கப்படுவதற்கு தேவைப்படும் பலிகள் அனைத்தும் முறைப்படி செலுத்தப்படுகின்றன. பாவ நிவாரண பலி என்பதில் இருந்து பலிகள் துவங்குகின்றன.

> *அப்பொழுது ஒரு காளையையும், அதற்கேற்ற எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவாகிய போஜனபலியையும் கொண்டுவரக்கடவர்கள்; பாவநிவாரண பலியாக வேறொரு காளையையும் நீ வாங்கி; லேவியரை ஆசரிப்பு கூடாரத்துக்கு முன் வரச்செய்து, இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரையும் கூடிவர பண்ணுவாயாக. நீ லேவியரை கர்த்தருடைய சந்நிதியில் வரப்பண்ணின போது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர் மேல் வைக்க கடவர்கள். லேவியர் கர்த்தருக்குரிய பணிவிடை செய்யும் பொருட்டு, ஆரோன் அவர்களை இஸ்ரவேல் புத்திரரின் காணிக்கையாக கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்படும் காணிக்கையாய் நிறுத்த கடவன். (எண். 8:8-11)*

இஸ்ரவேல் புத்திரரின் 11 கோத்திரத்தார் யுத்த சன்னத்தராய் புறப்பட்டு செல்ல தெரிந்தெடுக்க பட்டு விட்டார்கள். ஆயினும் அவர்கள் தலைப்பிள்ளை எல்லாம் கர்த்தரை சேர்ந்தவர்கள் என்று எகிப்தில் இருந்து அவர்களை விடுதலை செய்து அழைத்து வருகையில் கர்த்தர் கூறி விட்டார். இப்பொழுது தங்கள் தலைச்சன்களை மீட்டு கொண்டு அதற்கு பதிலாக லேவி புத்திரரை 11 கோத்திரத்தாரும் சேர்ந்து கர்த்தருக்கு காணிக்கையாக கொடுக்க பணிக்க படுகிறார்கள். லேவியர் கர்த்தருக்கு முன்னால் இஸ்ரவேல் மக்களின் அசைவாட்டும் காணிக்கையாக நிறுத்த படுகிறார்கள். இது ஒரு பெரிய வைபவமாக ஒரு முறை கொண்டாட படுகிறது. கர்த்தருக்கு ஊழியர் தேவை; மற்றோர் அவர்களை கர்த்தருக்காக அர்ப்பணிக்க தேவை.

முதலில் ஆரோனையும் அவன் குடும்பத்தாரையும் ஆசாரியர்களாக கர்த்தர் பிரித்து எடுத்தார். இப்பொழுது அவர்களுக்கு உதவ மற்ற எல்லா லேவி குடும்பத்தினரையும் பிரித்து எடுக்கின்றார்.

தொடர்ந்து பாவத்தை வெறுத்து பரிசுத்தத்தை நாடி வாழ்வதற்கு தங்களை முற்றிலுமாக ஒப்பு கொடுக்கிறோம் என்று அவர்கள் அடுத்த பலி செலுத்துகின்றார்கள். அதனுடைய பெயர் தகனபலி என்பது ஆகும். தகனபலி என்பது முற்றும் தங்களை வெறுத்து முற்றிலும் தங்களை கர்த்தருக்கு ஒப்பு கொடுப்பதற்கு அடையாளமாக இருக்கின்றது. மேலும் தொடர்ந்து

போஜனபலியும் இடம் பெறுகின்றது என்பதை 8-வது வசனம் கூறுகின்றது. பலிகள் அனைத்திலும் போஜனபலி ஒன்றுதான் ரத்தம் எதுவும் சம்பந்தப்படாத பலி ஆகும். அன்பு, சிநேகிதம், நம்பிக்கை அனைத்திற்கும் அடிப்படை அடையாளத்தை கொடுக்கும் பலியாக போஜனபலி இடம் பெறுகின்றது. தொடர்ந்து லேவியர்கள் அனைவரின் தலைகளிலும் மீட்கப்பட்ட ஜனங்கள் தங்கள் கைகளை வைக்கின்றார்கள் என்பதை 10-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம். ஊழியர்களாகிய உங்களுக்கு நாங்கள் பொறுப்பு எடுக்கின்றோம் என்று கைகளை வைக்கின்றார்கள். 22 ஆயிரம் ஊழியர்கள் ஒரே நேரத்தில் கர்த்தரின் ஊழியத்திற்கு படைக்கப்படுகின்றார்கள். அது ஒரு மாபெரும் ஊழியர் பிரதிஷ்டை வைபவமாக இடம் பெற்றது.

> *அதன்பின் லேவியர் தங்கள் கைகளை காளைகளுடைய தலையின் மேல் வைப்பார்களாக. பின்பு நீ லேவியருக்காக பாவநிவிர்த்தி செய்யும் பொருட்டு, கர்த்தருக்கு அவைகளில் ஒன்றை பாவநிவாரண பலியாகவும், மற்றொன்றை சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தி, லேவியரை ஆரோனுக்கும் அவன் குமாரனுக்கும் முன்பாக நிறுத்தி, அவர்களை கர்த்தருக்கு அசைவாட்டப்படும் காணிக்கையாக்கி, இப்படி நீ லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்தெடுக்க கடவாய். லேவியர் என்னுடையவர்களாய் இருப்பார்கள். இப்படி அவர்களை சுத்திகரித்து, அவர்களை அசைவாட்டும் காணிக்கையாக்க கடவாய். அதன் பின்பு லேவியர் ஆசரிப்பு கூடாரத்தில் பணிவிடை செய்ய பிரவேசிக்க கடவர்கள். (எண். 8:12-14)*

தாங்கள் அனைவரும் பாவிகள் என்பதை மனதார ஊழியர்கள் ஒப்பு கொள்ளுகின்றார்கள். தங்கள் சாமர்த்தியத்தினால் அல்ல, கர்த்தரின் தயவினால் தாங்கள் ஊழியத்திற்கு வந்தார்கள் என்பதை ஒப்பு கொள்ளுவதற்கு இசைவாக பலிகள் இடம் பெறுகின்றன. தங்களுடைய பாவத்தை நிவிர்த்தி செய்வதற்கு பாவ நிவாரண பலி துவங்குகின்றது. அதற்கு அறிகுறியாக லேவியர்கள் தங்கள் கைகளை பாவ நிவாரணபலியாக மாற இருக்கும் காளைகளின் தலையின் மீது வைக்க வேண்டும் என்று 12-வது வசனம் கூறுகின்றது. பாவ நிவாரண பலி செலுத்தபட்டது.

அதனை தொடர்ந்து அவர்கள் அனைவரும் அசைவாட்டும் காணிக்கையான அசைவாட்டும் பலியாக ஆரோனால் கர்த்தரின் பணிக்கு என்று நிறுத்தப்படுகின்றார்கள். லேவியர் கர்த்தருக்கு உரிய பணிவிடை செய்யும் பொழுது ஆரோன் அவர்களை கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் காணிக்கையாய் நிறுத்த கடவன் என்று எண்ணாகம புத்தகம் 8-வது அதிகாரம் 11-வது வசனம் கூறுகின்றது. அசைவாட்டப்படும் காணிக்கை லேவியராகம புத்தகம் 7-வது அதிகாரம் 29-36 வசனங்களில் தெளிவாக கூறப்பட்டது. காணிக்கையை கையில் மிகுந்த மரியாதையுடன் எடுத்து கர்த்தருக்கு நேராக நீட்டி பின்னர் கைகளை மடக்கி மறுபடியும் காணிக்கையை கர்த்தருக்கு நேராக நீட்டி மறுபடியும் மடக்கி ஏறெடுத்து செலுத்துவதே அசைவாட்டும் காணிக்கை என்பது ஆகும். அனைத்து ஈவுகளையும் உம்மிடத்தில் இருந்து நாங்கள் பெற்றோம் கர்த்தாவே. ஆகையினால் அவைகளை உமக்கு நேராக கையேந்தி தருகிறோம் என்றும், உமக்கு நேராக சமர்ப்பித்து பின்னதாக எங்களுக்கு நாங்கள் திருப்பி கொள்ளுகின்றோம் என்றும் அசைவாட்டும் காணிக்கை கூறுகின்றது. 22 ஆயிரம் ஊழியர்களை ஆரோன் அசைவாட்டும் காணிக்கையாக படைக்கின்றான்.

அனைவரும் ஆரோனை போல தங்கள் கைகளை கர்த்தருக்கு நேராக நீட்டுகின்றார்கள். தங்களை முற்றிலுமாக ஊழியத்திற்கு ஆரோன் தத்தம் செய்வதை மனப்பூர்வமாக ஒப்பு கொள்ளுகின்றார்கள். அதனை தொடர்ந்து அவர்கள் பணியும் தொடங்குகின்றது. கர்த்தருக்கு தங்களை அசைவாட்டும் காணிக்கையாக அர்ப்பணித்த நேரம் முதல் முழு நேர ஊழியம் செய்வதற்கு அனுமதி சீட்டு பெற்று கொண்டார்கள்.

9.3 லேவியர் கர்த்தருடைய பணியை செய்ய பணிக்க படுகின்றனர்

இப்படி அவர்களை சுத்திகரித்து, அவர்களை அசைவாட்டும் காணிக்கையாய் ஆக்கக்கடவாய்; அதன்பின்பு லேவியர் ஆசரிப்பு கூடாரத்தில் பணிவிடை செய்ய பிரவேசிக்க கடவர்கள். (எண். 8:15)

இதோ இராக்காலங்களில் கர்த்தருடைய ஆலயத்தில் நிற்கும் கர்த்தரின் ஊழியக்காரரே நீங்கள் எல்லாரும் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள். உங்கள் கைகளை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள்.

இஸ்ரவேல் புத்திரரிலிருந்து அவர்கள் எனக்கு முற்றிலும் கொடுக்க பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிலும் கர்ப்பம் திறந்து பிறக்கிற சகல முதற்பேறுக்கும் பதிலாக அவர்களை எனக்கு எடுத்து கொண்டேன். (எண். 8:16)

கடந்த வசனங்களில் நாம் மாபெரும் ஊழியர் பிரதிஷ்டை வைபவத்தை பார்த்தோம். அதனை தொடர்ந்து பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியர்கள் செய்ய வேண்டிய பணிகள் என்ன என்பதை நாம் பார்க்க இருக்கின்றோம். லேவியர்கள் அனைவரும் அசைவாட்டும் காணிக்கையாக ஆண்டவருக்கு அருளப்பட்டார்கள் என்பதை எண்ணாகமம் 8:5-15 வசனங்களில் கண்டோம். இப்பொழுது 16-26 வசனங்களில் முழு நேர பணிக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட அனைத்து லேவியர்களையும் அவர்கள் ஆற்ற வேண்டிய அனைத்து பணிகளையும் பார்க்க இருக்கின்றோம். இனிமேல் அவர்கள் முற்றிலும் கர்த்தருக்கு என்று உரியவர்கள் என்பதை 16-வது வசனம் உறுதிபடுத்துகின்றது. பிழைப்புக்கு அடுத்த எந்த அலுவல்களிலும் லேவியர்கள் சிக்கவே முடியாது என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். பின் வாங்கும் எந்த சிந்தனைகளும் அவர்கள் இருதயத்திலிருந்து பிறக்க முடியாது என்பதை கண்டு கொள்ளுகின்றோம். அவர்கள் முன் வைத்த காலை பின் எடுக்க முடியாது.

இஸ்ரவேல் புத்திரரில் மனிதரிலும் மிருக ஜீவன்களிலும் முதற்பேறானது எல்லாம் என்னுடையது. நான் எகிப்து தேசத்திலே முதற்பேறான யாவையும் சங்கரித்த நாளிலே அவைகளை எனக்கென்று பரிசுத்தப்படுத்தி, பின்பு லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறு சகலத்திற்கும் பதிலாக எடுத்து கொண்டு, லேவியர் இஸ்ரவேல் புத்திரருடைய பணிவிடையை ஆசரிப்பு கூடாரத்தில் செய்யும் படிக்கும், இஸ்ரவேல் புத்திரருக்காக பாவநிவிர்த்தி செய்யும்படிக்கும், இஸ்ரவேல் புத்திரர் தாங்களே பரிசுத்த ஸ்தலத்தில் சேருகிறதினால் இஸ்ரவேல் புத்திரரில் வாதை

உண்டாகாதபடிக்கும், லேவியரை அவர்களிலிருந்து எடுத்து, ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் தத்தமாக கொடுத்தேன் என்றார். (எண். 8:17-19)

முடிவு பரியந்தம் அவர்கள் முழு நேர ஊழியத்தில் நிலைத்து நிற்க வேண்டும். மிகுந்த பலனுக்கு ஏதுவான அவர்கள் விசுவாசத்திற்கு எவ்வித பங்கமும் வருவதற்கு அவர்கள் இடம் கொடுக்க முடியாது. கர்த்தர் அவர்களை தமக்கு என்று பிரித்துவிட்டார் என்று 13-வது வசனம் ஊர்ஜிதப்படுத்துகின்றது. எதற்காக கர்த்தர் அனைத்து லேவியர்களையும் தமது பணிக்கு என்று எடுத்து கொண்டார் என்பதை 18,19 ஆகிய 2 வசனங்களும் விளக்குகின்றன.

முதலாவதாக சகல ஜனங்களின் சார்பில் ஆசரிப்பு கூடாரத்தின் பணிகளை செய்வதற்கு ஆகும். ஏனெனில் சர்வ ஜனங்களின் சார்பில் லேவியர்களே முதற்பலன்களாக தெரிந்து எடுக்க பட்டார்கள். ஒவ்வொரு குடும்பத்தின் தலைப்பிள்ளையும் செய்ய வேண்டிய திருப்பணியை ஒரு கோத்திரமாக லேவியர்கள் ஏற்று கொண்டார்கள். அனைவர் சார்பிலும் அதனை ஏற்று கொண்டார்கள். அவர்கள் தவறி விட்டால் அனைவருமே தவறுவதற்கு சமமாக மாறிவிடும்.

அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையார் யாவரும் கர்த்தர் லேவியரை குறித்து மோசேக்கு கட்டளையிட்டபடி எல்லாம் லேவியருக்கு செய்தார்கள். (எண். 8:20)

மோசே, ஆரோன் இஸ்ரவேல் ஜனங்கள் அனைவரும் கர்த்தர் கூறிய வழிமுறைகளுக்கு கீழ்ப்படிந்தார்கள் என்பது திரும்பவும் கூறப்பட்டுள்ளது.

லேவியர் சுத்திகரிக்கப்பட்டு, தங்கள் வஸ்திரங்களை தோய்த்தார்கள். பின்பு ஆரோன் அவர்களை கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் காணிக்கையாக நிறுத்தி, அவர்களை சுத்திகரிக்க அவர்களுக்காக பாவநிவிர்த்தி செய்தான். (எண். 8:21)

லேவி கோத்திரத்தார் தங்கள் வஸ்திரங்களை தோய்த்து தங்களை சுத்தப்படுத்தி கொண்டார்கள். ஆரோன் அவர்களை கர்த்தருக்கு முன்பாக நிறுத்தி தங்கள் கடமைகளை அவர்கள் செவ்வனே செய்யும்படி காளைகளை பலிகளாக செலுத்தினான்.

அதற்கு பின்பு லேவியர் ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் முன்பாக ஆசரிப்பு கூடாரத்தில் தங்கள் பணிவிடையை செய்யும்படி பிரவேசித்தார்கள். கர்த்தர் லேவியரை குறித்து மோசேக்கு கட்டளையிட்டபடியே அவர்களுக்கு செய்தார்கள். (எண். 8:22)

பின்பு லேவியர்கள் ஆசரிப்பு கூடாரத்தில் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை செய்ய ஆரம்பித்தார்கள். கர்த்தர் இஸ்ரவேலர்களில் முதற்பிறந்தவர்களை தெரிந்து கொள்ளாமல் தன்னுடைய பணிகளை செய்யும்படி லேவி கோத்திரத்தாரை தெரிந்து கொண்டார்.

9.4 ஊழியம் செய்ய லேவியர்களின் வயது வரையறுப்பு

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: லேவியருக்குரிய கட்டளை என்னவென்றால்: இருபத்தைந்து வயது முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள யாவரும் ஆசரிப்பு கூடாரத்தின் பணிவிடையை செய்யும் சேனையிலே சேவிக்க வரவேண்டும். ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் வேலை செய்யாமல் திருப்பணி சேனையை விட்டு, ஆசரிப்பு கூடாரத்தின் காவலை காக்கிறதற்கு தங்கள் சகோதரரோடே கூட ஊழியம் செய்வதேயன்றி, வேறொரு சேவகமும் செய்ய வேண்டியதில்லை. இப்படி லேவியர் செய்ய வேண்டிய வேலைகளை குறித்து திட்டம் பண்ண கடவாய் என்றார். (எண். 8:23-26)

லேவியர்கள் 25 வயது முதல் 50 வயது வரை கடினமான வேலைகளை செய்தார்கள். இஸ்ரவேலர் பிரயாணம் பண்ணும்போது, ஆசரிப்பு கூடாரத்தின் பொருட்களை சுமந்து சென்றார்கள். 25 வயது வரை ஆசாரியன் அருகில் நின்று லேவியர் உதவி செய்யவில்லை. 50 வயது முதல் அவர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது. 50 வயதுக்கு மேல் அவர்கள் வேலை செய்ய விரும்பினால் புதிதாக வேலை செய்ய ஆரம்பிக்கும் லேவியருக்கு வேலைகளை கற்று கொடுக்கலாம் என்று பணிக்கபட்டது.

தொகுதி - 4
பிரயாணத்திற்கு முன் மேலும் ஆயத்தங்கள்

அத்தியாயம் - 10
சீனாய் வனாந்தரத்தில் பஸ்கா ஆசரிக்க கட்டளை

10.1 பஸ்கா பண்டிகை ஆசரிக்க கட்டளை

பஸ்கா பண்டிகை எப்படி ஆசரிக்க வேண்டும் என்று ஏற்கெனவே இஸ்ரவேல் மக்கள் கட்டளை பெற்றிருந்தார்கள். ஆனால் இப்போது அதை ஆசரிக்க கட்டளை வருகிறது. அது எப்போது? அது இஸ்ரவேல் மக்கள் எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் என்று பார்க்கிறோம். அதாவது ஒரு வருடம் முடிந்து அடுத்த வருடம் தொடங்குகையில் ஆகும். எங்கே? அது சீனாய் வனாந்தரத்தில் அவர்கள் பாளயம் இறங்கி இருக்கையில். எண்ணாகமம் முதல் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களில், ''இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் முதல் தேதியில் கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் இருக்கிற ஆசரிப்பு கூடாரத்திலே மோசேயை நோக்கி:'' என்று பார்க்கிறோம். ஆகவே இப்பொழுது எண். 9:1ல் நடந்த சம்பவம் இவ்வளவு அதிகாரங்களிலும் நடந்த சம்பவங்களுக்கு சுமார் அரை மாதம் அதாவது 14 நாட்கள் முன்னானது என்று பார்க்கிறோம். அது ஆசரிப்பு கூடாரம் நிறுவிய 14-ம் நாள் ஆகும். மக்களின் தொகை கணிப்பிற்கு முன்னால் பஸ்கா கொண்டாட கட்டளை பிறந்தது. அவர்கள் எகிப்தில் இருந்து வெளியே வந்த பிறகு உள்ள முதல் பஸ்கா இதுவே ஆகும். அதை ஒரு கட்டளையாக கூறாவிடின், அவர்கள் வாக்குத்தத்த பூமி சென்றடையும் வரை பஸ்கா கொண்டாட வேண்டிய அவசியமும் இல்லை. ''கர்த்தர் உங்களுக்கு சொன்னபடி கொடுக்க போகிற தேசத்திலே நீங்கள் போய் சேரும் போது இந்த ஆராதனையை கைகொள்ள கடவீர்கள்'' (யாத். 12:25). அதன் முதலாம் வருட ஆராதனை சரியாக ஒருவருடம் கழித்து வைக்க பட்டது. பஸ்கா பண்டிகை கொண்டாட தேவையான ஏராளமான ஆடுகளை அவர்கள், அருகில் வசிக்கும் மோசேயின் மாமனான எத்திரோவினிடம் இருந்தே பெற்று கொண்டு இருந்திருக்கலாம். எண். 3:1ல் அவன் ஓரேப் மலையின் அருகிலேயே வசித்ததை பார்க்கிறோம். அவர்களது நாற்பது வருட வனாந்தர வாழ்வில் அவர்கள் கொண்டாடிய பஸ்கா இந்த ஒன்றே. விருத்தசேதனம் இல்லாமல் அவர்கள் யாரும் பஸ்கா புசிக்க முடியாது. இதனை யாத்திராகம் 12:34,44,48 ஆகிய வசனங்களில் காணலாம். வனாந்தரத்தில் அவர்கள் விருத்தசேதனம் பண்ண முடிய வில்லை. ஆதலால் அவர்கள் பஸ்காவும் புசிக்க வில்லை. இந்த முதல் பஸ்கா ஆசரிப்பு விழா இடம் பெறுவதை 9-வது அதிகாரம் 1 முதல் 14 வசனங்கள் எடுத்து கூறுகின்றன. பஸ்கா ஆசரிப்பு யாத்திராகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் தேவனிடம் இருந்து பெற்ற கட்டளையாக வந்தது என்று பார்த்தோம். பஸ்கா ஆசரிப்பில் கலந்து கொள்ள முன் வந்த அனைவருக்கும் விடுதலை பாதையில் முன் நடக்கும் வாய்ப்பு கிடைத்தது. பார்வோனின் இரும்பு பிடியில் துரும்பாகி போனவர்கள் புதிய அரும்பு பெற்றார்கள். பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும் கர்த்தர் அவர்களை விடுவித்தார். அறிவுக்கு எட்டாத அதிசயங்கள் இடம் பெற்றன. ஆச்சரியமான அற்புதங்கள் நடைபெற்றன.

அத்தனை பெரிய ஒரு ஆரம்பத்தை அவர்கள் மறப்பது எப்படி? கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் காலம் என்பது அபகரிப்பது எப்படி? கர்த்தரிடம் தங்கள் பெற்றோர்கள் பெற்ற பெரிய ஓர் புதிய வாழ்வை பிள்ளைகள் அறிந்து கொள்ளாமல் இருப்பது எப்படி? சந்ததிகள் கொண்டாட வேண்டும் என்ற கட்டளை கர்த்தரால் பிறந்தது. பஸ்கா என்பதை பரம்பரையாக கொண்டாட வேண்டும் என்பது ஓர் கட்டளையாக கொடுக்கப்பட்டது. யாத்திராகம புத்தகம் 12-வது அதிகாரம் 25,26,27 ஆகிய வசனங்களை பார்ப்போம். ''கர்த்தர் உங்களுக்கு தாம் சொன்னபடி கொடுக்க போகிற தேசத்திலே நீங்கள் போய் சேரும் போது இந்த ஆராதனையை கைக்கொள்ள கடவீர்கள். அப்பொழுது உங்கள் பிள்ளைகள் இந்த ஆராதனையின் கருத்து என்ன என்று உங்களை கேட்டால் இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி. அவர் எகிப்தியரை அதம் பண்ணி நம்முடைய வீடுகளை தப்ப பண்ணின போது எகிப்தில் இருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளை கடந்து போனார் என்று நீங்கள் சொல்ல வேண்டும் என்றான். அப்பொழுது ஜனங்கள் தலை வணங்கி பணிந்து கொண்டார்கள்.''

அடிமையாய் போய்விட்ட வாழ்வில் இருந்து அகலவே முடியாது என்றவர்களுக்கு அறிவுக்கு எட்டாத ஓர் வாசல் திறந்தது. அதனை அனைத்து வருடமும் நினைத்து கொண்டாட வேண்டும். பிறப்பில் இருந்து இறப்பு வரை கைகட்டி வாழும் நிர்ப்பந்தத்தில் இருந்தவர்களுக்கு நொடிப்பொழுதில் புதிய ஒரு திரை திறந்தது.

> ***அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாதத்தில் கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் மோசேயை நோக்கி: குறித்த காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்க கடவர்கள். இந்த மாதம் பதினாலாம் தேதி அந்தி நேரமான வேளையாகிய குறித்த காலத்தில் அதை ஆசரிக்க கடவீர்கள். அதற்குரிய எல்லா கட்டளையின் படியேயும் முறைமைகளின் படியேயும் அதை ஆசரிக்க கடவீர்கள் என்றார். அப்படியே பஸ்காவை ஆசரிக்கும்படி மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளை இட்டான். (எண். 9:1-4)***

அவர்களுக்கு ஒரு புதிய விடுதலை எட்டியது. ஒரு புதிய வாசல் திறந்தது. அவை அனைத்திற்கும் காரணம் பஸ்கா ஆட்டு குட்டியின் இரத்தமே ஆகும். பார்வோனின் பிடியில் இருந்து வெளி வந்த நாள் ஓர் இன்ப நாள். என்றும் மறக்க முடியாத ஓர் இன்ப நாள். அந்த நன்னாளை சீனாய் வனாந்தரத்தில் நினைவு கூருங்கள் என்று எண்ணாகமம் 9-வது அதிகாரம் கூறுகின்றது.

நன்மை செய்தவரை நினைத்து போற்றுவதற்காக, புதிய சந்ததியில் கர்த்தர் பாராட்டின சொல்லி முடியாத ஈவுகளை புரிந்து கொள்ளுவதற்காக, பஸ்கா ஆசரிப்பு வைபவம் கானான் சென்ற பின்னர் கட்டாய வைபவமாக ஏற்படுத்த பட்டது. கர்த்தரின் கட்டளையின்படி கானான் பிரவேசித்த உடன் பஸ்கா கொண்டாட பட்டது என்பதை யோசுவாவின் புத்தகம் 5-வது அதிகாரம் 10-வது வசனம் கூறுகின்றது. கானான் பிரவேசித்த பின்னர் தவறாது நிறைவேற்றப்பட வேண்டிய பஸ்கா பண்டிகை சீனாய் வனாந்தரத்தில் சிறப்பாக கொண்டாடப்படுவதை பார்க்கின்றோம். பஸ்கா பண்டிகையின் போது பெற்ற விடுதலை மட்டுமல்ல, விடுதலை பெறுவதற்கு முன்னதாக கண்ட வாழ்கையும் நினைவு படுத்தப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. முன்னர் கண்ட வாழ்வின் சுமைகள் இனிமையாக தெரிய வில்லை. கசப்பு புளிப்பு என்ற இரண்டு சுவைகள் ஒவ்வொரு பஸ்கா அனுசரிப்பிலும்

நினைவு கூறப்படுகின்றது. அடிமைகளாக ஒடுங்கி கிடக்கும் பொழுது கண்ட கவலையினாலும் இட்ட கண்ணீரினாலும் வாழ்வு கசப்பாக மாறியது. கேட்கவும் யாருமில்லை. குறுக்கிடவும் கரங்கள் இல்லை. அவர்கள் இதயம் கொந்தளித்தது. உள் உணர்வுகள் இனியதாக இல்லை. கசப்பாகவே இருந்தது. எனவே பஸ்கா ஆசரிப்பு உணவில் கசப்பான கீரையும் சேர்க்கப்பட்டது. இனி அவ்விதமான ஓர் வாழ்வு நமக்கும் வேண்டாம் நமது சந்ததியினருக்கும் வேண்டாம் என்ற ஒரு உள்ளம் காக்கபடுவதற்காக வருடம் ஒரு முறை கசப்பான கீரையை அவர்கள் ருசித்து பார்க்க வேண்டும். கசப்பான வாழ்வில் இருந்து ஒரு விடுதலை பெற்று கொள்ள வாய்ப்பான வாசல் வந்து அவர்கள் முன்னால் நின்று விட்டது.

இன்று பிசைந்த மாவு இன்னும் புளிக்க வில்லை என்று நாளை வரை காத்து இருப்பார்கள் என்றால் வாய்ப்பு சென்று போய் விடும். நாளை வரை காத்து இருப்பவர்களுக்கு வாசல்படியில் நிற்பது மரணமே ஆகும். ஜீவன் என்பதோ இன்று வாசல் கதவை தட்டி கொண்டு நிற்கின்றது. மாவு புளிக்கவில்லை என்றாலும் புளிப்பு இல்லாத அப்பம் போதுமானது, விடுதலையே மேலானது என்று விடுதலை என்பதில் ஆத்திரமும் அவசரமும் ஆர்வமும் கொண்டவர்களுக்கு ஜீவன் வாசல்படியில் வந்து கூப்பிடுகின்றது. இந்த அனைத்து விவரங்களும் விளக்கங்களும் யாத்திராகம புத்தகம் 12-ம் அதிகாரத்தில் இருக்கின்றது. அவசியமான ஓர் தீர்மானத்தை செய்ய அநாவசியமான ஒரு கால தாமதம் வேண்டாம் என்பதற்கு புளிப்பு என்ற சுவை நினைவு ஊட்ட படுகின்றது. இதுவே அனுக்கிரக காலம் இதுவே இரட்சண்ய நாள் என்பதை கண்டும் மாவு புளிக்கும் வரை தரித்து இருந்தால் வந்த வாய்ப்புகள் கடந்து போய் விடும். இவ்வளவு பெரியதான இரட்சிப்பை கண்டும் பின்னர் பார்த்து கொள்ளுவோம் என்கின்றவர்களுக்கு எதிர் காலம் இருளாகவே தோன்றும். மீட்பு என்பது முன் வருகின்றவர்களுக்கு உரித்தானதாக இருக்கின்றது என்பதை புளிப்பு இல்லாத அப்பம் எடுத்து உரைக்கின்றது.

10.2 முதலாம் மாதம் பதினான்காம் நாள் பஸ்கா பண்டிகை ஆசரிப்பு

அதினால் முதலாம் மாதம் பதினான்காம் தேதி அந்தி நேரமான வேளையில், சீனாய் வனாந்தரத்தில் பஸ்காவை ஆசரித்தார்கள். கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடி எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள். (எண். 9:5)

கடந்த கால கண்ணீரின் நாட்களை கசப்பு நினைவு ஊட்டுகின்றது. அதற்கு முடிவு கட்ட எவ்வித கால தாமதமும் செய்ய வேண்டாம் என்று புளிப்பு நினைவு ஊட்டுகின்றது. விடியும் வரை காத்து இருப்பவர்களுக்கு கிருபை நீடிப்பது இல்லை. விடிந்து விட்டால் பார்க்க போவது கர்த்தரின் நியாயத்தீர்ப்புகள்தான். அவர்களுக்கு வந்த அழைப்பு அந்தி நேரமான மாலை வேளையில் வந்த அழைப்பு என்பதை யாத்திராகமம் 12-வது அதிகாரம் 6-வது வசனத்திலும், எண்ணாகம புத்தகம் 9-வது அதிகாரம் 5-வது வசனத்திலும் பார்க்கின்றோம். இராக்காலத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை எகிப்தில் இருந்து புறப்பட பண்ணினார் என்று உபாகம புத்தகம் 16-வது அதிகாரம் முதலாவது வசனம் கூறுகின்றது. கர்த்தர் கட்டளையிட்டபடி சீனாய் வனாந்திரத்தில் பஸ்கா அனுசரிப்பு வைபவம் இடம் பெற்றது என்பதை எண்ணாகமம் 9-வது அதிகாரம் 5-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம்.

10.3 பஸ்கா ஆசரிக்க தடை பட்டவர்கள்

அந்நாளில் சிலர் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்ட படியினால் பஸ்காவை ஆசரிக்க தகாதவர்களாய் இருந்தார்கள். அவர்கள் அந்நாளிலே மோசேக்கும் ஆரோனுக்கும் முன்பாக வந்து: நாங்கள் மனித பிரேதத்தினால் தீட்டு பட்டவர்கள். குறித்த காலத்தில் இஸ்ரவேல் புத்திரரோடே கூட கர்த்தருக்கு காணிக்கையை செலுத்தாதபடிக்கு, நாங்கள் விலக்கப்பட்டிருக்க வேண்டியது என்ன என்றார்கள். (எண். 9:6-7)

6 முதல் 14 வசனங்களில் இந்த உன்னதமான ஆசரிப்பில் பங்கு பெற முடியாமல் போன சிலர் மோசேயிடம் வந்து பேசுகின்றதை நாம் பார்க்கின்றோம்.

கர்த்தருடைய கட்டளைகளை அவர்கள் எவ்வித கேள்வியும் கேட்கவில்லை. மோசேயை எதிர்த்தும் அவர்கள் பேசவில்லை. அவ்விதமான ஓர் உள் உணர்வுடன் அவர்கள் செய்திருப்பார்கள் என்றால் கர்த்தரின் தண்டனைக்கு தப்பி இருந்திருக்க முடியாது. அவர்கள் மீது எவ்வித கோபமும் கர்த்தர் கொள்ளவில்லை. மோசேயும் அவர்கள் இருதயத்தின் நோக்கங்களை அறிந்து கொண்டான். பஸ்கா ஆசரிப்பில் பங்கு எடுக்கும் அளவிற்கு எங்களில் சிலர் தகுதி உள்ளவர்கள் அல்ல. தீட்டுப்பட்டவர்கள். ஆயினும் எங்களுக்கும் ஒரு வாய்ப்பு கிடைக்குமா என்று பணிந்த சிந்தையுடன் இதய வாஞ்சையுடன் வந்து கேட்டார்கள். இவர்கள் அந்நிய அக்கினியை எடுத்து வந்து மாண்டு போன ஆரோனின் குமாரர்களான நாதாப், அபியூ என்பவர்களின் சடலங்களை வெளியே எடுத்து சென்றவர்களாக இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

எந்த பாவியானாலும் தள்ள மாட்டேன் என்பவர் உண்மையாக தங்கள் தவறுகளை ஒப்பு கொள்ளுகின்றவர்களுக்கு இரக்கம் பாராட்டுவார். எனவே மோசே அவர்களிடம் அமைதலாக பேசுகின்றான்.

மோசே அவர்களை நோக்கி: பொறுங்கள் கர்த்தர் உங்களை குறித்து கட்டளை இடுவது என்ன என்று கேட்பேன் என்றான். (எண். 9:8)

தன்னை அவர்களைவிட சிறந்த பக்தியாளனாக காட்டுவதற்கு மோசே அவ்வாறு கூறவில்லை. அவர்களை தட்டி கழிப்பதற்கும் மோசே அவ்வாறு கூறவில்லை. மோசே கர்த்தரின் கருத்தை கேட்காமல் கருத்துக்கள் கூறியதும் இல்லை. கர்த்தரை தேடாமல் விடைகள் தேடப்படவில்லை. ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசினார் என்று யாத்திராகமம் 33-வது அதிகாரம் 11-வது வசனம் பகருகின்றது. யோசித்து சொல்லுகிறேன் என்று ஒரு போதும் மோசே கூறவில்லை. மற்றவர்களை கலந்து கூறுகின்றேன் என்று மோசே கூறியதும் இல்லை. கர்த்தரிடம் காத்திருந்து சொல்லுகிறேன் என்றான். உங்களுக்கும் இரங்கும் படி கர்த்தர் காத்து இருப்பார். உங்கள் மேல் மனது உருகும்படி எழுந்து இருப்பார்.

கர்த்தர் நீதி செய்கிற தேவன். அவருக்கு காத்து இருக்கிற அனைவரும் பாக்கியவான்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 30-வது அதிகாரம் 18-வது வசனம் கூறுகின்றது.

10.4 இரண்டாம் மாதம் பதினாலாம் தேதி பஸ்கா ஆசரிக்க அனுமதி

கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்களிலாகிலும் உங்கள் சந்ததியாரிலாகிலும் ஒருவன் பிரேதத்தினால் தீட்டு பட்டாலும், பிரயாணமாய் தூரம் போயிருந்தாலும், கர்த்தருக்கு பஸ்காவை ஆசரிக்க வேண்டும். அவர்கள் அதை இரண்டாம் மாதம் பதினாலாம் தேதி அந்தி நேரமான வேளையில் ஆசரித்து, அதை புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் புசித்து, விடியற்காலம் மட்டும் அதில் ஒன்றும் மீதியாக வைக்காமலும், அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும், பஸ்காவினுடைய சகல முறைமைகளின் படியும் அதை ஆசரிக்க கடவர்கள். (எண். 9:9-11)

அவர்கள் எகிப்தில் இருந்து வந்த இரண்டாம் வருடம் இரண்டாம் மாதம் முதல் நாள் கணக்கெடுப்பு நடந்தது. 12 நாட்கள் 12 கோத்திர பிரபுக்களும் தங்கள் காணிக்கைகளை வந்து படைத்தனர். அவை ஆசரிப்பு கூடாரத்தின் ஆராதனைக்கு மிக முக்கியமானவைகள். 13ம் நாள் அவர்கள் லேவி கோத்திரத்தாரை ஆசரிப்பு கூடார வேலைகளில் உதவி செய்ய தங்கள் காணிக்கையாக கொடுத்தனர். அதற்கு அடுத்த 14-ம் நாள் விடப்பட்டவர்கள் பஸ்கா பண்டிகையை கொண்டாடினர்.

''உன் சுய புத்தியின்மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளில் எல்லாம் அவரை நினைத்து கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வை படுத்துவார்'' என்று நீதிமொழிகள் 3-ம் அதிகாரம் 5, 6-வது வசனங்கள் கூறுகின்றன. மோசே கேட்டதற்கு கர்த்தர் ஏற்ற உத்தரவு கொடுத்தார். மகா சுத்தர். மகா வல்லவர். தகுதி அற்ற மனிதர் தங்களை தாழ்த்தும் பொழுது தயவு பாராட்டுகின்றார். தீட்டுப்பட்டவர்கள், பிரயாணமாய் சென்று விட்டவர்கள் ஆகியவர்க்கும் பஸ்காவை ஆசரிக்க ஒரு அனுமதி கொடுக்கின்றார். முதலாவது மாதம் இடம் பெற்ற பஸ்கா இனிதாக முடிந்து விட்டது. ஆயினும் இரண்டாவது மாதம் அவர்களுக்காக அதனை அனுசரிக்கட்டும் என்று கர்த்தர் கூறுவதை எண்ணாகம புத்தகம் 9-வது அதிகாரம் 11-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம்.

10.5 தகுதி பெற்றும் பஸ்கா ஆசரிக்காதவனுக்கு தண்டனை

ஒருவன் சுத்தம் உள்ளவனுமாய் பிரயாணம் போகாதவனுமாய் இருந்தும், பஸ்காவை ஆசரிக்காதே போனால், அந்த ஆத்துமா குறித்த காலத்தில் கர்த்தரின் பலியை செலுத்தாத படியினால் தன் ஜனத்தாரில் இராமல் அறுப்புண்டு போவான். அந்த மனிதன் தன் பாவத்தை சுமப்பான். (எண். 9:13)

ஏற்ற ஆயத்தம் பெற்று பஸ்காவை ஆசரிக்க ஒரு மாத கால அவகாசம் அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றது. 11-வது மணி வேளையில் வந்தாலும் பஸ்கா வழங்கும் விடுதலையில் பங்கு எடுப்பதற்கு வாசல் மூடாமல் திறந்தே இருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். ஆனால் அதனை அறிந்தும் அலட்சியம் செய்கின்றவர்கள் அறுப்புண்டு போவார்கள் என்று இந்த வசனம் எச்சரிக்கின்றது.

10.6 பரதேசியும் விரும்பினால் பஸ்கா ஆசரிக்கலாம்

ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி, கர்த்தருக்கு பஸ்காவை ஆசரிக்க வேண்டுமானால், அவன் அதை பஸ்காவின் கட்டளை படியும் அதின் முறைமையின் படியும் ஆசரிக்க கடவன். பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே கட்டளை இருக்க வேண்டும் என்று சொல் என்றார். (எண். 9:14)

கர்த்தரின் சமூகத்தில் பிரவேசிப்பதற்கு விரும்பும் எவருக்கும் எவ்வித தடைகளும் இல்லை. எவ்வித கட்டுபாடுகளும் அவனை கட்டு படுத்துவதும் இல்லை. சுதேசி பரதேசி என்ற பாகு பாடுகளும் இல்லை. தாகமான அனைவரும் ஓடி வந்து தங்கள் ஆத்தும தாகத்தை தீர்த்து கொள்ளலாம் என்பதே அறிவிப்பு. மனம் உள்ளவர்கள் எவரும் வந்து மன அமைதியை பெற்று கொள்ளலாம் என்பதே சத்தியம் ஆகும். மனிதர்களை பிரித்து பார்த்து கர்த்தர் பழகுவது இல்லை. மனித ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்ற பண்ணினார் என்று அப்போஸ்தலர் 17:26-வது வசனம் கூறுகின்றது.

அன்று அவர்கள் கண்ட பஸ்காவை இன்று இயேசுவில் காண்கின்றோம். நமது வாழ்வில் வரும் கசப்புகளை நமது சார்பில் இயேசு ஏற்று கொண்டார் என்பதை சங்கீதம் 69:21-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். நமது பாவங்களுக்காக அடிக்கப்பட்ட தேவ ஆட்டு குட்டியாக இயேசு மாறிவிட்டார் என்பதை பரிசுத்த யோவான் 1:29-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். பழைய பாவ வாழ்க்கையை தொலைத்து கட்ட வாய்ப்பு ஒன்று வாசலை தட்டி கொண்டு நிற்கின்றது என்பதை புரிந்து கொள்ளுகின்றோம்.

1 கொரிந்தியர் 5:7-வது வசனம்: ''ஆகையால் நீங்கள் புளிப்பு இல்லாதவர்களாய் இருக்கிறபடியே புதிதாய் பிசைந்த மாவாய் இருக்கும்படிக்கு பழைய புளித்த மாவை புறம்பே கழித்து போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டு இருக்கிறாரே. நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவின் இரத்தம் அனைத்து பாவங்களில் இருந்தும் விடுதலை தருகின்றது. பாவம் தரும் சம்பளமான மரணத்தின் பிடியில் இருந்தும் விடுதலை தருகின்றது. இன்ப கானான் காண செய்கின்றது.''

அத்தியாயம் - 11
வனாந்தர பிரயாணத்தில் வழி நடத்த போகும் கர்த்தரின் மேகம்

11.1 வாசஸ்தலத்தில் கர்த்தரின் பிரசன்னத்தை காட்டும் மேகம்

வாசஸ்தலம் ஸ்தாபனம் செய்யப்பட்ட நாளிலே, மேகமானது சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடிற்று. சாயங்காலமானபோது, வாசஸ்தலத்தின் மேல் அக்கினி மயமான ஒரு தோற்றம் உண்டாயிற்று. அது விடியற்கால மட்டும் இருந்தது. இப்படி நித்தமும் இருந்தது. பகலில் மேகமும், இரவில் அக்கினி தோற்றமும் அதை மூடி கொண்டிருந்தது. (எண். 9:15-16)

15-ம் வசனம் முதல் 23-ம் வசனம் வரை உள்ள வசனங்களுக்கு நாம் 'கர்த்தரின் வழி நடத்துதல்' என்று தலைப்பு கொடுக்கலாம். அடிமைத்தன வாழ்வில் இருந்து ஜனங்களை மீட்டு கொண்ட இரட்சகர் அவர்களை மீட்ட பின்னர் அப்படியே கைவிட்டுவிட்டு சென்று விடவில்லை என்பதை இந்த வசனங்களில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகிறோம். கர்த்தர் இரட்சித்தவர், தொடர்ந்து அவர்களை வழி நடத்தி கொண்டே இருக்கின்றார்.

இந்த அற்புதமான மேகத்தை குறித்து யாத்திராகம புத்தகம் 23:20-ல் கர்த்தர், ''வழியில் உன்னை காக்கிறதற்கும் நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னை கொண்டுபோய் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்'' என்று கூறினார்.

வாசஸ்தலம் ஸ்தாபனம் பண்ணப்பட்ட அந்த மாபெரும் நிகழ்ச்சியினை யாத்திராகம புத்தகம் 40-வது அதிகாரத்தில் நாம் கண்டோம். யாத்திராகமம் 40-வது அதிகாரம் 33, 34, 35 ஆகிய மூன்று வசனங்களையும் பார்ப்போம். ''பின்பு அவன் வாசஸ்தலத்தையும் பலிபீடத்தையும் சுற்றி பிராகாரத்தை நிறுத்தி பிராகாரத்தின் தொங்கு திரையை தொங்க வைத்தான். இவ்விதமாய் மோசே வேலையை முடித்தான். அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்பு கூடாரத்தை மூடினது. கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. மேகம் அதின் மேல் தங்கி கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதினால் மோசே ஆசரிப்பு கூடாரத்திற்குள் பிவேசிக்க கூடாமல் இருந்தது.''

மீட்கப்பட்ட ஜனங்களை வழி நடத்திய அந்த மேகம் இயற்கையாக நாம் பார்க்கும் அந்த மேகம் அல்ல. எரிமலைகள் வருவதினால் தோன்றிய மேகமும் அல்ல. அது கர்த்தர் கானான் செல்லும் மீட்கப் பட்ட மக்களுக்கு அருளிய அற்புதமான மேகம், ஆச்சரியமான மேகம், அதிசயமான மேகம்.

கர்த்தரின் ஆதீனத்தில் இருக்கும் மூன்று வகையான மேகங்களை குறித்து யோபுவின் புத்தகம் 37:11-13 வசனங்கள் கூறுகின்றன. ''அவர் நீர்த்துளிகளை மேகத்தில் ஏற்றி, மின்னலினால் மேகத்தை சிதற பண்ணுகிறார். அவர் அவைகளுக்கு கட்டளை இடுகிற யாவையும் அவைகள் பூச்சக்கரத்தில் நடப்பிக்கும்படி அவர் அவைகளை தம்முடைய ஞான

ஆலோனைகளின்படியே சுற்றி திரிய பண்ணுகிறார்.'' ஒன்றில் தண்டனையாகவும், ஒன்றில் தம்முடைய பூமிக்கு உபயோகமாகவும், ஒன்றில் கிருபையாகவும் அவைகளை வர பண்ணுகிறார் என்று பார்க்கின்றோம்.

மீட்கப்பட்ட ஜனங்கள் பெற்று கொண்ட மேகம் கிருபையாக கிடைத்த மேகம் ஆகும். அந்த மகிமை பொருந்திய மேகம் அவர்களுக்கு மூன்று முறையில் உற்சாகம் கொடுத்தது. முதலாவதாக கர்த்தர் அவர்களுடன் இருந்து கொண்டே இருக்கிறார் என்பதற்கு மகிமையின் மேகம் அவர்கள் நடுவில் தங்குவது ஒரு சான்றாக மாறிற்று. அவர்கள் கர்த்தருக்கு முற்றும் கீழ்ப்படிந்து வாழும் வரை கிருபையின் மேகம் அவர்களை விட்டு விலகுவதே இல்லை. ஆயினும் அவர்களுடைய மனம் கர்த்தர் மீது நாட்டம் கொள்ளாமல் பதட்டம் அடைய துவங்கும் பொழுது பாராமரிக்கும் மேகம் அவர்களை பட்சிக்கும் மேகமாகவும் மாறிவிட முடியும் என்பதை இன்னும் ஒரு சில அதிகாரங்களில் நாம் பார்க்க இருக்கின்றோம். பரிசுத்தம் குறையாத வாழ்வில், விசுவாசம் குன்றாத வாழ்வில் அவர்கள் உறுதியாக தரித்து இருக்கும் வரை கர்த்தர் அவர்களுடன் இருக்கிறார், கர்த்தர் அவர்களுக்கு சாதகமாகவே இருக்கிறார் என்பதற்கு கிருபை பொருந்திய மேகம் ஓர் அடையாளமாக காணப்படுகின்றது. இரண்டாவது கர்த்தர் அவர்களுக்கு முன் செல்லுகின்றார் என்பதற்கு மேகம் ஓர் சாட்சியாக காணப்படுகின்றது. பகலில் மேக தூணிலும் இரவில் அக்கினி தூணிலும் நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதை மற்றவர்கள் அறிந்து கொள்ளுகிறார்கள் என்று மோசே கூறுவதை எண்ணாகமம் 14:14-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். மூன்றாவதாக அவர்கள் கர்த்தருடையவர்கள் என்பது கர்த்தரின் மேகம் அவர்கள் நடுவில் தங்கி இருப்பதின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் கர்த்தருடையவர்கள் என்பதில் எவ்வித கேள்வி குறியும் வருவது இல்லை.

அவர்கள் பெற்று கொண்ட கிருபையின் மேகம் ஐந்து அரிய செயல்களை அவர்களுக்கு செய்ய இருக்கின்றது. கிருபையின் மேகம் கானான் வரை அவர்களை எடுத்து செல்ல பொறுப்பு எடுத்து கொண்டது. பாதை வனாந்தரமான பாதை. அந்த பாதையில் அவர்கள் தடுமாறி விழுந்து விடுவதற்கு, தவறி விழுந்து விடுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் கிருபையின் மேகத்தின் துணையினால் முடிவு பரியந்தம் தொடர்ந்து சென்று விடுவதற்கும் வாய்ப்பு இருக்கின்றது.

11.2 பிரயாணம் புறப்படவும், பாளயம் இறங்கவும் வழி நடத்த போகும் மேகம்

> *மேகம் கூடாரத்திலிருந்து மேலே எழும்பும் போது இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணுவார்கள். மேகம் தங்குமிடத்தில் இஸ்ரவேல் புத்திரர் பாளயம் இறங்குவார்கள். கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்படுவார்கள். கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயம் இறங்குவார்கள், மேகம் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கும் நாளெல்லாம் அவர்கள் பாளயத்தில் தங்கியிருப்பார்கள். (எண். 9:17-18)*

அதே போன்று மேகத்தின் ஆலோசனை, வழி நடத்துதலோடு துவங்கிய பிரயாணத்தை அவர்கள் எங்கும் நிறுத்தவே இல்லை என்பதை 17-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணப்படுவார்கள். கர்த்தர்

கட்டளையின் படியே பாளயம் இறங்குவார்கள். மேகம் வாசஸ்தலத்தின் மேல் தங்கி இருக்கும் நாள் எல்லாம் அவர்கள் பாளயத்தில் தங்கி இருப்பார்கள். கர்த்தருடைய ஆலோசனையை பெற்று மட்டுமே வாழ வேண்டும் என்பதில் அவர்கள் கருத்தாய் இருந்தார்கள்.

நமது அன்றாடக கிறிஸ்தவ வாழ்விலும் கர்த்தரின் சமுக பிரசன்னம் விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கபடுகிறது. அதை உணர்ந்து, அறிந்து, அவருடைய வழி நடத்துதலின்படி செய்கிற ஒவ்வொருவருக்கும் அவர் எண்ண முடியாத கிருபைகளை அள்ளி கொட்டுகிறார்.

மேகம் நெடுநாள் வாசஸ்தலத்தின் மேல் தங்கி இருக்கும் போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்படாமல் கர்த்தரின் காவலை காத்து கொண்டு இருப்பார்கள். மேகம் சிலநாள் மாத்திரம் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கும் போது, கர்த்தருடைய கட்டளையின் படியே பாளயம் இறங்கியிருந்து, கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணப்படுவார்கள். மேகம் சாயங்காலம் தொடங்கி விடியற்கால மட்டும் இருந்து, விடியற் காலத்தில் உயர எழும்பும்போது, உடனே பிரயாண படுவார்கள். பகலிலாகிலும் இரவிலாகிலும் மேகம் எழும்பும்போது பிரயாண படுவார்கள். மேகமானது இரண்டு நாளாவது ஒரு மாதமாவது ஒரு வருஷமாவது வாசஸ்தலத்தின் மேல் தங்கி இருக்கும் போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணாமல் பாளயம் இறங்கியிருப்பார்கள். அது உயர எழும்பும் போதோ பிரயாண படுவார்கள். கர்த்தருடைய கட்டளையின் படியே பாளயம் இறங்குவார்கள் கர்த்தருடைய கட்டளையின் படியே பிரயாணம் பண்ணுவார்கள். கர்த்தர் மோசேயை கொண்டு கட்டளை இடுகிறபடியே கர்த்தருடைய காவலை காத்து கொள்வார்கள். (எண். 9:19-23)

மேகம் நெடுநாள் வாசஸ்தலத்தின் மேல் தங்கி இருக்குமானால் அவர்களும் நெடுநாட்களாக பிரயாணப்படாமல் தங்கியே இருந்தார்கள். அவ்விதமான நாட்களில் நேரங்களை வீணாக போக்கடிக்காமல் கர்த்தரின் காவலில் காத்து கொண்டு இருப்பார்கள் என்பது கர்த்தரின் பாதத்தில் தரித்து இருப்பார்கள் என்பதே ஆகும்.

கிருபையின் மேகம் அவர்களுக்கு செய்ய இருக்கும் நான்காவது உதவி, மேகம் துணை நிற்கும் வரை பிரயாணம் அவர்களுக்கு தடைபட போவதே இல்லை என்பதாகும். அவர்கள் எடுக்க இருக்கும் பிராயணத்தில் எத்தனையோ எதிர்ப்புகள் வர இருக்கின்றது. ஆயினும் பிரயாணத்தில் அவர்களுக்கு எதிராக வரும் எதிர்ப்புகள் அவர்களை வெல்ல முடியாது. சேர வேண்டிய இடத்தில் சேதம் எதுவும் இல்லாமல் அவர்கள் போய் சேருவதற்கு கிருபையின் மேகம் துணை செய்யும்.

ஐந்தாவது அவர்கள் நலமும், வளமும் பெற்று வாழ்வதற்கு மேகம் உதவி செய்ய இருக்கின்றது. மேகம் மேலாக நின்று நடத்தும் வரை பசி தாகம் என்பதை பற்றி கவலை அவர்களுக்கு வரப்போவது இல்லை. அவர்களுடைய அனைத்து தேவைகளும் அவர்கள் நினைப்பதற்கும் வேண்டி கொள்ளுகிறதற்கும் அதிகமாக பூர்த்தி செய்யப்பட இருக்கின்றது. தேவனுடைய காவல் அவர்களுக்கு உண்டு. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 4:5-வது வசனம் பாருங்கள். ''அப்பொழுது கர்த்தர் சீயோன் மலையில் உள்ள எல்லா வாசஸ்தலங்களிலும் அதின் சபைகளின் மேலும் பகலில் மேகத்தையும், புகையையும்,

இரவில் கொழுந்து விட்டு எரியும் அக்கினி பிரகாசத்தையும் உண்டாக்குவார். மகிமையானவைகளின் மேலெல்லாம் காவல் உண்டாகி இருக்கும்''.

கர்த்தரின் கட்டளையின் படியே தங்கினார்கள் என்றும் கர்த்தரின் கட்டளையின்படியே புறப்பட்டார்கள் என்றும் எண்ணாகம புத்தகம் ୨-வது அதிகாரம் முற்று பெறுகின்றது. மேகம் கர்த்தரின் பிரசன்னத்தை மிக பிரத்தியட்சமாக காட்டியதால் அவர்களுடைய வாழ்வு கர்த்தரின் வழிநடத்துதலோடு பின்னி பிணைந்து காணபட்டது.

அத்தியாயம் - 12
நிர்வாக தொடர்புகள் வரையறுக்க படுகின்றன

12.1 பாளயங்களை பிரயாண படுத்த பூரிகைகள்

எண்ணாகமம் 10-வது அதிகாரம் முதலாவது பகுதியான 1 முதல் 10 வசனங்களில் கர்த்தர் இஸ்ரவேல் மக்களை பெரிய பிரயாணத்திற்கு ஆயத்த படுத்துவது தொடர்கின்றது. மோசே ஆரோன் ஆகிய இருவருக்கும் ஜனங்களுக்கும் நடுவில் மிகவும் சீரான தொடர்பு முறைகள் அறிமுகப்படுத்த படுகின்றன. நிர்வாகத்தை எடுத்து நடத்துகின்றவர்களுக்கும் நிர்வாகத்தின் அடியில் இருக்கின்றவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு அவசியம் என்பதை இந்த வசனங்கள் காட்டுகின்றன. உத்தரவு கொடுக்கின்றவர்களுக்கும் உத்தரவை பெற்று கொள்ளுகின்றவர்களுக்கும் மிகவும் நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும் என்பது அவசியப்படுகிறது. ஆறு லட்சத்திற்கும் அதிகமான ஜனங்களை மோசே தலைமை தாங்கி நடத்துகின்றான். அந்த அதிகமான ஜனங்கள் தங்கும் இடம் சுமார் 10 சதுர மைல் கொண்டதாக இருக்கின்றது என்பதை நாம் அறிந்து இருக்கின்றோம். மோசேயிடம் இருந்தும், ஆரோனிடம் இருந்தும், ஆணைகளும் அறிவிப்புகளும் அன்றாடம் சென்று கொண்டே இருக்க வேண்டும். நமக்கு இன்று இருக்கும் நவீன வசதிகள் எதுவும் அன்று அவர்களுக்கு இல்லை. ஆயினும் தொடர்பு என்பது மிகவும் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் இடம் பெற்றது. தொடர்பு என்பது மிகவும் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் இடம் பெறவில்லை என்றால் நிர்வாகங்கள் முடங்கி போகும்.

இன்னும் ஒரு சில தினங்களில் அவர்கள் பிரயாணத்தை துவங்க இருக்கின்றார்கள். அவர்கள் பிரயாணத்தை துவங்கும் நேரத்தில் வரிசை வரிசையாக வந்து நிற்க வேண்டும். இதனை எண்ணாகம புத்தகம் இரண்டாம் அதிகாரம் ஏற்கெனவே கூறியுள்ளது. கானான் நோக்கி புறப்பட வேண்டும். மோசே ஆரோன் என்பவர்கள் முன்னால் வரிசையில் நின்று கூறுவது பின்னான வரிசையில் நிற்கின்ற அனைவருக்கும் மிகவும் தெளிவாக கேட்க வேண்டும். அதற்கு ஏற்ற குறிப்புகள் எண்ணாகம புத்தகம் 10-வது அதிகாரம் 1 முதல் 10 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது.

> ***கர்த்தர் மோசேயை நோக்கி: சபையை கூடி வரவழைப்பதற்கும் பாளயங்களை பிரயாண படுத்துவதற்கும் உபயோகமாக இரண்டு வெள்ளி பூரிகைகளை செய்து கொள்வாயாக. அவைகள் ஒரே வெள்ளி தகட்டால் செய்யப்படவேண்டும். (எண். 10:1-2)***

கர்த்தர் மோசேயை ஒரு தொடர்பு நிலையம் அமைக்க கூறுகின்றார். வெள்ளியினால் செய்யப்பட்ட இரண்டு பூரிகைகளை கொண்ட ஒரு தொடர்பு நிலையத்தை மோசே உருவாக்க வேண்டும். இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் காரியம் நிலைவரப்பட வேண்டும் என்று பரிசுத்த மத்தேயு 18-வது அதிகாரம் 16-வது வசனமும், 2 கொரிந்தியர் 13-வது அதிகாரம் முதல் வசனமும் கூறுகின்றன. இரண்டு பூரிகைகள் இரண்டு சாட்சிகள் போல் நின்று கொண்டு ஜனங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒலிக்க இருக்கின்றன. அவைகள் இரண்டும் வெள்ளியினால் செய்யப்பட்ட பூரிகைகள் என்பதை நாம் அறிந்து கொண்டோம்.

வெள்ளி பூரிகைகள்

யூபிலி வருடம் தோன்றி விட்டது என்பதை எக்காளம் தொனித்து தெரிவித்தார்கள். யூபிலி வருடம் என்பது கடன், கண்ணீர், கஷ்டம், பாவம், அடிமைத்தனம் அனைத்திலும் இருந்து விடுதலை என்பதற்கு ஊதப்பட்ட எக்காளம் என்பது ஆகும். யூபிலி வருடத்தில் ஊதப்பட்ட எக்காளம் வெள்ளியினால் செய்யப்பட்ட எக்காளம் அல்ல. அது ஆட்டுக்கொம்பினால் செய்யப்பட்ட எக்காளம் ஆகும். பாவம், மரணம், அடிமைத்தனம் என்பதில் இருந்து விடுதலை கொடுக்கும் தேவ ஆட்டு குட்டியான கிறிஸ்து அருளும் விடுதலையினை அந்த ஆட்டு கொம்பு எக்காளம் முன் அறிவித்தது. பாவம் அடிமைத்தனம் என்பதில் இருந்து விடுதலை பெற்றவர்கள் இப்பொழுது கானான் சுதந்தரிப்பதற்கு வரிசை அமைக்கின்றார்கள். அதற்கு ஊதப்படும் பூரிகை விடுதலையின் எக்காளம் அல்ல. வெற்றியின் பூரிகை ஆகும். ஆட்டு கொம்பினால் செய்யப்பட்ட எக்காளம் அல்ல. வெள்ளியினால் செய்யப்பட்ட பூரிகை ஆகும். வெற்றியின் ஜீவியத்தில் முன் செல்லும் அவர்களுக்கு இரண்டு வெள்ளி பூரிகைகள் ஊதப்பட வேண்டும். இரண்டு பூரிகை வெற்றியின் எக்காளமாக அவர்களுக்கு காணப்பட்டது.

> ***அவைகளை ஊதும் போது, சபையார் எல்லாரும் ஆசரிப்பு கூடாரவாசலில் உன்னிடத்தில் கூடிவர வேண்டும். ஒன்றை மாத்திரம் ஊதினால் இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்கு தலைவராகிய பிரபுக்கள் உன்னிடத்தில் கூடிவர கடவர்கள். நீங்கள் அவைகளை பெருந்தொனியாய் முழங்கும்போது, கிழக்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்பட கடவது. அவைகளை நீங்கள் இரண்டாம் தரம் பெரும் தொனியாய் முழக்கும் போது, தெற்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்பட கடவது; அவர்களை பிரயாண படுத்துவதற்கு பெருந்தொனியாய் முழக்க வேண்டும். சபையை கூட்டுகிறதற்கு நீங்கள் ஊதவேண்டியதே அன்றி பெரும் தொனியாய் முழக்க வேண்டாம். (எண். 10:3-7)***

இரண்டு பூரிகைகளை உருவாக்க மோசே பணிக்க பட்டான். அவை சபையாரை அழைப்பதற்காகவும் பாளயங்களை புறப்பட செய்வதற்காகவும் ஆகும். எப்பொழுதெல்லாம் இந்த எக்காளங்கள் தொனிக்க பட வேண்டும்? முதலாவதாக இரண்டையும் ஊதினால் சபையார் எல்லாரும் ஆசரிப்பு கூடார வாசலுக்கு வரவேண்டும். இரண்டாவதாக ஒரே ஒரு எக்காளத்தை மட்டும் ஊதினால் ஆயிரம் பேருக்கு தலைவரான பிரபுக்கள் மட்டும் எழுந்து வர வேண்டும். மூன்றாவதாக பெரும் தொனியாய் அவைகள் ஊதப்படும் போது முதலில் கிழக்கே பாளயம் இறங்கி இருக்கும் யூதாவின் தலைமையிலான பாளயம் புறப்பட வேண்டும். நாலாவதாக பெரும் தொனியாய் எக்காளம் ஊதுகையில் தெற்கே பாளயம் இறங்கி இருக்கும் இரண்டாம் பாளயம் புறப்பட வேண்டும். இப்படி பாளயம் பாளயமாக புறப்பட வேண்டும்.

ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் பூரிகைகளை ஊதக்கடவர்கள். உங்கள் தலைமுறை தோறும் இது உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்க கடவது. உங்கள் தேசத்தில் உங்களை துன்பப்படுத்துகிற சத்துருவுக்கு விரோதமாக யுத்தத்திற்கு போகும் போது, பூரிகைகளை பெருந்தொனியாய் முழக்க கடவீர்கள்; அப்பொழுது உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்திலே நீங்கள் நினைவு கூறப்பட்டு, உங்கள் பகைஞருக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவீர்கள். உங்கள் மகிழ்ச்சியின் நாளிலும், உங்கள் பண்டிகைகளிலும், மாத பிறப்புகளிலும், உங்கள் சர்வாங்க தகனபலிகளும் சமாதான பலிகளும் செலுத்தப்படும்போது பூரிகைகளை ஊதவேண்டும் அப்பொழுது அவைகள் உங்கள் தேவனுடைய சமுகத்தில் உங்களுக்கு ஞாபக குறியாயிருக்கும் நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்றார். (எண். 10:8-10)

ஐந்தாவதாக அவர்கள் யுத்தத்திற்கு புறப்பட்டு செல்கையில் அவற்றை பெரும் தொனியில் ஊத வேண்டும். ஆறாவதாக பண்டிகை நாட்களிலும் அவர்கள் பூரிகைகளை ஊத வேண்டும். இதில் மாத பிறப்புகளும் அடங்கும். ஏழாவதாக பலிகள் செலுத்தபடும் போது பூரிகைகளை ஞாபக குறியாக ஊத வேண்டும் என்று பார்க்கிறோம்.

ஆசாரியர்கள் மட்டுமே எக்காளம் ஊதலாம். ஆரோனின் இரு குமாரர்களாகிய எலியேசரும் இதாமாரும் மட்டுமே பூரிகை ஊதலாம். ஆகவே இரு பூரிகைகளே செய்யபட்டன. யோசுவாவின் காலத்தில் ஏழு ஆசாரியர்கள் இருந்ததால் ஏழு பூரிகைகள் ஊத பட்டன. ஆனால் அவைகள் ஆட்டு கடாக்களின் கொம்புகளினால் செய்ய பட்டன (யோசுவா 6:4). சாலமோன் ராஜாவின் காலத்தில் ஆசாரியரின் எண்ணிக்கை 120 ஆக உயர்ந்தது. ஆகவே அவர்கள் 120 பூரிகைகளை ஊதினர் (2 நாளா. 5:12). முதல் நூற்றாண்டு சரித்திர ஆசிரியராகிய யோசிபஸ் என்பவர் அந்த இரண்டு பூரிகைகளும் நிறத்திலும் அகலத்திலும் வேறுபட்டதாக இருந்திருக்கும் என்று கருதுகிறார். இரண்டின் தொனியும் மாறுபட்டதாக இருந்ததால், யார், எதற்காக அழைக்கிறார்கள் என்பதை சுலபமாக புரிந்து கொள்ளலாம்.

பரம கானான் நோக்கி செல்லும் விசுவாசிகளுக்கும் இரண்டு எக்காளங்கள் கையில் கொடுக்கப்படுகின்றன. ஒன்று தனி ஜெபம் என்பது ஆகும். மற்றொன்று வேத வசனம் என்பது ஆகும். மோசேயினால் வெள்ளியினால் செய்யப்பட்ட எக்காளம் மூன்று நோக்கங்களுக்காக செய்யப்பட்டது. மூன்று நோக்கங்களுக்காக அந்த எக்காளங்கள் தொனிக்கப்பட வேண்டும். மூன்று நோக்கத்திற்கும் மூன்று வித்தியாசமான தொனியில் தொனிக்கப்பட வேண்டும். சபையார்கள் கூடிவர வேண்டும் என்பதை அறிவிக்க ஓர் தனி தொனியுடன் எக்காளங்கள் தொனிக்கப்பட வேண்டும். ஆபத்து அபாயம் என்பவைகள் வரும் பொழுது அதனை ஜனங்களுக்கு அறிவிப்பதற்கு வித்தியாசமான தொனியில் தொனிக்க வேண்டும். பண்டிகை மகிழ்ச்சி என்பதை தெரிவிக்க பிறிதொரு தொனியில் ஓலிக்க வேண்டும். எந்த எந்த தொனியில் ஒலித்தால் என்ன என்ன செய்ய வேண்டும் என்பதை மக்கள் அனைவரும் மிகவும் தெளிவாக அறிந்து இருந்தமைக்கு ஒரு காரணம் அவனுக்கும் அவனுக்கு அடியில் இருந்த அனைவருக்கும் நடுவில் இருந்த தெளிவான திட்டவட்டமான தொடர்பு முறைகளே ஆகும். அவைகள் அவனது சுய புத்தியினால் உருவான தொடர்பு முறைகள் அல்ல. கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஆலோசனைகள் ஆகும்.

எண்ணாகம புத்தகத்தை நான்கு பகுதிகளாக பிரித்து நாம் பார்க்க இருக்கின்றோம் என்பதை ஆரம்பத்தில் நாம் அறிந்தோம். அதன் முதல் பகுதி எண்ணாகமம் 10-வது அதிகாரம் 10-வது வசனத்துடன் நிறைவு பெறுகின்றது. எண்ணாகம புத்தகம் 10-வது அதிகாரம் 11-வது வசனம் முதல் இரண்டாவது பகுதிக்குள் பிரவேசிக்கின்றோம். இரண்டாம் பகுதியில் 10-வது அதிகாரம் 11-வது வசனம் முதல் 14-வது அதிகாரம் 45-வது வசனம் வரை அடங்கி உள்ளது.

யாத்திராகமம் 19-வது அதிகாரம் 1-வது வசனம் முதல் எண்ணாகமம் 10-வது அதிகாரம் 10-வது வசனம் வரை சீனாய் வனாந்திரத்தில் தான் அவர்கள் தங்கி இருந்தார்கள். அது சுமார் ஒரு வருட கால வாழ்வு ஆகும். எகிப்தில் இருந்து வெளி வந்து செங்கடலையும் கடந்து சீனாய் மலை அடிவாரம் சேர்ந்தது எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் முதல் நாள் ஆகும். எகிப்தில் இருந்து சீனாய் மலை வந்து சேர அவர்களுக்கு இரண்டு மாதங்கள் எடுத்தது. கூடாரங்கள் அடித்து ஆசரிப்பு கூடாரமும் அமைத்து அவர்கள் தங்கி இருந்த காலம் யாத்திராகமம் 19-வது அதிகாரம் 1-வது வசனம் முதல் எண்ணாகமம் 10-வது அதிகாரம் 10-வது வசனம் வரை உள்ள காலங்கள் ஆகும். அது முதல் வருடத்தின் 10 மாதங்களையும் இரண்டாவது வருடத்தின் 1 மாதம் 20 நாட்களையும் கொண்டது ஆகும் (எண். 10:11).

இப்பொழுது அவர்கள் புறப்பட போகின்றார்கள். 10 கட்டளைகள், தேவனுடைய உடன்படிக்கை பெட்டி, கிருபையின் மேகம், அக்கினி ஸ்தம்பம் அனைத்தும் அற்புதமாக பெற்று புறப்பட இருக்கின்றார்கள். அவர்களது பிரயாணத்தில் பல கட்டங்கள் இருந்தன. அவர்களது பிரயாணத்தின் முதல் கட்டம் 10-வது அதிகாரம் 11-வது வசனம் துவங்கியது. 14-வது அதிகாரம் 45-வது வசனத்தில் முடிந்தது.

இந்த முதல் கட்ட பிரயாணத்தில் அவர்களின் அகச்சோர்பு, அவசியமற்ற ஆசைகள், அதன் விளைவுகள் அனைத்தையும் அடுத்த பகுதியில் இருந்து நாம் காண இருக்கின்றோம். எல்லாம் சாதகமாக இருந்தால் சந்தோஷம் என்றும், எதுவும் பாதிக்கப்பட்டு விட்டால் பதட்டம் என்றும் இருக்கும் மக்களாக அவர்களில் அநேகர் இருப்பதை நாம் காண இருக்கின்றோம். எண்ணாகமம் 10-வது அதிகாரம் 11-வது வசனத்தில் மேகம் வாசஸ்தலத்தில் இருந்து உயர எழும்புவதையும் 12-வது வசனத்தில் வெள்ளியினால் செய்யப்பட்ட இரண்டு பூரிகைகளும் ஒலிக்க படுவதையும் கேட்க இருக்கின்றோம். பிரயாணப்படுவதற்கு சபை மக்களை ஒன்று திரள செய்யும் தொனியில் எக்காளம் ஒலிக்கின்றது. எகிப்தில் இருந்து புறப்பட்டு ஒரு வருஷம் ஒரு மாதம் 20 நாட்கள் முற்று பெற்றது. கானான் நோக்கி செல்லுவதற்கு கொடுக்கப்பட வேண்டிய முன் ஆலோசனைகள் முன் எச்சரிப்புகள் அனைத்தும் கொடுக்கப்பட்டது. முன் நின்று நடத்தும் மேகமும் அக்கினி ஸ்தம்பமும் அனைத்தும் அருளப்பட்டது. வாசஸ்தலத்தில் இருந்து மேகம் உயரமாக எழும்பி விட்டது. அதற்கு ஆதாரமாக வெள்ளி எக்காளம் இரண்டும் ஊதப்பட்டது.

தொகுதி - 5
இஸ்ரவேல் மக்கள் கானானை நோக்கி முதல் கட்ட பிரயாணம்

அத்தியாயம் - 13
மனித உதவியை நாடிய மோசே

13.1 முதல் கட்ட வனாந்தர பிரயாணம் புறப்பட்ட வரிசை ஒழுங்குகள்

இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் இருபதாம் தேதியில் மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் மீதிலிருந்து உயர எழும்பிற்று. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்தில் இருந்து தங்கள் பிரயாண வரிசைகளாய் புறப்பட்டார்கள், மேகம் பாரான் வனாந்தரத்தில் தங்கிற்று. (எண். 10:11-12)

இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் இருபதாம் தேதியில் மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் மீதில் இருந்து உயர எழும்பிற்று. யாத்திராகமம் 40-ம் அதிகாரம் 34-ம் வசனத்தில் ஒரு மேகம் ஆசரிப்பு கூடாரத்தை மூடியதை நாம் பார்த்தோம். கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை மூடியது. கர்த்தருடைய பிரசன்னம் அவர்கள் மத்தியில் தங்கி தாபரித்தது. 35-ம் வசனத்தில் மேகம் மேலே எழும்பும் போது இஸ்ரவேல் மக்கள் பிரயாணம் புறப்பட வேண்டும் என்று நாம் பார்த்தோம். கர்த்தருடைய மேகம் ஆசரிப்பு கூடாரத்தில் இறங்கிய நாள் அவர்கள் எகிப்தில் இருந்து விடுதலை பெற்று வந்த இரண்டாம் வருடம் முதல் மாதம் முதலாம் நாள் என்று எண்ணாகமம் 40:2-ம் வசனத்தில் கண்டோம். ஒரு மாதமும் 20 நாட்களும் கடந்து சென்று விட்டன. 6 இலட்சம் யுத்த வீரர் குடும்பங்களுடனும் மிருக ஜீவன்களுடனும் புறப்பட்டு வனாந்தர வழியே கானான் செல்ல எல்லா ஆயத்தங்களும் செய்தாகி விட்டது. இப்பொழுது மேகம் மக்களின் கண்களுக்கு பிரத்தியட்சமாக உயரே எழும்பிற்று. அவர்கள் உடனே புறப்பட்டு விட வேண்டும். வெள்ளி பூரிகைகளை வேகமாக ஆசாரியர்களாகிய எலியேசரும் இத்தாமாரும் ஊதுகின்றனர்.

அப்பொழுது ஜனங்கள் தங்கள் பிரயாண வரிசைகளாக புறப்பட்டார்கள். அவர்களது பிரயாண வரிசைக்கு ஏற்றபடி வெள்ளி தகட்டால் செய்யப்பட்ட பூரிகைகளினால் எக்கள சத்தம் ஊதப்பட்டது. பிரயாண வரிசை ஏழு வகையாக பிரிக்கப்பட்டது. அந்த வரிசையின் ஒழுங்கு முறைகள் எண்ணாகமம் 2-வது அதிகாரம் 1 முதல் 31 வசனங்களில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கபட்ட வரிசை பிரகாரம் அவர்கள் புறப்படுகின்றனர். முதல் பாளயமான யூதாவின் பாளயம் இசக்கார், செபுலோன் கோத்திரங்களோடு தங்கள் தங்கள் கொடிகளின் அடியில் ஆரவாரத்தோடு தங்கள் கூடாரங்களை கழற்றி சுமந்து கொண்டு தங்கள் குடும்பம், ஆடு மாடுகள் சகிதம் ஆசரிப்பு கூடாரத்தின் முன்னால், கிழக்கே இருந்து புறப்படுகின்றனர். இரண்டாவதாக ரூபன் கோத்திரம் சிமியோன், காத் கோத்திரங்களுடன் தெற்கே இருந்து புறப்படுகின்றனர். அதற்குள் ஆசாரியர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்தையும், பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்து பொதிந்து விட்டனர். பரிசுத்த பொருட்களை கர்த்தர் கூறிய

பிரகாரம் மூடி விட்டனர். லேவியர்கள் அவைகளை எடுத்து செல்ல வந்து விட்டனர். கெர்சோன் குடும்பத்தினர் தங்களுக்கு கொடுக்க பட்ட இரண்டு கூண்டில் வண்டிகளில் தொங்கு திரைகள் யாவற்றையும் ஏற்றி விட்டனர். மெராரி குடும்பத்தினர் எல்லா தூண்களையும் பலகைகளையும் தங்களுக்கு கொடுக்கபட்ட நான்கு கூண்டில் வண்டிகளில் ஏற்றி விட்டனர். கோகாத்தியர் பத்திரமாக தங்கள் பொறுப்பில் ஒப்புவிக்க பட்ட பரிசுத்த பொருட்களை தங்கள் தோள்களில் சுமந்து கொண்டு நடக்க ஆரம்பிக்கின்றனர். அவர்கள் பின்னால் ஆசரிப்பு கூடாரம் ஏற்ற பட்ட கூண்டில் வண்டிகள் காளைகள் பொருத்த பட்டு பிரயாணம் துவங்குகின்றது. பின்னர் மேற்கு, வடக்கே உள்ள பாளயங்கள் புறப்பட்டு வருகின்றன. அது ஒரு கண்கொள்ளா காட்சி! கர்த்தர் உருவாக்கிய ஒரு தேசமாக, கர்த்தரை பின்பற்றும் மக்களாக, வாக்குதத்த பூமி நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டனர்.

மேகம் பாரான் வனாந்தரத்தில் தங்கிற்று என்று 12-ம் வசனத்தில் பார்க்கிறோம். எகிப்தை விட்டு வர ஒரு வருடம் முன்னால் கர்த்தர் கிருபை செய்தார். அது அற்புதங்களும் அடையாளங்களும் நிறைந்த விடுதலை பிரயாணம். இப்பொழுது ஒரு அழகான அமைதியான சீனாய் மலையில் அடைக்கலம் புகுந்தவர்களாய், தாங்கள் யார், என்ன செய்வதற்காக, யாரால் அழைக்க பட்டவர்கள் என்பதை உணர்ந்தவர்களாய், எல்லாவிதமான பொறுப்புகளும் குறிப்புகளும் பெற்று, அண்டசராசரங்களையும் படைத்த சர்வ வல்லவராகிய கர்த்தரின் பிரசன்னம் தங்கள் நடுவில் இருக்க, அவரது மேகம் அவர்களுக்கு முன்னால் செல்ல, சீனாய் வனாந்தரத்தில் இருந்து திட்டவட்டமாக இலக்கை நோக்கி செல்ல வெளியே வந்தார்கள். மேகம் பாரான் வனாந்தரம் தொட்டு தங்கிற்று. அவர்களும் தங்க ஆயத்தம் ஆனார்கள்.

இப்படியே கர்த்தர் மோசேயை கொண்டு கட்டளையிட்டபடி முதல் பிரயாணம் பண்ணினார்கள். (எண். 10:13)

கர்த்தர் இஸ்ரவேல் மக்களை ஒரு பெரிய பிரயாணத்திற்காக ஆயத்தபடுத்தி, கற்பனைகள், பிரமாணங்கள், ஒழுங்கு முறைகள், பிரயாணத்தில் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளும் முறை யாவும் கொடுத்த பின் 6 இலட்சம் மனிதர்கள் கொண்ட இஸ்ரவேலின் மக்கள் கூட்டம், கொடுக்க பட்ட ஒழுங்குகளின்படி எடுத்த முதல் பிரயாணம் இதுவே ஆகும். இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் 20-ம் தேதியில் புறப்பட்டார்கள் என்று பார்க்கிறோம். இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் 14ம் நாளில் விடப்பட்டவர்களும் தீட்டு பட்டிருந்தவர்களுமாக ஆகிய யாவரும் பஸ்கா கொண்டாடி தீர்ந்தது. இந்த ஆறு நாட்களும் பண்டிகை முடிந்து, பூரிகைகளை செய்து, ஒரு கோத்திரமும் மற்ற கோத்திரமும் பிரயாண படுகையில் தூரமாக இருக்கையில் எப்படி ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்வது என்றும் ஒத்திகை செய்து கொண்டார்கள்.

யூதா சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே முதல் புறப்பட்டது; அவனுடைய சேனைக்கு அம்மினதாபின் குமாரன் நகசோன் தலைவனாயிருந்தான். இசக்கார் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு சுவாரின் குமாரன் நெதனெயேல் தலைவனாயிருந்தான். செபுலோன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஏலோனின் குமாரன் எலியாப் தலைவனாயிருந்தான். (எண். 10:14-16)

முதலாவது பிரயாணம் புறப்பட்டது சிங்கம் வரைந்த கொடியை பிடித்திருந்த யூதா கோத்திரமே ஆகும். சிங்கத்தை போன்ற வீரம் கொண்டவர்கள் அவர்கள். பாய்ந்து செல்ல கூடிய திறமை பெற்றவர்கள். விரோதியை வீழ்த்த வல்லவர்கள். அவர்கள் பின்னால் இசக்கார்,

செபுலோன் கோத்திரத்தினர் தங்கள் தங்கள் கொடிகளோடு, தங்கள் தலைவரின் பின்னால் வம்ச வாரியாக வாசஸ்தலம் இறங்க வேண்டிய இடத்திற்கு கிழக்கு புறமாக, பாரான் வனாந்தரத்தில் பாளயம் இறங்கினர்.

அப்பொழுது வாசஸ்தலம் இறக்கி வைக்கப்பட்டது; அதை கெர்சோன் புத்திரரும் மெராரி புத்திரரும் சுமந்து கொண்டு புறப்பட்டார்கள். (எண். 10:17)

யூதா பாளயத்திற்கும் இரண்டாம் பாளயமான ரூபன் பாளயத்திற்கும் நடுவே லேவியின் சந்ததியாரான கெர்சோன் புத்திரரும் மெராரி புத்திரரும் கூண்டு வண்டில்களில் தொங்கு திரைகளையும், தூண்கள், பலகைகள் முதலியவற்றையும் ஏற்றி வந்தார்கள். பாளயங்களுக்கு நடுவாக ஆசரிப்பு கூடாரம் கொண்டு வந்த லேவி கோத்திரம் நின்றது. பாளயம் இறங்கும் இடத்தில் முதலில் ஆசரிப்பு கூடாரம் அமைக்க இது உதவியாக இருந்தது.

ஆசரிப்பு கூடாரத்திற்கு முன்னால் கிழக்காக பாளயம் இறங்கி இருந்தது யூதா கோத்திரமும் அவர்களடியில் இசக்கார், செபுலோன் கோத்திரங்களும் ஆகும். அவர் கொடியோடு யூதாவின் தலைவனாகிய நகசோன் கெம்பீரமாக முன்னால் செல்ல, மூன்று கோத்திரங்களும் வம்சாவாரியாக அவனை பின் பற்றினார்கள். அப்பொழுது வாசஸ்தலம் இறக்கி வைக்க பட்டது. எல்லா விரிப்புகளையும், மூடுதிரைகளையும், தொங்கு திரைகளையும் வரிசையாக மடித்து கெர்சோன் புத்திரர் தங்களுக்கு கொடுக்க பட்ட இரு மூடு வண்டிகளில் ஏற்றினார்கள். மெராரி புத்திரருக்கோ 4 மூடு வண்டிகள் கொடுக்க பட்டிருந்தன. அவற்றில் தங்க தகடுகளால் மூட பட்ட தூண்களும், பலகைகளும் கிரமமாக ஏற்ற பட்டிருந்தன.

அதற்கு பின்பு ரூபன் சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே புறப்பட்டது; அவனுடைய சேனைக்கு சேதேயூரின் குமாரன் எலிசூர் தலைவனாயிருந்தான். சிமியோன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு சூரிஷதாயின் குமாரன் செலூமியேல் தலைவனாயிருந்தான். காத் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு தேகுவேலின் குமாரன் எலியாசாப் தலைவனாயிருந்தான். (எண். 10:18-20)

பாரான் வனாந்தரம் சேர்ந்ததும் வாசஸ்தலம் இறக்கி வைக்க பட்டது என்று 17-ம் வசனத்தில் பார்த்தோம். இங்கு 18-ம் வசனத்தில் 'அதற்கு பின்பு' என்று பார்க்கிறோம். அவ்வளவு நீளமாக 'இஸ்ரவேல்' என்று கர்த்தர் உருவாக்க போகும் தேசத்தின் ஜனத்திரளின் வரிசை இருந்தது என்பதை இங்கு காண்கிறோம். ரூபன் சந்ததியார் முன் செல்ல, சிமியோன், காத் சந்ததியார் அவர்களை பின் தொடர, ரூபனின் பாளயம் சீனாய் மலையில் இருந்து புறப்பட்டது என்று நாம் இங்கு அறிகின்றோம். அவ்வளவு அழகாக தொடர்புகள் வரையறுக்கபட்டு இருந்தன.

தன் வாலிப வயதில் எகிப்தின் சேனைகளை யுத்தங்களுக்கு நடத்தி சென்ற மோசே, தன் முதிர் வயதில் கர்த்தரின் சேனைகளை கானான் என்ற வாக்கு தத்த பூமிக்கு அழைத்து செல்கிறான்.

கோகாத்தியர் பரிசுத்தமானவைகளை சுமந்து கொண்டு புறப்பட்டார்கள்; இவர்கள் வந்து சேரும் முன் மற்றவர்கள் வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணுவார்கள். (எண். 10:21)

யூதா பாளயம் சென்ற பின்னர் கெர்சோன் புத்தரரும் மெராரி புத்திரரும் 6 கூண்டில் வண்டிகளில் ஆசரிப்பு கூடாரம் போட வேண்டிய பொருட்களை எடுத்து சென்றனர். அவர்கள் அதனை அடுத்ததாக பாளயம் இறங்கும் இடத்தில் இறக்கி வைத்த பின்னர் ரூபனின் பாளயம் மூன்று கோத்திரமாக புறப்பட்டு ஆசரிப்பு கூடாரம் அமைக்கும் இடத்திற்கு தெற்காக சென்று பாளயம் இறங்கியது. அதன் பின்னர் கோகாத் புத்திரர் பரிசுத்தமான பொருட்களாகிய மகா பரிசுத்தமான இரு கேரூபின்களை கொண்ட உடன்படிக்கை பெட்டியையும், பரிசுத்தமான பொருட்களாகிய சமூகத்தப்ப மேசை, தூபபீடம், பொன் குத்துவிளக்கு, பலிபீடம், நீர் தொட்டி முதலியவைகளை மூடபட்டவைகளாக தங்கள் தோள்களில் சுமந்து கொண்டு புறப்பட்டனர். கெர்சோன் புத்திரரும் மெராரி புத்திரரும் வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணி முடிக்கையில் கோகாத் புத்திரர் பத்திரமாக பயபக்தியுடன் வந்து சேர்ந்து விடுவார்கள். பாளயம் இறங்கிய இடத்தில் ஆசரிப்பு கூடாரத்தில் அவைகள் வைக்க பட வேண்டும்.

> *அதற்குப்பின்பு, எப்பிராயீம் சந்ததியாருடைய பாளயத்தின் கொடி, அவர்கள் சேனைகளோடே புறப்பட்டது; அவனுடைய சேனைக்கு அம்மியூதின் குமாரன் எலிஷாமா தலைவனாயிருந்தான். மனாசே சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு பெதாசூரின் குமாரன் கமாலியேல் தலைவனாயிருந்தான். பென்யமீன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு கீதெயோனின் குமாரன் அபீதான் தலைவனாயிருந்தான். (எண். 10:22-24)*

எக்காளம் ஊதபட்டதும் எப்பிராயீம், மனாசே, பென்யமீன் கோத்திரத்தினர் எப்பிராயீமின் பாளயமாக தங்கள் தங்கள் கொடிகளுடன், தங்கள் தங்கள் தலைவனின் பின் புறப்பட்டு சென்றனர். இவர்கள் வாசஸ்தலத்தின் வடக்கே பாளயம் இறங்க வேண்டும்.

> *அதற்கு பின்பு, தாண் சந்ததியாருடைய பாளையத்தின் கொடி சகல பாளயங்களுக்கும் பின்னாக அவர்கள் சேனைகளோடே புறப்பட்டது; அவனுடைய சேனைக்கு அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர் தலைவனாயிருந்தான். ஆசேர் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஓகிரானின் குமாரன் பாகியேல் தலைவனாயிருந்தான். நப்தலி சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஏனானின் குமாரன் அகீரா தலைவனாயிருந்தான். (எண். 10:25-27)*

கடைசி பாளயம் தாண் கோத்திர தலைமையில் புறப்பட்டது. இவர்கள் ஆசரிப்பு கூடாரத்தின் வடக்கே பாளயம் இறங்க வேண்டும்.

> *இஸ்ரவேல் புத்திரர் புறப்பட்டபோது, இவ்விதமாய் தங்கள் தங்கள் சேனைகளின்படியே பிரயாணம் பண்ணினார்கள். (எண். 10:28)*

இவ்வாறாக மிகுந்த பாதுகாப்புடன் ஆசரிப்பு கூடாரம் எடுத்து செல்லபட்டு, அமைக்கபட்டு, அதன் நான்கு புறமும் 12 கோத்திரங்கள் கொண்ட ஆறு இலட்சத்திற்கும் மேலான குடும்பங்கள் வரிசை வரிசையாக, ஒழுங்கும் கிரமமுமாக பாளயம் இறங்கினர். அந்த கோத்திரங்களின் வரிசையாவன:

1. யூதாவின் தலைமையில் உள்ள இசக்கார், செபுலோன் கோத்திரங்கள் முதல் வரிசையை அமைக்க வேண்டும்.

2. அவர்களுக்கு அடுத்தாற் போல் ஆசரிப்பு கூடாரத்தின் திரைகள், பலகைகள், தூண்கள் அனைத்தும் எடுத்து வரும் கெர்சோம், மெராரி என்ற லேவியரின் இரண்டு குடும்பங்களும் இரண்டாவது வரிசையை அமைக்க வேண்டும்.

3. ரூபன் தலைமையில் உள்ள சிமியோன் காத் கோத்திரத்தார் மூன்றாவது வரிசையில் செல்ல வேண்டும்.

4. நான்காவது வரிசையில் ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்த பொருட்களை சுமந்து வரும் கோகாத்தியர் புறப்பட வேண்டும். அந்த ஒழுங்கு முறைப்படி மோசே ஆரோன் ஆகிய இரண்டு பேரின் தலைமையில் லேவியர்களால் தோளில் சுமந்து செல்லப்படும் உடன்படிக்கை பெட்டி எடுத்து செல்லப்பட வேண்டும்.

5. ஐந்தாவது வரிசையில் எப்பிராயீம் தலைமையில் உள்ள மனாசே, பெஞ்சமின் கோத்திரங்களும்,

6. ஆறாவது வரிசையில் தாண் தலைமையில் உள்ள ஆசேர் நப்தலி கோத்திரங்களும் வந்து நிற்க வேண்டும்.

ஆறு வரிசைகளும் புறப்படுகையில் ஒவ்வொரு வரிசைக்கு முன்னும் எல்லா வரிசைகளும் சென்ற பின்னுமாக 7 முறை வெள்ளி எக்காளம் ஊதப்பட வேண்டும்.

எண்ணாகம புத்தகத்தில் ஏழு முறை ஊதப்படும் எக்காளம், வெளிப்படுத்தின விசேஷத்தில் ஊதப்படும் 7 எக்காளங்களுக்கு முன் அடையாளமாக காணப்படுகின்றது. வெளிப்படுத்தின விசேஷத்தில் ஊதப்படும் 7 எக்காளங்களில் முதல் 4 எக்காளங்கள் எகிப்தில் கர்த்தரால் கொடுக்கப்பட்ட நான்கு வாதைகளை எடுத்து உரைக்கின்றது. அடுத்த மூன்று எக்காளங்களும் கானான் நோக்கி செல்லும் மீட்கப்பட்ட ஜனங்களுக்கு எதிராக வரும் சகல உபத்திரவங்களையும் எடுத்து உரைக்கின்றது. மீட்கப்பட்ட ஜனங்களின் எல்லா உபத்திரவங்களில் இருந்தும் அவர்களை காப்பாற்றுவதற்கு, வழி நடத்துவதற்கு, சேர வேண்டிய இடத்தில் சேர்ப்பதற்கு கிருபையின் மேகம் முன் செல்லுகின்றது. ஆசாரியர்களும் முன் செல்லுகின்றார்கள். மோசே முன் செல்லுகின்றான். அவர்கள் கண்கள் முன்னாக பார்க்கும் வரை வேதனைகள் அவர்களை விரட்ட போவது இல்லை. துக்கங்கள் தேவனைவிட்டு அவர்களை துரத்த போவதும் இல்லை. கண்ணீரும் கவலைகளும் அவர்களை பின்னாக தள்ள போவதும் இல்லை. பிரயாணத்தை துவக்கியவரும் முடிக்க வல்லமை உள்ளவருமான கர்த்தர் மீது கண் பதிக்கும்வரை வெற்றி வெற்றி என்ற வரவேற்பு வளையங்கள் வழி எங்கும் தெரியவே செய்கின்றது.

'நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும். கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.'' நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்.

13.2 பிரயாணத்தில் ஓபாவின் உதவியை தேடும் மோசே

அப்பொழுது மோசே தன் மாமனாகிய ரெகுவேல் என்னும் மீதியானனுடைய குமாரனாகிய ஓபாவை நோக்கி: உங்களுக்கு தருவேன் என்று கர்த்தர் சொன்ன ஸ்தலத்துக்கு நாங்கள் பிரயாணம் போகிறோம். நீயும் எங்களோடே கூட வா, உனக்கு நன்மை செய்வோம்; கர்த்தர் இஸ்ரவேலுக்கு நல்ல வாக்குத்தத்தம் பண்ணி இருக்கிறார் என்றான். அதற்கு அவன்: நான் வரக்கூடாது; என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும்

போக வேண்டும் என்றான். அப்பொழுது மோசே: நீ எங்களை விட்டு போக வேண்டாம்; வனாந்தரத்திலே நாங்கள் பாளயம் இறங்கும் இடங்களை நீ அறிந்திருக்கிறபடியினால், எங்களுக்கு கண்களை போல இருப்பாய். நீ எங்களோடே கூட வந்தால், கர்த்தர் எங்களுக்கு செய்தருளும் நன்மையின்படியே உனக்கும் நன்மை செய்வோம் என்றான். (எண். 10:29-32)

மோசே, அவனது மனைவியின் சகோதரன் ஓபா என்ற இருவருக்கும் நடுவில் இடம் பெறும் உரையாடல் 29 முதல் 32 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. மோசேயின் மாமனாரின் பெயர் எத்திரோ அல்லது ரெகுவேல் என்பது ஆகும். மோசேயின் மனைவியுடைய சகோதரனுடைய பெயர் ஓபா என்பது ஆகும். மோசேயின் மாமனாகிய ரெகுவேல் என்னும் மீதியானுடைய குமாரனாகிய ஓபா என்று ஓபா அறிமுகப்படுத்த படுகின்றான். மோசேயின் மாமனாரின் பெயர் அவரை பற்றிய விவரங்கள் அனைத்தும் யாத்திராகம புத்தகம் 2-வது அதிகாரம் 18-வது வசனத்திலும் 3-வது அதிகாரம் முதல் வசனத்திலும், 4-வது அதிகாரம் 18-வது வசனத்திலும் தொடர்ந்து யாத்திராகம புத்தகம் 18-வது அதிகாரம் முழுவதிலும் கொடுக்கப்பட்டு உள்ளது. எத்திரோ, ரெகுவேல் என்ற இரண்டு பெயர்களால் மோசேயின் மாமன் அழைக்கப்பட்டான்.

இதுவரை மோசேயுடன் இருந்த ஓபா கானான் நோக்கி செல்ல இருக்கும் வரிசையில் இணைந்து கொள்ளுவதற்கு மோசேயினால் அழைக்க படுகின்றான். மோசே தனது சகோதரியின் கணவன் என்ற முறையில் அல்ல. மோசே தேவனுடைய மனிதன் என்ற முறையில் ஓபா இப்பொழுது கானான் நோக்கி செல்லும் பிரயாணத்தில் இணைவதற்கு அழைக்க படுகின்றான். ஓபா ஓர் முக்கியமான தீர்மானத்தை எடுக்கும் நேரத்தில் இப்பொழுது கானான் நோக்கி செல்ல இருக்கும் வரிசையில் இணைந்து கொள்வதற்கு முந்தி வரவில்லை. எக்காளம் ஊதப்பட்டு அனைவரும் வரிசையில் இணைந்து கொண்டு இருக்கின்றார்கள். ஓபா ஒதுங்கி நிற்கின்றான். மோசே ஓபாவை நோக்கி உங்களுக்கு தருவேன் என்று கர்த்தர் சொன்ன ஸ்தலத்திற்கு நாங்கள் பிரயாணம் போகிறோம். நீயும் எங்களோடே கூட வா. உனக்கு நன்மை செய்வோம். கர்த்தர் நல்ல வாக்கு தத்தம் கொடுத்து இருக்கிறார் என்று ஓபாவை நோக்கி மோசே கூறுகிறான். கானானின் ஆசீர்வாதம் பெற்று வாழ்வதற்கு ஓபாவிற்கு மோசேயினால் ஓர் அழைப்பு கொடுக்க படுகிறது.

நித்திய ஜீவனை அனைவரும் பெற்று வாழ்வதற்கு வேத வசனம் அழைப்பு கொடுக்கின்றது. மோசே ஓபாவை மிக அன்புடன் அழைக்கின்றான். கர்த்தர் தரும் ஆசீர்வாதங்களை அனைவரும் அனுபவிக்க வேண்டும் என்ற வாஞ்சையினாலேயே, மோசே ஓபாவை அழைக்கின்றான். ஓபா அழைப்பை நிராகரிக்கின்றான்.

''அதற்கு அவன் வரக்கூடாது. என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்திற்கும் போக வேண்டும் என்றான்'' (வச. 30). கர்த்தருடைய அழைப்பிற்கு அடி பணிவதற்கு, தங்களுடைய சொந்த ஆசைகளுக்கு மனிதர் விடை கொடுத்துவிட வேண்டும் என்பதை நாம் பார்க்கிறோம். ஓபா என்பவன் மீது இருந்த அளவற்ற அன்பினால் மோசே கொடுத்த அழைப்பு நிராகரிக்க பட்டு விட்டது.

அவ்விதமான ஓர் அழைப்பை ஆண்டவர் தாமே ஆதியாகம புத்தகத்திலே ஆபிரகாமுக்கு கொடுத்தார். ஆபிரகாமோ அழைப்பை நிராகரிக்கவில்லை. ஆதியாகம புத்தகம் 12-வது அதிகாரம் 1,2 ஆகிய வசனங்களை பாருங்கள். ''கர்த்தர் ஆபிரகாமை நோக்கி; நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு, நான்

உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து உன் பேரை பெருமை படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.'' கர்த்தரால் வரும் அழைப்பு ஆசீர்வதிக்க வரும் அழைப்பு தவிர மனிதனை துன்புறுத்துவதற்கு வரும் அழைப்பு அல்ல. ஆபிரகாம் கர்த்தரின் அழைப்பிற்கு அடிப்பணிந்தான். ஆசீர்வதிக்க பட்டான்.

என்னை பின்பற்றி வா என்று ஆண்டவர் கூப்பிடும் பொழுது அதை ஓர் சிலாக்கியமாக கருதி அதற்கு அடி பணிகின்றவர்கள் பெரும் பாக்கியத்தை வாழ்கையில் பெறுகின்றார்கள். வீட்டை விட்டு தள்ளி செல்ல வேண்டியதாக இருக்கின்றதே என்று ஓபா நினைத்து விட்டான். என்னால் வர முடியாது என்று கூறிவிட்டான். அழைப்பு அவன் முன்பாக வைக்கப்பட்டது. ஆனால் திணிக்கப்படவில்லை. தீர்மானம் ஓபாவை பொறுத்தது. பின்னாக செல்லவும் முடிவு செய்யலாம். முன்னாக செல்லவும் முடிவு செய்யலாம். தீர்மானம் ஓபாவை பொறுத்தது. ஆயினும் மோசே தன் மனைவியின் சகோதரன் மீது இருந்த அளவற்ற அன்பினால் இன்னும் ஒரு முறை அழைப்பு கொடுக்கின்றான். முதன் முறை கொடுத்த அழைப்பிற்கு ஓபா மறுப்பு தெரிவித்துவிட்ட போதிலும் அன்பின் பெருக்கினால் மோசே இன்னும் ஒரு முறை ஓபாவை நோக்கி வா என்று கூப்பிடுகின்றான். நீ எங்களை விட்டு போக வேண்டாம்.

வனாந்தரத்தில் நாங்கள் பாளயம் இறங்கும் இடங்களை நீ அறிந்து இருக்கிறபடியினால் எங்களுக்கு கண்களை போல் இருப்பாய். நீ எங்களோடே கூட வந்தால் கர்த்தர் எங்களுக்கு செய்தருளும் நன்மையின்படியே உனக்கு நன்மை செய்வோம் என்று மோசே ஓபாவை பார்த்து கூறுகின்றான்.

நீ கர்த்தருடைய ஜனங்களின் வரிசையில் இணைந்து கொள்ளுவதினால் உனக்கும் ஆசீர்வாதம், எங்களுக்கும் பிரயோஜனம் என்று மோசே கூறுகின்றான். நீ எங்களுக்கு கண்களை போன்று இருப்பாய் என்று மோசே ஓபாவை பார்த்து கூறுவது சற்று ஆச்சரியமாக இருக்கின்றது. மோசே செல்ல வேண்டிய பாதைகளையும் மோசே தங்க வேண்டிய இடங்களையும் சுட்டி காட்டுவதற்காக கர்த்தர் முன் செல்லுகின்றார். கானான் செல்லும் ஜனங்களுக்கு வழிகாட்டுவதற்கும் ஓபா அழைக்கப்படவில்லை. யேகோவா மட்டுமே அந்த வழியை அறிவார். ஆயினும் மோசே ஓபாவை அழைக்கும் பொழுது நீ எங்களோடு வருவதினால் உனக்கும் ஆசீர்வாதம், எங்களுக்கும் பிரயோஜனம் என்று கூறுகின்றார்.

ஓபா என்ற பெயருக்கு பொருள் அன்பிற்கு உரியவன் என்பது ஆகும். ஓபா மோசேயின் அன்பிற்கு உரியவனாக இருந்த படியினால் ஓபாவிற்கு நேராக இரண்டாந்தரம் ஓர் அழைப்பு வருகிறது. பாவத்தில் வாழும் மனிதனுக்கு பாவத்தை விட்டு வெளியேறுவதற்கு கர்த்தர் கொடுக்கும் அழைப்பு ஒரு முறை அல்ல. பல முறை வருகின்றது. ஒரே ஒரு நாள் அல்ல. அவன் வாழ்கை முழுவதுமே வந்து கொண்டு இருக்கின்றது.

மோசே கொடுத்த இரண்டாவது அழைப்பிற்கு ஓபா இசைந்து விட்டான். நீ எங்களுடன் வந்தால் உனக்கு நன்மை செய்வோம் என்று தனது மாமனாரின் மகனை பார்த்து மோசே கூறினான். அதன் படி கானான் சென்ற பின்னர் மோசேயின் மாமனார் குடும்பத்திற்கு நன்மை செய்யப்பட்டது என்பதை நியாயாதிபதிகளின் புத்தகம் முதல் அதிகாரம் 16-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். மோசேயின் மாமனாகிய கேனியனின் புத்திரரும் யூதாவின் புத்திரரோடே கூட குடியேறுவதாக அந்த வசனத்தில் நாம் படிக்கலாம்.

13.3 இஸ்ரவேல் மக்களை வழிநடத்தும் கர்த்தர்

அவர்கள் கர்த்தருடைய பர்வதத்தை விட்டு, மூன்று நாள் பிரயாணம் போனார்கள்; மூன்று நாள் பிரயாணத்திலும் கர்த்தருடைய உடன்படிக்கை

பெட்டி அவர்களுக்கு இளைப்பாறும் ஸ்தலத்தை தேடி காட்டும்படிக்கு அவர்கள் முன் சென்றது. (எண். 10:33)

சீனாய் வனாந்திரத்தில் இருந்து புறப்பட்ட அவர்களது முதல் பிரயாணம் மூன்று நாள் தொடர்ந்து நடந்தது என்று நாம் அறிந்து கொள்ளுகின்றோம். எகிப்தை விட்டு வெளியேறி செங்கடலை கடந்த பின்னர் அவர்கள் எடுத்த முதல் பிரயாணமும் மூன்று நாள் எடுத்தது என்பதை யாத்திராகம புத்தகம் 15-வது அதிகாரம் 22-வது வசனத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். எண்ணாகம புத்தகம் 10-வது அதிகாரம் 33-வது வசனத்தில் 3 நாள் பிரயாணத்திலும் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி அவர்களுக்கு முன்பாக சென்றதை பார்க்கின்றோம். முன்னாக சென்றதற்கு காரணம் கொடுக்கப்பட்டு உள்ளது. அவர்களுக்கு இளைப்பாறும் ஸ்தலத்தை தேடிக்காட்டும்படிக்கு கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி அவர்களுக்கு முன்னாக, அவர்களுக்கு கண்ணாக சென்றது.

மோசே ஓபாவை நோக்கி: இரண்டாவது முறை கூறும் பொழுது அவனை பார்த்து நாங்கள் பாளயம் இறங்கும் இடங்களை நீ அறிந்து இருக்கிறபடியினால் வா என்றான். ஓபாவே நீ எங்களுக்கு கண்களை போல இருப்பாய் என்றான். ஆனால் ஓபா மோசேயின் பிரயாணத்தில் அவர்களுக்கு கண்களாக இருக்கவில்லை என்பதை இந்த வசனம் எடுத்து காட்டுகின்றது. ஓபா மோசேயுடன் செல்லுவதற்கு முடிவு எடுத்தாலும் பாளயம் இறங்கும் இடங்களையும் இளைப்பாறும் ஸ்தலங்களையும் ஓபா காட்டவில்லை. கர்த்தர் முன் சென்று காட்டினார் என்பதை 33-வது வசனம் விளக்குகின்றது. வாழ்க்கை பாதையில் முன்னாக இருக்கும் பள்ளங்களையும் வளைவுகளையும் எந்த மனிதனின் கண்களும் அறிய முடியாது. மனித அறிவுகளுக்கு அப்பால்பட்டதாக வரும் காலங்கள் இருக்கின்றது. முன்னாக நிற்கும் காலங்களை எட்டி பிடிக்கும் கரம் மனிதனுக்கு இல்லை. முக்காலமும் அறிந்த ஆதியும் அந்தமும் தெரிந்த கர்த்தர் ஒருவரால் மட்டுமே அது முடியும் என்பதை 33-வது வசனம் நிச்சயப்படுத்துகின்றது.

எதிர் காலங்களுக்காக மனிதனை எதிர்பார்ப்பதை விட நமக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக நமது கண்களை ஏறெடுப்பதே நலம் என்று எண்ணாகம புத்தகம் 10-வது அதிகாரம் 33-வது வசனம் ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்துகின்றது. வாழ்க்கை பாதையில் இடறி விழும் மக்களை இனிமேல் இடறி விழுந்து விடாதபடிக்கு வழி நடத்தவே கர்த்தர் இருக்கின்றார் என்பதை எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 31-வது அதிகாரம் 9-வது வசனத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம். இன்று இதயத்தை துளையிடும் துயரங்களும் மனதை உலுக்கி விடும் கவலைகளும் நாளைய தினத்தை இருளாக செய்து விடுமே என்று மனித உள்ளங்கள் அஞ்ச வேண்டியது இல்லை என்று எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 31-வது அதிகாரம் 9-வது வசனம் உற்சாகப்படுத்துகின்றது. இன்று உள்ள மனபாரங்களினால் மனித உள்ளங்கள் நசுக்கப்படும் பொழுது கண்களில் இருந்து வரும் கண்ணீர்கள் கர்த்தரின் பாதத்தில் கொட்டப்பட வேண்டும் என்று அந்த வசனம் கூறுகின்றது. ''அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள். அவர்களை வழி நடத்துவேன். அவர்களை தண்ணீருள்ள நதிகள் அண்டைக்கு, இடறாத செம்மையான வழியிலே நடக்க பண்ணுவேன்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. நாளைய தினம் வெளிச்சமாக இருக்க இன்றைய தினம் அழுகையோடும் விண்ணப்பத்தோடும் கர்த்தரை தேடிவிடுங்கள்.

அவர்கள் பாளயத்திலிருந்து பிரயாணம் போகிற போது, கர்த்தருடைய மேகம் பகலில் அவர்கள் மேல் தங்கியிருந்தது. (எண். 10:34)

கர்த்தரை முன் வைத்து நடந்த நாட்களில் ஜனங்களுக்கு குறைவு எதுவும் இல்லை. அவர் அவர்களை வனாந்திரங்களில் நடத்தும் போது அவர்களுக்கு தாகவிடா இருந்தது இல்லை என்று ஏசாயா 48-வது அதிகாரம் 21-வது வசனம் கூறுகின்றது. 3 நாள் பிரயாணத்தில் களைப்பாக இருந்த அவர்களுக்கு இளைப்பாறும் இடம் தேடி கர்த்தர் முன் செல்லுகின்றார். வாழ்க்கை என்ற பிரயாணத்தில் மலைத்து போய் நிற்கின்றவர்களுக்கு கர்த்தரை முன் வைக்கும் நேரம் திகைப்புகள் வருவதே இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். கர்த்தருடைய மேகம் அவர்களை விட்டு பிரியாமல் இருப்பதை எண்ணாகம புத்தகம் 10-வது அதிகாரம் 34-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம். மேகம் அவர்களை கைவிடவில்லை. கிருபை அவர்களை விட்டு விலகவில்லை. ஓபா என்ற ஒருவன் அவர்களுக்கு வழி காட்டவே இல்லை.

பெட்டியானது புறப்படும்போது, மோசே: கர்த்தாவே, எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்க படுவார்களாக; உம்மை பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடி போவார்களாக என்பான். அது தங்கும் போது: கர்த்தாவே, அநேக ஆயிரவர்களாகிய இஸ்ரவேலரிடத்தில் திரும்புவீராக என்று சொல்லுவான். (எண். 10:35-36)

மோசே மிகவும் பணிந்து குனிந்து ஓர் ஜெபம் செய்கின்றான். முன் சென்று வழிகாட்டும் உடன்படிக்கை பெட்டியை இனிமேல் நான் விடப்போவது இல்லை என்று ஓர் ஜெபம் செய்கின்றான். ஓபா அவனை விட்டு விடை பெற்று சென்று விட்டாலும் கர்த்தர் என்னை பொறுப்பு எடுத்து நடத்துவார் என்பது போன்று மோசே ஜெபிக்கும் ஜெபம் காணப்படுகின்றது. மனிதர் கைவிட்டாலும் கர்த்தர் கைவிடவே மாட்டார் என்பதை மோசே அறிந்து விட்டான்.

உற்றார் உறவினர் ஒதுங்கி நின்றாலும் கர்த்தாதி கர்த்தர் தாங்கி நடத்துவார் என்பதை மோசே அறிந்து விட்டார். கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். உடன்படிக்கை பெட்டியானது புறப்படும் பொழுது கர்த்தாவே எழுந்தருளும் என்று ஜெபிக்கின்றான். கர்த்தாவே நீர் எழுந்து எங்களுக்கு கண்களாக முன்னாக செல்லா விட்டால் நாங்களும் எழும்ப போவது இல்லை என்று மோசே தீர்மானித்து விட்டான். உடன்படிக்கை பெட்டி தங்கும் பொழுது கர்த்தாவே திரும்பி வருவீராக என்று மோசே வேண்டுகின்றான். கர்த்தாவே நாங்கள் தங்கும் பொழுது நீரும் எங்களோடு தங்கும் என்று மோசே ஜெபிக்கின்றான். மனிதனை பார்த்து பேசுவது போதும் என்று மோசே முடிவு செய்து விட்டான். கர்த்தாவே நாங்கள் புறப்படும் பொழுது எங்கள் கண்களாக இருந்தருளும் முன்னாக சென்றருளும் என்று வேண்டுகின்றான். தங்கும்பொழுது எங்களை விட்டு நீங்காதிரும் என்று வேண்டுகின்றான். உமது சமுகம் எங்களுக்கு முன்னாக செல்லட்டும் என்று புறப்படும் பொழுதும் உமது நிழலில் நாங்கள் தங்கட்டும் என்று தங்கும் பொழுதும் மன்றாடுகின்றான்.

வாழ்க்கை பாதையில் கர்த்தாவே எங்களுக்கு முன்னாக செல்லும் என்று வாஞ்சிக்கும் உள்ளங்களை கர்த்தர் வழி நடத்துகின்றார். எங்களை விட்டு நீங்காதிரும் நேச கர்த்தரே என்று கெஞ்சும் இதயங்களை கர்த்தர் வாழ வைக்கின்றார்.

அத்தியாயம் - 14
மோசேயின் கோபமும் கர்த்தரின் தண்டனையும்

14.1 தங்கள் முறையீட்டால் கர்த்தரை வருத்தும் மக்கள்

சீனாய் வனாந்தரத்தில் ஒரு வருடம் தங்கி இருக்கையில் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தியர், அமலேக்கியர் என்ற யாருக்கும் பயப்படவில்லை. செழிப்பான புல்வெளிகள் அங்கு இருந்ததால், ஆடு மாடுகளுக்கும் அவர்கள் ஆகாரத்திற்கும் ஒரு குறைவும் இல்லை. அங்கே பண்டிகை கொண்டாடினார்கள். கோத்திரவாரியாக பலி செலுத்தினார்கள். இப்பொழுது அங்கிருந்து பிரயாண படும் இடங்களில் அவ்வளவு மிருக ஜீவன்களுக்கு புல்வெளிகள் இல்லை. நல்ல காய்கறிகளும் இல்லை. வளமாக தண்ணீர் இருந்த இடத்தில் இருந்து காய்ந்த ஒரு இடத்துக்கு வருகிறார்கள்.

எண்ணாகமம் 11-வது அதிகாரம் 1 முதல் 3 வசனங்களில் சீனாய் வனாந்திரத்தில் இருந்து பாரான் வனாந்திரம் செல்லும் பாதையில் ஜனங்கள் கடந்து வரும் பள்ளங்களையும் பார்க்கிறோம். கானான் என்ற பூமியை நோக்கி கைகளை தட்டி, நாதங்களை எழுப்பி, பாடி செல்ல வேண்டியவர்கள் நாடியில் கை வைத்து வாடி போய் நிற்பதை நாம் பார்க்க இருக்கிறோம். பிரயாணத்தில் இடம் பெற்ற சோக சித்திரம் ஒன்று எண்ணாகமம் 11-வது அதிகாரம் 1 முதல் 3 வசனங்களில் சித்திரிக்கப்பட்டு உள்ளது.

> ***பின்பு, ஜனங்கள் முறையிட்டு கொண்டிருந்தார்கள். அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாய் இருந்தது. கர்த்தர் அதை கேட்டபோது, அவருடைய கோபம் மூண்டது. கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிந்து, பாளயத்தின் கடைசியில் இருந்த சிலரை பட்சித்தது. (எண். 11:1)***

கானான் நோக்கி செய்யும் பிரயாணத்தில் அவர்கள் மூன்று வனாந்திரங்களை கடந்து செல்ல வேண்டும். அழுது அழுது அல்ல. வெற்றி மாலை சூடி கடந்து செல்ல வேண்டும். சோர்ந்து சோர்ந்து அல்ல. ஆரவாரித்து, ஆர்ப்பரித்து கடந்து செல்ல வேண்டும்.

அந்த மூன்று வனாந்திரங்களின் பெயர் சீனாய் வனாந்திரம், பாரான் வனாந்திரம், சீன் வனாந்திரம் என்பவைகள் ஆகும். பரம கானான் நோக்கி செல்லும் கல்வாரி வழி பயணிகள் உலகம், மாம்சம், பிசாசு என்ற மூன்று வனாந்திரங்களை கடந்து செல்ல வேண்டும் என்பதற்கு அந்த ஜனங்கள் அன்று கடந்து சென்ற மூன்று வனாந்திரங்களும் ஓர் அடையாளமாக தெரிகின்றது. எண்ணாகமம் 10-வது அதிகாரம் 12-வது வசனத்தில் சீனாய் வனாந்திரத்தின் எல்லைகளை தாண்டி பாரான் வனாந்திரத்தின் பாதையில் அவர்கள் பிரவேசிப்பதை நாம் பார்க்கின்றோம். சீனாய் வனாந்திரத்தில் இருந்து தங்கள் பிரயாண வரிசைகளாய் புறப்பட்டார்கள்.

மேகம் பாரான் வனாந்திரத்தில் தங்கிற்று என்று அந்த வசனத்தில் நாம் பார்க்கின்றோம். 10-வது அதிகாரம் 33-வது வசனத்தில் 3 நாள் பிரயாணம் போனார்கள் என்று

வாசிக்கின்றோம். இதுவரை ஒரே இடத்தில் நீண்ட காலம் இருந்தவர்களுக்கு இந்த மூன்று நாள் பிரயாணம் மிகவும் கடினமாக தெரிந்து விட்டது. அவர்களின் களிப்பிற்கு காரணமாக இருந்த கர்த்தர் மீது கசப்பு வந்து விட்டது. எண்ணாகமம் 11-வது அதிகாரம் முதல் வசனம் பின்பு ஜனங்கள் முறையிட்டு கொண்டு இருந்தார்கள் என்று துவங்குகின்றது. பின்பு என்பது மூன்று நாட்களுக்கு பின்பு என்பது ஆகும். அன்று செங்கடலில், காலில் சற்றும் ஈரம் பட்டு விடாமல் கர்த்தர் அவர்களை ஒரு கரையில் இருந்து மறுகரை சேரப்பண்ணினார். அப்பொழுது கர்த்தரை போற்றி புகழ்ந்தார்கள். யாத்திராகமம் 15-வது அதிகாரம் 21-வது வசனத்தில் மிரியாம் அவர்களுக்கு பிரதி வசனமாக கர்த்தரை பாடுங்கள். அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். குதிரையையும் குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார் என்று பாடினாள் என்று படிக்கின்றோம்.

உற்சாகமான ஆவி பெற்று உச்ச தொனியில் உரக்க துதித்தவர்கள் அடுத்த வசனத்தில் அமைதியானார்கள். ''பின்பு மோசே இஸ்ரவேல் ஜனங்களை சிவந்த சமுத்திரத்தில் இருந்து பிரயாணப்படுத்தினான். அவர்கள் சூர் வனாந்திரத்திற்கு புறப்பட்டு போய் மூன்று நாள் வனாந்திரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள்.'' குடிக்க தண்ணீர் இல்லை. படிக்க பாட்டுகளும் இல்லை. துதிக்க உதடுகளும் இல்லை. மோசேயை சபிக்க புறப்பட்டார்கள். யாத்திராகமம் 15-வது அதிகாரம் 23,24 ஆகிய வசனங்கள். ''அவர்கள் மாராவிலே வந்த போது மாராவின் தண்ணீர் கசப்பாக இருந்ததினால் அதை குடிக்க அவர்களுக்கு கூடாது இருந்தது. அதினால் அவ்விடத்திற்கு மாரா என்று பேரிடப்பட்டது. அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோமாய் முறுமுறுத்து என்னத்தை குடிப்போம் என்றார்கள்.'' அனைத்தும் சாதகமாக இருக்கும் வரை கானான் நோக்கி செல்லுவது மிகவும் களிப்பாக இருக்கின்றது. ஏதாகிலும் பாதகமாகி விட்டால் உள்ளம் கொதிப்பாகி விடுகின்றது. துதித்த உதடுகள் முறு முறுக்கின்றன. யாத்திராகம புத்தகம் 15,16,17 ஆகிய மூன்று அதிகாரங்களிலும் ஜனங்கள் திரும்ப திரும்ப முறு முறுப்பதை நாம் பார்க்கலாம். கர்த்தர் பொறுத்து கொண்டார். இன்னும் முதிர்ச்சி அடையாத பச்சிளம் குழந்தைகள் என்று அவர்களை யாத்திராகம புத்தகத்திலே பொறுத்து கொண்டார். யாத்திராகம புத்தகத்தில் முறுமுறுத்த நேரங்களில் அவர்களை கண்டிக்க மட்டுமே செய்தார்.

எண்ணாகம புத்தகத்தில் முறுமுறுத்த உடன் கர்த்தர் கண்டிக்கவில்லை. ஆனால் தண்டிக்கவே ஆரம்பித்து விட்டார் என்பதை 11-வது அதிகாரம் முதல் வசனத்தில் நாம் பார்க்கலாம். அடிமைத்தன வாழ்வில் இருந்து பரிசுத்தராகிய தேவனின் பராமரிப்புக்குள் வந்தவர்கள் ஒரு வருட காலம் சென்ற பின்னரும் முறுமுறுக்கும் சுபாவத்தில் இருந்து விடுதலை பெறவில்லை. காலத்தை பார்த்தால் ஞானத்தில் சிறந்து விளங்கி நிற்க வேண்டிய அவர்கள் மூன்று நாள் நடந்து வந்த களைப்பில் மிகவும் சினந்து நிற்கின்றார்கள். வனாந்திர பாதையில் வரும் வருத்தங்களை புரிந்து கொள்ள முடியாதவர்கள் அவர்கள் அல்ல. எடுத்த பிரயாணம் கானான் நோக்கி செல்லும் பிரயாணம். அவர்கள் எடுத்த பிரயாணம் ஓர் உல்லாச பிரயாணம் அல்ல. உடல், உள்ளம், ஆத்துமா அனைத்திலும் ஆணித்தரமான தீர்மானத்துடன் முன் செல்ல வேண்டிய அவர்கள் உடல் களைத்த உடன் உற்சாகம் இழக்கின்றார்கள். இடுக்கண்கள் வந்த உடன் வருத்தங்கள் வருகின்றன.

கானானுக்கு போகும் பாதை விசாலமான பாதை அல்ல. பரம கானானுக்கு போகும் பாதையும் கூட விசாலமான பாதை அல்ல. புதிய ஏற்பாட்டில் கர்த்தராகிய இயேசு இரண்டு பாதைகளை மனிதருக்கு முன்பாக வைத்தார். ஒன்று கேட்டுக்கு செல்லும் பாதை. மற்றொன்று ஜீவனுக்கு நேராக செல்லும் பாதை. கேட்டுக்கு செல்லும் பாதை மகா விசாலமாக தெரிகின்றது. விருப்பமானவைகள் எவைகளையும் விரும்பியவர்கள் எவரும் செய்யக்கூடிய பாதை விசாலமான பாதை. கேட்பதற்கு எவருமே இல்லை. அதன் முடிவு மனமடிவே ஆகும். பாவத்தின் பாதை தரும் முடிவு மரணமே ஆகும்.

ஆனால் ஜீவனுக்கு நேராக செல்லும் பாதையோ விசாலமான பாதை அல்ல. இடுக்கமான பாதை. இஷ்டம் போல் வாழ்வதற்கு உரிய பாதை அல்ல. அனைத்தையும் நஷ்டமாக கருதி முன் வருகின்றவர்களுக்கு மட்டும் உரித்தான பாதை. பரிசுத்த மத்தேயு 7-வது அதிகாரம் 13,14 ஆகிய வசனங்களில், இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். கேட்டுக்கு போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாய் இருக்கிறது. அதன் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாய் இருக்கிறது. அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் என்று பார்க்கிறோம்.

எண்ணாகம புத்தகம் 11-வது அதிகாரம் முதல் வசனம், ''பின்பு ஜனங்கள் முறையிட்டு கொண்டு இருந்தார்கள்'' என்று கூறுகின்றது. முறையிட்டு கொண்டு இருந்தார்கள் என்பதற்கு இந்த இடத்தில் பயன்படுத்தப்பட்டு உள்ள எபிரெய பதம் பரிசுத்த வேத புத்தகத்தில் இன்னும் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு உள்ளது. அந்த இடம் எரேமியாவின் புலம்பல் புத்தகம் மூன்றாவது அதிகாரம் 39-வது வசனம் ஆகும். அதில் ''உயிருள்ள மனுஷன் முறையிடுவானேன்? அவன் தன் பாவத்துக்கு வரும் தண்டனையை குறித்து முறையிடுகிறது என்ன?'' என்று வருகிறது. மனிதனின் முறையிடுதல்கள் மனித கர்வங்களில் இருந்து பிறக்கும் முறையிடுதல்கள் ஆகும். அவை கர்த்தரை குற்றம் சாட்டுவதற்காக வரும் வார்த்தைகளே ஆகும். வாழ்வில் வரும் வேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் ஏன் ஏன் என்று கர்த்தரையே கோபிக்கும் முறுமுறுப்புகள் ஆகும். அந்த முறையீடுகளில் எவ்வித பயனும் இல்லை என்று புலம்பல் மூன்றாவது அதிகாரம் 39-வது வசனம் அறிவிக்கின்றது.

மீட்பின் படியில் இருந்து சீஷத்துவத்தின் படிகட்டுகளில் ஏறி செல்லுவதற்கு விசுவாசம் கீழ்படிதல் என்ற இரண்டும் அதிக அவசியம் என்று அறிந்து கொள்ளுகின்றோம். மீட்கப்பட்ட ஜனங்களிடம் கர்த்தர் எதிர்பார்த்தவை இரண்டே இரண்டுதான். ஒன்று பூரண விசுவாசம், அடுத்தது முற்றும் கீழ்படிதல் என்பதே ஆகும். அவை இரண்டும் அவர்களிடம் காணப்படவில்லை. ஆனால் முறுமுறுப்பு காணப்பட்டது. அவர்களுடைய முறுமுறுப்பு கர்த்தரின் பார்வையில் பொல்லாப்பாக இருந்தது. கர்த்தர் அதை கேட்டபோது அவருடைய கோபம் மூண்டது என்று பார்க்கிறோம். விசுவாசிகளின் ஜெபத்திற்கு திறந்து இருக்கும் கர்த்தருடைய செவிகள் அவிசுவாசத்தினால் பிறக்கும் முறுமுறுப்பிற்கு அடைக்க பட்டதாகவே இருக்கின்றது. கர்த்தர் முறுமுறுப்புகளை ஏற்று கொள்ளுவது இல்லை. கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றி எரிய தொடங்கியது. நாதாப், அபியூ என்பவர்களை லேவியராகமம் 10-வது அதிகாரத்தில் பட்சித்த அக்கினி எண்ணாகமம் 11-வது அதிகாரம் முதல் வசனத்தில் மறுபடியும் ஒரு முறை தெரிய வந்து விட்டது. சுட்டு

எடுக்கப்பட வேண்டியவர்கள் யார் யார் என்பதை அக்கினி இனம் கண்டு விட்டது. அந்த அழகிய நீண்ட வரிசையில் ஒரு சிலர் பின் வரிசையில் இருந்தார்கள். கடைசி வரிசையில் நின்று கர்த்தருடைய ஊழியத்தை தடை செய்து கொண்டு இருந்தார்கள். கர்த்தரை போற்றுவதற்கு பதிலாக தூற்றினார்கள். பாளயத்தின் கடைசியில் இருந்த சிலரை அக்கினி பட்சித்தது என்பதை முதல் வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

அப்பொழுது ஜனங்கள் மோசேயை நோக்கி கூப்பிட்டார்கள்: மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். உடனே அக்கினி அவிந்து போயிற்று. கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றி எரிந்ததினால், அவ்விடத்துக்குத் தபேரா என்று பேரிட்டான். (எண். 11:2-3)

ஜனங்களுக்கும் கர்த்தருக்கும் நடுவில் நிற்பதற்காகவே மோசே தெரிந்து எடுக்கப்பட்டு இருந்தான். உடனே விண்ணப்பம் செய்தான். ஜெபம் என்பது தனது நலம், தனது நன்மை என்பதற்காக செய்வது ஆகும். ஆனால் விண்ணப்பம் என்பது பிறருடைய நலம், மற்றவர்களின் நன்மைக்காக செய்வது ஆகும். மோசே ஒரு ஜெப வீரன் மட்டுமல்ல. விண்ணப்ப வீரனாகவும் இருந்தான் என்பதை பார்க்கின்றோம். 1 தீமோத்தேயு 2-வது அதிகாரம் முதல் வசனம். ''நான் பிரதானமாய் சொல்லுகிற புத்தி என்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.'' விண்ணப்ப ஜெபம் என்பது என்ன? செய்வது முற்றிலும் தவறானது: அதனால் வரும் தண்டனை முற்றிலும் நியாயமானது; ஆயினும் தவறு மன்னிக்கப்பட வேண்டும், தண்டனை ரத்தாக வேண்டும் என்பதே விண்ணப்ப ஜெபம் என்பது ஆகும். தப்பிதம் செய்தவருக்கும் தண்டிக்க முன்வரும் நியாயாதிபதிக்கும் குறுக்காக விழுந்து விடுவதே விண்ணப்ப ஜெபம் என்பது ஆகும். தயவு கூர்ந்து மன்னித்து விடுங்கள். அருள் கூர்ந்து பொறுத்து கொள்ளுங்கள். தண்டிக்க வேண்டாம். அடிக்க வேண்டாம் என்று கெஞ்சி மன்றாடுவதே விண்ணப்ப ஜெபம் என்பது ஆகும். அதுவே அன்று ஜனங்களுக்காக மோசே செய்த ஜெபம் ஆகும். அதுவே இன்று கர்த்தர் எதிர்பார்க்கும் ஒன்றும் ஆகும். விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லை என்று கர்த்தர் ஆச்சரியப்பட்டார் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 59-வது அதிகாரம் 11-வது வசனம் கூறுகின்றது. மோசே விண்ணப்பம் செய்தான். உடனே அக்கினி அவிந்து போயிற்று.

இந்த சம்பவம் நடந்த இடத்திற்கு ஓர் பெயர் கொடுத்தார்கள். அந்த பெயர் தபேரா என்பது ஆகும். தபேரா என்றால் 'தீ பிடித்து எரிதல்' என்று பொருள்படும். கானான் நோக்கி செல்லும் பிரயாணத்தில் எரிந்து சாம்பலாகி விடாதேயுங்கள், எரிந்து பிரகாசித்து விடுங்கள் என்று தபேராவின் அனுபவம் எச்சரிக்கின்றது. வருத்தங்களிலும், உபத்திரவங்களிலும் முறுமுறுக்காதேயுங்கள். முகம் மலர்ந்து நில்லுங்கள் என்று தபேராவின் அனுபவம் அழைக்கின்றது. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 40-வது அதிகாரம் 27 முதல் 31 வசனங்கள்: ''யாக்கோபே, இஸ்ரவேலே; என் வழி கர்த்தருக்கு மறைவாயிற்று என்றும், என் நியாயம் என் தேவனிடத்தில் எட்டாமல் போகிறது என்றும் நீ சொல்வானேன்? பூமியின் கடையாந்திரங்களை சிருஷ்டித்த கர்த்தராகிய அனாதி தேவன் சோர்ந்து போவது இல்லை. இளைப்பு அடைவது இல்லை. இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டது இல்லையோ?

அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாது. சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து சத்துவம் இல்லாதவனுக்கு சத்துவத்தை பெருக பண்ணுகிறார். இளைஞர் இளைப்பு அடைந்து சோர்ந்து போவார்கள்; வாலிபரும் இடறி விழுவார்கள்; கர்த்தருக்கு காத்து இருக்கிறவர்களோ புது பெலன் அடைந்து கழுகுகளை போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.''

14.2 உணவின் இச்சையால் கர்த்தரை வருத்தும் மக்கள்

பின்பு அவர்களுக்குள் இருந்த பலஜாதியான அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சை உள்ளவர்கள் ஆனார்கள். இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியை புசிக்க கொடுப்பவர் யார்? நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரி காய்களையும், கொம்மட்டி காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளை பூண்டுகளையும் நினைக்கிறோம். இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடி போகிறது. இந்த மன்னாவை தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள். (எண். 11:4-6)

இந்த மன்னாவை தவிர வேறொன்றும் இல்லையே என்றார்கள்

சற்று முன்னதாக நாம் பார்த்த பகுதியில் நடந்து வந்த களைப்பினால் ஜனங்கள் முறுமுறுத்தார்கள். இப்பொழுது உண்ணும் உணவின் நிமித்தமாக முறுமுறுக்கின்றார்கள். சுமார் 3400 வருடங்களுக்கு முன்பு இருந்த மனிதரின் மன நிலையை நாம் பார்க்கின்றோம். மனிதரின் மன நிலைகள் எக்காலத்திலும் ஒன்றாகவே தெரிகின்றது.

430 வருடம் கொத்தடிமைகளாக வாழ்ந்து வருந்தியவர்கள், இந்த பாலைவன பாதையில் அறுசுவை உணவு இல்லை என்று இப்பொழுது வருந்துகின்றார்கள். கிருபையாக கர்த்தர் அவர்களை விடுவித்தார். அவர்களோ இப்பொழுது தங்களுக்கு வரும் கிருபையை போக்கடிக்கின்றார்கள். கர்த்தரின் ஜனம் என்ற பட்டம் பெற்றவர்கள், பரிசுத்தம் என்ற பாதைக்கு தங்களை ஒப்பு கொடுத்தவர்கள், இப்பொழுது பழைய இடத்திற்கு இதயத்தில் பயணம் செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

பின்பு என்று 4-வது வசனம் ஆரம்பிக்கின்றது. பிரயாண களைப்பு சற்று குறைந்த பின்பு புசிப்பதற்கு ஆசை வந்தது. உடலின் களைப்பு சற்று நீங்கிய பின்பு வயிற்று பசி துவங்கியது. ஒரே ருசி மட்டும் உள்ள மன்னா என்பதை சுமார் ஒரு வருடத்திற்கு மேலாக ருசித்த பின்னர் பல் சுவை உணவில் விருப்பம் வந்தது.

மன்னா திகட்டி விட்டது. அவர்களுக்குள் இருந்த அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சை உள்ளவர்கள் ஆனார்கள் என்று 4-வது வசனம் கூறுகின்றது. அந்நிய ஜனங்கள் என்பது விசுவாசம், கீழ்படிதல் என்ற எதுவும் இல்லாதவர்கள், அவநம்பிக்கை என்ற குழிக்குள் விழுந்தவர்கள். யாத்திராகமம் 12-வது அதிகாரம் 38-வது வசனத்தில் கூட்டத்துடன்



எகிப்து தேசத்தின் விதவிதமான உணவுகள்

கூட்டமாக சேர்ந்து வந்தவர்கள். பயிருடன் விளைந்த களைகளாக வந்தவர்கள், பயிர்களையே நசுக்க ஆரம்பித்தார்கள். அனைவரும் சேர்ந்து அழ ஆரம்பித்தனர் என்று வசனம் கூறுகின்றது. ஆரவாரித்து துதிக்க வேண்டியவர்கள் ஏகோபித்து அழுகின்றார்கள். அழுதவாரே உள்ளத்தின் கிடக்கைகளை அள்ளி கொட்டுகின்றார்கள். நமக்கு இறைச்சியை புசிக்க கொடுக்கிறவர் யார் என்பதே முதல் கேள்வி. அசைவ உணவு மீது அடக்க முடியாத ஒரு ஆசை. வனாந்தரமான இந்த இடத்தில் அவ்விதமான ஒரு உணவு அளிக்க ஆண்டவரால் கூட முடியவே முடியாது என்று எண்ணுவதை கொடுக்கிறவர் யார் என்று மறைமுகமாக கூறினார்கள். அவர்கள் வசம் ஏராளமான ஆடுகளும், மாடுகளும் உண்டு. அசைவ உணவு என்பது அவர்களுடைய கைகளுக்கு எட்டும் தூரத்தில் தான் உண்டு. ஆடு மாடுகள் மட்டும் அவர்கள் மனதில் வரவில்லை. கிரயம் இல்லாமல் சாப்பிட்ட மச்சங்கள் மனதில் வருகின்றன. நைல் நதியில் விரும்பிய பொழுதில் எல்லாம் சென்று மீன் பிடித்த எண்ணம் வருகின்றது. அது மட்டும் அல்ல. விதவிதமான காய்கறிகள் சிந்தனையில் ஓடுகின்றன. அவர்களுக்கு ஓர் அறுசுவை உணவு உடனடியாக அவசியப்படுகின்றது. மன்னா மட்டும் சார்ந்து வனாந்தரத்தில் நடந்து செல்வதை விட அறுசுவை உணவு தேடி அடிமை தனத்தில் அடங்கி கிடப்பதே மேல் என்று கூறுகின்றார்கள். விடுதலை தந்த மகிழ்ச்சியை விட அடிமை வாழ்வு தந்த இன்பம் மேலாக தெரிகின்றது. ''இந்நாட்களை பார்க்கிலும் முன் நாட்கள் நலமாக இருந்தது என்று சொல்லாதே'' என்று பிரசங்கியின் புத்தகம் 7-வது அதிகாரம் 10-வது வசனம் கூறுகின்றது.

பழைய வாழ்வின் எண்ணங்கள் இன்னும் மேல் இடுகின்றன. பழைய பாவத்து ஆசைகள் ஓசை எழுப்புகின்றன. விடுதலை வேண்டும் என்றார்கள். ஆனால் விலைக்கிரயம் செலுத்த மாட்டோம் என்கின்றார்கள். ஆசீர்வாதம் வேண்டும் என்கின்றார்கள். ஆனால் அடிபணிய மாட்டோம் என்கின்றார்கள். விசுவாசம், கீழ்படிதல் என்ற கோட்டிற்குள் வராமல் கானான் என்பதின் எல்லைக்குள் கால் எடுத்து வைப்பது கூடாத காரியம். அவர்களை அழைத்து வந்தவர் மிகவும் உண்மை உள்ளவர்.

உண்ண உணவு, தங்க இடம், உடுக்க வஸ்திரம், சுகம், பாதுகாப்பு அனைத்தும் கொடுத்து நடத்தி வருகின்றார். தொடர்ந்து நடத்தவும் செய்வார். வனாந்தர பிரயாணத்திற்கு ஏற்ற உணவு மன்னா என்பது மட்டுமே ஆகும். அசைவ உணவும், அறுசுவை உணவும் வனாந்தரத்தில் இடம் பெற முடியாத ஒன்று ஆகும். ''உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும், வெறியினாலும் லௌகீக கவலைகளினாலும் பாரம் அடையாதபடிக்கும் நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாய் இருங்கள்'' என்று பரிசுத்த லூக்கா 21-வது அதிகாரம் 34-வது வசனம் கூறுகின்றது.

குதித்து எழும்பி அடிமைத்தன வாழ்வை விட்டு ஓடி வந்த மக்கள் இப்பொழுது கொதித்து எழும்புகின்றார்கள். மோசேயை கேள்வி கேட்கின்றார்கள். பரிசுத்த பவுல் பிலிப்பியர் நிரூபம் 3:19-வது வசனத்தில் கூறுவது போல ''அவர்களுடைய தேவன் அவர்களுடைய வயிறு'' என்பது ஆயிற்று. விரும்பியது கிடைக்கவில்லை. உள்ளம் வாடி போகின்றது என்று கூறுகின்றார்கள். கர்த்தரை பரியாசம் பண்ணுகின்றார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக மாறினார்கள். மோசேக்கும் விரோதமாக மாறினார்கள். பரிசுத்த அலங்காரம் என்பது பறிபோனது. முறுமுறுப்பு என்பது பெரிதானது. அரைகுறையான மனதில் இருந்து எழும்பும் அதிருப்தியே முறுமுறுப்பு. இரு மனம் உள்ளவர் இதய நிலையே

முறு முறுப்பு. எதிலும் குற்றம் கண்டு பிடிக்க வேண்டும் என்ற மன நிலையே முறு முறுப்பு. குழம்பிய மனதின் கலங்கிய அலைகளே முறுமுறுப்பு.

> *அந்த மன்னா கொத்துமல்லி விதை அம்மாத்திரமும், அதின் நிறம் முத்து போலவும் இருந்தது. ஜனங்கள் போய் அதை பொறுக்கி கொண்டு வந்து, எந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது, பானைகளில் சமைப்பார்கள். அதை அப்பங்களுமாக சுடுவார்கள். அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசி போலிருந்தது. இரவிலே பாளயத்தின் மேல் பனி பெய்யும் போது, மன்னாவும் அதின் மேல் விழும். (எண். 11:7-9)*

வனாந்திர பிரயாணத்தில் கர்த்தரால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட உணவு மன்னா என்பது மட்டுமே ஆகும். மன்னா என்பது பற்றிய குறிப்பு அடிக்கடி கொடுக்க படுகின்றது. யாத்திராகம புத்தகம் 16-வது அதிகாரம் 14 முதல் 36 வசனங்களிலும் எண்ணாகம புத்தகம் 11-வது அதிகாரம் 7 முதல் 9 வசனங்களிலும், உபாகமம் 8-வது அதிகாரம் 3,16 ஆகிய வசனங்களிலும், யோசுவாவின் புத்தகம் 5-வது அதிகாரம் 12-வது வசனத்திலும் 78-வது சங்கீதம் 24,25 ஆகிய வசனங்களிலும் மன்னா என்பதை பற்றிய முக்கியமான குறிப்புகள் கொடுக்கப்பட்டு உள்ளன. வழக்கம்போல் வனாந்தரத்தில் பெய்யும் பனிகளுடன் சம்பந்தப்பட்டது மன்னா என்பது அல்ல. இயற்கையாக கிடைக்க கூடியதும் அல்ல. மன்னா என்பது கானான் நோக்கி செல்லும் வனாந்தர பயணிகளுக்கு என்று அற்புதமாக கர்த்தரால் அருளப்பட்ட ஓர் உணவு. அதுவரை எவரும் அறியாத ஒன்று.

ஜனங்கள் அதற்கு மன்னா என்று பெயரிட்டார்கள் என்று யாத்திராகமம் 16-வது அதிகாரம் 31-வது வசனம் கூறுகின்றது. அதன் தோற்றமும், சுவையும் முன்பு எவரும் கண்டு இராததும் ருசித்து இராததுமாய் இருந்தது.

ஏழாவது நாள் ஓய்வு நாளாக இருந்தபடியினால் அன்று மட்டும் மன்னா அருளப்படவில்லை. ஆறாவது நாள் இரு நாட்களுக்கு தேவையான அளவிற்கு வழங்கப்பட்டது. வந்து தோன்றி மறைந்து விட்ட மன்னாவாக அல்ல. அவர்கள் சீனாய் வனாந்தரம் பாரான் வனாந்தரம் சீன் வனாந்தரம் என்ற மூன்று வனாந்தரங்களையும் கடந்து கானான் என்ற இடத்தில் கால் எடுத்து வைக்கும் வரை தொடர்ந்து வந்து கொண்டே இருந்த மன்னாவாக வழங்கப்பட்டது. மீட்கப்பட்ட ஜனங்களுக்கு உலகம் தயாரிக்க முடியாத ஓர் உணவு மன்னா என்பது ஆகும். பரலோகம் தயாரித்து அனுப்பியது ஆகும். 78-வது சங்கீதம் 24,25 ஆகிய வசனங்களை பாருங்கள்: ''மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்க பண்ணி வானத்தின் தானியத்தை அவர்களுக்கு கொடுத்தார். தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான். அவர்களுக்கு ஆகாரத்தை பூரணமாய் அனுப்பினார்.'' வனாந்தரத்தில் பிரயாணம் செய்யும் மக்களின் உடல் நலத்திற்கு ஏற்ற உணவு மன்னாவாக அமைந்தது. தொடர்ந்து நடந்து முன் செல்லுவதற்கு தேவையான பெலனை சரீரத்திற்கு கொடுத்து உதவியது. அதிகாலையில் இருட்டோடே எழும்பி தேவைக்கு ஏற்றாற்போல் எடுத்து கொள்ளப்பட வேண்டிய உணவு அது. அந்த உணவு அருளப்பட்டு ஒரு வருட காலத்திற்கு உள்ளாக அதின் சுவை அவர்களுக்கு திகட்டி விட்டது. இன்னும் 38 வருடங்கள் மன்னா என்ற ஒன்றே அவர்களது உணவாக தொடர இருக்கின்றது. ஆயினும் ஜனங்களுக்கு மன்னா ஒரு வருடத்திற்கு உள்ளாக அர்த்தம் அற்றதாக மாறிவிட்டது. வனாந்தர பிரயாணத்தில் அவர்கள் சரீரத்திற்கு ஏற்ற ஊட்ட சத்து அருளும் உணவு அவர்களால் ஒப்பு

மன்னாவை சமைக்கும் மக்கள்

கொள்ளப்படவில்லை. பிரயாணத்திற்கு தடையாக இருக்கும் உணவு சரீரத்தை பாதிக்கும் உணவு அவர்களுடைய ஆசையாக மாறிவிட்டது.

கர்த்தர் ஆசைகளை பூர்த்தி செய்கிறவர் அல்ல, ஆனால் தேவைகளை சந்திக்கின்றவர். கானான் செல்லும் அந்த மக்களுக்கு மன்னா என்பது தவிர மாற்று உணவுகளே இல்லை. ஆனால் அது அவர்களுக்கு விளங்கவும் இல்லை. விருப்பமும் இல்லை. கர்த்தரின் கட்டுப்பாட்டுக்குள் வராமல் கானான் என்பதின் கோட்டை அவர்கள் தொடமுடியாது.

கர்த்தர் அருளிய மன்னாவை இந்த மன்னா என்று ஏளனமாக கூறினார்கள் என்பதை எண்ணாகமம் 11-வது அதிகாரம் 6-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். இந்த மன்னாவை தவிர நம்முடைய கண்களுக்கு வேறு ஒன்றுமே இல்லையே என்று சாடிக்கொண்டார்கள். மனுஷனுடைய மதியீனம் அவன் வழியை தாறுமாறாக்கும் என்று நீதிமொழிகளின் புத்தகம் 19:3-வது வசனம் கூறுகின்றது. இந்த சம்பவத்தில் இருந்து வர வர அவர்கள் வழிகள் தாறுமாறாகவே மாறிவிட்டது. எண்ணாகமம் 11:7-9 வசனங்களில் மன்னா இன்னும் ஒரு முறை விவரிக்கப்படுகின்றது. வனாந்தர பிரயாணிகளுக்கு இதுவே ஏற்ற உணவு என்று வர்ணிக்கப்படுகின்றது. மேலான பிரயாணத்தை மேற்கொள்ளுகின்றவர்கள் மேலானவைகளை நோக்க வேண்டும். கர்த்தரை நடுவாக வைத்து வாழுகின்றவர்கள் கர்த்தர் தருவதில் திருப்தி கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் மன ரம்மியமாக இருக்க கற்று கொள்ள வேண்டும். முறுமுறுப்பு தவிர்க்கப்பட வேண்டும். பொறுமை காத்து கொள்ளப்பட வேண்டும்.

எண்ணாகம புத்தகம் 11-வது அதிகாரம் 1 முதல் 3 வசனங்களில் அவர்களுடைய உடல் வாடியது. 4 முதல் 6 வசனங்களில் அவர்களுடைய உள்ளம் வாடியது. இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடி போகின்றது என்று ஒருமித்து கூறுகிறார்கள். அவர்களை அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்து மகிழ்வித்த ஆண்டவர் உண்ணவும் உடுக்கவும் கொடுக்க வல்லவராக இருக்கின்றார். அவர்கள் வாய் திறந்து தம்மிடம் பேசுவதற்கு கர்த்தர் காத்து கொண்டு இருக்கின்றார். அவர்கள் முறுமுறுப்பதைவிட ஆண்டவரை நோக்கி ஜெபித்து கொண்டு இருப்பதே மேலானது. 81-வது சங்கீதம் 10,11-வது வசனங்கள்: ''உன்னை எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. உன் வாயை விரிவாய் திற. நான் அதை நிரப்புவேன். என் ஜனமோ என் சத்தத்திற்கு செவி கொடுக்கவில்லை''. அவர்களோ ஆண்டவரை நோக்கவில்லை. அவர்களுக்குள்ளேயே அவர்கள் பேசிக்கொண்டார்கள். கர்த்தரிடம் பேசவில்லை. ''கர்த்தரை கண்டடைய தக்க சமயத்தில் அவரை தேடுங்கள். அவர் சமீபமாக இருக்கையில் அவரை நோக்கி கூப்பிடுங்கள்'' என்று ஏசாயா 55-வது அதிகாரம் 6-வது வசனம் கூறுகின்றது. அவர்கள் கர்த்தரை கண்டு அடையத்தக்க சமயத்தில் தேடவில்லை.

மன்னா அருளப்படும் சமயம் அதிகாலை நேரம் ஆகும். மன்னா மனதிற்கு பிடிக்கவில்லை எனவே எழும்பி தேடவில்லை. விரும்பியது கிட்டவில்லை என்றவுடன் உள்ளம் வதங்கியது. நம்முடைய உள்ளங்கள் வாடிபோகின்றது என்றார்கள். தாகத்தினால் வாடி நீரோடைகளை நாடி ஓடிக்கொண்டு இருக்கும் மான் கூட்டங்கள் சத்தமிட்டு கூப்பிடுகின்றன. கர்த்தர் மீது விசுவாசம் உள்ள ஜனங்கள் தங்கள் தேவைகளுக்கு கர்த்தரையே நோக்கி சத்தமிட்டு கூப்பிட வேண்டும். அப்பொழுது சரீரத்தின் பசி அடங்கி போகும். ஆத்துமாவின் தாகம் தணிந்து போகும். வாழ்க்கை என்ற பயணம் இனிதாக முடியும்.

இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் ஜனங்கள் பிரயாணத்தின் களைப்பினால் கவலை பட்டார்கள் என்று பார்த்தோம். பின்னர் பசி போக்குவதற்கு ருசியான பதார்த்தங்கள் இல்லையே என்று கவலை பட்டார்கள். யாத்திராகமம் 16-வது அதிகாரத்திலும் இதே விதமாக ஜனங்கள் கவலை பட்டார்கள். அப்பொழுது அவர்களுக்கு மன்னா வழங்கப்பட்டது.

யாத்திராகமம் 16-வது அதிகாரம் 2 முதல் 5 வசனங்கள்: ''அந்த வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து நாங்கள் இறைச்சி பாத்திரங்கள் அண்டையிலே உட்கார்ந்து அப்பத்தை திருப்தியாக சாப்பிட்ட எகிப்து தேசத்திலே கர்த்தரின் கையால் செத்து போனோமானால் தாவிளை. இந்த கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களை புறப்பட பண்ணி இந்த வனாந்தரத்திலே அழைத்து வந்தீர்களே என்று அவர்களிடத்தில் சொன்னார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி நான் உங்களுக்கு வானத்தில் இருந்து அப்பம் வருஷிக்க பண்ணுவேன். ஜனங்கள் போய் ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதினால் அவர்கள் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ, நடக்க மாட்டார்களோ என்று அவர்களை சோதிப்பேன். ஆறாம் நாளிலோ அவர்கள் நாள் தோறும் சேர்க்கிறதை பார்க்கிலும் இரண்டத்தனையாய் சேர்த்து அதை ஆயத்தம் பண்ணி வைக்கக்கடவர்கள் என்றார்.''

அந்த சம்பவம் அவர்களுடைய வாழ்க்கையிலே சுமார் ஒரு வருட காலத்திற்கு முன்னர் இடம் பெற்றது. சாப்பாடு சரி இல்லை என்று அப்பொழுது முறுமுறுத்தார்கள். இப்பொழுது

ஒரு வருடக்காலம் கடந்து விட்டது. எண்ணாகமம் 11-வது அதிகாரத்திலும் அவர்களை போஜன பிரியர்களாகவே நாம் பார்க்கின்றோம். 10 கட்டளைகள் பெற்றும் பழைய கட்டுகள் நீங்கவில்லை. உள்ளான மனுஷனில் இன்னும் அவர்கள் வல்லமையாய் பலப்படல்லை. பழைய மனுஷனை முற்றிலும் புறம்பாக தள்ளவில்லை. கானானின் பிரயாணத்திற்கு பெலனாக அமையும் கர்த்தரால் கொடுக்கப்பட்ட மன்னா அவர்களுக்கு ருசிக்கவில்லை.

14.3 மோசேயின் தடுமாறுதலும் தேவனின் தேற்றுதலும்

அந்தந்த வம்சங்களை சேர்ந்த ஜனங்கள் தங்கள் தங்கள் கூடார வாசலில் நின்று அழுகிறதை மோசே கேட்டான். கர்த்தருக்கு மிகவும் கோபம் மூண்டது; மோசேயின் பார்வைக்கும் அது பொல்லாப்பாய் இருந்தது. (எண். 11:10)

அதிகாலையில் அருளப்படும் மன்னாவை காலையில் எழும்பி பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அதற்கு அவர்களுக்கு மனம் வரவில்லை. காரணம் மன்னா திகட்டி விட்டது. அந்தந்த வம்சங்களை சேர்ந்த ஜனங்கள் தங்கள் தங்கள் கூடார வாசலில் நின்று அழுகிறதை மோசே கேட்டான். காலையில் களிப்புடன் எழும்பி கருத்தோடு மன்னாவை சேகரிக்க வேண்டிய அவர்கள் அவரவர் கூடார வாசலில் நின்று கொண்டு அழுகின்றார்கள். அதிகாலையில் துதியின் கீதம் கேட்கப்படுவதற்கு முன்னர் துயரின் சத்தங்கள் ஒலிக்கின்றன. மோசேயின் காதுகள் அதனை கேட்கின்றன. கர்த்தருக்கு மிகவும் கோபம் மூண்டது என்றும் மோசேயின் பார்வைக்கும் அது பொல்லாப்பாக இருந்தது என்றும் பார்க்கிறோம்.

இத்தனை பெரும் விடுதலை பெற்றும் அற்புதங்கள் அனைத்தும் கண்டும் இப்படி செய்கின்றார்களே என்று மோசே வருந்தினான். கர்த்தருடைய சத்தத்திற்கு செவி கொடாமல் தங்கள் கூடாரங்களில் முறுமுறுத்தார்கள் என்று 106-வது சங்கீதம் 25-வது வசனம் கூறுகின்றது. அது மோசேயை சோர்புற செய்தது. ஜனங்கள் மோசேயை கேள்வி கேட்டார்கள். மோசே கர்த்தரை கேள்வி கேட்பதற்கு புறப்படுகின்றான். மோசே கர்த்தரிடம் அநேக கேள்விகளை கேட்டான். வாடி போய் நிற்கும் மோசேயின் மனம் ஊழியம் செய்வதையே விட்டு ஓடி போவதற்கு முடிவு செய்கின்றது. கேள்விக்கு மேல் கேள்வி கேட்டான். கர்த்தரிடம் மட்டுமே கேட்டான். மொத்தம் ஒன்பது கேள்விகள் கேட்டான்.

அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: நீர் இந்த ஜனங்கள் எல்லாருடைய பாரத்தையும் என் மேல் சுமத்தினதினால், உமது அடியானுக்கு உபத்திரவம் வர பண்ணினது என்ன? உம்முடைய கண்களில் எனக்கு கிருபை கிடையாதே போனது என்ன? (11:11)

முதல் கேள்வி அனைத்து மக்களின் பாரத்தையும் என்மேல் நீர் சுமத்தியதினால் எனக்கு உபத்திரவம் வர செய்தது என்ன என்பது ஆகும். இரண்டாவது கேள்வி உம்முடைய கண்களில் ஏன் எனக்கு கிருபை கிடைக்கவில்லை என்பது ஆகும்.

இவர்களுடைய பிதாக்களுக்கு நான் ஆணையிட்டு கொடுத்த தேசத்துக்கு நீ இவர்களை முலையுண்கிற பாலகனை தகப்பன் சுமந்து கொண்டு போவது போல, உன் மார்பிலே அணைத்து கொண்டு போ என்று நீர் என்னோடே சொல்லும்படி இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பம் தரித்தேனோ? இவர்களை பெற்றது நானோ? (11:12)

மூன்றாவது கேள்வி இவர்களை இந்த உலகில் சிருஷ்டித்தது நான் அல்ல என்பதை நீர் அறியவில்லையோ என்பதே ஆகும். நான்காவது கேள்வி இவர்களை நான் பெற்று எடுக்கவில்லை என்பது தமக்கு தெரியாதோ என்பது ஆகும்.

> *இந்த ஜனங்கள் எல்லாருக்கும் கொடுக்கிறதற்கு எனக்கு இறைச்சி எங்கேயிருந்து வரும்? எனக்கு இறைச்சி கொடு என்று என்னை பார்த்து அழுகிறார்களே. இந்த ஜனங்கள் எல்லாரையும் நான் ஒருவனாய் தாங்க கூடாது. எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது. உம்முடைய கண்களிலே எனக்கு கிருபை கிடைத்ததானால், இப்படி எனக்கு செய்யாமல், என் உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு இப்பொழுதே என்னை கொன்று போடும் என்று வேண்டி கொண்டான். (11:13-15)*

ஐந்தாவது கேள்வியாக இத்தனை கூட்டம் மக்களுக்கும் இந்த வனாந்தரத்தில் அசைவ உணவு எங்கே இருந்து வரும் என்று கேட்டான். ஆறாவதாக ஏன் என்னை பார்த்து இவர்கள் அழ வேண்டும் என்று கேட்டான்.

ஏழாவது கேள்வி ஒரே ஒரு மனிதனால் இத்தனை பெரிய சுமையை எப்படி சுமக்க முடியும் என்பது ஆகும். எட்டாவது கேள்வி இது எனக்கு மிஞ்சின பாரம் என்பது உமக்கு தெரியாதோ என்பது ஆகும்.

ஒன்பதாவது கேள்வியாக இதுவரை பெற்ற உபத்திரவங்கள் எனக்கு போதும். வாழ்க்கையே எனக்கு சலித்து போய் விட்டது. என்மேல் உமக்கு உண்மையான அன்பு இருக்குமானால் என்னை இப்பொழுதே கொன்று போடும் என்பது ஆகும். இந்த ஒன்பது கேள்விகளை 11 முதல் 15 வசனங்களில் அடுக்கு அடுக்காக தொடுத்து அனுப்பினான்.

மனித கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது மோசேயின் ஒன்பது கேள்விகளும் நியாயமான கேள்விகள் போன்று தெரிகின்றன. ஆனால் தேவனின் பார்வையில் அப்படி அல்ல. மோசே ஓர் மனித பிரதிநிதியாக கர்த்தருடைய பார்வையில் நிற்கவில்லை. மனிதருக்கு முன் நிற்க அழைக்கப்பட்ட தேவனுடைய பிரதிநிதியாக நிற்கின்றான். ஆனால் இந்த வசனங்களில் முற்றிலும் ஓர் மனித பிரதிநிதி போன்று மோசே பேசி விட்டான்.

அழைப்பில் அலுப்பு வந்தது. ஊழியத்தில் வெறுப்பு வந்தது. முட்செடியின் அனுபவத்திற்கு முன் அவன் ஓர் மனித பிரதிநிதியாகவே இயங்கினான். இப்பொழுதோ தேவனின் பிரதிநிதி. முன்பு எடுத்த முயற்சி உணர்ச்சி வசப்பட்ட முயற்சி. சுய பலத்தினாலும், சுய பராக்கிரமத்தினாலும் எடுக்கப்பட்ட முயற்சி. பட்டயமே பதில் என்ற முயற்சி. வன்முறையே என் முறை என்ற முயற்சி. அழைப்பு வருவதற்கு முன் அவனாகவே ஜனங்களின் உபத்திரவங்களில் தலையிட்டான். அவர்களின் பாரங்களை தானாக வலிய ஏற்றுக்கொண்டான். ஒரு மனித பிரதிநிதியாக அன்று செயல்பட்டான். தன் சுய அறிவு, சுய சக்தி, சாமர்த்தியங்களினால் அடிமை வாழ்வில் இருந்து மக்களை விடுவித்து விடுவதற்கு பெரும் முயற்சி எடுத்தான். ஆனால் பெரும் தோல்வி கண்டான். அப்போஸ்தலர் 7-வது அதிகாரம் 23-30 வசனங்களை பார்ப்போம். ''அவனுக்கு நாற்பது வயதானபோது இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரை கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணம் உண்டாயிற்று. அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு, அவனுக்கு துணை நின்று எகிப்தியனை வெட்டி, துன்ப

பட்டவனுக்கு நியாயம் செய்தான். தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பை தருவார் என்பதை தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்ளுவார் என்று அவன் நினைத்தான். அவர்களோ அதை அறியவில்லை. மறு நாளிலே சண்டை பண்ணி கொண்டு இருக்கிற இரண்டு பேருக்கு அவன் எதிர் பட்டு மனுஷரே நீங்கள் சகோதரராய் இருக்கிறீர்கள். ஒருவருக்கு ஒருவர் அநியாயம் செய்கிறது என்ன என்று அவர்களை சமாதானம் படுத்தும்படி பேசினான். பிறனுக்கு அநியாயம் செய்தவன் அவனை பிடித்து தள்ளி எங்கள்மேல் அதிகாரியாகவும், நியாயாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்? நேற்று நீ அந்த எகிப்தியனை கொன்றது போல என்னையும் கொன்று போட மனதாய் இருக்கிறாயோ என்றான். இந்த வார்த்தையின் நிமித்தம் மோசே ஓடிப்போய் மீதியான் தேசத்திலே சஞ்சரித்து கொண்டு இருந்தான். அங்கே இருக்கும் பொழுது அவனுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். நாற்பது வருஷம் சென்ற பின்பு சீனாய் மலையின் வனாந்தரத்திலே கர்த்தருடைய தூதனானவர் முட்செடி எரிகிற அக்கினி ஜீவாலையிலே அவனுக்கு தரிசனம் ஆனார்.''

மோசே மோசே என்று முட்செடியில் கூப்பிட்ட கர்த்தரின் அழைப்பினாலே மோசே அனைத்தையும் இப்பொழுது எடுத்து நடத்துகின்றான். முன்பு மோசே தானாக செயல் பட்டான். இப்பொழுது கர்த்தர் மோசேயின் மூலம் செயல் படுகின்றார். பார்வோனின் பிடியில் இருந்து விடுவித்தவர் கர்த்தரே ஆகும். செங்கடலை திறந்து வைத்தவர் கர்த்தரே ஆகும். அனைத்து மக்களின் பாரத்தையும் கர்த்தரே ஏற்று கொண்டார். கர்த்தரின் கண்களில் எவருக்கும் கிடைக்காத கிருபை மோசேக்கு கிடைத்து விட்டது. மோசே உட்பட அனைவரையும் சிருஷ்டித்தவரும் காப்பாற்றுகின்றவரும் கர்த்தாதி கர்த்தரே ஆகும்.

வானத்தில் இருந்து மன்னா தந்தவருக்கு வனாந்தரத்தில் அத்தனை கூட்டம் மக்களுக்கும் ஒரு பந்தி வைப்பதற்கு நிச்சயமாக முடியும். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. ஏன் இவர்கள் என்னை பார்த்து அழுகின்றார்கள் என்று மோசே ஓர் கேள்வி கேட்டான். பொறுப்பில் இருக்கின்றவர்களை பார்த்தே மக்கள் அழுவார்கள் என்பதை ஒரு நிமிஷம் மோசே மறந்து விட்டான். அவர்கள் முறையீடுகள் எதுவாயினும் மோசே கேட்டே தீர வேண்டும். பின்னர் கர்த்தரிடம் சென்று அதனை தெரிவிக்க வேண்டும். பின்னர் கர்த்தர் கூறியவைகளை திரும்பி வந்து ஜனங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அதுவே மோசேயின் அழைப்பு. அதுவே அவன் பெற்ற ஊழியம்.

மோசே கேட்ட ஒன்பதாவது கேள்வி உயிருடன் இருப்பது பயனே இல்லை என்பது ஆகும். மோசேயின் வாயில் இருந்து இப்படியும் ஓர் அறிக்கை வந்து விட்டது. சீனாய் மலையின் சிகரத்தில் இருந்தவன் செங்கடலின் ஆழத்தில் சென்று விட்டான். பின் ஒரு நாள் ஆகாப் என்ற அரசனுக்கு முன்னாக அற்புதம் நடப்பித்த எலியா என்ற தீர்க்கதரிசியும் வாழ்வதைவிட சாவதே மேல் என்றான். அவனை ஒரு தேவ தூதன் வந்து தேற்றினான். 1 இராஜாக்களின் புத்தகம் 19-வது அதிகாரம் 4,5 ஆகிய வசனங்களில். ''எலியா வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய் ஒரு சூரை செடியின் கீழ் உட்கார்ந்து தான் சாக வேண்டும் என்று கோரி, ''போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்து கொள்ளும், நான் என் பிதாக்களை பார்க்கிலும் நல்லவன் அல்ல,'' என்று சொல்லி ஒரு சூரை செடியின் கீழ் படுத்து கொண்டு நித்திரை பண்ணினான். அப்பொழுது ஒரு தூதன் அவனை தட்டி எழுப்பி எழுந்திருந்து போஜனம் பண்ணு என்றான்.''

விசுவாசம் என்ற கேடகம் கைகளில் இருந்து நழுவி கீழே விழுந்து விடும் பொழுது ஊழியக்காரர்கள் சுருண்டு விழுகின்றார்கள். நியாயப்பிரமாணத்தின் பிரதிநிதியான மோசேயும் தீர்க்கதரிசிகளின் பிரதிநிதியான எலியாவும் சோர்ந்து போனார்கள். எலியாவை வானத்தின் தூதன் வந்து தேற்றினான். மோசேயை கர்த்தரே முன்னாக நின்று தேற்றுகின்றார். தம்மை உத்தமத்துடன் பின் பற்றுகின்றவர்கள் யார் என்பதை கர்த்தர் அறிவார். அவர்கள் வாழ்வில் சத்துரு வெள்ளம் போல் வரும் பொழுது அணை கட்டுகின்றார். சோர்ந்து போகும் தம் மக்களுக்கு மேலும் சோர்புகள் வந்து விடாதபடிக்கு கர்த்தர் காத்து கொள்ளுகின்றார். விழுந்து போனவர்களை மேலும் அமிழ்ந்து போகாதபடிக்கு கர்த்தர் தூக்கி எடுக்கின்றார். மங்கி எரியும் திரிகளை அணைக்கிறவர் அல்ல. வளைந்த நாணல்களை முறிக்கிறவர் அல்ல. தன்னை கேள்வி கேட்கும் மக்களை கர்த்தர் கோபிக்கிறவரும் அல்ல. கர்த்தர் மனித உள்ளங்களை அறிவார். குழந்தை உள்ளங்களில் இருந்து வரும் கோபங்கள் பெற்றோர்களை கோபிக்க செய்வது இல்லை. பரிதபிக்கவே செய்யும். கர்த்தர் மோசேயை கைவிடவே இல்லை. என்னுடைய ஊழியத்தை விட்டு நீ போய்விடு என்றும் துரத்தி விடவில்லை. இதைத்தான் எண்ணாகம புத்தகம் 11-வது அதிகாரம் 15-வது வசனத்தின் முடிவில் நாம் பார்க்கின்றோம். கர்த்தர் மோசேயிடம் கோபம் கொள்ளவில்லை. மோசேயின் ஒன்பது கேள்விகளும் முடிந்த பின்னர் பட்சிக்கிற அக்கினி புறப்பட்டு வந்து மோசேயை பட்சிக்கவில்லை. சற்று முன்னதாக பின் வரிசையில் நின்று கேள்வி கேட்டவர்களை அக்கினி வந்து பட்சித்தது என்று எண்ணாகமம் 11-வது அதிகாரம் முதல் வசனத்தில் நாம் பார்த்தோம். ஆனால் மோசேயை அக்கினி பட்சிக்கவில்லை. பின் வரிசையில் நின்று கேள்வி கேட்டவர்களின் கேள்வி கர்த்தரின் செவிகளுக்கு பொல்லாப்பாக இருந்தது என்று முதல் வசனம் கூறுகின்றது. ஆனால் மோசே கேட்ட கேள்விகள் கர்த்தருக்கு பொல்லாப்பானதாக தெரியவில்லை.

பின் வரிசையில் இருந்த அந்த மனிதர்கள் கேட்ட கேள்வி மனித கர்வங்களில் இருந்து புறப்பட்ட கேள்வியாகும். ஆனால் மோசே கேட்ட கேள்விகள் பெருமையில் பிறந்த கேள்விகள் அல்ல. சிறுமையில் பிறந்த கேள்விகள். மிகவும் அத்தியந்த பணிவுடன், மிகவும் மன தாழ்மையுடன் எழுப்பப்பட்ட கேள்விகள். எனவே கர்த்தர் மோசேயை கோபிக்கவில்லை. தேவன் தம்முடையவர்களை அறிவார். மனித இதயங்களின் உள்ளான நோக்கங்கள் கர்த்தருக்கு முன்பாக வெளிச்சமாக இருக்கின்றன. மோசேயின் உள்ள கிடக்கையில் கபடம் எதுவும் இல்லை. கர்த்தர் மோசேயை சற்றும் கோபிக்கவில்லை. அவர் கேட்ட ஒன்பது கேள்விகளுக்கும் கர்த்தர் ஒரு பதிலும் கூறவும் இல்லை. ஆனால் பரிதாப பட்டார். ''கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர் மேல் பரிதாப படுகிறார்'' என்று 135-வது சங்கீதம் 14-வது வசனத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

வெறும் பரிதாப உணர்ச்சி காட்டி விட்டு கர்த்தர் சென்று விடவில்லை. மோசே தனது நிர்வாகத்தில் புதிதாக இன்னும் எழுபது மனிதர்களை இணைத்து கொள்ளுவதற்கு கர்த்தர் ஒரு அனுமதி கொடுக்கின்றார். நிர்வாகம் என்பது ஒரு சுமையாக மாறும் பொழுது ஊழியம் என்பது சுவைப்பது இல்லை. மோசேயின் ஊழியத்தை ஓர் மகிழ்ச்சியான ஊழியமாக மாற்ற கர்த்தர் சித்தம் கொண்டார். இன்னும் அநேக உதவியாளர்களை அவன் சேர்த்து கொள்ளும்படி கர்த்தர் கட்டளை கொடுத்தார். ''அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 11:14-வது வசனம் கூறுகின்றது.

கஷ்டங்கள் காணாத பணிகள் இல்லை. ஏமாற்றம் இல்லாத ஊழியங்கள் இல்லை. கண்ணீர் இல்லாத ஆத்தும ஆதாயம் இல்லை. ''அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகின்றவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது'' என்று அறிந்து இருக்கிறோம். 2 கொரிந்தியர் 4-வது அதிகாரம் முதல் வசனத்தில் இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்று இருப்பதால் சோர்ந்து போகிறது இல்லை என்று பார்க்கிறோம். சங்கீதம் 134 ''இதோ இராக்காலங்களில் கர்த்தருடைய ஆலயத்தில் நிற்கும் கர்த்தரின் ஊழியக்காரரே, நீங்கள் எல்லாரும் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள். உங்கள் கைகளை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள். வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனில் இருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக.''

மோசே கனத்த இதயத்துடன் கர்த்தரிடம் கேட்ட ஒன்பது கேள்விகளுக்கு கர்த்தர் வாய் திறந்து பதில் கூறவில்லை. ஆனால் கர்த்தர் செயலாற்றினார். ஒருவனாக தாங்க கூடாத நிர்வாக சுமையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொடுப்பதற்கு கர்த்தர் அனுமதி வழங்கினார்.

14.4 70 நிர்வாக தலைவர்களை தெரிந்தெடுக்க கர்த்தரின் கட்டனை

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபது பேரை கூட்டி, அவர்களை ஆசரிப்பு கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடேகூட வந்து நிற்கும்படி செய். அப்பொழுது நான் இறங்கி வந்து, அங்கே உன்னோடே பேசி, நீ ஒருவன் மாத்திரம் ஜனங்களின் பாரத்தை சுமக்காமல், உன்னோடேகூட அவர்களும் அதை சுமப்பதற்காக உன் மேல் இருக்கிற ஆவியை அவர்கள் மேலும் வைப்பேன். (எண். 11:16-17)

உன்னுடன் சேர்ந்து நிர்வாகம் செய்வதற்கு இன்னும் 70 பேர் இணையட்டும் என்றார். அநேக வருடங்களுக்கு முன்பு எகிப்திற்கு சென்று குடியேறிய யாக்கோபின் குடும்பத்தார் 70 பேர் என்று ஆதியாகம புத்தகம் 46-வது அதிகாரம் 27-வது வசனம் கூறுகின்றது. யூத சமயத்தின் உச்ச மன்றமான சனகரிம் சங்கத்தின் உறுப்பினர் மொத்தம் 70 பேர் என்று குறிப்பிடப்பட்டது. கர்த்தருடைய ஊழியத்திற்கு அழைப்பு பெற்றது முதல் மோசேயின் பணிக்கு தேவையான உதவியாளர்கள் கர்த்தரால் மட்டுமே கொடுக்கப்பட்டு வருகின்றார்கள்.

நீ ஜனங்களை நோக்கி: நாளைக்காக உங்களை பரிசுத்தம் பண்ணுங்கள்; நீங்கள் இறைச்சி சாப்பிடுவீர்கள். எங்களுக்கு இறைச்சி சாப்பிட கொடுப்பவர் யார் என்றும், எகிப்திலே எங்களுக்கு சௌக்கியமாய் இருந்தது என்றும், கர்த்தருடைய செவிகள் கேட்க அழுதீர்களே; ஆகையால் நீங்கள் சாப்பிடும்படி கர்த்தர் உங்களுக்கு இறைச்சி கொடுப்பார். நீங்கள் ஒரு நாள், இரண்டு நாள், ஐந்து நாள், பத்து நாள், இருபது நாள் மாத்திரமல்ல, ஒரு மாதம் வரைக்கும் புசிப்பீர்கள். அது உங்கள் மூக்காலே புறப்பட்டு, உங்களுக்கு தெவிட்டி போகும் மட்டும் புசிப்பீர்கள். உங்களுக்குள்ளே இருக்கிற கர்த்தரை அசட்டை பண்ணி, நாங்கள் ஏன் எகிப்திலிருந்து புறப்பட்டோம் என்று அவருக்கு முன்பாக அழுதீர்களே என்று சொல் என்றார். (எண். 11:18-20)

அற்புதம் இடம் பெறுவதற்கு முன்னர் பரிசுத்தம் இடம் பெற வேண்டும் என்று கர்த்தர் மோசேயிடம் கூறுவதை எண்ணாகமம் 11-வது அதிகாரம் 18-வது வசனத்தில் பார்க்கின்றோம். உங்களை பரிசுத்தம் பண்ணுங்கள் அதனை தொடர்ந்து அதிசயம் இடம் பெற இருக்கின்றது என்று கர்த்தர் கூறுகின்றார்.

நீங்கள் சற்றும் முறு முறுக்காமல் முதலாவதாகவே என்னை தேடி இருப்பீர்கள் என்றால் இவைகள் அனைத்தும் உங்களை தேடி வந்து இருக்கும் என்று கர்த்தர் கூறுகின்றார். தேவைகள் பிரச்சனைகள் வந்தவுடன் பின் வாங்கும் எண்ணங்கள் வருவது ஏன் என்று கர்த்தர் கேட்கின்றார். உதடுகள் முறுமுறுப்பது ஏன் என்று கர்த்தர் கேட்கின்றார். எனவே ஏராளம் தர போகின்றேன், திகட்ட திகட்ட ஒரு பாடம் புகட்ட போகின்றேன் என்று கர்த்தர் தீர்மானித்தார். உங்கள் அந்தரங்க சிந்தனையில் எதை நோக்கி ஆசையோடு ஓடினீர்களோ அவைகள் வரப்போகின்றது என்று கர்த்தர் கூறுகின்றார். எவ்வளவு சிறு பிள்ளை தனமாக நாம் நடந்து விட்டோம் என்று ஓர் நாள் கூற போகின்றீர்கள். எவ்வளவு அவசரப்பட்டு பேசி விட்டோம் என்று நீங்களே உங்களை கோபித்து கொள்ளுவீர்கள். அந்த அளவிற்கு அசைவ உணவு அருகே வர போகின்றது. அத்துமீறிய ஆசைகளால் துரத்த படுகின்றவர்கள் வாழ்வின் அற்றங்களுக்கே துரத்த படுகின்றார்கள் என்பதை கர்த்தர் தெளிவாக்கி விட்டார்.

> ***அதற்கு மோசே: என்னோடிருக்கிற காலாட்கள் ஆறு லட்சம் பேர்; ஒரு மாதம் முழுவதும் புசிக்கும்படி அவர்களுக்கு இறைச்சி கொடுப்பேன் என்று சொன்னீரே. ஆடு மாடுகளை அவர்களுக்காக அடித்தாலும் அவர்களுக்கு போதுமா? சமுத்திரத்து மச்சங்களை எல்லாம் அவர்களுக்காக சேர்த்தாலும் அவர்களுக்கு போதுமா என்றான். (எண். 11:21-22)***

மோசேக்கு இன்னும் பூரணமாக கர்த்தரின் அநாதி திட்டம் விளங்கவில்லை. வனாந்தரத்தில் கைவசம் இருக்கும் ஆடு மாடுகளை சிந்தனை திரையில் நிறுத்தி கைவிரல்கள் மடக்கி எண்ணுகின்றான்.

பின் ஒரு நாள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர் இதே போன்று இயேசுவை நோக்கி பேசினார்கள். வனாந்தரமான ஓர் இடத்தில் இயேசுவின் உபதேசம் கேட்க, பெரும் கூட்டமான ஜனங்கள் கூடி வந்தார்கள். ஆண்களின் தொகை மட்டுமே ஐயாயிரத்திற்கும் அதிகமாக இருந்தது. கூட்டம் முடிந்த பின்னர் அனைவருக்கும் உணவு அளித்து அனுப்புமாறு இயேசு கூறினார். சீஷர் மறுப்பு தெரிவித்தனர். இடம் வனாந்தரமான இடம் என்றார்கள். நினைத்தவுடன் ஓர் பந்தியை பெரும் கூட்ட மக்களுக்கு எப்படி ஆயத்தம் செய்ய முடியும் என்றார்கள். கர்த்தரோ ஒரு பெரும் பந்தியையே அன்று வைத்தார்.

பரிசுத்த லூக்கா என்பவர் எழுதின சுவிசேஷம் 9-வது அதிகாரம் 12-17வது வசனங்கள்: ''சாயங்காலமாகிறபோது பன்னிருவரும் சேர்ந்து வந்து அவரை நோக்கி நாம் இருக்கிற இடம் வனாந்தரமாய் இருக்கிறது. சுற்றி இருக்கிற ஊர்களிலும் கிராமங்களிலும் ஜனங்கள் போய் தங்கி, போஜன பதார்த்தங்களை சம்பாதித்து கொள்ளும்படி அவர்களை அனுப்பி விடவேண்டும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி நீங்களே அவர்களுக்கு போஜனம் கொடுங்கள் என்றார். அதற்கு அவர்கள் எங்களிடத்தில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் மாத்திரம் உண்டு. இந்த ஜனங்கள் எல்லாருக்கும் போஜனம் கொடுக்க வேண்டியதானால் நாங்கள் போய் வாங்கி கொண்டு வர வேண்டுமே என்றார்கள். ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர் இருந்தார்கள். அவர்களை பந்திக்கு ஐம்பது, ஐம்பது பேராக

உட்காரும்படி சொல்லுங்கள் என்று தம்முடைய சீஷர்களுக்கு சொன்னார். அவர்கள் அந்தபடியே எல்லாரையும் உட்காரும்படி செய்தார்கள். அப்பொழுது அவர் அந்த ஐந்து அப்பங்களையும் அந்த இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து அவைகளை ஆசீர்வதித்து பிட்டு ஜனங்கள் முன் வைக்கும்படி சீஷர்களிடத்தில் கொடுத்தார். எல்லாரும் சாப்பிட்டு திருப்தி அடைந்தார்கள். மீதியான துணிக்கைகள் பன்னிரெண்டு கூடை நிறைய எடுக்கப்பட்டது.''

அதற்கு கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய கை குறுகி இருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று நீ இப்பொழுது காண்பாய் என்றார். (எண். 11:23)

எண்ணாகம புத்தகம் 11-வது அதிகாரத்தில் இடம் பெறுவது கர்த்தர் செய்யும் அற்புதமே ஆகும். அந்த அற்புதம் இயற்கையாக இடம் பெற்ற அற்புதம் அல்ல. செயற்கையாக உருவாக்கப்பட்டதும் அல்ல. கர்த்தரின் வார்த்தை புறப்பட்டவுடன் இடம் பெற்ற நிகழ்ச்சி ஆகும். கர்த்தர் சொல்ல ஆகும். கர்த்தர் கட்டளையிட நிற்கும். கர்த்தரை விசுவாசிக்கும் மக்களின் வாழ்விலும் பணியிலும் அற்புதத்திற்குமேல் அற்புதங்கள் இடம் பெற்று கொண்டே இருக்கும். மோசே அத்தனை உயர்ந்த ஊழியக்காரனாக இருந்தாலும் ஜனங்களுக்கு உணவு கொடுக்க மந்தைகளின் ஆடுகளை எண்ணுகின்றான். விசுவாசம் வராதவரைக்கும் விடைகளும் வருவது இல்லை. மோசே, அனைத்து மக்களுக்கும் அசைவ ஆகாரம் கொடுக்க இங்கும் அங்கும் ஏன் எட்டி பார்க்கின்றாய். என்னை நோக்கிப்பார். என் கரத்தை நோக்கிப்பார். வழுவாதபடி உன்னை நடத்த குறுகாத என் கரத்தை நோக்கி பார் என்று கர்த்தர் கூறினார்.

50-வது சங்கீதம் 10, 11 ஆகிய வசனங்கள் கூறுவது போன்று ''சகல காட்டு ஜீவன்களும் பர்வதங்களில் ஆயிரமாயிரமாய் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள். மலைகளில் உள்ள பறவைகளையெல்லாம் அறிவேன். வெளியில் நடமாடுகிறவைகள் எல்லாம் என்னுடையவைகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.''

இரட்சிக்க கூடாதபடிக்கு கர்த்தரின் கரம் குறுகி போவது இல்லை. தேவனாலே எல்லாம் கூடும். தேவனாலே கூடாத காரியம் ஒன்றும் இல்லை. மோசே அமைதியாகி விட்டான். ஆண்டவரின் சொற்படி செய்வதற்கு ஆயத்தம் ஆகிவிட்டான். இடம் பெற போகும் அற்புத நிகழ்ச்சிக்கு ஜனங்களை ஆயத்தப்படுத்த புறப்பட்டு சென்றான்.

மோசே கர்த்தரிடம் ஒன்பது கேள்விகளை கேட்டான் என்பதை நாம் அறிவோம். அந்த ஒன்பது கேள்விகளுக்கும் காரணம் அவனுடைய இருதயத்தில் எழும்பிய இரண்டு விதமான கவலைகள் ஆகும். முதலாவது கவலை இத்தனை பெரிய பொறுப்பை ஒருவனால் எப்படி எடுத்து நடத்த முடியும் என்பது ஆகும். இரண்டாவது கவலை இத்தனை திரளான மக்களுக்கு அசைவ உணவு எப்படி என்னால் கொடுக்க முடியும் என்பது ஆகும். நீ ஒருவனாக எதையும் செய்ய வேண்டாம் என்று கர்த்தர் இன்னும் எழுபது நபர்களை அவனுக்கு கூட்டி கொடுத்தார். இந்த வசனங்களில் உன்னால் முடியாதவைகளை உனக்காக நானே முன் நின்று செய்து தருகிறேன் என்று கர்த்தர் முன் வருகின்றார். இரண்டு சிநேகிதர்கள் மனம் விட்டு பேசுவது போன்று கர்த்தாதி கர்த்தரும் மோசேயும் உரையாடுவதை 18 முதல் 23 வசனங்களில் நாம் பார்க்கின்றோம்.

14.5 கர்த்தர் தலைவர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறார்

அப்பொழுது மோசே புறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு சொல்லி, ஜனங்களின் மூப்பரில் எழுபதுபேரை கூட்டி, கூடாரத்தை சுற்றிலும் அவர்களை நிறுத்தினான். கர்த்தர் மேகத்தில் இறங்கி, அவனோடே பேசி, அவன் மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர் மேலும் வைத்தார். அந்த ஆவி அவர்கள் மேல் வந்து தங்கின மாத்திரத்தில் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். சொல்லி, பின்பு ஓய்ந்தார்கள். (எண். 11:24-25)

யாத்திராகம புத்தகம் 3-வது அதிகாரத்தில் ஆரோன் மற்றும் மூப்பர்கள் கொடுக்கப்பட்டார்கள். யாத்திராகமம் 24-வது அதிகாரத்தில் 70 மூப்பர்கள் கொடுக்கப்பட்டார்கள். எண்ணாகமம் 11-வது அதிகாரத்தில் நிர்வாக பொறுப்பில் துணையாக நிற்பதற்கு 70 தலைவர்கள் கொடுக்கப்படுகின்றார்கள். அவர்களை மோசே தெரிந்து எடுக்க வேண்டும். பின்னர் ஆசரிப்பு கூடாரத்திற்கு அழைத்து வரவேண்டும்.

மோசே தானாக அவர்களை தெரிந்து எடுக்கவில்லை. ஜனங்களின் மூலமாக ஜனங்களின் சம்மதம் பெற்று மோசே அவர்களை தெரிந்து எடுத்தான் என்பதை உபாகம புத்தகம் முதல் அதிகாரத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம். உபாகமம் முதல் அதிகாரம் 9,12,13,14 ஆகிய வசனங்களை பாருங்கள். ''அக்காலத்திலே நான் உங்களை நோக்கி நான் ஒருவனாக உங்கள் பாரத்தை தாங்க கூடாது. உங்கள் வருத்தத்தையும் பிரயாசத்தையும் வழக்குகளையும் நான் ஒருவனாய் தாங்குவது எப்படி? நான் உங்களுக்கு அதிபதிகளை ஏற்படுத்தும் பொருட்டு உங்கள் கோத்திரங்களில் ஞானமும் விவேகமும் அறிவுமுள்ள மனிதரை தெரிந்து கொள்ளுங்கள் என்று சொன்னேன். நீங்கள் எனக்கு பிரதி உத்திரமாக நீர் செய்ய சொன்ன காரியம் நல்லது என்றீர்கள்.'' யாத்திராகம புத்தகம் 18-வது அதிகாரத்தில் நிர்வாகத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று மோசேயின் மாமனாரும் கூறினார். இது உமக்கு மிகவும் பாரமான காரியம். நீர் ஒருவராய் அதை செய்ய உம்மாலே கூடாது என்று எத்திரோ கூறியதை யாத்திராகமம் 18-வது அதிகாரம் 18-வது வசனத்தில் நாம் படித்தோம்.

அப்பொழுதும் மாமனாரின் யோசனையின்படி பற்பல அதிகாரிகளை மோசே நியமித்தான். ஆனால் அவன் சீனாய் மலையில் 40 நாட்கள் தங்கி இருந்த பொழுது அவர்கள் அனைவரும் பின்வாங்கி போனார்கள். அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம் என்று மோசேயை குறித்து பேசினார்கள் என்பதை யாத்திராகமம் 32-ம் அதிகாரம் முதல் வசனத்தில் நாம் பார்த்தோம். ஆனால் எண்ணாகம புத்தகம் 11-வது அதிகாரத்தில் இடம் பெறும் நிர்வாக சீர்திருத்தம் முற்றிலும் வித்தியாசமானது. மோசேயின் மாமனார் கூறியதினால் அல்ல, கர்த்தர் கட்டளையிட்டதினால் அது இடம் பெறுகின்றது. எத்திரோவின் திட்டத்தின்படி நியமிக்கப்பட்ட நிர்வாகிகளை ஆவியானவர் நிரப்பவில்லை. ஆனால் எண்ணாகம புத்தகம் 11-வது அதிகாரத்தில் தெரிந்து எடுக்கப்பட இருக்கும் அனைவரையும் ஆவியானவர் அபிஷேகம் செய்ய போகின்றார். கர்த்தர் மேகத்தில் இறங்கி அவனோடே பேசி அவன் மேல் இருந்த ஆவியை மூப்பராகிய அந்த 70 பேர் மேலும் வைத்தார் என்று 25-வது வசனம் கூறுகின்றது. மோசேயின் மீது இருந்த ஆவியை கர்த்தர் மூப்பர்கள் மீது வைத்தார். மோசேயின் தரிசனம் எதுவோ அதுவே அவனுடன் நிர்வாகத்தில் அமைந்த அனைவரின் தரிசனமும் ஆனது.

கானான் என்பதை நோக்கி புறப்பட்டு செல்ல வேண்டும் என்பதே மோசேயின் தரிசனம். கானான் நோக்கி செல்லும் பிரயாணம் எளிதானது அல்ல. அநேக உபத்திரவங்களின் வழியாக கடந்து செல்ல வேண்டும். தரிசனத்தில் உறுதியாக இருக்கும் வரை பின்வாங்குதல் பிரயாணத்தில் ஏற்படுவது இல்லை. 25-வது வசனத்தின் பின் பகுதியில், ''அந்த ஆவி அவர்கள் மேல் வந்து தங்கின மாத்திரத்தில் தீர்க்கதரிசனம் சொன்னார்கள் என்று வாசிக்கின்றோம். தீர்க்கதரிசி என்பதை குறிக்கும் எபிரெய சொல் ''நபி'' என்பது ஆகும். அதன் பொருள் கர்த்தரின் கட்டளைகளை அறிவிக்கின்றவன், கர்த்தரிடம் மனிதனுக்காகவும் மனிதரிடம் கர்த்தரின் சார்பாகவும் பேசுகின்றவன் என்பது ஆகும். நபி என்ற எபிரெய பதம் 300-க்கும் அதிகமான இடங்களில் வேதபுத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. நபி என்ற எபிரெய பதத்தை போன்று மற்றும் இரண்டு பதங்களும் பயன் படுத்தப்பட்டு உள்ளன. அவை ''ரோகே'' என்ற பதமும் ''கோசே'' என்ற பதமும் ஆகும். ரோகே என்றால் ஞானதிருஷ்டிக்காரன் என்று பொருள். 9 முறை இந்த பதம் வேதபுத்தகத்தில் பயன்படுத்தப்பட்டு உள்ளது. கோசே என்றால் தரிசனம் பார்க்கிறவன் என்று பொருள். 20 முறை இந்த பதம் வேதபுத்தகத்தில் இடம் பெற்று உள்ளது. பரிசுத்த வேத புத்தகத்தில் 16 தீர்க்கதரிசிகளின் நூல்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. அவர்களில் ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் என்பவர்கள் பெரிய தீர்க்கதரிசிகள் என்றும், ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா என்ற 12 தீர்க்கதரிசிகளும் சிறிய தீர்க்கதரிசிகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். மூன்று முக்கிய பணிகளை தீர்க்கதரிசிகள் செய்ய வேண்டும். முதலாவது கர்த்தரின் சமூகத்தில் நின்று விண்ணப்பம் பண்ண வேண்டும். இரண்டாவது மனிதன் முன் நின்று கர்த்தரின் வசனங்களை எடுத்து கூற வேண்டும். மூன்றாவது இனிமேல் இடம் பெற போகும் சம்பவங்களை திட்டவட்டமாக உரைக்க வேண்டும்.

> ***அப்பொழுது இரண்டு பேர் பாளயத்தில் இருந்து விட்டார்கள். ஒருவன் பேர் எல்தாத் மற்றவன் பேர் மேதாத். அவர்களும் பேர்வழியில் எழுதப்பட்டு இருந்தும் கூடாரத்திற்கு போக புறப்படாது இருந்தார்கள். அவர்கள் மேலும் ஆவி வந்து தங்கினதினால் பாளயத்தில் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். (எண். 11:26)***

எண்ணாகம புத்தகம் 11-வது அதிகாரம் 26 முதல் 29 வசனங்களில் தெரிந்து எடுக்கப்பட்ட 70 பேர்களில் இருவரின் பெயர்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. அவர்கள் எல்தாத், மேதாத் என்ற இருவரும் ஆவார்கள். அவர்கள் இருவரும் ஆசரிப்பு கூடாரத்திற்கு இன்னும் வந்து சேரவில்லை. ஆயினும் கர்த்தரின் ஆவி தெரிந்து எடுக்கப்பட்ட 70 பேரையும் ஒரே சமயத்தில் நிரப்பியது. ஆசரிப்பு கூடாரத்தில் கூடி வந்து இருந்த 68 நபர்களையும் கர்த்தரின் ஆவி நிரப்பியது. அது போன்று அதே சமயத்தில் புறப்பட்டு கொண்டிருந்த எல்தாத், மேதாத் என்ற இருவரையும் அவர்கள் இருந்த இடத்திலேயே கர்த்தரின் ஆவி நிரப்பியது.

தெரிந்து எடுக்கப்பட்டவர்கள் யார் என்பதையும் அவர்கள் எந்த இடத்தில் வசிக்கின்றார்கள் என்பதையும் கர்த்தர் அறிவார். தாமே நேராக அங்கு சென்று, தமது ஆவியினால் அப்படிப்பட்டவர்களை கண்டு பிடித்து அபிஷேகம் செய்கின்றார்.

ஒரு பிள்ளையாண்டான் ஓடி வந்து எல்தாதும், மேதாதும் பாளயத்தில் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் என்று மோசேக்கு அறிவித்தான். உடனே மோசேயின் இடத்தில் உள்ள வாலிபரில் ஒருவனும் அவனுடைய ஊழியக்காரனும் நூனின் குமாரனுமாகிய யோசுவா பிரதியுத்திரமாக என் ஆண்டவனாகிய மோசேயே அவர்களை தடை பண்ணும் என்றான். அதற்கு மோசே நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லத்தக்கதாக கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள் மேல் இறங்க பண்ணினால் நலமாயிருக்குமே என்றான்.(எண். 11:27-29)

வீட்டில் இருந்து கொண்டு இருந்த எல்தாத், மேதாத் என்ற இருவர் மீதும் கர்த்தருடைய ஆவியானவர் இறங்கினார். அவர்கள் வீடு ஜெப வீடாக மாறிவிட்டது. எழுப்புதல் பிறந்து விட்டது. ஆசரிப்பு கூடாரத்தில் இடம் பெறும் துதி ஸ்தோத்திரம் தீர்க்கதரிசனம் அனைத்தும் பாளயத்தின் நடுவிலும் துவங்கி விட்டது. இதனை ஒருவன் கண்டு ஆச்சரியப்பட்டு ஓடி சென்று மோசேயிடம் தெரிவிக்கின்றான். மோசேயின் நிழல் போன்று நின்று கொண்டிருந்த யோசுவா பதட்டம் அடைகின்றான். அவர்களை தடை செய்யும் என்றான். யோசுவா மீது மோசே அதிக அன்பும் நம்பிக்கையும் வைத்து இருந்தான். ஆயினும் யோசுவா தன்னை தவறான தீர்மானம் செய்ய தூண்டிய பொழுது மோசே அதற்கு இணங்கவில்லை. நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ என்றான். வைராக்கியம் என்பதற்கு பயன் படுத்த பட்டு உள்ள எபிரெய வார்த்தையின் சரியான பொருள் ''பொறாமை'' என்பது ஆகும்.

பாளயம் பரிசுத்தமான பாளயமாக இருக்க ஊழியங்கள் பெருகட்டும் என்று மோசே வாஞ்சித்தான். ஆசரிப்பு கூடாரத்தின் நான்கு திரைகளுடன் ஆவியானவரின் கிரியை நின்றுவிடாமல் வீதிகள் தெருக்கள் கூடாரங்கள் என்று அலை அலையாக ஆவியானவருடைய கிரியை செல்லட்டும் என்று மோசே வாஞ்சித்தான். மோசேயின் வார்த்தைகளை யோசுவா ஏற்று கொண்டான்.

கர்த்தரின் ஆவியானவர் அனைவர் மீதும் வந்து தங்குவாராக. நமது வாழ்க்கை பிரயாணத்தில் கர்த்தரின் ஆவியானவர் நம்மை தாங்குவாராக.

பின்பு மோசேயும் இஸ்ரவேலின் மூப்பரும் பாளயத்திலே வந்து சேர்ந்தார்கள். (எண். 11:30)

ஆசரிப்பு கூடாரத்தில் இருந்த அனைவரும் பாளையத்தின் நடுவில் வந்து சேர்ந்தார்கள். கர்த்தரின் அதிசயம், கர்த்தரின் பயங்கரம் இரண்டும் இடம் பெற போகின்றது. விசுவாசித்தவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் சம்பவம் இடம் பெற போகின்றது. விசுவாசியாதவர்களுக்கு சோகமான ஓர் சம்பவம் இடம் பெற போகின்றது.

14.6 காடை உணவும் இச்சையினால் வந்த வாதையும்

அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட ஒரு காற்று சமுத்திரத்திலிருந்து காடைகளை அடித்து கொண்டு வந்து, பாளயத்திலும் பாளயத்தை சுற்றிலும், இந்த பக்கம் ஒருநாள் பிரயாண மட்டும் அந்த பக்கம் ஒருநாள் பிரயாண மட்டும், தரையின் மேல் இரண்டு முழ உயரம் விழுந்து கிடக்க செய்தது. (எண். 11:31)

கர்த்தரிடம் இருந்து புறப்பட்டு வந்த காற்று சமுத்திரத்தின் பறவைகளுக்கு இறக்கையாக அமைந்த காற்று அல்ல. அது வழக்கம் போல் அடிக்கும் காற்று அல்ல. கர்த்தரின் வார்த்தையினால் புறப்பட்டு வந்த காற்று. தானாக பறந்து வந்த பறவைகளும் அல்ல. கர்த்தர் அளிக்கும் விருந்திற்கு தாம்பூலமாக அமைந்த காற்றில் வந்த பறவைகள். ''அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே கர்த்தரை துதியுங்கள்'' என்று 148-வது சங்கீதம் 8-வது வசனம் கூறுகின்றது. 78-வது சங்கீதம் 26 முதல் 29 வசனங்கள், ''ஆகாசத்திலே கீழ் காற்றை வரப்பண்ணி, தம்முடைய வல்லமையினால் தென்றலையும் வீச செய்து மாம்சத்தை தூளத்தனையாயும் சிறகுள்ள பறவைகளை கடற்கரை மணலத்தனையாயும் வருஷிக்க பண்ணி அவர்களை அவர்கள் பாளயத்தின் நடுவிலும் அவர்கள் கூடாரங்களை சுற்றிலும் இறங்க பண்ணினார். அவர்கள் புசித்து திருப்தி அடைந்தார்கள். அவர்கள் இச்சித்ததை அவர்களுக்கு கொடுத்தார்.''

பாளயத்தின் உள்ளாகவும் பாளயத்தின் இரு பக்கங்களிலும் பறவைகள் வந்து விழுந்தன. கைக்கு எட்டும் உயரத்தில் பறந்து வந்து விழுந்தன. ஒரு நாள் பிரயாண தூரம் வரை பரவி கிடந்தன என்று எண்ணாகமம் 11-வது அதிகாரம் 31-வது வசனம் கூறுகின்றது. ஒரு நாள் பிரயாண தூரம் என்பது அந்த நாட்களின் கணக்கின்படி 20 முதல் 25 மைல்கள் ஆகும். கர்த்தர் அளித்த விருந்து இந்த பக்கம் சுமார் 20 மைல்கள் நீளமாகவும் அந்த பக்கம் சுமார் 20 மைல்கள் நீளமாகவும் அமைந்து நின்றது. தரையின் மேல் இரண்டு முழ உயரம் விழுந்து கிடக்க செய்தது. சுமார் 3 அடி உயரம் உணவு குவிக்கப்பட்டது. அது அந்த குறுகலான அகாபா கடலில் இருந்து வந்து விழுந்தது.

அப்பொழுது ஜனங்கள் எழும்பி, அன்று பகல் முழுவதும், இரா முழுவதும் மறுநாள் முழுவதும் காடைகளை சேர்த்தார்கள்; கொஞ்சமாய் சேர்த்தவன் பத்து ஓமர் அளவு சேர்த்தான்; அவைகளை பாளையத்தை சுற்றிலும் தங்களுக்காக குவித்து வைத்தார்கள். (எண். 11:32)

மொத்தமாக விழுந்து கிடந்த உணவு சிறு சிறு குவியல்களாக குவித்து வைக்கப்பட்டது. எது யாரது குவியல் என்பதில் ஓர் தெளிவு இருந்தது. ஓரளவே கூடாரத்திற்குள் எடுத்து செல்லப்பட்டது. கொஞ்சமாக சேர்த்தவன் கூட 10 ஓமர் அளவு சேர்த்தான். ஒரு ஓமர் அளவு என்பது ஒரு கழுதை சுமக்க கூடிய சுமை என்பது ஆகும். கொஞ்சம் சேர்த்தவன் கூட 10 கழுதைகளுக்கு பொதி ஏற்றினான். 19, 20-வது வசனங்களில் கூறியது போன்று கர்த்தர் வைத்த பந்தி ஒரு நாள் பந்தி அல்ல. ஒரு மாதம் பெற்ற பந்தியாக மாறியது. முன்னர் என்றைக்கு விருந்து கிடைக்கும் என்றார்கள். இப்பொழுது என்றைக்கு விருந்து முடியும் என்று கூறுகின்றார்கள். நமக்கு இறைச்சியை புசிக்க கொடுப்பவர் யார் என்று 4-வது வசனத்தில் அழுதவர்கள் அமைதியானார்கள். இந்த மன்னாவை தவிர வேறு ஒன்றும் கண் எதிரே தெரியவில்லையே என்றவர்களின் கண் எட்டும் தூரம் வரை பறவைகள் பரந்து கிடக்கின்றன.

தங்கள் பற்கள் நடுவே இருக்கும் இறைச்சியை அவர்கள் மென்று தின்னு முன்னே கர்த்தருடைய கோபம் ஜனங்களுக்குள்ளே மூண்டது; கர்த்தர் ஜனங்களை மகா பெரிய வாதையால் வாதித்தார். (எண். 11:33)



பாளயத்தில் விழுந்த காடைகள்

அவர்கள் இச்சித்ததை அவர்களுக்கு கர்த்தர் கொடுத்தார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு நன்றி கூறவில்லை. அழுதவர்களும் முறுமுறுத்தவர்களும் அனைத்தும் பெற்று கொண்டார்கள். ஆனால் ஏன் இப்படி அழுதோம், ஏன் இப்படி முறுமுறுத்தோம் என்றும் சற்றும் தங்களை தாழ்த்தவில்லை. முறுமுறுத்தும் பொறுத்து கொண்டு கர்த்தர் இத்தனை அதிகம் தந்தாரே என்று கர்த்தருக்கு ஸ்தோத்திரம் தெரிவிக்கவில்லை. அவ்விதமான ஜனங்கள் தாங்கள் பெற்று கொண்டதை அனுபவிக்க போவதும் இல்லை. பிரசங்கியின் புத்தகம் 6-வது அதிகாரம் 2-வது வசனத்தில் ''ஒருவனுக்கு தேவன் செல்வத்தையும் சம்பத்தையும் கனத்தையும் கொடுக்கிறார். அவன் என்ன இச்சித்தாலும் அதெல்லாம் அவனுக்கு குறைவில்லாமல் கிடைக்கும். ஆனாலும் அவைகளை அனுபவிக்கும் சக்தியை தேவன் அவனுக்கு கொடுக்க வில்லை'' என்று கூறுகிறார். முறுமுறுக்கின்றவர்களுக்கு கர்த்தர் கட்டளையிட்ட மன்னா பிடித்தமாக இல்லை. வனாந்திர வாழ்விற்கு ஏற்ற உணவு ருசியாக இல்லை. அவர்கள் கீழ் படியவில்லை. கீழ் படியாமையின் பிள்ளைகள் மேல் தேவ கோபாக்கினை வரும் என்று எபேசியர் நிரூபம் 5-வது அதிகாரம் 6-வது வசனம் கூறுகின்றது. கர்த்தர் அருளிய விருந்து அனைவரையும் அழிக்கவில்லை. அடங்கி நடக்க மறுத்தவர்களை மட்டும் அழித்தது. மிகவும் கண்ணியவான்களாக கருதப்பட்டவர்கள் கூட அந்த வாதையில் மடிந்தார்கள் என்று நாம் பார்க்கின்றோம். 78-வது சங்கீதம் 30, 31-வது வசனங்கள். ''அவர்கள் தங்கள் இச்சையை வெறுக்கவில்லை. அவர்களுடைய போஜனம் அவர்கள் வாயில் இருக்கும் போதே தேவ கோபம் அவர்கள் மேல் எழும்பி அவர்களில் கொழுத்தவர்களை சங்கரித்து இஸ்ரவேலில் விஷேசித்தவர்களை மடிய பண்ணிற்று'' என்று கூறுகின்றன. மகா பெரிய வாதை என்று வருவதின் சரியான பொருள் மூச்சு திணறுதல், தாங்க முடியாத இளைப்பு என்பது ஆகும். அளவிற்கு மிஞ்சி சாப்பிட்டதின் விளைவினால் மூச்சு திணறியது. இளைப்பு வந்தது. ''அப்பொழுது அவர்கள் கேட்டதை அவர்களுக்கு கொடுத்தார். அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார்'' என்று 106-வது சங்கீதம் 15-வது வசனம் கூறுகின்றது.

இச்சித்த ஜனங்களை அங்கே அடக்கம் பண்ணினதினால், அந்த ஸ்தலத்துக்கு கிப்ரோத் அத்தாவா என்று பேரிட்டான். பின்பு, ஜனங்கள் கிப்ரோத் அத்தாவா என்னும் இடத்தை விட்டு, ஆஸ்ரோத்துக்கு பிரயாணம் பண்ணி, ஆஸ்ரோத்திலே தங்கினார்கள். (எண். 11:34-35)

இச்சித்த ஜனங்களை அங்கே அடக்கம் பண்ணினதினால் அந்த ஸ்தலத்துக்கு கிப்ரோத் அத்தாவா என்று பேரிட்டான். கிப்ரோத் அத்தாவா என்பதின் பொருள் இச்சித்தவர்களின் கல்லறை தோட்டம் என்பது ஆகும். அடுத்த வசனம் பின்பு என்று துவங்குகின்றது. வனாந்திர பிரயாணத்தில் கர்த்தர் கூறுவதை மீறி நடப்பது எவ்வளவு பெரிய தவறு என்பதை கண்ணால் கண்ட பின்பு ஜனங்கள் அந்த இடத்தை விட்டு புறப்பட்டார்கள்.

அத்தியாயம் - 15
மோசேக்கு விரோதமாக எழும்பும் சொந்த குடும்பம்

15.1 மோசே மேல் பொறாமை கொள்ளும் மிரியாமும் ஆரோனும்

எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம் பண்ணி இருந்த படியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயின் நிமித்தம் அவனுக்கு விரோதமாய் பேசி: (எண். 12:1)

எண்ணாகம புத்தகம் 11-வது அதிகாரத்தில் ஜனங்களின் நடுவிலே பின் வாங்குதல் இடம் பெற்றது என்று பார்த்தோம். இப்பொழுது எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் ஜனங்களை முன்னாக நின்று நடத்த வேண்டிய அதிகாரிகள் நடுவிலே பின் வாங்குதல் ஏற்படுகின்றது. 11-வது அதிகாரத்தில் கடைசி வரிசையில் நின்றவர்கள் மோசேக்கு எதிராக சாடினார்கள். 12-வது அதிகாரத்தில் முன்னாக நின்றவர்கள் மோசேக்கு எதிராக சாடினார்கள். இந்த அதிகாரத்தில் மோசேக்கு விரோதமாக எழும்பியவர்கள் ஜனங்கள் அல்ல, அவனது சொந்த வீட்டாரே ஆகும். உடன் பிறந்த மிரியாம் ஆரோன் என்பவர்கள் மோசேக்கு எதிராக எழும்பினார்கள். இருவரும் ஒன்று சேர்ந்து இரண்டு குற்றசாட்டுகளை மோசே மீது கொடுத்தார்கள். முதலாவது குற்றசாட்டு மோசே ஏன் ஒரு எத்தியோப்பிய பெண்ணை திருமணம் செய்தான் என்பது ஆகும். எண்ணாகமம் 12-வது அதிகாரம் முதலாவது வசனத்தில் இந்த குற்றசாட்டு கூறப்பட்டு உள்ளது. எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம் பண்ணி இருந்தபடியினால் மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயின் நிமித்தம் அவனுக்கு விரோதமாய் பேசினார்கள் என்று நாம் பார்க்கின்றோம்.

எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம் பண்ணியதினால் என்று எழுதப்படவில்லை. விவாகம் பண்ணி இருந்தபடியினால் என்று எழுதப்பட்டு உள்ளது. சமீபத்தில் நடந்த விவாகம் அல்ல. அநேக ஆண்டுகளுக்கு முன்பாகவே இடம் பெற்று முடிந்து விட்ட விவாகம் ஆகும். எபிரெய மொழியில் எத்தியோப்பியா ஸ்திரீ என்பதின் பொருள் கூஷான் இனத்தை சேர்ந்த ஸ்திரீ என்பது ஆகும். கூஷான் என்பது மீதியான் இனத்தை சேர்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட பிறிதொரு பெயர் ஆகும். ஆபகூக் தீர்க்கதரிசியின் புத்தகம் 3-வது அதிகாரம் 7-வது வசனத்தில் மீதியானியரை பற்றிய விவரம் கூறப்படும் பொழுது கூஷான் என்ற பதமும் பயன்படுத்தப்பட்டு உள்ளது. ''கூஷானின் கூடாரங்கள் வருத்தத்தில் அகப்பட்டு இருக்க கண்டேன். மீதியான் தேசத்தின் திரைகள் நடுங்கின'' என்று அந்த வசனத்தில் வருகின்றது. கூஷான் மீதியான் என்ற இரண்டும் ஒரே இனத்தை குறிக்கின்றது. மோசே யாத்திராகம புத்தகம் 2-வது அதிகாரத்தில் பார்வோனின் கோபத்திற்கு தப்பி ஓடிய பொழுது அவன் சேர்ந்த இடம் மீதியானியரின் இடம் ஆகும். மோசேயின் வயது அப்பொழுது 40 வயது ஆகும். அவனுக்கு 40 வயதானபோது, என்று அப்போஸ்தலர் 7-வது அதிகாரம் 23-வது வசனம் இந்த சம்பவத்தை விளக்குகின்றது. மோசே மீதியான் தேசத்தில் மேலும் 40 வருஷம் தங்கி இருந்தான். அந்த நாட்களில் அவனுக்கு மீதியான் ஸ்திரீயான சிப்போராள் என்பவளுடன் திருமணம் இடம் பெற்றது. இதை யாத்திராகம புத்தகத்தில் காண்கிறோம்.

''பார்வோன் அந்த காரியத்தை கேள்விப்பட்ட போது மோசேயை கொலை செய்ய வகை தேடினான். மோசே பார்வோனிடத்தினின்று, தப்பி ஓடி மீதியான் தேசத்தில் போய் தங்கி ஒரு துரவண்டையிலே உட்கார்ந்து இருந்தான். மீதியான் தேசத்து ஆசாரியனுக்கு 7 குமாரத்திகள் இருந்தார்கள். அவர்கள் தங்கள் தகப்பனுடைய ஆடுகளுக்கு தண்ணீர் காட்டும்படிக்கு அங்கே வந்து தண்ணீர் மொண்டு தொட்டிகளை நிரப்பினார்கள். அப்பொழுது மேய்ப்பர்கள் வந்து அவர்களை துரத்தினார்கள். மோசே எழுந்திருந்து அவர்களுக்கு துணை நின்று அவர்களுடைய ஆடுகளுக்கு தண்ணீர் காட்டினான். அவர்கள் தங்கள் தகப்பனாகிய ரெகுவேலிடத்தில் வந்த போது அவன் நீங்கள் இன்று இத்தனை சீக்கிரமாய் வந்தது என்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள் எகிப்தியன் ஒருவன் மேய்ப்பரின் கைகளுக்கு எங்களை தப்புவித்து எங்களுக்கு தண்ணீர் மொண்டு கொடுத்து ஆடுகளுக்கும் தண்ணீர் காட்டினான் என்றார்கள். அப்பொழுது அவன் தன் குமாரத்திகளை பார்த்து அவன் எங்கே? அந்த மனிதனை நீங்கள் விட்டு வந்தது என்ன? போஜனம் பண்ணும்படிக்கு அவனை அழைத்து கொண்டு வாருங்கள் என்றான். மோசே அந்த மனிதனிடத்தில் தங்கி இருக்க சம்மதித்தான். அவன் சிப்போராள் என்னும் தன் குமாரத்தியை மோசேக்கு கொடுத்தான்.'' (யாத் 2:15-21)

எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் மிரியாமும் ஆரோனும் சேர்ந்து கொண்டு மோசேயிடம் எத்தியோப்பிய ஸ்திரீயை விவாகம் செய்ததை குறித்து விவாதம் செய்தார்கள். அந்த ஸ்திரீ சிப்போராள் என்பவளே ஆகும்.

மோசே மறுமணம் செய்ததாக பரிசுத்த வேத புத்தகத்தில் எவ்வித குறிப்புகளும் கொடுக்கப்படவில்லை. சிப்போராள் மரணம் அடைந்ததாகவும் இதுவரை குறிப்பிடப்படவும் இல்லை. மோசே பார்வோனின் பட்டயத்திற்கு பயந்து உயிர் தப்பி ஓடிய நேரத்தில் சிப்போராள் அவனுடைய வாழ்க்கையில் பிரவேசித்தாள். அவனுடைய மனவேதனைகள், ஏமாற்றங்கள், அனைத்தும் அறிந்தவளாக சிப்போராள் மோசேயை ஏற்று கொண்டாள். அன்று முதல் சிப்போராள் மோசேக்கு முற்றிலும் உண்மையாக இருந்தாள். மோசே தனது 80-வது வயதில் மாமனார் வீட்டின் ஆடுகளை மேய்த்து கொண்டு சீனாய் வனாந்திரம் மட்டும் வந்தான் என்பதை யாத்திராகம புத்தகம் 3-வது அதிகாரத்தில் நாம் பார்த்தோம். ''மோசே மீதியான் தேசத்து ஆசாரியனாய் இருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்து வந்தான். அவன் ஆடுகளை வனாந்திரத்தின் பின் புறத்திலே ஓட்டி தேவ பர்வதமாகிய ஓரேப் மட்டும் வந்தான்'' என்று யாத்திராகமம் 3-வது அதிகாரம் முதலாவது வசனத்தில் வாசிக்கின்றோம்.

''நாற்பது வருஷம் சென்ற பின்பு சீனாய் மலையின் வனாந்திரத்திலே கர்த்தருடைய தூதனானவர் முட்செடி எரிகிற அக்கினி ஜீவாலையிலே அவனுக்கு தரிசனமானார்'' என்று அப்போஸ்தலர் 7-வது அதிகாரம் 30-வது வசனத்தில் படிக்கின்றோம். தேவ தரிசனத்தை பெற்ற பின்னர் மோசே முட்செடியில் பெற்ற தரிசனம், அழைப்பு, அனைத்தையும் திரும்பி வந்து சிப்போராள் என்ற தன் மனைவியிடம் பகிர்ந்து கொண்டான். சிப்போராள் தன் கணவனுக்கு பூரண ஒத்துழைப்பு கொடுத்தாள். அவன் மறுபடியும் எகிப்திற்கு செல்ல வேண்டும் என்றவுடன் மோசேயுடன் சிப்போராள் புறப்பட்டு வந்தாள். சிப்போராள் ஒரு மிதியான் தேசத்து ஆசாரியனின் மகளாக இருந்தாலும் விருத்தசேதனம் என்ற உடன்படிக்கையின் மூலமாக யேகோவாவின் தயவை பெற்று விட்டாள். இந்த விபரத்தை யாத்திராகம புத்தகம் 4-வது அதிகாரம் 24 முதல் 26 வசனங்களில் நாம் பார்க்கலாம். சென்ற இடத்தில் பெற்ற மனைவியாக அல்ல, இரத்த சம்பந்தப்பட்ட உறவாக அவர்கள் இணைப்பு

மாறியது என்பதை யாத்திராகமம் 4-வது அதிகாரம் 26-வது வசனம் சுட்டி காட்டுகின்றது. நீர் எனக்கு இரத்த சம்பந்தமான புருஷன் என்று சிப்போராள் மோசேயை பார்த்து கூறினாள்.

எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரம் முதல் வசனத்தில் மோசேயின் சகோதரியாகிய மிரியாம், சிப்போராளுக்கும் குடும்பத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று கூறினாள். எங்கோ இருந்து வந்தவள் என்று கூறினாள். எத்தியோப்பியா பெண் என்று பொருள்படும் கூஷ் இனத்தை சேர்ந்தவள் ஒரு மீதியான் தேசத்து பெண் என்று கூறினாள். சிப்போராள் தனது இனத்தை சேர்ந்த பெண் அல்ல என்று மிரியாம் சிப்போராளை நிராகரித்தாள். விருத்த சேதன உடன்படிக்கைக்கு உடன்பட்டவர்கள் இனம் நிறம் எதுவும் பார்க்க முடியாது. ஆனால் மிரியாம் சிப்போராளை இன முறையில் எடை இட்டாள்.

விசுவாசம் என்பதை நடுவாக வைத்து சிப்போராள் மோசே உடன் இணைந்து கொண்டாள். விசுவாச ஜீவியத்திற்குள் வந்த பின்னர் உலகில் எவரையும் மாம்சத்தின்படி அறிய போவது இல்லை என்பதில் பரிசுத்த பவுல் திட்டவட்டமாக இருந்தார். இதனை புதிய ஏற்பாட்டு நூல்களில் நாம் பார்க்கலாம். 2 கொரிந்தியர் 5:16ல் ''இது முதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம். நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்து இருந்தாலும், இனி ஒரு போதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்'' என்று பரிசுத்த பவுல் கூறுகின்றார். பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் விருத்தசேதன உடன்படிக்கைக்கு உட்பட்டவர்கள் அனைவரும் தங்களை ஒரே குடும்ப உறுப்பினர்கள் என்றே கருதினார்கள். புதிய ஏற்பாட்டின் காலத்தில் இயேசு பாவம் போக்கும் பலியாக சிலுவையில் இரத்தம் சிந்தினார். இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி மனுமக்களை பரிசுத்தம் செய்கின்றது. அந்த அனுபவத்திற்குள் வந்தவர்கள் மாம்சத்தின்படி யோசிப்பது இல்லை. மாம்ச ஞானத்திற்கு ஏற்ப நடப்பதும் இல்லை. மாம்சமானவர் மீது தங்கள் நம்பிக்கைகளை வைப்பதும் இல்லை என்று பரிசுத்த பவுல் தனது அனைத்து நிரூபங்களிலும் ஆணித்தரமாக எடுத்து உரைக்கின்றார்.

எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் மோசேயின் மனைவி சிப்போராளை மோசேயின் சகோதரி மிரியாம் மாம்ச கண்ணோட்டத்துடன் பார்த்தாள். விருத்தசேதன உடன்படிக்கையின் மூலமாக வீட்டில் பிரவேசித்தவளை அவிசுவாச கண்கள் மூலமாக பார்த்தாள். தன் இனத்தை சேராதவளாக, தன் குடும்பத்திற்கு தகுதி அற்றவளாக, தனது வீட்டு வாசற்படியில் கால் எடுத்து வைப்பதற்கு அருகதை அற்றவளாக சிப்போராள் மிரியாமிற்கு காணப்பட்டாள். ஆனால் சிப்போராள் மோசேயை போன்று கர்த்தரின் பார்வையில் கிருபை பெற்றாள்.

''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' என்று அப்போஸ்தலர் 16:31 கூறுவது போன்று சிப்போராள் மூலமாக அவளது தகப்பன் எத்திரோ, அவளது சகோதரன் ஓபா அனைவரும் ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தரை கண்டு கொண்டார்கள். ஆயினும் மிரியாமிற்கோ மாம்சம் கிரியை செய்கின்றது. உணர்ச்சி வேகம் கொள்ளுகின்றது. சிப்போராள் பிடிக்கவில்லை. எத்தியோப்பியாள் என்று ஏளனம் செய்தாள். அவளை நாடி சென்ற மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தாள். யாத்திராகம புத்தகம் 18-வது அதிகாரத்தில் நாம் பார்த்த பொழுது அதில் 2-வது வசனத்தில் சிப்போராள் சில நாட்கள் சொந்த ஊருக்கு சென்று திரும்பி வந்ததை நாம் பார்த்தோம். தன் இரண்டு பிள்ளைகளுடனும் தகப்பனுடனும் திரும்பி வந்து மோசேயினிடத்தில் சிப்போராள் சேர்ந்து கொண்டாள். அதன் பின்னர் சிப்போராள் திரும்பி

சென்றதாகவும் மரணம் அடைந்ததாகவும் வேத புத்தகம் கூறவே இல்லை. சிப்போராள் மோசேயின் உத்தம மனைவியாக உடன் ஊழியக்காரியாக துணை நின்றாள்.

மிரியாமும் ஆரோனும் சேர்ந்து வந்தார்கள் என்று முதல் வசனம் கூறுகின்றது. மிரியாமின் பெயரே முதலாவதாக வருகின்றது. காரணம் மிரியாம் தலைமையில் அனைத்தும் இடம் பெறுகின்றன. மிரியாமும் ஆரோனும் பேசுகின்றார்கள். அவர்கள் இருவரும் அநேக நாட்களாக அடைகாத்து வந்த முட்டைகள் வெடிக்கின்றன. ஒவ்வொரு வெடிப்பும் மோசேயின் இதயத்தை அடிக்கின்றன. மோசேயின் உடன் பிறந்தவர்களாக, சுமக்க முடியாத பாரத்தை சுமக்கும் மோசேக்கு, சாதகமாக இருக்க வேண்டிய அவர்கள் பாதகமாக மாறினார்கள்.

மீகா தீர்க்கதரிசி எழுதின புத்தகம் 6:4-வது வசனம் ''நான் உன்னை எகிப்து தேசத்தில் இருந்து வரப்பண்ணி, அடிமைத்தன வீட்டில் இருந்த உன்னை மீட்டு கொண்டு ஆரோன் மீரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்'' என்று கூறுகின்றது. ஆண்டவரால் அழைக்கப்பட்ட மூவரில் இருவர் கூட்டு சேர்ந்தார்கள். உண்மையுடன் உழைக்கும் உத்தமனுக்கு எதிராக கூடி வந்தார்கள். ஜெபம் ஸ்தோத்திரம் பிறக்க வேண்டிய அவர்களுடைய உதடுகளில் பகையும் கோபமும் பற்றி எரிகின்றன. தலைமை பீடத்தில் இருந்த இருவரின் நிலைமை சரியில்லை. அதற்கு காரணம் பொறாமை.

வனாந்திர பிரயாணத்தை முன்னாக நின்று நடத்த வேண்டிய மூன்று முக்கியமான தலைவர்களை நடுவாக கொண்ட ஒரு அதிகாரம் எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரம். எங்கே இரண்டு பேர் அல்லது மூன்று பேர் ஒரு மனதுடன் தங்கி வாழுகின்றார்களோ அங்கு கர்த்தர் வந்து வாழுகின்றார் என்பதை நிரூபிப்பதற்கு ஓர் மாதிரியாக இருக்க வேண்டிய அதிகாரம் எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரம். ஒரு தாயின் வயிற்றில் உருவான 3 பிள்ளைகளை நடுவாக கொண்ட அதிகாரம் எண்ணாகமம் 12-வது அதிகாரம். அந்த மூன்று நபர்களும் தேவனின் பார்வையில் மிகவும் முக்கியமானவர்கள். மோசே மிரியாம் ஆரோன் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன் என்று மீகா தீர்க்கதரிசி கூறுகின்றார். முன் வரிசையில் நட என்று கர்த்தர் மோசேயிடம் எப்படி கூறினாரோ அப்படியே ஆரோன் மிரியாம் என்ற இருவரிடமும் கூறினார் என்பதை மீகா தீர்க்கதரிசி எடுத்து கூறுகின்றார். எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் மிரியாம் என்றும் மீகா தீர்க்கதரிசியின் புத்தகம் 6-வது அதிகாரம் 4-வது வசனத்தில் மீரியாம் என்றும் மோசேயின் சகோதரியின் பெயர் திரும்ப திரும்ப குறிப்பிடப்பட்டு உள்ளது. மூவர் கொண்ட ஒரு குழுவாக, மூவருக்கும் ஒருவராக மோசே என்பவரை கொண்ட குழுவாகவும் இருந்தது என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

கர்த்தர் மோசே மூலமாகவே ஆசாரியர்களுக்கும் ஜனங்களுக்கும் கொடுக்க வேண்டிய கட்டளைகளை கொடுத்து கொண்டே இருந்தார். கர்த்தரால் அழைப்பு பெற்றவன் மோசே. அவருக்கு வாயாக அழைக்கப்பட்டவன் ஆரோன். யாத்திராகம புத்தகம் 4-வது அதிகாரம் 14,15,16 ஆகிய வசனங்களில் இதை காணலாம். ''அப்பொழுது கர்த்தர் மோசேயின் மேல் கோபம் மூண்டவராகி லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவா. அவன் நன்றாய் பேசுகிறவன் என்று அறிவேன். அவன் உன்னை சந்திக்க புறப்பட்டு வருகிறான். உன்னை காணும் போது அவன் இருதயம் மகிழும். நீ அவனோடே பேசி, அவன் வாயில் வார்த்தைகளை போடு. நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்து நீங்கள் செய்ய வேண்டியதை உங்களுக்கு உணர்த்துவேன். அவன் உனக்கு பதிலாக ஜனங்களோடே பேசுவான். இவ்விதமாய் அவன் உனக்கு வாயாக இருப்பான். நீ அவனுக்கு தேவனாக இருப்பாய்.''

ஆரோன் மோசேக்கு வாயாக மட்டுல்ல. மோசேக்கு ஓர் தீர்க்கதரிசி போன்றும் இருப்பான் என்று கர்த்தர் கூறியதை யாத்திராகம புத்தகம் 7-வது அதிகாரம் முதல் வசனத்தில் நாம் பார்க்கலாம். கர்த்தரின் பார்வையில் மூவரும் முக்கியமானவர்கள். மூவரும் கனம் பெற்றவர்கள். ஆயினும் மூவரில் இருவர் ஒன்றாகி விட்டார்கள். ஒருவரை எதிர்க்க முன்வந்து விட்டார்கள். மிரியாமும் ஆரோனும் ஒன்று சேர்ந்து விட்டார்கள். இரண்டு குற்றசாட்டுகளுடன் மோசேயின் மீது சாடினார்கள். ஏன் இனம் விட்டு இனம் திருமணம் செய்தாய் என்பது முதல் குற்றசாட்டு. இரண்டாவது குற்றசாட்டு இரண்டாவது வசனத்தில் வருகிறது.

கர்த்தர் மோசேயை கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களை கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதை கேட்டார். (எண். 12:2)

முழு மனதுடன் நேசித்த சகோதரனை முழு பகையாக பகைத்தார்கள். முன் ஒரு நாள் மோசேயின் அன்பிற்கு உரிய சகோதரியாக மிரியாம் காணப்பட்டாள். தனது உயிரை பணயம் வைத்து மோசேயின் உயிரை காப்பாற்றினாள். எபிரெய பெண்களுக்கு பிறக்கும் ஆண் குழந்தைகளை முதலைகள் சாப்பிடட்டும். பிறந்தவுடன் அவர்களை வீரர்கள் கையில் எடுத்து நைல் நதியில் வீசட்டும் என்று ஓர் கட்டளை பார்வோனால் ஓர் நாள் பிறந்தது. அந்த வேளையில் பிறந்த ஆண் குழந்தைதான் மோசே என்பவன். அவனது தாயார் மூன்று மாதம் வரை குழந்தையை ஒளித்து ஒளித்து வளர்த்து பார்த்தாள். பின்னர் முடியவில்லை. வீரர்கள் கையினால் நைல் நதியில் வீசப்பட வேண்டிய குழந்தையை தாய் தானே தன் கையினால் ஓர் கூடையில் வைத்து மிதக்கவிட்டாள். அந்த வேளையில் மிரியாம் ஓர் சிறுமியாக இருந்தாள். மிகவும் விரும்பி நேசித்த தன் தம்பி நைல் நதியில் மிதக்கின்றான். அவனுக்கு என்ன சம்பவிக்குமோ என்று அறிய அங்கு நின்று கொண்டே இருந்தாள். அந்த வேளையில் வந்த பார்வோனின் மகளின் கவனத்தை மோசே மிதந்து வந்த கூடை கவர்ந்துவிட்டது. அப்பொழுது மிரியாமின் ஞானம் திகழ்ந்து விட்டது. ''அந்த ஸ்திரீ கர்ப்பவதியாகி ஒரு ஆண் பிள்ளையை பெற்று அது அழகு உள்ளது என்று கண்டு அதை மூன்று மாதம் ஒளித்து வைத்தாள். அவள் அதை அப்புறம் ஒளித்து வைக்க கூடாமல் ஒரு நாணற் பெட்டியை எடுத்து, அதற்கு பிசினும் கீலும் பூசி அதிலே பிள்ளையை வளர்த்தி, நதி ஓரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். அதற்கு என்ன சம்பவிக்கும் என்று அறியும்படி அதின் தமக்கை தூரத்திலே நின்று கொண்டு இருந்தாள். அப்பொழுது பார்வோனுடைய குமாரத்தி நதியில் ஸ்நானம் பண்ண வந்தாள். அவளுடைய தாதிகள் நதி ஓரத்தில் உலாவினார்கள். அவள் நாணலுக்குள்ளே இருக்கிற பெட்டியை கண்டு தன் தாதியை அனுப்பி அதை கொண்டு வரும்படி செய்தாள். அதை திறந்தபோது பிள்ளையை கண்டாள். பிள்ளை அழுதது. அவள் அதின் மேல் இரக்கமுற்று, இது எபிரெயர் பிள்ளைகளில் ஒன்று என்றாள். அப்பொழுது அதின் தமக்கை பார்வோனின் குமாரத்தியை நோக்கி உமக்கு இந்த பிள்ளையை வளர்க்கும்படி பால் கொடுக்கிற ஒருத்தியை நான் போய் உம்மிடத்தில் அழைத்து கொண்டு வரட்டுமா என்றாள். அதற்கு பார்வோனுடைய குமாரத்தி அழைத்து கொண்டு வா என்றாள். இந்த பெண் போய் பிள்ளையின் தாயையே அழைத்து கொண்டு வந்தாள். (யாத். 2:2-8)

நைல் நதியில் மோசேக்கு உதவியாக மிரியாம் நின்றாள். செங்கடல் கடந்து சென்ற வேளையில் மிரியாமிற்குள் மற்ற அனைத்து ஜனங்களுக்கும் மோசே உதவியாக நின்றான். கர்த்தர் ஓங்கிய புயத்தினால் விடுதலைக்காக ஏங்கிய மக்களுக்கு ஓர் விடுதலை கொடுத்து

பார்வோன் குமாரத்தி, மிரியாம், குழந்தை மோசே

அவர்களை வெளியே கொண்டு வந்த வேளையில் மிரியாம் மோசேயின் கைகளை தாங்கினாள். கடல் நீர் காலில் படாமல் செங்கடலை கடந்து வந்தார்கள். அந்த அற்புதத்தை கண்ணால் கண்ட மிரியாம் ஆச்சரியத்தில் மூழ்கினாள். அப்பொழுது அவள் ஓர் தீர்க்கதரிசியாக மாறினாள். ஓர் பாடகியாக மாறினாள். திரள் கூட்டம் பெண்களை கரம் தட்டி பாட செய்தாள். கர்த்தரை பாடுங்கள் என்று மகிழச் செய்தாள். ''ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்து கொண்டாள். சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்கு பின்னே புறப்பட்டு போனார்கள். மிரியாம் அவர்களுக்கு பிரதி வசனமாக கர்த்தரை பாடுங்கள்; அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். குதிரையையும், குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார் என்று பாடினாள்'' (யாத். 15:20,21). ஓர் சகோதரியாக, ஓர் தீர்க்கதரிசியாக, ஓர் பாடகியாக, மோசேக்கு துணையாக நின்ற மிரியாம் கர்த்தர் மீதும் மோசே மீதும் கொண்டு இருந்த அன்பை பொறாமை என்ற புழு தின்று விடும்படி செய்து விட்டாள். (யாத். 15:20-21).

இப்பொழுது சகோதரி சகோதரனை குற்றம் சாட்டுகின்றாள். ஊழியக்காரி ஊழியக்காரனை கேள்வி கேட்கின்றாள். அநேக நாட்களாக அவளுடைய இருதயத்தில் அவள் அடக்கி வைத்து கொண்டிருந்த கசப்புகள் வெளி வருகின்றன. சிப்போராள் வந்ததால் வந்த கசப்பு. யாத்திராகம புத்தகம் 18-வது அதிகாரத்தில் மோசே எத்திரோவிற்கு கொடுத்த



தம்புருகளோடும் நடனத்தோடும் மிரியாமை பின்செல்லும் பெண்கள்

மரியாதையினால் பிறந்த கசப்பு. எண்ணாகம புத்தகம் 10-வது அதிகாரத்தில் மோசே தன் மனைவியின் சகோதரன் ஓபாவிற்கு விடுத்த அழைப்பினால் வந்த கசப்பு. எண்ணாகம புத்தகம் 11-வது அதிகாரத்தில் மேலும் 70 பேர் நிர்வாகத்தில் இணைந்ததால் வந்த கசப்பு. அந்த 70 பேரும் பெற்ற அபிஷேகம் தீர்க்கதரிசன வரம் அனைத்தையும் பொருத்து கொள்ள முடியாததினால் வந்த கசப்பு. கசப்பின் மறு பெயர் பொறாமை என்பது ஆகும். தன்னால் செய்ய முடியாததை பிறிதொருவர் செய்யும் பொழுது அதனை தாங்க முடியாத மனநிலையே பொறாமை. தன்னால் தொட முடியாத உயரங்களை மற்றவர் தொட்டு விடும் பொழுது வரும் மட்டுக்கு மிஞ்சிய மன புழுக்கமே பொறாமை.

பாளயத்தில் கர்த்தரின் கிரியை இடம் பெற்று கொண்டு இருந்த நேரம். புது புது நபர்கள் பொறுப்பில் இணைந்து கொண்டிருந்த நேரம். நிர்வாக குழுவில் புதிதாக சேர்ந்தவர்கள் ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்று கொண்டு இருந்த நேரம். தீர்க்கதரிசன வரம் பெற்று கர்த்தரை துதித்து கொண்டிருந்த நேரம். ஆனால் அவைகள் அனைத்தும் மிரியாமை துதிக்க செய்யவில்லை. இதயத்தில் கொதிக்க செய்தது. இதோ பாளயத்தில் எல்தாத், மேதாத் என்ற இருவர் தீர்க்கதரிசனம் கூறுகிறார்கள். அவர்களை தடை செய்யும் என்று யோசுவா மோசேயை பார்த்து கூறியதை எண்ணாகமம் 11-வது அதிகாரம் 28-வது வசனத்தில் நாம் கண்டோம். மோசே தடை செய்யவில்லை. கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லட்டும் என்பதே மோசேயின் பதிலாக மாறியது. அப்படிப்பட்ட மோசேயை பார்த்து கர்த்தர் மோசேயை கொண்டு மட்டும் தான் பேசுவாரோ என்று மிரியாம் கேள்வி கேட்டாள். கர்த்தர் ஆவி அனைவர் மேலும் தடையில்லாமல் இறங்கட்டும், அனைவர் மூலமும் கர்த்தர் பேசட்டும் என்பதே மோசேயின் வாஞ்சை. கர்த்தர் என் மூலம் மட்டும் பேசட்டும் என்று மோசே ஒரு பொழுதும் சொன்னதே இல்லை. பொறாமையின் கண்களுக்கு உண்மை புலப்படுவது இல்லை. நைல் நதி ஓரத்தில் அத்தனை அன்புடன் இருந்தவள் செங்கடல் ஓரத்தில் அத்தனை பண்புடன் வாழ்ந்தவள் எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் தரம் இழந்தாள்.

கர்த்தர் மோசேயை கொண்டு தான் பேசுவாரோ? மோசே மட்டும் தான் பெரியவனோ? சால சிறந்தவனோ என்றாள். அவளின் வசைகளுக்கு அசை போடுகிறவனாக ஆரோன் மாறிவிட்டான். மிரியாம் என்ற தீர்க்கதரிசியும் ஆரோன் என்ற பிரதான ஆசாரியனும் மோசே என்ற கர்த்தரின் தாசனுக்கு எதிராக கூட்டு சேர்ந்தார்கள். உடன் சகோதரனுக்கு விரோதமாக சகோதரனும் சகோதரியும் சேர்ந்து பேசினார்கள். ''நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய் பேசி உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்'' என்று சங்கீதம் 50:20-வது வசனம் கூறுகின்றது. பதவி மோகமும், அதிகார மோகமும் அவர்களை ஆட்டி படைத்தது. அவர்கள் வார்த்தைகள் மோசேயின் இதயத்தை ஈட்டி போன்று துளைத்தது. எங்களை கொண்டும் கர்த்தர் பேசியது இல்லையோ என்று கூறினார்கள். தங்களை தாழ்த்தும் அனைவரையும் கொண்டு கர்த்தர் பேசுவார் என்பதை அறியாமல் போனார்கள்.

எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரம் 2-வது வசனம் கர்த்தர் அதை கேட்டார் என்று நிறைவு பெறுகின்றது. கர்த்தர் கவனித்து கேட்பார் என்று மல்கியா தீர்க்கதரிசியின் புத்தகம் 3:16-வது வசனம் கூறுகின்றது. மோசே முறையிடாமலே கர்த்தர் கேட்டு விட்டார். மோசே புகார் செய்யாமலே கர்த்தர் குறுக்கிட்டார்.

மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணம் உள்ளவனாய் இருந்தான். (எண். 12:3)

சாந்தம் என்பதை குறிப்பதற்கு பயன் படுத்த பட்டு உள்ள எபிரெய பதத்தின் பொருள் மோசே பூமியில் உள்ள சகல மனிதரிலும் மிகவும் நெருக்க பட்டவனாகவும் ஒடுக்க பட்டவனாகவும் இருந்தான் என்பது ஆகும். தனது கஷ்டங்களை யாரிடமும் காட்டி கொள்ளாதவனாக இருந்தான் என்பது ஆகும். பெரும் பாரங்களை தனக்குள்ளே சுமக்கும் பெரும் தன்மை உடையவனாக மோசே இருந்தான். தனது கஷ்டங்களைவிட மற்றவர்களின் கஷ்டங்களில் மோசே எப்பொழுதும் கருத்து உடையவனாக இருந்தான். ஜனங்களின் தேவைகளை தெரிவிக்க கர்த்தரிடம் மோசே ஓடி செல்லுவான். ஆனால் ஜனங்களின் கோபங்களை தெரிவிக்க கர்த்தரிடம் மோசே ஓடியதே இல்லை. அவைகளை தனக்குள் அடக்கி கொள்ளுவான். குடிக்க தண்ணீர் இல்லை. ஏற்ற உணவு இல்லை என்று ஜனங்கள் மோசேயை பார்த்து கேள்வி கேட்டவுடன் மோசே விரைந்து சென்று கர்த்தருக்கு அதனை தெரிய படுத்தினான்.

சிப்போராள் ஏன் வந்தாள்? நீ தான் சிறந்தவனோ என்று சினந்து விழுந்த பொழுது மோசே சிரம் தாழ்த்தி நின்றான். அவனது தாழ்மை அவனை உயர்த்தியது. ''கர்த்தர் சாந்த குணம் உள்ளவர்களை உயர்த்துகிறார் என்று 147-வது சங்கீதம் 6-வது வசனம் கூறுகின்றது. ''சாந்த குணம் உள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்'' என்று 149-வது சங்கீதம் 4-வது வசனமும் கூறுகிறது. கர்த்தரை தேடுங்கள், ''நீதியை தேடுங்கள், மன தாழ்மையை தேடுங்கள்'' என்று செப்பனியாவின் புத்தகம் 2:3-வது வசனம் கூறுகின்றது. அவைகளை மட்டுமே மோசே தேடினான். அவைகளை மட்டும் வாழ்வில் தேடி கொண்டே இருக்கும் அனைவர் மூலமும் கர்த்தர் பேசி கொண்டே இருப்பார்.

மிரியாமும் ஆரோனும் சேர்ந்து வந்து மோசேயை எதிர்த்து பேசினார்கள். கர்த்தர் அதை கேட்டார். கர்த்தர் கேட்டது மட்டுமல்ல செயலாற்றவும் செய்தார். மிரியாமும் ஆரோனும் மோசேயிடம் முறை தவறி பேசுவதை கர்த்தர் தடை செய்வதற்கு முன் வந்தார்.

15.2 கர்த்தர் மோசேக்காக பேசுகிறார்

சடுதியிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும் நோக்கி: நீங்கள் மூன்று பேரும் ஆசரிப்பு கூடாரத்துக்கு புறப்பட்டு வாருங்கள் என்றார். மூன்று பேரும் போனார்கள். (எண். 12:4)

மோசேயும் ஆரோனும் மிரியாமும் கூடார வாசலின் எதிரே அதன் கிழக்காக அமைக்கபட்டிருந்த தங்கள் கூடாரங்களின் முன்னே நின்று பேசுவதை கர்த்தர் கேட்டார். தனது காதில் கேட்டதை நேரில் கேட்டு விடுவதற்கு கர்த்தர் குறுக்கிட்டார். சடுதியிலே குறுக்கிட்டார். அவர்களது வாக்குவாதம் நீடிக்குமானால் ஜனங்கள் பாதிக்க படுவார்கள் என்று கர்த்தர் சடுதியிலே குறுக்கிட்டார். மனிதரின் பொறாமைகள் நிரபராதிகளை பாதிப்பது இல்லை என்பதை ஆதியாகம புத்தகத்தில் யோசேப்பின் வாழ்க்கையில் பார்த்தோம். தொடர்ந்து மோசேயின் வாழ்க்கையிலும் நாம் பார்க்கின்றோம். யோசேப்பின் வாழ்விலும் மோசேயின் வாழ்விலும் தானியேலின் வாழ்விலும் கர்த்தர் குறுக்கிட்டு பாதுகாத்தார்.

சடுதியிலே கர்த்தர் இறங்கினார் என்று பார்க்கின்றோம். மோசே ஆரோன் மிரியாம் மூவரும் ஆசரிப்பு கூடாரம் நோக்கி புறப்பட்டு வாருங்கள் என்று கர்த்தர் கூறினார். மோசேக்கு விரோதமாக அவர்கள் பேசிய இடம் எது என்று வேதபுத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை. எந்த இடத்திலே மோசேயை விரோதித்து பேசினார்களோ அந்த இடத்திற்கே கர்த்தர் விரைந்து

சென்றார். அது அவர்கள் தங்கி இருந்த இடமாக இருக்கலாம் என்றுதான் நாம் கணிக்கின்றோம். அங்கிருந்து ஆசரிப்பு கூடாரம் புறப்பட்டு வாருங்கள் என்றார். ஆரோனுக்கும் மிரியாமிற்கும் அது ஓர் அதிர்ச்சியானது. மூன்று பேரும் ஆசரிப்பு கூடாரம் சேர்ந்தார்கள்.

கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நின்று, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார்; அவர்கள் இருவரும் போனார்கள். (எண். 12:5)

செம்மறி ஆடுகளை தமது வலது பக்கத்திலும் வெள்ளாடுகளை தமது இடது பக்கத்திலும் நியாய தீர்ப்பு நாளில் கர்த்தர் இரண்டாக பிரிப்பது போன்று தாழ்மை உள்ள மோசேயை ஒரு பக்கமும் பெருமை கொண்ட மற்ற இருவரை இன்னொரு பக்கமுமாக கர்த்தர் தனித்தனியாக பிரித்து விட்டார்.

ஆரோனுக்கும், மிரியாமிற்கும் அதிர்ச்சி அதிகமானது. கர்த்தர் கேட்டார். கர்த்தர் ஆசரிப்பு கூடாரத்திற்கு அவர்களை அழைத்தார். கர்த்தர் இரண்டு பெயர்களை மட்டும் கூப்பிட்டு அவர்களை முன் நிறுத்தினார். கர்த்தர் அவர்கள் இருவரிடமும் மோசேயின் சார்பில் பேசுகின்றார். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல. உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களில் இருந்து பேசுகிறவர் என்று பரிசுத்த மத்தேயு 10:20-வது வசனம் கூறுகின்றது. மற்றவர்களின் நன்மையை தேடிய மோசேயின் நன்மையை கர்த்தரே தேடுகின்றார். மற்றவர்களின் வாழ்விற்காக தன்னிடம் வந்து பேசும் மோசேயின் வாழ்விற்காக கர்த்தரே பேசுகின்றார். மோசேயை பற்றி 5 விவரங்களை கர்த்தர் ஒன்று ஒன்றாக 7,8 ஆகிய வசனங்களில் கூறுகின்றார். ஆரோன் மிரியாம் என்ற இருவரையும் நோக்கி கூறுகின்றார்.

அப்பொழுது அவர்: என் வார்த்தைகளை கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். (எண். 12:6)

பொதுவான ஒரு முறையில் நான் மோசேயுடன் பேசவில்லை என்று கர்த்தர் கூறுகின்றார். தனி சிறப்பான முறையில் வெளிப்படுத்தி வருகின்றேன் என்கின்றார். தரிசனம் சொப்பனம் என்பதின் மூலம் அல்ல. மனித யுக்திக்கு அப்பாற்பட்ட சக்தியுடன் என்னை மோசேக்கு தெரியப்படுத்தி வருகின்றேன் என்று கூறினார். கன நித்திரை மனுஷர் மேல் இறங்கி அவர்கள் படுக்கையின் மேல் அயர்ந்து இருக்கையில் அவர் இராக்காலத்து தரிசனமான சொப்பனத்திலே மனுஷனுடைய செவிக்கு தான் செய்யும் காரியத்தை வெளிப்படுத்தி அதை அவர்களுக்கு வரும் தண்டனையினாலே முத்திரை போட்டு மனுஷன் தன்னுடைய செய்கையை விட்டு நீங்கவும் மனுஷருடைய பெருமை அடங்கவும் செய்கிறார் என்று யோபுவின் புத்தகம் 33:15,16,17 வசனங்கள் கூறுகின்றன. எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரம் 6-வது வசனத்தில் கர்த்தர் முன்னுரை அளித்தார். 7,8 ஆகிய இரண்டு வசனங்களில் விளக்க உரை ஆற்றுகின்றார்.

என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். (எண். 12:7)

மோசேயை பற்றி 5 நற்சாட்சி பத்திரங்கள் கர்த்தர் வழங்குகின்றார். முதலாவதாக மோசே என் தாசன் என்றார். இதனை 7-வது வசனத்தில் பார்க்கின்றோம். யாத்திராகமம் 14:31-வது வசனம், எண்ணாகமம் 12:8-வது வசனம், உபாகமம் 34:5-வது வசனம் ஆகிய மூன்று இடங்களிலும் தாசன் என்ற வார்த்தையை குறிக்கும் எபிரெய சொல் மிகவும் மேலான ஒரு சொல் ஆகும். அது பரலோக நிர்வாக குழுவின் உறுப்பினர் என்பது ஆகும். இரண்டாவதாக என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல என்றார். ஆரோன் மிரியாம் ஆகிய நீங்கள் இரண்டு பேரும் சாட்டிய குற்றசாட்டுகள் உண்மை இல்லை என்றார். 3-வதாக மோசே என் வீட்டில் எங்கும் உண்மை உள்ளவன் என்றார். எனக்கு மறைத்து பேச மோசே ஒருநாளும் முற்பட்டதும் இல்லை, என்னை கலந்து கொள்ளாமல் மோசே எந்த தீர்மானமும் எடுப்பது இல்லை என்றார். மோசே நம்ப தகுந்தவன் என்றார். ''கோடை காலத்தில் உறைந்த மழையின் குளிர்ச்சி எப்படி இருக்கிறதோ அப்படியே உண்மையான ஸ்தானாதிபதியும் தன்னை அனுப்பினவருக்கு இருப்பான். அவன் தன் எஜமான்களுடைய ஆத்துமாவை குளிரப்பண்ணுவான்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 25:13-வது வசனம் கூறுகின்றது.

வனாந்திர பிரயாணத்தின் வெட்கையை மேகஸ்தம்பம் தணிய செய்து ஜனங்களுக்கு குளிர்ச்சி அளித்தது. மோசேயின் உண்மை கர்த்தரின் இதயத்தை குளிர செய்தது. எபிரெயர் 3-வது அதிகாரம் 2,5 ஆகிய வசனங்கள். ''மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மை உள்ளவனாய் இருந்தது போல இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மை உள்ளவராக இருக்கிறார். சொல்லப்பட போகிற காரியங்களுக்கு சாட்சியாக மோசே பணிவிடைக்காரனாய் அவருடைய வீட்டில் எங்கும் உண்மை உள்ளவனாய் இருந்தான்.''

> *நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலை காண்கிறான்; இப்படியிருக்க நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்கு பயமில்லாமற்போனதென்ன என்றார். (எண். 12:8)*

நான்காவதாக நான் அவனுடன் மறைபொருளாக அல்ல முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன் என்று கர்த்தர் கூறினார். கர்த்தர் மறைமுகமாக பேசுதல் என்பது உவமையாக பேசுவது என்பது ஆகும். ''என் செவியை உவமை மொழிக்கு சாய்த்து என் மறைபொருளை சுரமண்டலத்தின் மேல் வெளிப்படுத்துவேன்'' என்று சங்கீதம் 49:4-ல் கர்த்தர் கூறுவதை காண்கின்றோம்.

78-வது சங்கீதம் 2-வது வசனம் கூறியது போன்று இயேசுவும் தமது ஊழியத்தின் நாட்களில் உவமைகளின் மூலமாகவே தம்மை வெளிப்படுத்தினார் என்று பரிசுத்த மத்தேயு 13:34,35 ஆகிய வசனங்கள் கூறுகின்றன.

ஆனால் மோசேயிடம் கர்த்தர் முகமுகமாக பேசுகிறேன் என்று கூறுகின்றார். யாத்திராகம புத்தகம் 33,34 ஆகிய இரண்டு அதிகாரங்களிலும் அந்த மகத்துவமான உண்மைகளை நாம் பார்க்கின்றோம். கர்த்தர் மோசேயிடம் என்ன பேசினார் என்பதை எடுத்து கூற மொழி பெயர்ப்பாளர்கள் மோசேக்கு தேவைப்படவில்லை. கர்த்தர் மோசேயிடம் முகம் முகமாக பேசினார். கர்த்தர் மோசே தன்னுடையவன் என்பதை அறிந்து இருந்தார். தான் விசுவாசிப்பவர் இன்னார் என்பதை மோசேயும் தெரிந்து இருந்தான். ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல் கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசினார் என்று யாத்திராகமம் 33-ம் அதிகாரம் 11-வது வசனம் கூறுகின்றது. முகமுகமாய் என்பது கர்த்தரின் தயை என்பதை யாத்திராகமம்

34-வது அதிகாரம் 6-வது வசனத்தில் பார்த்தோம். கர்த்தரின் முகம் மகிமையானது. கர்த்தரின் சாயல் தயை நிறைந்தது.

அவர் கூறும் 5-வது குறிப்பு அவன் கர்த்தரின் சாயலை காண்கிறான் என்பது. அதனை கர்த்தர் ஆரோன் மிரியாம் என்பவர்களை பார்த்து கூறினார். அதரிசனமான கர்த்தரின் தயவுள்ள சாயலை மோசே கண்டான். சிருஷ்டி கர்த்தா, சிருஷ்டி என்ற உறவு அல்ல. சிநேகிதன் சிநேகிதனுடன் பழகுவது போன்ற உறவு என்று கர்த்தர் கூறினார். கர்த்தரின் சார்பில் மோசே பேசினான். மோசேயின் சார்பில் கர்த்தர் பேசுகின்றார்.

ஏற்ற விளக்கங்களை ஆரோன் மிரியாம் என்பவர்களுக்கு கர்த்தர் கொடுத்த பின்னர் அவர்கள் இருவரையும் பார்த்து கர்த்தர் ஒரு கேள்வி மட்டும் கேட்டார். கேள்விக்கு மேல் கேள்வி கேட்ட அவர்களை பார்த்து கர்த்தர் ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்டார். எண்ணாகமம் 12:8-வது வசனத்தின் பின் பாகத்தில் கேள்வி இடம் பெறுகின்றது. இப்படியிருக்க நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய் பேச உங்களுக்கு பயம் இல்லாமல் போனது என்ன என்று கேட்டார். மோசேயை சுற்றி கர்த்தரின் கிருபை சூழ்ந்து கொண்டு நிற்கின்றது. மோசேக்கு விரோதமாக வரும் எவருக்கும் விரோதமாக கர்த்தரே புறப்பட்டு வருகின்றார்.

18-வது சங்கீதம் 16,17,18,19 ஆகிய வசனங்கள்: ''உயரத்தில் இருந்து அவர் கைநீட்டி என்னை பிடித்து ஜல பிரவாகத்தில் இருக்கிற என்னை தூக்கி விட்டார். என்னிலும் அதிக பலவான்களாக இருந்த என் பலத்த சத்துருவுக்கும் என்னை பகைக்கிறவர்களுக்கும் என்னை விடுவித்தார். என் ஆபத்து நாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள். கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார். அவர் விசாலமான இடத்திலே என்னை கொண்டு வந்து என் மேல் பிரியமாயிருந்தபடியால் என்னை தப்புவித்தார்.''

கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் மூண்டது; அவர் போய் விட்டார். (எண். 12:9)

மோசே மீது மிரியாமும் ஆரோனும் இரண்டு குற்றங்களை கூறுகின்றார்கள். மோசே பதில் எதுவும் கூறவே இல்லை. நலமானதும் பேசாமல் மோசே அமர்ந்து இருக்கின்றான். ஆனால் கர்த்தர் மோசேயின் சார்பிலே பேசுவதற்கு எழுந்து வருகின்றார். மோசேயின் சார்பில் கர்த்தர் பேசினார் என்பதை நாம் 6,7,8 ஆகிய வசனங்களில் பார்த்தோம். கர்த்தர் மிரியாம் ஆரோன் இருவரையும் பார்த்து ஒரே ஒரு கேள்வி கேட்டார் என்றும் நாம் பார்த்தோம். உங்களுக்கு பயம் இல்லாமல் போனது என்ன என்பதே கர்த்தர் அவர்கள் இருவரையும் பார்த்து கேட்ட கேள்வி ஆகும். உங்கள் இருவருக்கும் ஏன் கர்த்தருக்கு பயப்படும் பயம் இல்லாமல் போய்விட்டது? மோசேக்கு ஏன் பயப்படவில்லை என்று கர்த்தர் கேட்கவில்லை. ஆனால் கர்த்தருக்கு பயப்படும் பயம் ஏன் இருவருக்கும் இல்லாமல் போய்விட்டது என்று கர்த்தர் கேட்டார்.

மனிதனுக்கு பயந்து வாழ்வதற்கு மனிதன் சிருஷ்டிக்கப்படவில்லை. மனிதனுக்கு அல்ல, கர்த்தருக்கு பயந்து வாழ்வதற்காகவே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். மனிதனை மதித்து வாழ வேண்டும். கர்த்தருக்கு பயந்து வாழ வேண்டும். ''மனுஷனுக்கு பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 29:25 கூறுகின்றது. மனிதனது நாடி துடிப்பை தன் கையில் பிடித்து கொண்டு இருக்கும் கர்த்தாதி கர்த்தருக்கே மனிதன் பயந்து வாழவேண்டும். ''ஆத்துமாவை கொல்ல வல்லவர்களாக இராமல் சரீரத்தை

மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்'' என்று மத்தேயு சுவிசேஷம் 10:28-வது வசனத்தில் கர்த்தராகிய இயேசு கூறினார்.

சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள். அவரே உங்கள் பயமும் அவரே உங்கள் அச்சமுமாய் இருப்பாராக என்று ஏசாயா 8:13-வது வசனம் கூறுகின்றது. பிரதான ஆசாரியனும் தீர்க்கதரிசியும் சேனைகளின் கர்த்தரை பரிசுத்தம் பண்ணவில்லை. அவர்களுக்கு கர்த்தருக்கு பயப்படும் பயம் இல்லாமல் போயிற்று.

கர்த்தருக்கு பயப்படும் பயம் என்பது என்ன? கர்த்தருக்கு பிரியம் இல்லாத அனைத்தையும் அகற்றி வாழ்வதே கர்த்தருக்கு பயப்படும் பயம் என்பது ஆகும். கர்த்தருக்கு விருப்பம் இல்லாதவை எவை என்பதை அறியும் ஞானம், அதனை உடனே தவிர்த்து வாழும் தீவிரம் ஆகிய இரண்டுமே கர்த்தருக்கு பயப்படும் பயம் என்பது ஆகும்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோனும் தீர்க்கதரிசி என்ற பட்டம் பெற்ற மிரியாமும் கர்த்தருக்கு பயந்து வாழ வேண்டியவர்கள். மற்றவர்களுக்கு மாதிரியாக இருக்க வேண்டியவர்கள். கர்த்தருக்கு பிரியம் இல்லாத சுபாவங்களை, கிரியைகளை வெறுத்து தள்ள வேண்டியவர்கள். மாம்சத்துக்கு உட்பட்டவர்கள் தேவனுக்கு பிரியமாய் இருக்கமாட்டார்கள் என்று ரோமர் 8:8 கூறுகின்றது. மிரியாம் ஆரோன் இருவரும் மாம்சத்தின்படி மற்றவர்களை அணுகினார்கள். சுதேசி, பரதேசி என்ற பாகுபாடு கர்த்தரின் சமூகத்தில் இல்லை. இனம், நிறம் என்ற வேறுபாடு தேவனின் சமுகத்தில் இல்லை என்பதை மறந்து போனார்கள். சிப்போராளை அங்கீகரிக்க தயங்கினார்கள். நம்மில் யார் பெரியவன் என்ற போட்டிக்கு முந்தினார்கள். பெருமை பொறாமை என்ற கோட்டை சுவர்களை தங்களை சுற்றி அமைத்து கொண்டார்கள். கர்த்தரின் சிந்தை அல்ல. மாம்சத்தின் சிந்தையினால் கவரப்பட்டார்கள்.

கர்த்தருக்கு பயப்படும் பயம் பிரதான ஆசாரியனுக்கும் இல்லை. தீர்க்கதரிசிக்கும் இல்லை. எனவே ஆரோன் மிரியாம் இருவரையும் பார்த்து கர்த்தர் எனக்கு பயப்படும் பயம் ஏன் உங்கள் இருவருக்கும் இல்லாமல் போய்விட்டது என்று கேள்வி கேட்டார். கர்த்தர் அந்த கேள்வியை கேட்ட உடனே அவர்கள் இருவரும் மனம் உடைந்து இருக்க வேண்டும். தலை குப்புற தரையில் விழுந்து இருக்க வேண்டும். மன்னியும் ஐயா, முறை தப்பி நடந்து விட்டோமே என்று கண்ணீர் சொரிந்து இருக்க வேண்டும். உமக்கு பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு என்று சங்கீதம் 130:4-வது வசனம் கூறுகின்றது. மோசே எங்களை மன்னித்து விடு என்று நல்மனம் பெற்று இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கர்த்தரிடமும் ஒப்புரவு ஆகவில்லை. மோசேயிடமும் ஒப்புரவு ஆகவில்லை. மன்னிப்பு என்பது அவர்கள் வாயில் வரவே இல்லை. மமதை அவர்கள் மனதை கல்லாக்கி விட்டது. மற்றவர்களை குற்றம் சாட்டியவர்கள் தங்கள் குற்றங்களை உணரவே இல்லை. கேட்ட கேள்விக்கும் பதிலே இல்லை.

இனிமேல் மிரியாம் ஆரோன் என்ற இருவரிடமும் பேசி பயனே இல்லை என்று கர்த்தர் அறிந்தார். குற்றங்களை உணர மனம் இல்லாதவர்களுக்கு புத்தி புகட்டி பயன் இல்லை என்று கர்த்தர் அறிந்தார். எனவே அதோ கர்த்தர் கடந்து போய்விட்டார்.

ஓசியா தீர்க்கதரிசியின் புத்தகம் 5:15-வது வசனம் ''அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து என் முகத்தை தேடு மட்டும் என் ஸ்தானத்திற்கு திரும்பி போய் விடுவேன். தங்கள்

ஆபத்தில் என்னை கருத்தாய் தேடுவார்கள்'' என்று கூறுகின்றது. ''நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும் என்னுடைய தீர்க்கதரிசிகளுக்கு தீங்கு செய்யாமலும் இருங்கள்'' என்று சங்கீதம் 105:15-வது வசனம் கூறுகின்றது.

எண்ணாகமம் 12-வது அதிகாரம் 9-வது வசனத்தில் மிரியாம் ஆரோன் ஆகிய இருவரும் மிகவும் இக்கட்டான ஒரு நிலைமைக்குள் வந்துவிட்டதை நாம் பார்க்கின்றோம். கர்த்தருடைய கோபம் ஆரோன் மிரியாம் இருவர் மீதும் எழும்பியது என்று அந்த வசனம் கூறுகின்றது.

''கர்த்தருடைய கோபத்திற்கு முன்பாக நிற்பவன் யார்? அவருடைய உக்கிர கோபத்திலே தரிப்பவன் யார்'' என்று நாகூம் தீர்க்கதரிசி தனது புத்தகத்தில் முதல் அதிகாரம் 6-வது வசனத்தில் கூறுகின்றார். வல்லமை உள்ள தேவன் வலிய வந்து மூன்று பேரையும் ஆசரிப்பு கூடாரம் வரை வாருங்கள் என்று அழைத்தார். அப்பொழுதே ஆரோனும் மிரியாமும் ஆண்டவருடைய கால் அடிகளில் விழுந்து இருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை. ஆசரிப்பு கூடாரம் வந்த பின்னரும்கூட மிரியாம் ஆரோன் என்ற இருவரையும் முன்னாக வாருங்கள் என்று கர்த்தர் கேட்டு கொண்டார். அப்பொழுதாவது அழுது மன்றாடி இருந்திருக்க வேண்டும். அதுவும் செய்யவில்லை. மோசேயின் சார்பிலே 5 விவரங்களை எடுத்து கூறி கர்த்தர் தெளிவு படுத்தினார். உடனடியாக தெண்டனிட்டு பணிந்து இருக்க வேண்டும். அதுவும் செய்யவில்லை. கொடுக்கப்பட்ட கால அவகாசங்களை கருத்தில் ஏற்று கொள்ளவில்லை. வலிய வந்த கிருபை உள்ளத்தில் உறைக்கவில்லை. எனவே கர்த்தர் போய் விட்டார். மிரியாமும் ஆரோனும் தங்களுக்கு எதிராக வந்த கிருபைகளையும் கால அவகாசங்களையும் போக்கடித்தார்கள். தாவீது என்ற அரசன் தவறில் விழுந்த பின்னரும் கூட கர்த்தாவே மன்னியும் என்று மெய் மனஸ்தாபப்பட்டான். கர்த்தாவே என்னை விட்டு கடந்து போய் விடாதேயும் என்று கண்ணீர் விட்டான். உமது சமூகத்தை விட்டு என்னை தள்ளாமலும் உமது பரிசுத்த ஆவியை என்னிடத்தில் இருந்து எடுத்து கொள்ளாமலும் இரும் என்று கெஞ்சினான். கர்த்தர் தாவீது என்ற அவனுக்கு கிருபையாக இரங்கினார். தாவீதை விட்டு கர்த்தர் கடந்து போகவில்லை. ஆனால் அன்று மிரியாம் ஆரோன் என்ற இருவரையும் பார்த்து கர்த்தர் கடந்து போய் விட்டார். அவர்கள் கர்த்தருக்கு அஞ்சவும் இல்லை. கர்த்தரை நோக்கி கெஞ்சவும் இல்லை. கர்த்தர் அவர்கள் இதய வாசலை திரும்பவும் திரும்பவும் தட்டி கொண்டிருக்கும் சத்தம் கேட்டும் இதய வாசலை அவர்கள் திறக்கவும் இல்லை. எனவே கிருபையின் வாசலும் அவர்களுக்கு பூட்டப்பட்டது.

என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவது இல்லை என்று ஆதியாகம புத்தகம் 6:3-வது வசனம் கூறுகின்றது. மிரியாம் ஆரோன் ஆகிய இருவர் மேலும் கர்த்தருடைய கோபம் மூண்டது. கர்த்தர் அவர்களை விட்டு போய் விட்டார். கர்த்தர் ஆரோனைவிட்டு போய்விட்டார். இனிமேல் பெயரளவில் தான் ஆரோன் ஓர் பிரதான ஆசாரியன். கர்த்தர் மிரியாமை விட்டு போய் விட்டார். இனிமேல் பெயர் அளவில் தான் மிரியாம் ஓர் தீர்க்கதரிசி. பெருமை கொண்ட உள்ளத்தை கர்த்தரின் கருணை தட்டியது. கதவுகள் திறக்கப்படவில்லை. தீர்ப்பு கூறப்படுவதற்கு முன்னர் திருந்திடு, திரும்பி வந்துவிடு என்ற சத்தங்கள் ஒலிக்க பட்டன. காது கேட்கவில்லை. ஆரோன் மிரியாம் என்ற இருவரும் மனம் திரும்பவில்லை. புதிய தீர்மானங்களை எடுக்கவில்லை. கர்த்தர் கடந்து போய்விட்டார்.

உன்னதபாட்டின் புத்தகம் 3:1,2 ''ராக்காலங்களில் என் படுக்கையிலே என் ஆத்தும நேசரை தேடினேன்; தேடியும் நான் அவரை காணவில்லை; நான் எழுந்து நகரத்தின்

வீதிகளிலும் திரிந்து என் ஆத்தும நேசரை தேடுவேன் என்றேன். தேடியும் நான் அவரை காணவில்லை.''

வெளிப்படுத்தின விசேஷம் 3:20 ''இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தை கேட்டு கதவை திறந்தால் அவனிடத்திலே நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.''

15.3 பகை, பொறாமை இவைகளின் விளைவு

மேகம் கூடாரத்தை விட்டு நீங்கி போயிற்று; மிரியாம் உறைந்த மழையின் வெண்மை போன்ற குஷ்டரோகியானாள்; ஆரோன் மிரியாமை பார்த்தபோது, அவள் குஷ்டரோகியாயிருக்க கண்டான். (எண். 12:10)

மோசே ஆரோன் மிரியாம் என்ற மூவரையும் அழைத்து பேசிய கர்த்தர் கடந்து சென்று விட்டார். கர்த்தரை நோக்கி பார்த்து கொண்டிருந்த ஆரோன் கர்த்தர் கடந்து சென்ற உடனே இதோ சகோதரியை நோக்கி பார்த்தான். இதோ அவள் முக ரூபம் முற்றிலுமாக மாறி போய் விட்டது. தலை முதல் உள்ளங்கால் வரை வெண்மையான குஷ்டம் அவளை மூடி விட்டது.

மிரியாம் குஷ்டரோகியாக மாறி விட்டாள். பகை என்பது தந்த பரிசு அது. பொறாமை என்பது போர்த்திய பொன் ஆடை அது. யார் பெரியவர் என்ற போட்டியில் அவள் கண்ட வெற்றி அது. மோசேயை வளர்க்க பார்வோன் மகளிடம் மிகவும் சந்தோஷத்துடன் தனது தாயை அழைத்து வந்து விட்ட மிரியாம் இப்பொழுது மிகவும் துக்கமானாள். செங்கடல் தாண்டி தம்புரு வாசித்து மிகவும் மகிழ்ந்த மிரியாம் இப்பொழுது ஆழ்ந்த அமைதி கொண்டாள். எத்தனை உயரமாக ஓங்கி நின்றாளோ அத்தனை தாழ்வாக தலை குனிந்து நின்றாள்.

கர்த்தர் சாந்த குணம் உள்ளவர்களை உயர்த்துகிறார். துன்மார்க்கரை தரை மட்டும் தாழ்த்துகிறார் என்று சங்கீதம் 147:6-வது வசனம் கூறுகின்றது. ரோமர் நிரூபம் 12:3, ''அல்லாமலும் எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது: உங்களில் எவன் ஆனாலும் தன்னை குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே தெளிந்த எண்ணம் உள்ளவனாய் எண்ண வேண்டும்.'' தொடர்ந்து 1 பேதுரு 5:5, ''நீங்கள் எல்லாரும் ஒருவருக்கு ஒருவர் கீழ்படிந்து மன தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள். பெருமை உள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்'' என்று கூறுகின்றது.

எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரம் 9-வது வசனம் கர்த்தர் போய் விட்டார் என்று கூறியது. அடுத்தாற்போல் வந்த 10-வது வசனம் குஷ்டம் வந்து விட்டது என்று கூறுகின்றது. எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது என்பது கூறப்படவில்லை. கர்த்தர் கடந்து போன பின்பு மனிதன் காண்பது வாதை என்பதே ஆகும். ஆசீர்வாதம் என்பதை விரட்டி அடித்த பின்னர் தங்கி இருப்பது அழுகை என்பதே ஆகும். ''அடிக்கடி கடிந்து கொள்ள பட்டும் தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடுதியிலே நாசமடைவான்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 29:1 கூறுகின்றது. மிரியாம் தான் மோசேயை எப்படி பேசினாலும் அதனை தட்டி கேட்பதற்கு தரணியில் எவருமே இல்லை என்று நினைத்தாள். நிரபராதிகளை தரணியில் தவறாக எடுத்து உரைக்கும் பொழுது கர்த்தர் கவனித்து கேட்டு கொண்டு இருக்கிறார் என்பதை அவள் மறந்து விட்டாள். அவள் என்ன பேசுகிறாள் என்பதை அவள்

அறியாமல் போய் விட்டாள். எனவே அவளுக்கு வந்த தீங்கும் அவள் அறியாமல் அவளுக்கு வந்து விட்டது. ''உன் துன்மார்க்கத்திலே நீ திட நம்பிக்கையாய் இருந்து என்னை பார்க்கிறவர் ஒருவரும் இல்லை என்றாய். உன் ஞானமும் உன் அறிவுமே உன்னை கெடுத்தது. நான் தான், என்னை தவிர ஒருவரும் இல்லை என்று உன் இருதயத்தில் எண்ணினாய். ஆகையால் தீங்கு உன் மேல் வரும். அது எங்கே இருந்து உதித்தது என்று நீ அறியாய். விக்கினம் உன் மேல் வரும். நீ அதை நிவிர்த்தியாக்க மாட்டாய்'' என்று ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 47:10,11 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கின்றோம். தனக்கு வந்த தீங்கு ஏன் வந்தது என்பதை மிரியாமின் மனசாட்சி உணர்த்தி விட்டது. ஆனால் எங்கே இருந்து அந்த தீங்கு தனக்கு நேராக வந்தது என்பதை அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை. குஷ்டத்திற்கு உரிய எந்த அறிகுறியும் தனக்கு இல்லையே, ஆனால் எப்படி இந்த வியாதி தனக்கு வந்து விட்டது என்பதை மிரியாம் அறிந்து கொள்ள முடியவில்லை. மிரியாம் அமைதியானாள்.

அவளை பற்றிய அடுத்த குறிப்பு இன்னும் ஒரே ஒரு முறை தான் வர இருக்கின்றது. அதுவும் சுமார் 38 வருடங்களுக்கு பின்னர்தான் அவள் மரிக்கும் நேரம்தான் வர இருக்கும் குறிப்பு ஆகும். ஜனங்கள் காதேசிலே தங்கி இருக்கையில் மிரியாம் மரணம் அடைந்து அங்கே அடக்கம் பண்ணப்பட்டாள் என்று எண்ணாகம புத்தகம் 20:1-ல் நாம் பார்க்க இருக்கின்றோம். எண்ணாகமம் 12-வது அதிகாரத்தில் இருந்து எண்ணாகமம் 20-வது அதிகாரம் வரை 38 வருடங்கள் கடந்து செல்ல இருக்கின்றன. எண்ணாகமம் 12-வது அதிகாரத்தில் நாம் பார்க்கும் மிரியாமை அடுத்தாற்போல் சுமார் 38 வருடங்கள் கழித்து எண்ணாகமம் 20-வது அதிகாரத்தில்தான் இனிமேல் காண இருக்கின்றோம். அவள் உயிரோடு அல்ல மரித்து விட்டாள் என்ற ஓர் அறிவிப்பை மட்டுமே கேட்க இருக்கின்றோம்.

மனிதனின் உயரங்களை தகர்த்து உடைப்பது மனித கர்வங்களே ஆகும். அத்தனை மக்களின் நல்வாழ்விற்காக தன்னையே அர்ப்பணித்தவனை அக்காள் சொல்லால் அடித்தாள். வார்த்தையினால் வதைத்தாள். சொற்களின் மிகுதியினால் பாவம் உண்டாகும் என்பதை அறிந்த மோசே அமைதியாகவே இருந்து விட்டான். ஆனால் கர்த்தர் பழி வாங்கினார். ''பிரியமானவர்களே பழி வாங்குதல் எனக்கு உரியது. நானே பதில் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதி இருக்கிறபடியால் நீங்கள் பழி வாங்காமல் கோபாக்கினைக்கு இடம் கொடுங்கள்'' என்று ரோமர் நிரூபம் 12:19-வது வசனத்தில் வாசிக்கின்றோம். கர்த்தர் சென்று விட்டாரே என்று அக்காவை அண்ணார்ந்து பார்த்த ஆரோன் அக்கா ஒரு குஷ்டரோகியாக மாறி விட்டாள் என்று கண்டான். ஒரு பிரதான ஆசாரியனாக அவ்விதமான வியாதி உள்ளவர்களை பாளயத்தை விட்டு வெளியே ஏற்ற வேண்டிய பொறுப்பு உடையவன், தனது சொந்த சகோதரிக்கு என்ன செய்வது என்று கலங்கி கொண்டு இருக்கின்றான். நியாயம் தீர்க்க வந்தவள் நியாயம் தீர்க்க பட்டாள். குற்றம் சாட்டியவள் குற்றவாளி ஆனாள். அவதூறு செய்தவள் அவல நிலை கண்டாள். கர்த்தர் என்னுடனும் பேசுகிறார் என்றவளுக்கு கர்த்தர் கை கொடுக்கவில்லை. ஆரோனுடன் கை கோர்த்து வந்தவள் ஆரோனால் கை விடப்பட்டாள்.

> ***அப்பொழுது ஆரோன் மோசேயை நோக்கி: ஆ, என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய் செய்த இந்த பாவத்தை எங்கள் மேல் சுமத்தாதிரும். தன் தாயின் கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகி செத்து விழுந்த பிள்ளையை போல அவள் ஆகாதிருப்பாளாக என்றான். (எண். 12:11-12)***

''மனமேட்டிமை உள்ளவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். கையோடே கை கோர்த்தாலும் அவன் தண்டனைக்கு தப்பான்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 16:5 கூறுகின்றது.

சற்று முன்னதாகத்தான் மோசே மட்டும்தான் கர்த்தருடன் பேசும் வரம் பெற்றவனோ, எங்களுக்கும் அந்த வல்லமை இல்லையோ என்று மிரியாமுடன் நின்ற ஆரோன் கேட்டான். இப்பொழுது தன் சகோதரிக்காக நேரடியாக கர்த்தரிடம் பேச முடியவில்லை. மோசேயை கொண்டு மட்டுமே கர்த்தர் பேசுகிறார் என்பதை ஆரோன் வாயினால் அறிக்கை செய்யும் ஒரு சூழ்நிலை உருவாகி விட்டது. மோசே மோசே என்று ஆரோன் கூப்பிடவில்லை. ஆ! என் ஆண்டவனே! என்று கூப்பிட்டான். தம்பியை அண்ணன் ஆண்டவனே! என்று அழைக்கின்றான். அது இயல்பாக வந்த மரியாதை அல்ல. இடம் பெற்ற நிகழ்ச்சி தந்த மரியாதை ஆகும். வலிய வந்த பக்தி அல்ல. சூழ்நிலை வற்புறுத்தி வந்த பக்தி ஆகும். மிரியாம் தண்டிக்க பட்டாள். ஆனால் ஆரோன் தப்பி விட்டான். மோசேக்கு விரோதமாக மிரியாம் மட்டுமல்ல ஆரோனும் சேர்ந்து வந்தான் என்பதை நாம் அறிவோம். ஆயினும் மிரியாம் மட்டுமே தண்டிக்க பட்டாள். ஆரோன் தண்டிக்க படவில்லை.

அதற்கு காரணம் ஆரோன் பிரதான ஆசாரியனாக இருந்தது ஆகும். பிரதான ஆசாரியனுக்கும் குஷ்டம் வந்து விட்டால் அவனும் பாளயத்தை விட்டு வெளியேற வேண்டியதாய் இருக்கும். அப்பொழுது கூடாரத்தில் அன்றாட பலிகள் நிறுத்தப்பட வேண்டியதாக மாறிவிடும். பிறிதொரு பிரதான ஆசாரியன் தெரிந்து எடுக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படும் வரை ஆசரிப்பு கூடாரத்தின் பணிகள் அனைத்தும் ஸ்தம்பித்து போய் விடும். ஆரோன் தப்பி விட்டான். மிரியாம் தப்ப வில்லை. அமைதலாக மாறி விட்டாள். மேலும் ஆரோன் தன் பாவத்தை ஒப்பு கொண்டு அதற்காக மனம் வருந்துகிறான். ஆரோன் சத்தமாக அலறுகின்றான். என் ஆண்டவனே என்று மோசேயை நோக்கி அபயம் இடுகின்றான். தன்னையும் மிரியாமையும் சேர்த்துதான் ஆரோன் பேசுகின்றான். நாங்கள் புத்தியீனமாய் செய்தோம் என்று ஆரோன் கூறினான். மிரியாம் மட்டுமே தண்டிக்க பட்டாலும் ஆரோன் தானும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை ஒப்பு கொள்ளுகின்றான். என் சகோதரியோடு கூட எனக்கும் அந்த தண்டனை வர வேண்டும் என்பதை மனதார ஒப்பு கொண்டு நாங்கள் புத்தியீனமாய் செய்தோம் என்று அறிக்கை இடுகின்றான். மோசேயின் மனைவியை அவதூறாக பேசினார்கள். பின்னர் மோசேயை பேசினார்கள். இப்பொழுது புத்தியீனமாய் பேசி விட்டோம் என்று அறிக்கை செய்கின்றான். பிரசங்கி 5:6 ''உன் மாம்சத்தை பாவத்துக்கு ஆக்க உன் வாய்க்கு இடம் கொடாதே. அது புத்தி பிசகினால் செய்தது என்று தூதனுக்கு முன் சொல்லாதே. தேவன் கோபம் கொண்டு உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்?'' என்று அந்த வசனம் கூறுகின்றது. ஆரோன் மோசேயை பார்த்து தன்னை தாழ்மை படுத்தி பேசுகின்றான். இந்த பாவத்தை எங்கள் மேல் சுமத்த வேண்டாம் என்றான். பாவத்தை மன்னியும். பாவம் தந்த பரிசான மரணத்தை நீக்கி போடும் என்று கெஞ்சுகின்றான். கர்த்தாவே உம்முடைய கோபத்தில் என்னை கடிந்து கொள்ளாதேயும். உம்முடைய உக்கிரத்தில் என்னை தண்டியாதேயும் என்று சங்கீதம் 38:1-ம் வசனம் கூறுகின்றது. அவ்விதமே ஆரோன் மோசேயை நோக்கி கதறினான். மிரியாமோ ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஆனால் உணர்ந்து விட்டாள். உள்ளம் உடைந்து விட்டாள். ஒரு குடும்பத்தின் பிள்ளைகள் நடுவில் வந்த பொறாமை என்பது குடும்பத்தை கண்ணீரில் மூழ்கடிக்கின்றது. குடும்பத்தின் நடுவில் ஒருவருக்கு ஒருவர் பேசிய பெருமையான பேச்சு பெருமூச்சில் முடிகின்றது.

15.4 மிரியாமுக்காக கர்த்தரிடம் பரிந்து பேசும் மோசே

அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளை குணமாக்கும் என்று கெஞ்சினான். (எண். 12:13)

மோசே தன்னை விரோதித்தவர்கள் பாதிக்க படுகின்றார்கள் என்று அடிமனதில் ஆனந்தம் கொள்ளவில்லை. கர்த்தரின் உண்மையான ஊழியக்காரனுக்கு அது அழகு அல்ல. ''நீ தீமையினாலே வெல்ல படாமல் தீமையை நன்மையினால் வெல்லு'' என்று ரோமர் 12:21-வது வசனம் கூறுகின்றது. ''உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்'' என்று இயேசு பரிசுத்த மத்தேயு 5-வது அதிகாரம் 44-வது வசனத்தில் கூறினார்.

எண்ணாகமம் 12-வது அதிகாரம் 13-வது வசனத்தில் மோசே தன்னை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் செய்கிறான். என் தேவனே மிரியாமை குணமாக்கும் என்று கெஞ்சுகின்றான். எந்த வகையான வியாதியும் ஜெபத்தினால் சுகமாகும் என்பதை மோசே அறிந்து இருந்தான். பாவம் செய்ததினால் வந்த சரீர பாடுகளையும் ஜெபம் செய்வதினால் கர்த்தர் மாற்றி போடுவார் என்பதை மோசே அறிந்து இருந்தான். மிரியாம் செய்த தவறினால் வந்த சரீர கஷ்டத்தை எடுத்து போடும் என்று மோசே கெஞ்சினான். எண்ணாகமம் 12-வது அதிகாரம்14-வது வசனத்தில் கர்த்தர் மோசேக்கு பதில் கூறுகின்றார்.

கர்த்தர் மோசேயை நோக்கி: அவள் தகப்பன் அவள் முகத்திலே காறி துப்பினது உண்டானால், அவள் ஏழு நாள் வெட்கப்பட வேண்டாமோ, அது போலவே அவள் ஏழு நாள் பாளயத்துக்கு புறம்பே விலக்க பட்டிருந்து, பின்பு சேர்த்து கொள்ளப்பட கடவள் என்றார். (எண்.12:14)

முகத்தில் காறி துப்ப படுதல் ஒரு அவமானமான நிலமை ஆகும். ''அவமானத்திற்கும், உமிழ் நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை'' என்று ஏசாயா 50:6-வது வசனம் கூறுகின்றது. அவ்வித அவமானம் அடைந்தவர் ஏழு நாட்கள் பிறர் முகம் பார்ப்பது இல்லை. துயரம் துக்கம் கண்ணீருடன் இருப்பார்கள். மிரியாம் ஏழு நாட்கள் புறம்பே இருக்க வேண்டும். அவளின் செயல் அவமானமான செயல் என்பதை அவள் நினைத்து பார்க்க வேண்டும். மோசே ஏழு நாட்களும் மிரியாமிற்காக விடாமல் ஜெபித்து கொண்டே இருந்தான். ஆரோன் ஏழு நாட்களையும் கண்ணீரில் கழித்து கொண்டே இருந்தான்.

அப்படியே மிரியாம் ஏழு நாள் பாளயத்துக்கு புறம்பே விலக்க பட்டிருந்தாள்; மிரியாம் சேர்த்து கொள்ளப்படும் மட்டும் ஜனங்கள் பிரயாணம் பண்ணாதிருந்தார்கள். (எண். 12:15)

மிரியாம் சேர்த்து கொள்ளப்படும் மட்டும் ஜனங்கள் பிரயாணம் செய்யவில்லை என்பதை அறிந்து கொள்கிறோம். 7-வது நாள் மோசேயின் ஜெபம் கேட்கப்பட்டது. மிரியாம் பூரண சுகம் பெற்றாள். பாளயத்திற்கு திரும்பி வந்தாள். மிரியாம் அதிக துக்கத்துடன் அமிழ்ந்து போய் விடாதபடிக்கு 2கொரிந்தியர் 2-வது அதிகாரம் 7-வது வசனம் கூறுவது போன்று மோசே அவளுக்கு மன்னித்து ஆறுதல் செய்தான். குடும்பத்தில் உருவான புயல் காற்று மோசேயின் பொறுமையினால் அடங்கி போயிற்று.

வேத புத்தகத்தில் 2 பெண்களை மறக்கவே வேண்டாம், நினைத்து கொள்ளுங்கள் என்று கூறப்பட்டு உள்ளது. உலகை நோக்கி நோக்கி ஓடி உப்புத் தூணாக மாறிய லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் என்று பரிசுத்த லூக்கா 17:32-வது வசனம் கூறுகின்றது. மற்றொன்று பதவி புகழ் என்று பெருமை பொறாமை கொண்டு பின்னர் வாடிய மிரியாம். உபாகம புத்தகம் 24:9-வது வசனம். ''நீங்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டு வருகிற வழியிலே உங்கள் தேவனாகிய கர்த்தர் மிரியாமுக்கு செய்ததை நினைத்து கொள்ளுங்கள்.''

பின்பு, ஜனங்கள் ஆஸரோத்திலிருந்து புறப்பட்டு, பாரான் வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள். (எண். 12:16)

மேலே கூறப்பட்ட மிரியாம், ஆரோன், மோசே என்பவர்கள் இடையே நடந்த சம்பவங்கள் ஆஸரோத் (Hazeroth) என்னும் இடத்தில் நடந்தன என்று நாம் பார்க்கிறோம். ஆஸரோத் என்பது தாழ்ந்த கல் சுவர் கொண்ட வேலியில், நீள முட்கள் கொண்ட அகேசிய மரத்தை வளர்த்துள்ள பாதுகாக்க பட்ட இடம் என்பதாகும். மிரியாமும் ஆரோனும் தாக்குகையில் கர்த்தர் மோசேயை பாதுகாத்தார். ஆகவே இந்த பெயர் பெற்றது. இஸ்ரவேல் மக்கள் கிப்ரோத் அத்தாவா (இச்சித்த மக்களின் கல்லறை) என்ற இடத்தில் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அங்கு இருந்து ஆஸரோத் வந்தார்கள். அங்கு மிரியாமும் ஆரோனும் மோசேக்கு எதிராக வந்தார்கள். மிரியாம் குஷ்டரோகியாகி பாளயத்துக்கு புறம்பே ஏழு நாட்கள் தள்ளபட்டான். மிரியாம் சுகம் பெற்று பாளயத்தில் ஏற்று கொள்ள பட்ட போது இஸ்ரவேல் மக்கள் ஆஸரோத்தில் இருந்து புறப்பட்டு பாரான் வனாந்தரத்தில் பாளயம் இறங்கினார்கள் என்று பார்க்கிறோம்.

அத்தியாயம் - 16
கானானை வேவு பார்த்து வந்தவரின் அறிக்கைகள்

16.1 பாரான் வனாந்தர பிரயாணம்

எண்ணாகமம் 13-வது அதிகாரம் தரும் சரித்திரம் ஒரு சோக சரித்திரம் ஆகும். இன்னும் ஒரு முறை கனவிலும் கூட காண விருப்பம் இல்லாத சரித்திரம். ஆனால் நினைவை விட்டு நீங்க முடியாத சரித்திரம். கானானின் கதவை தட்டியவர் உள்ளே பிரவேசிக்க முடியாமல் போன சரித்திரம். அதன் எல்லை வரை வந்தும் தூரமாய் தள்ளி போய்விட்ட சரித்திரம். வெள்ளி கோட்டின் அருகில் வந்தும் முடிவில் மன மடிவு கொண்டு வனாந்தரமே முடிவாகி போய் விட்ட சரித்திரம். ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றி கொள்ள முடியாதவர்களின் சரித்திரம். இந்த சம்பவம் இடம் பெற்ற இடம் பாரான் வனாந்திரம் என்பது ஆகும்.

எகிப்தில் இருந்து புறப்பட்டு சீனாய் வனாந்திரம் வந்தார்கள் என்று யாத்திராகம புத்தகத்தில் 19-வது அதிகாரம் முதல் வசனத்தில் நாம் பார்த்தோம். பின்னர் சீனாய் வனாந்திரத்தில் இருந்து புறப்பட்டு பாரான் வனாந்திரம் வந்து சேர்ந்தார்கள் என்று எண்ணாகம



முதல், இரண்டாவது கட்ட பிரயாணங்கள்

புத்தகம் 10-வது அதிகாரம் 12-வது வசனத்தில் பார்த்தோம். பாரான் வனாந்திரம் என்பது தெற்காக இருந்த சீனாய் வனாந்திரத்திற்கும் வடக்காக இருந்த சீன் வனாந்திரத்திற்கும் நடுவாக இருந்த பூமி ஆகும். முன் ஒரு நாள் ஆபிரகாமின் அடிமை பெண் ஆகார் என்பவளுக்கு பிறந்த இஸ்மவேல் என்பவனின் திருமணம் பாரான் வனாந்திரத்தில் தான் இடம் பெற்றது. இதனை ஆதியாகமம் 21-வது அதிகாரம் 21-வது வசனத்தில் நாம் பார்க்கலாம். ''அவன் பாரான் வனாந்திரத்திலே குடியிருக்கையில் அவனுடைய தாய் எகிப்து தேசத்தாளாகிய ஒரு பெண்ணை அவனுக்கு விவாகம் பண்ணுவித்தாள். எண்ணாகம புத்தகம் 10-வது அதிகாரம் 12-வது வசனத்தில் சீனாய் வனாந்திரத்தில் இருந்து புறப்பட்டவர்கள் பாரான் வனாந்திரம் சேர்ந்து தபேரா, கிப்ரோத் அத்தாவா, அஸரோத் ஆகிய இடங்களை கடந்து இப்பொழுது இறுதியில் பாரான் வனாந்திரத்தின் வடக்கு பகுதிக்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

அவர்கள் தங்கிய இடத்தின் பெயர் காதேஸ் என்று எண்ணாகமம் 13-வது அதிகாரம் 26-வது வசனத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். காதேஸ் என்ற இந்த இடத்திற்கு இன்னும் ஒரு பெயர் இருந்தது. இந்த இடம் பாரான் வனாந்திரத்தின் வடக்கு பகுதியில் உள்ள சீன் வனாந்திரத்தை ஒட்டி இருந்தது.

இந்த காதேஸ் என்னும் இடம் ஆதியாகமம் 14-வது அதிகாரத்தில் முதல் முதலாக குறிப்பிடப்பட்டு உள்ளது. அந்த அதிகாரத்தில் அம்ராபேல் என்ற ஒரு அரசனை பற்றிய ஓர் குறிப்பு வருகின்றது. அம்ராபேல் என்பவன் ஹமுராபி என்ற அரசனின் மூதாதையர்களில் ஒருவன் ஆகும். அவனுடன் மேலும் மூன்று அரசர்கள் கூட்டு சேர்ந்து பெரும் நிலபரப்புகளை அன்றைய நாட்களில் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருந்தார்கள். அநேக சிற்றரசர்கள் அம்ராபேல் என்ற பேரரசனுக்கு கப்பம் கட்டி வந்தார்கள். சுமார் 12 வருடங்கள் கப்பம் கட்டிய 5 சிற்றரசர்கள் 13-வது வருடம் கப்பம் கட்டுவதற்கு மறுத்து விட்டார்கள். இந்த 5 சிற்றரசர்களில் சோதோமின் ராஜாவும் கொமோராவின் ராஜாவும் உட்படுவார்கள். அப்பொழுது அம்ராபேல் தனது மூன்று கூட்டு அரசர்களுடன் சேர்ந்து கொண்டு கப்பம் கட்ட மறுத்த சிற்றரசர்களை சந்திக்க சோதோம் கொமோரா நோக்கி பிரயாணம் சென்றான். அவன் செல்லும் வழியில் காதேஸ் என்ற இடம் இருந்தது. அதனை கடந்து செல்லும் பொழுது அங்கு குடியிருந்த அமலேக்கியர் என்ற மக்களுடன் போர் தொடுத்தான் என்பதை ஆதியாகமம் 14-வது அதிகாரம் 7-வது வசனத்தில் நாம் பார்க்கலாம்.

இந்த பகுதிகளில் ஏராளமான எண்ணை ஊற்றுக்கள் இருந்தன என்று ஆதியாகமம் 14-வது அதிகாரம் 10-வது வசனம் கூறுகின்றது. காதேஸ் என்பதின் புராதன பெயர் என்மிஸ்பாத் ஆகும். எண்ணாகமம் 13-வது அதிகாரம் 26-வது வசனத்தில் காதேஸ் என்று கூறப்பட்ட இந்த இடம் எண்ணாகம புத்தகம் 32-வது அதிகாரம் 8-வது வசனத்தில் காதேஸ் பர்னேயா என்றும் அழைக்கப்படுகின்றது. காதேஸ் என்றால் பரிசுத்தம் என்று பொருள் ஆகும். பர்னேயா என்றால் அலைந்து திரிதல் என்று பொருள் ஆகும். இஸ்ரவேல் மக்கள் அங்கு அலைந்து திரிந்ததால், காதேஸ் என்னும் இடம் காதேஸ் பர்னேயா என்று பெயர் பெற்றது. காதேஸ் அல்லது காதேஸ் பர்னேயா என்ற இந்த இடம் இனிமேல் வரும் 38 வருடங்களுக்கு மீட்கப்பட்ட ஜனங்களின் ஓர் முக்கியமான இடமாக திகழ இருக்கின்றது. காதேஸில் மிக சமீபமாக விசுவாசிகளின் தகப்பன் ஆபிரகாம் அன்று ஒரு நாள் ஒரு சில காலம் தங்கி இருந்தான். இதனை ஆதியாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் நாம் பார்க்கலாம். இப்பொழுது எண்ணாகம புத்தகத்தில் அதே காதேஸின் பகுதிகளில் ஒரு சில நாட்கள் அல்ல ஒரு சில காலங்கள் அல்ல 38 வருடங்கள் ஆபிரகாமுடைய பின் சந்ததியார் அலைந்து திரிய

இருக்கின்றார்கள். பின்பு ஜனங்கள் அஸரோத்தில் இருந்து புறப்பட்டு பாரான் வனாந்திரத்திலே பாளயம் இறங்கினார்கள் என்று எண்ணாகமம் 12-வது அதிகாரம் 16-வது வசனத்தில் படிக்கின்றோம்.

எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரத்தில் ஜனங்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டது முதல் கடந்து சென்ற இடங்களின் பெயர்கள் ஒன்று ஒன்றாக கொடுக்கப்பட்டு உள்ளது. அதில் 36-வது வசனத்தில் எசியோன் கேபேரிலிருந்து புறப்பட்டு போய் காதேசாகிய சீன் வனாந்திரத்திலே பாளயம் இறங்கினார்கள் என்று கூறப்பட்டு உள்ளது. சீனாய் வனாந்தரத்தில் இருந்து புறப்பட்டு கானானுக்குள் சீக்கிரமாக சென்று விட கானானின் எல்கை வரை ஜனங்களை மோசே கொண்டு வந்து சேர்த்து விட்டார். ஆயினும் எண்ணாகமம் 13-வது அதிகாரத்தில் அனைவரும் உடனடியாக செல்லுவதற்கு முன்னர் ஒரு சிலர் முதலாவது சென்று வரட்டும் என்ற முடிவுக்குள் வந்து விட்டார்கள்.

16.2 கானான் தேசத்தை சுற்றி பார்க்க கர்த்தரின் கட்டளை

கர்த்தர் மோசேயை நோக்கி: நான் இஸ்ரவேல் புத்திதரருக்கு கொடுக்கும் கானான் தேசத்தை சுற்றி பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை அனுப்ப வேண்டும் என்றார். (எண். 13:1-2)

எண்ணாகம புத்தகம் 13-வது அதிகாரத்தில் கானான் தேசத்தை சுற்றி பார்க்குமாறு மனிதரை அனுப்ப கர்த்தர் கூறுவதாக நாம் பார்க்கின்றோம். அதே சமயத்தில் இந்த ஏற்பாடு உபாகம புத்தகம் முதல் அதிகாரம் 22,23 ஆகிய வசனங்களில் ஜனங்களால் செய்யப்பட்ட ஏற்பாடு என்பதையும் நாம் அறிந்து கொள்ளுகின்றோம். மிகவும் ஆர்வத்துடன் வாக்குத்தத்த பூமியின் மிக அருகில் வந்த மீட்கப்பட்ட ஜனங்கள் இரண்டாவது சிந்தனையில் ஈடுபடுவதை உபாகமம் 1:22,23 ஆகிய வசனங்களில் பார்க்கலாம். ''அப்பொழுது நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து நமக்காக அந்த தேசத்தை சோதித்து பார்க்கவும் நாம் இன்ன வழியாக அதில் சென்று இன்ன பட்டணங்களுக்கு போகலாம் என்று நமக்கு மறு செய்தி கொண்டு வரவும் நமக்கு முன்னாக மனிதரை அனுப்புவோம் என்றீர்கள். அது எனக்கு நன்றாய் கண்டது. கோத்திரத்திற்கு ஒருவனாக 12 மனிதரை தெரிந்து எடுத்து அனுப்பினேன்,'' என்று மோசே கூறுவதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். அவர்களுக்கு முன்பாக கர்த்தர் சென்று கொண்டு இருக்கின்றார். சென்று கொண்டு இருக்கும் கர்த்தருக்கு முன்பாக 12 நபர்களை அவர்கள் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. கர்த்தருடன் சென்று சுதந்தரித்து கொள்ள வேண்டியதே அவர்கள் பொறுப்பு. ஆயினும் அவர்கள் 12 நபர்களை பொறுக்கி எடுக்க முடிவு செய்தார்கள். அவர்கள் தற்சமயம் தங்கி இருக்கும் காதேஸ் பர்னேயா என்ற இடத்தில் இருந்து பெயர் செபா என்ற இடம் 50 மைல் வடக்காக உள்ளது. எபிரோன் என்ற இடம் சுமார் 80 மைல் வடமேற்காக உள்ளது. எருசலேம் என்ற இடம் சுமார் 100 மைல் வட மேற்காக உள்ளது. மிக சமீபத்தில் வந்து விட்டார்கள். இன்னும் ஒரு சில நாட்களில் வெற்றி கோட்டினை தாண்டி விடலாம். பல மைல் தூரங்களை கடந்து வந்தவர் அத்தனை சமீபம் வந்து ஸ்தம்பித்து நின்று விட்டார்கள்.

வாக்குத்தத்த பூமியை சுதந்தரிப்பதற்கு நம்பிக்கை என்பது துணையாக நிற்க வேண்டும். விசுவாசம் என்பதை கேடயமாக கையில் பிடிக்க வேண்டும். பெற்ற வாக்குத்தத்தம் சமீபத்தில் பெற்ற வாக்குத்தத்தம் அல்ல. அன்று ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட

வாக்குத்தத்தம் ஆகும். ஆபிரகாம் கானான் தேசத்தில் முன் ஒரு காலத்தில் குடியிருக்கும் பொழுது கர்த்தர் அவனுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் அது ஆகும். ஆதியாகமம் 17:8, ''நீ பரதேசியாய் தங்கி வருகிற கானான் தேசம் முழுவதையும் உனக்கும் உனக்கு பின் வருகிற உன் சந்ததிக்கும் நித்திய சுதந்திரமாக கொடுத்து நான் அவர்களுக்கு தேவனாய் இருப்பேன்'' என்று கூறுகின்றது. கர்த்தர் ஆபிரகாமை பிரித்து எடுத்து கானானில் குடியேற்றினார். ஈசாக்கு யாக்கோபு என்பவர்கள் கானான் என்பதின் சுதந்திரவாளிகள். எகிப்து தேசத்தில் யோசேப்பு அதிபதியாக இருக்கும் பொழுது அவனுடைய அழைப்பின் பெயரில் யாக்கோபின் குடும்பம் எகிப்திற்கு வந்தது. ''நான் நதிக்கு அப்புறத்தில் இருந்த உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமை அழைத்து கொண்டு வந்து அவனை கானான் தேசம் எங்கும் சஞ்சரிக்க செய்து அவன் சந்ததியை திரட்சி ஆக்கி அவனுக்கு ஈசாக்கை கொடுத்தேன்; ஈசாக்குக்கு யாக்கோபையும் ஏசாவையும் கட்டளையிட்டு, ஏசாவுக்கு சேயீர் மலை தேசத்தை சுதந்தரிக்கும்படி கொடுத்தேன்; யாக்கோபும் அவன் பிள்ளைகளுமோ எகிப்திற்கு போனார்கள். யோசேப்பு என்பவன் அதிபதியாக எகிப்தில் இருக்கும் வரை அவர்கள் அதிக மகிழ்ச்சியுடன் அங்கு இருந்தார்கள். பின்னர் யோசேப்பு மரித்தான். யோசேப்பை அறியாத அரசன் ஆட்சிக்கு வந்தது முதல் எகிப்தில் அடிமையாகி சுமார் 430 வருடங்கள் அவதியுற்றார்கள்.'' (யோசுவா 24:3,4)

கர்த்தர் அற்புதங்களை செய்து, அடிமை வாழ்வில் இருந்து அவர்களை வெளியே இழுத்து கொண்டு வந்து இருந்தார். அவர்களின் சொந்த பூமியான கானான் என்பதை மறுபடியும் ஒரு முறை சுதந்தரித்து கொள்ளுவதற்கு செங்கடலை தாண்ட செய்தார். அவர்களை தமது சொந்த ஜனமாக மாற்றி, 10 கட்டளைகள் கொடுத்து, உடன்படிக்கை ஒன்று செய்து, ஆசரிப்பு கூடாரம் அமைத்து, அனைத்து உதவிகளையும் கர்த்தர் செய்தார். சீனாய் வனாந்திரத்தில் அவர்களை ஏற்ற முறையில் ஆயத்த படுத்தி தொடர்ந்து பாரான் வனாந்திரத்தில் வடக்கு ஓரமாக கானான் தேசம் என்பதின் மிக சமீபமாக கர்த்தர் அவர்களை அழைத்து கொண்டு வந்து விட்டார். வாக்குத்தத்த பூமியில் மிக அருகில் நிற்கும் அவர்களுக்கு சற்று தயக்கம் வருகின்றது.

ஆபிரகாமிற்கு மட்டுமல்ல. யாக்கோபிற்கும் கூட கர்த்தர் கானான் தேசத்தை பற்றி உறுதிபடுத்தினார். அதனை பற்றி கர்த்தர் தனக்கு கொடுத்த தரிசனத்தை யாக்கோபு தனது வயதான காலத்தில் நினைவு கூர்ந்தான். தன் மகன் யோசேப்பை அழைத்து அதனை பகிர்ந்து கொண்டான். ஆதியாகமம் 48:3,4: ''யாக்கோபு யோசேப்பை நோக்கி: சர்வ வல்லமை உள்ள தேவன் கானான் தேசத்தில் உள்ள லூஸ் என்னும் இடத்தில் எனக்கு தரிசனமாகி: என்னை ஆசீர்வதித்து, நான் உன்னை பலுகவும் பெருகவும் பண்ணி, உன்னை பல ஜன கூட்டமாக்கி உனக்கு பின் வரும் உன் சந்ததிக்கு இந்த தேசத்தை நித்திய சுதந்திரமாக கொடுப்பேன் என்று என்னோடே சொன்னார்'' என்பதை நாம் பார்க்கின்றோம்.

ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்ற மூதாதையர்கள் வாழ்ந்த பூமியின் ஓரத்தில் வந்து விட்ட வனாந்திர பிரயாணிகளுக்கு உள் உணர்வு சலனம் அடைகின்றது. அவர்கள் விசுவாசம் குறைந்து வருகின்றது. கர்த்தர் கொடுத்த கணக்கு இல்லாத வாக்குத்தத்தங்கள் மீது கேள்விகள் எழும்புகின்றன. ஒரு சிலர் முதலாவது சென்று பார்த்து வரட்டும் பின்னர் யோசித்து முடிவு செய்யலாம் என்ற முடிவுற்குள் அவர்கள் வந்து விட்டார்கள்.

யாக்கோபு மரித்த வேளையில் யோசேப்பும் அவன் சகோதரர்களான கோத்திர பிதாக்களும் பார்வோனின் அனுமதி பெற்று ஏற்கெனவே ஒரு முறை கானான் சென்று வந்ததை நாம் அறிவோம். எபிரோனில் உள்ள ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களுடைய

கல்லறையின் அருகில் யாக்கோபை அன்று அடக்கம் செய்து விட்டு திரும்பி வந்தார்கள் என்பதை ஆதியாகம புத்தகம் 50-வது அதிகாரத்தில் நாம் படித்தோம். இன்னும் ஒரு முறை ஆதியாகமம் 50:5,6 வசனங்களை பார்ப்போம். ''என் தகப்பனார் என்னை நோக்கி: இதோ, நான் மரணம் அடைய போகிறேன். கானான் தேசத்திலே நான் எனக்காக வெட்டி வைத்திருக்கிற கல்லறையிலே என்னை அடக்கம் பண்ணுவாயாக, என்று என்னிடத்தில் சொல்லி ஆணை இடுவித்து கொண்டார். நான் அங்கே போய் என் தகப்பனை அடக்கம் பண்ணி வருவதற்கு உத்திரவு கொடுக்க வேண்டி கொள்ளுகிறேன் என்று சொல்லுங்கள் என்றான். அதற்கு பார்வோன் உன் தகப்பன் உன்னிடத்தில் ஆணை இடுவித்தபடியே நீ போய் அவரை அடக்கம் பண்ணி வா என்றான்.'' ''யாக்கோபின் குமாரர் தங்களுக்கு கட்டளையிட்டு இருந்தபடியே அவனை கானான் தேசத்திற்கு கொண்டு போய், ஆபிரகாம் மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்னும் நிலத்திலே தனக்கு சொந்த கல்லறை பூமியாக ஏத்தியனாகிய எப்பெரோனிடத்தில் வாங்கின நிலத்தில் உள்ள குகையிலே அவனை அடக்கம் பண்ணினார்கள். யோசேப்பு தன் தகப்பனை அடக்கம் பண்ணின பின்பு, அவனும் அவன் சகோதரரும் அவன் தகப்பனை அடக்கம் பண்ணுவதற்கு அவனோடே கூட போனவர்கள் யாவரும் எகிப்திற்கு திரும்பினார்கள்'' (ஆதி. 50:12-14). எகிப்திற்கு திரும்பி வந்த பின்னர் யோசேப்பு மரித்தான். மரிக்கும் வேளையில் யோசேப்பு தனது எலும்புகளை எப்படியாவது தனது தந்தையுடன் அடக்கம் செய்ய கேட்டு கொண்டான். ஆதியாகமம் 50:24,25 ஆகிய வசனங்கள். ''யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: நான் மரணம் அடைய போகிறேன்; ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய் சந்தித்து, நீங்கள் இந்த தேசத்தை விட்டு தாம் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் ஆணை இட்டு கொடுத்திருக்கிற தேசத்துக்கு போக பண்ணுவார் என்று சொன்னதுமன்றி, தேவன் உங்களை சந்திக்கும் போது என் எலும்புகளை இவ்விடத்தில் இருந்து கொண்டு போவீர்களாக, என்றும் சொல்லி யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணை இடுவித்து கொண்டான்.'' ''விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டு புறப்படுவார்கள் என்பதை பற்றி தன் அந்திய காலத்தில் பேசி தன் எலும்புகளை குறித்து கட்டளை கொடுத்தான்'' என்று எபிரெயர் நிரூபம் 11:22-வது வசனம் கூறுகின்றது.

தொடர்ந்து யாத்திராகமம் புத்தகம் 13-வது அதிகாரம் 19-வது வசனம். ''மோசே தன்னோடே கூட யோசேப்பின் எலும்புகளை எடுத்து கொண்டு போனான். தேவன் நிச்சயமாய் உங்களை சந்திப்பார். அப்பொழுது உங்களோடே கூட என் எலும்புகளை இவ்விடத்தில் இருந்து கொண்டு போங்கள் என்று யோசேப்பு சொல்லி இஸ்ரவேல் புத்திரரை உறுதியாய் ஆணை இடும்படி செய்து இருந்தான்.'' விலையேற பெற்ற விசுவாசத்துடன் அவர்களுடைய மூதாதையர்கள் வாக்குத்தத்த பூமியை நோக்கி கடந்து சென்றார்கள். இப்பொழுது ஆபிரகாமின் சந்ததியார் யோசேப்பின் எலும்புகளுடன் கானானின் மிக அருகில் வந்து விட்டார்கள். ஆனால் அலுத்து போய் நிற்கின்றார்கள். அனைவரும் செல்ல வேண்டாம். அனைவர் சார்பிலும் தெரிந்து எடுக்கப்பட்டவர்கள் மட்டும் சென்று வரட்டும், பின்னர் பார்க்கலாம் என்ற முடிவுக்குள் வந்து விட்டார்கள்.

16.3 கானான் தேசத்தை சுற்றி பார்க்க அனுப்பப்பட்ட 12 பேர்

மோசே கர்த்தருடைய வாக்கின்படியே அவர்களை பாரான் வனாந்தரத்திலிருந்து அனுப்பினான். அந்த மனிதர் யாவரும் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள். (எண். 13:3)

12 கோத்திரங்களில் இருந்தும் உடல் வலிமை பெற்ற 12 நபர்களை பொறுக்கி எடுக்க முடிவு செய்தார்கள். ஆனால் அவர்கள் அனைவரின் உள்ளங்களும் கர்த்தரின் வலிமை பெற்று இருக்கின்றதா என்பதை அவர்கள் கவனிக்கவில்லை. அறிவில் உயர்ந்தவர்களா என்பது அறிய பட்டது. ஆத்துமாவில் சிறந்தவர்களா என்பது அறிய படவில்லை. கர்த்தரை விசுவாசிப்பதற்கு பதிலாக கர்த்தரை பரீட்சித்து பார்ப்பதற்கு விரும்பினார்கள். நம்பி கீழ்படிவதற்கு பதிலாக ஆராய்ந்து அறிந்து விடுவதற்கு முடிவு செய்தார்கள்.

''நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்'' என்று 2 கொரி. 5:6-வது வசனம் கூறுகின்றது. ''நாம் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்போம்.''

அவர்களுடைய நாமங்களாவன: ரூபன் கோத்திரத்தில் சக்கூரின் குமாரன் சம்முவா. சிமியோன் கோத்திரத்தில் ஓரியின் குமாரன் சாப்பாத். யூதா கோத்திரத்தில் எப்புன்னேயின் குமாரன் காலேப். இசக்கார் கோத்திரத்தில் யோசேப்பின் குமாரன் ஈகால். (எண். 13:4-7)

வாக்குத்தத்த பூமிக்கு மிகவும் அருகில் நிற்கும் மீட்கப்பட்ட மக்கள் விசுவாசத்துடன் உள்ளே பிரவேசிப்பதற்கு பதிலாக 12 நபர்களை முதலாவது அனுப்பி வைப்பதற்கு முடிவு செய்தார்கள். அந்த 12 நபர்களின் பெயர்களும் 4 முதல் 16 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளன. கோத்திரத்திற்கு ஒருவராக 12 நபர்கள் தெரிந்து எடுக்க படுகின்றார்கள்.

எண்ணாகம புத்தகத்தின் ஆரம்ப அதிகாரங்களிலும் கோத்திரத்திற்கு ஒருவராக 12 நபர்கள் தெரிந்து எடுக்கப்பட்டதை நாம் பார்த்தோம். அவர்களுடைய பெயர்கள் எண்ணாகமம் முதல் அதிகாரம், 2-வது அதிகாரம், 7-வது அதிகாரம், 10-வது அதிகாரம் ஆகிய 4 இடங்களில் ஒரே சீராக வந்தது என்று நாம் பார்த்தோம். ஆனால் எண்ணாகமம் 13-வது அதிகாரத்தில் கோத்திரத்திற்கு ஒருவராக தெரிந்து எடுக்க பட்டவர்கள் முற்றிலும் வித்தியாசமானவர்கள். முன்னதாக தெரிந்து எடுக்க பட்டவர்கள் அனைவரும் முதுமை ஆனவர்கள். இப்பொழுது தெரிந்து எடுக்கப்படுகின்றவர்கள் இளைஞர்கள். முற்றிலும் புதிய 12 பெயர்கள் எண்ணாகமம் 13-வது அதிகாரம் 4 முதல் 16 வசனங்களில் தரப்பட்டு உள்ளன.

லேவியராகம புத்தகம் 18-வது அதிகாரம் 3-வது வசனத்தில் ''நான் உங்களை அழைத்து போகிற கானான்,'' என்று கர்த்தர் கூறினார். எண்ணாகமம் 13-வது அதிகாரத்தில் 12 நபர்கள் பார்வையிட்டு திரும்பிய பின்னர் கர்த்தர் அழைத்து கொண்டு செல்லட்டும் என்ற முடிவிற்குள் அவர்கள் வந்து விட்டார்கள். ''உங்களுக்கு கானான் தேசத்தை கொடுத்து, உங்களுக்கு தேவனாக இருக்கும்படி உங்களை எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே'' என்று லேவியராகமம் 25-வது அதிகாரம் 38-வது வசனத்தில் கர்த்தர் கூறினார். அன்று கேட்ட கர்த்தரின் குரல் இப்பொழுது மறந்து போய் விட்டது. இப்பொழுது 12 நபர்கள் முதலாவது சென்று வர புறப்படுகின்றார்கள்.

ரூபன் கோத்திரத்தில் இருந்து சம்மூவா என்பவன் தெரிந்து எடுக்கப்படுகின்றான். சம்மூவா என்றால் கேட்கப்பட்டவன் என்று பொருள்படும். சிமியோன் கோத்திரத்தில் இருந்து சாப்பாத் என்பவன் தெரிந்து எடுக்கப்படுகின்றான். சாப்பாத் என்றால் நியாயாதிபதி என்று பொருள் ஆகும். யூதா கோத்திரத்தில் இருந்து காலேப் என்பவன் தெரிந்து எடுக்கப்படுகின்றான். காலேப் என்றால் தீர்மானம் உடையவன் என்று பொருள். வீரமும்

விவேகமும் உடையவன் என்பதும் ஆகும். இசக்கார் கோத்திரத்தில் இருந்து ஈகால் என்பவன் தெரிந்து எடுக்கப்படுகின்றான். ஈகால் என்றால் இரட்சிக்கிறவன் என்று பொருள்.

எப்பிராயீம் கோத்திரத்தில் நூனின் குமாரன் ஓசேயா. தேசத்தை சுற்றிப்பார்க்கும்படி மோசே அனுப்பின மனிதரின் நாமங்கள் இவைகளே நூனின் குமாரனாகிய ஓசேயாவுக்கு யோசுவா என்று மோசே பேரிட்டிருந்தான். (எண். 13:8-9)

8-வது வசனத்தில் எப்பிராயீம் கோத்திரத்தில் இருந்து ஓசேயா என்பவன் தெரிந்து எடுக்கப்படுகின்றான். இவனை பற்றிய மற்றொரு குறிப்பு 16-வது வசனத்தின் பின் பகுதியில் கூறப்பட்டு உள்ளது. நூனின் குமாரனாகிய ஓசேயாவுக்கு யோசுவா என்று மோசே பெயரிட்டு இருந்தான் என்று படிக்கின்றோம். எப்பிராயீம் கோத்திரத்தில் இருந்து தெரிந்து எடுக்க பட்டவனின் முதல் பெயர் ஓசேயா என்றும் இரண்டாவது பெயர் யோசுவா என்றும் அறிந்து கொள்ளுகின்றோம். ஓசேயா என்றால் 'யேகோவா இரட்சிப்பார்' என்பது பொருள் ஆகும். பின்னர் அவன் பெற்ற பெயர் யோசுவா என்பது ஆகும். யோசுவா என்றால் 'கர்த்தர் இரட்சிக்கிறார்' என்பது ஆகும். 'யேகோவா இரட்சிப்பார்' என்பது ஓர் ஜெபமாக தெரிகின்றது. 'கர்த்தர் இரட்சிக்கிறார்' என்பது ஓர் விடை போன்று வருகின்றது.

ஓசேயா என்பது ஓர் கேள்வி போன்றும் யோசுவா என்பது ஓர் பதில் போன்றும் காணப்படுகின்றது. ஓசேயா என்ற பெயரை மோசே யோசுவா என்று மாற்றி விட்டார். யாத்திராகமம் 17-வது அதிகாரத்தின் இறுதி வசனங்களில் அமலேக்கியர் என்பவர்களுடன் யோசுவா போரிட்டு ஜெயித்த பொழுது இந்த பெயர் மாற்றம் இடம் பெற்று இருக்கலாம் என்று கருத படுகின்றது. யோசுவாவை பற்றிய குறிப்பு யாத்திராகம புத்தகம் 17:9-14 வசனங்களிலும் 24:13-வது வசனத்திலும் 32:17-வது வசனத்திலும் 33:11-வது வசனத்திலும் எண்ணாகம புத்தகம் 11:28-வது வசனத்திலும் இதுவரை வந்தது.

இந்த இடத்தில் இருந்து இனிமேல் அடிக்கடி யோசுவாவின் பெயர் வர இருக்கின்றது. யோசுவா என்று பழைய ஏற்பாட்டில் வரும் பெயர் புதிய ஏற்பாட்டில் இயேசு என்று பொருள் படுகின்றது. ''அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்'' என்று பரிசுத்த மத்தேயு 1:21-வது வசனம் கூறுகின்றது. யோசுவா என்றால் கர்த்தர் இரட்சிக்கிறார் என்று பழைய ஏற்பாட்டு புத்தகம் கூறியது. அதே பெயர் இயேசு இரட்சிக்கிறார் என்று புதிய ஏற்பாட்டில் இடம் பெறுகின்றது.

பென்யமீன் கோத்திரத்தில் ரப்பூவின் குமாரன் பல்த்தி. செபுலோன் கோத்திரத்தில் சோதியின் குமாரன் காதியேல். யோசேப்பின் கோத்திரத்தை சேர்ந்த மனாசே கோத்திரத்தில் சூசின் குமாரன் காதி. தாண் கோத்திரத்தில் கெமல்லியின் குமாரன் அம்மியேல். ஆசேர் கோத்திரத்தில் மிகாவேலின் குமாரன் சேத்தூர். நப்தலி கோத்திரத்தில் ஒப்பேசியின் குமாரன் நாகபி. காத் கோத்திரத்தில் மாகியின் குமாரன் கூவேல். (எண். 13:10-16)

பென்யமீன் கோத்திரத்தின் சார்பில் பல்தி என்பவன் தெரிந்து எடுக்கப்படுகின்றான். பல்தி என்றால் கர்த்தரின் இரட்சிப்பு என்று பொருள். செபுலோன் கோத்திரத்தில் இருந்து



பன்னிரண்டு வேவுகாரர் தேசத்தை சுற்றி பார்த்த இடங்கள்

டெல் சுல்தான், ஆதிகால எபிரோன் பட்டணம் இருந்த மேடு

காதியேல் தெரிந்து எடுக்கப் படுகின்றான். காதியேல் என்றால் கர்த்தர் என் சம்பத்து என்று பொருள். மனாசே கோத்திரத்தில் இருந்து காதி என்பவன் தெரிந்து எடுக்கப் படுகின்றான். காதி என்பதற்கு ஒரு கூட்டமானவன் என்று பொருள். தாண் கோத்திரத்தில் இருந்து அம்மியேல் என்பவன் தெரிந்து எடுக்கப்படுகின்றான். அம்மியேல் என்றால் கர்த்தர் என் இனத்தான் என்று பொருள். ஆசேர் கோத்திரத்தில் சேத்தூர் என்பவன் தெரிந்து எடுக்கப் படுகிறான். சேத்தூர் என்பதற்கு ஓர் புதிர் என்ற பொருள். சேத்தூர் என்ற வார்த்தை 666 என்ற இலக்கத்தையும் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தை ஆகும். நப்தலி கோத்திரத்தில் இருந்து நாகபி என்பவன் தெரிந்து எடுக்கப் படுகின்றான். நாகபி என்பதற்கு ஒளித்து கொள்ளுகிறவன் என்று பொருளாகும். காத் கோத்திரத்தில் இருந்து கூவேல் என்பவன் தெரிந்து எடுக்கப்படுகிறான். கூவேல் என்பதற்கு கர்த்தரின் மாட்சிமை என்பது பொருள் ஆகும்.

அவர்களை மோசே கானான் தேசத்தை சுற்றி பார்க்கும்படி அனுப்புகையில், அவர்களை நோக்கி: நீங்கள் இப்படி தெற்கே போய், மலையில் ஏறி, தேசம் எப்படி பட்டது என்றும், அங்கே குடி இருக்கிற ஜனங்கள் பலவான்களோ பலவீனர்களோ, கொஞ்சம் பேரோ அநேகம் பேரோ என்றும், அவர்கள் குடியிருக்கிற தேசம் எப்படிப்பட்டது, அது நல்லதோ கெட்டதோ என்றும்,

அவர்கள் பட்டணங்கள் எப்படி பட்டதென்றும், அவர்கள் கூடாரங்களில் குடி இருக்கிறவர்களோ கோட்டைகளில் குடி இருக்கிறவர்களோ என்றும், நிலம் எப்படி பட்டது, அது வளப்பமானதோ இளப்பமானதோ என்றும் அதில் விருட்சங்கள் உண்டோ இல்லையோ என்றும் பாருங்கள், தைரியம் கொண்டிருந்து, தேசத்தின் கனிகளிலே சிலவற்றை கொண்டு வாருங்கள் என்றான். (எண். 13:17-19)

ஒட்டாமன் காலத்து எபிரோன்

12 வித்தியாசமான மனிதர்கள் தெரிந்து எடுக்க பட்டார்கள். அவர்களுக்கு அவசியப்படும் அறிவுரைகளை மோசே கூறுகிறான். நல்ல செய்தியுடன் திரும்பி வாருங்கள் என்று மோசே அவர்களை அனுப்பினான். உங்களுடைய தைரியம் எந்த அளவிற்கு இருந்தது என்பதை காட்ட பழ வர்க்கங்கள் எடுத்து வாருங்கள் என்று அனுப்பினான்.

அக்காலம் திராட்சச்செடி முதல் பழம் பழுக்கிற காலமாய் இருந்தது. அவர்கள் போய், சீன் வனாந்தரம் தொடங்கி, ஆமாத்துக்கு போகிற வழியாகிய ரேகொப் மட்டும், தேசத்தை சுற்றி பார்த்து, தெற்கேயும் சென்று, எபிரோன் மட்டும் போனார்கள். அங்கே ஏனாக்கின் குமாரராகிய அகீமானும் சேசாயும் தல்மாயும் இருந்தார்கள். எபிரோன் எகிப்திலுள்ள சோவானுக்கு ஏழு வருஷத்திற்கு முன்னே கட்ட பட்டது. (எண். 13:20-22)

12 நபர்களும் சீன் வனாந்திரம் துவங்கி ஆமாத் என்ற இடத்திற்கு செல்லும் வழியாக ரேகொப் மட்டும் சென்றனர் என்று 21-வது வசனம் கூறுகின்றது. சீன் வனாந்திரம் கானானின் தெற்கு பகுதியையும் ரேகோப் என்ற இடம் கானானின் வடக்கு பகுதியையும் குறிக்கின்றது.

கானானின் தெற்கு முதல் வடக்கு வரை சுமார் 250 மைல்கள் ஆகும். 250 மைல்கள் சென்று திரும்பும் பொழுது 500 மைல்கள் அவர்கள் நடந்து உள்ளனர். 22-வது வசனத்தில் எபிரோன் என்ற ஒரு இடத்திற்கு அவர்கள் சென்று வந்ததை குறிப்பிட்டு காட்டுகின்றனர். எபிரேயர்களின் உள்ளத்தை கவரும் இடம் எபிரோன் என்ற இடம் ஆகும். எனவே கானானை சுற்றி சென்றவர் அந்த ஊரை மட்டும் சிறப்பித்து கூறுகின்றார். எபிரோனின் புராதன பெயர் கீரியாத் அர்பா என்பது ஆகும். எபிரோன் எருசலேமில் இருந்து சுமார் 20 மைல் தெற்காக அமைந்து உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 3040 அடி உயரத்தில் உள்ளது. நில வளமும் நீர் வளமும் கொண்டது. கிணறுகளும் ஊற்றுகளும் பெற்றது. இந்த இடத்தில் இருந்து சுமார் 2 மைல் தொலைவில்தான் மம்ரேயின் சமவெளி உண்டு.



பன்னிரண்டு வேவுகாரர்களும் கானான் தேசத்தை வேவு பார்க்க சென்று வந்த பாதை

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமின் வாழ்வில் அவன் கண்ட எண்ணற்ற நிகழ்ச்சிகள் இந்த மம்ரேயின் சமவெளியில் தான் இடம் பெற்றன. ஆதியாகம புத்தகம் 12-வது அதிகாரம் முதல் 25-வது அதிகாரம் வரை வரும் சரித்திரங்கள் மம்ரேயின் சமவெளி சம்பந்தப்பட்ட சரித்திரங்கள் ஆகும். ஆதியாகமம் 13-வது அதிகாரம் 18-வது வசனம், ஆபிரகாம் மம்ரேயின் சமவெளியில் குடியேறினான் என்று கூறுகின்றது. ''அப்பொழுது ஆபிரகாம் கூடாரத்தை பெயர்த்து கொண்டு போய் எபிரோனில் இருக்கும் சமபூமியில் சேர்ந்து குடியிருந்து அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை கட்டினான்'' என்று வாசிக்கின்றோம்.

மம்ரே என்பது ஆபிரகாமை நேசித்த ஒருவனின் பெயர் என்பதை ஆதியாகமம் 14:13-வது வசனத்தின் பின் பாகத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். ஆபிரகாம் தன்னோடே உடன்படிக்கை செய்து இருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சம பூமியிலே அப்பொழுது குடியிருந்தான் என்று அந்த வசனம் கூறுகின்றது. எபிரோனில்தான் ஆபிரகாம் தன் மனைவியை அடக்கம் செய்தான். ''அதற்கு பின் ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளை கானான் தேசத்தில் எப்பெரோன் ஊர் பூமியான மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்னும் நிலத்தின் குகையிலே அடக்கம் பண்ணினான். இப்படி ஏத்தின் புத்திரர் கையில் கொள்ளப்பட்ட அந்த நிலமும் அதிலுள்ள குகையும் ஆபிரகாமிற்கு சொந்த கல்லறை பூமியாக உறுதி படுத்த பட்டது'' என்று ஆதியாகம புத்தகம் 23:19,20 வசனங்கள் கூறுகின்றது.

மனைவிக்கே மட்டுமல்ல தானும் தன் குடும்பத்தை சேர்ந்தவர்களும் மரித்த பின்னர் எபிரோனில் தான் அடக்கம் செய்யப்படுவதற்கு போதுமான இடங்களை ஆபிரகாம் விலை கொடுத்து வாங்கி இருந்தான். சாராள் அங்கு அடக்கம் செய்யபட்ட பின்னர் ஆபிரகாம், ஈசாக்கு, ரெபேக்காள், லேயாள், யாக்கோபு அனைவரும் இதே இடத்தில் தான் அடக்கம் செய்ய பட்டார்கள். ஆதியாகமம் 49:29-31: ''பின்னும் அவன் அவர்களை நோக்கி: நான் என் ஜனத்தாரோடே சேர்க்கப்பட போகிறேன். ஏத்தியனான எப்பெரோனின் நிலத்தில் உள்ள குகையிலே என்னை என் பிதாக்கள் அண்டையிலே அடக்கம் பண்ணுங்கள் என்று கட்டளையிட்டு அந்த குகை கானான் தேசத்திலே மம்ரேக்கு எதிராக மக்பேலா என்னப்பட்ட நிலத்தில் இருக்கிறது. அதை நமக்கு சொந்த கல்லறை பூமியாய் இருக்கும்படி ஆபிரகாம் ஏத்தியனாகிய எப்பெரோன் கையில் அதற்குரிய நிலத்துடனே வாங்கினார். அங்கே ஆபிரகாமையும் அவன் மனைவியாகிய சாராளையும் அடக்கம் பண்ணினார்கள். அங்கே ஈசாக்கையும் அவர் மனைவியாகிய ரெபேக்காளையும் அடக்கம் பண்ணினார்கள். அங்கே லேயாளையும் அடக்கம் பண்ணினேன்'' என்று யாக்கோபு கூறுவதை நாம் பார்க்கிறோம். கட்டிட கலையில் அன்று சிறந்து விளங்கிய சோவான் என்ற எகிப்திய பட்டணம் கட்ட படுவதற்கு 7 வருடங்களுக்கு முன்னதாகவே எபிரோன் கட்டப்பட்டது என்று அறிந்து கொள்ளுகின்றோம். எபிரோன் என்றால் ஐக்கியம் என்று பொருள். ஆபிரகாம் கர்த்தாதி கர்த்தருடனும் சக மனிதருடனும் ஐக்கியமாக இருந்த இடம் எபிரோன் என்பது ஆகும்.

மோசேயினால் அனுப்பப்பட்ட 12 நபர்களும் அங்கு சென்றார்கள். ஆனால் அவர்களுக்குள்ளே ஐக்கியம் இல்லாமற் போயிற்று. எபிரோன் வரை சென்றார்கள். சர்வ வல்லமை உள்ள தேவனுடன் ஐக்கியமாக வாழ்ந்த ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்ற மூதாதையரின் இடமான எபிரோன் வரை சென்றார்கள். எபிரோன் என்றால் ஐக்கியம். ஆனால் எபிரோனை பார்க்க சென்ற 12 நபர்கள் நடுவில் ஐக்கியம் அகன்று விட்டது.

> ***பின்பு, அவர்கள் எஸ்கோல் பள்ளதாக்கு மட்டும் போய், அங்கே ஒரே குலையுள்ள ஒரு திராட்ச கொடியை அறுத்தார்கள். அதை ஒரு தடியிலே இரண்டு பேர் கட்டி தூக்கி கொண்டு வந்தார்கள் மாதளம் பழங்களிலும் அத்தி பழங்களிலும் சிலவற்றை கொண்டு வந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் அங்கே அறுத்த திராட்ச குலையின் நிமித்தம், அவ்விடம் எஸ்கோல் பள்ளத்தாக்கு என்னப்பட்டது. (எண். 13:23-24)***

எஸ்கோல் என்றால் 'திராட்சை மேடுகள்' என்று பொருள்படும். இப்பொழுதும் மைல் கணக்காக திராட்சை செடி மேடுகள் கண்களில் படுவதுண்டு. எஸ்கோல் பள்ளத்தாக்கு எண்ணாகமம் 32:9-லும் உபாகம் 1:24-லும் குறிக்கபட்டுள்ளது. 23-வது வசனத்தில் எபிரோனுக்கு அருகில் உள்ள எஸ்கோல் பள்ளத்தாக்கில் அத்தி பழம், மாதளம் பழம் மற்றும் ஒரு திராட்ச குலையும் எடுத்து கொண்டனர். மோசே அவர்களை பழ வர்க்கங்கள் கொண்டு வாருங்கள் என்று சொல்லி அனுப்பி இருந்தான். வேண்டிய மட்டும் எடுத்து கொண்டனர். அவர்கள் வெட்டிய ஒரே திராட்ச குலையை ஒருவரால் சுமக்க முடியவில்லை. ஒரு தடியிலே இரண்டு பேர் கட்டி தூக்கி கொண்டு வந்தார்கள் என்று 23-வது வசனம் கூறுகின்றது. எபிரோனில் இருந்து சுமார் 20 மைல் அந்த பெரிய திராட்ச குலையினை பெரிய விசுவாசத்துடன் தூக்கி வந்தார்கள். அந்த வீர விசுவாசத்துடன் தூக்கி கொண்டு வந்த இருவரும் காலேப், யோசுவா என்பவர்களே ஆகும் என்று ஒரு குறிப்பு கூறுகின்றது. தேசத்தை பார்வையிட சென்ற 12 நபர்களில் 10 பேர் ஒரு பக்கமும், 2 பேர் மறு பக்கமுமாக மாறி



சாராளை மக்பேலா குகையில் ஆபிரகாம் அடக்கம் பண்ணுதல்

எபிரோனில் ஆபிரகாம் கல்லறை



மக்பேலா குகையில் ஈசாக்கு கல்லறை



யாக்கோபின் கல்லறை

எபிரோனில் ஆபிரகாமின் கல்லறையின் மேல் எழுப்ப பட்டிருக்கும் கிறிஸ்தவ ஆலயமும் இஸ்லாமிய தொழுகை ஸ்தலமும்

விட்டார்கள். வாக்குத்தத்த பூமி சென்று திரும்பியும் உள்ளான மனுஷனில் விசுவாச எழுச்சி ஏற்படவில்லை. எபிரோன் வரை சென்றும் இதயங்கள் ஒன்று படவில்லை. கானானை குறித்து அச்ச உணர்வுடன் 10 பேர் மோசேயை நோக்கி வந்து கொண்டு இருக்கின்றார்கள்.

எஸ்கோல் பள்ளதாக்கு

திராட்சை குலை சுமந்து வரும் இருவர்

ஒரே குலையுடைய திராட்சை செடி

அதே சமயம் பெரும் மகிழ்ச்சியுடன் இரண்டு பேர் திராட்ச குலை ஒன்றை தூக்கி கொண்டு நடந்து வருகின்றார்கள். அந்த இரண்டு பேரும் தங்கள் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்தவர்கள். ''உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாய் இரு. அவரே காரியத்தை வாய்க்க பண்ணுவார்'' என்று சங்கீதம் 37:5 வசனம் கூறுகின்றது.

16.4 வேவுகாரர்கள் கொண்டு வந்த இருவித செய்திகள்

அவர்கள் தேசத்தை சுற்றி பார்த்து, நாற்பது நாள் சென்ற பின்பு திரும்பினார்கள். (எண். 13:25)

வடக்கும் தெற்குமாக கானான் தேசம் சுமார் 250 மைல்களாகும். அது முழுவதும் கால் நடையாக சென்று சுற்றி பார்த்து திரும்பி வர 500 மைல்களுக்கு மேல் ஆகும். எல்லாவற்றையும் சுற்றி பார்த்த பின் எபிரோனுக்கு வந்து எஸ்கோல் பள்ளத்தாக்கில் இருந்து பழ குலைகளை கொண்டு வருகிறார்கள்.

கானான் சென்ற 12 நபர்களும் திரும்பி வந்தார்கள் என்று 25-வது வசனத்தில் படிக்கின்றோம். அவர்கள் தேசத்தை நாற்பது நாள் சுற்றி பார்த்த பின்பு திரும்பி வந்தார்கள். அவர்கள் புறப்பட்டு சென்ற காலம் திராட்ச செடி முதற் பழம் பழுக்கிற காலமாய் இருந்தது என்று 20-வது வசனத்தில் பார்க்கின்றோம். நமது நாட்காட்டிகளின்படி அது ஆகஸ்டு மாதம் முதல் வாரம் என்பது ஆகும்.

இப்பொழுது நாற்பது நாட்கள் சென்று விட்டன. உற்சாகத்துடன் புறப்பட்டு சென்ற பன்னிரெண்டு நபர்களில் பத்துபேர் உற்சாகம் இழந்தும் இரண்டு பேர் உற்சாகம் கொண்டும் திரும்பி வந்து கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் வெட்டிய திராட்ச குலையை ஒரு



மாதளம் பழங்கள்



அத்தி பழங்கள்

தடியில் வைத்து சுமந்து கொண்டு இரண்டு பேர் அமைதலாக நடந்து வந்து கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் மற்ற பத்து நபர்களும் மோசேயிடம் யார் யார் என்ன என்ன பேச வேண்டும் என்று தயாராகி கொண்டு இருக்கின்றார்கள்.

> *அவர்கள் பாரான் வனாந்தரத்தில் இருக்கிற காதேசுக்கு வந்து, மோசே ஆரோன் என்பவர்களிடத்திலும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரிடத்திலும் சேர்ந்து, அவர்களுக்கும் சபையார் அனைவருக்கும் சமாசாரத்தை அறிவித்து, தேசத்தின் கனிகளை அவர்களுக்கு காண்பித்தார்கள். (எண். 13:26)*

சபையாரை கூட்டி கானானை கண்டு வர சென்றவர்கள் கொண்டு வரும் செய்தியை கேட்க மோசே தயாராகி விட்டான். அவர்கள் யாவரும் செழிப்பான தேசத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட வளமான கனிவர்க்கங்களை ஆவலோடு காண்கின்றனர். நல்ல ஒரு தேசம் அவர்களுக்காக காத்திருக்கின்றது என்பதை அவர்கள் மனதார அறிந்து உணர்ந்து கொண்டார்கள்.

அவர்கள் மோசேயை நோக்கி: நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய் வந்தோம். அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி. (எண். 13:27)



வேவுகாரர்கள் மோசே, ஆரோன் முன்பு சபையாரிடத்தில் தாங்கள் கொண்டு வந்தவைகளை காட்டுகிறார்கள்

27-வது வசனத்தில் அவர்கள் மோசேயை நோக்கி, நீர் எங்களை அனுப்பின தேசத்திற்கு நாங்கள் போய் வந்தோம் என்று ஆரம்பித்தார்கள். கர்த்தர் எங்களை அனுப்பின இடத்திற்கு போய் வந்தோம் என்று கூறவில்லை. மோசேயை நோக்கி நீர் எங்களை அனுப்பின இடத்திற்கு சென்று திரும்பினோம் என்று கூறினார்கள். அவர்களது அறிக்கையின் ஆரம்பம் கர்த்தரை நடுவாக கொண்ட ஆரம்பம் அல்ல. ஆண்டவரை போற்றி அவர்கள் துவங்க வில்லை. சுமார் 500 மைல்களை நாற்பது நாட்களில் நடந்து சென்று இப்பொழுது திரும்பி வந்து இருக்கின்றார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று துவங்கவில்லை, எவருக்கும் எத்தீங்கும் ஏற்படாமல் சுகத்தோடும், பெலத்தோடும் திரும்பினார்கள். ஆனால் அவர்களுடைய உள்ளமோ நன்றி நவில வில்லை. அவர்கள் இருதயம் நல்ல விசேஷங்களால் நிறைந்து இராத படியினால் நன்றி கீதத்துடன் நடந்தவைகளை எடுத்து கூறவில்லை. 27-வது வசனத்தில் நீர் எங்களை அனுப்பினீர் என்றார்கள்.

பார்த்து வந்த தேசம் உண்மையில் பாலும் தேனும் ஓடுகிற தேசம்தான் என்று அடுத்தாற்போல் கூறினார்கள். பால் என்பது நிறைவிற்கு அடையாளம் ஆகும். தேன் என்பது செழிப்பிற்கு அடையாளம் ஆகும். சென்று வந்த தேசம் நிறைவும், செழிப்பும் கொண்ட தேசம் என்று கூறினார்கள். அது வறட்சியான தேசம் என்று அவர்களால் கூற முடியாது. காரணம் ஓர் திராட்ச குலை கைவசம் இருக்கின்றது. பாலும் தேனும் ஓடுகிற தேசம் கானான் தேசம் என்று பரிசுத்த வேத புத்தகத்தில் 13 இடங்களில் வருகின்றது. அதனை நிராகரிக்க அவர்களால் கூடாது. இது அதனுடைய கனி என்று எடுத்து வந்த மாதுளம் பழங்களையும், அத்தி பழங்களையும் திராட்ச குலையையும் இறக்கி வைத்தார்கள். அத்துடன் நின்று இருப்பார்கள் என்றால் வென்று இருப்பார்கள். ஆனால் அவ்விதம் அவர்கள் செய்யவில்லை.

ஆனாலும், அந்த தேசத்திலே குடி இருக்கிற ஜனங்கள் பலவான்கள். பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது. அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம். அமலேக்கியர் தென் புறமான தேசத்தில் குடி இருக்கிறார்கள். ஏத்தியரும், எபூசியரும், எமோரியரும் மலை நாட்டில் குடி இருக்கிறார்கள் கானானியர் கடல் அருகேயும், யோர்தான் அண்டையிலும் குடி இருக்கிறார்கள் என்றார்கள். (எண். 13:28-29)

28-வது வசனம் ஆனாலும் என்று துவங்குகின்றது. ஆனாலும் என்று இந்த இடத்தில் பயன்படுத்தப்பட்டு உள்ள எபிரெய சொல் வேத புத்தகத்தில் இன்னும் மூன்றே மூன்று இடங்களில்தான் பயன் படுத்த பட்டு உள்ளது. நியாயாதிபதிகளின் புத்தகம் 4-வது அதிகாரம் 9-வது வசனம், சாமுவேல் தீர்க்கதரிசி எழுதிய 2-ம் புத்தகம் 12-வது அதிகாரம் 14-வது வசனம், ஆமோஸ் தீர்க்கதரிசியின் புத்தகம் 9-வது அதிகாரம் 8-வது வசனம் ஆகிய மூன்று இடங்கள் ஆகும். எண்ணாகமம் 13-வது அதிகாரம் 28-வது வசனத்தில் ஆனாலும் என்பதற்கு பயன்படுத்தப்பட்டு உள்ள எபிரெய சொல் சற்றும் எதிர்பாராத ஒன்றை கூறுவதற்கு முன்னர் பயன்படுத்தப்படும் சொல் ஆகும். சற்றும் எதிர்பாராத ஒரு அறிவிப்பை கூறுவதற்கு முன் கேட்டு கொண்டு இருக்கிறவர்களுடைய மனதை பதட்டம் அடைய செய்யவோ, அல்லது பரவசப்படுத்தவோ பயன் படுத்த படும் ஒரு சொல் ஆகும்.

28-வது வசனம் ஆனாலும் என்று துவங்குகின்றது. அந்த வார்த்தையை கேட்டவுடனே அவர்களின் உள்ள கிடக்கை எப்படி பட்டது என்பதை கேட்டு கொண்டு இருக்கிறவர்கள் புரிந்து இருப்பார்கள். மிகவும் நல்ல விஷயத்தை கூறுவது போல கூறி விட்டு ஆனாலும் என்று ஆரம்பித்தார்கள். ஆனாலும் கானானுக்குள் செல்லுவது கடினமான செயல் என்பதே அவர்கள் உரை ஆகும்.

அதற்கு மூன்று காரணங்களை 28,29 ஆகிய இரண்டு வசனங்களிலும் எடுத்து கூறுகின்றார்கள். முதலாவது ஜனங்கள் பலசாலிகள். இரண்டாவது பட்டணங்கள் அரணிப்பானவைகள். மூன்றாவது ஏனாக்கின் குமாரர்கள் அங்கு வாழ்கின்றார்கள் என்பதே ஆகும். அவ்விதமான ஓர் அறிக்கையினை அவர்கள் தயார் செய்து கொண்டு வந்து இருக்கின்றார்கள் என்பதை காலேப் எதிர்பார்க்கவில்லை. காலேப் அவர்களுடன் சென்றவர்களில் ஒருவன் ஆகும்.

> *அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதை சுதந்தரித்து கொள்வோம். நாம் அதை எளிதாய் ஜெயித்து கொள்ளலாம் என்றான். (எண். 13:30)*

காலேப் என்ற பெயர் வீரம், விவேகம் என்பதற்கும் ஓர் அடையாளம் ஆகும். உள்ள உறுதியும், உடல் வலிமையும் கொண்டவன் காலேப். உண்மைக்கு துணையாகவும், நேர்மைக்கு தூணாகவும் நிற்பவன் காலேப். முன்னர் எகிப்தில் அடிமைகளில் ஒருவனாக முதுகு வளைய வேலை செய்தவன். ஆனால் நீதிக்கு நிமிர்ந்து நிற்கும் நெஞ்சம் பெற்றவன். எண்ணாகமம் 13-வது அதிகாரத்தில் அவனுடைய வயது நாற்பது வயது ஆகும். அவனுடன் சென்றவர்கள் விவரித்து கூறிய மூன்று விபரங்களினால் காலேப் சற்றும் அதிர்ச்சி அடையவில்லை. முதிர்ச்சி உள்ள ஓர் மூத்த தலைவனாக இன்னும் நாற்பது வருடங்கள் கழித்து கானான் என்ற பாலும் தேனும் ஓடும் மங்களமான இடத்தில் கால் எடுத்து வைக்க இருக்கின்றான். பேசிக்கொண்டே இருக்க காலம் இல்லை. சென்று சுதந்தரிக்கவே இது காலம் என்று காலேப் கூற ஆரம்பித்தான்.

அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தினான் என்று 30-வது வசனம் கூறுகின்றது. மற்றவர்களின் அறிக்கை கேட்டு மன மடிவாகும் நிலைக்கு ஜனங்கள் வந்து கொண்டு இருப்பதை காலேப் கண்டு விட்டான். மன மடிவு கொள்ள அவசியமே இல்லை. நாம் உடனே போய் அதை சுதந்தரித்து கொள்ளலாம், அது அரிதானது அல்ல. மிக மிக எளிதானது என்று காலேப் பேசினான்.

அவனோடே கூட போய் வந்த மனிதரோ: நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது. அவர்கள் நம்மை பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள். நாங்கள் போய் சுற்றி பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளை பட்சிக்கிற தேசம். நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள். அங்கே இராட்சத பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம். நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டு கிளிகளை போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றி பார்த்து வந்த தேசத்தை குறித்து துர்ச்செய்தி பரம்ப செய்தார்கள். (எண். 13:31-33)

காலேப் பேசி கொண்டு இருக்கும் பொழுது சென்று திரும்பிய மற்றவர்கள் குறுக்காக பேசியதை 32,33 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கின்றோம். ''நாங்கள் போய் சுற்றி பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளை பட்சிக்கிற தேசம். நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள் என்றார்கள். சற்று முன்னர் பாலும் தேனும் ஓடுகிற தேசம் என்றவர்கள் இப்பொழுது அந்த தேசம் தன் குடிகளை பட்சிக்கும் தேசம்'' என்று கூறுகின்றார்கள்.



ஜனங்களை அமர்த்தும் காலேப்

கர்த்தர் அவர்கள் பட்சத்தில் இருக்கும் வரை கானான் அவர்களை பட்சிப்பது இல்லை. வாக்குத்தத்த பூமி பட்சிக்கும் பூமி அல்ல. ஆசீர்வதிக்கும் பூமியே ஆகும். எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் 36-வது அதிகாரம் 9 முதல் 11-வசனங்கள், ''இதோ நான் உங்கள் பட்சத்தில் இருந்து உங்களை கண்ணோக்குவேன். நீங்கள் பண்படுத்தப்பட்டு விதைக்கப்படுவீர்கள். நான் உங்கள் மேல் இஸ்ரவேல் வம்சமாகிய மனுஷர் யாவரையும் வர்த்திக்க பண்ணுவேன். பட்டணங்கள் குடியேற்றப்படும். அவாந்திரமான ஸ்தலங்கள் கட்டப்படும். உங்கள் மேல் மனுஷரையும், மிருக ஜீவன்களையும் பெருகி பலுகும்படி வர்த்திக்க பண்ணுவேன். பூர்வ நாட்களில் நீங்கள் இருந்த நிலைமையில் நான் உங்களை ஸ்தாபித்து உங்கள் முந்தின சீரை பார்க்கிலும் உங்களுக்கு நற்சீர் உண்டாக செய்வேன். அதினால் நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள்,'' என்று கூறுகின்றன.

ஆனால் அவர்களுடைய கண்களுக்கு கானான் பட்சிக்கும் தேசமாக தெரிந்தது. தொடர்ந்து எசேக்கியேல் புத்தகம் 36-வது அதிகாரம் 13,14 வசனங்களையும் பார்ப்போம். ''கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால் ஜனங்கள் உன்னை பார்த்து நீ மனுஷரை பட்சிக்கிற தேசம் என்றும், நீ உன் ஜனங்களை சாக கொடுக்கிற தேசம் என்றும்

சொல்லுகிறபடியினால் நீ இனிமேல் மனுஷரை பட்சிப்பதும் இல்லை. இனிமேல் உன் ஜனங்களை சாக கொடுப்பதும் இல்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.''

சாபங்களை லாபமாக மாற்றும் ஆண்டவர் முன் செல்லுகின்றார். கஷ்டங்களை ஆசீர்வாதமாக ஆக்கி கொடுக்கும் ஆண்டவர் எடுத்து நடத்துகின்றார். அவர்களுக்கோ ஆண்டவர் தரும் பூமி பட்சிக்கும் பூமியாக தென்படுகின்றது. பூமி பட்சிக்கும் பூமியாக எப்பொழுது மாறும் என்ற விபரம் ஏற்கெனவே அவர்களுக்கு கர்த்தரால் கூறப்பட்டது. எப்பொழுது அவர்கள் கர்த்தரை தவிர்த்து தங்கள் மனம் போல் வாழ போகின்றார்களோ அப்பொழுது பூமி பட்சிக்கும் பூமியாக மாறும் என்பது லேவியராகம புத்தகம் 26:38-வது வசனத்தில் கூறப்பட்டது. உங்கள் சத்துருக்களின் தேசம் உங்களை பட்சிக்கும் என்று அந்த வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. பட்சிக்கும் அக்கினியாகிய கர்த்தரை அவர்கள் நடுவாக கொண்டு வாழும் வரை அவர்களை பஞ்சமும் பட்சிப்பது இல்லை. பட்டயமும் பட்சிப்பது இல்லை. அவர்களோ அனைத்தையும் மிகைப்படுத்தி பேசிக்கொண்டு இருக்கின்றார்கள். பொய்யான அறிக்கையை சமர்பித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

33-வது வசனத்தில் அங்கே இராட்சத பிறவியான ஏனாக்கின் குமாரரை கண்டோம். அவர்கள் பார்வைக்கு நாங்கள் வெட்டு கிளிகளை போல இருந்தோம் என்று கூறினார்கள். ஏனாக்கின் குமாரர் என்பதின் பொருள் நீண்ட கழுத்து உடையவர்கள் என்பது ஆகும். இரு மடங்கு வளர்ந்தவர்கள் என்பது ஆகும். அவர்களின் பார்வைக்கு சென்றவர்கள் அனைவரும் வெட்டு கிளிகளை போன்று இருந்தோம் என்று கூறுகின்றார்கள். மறுபடியும், மறுபடியும் மன மடிவு உண்டாக்கும் செய்திகளையே அறிவித்து கொண்டு இருக்கின்றார்கள். கர்த்தர் சர்வ வல்லமை உள்ளவர் என்றும், கர்த்தரின் பார்வையில் மனிதர்கள் வெட்டுக்கிளிகள் போன்று காணப்படுகிறார்கள் என்றும் ஏசாயா தீர்க்கதரிசி 40-வது அதிகாரம் 22-வது வசனத்தில் கூறி இருக்கின்றார். ''கர்த்தர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறார். அதின் குடிகள் வெட்டுக்கிளிகளை போல இருக்கிறார்கள்''.



ஆதிகால இராட்சதர்களின் அளவுகள்

ஆனால் சென்று திரும்பிய மனிதருக்கு இரு மடங்கு உயரமாக தெரிகின்றவர்களை பார்க்க பயமாக தெரிக்கின்றது. ஏனாக்கின் குமாரர்கள் முன்பு அவர்கள் வெட்டுக்கிளிகள் போல இருந்தோம் என்று கூறுகின்றார்கள். ஏனாக்கின் குமாரர் இராட்சத பிறவிகள் என்று அவர்கள் கூறினார்கள். ஆதியாகமம் 6-வது அதிகாரம் 4-வது வசனத்தில் அந்நாட்களில் இராட்சதர் பூமியில் இருந்தார்கள் என்று பார்க்கின்றோம். இராட்சதர் என்று வரும் வார்த்தையின்

சரியான பொருள் கீழே தள்ளப்பட்டவர்கள் என்பது ஆகும். கீழே விழுந்தவர்கள் என்பது ஆகும். மனிதர் பார்வையில் இரட்டிப்பான உயரத்தில் அவர்கள் தெரிந்தாலும் கர்த்தரின் பார்வையில் கீழே தள்ளப்பட்டவர்கள் என்பதே ஆகும். சென்று திரும்பியவர்களுக்கு கர்த்தர் உயரமும், உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்று இருப்பது தெரியவில்லை.

இப்படி இஸ்ரவேல் புத்திரக்குள்ளே தாங்கள் சுற்றி பார்த்து வந்த தேசத்தை குறித்து துர்செய்தி பரம்ப செய்தார்கள். நற்செய்தி பரப்புவதற்கு பதிலாக துர்செய்தி பரப்பினார்கள். கர்த்தாதி கர்த்தர் எத்தனை அற்புதமாக இதுவரை வழி நடத்தி வந்தார் என்பதை அத்தனை சீக்கிரமாக மறந்து விட்டார்கள். ''கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர். யாருக்கு பயப்படுவேன். கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் யாருக்கு அஞ்சுவேன்'' என்று 27-வது சங்கீதம் முதல் வசனம் கூறுகின்றது. ஆனால் சென்று திரும்பியவர்களோ நடுங்கி நிற்கின்றார்கள். ''தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்'' என்று ரோமர் நிரூபம் 8-வது அதிகாரம் 31-வது வசனம் கூறுகின்றது.

பார்த்து வந்தவர்களோ தேசம் பட்சித்து போடும் என்று பதறி நிற்கின்றார்கள். அவர்கள் இதுவரை செய்த பிரயாணத்தின் நோக்கம் பாதிக்கப்பட இருக்கின்றது. காலேப் கூறும் நல்ல செய்தி காலால் நடந்து செல்லுகின்றது. அனைவரும் கூறும் துர்செய்தியோ செட்டை அடித்து பறக்கின்றது. ஒரு சில நிமிடங்களில் முழு சபையும் அதனை அறிந்து விட்டது. இம்மட்டும் வழி நடத்திய கர்த்தரிடம் நம்பிக்கை கொண்டு முன் நடக்க எவரும் முன் வரவில்லை. உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாய் இரு. அவரே காரியத்தை வாய்க்க பண்ணுவார் என்று 37-வது சங்கீதம் 5-வது வசனம் கூறுகின்றது.

காலேப் தன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்தான். அவர்கள் கூறும் துர்செய்தி காலேபின் கவனத்தை ஈர்க்கவில்லை. மீட்கப்பட்ட ஜனங்கள் நடுவில் முன் வாங்குகிறவர்கள் யார்? பின் வாங்குகிறவர்கள் யார்? என்ற காட்சி துவங்கி விட்டது. முடிவு பரியந்தம் முன் செல்லுகின்றவர்கள் யார்? இடையிலே பிரயாணத்தை நிறுத்தி விட போகின்றவர்கள் யார் என்பது தெரியவர போகின்றது. காலேப் என்பாரின் கால்களை துர்செய்தி கட்ட முடியவில்லை. விசுவாச நெஞ்சங்களை வீணான வார்த்தைகள் பின் வாங்க செய்வதில்லை. ''துர்செய்தியை கேட்கிறதினால் பயப்படான். அவன் இருதயம் கர்த்தரை நம்பி திடனாய் இருக்கும்'' என்று 112-வது சங்கீதம் 7-வது வசனம் கூறுகின்றது. உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பி இருக்கிறபடியால் நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்து கொள்ளுவீர்.

பெலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல. என் ஆவியினால் ஆகும். தேவனால் எல்லாம் கூடும்.

அத்தியாயம் - 17

வாக்குதத்த பூமிக்கு அருகில் வந்தும் அவிசுவாசத்தினால் இழந்த ஆசீர்வாதம்

17.1 இஸ்ரவேல் ஜனங்களின் கூக்குரல்

வாக்குதத்தம் செய்யபட்ட பூமியின் வாயில்வரை வந்து விட்டார்கள். ஆனால் சந்தேகம் என்னும் பேய் அவர்கள் மனதை ஆட்கொள்ளுகிறது. தேசத்தை வேவுபார்த்து வந்தவர்களில் இருவர் நற்செய்தியைதான் கூறினார்கள். நிலத்தின் செழிப்பையும், வளமையையும் பறைசாற்றினார்கள். ஆனால் மற்ற பத்து பேரோ அங்கு வாழும் மக்களின் உருவத்தையும், அவர்கள் பட்டணங்களின் பிரம்மாண்டத்தையும் கண்டு பதட்டம் அடைந்தார்கள். அந்த பதட்டத்தை ஜனங்கள் இருதயங்களிலும் போட்டு அவர்கள் கலங்கி போக செய்தார்கள். வாக்குதத்த பூமி, வாக்குதத்த பூமியாக இப்பொழுது அவர்களுக்கு தெரியவில்லை.

காற்றை கவனிக்கிறவன் விதைக்க மாட்டான். மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான் என்று பிரசங்கியின் புத்தகம் 11-வது அதிகாரம் 4-வது வசனம் கூறுகின்றது. வாக்குத்தத்தம் தந்த கர்த்தரின் மேல் கண் பதிக்காமல் சோர்புக்கு வழி நடத்தும் மனிதர்கள் மீது கவனம் திருப்பினார்கள். கர்த்தராகிய தேவனே இந்த மனிதர் கூறும் செய்தி உண்மையானதா? அல்லது பொய்யானதா என்று தேவ சித்தம் அறிவதற்கு முற்படாமல் பழைய இடத்திற்கு திரும்பி புறப்படுவோம் என்ற முடிவிற்குள் வந்தார்கள். நிறைவும் பலமும் உள்ள அவர்களின் மூதாதையர்களின் பூமிக்கு வாசல் திறந்து இருக்கின்றது. ஆனால் வாஞ்சையோ வரவில்லை.

அவர்கள் மூதாதையர்கள் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட எபிரோன் பட்டணம் எட்டிய தூரத்தில்தான் உள்ளது. 20 மைல்கள் நடந்தால் அதை எட்டி பிடித்து விடலாம். ஆனால் அங்கு இருக்ககூடிய ராட்சதர்களை பார்த்து பயந்தார்கள்.

அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டு புலம்பினார்கள். ஜனங்கள் அன்று இரா முழுதும் அழுது கொண்டு இருந்தார்கள். (எண். 14:1)

எப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டு புலம்பினார்கள்? கானான் தேசத்து மக்கள் ராட்சதர்கள். நம்மால் அவர்களை வெல்ல முடியாது என்று சக சபையார் சொன்னதும் நம்பினார்கள். கூக்குரலிட்டார்கள். ஏன் ஜனங்கள் அன்று இரா முழுவதும் அழுது கொண்டு இருந்தார்கள்? கர்த்தரை நம்பும் நம்பிக்கை அவர்களுக்கு இல்லாததால் அழுது கொண்டு இருந்தார்கள். கானானின் எல்கை வரை கொண்டு வந்து சேர்த்த கர்த்தருக்கு இரவு முழுவதும் கண் விழித்து ஸ்தோத்திரம் சொல்லுவதற்கு பதிலாக இரவு முழுவதும் கண்ணீர் விட்டு அழ தொடங்கினார்கள். தற்பரிதாபம் அவர்களை தம்மை படைத்தவர் மீது நம்பிக்கை வைக்க முடியாது தடுத்தது. ''கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயில் இருக்கும்,'' என்று 34-வது சங்கீதம் முதல் வசனம் கூறுவது போன்று கர்த்தரை நம்பிக்கையுடன் துதிக்க அவர்கள் துவங்கவில்லை. இதுவரை எத்தனையோ அற்புதங்கள் கண்டும் இன்னும் அற்ப விசுவாசிகளாகவே காண படுகின்றார்கள். அழுகையுடன் அவர்கள் நிற்கவில்லை. ஆத்திரமும் பொங்கி வந்தது.

இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்து தேசத்திலே செத்து போனோமானால் நலமாயிருக்கும். இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம். (எண். 14:2)

எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள் என்று 2-வது வசனத்தின் முன் பகுதியில் படிக்கின்றோம். குடிக்க தண்ணீர் இல்லை என்று யாத்திராகமம் 15:24-வது வசனத்தில் முறுமுறுத்தார்கள். பட்டினி போட்டு கொல்லுகின்றாய் என்று யாத்திராகமம் 16-வது அதிகாரம் 2,3 வசனங்களில் முறுமுறுத்தார்கள். இப்பொழுது பட்டயம் பட்சிக்க போகின்றது என்று எண்ணாகமம் 14:2-வது வசனத்தில் முறுமுறுக்கின்றார்கள். முறுமுறுக்கும் சுபாவம் உள்ளவர்களுக்கு நன்மையானவைகள் தென்படுவதில்லை. குறைவும் குற்றங்களுமே கண்ணில் படுகின்றன. எல்லாவற்றையும் முறுமுறுப்பு இல்லாமலும் தர்க்கிப்பு இல்லாமலும் செய்யுங்கள் என்று பிலிப்பியர் 2:16-வது வசனம் கூறுகின்றது. அவர்களோ எதையும் முறுமுறுத்தே பெற்று கொண்டார்கள். வாதாடி வாதாடியே தங்கள் வாழ்க்கையை நடத்தினார்கள். எகிப்தில் இருக்கும் பொழுது கொத்தடிமைகளாக இருக்கிறோமே என்று கூக்குரல் இட்டார்கள். அங்கிருந்து வெளியேறி சுதந்திர பூமி நெருங்கும் பொழுது விட்ட இடத்திற்கே திரும்பி செல்லுவோம் என்று கூக்குரல் இடுகின்றார்கள். அவர்கள் மனநிலை மாறவில்லை. இவர்கள் முறுமுறுக்கிறவர்களும் முறையிடுகிறவர்களும் தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாய் இருக்கிறார்கள். இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளை பேசும் என்று யூதா நிரூபம் கூறுகின்றது. அதே போன்று மிக இறுமாப்பாக அனைவர் மீதும் சாடினார்கள். அனைத்தையும் கசந்தார்கள். முதலாவது மோசேயை கசந்தார்கள். இரண்டாவது தங்கள் மீது தாங்களே கோபித்து கொண்டார்கள். கர்த்தர் சொன்னார் என்று ஏன் புறப்பட்டு வந்தோம் என்று தங்களையே சபித்து கொண்டார்கள். எகிப்து தேசத்திலே செத்து போனோமானால் நலமாயிருக்கும். இந்த வனாந்திரத்திலே நாங்கள் செத்தாலும் நலமாக இருக்கும் என்று தங்களையே தாங்கள் நொந்து கொண்டார்கள். மூன்றாவது கர்த்தரை கசந்தார்கள்.

நாங்கள் பட்டயத்தால் மடியும் படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும், பிள்ளைகளும் கொள்ளையாகும் படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்கு கொண்டு வந்தது என்ன? எகிப்துக்கு திரும்பி போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ என்றார்கள். (எண். 14:3)

கர்த்தர் அவர்களுக்கு செய்து வரும் அனைத்து நன்மைகளுக்கும் அவர்கள் கர்த்தருக்கு திரும்பி கொடுத்த பரிசு கடும் சொற்களே ஆகும். அதனை தொடர்ந்து அவர்கள் ஐந்து முடிவுகள் எடுக்கின்றார்கள். இதனை 3,4 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கின்றோம். அவர்கள் எடுத்த முதலாவது முடிவு நாம் யாவரும் திரும்பி சென்று பார்வோனின் கால்களில் விழுவோம் என்பது ஆகும். இரண்டாவது முடிவு பின்வாங்கி போவதே நமக்கு உத்தமமானது. கர்த்தரை பின்பற்றி கண்டது என்ன என்பது ஆகும். மூன்றாவது முடிவு இந்த மோசேயின் தலைமை நமக்கு இனிமேல் வேண்டாம் என்பதாகும். கர்த்தர் சொல்லியபடி செய்யுங்கள் என்ற தலைமை நமக்கு அவசியம் இல்லை என்பது ஆகும்.

பின்பு அவர்கள்: நாம் ஒரு தலைவனை ஏற்படுத்தி கொண்டு எகிப்துக்கு திரும்பி போவோம் வாருங்கள் என்று ஒருவரோடு ஒருவர் சொல்லி கொண்டார்கள். (எண். 14:4)

நான்காவது முடிவு நமக்கு ஓர் புதிய தலைவனை பொறுக்கி எடுப்போம். நாம் சொல்லுகிறபடி செய்யும் தலைவனே நமக்கு இனிமேல் அவசியம் என்பது ஆகும். ஐந்தாவது முடிவு புதிய தலைவனுக்கு நாம் விடுக்கும் ஆணை எகிப்திற்கு எங்களை எடுத்து நடத்து என்பதே ஆகும். அவர்களுடைய இதய கடினம் மோசேயை நிராகரித்தது. அவர்களின் மன மேட்டிமை கர்த்தரை துச்சமாக நினைத்தது. நாம் ஒரு தலைவனை ஏற்படுத்தி கொண்டு திரும்பி செல்லுவோம் வாருங்கள் என்று ஒருவரோடு ஒருவர் சொல்லி கொண்டார்கள் என்பதை நான்காவது வசனத்தில் இருந்த அறிந்து கொள்ளுகின்றோம்.

நெகேமியா என்பவர் தான் எழுதிய நூலில் அவர்கள் ஓர் தலைவனை பின்னர் ஏற்படுத்தி கொண்டார்கள் என்று எழுதுகின்றார். நெகேமியாவின் புத்தகம் 9-வது அதிகாரம் 15,16,17-வது வசனங்கள். ''அவர்கள் பசிக்கு வானத்திலிருந்து அப்பம் கொடுத்து, அவர்கள் தாகத்துக்கு கன்மலையில் இருந்து தண்ணீர் புறப்பட பண்ணி, நீர் அவர்களுக்கு கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை சுதந்தரித்து கொள்ள பிரவேசியுங்கள் என்று அவர்களுக்கு சொன்னீர். எங்கள் பிதாக்களாகிய அவர்களோ அகங்காரமாய் நடந்து தங்கள் கழுத்தை கடினப்படுத்தி, உம்முடைய கற்பனைகளுக்கு செவி கொடாதே போனார்கள். அவர்கள் செவி கொடுக்க மனதில்லாமலும் அவர்களிடத்திலே நீர் செய்த உம்முடைய அற்புதங்களை நினையாமலும் போய், தங்கள் கழுத்தை கடினப்படுத்தி, தங்கள் அடிமைத் தனத்துக்கு திரும்பும்படிக்கு அவர்கள் கலகம் பண்ணி ஒரு தலைவனை ஏற்படுத்தினார்கள்'' என்று அந்த வசனங்களில் நாம் படிக்கின்றோம்.

முன்னிட்டு செல்ல வேண்டியவர்கள் பின்னிட்டு செல்லுகின்றார்கள். பின்னிட்டு பார்க்கின்றவர்களின் முடிவு உப்பு தூண் ஆவதே ஆகும். எபிரெயர் 10-வது அதிகாரம் 38,39 ஆகிய வசனங்களை பார்ப்போம். ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். பின்வாங்கி போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். நாமோ கெட்டு போக பின்வாங்குகிறவர்களாய் இராமல் ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாய் இருக்கிறோம்'' என்று வசனங்கள் கூறுகின்றன.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்ற அவர்களுடைய மூதாதையர் அவர்களைவிட அதிகமாக கஷ்டப்பட்டார்கள். ஆயினும் கர்த்தரை பின்பற்றுவதில் அவர்கள் பின்வாங்கவே இல்லை. இவர்களை போல அவர்களும் நினைத்து இருந்தால் நிச்சயமாக பின்வாங்கி சென்று இருக்க அவர்களுக்கும் வாய்ப்பு இருந்தது. எபிரெயர் நிரூபம் 11-வது அதிகாரம் 15-வது வசனம் 16-வது வசனத்தின் முன்பாகம் பார்ப்போம். ''தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைத்தார்களானால் அதற்கு திரும்பி போவதற்கு அவர்களுக்கு சமயம் கிடைத்திருக்குமே, அதை அல்ல, அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள்.'' மனிதர் கர்த்தரை விட்டு விடுவதால் கர்த்தர் பாதிக்கப்பட போவதில்லை. பின் வாங்கி போகின்றவர்களே வாதிக்க படுவார்கள். கஷ்டங்கள் இல்லாத மேன்மைகள் இல்லை. கண்ணீர் காணாத உயர்வுகளும் இல்லை. அலைகள் மீது கவனம் பதிக்கின்றவர்கள் அடுத்த கரை போய் சேருவதும் இல்லை. பின்வாங்கி சென்று விடுவதே உத்தமம் என்ற முடிவிற்கு ஜனங்கள் வந்து விட்டார்கள். இனிமேல் ஜனங்களிடம் பேசி பயனே இல்லை என்று அறிந்த மோசேயும் ஆரோனும் தரையில் கீழே விழுந்தார்கள்.

17.2 காலேபும் யோசுவாவும் ஜனங்களுக்கு கூறிய 7 அறிவுரைகள்

அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லா கூட்டத்தாருக்கு முன்பாகவும் முகம் குப்புற விழுந்தார்கள். தேசத்தை சுற்றி பார்த்தவர்களில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், தங்கள் வஸ்திரங்களை கிழித்து கொண்டு, இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையையும் நோக்கி: (எண். 14:5-6)

என்ன செய்வது என்று தெரியவில்லை. அவர்கள் இதயம் விம்மி வெடித்தது. 6-வது வசனத்தில் வீரமும் விவேகமும் உள்ள காலேப் என்பவருடன் யோசுவாவும் சேர்ந்து கொள்ளுவதை நாம் பார்க்கின்றோம். யோசுவாவும் காலேபும் தங்கள் வஸ்திரங்களை கிழித்து கொண்டார்கள். வஸ்திரங்களை கிழிப்பது கட்டுக்கு அடங்காத கவலையை தெரியப்படுத்துவது ஆகும். ஜனங்களின் முதிர்ச்சி அற்ற முடிவுகளை அவர்கள் கண்டு கவலை படுகின்றார்கள். கண் எட்டும் தூரத்தில் இருக்கும் சுதந்திர பூமிக்கு அவர்கள் முன் எட்டு எடுத்து வைக்காமல் முதுகை காட்டுகின்றார்களே என்று கவலை பட்டார்கள். அளப்பற்கரிய ஆசீர்வாதத்தை அலட்சியம் செய்கின்றார்களே என்று கவலை பட்டார்கள். ''அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார். வீரனுடைய கால்களில் பிரியப்படார். தமக்கு பயந்து தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.''

நாங்கள் போய் சுற்றி பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்த தேசத்திலே நம்மை கொண்டு போய், பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை நமக்கு கொடுப்பார். கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள்; அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள். அவர்களை காத்த நிழல் அவர்களை விட்டு விலகி போயிற்று கர்த்தர் நம்மோடே இருக்கிறார், அவர்களுக்கு பயப்பட வேண்டியதில்லை என்றார்கள். (எண். 14:7-9)

7,8,9 ஆகிய 3 வசனங்களில் ஜனங்களுக்கு 7 அறிவுரைகளை அவர்கள் இருவரும் எடுத்து கூறினார்கள். முதலாவது அறிவுரை அடுத்த 10 பேரும் சொல்லுகிறபடி அத்தனை கொடூரமான பூமி அல்ல நாம் சுதந்தரிக்க போகும் பூமி என்று கூறினார்கள். அது ஓர் ஆசீர்வாதமான பூமி. மகா நல்ல தேசம் என்று கூறினார்கள். 2-வது அறிவுரை கர்த்தர் நம்மேல் பிரியம் கொண்டால் வழிகள் தானாக திறக்கும் என்றார்கள். வீராப்பு பேசுகிறவர்கள் மீது அல்ல தம்மை விசுவாசிக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியம் வைக்கிறார் என்பதை அறிந்து அப்படி கூறினார்கள். 147-வது சங்கீதம் 10,11 ஆகிய வசனங்கள், ''அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாய் இரார்; வீரனுடைய கால்களில் பிரியப்படார். தமக்கு பயந்து, தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாய் இருக்கிறார்'' என்று கூறுகின்றன. காலேப், யோசுவா ஆகிய இருவரும் ஜனங்களுக்கு கொடுத்த அறிவுரையில் 3-வது அறிவுரை நாம் போராடி அல்ல. நிறைவும் வளமும் உள்ள வருங்காலம் கர்த்தரின் கையினால் தானாக நாம் பெற்று கொள்ளுவோம் என்றார்கள். கர்த்தர் நமக்கு கொடுப்பார் என்றார்கள். 4-வது அறிவுரை நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பிற்கு பாத்திரராக நடந்து கொள்ளுங்கள். கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள் என்றார்கள். 5-வது அறிவுரை மனிதர்கள் நம்மைவிட இருமடங்கு உயர்ந்து இருந்தாலும் மனிதர்களுக்கு நாம் பயப்பட வேண்டிய

அவசியம் இல்லை என்றார்கள். 6-வது அவர்கள் கொடுத்த அறிவுரை கர்த்தரை நம்புகிறவர்களுக்கு எதிராக வருகிறவர்களுக்கு பராமரிப்பும் பாதுகாப்பும் வருவது இல்லை. அவர்களை காத்த நிழல் அவர்களை விட்டு விலகி போயிற்று என்றார்கள். உன்னதமானவரின் மறைவில் இருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான். அவனுக்கு எதிராக வருகிறவர்களுக்கு உதவி செய்வதற்கு நிழல்கள் கிடைப்பது இல்லை என்றார்கள். கர்த்தர் உன்னை காக்கிறவர்; கர்த்தர் உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாய் இருக்கிறார் என்பதை யோசுவாவும் காலேபும் ஜீவியத்தில் அறிந்து இருந்தார்கள். ஏசாயா 51-வது அதிகாரம் 16-வது வசனம், ''நான் வானத்தை நிலைப்படுத்தி, பூமியை அஸ்திபாரப்படுத்தி சீயோனை நோக்கி நீ என் ஜனம் என்று சொல்வதற்காக நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன், என்று கூறுகிறது.'' அவர்கள் கொடுத்த 7-வது அறிவுரை கர்த்தர் நம் பக்கமாகில் நமக்கு பயம் ஏன்? உபத்திரவம் உண்டாகில் மன்றாடி கெஞ்சுவோம் என்பதற்கு இசைய கர்த்தர் நம்மோடே இருக்கிறார். அவர்களுக்கு பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று 9-வது வசனத்தில் கூறி முடித்தார்கள்.

17.3 குறுக்கிடும் கர்த்தர்

அப்பொழுது அவர்கள் மேல் கல்லெறிய வேண்டும் என்று சபையார் எல்லாரும் சொன்னார்கள்; உடனே கர்த்தருடைய மகிமை ஆசரிப்பு கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாக காணப்பட்டது. (எண். 14:10)

பழைய வாழ்க்கைக்கு திரும்பி போவோம் வாருங்கள் என்றவர்களை கர்த்தரை நம்புவோம் வாருங்கள் என்று கூவி அழைத்தார்கள். அந்த அறிவுரைகளுக்கு அடிபணிந்து இருப்பார்களென்றால், அவர்கள் சுதந்திர பூமியின் அதிபதிகளாக மாறி இருப்பார்கள். ஆனால் அப்படி அவர்கள் செய்யவில்லை. அப்பொழுது அவர்கள் மேல் கல்லெறிய வேண்டும் என்று சபையார் எல்லாரும் சொன்னார்கள் என்று 10-வது வசனத்தின் முன் பகுதியில் நாம் படிக்கின்றோம். மோசே மீதும் ஆரோன் மீதும் யோசுவா, காலேப் மீதும் கல் எறிவதற்காக முடிவு செய்தார்கள். பழைய வாழ்விற்கு தடையாக இருக்கின்றவர்கள் பாரான் வனாந்திரத்தில் சாகட்டும். மற்றவர்கள் பழைய இடத்திற்கு திரும்பி செல்லட்டும் என்பதே அவர்கள் முடிவு. கர்த்தர் சொன்னபடி செய்யுங்கள் என்று கூறுகின்றவர்களை சாகடிப்போம். நாம் சொல்லுகின்றபடி செய்கின்றவர்களை வாழ வைப்போம் என்ற முடிவிற்கு அவர்கள் வந்துவிட்டார்கள்.

உடனே கர்த்தருடைய மகிமை ஆசரிப்பு கூடாரத்தில் எல்லாருக்கும் முன்பாக காணப்பட்டது. யோசுவாவையும் காலேபையும் காக்கும் கர்த்தருடைய நிழல் அவர்கள் கண்களுக்கு தெரிய வந்தது.

ஜனங்கள் ஸ்தம்பித்து போய் நின்றார்கள். அவர்களுடைய வாய் பேச முடியவில்லை. கல் எடுக்க கையை அசைக்க முடியவில்லை. கர்த்தரின் மகிமையில் அவர்கள் கண்கள் கூசி போயிற்று. 10 பேர் சொன்னது சரி 2 பேர் சொன்னது தப்பு என்றவர்களுக்கு அந்த இரண்டு பேர் சொன்னதே சரி என்று கர்த்தரின் மகிமை எழும்பி வந்தது. அதிகமான ஜனங்கள் சொல்லுவதினால் பொய் மெய்யாக மாறாது என்று கர்த்தரின் மகிமை எழும்பி வந்தது. கர்த்தருடைய சமூகத்தில் பெரும் பான்மை என்றும், சிறு பான்மை என்றும் பார்க்கப்படுவது இல்லை. உண்மை உள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கம் உள்ளவைகள் எவைகளோ, நீதி

உள்ளவைகள் எவைகளோ, கற்பு உள்ளவைகள் எவைகளோ, அன்பு உள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தி உள்ளவைகள் எவைகளோ, அவைகளே கர்த்தரின் சமூகத்தில் ஏற்கப்படும் என்று கர்த்தரின் மகிமை எழும்பி வந்தது. கர்த்தரின் நாமத்தை விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்று கூறுவதற்கு கர்த்தரின் மகிமை எழும்பி வந்தது.

வாக்குத்தத்த பூமியை நோக்கி வந்த மீட்கப்பட்ட ஜனங்கள் அவிசுவாசம் என்ற சேற்றினில் விழுந்து விட்டார்கள். இந்த விபரம் எண்ணாகம புத்தகம் 13-வது அதிகாரம் 14-வது அதிகாரம் ஆகிய 2 அதிகாரங்களிலும் மிகவும் தெளிவாக கொடுக்கப்பட்டு உள்ளது. தண்ணீரில் விழுந்து விட்டவன் நீந்தி விட்டால் வெளியே வந்து விடலாம். ஆனால் சேற்றில் விழுந்து விட்டவர் நீந்துவதற்கு முயற்சி செய்தால் வெளியே வருவதற்கு பதிலாக இன்னும் ஆழமாகவே உள்ளாக சென்று விடுவான். ஜனங்கள் அவிசுவாசம் என்ற சேற்றினில் விழுந்து விட்டார்கள். அநேக கேள்விகளை அவர்களே கேட்டு கொள்ளுகின்றார்கள். அதற்கு விடைகளையும் அவர்களே கொடுத்து கொள்ளுகின்றார்கள். அதுவே அவிசுவாசம் என்பது ஆகும்.

சுயமாக யோசிக்கின்றார்கள். சொந்த முடிவுகளை எடுத்து கொள்ளுகின்றார்கள். அதுவே கீழ்படியாமை என்பது ஆகும். ஏன் வந்தோம் என்று கேள்வி எழுப்பினார்கள். எல்லோரும் திரும்பி போவோம் என்று ஓர் முடிவும் செய்தார்கள். இதுவே தன்னிஷ்டம் என்பது ஆகும். எடுத்த முடிவுகளை கர்த்தரை நடுவாக வைத்து மறுபரிசீலனை செய்து விடுங்கள் என்று அவிசுவாச சேற்றினில் விழுந்து விடாமல், வெளியே நின்று கொண்டு இருக்கும் யோசுவா காலேப் என்ற இரண்டு விசுவாச வீரர்களும் அவர்களை நோக்கி வேண்டி கொண்டு இருக்கின்றார்கள். தங்கள் உடைகளை கிழித்து தங்கள் வருத்தங்களை தெரிவித்து கொண்டு இருக்கின்றார்கள். அவர்களது நல்வாழ்வை கருதி வேண்டுகின்றார்கள். ஆனால் ஜனங்களின் கால்களோ அவிசுவாசம் என்ற சேற்றில் இறுகி விட்டது. யோசுவா, காலேப் ஆகிய இரண்டு நபர்களின் நியாயமான வேண்டுகோள்கள் அநியாயமாக அவர்களுக்கு தோன்றியது. அன்பான அழைப்புகளும் அவசியமற்றதாக தெரிய வந்தது. வாழ வைக்கும் மன்றாட்டுகளை சாகடிக்க செய்ய, கல்லுகளை பொறுக்க தொடங்கினார்கள். அவர்களுடைய கோபம் அத்துமீற தொடங்கியது. உண்மையை தொலைத்து கட்டுவதற்கு அவர்கள் அனைவரும் வளைந்து நின்றார்கள்.

அப்பொழுது நானே வழியும் உண்மையும் உயிருமாக இருக்கிறேன் என்று கூறும் கர்த்தாதி கர்த்தர் எழுந்தருளினார். அப்பொழுது அவர்கள் மேல் கல் எறிய வேண்டும் என்று சபையார் எல்லாரும் சொன்னார்கள். உடனே கர்த்தருடைய மகிமை ஆசரிப்பு கூடாரத்தில் காணப்பட்டது என்று எண்ணாகம புத்தகம் 14-வது அதிகாரம் 10-வது வசனத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது. கர்த்தரின் மகிமை அனைவரின் கவனத்தையும் கவர்ந்து விட்டது.

திரும்பி செல்லுவோம் என்றவர்கள் எட்டு எடுத்து வைக்கவில்லை. கல் எடுக்க குனிந்தவர்கள் தலை குனிந்து நிற்கின்றார்கள். உண்மையை குழி தோண்டி புதைக்க புறப்பட்டவர்கள் பதைபதைத்து நிற்கின்றார்கள். எங்கும் அமைதி நிலவியது. யாரும் பேச துணியவில்லை. இரண்டே இரண்டு பேர் மட்டும் பேச ஆரம்பிக்கின்றார்கள். இதுவரை ரீங்காரம் இட்டு கொண்டிருந்த முறுமுறுப்பின் சத்தங்கள் அடங்கி ஒடுங்கியது. ஆசரிப்பு கூடாரத்தில் இரண்டு பேர் மட்டும் பேச்சு வார்த்தை நடத்துகின்றார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி: எதுவரைக்கும் இந்த ஜனங்கள் எனக்கு கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாது இருப்பார்கள்? (எண். 14:11)

இரண்டு கேள்விகளை மோசேயை நோக்கி கர்த்தர் கேட்டார். எது வரைக்கும் எனக்கு கோபம் உண்டாக்குவார்கள் என்பது முதல் கேள்வி. மனிதர் பாவங்கள் செய்யும் பொழுது கர்த்தர் கோபப்படுகின்றார். விசுவாசத்தினால் வராத அனைத்தும் பாவங்களே ஆகும். யாத்திராகமம் 7:3-வது வசனத்திலும் யாத்திராகமம் 10:1ம் வசனத்திலும் கூறி உள்ளது போன்று மிகுதியான அற்புதங்களையும் மிகுதியான அடையாளங்களையும் கர்த்தர் செய்ய அவர்கள் கண்கள் கண்டன. செங்கடலில் காலால் நடந்தார்கள். காலையில் எழும்பி மன்னாவை கையினால் பொறுக்கினார்கள். கன்மலையில் இருந்து புறப்பட்ட ஊற்று நீரை பருகி குடித்தார்கள். நான் காட்டின இத்தனை அடையாளங்களையும் கண்ணால் கண்டும் விசுவாச கண்கள் அவர்களுக்கு ஏன் திறக்கப்படவில்லை என்பதே கர்த்தர் கேட்ட இரண்டாவது கேள்வி. எது வரைக்கும் இப்படி நடந்து கொள்ளுவார்கள்? எதுவரைக்கும் எதுவரைக்கும் என்று இரண்டு முறை கர்த்தர் கூறுவதை 11-வது வசனத்தில் பார்க்கலாம். ''பேதைகளே நீங்கள் பேதைமையை விரும்புவதும், நிந்தனைக்காரரே நீங்கள் நிந்தனையில் பிரியப்படுவதும் மதியீனரே நீங்கள் ஞானத்தை வெறுப்பதும் எது வரைக்கும் இருக்கும்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் முதல் அதிகாரம் 22-வது வசனம் கூறுகின்றது.

காலத்தை பார்த்தால் காலேப் போன்று மாறியிருக்க வேண்டிய ஜனங்கள் எதுவரைக்கும் பேதையர்களாக இருப்பார்கள்? கர்த்தர் செய்த சாதனைகள் அனைத்தையும் கண்டும் எதுவரைக்கும் நிந்தனைக்காரர்களாக நீடிப்பார்கள்? துதிகளின் நடுவில் வாசம் செய்கின்றவரை தூஷிக்கத்தக்கதாக மதி மங்கிய வாழ்வில் எதுவரைக்கும் நிலைத்து நிற்பார்கள்? பொல்லாங்காக தோன்றுகிற எதையும் தவிர்த்து வாழவேண்டிய மீட்கப்பட்ட ஜனங்களின் இருதயம் எதுவரைக்கும் பொல்லாத சிந்தனைகளினால் பொங்கி வழிந்து கொண்டு இருக்கும்? ''எருசலேமே நீ இரட்சிக்கப்படும்படிக்கு உன் இருதயத்தை பொல்லாப்பு அற கழுவு. எந்த மட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்தில் தங்கும்'' என்று எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 4:14-வது வசனம் கூறுகின்றது. பிரயாணத்தின் ஆரம்பத்தில் இருந்தே அடிக்கடி தங்கள் பிடரியை கடினப்படுத்துவது அவர்கள் இயல்பாக மாறிவிட்டது.

யாத்திராகமம் 16:28-வது வசனத்தில் எந்த மட்டும் இப்படி இருக்கப் போகின்றீர்கள் என்ற கேள்வி தொடங்கியது. ''அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்த மட்டும் மனம் இல்லாது இருப்பீர்கள் என்று கேட்டார்.'' யாத்திராகமம் 16:28-வது வசனம் முதல் இன்னும் எதுவரைக்கும் இப்படி நடந்து கொள்ளுவீர்கள் என்று தொடர்ந்து கர்த்தர் அவர்களை பார்த்து கேட்டு கொண்டே வந்தார். ஆனால் கர்த்தர் அவ்விதம் கேட்பது எண்ணாகமம் 14-வது அதிகாரம் 11-வது வசனத்துடன் முடிவு கண்டது. அதன் பின்னர் அவர்களை பார்த்து கர்த்தர் எவ்வித கேள்வியும் கேட்க முற்படவில்லை. எதற்கும் வாதாடும் மனிதர்களுடன் கர்த்தருடைய ஆவி தொடர்ந்து போராடுவதும் இல்லை. கர்த்தரின் கோபத்திற்கு வழி கொடுக்க கர்த்தரின் ஆவி விலகி நிற்கின்றது. இனிமேல் அவர்கள் கர்த்தரின் வார்த்தையை கேட்க போவது இல்லை. கர்த்தரின் கோபத்தைதான் பார்க்க போகின்றார்கள். வழி

பிரயாணத்தில் என்றும் எதிலும் கர்த்தரை கோபப்படுத்த வேண்டாம் என்று ஏற்கெனவே அவர்களுக்கு ஓர் எச்சரிப்பு கொடுக்கப்பட்டது. பராமரித்து பாதுகாக்கும் கர்த்தர் கூறுவதை நம்பாமல் இருப்பதும் கர்த்தரின் வழி நடத்துதல்களை கேள்வி கேட்பதும் இறுதியில் தங்கள் சொந்த முடிவுகளை எடுப்பதுமே கர்த்தருக்கு கோப மூட்டுதல் என்பது ஆகும்.

இப்படி செய்துவிட வேண்டாம் என்று ஏற்கெனவே எச்சரிக்கப்பட்டு இருந்தார்கள். யாத்திராகம புத்தகம் 23:20, 21 ஆகிய இரண்டு வசனங்களிலே அந்த எச்சரிப்பு மிகவும் தெளிவாக கொடுக்கப்பட்டது. ''வழியில் உன்னை காக்கிறதற்கும் நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னை கொண்டு போய் சேர்க்கிறதற்கும் இதோ நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன். அவர் சமூகத்தில் எச்சரிக்கையாய் இருந்து அவர் வாக்குக்கு செவி கொடு. அவரை கோபப்படுத்தாதே. உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பது இல்லை. என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது'' என்று அந்த எச்சரிப்பின் வசனங்கள் எடுத்து கூறின. கர்த்தரின் கோபம் வெளிப்படும் பொழுது மனிதனின் மமதைகள் மனகோட்டைகளாக மாறி விடுகின்றன. ''நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும். மனுஷன் வீராப்பும் தணியும்'' என்று ஏசாயா 2:11-வது வசனத்திலும் அதே அதிகாரம் 17-வது வசனத்திலும் இருமுறை வருகின்றது. புறப்பட்ட நாள் முதல் பாளயம் தங்கின ஒவ்வொரு இடத்திலும் கர்த்தருக்கு விரோதமாகவே ஜனங்கள் பேசி கொண்டு வந்தார்கள். கர்த்தருக்கு கோபம் ஊட்டுவது அவர்கள் அன்றாட வாழ்வின் ஓர் பங்காக மாறிவிட்டது. தபேராவிலும், மாசாவிலும் கிப்ரோத் அத்தாவாவிலும் கர்த்தருக்கு கடுங்கோபம் உண்டாக்கினீர்கள் என்று உபாகம புத்தகம் 9:22-வது வசனம் கூறுகின்றது. அவர்கள் கர்த்தருக்கு கீழ்படிந்து நடந்த நாட்களை விட கர்த்தருக்கு துரோகம் செய்த நாட்களே மிகவும் அதிகம். கர்த்தரை மகிழ்ச்சி ஆக்கிய நாட்களைவிட கர்த்தரை விசனப்படுத்திய நாட்களே மிகவும் அதிகம். தாய் தகப்பன் கூறும் நல்ல ஆலோசனைகளை கேட்க மனமே இல்லாத பிள்ளைகளை போல, பெற்றோரை விசனப்படுத்துகிறோம் என்பதை அறிந்தும் இருதயத்தை கல்லாக்கி இஷ்டம் போல் திரியும் பிள்ளைகளை போல, மீட்கப்பட்ட ஜனங்கள் மீட்பரை திரும்ப திரும்ப விசனப்படுத்தினார்கள். பிள்ளைகள் பரம தகப்பனை ஒதுக்கி வைத்தார்கள். எத்தனை தரமோ வனாந்திரத்திலே அவருக்கு கோபம் மூட்டி அவாந்திர வெளியிலே அவரை விசனப்படுத்தினார்கள் என்று 78-வது சங்கீதம் 40-வது வசனம் கூறுகின்றது. பெற்றோரை விசனப்படுத்தி பிள்ளைகள் அனுபவிக்கும் இன்பங்கள் துன்பத்தில் முடியும். கர்த்தரை துன்புறுத்தி ஜனங்கள் எடுக்கும் முடிவுகள் அழிவில் முடியும். அற்புதத்திற்கு மேல் அற்புதம் செய்கின்றார். அவிசுவாசமோ நீங்கவில்லை. அடையாளத்திற்கு மேல் அடையாளம் காட்டினார். அவர்கள் விசுவாசமோ ஓங்கி வளரவில்லை. பாலும் தேனும் ஓடுகிற தேசம் பட்சிக்கும் தேசமாக தெரிந்தது. அனைவரும் விரும்பும் பூமி அலட்சியம் செய்யப்பட்டது. 106-வது சங்கீதம் 24-வது வசனம். ''அவருடைய வார்த்தையை விசுவாசியாமல் இச்சிக்கப்பட்ட தேசத்தை அசட்டை பண்ணினார்கள்.'' கர்த்தரை அசட்டை செய்த பின்னர் ஆசீர்வாதங்கள் என்பது வாழ்க்கையில் வரப்போவதும் இல்லை. சாமுவேல் தீர்க்கதரிசி எழுதிய முதலாவது நூல் 2:30-வது வசனத்தின் பின் பாகத்தை பார்ப்போம். ''என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனவீனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகின்றார்.''

இது வரைக்கும் ஜனங்களை நோக்கி எது வரைக்கும் நீங்கள் எனக்கு கோபம் மூட்டுவீர்கள் என்று கர்த்தர் கேட்டார். 12-வது வசனம் முதல் தமது கோபத்தில் கர்த்தர் ஆணையிடுகின்றார்.

நான் அவர்களை கொள்ளை நோயினால் வாதித்து, சுதந்தரத்துக்கு புறம்பாக்கி போட்டு, அவர்களை பார்க்கிலும் உன்னை பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன் என்றார். (எண். 14:12)

இரண்டு அறிவிப்புகளை கர்த்தர் கொடுக்கின்றார். கொள்ளை நோயினால் ஜனங்கள் வாதிக்கப்படுவார்கள். சுதந்திர பூமிக்கு புறம்பாக்கப்படுவார்கள் என்று ஜனங்களை பற்றிய ஒரு அறிவிப்பு கர்த்தர் கொடுக்கின்றார். மோசே ஆகிய உன்னை பெரிதும் பலத்ததுமான ஜாதியாக மாற்றுவேன் என்று இரண்டாவது அறிவிப்பை கர்த்தர் கொடுக்கின்றார். இதே போன்று யாத்திராகம புத்தகம் 32:10-வது வசனத்திலே முன்பு ஒரு முறை கர்த்தர் மோசேயை பார்த்து கூறினார். ''ஆகையால், என் கோபம் இவர்கள் மேல் மூளவும் நான் இவர்களை அழித்து போடவும் நீ என்னை விட்டுவிடு. உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார்.'' கர்த்தர் அப்படி செய்ய வேண்டாம் என்று அப்பொழுது மோசே மன்றாடினான். அதே இருதயமே மோசேயின் இருதயமாக இன்னும் இருக்கின்றது என்பதை எண்ணாகமம் 14:13-19-வது வசனம் வரை நாம் காணலாம். ஜனங்களுக்கு வாதை வரும். உனக்கு மேன்மை வரும் என்ற அறிவிப்பு மோசேயின் இதயத்தை குளிர செய்யவில்லை. ஆனால் நடுங்க செய்தது. அவனை ஆனந்த கண்ணீர் வடிக்க செய்யவில்லை. மோசேயை புழுவாக துடிக்க செய்தது. தனக்காக வாழ்ந்த தலைவன் மோசே அல்ல. தன் ஜனங்களுக்காக வாழ்ந்த தலைவன் மோசே. ஜனங்கள் எத்தனை தவறு செய்தாலும் அவர்களை எப்படியாவது மன்னித்து விடும், அவர்கள் எப்படியாவது வாழட்டும் என்பதே மோசேயின் இதய வாஞ்சை. மோசேயை ஜனங்கள் ஓர் முள் போன்று குத்தி கொண்டே வருகின்றார்கள். தேள் போன்று கொட்டி கொண்டே வருகின்றார்கள். அவர்கள் என்று தொலைந்து போவார்கள் என்று ஒரு நிமிடம் கூட மோசே நினைத்தது இல்லை. ஜனங்கள் அழிய தானும் தன் குடும்பமும் செழிக்க மோசே விரும்பியதும் இல்லை. ஜனங்கள் அனைவரும் மரிக்க, மோசேயும் அவன் குடும்பமும் தழைக்க இரண்டாவது முறையாக ஓர் வாய்ப்பு மோசேயின் வாசலை தட்டுகின்றது. ஆனால் மோசே ஓர் சந்தர்ப்ப வாதி அல்ல. அவன் செய்த ஊழியம் அவன் குடும்பத்தை நடுவாக கொண்ட ஊழியம் அல்ல. மக்களை நடுவாக கொண்ட பணியாக அமைந்து விட்டது. ஜனங்கள் வாழாமல் தான் வாழ்ந்து பயன் என்ன என்பதே அவன் முடிவு. ஜனங்கள் கொடுத்த எத்தனையோ உபத்திரவங்களை பொறுமையுடன் சகித்து வாக்குத்தத்த பூமியின் வாசல் அருகே அவர்களை மோசே கொண்டு வந்து விட்டான்.

மோசே கர்த்தரை நோக்கி: எகிப்தியர் இதை கேட்பார்கள், அவர்கள் நடுவிலிருந்து உம்முடைய வல்லமையினாலே இந்த ஜனங்களை கொண்டு வந்தீரே. (எண். 14:13)

ஜனங்களின் அன்பும் ஆதரவும் இருக்கும் என்றால் இன்னும் ஒரு சில நாட்களில் பயணம் இனிது முடிய இருக்கின்றது. கர்த்தாவே என்னை உயர்த்த வேண்டாம். ஜனங்களை வதைக்க வேண்டாம் என்பதே அவன் கர்த்தரை நோக்கி இட்ட அபய குரல் ஆகும். 13-முதல் 19 வசனங்கள் வரை ஜனங்களின் சார்பில் தேவனோடு மோசே போராடுவதை நாம் பார்க்கின்றோம். அந்த வசனங்களில் மோசே 3 மன்றாட்டுகளை முறைப்படி ஏறெடுத்தான். கர்த்தாவே பார்வோன் பகடி செய்வதற்கு இடம் கொடுக்க வேண்டாம் என்பதே முதல் மன்றாட்டு ஆகும். 10 வாதைகளால் நம்மை வதைத்து தன் ஜனங்களை அழைத்து சென்றவர் ஒரே வாதையில் ஜனங்களை கொன்று போட்டார் என்று பார்வோன் சொல்லுவதற்கு நேரிடும் என்று ஜெபித்தான். உம்மை விசுவாசித்த ஜனங்கள் அவிசுவாசம் கொண்டு பாதை தவறும்

பொழுது வாதை அனுப்ப வேண்டாம். அப்படி அனுப்பி விட்டால் பிசாசு மகிழ்ச்சி அடைவான். சாத்தானை வெட்கப்படுத்த ஜனங்களை மன்னித்து விடும் என்பதே மோசேயின் முதல் மன்றாட்டு.

நாங்கள் நடந்து வருகையில் வழி எங்கும் எங்களை பார்த்து கொண்டிருந்த ஜனங்கள் கர்த்தர் மகா வல்லமை உள்ளவர் என்று கூறுகின்றார்கள். ஒரே நாளில் ஒரு மனிதனை கொல்லுவது போன்று அழித்து விட்டால் இதுவரை உம்மை துதித்தவர்கள் சலித்து போவார்கள் என்று மோசே அடுத்த மன்றாட்டை ஏறெடுக்கின்றான். கர்த்தரின் கீர்த்திக்கு அவ கீர்த்தி வர வேண்டாம் என்பதே மோசேயின் இரண்டாவது மன்றாட்டு. தப்பி போன ஆடுகளாகிய எங்கள் மீது சாந்தமும் தயவும் காண்பியும். அன்பும் இரக்கமும் அருளி செய்யும்.

கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய நீர் முகமுகமாய் தரிசனமாகிறதையும், உம்முடைய மேகம் இவர்கள் மேல் நிற்கிறதையும், பகலில் மேக தூணிலும், இரவில் அக்கினி தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதையும் கேட்டிருக்கிறார்கள்; இந்த தேசத்தின் குடிகளும் சொல்லுவார்கள். ஒரே மனிதனை கொல்லுகிறது போல இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால், அப்பொழுது உம்முடைய கீர்த்தியை கேட்டிருக்கும் புறஜாதியார்: கர்த்தர் அந்த ஜனங்களுக்கு கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களை கொண்டு போய் விட கூடாதே போனபடியினால், அவர்களை வனாந்தரத்திலே கொன்று போட்டார் என்பார்களே. (எண். 14:14-16)

மோசேயின் மன்றாட்டு தொடருகின்றது. எங்களை பார்த்த மக்கள் யாவரும் கர்த்தர் அவர் வாக்கு தத்தத்தை நிறைவேற்ற முடியாததினால் அவர்களை கொன்று போட்டார் என்று சொல்வார்களே என்றான்.

குற்றம் செய்தவர்களை குற்றம் அற்றவர்களாக விடாமல் பிதாக்கள் செய்த அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்று நான்கு தலைமுறை வரைக்கும் விசாரிக்கும் நீர் இரங்கியருளும். உமது திருவுள சித்தம் நாங்கள் வாழட்டும் என்று இருப்பதாக என்பதே மூன்றாவது மன்றாட்டு. 13-வது வசனத்தில் முதல் மன்றாட்டு காணப்படுகின்றது. உமது நாமம் பரிசுத்த குலைச்சல் அடைய வேண்டாம் என்பதே மோசேயின் முதல் மன்றாட்டு. உமது நாமம் பரிசுத்தப்படுவதாக என்பதே மோசேயின் முதல் விண்ணப்பம். 14,15,16 ஆகிய வசனங்களில் மோசேயின் இரண்டாவது மன்றாட்டு இடம் பெறுகின்றது. உமது இராஜ்யத்தின் பிரஜைகளை வனாந்திரத்தில் கொன்று விட்டால் பரிசுத்த சபையாரின் நிலை பரிகசிக்கப்படும் நிலையாக உலகில் மாறிவிடும். அது வேண்டாம் உமது ராஜ்யம் வருவதாக என்பதே மோசேயின் இரண்டாவது விண்ணப்பம்.

ஆகையால் கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர் என்றும், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும், குற்றமுள்ளவர்களை குற்றமற்றவர்களாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர் என்றும், நீர் சொல்லியிருக்கிறபடியே, என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக. உமது கிருபையினுடைய

மகத்துவத்தின்படியேயும், எகிப்தை விட்டது முதல் இந்நாள் வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்து வந்ததின்படியேயும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும் என்றான். (எண். 14:17-19)

17-வது வசனத்தில் மோசேயின் மூன்றாவது விண்ணப்பம் கொடுக்கப்பட்டு உள்ளது. உமது சித்தம் செய்யப்படுவதாக என்பதே அந்த விண்ணப்பம். அந்த உமது சித்தம் நாங்கள் சாவதற்கு அல்ல வாழ்வதற்காக அமையட்டும் என்பதே அந்த விண்ணப்பம். மூன்று விண்ணப்பங்களையும் மோசே ஜெபத்தில் உறுதியாய் தரித்து இருந்து கர்த்தரை நோக்கி கூறினான். கர்த்தரை நோக்கி கதறினான். அதன் பின்னர் மோசே கர்த்தரை துதிக்க ஆரம்பித்தான். என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக என்று 18-வது வசனம் கூறுகின்றது. 3 மன்றாட்டுகள் ஏறெடுத்தேன் கர்த்தாவே! எனது இதய வாஞ்சைகளை எடுத்து உரைத்தேன் கர்த்தாவே! ஆயினும் இறுதி முடிவை உமக்கே கொடுத்து விடுகிறேன் கர்த்தாவே! நீர் என் ஆண்டவர்; நீர் வல்லமை உள்ளவர்; உமது வல்லமை பெரிதாக விளங்குகின்றது என்றான்.

அவ்விதம் கூறிவிட்டு 19-வது வசனத்தில் தமது ஜெபத்தை முடிப்பதற்கு முன்னர் பணிவுடன் மோசே மன்னிப்பு கேட்டான். கர்த்தரை நோக்கி ஜனங்களின் சார்பிலே மோசே மன்னிப்பு கேட்டான். இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும் என்று 19-வது சங்கீதத்தின் பின் பாகம் கூறுகின்றது. நாங்கள் புறப்பட்ட நேரத்தில் இருந்து இந்த நிமிடம் வரை சொல்லாலும் செயலாலும் எத்தனையோ யுத்தங்கள் செய்தோம். மன்னித்து கொண்டே வந்தீர். இந்த முறையும் மன்னிக்க மாட்டீரா என்று தனது ஜெபத்தை மோசே முடித்தான். இரட்சிக்கப்பட்ட நாள் முதல் இந்த நாள் வரை எத்தனையோ ஏற்ற தாழ்வுகள் எங்களில் காணப்பட்டது. தயவு கூர்ந்து மன்னித்து கொள்ளும் என்று ஜெபத்தை முடித்தான். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலன் உள்ளதாய் இருக்கிறது என்று பரிசுத்த யாக்கோபின் நிரூபம் 5:16-வது வசனம் கூறுகின்றது.

கர்த்தாவே நீர் அக்கிரமங்களை கவனித்து இருப்பீரானால் யார் நிலை நிற்பான் ஆண்டவரே! உமக்கு பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு என்று 130-வது சங்கீதம் 3,4 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. 106-வது சங்கீதம் 23-வது வசனம். ''ஆகையால் அவர்களை நாசம் பண்ணுவேன் என்றார். அப்பொழுது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே அவர்களை அவர் அளிக்காதபடிக்கு அவருடைய உக்கிரத்தை ஆற்றும் பொருட்டு அவருக்கு முன்பாக திறப்பின் வாயிலே நின்றான்''. கர்த்தர் மோசேயின் ஜெபத்தை ஏற்று கொண்டார்.

17.4 மோசேயின் மன்றாடுதலுக்கு கர்த்தரின் பதில்

அப்பொழுது கர்த்தர்: உன் வார்த்தையின்படியே மன்னித்தேன். (எண். 14:20)

அப்பொழுது கர்த்தர் உன் வார்த்தையின்படியே மன்னித்தேன் என்றார். சங்கீதம் 78:37-39 வசனங்களை பார்ப்போம். ''அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலைவரப்படவில்லை. அவருடைய உடன்படிக்கையில் அவர்கள் உண்மையாய் இருக்கவில்லை. அவரோ அவர்களை அழிக்காமல் இரக்கம் உள்ளவராய் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்தார். அவர் தமது உக்கிரமம் முழுவதையும் எழுப்பாமல் அநேகந்தரம்

தமது கோபத்தை விலக்கி விட்டார்.'' ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 48:9-வது வசனம். ''என் நாமத்தினிமித்தம் என் கோபத்தை நிறுத்தி வைத்தேன். உன்னை சங்கரிக்காதபடிக்கு நான் என் புகழ்ச்சியினிமித்தம் உன் மேல் பொறுமையாய் இருப்பேன்.'' ஜனங்கள் தவறும் பொழுது கர்த்தர் கண்டிக்கின்றார். கண்டித்தும் கேட்கவில்லை என்றால் கர்த்தர் தண்டிக்கின்றார். ஆனால் கர்த்தர் தமது ஜனத்தை கைவிடவே இல்லை. மனுபுத்திரர்கள் சீர்கெட்டு போனாலும் கர்த்தாதி கர்த்தர் கருணை உள்ளம் உள்ளவராகவே இருந்து கொண்டு இருக்கின்றார். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 55:7-வது வசனம். ''துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு கர்த்தரிடத்தில் திரும்ப கடவன். அவர் அவன் மேல் மனதுருகுவார். நம்முடைய தேவனிடத்திற்கே திரும்ப கடவன். அவர் மன்னிக்கிறதற்கு தயை பெருத்து இருக்கிறார்.''

விசுவாசம் என்ற கப்பலை சேதப்படுத்திய ஜனங்களை முற்றிலுமாக புறக்கணித்து விடாமல் மன்னித்து விடுமாறு மோசே மன்றாடினான் என்று பார்த்தோம். கர்த்தர் மோசேயின் மன்றாட்டை கேட்டு கொண்டார். ஒருவரும் இல்லாமல் அனைவரையும் அழித்து விட்டு மோசேயை நடுவாக வைத்து ஓர் புதிய சந்ததி எழும்பட்டும் என்ற முடிவு இடம் பெறாமல் விசுவாசம் உள்ளவர்கள் அனைவரும் வாழட்டும் என்ற முடிவு கர்த்தரின் முடிவாக மாறியது. அவிசுவாசம் உள்ளவர்கள் விசுவாசம் உள்ளவர்கள் என்று இரண்டு பிரிவாக பிரித்து கர்த்தர் தீர்ப்பு வழங்க இருக்கின்றார்.

அன்று ஆபிரகாம் ஜெபித்தது போன்று துன்மார்க்கருடன் நீதிமான்களையும் சேர்த்து அழிக்காமல் பாவம் செய்த ஆத்துமா மட்டுமே சாகும் என்ற முடிவு கர்த்தரின் முடிவாக மாறி விட்டது. கானான் களி கூரும் சிலாக்கியம் விசுவாசத்தில் உறுதியாக இருந்தவர்க்கு கிடைக்க பெறுகின்றது. விசுவாசியாதவர்களோ நிறைவும் செழிப்பும் உள்ள இடத்தை கண்டு அடையவில்லை. வறட்சியும் வருத்தங்களும் உள்ள வனாந்திரமே அவர்களின் முடிவாக மாறிவிட்டது. மனிதர்களின் நடத்தைக்கு ஏற்ற தீர்ப்புகளை வாரி வழங்குவது தமக்கு உரியது என்பதை கர்த்தர் முதலாவதாக கூறிவிடுகின்றார்.

பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனை கொண்டு சொல்லுகிறேன். (எண். 14:21)

எத்தனையோ குற்றங்களும் கொடூரங்களும் பூமியில் நடந்தாலும் பரிசுத்தம் உண்மை, அன்பு, நீதி, நேர்மை என்ற பாதையில் நடந்து செல்லுகின்றவர்களுக்கு துணையாக நான் இருக்கின்றேன். ''அதன் மூலம் என் மகிமை மனுபுத்திரர் நடுவில் விளங்கும் என்று கர்த்தர் கூறுகின்றார். நான் கொல்லுகிறேன். நான் உயிர்ப்பிக்கிறேன். நான் காயப்படுத்துகிறேன். நான் சொஸ்தப்படுத்துகிறேன். என் கைகளுக்கு தப்புவிப்பார் இல்லை. நான் என் கரத்தை வானத்திற்கு நேராக உயர்த்தி நான் என்றென்றைக்கும் ஜீவித்து இருக்கிறவர் என்கிறேன் என்று உபாகம புத்தகம் 32-வது அதிகாரம் 39,40 ஆகிய வசனங்கள் எடுத்து கூறுகின்றன. பூமியில் இருந்து கர்த்தருடைய மகிமை விலக்கப்பட முடியாது என்பதே கர்த்தரின் வாக்கு. அவிசுவாசம் பெருகினாலும் கர்த்தரின் மகிமை குறுகி போவது இல்லை என்பதே கர்த்தரின் வாக்கு. ''சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்து இருக்கிறது போல் பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்து இருக்கும்'' என்று ஆபகூக் தீர்க்கதரிசியின் புத்தகம் 2-வது அதிகாரம் 14-வது வசனம் கூறுகின்றது. அன்பும் காக்கப்படும். நீதியும் நிலைநிறுத்தப்படும் என்பதே கர்த்தரின் மகிமை. மன்னிப்பும் வழங்கப்படும் நியாயமும் விசாரிக்கப்படும் என்பதே கர்த்தரின் மகிமை.

என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும், என் சத்தத்துக்கு செவி கொடாமல், இதனோடே பத்து முறை என்னை பரீட்சை பார்த்த மனிதரில் ஒருவரும், அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டு கொடுத்த தேசத்தை காணமாட்டார்கள்; எனக்கு கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதை காணமாட்டார்கள். (எண். 14:22-23)

முன்னதாக அவர்கள் வாழ்ந்து வந்த எகிப்திலும் வழிநடந்து வந்த வனாந்தரத்திலும் என் மகிமையை அவர்கள் கண்டார்கள். அன்பும் இரக்கமும் உள்ளவர் நீதியும் நியாயமும் செய்கிறவர் என்பதை ஜனங்கள் நன்கு அறிவார்கள். எகிப்தியர் எபிரேயர் என்று கர்த்தர் பார்ப்பதே இல்லை. விசுவாசிப்போர் விசுவாசிக்க தயங்குகின்றவர் என்றே கர்த்தர் பார்க்கிறார் என்பதை கர்த்தர் கோடிட்டு காட்டுகின்றார்.

அனைவரும் அடையாளங்களை கண்ணால் கண்டார்கள். ஆயினும் அனைவரும் உள்ளத்தில் என்னை நம்பவில்லை. எல்லாருடைய செவிகளிலும் என் சத்தம் தொனித்தது. ஆயினும் எல்லோரின் இதயங்களும் கனியவில்லை. கர்த்தரை விசுவாசித்தவர் யார்? கர்த்தரை விசுவாசிக்க மறுத்தவர் யார் என்ற கோடு வரையப்படுகின்றது.

விசுவாசியாதவர்களை உடனடியாக கர்த்தர் கடிந்து கொள்ளவும் இல்லை. அன்பு நிறைந்தவராக இருப்பதினால் ஒரு முறை இருமுறை என்று 10 முறை கர்த்தர் பொறுத்து விட்டார். ஆதியாகம புத்தகத்தில் லாபான் என்று ஒருவனை பார்க்கலாம். லாபான் தன்னை ஒரு முறை இரு முறை கொடுமைப்படுத்தும் பொழுது யாக்கோபு என்கின்றவன் அமைதியாகவே இருந்தான். ஆனால் லாபான் 10 முறை அவ்விதம் செய்த பொழுது கர்த்தர் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆதியாகம புத்தகம் 31:7-வது வசனம் உங்கள் தகப்பனோ என்னை வஞ்சித்து என் சம்பளத்தை 10 முறை மாற்றினான். ஆனாலும் அவன் எனக்கு தீங்கு செய்ய தேவன் அவனுக்கு இடம் கொடுக்கவில்லை என்று அந்த வசனம் கூறுகின்றது. தீமை என்பது ஓர் குறிப்பிட்ட அளவிற்கு மேலாக செல்லும் பொழுது தேவ நீதி என்பது தெரிய வருகின்றது. எத்தனை முறை பாவம் செய்கிறார்கள் எத்தனை முறை மன்னிப்பும் அருளப்படுகின்றது என்பது கர்த்தரால் தவறாமல் கணக்கிடப்படுகின்றது. இதனோடே என்னை 10 முறை பரீட்சை பார்த்த மனிதர்கள் என்று 22-வது வசனத்தில் படிக்கின்றோம்.

அவர்களின் ஒவ்வொரு பின் வாங்குதல்களும் கர்த்தரால் எண்ணப்பட்டது. 10 பின் வாங்குதல்களை கர்த்தர் சுட்டி காட்டுகின்றார். யாத்திராகமம் புத்தகம் 14-வது அதிகாரம் 10 முதல் 12 வசனங்களில் முதல் பின் வாங்குதல் கூறப்பட்டு உள்ளது. யாத்திராகமம் 15-வது அதிகாரம் 22 முதல் 24 வசனங்களில் இரண்டாவது பின் வாங்குதல் இடம் பெறுகின்றது. தொடர்ந்து யாத்திராகமம் 16-வது அதிகாரம் 1 முதல் 3 வசனங்களில் 3-வது பின்வாங்குதலும், 16-வது அதிகாரம் 9 முதல் 20 ஆகிய வசனங்களில் நான்காவது பின்வாங்குதல்களும், 16-வது அதிகாரம் 27 முதல் 30 வசனங்களில் அடுத்த பின் வாங்குதல்களும், 17-வது அதிகாரம் 1 முதல் 4 வசனங்கள் 32-வது அதிகாரம் 1 முதல் 35 வசனங்கள், எண்ணாகம புத்தகம் 11-வது அதிகாரம் 1 முதல் 3 வசனங்கள், 11-வது அதிகாரம் 4 முதல் 34 வசனங்கள், இறுதியாக எண்ணாகமம் 14-வது அதிகாரம் 3-வது வசனம் ஆகிய 10 இடங்களிலும் 10 முறை அவர்கள் தவறிய விவரங்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. 10 முறை இந்த 10 இடங்களிலும் அவர்கள் கர்த்தரை பரீட்சை பார்த்தார்கள். ஒவ்வொரு மனிதனின் பாவங்களும் பெலவீனங்களும் கர்த்தரால் குறித்து வைக்கப்பட்டு

இருக்கின்றது என்பதை நாம் அறிந்து கொள்ளுகின்றோம். சங்கீதம் 81:10,11,12 ஆகிய வசனங்கள், ''உன்னை எகிப்து தேசத்தில் இருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே; உன் வாயை விரிவாய் திற நான் அதை நிரப்புவேன்; என் ஜனமோ என் சத்தத்துக்கு செவி கொடுக்கவில்லை. இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை. ஆகையால் அவர்களை அவர்களின் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன். தங்கள் யோசனைகளின்படியே நடந்தார்கள்'' என்று கூறுகின்றன.

கர்த்தர் தமது அன்பு மனு புத்திரர்களால் துர்ப்பிரயோகம் செய்யப்படுவதற்கு இடம் கொடுப்பது இல்லை. அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டு கொடுத்த தேசத்தை காணமாட்டார்கள். எனக்கு கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதை காணமாட்டார்கள் என்று கர்த்தர் தீர்ப்பு வழங்கினார். ஒருவனும் கானான் காண்பது இல்லை. அனைவரும் அழிக்கப்படுவார்கள். மோசேயின் குடும்பம் மட்டும் தப்பி பிழைக்கும் என்று முதலாவது கர்த்தர் கூறினார். அவ்விதம் வேண்டாம். அனைவரும் தப்பி பிழைக்கட்டும் என்று மோசே மன்றாடினார். அனைவரும் தப்பி பிழைப்பதற்கு இனிமேல் வழியே இல்லை. ஆனால் என்னை விசுவாசித்தவர்கள் தப்பி பிழைக்கட்டும் என்று கர்த்தர் இறுதி தீர்ப்பு வழங்கி விட்டார். கண்டிப்பும் தண்டிப்பும் கலந்த தீர்ப்பு. ஆனால் அனைவரையும் கைவிடாத தீர்ப்பு. அன்பும் நீதியும் சந்தித்த தீர்ப்பு. முறைகேடான தீர்ப்பு என்று எவரும் முறையிட முடியாத தீர்ப்பு.

எபிரேயர் நிரூபம் 3-வது அதிகாரம் 18,19-வது வசனங்களில். ''பின்னும் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பது இல்லை என்று அவர் யாரை குறித்து ஆணையிட்டார்? கீழ்படியாதவர்களை குறித்து அல்லவா? ஆதலால் அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்க கூடாமல் போனார்கள்'' என்று பார்க்கிறோம். தொடர்ந்து எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 30:11-வது வசனத்தில் ''உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன்'' என்று கர்த்தர் சொல்லுகிறார். உன்னை சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலம் ஆக்குவேன். உன்னையோ நான் நிர்மூலம் ஆக்காமலும் முற்றிலும் தண்டியாமல் விடாமலும் மட்டாய் தண்டிப்பேன், என்று கூறுவதை பார்க்கிறோம். கர்த்தர் முற்றாய் தண்டிக்காமல் மட்டாய் தண்டித்தார். இப்பொழுது கர்த்தர் தம்மை உத்தமமாக விசுவாசித்தவர்களை நோக்கி பார்க்கின்றார். விசுவாசத்தில் உறுதியாய் நின்ற காலேப், யோசுவா என்பாருக்கு கர்த்தர் ஓர் நற்சான்றிதழ் வழங்குகின்றார்.

17.5 ஆசீர்வாதம் பெறுவோரும் தண்டனைக்கு உள்ளாவோரும்

என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாய் இருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னை பின்பற்றி வந்த படியினாலும், அவன் போய் வந்த தேசத்திலே அவனை சேரப்பண்ணுவேன். அவன் சந்ததியார் அதை சுதந்தரித்து கொள்ளுவார்கள். (எண். 14:24)

ஆபிரகாம் விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. காலேப் விசுவாசித்தான். அது அவனுக்கு ஜெய கிரீடம் தந்தது. காலேப் என்பாரை பற்றி கர்த்தர் 5 நல்ல சாட்சிகளை கூறுகின்றார். முதலாவதாக காலேப் என்று மிக அன்பாக பெயர் சொல்லி பேசுகின்றார். தேவன் தம்முடையவர்களை அறிவார். அவர்களின் பெயர் அவர்கள் தங்கி இருக்கும் இடத்தின் முகவரி அனைத்தும் கர்த்தருக்கு தெரியும். அவர்களுடைய பெயரை கர்த்தர் அனுதினமும் அன்பாக சொல்லி கொள்ளுகின்றார். இரண்டாவது என் தாசன் என்று

கர்த்தர் காலேபை பற்றி சாட்சி கூறுகின்றார். காலேப் என்னுடன் மிகவும் நெருங்கி பழகுகின்றவன். என்னை விட்டு பிரியாமல் வாழ்கின்றவன் என்று கர்த்தர் கூறுகின்றார். மூன்றாவதாக காலேப் வேறு ஆவி உடையவன் என்றார். மற்றவர்களிடம் முறுமுறுக்கும் ஆவி இருக்கிறது. காலேபிடம் எதற்கும் என்னை ஸ்தோத்தரிக்கும் ஆவி இருக்கிறது. மற்றவர்களிடம் அவிசுவாசத்தின் ஆவி இருக்கிறது. காலேபிடம் பூரண விசுவாசத்தின் ஆவி இருக்கிறது. மற்றவர் அச்சத்தின் ஆவியினால் ஆளப்பட்டார்கள். காலேப் பலமும் அன்பும் தெளிந்த புத்தியும் உள்ள ஆவியை பெற்று இருக்கின்றான்.

நான்காவதாக காலேப் கர்த்தர் உத்தமர் என்று கூறினான். கானானை கண்டடையும் கிருபையை கர்த்தர் காலேபிற்கு வழங்கினார். ''தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர். கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்'' என்று 84-வது சங்கீதம் 11-வது வசனம் கூறுகின்றது. உத்தமர் யார்? அபத்தமானவர் யார் என்பதை உலகத்தில் கர்த்தர் கண்டு பிடிக்கின்றார். நீதிமொழிகளின் புத்தகம் 10:9-வது வசனம். ''உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான். கோணலான வழிகளில் நடக்கிறவனோ கண்டுபிடிக்க படுவான்.''

கர்த்தர் காலேபிற்கு கொடுத்த 5-வது நற்சான்று காலேப் என்னை பின்பற்றுகிறவன் என்பது ஆகும். கர்த்தர் தன்னை பின்பற்றும்படி தரணியில் அனைவருக்கும் அன்பான அழைப்பு கொடுக்கின்றார். அவ்விதமான ஓர் அழைப்பிற்கு காலேப் செவி கொடுத்தான். கர்த்தரை முழு மனதுடன் பின்பற்றினான். பயம், வெட்கம் இல்லாத விசுவாசியாக கர்த்தரை பின்பற்றினான். வீரமும் விவேகமும் உள்ள விசுவாசியாக பின்பற்றினான். காலேபின் விசுவாசம் அவன் குடும்பத்தை இரட்சித்தது. காலேப் உயிருடன் இருக்கையிலேயே கானானை சுதந்தரித்து கொண்டார்கள். உபாகமம் 1:31-ல் கர்த்தர் கூறுவதை பார்ப்போம். ''ஒரு மனிதன் தன் பிள்ளையை சுமந்து கொண்டு போவது போல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிற வரைக்கும், நடந்து வந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை சுமந்து கொண்டு வந்ததை கண்டீர்களே. உங்கள் தேவனாகிய கர்த்தர் நீங்கள் பாளயம் இறங்கத்தக்க இடத்தை பார்க்கவும், நீங்கள் போக வேண்டிய வழியை உங்களுக்கு காட்டவும், இரவில் அக்கினியிலும் பகலில் மேகத்திலும் உங்களுக்கு முன் சென்றாரே. இப்படி இருந்தும், இந்த காரியத்தில் நீங்கள் அவரை விசுவாசியாமல் போனீர்கள். ஆகையால் கர்த்தர் உங்கள் வார்த்தைகளின் சத்தத்தை கேட்டு, கடும் கோபம் கொண்டு: உங்கள் பிதாக்களுக்கு கொடுப்பேன் என்று நான் ஆணை இட்ட அந்த நல்ல தேசத்தை இந்த பொல்லாத சந்ததியாராகிய மனிதரில் ஒருவரும் காண்பது இல்லை என்றும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேப் மாத்திரம் அதை காண்பான்: அவன் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினபடியினால் நான் அவன் மிதித்து வந்த தேசத்தை அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் கொடுப்பேன் என்றும் ஆணையிட்டார்.'' எல்லா சூழ்நிலைகள் நடுவிலும் கர்த்தர் மேல் உள்ள விசுவாசத்தை காத்து கொள்ளுகின்றவர்களுக்கு பெரும் பரிசு கொடுக்கப்படுகின்றது. பின் வாங்கும் நேரங்கள் வந்தாலும் பொறுமையினால் முன் வாங்கி செல்லுகின்றவர்களுக்கு கர்த்தரின் மகிமை காணப்படுகின்றது. பரிசுத்த பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாவது நிரூபம் 15:58-வது வசனத்தில் ''ஆகையால் எனக்கு பிரியமான சகோதரரே கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிபட்டவர்களாயும் அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக'' என்று பார்க்கிறோம்.

விசுவாசிக்கின்றவர்களுக்கு ஜெயமும் விசுவாசியாதவர்களுக்கு தோல்வியும் ஏற்படும் பிரயாணமாக வாழ்க்கை பிரயாணம் என்பது இருக்கின்றது என்பதை இந்த வசனங்கள் மூலம் அறிந்து கொள்ளுகின்றோம். கர்த்தர் கிருபையாக அளித்த வாக்குத்தத்த பூமிக்கு மிக அருகில் வந்தவர்கள் விசுவாசம் இழந்ததினால் கானான் இழந்தார்கள். விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. வனாந்திர வாழ்விலே கர்த்தர் மீது விசுவாசம் தளரும் பொழுது நாளைய தினங்கள் இருளாகவே தெரிகின்றது. மகிமையான எதிர்காலம் வெறுமை போன்று தெரிகின்றது. நாங்கள் பட்டயத்தால் மடிய, எங்கள் மனைவி பிள்ளைகள் கொள்ளையாகி போக கர்த்தர் செய்தது என்ன என்று ஜனங்கள் கேள்வி கேட்டார்கள். இப்பொழுதும் எகிப்திற்கு திரும்பி செல்லுவதே மிகவும் உத்தமம் என்று கூறினார்கள். நாம் நமக்கு ஒரு தலைவனை தெரிந்து எடுக்க பின்னிட்டு திரும்புவோம் என்ற முடிவிற்குள் அவர்கள் வந்தார்கள். அவர்களின் ஒவ்வொரு வார்த்தையும் கர்த்தரின் கவனத்திற்கு வந்தது. இப்பொழுது கர்த்தர் அவர்கள் விருப்பபடியே அவர்கள் செய்யட்டும் என்று எண்ணாகமம் 14-வது அதிகாரம் 25-வது வசனத்தில் கூறுகின்றார்.

அமலேக்கியரும் கானானியரும் பள்ளத்தாக்கிலே குடியிருக்கிறபடியினால், நாளைக்கு நீங்கள் திரும்பி சிவந்த சமுத்திரத்துக்கு போகிற வழியாய் வனாந்தரத்துக்கு பிரயாணம் பண்ணுங்கள் என்றார். (எண். 14:25)

நாளைக்கு நீங்கள் திரும்பி போகலாம் என்றார். ஒரு நாள் கூட வீணாக்கவே வேண்டாம். உங்கள் சொந்த முடிவுகளை நிறைவேற்ற எவ்வித கால தாமதமும் செய்ய வேண்டாம். நாளைக்கே இங்கிருந்து புறப்பட்டு செல்லுங்கள் என்றார். அகாபா என்று அழைக்கப்படும் சிவந்த சமுத்திரத்தின் பகுதி நோக்கி புறப்படுங்கள். அதுவே நீங்கள் திரும்பி செல்லும் வழி என்று கர்த்தர் கூறிவிட்டார்.

பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்த பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதை கேட்டேன். (எண். 14:26-27)

26-வது வசனம் முதல் 35-வது வசனம் வரை திரும்பி செல்லுகிறவர்களுக்கு கர்த்தர் ஓர் இறுதி உரை ஆற்றினார். 27-வது வசனத்தில் கர்த்தரை விசனப்படுத்தியது அவர்களின் முறுமுறுப்பின் சுபாவமே என்பது தெளிவாக தெரிகின்றது. இரண்டு முறை 27-வது வசனத்தில் முறுமுறுத்தீர்கள் என்று கர்த்தர் சுட்டி காட்டுகின்றார். ஆகையால் அவர்கள் தங்கள் வழியின் பலனை புசிப்பார்கள் என்று நீதிமொழிகள் முதல் அதிகாரம் 31-வது வசனம் கூறுவது போன்று கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தவர்கள் அவர்களின் கிரியைக்கு தக்க பலனை அடைய போகின்றார்கள்.

நீ அவர்களோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்க சொன்ன பிரகாரம் உங்களுக்கு செய்வேன் என்பதை என் ஜீவனை கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார். இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும். உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு

உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும். (எண். 14:28-29)

கர்த்தர் தீர்ப்புகள் வழங்குகின்றார். 29-வது வசனத்தில் முதல் தீர்ப்பு கூறப்படுகின்றது. 20 வயதிற்கு மேற்பட்டவர்களின் இறுதி இடம் இந்த வனாந்திரமாகவே இருக்கும் என்றார். இறுமாப்பாக பேசியவர்கள் 20 வயதிற்கு மேற்பட்டவர்களே ஆகும். முறுமுறுத்தவர்கள் மூத்தவர்களே ஆகும். நிரபராதிகளை கர்த்தர் தண்டிப்பது இல்லை. 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதை கர்த்தர் அறிவார். எண்ணாகம புத்தகம் முதல் அதிகாரம் 45,46 ஆகிய வசனங்களில் இந்த விபரம் கொடுக்கப்பட்டு உள்ளது. இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களின் வம்சத்தில் 20 வயதுள்ளவர்கள் முதல் எண்ணப்பட்டவர்கள் ஆறு லட்சத்து மூவாயிரத்து ஐநூற்று ஐம்பது பேர் என்று அந்த வசனங்கள் மூலம் தெரிய வருகின்றது.

எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களை குடியேற்றுவேன் என்று ஆணையிட்டு கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை. (எண். 14:30)

20 வயதிற்கு மேற்பட்ட அத்தனை பேரும் துர்ச்செய்தி கொண்டு வந்த 10 நபர்களுக்கும் செவி சாய்த்தார்கள். கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அவர்கள் சாகவே சாவார்கள்.

இரண்டாவது வரும் தீர்ப்பு விசுவாசித்தவர்கள் ஜீவனை கண்டடைவார்கள் என்பது. என்னை நம்புகிறவர்களுக்கு நன்மை வழங்குவேன். காலேப் யோசுவா என்ற இருவரும் விசுவாசத்தில் திடனாக நின்றார்கள். கானானில் திட்டவட்டமாக பிரவேசிப்பார்கள்.

கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்க செய்வேன் நீங்கள் அசட்டை பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள். (எண். 14:31)

மூன்றாவது வரும் தீர்ப்பு காலேப் யோசுவாவுடன் கூட 20 வயதிற்கு கீழான உங்கள் சந்ததிகள் அனைத்தும் நிறைவும் செழிப்பும் உள்ள பூமியை சுதந்தரிப்பார்கள். எங்கள் பிள்ளைகள் கொள்ளையாக போகின்றார்கள் என்று நீங்கள் முன்னர் கூறினீர்கள். இப்பொழுது முந்தினோர் ஆகிய நீங்கள் கொள்ளையாக போவீர்கள். உங்களுக்கு பின்னதாக பிறந்த உங்கள் பிள்ளைகள் வாக்குதத்த பூமியில் பிரவேசிப்பார்கள்.

உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும். அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, நீங்கள் சோரம்போன பாதகத்தை சுமப்பார்கள். (எண். 14:32-33)

4-வதாக வந்த தீர்ப்பு 20 வயதிற்கு மேற்பட்டவர் முதுமை அடைந்து கண் அயரும் வரை அனைவரும் பாரான் வனாந்திரத்தை வலம் வந்து ஆக வேண்டும் என்பதே ஆகும். காதேஸ் என்றால் பரிசுத்தம். பர்னேயா என்றால் அலைந்து திரிதல். நான் கொடுத்த பாலும் தேனும் ஓடும் பூமியை நிராகரித்த 20 வயது உள்ளவர்கள் இறுதி காலம் சந்திக்கும் வரை அலைந்து திரியட்டும், நாற்பது வருடங்கள் வனாந்திர வாழ்வு காணட்டும் என்று கர்த்தர்

தீர்ப்பு அளித்தார். விசுவாசிகளான காலேப் யோசுவா உட்பட அனைவரும் 40 வருடங்கள் அலைந்து திரிய வேண்டும் என்று கர்த்தர் கட்டளை இட்டார். பிதாக்களினால் வந்த சாபம் பிள்ளைகளும் சுமக்க வேண்டியதாகிறது. அவர்களது பாதகத்தினால் பிள்ளைகளும் 40 வருடங்கள் அலைந்து திரிவார்கள். அந்த 40 வருடங்களில் 20 வயதிற்கு மேற்பட்ட முறுமுறுப்பாளர்கள் அனைவரும் முடிவு காண்பார்கள். மற்றவர்கள் கானான் காண்பார்கள்.

நீங்கள் தேசத்தை சுற்றி பார்த்த நாற்பது நாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களை சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள். (எண். 14:34)

நீங்கள் தேசத்தை சுற்றி பார்த்த 40 நாள் இலக்கத்தின்படியே ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக நீங்கள் 40 வருஷம் உங்கள் அக்கிரமங்களை சுமப்பீர்கள் என்று கர்த்தர் 34-வது வசனத்தில் கூறினார்.

ஒரு நிரந்தரமான இடம் உங்களுக்கு தந்தேன். அதனை உதறி தள்ளினீர்கள். இப்பொழுது இடம் இடமாக மாறி செல்லுவீர்கள். பாலும் தேனும் ஓடும் பூமியை காட்டினேன். அதற்கு புற முதுகு காட்டினீர்கள். இப்பொழுது தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று தேடி திரிவீர்கள்? நீங்கள் எதை விதைத்தீர்களோ அதை அறுக்க போகின்றீர்கள் என்பதே தீர்ப்பு. 40 நாள் சுற்றி வந்தார்கள். 2 பேர் திராட்சை குலையை தோளில் சுமந்து வந்தார்கள். 10 பேர் துர்ச்செய்தியை இதயத்தில் சுமந்து வந்தார்கள். அந்த 40 நாளுக்கும் நாள் ஒன்றுக்கு ஒரு வருடமாக 40 வருடங்கள் வனாந்திரமே உங்கள் சுமையாக மாறட்டும் என்பதே தீர்ப்பு.

5-வது வரும் தீர்ப்பு கர்த்தர் செய்த உடன்படிக்கையில் மாறுதல் ஏற்பட்டது என்பது ஆகும். 95-வது சங்கீதம் 9,10,11-வது வசனங்களில் ''அங்கே உங்கள் பிதாக்கள் என்னை சோதித்து என்னை பரீட்சை பார்த்து என் கிரியையையும் கண்டார்கள். 40 வருஷமாய் நான் அந்த சந்ததியை அரோசித்து அவர்கள் வழுவி போகிற இருதயமுள்ள ஜனம் என்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்கள் என்றும் சொல்லி என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பது இல்லை என்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்,'' என்று கர்த்தர் கூறியதை காண்கிறோம்.

கர்த்தராகிய நான் இதை சொன்னேன் எனக்கு விரோதமாய் கூட்டம் கூடின இந்த பொல்லாத சபையார் யாவருக்கும் இப்படியே செய்வேன். இந்த வனாந்தரத்திலே அழிவார்கள், இங்கே சாவார்கள் என்று சொல் என்றார். (எண். 14:35)

கர்த்தாதி கர்த்தர் மீது விசுவாசம் குன்றாமல் இருந்திருக்குமே என்றால் கானானின் கனிகளை தின்று மகிழ்ந்திருப்பார்கள். ஆனால் இப்பொழுதோ பசியும் தாகமும் கொண்டு அலைய இருக்கின்றார்கள். 107-வது சங்கீதம் 4,5-வது வசனங்கள். ''அவர்கள் தாபரிக்கும் ஊரை காணாமல் வனாந்திரத்திலே அவாந்திர வழியாய் பசியாகவும் தாகமாகவும் ஆத்துமா தொய்ந்ததாகவும் அலைந்து திரிந்தார்கள்''. பரிசுத்த பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாவது நிரூபம் 10-வது அதிகாரம் 11,12 ஆகிய வசனங்கள். ''இவைகள் எல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்கு சம்பவித்தது. உலகத்தின் முடிவு காலத்தில் உள்ள நமக்கு எச்சரிப்பு உண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. இப்படி இருக்க தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க கடவன்.''

துர்ச்செய்தி பரப்பியவர்களும், துர்செய்திக்கு செவி சாய்த்தவர்களும் இறுதி முடிவை கண்டு கொள்ளுகின்றார்கள். அவர்களுக்கு வந்த முடிவுகளை இந்த வசனங்கள் விளக்கி கூறுகின்றன.

அந்த தேசத்தை சோதித்து பார்க்கும்படி மோசேயால் அனுப்பப்பட்டு திரும்பி, அந்த தேசத்தை குறித்து துர்ச்செய்தி கொண்டு வந்து, சபையார் எல்லாரும் அவனுக்கு விரோதமாய் முறுமுறுக்கும்படி, அந்த துர் செய்தியை சொன்னவர்களாகிய அந்த மனிதர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்தார்கள். (எண். 14:36-37)

12 பேர் சென்றார்கள். 10 பேர் வாதையினால் செத்தார்கள். 2 பேர் வாழ்கின்றார்கள். துர்ச்செய்தி சுமந்து வந்தவர் அடக்கம் ஆனார்கள். நற்கனி சுமந்து வந்தவர் நிலைத்து நின்றார்கள். தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கும் விசுவாசிக்க மறுத்தவர்களுக்கும் நடுவில் ஓர் வித்தியாசம் உண்டு என்பதை கர்த்தர் காட்டி விட்டார். மல்கியா தீர்க்கதரிசியின் புத்தகம் 3-வது அதிகாரம் 18-வது வசனம், ''அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும், துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியம் செய்கிறவனுக்கும், அவருக்கு ஊழியம் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தை திரும்பவும் காண்பீர்கள்'' என்று கூறுகின்றது.

சென்று வந்த 12 நபர்களில் 10 பேர்கள் ஜனங்கள் முன்பாக மிகவும் பெருமையுடன் நின்று கொண்டு இருந்தார்கள். உண்மையை பேசிய காலேப் யோசுவா என்றவர்களோ கவலையில் கன்னத்தில் கைவைத்து நின்றார்கள். அப்பொழுது திடீரென்று 10 பேரும் தரையில் விழுந்தார்கள். யாரும் எதிர்பார்க்கவே இல்லை. வாதை வந்தது. வாரிக்கொண்டு சென்றது. சகரியா தீர்க்கதரிசியின் புத்தகம் 14-வது அதிகாரம் 12-வது வசனம். ''கர்த்தர் வாதிக்கும் வாதையாவது, அவர்கள் கால் ஊன்றி நிற்கையிலும், அவர்களுடைய சதை அழிந்து போகும். அவர்கள் கண்கள் தங்கள் குழிகளிலே கெட்டு போகும். அவர்கள் நாவு அவர்கள் வாயிலே அழுகி போகும்.''

இலட்ச கணக்கான மனிதர் இடறி போவதற்கு காரணமாக இருந்தவர்கள் மீது கர்த்தரின் தீர்ப்பு வந்தது. இதுவரை விசுவாசமாக இருந்தவர்களின் மன நிலையை மாற்றிய துர்ச்செய்தியாளர்களை வாதை வந்து வதைத்தது. பரிசுத்த மத்தேயு என்பவர் எழுதிய சுவிசேஷம் 18-வது அதிகாரம் 6-வது வசனம். ''என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிற இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திர கல்லை கட்டி சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாய் இருக்கும்''.

பெரும் கூட்ட மக்கள் தடுமாறி போவதற்கு தலையெடுத்த பத்து பேர்களும் களை எடுக்கப்பட்டார்கள். அதை கண்ட ஜனங்கள் ஸ்தம்பித்து போனார்கள்.

தேசத்தை சுற்றி பார்க்க போன அந்த மனிதரில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும் மாத்திரம் உயிரோடிருந்தார்கள். (எண். 14:38)

12 நபர்களில் 10 பேர் காணாமல் போனார்கள். இரண்டு பேர் மட்டும் கண் எதிரில் தெரிகின்றார்கள். ஆணவத்தால் பொங்கிய ஜனங்கள் அச்சத்தால் அசைவற்று நிற்கின்றார்கள்.

மோசே இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னபோது, ஜனங்கள் மிகவும் துக்கித்தார்கள். (எண். 14:39)

ஜனங்கள் மிகவும் துக்கித்தார்கள். நாங்கள் பாவம் செய்தோம் என்று அவர்கள் கூறுவதை பார்க்கின்றோம். அவர்கள் துக்கம் சூழ்நிலை சிக்கலாக மாறியதால் வந்த துக்கமே தவிர மனநிலை மாறியதால் வந்த துக்கம் அல்ல. அவர்களது பாவ அறிக்கை சாக பயந்ததினால் வந்த பாவ அறிக்கையே தவிர, தப்பு செய்தோம் என்ற மெய்யான மனஸ்தாபம் அல்ல.

கர்த்தரை துணிந்து பின்பற்ற அவர்கள் விரும்பினார்கள். கர்த்தரோ அவர்கள் தம்மை பணிந்து பின்பற்ற வாஞ்சித்தார். துணிந்து சென்றார்கள். அது அவர்கள் மனதின் மமதையை காட்டுகின்றது. அழிவுக்கு முன்னானது அகந்தையே ஆகும். கானானை சுதந்தரிக்க வேண்டும் என்ற இதயத்தில் அல்ல, கர்த்தரின் தண்டனைக்கு எப்படியாவது தப்பி பிழைத்துவிட வேண்டும் என்ற முடிவில் அவர்கள் அப்படி செய்தார்கள். கர்த்தருக்கு பயப்படும் பயத்தினால் அல்ல. இன்னும் 40 வருடம் கர்த்தர் சுற்ற சொல்லுகின்றாரே, இதனை எப்படி தவிர்க்கலாம் என்ற உபாயமே அவர்கள் செய்த செயல் ஆகும். கர்த்தர் முதலில் முன்னாக செல்லுங்கள் என்று கூறிய பொழுது முன்னாக செல்ல மறுத்தார்கள். இப்பொழுது பின்னாக செல்லுங்கள் என்று கூறும் பொழுது பின்னாக செல்லவும் மறுக்கின்றார்கள். வாய்ப்பு காத்து கொண்டு இருக்கும் பொழுது வாய் விட்டு அழுதார்கள். செயலாற்றவில்லை. சந்தர்ப்பம் கை நழுவி சென்ற பின்னர் செல்லுகிறோம் என்று சொல்லுகின்றார்கள். கதவு அடைக்கப்பட்ட பின் நோவா நோவா கதவை திறக்க மாட்டாயா என்று கதறிய மனிதர்களை போன்று, அவகாசம் கொடுக்கப்பட்ட பொழுது அலட்சியமாக இருந்து விட்டு, கதவு பூட்டப்பட்ட பின்னர் தட்டி வருந்திய புத்தி அற்ற கன்னிகைகள் போன்று, வாசல் திறந்து இருந்த பொழுது முயற்சி செய்யவில்லை. வாய்ப்பை இழந்த பின்னர் வைராக்கியம் எழும்புகின்றது. துர்ச்செய்தி கூறிய தீயவர்கள் அவர்களுடைய கண்களுக்கு முன்னதாக கர்த்தருடைய சந்நிதியில் செத்து விழுந்தார்கள். மிஞ்சி பேசிய முறுமுறுப்பாளர்கள், எஞ்சி உள்ள காலங்களை வனாந்தரத்தில் கழிக்க கட்டளை பெற்றார்கள். கண் முன் விழுந்த பத்து பேரின் சடலங்களும் காதில் கேட்ட கர்த்தரின் தீர்ப்புகளும் அவர்களை குத்தி குடைந்தது. கற்பாறை போன்று கடினமாக இருந்த உள்ளங்களை தகர்த்து உடைத்தது.

அதிகாலமே அவர்கள் எழுந்திருந்து: நாங்கள் பாவம் செய்தோம், கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணின இடத்துக்கு நாங்கள் போவோம் என்று சொல்லி மலையின் உச்சியில் ஏற துணிந்தார்கள். (எண். 14:40)

வாக்குத்தத்த பூமிக்கு செல்ல மறுத்ததால்தானே கர்த்தர் கோபம் அடைந்தார். இதோ இப்பொழுது சம்மதிக்கின்றோம். ஒரு புதிய தீர்மானம் செய்கின்றோம். பார்வோனிடம் திரும்பி செல்லுவோம் என்று அறிவித்த அறிவிப்பை உடனே மாற்றி கொள்ளுகின்றோம். இதோ இப்பொழுதே கானான் நோக்கி புறப்படுகின்றோம் என்றார்கள். ஏற்கெனவே அவர்கள் தங்களுக்கு ஓர் புதிய தலைவனை தெரிந்து எடுத்து விட்டார்கள் என்பதை 4-வது வசனம் கூறியது. நெகேமியா 9-வது அதிகாரம் 17-வது வசனமும் அதை குறித்து கூறி உள்ளது. ''அவர்கள் செவிகொடுக்க மனதில்லாமலும், அவர்களிடத்திலே நீர் செய்த உம்முடைய அற்புதங்களை நினையாமலும் போய், தங்கள் கழுத்தை கடினப்படுத்தி, தங்கள் அடிமைத்தனத்துக்கு திரும்பும்படிக்கு அவர்கள் கலகம் பண்ணி, ஒரு தலைவனை ஏற்படுத்தினார்கள்; ஆகிலும் வெகுவாய் மன்னிக்கிறவரும் இரக்கமும் மனஉருக்கமும், நீடிய

சாந்தமும், மகா கிருபையுமுள்ளவருமான தேவனாகிய நீர் அவர்களை கைவிடவில்லை.'' கர்த்தருக்கு இப்பொழுது கீழ்படிகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அவரிடம் கேட்கவில்லை. அவரது கட்டளைக்கும் காத்திருக்கவில்லை. துணிந்து தாங்கள் ஏற்படுத்தி கொண்ட தலைவனுடன் கர்த்தரின் தீர்ப்பை பழித்தவர்களாய் கானான் செல்ல உயர்ந்த மலை ஏறினார்கள்.

மோசே அவர்களை நோக்கி: நீங்கள் இப்படி கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன? அது உங்களுக்கு வாய்க்காது. நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படாதபடிக்கு ஏறி போகாதிருங்கள். கர்த்தர் உங்கள் நடுவில் இரார். அமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்கு முன்னே இருக்கிறார்கள்; பட்டயத்தினால் விழுவீர்கள். நீங்கள் கர்த்தரை விட்டு பின்வாங்கினபடியால், கர்த்தர் உங்களோடே இருக்க மாட்டார் என்றான். ஆனாலும் அவர்கள் மலையின் உச்சியில் ஏற துணிந்தார்கள் கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டியும் மோசேயும் பாளையத்தை விட்டு போகவில்லை. (எண். 14:42-44)

முட்செடியின் அனுபவம் அறியாத புதிய தலைவன். சீனாய் மலை சிகரம் காணாத புதிய தலைவன். தலை அறிவில் கானான் நுழைய விரும்பும் புதிய தலைவன். சொந்த முயற்சியில் இன்ப கானான் காண்பது எப்படி? கலியாண வஸ்திரம் இல்லாதவன். ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பங்கு எடுப்பது எப்படி? நானே வாசல் என்று கூறும் கர்த்தரின் மூலம் உள் பிரவேசிக்காமல் வாக்குத்தத்த பூமி நுழைவதும் எப்படி?

அவர்கள் கானான் நோக்கி புறப்பட்டார்கள். அவர்களுக்கு முன் உடன்படிக்கை பெட்டி செல்லவே இல்லை. மோசே முன் நின்று வழி நடத்தவே இல்லை. கர்த்தர் அவர்களுடன் துணை நிற்கவே இல்லை. இதனை 42, 44 ஆகிய இரண்டு வசனங்களிலும் நாம் பார்க்கின்றோம். சற்று முன்னர் கர்த்தர் உங்களை அழித்து போடுவதற்கு வந்தார். வேண்டாம் என்று தடுத்தேன். இப்பொழுது கர்த்தரை தவிர்க்க எடுக்கும் முயற்சியில் நீங்கள் உங்களையே அழித்து கொள்ள போகின்றீர்கள். வேண்டாம் என்று தடுக்கின்றேன் என்று மோசே முன்னதாக வந்து நின்று அவர்களை தடுத்தான். அவர்கள் தங்களுக்கு என்று ஓர் தலைவனை வைத்த பின்னர் மோசேயின் குரல் தலைமை இடம் எடுப்பது எப்படி? புதிய தலைவன் தலைமையில் புறப்பட்டு சென்றார்கள். மோசேயை புறக்கணித்து சென்றார்கள். கர்த்தரின் தலைமையில் அல்ல. மோசேயின் வார்த்தையின் படியும் அல்ல. சொந்த விருப்பத்தின் படி புறப்பட்டு சென்றார்கள். அவர்கள் தங்கி இருந்த காதேஸ் என்ற இடத்தில் இருந்து சுமார் 10 மைல் வடக்காக சென்று விட்டார்கள்.

அப்பொழுது அமலேக்கியரும் கானானியரும் அந்த மலையிலே இருந்து இறங்கி வந்து, அவர்களை முறிய அடித்து, அவர்களை ஓர்மா மட்டும் துரத்தினார்கள். (எண். 14:45)

45-வது வசனத்தில் வரும் ஓர்மா என்ற இடம் காதேஸ் பர்னேயாவிற்கும், பெயர்செபாவிற்கும் நடுவாக இருக்கும் இடம் ஆகும். காதேஸ் பர்னேயாவில் இருந்து பெயர்செபா என்ற இடம் சுமார் 20 மைல் தூரத்தில் இருக்கின்றது.

ஆசரிப்பு கூடாரம் இல்லை. உடன்படிக்கை பெட்டி இல்லை. வழி நடத்தும் மேக ஸ்தம்பமும் இல்லை. அக்கினி ஸ்தம்பமும் இல்லை. தங்களை தாங்களே நடத்தி கொண்டார்கள். கானான் சேர அவர்கள் சொந்த முயற்சி கைகொடுப்பது இல்லை. இன்ப கானான் சேருவதற்கு சுய முயற்சிகள் தோள் கொடுப்பதும் இல்லை. சுமார் 10 மைல்கள் சென்றார்கள். ஓர்மா என்ற இடம் கண்டார்கள். அவர்களை அறியாத மக்கள் அவர்களுக்கு எதிராக வந்தார்கள். ஓர்மா என்ற இடத்தில் அவர்களை முறிய அடித்து துரத்தி விட்டனர் என்று 45-வது வசனம் கூறுகின்றது.

ஓர்மா

ஓர்மா என்றால் படு தோல்வி என்று பொருள். முற்றிலும் அழிக்கப்படல் என்று பொருள்படும். சிரம் என்ற எபிரெய வார்த்தையை தழுவிய சொல் ஓர்மா என்பது ஆகும். காதேஸ் என்றால் பரிசுத்தம் என்று பொருள். பரிசுத்தமான இடத்தில் இருந்து படு தோல்வியான இடத்திற்கு பாவம் என்பது அவர்களை அழைத்து சென்றது. கர்த்தர் கூறிய நேரத்தில், கர்த்தர் கூறிய முறைப்படி செய்து இருப்பார்கள் என்றால் ஓர்மாவை சந்தித்து இருக்க மாட்டார்கள். கானானை கண்டு இருப்பார்கள். கர்த்தரின் வேளை கடந்து போயிற்று. சகாயம் மறைந்து போயிற்று. கர்த்தரை கண்டடைய தக்க சமயத்தில் அவரை தேடுங்கள். அவர் சமீபமாய் இருக்கையில் அவரை நோக்கி கூப்பிடுங்கள் என்று ஏசாயா 55-வது அதிகாரம் 6-வது வசனம் கூறுகின்றது.

கர்த்தரை விட்டு அவர்கள் விலகினார்கள். கர்த்தர் அவர்களை விட்டு விலகி விட்டார். கானானின் கதவை அடைந்தும் கடந்து செல்ல முடியாதவர்களாக மாறி விட்டார்கள். ஆசீர்வாதத்தின் மேஜை அருகே வந்தும் உணவை அருந்த முடியாதவர்களாக மாறி விட்டார்கள். இந்த சோக சம்பவத்திற்கு காரணம் அவர்களுடைய அவிசுவாசமே ஆகும். இந்த சம்பவம் பழைய ஏற்பாட்டு புத்தகங்களிலும், புதிய ஏற்பாட்டு நூல்களிலும் பல முறை குறிப்பிடப்பட்டு உள்ளது. எவருக்கும் இந்த நிலைமை வந்துவிட வேண்டாம். மரண பரியந்தம் அனைவரும் உண்மை உள்ளவர்களாக வாழ்ந்து விடுங்கள் என்று எச்சரிக்க இந்த சம்பவம் எடுத்து கூறப்படுகின்றது.

எண்ணாகம புத்தகம் 32-வது அதிகாரத்திலும், உபாகம புத்தகம் முதல் அதிகாரம் 20 முதல் 40 வசனங்களிலும், 95-வது சங்கீதத்திலும், 106-வது சங்கீதம் 24-வது வசனம் துவங்கியும், ஆமோஸ் தீர்க்கதரிசியின் புத்தகம் 2-வது அதிகாரம் 10-வது வசனத்திலும், 5-வது அதிகாரம் 25-வது வசனத்திலும், தொடர்ந்து புதிய ஏற்பாட்டு நூலில் 1 கொரிந்தியர் 10-வது அதிகாரத்திலும், எபிரெயர் நிரூபம் 3-வது அதிகாரம் 7-வது வசனம் முதல் 4-வது அதிகாரம் 13-வது வசனங்கள் வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் இந்த சோக சம்பவம்

கொடுக்கப்பட்டு உள்ளது. வெற்றியின் கோடுவரை வந்து பின்னர் பின் வாங்கிபோன ஜனங்களின் சரித்திரம் கூறப்பட்டு உள்ளது. யூதா நிரூபம் 5-வது வசனம். ''நீங்கள் முன்னமே அறிந்து இருந்தாலும் நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறது என்னவெனில், கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்தில் இருந்து வரப்பண்ணி இரட்சித்து பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார். முடிவு பரியந்தம் நிலைத்து நிற்பவன் இரட்சிக்கப்படுவான்.'' உத்தமம் நிறைந்த காலேப், யோசுவா என்றவர்கள் கடந்து சென்றார்கள். மெத்தனமாக இருந்தவர்கள் முடங்கி போனார்கள்.

நீதிமொழிகளின் புத்தகம் 11-வது அதிகாரம் 3-வது வசனம். ''செம்மையானவர்களுடைய உத்தமம் அவர்களை நடத்தும். துரோகிகளின் மாறுபாடோ அவர்களை பாழாக்கும்.'' எபிரெயர் நிரூபம் 3-வது அதிகாரம் 12,13,14 ஆகிய வசனங்கள். ''சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கு ஏதுவான அவிசுவாசம் உள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டு போகாதபடிக்கு இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கு ஒருவர் புத்தி சொல்லுங்கள். நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றி கொண்டு இருப்போமாகில் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாய் இருப்போம்.

கானான் தரிசிக்க வேண்டியவர் வீணாய் போய் விட்டார்கள். களிகூர்ந்து மகிழ வேண்டிய நேரங்கள் கண்ணீர் சிந்தும் நேரங்களாக மாறிவிட்டது. அன்று அவர்கள் செங்கடல் கண்ட பொழுது கர்த்தரை நோக்கி வேண்டி கொண்டார்கள். கர்த்தரை நோக்கி வேண்டிய பொழுது செங்கடலை மிகவும் எளிதாக தாண்டினார்கள். பாடினார்கள். இப்பொழுது வாடுகின்றார்கள்.

அன்று மேலாக நோக்கினார்கள். இன்று கீழாக நோக்கி விட்டார்கள். கானானின் எல்கை கடக்க கர்த்தரை நோக்கவில்லை. மனதில் வாடுகின்றார்கள். காதேஸ் என்ற இடம் வந்தும் கானான் என்ற இடத்தை காணவில்லை. காதேசை தொடர்ந்து கானான் வந்து இருக்க வேண்டும். ஆனால் வந்ததோ பர்னேயா என்பதே ஆகும்.

காதேஸ்

காதேஸ் என்றால் பரிசுத்தம் என்று பொருள். பர்னேயா என்றால் அலைந்து திரியுதல் என்று பொருள். பரிசுத்தம் என்பது தரும் பரிசு மகிமைக்கு மேல் மகிமை என்பது ஆகும். பாவம் தரும் பரிசு சிறுமைக்கு மேல் சிறுமை என்பது ஆகும்.

ஓர்மா என்ற இடத்தை அவர்கள் சந்தித்தார்கள். ஓர்மா என்றால் படுதோல்வி

என்று பொருள். கர்த்தரின் சித்ததிற்கு விரோதமாக அவர்கள் சென்ற பொழுது எல்லாம் கர்த்தரின் செவிகள் அவர்கள் செய்த ஜெபங்களை ஏற்று கொள்ளவே இல்லை. உபாகம புத்தகம் 1:44,45,46-வது வசனங்களை பார்ப்போம். ''அந்த மலையிலே குடியிருந்த எமோரியர் உங்களை எதிர்க்கும்படி புறப்பட்டு வந்து தேனீக்கள் துரத்துகிறது போல உங்களை துரத்தி உங்களை சேயீர் தொடங்கி ஓர்மா மட்டும் முறிய அடித்தார்கள். நீங்கள் திரும்பி வந்து கர்த்தருடைய சமூகத்தில் அழுதீர்கள். கர்த்தர் உங்கள் சத்தத்தை கேட்கவில்லை. உங்களுக்கு செவி கொடுக்கவும் இல்லை. இப்படி காதேசிலே தங்கி அங்கே வெகு நாளாய் இருந்தீர்கள்'' என்று அந்த வசனங்களில் நாம் வாசிக்கின்றோம்.



சேயீர்

தொகுதி - 6
வனாந்தரத்தில் அலைந்து திரிந்த 38 வருடங்கள்

அத்தியாயம் - 18
கானான் தேசத்தில் செலுத்த வேண்டிய பலிகள்

18.1 திருந்தி வாழ குறிப்புகள்

எண்ணாகம புத்தகத்தில் 36 அதிகாரங்கள் உண்டு. அதனை நான்கு பகுதிகளாக பிரித்து நாம் பார்த்து வருகின்றோம். 1-வது அதிகாரம் முதல் 10-வது அதிகாரம் 10-வது வசனம் வரை அதன் முதல் பகுதி ஆகும். அதனை கடந்து வந்தோம். 10-வது அதிகாரம் 11-வது வசனம் முதல் 14-வது அதிகாரம் இறுதி வசனம் வரை அதன் இரண்டாவது பகுதி ஆகும். அதனையும் கடந்து வந்தோம். எண்ணாகம புத்தகத்தின் 3-வது பகுதி 15-வது அதிகாரத்தில் இருந்து ஆரம்பம் பெறுகின்றது. 19-வது அதிகாரத்தில் முடிவு பெறுகின்றது. சுமார் 38 வருடங்களின் நிகழ்ச்சி 15 முதல் 19 அதிகாரங்கள் வரை கொடுக்கப்பட்டு உள்ளது. அத்தனை ஆண்டுகளும் ஜனங்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த காட்சியை விரிவாக விரித்து கூறாவிட்டாலும் அவசியமான விபரங்கள் எண்ணாகம புத்தகத்தின் மூன்றாவது பகுதியான 15 முதல் 19 அதிகாரங்களில் வரையப்பட்டு உள்ளது.

வருந்தி வாழ்கின்றவர்கள் திருந்தி வாழ்வதற்கு, வளர்ந்து பெருகுவதற்கு அவசியமான குறிப்புகள் அனைத்தும் இந்த மூன்றாவது பகுதியில் கொடுக்கப்பட்டு உள்ளது. 14-வது அதிகாரத்தினை நாம் ஓர் கனத்த இதயத்துடன் கடந்து வந்தோம். அற்றம் வரை வந்தும் குற்றம் செய்து விட்டார்கள். லேவியராகம புத்தகம் 26-வது அதிகாரம் 13-வது வசனத்தில் எனக்கு கீழ்படிந்தால் உங்களை நிமிர்ந்து நடக்க பண்ணுவேன் என்று கர்த்தர் ஏற்கெனவே கூறி இருந்தார். ஆனால் நாம் எண்ணாகமம் 14-வது அதிகாரத்தின் இறுதியில் அவர்களை தலை குனிந்தவர்களாக கண்டோம். ஓட ஓட துரத்தப்பட்டவர்களாக கண்டோம். இனிமேல் எதிர்காலம் என்பது நமக்கு உண்டா என்று உள்ளம் உடைந்து தலை குனிந்து அவர்கள் நிற்பதை நாம் எண்ணாகம புத்தகம் 14-வது அதிகாரம் இறுதியில் பார்த்தோம். கர்த்தர் அவர்கள் வழுவி போகும் இதயம் உடையவர்கள் என்று அறிந்தும் தமது கைகளை கழுவி விடவில்லை. தவறு செய்யும் பொழுது எல்லாம் கர்த்தர் அவர்களை கண்டித்தார். தண்டித்தார். ஆனால் கர்த்தர் தமது ஜனங்களை கைவிடவே இல்லை என்பதை எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் எடுத்து உரைக்கின்றது.

பாவம் என்பதை செய்த போதிலும் மனம் உடைந்து விட்டால் மன்னித்து விடுவேன். துரோகம் செய்த போதிலும் நோக்கி பார், இரட்சிப்பேன்! வனாந்தரத்து சபையாருக்கு 15-வது அதிகாரம் பல புதிய தகவல்களை எடுத்து கூறுகின்றது. தேவ அன்பு கைகளை தட்டி அவர்களை அழைக்கின்றது. தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம் பண்ணும் பொருட்டு துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களை பெற்றுக்கொண்டீர் என்று 68-வது சங்கீதம் 18-வது வசனம் கூறுவது எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரத்திற்கு ஏற்றதாக

தெரிகின்றது. அன்பு நிறைந்த கர்த்தருக்கு அவர்கள் துரோகம் செய்தாலும் கர்த்தர் அவர்களை கைவிடவில்லை.

மூன்று திட்டவட்டமான கீழ்படிதல்களுக்கு 15-வது அதிகாரம் அவர்களுக்கு அழைப்பு கொடுக்கின்றது. அகத்தில் அலுத்து போனவர்களுக்கு, தவறி அலைந்து திரிகின்றவர்களுக்கு மூன்று அன்பின் அழைப்புகள் 15-வது அதிகாரத்தில் தெரிகின்றது.

வரும் முதலாவது அழைப்பு உங்களை தனி தனியாக நீங்கள் ஒவ்வொருவரும் எனக்கு ஒப்புகொடுத்து விடுங்கள் என்பது ஆகும். இதனை எண்ணாகமம் 15-வது அதிகாரம் 1 முதல் 16 வசனங்களில் நாம் பார்க்கலாம்.

வரும் இரண்டாவது அழைப்பு என்னவென்றால் குடும்பம் குடும்பமாக உங்களை எனக்கு ஒப்புக்கொடுத்து விடுங்கள் என்பது ஆகும். இதனை 17 முதல் 21-வது வசனங்கள் வரை நாம் காணலாம்.

வரும் மூன்றாவது அழைப்பு ஓர் சமூகமாக உங்களை எனக்கு முற்றிலுமாக ஒப்புகொடுத்து விடுங்கள் என்பது ஆகும். இந்த விபரம் 22 முதல் 36 வசனங்களில் குறிக்கப்பட்டு உள்ளது.

அதிகாரத்தின் முடிவில் இனிமேல் மேன்மை பெற்று வாழ்வதற்கு தலை நிமிர்ந்து நடப்பதற்கு உங்கள் இதயமும், உங்கள் கண்களும் தூய்மை நிறைந்தவைகளாக இருக்கட்டும் என்பதை 37 முதல் 41 வசனங்கள் வரை நாம் படிக்க இருக்கின்றோம். பாவ இதயமும் கண்களின் இச்சையும் பேரின்பம் இழக்க செய்யும். எனவே அதனை வென்று வாழ்வதற்கு உங்கள் கவனமும், உங்கள் கண்களும் என்மேல் பதிக்கப்பட வேண்டும் என்ற ஓர் புதிய பாடம் எண்ணாகமம் 15-வது அதிகாரம் 37 முதல் 41 வசனங்களில் புகுத்த படுகின்றது.

18.2 சுகந்த வாசனையான தகனபலி - தனி மனிதனாக உன்னை அர்ப்பணித்து விடு

கர்த்தர் மோசேயை நோக்கி: (எண். 15:1)

எண்ணாகமம் 15-வது அதிகாரம் முதல் வசனம் கர்த்தர் மோசேயை நோக்கி என்று துவங்குகின்றது. அங்கு காதேஸில் மக்கள் அலைந்து திரிகின்றனர். சுமார் 38 வருடங்கள் அலைந்து திரிகின்றனர். அந்த வருடங்கள் புதிய தலைமுறை தலையெடுக்கிறது. கர்த்தருக்கு அடங்கி வாழ தீர்மானம் செய்கிறது. கர்த்தர் அவர்களை தமக்கு உரியவர்களாக மாற்ற திரும்பவும் கட்டளைகளும் பிரமாணங்களும் கொடுக்கிறார்.

நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: நீங்கள் குடி இருக்கும்படி நான் உங்களுக்கு கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய் சேர்ந்த பின்பு, (எண். 15:2)

நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால் என்று அந்த வசனம் துவங்குகின்றது. நீ பிரித்து எடுக்கப்பட்ட மக்களுக்கு கூற வேண்டிய செய்தி ஒன்று என்னிடத்தில் உண்டு. தோல்வி வெற்றியாகும். கை எட்டும் தூரத்தில் வந்தும் கிட்டாமல் போய்விட்ட சுதந்திர பூமி ஓர் நாள் உங்கள் கால்கள் நடக்கும் பூமியாக மாறி விடும். அது உணர்ச்சி வசத்தினால் இடம் பெறும் நிகழ்ச்சி அல்ல. உள்ளான மனுஷனில் நீங்கள்

ஒவ்வொருவரும் வல்லமையாக பலப்படுவதினால் வரும் பரிசு ஆகும். ஆட்கள் பலத்தினால் இடம் பெறும் ஆக்கிரமிப்பு அல்ல. என் ஆவியானவருக்கு நீங்கள் நித்தமும் அடங்கி நடப்பதினால் வரும் ஆசீர்வாதம் ஆகும். பிரித்து எடுக்கப்பட்ட ஜனங்களுக்கு விவரித்து இதனை கூறு என்று கர்த்தர் மோசேயை நோக்கி கூறினார். நான் உங்களுக்கு கொடுக்கும் தேசம் கானான் தேசம் என்று சொல் என்றார். நீங்கள் போய் அங்கு குடியேறுவீர்கள் என்று இதயம் குனிந்தவர்களுக்கு ஓர் இனிய செய்தியை 2-வது வசனத்தில் அனுப்பி வைத்தார். நான் கொடுக்கும் பூமி என்றார். நீங்கள் குடியேறும் பூமி என்றார். எனவே திரும்பி வாருங்கள். திருந்தி வாழுங்கள். திகழ்ந்து விடுங்கள் என்று 2-வது வசனம் அழைப்பு கொடுக்கின்றது.

கர்த்தரின் திட்டம் ஸ்தம்பித்து போகவில்லை. 40 வருடங்கள் சென்ற பின்னரும் நான்கு சந்ததிகள் கடந்த பின்னரும் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பாருக்கு விடுத்த ஆணை காக்கப்படும் என்று கர்த்தர் கூறுகின்றார். தம்மை விசுவாசித்தவருக்கு கொடுத்த வாக்குறுதிகள் காக்கப்படும் என்று கர்த்தர் மோசேயை நோக்கி கூறுகின்றார்.

முன்பு ஒரு நாள் மாம்ச உற்சாகத்தில் அடியெடுத்து வைத்தீர்கள், அடி வாங்கி வந்தீர்கள். இப்பொழுது எனக்கு அடிபணிந்து நடந்து விட்டால் இழந்து போன ஆசீர்வாதங்களை இன்னும் ஒரு முறை பெற்று மகிழ போகின்றீர்கள். வளம் மிக்க பூமியில் குடியேற போகின்றீர்கள் என்று கர்த்தர் மோசேயை நோக்கி கூறுகின்றார். அதற்கு நீங்கள் அனைவரும் முதலாவது செய்ய வேண்டியது என்னவென்றால் உங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக எனக்கு ஒப்பு கொடுத்து விடுங்கள் என்பதே ஆகும். தனித்தனியாக ஒவ்வொருவரும் தங்களை முற்றிலும் கர்த்தருக்கு ஒப்பு கொடுத்தலுக்கு ஏற்ற விதமான பலி முறைகள் அறிமுகப்படுத்த படுகின்றன. பலிகள் இல்லாமல் வழிகள் இல்லை என்பதை கர்த்தர் தெளிவு படுத்துகின்றார்.

பலி என்பது விண்ணப்பம். ஜெபம், விண்ணப்பம் என்பது இல்லாமல் புதுப்பித்தல் என்பது இடம்பெற முடியாது என்பதை கர்த்தர் முதலாவது தெளிவு படுத்துகின்றார். கர்த்தருக்கு ஒப்பு கொடுத்தலுக்கு ஏற்ற பலி சர்வாங்க தகனபலி என்பதை லேவியராகமம் முதல் அதிகாரத்தில் நாம் ஏற்கெனவே கண்டோம்.

முற்றிலுமாக உங்களை எனக்கு ஒப்பு கொடுத்த வாழ்வில் நீங்கள் நிலைத்து நிற்க, பரிசுத்தம் என்ற உள் அலங்காரம் காக்க படுவதற்காக, அனுதினமும் நீங்கள் செய்ய வேண்டிய சிறப்பான பொருத்தனைகளை என்னுடன் செய்து கொள்ளுங்கள் என்று மறுபடியும் கர்த்தர் ஞாபகபடுத்துகின்றார். மனம் சோர்ந்து போய் என்னிடம் ஜெபிக்க வேண்டாம். உற்சாகத்துடன் பலிகளை செலுத்த துவங்குங்கள் என்று கர்த்தர் கூறுகின்றார். கானான் என்ற தேசத்திற்கு சென்ற பின்னர் செய்ய வேண்டிய அத்தனை முறைகளையும் முறை முறையாக கர்த்தர் எடுத்து கூறும் அதிகாரமே எண்ணாகமம் 15-வது அதிகாரம்.

நடைமுறை கட்டாயம் என்பதற்காக நீங்கள் என்னை ஆராதிக்க வேண்டாம். பண்டிகை உற்சாகத்துடன் என்னை போற்றி பாடுங்கள் என்று 3-வது வசனம் முதலாவது கீழ்படிதலுக்கு அழைப்பு கொடுக்கின்றது.

விசேஷித்த பொருத்தனையாயாவது, உற்சாக பலியாயாவது, உங்கள் பண்டிகைகளில் செலுத்தும் பலியாயாவது, கர்த்தருக்கு மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் சர்வாங்க தகனபலியையாவது மற்ற யாதொரு

பலியையாவது கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனமாக பலியிடும்போது, (எண். 15:3)

வற்புறுத்தி என்னை பின்பற்ற வேண்டாம். வலிய என்னை பின்பற்றுங்கள் என்பதே அந்த வசனம் கொடுக்கும் அழைப்பு ஆகும். அவ்விதமான ஓர் உயர்ந்த நிலையில் இருந்து அவர்கள் கர்த்தருக்கு செலுத்தும்பலி சுகந்த வாசனையாக கர்த்தரின் சமூகத்திற்கு செல்லுகின்றது என்று 3-வது வசனம் முற்று பெறுகின்றது. அவ்விதமான ஓர் ஒப்பு கொடுத்தல் மண்ணின் மனிதருக்கு விண்ணின் கதவுகளை விரிவாக திறந்து கொடுக்கின்றது. வளமும் செழிப்பும் உள்ள வருங்காலத்திற்கு உங்களை வழி நடத்தி செல்லுவதற்கு நீங்கள் மனம் உவந்து என்னை ஆராதிக்க துவங்குங்கள் என்று கர்த்தர் 3-வது வசனத்தில் கூறுகின்றார். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களை தனி தனியாக கர்த்தருக்கு அர்ப்பணிக்க வேண்டும். அதுவே சர்வாங்க தகனபலி என்பது ஆகும். அது ஓர் சடங்காச்சாரமாக இடம் பெற்று விட்டால் அதில் சுகமும் இல்லை. வாசனையும் இல்லை. அது மனமாற இடம் பெற்று விட்டால் சுகந்த வாசனையான பலியாக கர்த்தரின் சமூகத்தை போய் சேருகின்றது.

தவறு செய்யும் மனிதன் இன்னும் ஓர் முறை தப்பி பிழைத்து வாழ்வதற்கு ஏறெடுக்கும் மன்றாட்டு, மனம் உடைந்த மன்றாட்டாக இருக்க வேண்டும் என்பதே சுகந்த வாசனையான பலி என்பது ஆகும். தாழ்மை உள்ள நெஞ்சங்கள் ஏறெடுக்கும் ஜெபங்கள் வானத்தின் வாசலை எட்டுகின்றது. தங்களின் இறுமாப்பினால் இழந்து போன ஆசீர்வாதங்களை இன்னும் ஒரு முறை பெற்று கொள்ளுவதற்கு இதயம் வடிக்கும் கண்ணீரே முதல் படி என்று கர்த்தர் கூறுகின்றார். கர்த்தரின் சமூகத்தில் அவ்விதமான விண்ணப்பங்கள் சுகந்த வாசனையான பலியாக அங்கீகரிக்கப்பட இருக்கின்றது.

மனுக்குலத்தின் சார்பில் நோவா என்ற புனித மனிதர் அன்று ஒருநாள் ஆதியாகம புத்தகம் 8-வது அதிகாரத்தின் இறுதி பாகத்தில் முற்றிலுமாக கர்த்தருக்கு தன்னை ஒப்பு கொடுத்தார். தகன பலி என்ற ஓர் பலியை நோவா அன்று செலுத்தினார். அந்த எளிய அர்ப்பணம் ஓர் அரிய ஆசீர்வாதத்தை பூமியின் மக்களுக்கு வழங்கி விட்டது. நோவா என்பவர் அன்று ஒருநாள் தன்னையே கர்த்தருக்கு முற்றிலுமாக அர்ப்பணிக்க வேண்டும் என்ற வாஞ்சையுடன் சர்வாங்க தகனபலி ஒன்று செலுத்தினார். நோவாவின் தனிப்பட்ட அர்ப்பணிப்பு ஓர் சுகந்த வாசனையான பலியாக மண்ணிற்கு மாறி விட்டது. ஆதியாகம புத்தகம் 8:21,22 ''சுகந்த வாசனையை கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர் இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியை சபிப்பது இல்லை. மனிதனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறு வயது துவங்கி பொல்லாததாய் இருக்கின்றது. நான் இப்பொழுது செய்தது போல சகல ஜீவன்களையும் சங்கரிப்பது இல்லை. பூமி உள்ள நாளளவும் விதைப்பும், அறுப்பும், சீதளமும், உஷ்ணமும் கோடை காலமும் மாரி காலமும் பகலும் இரவும் ஒழிவது இல்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்.''

எல்லாரும் பாவம் செய்து ஏகமாய் கெட்டு போன ஓர் உலகில், நல்லவன் ஒருவனாகிலும் உண்டோ என்று சொல்ல எவருமே இல்லாத ஓர் உலகில், பாவியை பரிசுத்தர் என்று மாற்றிவிட, கெட்டு அலைந்தவர்களை தொட்டு ஆசீர்வதிக்க கர்த்தராகிய இயேசு தன்னையே சுகந்த வாசனையான பலியாக ஓர் நாள் சிலுவையிலே அர்ப்பணித்தார். கர்த்தரின் தயவை அனைவரும் பெற்று மகிழட்டும் என்று இயேசு சுகந்த வாசனையான பலியாக

தன்னை அர்ப்பணித்தார். அன்று அவர்கள் கானான் கண்டு மகிழ மாடுகளிலாகிலும், ஆடுகளிலாகிலும் கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகன பலி செலுத்தட்டும் என்றார்.

ஆடுகளும் வேண்டாம். மாடுகளும் வேண்டாம். நிறைவும் செழிப்பும் பெற்று நீங்கள் வாழ்வதற்கு என்னையே இதோ சுகந்த வாசனையான பலியாக தருகிறேன் என்று இயேசு சிலுவையில் ஜீவனை விட்டார். பரிசுத்த பவுல் எபேசியர் என்பாருக்கு எழுதின நிரூபம் 5-வது அதிகாரம் 2-வது வசனத்தை பார்ப்போம். கிறிஸ்து நமக்காக தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்பு கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்.

எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் பின் வாங்கிப்போன ஜனங்களை முன்னோக்கி செல்லுவதற்கு மூன்று அழைப்புகளை அருளுகின்றது என்பதை நாம் பார்த்து வருகின்றோம். வரும் முதல் அழைப்பு தனித்தனியாக கர்த்தரின் சித்தம் மட்டும் செய்வதற்கு உங்களை தத்தம் செய்து விடுங்கள் என்பதே ஆகும்.

18.3 போஜனபலி-ஐக்கியமாக வாழ்

தன் படைப்பை கர்த்தருக்கு செலுத்துகிறவன் சர்வாங்க தகனபலிக்காகிலும் மற்ற பலிக்காகிலும் ஒரு ஆட்டுக்குட்டியுடனே, ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கும் காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியை செலுத்த கடவன். (எண். 15:4)

எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் 4 முதல் 16 வசனங்களில் இதன் விபரங்கள் தொடர்ந்து தரப்படுகின்றன. முற்றிலும் தோல்வி அடைந்த அவர்கள் இன்னும் ஒரு முறை தனித்தனியாக தங்களை கர்த்தருக்கு என்று ஒப்படைத்து விட்டால் தோல்வி என்பது வெற்றி என்பதாக மாறிவிடும். அந்த ஒப்பற்ற ஆசீர்வாதங்களை அனுபவிக்க கர்த்தருக்கு உங்களை தனித்தனியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். சுகந்த வாசனையாக அவர்கள் அன்றாட வாழ்வு கர்த்தரின் சமூகத்தில் காணப்பட வேண்டும். அந்த கோட்டிற்கு வந்த பின்னரும் கேட்டின் பிள்ளைகளாக மறுபடியும் மாறி விடாமல் இருக்க போஜனபலி என்பது தொடர்ந்து இடம்பெற வேண்டும் என்று 4-வது வசனம் கூறுகின்றது. போஜனபலி என்பது ஐக்கியம் என்பதற்கு ஓர் ஆதாரம் ஆகும்.

கர்த்தருடனும் ஐக்கியம், ஆராதனை நடத்தும் ஆசாரியனுடனும் ஐக்கியம் என்பதே போஜன பலி என்பது ஆகும். ஐக்கியம் என்பது அர்த்தம் உள்ளதாக இருந்தால் உறவுகள் என்பது ஆனந்தமாக இருக்கும். அதற்கு அடையாளமாக போஜன பலியுடன் மகிழ்ச்சிக்கு அடையாளமான எண்ணெய் சேர்க்கப்பட வேண்டும். தொடர்ந்து ஐக்கியம் என்பது அன்பான ஐக்கியமாக அமைய வேண்டும். அதற்கு அடையாளமாக போஜனபலி என்பதற்கு பயன் படுத்தப்படும் மாவு மிகவும் மெல்லிய மாவாக இருக்கவேண்டும். உள்ளம் கனிந்ததாக இருந்தால் ஐக்கியம் என்பது அன்பான ஐக்கியமாக அமைந்து விடும்.

போஜனபலி என்றால் ஐக்கியம் என்பதே ஆகும். மன மகிழ்ச்சியும் உடைந்த உள்ளமும் ஐக்கியம் என்பது தரும் சிலாக்கியங்கள் ஆகும். முற்றும் ஒப்பு கொடுத்த ஒரு வாழ்வில் நிலைத்து நிற்பதற்கு கர்த்தருடனும், கர்த்தருடைய ஊழியக்காரருடனும் ஐக்கியமாக இருந்து விடுங்கள் என்று 4-வது வசனம் எடுத்து இயம்புகின்றது.

போஜனபலி என்பது செலுத்தப்படுவதற்கு எண்ணை மெல்லிய மாவு ஆகியவை எந்த அளவிற்கு இடம்பெற வேண்டும் என்பதும் எடுத்து கூறப்படுகின்றது.

18.4 பானபலி-உறுதியாய் நிலைத்து நில்

ஏற்ற முறையில் ஐக்கியம் காக்கப்படுவதற்கு உயர்ந்த முறையில் ஒளிவு மறைவு இல்லாத உள்ளம் காக்கப்பட வேண்டும் என்று போஜன பலி வலியுறுத்துகின்றது. மேலும் தொடர்ந்து முற்றிலும் ஒப்பு கொடுக்கப்பட்ட வாழ்வில் உறுதியாய் நிலைத்து நிற்பதற்கு எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் 5,7,10 ஆகிய வசனங்களில் பானபலி என்பது மிகவும் அவசியம் என்று கூறப்படுகின்றது.

பானபலியாக காற்படி திராட்சரசத்தையும் படைக்க வேண்டும். ஆட்டு கடாவாயிருந்ததே ஆகில், பத்தில் இரண்டு பங்கானதும், ஒரு படியில் மூன்றில் ஒரு பங்காகிய எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியையும், பானபலியாக ஒரு படியில் மூன்றில் ஒரு பங்கு திராட்சரசத்தையும் கர்த்தருக்கு சுகந்த வாசனையான படைப்பாக படைக்க வேண்டும். நீ சர்வாங்க தகனபலிக்காகிலும், விசேஷித்த பொருத்தனை பலிக்காகிலும், சமாதான பலிக்காகிலும், ஒரு காளையை கர்த்தருக்கு செலுத்த ஆயத்த படுத்தும் போது, அதனோடே பத்தில் மூன்று பங்கானதும், அரைப்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியையும், பானபலியாக அரைப்படி திராட்சரசத்தையும், கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலியாக படைக்க வேண்டும். (எண். 15:5-10)

பானபலி என்பது திராட்சைபழம் பிழியப்படுவதை குறிக்கின்றது. கர்த்தருக்கு முற்றிலுமாக ஒப்பு கொடுத்தல் என்பது கர்த்தரால் முற்றிலுமாக பிழியப்படுவதற்கு சம்மதம் என்பதே ஆகும். திராட்ச பழமானது பிழியப்படும் அளவை பொறுத்தே அதன் பயனும் அமைகின்றது. கர்த்தரின் சித்தம் செய்வதற்கு இதயம் இசைவதை பொறுத்தே வாழ்வின் பயனும் அமைகின்றது. அதுவே பான பலி. தனித்தனியாக அப்படி செய்து விடுங்கள் என்று 5,7,10 ஆகிய மூன்று வசனங்களில் மூன்று முறை பானபலி என்பது குறிப்பிடப்பட்டு உள்ளது. முற்றிலும் ஒப்பு கொடுப்பது மட்டும் அல்ல. கர்த்தர் முற்றிலும் எடுத்து என்னை பயன் படுத்தட்டும் என்பதே பானபலி. தகன பலி என்பது பலிபீடத்தின் மேல் எரியும் அக்கினியினால் எரிக்க படுகின்றது. பானபலி என்பது பலிபீடத்தை சுற்றிலும் உள்ள இடங்களில் ஊற்ற படுகின்றது. பரலோகத்தின் தேவனுக்கு மனித வாழ்வுகள் பூரணமாக ஒப்பு கொடுக்கப்படும் பொழுது பூலோக மனிதர்களுக்கு அப்படிப்பட்ட வாழ்வுகள் பயனாக மாறிவிடுகின்றது. அனைவரும் வளம் பெற்று வாழ்வதற்கு உரமாக மாறி விடுவதே பானபலி என்பது ஆகும்.

ஆவி ஆத்துமா சரீரம் அனைத்தும் கர்த்தரின் மகிமைக்காக பிழிய படுவதற்கு ஆயத்தமாக இருக்கிறேன். இதோ நான் பானபலியாக வார்க்கப்பட்டு போகிறேன் என்று பரிசுத்த பவுல் தீமோத்தேயு என்பாருக்கு எழுதிய 2-வது கடிதத்தில் 4:6-வது வசனத்தில் கூறுகின்றார்.

படுதோல்வி கண்டவர்களுக்கு பரம வெற்றி காத்து நிற்கின்றது. ஆனால் அதற்கு முன்னதாக அவர்கள் செய்ய வேண்டிய மூன்று குறிப்புகள் கூறப்படுகின்றது. முதலாவதாக தனித்தனியாக உங்களை கர்த்தருக்கு ஒப்பு கொடுத்து விடுங்கள். இரண்டாவதாக அந்த அனுபவம் நீடித்து நிலைக்க கர்த்தருடனும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் உடனும் ஒளிவு மறைவு இன்றிய ஐக்கியத்தை காத்து கொள்ளுங்கள். மூன்றாவதாக வாழ்க்கை என்பதில் கர்த்தர் தரும் வாய்ப்புகளும் வரங்களும் வளமும் சுகமும் நலனும் பெலனும் கர்த்தருக்காக மட்டுமே பிழிய பட்டு விடுவதற்கு உங்களை ஒப்பு கொடுத்து விடுங்கள் என்று மூன்று குறிப்புகள் வருகின்றன.

18.5 சமாதானபலி-பின் வாங்கியது போதும், முன்னாக செல்

பின்வாங்கி போன வாழ்வு முன்வாங்கி செல்லுவதற்கு சமாதானபலி அடுத்தாற்போல் வருகின்றது. சமாதானபலி என்பது அதனை எடுத்து வந்தவரும் கர்த்தரிடம் அதனை எடுத்து செலுத்துகின்றவரும் சேர்ந்து உட்கொள்ளும் பலி ஆகும்.

கர்த்தரிடம் கொடுக்கப்பட்டதை கர்த்தர் இரண்டாக பிரித்து ஒரு பங்கை ஆசாரியனுக்கும் மறு பங்கை செலுத்த வந்தவருக்கும் வழங்குகின்றார். விருந்தினர் ஆசாரியரும் சபை மக்களும் ஆகும். விருந்து கொடுக்கின்றவர் கர்த்தரே ஆகும். இதுவே சாமாதான பலி என்பது ஆகும். அது முற்றிலும் ஒப்பு கொடுத்த பின்னர் வாழ்வில் அவர்கள் காணப்போகும் உச்சக்கட்டம் ஆகும். விழுந்தும் முறிந்தும் காணப்படும் நீங்கள் திகைக்க வேண்டாம். கலங்க வேண்டாம். வாழ்வில் உச்ச கட்டம் காண்பதற்கு இதோ வாய்ப்பு தருகின்றேன் என்று எண்ணாகமம் 15-வது அதிகாரம் எடுத்து இயம்புகின்றது.

இன்னும் ஒரு முறை விரைந்து முன் வாருங்கள். வாழ்வின் சிகரங்களை தொடுவதற்கு இதோ எனக்கு கீழ்படியுங்கள் என்று தகனபலி, போஜனபலி, பானபலி, சமாதானபலி என்று நான்கு பலிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அந்த நான்கு பலிகளும் அன்று ஒருநாள் எகிப்தில் இருந்து புறப்பட்டு வந்த அனைவருக்கும் உரித்தானது என்று 13 முதல் 16 வசனங்கள் வரை கூறப்பட்டு உள்ளன.

> *இந்த பிரகாரமாகவே ஒவ்வொரு மாட்டுக்காகிலும், ஆட்டு கடாவுக்காகிலும், செம்மறியாட்டு குட்டிக்காகிலும், வெள்ளாட்டு குட்டிக்காகிலும் செய்து படைக்க வேண்டும். நீங்கள் படைக்கிறவைகளின் இலக்கத்திற்கு தக்கதாய் ஒவ்வொன்றிற்காகவும் இந்த பிரகாரம் செய்யவேண்டும். (எண். 15:11-12)*

சுகந்த வாசனையான தகன பலியோடு போஜன பலியையும் சேர்த்து படைக்கும் போது அது கர்த்தருக்கு ஏற்ற சமாதான பலியாக ஆகிறது.

> *சுதேசத்தில் பிறந்தவர்கள் யாவரும் கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலியை செலுத்தும் போது இவ்விதமாகவே செய்யவேண்டும். உங்களிடத்தில் தங்கியிருக்கிற அந்நியனாவது, உங்கள் நடுவிலே உங்கள் தலைமுறைதோறும் குடியிருக்கிறவனாவது, கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலி செலுத்த வேண்டுமானால், நீங்கள் செய்கிறபடியே அவனும் செய்ய வேண்டும். (எண். 15:13-14)*

கர்த்தரின் பார்வையில் மனிதர்கள் அனைவரும் சம மதிப்பு பெற்றவர்கள். அனைவருக்கும் கர்த்தர் அருளும் பிரமாணம் ஒரே பிரமாணம் என்பதே ஆகும்.

சபையாராகிய உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும் ஒரே பிரமாணம் இருக்கவேண்டும் என்பது உங்கள் தலைமுறைகளில் நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது; கர்த்தருக்கு முன்பாக அந்நியனும் உங்களை போலவே இருக்க வேண்டும். உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும் ஒரே பிரமாணமும் ஒரே முறைமையும் இருக்கக்கடவது என்று சொல் என்றார். (எண். 15:15-16)

ஏற்ற தாழ்வுகள் என்பது கர்த்தரின் பார்வையில் இல்லை. மேலும் கர்த்தரிடம் இணைந்து வாழும் முறையும் ஒரே முறை என்பதே ஆகும். பல முறைகள் இல்லை. இவை இரண்டும் எண்ணாகமம் 15-வது அதிகாரம் 15,16 ஆகிய இரண்டு வசனங்களிலும் கூறப்பட்டு உள்ளன.

கர்த்தருடைய பிரமாணங்கள் காலப்போக்கிற்கு ஏற்ப மாறுவது இல்லை. ஜனங்கள் மனம் மாறினாலும் கர்த்தரின் பிரமாணங்கள் மாறுவது இல்லை. ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றும் இல்லை என்று கலாத்தியர் நிரூபம் 5:22,23 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. அந்த பிரமாணங்கள் கால போக்கிற்கு ஏற்ப மாற்ற படுவது இல்லை. இந்த பிரமாணத்தின்படி நடந்து வருகின்றவர்கள் எவர்களோ அவர்களின் இதயம் சமாதானம் பெற்று ஓங்கும் என்று கலாத்தியர் நிரூபம் 6:16-வது வசனத்தில் கண்டு கொள்ளலாம். அந்த உன்னதமான பிரமாணத்தை உள்ளம் கடை பிடிக்க ஒரே ஒரு அணுகு முறை மட்டுமே உண்டு என்று 16-வது வசனம் கூறுகின்றது. அந்த முறை கர்த்தர் மீது அவர்கள் வைக்க போகும் விசுவாசம் என்பதே ஆகும். ''விருத்தசேதனம் உள்ளவர்களை விசுவாசத்தினாலும், விருத்தசேதனம் இல்லாதவர்களை விசுவாசத்தின் மூலமாகவும் நீதிமான்கள் ஆக்குகிற தேவன் ஒருவரே'' என்று பரிசுத்த பவுல் ரோமர் என்பாருக்கு எழுதின நிரூபம் 3:30-வது வசனத்தில் வாசிக்கின்றோம். அதனை தொடர்ந்து 1 கொரிந்தியர் 12:13-வது வசனத்தையும் பார்ப்போம். ''நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டோம்.''

படு தோல்வி கண்டு படு வேதனையுடன் சென்று கொண்டு இருக்கும் மக்களுக்கு எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் 1 முதல் 16 வசனங்கள் ஓர் புதிய நம்பிக்கையை ஊட்டுகின்றன.

தனித்தனியாக உங்களை முற்றிலுமாக கர்த்தரிடம் ஒப்படைத்து விடுங்கள். அப்பொழுது உங்கள் தோல்விகள் அனைத்தும் பெரும் வெற்றிகளாக மாறிவிடும். உங்கள் கவலைகள் அனைத்தும் பெரும் சந்தோஷங்களாக மாறிவிடும். நாளைய தினம் இனிதாக மாறிவிடும்.

கானானுக்குள் கடந்து சென்று இருக்க வேண்டியவர்கள் வனாந்திரத்தில் நடந்து செல்லுவதை பார்த்து வருகின்றோம். விசுவாசம் என்பது குன்றும் பொழுது வாழ்நாள் எல்லாம் வீண் நாளாக கடந்து செல்லுவதை பார்த்து வருகின்றோம். நம்முடைய விசுவாசமே

உலகத்தை ஜெயிக்கும் ஜெயம் என்று யோவான் முதலாவது நிரூபம் 5-வது அதிகாரம் 4-வது வசனம் கூறுகின்றது.

18.6 ஏறெடுத்து படைக்கும் காணிக்கை-குடும்பமாக அர்ப்பணித்து விடு

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: (எண். 15:17)

இந்த அதிகாரத்தில் இரண்டாவது முறையாக கர்த்தர் மோசேயை நோக்கி பேசுகின்றார். முதல் முறை தனி தனியாக ஜனங்கள் தங்களை பரிசோதித்து பார்த்து பரிசுத்தம் ஆகட்டும் என்றவர் இரண்டாவது முறை குடும்பம் குடும்பமாக ஜனங்கள் தங்களை எனக்கு பிரதிஷ்டை செய்யட்டும் என்று கூறுகின்றார்.

நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்களை அழைத்து கொண்டுபோகிற தேசத்தில் நீங்கள் சேர்ந்து, தேசத்தின் ஆகாரத்தை புசிக்கும்போது, கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கும் காணிக்கையை செலுத்த கடவீர்கள். (எண். 15:18-19)

நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவெனில், என்று 18-வது வசனம் துவங்குகின்றது. காலேப் யோசுவா போன்று எப்படியாவது கானான் கண்டு அடைந்து விட வேண்டும் என்று காத்து கொண்டு இருக்கும் மக்களுக்கு நீ சொல்ல வேண்டியதாவது, வனாந்திரம் என்பது நமது முடிவு அல்ல. சுதந்திர பூமியே நமது முடிவு என்ற முடிவிற்குள் வந்த ஜனங்களுக்கு நீ கூற வேண்டியதாவது அவிசுவாசம் எதுவும் இன்றி விசுவாசம் என்ற கோல் ஊன்றி நன்றியுடன் நடந்து செல்லும் பிரித்து எடுக்கப்பட்ட என் ஜனங்களுக்கு நீ சொல்ல வேண்டியது என்னவென்றால் என்று கர்த்தர் தமது இரண்டாவது உரையை துவக்குகின்றார்.

நான் உங்களை அழைத்து கொண்டு போகிற தேசத்தில் நீங்கள் சேர்ந்து என்று அதே வசனத்தில் தொடருகின்றார். சென்று வந்தவர்கள் சொன்னதினால் அல்ல. நான் முன் சென்று வழி நடத்துவதினால், நான் அழைத்து செல்லுவதினால் என்று கர்த்தர் உரைக்கின்றார். முன்பு அடிமைத்தன வாழ்வில் இருந்து வெளியே இழுத்து கொண்டு வந்தவர் இப்பொழுது சுதந்தர வாழ்விற்கு அழைத்து கொண்டு செல்லுகின்றார்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்து கொள்ளுவேன் என்று பரி. யோவான் 14:3-வது வசனம் கூறுகின்றது. கானான் செல்லுவதற்கு அன்று கர்த்தர் வழி நடத்தினார். பரம கானான் செல்லுவதற்கு கர்த்தராகிய இயேசு இன்றும் வழி நடத்துகின்றார். வளமும் செழிப்பும் உள்ள வாழ்விற்கு, பாத்திரம் நிரம்பி வழியும் பூமிக்கு, பாலும் தேனும் ஓடும் மண்ணிற்கு நான் அழைத்து செல்லுவேன் என்று எண்ணாகமம் 15-வது அதிகாரம் 18-வது வசனத்தில் கர்த்தர் உறுதி அளிக்கின்றார். வளமும் செழிப்பும் பெற்ற பூமி சென்ற பின்னர் சோர்ந்து போய் விடும் நேரங்கள் உங்கள் வாழ்க்கையில் நிச்சயமாக வந்தே தீரும். ஆனால் தனித்தனியாகவும் குடும்பமாகவும் பரிசுத்த சந்ததி ஆகவும் நீங்கள் உங்களை எனக்கு அர்ப்பணித்து வாழும் வரை நீங்கள் விழ போவது இல்லை. தனித்தனியாக ஒப்பு கொடுங்கள் என்று முன்னதாக கூறினேன். இப்பொழுது

நீங்கள் உங்களை குடும்பம் குடும்பமாக எனக்கு ஒப்பு கொடுங்கள் என்று கர்த்தர் 18 முதல் 21 வசனங்கள் வரை எடுத்து கூறுகின்றார்.

> *உங்கள் பிசைந்த மாவினால் செய்த முதற் பலனாகிய அதிரசத்தை ஏறெடுத்து படைப்பீர்களாக. போரடிக்கிற களத்தின் படைப்பை ஏறெடுத்து படைக்கிறதுபோல அதையும் ஏறெடுத்து படைக்க வேண்டும். இப்படி உங்கள் தலைமுறைதோறும் உங்கள் பிசைந்த மாவின் முதல் பலனிலே கர்த்தருக்கு படைப்பை ஏறெடுத்து படைக்க கடவீர்கள். (எண். 15:20-21)*

முன்னர் தனித்தனியாக ஒப்பு கொடுப்பதற்கு ஏற்ற பலி முறைகள் கூறப்பட்டன. இப்பொழுது குடும்பம் குடும்பமாக ஒப்பு கொடுப்பதற்கு ஏற்றதோர் காணிக்கை எடுத்து உரைக்கப்படுகின்றது. அந்த காணிக்கையின் பெயர் ஏறெடுத்து படைக்கும் காணிக்கை என்பதே ஆகும். சென்ற 12 நபர்களில் 10 நபர்கள் மனிதர்களை ஏறெடுத்து பார்த்து மனம் மடிவு கொண்டார்கள். ஆனால் கர்த்தரை நோக்கி பார்ப்பவர்களின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். அவர்கள் வெட்கப்பட்டு போவது இல்லை என்பதே இந்த காணிக்கை தெரிவிக்கும் அறிவிப்பு ஆகும். எனவே இனிமேல் முழு குடும்பமாக முழு கவனத்தையும் முழு நம்பிக்கையுடன் கர்த்தர் மீது வைத்து விடுங்கள். அப்படி செய்வதற்கு சம்மதிக்கிறோம் என்று முன் வருகின்றவர்கள் ஏறெடுத்து படைக்கும் காணிக்கை என்ற காணிக்கையை செலுத்துவதற்கு ஆயத்தம் ஆகுங்கள் என்று அறிவிப்பு வருகின்றது. ஏறெடுத்து படைக்கும் காணிக்கை என்பது கைகளை உயர்த்தி படைக்கும் காணிக்கை என்பது ஆகும்.

கைகளை உயர்த்துவது என்பது மனம் சம்மதிக்கின்றோம், மனம் மகிழ்கின்றோம் என்பதற்கு ஓர் அடையாளம் ஆகும். வளம் நிறைந்த நிலம் தந்தார். அதன் பலனில் பெற்ற விளைவில் பிசைந்த மாவினால் ஓர் காணிக்கையை வீட்டில் வைத்து குடும்பமாக தயார் செய்கின்றோம். கர்த்தர் செய்த எல்லா உபகாரங்களையும் ஒருவருக்கு ஒருவர் பேசி கர்த்தரை புகழ்ந்து கொண்டு குடும்பமாக ஓர் காணிக்கை கர்த்தருக்கு ஆயத்தம் செய்கின்றோம். அந்த காணிக்கை அதிரசம் என்பது ஆகும். ஓர் குடும்பமாக நாங்கள் கர்த்தருக்கு பயந்து நடந்தால் எங்கள் குடும்ப ஜீவியம் மதுரமாக இருக்கும் என்பதை தெரியப்படுத்த அதிரசம் என்ற பலகாரம் என்பதை ஏறெடுத்து படைக்கும் காணிக்கையாக எடுத்து செல்ல இருக்கின்றோம் என்பதே குடும்பத்தின் நபர்கள் அனைவரும் எடுக்கும் முடிவு ஆகும்.

19-வது சங்கீதம் 9,10 ஆகிய வசனங்களை பார்ப்போம். ''கர்த்தருக்கு பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாய் இருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாய் இருக்கிறது. அவைகள் பொன்னிலும் மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்பட தக்கதும் தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரம் உள்ளதுமாய் இருக்கிறது.'' வளமும் செழிப்பும் பெற்ற பூமி வந்தும் வரவும் உயர்வும் சிறக்க பெற்றும் கர்த்தர் வீட்டின் தலைவராக மாறா விட்டால் வீட்டில் மதுரம் காணப்பட போவது இல்லை. வாழ்க்கை என்பது ருசிப்பதும் இல்லை.

அதிரசம் போன்று சுவை மிக்க ஓர் வாழ்வு வரவு வருவதினால் வரும் வாழ்வு அல்ல என்பதை கர்த்தர் தெரிவிக்கின்றார். அது குடும்பத்தில் கர்த்தர் வருகை தருவதினால் வரும் வாழ்வு என்று கர்த்தர் அறிவிக்கின்றார். நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்பதே ஏறெடுத்து படைக்கும் காணிக்கை என்பது ஆகும். லேவியராகம

புத்தகத்தில் 23:10-வது வசனத்தில் அசைவாட்டும் காணிக்கை என்ற ஓர் காணிக்கை அறிமுகம் செய்யப்பட்டது. ''நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், நான் உங்களுக்கு கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய் சேர்ந்து அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது உங்கள் அறுப்பின் முதல் பலனாகிய ஒரு கதிர் கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டு வரக்கடவீர்கள்'' என்று கூறுகின்றது. வயலில் பெற்ற மகசூல் கர்த்தர் தந்த கிருபை என்பதை உணர்ந்தவர்கள் அதில் முதல் பலனை ஆலயம் வரை எடுத்து வந்து ஆசாரியனிடம் கொடுத்து அசைவாட்டும் காணிக்கையாக படையுங்கள் என்று லேவியராகம புத்தகத்தில் கூறப்பட்டது.

எண்ணாகம புத்தகம் 15:18-21 வசனங்களில் ஏறெடுத்து படைக்கும் காணிக்கை என்பது அறிமுக படுத்தப்படுகின்றது. அது நன்றி தெரிவிக்கும் காணிக்கையாக அல்ல, குடும்பமாக கர்த்தரையே இனிமேல் ஏறெடுத்து பார்த்து வாழுவோம் என்ற காணிக்கையாக படைக்க படுகின்றது. மனிதனின் முகத்தை அல்ல, எங்களை இம்மட்டும் வழி நடத்தி வந்த கர்த்தரின் முகத்தை மட்டுமே பார்த்து வாழுவோம் என்று படைக்க படுகின்றது. அடிமை வாழ்வில் இருந்து இழுத்து நெடிய தூரம் நடத்தி எங்களை குடும்பமாக பாலும் தேனும் ஓடும் பூமியில் கர்த்தர் சேர்த்தார் என்று படைக்கும் காணிக்கை. கர்த்தர் வீட்டை கட்டா விட்டால் கட்டுகின்றவர்களின் பிரயாசம் விருதா என்று அறிந்து படைக்கும் காணிக்கை. நாங்களும் எங்கள் வீட்டாரும் இரட்சிக்க பட்டோம் என்று அறிந்து படைக்கும் காணிக்கை. எங்களை கனம் பண்ணிய கர்த்தரை நாங்கள் குடும்பமாக கனம் பண்ணுகின்றோம் என்று படைக்கப்படும் காணிக்கை. நீதிமொழிகளின் புத்தகம் 3:9,10 ஆகிய வசனங்களை பாருங்கள். ''உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதல் பலனாலும் கர்த்தரை கனம் பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும். உன் ஆலைகளில் திராட்ச ரசம் புரண்டு ஓடும்''.

உங்கள் பிசைந்த மாவினால் செய்த முதற்பலனாகிய அதிரசத்தை ஏறெடுத்து படைப்பீர்களாக என்பதின்படி செய்து விட்டால் வீட்டிற்குள் வந்து விட்ட ஆசீர்வாதம் தொடர்ந்து வீட்டில் தங்கியே இருக்கும் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசி 44:30 கூறுகின்றது. உங்கள் வீட்டில் ஆசீர்வாதம் தங்கும்படிக்கு நீங்கள் பிசைந்த மாவில் முதல் பாகத்தையும் ஆசாரியனுக்கு கொடுக்கக்கடவீர்கள்.

இம்மட்டுமாக எங்கள் குடும்பத்தை நடத்தி வந்தவர் கர்த்தர் ஒருவரே என்பதை குடும்பமாக தெரிவிப்பதற்கு கொடுக்கப்படும் காணிக்கை ஏறெடுத்து படைக்கும் காணிக்கை என்பது ஆகும். இனிமேலும் எங்களை கர்த்தர் ஒருவரே வழி நடத்த குடும்பமாக எங்களை கர்த்தருக்கே ஒப்பு கொடுக்கிறோம் என்பதே ஏறெடுத்து படைக்கும் காணிக்கை என்பது ஆகும். 121-வது சங்கீதத்தை பார்ப்போம். எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தில் இருந்து ''எனக்கு ஒத்தாசை வரும். உன் காலை தள்ளாட ஒட்டார். உன்னை காக்கிறவர் உறங்கார். இதோ இஸ்ரவேலை காக்கிறவர் உறங்குவதும் இல்லை. தூங்குகிறதும் இல்லை. கர்த்தர் உன்னை காக்கிறவர். கர்த்தர் உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாய் இருக்கிறார். பகலிலே வெயிலாகிலும் இரவிலே நிலவாகிலும் உன்னை சேதப்படுத்துவதும் இல்லை. கர்த்தர் உன்னை எல்லா தீங்குக்கும் விலக்கி காப்பார். அவர் உன் ஆத்துமாவை காப்பார். கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இது முதற்கொண்டு என்றென்றைக்கும் காப்பார்.''

வாழ்க்கை என்பதை முற்றிலுமாக கர்த்தருக்கு அர்ப்பணித்து விட்டால் வாழ்க்கையில் வரும் தோல்விகளும், துயரங்களும் ஒருநாள் வெற்றியில் முடிந்து விடும் என்பதே எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் கூறும் செய்தி ஆகும். சொந்த முயற்சி செய்தும் கானான் என்பது ஜனங்களுக்கு சொந்தம் ஆகவில்லை. ஆயினும் சோர்ந்து போக வேண்டாம். செழிப்பும் நிறைவும் உள்ள ஓர் எதிர் காலத்தை கர்த்தராகிய நான் உங்களுக்கு தர இருக்கின்றேன். நான் வழங்கும் நன்மைகளையும் மேன்மைகளையும் பெற்று வாழ்வதற்கு மூன்று முக்கிய கீழ்படிதல்களை நாம் பெற்று மகிழ வேண்டும் என்று கர்த்தர் கூறிக்கொண்டு வருவதை நாம் பார்த்து வருகின்றோம்.

தனித்தனியாக எனக்கு நீங்கள் ஒவ்வொருவரும் கீழ்படிந்து வாழுங்கள் என்பதும் குடும்பம் குடும்பமாக எனக்கு கீழ்படிந்து வாழுங்கள் என்பதும் பரிசுத்த சபையாக எனக்கு கீழ்படிந்து வாழுங்கள் என்பதுமாக இந்த மூன்று படிகளையும் நீங்கள் எனக்கு கீழ்படிந்து ஏறி விடுங்கள் என்று கர்த்தர் கூறுகின்றார்.

18.7 சகல பலிகள்-முழு சமுதாயமாக அர்ப்பணித்து விடு

கர்த்தர் தரும் நன்மைகள் இதயத்திலும், இல்லத்திலும், இருக்கும் சமூகத்திலும் நிலைத்து நிற்பதற்கு கர்த்தர் தரும் மூன்று அழைப்புகளுக்கும் முற்றிலுமாக கீழ்படிந்து வாழ வேண்டும் என்பதே எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் அறிவிக்கும் அறிவிப்பு ஆகும்.

மூன்றாவதாக வரும் அழைப்பு மிகவும் முக்கியமான ஓர் அழைப்பு ஆகும். தனிமையாக மட்டும் அல்ல, குடும்பமாக மட்டும் அல்ல, பரிசுத்த ஜனமாகவும் கீழ்படிய வேண்டும். கர்த்தருக்கு அடங்கி நடக்காதவர்கள் எங்களில் எவருமே இல்லை என்று அனைவரும் சாட்சி கூற வேண்டும். அதனை கர்த்தருடைய கண்கள் காண வேண்டும். 22 முதல் 31 வசனங்களில் மூன்றாவது கீழ்படிதல் காணப்படுகின்றது. இரண்டு முறைகளில் மூன்றாவது கீழ்படிதல் பிரித்து கூறப்படுகின்றது. 22 முதல் 29 வரை ஒரு பிரிவும், 30,31 ஆகிய வசனங்கள் மறு பிரிவுமாக மூன்றாவது கீழ்படிதல் இரு பிரிவாக கூறப்படுகின்றது.

> ***கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்ன இந்த கற்பனைகள் எல்லாவற்றின் படியும், கர்த்தர் மோசேயை கொண்டு கட்டளை கொடுத்த நாள் முதற்கொண்டு அவர் உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்கும் நியமித்த எல்லாவற்றின்படியேயும் நீங்கள் செய்யாமல், (எண். 15:22-23)***

முதல் பிரிவான 22 முதல் 29 வசனங்களில் பரிசுத்த ஜனங்களில் எவரும் செய்ய தக்கதை செய்யாமல் போய் விட கூடாது என்று கூறப்படுகின்றது. இதற்கு ஓர் முக உரையாக 22,23 ஆகிய வசனங்கள் இடம் பெறுகின்றன. அதற்கு ஓர் விளக்க உரையாக 24,25,26 ஆகிய வசனங்கள் தரப்படுகின்றன. கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்ன இந்த கற்பனைகள் எல்லாவற்றின் படியும் செய்வதே செய்ய தக்கதை செய்யுதல் என்று 22-வது வசனத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம். கர்த்தர் மோசேயை கொண்டு கட்டளை கொடுத்த நாள் முதற்கொண்டு அவர் உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்கும் நியமித்த எல்லாவற்றின்படியும் பரிசுத்த சபை செய்ய வேண்டும் என்பதை 23-வது வசனத்தில் இருந்து தெரிந்து கொள்ளுகின்றோம்.

18.8 செய்ய தக்கதை செய்யாமல் இருக்காதே

அறியாமல் தவறி நடந்தாலும், சபையாருக்கு தெரியாமல் யாதொரு தப்பிதம் செய்தாலும், சபையார் எல்லாரும் கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு காளையையும், முறைமைப்படி அதற்கு ஏற்ற போஜனபலியையும், பானபலியையும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்த வேண்டும். அதினால் ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்திற்காகவும் பாவநிவிர்த்தி செய்ய கடவன். அது அறியாமையினால் செய்ய பட்ட படியாலும், அதின் நிமித்தம் அவர்கள் கர்த்தருக்கு தகனபலியையும் பாவநிவாரண பலியையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்ததினாலும், அது அவர்களுக்கு மன்னிக்க படும். அது அறியாமையினாலே ஜனங்கள் யாவருக்கும் வந்தபடியால், அது இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்திற்கும் அவர்களுக்குள்ளே தங்குகிற அந்நியனுக்கும் மன்னிக்க படும். (எண். 15:24-26)

பரிசுத்தமுள்ள சபையார் என்ற பட்டத்தை அவர்கள் பெற்ற போதிலும் சற்றும் கவனம் சிதைந்து விட்டால் தூய்மை என்பது கலைந்து போய்விடும். லேவியராகம புத்தகம் 4-வது அதிகாரத்தில் செய்ய தக்கதை செய்யாமல் போய் விடும் குற்றத்தில் ஆசாரியர், சபையார் தலைவன் அல்லது ஓர் சாதாரண மனிதன் கூட விழுந்து விடுவதற்கு நேரிடும் என்று ஏற்கெனவே கூறப்பட்டது. லேவியராகம புத்தகம் 4-வது அதிகாரம் 2,13,22,27 ஆகிய வசனங்களில் இதனை நாம் பார்த்தோம். லேவியராகம புத்தகம் 4-வது அதிகாரம் 2 முதல் 12 வசனங்களில் அபிஷேகம் செய்யப்பட்ட ஊழியக்காரன் கூட செய்ய வேண்டியவைகளை செய்யாமல் செய்ய வேண்டாதவைகளை செய்ய நேரிடும் என்றும் படித்தோம். லேவியராகமம் 4-வது அதிகாரம் 13 முதல் 21 வசனங்களில் உலகம், மாம்சம், பிசாசு என்ற மூன்று பாவ அழைப்புகளுக்கும் இனிமேல் இணங்கி வாழ போவதே இல்லை என்று பறை சாற்றிய பரிசுத்த சபையார் கூட செய்ய தக்கதை செய்யாமல் போய்விட நேரிடும் என்றும் நாம் பார்த்தோம். தொடர்ந்து லேவியராகமம் 4-வது அதிகாரம் 22 முதல் 26 வசனங்களில் ஜனங்களின் சார்பில் தெரிந்து எடுக்கப்பட்ட தலைவர்கள்கூட, நாங்கள் எங்களை கர்த்தருக்கே ஒப்பு கொடுத்து இருக்கிறோம் என்று சாட்சி கூறி முன் நின்ற தலைவர்கள்கூட செய்ய வேண்டியவைகளை செய்யாமல் செய்ய வேண்டாதவைகளில் ஈடுபட நேரிட்டு விடும் என்று கூறப்பட்டது. தொடர்ந்து அதே அதிகாரம் 27 முதல் 35 வசனங்களில் ஒரு தனிப்பட்ட விசுவாசிகூட செய்ய வேண்டியதை செய்யாமல் செய்ய வேண்டாததை செய்துவிட முடியும் என்று பகரப்பட்டது. ''இப்படியிருக்க, தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க கடவன்'' என்று பரிசுத்த பவுல் கொரிந்தியர் என்பாருக்கு எழுதிய முதலாவது நிரூபம் 10:12-வது வசனம் கூறுகின்றது. ''அக்கிரமத்திற்கு திரும்பாதபடிக்கு எச்சரிக்கையாய் இரும்'' என்று யோபுவின் புத்தகம் 36:21-வது வசனம் கூறுகின்றது. லேவியராகம புத்தகம் 16:29,34 ஆகிய வசனங்களில் கூறப்பட்டு உள்ளபடி ஒவ்வொரு வருடமும் 10-வது மாதம் 7-வது நாள் பாவ நிவிர்த்தி இடம்பெற வேண்டும் என்று கர்த்தரால் அறிவிக்க பட்டது. அப்பொழுது ஆசாரியன் செய்ய தக்கவைகளை செய்யாமல் போன அனைத்து பாவத்திற்காகவும் பாவ நிவிர்த்தி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது.

கானான் என்ற இடத்தை நோக்கி சென்று கொண்டு இருக்கும் ஜனங்களை 74-வது சங்கீதம் 2-வது வசனம் கர்த்தர் பூர்வ காலத்தில் சம்பாதித்த சபை என்று அழைக்கின்றது. பத்து கற்பனைகள் என்ற உடன்படிக்கைக்கு உடன் பட்டவர்கள் அந்த சபையின் உறுப்பினர்களாக அன்று மாறினார்கள். பரம கானான் நோக்கி இன்று சென்று கொண்டு இருக்கும் விசுவாசிகளின் கூட்டத்தை தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்து கொண்ட சபை என்று அப்போஸ்தலர் நடபடிகள் 20:28-வது வசனம் கூறுகின்றது. கர்த்தரின் சபை செய்ய தக்கவைகளை மட்டுமே செய்வதற்கு உரிமை பெற்று இருக்கின்றது. கர்த்தருடைய ஜனங்கள் செய்ய தக்கவைகளை செய்யாமல் போய்விட்டால் அது ஒரு பாவம் என்று எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் 22 முதல் 29 வசனங்கள் எடுத்து கூறுகின்றன.

> *ஒருவன் அறியாமையினால் பாவம் செய்தானாகில், ஒரு வயதான வெள்ளாட்டை பாவநிவாரண பலியாக செலுத்த கடவன். அப்பொழுது அறியாமையினால் பாவம் செய்தவனுக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யும்படி கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்ய கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்க படும். இஸ்ரவேல் புத்திரராகிய உங்களில் பிறந்தவனுக்கும் உங்களுக்குள்ளே தங்கும் அந்நியனுக்கும், அறியாமையினால் பாவம் செய்தவனிமித்தம், ஒரே பிரமாணம் இருக்க வேண்டும். (எண். 15:27-29)*

கர்த்தராகிய தேவன் மோசேயின் மூலமாக கூறிக்கொண்டு இருக்கும் ஏராளமான கற்பனைகளும் ஏராளமான பிரமாணங்களும் யாத்திராகம புத்தகம் 19-வது அதிகாரத்தின் பின் பகுதியில் துவங்கியது.

10 கற்பனைகளுடன் எண்ணற்ற பிரமாணங்களும் இணைந்து கொடுக்க பட்டது. அவைகள் அனைத்தையும் முறைப்படி விளங்கி கொள்ள முடியாத காரணத்தினாலோ, மனதில் பதித்து கொள்ள முடியாத காரணத்தினாலோ அறியாமல் ஒருவன் தவறு செய்து விட்டால் வருடம் ஒரு முறை இடம் பெரும் பாவ நிவிர்த்தி ஆராதனை லேவியராகம புத்தகம் 16-வது அதிகாரத்தில் அமுல் படுத்த பட்டது. இப்பொழுது எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் 24 முதல் 28 வசனங்களில் அறியாமல் செய்த பாவமாக செய்ய தக்கதை செய்யாமல் போய்விடும் பாவம் கருத படுகின்றது. அப்படிப்பட்ட தவறுதல்களுக்கு கர்த்தரிடம் மன்றாடி மன்னிப்பு கேட்டு கொள்ளலாம் என்றும் ஒரு வழி கூற படுகின்றது. செய்ய தக்கதை செய்யாமல் போய் விடுவது பாவம் என்று கூறப்படுகின்றது. அந்த பாவத்திற்கு பரிகாரம் தேடுவதற்கு தகனபலி, போஜனபலி, பானபலி, பாவ நிவாரணபலி என்ற நான்கு பலிகளை செலுத்தி விடுங்கள் என்று 24-வது வசனம் கூறுகின்றது.

இன்னும் ஒரு முறை என்னை முற்றிலுமாக கர்த்தருக்கு ஒப்பு கொடுக்கிறேன் என்பதை தகனபலி என்பது குறிக்கின்றது. இனிமேல் திரும்பவும் பாவத்திற்குள் நான் விழுந்து விடாமல் இருக்க கர்த்தருடனும், கர்த்தருடைய ஊழியக்காரருடனும் ஐக்கியத்தை காத்து கொள்ளுவேன் என்பதற்கு போஜனபலி என்பது ஒரு எடுத்து காட்டாக இருக்கின்றது. என்னுடைய வாழ்க்கை கர்த்தருக்கு பிரியமானவைகள் எவைகளோ அவைகளுக்காக மட்டுமே பயன் படட்டும் என்பதை பானபலி காட்டுகின்றது. செய்ய தக்கதை செய்யாமல் போன பாவத்திற்காக மனம் வருந்துகின்றேன் என்பதை பாவ நிவாரணபலி எடுத்து காட்டுகின்றது. உலகத்தில் வாழும் பரிசுத்த ஜனங்களாகிய அவர்கள் எந்த நேரத்திலும்

செய்ய தக்கதை செய்யாமல் போய் விடுவதற்கு வாய்ப்பும், வழியும் இருக்கின்றது. இதனை நாம் எண்ணாகம புத்தகம் 14-வது அதிகாரத்தில் பார்த்தோம். 12 நபர்கள் கானான் சென்று பார்த்து வந்தார்கள். அவர்களில் 10 பேர் கூறிய துர்ச்செய்தியை பெரும்பான்மையான மக்கள் நம்பி விட்டார்கள். செய்ய தக்கதை செய்யாமல் போய் விட்டார்கள். எனவே 40 நாட்களுக்கு பதிலாக இப்பொழுது 40 வருடங்கள் அலைந்து திரிய இருக்கின்றார்கள்.

செய்ய தக்கவைகளை செய்யாமல் போகும் பொழுது மனித வாழ்வின் சக்தியும், காலங்களும் வீணாக சென்று விடுகின்றன என்பதை இந்த அதிகாரம் எடுத்து உரைக்கின்றது. எனவே எச்சரிக்கையாக வாழ்ந்து கொள்ளுங்கள் என்று இன்னும் ஒரு முறை வற்புறுத்துகின்றது.

மனித வாழ்வில் செய்ய தக்கவைகள் எவை என்பதை புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் பரி.பவுல் கலாத்தியர் என்பாருக்கு எழுதின நிரூபத்தில் 5:22,23 ஆகிய வசனங்களில் எடுத்து கூறுகின்றார். அவைகளை நம்முடைய ஆயுசு நாட்களில் நாம் ஒவ்வொருவரும் செய்துவிட கர்த்தர் உதவி செய்வாராக. ''ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றும் இல்லை'' என்று அந்த வசனங்கள் கூறுகின்றன. பரிசுத்தம் நிறைந்த கர்த்தராகிய தேவனுக்கு பின்னாக செல்லுகின்றோம் என்று கூறுகின்றவர்கள் செய்ய தக்கவைகள் அனைத்தும் பரிசுத்தம் என்பதாகவே இருக்கும் என்பதே கர்த்தர் அறிவிக்கும் அறிவிப்பு ஆகும்.

வாழ்க்கையில் வரும் தோல்விகளும், ஏமாற்றங்களும் வெற்றியாக மாறிவிட சர்வ வல்லமை உள்ள கர்த்தரிடம் உங்களை ஒப்புவித்து விடுங்கள் என்பதை மிகவும் தெளிவாக எண்ணாகமம் 15-வது அதிகாரம் எடுத்து உரைக்கின்றது. அதன் வரிசையில் வரும் மூன்றாவது ஒப்பு கொடுத்தல் முழு சபையாக ஒப்பு கொடுப்பது என்பதே ஆகும். அவ்விதமான அர்ப்பணிப்புக்கு இரண்டு ஆதாரங்கள் கூறப்படுகின்றன.

முதலாவது ஆதாரம் பரிசுத்த ஜனங்களில் எவரும் செய்ய தக்கதை செய்யாமல் இருக்க மாட்டார்கள் என்பது. கர்த்தருக்கும் கர்த்தருடைய ஆலயத்திற்கும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் ஒவ்வொருவரும் செய்ய தக்கது என்ன என்பது இரண்டே வார்த்தையில் லேவியராகம புத்தகத்தில் ஏற்கெனவே எடுத்து கூறப்பட்டது. ஒன்று பரிசுத்தம். மற்றொன்று அன்பு. செய்யதக்கதை செய்யாமல் இருக்க வேண்டாம் என்று 22 முதல் 29 வசனங்களில் கூறப்பட்டது. 30,31 ஆகிய இரண்டு வசனங்களிலும் செய்ய தகாததை செய்யவே வேண்டாம் என்று கூறப்படுகின்றது.

18.9 செய்ய தகாததை செய்யாதே

அன்றியும் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும் அந்நியர்களிலாகிலும், எவனாவது துணிகரமாய் யாதொன்றை செய்தால், அவன் கர்த்தரை நிந்திக்கிறான்; அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போக வேண்டும். அவன் கர்த்தரின் வார்த்தையை அசட்டை பண்ணி, அவர் கற்பனையை மீறினபடியால், அந்த ஆத்துமா அறுப்புண்டு போக வேண்டும், அவன் அக்கிரமம் அவன் மேல் இருக்கும் என்று சொல் என்றார். (எண். 15:30-31)

எபிரெயர், எபிரெயர் அல்லாதவர்கள் என்ற பாகுபாடு தேவனுடைய சமூகத்தில் இல்லை என்று 30-வது வசனம் கூறுகின்றது. கர்த்தாதி கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்ட மக்கள் அனைவர் மீதும் கர்த்தர் பாராட்டும் அன்பும், கர்த்தர் எதிர்பார்க்கும் கீழ்படிதலும் ஒரே சீரானது என்பதே 30-வது வசனத்தின் துவக்கம் ஆகும்.

பரி.பவுல் ரோமர் நிரூபம் 3:29-வது வசனத்தில் தேவன் யூதருக்கு மாத்திரமா தேவன் என்று கேட்டு, அப்படி அல்ல, அவர் அனைவருக்கும் உரியவர் என்று தொடர்ந்து அந்த வசனங்களில் விளக்குகின்றார். அனைவரும் தேவனுடைய சிருஷ்டிகள் என்று வேத புத்தகம் கூறுகின்றது. அனைவரிடமும் இருந்து தேவன் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான் என்றும் கூறப்படுகின்றது. பாவத்தில் இருந்து விடுபட்டு வாழுங்கள் என்பதே கர்த்தர் மனிதர்களிடம் இருந்து எதிர்பார்க்கும் எதிர்பார்ப்பு ஆகும். எவ்வித பட்ச பாதமும் கர்த்தரிடம் இல்லை என்பதை பரி.பேதுருவும் கூறுவதை அப்போஸ்தலர் நடபடிகள் 10:34,35 ஆகிய வசனங்களில் காண்கின்றோம். ''அப்பொழுது பேதுரு பேச தொடங்கி தேவன் பட்ச பாதம் உள்ளவர் அல்ல என்றும் எந்த ஜனத்திலாயினும் அவருக்கு பயந்து இருந்து நீதியை செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்'' என்று அந்த வசனங்கள் கூறுகின்றன. தொடர்ந்து ரோமர் நிரூபம் 10:12-வது வசனத்தையும் பார்ப்போம். ''யூதன் என்றும் கிரேக்கன் என்றும் வித்தியாசமே இல்லை. எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மை தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராய் இருக்கிறார்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. எனவே நான் உம்மை அறியாதவர்கள் நடுவிலும் உம்மை அறிக்கை பண்ணி, உம்முடைய நாமத்தை சொல்லி சங்கீதம் பாடுவேன் என்று பரிசுத்த பவுல் கூறுவதை ரோமர் நிரூபம் 15-வது அதிகாரம் 9-வது வசனத்தின் பின் பகுதியில் வாசிக்கின்றோம். 2 சாமுவேல் 22:50-வது வசனத்தை சுட்டி காட்டி பரிசுத்த பவுல் அவ்வாறு கூறுகின்றார். தொடர்ந்து 18-வது சங்கீதம் 49-வது வசனத்தையும் பார்ப்போம். ''இதினிமித்தம் கர்த்தாவே ஜாதிகளுக்குள்ளே உம்மை துதித்து உம்முடைய நாமத்திற்கு சங்கீதம் பாடுவேன்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. கர்த்தருக்கு முன்பாக எவ்வித வித்தியாசமும் பாவம் பரிசுத்தம் என்பதில் இல்லை என்பதும், பாவம் செய்யும் ஆத்துமா சாகும் என்பதும் அனைவருக்கும் சமமாக இருக்கின்றது என்பதை வேத புத்தகம் தெளிவாக எடுத்து கூறுகின்றது. கலாத்தியர் நிரூபம் 3:28-வது வசனம், ''யூதன் என்றும், கிரேக்கன் என்றும் இல்லை. அடிமை என்றும் சுயாதீனன் என்றும் இல்லை. ஆண் என்றும், பெண் என்றும் இல்லை. நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாய் இருக்கிறீர்கள்'' என்று கூறுகின்றது. பாவம், பரிசுத்தம் என்பதில் கர்த்தர் எவருக்கும் எவ்வித வித்தியாசமும், எவ்வித பாகுபாடும் காண்பிப்பது இல்லை.

செய்ய தகாததை செய்யும் பாவம் துணிகரமான பாவம் என்று எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் 30-வது வசனம் கூறுகின்றது. ''துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கி காரும். அவைகள் என்னை ஆண்டு கொள்ள ஒட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமனாகி பெரும் பாதகத்துக்கு நீங்கலாய் இருப்பேன்'' என்று 19-வது சங்கீதம் 13-வது வசனம் கூறுகின்றது. துணிகரமான பாவ வாழ்க்கையில் தொடர்ந்து நீடிக்கின்றவர்களுக்கு பெரும் பாதகங்கள், எவராலும் தடுக்க முடியாத தீங்குகள், தண்டனைகள் வரும் என்று அந்த வசனம் எச்சரிக்கின்றது. அவ்விதமான எச்சரிப்பை கர்த்தர் இந்த வசனங்களில் எடுத்து கூறுகின்றார். செய்ய தகாத செயல் இது என்று தெரிந்தும் துணிந்து செய்யும் பாவத்திற்கு பரிகாரம் இல்லை.

இது என்னுடைய வாழ்க்கை. நான் செய்வது என்னுடைய பிரியம். என்னுடைய தீர்மானம் என்று பரிசுத்தம் என்பதை புறக்கணித்து பாவம் என்பதற்கு தீவிரித்து செல்லுவது கர்த்தருக்கு முன்பாக சரியான வாழ்வு அல்ல என்பதை வசனம் சுட்டி காட்டுகின்றது. அதனுடைய முடிவு சாவே என்று வேதம் கூறுகின்றது. லேவியராகம புத்தகம் 5:2,3,4 ஆகிய வசனங்களில் மனிதனின் மறைவான வாழ்க்கைகள் கர்த்தரின் பார்வைக்கு மறைவானவைகள் அல்ல என்று ஏற்கெனவே எடுத்து கூறின. எனவே துணிகரமான தவறு செய்கின்றவன் மூன்று விதங்களில் துணிகரமானவனாக கர்த்தரின் பார்வையில் காண படுகின்றான்.

முதலாவது துணிகரமான செயல் செய்பவன் கர்த்தரை நிந்திக்கிறான் என்பதே ஆகும். செய்வது தவறு என்று கர்த்தரும், கர்த்தர் மனிதனுக்கு தந்த மனசாட்சியும் கூறியும் அதனை தவிர்த்து வாழாதவன் கர்த்தரை நிந்திக்கிறான். ''அவன் கர்த்தரை நிந்திக்கிறான். அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போக வேண்டும்'' என்று எண்ணாகமம் 15-வது அதிகாரம் 30-வது வசனம் கூறுகின்றது. 'கர்த்தரை நிந்திக்கிறான்' என்பதின் சரியான பொருள் அவன் தவறு செய்யும் பொழுது உடனுக்கு உடன் தண்டனை வராதபடியினால் கர்த்தர் என்பவர் ஓர் உண்மையான ஒருவராக அவனுக்கு தெரியவில்லை. மனம்போல் வாழ்வதற்கு தடையாக தனக்கு உலகத்தில் எவருமே இல்லை என்ற முடிவிற்கு அவன் வந்து விடுகின்றான். கர்த்தர் அவன் தவறு செய்யும் பொழுது உடனுக்கு உடன் அவனை தண்டிக்காமல் இருக்க காரணம் கர்த்தர் அவன் மேல் வைத்து இருக்கும் தயவு, கிருபை என்பதை அவன் உணரவில்லை. அதனை அவன் உணராமல் தொடர்ந்து, துணிந்து பாவத்தில் முன் செல்லும் பொழுது அவன் கர்த்தரின் கிருபையை நிந்திக்கின்றான். எபிரெயர் நிருபம் 10:29-வது வசனத்தில், ''தேவனுடைய குமாரனை காலின் கீழ் மிதித்து தன்னை பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் என்று எண்ணி கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்கு பாத்திரவானாய் இருப்பான் என்பதை யோசித்து பாருங்கள்'' என்று பார்க்கிறோம்.

இரண்டாவது துணிகரமான செயல் அவன் கர்த்தரின் வார்த்தையை அசட்டை செய்கின்றான் என்பது ஆகும். கர்த்தரின் வார்த்தை அக்கினியை போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியை போலும் இருக்கிறது என்று எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 23:29-வது வசனம் கூறுகின்றது. ''தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும், கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கதக்கதாக உருவ குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது'' என்று எபிரெயர் நிருபம் 4:12-வது வசனம் கூறுகின்றது. துணிகரமான பாவத்தில் துணிந்து முன் செல்லுகின்றவன் கர்த்தரின் வார்த்தையை அசட்டை செய்கின்றான். அவனுடைய மனசாட்சியை அவன் மழுக்கி விட்டாலும் தேவனுடைய கோபத்திற்கு அவன் தப்ப முடியாது என்பது தீர்ப்பாக வசனங்களில் கொடுக்கப்படுகின்றது.

மூன்றாவது அவன் செய்யும் துணிகரமான செயல் கர்த்தரின் கற்பனைகளை மீறுகிறான் என்பதே ஆகும். திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசம் அடைவான். கற்பனைக்கு பயப்படுகிறவனோ பலன் அடைவான் என்று நீதிமொழிகளின் புத்தகம் 13:13-வது வசனம் கூறுகின்றது. செய்ய தகாததை செய்கின்றவன் துணிந்து பாவம் செய்கின்றவனாக கர்த்தருக்கு முன்பாக காண படுகின்றான்.

துணிந்து பாவம் செய்கின்றவன் முதலாவதாக தனக்கு நேராக வரும் கர்த்தருடைய கிருபையை போக்கடிக்கின்றான். இரண்டாவதாக கர்த்தரின் வார்த்தைக்கு தன்னுடைய மனதை கல்லாக மாற்றுகின்றான். மூன்றாவதாக கர்த்தரின் கற்பனைகள் எவை என்று அறிந்தும் அவைகளை மீறி நடக்கின்றான். இன்னும் ஒரு முறை 19-வது சங்கீதம் 13-வது வசனத்தை பார்ப்போம். தொடர்ந்து 14-வது வசனத்தையும் ஒரு ஜெபமாக பார்ப்போம்.

''துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கி காரும். அவைகள் என்னை ஆண்டு கொள்ளவொட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமனாகி பெரும் பாதகத்திற்கு நீங்கலாய் இருப்பேன். என் கன்மலையும், என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாய் இருப்பதாக.''

18.10 துணிகரமான பாவத்தை விட்டு விலகு

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் இருக்கையில், ஓய்வு நாளில் விறகுகளை பொறுக்கி கொண்டிருந்த ஒரு மனிதனை கண்டு பிடித்தார்கள். விறகுகளை பொறுக்கின அந்த மனிதனை கண்டு பிடித்தவர்கள், அவனை மோசே ஆரோன் என்பவர்களின் இடத்துக்கும் சபையார் அனைவர் இடத்துக்கும் கொண்டு வந்தார்கள். அவனுக்கு செய்ய வேண்டியது இன்னதென்று தீர்க்கமான உத்தரவு இல்லாத படியினால், அவனை காவலில் வைத்தார்கள். கர்த்தர் மோசேயை நோக்கி: அந்த மனிதன் நிச்சயமாய் கொலை செய்யப்பட வேண்டும், சபையார் எல்லாரும் அவனை பாளயத்திற்கு புறம்பே கல்லெறிய கடவர்கள் என்றார். அப்பொழுது சபையார் எல்லாரும் கர்த்தர் மோசேக்கு கட்டளை இட்டபடியே, அவனை பாளயத்திற்கு புறம்பே கொண்டு போய் கல்லெறிந்தார்கள். அவன் செத்தான். (எண். 15:32-36)

துணிகரமான பாதையின் அற்றம் அழிவே என்பது கோடிட்டு காட்ட படுவதற்கு இங்கு ஓர் உதாரணம் நம் முன்பாக வைக்க படுகின்றது. துணிகரமான பாதை பெரும் பாதகத்திற்கு நேராக நடத்தும் பாதை என்று 19-வது சங்கீதம் 13-வது வசனம் கூறியது. ''துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கி காரும். அவைகள் என்னை ஆண்டு கொள்ளவொட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமனாகி பெரும் பாதகத்திற்கு நீங்கலாய் இருப்பேன்.''

இந்த வசனங்களில் பெரும் பாதகத்திற்கு வழி நடத்தும் செயல்களை ஒரு மனிதன் துணிந்து செய்து விடுகின்றான். செய்ய தகாத ஒரு செயலை அவன் செய்து விடுகின்றான். பத்து கற்பனைகளில் நான்காவதாக இடம் பெறும் கற்பனை ஓய்வு நாள் ஆசரிப்பு என்பதை யாத்திராகம புத்தகம் 20-வது அதிகாரம் 8,9,10 ஆகிய வசனங்களில் நாம் பார்த்தோம். ஓய்வு நாளை மீறுவது பரிசுத்தம் என்பதையே மீறுவது என்பது ஆகும். பரிசுத்தம் என்பதை புறக்கணிப்பது பரிசுத்தராகிய கர்த்தரையே புறக்கணிப்பது என்பது ஆகும். கர்த்தரை புறக்கணிக்கின்றவர்களுடைய முடிவு ஓர் சோகமான முடிவாகவே இருக்கும் என்பதை காட்ட இந்த ஓர் நிகழ்ச்சி 32 முதல் 36 வசனங்களில் நமக்கு முன்பாக வைக்கப்படுகின்றது.

வனாந்திர வாழ்விலே அவர்களுக்கு கர்த்தர் அற்புதமாக வழங்கிய மன்னா ஏழாவது நாள் மட்டும் வழங்கப்படவில்லை. காரணம் ஏழாவது நாள் ஓய்வு நாள். பரிசுத்தமான நாள். கடந்த

ஆறு நாட்களும் கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் நினைத்து நன்றி நவிலும் நாள். இனி வரும் நாட்களுக்காக இருதயத்தில் இன்னும் அதிகமான பெலனையும், அதிகமான பரிசுத்தத்தையும் பெற்று கொள்ள வேண்டிய நாள். ஓய்வு நாள் ஓர் பொழுது போக்கு நாள் அல்ல. ஓய்வு நாள் ஓர் விடுமுறை நாள் அல்ல. அன்றாட பணிகளை அகற்றி அமர்ந்து இருந்து கர்த்தரை மேலும் மேலும் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு நாள். யாத்திராகம புத்தகம் 16-வது அதிகாரம் 22 முதல் 27 வசனங்களில் பரிசுத்தம் என்பதற்கு முற்றிலுமாக தங்களை அர்ப்பணிக்கின்றவர்கள் ஓய்வு நாள் என்பதை எப்படி கடைபிடிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டு உள்ளது. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் 20-வது அதிகாரம் 12-வது வசனத்தை பாருங்கள். ''நான் தங்களை பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வு நாட்களையும் அவர்களுக்கு கட்டளை இட்டேன்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. ஓய்வு நாள் ஆசரிப்பு யாத்திராகமம் 16-வது அதிகாரத்தில் அறிமுகம் படுத்த பட்டது. ஓய்வு நாள் என்பதை குறிக்கும் 'சபத்' என்ற எபிரெய வார்த்தை யாத்திராகமம் 16:23-வது வசனத்தில்தான் முதன் முதலாக பயன் படுத்த பட்டு உள்ளது. பத்து கற்பனைகளில் நான்காவது கற்பனையாக கொடுக்கப்பட்டது. அந்த கற்பனையை மீறுகின்றவன் கர்த்தர் கூறுவதை மீறும் அளவிற்கு துணிந்து விடுகின்றான். மரணம் அவன் முடிவாக வேண்டும் என்பது யாத்திராகமம் 31-வது அதிகாரம் 14,15 ஆகிய வசனங்களில் ஏற்கெனவே கூறப்பட்டு உள்ளது. 19-வது சங்கீதம் 13-வது வசனம் கூறுவது போல துணிகரமான பாவங்கள் பெரும் பாதகத்திற்கு நேராகவே மனிதனை வழி நடத்துகின்றது. நெகேமியாவின் புத்தகம் 9:13 முதல் 16 வசனங்களை பார்ப்போம். ''நீர் சீனாய் மலையில் இறங்கி வானத்தில் இருந்து அவர்களோடே பேசி அவர்களுக்கு செம்மையான நீதி நியாயங்களையும் நல்ல கட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர். உமது பரிசுத்த ஓய்வு நாளை அவர்களுக்கு தெரியப்படுத்தி உமது தாசனாகிய மோசேயை கொண்டு அவர்களுக்கு கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயப்பிரமாணங்களையும் கற்பித்தீர். அவர்கள் பசிக்கு வானத்தில் இருந்து அப்பம் கொடுத்து அவர்கள் தாகத்திற்கு கன்மலையில் இருந்து தண்ணீர் புறப்பட பண்ணி நீர் அவர்களுக்கு கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை சுதந்தரித்து கொள்ள பிரவேசியுங்கள் என்று அவர்களுக்கு சொன்னீர். எங்கள் பிதாக்களாகிய அவர்களோ அகங்காரமாய் நடந்து தங்கள் கழுத்தை கடின படுத்தி உம்முடைய கற்பனைகளுக்கு செவி கொடாதே போனார்கள்'' என்று நாம் வாசிக்கின்றோம். நீதிமொழிகளின் புத்தகம் 29:1, ''அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சகாயம் இன்றி சடுதியில் நாசம் அடைவான்'' என்று கூறுகின்றது.

எண்ணாகம புத்தகம் 15:32-36 வசனங்களில் உள்ளான மனுஷனில் கல்லாகி போன ஒரு மனிதனை நாம் காண்கின்றோம். ஓய்வு நாளை அசட்டை செய்து விட்டான். நெருப்பு மூட்டப்பட எவ்வித அவசியமும் இல்லை. குளிராக இருக்கின்றது. அனல் மூட்ட விறகு தேவை என்று கூறும் அளவிற்கு அது ஓர் குளிர் காலமும் இல்லை. பரிசுத்தம் என்பதை அசட்டை செய்வது பரிசுத்த ஆவியானவரை அசட்டை செய்வது என்பதே ஆகும். பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் 18-வது அதிகாரம் 20-வது வசனம் எச்சரிக்கின்றது. ஓய்வு நாளில் விறகு பொறுக்க கையை நீட்டுகின்றவன் கர்த்தருக்கு விரோதமாகவே தன்னுடைய கையை நீட்டி விட்டான். யோபுவின் புத்தகம் 15-வது அதிகாரம் 25-வது வசனத்தில், ''அவன் தேவனுக்கு விரோதமாக கை நீட்டி சர்வ வல்லவருக்கு விரோதமாக பராக்கிரமம் பாராட்டுகிறவன்'' என்று பார்க்கிறோம். ஏசாயா

தீர்க்கதரிசியின் புத்தகம் 45:9,10-வது வசனங்களை தயவு கூர்ந்து பாருங்கள். ''மண்ணோடுகளுக்கு ஒத்த ஓடாயிருந்தும் தன்னை உருவாக்கினவரோடே வழக்காடுகிறவனுக்கு ஐயோ. களிமண் தன்னை உருவாக்கினவனை நோக்கி என்ன செய்கிறாய் என்று சொல்ல தகுமோ, உன் கிரியையானது அவருக்கு கைகள் இல்லை என்று சொல்லலாமோ? தகப்பனை நோக்கி ஏன் ஜெனிப்பித்தாய் என்றும் தாயை நோக்கி ஏன் பெற்றாய் என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ.'' ஓய்வு நாளில் விறகு பொறுக்கியது சிறிய பாவமா, பெரிய பாவமா என்பது அல்ல. அது தேவ துரோகம் என்பதே ஆகும். மன கடினம் என்பதே ஆகும். ''துன்மார்க்கன் தன் முகத்தை கடினம் படுத்துகிறான். செம்மையானவனோ, தன் வழியை நேர் படுத்துகிறான்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 21:21-வது வசனம் கூறுகின்றது.

விறகு பொறுக்கின அந்த மனிதனை கண்டு பிடித்தார்கள். உடனே அவனை கல் எறிந்து கொன்று விடவில்லை. அவனை மோசே ஆரோன் என்பாரிடம் எடுத்து சென்றார்கள் என்றே எண்ணாகம புத்தகம் 15:33-வது வசனம் கூறுகின்றது. மோசேயும் ஆரோனும் அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு, உணர்ச்சி வசப்பட்டு ஒரு உயிரை உடனடியாக கொன்றும் விடவில்லை. இனிமேல் இந்த மனிதனுக்கு செய்யப்பட வேண்டியது என்ன என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளும்வரை அவனை காவலில் வைப்போம் என்று அவர்கள் தீர்மானிப்பதை நாம் பார்க்கின்றோம்.

கர்த்தர் மோசேயிடம் அந்த மனிதனின் முடிவை குறித்து இரண்டு விபரங்கள் கூறுவதை 35-வது வசனத்தில் நாம் வாசிக்கின்றோம். கர்த்தர் கூறும் முதலாவது விபரம் அந்த மனிதனை பாளயத்திற்கு புறம்பாக எடுத்து செல்ல வேண்டும் என்பது ஆகும். இரண்டாவதாக சபையார் அனைவரும் ஒருமித்து அவன் மீது கல் எறிய வேண்டும் என்பது ஆகும். துணிகரமான பாவங்களின் துவக்கம் இனிப்பாக இருந்தாலும் அதன் முடிவு கசப்பாகவே இருக்கின்றது.

இஷ்டம் போல் வாழும் மனிதனின் முடிவு கஷ்டமாகவே இருக்கும் என்பதை பரிசுத்த வேதம் தெளிவாக எடுத்து உரைக்கின்றது. லேவியராகம புத்தகம் 24:10 முதல் 23 வசனங்களில் செலோமித் என்ற ஓர் குடும்ப ஸ்திரீயின் மகன் கர்த்தரை தூஷித்தான் என்று பார்த்தோம். அவனையும் கல் எறிந்து கொன்றார்கள் என்றும் நாம் படித்தோம். அவன் தலையில் கை வைத்தவர்கள் முதலாவது கல் எறிய வேண்டும் என்பதே கர்த்தருடைய கட்டளை ஆகும். இதனை லேவியராகம புத்தகம் 24:14-வது வசனத்தில் நாம் பார்த்தோம். தூஷித்தவனை பாளயத்திற்கு புறம்பே கொண்டு போக கேட்டவர்கள் எல்லாரும் தங்கள் கைகளை அவன் தலையின் மேல் வைப்பார்களாக. பின்பு சபையார் எல்லாரும் அவனை கல் எறிய கடவர்கள் என்று அந்த வசனம் அறிவிக்கின்றது.

எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் 27 முதல் 36 வசனங்களில் பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் எதிர்பார்ப்பு எத்தனை அதிகமானது என்பதையும் அதே சமயம் அந்த எதிர்பார்ப்புகளில் தவறி விட்டால் வரும் ஆபத்து எவ்வளவு பெரிதானது என்பதையும் நாம் பார்க்கின்றோம். புதிய ஏற்பாட்டில் கர்த்தராகிய தேவன் கர்த்தராகிய இயேசுவின் மூலம் ஓர் புதிய ஆசீர்வாதத்தை மனுக்குலத்திற்கு கொடுத்து விட்டார். புதிய ஏற்பாட்டின் சாரம் என்பதை அப்போஸ்தலனாகிய யோவான் என்பவர் எழுதின முதலாவது நிரூபம் முதலாவது அதிகாரம் 7,8,9 ஆகிய வசனங்களில் நாம் பார்க்கின்றோம். ''அவர் ஒளியில் இருக்கிறது போல நாமும்

ஒளியிலே நடந்தால் ஒருவரோடு ஒருவர் ஐக்கியப்பட்டு இருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். நமக்கு பாவம் இல்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை இட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராய் இருக்கிறார்'' என்று புதிய ஏற்பாட்டில் ஓர் புதிய ஆசீர்வாதமான வசனங்கள் மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்டு உள்ளன. தொடர்ந்து 1 தீமோத்தேயு முதல் அதிகாரம் 13,14,15 ஆகிய வசனங்கள், ''முன்னே, நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாய் இருந்தேன். அப்படி இருந்தும் நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படி செய்ததினால் இரக்கம் பெற்றேன். நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தோடும் அன்போடும் கூட என்னிடத்தில் பரிபூரணமாய் பெருகிற்று. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. அவர்களில் பிரதான பாவி நான்'' என்று கூறுகின்றன.

புதிய ஏற்பாட்டின் காலத்திற்குள் பிரவேசித்தவுடன் அறிந்தும் அறியாமலும், பயந்தும் துணிந்தும் செய்யும் அனைத்து பாவங்களையும் அறியாமல் செய்யும் பாவங்களாகவே இயேசு சிலுவையில் ஏற்று கொண்டார். பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்வது இன்னது என்று அறியாமல் இருக்கிறார்கள் என்று இயேசு ஜெபித்தார்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் ஓய்வு நாளில் விறகு பொறுக்கினவனை கண்டு பிடித்தார்கள். மோசேயிடம் கொண்டு வந்தார்கள். கல் எறிந்து கொன்று விடுங்கள் என்று மோசே கூறி விட்டார். புதிய ஏற்பாட்டு காலத்தில் விபசாரம் என்ற குற்றத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பெண்ணை கல் எறிந்து கொன்றுவிட வேண்டும் என்று இயேசுவிடம் கொண்டு வந்தார்கள். அவளை கல் எறிந்து கொன்று விடுங்கள் என்று இயேசு கூறவில்லை. இயேசு அவளை மன்னித்தார். இனி பாவம் செய்யாமல் புதிய வாழ்வு பெற்று நீ வாழ்ந்து மகிழ உன்னை வாழ்த்துகிறேன் என்று இயேசு அவளை அனுப்பி வைத்தார். இதனை பரிசுத்த யோவான் 8-வது அதிகாரம் 4 முதல் 11 வசனங்களில் நாம் பார்க்கலாம்.

செய்த பாவங்களினால் உண்மையாக மனம் திரும்புகின்றவர்களை இயேசு இன்றும் மன்னிக்கின்றார். இயேசு இன்றும் வாழ வைக்கின்றார்.

18.11 உன் கண்களை என்மேல் பதித்து வாழ்

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பேசி, அவர்கள் தங்கள் தலைமுறை தோறும் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கி, ஓரத்தின் தொங்கலிலே இளநீல நாடாவை கட்ட வேண்டும் என்று அவர்களுக்கு சொல். (எண். 15:37-38)

பாருங்கள், நினைவு கூறுங்கள், நிலைத்து நில்லுங்கள் என்ற தலைப்பில் இந்த வசனங்களை காண இருக்கின்றோம். தனியாகவும், குடும்பமாகவும், சபையாகவும் கர்த்தரில் நிலைத்து நிற்பதற்கு பாருங்கள், நினைவு கூறுங்கள், நிலைத்து நில்லுங்கள் என்று ஆலோசனை ஜனங்களுக்கு கொடுக்கப்படுகின்றது. எனக்கு முற்றும் கீழ்படிக்கின்றவர்களை முடிவு பரியந்தம் நான் நடத்தி செல்லுவேன் என்று கர்த்தர் மோசேயிடம் கூறுகின்றார்.

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி என்று 37-வது வசனம் துவங்குகின்றது. நீங்கள் நினைத்தது நடக்க வில்லையே என்று வருத்தப்பட வேண்டாம் என்று கர்த்தர் கூறுகின்றார். என்னுடைய கற்பனைகளில் நிலைத்து நிற்பதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்து விடுங்கள் என்று கர்த்தர் கூறுகின்றார். பரிசுத்தம் அன்பு என்ற இரண்டு பண்பிலும் நிலைத்து நிற்பதற்கு லேவியராகம புத்தகம் 11:45-வது வசனமும், 19:18-வது வசனமும் அன்று ஜனங்களுக்கு ஓர் விளக்க வசனங்களாக எடுத்து கூறப்பட்டது. பரிசுத்தம் என்பது பத்து கட்டளைகள் தரும் பரிசு என்பது ஆகும். அன்பு என்பது அனைத்து கட்டளைகளும் பிரமாணங்களும் ஒருங்கே இணைந்து கண்ட முடிவு ஆகும்.

பரிசுத்தம், அன்பு இரண்டும் பாதிக்க படாமல் வாழ்வதற்கு ஓர் வழிமுறை எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் 37 முதல் 41 வசனங்களில் கூறப்பட்டு உள்ளது.

இனி வரும் நாட்கள் இனிதாக இருக்க வஸ்திரங்களின் ஓரங்களில் நீல நிற பட்டை வைத்து தைத்து கொள்ளுங்கள் என்று கர்த்தர் கூறுகின்றார். எனது கற்பனைகளையும், கட்டளைகளையும் இதயத்தில் காத்து கொள்ள நீல நிற பட்டையை பார்த்து கொள்ளுங்கள் என்று கர்த்தர் கூறுகின்றார். தமது வார்த்தைகள் காதில் விழுவது உடன் நின்று விடாமல் கருத்திலும் பதிய வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார். மனிதனின் உணர்ச்சிகளுக்கு பிறப்பிடமாக இருக்கும் இருதயத்தில் கர்த்தர் உறைவிடம் காண விரும்புகின்றார். உபாகம புத்தகம் 6:3-8 வசனங்களை பார்ப்போம். ''இஸ்ரவேலே, நீ நன்றாய் இருப்பதற்கும் உன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உனக்கு சொன்னபடி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் நீ மிகவும் விருத்தி அடையவதற்கும், அவைகளுக்கு செவி கொடுத்து, அவைகளின்படி செய்ய சாவதானமாய் இரு. இஸ்ரவேலே கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக, இன்று நான் உனக்கு கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்ககடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்து இருக்கிற போதும், வழியில் நடக்கிற போதும், படுத்து கொள்ளுகிற போதும், எழுந்து இருக்கிற போதும் அவைகளை குறித்து பேசி, அவைகளை உன் கையின் மேல் அடையாளமாக கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபக குறியாய் இருக்க கடவது'' என்று நாம் பார்க்கின்றோம்.

வாழ்க்கையில் சோரம் போய் விடாமல் இருக்க வஸ்திரத்தின் ஓரத்தில் நீல நிற தொங்கல்கள் இருக்கட்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவும் கூட தமது வஸ்திரத்தின் ஓரங்களில் இவ்விதமான தொங்கல்கள் வைத்து இருந்தார் என்பதை நாம் புதிய ஏற்பாட்டின் நூல்களில் பார்க்கின்றோம். பெரும் பாடு கொண்டு வாழ்ந்து வந்த ஒரு ஸ்திரீ இயேசுவின் வஸ்திரத்தில் உள்ள தொங்கல்களை தொடவே ஓடி வந்தாள் என்பதை பரிசுத்த மத்தேயு என்பார் எழுதின சுவிசேஷம் 9:20,21,22 ஆகிய வசனங்களில் இருந்து நாம் அறிந்து கொள்ளுகின்றோம். ''அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ள ஒரு ஸ்தீரி நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு அவர் பின்னாலே வந்து அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டாள். இயேசு திரும்பி அவளை பார்த்து மகளே, திடன் கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள்'' என்று பார்க்கின்றோம்.

தொடர்ந்து பரிசுத்த மத்தேயு 14:34-36 வசனங்களில் ''பின்பு அவர்கள் கடலை கடந்து கெனேசரேத்து நாட்டில் சேர்ந்தார்கள். அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து சுற்று புறமெங்கும் செய்தி அனுப்பி பிணியாளிகள் எல்லாரையும் அவரிடத்தில் கொண்டு வந்து அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாக வேண்டும் என்று அவரை வேண்டி கொண்டார்கள். தொட்ட யாவரும் சொஸ்தம் ஆனார்கள்'' என்று பார்க்கிறோம். எண்ணாகம புத்தகத்தில் ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களில் வைத்து கொண்ட தொங்கல்கள் நீல நிறத்தில் அமைந்து இருந்தன என்று பார்க்கிறோம். நீல நிறம் என்பது தேவனுடைய அன்பை எடுத்து காட்டுகின்றது. ஜனங்கள் பிரயாணப் படும் பொழுது உடன்படிக்கை பெட்டி நீல நிற துப்பட்டியினால் மூடப்பட்டது என்பதை எண்ணாகமம் 4:6-வது வசனத்தில் பார்த்தோம். மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும், பரிசுத்த ஸ்தலத்திற்கும் நடுவாக நின்ற திரை சீலை நீல நிறம் கொண்டது என்பது யாத்திராகம புத்தகம் 26:31,36 ஆகிய வசனங்களில் கண்டோம். பிரதான ஆசாரியனின் வஸ்திரத்தினுடைய கீழ் அங்கி நீல நிறம் பெற்றது என்று யாத்திராகமம் 28:31-வது வசனத்தில் படித்தோம்.

நீல வானமும் நீல கடலும் தேவன் எவ்வளவு அதிகமாக மனிதன் மேல் அன்பு செலுத்தி கொண்டு இருக்கின்றார் என்று கூறி கொண்டே இருக்கின்றன. நீங்கள் அந்த நீல நிற பட்டையை பாருங்கள். அப்பொழுது கர்த்தர் நல்லவர், கர்த்தர் அன்பு நிறைந்தவர், கர்த்தர் அடிமைத்தன வாழ்வில் இருந்து நம்மை அற்புதமாக விடுதலை செய்தவர், செங்கடலில் வழி செதுக்கி தந்தவர், கன்மலையில் தண்ணீர் குடிக்க தந்தவர் என்று கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் நினைத்து கொள்ளுவீர்கள். தொடர்ந்து கர்த்தரிடம் நன்மை பெற்று வாழ்வதற்கு, எதிர்காலம் சிறப்புற்று அமைவதற்கு நீங்கள் நீல நிற பட்டையை பார்க்கும் பொழுதெல்லாம் என்னுடைய ஞாபகம் உங்களுடைய சிந்தையில் வந்து கொண்டே இருக்கும் என்று கர்த்தர் கூறுகின்றார். கானான் செல்லும் வழியெல்லாம் கர்த்தரே உங்கள் நினைவாக இருக்கட்டும் என்பதே கட்டளை. நீதிமொழிகளின் புத்தகம் 3:1-6 வசனங்களை பார்ப்போம். ''என் மகனே, என் போதகத்தை மறவாதே. உன் இருதயம் என் கட்டளைகளை காக்க கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும் தீர்க்காயுசையும் சமாதானத்தையும் பெருக பண்ணும். கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாது இருப்பதாக. நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு அவைகளை உன் இதயமாகிய பலகையில் எழுதிக்கொள். அதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும், நற்புத்தியும் பெறுவாய். உன் சுய புத்தியின்மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாய் இருந்து, உன் வழிகளில் எல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார்''.

எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரத்தில் தனியாகவும், குடும்பமாகவும், சபையாகவும் கர்த்தருக்கு மட்டும் கீழ்படிந்து நடக்க ஜனங்கள் அழைக்க படுகின்றார்கள். செய்ய தக்கது எது, செய்ய தகாதது எது, என்ற தெளிவான அறிவு பெற்று வளருவதற்கு அழைக்க படுகின்றார்கள். நன்மை எது, தீமை எது, பாவம் எது, பரிசுத்தம் எது என்பதை அறிய தேவனை அறிகிற அறிவு அதிகம் தேவை. பலிகள் செலுத்தியும் கர்த்தரை அறியும் அறிவு இல்லை என்றால் விழுந்து போவார்கள். ஓசியா தீர்க்கதரிசியின் புத்தகம் 6:6-வது வசனம், ''பலியை அல்ல. இரக்கத்தையும், தகன பலிகளை பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன்'' என்று கூறுகின்றது. கர்த்தரை அறியும் அறிவில் வளருவதற்கு இதுவரை கர்த்தர் பாராட்டிய அன்பை, நீல நிற பட்டையை, கண்கள் பார்க்கட்டும் என்று ஜனங்களுக்கு கூறுகின்றது. அப்பொழுது உங்கள் சுய விருப்பத்திற்கும், கண்களின்

இச்சைக்கும் விலகி வாழ்வீர்கள். கர்த்தரின் வசனங்களை நினைவில் நிறுத்தி தீமையை வெறுத்து வாழ்வீர்கள்.

> *நீங்கள் பின்பற்றி சோரம் போகிற உங்கள் இருதயத்துக்கும் உங்கள் கண்களுக்கும் ஏற்க நடவாமல், அதை பார்த்து, கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நினைத்து அவைகளின்படியே செய்யும் படிக்கு, அது உங்களுக்கு தொங்கலாய் இருக்க வேண்டும். நீங்கள் என் கற்பனைகளை எல்லாம் நினைத்து, அவைகளின்படியே செய்து, உங்கள் தேவனுக்கு பரிசுத்தராய் இருக்கும்படி அதை பார்ப்பீர்களாக. (எண். 15:39-40)*

பரிசுத்தத்தில் நிலைத்து நிற்க பரிசுத்தரை மட்டும் பார்த்து வாழுங்கள் என்பதே கர்த்தரின் ஆலோசனை. அந்த ஆலோசனையை அவர்கள் அங்கீகரித்து கொண்டால் அவர்களை புறப்பட பண்ணினவர் பிரயாணத்தை இனிதாக முடிக்கவும் செய்வார் என்று 41-வது வசனம் கூறுகின்றது. எபிரேயர் நிருபம் 12-1-ல் ''ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டு இருக்க பாரமான யாவற்றையும் நம்மை சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளி விட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்து இருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓட கடவோம்,'' என்று பார்க்கிறோம். சுமார் 40 வருடங்கள் வனாந்தரத்தில் சுற்றி அலையும் ஜனங்களுக்கு எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரம் ஒரு ஆறுதலையும் பரிசுத்த ஜீவியத்தில் புதிய ஆவலையும் ஊட்டுகின்றது. வஸ்திரத்தின் நான்கு ஓரங்களிலும் நீல நிற பட்டை பதிக்க படட்டும். உங்கள் கண்கள் அந்த பட்டைகளில் பதிக்க படட்டும். அதன் மூலம் என் கட்டளைகளும், கற்பனைகளும் உங்கள் இதயங்களில் இடம் பெறட்டும். அதன் விளைவாக தூய்மை என்ற பாதையில் உங்களின் பாதங்கள் அன்றாட வாழ்க்கையில் பதிக்க படட்டும் என்பது கர்த்தரின் எதிர்பார்ப்பு ஆகும். 1 கொரிந்தியர் 10:12-வது வசனம், ''இப்படியிருக்க தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாத படிக்கு எச்சரிக்கையாய் இருக்கக்கடவன்,'' என்று கூறுகின்றது. ரோமர் நிருபம் 11:20, 21, 22 ஆகிய வசனங்களை பார்ப்போம். ''அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்து போடப்பட்டன. நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய். மேட்டிமை சிந்தையாய் இராமல் பயந்து இரு. சுபாவ கிளைகளை தேவன் தப்ப விடாது இருக்க, உன்னையும் தப்ப விட மாட்டார் என்று எச்சரிக்கையாய் இரு. ஆகையால் தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் பார். விழுந்தவர்களிடத்தில் கண்டிப்பையும் உன்னிடத்தில் தயவையும் காண்பித்தார். அந்த தயவிலே நிலைத்து இருப்பாயானால் உனக்கு தயவு கிடைக்கும். நிலைத்து இராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய்.''

தனியாகவும், குடும்பமாகவும், பரிசுத்த கூட்டமாகவும் முற்றிலும் ஒப்பு கொடுத்து வாழ்ந்து விடுவதற்கு ஏற்ற வழி முறை எண்ணாகமம் 15-வது அதிகாரத்தின் இறுதி வசனங்களில் கூறப்படுகின்றது. 1 பேதுரு 4-வது அதிகாரம் 17,18,19-வது வசனங்கள்: ''நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கும் காலமாய் இருக்கிறது. முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களின் முடிவு என்னமாய் இருக்கும். நீதிமானே இரட்சிக்க படுவதற்கு அரிதானால் பக்தி இல்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடு அனுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்பு கொடுக்க கடவர்கள்'' என்று கூறுகின்றன. உபாகம

புத்தகம் 22:12-வது வசனத்தில் ''நீ தரித்து கொள்ளுகிற உன் மேல் சட்டையின் நான்கு ஓரங்களிலும் தொங்கல்களை உண்டு பண்ணுவாயாக'' என்று எண்ணாகமம் 15-வது அதிகாரம் இறுதி வசனத்தில் கூறப்பட்ட கட்டளை திரும்பவும் கொடுக்க படுகின்றது.

புதிய ஏற்பாட்டு காலத்து மக்களுக்கு கர்த்தராகிய இயேசு சிலுவையில் அந்த நான்கு ஓரங்களுக்கும் ஓர் பதிலாக மாறிவிட்டார். இயேசுவினுடைய கால் பாதாளத்தின் ஓரங்களை தொட்டு வெற்றி வாங்கியது. சிலுவையில் விரிக்கப்பட்ட இயேசுவின் இரண்டு கைகளும் மனிதனின் பாவங்களை மேற்குக்கும், கிழக்கிற்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாக விலக்கி மனிதனை மீட்டு கொண்டது. இயேசுவின் தலை பரலோக பிதாவுடன் மனிதனை இணைய செய்தது. இயேசு என்ற நாமத்தில் கர்த்தரை நோக்கி மனிதன் ஜெபிக்கவும் சேவிக்கவும் வகை செய்தது.

பாருங்கள், நினைத்து கொள்ளுங்கள், நிலைத்து இருங்கள் என்று எண்ணாகமம் 15-வது அதிகாரம் நிறைவு பெறுகின்றது. பூமியின் எல்லை எங்கும் உள்ளவர்களே என்னை நோக்கி பாருங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி இயேசுவை நோக்கி பார்ப்பதற்கு முன் மொழிந்தார். அந்த தீர்க்கதரிசனம் மிகவும் உண்மையானது. அதனை நினைத்து கொள்ளுங்கள் என்று பரிசுத்த பவுல் வழி மொழிந்தார். பரிசுத்த பவுல் தீமோத்தேயு என்பாருக்கு எழுதின இரண்டாவது நிரூபம் 2:8-வது வசனம், ''தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசு கிறிஸ்து என் சுவிசேஷத்தின் படியே மரித்தோரில் இருந்து எழுப்ப பட்டவர் என்று நினைத்து கொள்'' என்று கூறுகிறது. என்னை நோக்கி பார்ப்பது மட்டும் அல்ல, என்னை நினைத்து வாழ்வது மட்டும் அல்ல, என்னில் நிலைத்து இருங்கள் என்று இயேசு தமது வாயினால் மனு குலத்திற்கு கட்டளை கொடுத்தார்.

> ***நான் உங்களுக்கு தேவனாய் இருக்கும்படி, உங்களை எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர்; நானே உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார். (எண். 15:41)***

என்னில் நிலைத்து இருங்கள். நானும் உங்களில் நிலைத்து இருப்பேன். கொடியானது திராட்ச செடியில் நிலைத்து இராவிட்டால் அது தானாய் கனி கொடுக்க மாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்து இராவிட்டால் கனி கொடுக்க மாட்டீர்கள். நானே திராட்ச செடி. நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்து இருந்தால் அவன் மிகுந்த கனிகளை கொடுப்பான். என்னை அல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய கூடாது. ஒருவன் என்னில் நிலைத்து இராவிட்டால் வெளியே எறியுண்ட கொடியை போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான். அப்படி பட்டவைகளை சேர்த்து அக்கினியிலே போடுவார்கள். அவைகள் எரிந்து போம். நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்து இருந்தால் நீங்கள் கேட்டு கொள்ளுவது எதுவோ அது உங்களுக்கு செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளை கொடுப்பதினால் என் பிதா மகிமை படுவார். எனக்கும் சீஷராய் இருப்பீர்கள். பிதா என்னில் அன்பாய் இருக்கிறது போல நானும் உங்களில் அன்பாய் இருக்கிறேன். என்னுடைய அன்பிலே நிலைத்து இருங்கள்.

அத்தியாயம் - 19
கர்த்தருடைய பணியில் பதவிக்கு எழும்பும் போட்டிகள்

19.1 சொந்த கோத்திரத்தில் இருந்து எதிர்ப்பு

எண்ணாகம புத்தகம் 16-வது அதிகாரம் முதல் 19-வது அதிகாரம் வரை இடம் பெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் ஆகும். இவைகள் யாவும் வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள் 38 வருடங்கள் அலைந்து திரிகையில் நடந்த நிகழ்ச்சிகள் ஆகும்.

எண்ணாகம புத்தகம் 16-வது அதிகாரத்தில் மோசே ஆரோன் என்ற இருவருக்கும் எதிராக கோராகு, தாத்தான், அபிராம், ஓன் என்ற நான்கு நபர்களும், அவர்களை ஆதரித்து 250 முக்கிய நபர்களும் எழும்பி வருவதை நாம் காண இருக்கின்றோம். எண்ணாகமம் 12-வது அதிகாரத்தில் மோசேக்கு எதிராக அவனுடைய சொந்த குடும்பத்தின் உறுப்பினர்களான ஆரோன், மிரியாம் என்ற இரண்டு நபர்களும் எழும்பி வந்தார்கள். இப்பொழுது எண்ணாகமம் 16-வது அதிகாரத்தில் மோசே ஆரோன் என்ற இருவருக்கும் எதிராக பரிசுத்த சபையின் நான்கு முக்கிய தலைவர்கள் எழும்பி வருகின்றார்கள். அவர்களை ஆதரித்து 250 முக்கிய உறுப்பினர்களும் சேர்ந்து வருகின்றார்கள். மோசே தனியாக இருந்தாலும் அவனுடன் கர்த்தர் துணையாக நிற்கின்றார். எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் மோசே உத்தமம் நிறைந்தவன் என்று கர்த்தர் அவனை குறித்து சாட்சி கொடுத்தார். உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்க படுவான் என்று நீதிமொழிகளின் புத்தகம் 28:18-வது வசனம் கூறுகின்றது. எண்ணாகமம் 16-வது அதிகாரத்திலும் கர்த்தர் மோசேக்கு துணையாக வர இருக்கின்றார். மோசேயை கர்த்தர் இரட்சிக்க போகின்றார். தமது நீதியை கர்த்தர் தமது ஊழியக்காரர்களின் சார்பில் நிலை நாட்டுகின்றார்.

> *லேவிக்கு பிறந்த கோகாத்தின் குமாரனாகிய இஸ்சேயாரின் மகன் கோராகு என்பவன் ரூபன் வம்சத்தில் உள்ள எலியாபின் குமாரனாகிய தாத்தானையும், அபிராமையும், பேலேத்தின் குமாரனாகிய ஓனையும் கூட்டிக் கொண்டு, இஸ்ரவேல் புத்திரரில் சபைக்கு தலைவர்களும், சங்கத்துக்கு அழைக்க பட்டவர்களும் பிரபலமானவர்களுமாகிய 250 பேர்களோடும் கூட மோசேக்கு முன்பாக எழும்பி, (எண். 16:1-2)*

கர்த்தருடைய நாமத்தை நடுவாக வைத்து கர்த்தருடைய ஊழியக்காரனான மோசேயை கோராகு எதிர்த்து நிற்கின்றான். மோசேக்கு எதிராக லேவி கோத்திரத்தை சேர்ந்த கோராகு என்றவனும், ரூபன் கோத்திரத்தை சேர்ந்த தாத்தான், அபிராம், ஓன் என்பவர்களும் ஒன்றாக சேர்ந்து கொண்டார்கள். லேவி, ரூபன் என்ற இரண்டு கோத்திரங்களையும் சேர்த்து கொண்டார்கள். லேவி, ரூபன் என்ற இரண்டு கோத்திரங்களையும் சேர்ந்தவர்கள் மோசேக்கு எதிராக ஒன்று சேர்ந்து கொண்டார்கள்.

கானான் நோக்கி ஜனங்கள் சென்று கொண்டு இருந்த வனாந்திர பிரயாணத்தில், தங்கும் நேரங்களும் இடங்களும் வரும் பொழுது முதலாவது ஆசரிப்பு கூடாரம் நிறுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் அதனை சுற்றி அவரவருக்கு கொடுக்கப்பட்ட இடங்களில்

அனைவரும் தங்க வேண்டும். ரூபன் கோத்திரம் தங்குவதற்கு ஆசரிப்பு கூடாரத்தின் தெற்கு பகுதி கொடுக்கப்பட்டது என்பதை எண்ணாகம புத்தகம் 2-வது அதிகாரம் 10-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். அதே போன்று லேவி கோத்திரத்தை சேர்ந்த கோகாத்தின் குமாரர் கோராகு என்பாரின் குடும்பம் தங்குவதற்கு ஆசரிப்பு கூடாரத்தின் தெற்கு பகுதி குறிக்கப்பட்டது என்பதை எண்ணாகம புத்தகம் 3-வது அதிகாரம் 29-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம்.

ஒரே இடத்தில் முகாம் இட்ட இரு கோத்திரத்தாரும் இப்பொழுது ஒன்றாக சேர்ந்து கொண்டு மோசே ஆரோன் என்ற இருவருக்கும் எதிராக வந்தார்கள். கோராகு என்பவன் லேவி கோத்திரத்தை சேர்ந்தவன் ஆகும். ஆரோன் மோசே என்பவர்கள் பிறந்த லேவி கோத்திரத்தை சேர்ந்தவன் கோராகு. கோராகு கேட்ட கேள்வி ஆரோனுக்கு எதிராக வந்த கேள்வி ஆகும். தாத்தான், அபிராம், ஓன் என்ற மூன்று பேரும் ரூபன் கோத்திரத்தை சேர்ந்தவர்கள். அவர்களது கேள்வி மோசேக்கு எதிராக வந்த கேள்வி ஆகும். ஆரோன் ஆசரிப்பு கூடாரத்திற்கு பொறுப்பாளன். மோசே அனைத்து ஜனத்திற்கும் பொறுப்பாளன். ஆரோன் ஊழியங்களை எடுத்து நடத்துகின்றவன். மோசே நிர்வாகங்களை எடுத்து நடத்துகின்றவன். கோராகு என்பவன் ஊழியத்தின் முன்னாக நிற்கும் ஆரோனை எதிர்த்து வந்தான். ஆசாரிய ஊழியம் ஆரோனின் பிறப்பு உரிமை அல்ல. அனைத்து லேவி மக்களுக்கும் பிரித்து கொடுக்கப்பட வேண்டிய ஊழியம் என்று கோராகு பேசினான்.

ரூபன் கோத்திரத்தை சேர்ந்தோர் நிர்வாகம் அதிகாரம் என்பதற்கு பொறுப்பாக இருந்த மோசேக்கு எதிராக வந்தார்கள். வீட்டில் முதலாவது பிறந்தவன் ரூபன் என்பவன் ஆகும். எனவே வீட்டில் மூன்றாவது பிறந்த கோத்திரத்தில் வந்த மோசே நிர்வாக பொறுப்பை விட்டு கொடுக்க வேண்டும் என்று எழும்பி வந்தார்கள்.

எண்ணாகமம் 16-வது அதிகாரம் 1 முதல் 4 வசனங்களில் வந்தவர்கள் யார் யார், அவர்கள் கூறியது என்ன என்ன, அதனை கேட்டு மோசே செய்தது என்ன என்ற விபரங்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. இடம் பெற்று கொண்டு இருக்கும் நிகழ்ச்சியில் முன்னாக நிற்கின்றவன் கோராகு என்பவன் என்று அறிகின்றோம். இவன் மூன்றாவது பிறந்த லேவி என்பவரின் கோத்திரத்தை சேர்ந்த கோகாத் என்ற வம்சத்தில் வந்தவன். லேவியினுடைய குமாரர் கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்கள் என்று ஆதியாகம புத்தகம் 46:11-வது வசனம் கூறுகின்றது. கோகாத்திற்கு நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். அவர்களில் ஒருவன் இசேயார் என்பவன் ஆகும். மற்றொருவன் அம்ராம் என்பவன் ஆகும். கோராகு என்பவன் இசேயார் வரிசையிலும் ஆரோன் மோசே என்பவர்கள் அம்ரான் வரிசையிலும் வந்தவர்கள். யாத்திராகம புத்தகம் 6-வது அதிகாரம் 18 முதல் 21 வசனங்களில் இந்த விபரங்களை நாம் காணலாம்.

கணக்கு எடுப்பில் லேவி கோத்திரம் மற்ற கோத்திரங்களுடன் சேர்க்க படவில்லை. ஆசரிப்பு கூடார பணிகளை மட்டும் செய்வதற்கு அந்த கோத்திரம் முழுவதும் பிரித்து எடுக்க பட்டது. தனித்து நிறுத்த பட்டது. எண்ணாகம புத்தகம் முதல் அதிகாரம் 47 முதல் 50வசனங்களில் இந்த விபரங்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. லேவியின் மூன்று குமாரர்களான கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்களுடைய வேலை என்ன என்பது மிகவும் தெளிவாக எண்ணாகம புத்தகம் 3-வது அதிகாரத்திலும் 4-வது அதிகாரத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது.

கோகாத்தின் குடும்பத்திற்கு மிகவும் முக்கியமான ஒரு பொறுப்பு கொடுக்கப்பட்டு இருந்தது. பிரயாணப்படும் சமயத்தில் ஆசரிப்பு கூடாரம் கழற்றப்படும். ஆசரிப்பு கூடாரத்தில் உள்ள பரிசுத்தமான ஸ்தலத்தில் இருக்கும் அனைத்து பொருட்களையும் ஆரோனும் அவனுடைய குமாரரும் எடுத்து பத்திர படுத்த வேண்டும். ஏற்றவாறு மூடிவிட வேண்டும். அதன் பின்னர் அவர்கள் கோகாத்தின் புத்திரை வரவழைக்க வேண்டும்.

கோகாத் புத்திரர் பரிசுத்தமான பொருட்களை தங்கள் கைகளினால் தொட கூடாது. நன்றாக மூடப்பட்ட மகா பரிசுத்த ஸ்தலத்து பொருட்களையும் பரிசுத்த ஸ்தலத்து பொருட்களையும் தங்களுடைய தோள்களில் சுமந்து செல்ல வேண்டும். ''பாளயம் புறப்படும் பொழுது ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்தையும், அதினுடைய சகல பணிமூட்டுகளையும் மூடி தீர்ந்த பின்பு கோகாத் புத்திரர் அதை எடுத்து கொண்டு போகிறதற்கு வரக்கடவர்கள்'' என்று எண்ணாகமம் 4-வது அதிகாரம் 15-வது வசனம் கூறுகின்றது. வண்டியில் வைத்து அல்ல. தங்கள் தோள்களில் வைத்து அதிக பழு நிறைந்த மிகவும் பரிசுத்தமான அந்த பொருட்களை கோகாத் புத்திரர்கள் சுமந்து செல்வது உண்டு. கோகாத் புத்திரரின் வேலை நியமன கடிதத்தில் எழுதப்பட்டு உள்ளது என்ன என்பதை எண்ணாகம புத்தகம் 7:9-வது வசனத்தில் பார்க்கலாம். ''கோகாத்தின் புத்திரருக்கோ ஒன்றும் கொடுக்க படவில்லை. தோள் மேல் சுமப்பதே அவர்களுக்கு உரிய பரிசுத்த ஸ்தலத்தின் வேலையாய் இருந்தது'' என்று அங்கே படிக்கின்றோம். ஆசரிப்பு கூடாரத்து பணியில் லேவியர்கள் அனைவருக்கும் பங்கு இருந்தது. ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட வேலை கொடுக்கப்பட்டு இருந்தது. அந்த வேலையை செய்வதற்கு அவர்கள் அசதியாக இருக்க கூடாது என்று எச்சரிப்பும் கொடுக்க பட்டது. ''கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்க பட்டவன்'' என்று எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 48:10-வது வசனம் கூறுகின்றது. கோகாத்தின் புத்திரர் கர்த்தருடைய வேலையில் அசதியானார்கள். கொடுக்கப்பட்ட பொறுப்பில் ஆர்வம் இழந்தார்கள். கொடுக்கப்பட்ட இடத்தில் திருப்தி இழந்தார்கள். உயர்ந்த பதவி மேல் உள்ளம் பதித்தார்கள். பரிசுத்தமான பொருட்களை சுமக்க தங்களுடைய தோள்களை கொடுத்தவர்கள், பரிசுத்தர் தங்குவதற்கு தங்கள் உள்ளங்களை கொடுக்கவில்லை. அவர்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராக கூடி வந்தார்கள். எதிர்த்து பேசினார்கள்.

> ***மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூட்டம் கூடி, அவர்களை நோக்கி: நீங்கள் மிஞ்சி போகிறீர்கள்; சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படி இருக்க, கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்றார்கள். (எண். 16:3)***

கோராகுவின் பாவம் எதிர்த்து பேசிய பாவம் என்று புதிய ஏற்பாட்டு நூலின் யூதா எழுதின நிருபம் 11-வது வசனம் கூறுகின்றது. கோராகு என்பனின் தலமையில் மற்ற அனைவரும் ஒன்று கூடி மூன்று குற்றச்சாட்டுகளை மோசே, ஆரோன் என்பார் மீது சாட்டினார்கள்.

முதலாவது குற்றசாட்டு ''மோசே ஆரோன் என்பர்களே நீங்கள் மிஞ்சி பேசுகின்றீர்கள்'' என்றார்கள். அதன் பொருள் கர்த்தர் சொல்லாதவைகளை எல்லாம் கர்த்தர் சொன்னதாக எங்களிடம் கூறுகின்றீர்கள் என்பதே ஆகும்.

இரண்டாவது குற்றசாட்டு நீங்கள் இருவரும்தான் தூய்மையில் சிறந்தவர்கள் என்று கருதுகின்றீர்கள். தூய்மையில் சபையார் அனைவரும் உங்கள் இருவரையும் விட சற்றும் குறைந்தவர்கள் அல்ல என்பது ஆகும்.

மூன்றாவது குற்றசாட்டு கர்த்தருடைய சபைக்கு நீங்கள் அடங்கி நடந்து வாழ பழகி கொள்ளுங்கள் என்பது ஆகும். கர்ததருடைய சபைக்கு மேலாக உங்களை உயர்த்த முயற்சி செய்யாதேயுங்கள் என்பதே ஆகும்.

லேவி கோத்திரத்தில் பிறந்த அனைவரும் பரிசுத்தவான்கள். எனவே ஆசாரிய பட்டம் ஆரோனுக்கு மட்டும் உரியது அல்ல. அனைவருக்கும் உரியது என்பதே கோராகு என்பவனின் பேச்சு. அது மோசேக்கும் ஆரோனுக்கும் எதிரான பேச்சு அல்ல. ஆண்டவராகிய கர்த்தருக்கே எதிரான பேச்சு ஆகும்.

மோசே அதை கேட்டபோது முகங்குப்புற விழுந்தான். (எண். 16:4)

மோசே அதை கேட்ட போது முகம் குப்புற விழுந்தான் என்று 16-வது அதிகாரம் 4-வது வசனம் முடிகின்றது. எண்ணாகமம் 14-வது அதிகாரம் 5-வது வசனத்திலும் மோசே முகங்குப்புற விழுந்தான் என்பதை நாம் பார்த்தோம். அந்த வசனத்தில் கானான் சென்று வந்தவர்கள் கூறிய துர்செய்தி மோசேயை முகங்குப்புற விழச்செய்தது. எண்ணாகம புத்தகம் 16-வது அதிகாரம் 4-வது வசனத்தில் கோராகுவின் பெருமையான பேச்சு மோசேயை முகங்குப்புற விழச்செய்தது.

முகங்குப்புற விழுதல் என்பது மிகுந்த கவலையுடனும் கண்ணீருடனும் ஜெபித்தல் என்பதற்கு அடையாளம் ஆகும். தலை குப்புற விழுதல் என்பது தோல்வி என்பதற்கு அடையாளம் ஆகும். மோசே தன்னுடைய ஊழியத்தில் முகங்குப்புற விழுதலை மாத்திரமே நாம் பார்க்கிறோம். கோராகுவின் பேச்சு மோசேயை தோல்விக்கு நேராக வழி நடத்தவில்லை. ஜெபத்திற்கு நேராக வழி நடத்தியது. மோசே பதிலுக்கு பதில் பேசாமல் கர்த்தரின் செட்டைகளின் கீழ் அடைக்கலம் தேடி கொண்டான். 31-வது சங்கீதம் 18,19,20 ஆகிய வசனங்களை பார்ப்போம். ''நீதிமானுக்கு விரோதமாய் பெருமையோடும், இகழ்ச்சியோடும் கடினமாய் பேசுகிற பொய் உதடுகள் கட்டப்பட்டு போவதாக. உமக்கு பயந்தவர்களுக்கும் மனுப்புத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும் நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாய் இருக்கிறது. மனுஷருடைய அகங்காரத்திற்கு அவர்களை உமது சமூகத்தின் மறைவிலே மறைத்து நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி உமது கூடாரத்திலே ஒளித்து வைத்து காப்பாற்றுகிறீர்''.

மோசே கர்த்தர் மீது தன் பாரத்தை வைத்தான். கையால் தாங்க முடியாத பாரங்களை முழங்கால் தாங்க முடியும்.

பின்பு அவன் கோராகையும் அவனுடைய எல்லா கூட்டத்தையும் நோக்கி: நாளைக்கு கர்த்தர் தம்முடையவன் இன்னான் என்றும், தம்மண்டையிலே சேர தாம் கட்டளையிட்ட பரிசுத்தவான் இன்னான் என்றும் காண்பிப்பார்; அப்பொழுது எவனை தெரிந்து கொள்வாரோ, அவனை தம்மிடத்தில் சேர கட்டளை இடுவார். ஒன்று செய்யுங்கள், கோராகே, கோராகின் கூட்டத்தார்களே, நீங்கள் எல்லாரும் தூபகலசங்களை எடுத்து கொண்டு, நாளைக்கு அவைகளில் அக்கினி போட்டு, கர்த்தருடைய சந்நிதியில்

தூபவர்க்கம் இடுங்கள்; அப்பொழுது கர்த்தர் எவனை தெரிந்து கொள்வாரோ, அவன் பரிசுத்தனாய் இருப்பான்; லேவியின் புத்திரராகிய நீங்களே மிஞ்சி போகிறீர்கள் என்றான். (எண். 16:5-7)

4-வது வசனத்தில் முகம் குப்புற விழுந்த மோசே தலை நிமிர்ந்து நிற்கின்றான். மோசே கர்த்தரிடம் ஜெபம் செய்து விட்டு கோராகு என்பவனுக்கு சொல்ல வேண்டிய பதில் என்ன என்பதை அறிந்து விட்டான். மிகவும் அன்பாகவும், மிகவும் ஆணித்தரமாகவும் கோராகுவையும் அவனை சார்ந்தவர்களையும் பார்த்து மோசே பேச ஆரம்பிக்கின்றான். ஆசாரிய பட்டம் பரிசுத்தவான்களுக்கு உரிய பட்டம்; ஆரோன் மட்டும்தான் பரிசுத்தன் என்பது அல்ல; அனைத்து சபை மக்களும் பரிசுத்தமானவர்கள்; எனவே ஆசாரிய பட்டம் அனைத்தும் எல்லா மக்களுக்கும் உரியதாக கூடிய பட்டம் என்பதே கோராகு என்பவனின் கோரிக்கை ஆகும்.

இப்பொழுது மோசே கோராகு என்பவன் கேட்டு கொண்டபடி சபையாரில் பரிசுத்தவான்கள் யார் யார் உண்டோ அவர்கள் அனைவரையும் நாம் கண்டு பிடிக்க வேண்டாம், கர்த்தருடைய கண்கள் கண்டு பிடிக்கட்டும் என்று கூற துவங்குகின்றான். கோராகுவினால் ஏற்கெனவே தெரிந்து எடுக்கப்பட்டவர்கள் 250 பேர் என்று அறிவோம். யார் பரிசுத்தர் என்ற பரீட்சை கோராகு அழைத்து வந்த 250 நபர்களையும் நடுவாக வைத்து துவங்க இருக்கின்றது. 250 பேரும் 250 தூபகலசங்களுடன் ஆசரிப்பு கூடாரம் வர வேண்டும். பரிசுத்தராகிய தம்மை, தூபகலசத்துடன் நெருங்க தகுதி உள்ளவர்கள் யார் என்பதை கர்த்தரே முடிவு செய்யட்டும் என்பதே மோசே கோராகுவை நோக்கி கூறிய பதில் ஆகும்.

தேவன் தம்முடையவர்களை அறிவார். ''என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே இதோ கர்த்தாவே அதையெல்லாம் நீர் அறிந்து இருக்கிறீர்'' என்று 139-வது சங்கீதம் 4-வது வசனம் கூறுகின்றது.

எண்ணாகம புத்தகம் 16:5-7 ஆகிய இந்த மூன்று வசனங்களிலும் நாளைக்கு, நாளைக்கு என்று இருமுறை மோசே கூறுகின்றான். கோராகுவின் கேள்விக்கு பதில் கொடுப்பதில் எவ்வித கால தாமதமும் செய்ய மோசே விரும்பவில்லை. நாளைக்கே கர்த்தர் தரும் பதிலை பெற்று கொள்ளுவோம் என்று சற்றும் கால தாமதம் செய்யாமல் ஒரு சிக்கலான நேரத்திற்கு முடிவு கட்டிவிட மோசே தீர்மானித்தான். கர்த்தரின் பார்வையில் பரிசுத்தவான் யார் என்பதும், கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவன் யார் என்பதும், மிஞ்சி போகின்றவர்கள் யார் என்பதும் நாளைக்கு தெரியவர இருக்கின்றது என்று மோசே கூறுகின்றான்.

பின்னும் மோசே கோராகை நோக்கி: லேவியின் புத்திரரே, கேளுங்கள், கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளை செய்யவும், சபையாரின் முன் நின்று அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளை செய்யவும், உங்களை தம்மண்டையிலே சேர பண்ணும்படி இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேல் சபையாரிலிருந்து உங்களை பிரித்தெடுத்ததும், அவர் உன்னையும் உன்னோடேகூட லேவியின் புத்திரராகிய உன்னுடைய எல்லா சகோதரரையும் சேர பண்ணினதும், உங்களுக்கு அற்ப காரியமோ? இப்பொழுது ஆசாரிய பட்டத்தையும் தேடுகிறீர்களோ? இதற்காக நீயும் உன் கூட்டத்தார் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாகவே கூட்டம் கூடினீர்கள்;

ஆரோனுக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுக்கிறதற்கு அவன் எம்மாத்திரம் என்றான். (எண். 16:8-11)

மோசே ஓர் எச்சரிப்பும் கொடுக்கின்றான். அவர்கள் கர்த்தரிடம் ஏற்கெனவே பெற்ற பணி மிகவும் மேலான ஒரு பணி. பெற்றதில் திருப்தி கொள்ளாமல், இருப்பதில் இதயம் பதிக்காமல், இல்லாதவைகளுக்காக ஆசை படுவதினால் பயன் வரப்போவது இல்லை என்பதும், விரும்புவது கிட்டப்போவது இல்லை என்பதும், இருப்பதும் நிலைக்க போவது இல்லை என்பதும் மோசே கொடுக்கும் எச்சரிப்பு ஆகும். அந்த எச்சரிப்பின் வசனங்களை இங்கே நாம் பார்க்கின்றோம்.

மோசேயினால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கால அவகாசம் கோராகுவின் மன மாற்றத்திற்கு நேராக பயன் படுத்தப்படவில்லை. ஆனால் மேலும் மேலும் கோராகுவின் மனம் கொடுமையான மனமாக மாறி கொண்டே செல்லுகின்றது.

ஆரோன் மோசே, என்ற இருவருக்கும் எதிராக இரண்டு முக்கிய கோத்திரங்கள் எழும்பி வந்தன. கோராகு என்பவன் தலைமையில் லேவி கோத்திரம் எழும்பி வந்தது. ஆசாரிய பட்டம் என்பது ஆரோன் என்பாருக்கு உரியது மட்டும் அல்ல. அனைவருக்கும் உரியது என்றது.

மோசேக்கு எதிராக அடுத்ததாக வந்த கோத்திரம் ரூபன் கோத்திரம் என்பது ஆகும். நிர்வாகம் என்பது வீட்டில் மூத்து பிறந்தவர்களுக்கு மட்டுமே உரியது என்று அவர்கள் எழும்பி வந்தார்கள். தாத்தான், அபிராம், ஓன் என்ற ரூபன் கோத்திரத்து மூன்று முக்கிய தலைவர்கள் மோசேக்கு எதிராக வந்தார்கள். ஓன் என்று வருகின்ற பெயர் முதல் வசனத்தில் காணப்படுகின்றது. ஆனால் அதற்கு பின்னதாக வரும் எந்த வசனத்திலும் ஓன் என்ற பெயர் திரும்பவும் கொடுக்க படவில்லை. கோராகு, தாத்தான், அபிராம் என்ற மூன்று நபர்களின் பெயர்கள் மட்டுமே மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில் ஆரோன் மோசே என்பவர்களை ஓன் என்பவன் எதிர்த்து வந்தான். ஆனால் பின்னதாக அப்படி செய்வது முறை அல்ல என்பதை உணர்ந்து விட்டான். அவன் தேவ தண்டனைக்கு விலகி விட்டான். ஓன் என்றால் சுய பெலன் என்று பொருள் ஆகும். சுய பெலத்தினால் கர்த்தரின் ஊழியத்தில் முதன்மை இடங்களை கைப்பற்ற முடியாது என்பதை ஓன் உணர்ந்து விட்டான்.

சுய பலத்தினால் போராடி கர்த்தரின் ஊழியங்களில் உயர்ந்த இடங்களை கைப்பற்ற முடியாது என்பதையே வேத புத்தகமும் கூறுகின்றது. ஜெபத்தில் மட்டுமே போராடுவதற்கு பரிசுத்த பவுலும் உடன் ஊழியக்காரர்களும் அழைக்க பட்டு இருக்கின்றார்கள் என்பதை பரி. பவுல் கொலோசேயர் என்பாருக்கு எழுதின நிரூபம் 4-வது அதிகாரம் 12-வது வசனத்தில் பார்க்கின்றோம். ''எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான். உங்களை சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன் நீங்கள் தேவனுக்கு சித்தமானவைகள் எல்லாவற்றிலும் தேறினவர்களாயும், பூரண நிச்சயம் உள்ளவர்களாயும் நிலை நிற்க வேண்டும் என்று தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்.'' ஜெபத்தின் மூலமாகவே ஊழியங்களையும், ஊழிய நிர்வாகங்களையும் நடத்த முடியும் என்பதை கோராகு தாத்தான் அபிராம் என்பவர்கள் உணரவில்லை. வாதாடியும், வழக்காடியும் கர்த்தரின் ஊழியங்களை செய்ய முடியாது என்பதை அவர்கள் இன்னும் உணரவில்லை. கர்த்தர் பெருமை உள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மை உள்ளவர்களையோ உயர்த்துகின்றார் என்பதை கோராகு தாத்தான் அபிராம் என்பவர்கள்

இன்னும் உணரவில்லை. மேலும் மேலும் அவர்கள் மனம் இறுகவே செய்தது. உடையவில்லை. மேலும் மேலும் கடினமாகவே மாறி விட்டது. எண்ணாகம புத்தகம் 16-வது அதிகாரம் 12 முதல் 15 வசனங்களிலும், 23 முதல் 34 வசனங்களிலும் கோராகு தாத்தான் அபிராம் என்றவர்களுக்கு எதிராக வந்த தேவனுடைய கோபம் கூறப்பட்டு உள்ளது.

பின்பு மோசே எலியாபின் குமாராரகிய தாத்தானையும் அபிராமையும் அழைத்து அனுப்பினான். அவர்கள்: நாங்கள் வருகிறதில்லை; இந்த வனாந்தரத்தில் எங்களை கொன்று போடும்படி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து எங்களை கொண்டு வந்தது அற்ப காரியமோ, எங்கள் மேல் துரைத்தனமும் பண்ண பார்க்கிறாயோ? மேலும் நீ எங்களை பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்கு கொண்டு வந்ததும் இல்லை, எங்களுக்கு வயல்களையும் திராட்ச தோட்டங்களையும் சுதந்தரமாக கொடுத்ததும் இல்லை; இந்த மனிதருடைய கண்களை பிடுங்க பார்க்கிறாயோ? நாங்கள் வருகிறதில்லை என்றார்கள். (எண். 16:12-14)

மோசேயின் தலைமையை முற்றிலுமாக அவர்கள் நிராகரித்து விட்டார்கள். மோசே வாருங்கள் என்று அழைப்பது ஆண்டவன்மாரே வாருங்கள் என்று அழைப்பதற்கு சமமாக இருக்கின்றது. மோசே ஜனங்களுக்கும் கர்த்தருக்கும் நடுவாக நின்று கொண்டு இருக்கும் ஒரு தீர்க்கதரிசி ஆகும். மோசேயை நிராகரிப்பது கர்த்தாதி கர்த்தரையே நிராகரிப்பதற்கு சமமாகும். தாத்தானும் அபிராமும் மோசே அழைத்தும் செல்லுவதற்கு மறுத்து விட்டார்கள். நாங்கள் வருவது இல்லை என்று கூறி விட்டார்கள்.

ஏழு எதிர்ப்புகளை அவர்கள் தெரிவிக்கின்றார்கள். இந்த வனாந்தரத்தில் நாங்கள் சாக வேண்டும் என்று நீ திட்டமிட்டு விட்டாய். பாலும் தேனும் ஓடுகின்ற எகிப்தில் இருந்து எங்களை ஓர் வனாந்தரமான இடத்திற்கு கொண்டு வந்து விட்டாய். எங்கள்மேல் துரைத்தனம் பண்ணுவதற்கு உனக்கு உரிமை கொடுத்தவன் யார்? பாலும் தேனும் ஓடுகின்ற கானான் என்ற பூமிக்கு நீ எங்களை அழைத்து செல்லுவாய் என்பது பொய். எங்களுக்கு வயலும் தோட்டமும் கிடைக்க செய்வாய் என்பது பொய். இந்த மக்களுடைய கண்களை நீ பிடுங்க பார்க்கிறாய். எனவே நாங்கள் வருவது இல்லை. இனிமேல் உனக்கு கீழ்படிய போவதும் இல்லை என்று தாத்தான் அபிராம் என்ற இரண்டு நபர்களும் மோசேயை அப்புற படுத்தி விட்டார்கள். அப்பொழுது மோசேக்கு கடும் கோபம் மூண்டது என்று 15-வது வசனம் கூறுகின்றது.

19.2 பதவிக்கு ஆசைபட்ட தலைவர்களை பூமி விழுங்கியது

அப்பொழுது மோசேக்கு கடும் கோபம் மூண்டது; அவன் கர்த்தரை நோக்கி: அவர்கள் செலுத்தும் காணிக்கையை அங்கிகரியாது இருப்பீராக; நான் அவர்களிடத்தில் ஒரு கழுதையை முதலாய் எடுத்து கொள்ளவில்லை; அவர்களில் ஒருவனுக்கும் யாதொரு பொல்லாப்பு செய்யவும் இல்லை என்றான். (எண். 16:15)

மோசேயானவன் பூமியில் உள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணம் உள்ளவனாய் இருந்தான் என்று எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரம் 3-வது வசனம் கூறுகின்றது. ஆயினும் மோசே கோபம் அடைந்தான் என்று மூன்றாவது முறையாக வேத புத்தகத்தில்

கூறப்படுகின்றது. பார்வோன் மீது மோசே கோபம் கொண்டதை யாத்திராகம புத்தகம் 11:8-வது வசனத்தில் படித்தோம். கன்று குட்டி வழிபாட்டிற்கு தங்களை ஜனங்கள் ஒப்பு கொடுத்த பின்னர் மோசே கோபம் அடைந்ததை யாத்திராகம புத்தகம் 32:19-வது வசனத்தில் வாசித்தோம். இப்பொழுது எண்ணாகம புத்தகம் 16:15-வது வசனத்திலும் மோசே கடும் கோபம் கொண்டான் என்று படிக்கின்றோம். அதனை தொடர்ந்து மோசே ஜெபம் செய்ய ஆரம்பிக்கின்றான். அதனை 15-வது வசனத்தில் நாம் பார்க்கின்றோம்.

கர்த்தாவே என்னை அங்கீகரிக்காதவர்களை நீரும் அங்கீகரிக்க வேண்டாம் என்று அவனுடைய ஜெபம் துவங்குகின்றது. தொடர்ந்து கர்த்தாவே நீர் என் கையில் தந்த அதிகாரத்தை நான் ஒரு நாளும் துர்ப்பிரயோகம் செய்ய வில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவன் கூறுகிறான். யாருடைய கண்களையும் நான் பிடுங்கவில்லை என்று ஜெபிக்கின்றான். எவருக்கும் பொய்யான வாக்குறுதிகளை நான் கொடுக்கவில்லை என்று கூறுகின்றான். ஒருவருக்கும் ஒரு பொல்லாப்பும் நான் செய்யவே இல்லை என்று தன்னை தற்பரிசோதனை செய்து ஜெபிக்கின்றான். ''மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மை உள்ளவனாக இருந்தான்'' என்று புதிய ஏற்பாட்டில் எபிரெயர் நிரூபம் 3:2-வது வசனம் கூறுகின்றது. தாத்தான் அபிராம் என்ற இருவருக்கும் தனக்கும் நடுவாக கர்த்தாதி கர்த்தர் வந்து நிற்கட்டும் என்று மோசே ஜெபிக்கின்றான். யோபுவின் புத்தகம் 16:19-வது வசனத்தில் ''இப்போது இதோ என் சாட்சி பரலோகத்தில் இருக்கின்றது. எனக்கு சாட்சி பகருகிறவர் உன்னதங்களில் இருக்கிறார்'' என்று காண்கிறோம். முன்னதாக ஆரோனும் மிரியாமும் மோசேக்கு எதிராக வந்த பொழுது கர்த்தர் மோசேயின் சார்பாக சாட்சி கூறியதை எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் நாம் பார்த்தோம். மோசேயின் சிரித்த முகமும் மோசேயின் சிவந்த முகமும் இப்பொழுது எண்ணாகமம் 16-வது அதிகாரத்தில் தாத்தான் அபிராம் என்றவர்களை மாற்ற முடியவில்லை. நீதிமொழிகளின் புத்தகம் 29:9-வது வசனம், ''ஞானி மூடனுடன் வழக்காடுகையில் சினந்தாலும், சிரித்தாலும் அமைதி இல்லை'' என்று கூறுகின்றது. தாத்தான் அபிராம் என்ற இருவரிடமும் தான் பேசுவதைவிட கர்த்தரே பேசட்டும் என்று மோசே ஜெபிக்க ஆரம்பித்து விட்டான். தனக்கு எதிராக வந்தவர்களுக்கு முன்னாக நின்று கர்த்தரே சாட்சி கூறட்டும். கர்த்தரே பொறுப்பு எடுக்கட்டும் என்று மோசே அனைத்தையும் தேவனுக்கு தெளிவாக தெரிய படுத்தி விட்டான். சங்கீதம் 34:15 முதல் 19 வசனங்கள் ''கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாய் இருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்கு திறந்து இருக்கிறது. தீமை செய்கிறவர்களுடைய பெயரை பூமியில் இராமல் அற்று போக பண்ண கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாய் இருக்கிறது. நீதிமான்கள் கூப்பிடும் போது கர்த்தர் கேட்டு அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார். நொறுங்குண்ட இருதயம் உள்ளவர்களுக்கு கர்த்தர் சமீபமாய் இருந்து நருங்குண்ட ஆவி உள்ளவர்களை இரட்சிக்கிறார். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாய் இருக்கும். கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்'' என்று கூறுகின்றன.

> *உங்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் தூபவர்க்கத்தை போட்டு, தங்கள் தங்கள் தூபகலசங்களாகிய இருநூற்று ஐம்பது தூபகலசங்களையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வர வேண்டும்; நீயும் ஆரோனும் தன் தன் தூபகலசத்தை கொண்டு வாருங்கள் என்றான். அப்படியே அவரவர் தங்கள் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் அக்கினியையும் தூபவர்க்கத்தையும் போட்டு,*

ஆசரிப்பு கூடாரவாசலுக்கு முன்பாக வந்து நின்றார்கள். மோசேயும் ஆரோனும் அங்கே நின்றார்கள். (எண். 16:17-18)

மோசே கொடுத்த கால அவகாசம் கோராகு என்பவனுக்கு மன மாற்றம் தரவில்லை. மாறாக அவனுடைய மனதை மேலும் கடினமாகவே மாற்றி விட்டது. கோராகுவின் மன கடினத்தை மோசே ஆரம்பத்திலே கண்டு அவனை எச்சரித்தான். இதனை 10-வது வசனத்தில் நாம் படித்தோம். அன்பான எச்சரிப்புகள் அவனுக்கு அற்ப காரியமாக தெரிந்தன. யோபுவின் புத்தகம் 15-வது அதிகாரம் 11-வது வசனத்தை பார்ப்போம். ''தேவன் அருளிய ஆறுதல்களும், உம்மோடே சொல்லப்படுகிற மிருதுவான பேச்சும் உமக்கு அற்ப காரியமாய் இருக்கிறதோ?''

அவர்களுக்கு விரோதமாக கோராகு சபையை எல்லாம் ஆசரிப்பு கூடாரவாசலுக்கு முன்பாக கூடிவரும்படி செய்தான். அப்பொழுது கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்பட்டது. கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி: இந்த சபையை விட்டு பிரிந்து போங்கள்; ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார். (எண். 16:19-21)

250 தூப கலசங்கள் கோராகுவினால் அவசரம் அவசரமாக ஆயத்தப்படுத்தப்படுகின்றது. அது மட்டும் அல்ல. அடுத்த நாள் நிகழ்ச்சியில் அனைத்து சபையார்களும் பார்வையாளர்களாக வருவதற்கு அவசர அவசரமாக அனைவருக்கும் அறிவிப்பு கொடுக்க படுகின்றது. கோராகுவின் அகந்தை அவனை அழிவிற்கு நேராக துரத்தி விடுகின்றது. பெற்றதில் திருப்தி இல்லாதவர்கள் பெறப்போவது பேர் அழிவு என்பதற்கு கோராகுவின் முடிவு ஓர் எடுத்து காட்டு ஆகும்.

கர்த்தரால் கட்டளை பெறாமல் தூப கலசம் கையில் எடுத்த ஆரோனின் இரண்டு குமாரர்கள் அழிந்து போனதை கோராகு அறியாதவன் அல்ல. ஆயினும் துணிந்து 250 நபர்களை ஆசரிப்பு கூடாரத்தின் வாசலுக்கு முன்பாக தூப கலசத்துடன் கோராகு நிறுத்தி விட்டான். அந்த தீர செயலை பார்ப்பதற்கு பெரும் கூட்டம் ஒன்றையும் திரட்டி விட்டான்.

அப்பொழுது கர்த்தருடைய மகிமை சபைக்கு எல்லாம் காணப்பட்டது என்று 19-வது வசனத்தின் பின் பகுதி கூறுகின்றது. மோசே ஒரு நாள் தவணை கொடுத்தான். கர்த்தர் ஒரு மணி நேரம் கூட தவணை கொடுக்க விரும்பவில்லை. ஒரே நிமிஷத்தில் அவர்களை அழிக்க போகின்றேன் என்று கர்த்தர் கூறுகின்றார். மோசே ஆரோன் ஆகிய இருவரும் சற்று தள்ளி நில்லுங்கள் என்று கர்த்தர் கூறுகின்றார்.

கையில் தூப கலசத்துடன் நிற்கும் 250 நபர்களையும் கூடி வந்து இருக்கும் அனைத்து கூட்டத்தையும் ஒரே நிமிஷத்தில் அழித்து விடுவதற்கு கர்த்தர் சித்தம் கொண்டார். ''அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவாய் பாழாய் போகிறார்கள், பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள்'' என்று 73-வது சங்கீதம் 19-வது வசனம் கூறுகின்றது.

அப்பொழுது அவர்கள் முகங்குப்புற விழுந்து: தேவனே, மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே, ஒரு மனிதன் பாவம் செய்திருக்க சபையார் எல்லார் மேலும் கடும் கோபம் கொள்வீரோ என்றார்கள். (எண். 16:22)

கர்த்தர் கோராகு கூட்டத்தார் உட்பட அங்கு கூடியிருந்த அனைத்து மக்களையும் அழிப்பேன் என்றவுடன் மோசேயும் ஆரோனும் முகம் குப்புற விழுந்தார்கள். ஜெபிக்க ஆரம்பித்தார்கள். தேவனே நீர் மாம்சமாக உலகில் நடமாடும் அனைத்து உயிர்களுக்கும் தேவன் என்று மோசே தனது ஜெபத்தை துவங்கினான். ''சகல பிராணிகளின் ஜீவனும் மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையில் இருக்கிறது'' என்று யோபுவின் புத்தகம் 12-வது அதிகாரம் 10-வது வசனம் கூறுகின்றது.

ஒரு மனிதன் செய்த தவறுக்காக அனைத்து மக்களையும் அழிக்க வேண்டாம் என்று மோசேயும் ஆரோனும் ஜெபித்தார்கள். கர்த்தர் அவர்கள் இருவரின் ஜெபத்தையும் ஏற்று கொண்டார். அனைவரையும் அழிக்க வேண்டும் என்பதை மாற்றி கொண்டார்.

கோராகு தாத்தான் அபிராம் என்றவர்கள் மோசேயை எதிர்த்து வந்த வேளையிலே மோசே கர்த்தரை நோக்கி ஜெபித்தான். கர்த்தர் மோசேயின் ஜெபத்தை கேட்டார். கர்த்தர் கூறும் தீர்ப்புகளும் அதனை தொடர்ந்து இடம்பெறும் சம்பவங்களும் 23-வது வசனம் முதல் 34-வது வசனங்கள் வரை விரிவாக கூறப்பட்டு உள்ளன.

> ***அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: கோராகு தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகி போங்கள் என்று சபையாருக்கு சொல் என்றார். (எண். 16:23-24)***

கோராகு, தாத்தான், அபிராம் என்றவர்கள் தங்கி இருந்த இடம் ஒரு சிறிய இடம் அல்ல. ஒரு சிறிய கூடாரமும் அல்ல. மிகவும் விசாலமான இடத்தில் அவர்களும் அவர்கள் குடும்பத்தின் உறுப்பினர்களும் தங்கி வாழ்ந்து வந்தார்கள். எனவே வாசஸ்தலம் என்று அவர்கள் தங்கி இருந்த இடம் அழைக்கப்படுகின்றது. அதன் சரியான பொருள் நூற்று கணக்கான நபர்கள் வந்து கூடி இருக்கும் இடம் என்பது ஆகும். மிகவும் பெரிதான பூமி அவர்களுக்கு சொந்தமாக இருந்தது. அவர்கள் எல்கைகளை விட்டு அனைவரும் உடனடியாக விலகி நிற்க வேண்டும் என்று கர்த்தரிடம் இருந்து கட்டளை பிறக்கின்றது.

> ***உடனே மோசே எழுந்திருந்து, தாத்தான் அபிராம் என்பவர்களிடத்தில் போனான்; இஸ்ரவேலின் மூப்பரும் அவனை பின்சென்று போனார்கள். அவன் சபையாரை நோக்கி: இந்தத் துஷ்ட மனிதரின் சகல பாவங்களிலும் நீங்கள் வாரி கொள்ள படாதபடிக்கு, அவர்கள் கூடாரங்களை விட்டு விலகி, அவர்களுக்கு உண்டானவைகளில் ஒன்றையும் தொடாதிருங்கள் என்றான். (எண். 16:25-26)***

உடனடியாக மோசே எழுந்திருந்து தாத்தான் அபிராம் என்பவர்களிடத்தில் போனான். இஸ்ரவேலின் மூப்பரும் அவனை பின் சென்று போனார்கள் என்று 25-வது வசனம் கூறுகின்றது. மோசே கர்த்தர் கூறியதை ஜனங்களுக்கு எடுத்து கூறுகின்றான். கோராகு தாத்தான் அபிராம் என்றவர்கள் துஷ்ட மனிதர்கள் என்ற பட்டத்தை பெற்று விட்டார்கள். அவர்களை விட்டு அனைவரும் ஒதுங்கி வாழ வேண்டும் என்று மோசே கூறுகின்றான். அவர்களுக்கு வர இருக்கும் தண்டனை அவர்களுடன் தொடர்பு கொள்ளும் அனைவரையுமே பாதிக்கும் தண்டனையாக இருக்க போகின்றது என்று மோசே கூறுகின்றான். எனவே அனைவரும் அப்படி பட்டவர்களை விட்டு விலகி வாழ்வதே மிகவும் உத்தமம் என்று அவர்கள் தாத்தான் அபிராம் என்பவர்களின் வாசஸ்தலத்தை விட்டு விலகி போனார்கள் என்று 26-வது வசனம் கூறுகின்றது. ''துன்மார்க்கருடைய ஆலோசனையில்

நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரியாசகாரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்'' இருப்பதே உத்தமம் என்று முதலாவது சங்கீதம் முதலாவது வசனம் கூறுகின்றது. நீதிமொழிகளின் புத்தகம் 4:14,15-வது வசனங்கள், ''துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே. தீயோருடைய வழியில் நடவாதே. அதை வெறுத்துவிடு. அதின் வழியாய் போகாதே. அதை விட்டு விலகி கடந்து போ'' என்று கூறுகின்றது. 2 கொரிந்தியர் 6-வது அதிகாரம் 17-வது வசனம் ''ஆனபடியினால் நீங்கள் அவர்கள் நடுவில் இருந்து புறப்பட்டு பிரிந்து போய் அசுத்தமானதை தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' என்று கூறுகின்றது. வெளிப்படுத்தின விசேஷம் 18:4-வது வசனம், ''பின்பு வேறொரு சத்தம் வானத்தில் இருந்து உண்டாக கேட்டேன். அது என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும் அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்'' என்று எச்சரிக்கின்றது. ''மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன் படாதே. உன்னை சுத்தவானாக காத்துக்கொள்'' என்று பரிசுத்த பவுல் தீமோத்தேயு என்பாருக்கு எழுதின முதல் நிரூபம் 5:22-வது வசனத்தின் பின் பகுதி கூறுகின்றது.

மோசேயுடன் இஸ்ரவேலின் மூப்பர்களும் சென்றார்கள். மூப்பர்கள் துஷ்ட மனிதருடன் சேர வில்லை. இப்பொழுது ஜனங்களும் சேர வேண்டாம் என்று மோசே கூறுகின்றான். அப்படியே ஜனங்கள் கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகி போனார்கள்.

தெருவில் மோசேயின் சத்தம் கேட்கின்றதே, என்ன நடக்கின்றது என்பதை பார்க்க தாத்தானும் அபிராமும் அவர்களுடைய மனைவிகளும் பிள்ளைகளும் குழந்தைகளும் அனைவரும் அவர்களுடைய வாசஸ்தலத்திற்கு முன்பாக வந்து நிற்க ஆரம்பித்தார்கள்.

> *அப்படியே அவர்கள் கோராகு தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாஸ்தலத்தை விட்டு விலகி போனார்கள். தாத்தானும் அபிராமும் வெளியே வந்து, தங்கள் பெண் ஜாதிகள் பிள்ளைகள் குழந்தைகளோடும் தங்கள் கூடார வாசலிலே நின்றார்கள். (எண். 16:25-27)*

முதலாவது மோசே அழைத்தும் வரமாட்டோம் என்றவர்கள் இப்பொழுது தாங்களாகவே மோசேயின் சத்தத்தை கேட்டு தங்கள் குடும்பத்து உறுப்பினர்கள் அனைவருடனும் அவரவர்களின் வீட்டு வாசலின் முன்பாக வந்து நிற்கின்றார்கள். மோசே அவர்களை வாருங்கள் என்று கூப்பிடவில்லை. அவர்களாகவே வெளியே வந்து நிற்கின்றார்கள்.

> *அப்பொழுது மோசே: இந்த கிரியைகளை எல்லாம் செய்கிறதற்கு கர்த்தர் என்னை அனுப்பினார் என்றும், அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்லை என்றும், நீங்கள் எதினாலே அறிவீர்கள் என்றால், சகல மனிதரும் சாகிறபடி இவர்கள் செத்து, சகல மனிதருக்கும் நேரிடுகிறது போல இவர்களுக்கும் நேரிட்டால், கர்த்தர் என்னை அனுப்பவில்லை என்று அறிவீர்கள். கர்த்தர் ஒரு புதிய காரியத்தை நேரிட செய்வதால், பூமி தன் வாயை திறந்து, இவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்க தக்கதாக இவர்களையும் இவர்களுக்கு உண்டான யாவையும் விழுங்கி போட்டதேயானால், இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள் என்றான். (எண். 16:28-30)*

மோசே பேச ஆரம்பித்து விட்டான். கோராகு தாத்தான் அபிராம் என்பவர்களை பார்த்து மோசே பேசவில்லை. மூப்பர்களை பார்த்தும் ஜனங்களை பார்த்தும் கர்த்தர் அருள போகும் தண்டனையை எடுத்து கூறி பேச ஆரம்பிக்கின்றான். எல்லா மனிதருக்கும் சாவு என்பது வருவது போன்று கோராகு தாத்தான் அபிராம் என்ற குடும்பத்து மக்களுக்கும் சாவு வரும் என்றால் மோசே கர்த்தரால் அனுப்பப்படாத ஒரு ஊழியக்காரன் என்று தீர்மானித்து கொள்ளுங்கள். அவன் ஜனங்களை ஏமாற்றுகின்றவன். ஜனங்களின் கண்களை பிடுங்குகின்றவன் என்று தீர்மானித்து விடுங்கள். அப்பொழுது கோராகு தாத்தான் அபிராம் என்ற அனைவரும் மோசேயின் மீது சாட்டிய குற்ற சாட்டுகள் உண்மை என்று கருதப்படும். பொய்யானது அல்ல, மெய்யான குற்ற சாட்டுகள் என்று அனைவருக்கும் தெரிய வரும்.

ஆனால் அதற்கு மாறாக இயற்கையான முறையில் கோராகின் கூட்டம் சாகாமல் கர்த்தரால் ஒரு அசாதாரணமான நிகழ்ச்சி இடம் பெற்று அவர்கள் அனைவரும் சாவார்கள் என்றால் அவர்கள் கூறிய குற்ற சாட்டுகள் பொய்யானது என்று கர்த்தரால் நிரூபிக்கப்படும். மோசே கர்த்தரால் அழைக்கப்பட்ட ஊழியக்காரன் என்பதும், அவன் தானாக எதுவும் செய்வது இல்லை என்பதும் தெரிய வரும். 28,29,30 ஆகிய வசனங்களில் மோசே ஜனங்களை பார்த்தும் மூப்பர்களை பார்த்தும் பேச ஆரம்பிக்கின்றான்.

30-வது வசனத்தில் கர்த்தர் ஒரு புதிய காரியத்தை நேரிட செய்வதால் என்று மோசே கூறுகின்றான். கர்த்தர் ஒரு புதிய காரியத்தை நேரிட செய்வதால் என்பதின் சரியான பொருள் கர்த்தர் சிருஷ்டிப்பின் நாளில் பூமிக்கு கட்டளையிட்டது போன்று இன்னும் ஒரு முறை கட்டளை கொடுத்தால் என்பது ஆகும். முதலாவதாக மோசே கோபம் கொண்டான். ஆனால் செயல் ஆற்றவில்லை. கோபம் கொண்டதை தொடர்ந்து மோசே ஆரம்பத்தில் ஜெபிக்க மட்டுமே செய்தான். இப்பொழுது கர்த்தர் கோபம் கொள்ளுகின்றார். தொடர்ந்து கர்த்தர் செயல் ஆற்றுகின்றார். அபூர்வமான கிரியைகள் இடம்பெற இருக்கின்றன. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 28-வது அதிகாரம் 21-வது வசனம், ''கர்த்தர் தமது கிரியையாகிய அபூர்வமான கிரியையை செய்யவும், தமது வேலையாகிய அபூர்வமான வேலையை நிறைவேற்றவும், அவர் பெராப்சின் மலையிலே எழும்பினது போல எழும்பி, கிபியோனின் பள்ளத்தாக்கில் கோபம் கொண்டது போல் கோபம் கொள்வார்'' என்று கூறுகின்றது. ''மாறுபாடானவருக்கு ஆபத்தும் அக்கிரம செய்கைகாரருக்கு ஆக்கினையும் அல்லவோ கிடைக்கும்'' என்று யோபுவின் புத்தகம் 31-வது அதிகாரம் 3-வது வசனம் கூறுகின்றது. இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்று எண்ணாகமம் 16-வது அதிகாரம் 30-வது வசனத்தில் மோசே கூறுகின்றான். அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்குவார்கள் என்றும் கூறுகின்றான். பாதாளம் என்ற வார்த்தையின் சரியான பொருள் நரகம் என்பது ஆகும்.

> *அவன் இந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லி முடித்தவுடனே, அவர்கள் நின்றிருந்த நிலம் பிளந்தது, பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது. (எண். 16:31-32)*

''மரணம் அவர்களை தொடர்ந்து பிடிப்பதாக. அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்குவார்களாக. அவர்கள் வாசஸ்தலங்களிலும் அவர்கள் உள்ளத்திலும் பொல்லாங்கு இருக்கின்றது'' என்று சங்கீதம் 55:15-வது வசனம் கூறுகின்றது. சங்கீதம் 106:17-வது வசனம் ''பூமி பிளந்து தாத்தானை விழுங்கி அபிராமின் கூட்டத்தை மூடி போட்டது'' என்று

கூறுகின்றது. தாத்தானும் அபிராமும் செய்த பாவத்தினால் அவர்களது குடும்பமும் பிள்ளைகளும் பேர பிள்ளைகளும் பாதிக்க பட்டார்கள். குடும்ப தலைவன் செய்யும் தவறுகளினால் குடும்பம் முழுவதுமே பாடு படுகின்றது.

தாத்தான் அபிராம் என்பவர்களுடன் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களும் உயிரோடு பாதாளம் இறங்கினார்கள். ஆனால் கோராகுவின் குடும்பத்தில் கோராகு என்பவன் மட்டுமே பாதிக்க பட்டான். கோராகுவின் பிள்ளைகள் பாதிக்கப்படவில்லை. தங்கள் தகப்பன் செய்வது தவறு என்று அறிந்த பின்னர் அவனுடைய பிள்ளைகள் தகப்பனுடைய தவறுக்கு உடந்தையாக இருக்க மறுத்து விட்டார்கள். கர்த்தருக்கும் அவருடையு ஊழியக்காரனான மோசேக்கும் எதிராக தங்கள் தகப்பனாகிய கோராகு செய்த குற்றத்திற்கு அவனுடைய பிள்ளைகள் விலகி வாழ்ந்தார்கள். எனவே தேவ கோபத்திற்கு கோராகுவின் பிள்ளைகள் தப்பி விட்டார்கள் என்று எண்ணாகம புத்தகம் 26:10,11 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. ''பூமி தன் வாயை திறந்து அவர்களையும் கோராகையும் விழுங்கினதினாலும் அக்கினி இருநூற்று ஐம்பது பேரை பட்சித்ததினாலும் அந்த கூட்டத்தார் செத்து ஓர் அடையாளமானார்கள். கோராகின் குமாரரோ சாகவில்லை.'' கோராகுவின் பிள்ளைகளும் சந்ததிகளும் பரிசுத்தமான பாதையில் தொடர்ந்து வாழ்ந்து வந்தார்கள். பிற்காலத்தில் கர்த்தருடைய ஆலயத்தில் கோராகுவின் பிள்ளைகள் பாடகர் குழுவாக இருந்து ஆலய ஆராதனையில் உதவி செய்தார்கள். இதனை 1நாளாகம புத்தகம் 6-வது அதிகாரம் 31வது வசனம் முதல் 38-வது வசனங்கள் வரை பார்க்கலாம். மேலும் கோராகுவின் பிள்ளைகள் அநேகர் சங்கீதங்களை எழுதி இசை அமைத்தார்கள். வேத புத்தகத்தில் 42-வது சங்கீதமும், 44 முதல் 49 சங்கீதங்களும், 84,85,87,88 ஆகிய சங்கீதங்களும் கோராகுவின் பிள்ளைகள் எழுதி பாடிய சங்கீதங்களாகும்.



கோராகும், தாத்தான் அபிராம் குடும்பமும்
பூமி பிளந்து பாதாளத்தில் இறங்கினார்கள்

கர்த்தரை மதித்து வாழ்கின்றவர்கள் ஆசீர்வதிக்க படுகின்றார்கள். கர்த்தரை அவமதித்து வாழ்கின்றவர்கள் அழிக்க படுகின்றார்கள்.

அவர்கள் தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்கினார்கள் பூமி அவர்களை மூடி கொண்டது. இப்படி சபையின் நடுவிலிருந்து அழிந்து போனார்கள். அவர்களை சுற்றிலும் இருந்த இஸ்ரவேலர் யாவரும் அவர்கள் கூக்குரலை கேட்டு, பூமி நம்மையும் விழுங்கி போடும் என்று சொல்லி ஓடினார்கள். (எண். 16:33-34)

தாத்தான் அபிராம் இருவரும் கோராகு என்றவனுடன் சேர்ந்து கர்த்தருக்கு எதிராக வந்தார்கள். தாத்தான் என்றால் வாதாடுவதில் சிறந்தவன் என்று பொருள். அபிராம் என்றால் பெரிய இடத்து மனிதன் என்று பொருள். ஆயினும் வனாந்திர பிரயாணத்தில் கோராகு என்ற கொடிய மனிதனுடன் சேர்ந்து தவறான பாதையில் தடம் பதித்தார்கள். மனதை கல்லாக்கி மண்ணில் மூழ்கி போனார்கள்.

கோராகு என்றால் வெட்டா வெளி என்று பொருள். கர்த்தரை அவமதித்தவர்கள் வாழ்வு பசும் தரை காண்பது இல்லை. வெட்டா வெளியாகவே மாறி விடுகின்றது. கர்த்தருக்கு விரோதமாக மனதை கடினப்படுத்தி வாழ்ந்தவர்கள் யார் என்று யோபுவின் புத்தகம் 9:4-வது வசனம் கூறுகின்றது. எபிரேயர் நிரூபம் 3:12,13,14 ஆகிய வசனங்கள் ''சகோதரரே ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கு ஏதுவான அவிசுவாசம் உள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்கு உள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டு போகாதபடிக்கு இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கு ஒருவர் புத்தி சொல்லுங்கள். நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டு இருப்போமாகில் கிறிஸ்துவினிடத்தில் பங்கு உள்ளவர்களாய் இருப்போம்.''

19.3 பட்சிக்கும் அக்கினியினால் 250 தலைவர்களும் மடிந்தார்கள்

அக்கினி கர்த்தருடைய சந்நிதியில் இருந்து புறப்பட்டு தூபம் காட்டின இருநூற்று ஜம்பது பேரையும் பட்சித்து போட்டது. (எண். 16:35)

அக்கினி தூபம் காட்டினவர்களை பட்சித்தது

தூப கலசம் கையில் எடுத்து வந்த 250 நபர்களும் உடனே அழிக்க பட்டார்கள். கர்த்தருடைய பார்வையில் தூய்மை உள்ளவர்கள் யார் என்ற பரீட்சை இடம் பெற்றது. கர்த்தரால் ஆசாரிய பட்டத்திற்கு தெரிந்து எடுக்கப்பட்டவர் யார் என்ற பரீட்சை இடம் பெற்றது. அத்து மீறி சென்றவர் யார் என்ற பரீட்சை இடம் பெற்றது. பரீட்சை நடத்தியவர் பரிசுத்தராகிய தேவனின் அக்கினி. பரிசோதனையில் கோராகு கொண்டு வந்த 250 நபர்களும் பட்சிக்க பட்டார்கள். மனிதனின் உண்மையான உள்

அலங்காரம் என்ன என்பதை பரிசோதித்து பார்ப்பது அக்கினியே ஆகும். பரிசுத்த பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாவது நிரூபம் 3:13-ல் ''அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும். நாளானது அதை விளங்க பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்த படும்'' என்று கூறபட்டுள்ளது. அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மை உள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும். எண்ணாகம புத்தகம் 16-வது அதிகாரம் 36 முதல் 40 வசனங்கள் வரை கர்த்தர் தொடர்ந்து மோசேயிடம் பேசுவதை பார்க்கின்றோம்.

பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: அக்கினிக்குள் அகப்பட்ட தூபகலசங்களை எடுத்து, அவைகளிலிருக்கிற அக்கினியை அப்பாலே கொட்டி போடும்படி ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசாருக்கு சொல்; அந்த தூப கலசங்கள் பரிசுத்தமாயின. தங்கள் ஆத்துமாக்களுக்கே கேடு உண்டாக்கின அந்த பாவிகளின் தூபகலசங்களை பலிபீடத்தை மூடத்தக்க தட்டையான தகடுகளாய் அடிக்கக்கடவர்கள்; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அவைகளை கொண்டு வந்ததினால் அவைகள் பரிசுத்தமாயின; அவைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு அடையாளமாயிருக்கும் என்றார். (எண். 16:36-38)

250 மனிதரும் எடுத்து வந்த தூப கலசம் கர்த்தரின் அக்கினிக்குள் அகப்பட்டு கொண்டன என்று 37-வது வசனம் கூறுகின்றது. ஆரோனின் குமாரனான எலேயாசாருக்கு அந்த பொறுப்பு கொடுக்க பட்டது. 250 தூப கலசங்களையும் எடுத்து தட்டையாக அடித்து பலிபீடத்தை மூடுவதற்கு ஒரு மூடியாக பயன் படுத்தி விட்டான். அந்த மூடியை பார்க்கின்றவர்கள். அத்துமீறி ஆசை பட்ட 250 ஆண்களின் முடிவு என்ன ஆயிற்று என்று நினைத்து பார்க்க வேண்டும் என்று கர்த்தர் கட்டளை இட்டார். யோபுவின் புத்தகம் 4-வது அதிகாரம் 8-வது வசனத்தில் ''நான் கண்டு இருக்கிறபடி அநியாயத்தை உழுது தீவினையை விதைக்கிறவர்கள் அதையே அறுக்கிறார்கள்'' என்று கூறப்பட்டு இருக்கிறது.

எண்ணாகம புத்தகம் 16:2-வது வசனத்தில் மடிந்து போன 250 நபர்களும் மிகவும் மிகவும் முக்கியமான பொறுப்பில் இருந்தவர்கள் என்று பார்க்கிறோம். சபைக்கு தலைவர்களும் சங்கத்திற்கு அழைக்கப்பட்டவர்களும் பிரபலமானவர்களுமாகிய 250 பேர் என்று அந்த வசனத்தில் பார்க்கலாம். அவர்களை அழைத்து வந்த கோராகு என்றவனும் ஆரோனுக்கு அடுத்தால் போல் இருந்த ஸ்தானத்தில் ஆசரிப்பு கூடாரத்தின் பொறுப்பில் இருந்தவன் என்பதையும் நாம் அறிவோம். யாத்திராகம புத்தகம் 19:6-வது வசனத்தில் நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று கூறப்பட்டு உள்ளது. பிரித்து எடுக்கப்பட்ட ஜனங்கள் ஆசாரிய ராஜ்யத்திற்கு அழைக்க பட்டார்கள். ஆனால் ஆசாரிய பட்டத்திற்கு அழைக்க படவில்லை. ஆசாரிய பட்டத்திற்கு ஆரோனை போன்று கர்த்தரால் அழைக்க படாமல் ஒருவராலும் அந்த பொறுப்பை எடுத்து நடத்த முடியாது என்பதை எபிரேய நிரூபம் 5:4-வது வசனம் திட்டவட்டமாக கூறுகின்றது.

அப்படியே ஆசாரியனாகிய எலெயாசார் சுட்டெரிக்க பட்டவர்கள் கொண்டு வந்திருந்த வெண்கல தூபகலசங்களை எடுத்து, ஆரோனின் புத்திரராய் இராத அந்நியன் ஒருவனும் கர்த்தருடைய சந்நிதியில் தூபம் காட்ட வராதபடிக்கும், கோராகை போலும் அவன் கூட்டத்தாரை போலும் இராதபடிக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபக குறியாயிருக்கும்

பொருட்டு, கர்த்தர் மோசேயை கொண்டு தனக்கு சொன்னபடியே அவைகளை பலிபீடத்தை மூடும் தகடுகளாக அடிப்பித்தான். (எண். 16:39-40)

கோராகுவின் உள்ளான ஆசை ஊழிய ஆசை அல்ல. பதவி ஆசை ஆகும். ஆசரிப்பு கூடாரத்தில் ஆரோனுக்கு அடுத்தால் போல் பொறுப்பில் இருந்தவன் கோராகு மட்டுமே ஆகும். ஆரோனுக்கு அடுத்தால் போல் இருப்பதைவிட ஆரோனுக்கும் அதிகமாக இருப்பதே அவன் ஆசையாக மாறியது. கொடுக்கப்பட்ட ஊழியத்தை கோராகுவின் கூட்டம் காத்து கொள்ளவில்லை. கொடுக்கப்பட்ட ஸ்தானத்தில் திருப்தி காணவில்லை. கர்த்தர் ஒவ்வொருவருக்கும் ஒரு ஊழியமும், ஒரு வேலையும் ஒரு இடமும் அவருடைய சித்தப்படி கொடுத்தார். அவர்களுடைய உண்மைக்கு தக்கதாக கர்த்தர் அவர்களுக்கு தொடர்ந்து நன்மையும், உயர்வும் தாமாகவே பாராட்டுவார். 1 கொரிந்தியர் 3:8-வது வசனம், ''மேலும் நடுகிறவனும், நீர் பாய்ச்சுகிறவனும் ஒன்றாய் இருக்கிறார்கள். அவனவன் தன் தன் வேலைக்கு தக்கதாய் கூலியை பெறுவான்.'' கோராகு ஆரோன் இடத்தில் நிறுத்த அழைத்து வந்த 250 நபர்களும் கர்த்தரால் அழைக்க படாதவர்கள். ஒரு மனிதனின் ஆசை 250 மக்களின் அழிவில் முடிந்தது. 106-வது சங்கீதம் 18-வது வசனத்தில் ''அவர்கள் கூட்டத்தில் அக்கினி பற்றி எரிந்தது. அக்கினி ஜீவாலை துன்மார்க்கரை எரித்து போட்டது'' என்று வாசிக்கிறோம். தொடர்ந்து எபிரேயர் நிரூபம் 12-வது அதிகாரம் 28,29-வது வசனங்களில் ''ஆதலால் அசைவில்லாத இராஜ்ஜியத்தை பெருகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையை பற்றி கொள்ள கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறாரே'' என்று கூறப்பட்டு உள்ளது.

19.4 வாதையினால் முறுமுறுத்த ஜனங்கள் செத்தார்கள்

மறுநாளிலே இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் கர்த்தரின் ஜனங்களை கொன்று போட்டீர்கள் என்றார்கள். (எண். 16:41)

மறு நாளில் என்று 41-வது வசனம் துவங்குகின்றது. கோராகு என்பவரின் கூட்டத்தார் கர்த்தரால் அழிக்கப்பட்ட மறு நாளில் ஜனங்கள் அனைவரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். மோசேயும் ஆரோனும் கொலைகாரர்கள் என்று குற்றம் சாட்டினார்கள்.

இந்த அதிகாரத்தில் 4-வது வசனத்திலும் 22-வது வசனத்திலும் மோசேயும் ஆரோனும் முகம் குப்புற விழுந்து ஜனங்களை தண்டிக்க வேண்டாம் என்று ஜெபித்தார்கள் என்று பார்த்தோம். அதன் பயனாக ஜனங்கள் கர்த்தரின் கோபத்திற்கு தப்பி பிழைத்தார்கள். தங்களுக்கு நன்மை மட்டுமே செய்து வருகின்றவர்களை ஜனங்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்களுக்கு வரும் தண்டனைகளுக்கு காரணம் தாங்கள் செய்யும் பாவங்களே என்பதை இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை. மோசே ஆரோன் என்றவர்கள் மீது சாடினார்கள். அவர்களுக்கு வரும் கஷ்டங்களுக்கு காரணம் மோசே ஆரோன் என்பவர்களே என்று கூறினார்கள். ஆரோனும் மோசேயும் தந்திரம் செய்து கோராகின் கூட்டத்தாரை கொன்று விட்டார்கள் என்று பழி சாட்டினார்கள். கர்த்தரின் பார்வையில் அவர்களது பேச்சு பாவமாக தெரிந்தது. கர்த்தர் சடுதியிலே குறுக்கிட்டார் என்று 42-வது வசனம் கூறுகின்றது.

சபையார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூடி ஆசரிப்பு கூடாரத்துக்கு நேரே பார்க்கிற போது, மேகம் அதை மூடினது, கர்த்தரின் மகிமை காணப்பட்டது. (எண். 16:42)

கோராகின் கூட்டத்தை கொன்றது ஆரோன் மோசே என்பவர்கள் அல்ல. அது கர்த்தரால் வந்த தண்டனை என்பதை ஜனங்கள் அறிந்து கொள்ளுவதற்கு கர்த்தர் குறுக்கிடுகின்றார். உடனே ஆசரிப்பு கூடாரத்தில் கர்த்தரின் மகிமை தோன்றியது. அவர்கள் வந்த தீர்ப்புகளும் தண்டனைகளும் கர்த்தரே கொடுத்தவை என்பதை ஆசரிப்பு கூடாரத்தில் இறங்கிய கர்த்தருடைய மேகமும் கர்த்தருடைய மகிமையும் காட்டியது.

கர்த்தரால் அழைக்க படாமல் தூபம் காட்டுவதற்கு துணிந்த இருநூற்று ஐம்பது நபர்களையும் அக்கினி பட்சித்து போட்டது, கர்த்தர் அனுப்பிய அக்கினியே ஆகும். அது ஆரோனும் மோசேயும் கொழுத்திய நெருப்பு அல்ல என்பதை நிரூபித்து காட்டுவதற்கு கர்த்தரின் மகிமை தோன்றியது. கர்த்தரின் தீர்ப்பின்படி கோராகுவையும், தாத்தான் அபிராம் என்றவர்களின் குடும்பத்தையும் பூமி இரண்டாக பிளந்து விழுங்கி விட்டது. அது ஆரோனும் மோசேயும் வெட்டிய குழி அல்ல. கர்த்தரை அவமதிக்கிறவர்கள் செல்லும் வழி என்பதை தெரிவிக்க கர்த்தரின் மகிமை தோன்றியது.

மோசேயும் ஆரோனும் ஆசரிப்பு கூடாரத்துக்கு முன்பாக வந்தார்கள். (எண். 16:43)

கர்த்தருடைய மகிமை கண்ணில் பட்டவுடன் மோசேயும் ஆரோனும் ஆசரிப்பு கூடாரத்திற்கு முன்பாக வந்தார்கள்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த சபையாரை விட்டு விலகி போங்கள் ஒரு நிமிஷத்தில் அவர்களை அதமாக்குவேன் என்றார். அவர்கள் முகங்குப்புற விழுந்தார்கள். (எண். 16:44-45)

ஜனங்கள் விசுவாசத்தில் திகழும் மக்களாக இருக்க கர்த்தர் விரும்புகிறார். அவர்களோ முறு முறுப்பதில் வளரும் மக்களாகவே காண பட்டனர். அமர்ந்து இருந்து தம்மை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார். அவர்களோ அலசடி படும் மக்களாகவே காண படுகின்றார்கள். உள்ளம் உடைவதற்கு பதிலாக கடினமாகவே செய்கின்றது. மன தாழ்மைக்கு பதிலாக மன மேட்டிமையே நீடிக்கின்றது. எனவே இந்த முறை கர்த்தர் கொடுக்கும் தண்டனை எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் இடம் பெறும் தண்டனையாக மாறி விட்டது.

தாமாக நேரடியாக தண்டனையை அனுப்பி விட்டார். எவ்வித முன் அறிவிப்பும் கொடுக்காமல் பாவம் செய்யும் ஆத்துமாக்களை சாகடிக்க கர்த்தர் முடிவு செய்தார். ஒரு நிமிஷத்திலே ஜனங்களை அதமாக்குவேன் என்றார். உடனே மோசேயும் ஆரோனும் முகம் குப்புற விழுந்தார்கள். இந்த அதிகாரத்தில் மூன்றாவது முறையாக இருவரும் முகம் குப்புற விழுகின்றார்கள். ஜெபிக்கின்றார்கள்.

மோசே ஆரோனை நோக்கி: நீ தூப கலசத்தை எடுத்து, பலிபீடத்தில் இருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின் மேல் தூபவர்க்கம் இட்டு, சீக்கிரமாய் சபையினிடத்தில் போய், அவர்களுக்காக பாவநிவிர்த்தி செய்.

கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது, வாதை தொடங்கிற்று என்றான். (எண். 16:46)

மோசே ஆரோன் என்ற இருவரிடமும் தெரிய படுத்தாமல் கர்த்தர் பாளயத்தில் வாதை அனுப்பி வைத்தார். கொடுக்க போகும் தண்டனையை கர்த்தர் முன்னதாக மோசே ஆரோன் என்ற இருவரிடமும் கூறுவது உண்டு. பின்னர் மோசே அதனை ஜனங்களுக்கு தெரிய படுத்துவதும் உண்டு. அப்பொழுது ஜனங்கள் அதனை கேட்டு மனம் மாறி விட்டால் தண்டனை தவிர்க்க பட்டதும் உண்டு. மோசேயும் ஆரோனும் என்ற இரண்டு நபர்கள் தங்களுக்கும் கர்த்தருக்கும் நடுவாக நிற்பதினாலும் முகம் குப்புற விழுவதினாலும் வரும் தண்டனைகளுக்கு தப்பி பிழைப்பதற்கு வழி இருக்கின்றது என்பதை ஜனங்கள் உணரவில்லை. கர்த்தருடைய சார்பில் அறிவிப்பு கொடுக்கும் அவர்கள்தான் தங்களுக்கு வரும் தண்டனைகளுக்கும் காரணம் என்ற முடிவிற்குள் ஜனங்கள் வந்து விட்டார்கள். எனவே இந்த முறை யாரிடமும் எதுவும் கூறாமல் கர்த்தர் செயல் ஆற்றுகின்றார்.

ஜனங்களை ஒரு நிமிஷத்தில் அழித்து விடும் ஒரு வாதை பாளயத்தில் தொடங்கி விட்டது. கர்த்தருடைய சந்நிதியில் இருந்து கடும் கோபம் புறப்பட்டது. மோசே வாதை தொடங்கிற்று என்றான். மோசேயும் ஆரோனும் முகம் குப்புற விழுந்தும் வாதை நிற்கவில்லை. கர்த்தரை நோக்கி ஜெபித்தும் வாதை நிற்கவில்லை.

எனவே மோசே ஆரோனிடம் பாவ நிவிர்த்தி செய்யும்படி கூறுகின்றான். செய்யும் ஜெபம் கர்த்தரிடம் சேராமல் இருப்பதற்கு காரணம் செய்த பாவங்களே என்பதை மோசே உணர்ந்து விட்டான். எனவே செய்த பாவங்களை முதலாவதாக அறிக்கையிட வேண்டும் என்ற முடிவிற்குள் மோசே வந்து விட்டான். அழிவுக்கு நேராக ஆயத்தமாக நிற்கும் ஜனங்களுக்காக கர்த்தரிடம் பாவ மன்னிப்பு கேட்க மோசே ஆரோனுக்கு கட்டளை கொடுத்தான். புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் யாக்கோபு என்பார் எழுதின பொதுவான நிரூபம் 5-வது அதிகாரம் 16-வது வசனத்தை பார்ப்போம். ''நீங்கள் சொஸ்தம் அடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கு ஒருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலன் உள்ளதாய் இருக்கின்றது.'' லேவியராகம புத்தகம் 16-வது அதிகாரத்தில் அனைத்து ஜனங்களுக்காகவும் வருடந்தோறும் இடம்பெறும் பாவ நிவிர்த்தி ஆராதனை கூறப்பட்டது. இப்பொழுது எண்ணாகமம் 16-ம் அதிகாரத்தில் வாதையினால் வந்த அழிவை தடுக்க ஒரு அவசர பாவ நிவிர்த்தி ஆராதனை இடம் பெறுகின்றது.

மோசே சொன்னபடி ஆரோன் அதை எடுத்து கொண்டு சபையின் நடுவில் ஓடினான். ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கி இருந்தது. அவன் தூபவர்க்கம் போட்டு, ஜனங்களுக்காக பாவநிவிர்த்தி செய்து, (எண். 16:47)

ஆரோன் மிகவும் முதிர்ச்சி நிறைந்த ஒரு ஊழியக்காரனாக காண படுகின்றான். மக்கள் மடிவதை தடுத்து நிறுத்த விரைந்து ஓடுகின்றான். மற்றவர்கள் வாழ வேண்டும் என்ற நல் மனம் ஆரோனுக்குள் வந்து விட்டது. பிரதான ஆசாரியனின் பதவி ஜனங்களுக்கு ஓர் சேவையாளனாக இருக்கவே கொடுக்கப்பட்டு உள்ளது என்பதை ஆரோன் கண்டு விட்டான். எனவே தூப கலசத்தில் தூப வர்க்கம் இடுகின்றான். தூபவர்க்கம் என்பது மன்றாட்டு

ஜெபத்திற்கு ஓர் அடையாளமாக இருக்கின்றது. ஆரோன் மன்றாடுகின்றான். ஜனங்களுக்காக பாவ நிவிர்த்தி செய்கின்றான்.

வாதையை நிறுத்த ஆரோன் பாவநிவிர்த்தி செய்கிறான்

செத்தவர்களுக்கும் உயிரோடு இருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான்; அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது. (எண். 16:48)

வாதையினாலே அநேக ஜனங்கள் மடிந்து கொண்டு இருக்கின்றார்கள். பிரதான ஆசாரியன் செத்தவர்களின் அருகில் சேர கூடாது என்று லேவியராகம புத்தகம் 21:10-12 வசனங்களில் நாம் படித்தோம். ஆனால் பிரதான ஆசாரியனாகிய ஆரோன் செத்தவர்களுக்கும் உயிரோடு இருக்கின்றவர்களுக்கும் நடுவாக நின்று கொண்டு இருக்கின்றான்.

பரிசுத்தமான கர்த்தருக்கும் பாவத்தில் விழுந்த மக்களுக்கும் நடுவாக ஊழியக்காரன் நின்ற பொழுது வாதை கர்த்தரால் நிறுத்தப்பட்டது. ஆரோன் மோசேயுடன் சேர்ந்து திறப்பில் வாசலில் நின்றான். மற்றவர்களுக்காக அவன் செய்த பாவ அறிக்கையின் பலனாக பாவத்தின் சம்பளமான மரணம் தடுத்து நிறுத்த பட்டது.

கோராகின் காரியத்தின் நிமித்தம் செத்தவர்கள் தவிர, அந்த வாதையினால் செத்து போனவர்கள் பதினாலாயிரத்து எழுநூறு பேர். வாதை நிறுத்த பட்டது; அப்பொழுது ஆரோன் ஆசரிப்பு கூடாரவாசலுக்கு மோசேயினிடத்தில் திரும்பி வந்தான். (எண். 16:49-50)

யாத்திராகம புத்தகம் 32-வது அதிகாரத்தில் ஆரோன் என்றவன் செய்த தவறினால் வாதை வந்தது. எண்ணாகம புத்தகம் 16-வது அதிகாரத்தில் ஆரோன் என்ற பிரதான ஆசாரியன் செய்த ஜெபத்தினால் வாதை நின்றது. எவ்வித அக்கிரம சிந்தையும் இல்லாத ஓர் உயர்ந்த குணாளனாக ஆரோன் திறப்பின் வாசலில் நின்றான். அவனுடைய மன்றாட்டு கர்த்தரால் தள்ளப் படவில்லை. ஏற்று கொள்ளப்பட்டது. சாவு நீடிக்கவில்லை. நிறுத்தப்பட்டது. சங்கீதம் 66:18-20 வசனங்களை பார்ப்போம். ''என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்கு செவி கொடார். மெய்யாய் தேவன் எனக்கு செவி கொடுத்தார். என் ஜெபத்தின் சத்தத்தை கேட்டார். என் ஜெபத்தை தள்ளாமலும், தமது கிருபையை என்னை விட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக''.

19.5 துளிர்க்கும் கோல் ஆரோனே தெரிந்து எடுக்கபட்டவன் என்று காட்டியது

துளிர்த்த ஆரோனின் கோல்

எண்ணாகம புத்தகம் 16-வது அதிகாரத்தின் துவக்கம் முதல் கோராகு என்ற ஒரே ஒரு தனி மனிதனின் துணிகரத்தினால் சமூகமே சீரழிவதை நாம் பார்த்தோம். இனிமேல் பேர் அழிவு வந்து விடாமல் இருக்க எண்ணாகம புத்தகம் 17-வது அதிகாரம் இங்கு இடம் பெறுகின்றது. மூன்று பெரும் சோகங்கள் எண்ணாகம புத்தகம் 16-வது அதிகாரத்தில் காணப்பட்டன. அந்த அதிகாரத்தில் 1 முதல் 35 வசனங்களில் மிஞ்சி போனவர்கள் பூமியின் அடியிலே தஞ்சம் ஆனார்கள். அதன் பின்னதாக வந்த வசனங்களில் தூபம் காட்டுவதற்கு முன்னதாக சென்ற 250 நபர்கள் பட்சிக்கும் அக்கினிக்கு பலியாகி போனார்கள். அதன் பின்னர் ஜனங்கள் மத்தியில் வாதை எழும்பி அநேகர் செத்தார்கள். ஆசாரிய பட்டம் ஆரோன் என்ற ஒருவருக்கே உரியது அனைவருக்கும் உரியது அல்ல என்பதே இதுவரை இடம் பெற்ற சோக நிகழ்ச்சிகள் தந்த பாடம் ஆகும்.

> *பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்கள் பிதாக்களின் வம்சங்களாகிய ஒவ்வொரு வம்சத்தினுடைய பிரபுவினிடத்தில், ஒவ்வொரு கோலாக பன்னிரண்டு கோலை வாங்கி, அவனவன் கோலில் அவனவன் பேரை எழுதுவாயாக. (எண். 17:1-2)*

எண்ணாகம புத்தகம் 17-வது அதிகாரத்தில் ஆரோன் மட்டுமே அழைக்க பட்டவன் என்பதை கோடிட்டு காட்டுவதற்கு நான்காவது முறையாக ஓர் அற்புத நிகழ்ச்சி இடம் பெற

இருக்கின்றது. கர்த்தரின் ஊழியம் போராடி பெற்று கொள்ளுவது அல்ல. வாதாடி வாங்கி கொள்ளுவதும் அல்ல. உத்தமம் நிறைந்த மனிதர்களை தேடி வருவது என்பதை எண்ணாகம புத்தகம் 17-வது அதிகாரம் எடுத்து கூறுகின்றது.

எதற்கும் முறுமுறுக்கும் தன்மை கொண்ட ஜனங்கள் இப்பொழுது ஆசரிப்பு கூடார பணி யாருடையது என்பதை குறித்து முறுமுறுத்து கொண்டு இருக்கின்றார்கள். எண்ணாகம புத்தகம் 17-வது அதிகாரத்தில் இடம் பெறும் நிகழ்ச்சி அனைத்து முறுமுறுப்புகளுக்கும் ஓர் முடிவு கட்டும் நிகழ்ச்சியாக மாற இருக்கின்றது. அந்த நிகழ்ச்சி ஓர் அற்புத நிகழ்ச்சி ஆகும். இயற்கை என்பதற்கு இசைவு பெறாத நிகழ்ச்சி ஆகும்.

கோராகின் கூற்று, ஆசாரியத்துவம் ஆரோனின் சந்ததிக்கு மட்டுமே உரித்தானது அல்ல. அது யாருக்கும் கொடுக்க படலாம் என்பது. கர்த்தர் இங்கே ஒரு பரீட்சை நடத்த தயாராவதை பார்க்கலாம். பரீட்சையின் பொருள் என்ன, எப்படி நடக்கும் என்பதை கர்த்தர் மோசேக்கு கூறுகிறார். 12 கோத்திர பிரபுக்களும் ஆளுக்கு ஒன்றாக ஒரு கோலை கர்த்தரின் சந்நிதானத்தில் கொண்டு வர வேண்டும். மோசே ஒவ்வொரு கோலிலும் அவரவர் பெயரை எழுத வேண்டும்.

கோல் என்பதை குறிக்கும் எபிரெய சொல்லின் சரியான பொருள் 'செங்கோல்' என்பது ஆகும். உலகில் பெற்ற அதிகாரம், உலகத்தில் கண்ட அந்தஸ்து, மேன்மை, பெருமை, அனைத்திற்கும் ஓர் அடையாளமாக இருக்கும் கோல் ஆசரிப்பு கூடாரத்தின் பணிக்கு தகுதி பெறுவதற்காக படைக்க படுகின்றது. ஒவ்வொருவரின் கோல் மீதும் கொடுத்தவரின் பெயரும் எழுதப்படுகின்றது.

> ***லேவியினுடைய கோலின் மேல் ஆரோனின் பேரை எழுத கடவாய்; அவர்களுடைய பிதாக்களின் ஒவ்வொரு வம்ச தலைவனுக்காகவும் ஒவ்வொரு கோல் இருக்க வேண்டும். (எண். 17:3)***

லேவியின் கோலில் ஆரோனின் பெயரும், அது போல் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒரு வம்ச தலைவனின் பெயரும் எழுதப் பட வேண்டும்.

கர்த்தர் தமது ஊழியத்திற்கு பெயர் சொல்லி அழைக்கின்றார். லேவி கோத்திரத்தின் கோலில் ஆரோனின் பெயர் பதிக்க பட்டது. அவனது ஊழியத்திற்கு அவன் அழைக்கப்பட்ட நாள் முதல் ஆரோனுடைய கோல் அவனுடைய கையில் இருந்து கொண்டே இருக்கின்றது. அற்புதம் நிறைந்த கோலாக ஆரோனின் கோல் காண பட்டதை யாத்திராகம புத்தகம் 7:12-வது வசனத்தில் கண்டோம். எகிப்தின் மந்திரவாதிகள் ஒவ்வொருவனாக தன், தன் கோலை போட்ட போது அவைகள் சர்ப்பங்களாயின. ஆரோனுடைய கோலோ அவர்களுடைய கோல்களை விழுங்கிற்று என்று வசனம் கூறுகின்றது.

> ***அவைகளை ஆசரிப்பு கூடாரத்திலே நான் உங்களை சந்திக்கும் ஸ்தானமாகிய சாட்சி பெட்டிக்கு முன்னே வைக்கக்கடவாய்.(எண். 17:4)***

இங்கு 13 கோல்கள் 13 வரிசை அமைத்தன. அதின் 13-வது கோல் பிரித்து எடுக்கப்பட்டவர்களின் வரிசையான லேவி கோத்திரத்தின் சார்பில் ஆரோனின் பெயர் கொண்டு காண பட்டது. அனைத்து கோல்களும் கர்த்தரின் சமூகத்தில் வைக்கப்படுகின்றன.

சாட்சி பெட்டி என்பது மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டு உள்ளது. வருடம் ஒரே ஒரு முறை பாவ நிவிர்த்தி செய்வதற்காக ஆரோன் என்ற பிரதான ஆசாரியன் மட்டுமே மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியும். ஆனால் தேவனுடைய வீடு எங்கும் உண்மை உள்ளவனாக இருந்த மோசே 13 கோல்களுடன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கின்றான். 10 கற்பனைகளை தனக்குள் கொண்ட சாட்சி பெட்டி என்று அழைக்கப்படும் உடன்படிக்கையின் பெட்டிக்கு முன்பாக 13 கோல்களையும் வைக்கின்றான்.

அப்பொழுது நான் தெரிந்து கொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும்; இப்படி இஸ்ரவேல் புத்திரர் உங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிற அவர்கள் முறுமுறுப்பை என்னை விட்டு ஒழிய பண்ணுவேன் என்றார். (எண். 17:5)

கர்த்தர் யாரை தெரிந்து எடுக்க போகின்றாரோ, அவருடைய பெயர் குறிக்கப்பட்ட கோல் துளிர் விடும் என்று அறிந்து கொள்ளுகின்றோம். ஆரோனின் கோல் அழைக்கப்பட்டவனின் கோல் என்பது சீக்கிரமாக தெரியவர இருக்கின்றது. ஆரோனை போல தேவனால் அழைக்க படாமல் ஒருவனும் இந்த கனமாக ஊழியத்திற்கு தானாய் ஏற்படுகிறது இல்லை என்பதை எபிரெயர் நிரூபம் 5:4-வது வசனத்தின் மூலம் அறிந்து கொள்ளுகின்றோம். ஆரோனின் கோல் அழைக்க பட்டவனின் கோலாக இருந்த படியினால் அது ஜீவனும், வல்லமையும் பெற்ற கோலாக இருந்து கொண்டே வருகின்றது.

யாத்திராகம புத்தகம் 7:9-வது வசனம்: ''உங்கள் பட்சத்திற்கு ஒரு அற்புதம் காட்டுங்கள் என்று பார்வோன் உங்களோடே சொன்னால் அப்பொழுது நீ ஆரோனை நோக்கி உன் கோலை எடுத்து அதை பார்வோனுக்கு முன்பாக போடு என்பாயாக. அது சர்ப்பமாகும் என்றார்.'' அதனை தொடர்ந்து யாத்திராகம புத்தகம் 8:5,6-வது வசனங்களிலும் 16-வது வசனத்திலும் ஆரோனின் கோல் அற்புதங்களையும் அடையாளங்களையும் காட்டி கொண்டே இருக்கும் கோல் என்பதை அறிய வந்தோம். 12 கோத்திரத்து தலைவர்களும் தங்களுடைய அதிகாரங்களை காட்டும் செங்கோல்களை எடுத்து வந்தார்கள். ஊழியக்காரனாகிய ஆரோன் கர்த்தருடைய வல்லமையை காட்டும் தன் கோலையே எடுத்து வந்தான்.

கர்த்தர் தமது பணிக்கு என்று தெரிந்து கொள்ளுகிறவர்களுக்கும், தெரிந்து எடுக்க படாதவர்களுக்கும் நடுவில் ஓர் வித்தியாசத்தை காட்ட இருக்கின்றார். 13 கோல்களில் ஒரே ஒரு கோல் மட்டும் துளிர் காண இருக்கின்றது. வித்தியாசம் துல்லிபமாக துலங்க இருக்கின்றது. மல்கியா தீர்க்கதரிசியின் புத்தகம் 3:18-வது வசனம், ''அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியம் செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியம் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தை திரும்பவும் காண்பீர்கள்'' என்று கூறுகின்றது.

வித்தியாசம் என்பது கர்த்தரால் நிலை நிறுத்தப்பட இருக்கின்றது. முறுமுறுத்து கொண்டே கர்த்தரை பின் பற்றுகின்றவர்களுக்கும் கர்த்தரை விசுவாசித்து கொண்டே பின் பற்றுகின்றவர்களுக்கும் நடுவாக பெலத்த வித்தியாசம் தெரிய வருகின்றது. இதனால் முறுமுறுக்கிற அவர்கள் முறுமுறுப்பை என்னை விட்டு ஒழிய பண்ணுவேன் என்று கர்த்தர் கூறுகின்றார். என்னை எப்பொழுதும் அவர்கள் கோபம் மூட்டி கொண்டே இருப்பதை நிறுத்தி விடுவேன் என்பதே அந்த வரியின் சரியான பொருளாகும். மனிதரின் ஒவ்வொரு

முறுமுறுப்பும் கர்த்தரை கோப படுத்துகின்றன. இதயத்தின் ஆழத்தில் இருக்கும் அமைதி அற்ற தன்மையின் விளைவே முறுமுறுப்பு என்பது ஆகும். கர்த்தாதி கர்த்தரை உறுதியாக நம்புவதற்கு வரும் தயக்கத்தின் விளைவே அமைதி இன்மை என்பது ஆகும். அமைதி இன்மையின் விளைவு முறுமுறுப்பில் முடிகின்றது. யாத்திராகம புத்தகம் 15,16 ஆகிய அதிகாரங்களில் துவங்கிய முறுமுறுப்பு இத்தனை நாட்கள் கடந்தும் இன்னும் முற்று பெறவில்லை. முறுமுறுப்பு என்பது அவர்களுடைய அன்றாட வாழ்க்கையின் ஓர் வழக்கம் ஆகி விட்டது. அதற்கு ஓர் முடிவு கட்டுவதற்கு கர்த்தர் அற்புத கிரியை செய்ய இருக்கின்றார். பிலிப்பியர் நிரூபம் 2-வது அதிகாரம் 15,16 ஆகிய வசனங்களில் ''கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றம் அற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாய் இருக்கும்படிக்கு எல்லாவற்றையும் முறுமுறுப்பு இல்லாமலும், தர்க்கிப்பு இல்லாமலும் செய்யுங்கள்'' என்று பார்க்கிறோம்.

கர்த்தருடைய ஆசரிப்பு கூடாரத்து பணிக்கு வேலை நியமன கடிதம் கொடுக்கின்றவர் கர்த்தர் ஒருவரே என்பதை இந்த வசனங்கள் மூலம் நாம் தெரிந்து கொள்ளுகின்றோம்.

அதிசயம் அற்புதம் அடையாளங்களினால் கர்த்தர் அழைக்கும் அழைப்பு நிரூபிக்க படுகின்றது. ஒரே ஒரு பதவிக்கு அநேகர் போட்டி இடுகின்றனர். பன்னிரெண்டு செங்கோல்களும் ஒரு வல்லமையின் கோலும் உடன்படிக்கை பெட்டிக்கு முன்பாக வைக்க பட்டது.

> *இதை மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னான்; அப்பொழுது அவர்களுடைய பிரபுக்கள் எல்லாரும் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படி ஒவ்வொரு பிரபுவுக்கு ஒவ்வொரு கோலாக பன்னிரண்டு கோல்களை அவனிடத்தில் கொடுத்தார்கள்; ஆரோனின் கோலும் அவர்களுடைய கோல்களுடனே இருந்தது. அந்த கோல்களை மோசே சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்தில் வைத்தான். (எண். 17:6-7)*

எண்ணாகம புத்தகம் முதல் அதிகாரம் 6 முதல் 15 வசனங்களில் 12 கோத்திரங்களின் விபரங்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. ரூபன், சிமியோன், யூதா, இசக்கார், செபுலோன், எபிராயீம், மனாசே, பென்யமீன், தாண், ஆசேர், காத், நப்தலி என்ற 12 கோத்திரங்களும் தங்கள் தங்கள் செங்கோல்களை காட்டி, வல்லமையின் கோல் பெற்ற ஆரோனுக்கு எதிராக போட்டி இடுவதற்கு முன் வந்தார்கள். 13 கோல்களை மோசே மகா பரிசுத்த ஸ்தலம் பிரவேசித்து உடன்படிக்கை பெட்டிக்கு முன்பாக வைத்தான். மறுநாள் மலரும் பொழுது துளிர் கண்ட கோல் எதுவோ, அதுவே கர்த்தரின் அருள் பெற்ற கோலாக மாறுவதற்கு இருக்கின்றது.

> *மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்த போது, இதோ, லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது; அது துளிர் விட்டு, பூ பூத்து, வாதுமை பழங்களை கொடுத்தது. (எண். 17:8)*

ஆரோனின் கோல் துளிர்க்கும் என்று 5-வது வசனத்தில் நாம் ஏற்கெனவே கண்டோம். அது இப்பொழுது நிறைவேறி விட்டது. ஆரோனின் கோல் துளிர்த்து விட்டது. அதிகாரம் மேன்மை அந்தஸ்து அனைத்திற்கும் அடையாளமாக இருந்த செங்கோல்கள் எதுவும்

துளிர்க்கவில்லை. கர்த்தர் என் துணை என்று வாழ்ந்த ஆரோனின் கோல் மட்டுமே துளிர் கண்டது. வல்லமை நிறைந்த செங்கோலாக ஆரோனின் கோல் மாறி விட்டது. 110-வது சங்கீதம் 2-வது வசனம், ''கர்த்தர் சீயோனில் இருந்து உமது வல்லமையின் கோலை அனுப்புவார். நீர் உம்முடைய சத்துருக்களின் நடுவே ஆளுகை செய்யும்'' என்று கூறுகிறது. உரம், ஈரம் இல்லாத இடத்தில் பதின்மூன்று கோல்களும் வைக்கப்பட்டன. மண்ணில் பதிக்கப்படவில்லை. பதின்மூன்று உலர்ந்த கோல்களில் ஒன்று உயிர் பெற்றது. அந்த உயிர் கர்த்தரின் வசனத்தின் மூலமாக வந்த உயிர் ஆகும். கர்த்தருடைய ஆவி அருளிய அற்புத உயிர் ஆகும்.

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் 37:1-6 வசனங்கள். ''கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்து கர்த்தர் என்னை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டு போய் எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி என்னை அவைகளின் அருகே சுற்றி நடக்க பண்ணினார். இதோ பள்ளத்தாக்கின் வெட்ட வெளியிலே அந்த எலும்புகள் மகா திரளாய் கிடந்தது. அவைகள் மிகவும் உலர்ந்ததுமாய் இருந்தது. அவர் என்னை நோக்கி மனு புத்திரனே இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார். அதற்கு நான் கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றேன். அப்பொழுது அவர் நீ இந்த எலும்புகளை குறித்து தீர்க்கதரிசனம் உரைத்து அவைகளை பார்த்து சொல்ல வேண்டியது என்னவென்றால்: உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையை கேளுங்கள். கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான் உங்களுக்குள் ஆவியை பிரவேசிக்க பண்ணுவேன், அப்பொழுது உயிர் அடைவீர்கள். நான் உங்கள் மேல் நரம்புகளை சேர்த்து, உங்கள் மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களை தோலினால் மூடி, உங்களில் ஆவியை கட்டளையிடுவேன்; அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்ளுவீர்கள் என்று உரைக்கிறார் என்று சொல் என்றார்.''

ஆரோனின் கோல் துளிர்களுடன் நின்று விடவில்லை. அது துளிர் விட்டு பூ பூத்து, வாதுமை பழங்களை கொடுத்தது என்று வசனம் கூறுகின்றது. துளிர் விட்டது. அது துவக்கத்தை குறிக்கின்றது. பூ பூத்தது. அது வளர்ச்சியை குறிக்கின்றது. வாதுமை பூவின் நிறம் வெண்மையாக இருக்கும், வெண்மை தூய்மைக்கு அடையாளமானது. பரிசுத்தத்தில் வளர்ச்சி பெற்றது. பரிசுத்தத்தில் வளர்ச்சி பெற்ற பணியாளனின் கோல் வெண் மலர் கண்டது. தொடர்ந்து வாதுமை பழங்களை கொடுத்தது. மற்றவர்களுக்கு பயனாகும் ஒரு வாழ்க்கையை அது குறிக்கின்றது. பிறருக்கு பயனாகும் ஓர் வாழ்க்கையாக ஆரோனின் வாழ்வு மாறி விட்டது. கர்த்தர் நல்லவர் என்பதை அனைவரும் ருசித்து பார்க்கும், கனி காணும் வாழ்வாக ஆரோனின் வாழ்வு மாறி விட்டது. ''ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்'' என்று கலாத்தியர் நிரூபம் 5:22,23 ஆகிய வசனங்கள் கூறுகின்றன.

ஆரோனின் கோல் துளிர் விட்டது. அது இரட்சிப்பின் சந்தோஷத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. பூ பூத்தது. அது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. பழங்களும் கண்டது. அது அநேகரை நீதிக்கு உட்படுத்தும் கிருபைக்கு அடையாளமாக இருக்கின்றது. நல்ல விருப்பங்களாகிய துளிர் நல்ல தீர்மானங்கள் என்ற மலர். பின்னர் நல்ல தீர்மானங்களை செயலில் காட்டும் சிறப்பு பெற்ற வாழ்விற்கு ஓர் அடையாளமாக பழங்கள்! இரட்சிக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல் ஆத்தும ஆதாயம் செய்யுதல் என்பதற்கு ஆரோனின் கோல் கண்ட துளிர், மலர், கனி அனைத்தும் ஓர் எடுத்து

காட்டாக நிற்கின்றன. ஆரோனின் கோல் வாதுமை பழங்கள் தந்தது. வாதுமை என்பதை குறிக்கும் எபிரெய சொல் விழிப்பு என்பது ஆகும். வாதுமை மரம் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கும் மரமாக கருத பட்டது. தம்மை பற்றி உத்தம இருதயத்துடன் உலகத்தில் வாழ்கின்றவர்கள் யார் யார் என்பதை கர்த்தருடைய கண்கள் மிகுந்த விழிப்புடன் கவனித்து கொண்டு இருக்கின்றன. பாவம் அநீதி ஆகியவற்றை விழிப்புடன் பார்த்து தமது வார்த்தையை அனுப்பி உலகத்தில் கர்த்தர் இடை விடாமல் கிரியை செய்து கொண்டு வருகின்றார்.

எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் முதல் அதிகாரம் 11,12 ஆகிய வசனங்கள். ''பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி அவர் எரேமியாவே நீ என்னத்தை காண்கிறாய் என்று கேட்டார். வாதுமை மரத்தின் கிளையை காண்கிறேன் என்றேன். அப்பொழுது கர்த்தர் நீ கண்டது சரியே என் வார்த்தையை தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார்.''

ஆரோனுக்கு எதிராக படைக்கப்பட்ட 12 செங்கோல்களும் கொடுங்கோல்களே என்பதை கர்த்தரின் கண்கள் கண்டு விட்டன. விழிப்புடன் பார்த்து அறிந்து விட்டன. அத்துடன் ஊழியக்காரனாகிய ஆரோன் விழிப்புடன் இருந்து தனது சபையை கண் காணிக்க வேண்டும் என்று வாதுமை பழம் எச்சரிக்கின்றது. அப்போஸ்தலர் நடபடிகளுடைய புத்தகம் 20:28-வது வசனம், ''ஆகையால் உங்களை குறித்தும், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்து கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களை கண் காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாய் இருங்கள்.'' அது மட்டும் அல்லாது கர்த்தருடைய ஜனங்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் விழித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பதற்கு வாதுமை பழம் ஓர் எச்சரிப்பாக இருக்கின்றது. ''விழித்திருங்கள், விசுவாசத்தில் நிலைத்து இருங்கள்'' என்று 1 கொரிந்தியர் 16:13-வது வசனம் கூறுகின்றது.

மறு நாளிலே மோசே மறுபடியும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தான் என்பதை 8-வது வசனத்தில் காண்கின்றோம். யாருடைய கோல் துளிர்த்தது என்பதை பார்க்க மோசே பிரவேசித்தான். ஒரே ஒரு கோல் மட்டும் துளிர்த்து இருந்தது. அது அற்புதம் நிறைந்த ஓர் காட்சி என்பதை காட்டுவதற்கு இதோ என்ற சொல் பயன்படுத்தப்பட்டு உள்ளது. லேவியின் கோத்திரமே பிரித்து எடுக்கப்பட்ட கோத்திரம் என்பது தெளிவாகி விட்டது. ஆரோன் என்ற ஒருவனே கர்த்தரால் அழைக்க பட்டவன் என்பதும் அறிய வந்தது. அவன் கோல் துளிர்த்து இருந்தது. துளிர்த்து இருந்தது என்பதை குறிப்பதற்கு பயன் படுத்த பட்டு உள்ள அதே எபிரெய சொல் யாத்திராகமம் 28:36-வது வசனத்தில் ஆரோனின் பாகையில் வைக்கப்பட்டு இருந்த பரிசுத்த பட்டத்திற்கு பயன் படுத்த பட்டு உள்ளது. தொடர்ந்து லேவியராகம புத்தகம் 8:9-வது வசனத்தில் பரிசுத்த கிரீடம் என்பதற்கும் பயன் படுத்த பட்டு உள்ளது. லேவியராகமம் 8:9-வது வசனம்: ''அவன் தலையிலே பாகையை தரித்து, பாகையின் மேல் அவன் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொற் பட்டத்தை கட்டினான்'' என்று படிக்கின்றோம்.

> *அப்பொழுது மோசே கர்த்தருடைய சமுகத்திலிருந்த அந்த கோல்களை எல்லாம் எடுத்து, இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் காண வெளியே கொண்டு வந்தான்; அவர்கள் கண்டு அவரவர் தங்கள் தங்கள் கோல்களை வாங்கி கொண்டார்கள். (எண். 17:9)*

ஆரோனின் கோல் துளிர்த்து இருந்தது என்பதின் சரியான பொருள் ஆரோனின் கோல் மட்டுமே கிரீடம் பெற்றது என்பது ஆகும். அது கர்த்தர் அருளிய பரிசுத்த கிரீடம் என்பது ஆகும். 132-வது சங்கீதம் 18-வது வசனத்தை பார்ப்போம். ''அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவேன். அவன் மீதிலோ அவன் கிரீடம் பூக்கும் என்றார்.''

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: ஆரோனின் கோல் அந்த கலகக்காரருக்கு விரோதமான அடையாளமாகும் பொருட்டு, அதை திரும்பவும் சாட்சிப்பெட்டிக்கு முன்னே கொண்டு போய் வை; இப்படி அவர்கள் எனக்கு விரோதமாய் முறுமுறுப்பதை ஒழிய பண்ணுவாய், அப்பொழுது அவர்கள் சாக மாட்டார்கள் என்றார். (எண். 17:10)

கர்த்தரால் அங்கீகரிக்கப்படாத கோல்கள் அவரவர் கைகளுக்கு திரும்ப கொடுக்க பட்டன. ஆனால் ஆரோனின் கோல் மட்டும் ஆரோனிடம் கொடுக்க படவில்லை. கர்த்தர் கொடுத்த பூவும், மலரும், கனியும் கர்த்தருக்கே திரும்பவும் கொடுக்க படுகின்றது. கர்த்தர் கிருபையாக அருளும் இரட்சிப்பின் சந்தோஷம், ஆவியின் கனி, ஆவியின் வரம் சம்பாதிக்கும் ஆத்துமாக்கள் அனைத்தும் கர்த்தருக்கே திரும்ப கொடுக்க படுகின்றது. இனி ஆரோன் அல்ல, கர்த்தருடைய நாமமே மகிமை அடைவதற்கு ஆரோனின் கோல் திரும்பவும் பரிசுத்த ஸ்தலத்திற்கு எடுத்து செல்ல பட்டது. ஆரோனை போன்று அழைப்பு பெற்றவர்களுக்கு மட்டுமே ஆசரிப்பு கூடாரத்து பணி காத்து கொண்டு இருக்கின்றது, அனைவருக்கும் அல்ல என்பதற்கு அடையாளமாக ஆரோனின் கோல் மட்டுமே பரிசுத்த ஸ்தலத்திற்குள் திரும்பவும் ஒரு முறை எடுத்து செல்ல பட்டது. உடன்படிக்கை பெட்டிக்குள் வைக்கப்பட்டது.

உடன்படிக்கை பெட்டிக்குள் 10 கற்பனைகள் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகள் ஏற்கெனவே வைக்கப்பட்டு இருந்தது. இந்த குறிப்பினை யாத்திராகம புத்தகம் 25:16-வது வசனத்தில் நாம் படித்தோம். நான் உனக்கு கொடுக்கும் சாட்சி பிரமாணத்தை அந்த பெட்டியிலே வைப்பாயாக என்று கூறப்பட்டு உள்ளது. உடன்படிக்கை பெட்டியில் பத்து கற்பனைகளுடன் வனாந்திர பிரயாணத்தில் கர்த்தர் அருளிய ஆகாரமான மன்னாவும் வைக்கப்பட்டு இருந்தது. யாத்திராகம புத்தகம் 16:33-வது வசனத்தில் இந்த குறிப்பை நாம் காண்கின்றோம். ''மேலும் மோசே ஆரோனை நோக்கி நீ ஒரு கலசத்தை எடுத்து அதிலே ஒரு ஓமர் அளவு மன்னாவை போட்டு அதை உங்கள் சந்ததியாருக்காக காப்பதற்கு கர்த்தருடைய சந்நிதியிலே வை என்றான்.'' இப்பொழுது ஆரோனின் துளிர்த்த கோலும் உடன்படிக்கை பெட்டியில் வைக்கப்படுகின்றது.

எபிரெயர் நிரூபம் 9:4-வது வசனத்தின் பின் பகுதி ''அந்த பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும் ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன'' என்று கூறுகின்றது.

ஆண்டவரின் பணிக்கு கர்த்தரிடம் இருந்து வரும் அழைப்பு அறிவுக்கு எட்டாத அழைப்பு என்று அனைவரும் அறிந்து கொள்ளுவதற்கு ஆண்டவர் அருளிய பத்து கட்டளைகளுடன், ஆரோனின் துளிர்த்த கோலும் வைக்கப்பட்டது. கர்த்தருடைய பணிக்கு போட்டிகள் அவசியம் இல்லை என்பதும், தமக்கு தேவைப்படும் ஊழியக்காரர்களை கர்த்தர் தாமே கை நீட்டி தெரிந்து எடுக்கிறார் என்பதும், அனைத்து சந்ததிகளும் அறிந்து கொள்ளுவதற்காக ஆரோனின் கோல் உடன்படிக்கை பெட்டிக்குள் வைக்க பட்டது. ரோமர்

நிரூபம் 8:30-வது வசனம். ''எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்தும் இருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியும் இருக்கிறார். எவர்களை நீதிமான்களாக ஆக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியும் இருக்கிறார்.''

விசுவாசத்தின் எட்டுக்களை எடுத்து வைக்க இயலாமல் தவித்து கொண்டு இருக்கும் பொழுது கட்டுக்கு அடங்காத தீங்குகள் ஓங்கி வந்தன என்பதை 16-வது அதிகாரத்தில் நாம் பார்த்தோம். பட்சிக்கும் அக்கினிக்கு 250 நபர்கள் பலியாகி போனார்கள். கோராகு தாத்தான் ஆகியவர்களின் அனைத்து குடும்ப உறுப்பினர்களும் நின்று கொண்டு இருந்த நிலம் பிளந்து மூடியது. தொடர்ந்து கர்த்தரால் அனுப்பப்பட்ட வாதையினால் பதினான்கு ஆயிரத்து எழுநூறு நபர்கள் சாவை சந்தித்தார்கள். இதனால் அளவுக்கு மிஞ்சிய அச்சம் ஜனங்களை ஆட்கொண்டது. எனவே அவர்கள் அபயம் இட ஆரம்பித்தார்கள்.

கர்த்தர் தனக்கு கட்டளை இட்டபடியே மோசே செய்தான். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் மோசேயை நோக்கி: இதோ, செத்து அழிந்து போகிறோம், நாங்கள் எல்லாரும் அழிந்து போகிறோம். கர்த்தரின் வாசஸ்தலத்தின் கிட்டே வருகிற எவனும் சாகிறான். நாங்கள் எல்லாரும் செத்துத்தான் தீருமோ என்றார்கள்.(எண். 17:11-13)

ஆரோனும் அவன் பிள்ளைகளும் மட்டும்தான் கர்த்தரின் பணியை செய்வதற்கு உரிமை பெற்றவர்களா எங்களுக்கும் அந்த உரிமை இல்லையா என்று கடந்த அதிகாரத்தின் துவக்கத்தில் உரக்க கூறியவர்கள் இப்பொழுது அமைதலாக மாறி விட்டார்கள். தொடர்ச்சியாக இடம் பெற்ற தேவ தீர்ப்புகளை அவர்கள் கண்டு கலங்கி போனார்கள். இப்பொழுது முற்றிலும் மாறாக பேசுகின்றார்கள். இதோ கர்த்தரின் வாசஸ்தலத்தை நெருங்கி சேருவதற்கு எங்களுக்கு எந்த தகுதியும் இல்லை என்று கூறுகின்றார்கள். எவ்வித உரிமையும் இல்லை. கர்த்தரின் சமூகத்தை நெருங்கி விட்டால் உயிர் அடங்கி போய் விடும் என்று வருந்துகின்றார்கள். சற்று முன்னதாக மோசேயும் ஆரோனும் எங்களை கொலை செய்கிறார்கள் என்றவர்கள் இப்பொழுது எங்கள் அக்கிரமங்களே எங்களை வாரி கொண்டு செல்லுகின்றது என்று கூறுகின்றார்கள். 90-வது சங்கீதம் 7-வது வசனம். ''நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து, உமது உக்கிரத்தினால் கலங்கி போகிறோம்.'' கர்த்தரின் அருகில் சேர வாஞ்சை இருக்கின்றது. ஆனால் சேருவதற்கு முடியவில்லை. இதன் பொருட்டு ஏற்கெனவே கர்த்தர் ஜனங்களுக்கு ஓர் உபகாரம் செய்து இருக்கின்றார். அவர்களுக்கும் கர்த்தருக்கும் நடுவாக நிற்பதற்கு ஆரோன் என்ற ஆசாரியன் அமர்த்த பட்டான்.

ஏற்கெனவே கானான் சென்று வேவு பார்த்தவர்களில் 10 பேர் கொடுத்த அறிக்கையினாலும், கர்த்தரின் கட்டளை இல்லாமலே கானான் செல்லுவோம் என்று மலை ஏறினவர்கள் முறிய அடிக்க பட்டதினாலும், அந்த சந்ததியில் யோசுவா, காலேப் என்பவர்களை தவிர மற்றவர்கள் யாவரும் வனாந்தரத்தில் செத்து விழுவார்கள் என்று கர்த்தர் ஏற்கெனவே கூறி இருந்தார். இங்கே இவர்கள், ''நாங்கள் எல்லாரும் செத்துதான் தீருமோ'' என்றார்கள்.

அத்தியாயம் - 20

ஆசாரியருக்கும் லேவியருக்கும் கர்த்தர் கொடுக்கும் சம்பளம்

20.1 ஆசாரியரின் பணிகள்

ஆரோனின் சந்ததியினரே ஆசாரிய பணி செய்ய வேண்டியவர்கள் என்பதை ஆரோனின் துளிர்த்த கோல் மூலம் கர்த்தர் தன் சித்தத்தை உறுதி செய்து விட்டார். அந்த கோலை உடன்படிக்கை பெட்டியில் மோசே வைத்ததினால் அது தலைமுறை தோறும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் காட்டி விட்டார். அந்த பதவிக்கு போட்டியிடும் மற்ற யாவரும் அழிவையே காண்பார்கள் என்பதையும் தெளிவாக காட்டி விட்டார். இப்பொழுது தெரிந்து கொள்ளபட்டு அழைப்பு பெற்று, கர்த்தரின் பணியையே செய்யும் ஆசாரியர்கள் என்னென்ன செய்ய வேண்டும், எப்படி அவர்கள் வாழ்வின் தேவைகள் சந்திக்கபட வேண்டும் என்பதையும் கர்த்தர் கூறுகின்றார். இவை யாவும் அவர்கள் சுதந்தரிக்க போகும் கானான் தேசத்தில் காக்கப்பட வேண்டியவைகள் ஆகும்.

18-வது அதிகாரத்தில் ஆரோனின் பணி பொறுப்புகளும், லேவியர்களின் பணி பொறுப்புகளும் கர்த்தர் அவர்களுக்கு அளக்கும் படியும் எடுத்து கூறப்பட்டன. 18-வது அதிகாரம் 1 முதல் 7 வசனங்களில் கர்த்தர் ஆரோனை நோக்கி நேரடியாக பேசுகின்றார். ஆரோனின் கோல் துளிர்க்க செய்த ஆண்டவர் இப்பொழுது ஆரோனின் பொறுப்புகளை நினைவு படுத்தி கூறுகின்றார். ஆரோனின் தலையில் பரிசுத்த கிரீடம் இடம் பெற்றது ஓர் தனி பெரும் சிறப்பு ஆகும். ஆனால் அதே சமயத்தில் அது ஒரு மகா பெரும் பொறுப்பும் ஆகும். பொறுப்புகளை உக்கிராணத்துவத்துடன் நிறைவேற்றவே ஊழியத்தில் சிறப்பான இடங்கள் கொடுக்க படுகின்றன என்பதை 1 முதல் 7 வசனங்கள் எடுத்து காட்டுகின்றன.

> ***பின்பு கர்த்தர் ஆரோனை நோக்கி: நீயும் உன்னோடே கூட உன் குமாரரும் உன் தகப்பன் வம்சத்தாரும் பரிசுத்த ஸ்தலத்தை பற்றிய அக்கிரமத்தை சுமக்க வேண்டும்; நீயும் உன்னோடே கூட உன் குமாரரும் உங்கள் ஆசாரிய ஊழியத்தை பற்றிய அக்கிரமத்தை சுமக்க வேண்டும். (எண். 18:1)***

உக்கிராணத்துவம் இன்றி பொறுப்புகள் கொடுக்கபடுவதில்லை. பரிசுத்த ஸ்தலத்தின் முழு பொறுப்பும் ஆரோனாகிய உன் வசமும், உன் இரண்டு குமாரர்களுடைய வசமும் கொடுக்க படுகின்றது. அதில் இடம் பெற வேண்டிய வழி முறைகள், ஆராதனைகள் அனைத்திற்கும் நீங்கள் மட்டுமே பொறுப்பாளிகள். நீங்களே அவைகளை முன்னாக நின்று நடத்த வேண்டும் என்று கூறுகின்றார்.

ஆசரிப்பு கூடாரத்தின் ஆராதனைகளை பிறிதொருவர் நடத்தட்டும் என்று ஒப்படைத்து விட முடியாது. ஆராதனைகளை ஏற்றவாறு எடுத்து நடத்துவதற்காகவே ஆசாரிய பட்டம் கொடுக்கப்பட உள்ளது. அதில் அவர்கள் பொறுப்பற்று நடந்து விட்டால் அது அக்கிரமம் என்று கருத படுகின்றது. அந்த விதமான அக்கிரமங்களுக்கு மன்னிப்பு என்பது இல்லவே இல்லை என்று முதல் வசனம் கூறுகின்றது.

பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள பொன் தூப பீடம், சமூகத்து அப்ப மேஜை, குத்து விளக்கு மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள உடன்படிக்கை பெட்டி ஆகிய அனைத்து

சம்பந்தப்பட்ட பணிகளையும் ஆரோனும் அவன் குமாரரும் மட்டுமே நிறைவேற்ற வேண்டும். மற்றவர்கள் அதில் தலையிடவே முடியாது என்று கூற படுகின்றது. எவராவது அழைக்க படாமல் தலையிட்டு விட்டால் ஆரோனும் சாக வேண்டும், அவன் பிள்ளைகளும் சாக வேண்டும், தலையிட்டவர்களும் சாக வேண்டும் என்பதே தீர்ப்பாக மாறுகின்றது.

20.2 லேவியரின் பணிகள்

உன் தகப்பனாகிய லேவியின் கோத்திரத்தாரான உன் சகோதரரையும் உன்னோடே கூடி இருக்கவும் உன்னிடத்திலே சேவிக்கவும் அவர்களை சேர்த்து கொள்; நீயும் உன் குமாரருமோ சாட்சியின் கூடாரத்துக்கு முன் ஊழியம் செய்ய கடவீர்கள். அவர்கள் உன் காவலையும் கூடாரம் அனைத்தின் காவலையும் காக்க கடவர்கள்; ஆகிலும் அவர்களும் நீங்களும் சாகாதபடிக்கு, அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுக்கள் அண்டையிலும் பலிபீடத்து அண்டையிலும் சேராமல், உன்னோடே கூடிக்கொண்டு, கூடாரத்துக்கு அடுத்த எல்லா பணிவிடையையும் செய்ய, ஆசரிப்பு கூடாரத்தின் காவலை காக்கக்கடவர்கள்; அந்நியன் ஒருவனும் உங்களிடத்தில் சேரக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் மேல் இனி கடுங்கோபம் வராதபடிக்கு, நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தின் காவலையும் பலிபீடத்தின் காவலையும் காக்க கடவீர்கள். ஆசரிப்பு கூடாரத்தின் பணிவிடையை செய்ய, கர்த்தருக்கு கொடுக்க பட்ட உங்கள் சகோதரராகிய லேவியரை நான் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உங்களுக்கு தத்தமாக கொடுத்தேன். (எண். 18:2-6)

ஆரோனுக்கு நேராக வரும் இரண்டாவது பொறுப்பு அவனுடைய ஊரியக்காரர்களாக இருக்க அவனுக்கு கொடுக்கப்பட்டு உள்ள லேவியர்களை பற்றிய குறிப்பு ஆகும். 2 முதல் 6 வசனங்களில் இதன் விபரங்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. கர்த்தரால் அழைக்கப்படாதவர்கள் கர்த்தரின் வாசஸ்தலம் அருகில் வர முடியாது என்று கூறப்படுகின்றது. எனவே அதற்கு காவலாளர்களாக லேவியர்கள் பொறுப்பு எடுக்கின்றார்கள். ஆராதனை சம்பந்தப்பட்ட பணிகளில் ஆசாரியர்கள் பங்கு எடுக்கின்றார்கள். ஆனால் ஆசரிப்பு கூடாரம் சம்பந்தப்பட்ட பணிகளில் லேவியர்கள் பங்கு எடுக்கின்றார்கள். பிரயாணப்படும் நேரங்களில் லேவியர்கள் ஆசரிப்பு கூடாரத்தினை கழற்ற வேண்டும். அதனை சுமக்க வேண்டும். பின்னர் குறிப்பிட்ட இடத்தில் மறுபடியும் ஆசரிப்பு கூடாரத்தை நிறுத்த வேண்டும்.

20.3 ஆசாரியருக்கு கர்த்தர் கொடுக்கும் சம்பளம்

ஆகையால் நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் பலிபீடத்துக்கும் திரைக்கு உட்புறத்துக்கும் அடுத்த எல்லாவற்றையும் செய்யும் பொருட்டு, உங்கள் ஆசாரிய ஊழியத்தை காத்து சேவிக்கக்கடவீர்கள்; உங்கள் ஆசாரிய ஊழியத்தை உங்களுக்கு தத்தமாக அருளினேன்; அதை செய்யும்படி சேருகிற அந்நியன் கொலை செய்யப்படக்கடவன் என்றார். (எண். 18:7)

ஆரோனுக்கு நேராக வரும் மூன்றாவது பொறுப்பு ஓர் எச்சரிப்பாக வருகின்றது. ஆசாரிய ஊழியத்தை காத்து சேவிக்க கடவீர்கள் என்று 7-வது வசனம் கூறுகின்றது. ஆசாரிய ஊழியம்

என்பது ஜனங்களின் மீது செலுத்தும் அதிகாரம் அல்ல. ஜனங்களுக்கு செய்யும் சேவை என்று கூறப்படுகின்றது. ஆசாரியர்களாகிய அவர்கள் ஸ்தலம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் ஆகிய இடங்களில் ஜனங்களின் நல் வாழ்விற்காகவே பிரவேசிக்க வேண்டும் என்று உணர்த்த படுகின்றது.

பின்னும் கர்த்தர் ஆரோனை நோக்கி: இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்த படுத்துகிறவைகளில் எல்லாம் எனக்கு ஏறெடுத்து படைக்கப்படும் படைப்புகளை காத்து கொண்டிருக்கிறீர்களே, அவைகளை உனக்கு கொடுத்தேன்; அபிஷேகத்தின் நிமித்தம் அவைகளை உனக்கும் உன் குமாரருக்கும் நித்திய கட்டளையாக கொடுத்தேன். (எண். 18:8)

8 முதல் 24 வசனங்களில் ஊழியம் செய்யும் ஆசாரியர்களுக்கு கர்த்தரால் கொடுக்கப்படும் உதவிகள் என்ன என்ன என்பது தெளிவாக எடுத்து கூறப்படுகின்றது. ஜனங்கள் எனக்கு படைக்கும் அனைத்தையும் உங்களுக்கே திரும்ப தருகிறேன் என்று கர்த்தர் கூறுவதை 8-வது வசனத்தில் பார்க்கிறோம். ஜனங்கள் தங்கள் பாவங்களை போக்குவதற்காக பலியாக எடுத்து வரும் அனைத்து மிருகங்களும் கர்த்தருக்கு உணவாக மாற போவது இல்லை. காரணம் கர்த்தருக்கு பசி என்பது ஏற்படுவதும் இல்லை. 50-வது சங்கீதம் 12,13 ஆகிய வசனங்கள் ''நான் பசியாய் இருந்தால் உனக்கு சொல்லேன். பூமியும் அதன் நிறைவும் என்னுடையவைகளே. நான் எருதுகளின் மாம்சம் புசித்து, ஆட்டு கடாக்களின் இரத்தம் குடிப்பேனோ'' என்று கூறுகின்றன. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு என்பது இல்லை என்பதினால் பலிகள் ஏறெடுக்க படுகின்றன. எண்ணற்ற மிருகங்கள் போஜன பலி, பாவ நிவாரணபலி, குற்ற நிவாரணபலி என்று படைக்க படுகின்றன. அவைகள் இறுதியில் ஆசாரியனுக்கு உரித்தாகட்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். இதன் விபரங்கள் 9 முதல் 13 வசனங்களிலும், லேவியராகம புத்தகம் 6:4-வது வசனம் முதல் 7:36-வது வசனங்கள் வரையும், தொடர்ந்து லேவியராகம புத்தகம 27:6-33 வசனங்களிலும் கொடுக்கப்பட்டு உள்ளன.

மகா பரிசுத்தமானவைகளிலே, அக்கினிக்கு உட்படுத்த படாமல் உன்னுடையதாய் இருப்பது எவையெனில், அவர்கள் எனக்கு படைக்கும் எல்லா படைப்பும், எல்லா போஜனபலியும், எல்லா பாவநிவாரண பலியும், எல்லா குற்றநிவாரண பலியும், உனக்கும் உன் குமாரருக்கும் பரிசுத்தமாய் இருக்கும். பரிசுத்த ஸ்தலத்திலே அவைகளை புசிக்க வேண்டும். ஆண்மக்கள் யாவரும் அவைகளை புசிக்கலாம். அவைகள் உனக்கு பரிசுத்தமாய் இருப்பதாக. (எண். 18:9-10)

எண்ணாகமம் 9-13 வசனங்களில் ஆசாரியருக்கு வாழும் வழியாக இஸ்ரவேல் மக்கள் யாவரும் படைக்கும் பலிகள் கொடுக்க படுகிறது. ஆயினும் இவற்றில் சில வித்தியாசங்களை நாம் காண்கிறோம். 9-10 வசனங்களில் கர்த்தருக்கு படைக்கும் எல்லா படைப்பும் போஜனபலியும், பாவநிவாரண பலியும், குற்ற நிவாரண பலியும் ஆரோனும் அவன் குமாரரும் மட்டுமே புசிக்கலாம் என்று கர்த்தர் கூறுகிறார். மேலும் அவை பரிசுத்த ஸ்தலத்திலேயே புசிக்கபட வேண்டும். வெளியே கொண்டு செல்ல கூடாது என்று பணிக்கபடுகிறார்கள். இவற்றில் மாமிசமும் ரொட்டியும், திராட்ச ரசமும், ஒலிவ எண்ணெயும், முதல் கனிகளுமாக விலை உயர்ந்த எல்லா வித உணவு வகைகளும் உண்டு.

அது ஆசாரிய பொறுப்பு உடைய முப்பது முதல் ஐம்பது வயது வரையுள்ள ஆசரிப்பு கூடாரத்தில் வேலை செய்யும் ஆரோனின் சந்ததியாகிய ஆண் மக்களை மட்டுமே சாரும்.

இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுத்து படைக்கிறதும், அசைவாட்டுகிறதுமான அவர்களுடைய எல்லா காணிக்கைகளின் படைப்பும் உன்னுடையவைகளாய் இருக்கும். அவைகளை உனக்கும் உன் குமாரருக்கும் உன் குமாரத்திகளுக்கும் நித்திய நியமமாக கொடுத்தேன். உன் வீட்டிலே சுத்தமானவர்கள் எல்லாரும் அவைகளை புசிக்கலாம். அவர்கள் கர்த்தருக்கு கொடுக்கும் அவர்களுடைய முதல் பலன்களாகிய உச்சிதமான எண்ணெயையும், உச்சிதமான திராட்ச ரசத்தையும், தானியத்தையும் உனக்கு உரியதாக கொடுத்தேன். தங்கள் தேசத்தில் முதல் பழுத்த பலனில் அவர்கள் கர்த்தருக்கு கொண்டு வருவது எல்லாம் உனக்கு உரியதாகும். உன் வீட்டிலே சுத்தமாய் இருப்பவர்கள் யாவரும் அவைகளை புசிக்கலாம். (எண். 18:11-13)

எண்ணாகமம் 18:11-13 வசனங்களில் இஸ்ரவேல் மக்கள் ஏறெடுத்து படைக்கும் படைப்பாக அதாவது அசைவாட்டும் பலியாக கொடுக்க படுவதை பற்றி காண்கிறோம். இந்த காணிக்கைகள் (யாத். 29:28, லேவி. 7:14) சமாதான பலி, நசரேய அர்ப்பணிப்பு (எண். 6:20), நன்றி செலுத்தும் காணிக்கை (எண். 15:19-21) முதலியவற்றின் ஒரு பகுதி ஆகும். இந்த காணிக்கைகள் அவனுடைய ஆண் மக்கள் மட்டுமல்ல, அவன் குடும்பத்தை சார்ந்த எல்லா பெண் மக்களும் சாப்பிட கூடியது. அதை அவர்கள் தங்கள் வாசஸ்தலத்திற்கு எடுத்து செல்லலாம். ஆனால் ஒன்றில் அவர்கள் கவனமாக இருக்க வேண்டும். வீட்டிலே சுத்தமாக இருப்பவர்கள் மட்டுமே அதை சாப்பிடலாம். கர்த்தரின் பணியில் அசுத்தம் என்பது எந்த எல்லையிலும் காணப்பட முடியாதது.

இஸ்ரவேலிலே சாப தீட்டாக நேர்ந்து கொள்ளப்பட்டது எல்லாம் உனக்கு உரியதாய் இருக்கும். (எண். 18:14)

சாபத்தீடானவை எவை என்ற விபரம் விளக்கம் ஏற்கெனவே லேவியராகம புத்தகம் 27-வது அதிகாரம் 19 முதல் 21 வசனங்கள் வரை கொடுக்கப்பட்டு உள்ளது.

காணிக்கைகளாக மக்கள் கொடுக்கும் தங்கம், வெள்ளி முதலியவை ஆசாரியருக்கு கொடுக்கபடவில்லை. உணவு பதார்த்தங்களும், செலவிடப்படுபவையுமே அவர்களுக்கு கொடுக்க பட்டது.

மனிதரிலும் மிருகங்களிலும் அவர்கள் கர்த்தருக்கு செலுத்தும் சமஸ்த பிராணிகளுக்குள்ளே கர்ப்பம் திறந்து பிறக்கும் யாவும் உனக்கு உரியதாயிருக்கும். ஆனாலும் மனிதரின் முதல் பேற்றை அகத்தியமாய் மீட்க வேண்டும். தீட்டான மிருக ஜீவனின் தலையீற்றையும் மீட்க வேண்டும். மீட்க வேண்டியவைகள் ஒரு மாதத்திற்கு மேல் பட்டதானால், உன் மதிப்புக்கு இசைய பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி ஐந்து சேக்கல் பணத்தாலே அவைகளை மீட்க வேண்டும். ஒரு சேக்கல் இருபது கேரா. மாட்டின் தலையீற்றும், செம்மறி ஆட்டின் தலையீற்றும், வெள்ளாட்டின் தலையீற்றுமோ மீட்கப்பட வேண்டாம்; அவைகள்

பரிசுத்தமானவைகள்; அவைகளின் இரத்தத்தை பலிபீடத்தின் மேல் தெளித்து, அவைகளின் கொழுப்பை கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனமாக தகனிக்க வேண்டும். அசைவாட்டும் மார்க்கண்டத்தை போலும் வலது முன்னம் தொடையை போலும் அவைகளின் மாம்சமும் உன்னுடையதாகும். (எண். 18:15-18)

தலையீற்றுகள் அனைத்தும் கர்த்தருக்கு உரியவை. எனவே கர்த்தர் அவைகள் அனைத்தையும் ஆசாரியர்களுக்கு திரும்ப கொடுக்கின்றார் என்பதை 15 முதல் 18 வசனங்களில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். ஆண் பிள்ளைகளில் தலையீற்றுகளை கர்த்தருக்கு படைத்து பின்னர் ஐந்து சேக்கல் பணத்தை மீட்கும் காணிக்கையாக ஆசாரியனுக்கு கொடுக்க வேண்டும். அவ்விதம் கொடுத்து பிள்ளையை திரும்ப பெற்று கொள்ள வேண்டும். ஆண் பிள்ளைகளில் தலையீற்றுகளை மீட்பதற்கு செலுத்தப்படும் காணிக்கை அனைத்தும் ஆசாரியனுக்கு கர்த்தரால் திரும்ப கொடுக்க படுகின்றது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கிற பரிசுத்த படைப்புகளை எல்லாம் உனக்கும் உன் குமாரருக்கும் உன் குமாரத்திகளுக்கும் நித்திய கட்டளையாக கொடுத்தேன்; கர்த்தருடைய சந்நிதியில் இது உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் செல்லும் மாறாத உடன்படிக்கை என்றார். (எண். 18:19)

கர்த்தருக்கு கொடுக்க படும் அனைத்தும் கர்த்தரால் மறுபடியும் ஆசாரியர்களுக்கு வழங்க படும் என்பது ஓர் மாறாத உடன்படிக்கை என்று 19-வது வசனம் கூறுகின்றது. மாறாத உடன்படிக்கை என்பதின் சரியான பொருள் உப்பு உடன்படிக்கை என்பது ஆகும். உப்பு உடன்படிக்கை என்பது கெட்டு போகாத ஓர் உடன்படிக்கை என்பதற்கு அடையாளமாக இருக்கின்றது.

பின்னும் கர்த்தர் ஆரோனை நோக்கி: அவர்களுடைய தேசத்தில் நீ ஒன்றையும் சுதந்தரித்து கொள்ள வேண்டாம்; அவர்கள் நடுவே உனக்கு பங்கு உண்டாய் இருக்கவும் வேண்டாம்; இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும் உன் சுதந்தரமுமாய் இருக்கிறேன். (எண். 18:20)

கானான் என்ற இடம் சென்று அடையும் பொழுது 12 கோத்திரங்களுக்கும் தேசத்தின் நிலத்தில் பங்கு கிடைக்கும் ஆனால் லேவியின் கோத்திரத்திற்கு எவ்வித பங்கும் கொடுக்கப்பட போவது இல்லை. ஆசரிப்பு கூடாரத்தில் அமர்ந்து இருப்பதே அவர்கள் பங்காக மாற இருக்கின்றது. ஆசரிப்பு கூடாரத்தில் வாசம் செய்யும் பரிசுத்தராகிய தேவனே அவர்கள் பங்காக மாறி விட்டார். 16-வது சங்கீதம் 5,6 ஆகிய வசனங்களை பாருங்கள். ''கர்த்தர் என் சுதந்திரமும் என் பாத்திரத்தின் பங்கும் ஆனவர். என் சுதந்திரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர். நேர்த்தியான இடங்களில் எனக்கு பங்கு கிடைத்தது. ஆம் சிறப்பான சுதந்திரம் எனக்கு உண்டு.''

மேலும், லேவியருக்கு இஸ்ரவேலர் கொடுக்கும் தசம பாகத்தில் இருந்து தசம பாகம் எடுத்து ஆசாரியருக்கு லேவியர் கொடுக்க வேண்டும் என்றும் இதே அதிகாரம் 25 முதல் 32 வசனங்களில் காண்கிறோம்.

கானான் தேசத்தில் லேவியர்கள் குடி இருப்பதற்கு இடங்கள் கொடுக்க பட்டன. ஆனால் லேவியர்கள் தொழில் செய்வதற்கு நிலங்கள் கொடுக்க படவில்லை. 2 தீமோத்தேயு 2-ம் அதிகாரம் 4-வது வசனத்தை பாருங்கள். ''தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும் தன்னை சேவகம் எழுதி கொண்டவனுக்கு ஏற்றவனாய் இருக்கும்படி பிழைப்புக்கு அடுத்த அலுவல்களில் சிக்கி கொள்ள மாட்டான்.'' கானான் தேசத்தில் 48 பட்டணங்கள் லேவியரின் குடியிருப்பிற்கு ஒதுக்கப்பட்டன. இந்த விபரம் யோசுவாவின் புத்தகம் 13-வது அதிகாரம் முதல் 21 அதிகாரங்கள் வரை கொடுக்கப்பட்டு உள்ளது. சுமார் ஒரு கோடி பன்னிரெண்டு இலட்சம் அறுபத்து நான்கு ஆயிரம் ஏக்கர் விஸ்தாரமான கானான் என்ற தேசத்தில் லேவியர்கள் வாழ்வதற்கு ஒதுக்கப்பட்ட 48 பட்டணங்கள், 53 ஆயிரம் ஏக்கர் நில பரப்புகளை எடுத்து கொண்டது என்று ஒரு குறிப்பு கூறுகின்றனது. மீதியானவைகள் 12 கோத்திரங்களுக்கும் பங்கு இடப்பட்டது.

20.4 லேவியருக்கு கர்த்தர் கொடுக்கும் சம்பளம்

இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்பு கூடாரத்தின் பணிவிடையை செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்கு உள்ளவை எல்லாவற்றிலும் தசம பாகத்தை அவர்களுக்கு சுதந்தரமாக கொடுத்தேன். இஸ்ரவேல் புத்திரர் குற்றம் சுமந்து சாகாதபடிக்கு, இனி ஆசரிப்பு கூடாரத்தை கிட்டாது இருக்கக்கடவர்கள். லேவியர் மாத்திரம் ஆசரிப்பு கூடாரத்துக்கு அடுத்த வேலைகளை செய்ய வேண்டும் அவர்கள் தங்கள் அக்கிரமத்தை சுமப்பார்கள். இஸ்ரவேல் புத்திரர் நடுவே அவர்களுக்கு சுதந்தரம் இல்லை என்பது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாய் இருக்கும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்கு சுதந்தரமாக கொடுத்தேன். ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்கு சுதந்தரமில்லை என்று அவர்களுக்கு சொன்னேன் என்றார். (எண். 18:21-24)

21 முதல் 24 வசனங்களில் ஆசாரியர்களுக்கு உதவியாளர்களாக அமர்த்தப்பட்ட லேவியர்கள் என்பாருக்கு கிடைக்கும் உதவிகள் என்ன என்ன என்பது பற்றிய விபரம் கூறப்பட்டு உள்ளது.

ஜனங்கள் கொடுக்கும் அனைத்து தசம பாகங்களும் லேவியர் என்பாருக்கு ஓர் சன்மானம் அல்லது சம்பளம் போல் கொடுக்க படுகின்றது. தசம பாகத்தை பற்றிய விபரம் லேவியராகம புத்தகம் 27:30-33 வசனங்களில் தரப்பட்டது. ஜனங்கள் தங்களுக்கு வரும் அனைத்து வருமானங்களிலும் பத்தில் ஒரு பங்கை கர்த்தருடைய ஆலயம் சென்று படைக்க வேண்டும் என்பதை மறக்கவே கூடாது என்று உபாகம புத்தகம் 14:22-29 வசனங்களும் 26:12,13 ஆகிய வசனங்களும் கூறுகின்றன. ஜனங்கள் கொடுக்கும் தசம பாகங்கள் காணிக்கையாக கர்த்தருக்கு கொடுக்க படுகின்றது. கர்த்தர் அதனை லேவியர்கள் என்பாருக்கு ஓர் சம்பளமாக திருப்பி கொடுக்கின்றார். எனவே அது லேவியரின் வருமானமாக கருதப்படுகின்றது. 31-வது வசனத்தின் பின் பகுதியில் அது நீங்கள் ஆசரிப்பு கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு ஈடான உங்கள் சம்பளம் என்று பார்க்கிறோம்.

கோராகுடன் சேர்ந்து இஸ்ரவேல் புத்திரர் அநேகர் ஆசாரியத்துவம் யாவருக்கும் உரியது என்று போராடினார்கள். அந்த முறு முறுப்பை முற்றிலுமாக நிறுத்த கர்த்தரின் பணியின் முழு பொறுப்பும் லேவியருக்கு உரியது என்று கர்த்தர் கூறுகிறார்.

லேவி புத்திரரின் வேலை ஆசரிப்பு கூடாரத்தின் பணிகளை செய்வதே. ஆனால் அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கு உள்ளும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு உள்ளும் பிரவேசிக்க கூடாது. கர்த்தர் திட்டவட்டமாக இஸ்ரவேல் புத்திரரிடம் இனி அவர்கள் ஆசரிப்பு கூடாரத்தில் பிரவேசிக்கவே கூடாது என்று கூறுகிறார். அப்படி பிரவேசித்தால் அதற்குள்ள தண்டனையை அவர்கள் பெற்றுதான் தீரவேண்டும். லேவியரோ தாங்கள் செய்ய வேண்டிய வேலையில் தவறு இழைத்தாலும், கவன குறைவாய் இருந்தாலும், அதற்கு உரிய தண்டனையை அவர்கள் பெற்றே தீர வேண்டும். மேலும் லேவியருக்கு எல்லா இஸ்ரவேல் கோத்திரத்தாரும் தசம பாகம் செலுத்துவதால், தேசத்தின் நிலத்தில் அவர்களுக்கு பங்கு கிடையாது. இஸ்ரவேலின் 12 கோத்திரத்தாரும் தேசத்தை பகிர்ந்து கொள்ளுவார்கள்.

20.5 லேவியர் கர்த்தருக்கு திரும்ப கொடுக்க வேண்டியது

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ லேவியரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கி கொள்ளும்படி நான் உங்களுக்கு சுதந்தரமாக கொடுத்த தசமபாகத்தை நீங்கள் அவர்கள் கையில் வாங்கும் போது, தசமபாகத்தில் பத்தில் ஒருபங்கை கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கும் படைப்பாக செலுத்த வேண்டும். நீங்கள் ஏறெடுத்து படைக்கும் இந்த படைப்பு களத்தின் தானியத்தை போலும், ஆலையின் இரசத்தை போலும் உங்களுக்கு எண்ணப்படும். இப்படியே நீங்கள் இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கும் தசம பாகமாகிய உங்கள் பங்குகளில் எல்லாம் நீங்களும் கர்த்தருக்கு என்று ஒரு படைப்பை ஏறெடுத்து படைத்து, அந்த படைப்பை ஆசாரியனாகிய ஆரோனுக்கு கொடுக்க வேண்டும். உங்களுக்கு கொடுக்க படுகிற ஒவ்வொரு காணிக்கையிலும் உள்ள உச்சிதமான பரிசுத்த பங்கை எல்லாம் கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கும் படைப்பாக செலுத்த வேண்டும். ஆதலால் நீ அவர்களோடே சொல்ல வேண்டியது என்ன என்றால்: அதில் உச்சிதமானதை நீங்கள் ஏறெடுத்து படைக்கும் போது, அது களத்தின் வரத்திலும், ஆலையின் வரத்திலும் இருந்து எடுத்து செலுத்துகிறது போல லேவியருக்கு எண்ணப்படும். அதை நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் எவ்விடத்திலும் புசிக்கலாம். அது நீங்கள் ஆசரிப்பு கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு ஈடான உங்கள் சம்பளம். இப்படி அதில் உச்சிதமானதை ஏறெடுத்து படைத்தீர்களானால், நீங்கள் அதின் நிமித்தம் பாவம் சுமக்க மாட்டீர்கள். நீங்கள் சாகாது இருக்கும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரரின் பரிசுத்தமானவைகளை தீட்டு படுத்தலாகாது என்று சொல் என்றார். (எண். 18:25-32)

லேவியர்கள் தசம பாகம் மூலம் தங்களுக்கு கிடைக்க பெற்ற வருமானத்தில் தசம பாகம் எடுக்க வேண்டும். அதனை கர்த்தருக்கு செலுத்த வேண்டும். அது முடிவில் ஆசாரியர்களை சேரும் என்றும் 25 முதல் 32 வசனங்களில் கூறப்பட்டு உள்ளது. கர்த்தரை நெருங்கினால்

சாகிறோமே என்று 17-வது அதிகாரத்தின் கடைசி வசனங்களில் கதறிய மக்களுக்கு 18-வது அதிகாரத்தில் ஒரு வழி நடத்துதல் காட்ட படுகின்றது. கர்த்தரால் அபிஷேகம் செய்யப்பட்ட ஆசாரியர்கள் மூலம் ஜனங்கள் கர்த்தரை அணுகுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்பதை கர்த்தர் எடுத்து கூறுகின்றார். அந்த வாய்ப்பை கொடுக்கும் ஊழியக்காரர்களுடைய நலனை ஜனங்கள் தேட வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். அப்பொழுது ஊழியக்காரர்கள் என்பார் மூலம் ஜனங்களின் நலன்களை கர்த்தரும் தேடுவார் என்று கர்த்தர் கூறுகின்றார். 1 கொரிந்தியர் 9-வது அதிகாரம் 13,14 ஆகிய வசனங்களை பார்ப்போம். ''ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் தேவ ஆலயத்திற்கு உரியவைகளில் புசிக்கிறார்கள் என்றும், பலிபீடத்தை அடுத்து பணிவிடை செய்கிறவர்களுக்கு பலிபீடத்தில் உள்ளவைகளில் பங்கு உண்டு என்றும் அறியீர்களா? அந்த படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டும்'' என்று கர்த்தரும் கட்டளை இட்டு இருக்கிறார். தொடர்ந்து 96-வது சங்கீதம் 8-வது வசனமும் 9-வது வசனத்தின் முன் பகுதியும் பார்ப்போம். ''கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்கு உரிய மகிமையை செலுத்தி காணிக்கைகளை கொண்டு வந்து அவருடைய பிராகாரங்களில் பிரவேசியுங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரை தொழுது கொள்ளுங்கள்''.

இஸ்ரவேலர் லேவியருக்கு கொடுக்கும் தசம பாகம், லேவியருக்கு வருமானம். ஆகவே அவர்கள் அதில் இருந்து தசம பாகம் எடுத்து கர்த்தருக்கு செலுத்த வேண்டும். அப்பொழுது அவர்கள் உச்சிதமானவைகளை எடுத்து ஏறெடுக்கும் பலியாக செலுத்த வேண்டும். அது கர்த்தரால் ஆசாரியருக்கு கொடுக்க படும்.

லேவியர் கர்த்தரால் ஆசரிப்பு கூடாரத்திற்கு அடுத்த காரியங்களை செய்ய அங்கீகரிக்கபட்டு விட்டார்கள். ஆரோனும் அவன் குமாரரும் அவனது கம்பு துளிர்த்ததால், அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தின் பணி செய்ய அங்கீகரிக்க பட்டு விட்டார்கள். இப்பொழுது மற்றவர்களுக்கு அவர் மீது பொறாமை எழும்பாமல் இருக்கவும், இஸ்ரவேலர் ஒரே சமுகத்தினராக வாழவும் அவர்கள் நடுவே தொடர்புகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை கர்த்தர் தெளிவாக கூறி விட்டார்.

அத்தியாயம் - 21

ஜனங்களின் பாவத்தை பரிகரிக்க கர்த்தர் தரும் கிடாரி

21.1 அசுத்தத்தை சுத்தமாக்க கிடாரி

கானான் நோக்கி செல்லும் ஜனங்களை கர்த்தர் மூன்று பிரிவாக பிரிக்கின்றார். இதனை 18,19 ஆகிய இரண்டு அதிகாரங்களும் எடுத்து கூறுகின்றன. ஆசாரியர், லேவியர், ஜனங்கள் என்ற மூன்று பிரிவாக அவர்கள் பிரிக்க படுகின்றார்கள். மூன்று பிரிவினருக்கும் மூன்று வித்தியாசமான ஊழியங்கள் கொடுக்க படுகின்றன.

முதல் பிரிவில் இடம் பெறும் ஆசாரியர்களுக்கு ஸ்தலம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் ஆகிய கர்த்தரின் வாசஸ்தலத்தில் தங்கி பணிவிடை செய்ய வேண்டும் என்ற ஊழியம் கொடுக்க படுகின்றது.

இரண்டாவது பிரிவான லேவியர்களுக்கு ஆசரிப்பு கூடாரத்து காவலும் பாளயத்தின் காவலுமான ஊழியம் கொடுக்கப்படுகின்றது.

மூன்றாவது பிரிவான ஜனங்களில் தங்கள் வாழ்க்கையை சுத்தமாக காத்து கொண்டவர்கள் அனைவருக்கும் ஓர் சிறப்பான ஊழியம் ஒன்று கொடுக்க படுகின்றது. வாழ்க்கையில் கறை பட்டு போனவர்களை தூய்மையின் பாதைக்கு நேராக வழி நடத்துவதே அந்த ஊழியம் என்பது ஆகும். அந்த ஊழியத்தினை ஆசரிப்பு கூடாரத்தில் வைத்து அல்ல, பாளயத்தின் நடுவிலும் அல்ல, பாளயத்திற்கு புறம்பாக புறப்பட்டு சென்று அவர்கள் செய்ய வேண்டும் என்று அழைப்பு விடுக்க படுகின்றது. ஆசாரியரும் லேவியரும் செய்யும் ஊழியம் முழு நேர ஊழியம் என்பது ஆகும். அதற்கு ஒரு சம்பளமும் கொடுக்க பட்டதை 18-வது அதிகாரத்தில் இருந்து அறிந்து கொண்டோம். ஆனால் 19-வது அதிகாரத்தில் சுத்தமான மனசாட்சியை காத்து கொண்டு வாழும் சபை மக்களுக்கும் ஓர் ஊழியம் கொடுக்க படுகின்றது. அசுத்தமான பாதை சென்று விட்ட மக்களை சுத்தமான பாதைக்கு வழி நடத்துவதே அந்த ஊழியம் ஆகும். அந்த ஊழியம் ஒரு முழு நேர ஊழியம் அல்ல. அன்பு உள்ளம் கொண்டு வலிய சென்று செய்யும் ஓர் தொண்டு ஆகும். கைமாறு கருதாமல் கைகொடுக்கும் ஊழியம் ஆகும். உபகாரம் தேடாமல் தவறாக சென்றவர்களை தேடி செல்லும் ஓர் ஊழியம் ஆகும். நிற்கும் சகோதரன் விழுந்து போன சகோதரனுக்கு வலிய சென்று உதவி செய்யும் ஊழியம் ஆகும்.

இந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு ஓர் அணுகு முறை எண்ணாகமம் 19-வது அதிகாரத்தில் அறிமுகப்படுத்த படுகின்றது. தீட்டு கழிக்கும் ஜலம் என்பதே அந்த அணுகு முறை ஆகும். தவறில் விழுந்த சகோதரன் மீண்டும் தூய்மையான வழியில் வந்து சேருவதற்கு, தன்னை சுத்தமாக காத்து கொண்ட சகோதரன் ஈசோப்பு கொழுந்துகளை தன் கையில் எடுக்க வேண்டும். அதனை தீட்டு கழிக்கும் ஜலத்தில் தோய்க்க வேண்டும். பின்னர் தீட்டு பட்டவன் மீது அதனை தெளிக்க வேண்டும்.

ஈசோப்பு என்பது சுத்திகரிப்பிற்கு ஓர் அடையாளமாக இருக்கின்றது. நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும். அப்பொழுது நான் சுத்தமாவேன் என்று தவறில் விழுந்து விட்ட தாவீது என்ற அரசன் 51-வது சங்கீதம் 7-வது வசனத்தில் வேண்டுதல் செய்கின்றான்.

சுத்திகரிப்பு பணியில் ஈசோப்பு என்பது மோசேயினாலும் பயன்படுத்த பட்டு வந்தது என்பதை எபிரெயர் நிரூபம் 9:19-22 வசனங்களில் பார்க்கின்றோம். ''எப்படியெனில் மோசே, நியாயப்பிரமாணத்தின்படி சகல ஜனங்களுக்கும் எல்லா கட்டளைகளையும் சொன்ன பின்பு இளங்காளை, வெள்ளாட்டு கடா இவைகளின் இரத்தத்தை தண்ணீரோடும், சிவப்பான ஆட்டு மயிரோடும், ஈசோப்போடும் கூட எடுத்து புஸ்தகத்தின் மேலும், ஜனங்கள் எல்லார் மேலும் தெளித்து தேவன் உங்களுக்கு கட்டளை இட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக கூடாரத்தின் மேலும் ஆராதனைக்கு உரிய சகல பணிமூட்டுகளின் மேலும் இரத்தத்தை தெளித்தான். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சம் குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது''.

சபை மக்களில் தூய்மையான வாழ்வு மேற் கொண்டவர்கள் அந்த பாதையில் மற்றவர்களும் வந்து சேருவதற்கு ஒரு துணையாக இருக்க வேண்டும் என்பதை எண்ணாகமம் 19-வது அதிகாரம் எடுத்து காட்டுகின்றது. ஈசோப்பு கொழுந்து தீட்டு கழிக்கும் ஜலத்தில் நனைக்க படுகின்றது. தீட்டு கழிக்கும் ஜலம் தவறில் விழுந்தவரின் பாவத்தை பரிகரிக்கும் ஜலமாக கருத படுகின்றது. அதற்கு மிக முக்கியமான காரணம் அந்த ஜலத்தில் கலக்கப்பட்ட சாம்பல் என்பது ஆகும்.

அந்த சாம்பல் சிவப்பு நிறமான ஓர் கிடாரியின் சாம்பல் ஆகும். பாளயத்திற்கு புறம்பே எடுத்து செல்லப்பட்டு, ஆசாரியனின் பார்வையில் வெட்டப்பட்டு, சுட்டு எரிக்கப்பட்ட சிவப்பு நிறமான ஓர் கிடாரியின் சாம்பல் ஆகும். எண்ணாகம புத்தகம் 19-வது அதிகாரம் 17-வது வசனத்தில் அது பாவத்தை பரிகரிக்கும் கிடாரியின் சாம்பல் என்று அழைக்க படுகின்றது. பாளயத்திற்கு புறம்பாக எடுத்து செல்லப்பட்ட சிவப்பு நிறமான இந்த கிடாரி பின் ஒரு நாள் சர்வலோகத்து பாவத்திற்காகவும் எருசலேம் நகரத்திற்கு புறம்பே சிவப்பு அங்கி தரித்து சென்ற உலக இரட்சகரான இயேசுவை சுட்டி காட்டுகின்றது. எபிரெயர் நிரூபம் 13:11,12 ஆகிய வசனங்களை பார்ப்போம். ''ஏனென்றால் எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களின் நிமித்தமாக பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டு வரப்படுகிறதோ அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்திற்கு புறம்பே சுட்டு எரிக்கப்படும். அந்த படியே இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தை பரிசுத்தம் செய்யும்படியாக நகர வாசலுக்கு புறம்பே பாடு பட்டார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: கர்த்தர் கற்பித்த நியாயப்பிரமாணமாவது: பழுதற்றதும், ஊனமில்லாததும், நுகத்தடிக்கு உட்படாததுமாகிய சிவப்பான ஒரு கிடாரியை உன்னிடத்தில் கொண்டு வரும்படி இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுங்கள். (எண். 19:1-2)

அடிக்கப்பட்ட இந்த கிடாரி பழுதற்றதும், ஊனம் இல்லாததும், நுகத்து அடிக்கு உட்படாததுமாக இருந்தது என்று வாசிக்கின்றோம். அதே போன்று பின் ஒரு நாள் சிலுவையில் அடிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தரும் குற்றம் அற்றவரும் மாசு இல்லாதவரும் வானங்களிலும் உயர்ந்தவருமாய் இருக்கிறார் என்று எபிரெயர் நிரூபம் 7:26-வது வசனம் கூறுகின்றது.

அதை எலெயாசார் என்னும் ஆசாரியனிடத்தில் ஒப்பு கொடுங்கள் அவன் அதை பாளயத்துக்கு வெளியே கொண்டு போக கடவன்; அங்கே அது அவனுக்கு முன்பாக கொல்ல படக்கடவது. (எண். 19:3)



கிடாரி (Heifer)

பாளயத்திற்கு வெளியே எடுத்து செல்லப்பட்ட கிடாரி ஆசாரியனின் பார்வையில் ஆசாரியனின் அனுமதியின் பேரில் ஜனங்களின் பாவத்தை பரிகரிப்பதற்கு என்று வெட்ட பட்டது. தேவனுடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்து பிதாவின் அனுமதியின் பேரில், பிதாவின் திருவுள சித்தப்படி மனுமக்களின் பாவத்தை பரிகரிக்கும் பொருட்டு சிலுவையில் கொல்ல பட்டார். பரிசுத்த யோவான் எழுதின முதலாம் நிரூபம் 4:9,10 ஆகிய வசனங்களில் ''தம்முடைய ஒரே பேரான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது,'' என்று பார்க்கிறோம்.

அப்பொழுது ஆசாரியனாகிய எலெயாசார் தன் விரலினால் அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்பு கூடாரத்துக்கு எதிராக ஏழு தரம் தெளிக்கக்கடவன். (எண். 19:4)

வெட்டப்பட்ட கிடாரியின் இரத்தம் ஆசாரியனின் விரலினால் நனைக்க படுகின்றது. பாளயத்திற்கு புறம்பே இருக்கும் அவன் ஆசரிப்பு கூடாரத்திற்கு நேராக திரும்பி கிருபாசனத்திற்கு நேராக நின்று ஏழு முறை விரலில் உள்ள இரத்தத்தை தெளிக்கின்றான். பாவ மன்னிப்பு என்பது தேவ கிருபையே என்றும் மனித முயற்சிகள் அனைத்திற்கும் அப்பால் பட்டது என்றும் அதன் மூலம் அறியப்படுகின்றது.

பின்பு கிடாரியை அவன் கண்களுக்கு முன்பாக ஒருவன் சுட்டெரிக்க வேண்டும்; அதின் தோலும் அதின் மாம்சமும் அதின் இரத்தமும் அதின் சாணியும் சுட்டெரிக்க படவேண்டும். அப்பொழுது ஆசாரியன் கேதுரு கட்டையையும் ஈசோப்பையும் சிவப்பு நூலையும் எடுத்து, கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவிலே போடக்கடவன். (எண். 19:5-6)

வெட்டப்பட்ட கிடாரி சுட்டு எரிக்கப்படும் பொழுது அதன் இரத்தமும் சேர்ந்து சுட்டு எரிக்கப்படுகின்றது. பொதுவாக பலிகள் தகனிக்கப்படும் பொழுது இரத்தம் பலிபீடத்தின் ஓரத்தில் முற்றிலுமாக கொட்டப்படும். இரத்தத்தில் உயிர் இருப்பதினால் இரத்தம் உணவாக உட்கொள்ள படுவதும் இல்லை. ஆயினும் பாவத்தை பரிகரிக்கும் இந்த கிடாரியின் இரத்தம், மாம்சம் அனைத்தும் சுட்டு எரிக்க படுகின்றது என்பதை நாம் காண்கின்றோம். அந்த கிடாரி சுட்டு எரிக்கப்படும் நெருப்பினில் கேதுரு கட்டையும் போடப்படுகின்றது. கேதுரு மரம் பூச்சிகளினாலும் காலத்தினாலும் கெட்டு போகாமல் இருக்கும் ஓர் மரம் ஆகும். தவறு செய்த மனிதன் சுத்தமாக்கப்பட்ட பின்னர் தனக்கு நேராக வரும் சோதனைகளினாலும், காலம் செல்லும் பொழுது வரும் மன போராட்டங்களினாலும் இதயம் கெட்டு போய் விடாமல் சுத்திகரிக்கப்பட்ட இருதயத்தை காத்து கொள்ள வேண்டும், எவ்வித நிலையிலும் அவனுடைய இருதயம் இனிமேல் பழுது அடைய வேண்டாம் என்பதற்கு கேதுரு கட்டை ஓர் அடையாளமாக இருக்கின்றது. நெருப்பில் ஈசோப்பு கொழுந்துகளும் இடப்படுகின்றன. ஈசோப்பு என்பது அனைத்து பலவீனங்களையும் அகற்றி புது சுகம், பூரண பரிசுத்தம் அருளுவதற்கு ஆதாரமாக இருக்கின்றது. சிவப்பு நூல் ஒன்றும் கிடாரியின் நெருப்பில் எரிக்க படுகின்றது. சிவப்பு நூல் புது ஜீவன், புதிய ஆரம்பம் என்பதற்கு அடையாளமாக இருக்கின்றது.

> *பின்பு ஆசாரியன் தன் வஸ்திரங்களை தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம் பண்ணி, அதின் பின்பு பாளயத்தில் பிரவேசிக்க கடவன்; ஆசாரியன் சாயங்கால மட்டும் தீட்டு பட்டிருப்பான். அதை சுட்டெரித்தவனும் தன் வஸ்திரங்களை ஜலத்தில் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம் பண்ணி, சாயங்காலம் மட்டும் தீட்டு பட்டிருப்பான். (எண். 19:7-8)*

வெட்டப்பட்ட கிடாரியை தொட்டதினால் வெட்டியவனும், அதனை எரித்தவனும் தீட்டுபட்டிருப்பான் என்று பார்க்கிறோம். கிடாரி என்பது ஒரு இளவயதான பெண் மாட்டை குறிக்கின்றது.

> *சுத்தமாயிருக்கிற ஒருவன் கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டு, பாளயத்திற்கு புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொட்டிவைக்க கடவன்; அது இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காக தீட்டு கழிக்கும் ஜலத்துக்கென்று காத்து வைக்கப்பட வேண்டும்; அது பாவத்தை பரிகரிக்கும். கிடாரியின் சாம்பலை வாரினவன் தன் வஸ்திரங்களை தோய்க்க கடவன்; அவன் சாயங்காலம் மட்டும் தீட்டு பட்டிருப்பான்; இது இஸ்ரவேல் புத்திரருக்கும் அவர்கள் நடுவிலே தங்குகிற அந்நியனுக்கும் நித்திய கட்டளையாய் இருப்பதாக. (எண். 19:9-10)*

வெட்டப்பட்ட கிடாரியின் சாம்பல் பத்திர படுத்த படுகின்றது. தவறிய மக்களுக்கு பாவ நிவிர்த்தி செய்யும்படி, தீட்டு கழிக்கும் ஜலத்தில் இந்த சாம்பல் அவ்வப்போது கலக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது.

21.2 தீட்டு பட்ட மனிதன்

செத்து போனவனுடைய பிரேதத்தை தொட்டவன் ஏழு நாள் தீட்டு பட்டிருப்பான். அவன் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தீட்டு கழிக்கும் ஜலத்தினால் தன்னை சுத்திகரிக்க கடவன்; அப்பொழுது சுத்தமாவான்; மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தன்னை சுத்திகரிக்காமல் இருப்பானாகில் சுத்தம் ஆகான். செத்தவனுடைய பிரேதத்தை தொட்டும், தன்னை சுத்திகரித்து கொள்ளாதவன் கர்த்தரின் வாசஸ்தலத்தை தீட்டு படுத்துகிறான்; அந்த ஆத்துமா இஸ்ரவேலில் இராமல் அறுப்புண்டு போவான்; தீட்டுக்கழிக்கும் ஜலம் அவன் மேல் தெளிக்க படாததினால், அவன் தீட்டு பட்டிருப்பான்; அவன் தீட்டு இன்னும் அவன் மேல் இருக்கும். (எண். 19:11-13)

வாழ்வில் தீட்டு பட்ட மனிதன் யார் என்பது 11 முதல் 16 வசனங்களில் விளக்கி கூறப்படுகின்றது.

மரணம் அடைந்த ஓர் சரீரத்தை தொட்டு விட்டவன் எவனும் தீட்டு பட்டவன் என்று இந்த வசனங்கள் மூலம் அறிந்து கொள்ளுகின்றோம். பரிசுத்த வேதாகமம் முழுவதும் மரணம் என்பது ஓர் மாபெரும் தீட்டாகவே கருத படுகின்றது. மரணம் என்பது பாவம் என்பது தரும் பரிசாக இருக்கின்றது என்பதை ரோமர் நிரூபம் 6:23-வது வசனம் கூறுகின்றது. பாவத்தின் சம்பளம் மரணம் என்று அந்த வசனம் கூறுகின்றது. ஆதியாகம புத்தகம் 2:17-வது வசனத்தை பார்ப்போம். ''ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்'' என்று கட்டளை இட்டார்.

கூடாரத்தில் ஒரு மனிதன் செத்தால், அதற்கடுத்த நியமமாவது: அந்த கூடாரத்தில் பிரவேசிக்கிற யாவரும் கூடாரத்தில் இருக்கிற யாவரும் ஏழு நாள் தீட்டு பட்டிருப்பார்கள். மூடி கட்ட படாமல் திறந்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் தீட்டு பட்டிருக்கும். வெளியிலே பட்டயத்தால் வெட்டுண்டவனையாவது, செத்தவனையாவது, மனித எலும்பையாவது, பிரேத குழியையாவது, தொட்டவன் எவனும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான். (எண். 19:14-16)

பிரேதம் என்பது தீட்டு என்பதை நாம் இங்கு காண்கிறோம். மனித எலும்பு தீட்டுள்ளது. பிரேத குழி தீட்டுள்ளது. எதையும் உயிருள்ள மனிதன் தொட்டால் தீட்டு பட்டிருப்பான்.

21.3 தீட்டுபட்டவனுக்கு பரிகாரம்

ஆகையால் தீட்டு பட்டவனுக்காக, பாவத்தை பரிகரிக்கும் கிடாரியின் சாம்பலிலே கொஞ்சம் எடுத்து, ஒரு பாத்திரத்தில் போட்டு, அதின் மேல் ஊற்று ஜலம் வார்க்க வேண்டும். (எண். 19:17)

யோபுவின் புத்தகம் 15:14-வது வசனம் ''மனுஷனானவன் பரிசுத்தமாய் இருக்கிறதற்கும் ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் நீதிமானாய் இருக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?'' சாவு என்பதை ஒரு தீட்டாக எண்ணாகம புத்தகம் 19-வது அதிகாரம் கருதுகின்றது. அவ்வித தீட்டு அகற்ற படுவதற்கு ஓர் கிடாரி வெட்டப்பட்டு அதன் சாம்பல் ஊற்று ஜலத்துடன் கலக்க படுகின்றது.



சாம்பல் போட்டு ஊற்று ஜலம் வார்க்கப்பட்ட பாத்திரம்

உடல் உயிர் இழப்பது மட்டும் அல்ல, உயிருடன் இருக்கும் பொழுது மனசாட்சி மறத்து போவதும் ஓர் சாவாகவே வேதம் கருதுகின்றது. அந்த இரு நிலைகளிலும் இருந்து மனிதனை சுத்திகரிப்பதற்காகவே தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து தம்மை தாமே பலியாக சிலுவையில் ஒப்பு கொடுத்தார். எபிரெயர் நிரூபம் 9-வது அதிகாரம் 13,14 ஆகிய வசனங்கள், ''அது எப்படியெனில் காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும் தீட்டு பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கிடாரியின் சாம்பலும் சரீர சுத்தி உண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால் நித்திய ஆவியினாலே தம்மைதாமே பழுது அற்ற பலியாக தேவனுக்கு ஒப்பு கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு உங்கள் மன சாட்சியை செத்த கிரியைகள் அற சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்,'' என்று கூறுகின்றன.

> ***சுத்தமான ஒருவன் ஈசோப்பை எடுத்து, அந்த ஜலத்திலே தோய்த்து, கூடாரத்தின் மேலும் அதிலுள்ள சகல பணிமுட்டுக்களின் மேலும் அங்கே இருக்கிற ஜனங்களின் மேலும் தெளிக்கிறதும் அல்லாமல், எலும்பையாகிலும் வெட்டுண்டவனையாகிலும் செத்தவனையாகிலும் பிரேத குழியையாகிலும் தொட்டவன் மேலும் தெளிக்க கடவன். சுத்தமாயிருக்கிறவன் தீட்டு பட்டவன் மேல் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தெளிக்க வேண்டும் ஏழாம் நாளில் இவன் தன்னை சுத்திகரித்து, தன் வஸ்திரங்களை தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம் பண்ணி, சாயங்காலத்திலே சுத்தமாய் இருப்பான். (எண். 19:18-19)***

சுத்தமானவன், தீட்டு பட்டவனுக்கு சுத்திகரிப்பு செய்ய வேண்டும் என்பது இரட்சிப்பு என்னும் பாக்கியம் பெற்றவனே, பாவத்தின் குழியில் இருப்பவனை இரட்சிப்புக்கு நேராக வழி நடத்த முடியும் என்பதை குறிக்கின்றது. அதாவது சுவிசேஷ ஊழியம் என்பது இரட்சிப்பு பெற்றவர்களால் மட்டுமே செய்ய கூடிய ஒன்றாகும்.

தீட்டுப்பட்டிருக்கிறவன் தன்னை சுத்திகரித்து கொள்ளாதிருந்தால், அவன் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். அவன் கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தை தீட்டு படுத்தினான். தீட்டு கழிக்கும் ஜலம் அவன் மேல் தெளிக்க படாததினால் அவன் தீட்டு பட்டிருக்கிறான். தீட்டு கழிக்கும் ஜலத்தை தெளிக்கிறவனும் தன் வஸ்திரங்களை தோய்க்க கடவன். தீட்டு கழிக்கும் ஜலத்தை தொட்டவனும் சாயங்காலம் மட்டும் தீட்டு பட்டிருப்பான். தீட்டு பட்டிருக்கிறவன் தொடுகிறவைகள் எல்லாம் தீட்டு படும், அவைகளை தொடுகிறவனும் சாயங்காலம் மட்டும் தீட்டு பட்டிருப்பான். இது உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கும் என்றார். (எண். 19:20-22)

தான் தீட்டு பட்டவன் என்பதை தனது மனசாட்சி உணர்த்தியும் சுத்திகரிக்க படுவதற்கு தன்னை அர்ப்பணிக்க விருப்பம் இல்லாத மனிதனுக்கு வாழ்வு என்பது இல்லை என்று 19-வது அதிகாரம் 20-வது வசனம் கூறுகின்றது. தீட்டு பட்டு இருக்கிறவன் தன்னை சுத்திகரித்து கொள்ளாது இருந்தால் அவன் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். அவன் கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தை தீட்டு படுத்தினான். தீட்டு கழிக்கும் ஜலம் அவன் மேல் தெளிக்க படாததினால் அவன் தீட்டு பட்டு இருக்கிறான் என்று அந்த வசனம் கூறுகின்றது. தன் பாவங்களை மறைத்து வாழ்கிறவர்களுக்கு அல்ல, செய்த குற்றங்களுக்காக மனம் வருந்தி மனஸ்தாப படுகின்றவர்களுக்கு எண்ணாகம புத்தகம் 19-வது அதிகாரம் ஒரு வழிமுறை கூறுகின்றது. ''தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வு அடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 28-வது அதிகாரம் 13-வது வசனம் கூறுகின்றது. 32-வது சங்கீதம் 3 முதல் 5 வசனங்களை பார்ப்போம். ''நான் அடக்கி வைத்த மட்டும் நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயிற்று. இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாய் இருந்ததினால் என் சாரம் உஷ்ணகால வறட்சி போல வறண்டு போயிற்று. நான் அக்கிரமத்தை மறைக்காமல் என் பாவத்தை உமக்கு அறிவித்தேன். என் மீறுதல்களை கர்த்தருக்கு அறிக்கை இடுவேன் என்றேன். தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்.'' தீட்டு கழிக்கும் ஜலத்தை தெளிக்கிறவனும், அதனை தொட்டவனும் கூட சாயங்காலம் மட்டும் தீட்டுபட்டிருப்பான் என்பது சுவிசேஷ ஊழியம் செய்பவர்கள் தங்கள் வாழ்வில் அதிக கவனம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதை காட்டுகிறது.

தொகுதி - 7
சீன் வனாந்தரத்திலிருந்து வாக்குதத்த பூமியை நோக்கி

அத்தியாயம் - 22
காதேஸில் இருந்து கானான் புறப்பாடு

22.1 மிரியாமின் மரணம்

எண்ணாகம புத்தகம் 14-வது அதிகாரம் முதல் 19-வது அதிகாரம் வரை சுமார் 38 வருடங்கள் கடந்து போய் விட்டன. இந்த 38 வருடங்களையும் வேதாகம சரித்திரம் அமைதியான வருடங்கள் என்று அழைக்கின்றது. அடிமைத்தன வாழ்வில் இருந்து அன்று ஆரவாரித்து புறப்பட்டு வந்தவர்கள் இன்று அமைதியாக இருக்கின்றார்கள். செங்கடலை மங்களமாக கடந்து வந்தவர்கள் விசுவாசம் என்ற கப்பலை சேத படுத்தினார்கள். சீனாய், பாரான், சீன் என்ற வனாந்தரங்களில் வீணாய் திரிந்தார்கள். அவிசுவாசம் உதயமாகும் பொழுது ஆவிக்குரிய வாழ்வின் சுவாசம் அந்தம் காண்கின்றது. எகிப்தில் இருந்து புறப்பட்டு கானானின் தெற்கு ஓரத்தில் சீன் வனாந்தரத்தில் உள்ள காதேஸ் என்ற இடத்திற்கு இரண்டே வருடங்களில் வந்தார்கள். கானான் சென்று வந்த 12 மனிதர்களில் 10 மனிதர் கொண்டு வந்த துர்செய்தி கானானை விட்டு அவர்களை தூரமாக துரத்தி விட்டது.

இப்பொழுது அதே இடத்தில் அவர்களை நாம் காண்கிறோம். அவர்கள் காதேசை சுற்றி அலைந்து திரிந்தார்களா அல்லது பாரான் வனாந்தரம் முழுவதும் அலைந்து திரிந்தார்களா என்ற தகவல் நமக்கு கொடுக்க படவில்லை. திரும்பவும் வந்து சேர்ந்தார்கள். இதயத்தில் சுத்தம் உள்ளவர்களாக அந்த இடத்தில் அவர்கள் கூடவில்லை. வருத்தமும் துக்கமும் உள்ளவர்களாக கூடினார்கள். 40 நாள் எடுத்து அன்று கானான் சென்று வந்தவர்கள் எடுத்து இயம்பியது எகிப்திற்கு திரும்பி செல்லுவது உத்தமம் என்பதே ஆகும். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாட வேண்டியவர்கள் விட்டு வந்த பாவ பூமிக்கு எட்டு எடுத்து வைக்க கூட்டு சேர்ந்தார்கள். அப்படி செய்ய வேண்டாம் என்று முகம் குப்புற விழுந்த மோசே, ஆரோன் ஆகியவர்களை கரம் உயர்த்தி தடுத்த காலேப் யோசுவா என்றவர்களை கல் எறிந்து கொன்றுவிட வேண்டும் என்று குனிந்த பொழுது கானானை நிமிர்ந்து பார்க்கும் தகுதியை இழந்து விட்டார்கள். 40 நாள் சுற்றியும் நல்ல செய்தி கூறுவதற்கு நாவுகள் ஒருமித்து வரவில்லை. எனவே 40 வருடங்கள் நடந்து திரிவதே தேவனுடைய தீர்ப்பாக மாறியது. எண்ணாகம புத்தகம் 14-வது அதிகாரம் 34-வது வசனம். ''நீங்கள் தேசத்தை சுற்றி பார்த்த 40 நாள் இலக்கத்தின்படியே ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக நீங்கள் 40 வருஷம் உங்கள் அக்கிரமங்களை சுமந்து என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதல்களை உணருவீர்கள்'' என்று வசனம் கூறுகின்றது.

இந்த நிகழ்ச்சி இடம் பெற்ற இடம் பர்னேயா என்று அவர்களால் பெயர் சூட்டபட்ட காதேஸ் என்பது ஆகும். காதேஸ் என்றால் பரிசுத்தம் என்று பொருள். பர்னேயா என்றால் அலைந்து திரியுதல் என்று பொருள். பரிசுத்தம் என்பதை இழக்கும் பொழுது மனிதன் அலைந்து திரிகின்றவனாகவே காண படுகின்றான் என்பதற்கு ஓர் எடுத்து காட்டாக ஜனங்கள்

மாறி விட்டார்கள். 14-வது அதிகாரம் முதல் 19-வது அதிகாரம் வரை 38 ஆண்டுகள் கடந்து சென்று விட்டன. ஆறே ஆறு அதிகாரங்களில் 38 வருட சரித்திரம் ஒடுங்கி போனது. இந்த நாட்களில்தான் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுப்புகளும் கலகங்களும் ஏற்பட்டன. ஆரோனும் மிரியாமும் மோசேதான் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவனா என்று எழும்பினர். லேவியின் கோத்திரத்தில் கோராகு, ஆரோன் குடும்பத்தினர்தான் ஆசாரியர்களாக தெரிந்து கொள்ள பட்டவர்களோ என்று எழும்பினர். பொது ஜனங்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக எழும்பினர். தண்டனை மரணமே! எகிப்தில் இருந்து வந்தவர்கள், தீக்கும், பூமிக்கும், வாதைக்கும் பலியானர்கள். பழைய சந்ததியில் மிஞ்சியவர்கள் சிலரே. புதிய சமுதாயம் துளிர்க்க ஆரம்பிக்கின்றது.

எத்தனையோ அற்புதங்களும், அடையாளங்களும் இடம் பெற்று ஆரம்பித்த அவர்களுடைய புதிய வாழ்வில் மேலும், மேலும் புதிய கிருபைகள் பொங்கி வருவதற்கு பதிலாக தீபமே மங்கி போகும் நிலை வந்து விட்டது. அன்றாட வாழ்வில் வரும் சிறிய தடைகளிலும் பொறுமை இழக்கின்றார்கள். 38 வருட சரித்திரமும் விரிவாக எழுதி படைக்க விரிவான சம்பவங்கள் எதுவும் வாழ்வில் இடம் பெறவில்லை. எனவே அந்த 38 வருடங்களும் அவர்கள் கடந்து சென்ற இடங்களின் பெயர்களும் எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரத்தில் கொடுக்கப்படவில்லை. அந்த இடங்களில் கர்த்தர் அவர்களை கானானின் வாழ்விற்கு ஆயத்தம் செய்வதை தவிர பெரிதாக நடந்த சம்பவங்கள் எதுவும் கூறப்படவில்லை. காரணம் சம்பவங்கள் இல்லாத வாழ்வாக 38 வருடங்கள் கடந்து சென்றன.

எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் ஆறு முக்கிய சம்பவங்கள் இடம் பெறுகின்றன. முதலாவது இஸ்ரவேல் மக்கள் வாக்குதத்த பூமியான கானான் தேசத்தின் தென் பகுதியில் சீன் வனாந்தரத்தில் உள்ள காதேஸ் பர்னேயாவில் இருந்து புறப்பட்டு விட்டார்கள் என்பதை குறிப்பாக அறிகிறோம். அவர்கள் பிரயாணத்தின் நாற்பதாவது வருடம் துவங்கி விட்டதால் இனி அவர்கள் அலைந்து திரிவதில்லை. வாக்குதத்த பூமியை நோக்கி வேறு வழியில் புறப்பட்டு விட்டார்கள். இரண்டாவது சம்பவம் மோசேயின் சகோதரியான மிரியாம் மரணம் அடைந்தாள் என்பது ஆகும். மூன்றாவது நிகழ்ச்சி குடிக்க தண்ணீர் இல்லை என்று ஜனங்கள் துடிக்க ஆரம்பித்தது ஆகும். நான்காவது முன்னதாக நின்று கானானுக்கு வழி நடத்தி சென்ற மோசே கோபம் கொண்டதினால் செய்த பாவம் ஆகும். ஐந்தாவது இடம் பெறும் நிகழ்ச்சி ஏசாவின் வம்சத்தார் ஊர் வழியாக யாக்கோபின் குடும்பத்தார் பிரயாணம் செய்ய முடியாமல் போனது ஆகும். ஆறாவது நிகழ்ச்சி மோசேயின் சகோதரன் ஆரோனும் உலகை விட்டு கடந்து சென்றது ஆகும்.

இந்த அதிகாரம் மிரியாமின் மரணத்தில் துவங்கி ஆரோனின் மரணத்தில் முடிகின்றது. இடையில் மோசேயும் வாக்குதத்த பூமியில் நுழைவதில்லை என்று கர்த்தர் கூறுகின்றார். அம்ராமின் சந்ததியான மூன்று பேரும் கர்த்தரின் பார்வைக்கு வருகிறார்கள். மூவரும் வாக்குதத்த பூமியை அடையாமலே கடந்து செல்கிறார்கள்.

> *இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் முதலாம் மாதத்தில் சீன் வனாந்தரத்திலே சேர்ந்து, ஜனங்கள் காதேசிலே தங்கி இருக்கையில் மிரியாம் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ண பட்டாள். (எண். 20:1)*

இந்த வசனத்திற்கும் எண்ணாகமம் 19ம் அதிகாரத்திற்கும் நடுவே 38 வருடங்கள் கடந்து விட்டன. அந்த வருடங்களில் நடந்த நிகழ்ச்சிகள் நமக்கு தெரிவிக்க படாததால் அவற்றை அமைதியான வருடங்கள் என்று கூறுகின்றனர். எகிப்தில் இருந்து புறப்பட்ட 40-வது வருடம் முதல் மாதம் இடம் பெற்ற நிகழ்ச்சியினை எண்ணாகமம் 20-வது அதிகாரம் முதல் வசனம் எடுத்து கூறுகின்றது. 40-வது வருடம், அதாவது 39 வருடங்கள் முடிந்து முதல் மாதம் நடந்த முதல் நிகழ்ச்சி மிரியாம் மரணம் அடைந்தாள் என்பதே ஆகும். இந்த 39 வருடங்களில் ஒரு வருடம் சீனாய் மலையில் கடந்து சென்றது. அப்படியானால் 38 வருடங்கள் இஸ்ரவேல் மக்கள் பாரான் வனாந்தரத்தில் அலைந்து திரிந்திருப்பார்கள். இதில் காதேஸ் வந்து சேர்ந்த பின் வாக்கு தத்த தேசத்தை சுற்றி பார்க்க 40 நாட்கள் வேவுகாரர்கள் எடுத்தார்கள். பின் மக்கள் தண்ணீர் இல்லை என்று கலகம் செய்து, அதனால் கோபமடைந்த மோசே கன்மலையை கோலால் இருமுறை அடித்து கர்த்தரிடம் வாக்குதத்த பூமியில் அவன் நுழைவதில்லை என்று தண்டனை பெற்றது வரை காதேஸில் இருந்தார்கள்.

40-வது வருடம் 5-வது மாதம் இடம்பெற்ற நிகழ்ச்சி ஆரோன் மரணம் அடைந்தான் என்பதே ஆகும். எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரம் 37,38 ஆகிய வசனங்கள்: ''காதேசில் இருந்து புறப்பட்டு போய் ஏதோம் தேசத்தின் எல்லையில் இருக்கிற ஓர் என்னும் மலையிலே பாளயம் இறங்கினார்கள். அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோன் கர்த்தருடைய கட்டளையின்படியே ஓர் என்னும் மலையின் மேல் ஏறி அங்கே இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட்ட 40-ம் வருஷம் 5-ம் மாதம் 1-ம் தேதியிலே மரணம் அடைந்தான்.

எகிப்தில் இருந்து புறப்பட்டது முதல் எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரம் முதல் வசனம் வரை 39 வருடங்கள் கடந்து சென்றன. துர் செய்திக்கு செவி சாய்த்த எவரும் கானான் காண்பது இல்லை என்று கர்த்தர் எண்ணாகம புத்தகம் 14:26-38 வசனங்களில் கூறியது நிறைவேறி விட்டது. 39 வருடங்களில் பழைய தலைமுறைகள் மறைந்து போயின. 14-வது அதிகாரத்தில் குழந்தைகளாக இருந்தவர்கள் 20-வது அதிகாரத்தில் பெரியவர்களாக மாறி விட்டார்கள். கர்த்தருடனும் மோசேயுடனும் எப்பொழுதும் யுத்தம் செய்து கொண்டு இருந்த அனைவரும் கடந்த 38 ஆண்டுகளில் கடந்து சென்றார்கள். உபாகம புத்தகம் 2:14-வது வசனம்: ''யுத்த மனிதரான அந்த சந்ததியெல்லாம் கர்த்தர் தங்களுக்கு ஆணையிட்டபடியே பாளயத்தின் நடுவில் இருந்து மாண்டு போக, நாம் காதேஸ் பர்னேயாவை விட்டு புறப்பட்டது முதல் கொண்டு சேரேத் ஆற்றை கடக்கும் மட்டும் சென்ற காலம் முப்பத்தி எட்டு வருஷம் ஆயிற்று''.

மிரியாம் மரணம் அடைந்தாள் என்று முதல் வசனம் முடிகின்றது. யாத்திராகம புத்தகம் 2-வது அதிகாரத்தில் மோசேயின் உற்ற சகோதரியாக இருந்தவள், எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் மோசேயை குற்றம் சாட்டியவள். எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரம் துவக்க வசனத்தில் துயில் கொண்டாள் என்று ஒரே வரியில் அடக்கம் ஆனாள். அவளுக்காக மக்கள் மனம் வருந்தினார்கள் என்றோ, ஒரு சில நாட்களை துக்க நாட்களாக ஒதுக்கி விட்டார்கள் என்றோ எவ்வித குறிப்பும் வசனத்தில் கூறப்படவில்லை.

எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் கர்த்தரின் கோபத்தினால் அவள் அமைதியானாள். 38 வருடங்கள் கூட்டத்துடன் கூட்டமாக ஆனால் அவளுடைய இதயத்தில் தனிமையாக வாழ்ந்து வந்தாள். இறுதியில் நித்திய அமைதி கொண்டாள்.

22.2 தண்ணீர் இல்லை என்று மக்களிடம் இருந்து எதிர்ப்பு

ஜனங்களுக்கு தண்ணீர் இல்லாதிருந்தது. அப்பொழுது அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூட்டம் கூடினார்கள். (எண். 20:2)

புதிய தலைமுறையாக இருந்தாலும் அன்றாட வாழ்வில் வரும் இன்னல்களை இன் முகத்துடன் சந்திக்க முடியாத தலைமுறையாகவே தெரிகின்றார்கள். தலைமுறை மாறினாலும் தன்மை மாறவில்லை. முகங்கள் புதிதாயினும் அகத்தில் அலங்காரம் இல்லை. குடிக்க தண்ணீர் இல்லை. கண்ணீர் விட்டு ஜெபிப்பதற்கு பதிலாக உள்ளம் மடிந்து போனார்கள். அற்புதங்களை எதிர் பார்ப்பதற்கு பதிலாக வற்புறுத்தி வாதாட விளைந்தார்கள். கர்த்தரை நோக்கி பார்ப்பதற்கு பதிலாக மோசேயையும் ஆரோனையும் தேடி புறப்பட்டு சென்றார்கள்.

எண்ணாகம புத்தகம் 20:1-13 வசனங்களில் காதேஸ் என்ற கானான் எல்கை அருகில் இடம் பெற்ற தண்ணீர் பற்றாக்குறை கூறப்பட்டு உள்ளது. யாத்திராகம புத்தகம் 17:1-7 வசனங்களில் ரெவித்தீம் என்ற இடத்தில் ஏற்பட்ட தண்ணீர் பற்றா குறை கூறப்பட்டது. இரண்டு இடங்களிலும் ஜனங்கள் பற்றா குறைகள் ஏற்படும் பொழுது கர்த்தரை தேடி செல்லவில்லை. மோசேயை நாடியே சென்றார்கள். யாத்திராகம புத்தகம் 17-வது அதிகாரத்தில் காணப்பட்டவர்கள் பழைய தலைமுறையை சேர்ந்தவர்கள். எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் காண படுகின்றவர்கள் புதிய தலைமுறையை சேர்ந்தவர்கள். ஆயினும் அவர்கள் கையாடிய முறை ஒரே முறை என்பதே ஆகும். யாத்திராகம புத்தகம் 17:3-வது வசனத்தில் ஏன் எங்களை எகிப்தில் இருந்து அழைத்து வந்தாய் என்று அந்த தலைமுறையினர் கேள்வி கேட்டார்கள். எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரம் 4-வது வசனத்தில் அதே கேள்வியினை இந்த தலைமுறையும் கேட்கின்றது.

யாத்திராகம புத்தகம் 17-வது அதிகாரத்தில் கன்மலை நீர் தந்தது. எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்திலும் கன்மலை நீர் வழங்கியது. கன்மலை என்பதற்கு யாத்திராகம புத்தகம் 17-வது அதிகாரத்தில் பயன் படுத்தப்பட்டு உள்ள எபிரேய பதம் வேறே. எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் உபயோகிக்கப்பட்ட எபிரேய பதம் வேறே. யாத்திராகம புத்தகம் 17-வது அதிகாரத்தில் கர்த்தரின் கிருபைக்கு ஆதாரமாக கன்மலை காணப்பட்டது. அதே சமயத்தில் எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் கர்த்தர் அருளும் பாதுகாப்பிற்கு ஆதாரமாக கன்மலை காணப்படுகின்றது. யாத்திராகம புத்தகம் 17-வது அதிகாரத்தில் கர்த்தர் மோசேயை நோக்கி கையில் இருக்கும் கோலினால் கன்மலையின் மேல் அடி என்று கூறினார். அது ஞான கன்மலையான இயேசு சிலுவையில் அடிக்க படுவதற்கு ஓர் முன் அடையாளமாக காணப்பட்டது. 1 கொரிந்தியர் 10:4-வது வசனத்தில் ''எல்லாரும் ஒரே ஞான பானத்தை குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடே கூட சென்ற ஞான கன்மலையின் தண்ணீரை குடித்தார்கள். அந்த கன்மலை கிறிஸ்துவே'' என்று பார்க்கிறோம்.

எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் கர்த்தர் மோசேயை நோக்கி கன்மலையை அடி என்று கூறவில்லை. கன்மலையை பார்த்து பேசு என்று மட்டுமே கூறினார். கிருபை சிலுவையில் அடிக்கப்பட்டது. சிலுவையில் அடிக்கப்பட்ட இயேசுவை நோக்கி பேசும் எவருக்கும் பாவத்தில் இருந்து பாதுகாப்பு உண்டு என்பதற்கு அது ஒரு அடையாளமாக மாறி

விட்டது. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 32-ம் அதிகாரம் 1,2 ஆகிய வசனங்கள்: இதோ ஒரு இராஜா நீதியாக அரசாளுவார். பிரபுக்களும் நியாயமாக துரைத்தனம் பண்ணுவார்கள். அவர் காற்றுக்கு ஒதுக்காகவும், பெரு வெள்ளத்திற்கு புகலிடமாகவும், வறண்ட நிலத்திற்கு நீர்க்கால்களாகவும், விடாய்த்த பூமிக்கு பெரும் கன்மலையின் நிழலாகவும் இருப்பார்.

ஜனங்கள் மோசேயோடே வாக்குவாதம் பண்ணி: எங்கள் சகோதரர் கர்த்தருடைய சந்நிதியில் மாண்ட போது நாங்களும் மாண்டு போயிருந்தால் நலமாயிருக்கும். நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகும்படி, நீங்கள் கர்த்தரின் சபையை இந்த வனாந்தரத்திலே கொண்டு வந்தது என்ன? (எண். 20:3-4)

சுமார் 39 வருட கால வனாந்திர வாழ்க்கைக்கு பின்னர் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமியின் மிக அருகில் ஜனங்கள் வந்தார்கள். வந்து சேர்ந்த ஜனங்கள் வந்த இடத்தில் ஓர் குறையை கண்டார்கள். குடிக்க தண்ணீர் இல்லை என்பதே அந்த குறை ஆகும். பகலில் மேக ஸ்தபம்பத்தினாலும் இரவில் அக்கினி ஸ்தம்பத்தினாலும் வழி நடத்தப்படும் அவர்களுடைய வாழ்வினில் இடம் பெறும் குறைகளும், தடைகளும் வழி நடத்தி செல்லும் கர்த்தருக்கு தெரியாதவைகள் அல்ல என்பதை அவர்கள் உணரவில்லை. குறைகளிலும் நிறை மனதுடனும் வாழ்கின்றார்களா, தடைகளை நீக்கி போடுகின்றவர் முன் செல்லுகின்றார் என்பது அவர்கள் விடையாக மாறுகின்றதா என்பதை அறியவே கர்த்தர் விரும்புகின்றார்.

தடைகள் வரும் பொழுது மனம் உடைந்து மன்றாடுகின்றார்களா அல்லது மேலும் கடினப்பட்டு போகின்றார்களா என்பதே முக்கியமானது. பிரயாணத்தின் துவக்கத்தில் இருந்த உற்சாகம், எதிர்ப்பு ஏமாற்றம் என்பவைகளை சந்தித்ததின் விளைவாக படிப்படியாக குறைந்து விட்டது. அனலாக ஆரம்பித்த அவர்களுடைய பிரயாணம் இப்பொழுது அனலும் இன்றி குளிரும் இன்றி காணப்படுகின்றது. ஜனங்களுக்கு தண்ணீர் இல்லாது இருந்தது. அப்பொழுது அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூட்டம் கூடினார்கள். மக்களின் மனதில் வரும் கொதிப்பு முறுமுறுப்பில் முடிகின்றது. ஏழாவது முறையாக எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் முறுமுறுப்பு என்ற பாவம் இடம் பெறுகின்றது.

மோசேயுடன் சேர்ந்து ஜெபம் செய்வதற்கு பதிலாக வாக்குவாதம் செய்வதற்கு புறப்பட்டு வந்தார்கள். மோசே நடத்தி அல்ல, மேகஸ்தம்பம் நடத்தி சென்றதால் இம்மட்டும் வந்து சேர்ந்தார்கள். வாழ்வில் வரும் தடைகளை கர்த்தர் முன்னதாகவே அறிந்து இருக்கின்றார். தடைகளை நீக்கி நடத்தும் வல்லமை பெற்ற கர்த்தர் அவர்களுக்கு முன்னாக செல்லுகின்றார் என்ற நம்பிக்கை பிறக்க வில்லை. மீகா தீர்க்கதரிசியின் புத்தகம் 2:13-வது வசனம், ''தடைகளை நீக்கி போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார்; அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்து கடந்து போவார்கள்; அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாக போவார். கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்து போவார்'' என்று கூறுகிறது. ''கர்த்தர் உங்கள் முன்னே போவார். இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களை காக்கிறவராய் இருப்பார்,'' என்று ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 52:12-வது வசனத்தின் பின்பகுதி கூறுகின்றது. இடம் பெறும் சம்பவங்கள் அனைத்தும் இதயத்திற்கு இதமாக இல்லாவிடினும் கர்த்தரின் சித்தப்படி மட்டுமே இடம் பெற்று கொண்டு இருக்கின்றது. வறண்ட, நீர் இல்லாத பாதையாயினும் அந்த பாதையின் அற்றம் நிறைவும் செழிப்பும் உள்ள பூமியே என்ற எண்ணம் ஜனங்களுக்கு உருவாக வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

ஆனால் நாளைய தினத்தை குறித்து நிச்சயம் இல்லாதவர்களின் நினைவு திரையில் நேற்று நடந்த சம்பவங்கள் மட்டும் படம் போன்று வருகின்றது. அதனை மூன்றாவது வசனத்தில் படித்தோம். எங்கள் சகோதரர்களுக்கு அன்று சம்பவித்த முடிவில் ஏன் நாங்களும் முடிந்து போகவில்லை என்று வாழ்க்கையை குறித்து சலிப்பு அடைந்தார்கள். எண்ணாகம புத்தகம் 16:35-வது வசனத்தில் துணிந்து தூப கலசம் எடுத்த 250 பேர் பட்சிக்கும் அக்கினியில் மடிந்து போனார்கள். அவர்கள் அனைவரும் தங்களின் சகோதரர்கள் என்று கூறுகின்றார்கள்: எண்ணாகம புத்தகம் 16:49-வது வசனத்தில் வந்த வாதையில் பதினான்கு ஆயிரத்து எழுநூறு மக்கள் செத்து போனார்கள், அனைத்தும் அவர்கள் சகோதரர்கள்; 17:12-வது வசனத்தில் கர்த்தருக்கு விரோதமாக குற்றம் செய்த கோராகு, தாத்தான், அபிராம் அனைவரும் புதையுண்டு போனார்கள். அனைவரும் அவர்களின் சகோதரர்கள்; அவர்கள் அனைவரும் மடிந்து முப்பத்தி எட்டு வருடங்கள் உருண்டு ஓடின. மடிந்ததற்கு காரணம் கீழ்படிந்து நடக்க மறுத்ததே என்பதை இன்னும் உணரவில்லை. வாழ்வில் வரும் அடிகளுக்கு காரணம் கர்த்தருக்கு அடிபணிந்து வாழ்வதற்கு மறுப்பதே என்பதை புரிந்து கொள்ளவில்லை.

தவறு செய்து தண்டிக்க பட்டவர்களை தங்கள் சகோதரர்கள் என்று பெரிதாக பேசி கொண்டார்கள். குடிக்க தண்ணீர் இல்லாத இடத்திற்கு எங்களையும் எங்கள் மிருகங்களையும் நடத்தி வந்தது என்ன என்று கேள்வி கேட்டார்கள். காலத்தை பார்த்தால் போதகர்களாக மாறி இருக்க வேண்டிய அவர்கள் விசுவாச வாழ்வில் குழந்தைகளாகவே இருக்கின்றார்கள். இதுவரை கர்த்தரிடம் அவர்கள் பெற்ற நன்மைகள் எதுவும் ஞாபகத்தில் இல்லை. கர்த்தருக்கு விரோதமாக வாழ்ந்து மடிந்த சகோதரர்கள் மட்டுமே இன்னும் நினைவு திரையில் ஓடிக்கொண்டு இருக்கின்றார்கள்.

22.3 மோசேயும் ஆரோனும் கானானுக்குள் செல்வதில்லை

விதைப்பும், அத்தி மரமும், திராட்ச செடியும், மாதளம் செடியும், குடிக்க தண்ணீரும் இல்லாத இந்த கெட்ட இடத்தில் எங்களை கொண்டு வரும்படி, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து புறப்பட பண்ணினது என்ன என்றார்கள். அப்பொழுது மோசேயும் ஆரோனும் சபையாரை விட்டு, ஆசரிப்பு கூடாரவாசலில் போய், முகங்குப்புற விழுந்தார்கள். கர்த்தருடைய மகிமை அவர்களுக்கு காணப்பட்டது. (எண். 20:5-6)

எகிப்தில் இருந்து புறப்பட்டு வந்து 39 வருடங்கள் ஆனாலும் விடப்பட்ட இடம் மறக்கப்படவில்லை. அடிவாங்கி வாழ்ந்த இடம் இன்னும் அழகாகவே தெரிகின்றது. கர்த்தர் காட்டும் இடமோ கெட்ட இடம் என்று கூறுகின்றார்கள். வாழ்க்கையில் வரும் பாடுகள் இனி வரும் நாட்களின் நன்மைக்காக வருகின்றன என்பதை அவர்கள் கற்று கொள்ளவில்லை. ''உன்னுடைய பின் நாட்களில் உனக்கு நன்மை செய்யும் பொருட்டு உன்னை சிறுமை படுத்தினேன்'' என்று உபாகம புத்தகம் 8:15-வது வசனம் கூறுகின்றது. வெற்றி கோட்டின் மிக அருகில் ஜனங்கள் இன்னும் ஒரு முறை வந்து கூடினார்கள். ஆனால் கர்த்தருக்கு விரோதமாகவே கூடினார்கள். அதனை மோசே ஆரோன் என்ற இருவராலும் பொறுத்து கொள்ள முடியவில்லை. கர்த்தர் மேலும் கோபம் கொண்டு விட்டால் இன்னும் 40 வருடங்கள் வனாந்திரம் சுற்றி திரிய நேரிடுமோ என்ற பயமும், இத்தனை அற்புதங்களும் கண்டும் கர்த்தரிடம் தேவைகளை தெரிவிக்க ஜனங்களுக்கு மனம் வரவில்லையே என்ற வேதனையும் மோசே ஆரோன் என்ற இருவரையும் முகம் குப்புற விழ செய்தது. முகம் குப்புற விழுந்தார்கள்

என்பது கர்த்தரை நோக்கி பார்த்தார்கள் என்பதே ஆகும். தங்களிடம் வாக்குவாதம் செய்து கொண்டு வரும் மனிதர்களை பார்த்து கொண்டு இருப்பதை விட வாக்கு மாறாத கர்த்தரை நோக்கி பார்ப்பதே நலம் என்று முடிவு செய்தார்கள். வாழ்க்கையில் வரும் வருத்தங்களினால் மனம் உடைந்து விடாமல் இருப்பதற்கு கர்த்தரை நோக்கி பார்ப்பதே உத்தமம் என்று முகம்குப்புற விழுந்தார்கள். 121-வது சங்கீதம் 1,2 ஆகிய வசனங்கள், ''எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தில் இருந்து எனக்கு ஒத்தாசை வரும்'' என்று தெரிவிக்கின்றன.

கர்த்தர் மோசேயை நோக்கி: நீ கோலை எடுத்து கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரை கூடிவர செய்து, அவர்கள் கண்களுக்கு முன்னே கன்மலையை பார்த்து பேசுங்கள். அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரை கொடுக்கும். இப்படி நீ அவர்களுக்கு கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்க கொடுப்பாய் என்றார். (எண். 20:7-8)

கானானின் சமீபமாக ஜனங்கள் காதேஸ் என்ற இடம் வந்து இரண்டாவது முறை கூடினார்கள். ஆனால் சேர்ந்த இடத்தில் குடிக்க தண்ணீர் இல்லை. கோபத்தில் மோசேயை நோக்கி துடிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது மோசே ஜெபம் செய்வதற்கு முடிவு செய்தான். 109-வது சங்கீதம் 3,4 ஆகிய வசனங்களில் ''பகை உண்டாக்கும் வார்த்தைகளால் என்னை சூழ்ந்து கொண்டு முகாந்திரம் இல்லாமல் என்னோடே போர் செய்கிறார்கள். என் சிநேகத்திற்கு பதிலாக என்னை விரோதிக்கிறார்கள். நானோ ஜெபம் பண்ணி கொண்டு இருக்கிறேன்,'' என்று தாவீது ராஜா கூறுவதை பார்க்கிறோம். கர்த்தர் மோசேயின் ஜெபத்திற்கு உடனடியாக பதில் அருளுகின்றார். ஜனங்களின் அவசியத்தை அறிந்த கர்த்தர் அதை தம்மிடம் ஜனங்கள் அறிவிக்க வேண்டும் என்று எதிர்பார்த்து கொண்டு இருந்தார். பிலிப்பியர் நிருபம் 4:6-வது வசனம், ''நீங்கள் ஒன்றுக்கும் கவலை படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்,'' என்று கூறுகிறது. மனம் உவந்து கர்த்தரிடம் பேசுகின்றவர்களுக்கு மன மகிழ்ச்சி தரும் பதில்கள் கர்த்தரிடம் காத்து கொண்டு இருக்கின்றன.

கர்த்தர் மோசேயிடம் மூன்று கீழ்படிதல்களை எதிர்பார்க்கின்றார். முதலாவது கீழ்படிதல் மோசே கையில் கோலை எடுக்க வேண்டும். இரண்டாவது ஜனங்களை கூடிவர பண்ண வேண்டும். மூன்றாவது கன்மலையை நோக்கி மோசே பேச வேண்டும்.

மிகவும் அத்தியாவசியமான ஓர் தேவை மிகவும் ஆச்சரியமான முறையில் சந்திக்கப்பட இருக்கின்றது. கர்த்தர் எதிர்பார்த்த அனைத்தும் அவர்கள் அமர்ந்து இருந்து அவர் கர்த்தர் என்று அறிந்து கொள்ள வேண்டும் என்பதே ஆகும். கானான் என்பதை அறிந்து கொள்ளுவதற்கு முன்பாக கர்த்தர் என்பவரை அறிந்து கொள்ளும் அறிவுக்குள் ஆழமாக சென்றுவிட வேண்டும் என்பதே கர்த்தரின் எதிர்பார்ப்பு. முன் ஒருநாள் மீதியான் தேசத்தில் மோசே ஆடு மேய்த்து கொண்டு இருந்த பொழுது அவன் கையினில் ஒரு கோல் இருந்தது. அவன் கர்த்தரால் அழைக்கப்பட்ட பொழுது அதே கோல் அற்புதமும் அடையாளமும் செய்யும் கோலாக மாறி விட்டது. யாத்திராகமம் 4:2-ம் வசனம்: ''கர்த்தர் அவனை நோக்கி உன் கையில் இருக்கிறது என்ன என்றார். ஒரு கோல் என்றான்.'' மோசேயின் கோல் நைல் நதியின் தண்ணீரை இரத்தமாக மாற்றியது என்பதை யாத்திராகம புத்தகம் 7:20-ல்

பார்த்தோம். செங்கடலில் கால் நனையாமல் நடந்து செல்லுவதற்கு அற்புதம் ஒன்று அவசியப்பட்டது. அந்த அற்புதம் மோசேயின் கோல் பயன்படுத்த பட்டு இடம் பெற்றது என்பதை யாத்திராகம புத்தகம் 14:16-ல் பார்த்தோம். ரெவிதீம் என்ற இடத்தில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை என்ற பொழுது கன்மலையில் நீர் பொங்கி வருவதற்கு கோல் உதவியது என்று யாத்திராகமம் 17:5,6 ஆகிய வசனங்களில் கண்டோம். ஆனால் எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் குடிநீர் வழங்குவதற்கு மோசே கையில் எடுத்த கோல் ஆசரிப்பு கூடாரத்திற்குள் வைக்கப்பட்ட கோல் என்பது ஆகும். அது ஆரோனே ஆசாரிய ஊழியத்திற்கு தெரிந்து எடுக்க பட்டவன் என்று நிரூபித்த கோல் ஆகும்.

அப்பொழுது மோசே தனக்கு கர்த்தர் கட்டளை இட்டபடியே கர்த்தருடைய சந்நிதியில் இருந்த கோலை எடுத்தான். (எண். 20:9)

எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் குடிநீர் அருளுவதற்கு மோசே கையில் எடுத்து கொண்ட கோல் எண்ணாகம புத்தகம் 17-வது அதிகாரத்தில் துளிர்விட்ட கோல் ஆகும். அது ஆரோனின் கோல் ஆகும். எண்ணாகம புத்தகம் 20:9-வது வசனத்தில் இந்த விபரம் கொடுக்கப்பட்டு உள்ளது.

மோசேயும் ஆரோனும் சபையாரை கன்மலைக்கு முன்பாக கூடிவர செய்தார்கள். (எண். 20:10a)

கர்த்தர் மோசேயிடம் கூறிய இரண்டாவது கீழ்படிதல் ஜனங்கள் அனைவரையும் கூட செய்ய வேண்டும் என்பது ஆகும். இரண்டாவது வசனத்தில் ஜனங்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூடினார்கள் என்று நாம் படித்தோம். ஆனால் பின்னர் கலைந்து சென்று விட்டார்கள். அதற்கு காரணம் 6-வது வசனத்தில் காணப்பட்ட கர்த்தரின் மகிமையே ஆகும்.

குற்றம் உள்ள மனசாட்சி கொண்டவர்களுக்கு கர்த்தரின் மகிமை ஆனந்தம் தருவது இல்லை. அச்சமே தருகின்றது. கர்த்தரின் மகிமையை விட்டு ஒளித்து ஒளித்து வாழும் ஒரு வாழ்வாகவே மாறி விட்ட அவர்கள் வாழ்வு கர்த்தரின் மகிமையை கண்டவுடன் ஒளிந்து கொள்ளுவதற்கு ஓடி விட்டார்கள். ஒளித்து கொண்டு இருக்கும் அனைவரையும் கூட்டி சேர்த்து கொள் என்று கர்த்தர் இரண்டாவதாக மோசேயிடம் கூறுகின்றார். எங்கள் சகோதரர்கள் மரிக்கும் பொழுது நாங்களும் ஏன் மரிக்கவில்லை என்று 3-வது வசனத்தில் கூறியவர்கள், சகோரர்கள் ஒவ்வொரு நிலையிலும் மரிக்கும் பொழுது கர்த்தரின் மகிமையே முதற்கண் தோன்றியது என்பதை அறிவார்கள். எனவே 6-வது வசனத்தில் கர்த்தரின் மகிமை தோன்றியவுடன் தாங்களும் சாகவே போகின்றோம் என்று கூடாரங்களில் மறைந்து விட்டார்கள். கர்த்தருக்கு மறைந்து வாழ்கின்றவர்களே விரைந்து வாருங்கள் என்று மோசே அனைவரையும் வரவழைத்தான். உங்களுடைய தாகத்தை தீர்க்கின்றவரின் மகிமை காணப்படுகின்றது. தாகமாக இருக்கும் அனைவரும் வாருங்கள் என்று அழைத்தான்.

அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்த கன்மலையில் இருந்து நாங்கள் தண்ணீர் புறப்பட பண்ணுவோமோ என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையை தன் கோலினால் இரண்டு தரம் அடித்தான். உடனே தண்ணீர் ஏராளமாய் புறப்பட்டது, சபையார் குடித்தார்கள்; அவர்கள் மிருகங்களும் குடித்தது. (எண். 20:10b-11)

கர்த்தர் மோசேயிடம் எதிர்பார்த்த மூன்றாவது கீழ்படிதல் கன்மலையை பார்த்து பேசிவிடு என்பது ஆகும்.

கர்த்தர் மூன்று கீழ்படிதல்களை மோசேயிடம் எதிர்பார்த்தார். முதல் இரண்டு கீழ்படிதல்களிலும் மோசே உண்மையாக இருந்தான். கர்த்தர் கூறிய பிரகாரம் மோசே கோலை கையில் எடுத்தான்.

எண்ணாகம புத்தகம் 17:10,11 ஆகிய வசனங்களின்படி கர்த்தருடைய சந்நிதியில் வைக்கப்பட்ட அற்புதமான கோல், அழைப்பை உறுதிபடுத்தும் கோல், மோசேயினால் கையில் எடுக்கப்பட்டது.

மோசேயின் பின் வாங்குதல் 10, 11 ஆகிய இந்த வசனங்களில் பலிதம் ஆகுகின்றது. கர்த்தர் ஜனங்களை பார்த்து பேசும்படி கூறவில்லை. கன்மலையை பார்த்து மட்டுமே பேசும்படி கூறினார். ஆனால் அதற்கு மாறாக மோசே ஜனங்களை பார்த்து பேச ஆரம்பித்தான்.



மோசே கன்மலையை கோலினால் அடித்தல்

மோசே முதலாவது செய்த தவறு ஜனங்களை கலகக்காரரே என்று கூறியது ஆகும். மனிதனை கலகக்காரனே என்று அழைக்க கர்த்தர் தவிர வேறு எவருக்கும் அனுமதி இல்லை என்று அறியப்படுகின்றது. கலகக்காரரே என்பதின் சரியான பொருள் மூடர்களே என்பது ஆகும். பரிசுத்த மத்தேயு என்பார் எழுதின சுவிசேஷம் 5:22-ல் ''நான் உங்களுக்கு சொல்லுகிறேன்: தன் சகோதரனை நியாயம் இல்லாமல் கோபித்து கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாய் இருப்பான். தன் சகோதரனை வீணன் என்று சொல்லுகிறவன் ஆலோசனை சங்க தீர்ப்புக்கு ஏதுவாய் இருப்பான், மூடனே என்று சொல்லுகிறவன் எரி நரகத்திற்கு ஏதுவாயிருப்பான்,'' என்று பார்க்கிறோம். எண்ணாகம புத்தகம் 16:15-வது வசனத்தில் மோசேக்கு கடுங்கோபம் வந்தது என்று பார்த்தோம். கடும் கோபம் வந்த அந்த நேரத்தில் மோசே மனிதரிடம் வாய் திறக்கவில்லை. கர்த்தரிடம் ஜெபிக்க புறப்பட்டான். எனவே அந்த சமயத்தில் மோசே கோபம் கொண்டாலும் பாவம் செய்யவில்லை. ஆனால் எண்ணாகம புத்தகம் 20:10-வது வசனத்தில் மோசே கோபம் கொண்டான். கோபம் கொண்டவன் ஜெபிக்க புறப்படாமல் பேசி விட்டான். அதன் விளைவு கானானுக்குள் மோசே கால் எடுத்து வைக்க முடியாது என்பதே ஆகும்.

மோசேயின் இரண்டாவது தவறு அற்புதரை முன் வைத்து அற்புதம் செய்யாமல் தன்னை முன் வைத்து அற்புதம் செய்வதற்கு விழைந்து விட்டான். உங்களுக்கு நாங்கள் தண்ணீர்

புறப்பட பண்ணுவோமோ என்று கூறிவிட்டான். நாங்கள் அல்ல. கர்த்தர் உங்களுக்கு தண்ணீர் அருளுகின்றார் என்று சாட்சி பகருவதற்கு பதிலாக தன்னை மிகைப்படுத்தி விட்டான். பூரண மகிமையை கர்த்தருக்கு செலுத்த பரிபூரண பரிசுத்தம் மோசேயின் பேச்சில் இடம் பெறவில்லை. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 48:11-வது வசனம்: ''என்னிமித்தம், என்னிமித்தமே அப்படி செய்வேன்; என் நாமத்தின் பரிசுத்தம் எப்படி குலைக்கப்படலாம்? என் மகிமையை நான் வேறொருவருக்கும் கொடேன்'' என்று கூறுகின்றது.

மோசே செய்த மூன்றாவது தவறு அவன் கன்மலையை பார்த்து பேசவில்லை. கரம் உயர்த்தி கோலால் அடித்து விட்டான். ஒரு முறை அல்ல கோபத்தில் இரு முறை அடித்து விட்டான். எண்ணாகம புத்தகம் 20:11-வது வசனம். தன் கையை ஓங்கி கன்மலையை தன் கோலினால் இரண்டு தரம் அடித்தான் என்று துவங்குகின்றது. யாத்திராகம புத்தகம் 17:6-வது வசனத்தில் தாகம் தீர்ப்பதற்கு கர்த்தர் கன்மலையை அடி என்றார். மனிதரின் ஆத்தும தாகம் தீர்க்கும் இயேசு சிலுவையில் அடிக்கப்படுவதற்கு மோசே யாத்திராகமம் 17-வது அதிகாரத்தில் கன்மலையை கோலால் அடித்தது ஓர் அடையாளமாக மாறியது. ஆனால் யாத்திராகம புத்தகம் 20-வது அதிகாரம் 8-வது வசனத்தில் கன்மலையை பார்த்து பேசு என்று மட்டுமே கர்த்தர் கூறினார். ஆத்தும தாகம் உள்ள ஜனங்களே உங்கள் தாகம் தீர்க்கும் ஆத்தும இரட்சகரான இயேசுவை பார்த்து பேசுங்கள். ஜெபம் செய்யுங்கள் என்பதற்கு அது அடையாளமானது. பரிசுத்த யோவான் 7:37,38 ஆகிய வசனங்களில், ''பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று சத்தமிட்டு 'ஒருவன் தாகமாய் இருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ண கடவன்' என்றார்'' என்று பார்க்கிறோம். வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்தில் இருந்து ஜீவ தண்ணீர் உள்ள நதிகள் ஓடும் என்றார்.

கலகக்காரரே என்று ஜனங்களை பார்த்து பேசியவன், கர்த்தாவே என்று கன்மலையை பார்த்து பேசவில்லை. ஏற்கெனவே கன்மலை அடிக்கப்பட்டு விட்டது. தாகம் தீர்ப்பதற்கு இனி பிறிதொரு முறை கன்மலையை அடிக்க வேண்டிய அவசியம் இல்லை. அடிபணிய வேண்டிய அவசியமே இருந்தது. மறுபடியும் மறுபடியும் அடிப்பது முள்ளில் உதைப்பது கடினமானது என்ற நிலைக்கே மோசேயை எடுத்து செல்லும். கர்த்தர் கூறிய வழி முறைப்படி மோசே கர்த்தருடைய ஊழியத்தை செய்யவில்லை. சுய விருப்பப்படி செய்ய துவங்கி விட்டான். கோபம் பொங்கி எழும்பும் பொழுது கர்த்தர் மீது இருந்த விசுவாசம் மோசேக்கு மங்கி விட்டது. உடனே தண்ணீர் ஏராளமாய் புறப்பட்டது. சபையார் குடித்தார்கள். அவர்கள் மிருகங்களும் குடித்தது என்று அந்த அற்புதம் நிறைவு பெற்றதை 11-வது வசனத்தில் நாம் காண்கின்றோம். 78-வது சங்கீதம் 15,16-வது வசனங்களில்: ''வனாந்தரத்திலே கன்மலைகளை பிளந்து, மகா ஆழங்களில் இருந்து தண்ணீரை அவர்களுக்கு குடிக்க கொடுத்தார். கன்மலையில் இருந்து நீரோட்டங்களை புறப்படப் பண்ணி தண்ணீரை நதிபோல ஓடி வரும்படி செய்தார்'' என்று பார்க்கிறோம். கன்மலையை திறந்தார். தண்ணீர்கள் புறப்பட்டு வறண்ட வெளிகளில் ஆறாய் ஓடிற்று என்று 105-வது சங்கீதம் 41-வது வசனம் கூறுகின்றது. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 48:21-வது வசனம், ''அவர் அவர்களை வனாந்தரங்களில் நடத்தும் போது அவர்களுக்கு தாக விடா இருந்தது இல்லை. கன்மலையில் இருந்து தண்ணீரை அவர்களுக்கு சுரக்க பண்ணினார். கன்மலையை பிளந்தார். தண்ணீர் ஓடி வந்தது'' என்று கூறுகின்றது. தண்ணீரை தேடி அலைகின்றவர்கள் கர்த்தரை நோக்கி கூப்பிட்டு விட்டால் பெற்று கொள்ளுவார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம்

41:17-வது வசனம் கூறுகின்றது. தொடர்ந்து ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 43:19,20 ஆகிய வசனங்களில் ''இதோ, நான் புதிய காரியத்தை செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றும். நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும் அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன். நான் தெரிந்து கொண்ட என் ஜனத்தின் தாகத்துக்கு வனாந்தரத்திலே தண்ணீர்களையும் அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவதினால் காட்டு மிருகங்களும் வலு சர்ப்பங்களும் கோட்டான் குஞ்சுகளும் என்னை கனம் பண்ணும்,'' என்று காண்கிறோம். ஜனங்களுக்கு தாகம் தீர்ந்தது. மோசேக்கும் ஆரோனுக்கும் தீர்ப்பு பிறந்தது.

> *பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னை பரிசுத்தம் பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமல் போனபடியினால், இந்த சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களை கொண்டு போவதில்லை என்றார். (எண். 20:12)*

உயர்ந்த பொறுப்பில் இருக்கின்றவர்கள் சிறிய தவறு செய்தாலும் வரும் தீர்ப்பு மிகவும் பெரியதாகவே இருக்கின்றது. கர்த்தரின் தீர்ப்புகள் முகம் பார்த்து வருவது இல்லை. அகம் பார்த்தே அருளப்படுகின்றது. 1 சாமுவேலின் புத்தகம் 16:7-வது வசனத்தில் ''கர்த்தர் சாமுவேலை நோக்கி நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம். நான் இவனை புறக்கணித்தேன். மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தை பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தை பார்க்கிறார்'' என்று பார்க்கிறோம்.

நிர்வாகம் என்பது ஓர் சுமையாக மாறும் பொழுது ஊழியம் என்பது சுவைப்பது இல்லை: கானான் என்ற பூமிக்கு வழி நடத்தி சென்றவர் வழி ஒதுங்கி நிற்கும் நிலையை பெற்று விட்டனர். அதற்கு காரணம் என்ன என்பதை கர்த்தர் 12-வது வசனத்தில் கூறுகின்றார். ''நீ என்னை ஜனங்களுக்கு முன்பாக பரிசுத்தம் பண்ணவில்லை.'' நீ என்னை ஜனங்களுக்கு முன்பாக விசுவாசிக்கவில்லை. எண்ணாகம புத்தகம் 27:14-வது வசனத்தில் ''சபையார் வாக்குவாதம் பண்ணின சீன் வனாந்தரத்தில் தண்ணீருக்கு அடுத்த விஷயத்தில் அவர்கள் கண்களுக்கு முன்பாக என்னை பரிசுத்தம் பண்ண வேண்டிய நீங்கள் என் கட்டளையை மீறினீர்களே என்றார். இது சீன் வனாந்தரத்தில் காதேஸ் ஊர் அருகே உண்டான மேரிபாவின் தண்ணீருக்கு அடுத்த காரியமே'' என்று கர்த்தர் கூறுவதை பார்க்கிறோம். ''சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள். அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாக இருப்பாராக'' என்று ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 8:13-வது வசனம் கூறுகின்றது.

> *இங்கே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடே வாக்கு வாதம் பண்ணினதினாலும், அவர்களுக்குள்ளே அவருடைய பரிசுத்தம் விளங்கினதினாலும் இது மேரிபாவின் தண்ணீர் என்னப்பட்டது. (எண் 20:13)*

அவர்கள் குடித்த தண்ணீருக்கு மேரிபாவின் தண்ணீர் என்று ஒரு பெயர் இடப்படுகின்றது. காதேஸ் பர்னேயாவிலிருந்து காதேஸ் மேரிபா வந்து விட்டார்கள். ''நீங்கள் சீன் வனாந்தரத்தில் உள்ள காதேசிலே மேரிபாவின் தண்ணீர் சமீபத்தில் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே என்னை பரிசுத்தம் பண்ணாமல்'' என்று உபாகம புத்தகம் 32:50-வது வசனம் கூறுகின்றது.

காதேஸ் பர்னேயா என்றால் 'பரிசுத்தத்தில் இருந்து அலைந்து திரிதல்' என்று பொருள். காதேஸ் மேரிபா என்றால் 'பரிசுத்தருடன் வாக்குவாதம் செய்தல்' என்று பொருள். பரிசுத்தத்தில் இருந்து ஜனங்கள் தடுமாறி செல்லும் பொழுது எல்லாம், வாழ்வில் இடம் பெறும் அனைத்திற்கும் பரிசுத்தராகிய தேவனுடன் வாக்குவாதம் செய்யும் முடிவே ஏற்படுகின்றது.

யாத்திராகம புத்தகம் 17:7-வது வசனத்திலும் மேரிபா என்ற பெயர் வருகின்றது. அத்துடன் மாசா என்ற பெயரும் இணைத்து கூறப்படுகின்றது. மேரிபா என்பதற்கு பரீட்சை அல்லது சோதனை என்று பொருள்படுகின்றது. யாத்திராகமம் 17:7 ''இஸ்ரவேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும் கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரை பரீட்சை பார்த்ததின் நிமித்தமும் அவன் அந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும், மேரிபா என்றும் பேரிட்டான். வாழ்வினில் நெருக்கங்கள் வரும் பொழுது கன்மலையை பார்த்து கூப்பிடவே ஜனங்கள் அழைக்க பட்டார்கள். அப்படி செய்து விட்டால் கர்த்தர் உத்தரவு அருளி செய்கின்றார். ஜனங்கள் தமது ஜனங்கள் என்று கர்த்தர் அறிந்து கொள்ளுகின்றார். சங்கீதம் 81:7-வது வசனம், ''நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய். நான் உன்னை தப்புவித்தேன். இடி முழக்கம் உண்டாகும் மறைவிடத்தில் இருந்து உனக்கு உத்தரவு அருளினேன். மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் உன்னை சோதித்து அறிந்தேன்'' என்று கூறுகின்றது. பரிசுத்த யாக்கோபு என்பார் எழுதிய பொதுவான நிருபம் 1:12-வது வசனம், ''சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமன் என்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தை பெறுவான்'' என்று கூறுகின்றது.

22.4 மோசே ஏதோமிடம் கடந்து செல்ல வழிவிட கோருகின்றான்

பின்பு மோசே காதேசிலிருந்து ஏதோமின் ராஜாவினிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: எங்கள் பிதாக்கள் எகிப்துக்கு போனதும், நாங்கள் எகிப்திலே நெடுநாள் வாசம் பண்ணினதும், எகிப்தியர் எங்களையும் எங்கள் பிதாக்களையும் உபத்திரவம் படுத்தினதும், இவைகளினால் எங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தமும் உமக்கு தெரிந்திருக்கிறது. (எண் 20:14-15)

காதேஸ் என்ற இடத்தில் முகாம் இட்டவர்கள் அங்கு இருந்து புறப்படுகின்றார்கள். கானான் நோக்கி புறப்படுகின்றார்கள். ஏதோம் என்ற நாட்டின் வழியாக சென்று விட்டால் தூரம் அதிகம் இல்லை. தண்ணீர் தட்டுப்பாடும் வருவது இல்லை. ஏதோம் என்ற இடம் மிகவும் நீர் வளம் நிறைந்த ஒரு இடம். கானான் செல்லும் பயணம் மிகவும் சுலபமாக முடிந்து விடும் என்று மோசே நினைத்து விட்டான். எனவே ஏதோம் என்ற நாட்டின் அரசனுக்கு ஓர் அன்பான கடிதம் எழுதுகின்றான். நம்பிக்கைக்கு உரிய ஸ்தானாபதிகளை தெரிந்து கொண்டு கடிதத்தை கொடுத்து அனுப்புகின்றான். தகப்பனின் சகோதரரை பார்த்து, எகிப்தின் நாட்களை நினைத்து சகிக்க முடியவில்லையே என்று எழுது என்றான். அற்புதமாக கர்த்தர் இறங்கி விட்டதால் இந்த இடம்வரை வந்து சேர்ந்தோம் என்று எழுதுகின்றான். இன்னும் சேர வேண்டிய இடம் செல்லுவதற்கு உங்கள் ஊர் வழியாக செல்ல வேண்டும். அதற்கு அனுமதி செய்யுங்கள் என்று கேட்கின்றான்.



காதேஸ், ஏதோம், ஓர்மலை வரைப்படம்

எங்கள் பிதாக்கள் எகிப்திற்கு சென்றார்கள் என்று ஏசாவின் சகோதரனான யாக்கோபை நினைத்து எழுதுகின்றான். உறவை வலியுறுத்தி உதவ வேண்டுகின்றான். ஆதியாகம புத்தகம் 46:6-வது வசனத்தில் தங்கள் ஆடுமாடுகளையும், தாங்கள் கானான் தேசத்தில் சம்பாதித்த தங்கள் பொருட்களையும் சேர்த்து கொண்டு யாக்கோபும் அவன் சந்ததியார் யாவரும் எகிப்திற்கு போனார்கள் என்று வாசிக்கின்றோம். எகிப்து நாட்டில் வெகு நாட்கள் குடியிருந்தோம் என்று கடிதத்தில் மோசே குறிப்பிடுகின்றான். யாத்திராகம புத்தகம் 12:40,41-வது வசனங்கள், ''இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் 430 வருஷம். 430 வருஷம் முடிந்த அன்றைய தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட்டது'' என்று கூறுகின்றன. சுமார் 400 வருடங்கள் எகிப்தில் ஜனங்கள் வாழ்ந்தார்கள். அப்பொழுது எங்களை உபத்திரவ படுத்தினார்கள் என்று கூறுகின்றான். எபிரெய மக்கள் அன்று கண்ட அவதிகளை யாத்திராகம புத்தகம் 1:11-14 வசனங்களில் பார்க்கலாம். எபிரெய பெண்கள் பிரசவம் செய்யும் பொழுது பிறக்கும் குழந்தை ஆண் குழந்தைகள் என்றால் கொன்று விடுங்கள் என்று அரசனால் கட்டளை கொடுக்க பட்டது என்பதை யாத்திராகம புத்தகம் முதல் அதிகாரம் 16-வது வசனத்தில் பார்க்கலாம். எபிரெய ஆண் குழந்தைகளை கொன்றுவிட வேண்டும் என்ற உரிமை மருத்துவச்சிகளுக்கு மட்டும் அல்ல, எகிப்தின் பிரஜைகளுக்கும் கொடுக்கப்பட்டது என்பதை யாத்திராகமம் 1:22-ல் பார்க்கலாம். ''அப்பொழுது பார்வோன் பிறக்கும் ஆண்

பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டு விடவும், பெண் பிள்ளைகளையெல்லாம் உயிரோடே வைக்கவும் தன் ஜனங்கள் எல்லாருக்கும் கட்டளை இட்டான்''. அத்தனை உபத்திரவங்களும் கானானின் ஓரத்தில் வந்து நிற்கும் மோசேயின் இருதயத்தை ஓர் கனத்த இதயமாக மாற்றுகின்றது.

எங்களுக்கு நேரிட்ட வருத்தங்கள் என்று கூறுகின்றான். அதன் சரியான பொருள் எத்திசை திரும்பினாலும் கண்ணீர்தான் கண்டோம் என்பது ஆகும். அப்போஸ்தலருடைய நடபடிகள் 7:19-வது வசனம். ''அவன் உம்முடைய ஜனங்களை வஞ்சனையாய் நடப்பித்து, நம்முடைய பிதாக்களின் குழந்தைகள் உயிரோடு இராதபடிக்கு அவர்கள் அவைகளை வெளியே போட்டு விடும்படி செய்து, அவர்களை உபத்திரவ படுத்தினான்.

கர்த்தரை நோக்கி நாங்கள் மன்றாடினோம். அவர் எங்களுக்கு செவி கொடுத்து, ஒரு தூதனை அனுப்பி, எங்களை எகிப்திலிருந்து புறப்பட பண்ணினார். இப்பொழுது நாங்கள் உமது எல்லைக்கு உட்பட்ட காதேஸ் ஊரில் வந்திருக்கிறோம். (எண். 20:16)

தங்களுக்கு கை கொடுக்க எவரும் இல்லை என்று அவர்கள் அறிந்த பொழுது தங்களுடைய கைகளை கர்த்தருக்கு நேராக நீட்டினார்கள் என்று கூறுகின்றான். கர்த்தரை நோக்கி நாங்கள் மன்றாடினோம் என்று 16-வது வசனம் துவங்குகின்றது. இகத்தில் உதவிக்கு எவரும் இல்லையே என்று தவிக்கின்றவர்களுக்கு இனி பரத்தில் இருந்து உதவி தேவை என்ற உணர்வு வந்து விட்டது. அந்த உணர்வு ஓர் ஜெபமாக மாறி விட்டது. யாத்திராகம புத்தகம் 2:23-ல், ''சில காலம் சென்ற பின் எகிப்தின் ராஜா மரித்தான். இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டு கொண்டு இருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்தில் இருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. கர்த்தர் அவர்கள் ஜெபத்தை கேட்டார்'' என்று பார்க்கிறோம். ''ஆபத்து காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய்'' என்று சங்கீதம் 50:15-வது வசனம் கூறுகின்றது.

அண்மையில் உதவி இல்லாதவர்களுக்கு ஆண்டவரின் உதவி காத்து கொண்டு இருந்தது. கர்த்தர் ஒரு தூதனை அனுப்பி உதவி செய்தார் என்று மோசே குறிப்பிடுகின்றான். அந்த தூதனானவரை மோசே வனாந்தரத்தில் ஆடு மேய்த்து கொண்டு இருந்த பொழுது முதல் முறையாக சந்தித்தான். ''அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவில் இருந்து உண்டான அக்கினி ஜூவாலையிலே நின்று அவனுக்கு தரிசனமானார்'' என்று யாத்திராகமம் 3:2-வது வசனத்தின் முற்பகுதி கூறுகின்றது. ''வழியில் உன்னை காக்கிறதற்கும் நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்திற்கு உன்னை கொண்டு போய் சேர்க்கிறதற்கும் இதோ நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்'' என்று யாத்திராகம புத்தம் 23:20-வது வசனம் கூறுகின்றது.

கர்த்தர் அவர்களை புறப்பட செய்யும்படி ஓர் தூதனை அனுப்பினார். புறப்பட செய்யும் தூதன் மட்டும் அல்ல, வழி நடத்தும் தூதனாகவும் இருக்கின்றார் என்பது யாத்திராகம புத்தகம் 32:34-வது வசனத்திலும் 33:2-வது வசனத்திலும் கூறப்பட்டு உள்ளது. வனாந்தர பிரயாணத்தில் தூதனானவர் அவர்களை மிகவும் பத்திரமாக சுமந்து கொண்டு வந்தார். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 63:9-வது வசனம், ''அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார். அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார். அவர்

தமது அன்பின் நிமித்தமும் தமது பரிதாபத்தின் நிமித்தமும் அவர்களை மீட்டு பூர்வ நாட்களிலெல்லாம் அவர்களை தூக்கி சுமந்து வந்தார்'' என்று கூறுகின்றது.

நாங்கள் உமது தேசத்தின் வழியாய் கடந்து போகும்படி உத்தரவு கொடுக்க வேண்டும். வயல் வெளிகள் வழியாகவும், திராட்ச தோட்டங்கள் வழியாகவும் நாங்கள் போகாமலும், துரவுகளின் தண்ணீரை குடியாமலும் ராஜபாதையாகவே நடந்து, உமது எல்லையை கடந்து போகுமட்டும், வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்போம் என்று, உமது சகோதரனாகிய இஸ்ரவேல் சொல்லி அனுப்புகிறான் என்று சொல்ல சொன்னான். (எண். 20:17)



ராஜபாதை

ஏதோம் அரசனுக்கு எழுதிய கடிதத்தில் நாங்கள் எங்கு இருந்து வந்தோம். ஏன் வந்தோம். எப்படி வந்தோம் என்று எழுதி விட்டு இனிமேல் எங்கு போகின்றோம், உங்களிடம் என்ன எதிர் பார்க்கிறோம் என்று எழுதுவதை 17-வது வசனத்தில் வாசிக்கின்றோம். உங்கள் தடம் வழியாக எங்கள் இடம் அடைய அனுமதி தரமாட்டீரா என்று கெஞ்சுகின்றான். இடம் கர்த்தரால் எங்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இடமாகும். எனவே வாக்குத்தத்த பூமிக்கு நேராக நடக்கின்ற நாங்கள் உங்கள் பூமி வழியாய் செல்லும் பொழுது வலது புறமும்

சாயமாட்டோம், இடது புறமும் சாயமாட்டோம் என்று எழுதுகின்றான். நீதிமொழிகளின் புத்தகம் 4:27-வது வசனம், ''வலது புறமாவது இடது புறமாவது சாயாதே. உன் காலை தீமைக்கு விலக்குவாயாக''. மோசே கேட்ட விண்ணப்பம். ஓர் அன்பின் விண்ணப்பம்.



ஏதோம் தேசத்தில் சேயீர்

உபாகம புத்தகம் 2:2-7 வசனங்கள், ''அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: நீங்கள் இந்த மலைநாட்டை சுற்றி திரிந்தது போதும். வடக்கே திரும்புங்கள். ஜனங்களுக்கு நீ கட்டளையிட வேண்டியது என்னவென்றால்; சேயீரிலே குடியிருக்கிற ஏசாவின் புத்திரரான உங்கள் சகோதரரின் எல்லையை கடக்கப் போகிறீர்கள். அவர்கள் உங்களுக்கு பயப்படுவார்கள். நீங்களோ மிகவும் எச்சரிக்கையாய் இருங்கள். அவர்களோடே போர் செய்ய வேண்டாம். அவர்கள் தேசத்திலே ஒரு அடி நிலமும் உங்களுக்கு கொடேன். சேயீர் மலைநாட்டை ஏசாவுக்கு சுதந்தரமாக கொடுத்திருக்கிறேன். போஜன பதார்த்தங்களை அவர்கள் கையிலே பணத்திற்கு வாங்கி புசித்து தண்ணீரையும் அவர்கள் கையிலே பணத்திற்கு வாங்கி குடியுங்கள். உன் தேவனாகிய கர்த்தர் உன் கையின் கிரியைகளிலெல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார். இந்த பெரிய வனாந்தர வழியாய் நீ நடந்து வருகிறதை அறிவார்; இந்த நாற்பது வருஷமும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருந்தார். உனக்கு ஒன்றும் குறைவுபடவில்லையே என்று சொல் என்றார்''. கடைசியில் ஏசாவின் உடன்பிறப்பான இஸ்ரவேல் கேட்கின்றேன் என்று அவர்கள் உறவு முறையை சுட்டி காட்டுகின்றான்.

நாங்கள் எவ்வித தீங்கும் செய்ய மாட்டோம். நீங்கள் எவ்வித தடையும் சொல்ல வேண்டாம் என்று மோசே கடிதம் எழுதி ஸ்தானாபதிகள் கையில் கொடுத்து அனுப்பி வைத்தான். அன்பின் கடிதத்திற்கு ஏதோமின் அரசன் பண்பு இல்லாத ஒரு பதிலை அனுப்பி வைத்தான்.

> *அதற்கு ஏதோம்: நீ என் தேசத்தின் வழியாய் கடந்து போக கூடாது. போனால் பட்டயத்தோடே உன்னை எதிர்க்க புறப்படுவேன் என்று அவனுக்கு சொல்ல சொன்னான். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் அவனை நோக்கி: நடப்பான பாதையின் வழியாய் போவோம். நாங்களும் எங்கள் மிருகங்களும் உன் தண்ணீரை குடித்தால், அதற்கு கிரயம் கொடுப்போம். வேறொன்றும் செய்யாமல், கால் நடையாய் மாத்திரம் கடந்து போவோம் என்றார்கள். (எண். 20:18-19)*

ஆயினும் மோசே மனம் மடிந்து விடாமல் இரண்டாவது முறை இன்னும் ஒரு கடிதம் எழுதி அனுப்புகின்றான். முதல் கடிதத்தில் உங்களுடைய ஊரின் வழியாக இராஜ பாதை வழியே நடந்து செல்ல அனுமதி தாருங்கள் என்று கேட்டான். அதற்கு அவர்கள் மறுத்து விட்டார்கள். எனவே இப்பொழுது ஊருக்கு வெளியாக இருக்கும் நடப்பான பாதை வழியாக நாங்கள் நடந்து செல்வதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்கின்றான். நடப்பான பாதை என்பது விசாலமான பாதையாயினும், இராஜ பாதை அல்ல. அவ்விதம் அனுமதி தந்துவிட்டால் செல்லும் வழியில் நாங்கள் அல்லது எங்கள் மிருகங்கள் தங்கள் எல்கையில் உள்ள தண்ணீரை குடித்து விட்டால் அதற்கு உரிய தொகைகளை உங்கள் கைகளில் எண்ணி கொடுப்போம் என்றும் எழுதுகின்றான். ஏதோமின் அரசனோ அன்பு உள்ளம் கொண்டவன் அல்ல. பண்புடன் வருகின்றவர்களை புண்படுத்தி அனுப்புகின்றவன் என்பதை 20-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம்.

> ***அதற்கு அவன்: நீ கடந்து போக கூடாது என்று சொல்லி, வெகு ஜனங்களோடும் பலத்த கையோடும் அவர்களை எதிர்க்க புறப்பட்டான். (எண். 20:20)***

ஏற்கெனவே எகிப்தில் அடிவாங்கி வந்த மக்களை இன்னும் அடிப்பதற்கு ஏதோமின் அரசன் புறப்பட்டான். நாங்கள் உன் சகோதரர் என்று 17-வது வசனத்தில் அறிமுகம் செய்து கொண்டவர்களை சத்துருக்களாக நினைத்து புறப்பட்டான். மோசே எழுதிய கடிதத்தில் ஏதோமிய அரசனுக்கு எவ்வித நம்பிக்கையும் ஏற்படவில்லை.

கை கொடுக்க வந்தவரிடம் கை கலக்க புறப்பட்டு வந்தான். எண்ணாகம புத்தகம் 26-வது அதிகாரம் தரும் தகவலின்படி எபிரெய மக்களில் யுத்தம் செய்யும் பக்குவம் பெற்றவர்கள் ஆறு இலட்சத்து ஆயிரத்து எழுநூற்றி முப்பது வீரர்கள் என்று அறிந்து கொள்ளலாம். ஏதோமியரை மிகவும் எளிதாக தோற்கடிக்கும் திறன் இருந்தாலும் வீரர்களாக அல்ல, உங்கள் சகோதரர்களாக கடந்து செல்ல விரும்புகின்றோம் என்று சமாதான உணர்வுடன் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு ஓர் படை விடையாக வந்து கொண்டு இருக்கின்றது. 120-வது சங்கீதம் 7-வது வசனம், ''நான் சமாதானத்தை நாடுகிறேன். அவர்களோ நான் பேசும் போது யுத்தத்திற்கு எத்தனப்படுகிறார்கள்'' என்று கூறுகிறது. ஏசாவிற்கு அன்று யாக்கோபு மீது இருந்த வெறுப்பு 400 வருடங்கள் சென்ற பின்னரும் கூட இன்னும் ஓயவில்லை. நிழலாக தொடருகின்றது. எபிரெயர் மீது ஏதோமிருக்கு இருந்த மூர்க்கம் தணியவில்லை. ஆமோஸ் தீர்க்கதரிசியின் புத்தகம் முதல் அதிகாரம் 11-வது வசனத்தின் பின்பகுதி, ''அவன் தன் சகோதரனை பட்டயத்தோடே துரத்தி, தன் மனதை இரக்கமற்றதாக்கி, தன் கோபத்தினாலே என்றைக்கும் அவனை பீறி போட்டு, தன் மூர்க்கத்தை நித்திய காலமாக வைத்து இருக்கிறானே'' என்று கூறுகின்றது. நீ உன் சகோதரனாகிய யாக்கோபுக்கு செய்த கொடுமையின் நிமித்தம் வெட்கம் உன்னை மூடும் என்று ஒபதியா தீர்க்கதரிசியின் புத்தகம் 10-வது வசனத்தின் முன் பகுதி கூறுகின்றது. சகோதரன் சகோதரனுக்கு எதிராக சண்டை இடுவதற்கு வந்தான். ஆனால் கர்த்தர் அதற்கு இடம் கொடுக்க வில்லை. தனது ஊர் வழியாக கடந்து செல்லுவதற்கு உனக்கு இடம் தரவில்லை என்று உன் சகோதரனாகிய ஏதோமியனை வெறுக்க வேண்டாம் என்று கர்த்தர் கூறிவிட்டார். உபாகம புத்தம் 23:7-வது வசனத்தின் முன் பகுதியில் ''ஏதோமியனை அருவருக்காயாக. அவன் உன் சகோதரன்'' என்று கூறப்பட்டு உள்ளது. எதிர்த்து வந்த ஏதோமியரை மோசே எதிர்த்து செல்லவில்லை. ஒதுங்கி சென்று விட்டான்.

இப்படி ஏதோம் தன் எல்லை வழியாய் கடந்து போகும்படி இஸ்ரவேலருக்கு உத்தரவு கொடுக்கவில்லை. ஆகையால் இஸ்ரவேலர் அவனை விட்டு விலகி போனார்கள். (எண். 20:21)

மோசே விட்டு கொடுத்தான். ஒருவரின் விட்டு கொடுப்பு இருவரையும் வாழ செய்தது.

22.5 காதேசில் இருந்து ஓர் என்னும் மலைக்கு வருதல்

இஸ்ரவேல் புத்திரரான சபையார் எல்லாரும் காதேசை விட்டு பிரயாணப்பட்டு, ஓர் என்னும் மலைக்கு போனார்கள். (எண். 20:22)

16-வது வசனத்தில் நாங்கள் உமது எல்லைக்கு உட்பட்ட காதேஸ் ஊரில் வந்து இருக்கிறோம் என்று மோசே எழுதி அனுப்பிய கடிதத்தில் நாம் பார்த்தோம். 22-வது வசனத்தில் ஏதோமிய அரசன் ஆட்சேபம் செய்ததினால் காதேசை விட்டும் ஏதோமின் எல்கைகளை விட்டும் கடந்து செல்லுவதை நாம் பார்க்கின்றோம். ஓர் என்னும் மலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஓர் என்றால் பிரதி பலித்து காட்டப்படும் இடம் என்று பொருள். ஜனங்கள் எடுக்க வேண்டிய அடுத்த பிரயாண திட்டமும், அடுத்த ஆசாரிய பட்டமும் ஓர் என்ற மலையில் பிரதிபலித்து காட்டப்பட இருக்கின்றது.

எண்ணாகம புத்தகம் 20:22-வது வசனத்தில் கூறப்பட்டது போன்று எண்ணாகம புத்தகம் 34:7,8 ஆகிய வசனங்களிலும் ஓர் என்ற ஒரு மலை குறிப்பிடப்பட்டு உள்ளது. எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் காணப்படும் ஓர் என்ற மலை சுமார் 4500 அடி உயரம் கொண்டது. 34-வது அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட ஓர் என்ற மலை சுமார் 10,000 அடி உயரமானது. அது லீபனோனின் வடகோடியில் உள்ள மலை ஆகும். இரண்டும் இரண்டு வித்தியாசமான மலைகள் ஆகும். எண்ணாகமம் 20-வது அதிகாரத்தில் காணப்படும் ஓர் என்ற மலையில் ஆரோன் மரணம் அடைந்தான். எகிப்தில் இருந்து புறப்பட்ட ஜனங்கள் கானான் நோக்கி எடுத்த வனாந்திர பிரயாணத்தில் பற்பல இடங்களில் முகாம் இட்டார்கள். இவ்வாறு முகாம் இட்ட இடங்களை பற்றிய விபரம் எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரத்தில் மிகவும் விரிவாக கொடுக்கப்பட்டு உள்ளது.

ஏதோம் தேசத்தின் எல்லைக்கு அருகான ஓர் என்னும் மலையிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: (எண். 20:23)

ஓர் என்ற மலை ஏதோமியரின் எல்லை அருகில் உள்ள மொசேரா மலை தொடர்களில் மிகவும் உயர்ந்த ஒரு மலை ஆகும். ஆரோன் ஓர் என்ற மலையில் மரித்தான் என்பதை உபாகம புத்தகம் 10:6-வது வசனம், ஆரோன் மொசேராவில் மரித்தான் என்று கூறுகின்றது.

ஓர் என்ற மலையில் இருந்து கர்த்தர் பேசுகின்றார். முன்னதாக சீனாய் மலையில் இருந்து கர்த்தர் பேசினார். இப்பொழுது மோசேயிடம் மட்டுமே ஆரோனை பற்றி இறுதிவரை உரை ஆற்றுகின்றார். அந்த உரையில் இரண்டு தெரிவிப்புகள் தெளிவாக கொடுக்கப்படுகின்றன.

ஆரோன் தன் ஜனத்தாரோடே சேர்க்க படுவான். மேரிபாவின் தண்ணீரை பற்றிய காரியத்தில் நீங்கள் என் வாக்குக்கு கீழ்படியாமல் போனபடியினால்,



ஓர் என்னும் மலை



மொசேரா மலைதொடர்

நான் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கிற தேசத்தில் அவன் பிரவேசிப்பதில்லை. (எண். 20:24)

கர்த்தர் கூறும் முதல் தெரிவிப்பு ஆரோன் தன் ஜனத்தாரோடே சேர்க்க படுவான் என்பது ஆகும். சேர்க்க படுவான் என்ற வார்த்தையின் சரியான பொருள் உயிர்த்து எழும்பும் நம்பிக்கையுடன் காத்து கொண்டு இருக்கும் விசுவாசிகளின் கூட்டத்தில் இணைக்க படுவான் என்பது ஆகும். பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் சேர்க்க படுவான் என்றும் அறுப்புண்டு போவான் என்றும் இரண்டு விதமாக மனிதரின் முடிவு நேரங்கள் கொடுக்க படுகின்றன. கர்த்தரின் வார்த்தையின்படி வாழ்க்கையை வகுக்காதவர்களை வேதம் அறுப்புண்டு போவார்கள் என்று கூறுகின்றது. கர்த்தருடைய வசனத்தை கசந்து வாழ்கின்றவர்களுடைய முடிவு மிகவும் கசப்பாகவே இருக்கும் என்று வேதம் கூறுகின்றது. ஆனால் கர்த்தருடைய வசனத்திற்கு மனம் இசைந்து நடக்கின்றவர்கள் சேர்த்து கொள்ள படுவார்கள் எனறு வேதம் கூறுகின்றது. சேர்த்து கொள்ள படுதல் என்பது 'பரத்திற்கு ஏறுதல்' என்பதை குறிக்கின்றது. அறுப்புண்டு போகுதல் என்பது 'பாதாளத்திற்கு இறங்குதல்' என்பதை குறிக்கின்றது. சேர்த்து கொள்ள படுதல் என்பது நித்திய வாழ்வு. கண்ணீர் கவலை என்பது இல்லாத வாழ்வு. பசி தாகம் அறியாத வாழ்வு. அறுப்புண்டு போகுதல் என்பது நித்திய சாவு. கண்ணீர் நித்தம் சொரியும் வாழ்வு. பசி காதை அடைக்கும் வாழ்வு. தாகம் நாவை வறள செய்யும் வாழ்வு. அந்த வாழ்வில் ஒரு சொட்டு தண்ணீர் கூட மிகவும் மேலானதாக தெரியும். ஆரோன் தன் ஜனத்தாரோடே சேர்க்க படுவான் என்று 24-வது வசனம் துவங்குகின்றது. விசுவாசிகளின் தகப்பனுடன் விசுவாசிக்கும் பிள்ளைகள் சேர்க்க படுகின்றார்கள். ஆதியாகம புத்தகம் 15-வது அதிகாரம் 15-வது வசனத்தில ''நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய். நல்ல முதிர் வயதிலே அடக்கம் பண்ண படுவாய்'' என்று பார்க்கிறோம். தொடர்ந்து ஆதியாகம புத்தகம் 25:7,8 ஆகிய வசனங்களில் ''ஆபிரகாம் உயிரோடு இருந்த ஆயுசு நாட்கள் நூற்று எழுபத்தி ஐந்து வருஷம். பிற்பாடு ஆபிரகாம் நல்ல நரை வயதிலும் முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்து தன் ஜனத்தாரோடே சேர்க்க பட்டான்'' என்று பார்க்கிறோம்.

ஓர் என்ற மலையில் கர்த்தர் கூறிய இரண்டாவது அறிவிப்பு ஆரோன் கானான் என்ற பூமியை காண்பது இல்லை என்பது ஆகும். அதற்கு காரணம் மேரிபா தண்ணீர் பற்றிய காரியத்தில் கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிந்து நடக்கவில்லை என்பதே ஆகும். பிரதான

ஆசாரியன் கூட கானானில் பிரவேசிக்க முடியவில்லை. எபிரேய மக்களுக்கு என்று வந்த பிரதான ஆசாரியனாக இருந்தும் ஆரோன் மிகவும் பெலவீனமான ஆசாரியனாகவே இருந்தான் என்பதை எபிரெயர் நிருபம் 5:2-வது வசனம் எடுத்து கூறுகின்றது. ஆனால் மனுக்குலத்திற்கு என்று வந்த உத்தம பிரதான ஆசாரியராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பலவீனமான ஆசாரியர் அல்ல என்பதை எபிரெயர் நிருபம் 4:14,15 ஆகிய வசனங்கள் எடுத்து கூறுகின்றன. ''வானங்களின் வழியாய் பரலோகத்திற்கு போன தேவ குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிற படியினால் நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய் பற்றி கொண்டு இருக்க கடவோம். நம்முடைய பெலவீனங்களை குறித்து பரிதபிக்க கூடாத பிரதான ஆசாரியர் நமக்கு இராமல் எல்லா விதத்திலும் நம்மை போல் சோதிக்க பட்டும் பாவம் இல்லாதவராய் இருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார்.'' எபிரெயர்களின் பிரதான ஆசாரியரான ஆரோன் ஆண்டவரின் வார்த்தைக்கு மேரிபாவின் தண்ணீர் பற்றிய சம்பவத்தில் கீழ்படியவில்லை. ஆனால் மனுக்குலத்திற்கு என்று வந்த உத்தம பிரதான ஆசாரியராகிய இயேசு, சிலுவையின் மரண பரியந்தம் தன்னை தாழ்த்தி பாடு பட்டு முற்றும் கீழ்படிந்தார். எபிரெயர் நிருபம் 5:8-10 வசனங்கள், ''அவர் குமாரனாய் இருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்படிதலை கற்று கொண்டு தாம் பூரணரான பின்பு தமக்கு கீழ்படிகிற யாவரையும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு காரணராகி மெல்கிசெதேக்கின் முறைமையின் படியான பிரதான ஆசாரியர் என்றும் தேவனாலே நாமம் தரிக்க பட்டார்'' என்று கூறுகின்றன.

ஓர் மலையில் ஆரோனின் வாழ்வு அற்றம் கண்டது. மனுக்குலத்தின் பிரதான ஆசாரியரான இயேசு கிறிஸ்து என்றும் நிலைத்து நிற்கும் வல்லமை பெற்றவர். அற்றம் அறியாதவர். நேற்றும் இன்றும் என்றும் மாறாத பிரதான ஆசாரியர். இதனை எபிரெயர் நிருபம் 7:23-26 வசனங்கள் எடுத்து உரைக்கின்றன. ''அன்றியும் அவர்கள் மரணத்தின் நிமித்தம் நிலைத்து நிற்க கூடாதவர்களானபடியால் ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராய் இருக்கிறார்கள். இவரோ என்றென்றைக்கும் நிலைத்து இருக்கிற படியினாலே, மாறி போகாத ஆசாரியத்துவம் உள்ளவராய் இருக்கிறார். மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடு இருக்கிறவராகையால் அவர்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார். பரிசுத்தரும் குற்றம் அற்றவரும், மாசு இல்லாதவரும் பாவிகளுக்கு விலகினவரும் வானங்களிலும் உயர்ந்தவருமாய் இருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராய் இருக்கிறார்''.

22.6 ஆரோனின் மரணம்

நீ ஆரோனையும் அவன் குமாரனாகிய எலெயாசாரையும் கூட்டி கொண்டு, அவர்களை ஓர் என்னும் மலையில் ஏறப்பண்ணி, (எண். 20:25)

ஆதியாகம புத்தகம் 22-வது அதிகாரத்தில் கர்த்தர் ஆபிரகாமை நோக்கி ஈசாக்கு என்ற அவனுடைய ஏக புத்திரனை கூட்டி கொண்டு மோரியா என்ற மலை மீது ஏறும்படி கூறினார். அது மனுக்குலத்திற்காக அடிக்கப்பட போகின்ற தேவ ஆட்டுக்குட்டிக்கு ஓர் முன் அடையாளமாக காணப்பட்டது. எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் ஆரோன், எலெயாசார் ஆகிய இருவரையும் அழைத்து கொண்டு ஓர் என்ற மலைமீது ஏறு என்று கர்த்தர் மோசேயிடம் கூறுகின்றார். அது மனுக்குலத்திற்காக பரிந்துரை செய்யும் உத்தம பிரதான ஆசாரியராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஓர் முன் அடையாளமாக மாறிவிட்டது.

ஆரோன் உடுத்தி இருக்கிற வஸ்திரங்களை கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்துவாயாக. ஆரோன் அங்கே மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான் என்றார். (எண். 20:26)

ஆரோன் உடுத்தியிருந்த வஸ்திரம் ஆசாரிய பட்டத்திற்கு அழைக்க பட்டவர்கள் மட்டுமே உடுத்தும் வஸ்திரம் ஆகும். ஆரோனின் அழைப்பு முற்று பெற்று விட்டது. வஸ்திரம் கழற்ற படுகின்றது.

லேவியராகம புத்தகம் 8-வது அதிகாரத்தில் மிகுந்த ஆரவாரத்துடன் உடுத்தப்பட்ட வஸ்திரம் எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் மகா அமைதியுடன் கழற்ற படுகின்றது. உயிருடன் இருக்கும் பொழுதே பிரதான ஆசாரியனின் உடை பிரிதொருவருக்கு அணிவிக்க படுகின்றது. ஆசரிப்பு கூடார ஆராதனைகளில் இடைவெளி என்பது இடம் பெற முடியாது. ஆரோன் உயிர் இழந்த பின்னர் பிறிதொருவர் பொறுப்பு எடுக்கும்வரை தற்காலிக கதவடைப்பு ஆராதனை கூடத்தில் அமைய முடியாது. ஆண்டவரின் ஊழியத்தில் கால இடைவெளிகள் இல்லை. ஆரோனின் மகன் எலெயாசார் மீது பிரதான ஆசாரியன் வஸ்திரம் அணிவிக்க படுகின்றது. தகப்பனின் ஊழியம் மகனுக்கு கடந்து செல்லுகின்றது. அது ஒரு சிலாக்கியம் ஆகும்.

எலெயாசாருக்கு ஆசாரிய பொறுப்பு

ஆரோனின் மரணம்

கர்த்தர் கட்டளை இட்டபடியே மோசே செய்தான்; சபையார் எல்லாரும் பார்க்க, அவர்கள் ஓர் என்னும் மலையில் ஏறினார்கள். அங்கே ஆரோன் உடுத்தியிருந்த வஸ்திரங்களை மோசே கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்தினான். அப்பொழுது ஆரோன் அங்கே மலையின் உச்சியிலே மரித்தான். பின்பு மோசேயும் எலெயாசாரும் மலையிலிருந்து இறங்கினார்கள். (எண். 20:27-28)

மகா ஒழுங்கும் கிரமமுமாக ஆரோன் பதவி துறத்தலும், எலெயாசார் பதவி ஏற்றலும் மோசேயினால் கர்த்தரின் கட்டளையின்படி நடத்த படுகின்றது. ஓர் என்னும் மலை உச்சியில் ஆரோன் மரிக்கிறான்.

ஆரோன் ஜீவித்து போனான் என்பதை சபையார் எல்லாரும் கண்டபோது, இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் ஆரோனுக்காக முப்பது நாள் துக்கம் கொண்டாடினார்கள். (எண். 20:29)



ஓர் மலையில் ஆரோனின் கல்லறை

பிரகாசிக்கும் முகத்துடன் மோசே இறங்கி வந்தான். பிரகாசிக்கும் உடையுடன் எலெயாசார் இறங்கி வந்தான். ஆசாரிய உடையில் இறங்கி வருவது ஆரோன் அல்ல. எலெயாசார் என்பதை கண்டு விட்ட ஜனங்கள் ஆரோன் கடந்து சென்று விட்டான் என்பதை அறிந்து கொண்டார்கள். கண் கலங்கி விட்டார்கள். பிறப்பு என்பது முகம் மலர செய்கின்றது. இறப்பு என்பது மனம் வருந்த செய்கின்றது. 30 நாட்கள் ஆரோனின் பிரிவினால் பரிவு கொண்டார்கள். தன்னுடைய வாழ்க்கையில் எத்தனையோ தவறுகள் செய்தவனாக ஆரோன் காண பட்டாலும் செய்த தவறுகளை உடனுக்கு உடன் கர்த்தரிடம் ஒப்பு கொள்ளுகின்றவனாகவும் ஆரோன் காண பட்டான். உடைந்த உள்ளம் பிரதான ஆசாரியனின் உடையை காண செய்தது. இப்பொழுது உயிர்த்து எழும்பும் கூட்டத்தாருடன் சேர செய்தது. பாவத்தில் இருந்து பரிசுத்தத்திற்கு நேராக ஜனங்களை வழி நடத்திய மோசே என்பவனுக்கு ஒரு வாயாக அழைக்க பட்டவன் ஆரோன். பின்னர் பரிசுத்தமான ஆசரிப்பு கூடாரத்தின் பொறுப்பிற்கு நேராக அழைக்க பட்டவன் ஆரோன். பின்னர் பரிசுத்தவான்களின் கூட்டத்தில் சேர்ந்து கொள்ளுவதற்கு அழைக்க பட்டவன் ஆரோன்.

116-வது சங்கீதம் 15-வது வசனம். ''கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.'' 68-வது சங்கீதம் 20-வது வசனம். ''நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவனாய் இருக்கிறார். ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகள் உண்டு.''

அத்தியாயம் - 23
மோவாப் நோக்கி பிரயாணம்

23.1 தெற்கே வாசம் பண்ணும் கானானியரிடமிருந்து எதிர்ப்பு

ஏதோமை விட்டு விலகி சென்ற இஸ்ரவேலர் கானானின் அருகாக சவக்கடலை சுற்றி மோவாப் சமவெளி வழியாக கானான் தேசம் செல்ல தீர்மானிக்கின்றனர். ஆனால் அவர்கள் அந்த 12 வேவுகாரர்கள் காட்டி கொடுத்த வழியே வருகிறார்கள் என்று எண்ணி ஒரு கானானிய அரசன் அவர்களை தாக்க வருகிறான்.

வேவுகாரர் காண்பித்த வழியாக இஸ்ரவேலர் வருகிறார்கள் என்று தெற்கே வாசம் பண்ணுகிற கானானியனாகிய ஆராத் ராஜா கேள்வி பட்டபோது, அவன் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம் பண்ணி, அவர்களில் சிலரை சிறை பிடித்து கொண்டு போனான். (எண். 21:1)

வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமிக்கு நேராக வனாந்தர பாதை வழியாக ஜனங்கள் வந்து கொண்டு இருந்த நாட்களில் அகப்போராட்டம் அதிகமாக வந்தது. வாக்குத்தத்த பூமியின் மிக அருகில் நெருங்கி வந்த பொழுது புறப்போராட்டம் ஒன்று ஒன்றாக வருகின்றது. சற்று முன்னதாக சகோதரன் அவர்களை சத்துருவாக நினைத்து விட்டான். அவனுடைய ஊர் வழியாக செல்லுவதற்கு இடம் கொடுக்கவில்லை. இப்பொழுது பிறிதொருவன் அவர்களை எதிர்த்து வருகின்றான். அவன் ஆராத் என்ற ஒரு இடத்தை ஆண்டு வந்தவன் என்று முதல் வசனம் கூறுகின்றது. இஸ்ரவேல் ஜனங்கள் இருந்த இடத்தில் இருந்து சுமார் 50 மைல் தூரத்தில் இருந்து எதிராக புறப்பட்டு வருகின்றான். அவனுடைய எல்கைக்குள் அவர்கள் வருவதற்கு முன்னர் அவர்களை தடுத்து நிறுத்தி விடுவதற்கு புறப்பட்டு வருகின்றான். அமைதலாக சென்று கொண்டு இருக்கும் ஜனங்களை வழி மறிப்பதற்கு புறப்பட்டு வருகின்றான். அவர்களில் சிலரை சிறைபிடித்து சென்றான் என்று 21-வது அதிகாரம் முதல் வசனம் முற்று பெறுகின்றது.

அப்பொழுது இஸ்ரவேலர் கர்த்தரை நோக்கி: தேவரீர் இந்த ஜனங்களை எங்கள் கையில் ஒப்பு கொடுத்தால், அவர்களுடைய பட்டணங்களை சங்காரம் பண்ணுவோம் என்று பிரதிக்கினை பண்ணினார்கள். (எண். 21:2)

மிகவும் குறுகிய இடைவெளியில் இடம்பெற்ற இரண்டாவது புறப்போராட்டம் இது ஆகும். வாக்குத்தத்த பூமிக்குள் பிரவேசிக்கும் அவர்களுக்கு எண்ணற்ற உபத்திரவங்களும் போராட்டங்களும் வந்து கொண்டே இருக்கின்றன. நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று அப்போஸ்தலருடைய நடபடிகள் 14-வது அதிகாரம் 22-வது வசனம் கூறுகின்றது. ஒரு சிறு குறை அல்லது தடை வரும் பொழுது அதனை மிகவும் பெரிதுபடுத்தி கர்த்தருக்கும் மோசேக்கும் விரோதமாக உடனடியாக மாறுகின்ற மக்கள் இந்த குறிப்பிட்ட இடத்தில் ஜெபமே ஜெயம் என்ற முடிவிற்குள் வந்து கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்தார்கள் என்று நாம் பார்க்கின்றோம். கர்த்தர் தங்களது விண்ணப்பத்திற்கு செவி சாய்த்து விட்டால் பரிசுத்தம் என்பதில் இருந்து தாங்கள் விலக போவது இல்லை என்றும் அசுத்தமான

அனைத்தையும் அழித்து வாழுவோம் என்றும் பிரதிக்கினை செய்து ஜெபம் செய்ய ஆரம்பித்தார்கள். 2-வது வசனம் இதனை எடுத்து கூறுகின்றது.

அமைதலாக சென்ற மக்களை ஆக்கிரமிக்க வந்த ஆராத் என்ற அரசனை கர்த்தர் சென்று சந்தித்தார். 38 வருடங்களுக்கு முன்பு ஒரு முறை கானானின் ஓரம் வரை வந்து ஜனங்கள் தோல்வி கண்டார்கள் என்பதை எண்ணாகம புத்தகம் 14-வது அதிகாரத்தில் கண்டோம். ஓர்மா மட்டும் துரத்தப்பட்டார்கள் என்று எண்ணாகமம் 14-வது அதிகாரம் 45-வது வசனம் கூறுகின்றது. அப்பொழுது அவர்கள் சுயமாக கானான் என்பதற்குள் பிரவேசிக்க முயற்சி செய்தார்கள். ஆனால் இப்பொழுது கர்த்தரை நோக்கி ஜெபித்தார்கள். தாங்களாக தங்களுக்கு எதிராக வரும் போராட்டங்களை சந்திக்க இடம் கொடாமல் கர்த்தர் சந்திப்பதற்கு இடம் கொடுத்தார்கள். இப்பொழுது ஆராத் என்ற இடத்தில் இருந்து வந்த எதிர்ப்பு தோல்வியில் அல்ல வெற்றியில் முடிந்தது. ஜெபம் வெற்றிக்கு நேராக வழி நடத்தி விட்டது. எண்ணாகம புத்தகம் 14-வது அதிகாரத்தில் தாங்களாக போராடினார்கள். ஓர்மா என்ற இடம் வரை துரத்தப்பட்டார்கள். எண்ணாகம புத்தகம் 21-வது அதிகாரம் 2-வது வசனத்தில் ஜெபத்தில் போராடினார்கள்.

கர்த்தர் இஸ்ரவேலின் சத்தத்துக்கு செவி கொடுத்து, அவர்களுக்கு கானானியரை ஒப்பு கொடுத்தார்; அப்பொழுது அவர்களையும் அவர்கள் பட்டணங்களையும் சங்காரம் பண்ணி, அவ்விடத்திற்கு ஓர்மா என்று பேரிட்டார்கள். (எண். 21:3)

ஓர்மா

கர்த்தர் வழி திறந்து விட்டார். ஆராத் என்ற இடம்வரை வழி திறந்து விட்டார். இப்பொழுது ஆராத் என்ற பட்டணத்திற்கு ஓர்மா என்ற ஒரு புதிய பெயரை கொடுக்கின்றார்கள். 38 வருடங்களுக்கு முன்னதாக எண்ணாகம புத்தகம் 14-வது அதிகாரத்தில் ஓர்மா என்ற இடத்தில் ஜனங்கள் படுதோல்வியை சந்தித்தார்கள். இப்பொழுது கர்த்தரை நம்பி அவர்கள் முன் சென்றதால் அவர்கள் படுதோல்வியை சந்திக்கவில்லை. அவர்களை எதிர்த்து வந்தவர்களே படுதோல்வியை சந்தித்தார்கள். எனவே எதிர்த்து வந்தவர்கள் பட்டணத்திற்கு ஓர்மா என்று பெயர் கொடுத்தார்கள். படுதோல்வி கண்ட ஒரு பிரயாணம் ஜெபத்தின் விளைவினால் பெரிய வெற்றி கண்டு விட்டது. ஒரு உயர்ந்த வெற்றி பெற்ற அந்த மக்கள் அடுத்த வசனத்தில் மிகவும் சோர்ந்து போனார்கள்.

23.2 திரும்பவும் சிவந்த சமுத்திர வழியே பாரான் வனாந்தர பிரயாணம்

அவர்கள் ஏதோம் தேசத்தை சுற்றி போகும்படிக்கு, ஓர் என்னும் மலையை விட்டு, சிவந்த சமுத்திரத்தின் வழியாய் பிரயாணம் பண்ணினார்கள்; வழியின் நிமித்தம் ஜனங்கள் மனமடிவு அடைந்தார்கள். (எண். 21:4)

ஏதோமின் அரசன் அனுமதி தரவில்லை என்பதினால் சிவந்த சமுத்திரம் வரை சென்று ஆராத் என்ற பகுதி வந்தார்கள். வழியின் நிமித்தம் ஜனங்கள் மன மடிவு அடைந்தார்கள் என்று கூறுகின்றது. ஓசியா தீர்க்கதரிசியின் புத்தகம் 6-வது அதிகாரம் 4-வது வசனத்தின் பின் பகுதி, ''உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தை போலவும் விடியற்காலத்தில் தோன்றும் பனியை போலவும் ஒழிந்து போகிறது'' என்று கூறுகின்றது.

சற்று முன்னதாக சந்தோஷம் பெற்றவர்கள் பாதை வனாந்தரமான சுற்று பாதையானவுடன் மனம் மடிந்து போனார்கள். உடல் சுகம் எதுவும் பாதிக்க படவில்லை. ஆனால் மனம் பாதிக்க பட்டது. ஆத்துமாவில் சோர்ந்து போனார்கள். சரீரம் சுகம் பெற்று காண பட்டாலும் ஆத்துமாவில் சுகம் இல்லை என்றால் வாழ்வில் மகிழ்ச்சியும் இல்லை. பிரயாணத்தின் ஆரம்பத்தில் அவர்களுடைய முன்னோர்கள் மிகவும் மனம் மடிந்து மோசேயின் வார்த்தைக்கு செவி சாய்க்கவில்லை. இந்த பிரகாரமாக மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்னான். அவர்களோ மன மடிவினாலும் கொடுமையான வேலையினாலும் மோசேக்கு செவிகொடாமல் போனார்கள்.

இப்பொழுது பிரயாணத்தின் முடிவு நேரத்தில் புதிய தலைமுறை மனம் உடைந்து போய் விட்டது. அவர்களுடைய ஆத்துமா தொய்ந்து போய் விட்டது. சங்கீதம் 78:34-37 வசனங்கள் பார்ப்போம் ''அவர்களை அவர் கொல்லும் போது அவரை குறித்து விசாரித்து, அவர்கள் திரும்பி வந்து தேவனை அதிகாலமே தேடி தேவன் தங்கள் கன்மலை என்றும் உன்னதமான தேவன் தங்கள் மீட்பர் என்றும் நினைவு கூர்ந்தார்கள். ஆனாலும் அவர்கள் தங்கள் வாயினால் அவருக்கு இச்சகம் பேசி தங்கள் நாவினால் அவரிடத்தில் பொய் சொன்னார்கள். அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலவர படவில்லை. அவருடைய உடன்படிக்கையில் அவர்கள் உண்மையாய் இருக்கவில்லை''.

சற்று முன்னதாக மிகவும் முன் வாங்கியவர்கள் இப்பொழுது பின் வாங்கி போகின்றார்கள். எபிரெயர் நிருபம் 10-வது அதிகாரம் 38,39-வது வசனங்களில், ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். பின்வாங்கி போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாய் இராது என்கிறார். நாமோ கெட்டு போக பின்வாங்குகிறவர்களாய் இராமல் ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாய் இருக்கிறோம்'' என்று பார்க்கிறோம். தொடர்ந்து எபிரெயர் நிருபம் 12:1 பார்ப்போம். ''ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டு இருக்க பாரமான யாவற்றையும் நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்து இருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓட கடவோம்''.

23.3 சர்ப்பத்தினால் சாவும் உயர்த்தபட்ட சர்ப்பமும்

ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாக பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்தில் இருந்து வரப்பண்ணினது என்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாய் இருக்கிறது என்றார்கள். (எண். 21:5)

எகிப்து தேசத்தின் அருகாமையில், சிவந்த சமுத்திரத்தின ஓரம், கர்த்தர் அவர்கள் கடப்பதற்காக சிவந்த சமுத்திரத்தை இரண்டாக பிளந்த அகாபா என்ற சமுத்திர வடபகுதிக்கு திரும்பவும் வந்து விட்டார்கள். கர்த்தர் செய்த அற்புதத்தை நினைத்து பார்க்காமல் அதற்கும் அப்பால்பட்ட அடிமை வாழ்வின் தேசத்தை நினைத்து ஏங்குகிறார்கள். உணர்ச்சியின் உச்சத்தில் இருந்தவரின் ஆத்துமா வறட்சியானது. சுற்று பாதை வேண்டாம் என்று கர்த்தருக்கும் மோசேக்கும் விரோதமாக முறுமுறுக்க துவங்குவதை 5-வது வசனத்தில் பார்க்கின்றோம்.

முழு இருதயத்துடனும் முழு ஆத்துமாவுடனும் கர்த்தரில் அன்பு கூற முடியவில்லை. எனவே கர்த்தருடைய முழு சித்தத்திற்கு மனம் சம்மதிக்க முன் வரவில்லை. இரண்டாவது வசனத்தில் ஜெபம் செய்ய முடிவு செய்தவர்கள் நான்காவது வசனத்தில் முறுமுறுப்பதற்கு முடிவு செய்தார்கள். மூன்று குற்றசாட்டுகளை 5-வது வசனத்தில் மோசேயின் மீது சுமத்துகின்றார்கள். ஏன் எங்களை இந்த வனாந்தரம் அழைத்து வந்தாய் என்பது முதலாவது குற்றச்சாட்டு. வனாந்தரத்தில் புசிக்க அப்பம் இல்லை. குடிக்க தண்ணீர் இல்லை, நாங்கள் அனைவரும் சாக வேண்டும் என்பதே உன் முடிவு என்று இரண்டாவதாக கூறினார்கள். இந்த அற்பமான உணவு என்று கர்த்தர் வானத்தில் இருந்து தினமும் கொடுத்த மன்னாவை எங்கள் மனதுக்கு வெறுப்பாக இருக்கிறது என்று மூன்றாவதாக கூறினார்கள்.

கர்த்தர் மிகவும் கிருபையாக கொடுத்து வரும் மன்னா அற்பமான ஆகாரமாக அவர்களுக்கு மாறி விட்டது. மன்னா என்பது மீட்கப்பட்டவர்களுக்கு மட்டும் என்று மிகவும் பிரத்தியேகமாக கொடுக்கப்பட்ட ஒரு ஆகாரம் என்பதை யாத்திராகம புத்தகம் 16:31-வது வசனத்தில் நாம் கண்டோம். அதிகாலையில் மட்டுமே அருளப்பட்ட ஆகாரம் என்பதை யாத்திராகமம் 16:21-வது வசனத்தில் கண்டோம். அனைவருக்கும் போதுமான அளவு மன்னா வழங்க பட்டது. பசி உள்ள அனைவரையும் மன்னா நன்மையினால் நிரப்பியது. ஆத்தும பசி இல்லாத அவர்களுக்கு தேனை போன்று சுவைக்கும் மன்னா சலிப்பு தந்தது. மனதிற்கு வெறுப்பாக இருந்தது.

நீதிமொழிகளின் புத்தகம் 27:7-வது வசனம். ''திருப்தி அடைந்தவன் தேன் கூட்டையும் மிதிப்பான். பசி உள்ளவனுக்கோ கசப்பான பதார்த்தங்களும் தித்திப்பாய் இருக்கும்''.

அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களை கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள். (எண். 21:6)



கொள்ளிவாய் சர்ப்பங்கள்

மனிதரை பாய்ந்து கடிக்கும்
கொள்ளிவாய் சர்ப்பங்கள்

கொள்ளிவாய் சர்ப்பம் என்பது சிவப்பு நிறமான ஓர் சர்ப்பம். பாய்ந்து, பாய்ந்து கடிக்கும் சர்ப்பம். தீண்டிய இடம் தீ போன்று காந்த செய்யும் சர்ப்பம். முறுமுறுத்தவர்களை கடிக்கின்றது. அநேகர் மடிகின்றார்கள். அப்பொழுது ஜனங்கள் மனம் வருந்துகின்றார்கள். ஏன் இப்படி பேசி விட்டோம் என்று உள்ளம் உடைகின்றார்கள்.

அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய் பேசினதினால் பாவம் செய்தோம்; சர்ப்பங்கள் எங்களை விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ண வேண்டும் என்றார்கள், மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணினான். (எண். 21:7)

2-வது வசனத்தில் தாங்களாகவே ஜெபித்தார்கள். இடையில் அவர்களுக்கும் ஆண்டவருக்கும் ஏற்பட்ட இடைவெளியினால் பிறிதொருவரை இப்பொழுது ஜெபிக்க கேட்கின்றார்கள். மோசே மனம் உவந்து ஜெபிக்கின்றான். மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணினான். 106-வது சங்கீதம் 23-வது வசனம். ''ஆகையால் அவர்களை நாசம் பண்ணுவேன் என்றார். அப்பொழுது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே அவர்களை அவர் அழிக்காதபடிக்கு அவருடைய உக்கிரத்தை மாற்றும் பொருட்டு அவருக்கு முன்பாக திறப்பின் வாயிலே நின்றான்''.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய் சர்ப்பத்தின் உருவத்தை செய்து, அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வை, கடிக்க பட்டவன் எவனோ அவன் அதை நோக்கி பார்த்தால் பிழைப்பான் என்றார். (எண். 21:8)

மோசேயின் விண்ணப்பம் முடிந்தவுடன் ஓர் அற்புதம் இடம் பெறும், தாங்கள் கேட்டு கொண்டபடி சர்ப்பங்கள் அவர்களை விட்டு எடுக்கப்படும் என்று எதிர்பார்த்தார்கள். மோசே

விண்ணப்பம் செய்த உடன் கொள்ளிவாய் சர்ப்பங்களை கர்த்தர் அனுப்பும் காற்று வாரிக்கொண்டு சென்றுவிடும் என்று எதிர்பார்த்தார்கள். ஓர் அற்புதம் நடைபெறுவதற்கு பதிலாக கொள்ளிவாய் சர்ப்பங்கள் தொடர்ந்து கடித்து கொண்டே இருக்கின்றன. கொள்ளிவாய் சர்ப்பம் கடித்ததினால் உண்டாகி வரும் மரணத்தை தடுத்து நிறுத்த மரணம் என்பதை காட்டும் ஓர் சின்னம் வெண்கலத்தில் செதுக்கப்பட்டது.

வெண்கல சர்ப்பம்



கி.மு. 15ம் நூற்றாண்டை சேர்ந்த வெண்கல சர்ப்பங்கள்

அப்படியே மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வைத்தான், சர்ப்பம் ஒருவனை கடித்த போது, அவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கி பார்த்து பிழைப்பான். (எண். 21:9)

மிகவும் உயரமான ஒரு கம்பத்தில் செதுக்கப்பட்ட சின்னம் தூக்கி நிறுத்தப்பட்டது. ஜனங்கள் முகாம் இட்ட இடம் சுமார் 10 மைல் பரப்பளவு கொண்டது. கொள்ளிவாய் சர்ப்பத்தினால் தீண்டப்பட்ட எவரும் எங்கு இருந்தாலும் மிகவும் சுலபமாக நோக்கி பார்க்கும் வகையில் செதுக்கப்பட்ட சின்னம் மிகவும் உயரமாக நிறுத்த பட்டது. சர்ப்பம் கடித்தவுடன் அதனை நோக்கி பார்த்தவர்கள் பிழைத்து விட்டார்கள். கடிபட்ட வலியில் மனம் மடிந்து போகாமல் நோக்கி பார்த்து விட்டால் பிழைத்து கொள்ளுவேன் என்ற உள்ளான வாஞ்சையும், மெய்யான விசுவாசமும் கொண்ட அனைவரும் பிழைத்து கொண்டார்கள். அற்புதம் கண்டு சர்ப்பம் ஓடிவிடும் என்று நினைத்தார்கள். அப்படி அல்ல. அர்ப்பணம் செய்து விட்டால் சர்ப்பத்தை ஜெயித்து விடலாம் என்று கண்டு கொண்டார்கள்.

புதிய ஏற்பாட்டின் நாட்களில் கர்த்தராகிய இயேசு எண்ணாகம புத்தகத்தில் உள்ள இந்த வசனங்களை சுட்டி காட்டி பேசினார். கொள்ளிவாய் சர்ப்பம் தந்த மரணத்தை தவிர்த்து வாழ்வதற்கு, மரண கோலமாக உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பம் போன்று மரணத்தை மரணத்தால் ஜெயிக்க உலகத்திற்கு வந்த தமது நோக்கத்தை கர்த்தராகிய இயேசு இந்த வசனங்களை சுட்டி காட்டி எடுத்து கூறினார். பரிசுத்த யோவான் என்பவர் எழுதிய சுவிசேஷம் 12-வது அதிகாரம் 32-வது வசனத்தில் ''நான் பூமியில் இருந்து உயர்த்தப்பட்டு இருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்து கொள்ளுவேன்'' என்றார். பரிசுத்த யோவான் 3-வது அதிகாரம் 14,15 ஆகிய வசனங்களில் ''சர்ப்பமானது மோசேயினால்

வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷ குமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டு போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும்'' என்று பார்க்கிறோம்.

23.4 பாரான் வனாந்தரத்தில் இருந்து இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்

இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்பட்டு போய், ஓபோத்தில் பாளயம் இறங்கினார்கள். (எண். 21:10)



ஏதோமை சுற்றி கானான் நோக்கி கடந்து சென்ற இடங்கள்

வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இடத்தில் மிக அருகினில் நெருங்கி சேரும் பொழுது அதிகமான நெருக்கங்கள் அவர்களுக்கு எதிராக வருகின்றன. ஆயினும் முறுமுறுப்பு என்பது வரவே இல்லை. முற்றிலும் கீழ்படிந்தவராக முடிவு பரியந்தம் நிலைத்து நிற்கின்றவராக ஜனங்கள் காணப்படுகின்றார்கள். ஓபோத் என்ற இடத்தில் ஜனங்கள் தங்கினார்கள்.

ஓபோத்தில் இருந்து பிரயாணம் பண்ணி, சூரியோதயத்திற்கு நேராய் மோவாபுக்கு எதிரான வனாந்தரத்தில் உள்ள அபாரீமின் மேடுகளில் பாளயம் இறங்கினார்கள். அங்கே இருந்து பிரயாண பட்டு போய், சாரேத் பள்ளத்தாக்கிலே பாளயம் இறங்கினார்கள். (எண். 21:11-12)

அர்னோன் ஆறு

எண்ணாகம புத்தகம் 33:43-வது வசனத்திலும் இந்த குறிப்பு காணப்படுகின்றது. பின்னர் அபாரீமின் பகுதிகளுக்கு வந்தார்கள் என்று 11-வது வசனத்திலும் 44-வது வசனத்திலும் கூறப்பட்டு உள்ளது. பின்னர் சாரேத் என்ற பள்ளத்தாக்கின் பகுதிக்கு சென்றார்கள். இந்த இடங்கள் அனைத்திற்கும் அவர்கள் தாங்களாக செல்லவில்லை. கர்த்தரின் கட்டளையின்படி மட்டுமே அவர்கள் செய்தார்கள் என்பதை உபாகம புத்தகம் 2-வது அதிகாரம் 13-வது வசனத்தில் பார்க்கின்றோம். ''நீங்கள் எழுந்து சேரேத் ஆற்றை கடந்து போங்கள் என்று சொன்னார். அப்படியே சேரேத் ஆற்றை கடந்தோம்'' என்று வாசிக்கின்றோம்.

அங்கேயிருந்து பிரயாணப்பட்டு போய், எமோரியரின் எல்லையில் இருந்து வருகிறதும் வனாந்தரத்தில் ஓடுகிறதுமான அர்னோன் ஆற்றுக்கு இப்புறம் பாளயம் இறங்கினார்கள். அந்த அர்னோன் மோவாபுக்கும் எமோரியருக்கும் நடுவே இருக்கிற மோவாபின் எல்லை. அதினால் சூப்பாவிலுள்ள வாகேபும், அர்னோனின் ஆற்றுக்கால்களும், ஆர் என்னும் ஸ்தலத்துக்கு பாயும் நீரோடையும் மோவாபின் எல்லையை சார்ந்திருக்கிறது என்னும் வசனம் கர்த்தருடைய யுத்த புஸ்தகத்தில் எழுதி இருக்கிறது. (எண். 21:13-15)

பின்னதாக அந்த இடத்தில் இருந்து புறப்பட்டு அர்னோன் ஆற்றுக்கு இப்புறம் பாளயம் இறங்கினார்கள். கர்த்தர் கூறியபடியே அவ்விதம் செய்தார்கள். நீங்கள் எழுந்து பிரயாணம் பண்ணி அர்னோன் ஆற்றை கடந்து போங்கள் என்று கர்த்தர் அவர்களை பார்த்து கூறுவதை உபாகம புத்தகம் 2:24-வது வசனத்தில் நாம் காணலாம்.

கர்த்தருடைய யுத்த புஸ்தகம் என்ற ஒரு வாசகம் இங்கு இடம் பெறுகின்றது. ஜனங்களின் வாழ்க்கை பிரயாணத்தில் வந்த அனைத்து எதிர்ப்புகளையும் கர்த்தரின்

கானானியரின் ஒரு அரண்மனை

அபாரீமின் மேடுகள்



சாரேத் ஆறு



சாரேத் பள்ளத்தாக்கு

பொறுப்பில் அர்ப்பணித்த நேரங்களில் கர்த்தர் அற்புதம் செய்து அவர்களை வாழ வைத்தார். அதனை நினைவு கூர்ந்து எழுதப்பட்ட துதியின் பாடல்கள் அடங்கிய புத்தகம் கர்த்தருடைய யுத்த புத்தகம் என்று அழைக்க பட்டது. சத்துருவானவன் வெள்ளம் போல் வரும்பொழுது உள்ளம் உடைந்து விடாமல் கர்த்தருக்கு மட்டும் உண்மை உள்ளவர்களாக இருந்த நேரங்களில் கர்த்தர் அவர்களுக்கு பொறுப்பு எடுத்தார். எனவே நாங்கள் கர்த்தரை போற்றுகின்றோம் என்ற புத்தகம் கர்த்தருடைய யுத்த புத்தகம் ஆகும். இவ்விதமான விளக்கங்களை யாசேரின் புத்தகம் என்பதும் எடுத்து உரைக்கின்றது என்பதை யோசுவாவின் புத்தகம் 10-வது அதிகாரம் 13-வது வசனமும், சாமுவேல் தீர்க்கதரிசி எழுதிய இரண்டாவது புத்தகம் முதல் அதிகாரம் 18-வது வசனமும் கூறுகின்றன. கர்த்தரின் யுத்த புத்தகம் யாசேரின் புத்தகம் என்பவை துதியின் புத்தகங்கள் ஆகும். கர்த்தரை மட்டும் நம்பி வாழுகின்றவர்களை கிருபை சூழ்ந்து கொள்ளும் என்ற துதியின் புத்தகங்கள் ஆகும்.

அங்கேயிருந்து பேயேருக்கு போனார்கள்; ஜனங்களை கூடிவர செய், அவர்களுக்கு தண்ணீர் கொடுப்பேன் என்று கர்த்தர் மோசேக்கு சொன்ன ஊற்று இருக்கிற இடம் அதுதான். அப்பொழுது இஸ்ரவேலர் பாடின பாட்டாவது: ஊற்று தண்ணீரே, பொங்கிவா அதை குறித்து பாடுவோம் வாருங்கள். நியாயப்பிரமாணிக்கனின் ஏவுதலால் அதிபதிகள் கிணற்றை தோண்டினார்கள்; ஜனத்தில் மேன்மக்கள் தங்கள் தண்டாயுதங்களை கொண்டு தோண்டினார்கள் என்று பாடினார்கள். அந்த வனாந்தரத்தில் இருந்து மாத்தனாவுக்கும், மாத்தனாவிலிருந்து நகாலியேலுக்கும், நகாலியேலிலிருந்து பாமோத்துக்கும், பள்ளத்தாக்கிலுள்ள மோவாபின் வெளியில் இருக்கிற பாமோத்தில் இருந்து எஷிமோனை நோக்கும் பிஸ்காவின் உச்சிக்கும் போனார்கள். (எண். 21:16-20)

எண்ணாகம புத்தகம் 21:16-வது வசனத்தில் ஜனங்கள் பேயேர் என்ற இடம் வந்தார்கள் என்று பார்க்கின்றோம். பேயேர் என்றால் இளைப்பாறும் இடம் என்று பொருள்.

அவர்களுக்கு தண்ணீர் கொடுப்பேன் என்று கர்த்தர் மோசேக்கு சொன்ன ஊற்று இருக்கிற இடம் அதுதான். ஜனங்கள் கேட்காமல் கர்த்தரால் தண்ணீர் கொடுக்கப்படுகின்றது. கர்த்தரை விட்டு தூரமாக இருந்த நாட்களில் அவர்களின் தேவைகளை கர்த்தர் தாமாக வலிய வந்து சந்திக்க முடியவில்லை. ஆனால் தேவ சித்தத்திற்கு முற்றிலும் அர்ப்பணித்தவுடன் வாழ்வின் தேவைகள் கர்த்தரால் வலிய சந்திக்கப்படுகின்றன. ஜனங்களை கூடிவர செய். அவர்களுக்கு தண்ணீர் கொடுப்பேன் என்று கர்த்தர் வலிய வந்து மோசேயிடம் கூறுகின்றார்.



பேயோர், பாமோத், பிஸ்கா, எஷிமோன் வரைபடம்

முதலாவதாக தேவனையும், அவருடைய நீதியையும் தேடுகின்றவர்களுக்கு அனைத்தும் கூட்டி கொடுக்கப்படும் என்று காண்கின்றோம். ஜனங்கள் பாட்டு பாடுவதை பார்க்கின்றோம். அவரை பாடி அவரை கீர்த்தனம் பண்ணுங்கள். அவருடைய அதிசயங்களை எல்லாம் தியானித்து பேசுங்கள். யாத்திராகம புத்தகம் 15-வது அதிகாரத்தில் செங்கடல் தாண்டிய பின்னர் மீரியாமின் தலைமையில் பாட்டு பாடினார்கள்.

கர்த்தரை எக்காலத்திலும் துதிக்கும் ஜனங்களாக அவர்கள் மாறி விட்டார்கள். எண்ணாகம புத்தகம் 21:19-வது வசனத்தில் நகாலியேல் என்ற இடம் வருகின்றார்கள். நகாலியேல் என்றால் கர்த்தரின் நீரோடை என்று பொருள். பின்னர் பாமோத் என்ற இடம் சேருகின்றார்கள். அதன் பொருள் உயர்ந்த வாசஸ்தலம் என்பது ஆகும். 20-வது வசனம். பிஸ்காவின் உச்சிக்கும் போனார்கள் என்று முடிகின்றது. பிஸ்கா என்றால் தரிசன சிகரம் என்று பொருள்.

23.5 எமோரியரின் தேசத்தை கர்த்தர் இஸ்ரவேலருக்கு கொடுத்தார்

அப்பொழுது இஸ்ரவேலர் எமோரியரின் ராஜாவாகிய சீகோனிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி: உமது தேசத்தின் வழியாய் கடந்து போகும்படி உத்தரவு கொடுக்க வேண்டும்; நாங்கள் வயல்களிலும், திராட்சை தோட்டங்களிலும் போகாமலும், துரவுகளின் தண்ணீரை குடியாமலும், உமது எல்லையை கடந்து போகுமட்டும் ராஜபாதையில் நடந்து போவோம் என்று சொல்ல சொன்னார்கள். (எண். 21:21-22)

21-வது வசனம் முதல் 26-வது வசனங்களில் சீகோன் என்ற அரசன் அவர்களுக்கு எதிராக செல்லுவதை பார்க்கின்றோம்.

ஒவ்வொரு மக்களின் இடத்தையும் கடக்கையில் அவர்களிடம் நேர்மையான முறையில் உத்தரவு பெற்று கொண்டே கடந்து செல்ல கர்த்தரின் ஜனங்கள் விரும்பினார்கள். ராஜ பாதை என்பது எகிப்தில் இருந்து வரும் விசாலமான பாதை ஆகும்.

சீகோன் தன் எல்லை வழியாய் கடந்து போக இஸ்ரவேலுக்கு உத்தரவு கொடாமல், தன் ஜனங்கள் எல்லாரையும் கூட்டி கொண்டு, இஸ்ரவேலருக்கு விரோதமாக வனாந்தரத்திலே புறப்பட்டு, யாகாசுக்கு வந்து இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினான். இஸ்ரவேலர் அவனை பட்டய கருக்கினால் வெட்டி, அர்னோன் தொடங்கி அம்மோன் புத்திரரின் தேசத்தை சார்ந்த யாப்போக்கு வரைக்கும் உள்ள அவனுடைய தேசத்தை கட்டி கொண்டார்கள். அம்மோன் புத்திரரின் எல்லை அரணிப்பானதாய் இருந்தது. (எண். 21:23-24)

ஏதோமிய அரசன் முன்பு இடம் தரவில்லை. இப்பொழுது சீகோனின் அரசனும் இடம் தரவில்லை. சீகோனின் அரசன் சினம் கொண்டு வழி பிரயாணிகளை எதிர்த்து போராடுவதற்கு புறப்பட்டு வந்தான்.

இஸ்ரவேலர் அந்த பட்டணங்கள் யாவையும் பிடித்து, எஸ்போனிலும் அதை சார்ந்த எல்லா கிராமங்களிலும் எமோரியருடைய எல்லா பட்டணங்களிலும்

குடியிருந்தார்கள். எஸ்போனானது எமோரியரின் ராஜாவாகிய சீகோனின் பட்டணமாய் இருந்தது. அவன் மோவாபியரின் முந்தின ராஜாவுக்கு விரோதமாக யுத்தம் பண்ணி, அர்னோன் வரைக்கும் இருந்த அவன் தேசத்தை எல்லாம் அவன் கையிலிருந்து பறித்து கொண்டான். (எண். 21:25-26)



எஸ்போன் பட்டணத்து அழிவுமேடு

எஸ்போனின் வழியே செல்லும் இராஜபாதை

தங்களுக்கு எதிராக வரும் அனைத்து எதிர்ப்புகளையும் கர்த்தரின் பொறுப்பில் ஒப்படைக்கும் கிருபை பெற்ற ஜனங்கள் முறுமுறுக்கவே இல்லை. கர்த்தர் பொறுப்பு எடுத்தார். சீகோன் சீர் இழந்தான். சீகோன் என்றால் வாரி கொள்ளுகிறவன் என்று பொருள். 26-வது வசனத்தில் சீகோன் மோவாபியரின் இடங்களை வாரிக்கொண்டான் என்பதை நாம் பார்க்கின்றோம். இப்பொழுது கானான் நோக்கி கைக்கூப்பி செல்லும் மக்களை கைப்பற்ற வந்தான். பட்டய கருக்கினால் வெட்ட பட்டு வீழ்ந்தான்.

அதினாலே கவி கட்டுகிறவர்கள்: எஸ்போனுக்கு வாருங்கள் சீகோனின் பட்டணம் ஸ்திரமாய் கட்டப்படுவதாக. எஸ்போனிலிருந்து அக்கினியும் சீகோனுடைய பட்டணத்திலிருந்து ஜுவாலையும் புறப்பட்டு, மோவாபுடைய ஆர் என்னும் ஊரையும், அர்னோனுடைய மேடுகளிலுள்ள ஆண்டவமார்களையும் பட்சித்தது. ஐயோ, மோவாபே, கேமோஷ் தேவனின் ஜனமே, நீ நாசமானாய். தப்பி ஓடின தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்கு சிறைகளாக ஒப்பு கொடுத்தான். அவர்களை எய்து போட்டோம். எஸ்போன் பட்டணம் தீபோன் ஊர் வரைக்கும் நாசமாயிற்று. மேதேபாவுக்கு சமீபமான நோப்பா பட்டண பரியந்தம் அவர்களை பாழாக்கினோம் என்று பாடினார்கள். (எண். 21:27-30)

24-வது வசனத்தில் சீகோனின் எல்கை அர்னோன் என்ற இடத்தில் துவங்கியது என்று பார்க்கின்றோம். அர்னோன் என்பது சவக்கடலின் மத்திய பகுதியில் உள்ள ஒரு நதி ஆகும். வடக்காக யாப்போக்கு என்ற நதி வரை அவனின் இடம் விரிந்து கிடந்தது என்றும் நாம்

பார்க்கின்றோம். யாப்போக்கு நதி சவக்கடலில் இருந்து 24 மைல்கள் வடக்காக இருக்கின்றது. அந்த பூமி அனைத்தையும் சீகோன் இழந்து விட்டான். கர்த்தருடைய ஜனத்தின் உயிரையும், உடைமைகளையும் வாரி கொள்ள வந்தவனை கர்த்தர் வாரி கொண்டு சென்று விட்டார். அதனை கண்ணால் கண்ட அந்த ஜனங்கள் இன்னும் ஒரு துதியின் பாடலை பாட துவங்குகின்றார்கள். 27-30 வசனங்களில் அந்த பாடல் என்ன என்பது கொடுக்கப்பட்டு உள்ளது.

கர்த்தரின் அக்கினியும் கர்த்தரின் ஜுவாலையும் புறப்பட்டு வந்து சீகோனின் எல்கைகளை இல்லாமல் ஆக்கி விட்டது என்று 28-வது வசனம் கூறுகின்றது. எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 48:4-வது வசனத்தை பார்ப்போம். ''வல்லடிக்கு தப்ப ஓடி போகிறவர்கள் எஸ்போனின் நிழலில் தரித்து நின்றார்கள். ஆனாலும் நெருப்பு எஸ்போனிலும் அக்கினி ஜுவாலை சீகோன் நடுவிலும் இருந்து புறப்பட்டு மோவாப் தேசத்தின் எல்லைகளையும் கலகம் செய்கிறவர்களின் உச்சந்தலையையும் பட்சிக்கும்''.

இஸ்ரவேலர் இப்படியே எமோரியரின் தேசத்திலே குடியிருந்தார்கள். பின்பு, மோசே யாசேர் பட்டணத்துக்கு வேவு பார்க்கிறவர்களை அனுப்பினான் அவர்கள் அதை சேர்ந்த கிராமங்களை கட்டி கொண்டு, அங்கே இருந்த எமோரியரை துரத்தி விட்டார்கள். பின்பு பாசானுக்கு போகிற வழியாய் திரும்பி விட்டார்கள். (எண். 21:31, 32)

இவ்வளவு வருடங்களும் பல இடங்களில் பாளயம் இறங்கினார்கள். இங்கே முதல் முறையாக பட்டணங்களிலும் கிராமங்களிலும் குடியேறினார்கள்.

அப்பொழுது பாசானின் ராஜாவாகிய ஓக் என்பவன் தன் சமஸ்த ஜனங்களோடும் அவர்களை எதிர்த்து யுத்தம்பண்ணும்படிக்கு, எத்ரேயுக்கு புறப்பட்டு வந்தான். கர்த்தர் மோசேயை நோக்கி: அவனுக்கு பயப்பட வேண்டாம். அவனையும் அவன் ஜனங்கள் எல்லாரையும், அவன் தேசத்தையும் உன் கையில் ஒப்பு கொடுத்தேன். எஸ்போனிலே வாசமாயிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்கு நீ செய்தபடியே இவனுக்கும் செய்வாய் என்றார். அப்படியே ஒருவரும் உயிருடன் மீதியாய் இராதபடிக்கு அவனையும், அவன் குமாரரையும், அவனுடைய சகல ஜனங்களையும் வெட்டி போட்டு, அவன் தேசத்தை கட்டி கொண்டார்கள். (எண். 21:33-35)

33 முதல் 35 வசனங்களில் பாசான் என்ற இடத்து பக்கமாக வருகின்றார்கள். அந்த இடத்து அரசன் வழி பயணிகளுக்கு எதிராக புறப்பட்டு வருகின்றான். பாசான் என்ற பகுதி கலிலேயா கடற்கரையின் வடகிழக்கு பகுதியில் உள்ள இடம் ஆகும். எர்மோன் மலைக்கு சமீபமான இடம் ஆகும். கர்த்தர் மோசேயை நோக்கி எதிராக வரும் பாசான் அரசனுக்கு பயப்படவே வேண்டாம் என்று கூறுவதை 34-வது வசனத்தில் பார்க்கின்றோம்.

கர்த்தர் பொறுப்பு எடுக்கின்றார். ஜனங்கள் வெற்றி கண்டார்கள். 135-வது சங்கீதம் 11-வது வசனத்திலும், 136-வது சங்கீதம் 19, 20 ஆகிய வசனங்களிலும் சீகோன், பாசான்



திபோன் பட்டண அழிவுகள்

பாசான் அரசன் ஓக் என்ற ராட்சதன்



எமோரியரின் தேசமும், பாசானின் தேசமும்

மன்னர்களின் முடிவு எப்படி இருந்தது என்று கூறப்பட்டு உள்ளது. ஜனங்கள் கர்த்தரை மட்டும் முன் வைத்து வாழும் ஜனங்களாக மாறி விட்டார்கள். எனவே அவர்களுக்கு முன்னாக வந்த தடைகள் எதுவும் தடுமாற்றம் தரவில்லை.

மீகா தீர்க்கதரிசியின் புத்தகம் 2-வது அதிகாரம் 13-வது வசனம்: ''தடைகளை நீக்கி போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். அவர்கள் தடைகளை நீக்கி வாசலால் உட்பிரவேசித்து கடந்து போவார்கள். அவர்கள் இராஜா அவர்களுக்கு முன்பாக போவார். கர்த்தர் அவர்கள் முன் அணியில் நடந்து போவார்.''

அத்தியாயம் - 24

மோவாப் சமவெளியில் இராஜாவின் எதிர்ப்பும் பிலேயாமின் ஆசீர்வாதமும்

24.1 மோவாபின் சமவெளியில் பாளயமும் பாலாக்கின் எதிர்ப்பும்

பின்பு இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணி, எரிகோவின் கிட்ட இருக்கும் யோர்தானுக்கு இக்கரையிலே மோவாபின் சமனான வெளிகளில் பாளயம் இறங்கினார்கள். (எண். 22:1)

எண்ணாகம புத்தகம் 33:48-வது வசனம். ''அபாரீம் மலைகளில் இருந்து புறப்பட்டு போய் எரிகோவின் அருகே யோர்தானை சார்ந்த மோவாபின் சமனான வெளிகளிலே பாளயம் இறங்கினார்கள்'' என்று கூறுகின்றது. யோர்தானுக்கு கிழக்காக, எரிகோவிற்கு எதிரே பாளயம் இறங்கினார்கள். இப்பொழுது இஸ்ரவேல் ஜனங்களுக்கும் வாக்குதத்த பூமிக்கும் இடையில் இருப்பது யோர்தான் நதி மட்டுமே ஆகும். இது கானானின் தென்பகுதி போல் மலைப்பாங்கான இடம் இல்லை. கானானின் எரிகோ பட்டணம் அவர்களுக்கு அருகே இருக்கும் முதல் பட்டணம். எத்தனை நாட்கள் அந்த சமவெளிகளில் அவர்கள் தங்கினார்கள் என்பது கூறப்படவில்லை. ஆனால் யோசுவாவின் தலைமையில் யோர்தானை கடந்து செல்லும் நாள் வரைக்கும் அதே இடத்தில் தங்கி இருந்தார்கள் என்று பார்க்கிறோம்.

இஸ்ரவேலர் எமோரியருக்கு செய்த யாவையும் சிப்போரின் குமாரனாகிய பாலாக் கண்டான். ஜனங்கள் ஏராளமாய் இருந்தபடியினால், மோவாப் மிகவும் பயந்து, இஸ்ரவேல் புத்திரரின் நிமித்தம் கலக்கம் அடைந்து, (எண். 22:2,3)

மோவாபிய அரசனுக்கு அந்த வழிப்போக்கர்கள் எந்த விதமான துன்பமும் கொடுக்க போவதே இல்லை. மோவாபிய அரசனுக்கு வந்த அச்சம் அவசியம் இல்லாத அச்சம் ஆகும். மோவாப் என்ற அரசனுக்கு எவ்வித கெடுதலும் செய்வதற்கு கர்த்தர் அனுமதி வழங்கவில்லை. உபாகம புத்தகம் 2:9-வது வசனத்தில் இந்த குறிப்பு கூறப்பட்டு உள்ளது. அதனை பாருங்கள். ''அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி நீ மோவாபை வருத்தப்படுத்தாமலும் அவர்களோடே போர் செய்யாமலும் இரு. அவர்கள் தேசத்தில் உனக்கு ஒன்றும் சுதந்தரமாக கொடேன். ஆர் என்னும் பட்டணத்தின் சீமையை லோத் புத்திரருக்கு சுதந்தரமாக கொடுத்தேன்'' என்று வாசிக்கின்றோம்.

லோத்தின் வம்சத்தில் வந்த மோவாப் என்ற சமவெளியின் அரசனுக்கு எவ்வித தீங்கும் செய்யாமல் இலக்கை நோக்கி சென்று கொண்டு இருக்கும் ஜனங்களை கண்டு அவன் உள்ளம் அலசடி படுகின்றது. உள்பயம் உறங்க விடுவது இல்லை. கானான் நோக்கி சென்று கொண்டு இருக்கும் ஜனங்களை பாலாக் என்ற அந்த அரசன் கண்டான் என்று இரண்டாவது வசனம் கூறுகின்றது. கண்டவன் அவர்களை ஆபிரகாமின் சந்ததி என்று காணவில்லை. கர்த்தரால் வழி நடத்தப்பட்டு வரும் விசுவாச கூட்டம் என்று காணவில்லை. ஆபிரகாம் குடும்பத்தாரான அவர்கள் லோத்துவின் குடும்பத்திற்கு எவ்வித தீங்கும் செய்ய மாட்டார்கள் என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லை. அமைதலாக சென்று கொண்டு இருக்கும்

மக்களை அழிக்க முன் வந்தவர்கள் முன்னர் கர்த்தரால் தடுத்து நிறுத்தப்பட்டார்கள் என்பதை அறிந்தும் அவன் ஏற்ற பாடத்தை இன்னும் கற்று கொள்ளவில்லை. அவனுடைய இதய பயம் 4-வது வசனத்தில் கூறப்படுகின்றது. தன்னுடைய பயத்தை மீதியான் என்ற மக்களின் மூப்பர்களை அழைத்து கூறுகின்றான்.

மீதியானியரின் மூப்பரை நோக்கி: மாடு வெளியின் புல்லை மேய்கிறது போல, இப்பொழுது இந்த கூட்டம் நம்மை சுற்றி இருக்கிற யாவையும் மேய்ந்து போடும் என்றான். அக்காலத்திலே சிப்போரின் குமாரனாகிய பாலாக் மோவாபியருக்கு ராஜாவாய் இருந்தான். (எண். 22:4)

மாடு புல்லை மேய்ந்து விடுவது போன்று இந்த ஜனக்கூட்டம் நம்மை மேய்ந்து விடுவார்கள் என்று அவர்களை பார்த்து கூறுகின்றான். அவன் எமோரியரின் இராஜாவாகிய சீகோனுக்கும் பாசானின் இராஜாவாகிய ஓக்கிற்கும் நடந்ததை கேள்வி பட்டிருந்த படியால் பயந்தான். எமோரியரின் பட்டணங்களை எல்லாம் அவர்கள் கட்டி கொண்டதையும் அறிந்திருந்தான். ஆகவே ''நம்மை மேய்ந்து விடுவார்கள்'' என்று கூறுகின்றான். ஆகவே மோவாபின் இராஜாவாகிய பாலாக் நேரடியாக அவர்களை சந்திக்க முடியா விட்டாலும் சூழ்ச்சி செய்து வென்று விடுவதற்கு முடிவு செய்தான்.

24.2 இஸ்ரவேல் மக்களை சபிக்க பிலேயாமுக்கு அழைப்பு

அவன் பேயோரின் குமாரனாகிய பிலேயாமை அழைத்து வரும்படி, தன் சந்ததியாருடைய தேசத்தில் நதி அருகே உள்ள பெத்தூருக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: எகிப்திலிருந்து ஒரு ஜனக்கூட்டம் வந்திருக்கிறது; அவர்கள் பூமியின் விசாலத்தை மூடி, எனக்கு எதிரே இறங்கி இருக்கிறார்கள். அவர்கள் என்னிலும் பலவான்கள் ஆகிலும், நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்க பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்க பட்டவன் என்று அறிவேன். ஆதலால், நீர் வந்து, எனக்காக அந்த ஜனத்தை சபிக்க வேண்டும்; அப்பொழுது ஒருவேளை நான் அவர்களை முறிய அடித்து, அவர்களை இத்தேசத்தில் இருந்து துரத்தி விடலாம் என்று சொல்ல சொன்னான். (எண். 22:5,6)

பயம் என்பது பாலாக் என்ற அந்த அரசனுக்கு பதட்டம் தருகின்றது. நேர்வழி பிரியம் இல்லை. பக்க வழிகளை தேடுகின்றான். பேயோரின் குமாரனாகிய பிலேயாம் என்றவன் பாலாக் என்ற அரசனின் நினைவிற்கு வருகின்றான்.

மிகவும் தூரத்தில் வசிக்கும் பிலேயாம் என்றவன் மீது அவனுடைய கவனம் செல்லுகின்றது. பிலேயாமுடைய தொழில் குறி சொல்லும் தொழில் என்பது ஆகும். ஆபிரகாம் வாழ்ந்து வந்த பூமியான மெசப்பத்தோமியாவில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றான். பிலேயாமின் ஊர் பெத்தூர் என்று 5-வது வசனம் கூறுகின்றது. இதற்கேல் (யூப்ரடீஸ்) நதிக்கு அருகில் உள்ள பெத்தூருக்கு ஆட்கள் அனுப்ப படுகின்றார்கள். பெத்தூர் என்றால் சொப்பனங்களுக்கு விளக்கம் தருகின்றவர்கள் வாழும் ஊர் என்று பொருள். மோவாபியரின் அரசனான பாலாக் சுமார் 400 மைல்களுக்கு அப்பால் வாழும் பிலேயாம் என்ற குறி சொல்லும் மனிதனுக்கு செய்தி அனுப்புகின்றான். உடன் புறப்பட்டு வருக என்று செய்தி அனுப்புகின்றான்.



இதற்கேல் (யூப்ரடீஸ்) நதி அருகே உள்ள பெத்தூர்

5,6 ஆகிய வசனங்களில் அவன் அனுப்பிய செய்தி என்ன என்பது கொடுக்கப்பட்டு உள்ளது. எகிப்தில் இருந்து ஒரு ஜனக்கூட்டம் வந்து இருக்கிறது என்று கடிதத்தை துவங்குகின்றான். அந்த ஜனக்கூட்டம் ஆபிரகாமின் ஜனக்கூட்டம் என்பது தெரியவில்லை. கர்த்தருடைய சித்தத்தின்படி வழிநடத்தப்பட்டு வந்து கொண்டு இருக்கும் ஒரு ஜனக்கூட்டம் என்பதை அறிந்து கொள்ளவில்லை. அவர்கள் எனக்கு எதிரே இறங்கி இருக்கின்றார்கள் என்று கூறுகின்றான்.

மோவாப் யோர்தான் நதிக்கு கிழக்கு பக்கத்தில் இருக்கின்றது. அவர்களோ யோர்தான் நதிக்கு மேற்கு பக்கமாக செல்ல வேண்டியவர்கள். அவனுக்கு எதிராக அல்ல, யோர்தான் நதிக்கு எதிராக தங்கி இருக்கின்றார்கள். அவர்கள் என்னிலும் பலவான்கள் என்று கூறுகின்றான். அது அவர்களுடைய சுயபலன் இல்லை என்பதை தெரிந்து கொள்ளவில்லை. பரிசுத்தம் என்பதை அவர்கள் காத்து கொள்ளும்வரை கர்த்தரால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட உன்னத பெலன் அது என்பதையும் அறிந்து கொள்ளவில்லை. அவன் அறிந்தது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்க பட்டவன். நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று அறிவேன் என்று பிலேயாமை ஏற்றி போற்றுகின்றான்.

பிலேயாம் ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்க பட்டவர்கள் அல்ல. ஆசீர்வாதம் என்பது குறிகாரன் இடத்தில் இருந்து வருவது இல்லை. நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்பவரிடம் இருந்து மட்டுமே ஆசீர்வாதம் என்பது வர முடியும் என்பதை பாலாக் கண்டு கொள்ளவில்லை. நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன். எனவே நீர் புறப்பட்டு வாரும் என்று

சுமார் 400 மைல்கள் தூரத்தில் வாழும் பிலேயாம் என்றவனுக்கு ஆட்களை அவசரம் அவசரமாக அனுப்பி வைக்கின்றான். எவ்வித தீங்கும் அவனுக்கு ஜனங்கள் செய்யவில்லை. ஆனால் காரணம் எதுவும் இல்லாமல் சபிப்பதற்கு பாலாக் தீர்மானம் செய்கின்றான். நீதிமொழிகளின் புத்தகம் 26:2-வது வசனத்தை பார்ப்போம். ''அடைக்கலான் குருவி அலைந்து போவது போலும் தகைவிலான் குருவி பறந்து போவது போலும் காரணம் இல்லாமல் இட்ட சாபம் தங்காது.'' மற்றவர்களுக்கு சாபம் கூறுகின்றவர்களுக்கு எவ்வித லாபமும் வரப்போவது இல்லை என்று 109-வது சங்கீதம் 17-வது வசனம் கூறுகின்றது. ''சாபத்தை விரும்பினான். அது அவனுக்கு வரும். அவன் ஆசீர்வாதத்தை விரும்பாமல் போனான்; அது அவனுக்கு தூரமாய் விலகி போம்.'' பாலாக் என்ற அரசன் மற்றவர்களை சபிக்கும்படி பிலேயாம் என்ற ஒரு குறிகாரனை வரவழைக்க இருக்கின்றான். அவ்விதம் அவன் செய்வதினால் அவன் சபிக்கப்பட இருக்கின்றான் என்பதை அவன் அறியவில்லை. பிலேயாம் சபித்து விட்டால் தான் ஜெயித்து விடலாம் என்பதே அவனுடைய இதய விருப்பம். தனக்கு இருக்கும் வலிமையைவிட தூரத்தில் இருக்கும் மந்திரவாதியின் திறமையே துணை என்ற நிலைக்கு வந்து விட்டான். சாபம் என்பது பிறர் இட்டு வருவது இல்லை. நடத்தை கெட்டு வருவது ஆகும். பாலாக் இதை புரிந்து கொள்ளவில்லை. மீட்கப்பட்ட ஜனங்கள் மாம்ச பெலவீனத்தில் விழுந்து விட்டால் பிலேயாம் எதுவும் கூறாமல் சாபம் என்பது அவர்களை தேடி வந்து விடும். பாவம் செய்கிற ஆத்துமா சாகும் என்று வேதம் கூறுகின்றது. கர்த்தருடைய பாதையில் செல்லுகின்றவர்களுக்கு சாபமும் ஆசீர்வாதமும் அவர்கள் நடந்து கொள்ளும் முறையில் அடங்கி இருக்கின்றது. தங்களது ஆவி ஆத்துமா சரீரம் அனைத்தையும் குற்றம் அற்றதாக அவர்கள் காத்து கொண்டால், பிலேயாம் சபித்தாலும் சாபம் லாபமாக மாறி விடும். பாலாக் கோபித்தாலும் ஆசீர்வாதம் வழிந்து ஓடும். பரிசுத்த பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபம் 6:7-வது வசனம். ''மோசம் போகாதிருங்கள். தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.'' லோத்துவின் வம்சத்தில் வந்த பாலாக் என்ற அரசன் ஆபிரகாமின் வம்சத்தில் வந்த ஜனங்களை தவறாக நினைத்து விட்டான்.

> *அப்படியே மோவாபின் மூப்பரும் மீதியானின் மூப்பரும் குறி சொல்லுதலுக்குரிய கூலியை தங்கள் கையில் எடுத்து கொண்டு புறப்பட்டு, பிலேயாமிடத்தில் போய், பாலாகின் வார்த்தைகளை அவனுக்கு சொன்னார்கள். (எண். 22:7)*

மோவாப், மீதியான் என்ற மக்களின் பெரியவர்கள் பிலேயாமின் ஊர் நோக்கி புறப்படுகின்றார்கள். பிலேயாமிற்கு கொடுக்க வேண்டிய கூலியை கையில் எடுத்து செல்லுகின்றார்கள். பிலேயாம், கர்த்தர், தேவன் என்ற வார்த்தைகளை பயன்படுத்த இருக்கின்றான். ஆயினும் அவன் செய்து வந்தது தீர்க்கதரிசன ஊழியம் அல்ல. குறி சொல்லும் தொழிலை செய்து வந்தான் என்பதை அவர்கள் அவனுக்கு கொடுப்பதற்கு கூலி எடுத்து சென்றார்கள் என்பதில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். 18-வது வசனத்தில் இருந்து அவர்கள் எடுத்து சென்ற கூலியில் வெள்ளியும் பொன்னும் அடங்கி இருந்தன என்று பார்க்கின்றோம். உபாகம புத்தகம் 23-வது அதிகாரம் 4-வது வசனம். ''நீங்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டு வருகிற வழியில் அவர்கள் அப்பத்தோடும், தண்ணீரோடும் உங்களுக்கு எதிர்கொண்டு வராததின் நிமித்தமும் உன்னை சபிக்கும்படியாய் மெசப்பத்தோமியா ஊராகிய பேத்தோரில் இருந்த பேயோரின் குமாரன் பிலேயாமுக்கு கூலி பேசி அவனை அழைத்து அனுப்பினதின் நிமித்தமும் இப்படி செய்ய வேண்டும்.''

பிலேயாம் கூலிக்காக செய்த வஞ்சகம் என்று யூதா நிருபம் 11-வது வசனம் கூறுகின்றது. பாலாக் அனுப்பினவர்கள் நீண்ட பிரயாணம் செய்து பிலேயாமின் இடம் சேர்ந்தார்கள். நீண்ட பிரயாணம் எடுத்து தன்னிடம் வந்தவர்களிடம் வருகிறேன் என்று பிலேயாம் கூறவில்லை. கர்த்தர் குறுக்கிடுவதை 8 முதல் 12 வசனங்களில் காண்கின்றோம்.

அவன் அவர்களை நோக்கி: இராத்திரிக்கு இங்கே தங்கி இருங்கள்; கர்த்தர் எனக்கு சொல்லுகிறபடியே உங்களுக்கு உத்தரவு கொடுப்பேன் என்றான். அப்படியே மோவாபின் பிரபுக்கள் பிலேயாமிடத்தில் தங்கினார்கள். தேவன் பிலேயாமிடத்தில் வந்து: உன்னிடத்தில் இருக்கிற இந்த மனிதர் யார் என்றார். (எண். 22:8-9)

கர்த்தரின் மகத்துவமான கிரியைகளை பிலேயாம் அறியாதவன் அல்ல. செங்கடலை கர்த்தர் இரண்டாக ஒதுக்கி கொடுத்த கிருபையை பிலேயாம் கேள்வி படாதவன் அல்ல. ஆயினும் கர்த்தரின் சித்தப்படி செய்வதற்கு தன்னை முற்றிலுமாக ஒப்பு கொடுத்தவனாக அவன் மாறவே இல்லை. கர்த்தரை பற்றி அவனுக்கு அறிவு இருந்தது. ஆனால் அனுபவம் இல்லை. சர்வ வல்லமை உள்ள கர்த்தருக்கு விரோதமாக தான் ஏதும் செய்து விட்டால் தானே சபிக்க பட்டவனாக மாறி விடும் நிலை வந்து விடும் என்பதை அறிந்தவன் அவன். கர்த்தரிடம் கேட்டு கூறுகிறேன் என்று கூறுகின்றான்.

தீர்க்கதரிசன ஊழியம் செய்கின்றவன் அன்பின் மிகுதியினால் கர்த்தரிடம் கேட்பான். குறி சொல்லும் தொழிலை கொண்டவன் அச்சத்தின் மிகுதியினால் கர்த்தரிடம் கேட்க விரும்புகின்றான்.

பிலேயாம் தேவனை நோக்கி: சிப்போரின் குமாரனாகிய பாலாக் என்னும் மோவாபின் ராஜா அவர்களை என்னிடத்துக்கு அனுப்பி: பூமியின் விசாலத்தை மூடுகிற ஒரு ஜனக்கூட்டம் எகிப்திலிருந்து வந்திருக்கிறது. ஆகையால், நீ வந்து எனக்காக அவர்களை சபிக்க வேண்டும். அப்பொழுது நான் அவர்களோடே யுத்தம் பண்ணி, ஒருவேளை அவர்களை துரத்தி விடலாம் என்று சொல்ல சொன்னான் என்றான். (எண். 22:10-11)

9 முதல் 12 வசனங்களில் தேவனுக்கும் பிலேயாமிற்கும் நடுவில் இடம் பெறும் முதல் உரையாடல் இடம் பெறுகின்றது. உண்மை அனைத்தையும் அறிந்த ஆண்டவர் பிலேயாமினிடத்தில் கேள்விக்கு மேல் கேள்வி கேட்கின்றார். ஆயினும் பிலேயாமினிடத்தில் இருந்து வந்த பதிலில் உண்மை முழுமையாக இல்லை. பாதி உண்மை கூறும் பதில்களே பிலேயாம் கூறினான்.

அதற்கு தேவன் பிலேயாமை நோக்கி: நீ அவர்களோடே போக வேண்டாம்; அந்த ஜனங்களை சபிக்கவும் வேண்டாம்; அவர்கள் ஆசீர்வதிக்க பட்டவர்கள் என்றார். (எண். 22:12)

மூன்று முடிவான பதில்களை கர்த்தர் கூறிவிட்டார். பாலாக் அனுப்பிய மனிதருடன் பிலேயாம் புறப்பட வேண்டாம். அந்த ஜனங்களை சபிக்கவும் வேண்டாம். பிரித்து எடுக்கப்பட்ட ஜனங்கள் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்கள் என்றார்.

பிலேயாம் காலமே எழுந்து, பாலாகின் பிரபுக்களை நோக்கி: நீங்கள் உங்கள் தேசத்துக்கு போய் விடுங்கள். நான் உங்களோடே கூட

வருகிறதற்கு கர்த்தர் எனக்கு உத்தரவு கொடுக்க மாட்டோம் என்கிறார் என்று சொன்னான். (எண். 22:13)

நீங்கள் திரும்பி சென்று விடுங்கள். உங்களுடன் வருவதற்கு கர்த்தர் உத்தரவு தரவில்லை என்று பிலேயாம் பாதி உண்மை கூறினான். ஏன் கர்த்தர் உத்தரவு தரவில்லை என்ற முழு விபரத்தையும் கூறவில்லை. பாலாக் சபிக்க வேண்டும் என்ற ஜனங்களை தன்னால் சபிக்க முடியாது என்று கூறவில்லை. பிலேயாம் சபித்தாலும் ஜனங்கள் மேலும் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்களாகவே இருப்பார்கள் என்று கூறவில்லை. அவர்கள் சபித்தாலும் நீர் ஆசீர்வதியும் என்று 109-வது சங்கீதம் 28-வது வசனத்தின் முன் பகுதி கூறுகின்றது. கர்த்தர் கூறியதை முற்றிலுமாக கூறி ஓர் முற்றுப்புள்ளி வைக்க பிலேயாம் முன் வரவில்லை. அவர்கள் எடுத்து வந்த கூலி அவனை பாதி உண்மை மட்டுமே கூற செய்து விட்டது.

அப்படியே மோவாபியருடைய பிரபுக்கள் எழுந்து, பாலாகினிடத்தில் போய்: பிலேயாம் எங்களோடே வர மாட்டேன் என்று சொன்னான் என்றார்கள். பாலாக் மறுபடியும் அவர்களிலும் கனவான்களான அதிக பிரபுக்களை அனுப்பினான். அவர்கள் பிலேயாமிடத்தில் போய், அவனை நோக்கி: சிப்போரின் குமாரனாகிய பாலாக் எங்களை அனுப்பி: நீர் என்னிடத்தில் வருகிறதற்கு தடை பட வேண்டாம். உம்மை மிகவும் கனம் பண்ணுவேன். நீர் சொல்வதையெல்லாம் செய்வேன் நீர் வந்து எனக்காக அந்த ஜனங்களை சபிக்க வேண்டும் என்று சொல்ல சொன்னார் என்றார்கள். (எண். 22:14-17)

பாலாக் என்ற அரசனின் பயம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்லுகின்றது. பிலேயாம் வரவில்லை என்ற செய்தி வருத்தம் தந்து விட்டது. முன்பு சென்றவர்களை விட அதிக கனவான்களை அனுப்பி வைத்தான். உம்மை மிகவும் கனம் பண்ணுவேன் என்று கூறுகின்றான். மற்றவர் சபிக்கப்பட வேண்டும் என்ற விருப்பம் கொண்ட பாலாக் கனம் அடையப் போவது இல்லை. அவனால் பிலேயாம் என்றவனும் கனம் பெற போவதும் இல்லை. கர்த்தரை கனம் பண்ணுகிறவர்கள் மட்டுமே கனம் பண்ணப்படுவார்கள் என்பதை 1 சாமுவேலின் புத்தகம் 2:30-வது வசனம் எடுத்து கூறுகின்றது. நீர் சொல்லுவதை எல்லாம் செய்வேன் என்று அரசன் குறி சொல்லுகிறவனிடம் அடி பணிகின்றான். கர்த்தர் சொல்லுகிற படி செய்வோம் என்று கானான் செல்லும் விசுவாச கூட்டத்தை, பிலேயாம் சொல்லுகிறபடி செய்து பாலாக் எதுவும் செய்ய முடியாது என்பதை அறியவில்லை. அதனை பிலேயாம் விளங்கி விட்டான். ஆனால் பாலாக் புரிந்து கொள்ளவில்லை. நீர் சொல்லுகிறபடி எல்லாம் செய்வேன் என்று வாக்கு கொடுக்கின்றான். ஆபிரகாம் கர்த்தர் சொல்லுகிறபடி செய்தது போன்று லோத்துவின் வழி வந்த பாலாக் கர்த்தர் சொல்லுகிறபடி செய்வேன் என்று கூறுவதற்கு முன் வரவில்லை. குறி சொல்லும் பிலேயாம் சொல்லுகின்றபடி செய்வேன் என்று கூறி விட்டான். கர்த்தர் அவன் தெய்வமாகவில்லை. பிலேயாம் பாலாக்கின் தெய்வமாக மாறி விட்டான். அதனால் பாலாக் பாக்கியம் அடைய போவதும் இல்லை. ''கர்த்தரை தெய்வமாக கொண்டு இருக்கிற ஜனம் பாக்கியம் உள்ளது'' என்று 144-வது சங்கீதம் 15-வது வசனத்தின் பின்பகுதி கூறுகின்றது. பாலாக் அனுப்பிய இரண்டாவது தூது குழு பிலேயாமினிடம் புதிய ஓர் அழைப்பை கொடுத்தது.

பிலேயாம் பாலாகின் ஊழியக்காரருக்கு பிரதியுத்தரமாக: பாலாக் எனக்கு தன் வீடு நிறைய வெள்ளியும் பொன்னும் தந்தாலும், சிறிய காரியமானாலும்

பெரிய காரியமானாலும் செய்யும் பொருட்டு, என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீற கூடாது. ஆகிலும், கர்த்தர் இனிமேல் எனக்கு என்ன சொல்லுவார் என்பதை நான் அறியும் படிக்கு, நீங்களும் இந்த இராத்திரி இங்கே தங்கி இருங்கள் என்றான். (எண். 22:18-19)

என் தேவனாகிய கர்த்தர் என்று பிலேயாம் கூறுகின்றான். கர்த்தரின் கட்டளையை நான் மீறவே முடியாது என்றும் கூறுகின்றான். ஆனால் திரும்பி போய் விடுங்கள் என்று கூறவில்லை. தொடர்ந்து தங்கி இருங்கள், இன்னும் ஒரு முறை கர்த்தரிடம் கேட்டு பார்க்கிறேன் என்று கூறுகின்றான். பாலாக் கொடுக்கும் பரிசை இழக்கவும் இதயம் இல்லை. கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை முற்றிலுமாக தத்தம் செய்யவும் மனம் இல்லை. பிலேயாமின் உள்ளம் ஊசலாடுகின்றது. ''இரு மனம் உள்ளவன் தன் வழிகளில் எல்லாம் நிலையற்றவனாய் இருக்கிறான்'' என்று பரிசுத்த யாக்கோபு என்பார் எழுதின நிருபம் முதல் அதிகாரம் 8-வது வசனம் கூறுகின்றது.

இரவிலே தேவன் பிலேயாமிடத்தில் வந்து: அந்த மனிதர் உன்னை கூப்பிட வந்திருந்தால், நீ எழுந்து அவர்களோடே கூட போ. ஆனாலும், நான் உனக்கு சொல்லும் வார்த்தையின்படி மாத்திரம் நீ செய்ய வேண்டும் என்றார். (எண். 22:20)

பாலாக் என்ற அரசனின் அழைப்பை முதற்கண் மறுத்த பிலேயாம் அழைப்பு மறுமுறையும் வந்தவுடன் மன உறுதி இழந்து விட்டான். 18-வது வசனத்தில் என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீற கூடாது என்று கூறினான். ஆயினும் அவனுடைய இருதயம் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கவில்லை. 12-வது வசனத்தில் அவர்களுடன் போக வேண்டாம் என்று கர்த்தர் கூறினார். 20-வது வசனத்தில் அவனுடன் போ, என்று கர்த்தர் கூறுகின்றார். அவர்களோடே போ, ஆனாலும் நான் உனக்கு சொல்லும் வார்த்தைகளின்படி மாத்திரம் நீ செய்ய வேண்டும் என்று கர்த்தர் கூறுவதை நாம் காண்கின்றோம். போக வேண்டாம் என்று சொன்ன கர்த்தரை அவன் சற்றும் மதிக்க முடியாதவனாக மாறிவிட்டபடியினால் கர்த்தர் உனது விருப்பப்படி நீ போய் விடலாம் என்று கூறி விட்டார்.

கர்த்தரின் சித்தத்தை விட்டு ஓட போகும் மனிதனை கர்த்தர் வற்புறுத்துவது இல்லை. அவனது விருப்பத்திற்கு விட்டு விட்டார். ஆயினும் கர்த்தர் கூறியதை தவிர்த்து எதுவும் கர்த்தருடைய பிள்ளைகளை பார்த்து உரைக்க அனுமதி இல்லை என்று கூறி விட்டார். பாலாக் அளிக்கும் பரிசும் பாசமும் பிலேயாமை காந்தம் போல் இழுக்கின்றது. அவர்கள் தங்கள் இச்சையை வெறுக்கவில்லை என்று சங்கீதம் 78:30 கூறுகிறது. சங்கீதம் 81:12-வது வசனம், ''ஆகையால் அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டு விட்டேன். தங்கள் யோசனைகளின்படியே நடந்தார்கள்'' என்கிறது. பிலேயாமை அவனது மன கடினத்திற்கு கர்த்தர் விட்டு விட்டார். ஆயினும் தம்மை விசுவாசிக்கும் ஜனத்திற்கு அவன் வாய் எவ்வித சாபமும் கூற முடியாது என்பதையும் தெளிவாக்கி விட்டார். பாலாக் என்பவனுக்கு ஆலோசனைக்காரனாக பிலேயாம் அழைக்கப்பட்டான். பிலேயாம் அழைக்கப்பட்டு சென்றான். ஆனால் அனுப்பப்பட்டு செல்லவில்லை. அவனது ஆலோசனை கர்த்தரின் ஆலோசனைகளை மேற் கொள்ளும் சக்தி பெற்றது இல்லை. அடிமைத்தனத்தில் இருந்து வெளியேற்றி, கானான் செல்லும் பாதையில் காப்பாற்றி, இறுதியில் யோர்தானை கடக்க செய்து, கானானை காண செய்வது கர்த்தருடைய

ஆலோசனை. சங்கீதம்33:11-வது வசனத்தில், ''கர்த்தருடைய ஆலோசனை நித்திய காலமாகவும் அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்'' என்று பார்க்கிறோம்.

பிலேயாம் காலமே எழுந்து, தன் கழுதையின் மேல் சேணம் கட்டி, மோவாபின் பிரபுக்களோடே கூட போனான். (எண். 22:21)

கர்த்தர் விருப்பம் தெரிவிக்கவில்லை. தன் மன விருப்பப்படி செல்லும் பிலேயாமிற்கு கர்த்தரின் குரல் வரப்போவதும் இல்லை. ''என் மகனே நீ அவர்களோடே வழி நடவாமல் உன் காலை அவர்கள் பாதைக்கு விலக்குவாயாக'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 1:15-வது வசனம் கூறுகின்றது. பிலேயாமின் கால் பாதை தவறியது. அவன் தங்கி இருக்கும் இடம் மெசபத்தோமியா என்ற பூமி ஆகும். அவன் செல்ல வேண்டிய தூரம் சுமார் 400 மைல்கள் ஆகும். நம்பிக்கைக்கு உரிய ஒரு கழுதையை பிலேயாம் தெரிந்து எடுத்தான். அதன் மீது சேணம் கட்டினான். பிரபுக்களுடன் புறப்பட்டான். ஆரவாரத்துடன் பிரயாணம் துவங்கியது. ஆனால் அவனுடைய அடி உள்ளத்தில் அமைதி என்பது இல்லை. காரணம் அவனில் உண்மை என்பது இல்லை. கர்த்தர் கூறிய மூன்று குறிப்புகளை மறுமுறையும் தேடி வந்த அந்த தூதுவர்களிடம் அவன் எடுத்து கூறவில்லை. சிறிய காரியமானாலும், பெரிய காரியமானாலும் கர்த்தர் சொல்லுகிறபடி மட்டுமே செய்வேன் என்று 18-வது வசனத்தில் கூறியவன் கர்த்தர் 12-வது வசனத்தில் கூறிய மூன்று குறிப்புகளையும் அழைக்க வந்தவர்களிடம் எடுத்து கூறவில்லை. (எண். 22:22-23)

அவன் போகிறதினாலே தேவனுக்கு கோபம் மூண்டது. கர்த்தருடைய தூதனானவர் வழியிலே அவனுக்கு எதிராளியாக நின்றார். அவன் தன் கழுதையின் மேல் ஏறி போனான். அவன் வேலைக்காரர் இரண்டு பேரும் அவனோடே இருந்தார்கள். (எண். 22:22)

பிறரை கெடுக்க வேண்டும் என்று முடிவு எடுத்தவர்களுடன் போக வேண்டாம் என்று கர்த்தர் கூறினார். தூய்மை என்ற பாதைக்கு பாதம் பதிக்கின்றவர்களை சபிக்க வேண்டாம் என்று கர்த்தர் கூறினார். கர்த்தரை பின்பற்றுகின்றவர்கள் வாழ்க்கையில் சந்திப்பது ஆசீர்வாதங்கள், சாபங்கள் அல்ல என்று கர்த்தர் கூறினார். மூன்று முக்கிய விபரங்கள் பிலேயாமினிடம் கூறப்பட்டன. ஆனால் பிலேயாம் அவைகளை அழைக்க வந்தவர்களிடம் எடுத்து கூறவில்லை. புறப்பட்டு செல்லுகின்றான். உடன் செல்லும் பிரபுக்கள் பிலேயாம் அவர்களுடைய மன விருப்பத்திற்கு மனம் சம்மதித்து விட்டான் என்ற முடிவிற்குள் வந்து விட்டார்கள். மேலும் தனியாக செல்லாமல் தன்னுடன் மேலும் அவன் வேலைக்காரர் இரண்டு பேரை அவனோடே கூட்டி செல்கிறான்.

மோசேயை எதிர்க்க, கர்த்தரின் ஜனங்களுக்கு எதிராக சாபமிட, தன்னுடன் மற்றும் இருவரை சேர்த்து கொண்டான். வேலைக்காரர் என்பதின் சரியான பொருள் குறி சொல்லும் தொழிலில் தனக்கு உதவி செய்கின்றவர்கள் என்பது ஆகும். பிலேயாம் போக வேண்டாம் என்று கர்த்தர் கூறினார். பிலேயாம் மற்றும் இரண்டு பேரை சேர்த்துக் கொண்டு புறப்பட்டு விட்டான். புதிய ஏற்பாட்டு நூலில் பரிசுத்த பவுல் தீமோத்தேயு என்பாருக்கு எழுதின 2-வது நிருபம் 3-வது அதிகாரம் 8-வது வசனத்தில் யந்நேயு, யம்பிரே என்ற இரண்டு பெயர்கள் வருகின்றன. அன்று பிலெயாமுடன் புறப்பட்டு சென்ற அடுத்த இரண்டு நபர்களின் பெயர்கள் யந்நேயு, யம்பிரே என்று கருதப்படுகின்றது. 2 தீமோத்தேயு 3-வது அதிகாரம்

8-வது வசனத்தின் முன் பகுதியில் ''யந்நேயும், யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றது போல இவர்களும் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள்'' என்று வாசிக்கின்றோம். மோசேயை எதிர்த்து நிற்க பிலேயாமும் அவனுடன் அவனுடைய இரண்டு வேலைக்காரர்களும் புறப்பட்டார்கள். அவன் போகிறதினாலே தேவனுக்கு கோபம் மூண்டது. கர்த்தருடைய தூதனானவர் வழியிலே அவனுக்கு எதிராளியாக நின்றார்.

ஏன் கர்த்தர் பிலேயாமிற்கு எதிராளியாக வந்து விட்டார்? கர்த்தர் கூறிய மூன்று குறிப்புகளையும் அழைக்க வந்தவர்களை பார்த்து பிலேயாம் திட்டவட்டமாக கூறவில்லை. பிலேயாமின் உள்ளம் உண்மை உள்ளமாக இருக்கவில்லை. மேலும் 2 நபர்களை சேர்த்து கொண்டு பாலாக் என்பவனை பிரியப்படுத்துவதற்கு புறப்பட்டு சென்றான். தன்னால் வர முடியாது என்று கூறக்கூடிய அவன், மனம் கடினப்பட்டு விட்டதினால் மேலும் இருவரை கூட்டி சென்றான். கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமிற்கு எதிராக வந்தார். முட்செடியில் அன்று ஒரு நாள் மோசேயை அழைத்த கர்த்தருடைய தூதனானவர், மோசேக்கு எதிராக வரும் பிலேயாமிற்கு எதிராளியாக வந்து விட்டார். எரேமியாவின் புலம்பல் புத்தகம் 2:4-வது வசனத்தின் முன் பகுதியை பார்ப்போம். ''பகைஞனை போல் தம்முடைய வில்லை நாணேற்றினார். சத்துருவை போல் தம்முடைய வலது கரத்தை நீட்டி நின்று கண்ணுக்கு இன்பமானதை எல்லாம் அழித்து போட்டார்''. சிறுமை பட்டவர்களின் துணை கர்த்தர் என்பதை தெரிவிக்க கர்த்தருடைய தூதன் பிலேயாமிற்கு முன்னாக வந்து நின்றார். தூய்மையின் பாதையில் செல்லுகின்றவர்கள் அழிய வேண்டும் என்று விரும்பும் பிலேயாம், பாலாக் என்பவர்கள் அழிக்க படுவார்கள் என்பதை கூறுவதற்கு கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமிற்கு முன்பாக வந்து நின்றார். யோபுவின் புத்தகம் 36:16,17 ஆகிய வசனங்களில் ''அப்படியே அவர் உம்மையும் நெருக்கத்தின் நின்று விலக்கி, ஒடுக்கம் இல்லாத விசாலத்திலே வைப்பார். உம்முடைய போஜன பந்தி கொழுமையான பதார்த்தங்களால் நிறைந்து இருக்கும். ஆகாதவன் மேல் வரும் நியாயத்தீர்ப்பு நிறைவேற பார்ப்பீர். நியாயமும் நீதியும் உம்மை ஆதரிக்கும்'' என்று பார்க்கிறோம்.

பிலேயாமை வழிமறிக்கும் கர்த்தரின் தூதனானவர்

அப்போஸ்தலனாகிய யூதா எழுதின பொதுவான நிருபம் 24, 25 ஆகிய வசனங்களில் ''வழுவாதபடி உங்களை காக்கவும் தமது மகிமை உள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமை உள்ளவரும் தாம் ஒருவரே ஞானம் உள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்கு கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக ஆமென்''.

கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தை தம்முடைய கையிலே பிடித்து கொண்டு வழியிலே நிற்கிறதை கழுதை கண்டு, வழியை விட்டு

வயலிலே விலகி போயிற்று. கழுதையை வழியில் திருப்ப பிலேயாம் அதை அடித்தான். (எண். 22:23)

கானான் நோக்கி சென்று கொண்டு இருக்கும் ஜனங்களை வழி மறிப்பதற்காக சென்று கொண்டு இருக்கும் பிலேயாமை கர்த்தருடைய தூதனானவர் வழி மறிக்கின்றார். உருவின பட்டயத்துடன் அவன் சென்று கொண்டு இருக்கும் கழுதையின் முன் கர்த்தருடைய தூதனானவர் வந்து நிற்கின்றார். கர்த்தருடைய தூதனை பார்க்க கழுதையின் கண்கள் திறக்க பட்டன. பிலேயாமின் கண்கள் திறக்க படவில்லை. கண்கள் திறக்க படாமல் கர்த்தரின் மகிமையை காண்பதும் இல்லை. 2 இராஜாக்களின் புத்தகம் 6:17-வது வசனம் பார்ப்போம். ''அப்பொழுது எலிசா விண்ணப்பம் பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும் படி இவன் கண்களை திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களை திறந்தார்; இதோ, எலிசாவை சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்''.

கர்த்தருடைய தூதனானவர் இருபுறத்திலும் சுவர் வைத்திருந்த திராட்சை தோட்டங்களின் பாதையிலே போய் நின்றார். கழுதை கர்த்தருடைய தூதனை கண்டு, சுவர் ஓரமாய் ஒதுங்கி, பிலேயாமின் காலை சுவரோடே நெருக்கிற்று. திரும்பவும் அதை அடித்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அப்புறம் போய், வலதுபுறம் இடதுபுறம் விலக வழியில்லாத இடுக்கமான இடத்திலே நின்றார். (எண். 22:24-26)

பிலேயாமின் நீண்ட பிரயாணம் கோபத்தில் துவங்குகின்றது. அவனை சுமந்து செல்லும் கழுதையை திரும்பவும், திரும்பவும் அடிக்கின்றான். இதயம் அமைதி இழக்கும் பொழுது பொறுமை இழக்க படுகின்றது. கோபம் பொங்கி வருகின்றது. பாலாக் என்ற அரசன் பிலேயாமிற்கு கொடுத்த அழைப்பினில் அவனை மிகவும் உயர்த்தி பேசினான். நீர் சொல்லுகிறபடி செய்வேன் என்று கூறினான். பிலேயாம் பெரும் ஞானியாக பாலாக் கண்களுக்கு தெரிந்தான். ஆனாலும் ஞானியின் கண்களுக்கு கர்த்தருடைய தூதன் உருவிய பட்டயத்துடன் நிற்பது தெரிய வரவில்லை. ஞானியை வெட்கப்படுத்தும்படி இழிவானதாக கருதப்படும் கழுதையின் கண்கள் கர்த்தருடைய தூதனை அடையாளம் கண்டு கொண்டது. பரிசுத்த பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் 1: 27-வது வசனம் என்ன உரைக்கின்றது? ''ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளை தெரிந்து கொண்டார். பலம் உள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பெலவீனமானவைகளை தெரிந்து கொண்டார்.'' பிலேயாமின் தந்திரமும் ஆலோசனையும் கர்த்தரால் அவமாக்கப்படும் என்ற எச்சரிப்பு இப்பொழுது கொடுக்க படுகின்றது. கழுதை முன் செல்லவில்லை. யோபுவின் புத்தகம் 5:12,13 ஆகிய வசனங்களில் ''தந்திரக்காரரின் கைகள் காரியத்தை முடிய நடத்த கூடாதபடிக்கு அவர்களுடைய உபாயங்களை அவர் அபத்தமாக்குகிறார். அவர்கள் ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறார். திரியாவரக்காரரின் ஆலோசனை கவிழ்க்கப்படும்'' என்று அறிகின்றோம்.

கழுதை கர்த்தருடைய தூதனை கண்டு, பிலேயாமின் கீழ் படுத்து கொண்டது. பிலேயாம் கோபம் மூண்டவனாகி, கழுதையை தடியினால் அடித்தான். (எண். 22:27)

சுமார் 400 மைல் தூரம் அவனை சுமந்து செல்ல வேண்டிய கழுதையை இரக்கம் எதுவும் இல்லாமல் அடிக்கின்றான். ''நீதிமான் தன் மிருக ஜீவனை காப்பாற்றுகிறான். துன்மார்க்கருடைய இரக்கமும் கொடுமையே,'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 12:10-வது வசனம் கூறுகின்றது. சாபம் கூறுவதற்கு புறப்பட்டு செல்லும் பிலேயாமின் வாய் திறக்க படவில்லை. கழுதையின் வாய் திறக்க பட்டது.

உடனே கர்த்தர் கழுதையின் வாயை திறந்தார். அது பிலேயாமை பார்த்து, நீர் என்னை இப்பொழுது மூன்று தரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன் என்றது. (எண். 22:28)

கர்த்தர் கழுதையின் வாயை திறந்தார் என்று வசனம் கூறுகின்றது. சற்றும் எதிர்பாராத நிகழ்ச்சி அது. எதிர் பார்க்க முடியாத ஒரு நிகழ்ச்சியும் அது. கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்ட வாய் கர்த்தருக்காக திறக்க படுகின்றது. மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா என்று யாத்திராகம புத்தகம் 4:11-வது வசனம் கூறுகின்றது. ''ஆண்டவரே என் உதடுகளை திறந்தருளும். அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்'' என்று சங்கீதம்51:15-வது வசனம் கூறுகின்றது. உள்ளம் திறக்கப்படும் பொழுது இதயம் விசுவாசிக்கின்றது. உதடு திறக்கப்படும் பொழுது வாய் அறிக்கை செய்கின்றது. கர்த்தரை அறிக்கை செய்வதற்கு பிலேயாமின் வாய் தயங்கிய பொழுது பேசாத ஒரு மிருகத்தின் வாய் திறக்க பட்டது. துதிக்க வேண்டியவர்கள் துதிக்க மறுத்தால், பேச வேண்டியவர் பேச தயங்கினால் கர்த்தரின் புகழை கூறுவதற்கு கல்லுகள் பேச துவங்கி விடும் என்று பரிசுத்த லூக்கா என்பவர் எழுதிய சுவிசேஷம் 19:40-வது வசனத்தில் கர்த்தராகிய இயேசு கூறினார். ''அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இவர்கள் பேசாமல் இருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்.''

அப்பொழுது பிலேயாம் கழுதையை பார்த்து: நீ என்னை பரியாசம் பண்ணி கொண்டு வருகிறாய்; என் கையில் ஒரு பட்டயம் மாத்திரம் இருந்தால், இப்பொழுதே உன்னை கொன்று போடுவேன் என்றான். (எண். 22:29)

ஆதியாம புத்தகம் 3-வது அதிகாரத்தில் சர்ப்பம் ஏவாளை பார்த்து பேசியது. எண்ணாகம புத்தகம் 22-வது அதிகாரத்தில் கழுதை பிலேயாமை பார்த்து பேசுகின்றது. சர்ப்பம் வஞ்சித்தது. கழுதை கண்டித்தது. நீர் மூன்று முறை என்னை அடித்தீர் என்று வாங்கிய அடிகளை வரிசை படுத்தி கூறுகின்றது. உம்மிடம் அடிவாங்கும் அளவிற்கு நான் செய்த தவறு என்ன என்று கேட்டது.

பிலேயாமின் கையில் பட்டயம் இல்லை. அவன் முன்னதாக நிற்கும் கர்த்தருடைய தூதனானவர் கையில் பட்டயம் இருந்தது. கர்த்தருடைய வசனமாகிய பட்டயம் கர்த்தர் மீது விசுவாசம் உள்ளவர்கள் கைகளில் எப்பொழுதும் காணப்படும். எபிரெயர் நிருபம் 4-வது அதிகாரம் 12-வது வசனம், ''தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்க தக்கதாக உருவ குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகை அறுக்கிறதாயும் இருக்கிறது'' என்று கூறுகின்றது.

கழுதை பிலேயாமை நோக்கி: நீர் என்னை கைக்கொண்ட காலம் முதல் இந்நாள் வரைக்கும் நீர் ஏறின கழுதை நான் அல்லவா? இப்படி உமக்கு

எப்போதாகிலும் நான் செய்தது உண்டா என்றது. அதற்கு அவன்: இல்லை என்றான். (எண். 22:30)

பிலேயாம் முகம் குப்புற விழுந்து பணிந்தான்

கழுதை தனது கடந்த கால பணியை நினைவு படுத்துகின்றது. அடிப்பதற்கு அதிகாரம் இருந்தாலும் அர்த்தம் இல்லாமல் அடிக்கும் பொழுது, வலிய மனிதனை எளிய கழுதை தட்டி கேட்கின்றது. கர்த்தருடைய தூதனானவரை கண்டவுடன் கழுதை வழியை விட்டு வயலில் இறங்கியது என்று 23-வது வசனத்தில் காண்கின்றோம். வழியை விட்டு இறங்குவதற்கு என்ன காரணம் என்பதை வாய் திறந்து கூறுவதற்கு முன்னர் செயலில் செய்து காட்டுகின்றது. பிலேயாம் புரிந்து கொள்ளவில்லை. அடி தாங்க முடியாமல் வயலில் இறங்கிய கழுதை பாதைக்கு திரும்பி வருகின்றது. கர்த்தருடைய தூதனானவர் தொடர்ந்து முன்னாக நின்று கொண்டு இருந்ததால் கழுதை ஓரமாக செல்ல முயன்றது. பிலேயாமின் கால் சுவரில் உராய்ந்தது. பிலேயாம் அதன் காரணத்தை விளங்கி கொள்ளவில்லை. திரும்பவும், திரும்பவும் அடிகளே விழுந்தது. கழுதை கர்த்தருடைய தூதனானவரை மீறி சென்று விட்டால் பிலேயாம் உயிர் இழப்பான். எனவே 27-வது வசனத்தில் கழுதை படுத்து கொண்டது. பிலேயாம் பிழைத்து கொண்டான். மதி மங்கிய அவன் செயல்களை கழுதை உணர்த்துகின்றது.

மிகவும் மதி நிறைந்தவனாக பாலாக் என்ற மன்னனுக்கு பிலேயாம் காணப்பட்டான். ஆனால் கர்த்தரின் பார்வையில் மதி கேடனாக மதிக்க பட்டான். பரிசுத்த பேதுரு எழுதின 2-ம் நிருபம் 2:15,16 ஆகிய வசனங்கள், ''செம்மையான வழியை விட்டு தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியை பின்பற்றி போனவர்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பி, தன்னுடைய அக்கிரமத்தின் நிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான்; பேசாத மிருகம் மனுஷர் பேச்சை பேசி தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டை தடுத்தது'' என்று கூறுகின்றன.

அப்பொழுது கர்த்தர் பிலேயாமின் கண்களை திறந்தார். வழியிலே நின்று உருவின பட்டயத்தை தம்முடைய கையிலே பிடித்திருக்கிற கர்த்தருடைய தூதனை அவன் கண்டு, தலை குனிந்து முகங்குப்புற விழுந்து பணிந்தான். (எண். 22:31)

பிலேயாமின் கண்கள் திறக்கப்பட்டன. பட்டயத்துடன் நிற்கும் தூதனானவர் பிலேயாமின் கண்களுக்கு தெரிய வந்தார். 119-வது சங்கீதம் 18-வது வசனத்தில், ''உமது வேதத்தில் உள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களை திறந்தருளும்'' என்று பார்க்கிறோம்.

பிலேயாம் தலை குனிந்தான். தலை நிமிர்ந்து வந்தவன் தலை குனிந்து நிற்கின்றான். முதலாவது காரணம் பயம். 9-வது சங்கீதம் 20-வது வசனம், ''ஜாதிகள் தங்களை மனுஷர் என்று அறியும் படிக்கு அவர்களுக்கு பயம் உண்டாக்கும் கர்த்தாவே'' என்று கூறுகின்றது

இரண்டாவது காரணம் வெட்கம். 129-வது சங்கீதம் 5-வது வசனம், ''சீயோனை பகைக்கிற அனைவரும் வெட்கி பின்னிட்டு திரும்ப கடவர்கள்'' என்று கூறுகின்றது. ஆதியாகம புத்தகம் 3-வது அதிகாரத்தில் ஆதாம் ஏவாள் என்பவர்களின் கண்கள் திறக்கப்பட்டன. அப்பொழுது அவர்கள் கண்டது பயமும் வெட்கமுமே ஆகும். எண்ணாகம புத்தகம் 22-வது அதிகாரத்தில் பிலேயாமின் கண்கள் திறக்க பட்டன. அப்பொழுது அவன் கண்டது பயமும் வெட்கமுமே ஆகும். கர்த்தரின் சித்தத்திற்கு தன்னை முற்றிலுமாக தத்தம் செய்யாத பிலேயாமின் வாழ்வு காண போவது பயமும் வெட்கமுமே ஆகும்.

> *கர்த்தருடைய தூதனானவர் அவனை நோக்கி: நீ உன் கழுதையை இதனோடே மூன்று தரம் அடித்தது என்ன? உன் வழி எனக்கு மாறுபாடாய் இருக்கிறதினால், நான் உனக்கு எதிரியாக புறப்பட்டு வந்தேன். (எண். 22:32)*

கழுதையின் சார்பில் கர்த்தர் பேசுகின்றார். கர்த்தாவே, மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறீர் என்று 36-வது சங்கீதம் 6-வது வசனத்தின் பின்பகுதி கூறுகின்றது. ''கர்த்தர் எல்லார் மேலும் தயவு உள்ளவர். அவர் இரக்கங்கள் அவருடைய எல்லா கிரியைகளின் மேலும் உள்ளது'' என்று 145-வது சங்கீதம் 9-வது வசனம் கூறுகின்றது. அவர் மிருக ஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கை குஞ்சுகளுக்கும் ஆகாரம் கொடுக்கிறார் என்று 147-வது சங்கீதம் 9-வது வசனம் கூறுகின்றது.

பிலேயாமின் கை தவறு செய்தது. காரணம் எதுவும் இல்லாமல் கழுதையை அடித்தது. பிலேயாமின் கால் தவறு செய்தது. வேண்டாத பாதையில் கால் நடந்து செல்லுகின்றது. பிலேயாம் அச்சத்தினால் ஆண்டவருக்கு சரி என்று கூறுகின்றான். ஆசையினால் அரசனுக்கு சரி என்று கூறுகின்றான். இருவழிகளில் இதயம் பதிக்கின்றான். ''நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்கு பயப்படுகிறான். தன் வழிகளில் தாறுமாறானவனோ அவரை அலட்சியம் பண்ணுகிறான்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 14:2-வது வசனம் கூறுகின்றது.

> *கழுதை என்னை கண்டு, இந்த மூன்று தரம் எனக்கு விலகிற்று; எனக்கு விலகாமல் இருந்ததானால், இப்பொழுது நான் உன்னை கொன்று போட்டு, கழுதையை உயிரோடே வைப்பேன் என்றார். (எண். 22:33)*

கழுதை முன் செல்ல மறுத்ததால் பிலேயாமின் உயிர் பிழைத்து கொண்டது என்று கர்த்தர் கூறுகின்றார். மாறுபாடாக நடக்கும் பிலேயாமிற்கு ஏற்ற ஒரு பாடம் கற்பிக்க கர்த்தர் பேசுகின்றார். பாலாக்கை நோக்கி வேகமாக செல்லும் உனக்கு எதிராக ஒரு வேக தடையாக கர்த்தராகிய நான் வந்து நிற்கும் பொழுது ஏறி செல்லும் வாகனம் என்ன செய்யும் என்று கேட்கின்றார். 18-வது சங்கீதம் 26-வது வசனத்தில், ''புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடு உள்ளவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர்'' என்று பார்க்கிறோம்.

அப்பொழுது பிலேயாம் கர்த்தருடைய தூதனை நோக்கி: நான் பாவம் செய்தேன்; வழியிலே நீர் எனக்கு எதிராக நிற்கிறதை அறியாது இருந்தேன். இப்பொழுதும் உமது பார்வைக்கு இது தகாததாய் இருக்குமானால், நான் திரும்பி போய் விடுகிறேன் என்றான். (எண். 22:34)

பாவம் செய்தேன் என்று இழைத்த பிழையினால் இதயம் உடைந்தவன் போன்று பிலேயாம் பேசுகின்றான். உள்ளம் உடையாத பாவ அறிக்கை ஜெபம் அது ஆகும். பார்வோன் என்ற அரசன் முன்னர் பலமுறை இப்படி கூறினான். நான் இந்த முறை பாவம் செய்தேன் என்று யாத்திராகம புத்தகம் 9:27-வது வசனத்தில் பார்வோன் கூறினான். கூறிய பின்னரும் தொடர்ந்து பலமுறை பாவத்தை செய்து கொண்டே இருந்தான். இதயம் பாவத்தை வெறுக்காமல் உதடு மட்டும் கூறும் பாவ அறிக்கைகள் பலன் தரப்போவது இல்லை. கர்த்தரின் பார்வைக்கு பிலேயாம் செல்லும் பாதை பாவமாக தெரிந்தது. நீ போக வேண்டாம் என்று 12-வது வசனத்தில் ஏற்கெனவே கர்த்தர் கூறி விட்டார். பிலேயாம் கர்த்தரை பார்த்து உமது பார்வைக்கு நான் செல்லும் பாதை பாவமாக தெரிந்தால் ஊருக்கு உடனே திரும்பி சென்று விடுகிறேன் என்று கூறுகின்றான். கர்த்தர் கூறியதை மனதார ஏற்று கொள்ள மனம் இல்லாமல் போனதினால் திரும்பவும் திரும்பவும் அதே கேள்வியை கர்த்தரிடம் கேட்டு கொண்டே இருக்கின்றான். கர்த்தர் அவன் விருப்பத்திற்கு அவனை விட்டு விட்டார்.

கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமை நோக்கி: அந்த மனிதரோடே கூட போ. நான் உன்னோடே சொல்லும் வார்த்தையை மாத்திரம் நீ சொல்ல கடவாய் என்றார். அப்படியே பிலேயாம் பாலாகின் பிரபுக்களோடே கூட போனான். (எண். 22:35)

உன் விருப்பப்படி நீ போகலாம். ஆனால் நீ விரும்பியதை பேச முடியாது. உன் இஷ்டம் போல் நீ செல்லலாம். ஆனால் இஷ்டமானது இடம் பெறாது.

பிலேயாம் வருகிறதை பாலாக் கேட்ட மாத்திரத்தில், கடைசி எல்லையான அர்னோன் நதியின் ஓரத்திலுள்ள மோவாபின் பட்டணம் மட்டும் அவனுக்கு எதிர் கொண்டு போனான். (எண். 22:36)

அர்னோன் நதி

பாலாக்கின் பயந்த மனதிற்கு பிலேயாமின் வருகை தற்காலிக தைரியம் கொடுக்கின்றது. அவனை வரவேற்க அரசன் எதிர் கொண்டு செல்லுகின்றான். அர்னோன் நதி மோவாபின் எல்லை ஆகும். அருகே உள்ள பட்டணம் மட்டும் பாலாக் அவனை எதிர்கொண்டு செல்கிறான்.

பாலாக் பிலேயாமை நோக்கி: உம்மை அழைக்கும்படி நான் ஆவலோடே உம்மிடத்தில் ஆள் அனுப்பவில்லையா? என்னிடத்திற்கு வராமல் இருந்ததென்ன? ஏற்ற பிரகாரமாக உம்மை நான் கனம் பண்ண மாட்டேனா என்றான். (எண். 22:37)

பிலேயாம் மீது பாலாக் அரசனுக்கு பெரும் நம்பிக்கை வந்து விட்டது. பிலேயாமிற்கு அவன் வாசித்த வரவேற்பு மடல் பெரும் மதிப்புடன் காணப்படுகின்றது. பாலாக் வாசித்த வரவேற்பு மடலுக்கு பிலேயாம் அளித்த பதில் உரையை பார்ப்போம்.

அப்பொழுது பிலேயாம் பாலாகை நோக்கி: இதோ, உம்மிடத்திற்கு வந்தேன்; ஆனாலும், ஏதாகிலும் சொல்லுகிறதற்கு என்னாலே ஆகுமோ? தேவன் என் வாயிலே அளிக்கும் வார்த்தையையே சொல்லுவேன் என்றான். (எண். 22:38)

மறுபடியும் பிலேயாம் பாதி உண்மை மட்டுமே பேசுகின்றான். ஏதாகிலும் சொல்லுவதற்கு என்னால் ஆகுமோ என்று தரை மட்டும் தன்னை தாழ்த்தியவன் விண் எட்டி பார்க்கவில்லை. உள்ளதை உள்ளது என்றும், இல்லதை இல்லது என்றும் உரைக்கவில்லை. தேவன் என் வாயில் அறிக்கும் வார்த்தையையே சொல்லுவேன் என்று கூறினான். கர்த்தர் உரைத்ததை மட்டும் கூறுவேன் என்று கூறவில்லை. தேவன் என்று கூறினான். கர்த்தர் என்று கூறவில்லை. கர்த்தர் என்பது யாவே என்ற யெகோவாவாகிய தேவனை மட்டும் குறிக்கும் சிறப்பு பெயர் ஆகும். பாலாக் அரசனுடன் பேசும் பொழுது கர்த்தர் என்ற வார்த்தையை பிலேயாம் பயன் படுத்தவில்லை. தேவன் என்று பொதுவாக பேசினான். மேலும் நான் சொல்லும் வார்த்தையை மட்டுமே நீ சொல்ல வேண்டும் என்று 22:12-வது வசனத்தில் கர்த்தர் பிலேயாமினிடம் மூன்று குறிப்புகளை திட்டவட்டமாக கூறினார். அதில் ஒன்றை கூட பிலேயாம் எடுத்து கூறவில்லை. கர்த்தர் தமது ஜனங்களை சபிக்க எனக்கு உரிமை கொடுக்கவில்லை என்பதையும் ஆசீர்வதிக்க மட்டுமே கூறினார் என்பதையும் ஆரம்பத்தில் அவன் கூறவே இல்லை. மறைத்து விட்டான். பிலேயாம் வந்து விட்டான். ஜெயம் வந்து விட்டது என்று பாலாக் பரவச பட்டான்.

பிலேயாம் பாலாகுடனே கூட போனான். அவர்கள் கீரியாத் ஊசோத்தில் சேர்ந்தார்கள். அங்கே பாலாக் ஆடு மாடுகளை அடித்து, பிலேயாமுக்கும் அவனோடிருந்த பிரபுக்களுக்கும் அனுப்பினான். மறுநாள் காலமே பாலாக் பிலேயாமை கூட்டி கொண்டு, அவனை பாகாலுடைய மேடுகளில் ஏற பண்ணினான். அவ்விடத்தில் இருந்து பிலேயாம் ஜனத்தின் கடைசி பாளயத்தை பார்த்தான். (எண். 22:39-41)

பிலேயாமை தனது தலைநகரான கீரியாத் ஊசோத் என்ற இடத்திற்கு அழைத்து சென்றான். கீரியாத் ஊசோத் என்றால் வீதிகள் நிறைந்த பட்டணம் என்று பொருள். அங்கே பெரும் விருந்து ஒன்று பிலேயாமிற்கு காத்து கொண்டு இருந்தது. மறுநாள் காலையில் பாலாக் பிலேயாமை நோக்கி புறப்பட்டு சென்றான். செய்ய வேண்டிய வேலை என்ன என்று எடுத்து கூறினான். பிலேயாம் உடனடியாக இரண்டு வேலைகளை செய்ய வேண்டும். முதலாவது மோசே மற்றும் ஜனங்களை பிலேயாம் கண்ணால் காண வேண்டும், பின்னர் வாயால் சபிக்க வேண்டும் என்பதே பாலாக் பிலேயாமிற்கு கொடுத்த கட்டளை. அது கர்த்தர் கூறியதற்கு முற்றிலும் மாறுபட்ட கட்டளை. தமது ஜனங்களை பார்க்க வேண்டும், பின்னர்



கீரியாத் ஊசோத்

அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதே கர்த்தர் பிலேயாமிற்கு கொடுத்த கட்டளை.

வெற்றியின் எண்ணங்கள் பாலாக்கின் இதயத்தில் ஓடி கொண்டு இருக்கின்றன. சுமார் 400 மைல் வட கிழக்காக வாழ்ந்து கொண்டு வந்த பிலேயாம் வருகை தந்து விட்டான். பாலாக் மன்னனுக்கு ஜெயம் வந்து விடும் என்ற எண்ணம் வந்து விட்டது. கிழக்கிலும், மேற்கிலும், வனாந்தர திசையிலும் இருந்து ஜெயம் வராது என்று 75-வது சங்கீதம் 6-வது வசனம் கூறுகின்றது. ஒருவரை சபித்து பிறிதொருவர் வாழ்வது முடியாத ஒன்று என்று கர்த்தர் கூறி விட்டார். நீதிமொழிகளின் புத்தகம் 19:21-வது வசனம், ''மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம். ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலை நிற்கும்'' என்று கூறுகின்றது.

பாலாக் என்ற அரசனின் அழைப்பின் பேரில் பிலேயாம் என்ற ஒரு மனிதன் வந்து சேர்ந்தான். கர்த்தரின் கட்டளையின்படி கானான் என்ற பூமி சென்று கொண்டிருக்கும் மக்களை பிலேயாம் சபிக்க வேண்டும் என்று பாலாக்



கீரியாத் ஊசோத்

பாலாக் பலிபீடத்தின் முன்னால்

கேட்டு கொண்டான். பாலாக் என்ற அரசனின் விருப்பப்படி அல்ல, கர்த்தரின் திருசித்தபடி மட்டுமே நான் பேச முடியும் என்று பிலேயாம் கூறி விட்டான்.

எண்ணாகமம் 23, 24 ஆகிய இரண்டு அதிகாரங்களிலும் பிலேயாம் பேசிய பேச்சுக்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. பாடல் வடிவம் கொண்ட பிலேயாமின் உரைகளில் சாபம் எதுவும் இடம் பெற வில்லை. வாழ்த்துதல், ஆசீர்வதித்தல், வருங்காலத்தை பற்றி எடுத்து உரைத்தல் என்ற மூன்றும் பிலேயாமின் உரைகளில் இடம் பெற்று உள்ளது. 23, 24 ஆகிய அதிகாரங்களில் 7 உரைகளை பிலேயாம் ஆற்றுகின்றான்.

23-வது அதிகாரம் 1 முதல் 10 வசனங்களில் முதல் பாடல் இடம் பெறுகின்றது. முற்றிலும் ஆசீர்வாதமான வார்த்தைகளால் முதல் பாடல் இடம் பெறுகின்றது. தூய்மையின் பாதையில் நடக்கின்றவர்களுக்கு சாபங்கள் வருவது இல்லை. அவர்களுக்கு எதிராக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்ப்பதும் இல்லை.

24.3 கீரியாத் ஊசோத் மேடையில் இருந்து பிலேயாமின் முதல் ஆசீர்வாதம்

> *பிலேயாம் பாலாகை நோக்கி: நீர் இங்கே எனக்கு ஏழு பலிபீடங்களை கட்டி, ஏழு காளைகளையும் ஏழு ஆட்டு கடாக்களையும் ஆயத்த படுத்தும் என்றான். பிலேயாம் சொன்னபடியே பாலாக் செய்தான். பாலாகும் பிலேயாமும் ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டு கடாவையும் பலி இட்டார்கள். பின்பு பிலேயாம் பாலாகை நோக்கி: உம்முடைய சர்வாங்க தகனபலியண்டையில் நில்லும், நான் போய் வருகிறேன்; கர்த்தர் வந்து என்னை சந்திக்கிறதாய் இருக்கும்; அவர் எனக்கு வெளி படுத்துவதை உமக்கு அறிவிப்பேன் என்று சொல்லி, ஒரு மேட்டின் மேல் ஏறினான். (எண். 23:1-3)*

பிலேயாம் பாலாக் என்ற அரசனிடம் பலிபீடங்கள் பல அமைக்க கேட்கின்றான். ஒன்று அல்ல இரண்டு அல்ல, 7 பலிபீடங்களை கட்டும்படிக்கு பிலேயாம் பாலாக் என்ற அரசனுக்கு கட்டளை கொடுக்கின்றான். முட்செடியின் தரிசனம் பெறாத பிலேயாம் கர்த்தருடைய தரிசனம் பெறுவதற்கு பலிபீடம் கேட்கின்றான். ஆசரிப்பு கூடாரத்தில் அமைந்திருக்கும் பலிபீடத்தை தவிர்த்து வேறு இடங்களில் பலிபீடம் கட்டுவதற்கு கர்த்தர் எவ்வித கட்டளையும் கொடுக்கவில்லை என்பதை லேவியராகம புத்தகம் 17-வது அதிகாரத்தில் நாம் படித்தோம்.

பாளயத்திற்கு புறம்பாக பலிபீடங்கள் இல்லை என்பது தெளிவாயிற்று. எண்ணாகம புத்தகம் 23-வது அதிகாரத்தில் பாளத்திற்கு புறம்பாக பலிபீடங்கள் எழுப்ப படுகின்றன. கர்த்தரை அல்ல தங்களை தாங்களே திருப்தி செய்வதற்கு பலிபீடங்களை எழுப்புகின்றார்கள். பலிபீடம் கட்டுவதினால் கர்த்தர் அவர்களை நோக்கி பேச போவது இல்லை. பலிபீடம் கட்டாததினால் கர்த்தர் அவர்கள் எடுக்கும் முயற்சிகளை பார்த்து மௌனம் சாதிப்பதும் இல்லை. தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு எதிராக பிலேயாமின் வாய் எதுவும் கூற முடியாது என்பதில் கர்த்தர் மிகவும் கவனம் உள்ளவராக இருக்கின்றார். பாலாக் கட்டும் பலிபீடங்களில் கர்த்தர் பிரியமாக இருக்கவில்லை. ''துன்மார்க்கனுடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது. செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்கு பிரியம்'' என்று நீதிமொழிகளின் புத்தகம்

15:8-வது வசனம் கூறுகின்றது. நீர் சொல்லுகிறபடி நான் செய்வேன் என்று பாலாக் பிலேயாமிற்கு எழுதின கடிதத்தில் கூறி இருந்தான்.

தேவன் பிலேயாமை சந்தித்தார்; அப்பொழுது அவன் அவரை நோக்கி: நான் ஏழு பலிபீடங்களை ஆயத்தம் பண்ணி, ஒவ்வொரு பலிபீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டு கடாவையும் பலியிட்டேன் என்றான். (எண். 23:4)

இப்பொழுது பிலேயாம் சொல்லுவதை எல்லாம் பாலாக் செய்கின்றான். பிலேயாம் ஒரு சாதாரணமான மனிதன். பாலாக் ஒரு அரசன். சாதாரணமான மனிதன் சொற்படி அரசன் செய்கின்றான். அச்சம் என்பது அரசனை ஆளும் பொழுது ஒரு சாதாரணமான மனிதனால் அரசன் ஆளப்படுகின்றான். பாலாக் பலிபீடங்களை அமைக்கின்றான். பிலேயாம் பலிகளை செலுத்துகின்றான். அவர்கள் செலுத்தும் பலிகளுக்கும் கர்த்தருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. கர்த்தரின் சித்தம் அறிவதற்கு செலுத்தப்பட்ட பலிகள் அவை அல்ல. அவை பாலாக்கின் விருப்பம் நிறைவேறுவதற்கு வெட்டப்பட்ட மிருகங்கள் ஆகும். ''மனதின் யோசனைகள் மனிதனுடையது. நாவின் பிரதியுத்திரம் கர்த்தரால் வரும்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 16-வது அதிகாரம் முதல் வசனத்தில் வாசிக்கின்றோம். ஆனால் கர்த்தர் அவனை சந்திக்கும் போது தான் இட்ட பலிகளை பற்றி கூறுகின்றான்.

கர்த்தர் பிலேயாமின் வாயிலே வாக்கு அருளி: நீ பாலாகினிடத்தில் திரும்பி போய், இவ்விதமாய் சொல்ல கடவாய் என்றார். அவனிடத்துக்கு அவன் திரும்பி போனான்; பாலாக் மோவாபுடைய சகல பிரபுக்களோடும் கூட தன் சர்வாங்க தகனபலி அண்டையிலே நின்று கொண்டிருந்தான். (எண். 23:5-6)

5-வது வசனத்தில் பிலேயாமின் வாய் கூற வேண்டிய வாக்குகளை கர்த்தர் தீர்மானிக்கின்றார். வாய் பிலேயாமின் வாயாக இருந்தாலும் வார்த்தைகள் கர்த்தரால் தீர்மானிக்க படுகின்றன. கர்த்தருடைய சித்தத்தை மிஞ்சி பேசுவதற்கு புறப்பட்டு வந்த வாய் இப்பொழுது கட்ட படுகின்றது. கர்த்தரின் வார்த்தை தவிர பிறிதொன்றும் பேச முடியாதபடிக்கு பிலேயாமின் வாய் கட்ட படுகின்றது.

பலிபீடங்கள் என்பது ஜெபம், விண்ணப்பம், அர்ப்பணிப்பு என்பதற்கு அடையாளமானவைகள் ஆகும். ஜெபம், விண்ணப்பம், அர்ப்பணிப்பு என்பதற்காக கட்டப்பட்ட பலிபீடங்களாக பிலேயாம் பாலாக் என்பவர்கள் கட்டிய பலிபீடங்கள் காணப்படவில்லை. அவை மற்றவர்களுக்கு சாபம் போடுவதற்காக எழுப்பப்பட்ட பலிபீடங்கள். பிலேயாம் என்ற மனிதன் மீது தன் நம்பிக்கையை பதித்த பாலாக் சபிக்க பட்டவன் என்பதே வேத புத்தகத்தின் தீர்ப்பு. மனிதனை நம்பும் மன்னனாக பாலாக் மாறி விட்டான். எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 17:5-வது வசனம், ''மனுஷன் மேல் நம்பிக்கை வைத்து, மாம்சமானதை தன் புய பலமாக்கி கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயம் உள்ள மனுஷன் சபிக்க பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' என்று கூறுகின்றது. கர்த்தருடைய வார்த்தையை திட்டவட்டமாக கூறாமல், அசதியாய் செய்யும் பிலேயாமும் சபிக்க பட்டவன். எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 48:10-வது வசனத்தின் முன் பாகத்தில் ''கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்க பட்டவன்'' என்று படிக்கின்றோம்.

அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: மோவாவின் ராஜாவாகிய பாலாக் என்னை கிழக்கு மலைகளிலுள்ள ஆராமிலிருந்து வரவழைத்து: நீ வந்து எனக்காக யாக்கோபை சபிக்க வேண்டும்; நீ வந்து இஸ்ரவேலை வெறுத்துவிட வேண்டும் என்று சொன்னான். (எண். 23:7)

எண்ணாகம புத்தகம் 23-வது அதிகாரம் 7 முதல் 10 வசனங்களில் பிலேயாம் பாலாக்கை நோக்கி பாடும் முதல் பாடல் இடம் பெறுகின்றது. சுமார் 400 மைல் தொலைவில் உள்ள ஆராம் பகுதிக்கு ஆள் அனுப்பி வரவழைத்தாய். ஆபிரகாமின் சந்ததியை சபிக்க கூலி கொடுத்தாய். பரிசுத்தமான பாதையில் செல்லுகின்றவர்களை பகைத்தாய். நீ அவர்களை பகைத்தாலும் கர்த்தர் அவர்களை பகைக்கவில்லை. நீ அவர்களை வெறுத்தாலும் கர்த்தர் அவர்களை வெறுக்கவில்லை. சபி என்று நீ பொன் கொடுத்தாய். ஆசீர்வதி என்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார்.

தேவன் சபிக்காதவனை நான் சபிப்பது எப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பது எப்படி? (எண். 23:8)

கர்த்தருடைய பாதையில் சென்று கொண்டு இருக்கின்றவர்களை சபிக்க வலிமை மிக்க அரசனாலும் முடியவில்லை. திறமை மிக்க குறிகாரனாலும் முடியவில்லை. பரிசுத்தராகிய தேவனை பின்பற்றும் மக்களுக்கு தீங்கு செய்வதற்கு ஒருவருக்கும் வலிமையும் இல்லை. திறமையும் இல்லை.

கன்மலை உச்சியிலிருந்து நான் அவனை கண்டு, குன்றுகளிலிருந்து அவனை பார்க்கிறேன் அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாய் இருப்பார்கள். (எண். 23:9)

தூய்மையே வலிமை என்பது நிரூபிக்கபட்டு விட்டது. அந்த பரிசுத்தமான ஜனங்கள் பிறருடன் கலவாமல் தனியே வாசமாக இருக்கிறார்கள் என்று பிலேயாம் 9-வது வசனத்தில் பாடுகின்றான். ஒளி இருளுடன் கலந்து கொள்ளுவது இல்லை. பரிசுத்தம் அசுத்தத்துடன் இணைவதும் இல்லை. உண்மை பொய்யுடன் சம்பந்த படுவதும் இல்லை. பரிசுத்த ஜனங்கள் தனியாக இருந்தாலும் கர்த்தர் துணையாக இருக்கின்றார். கர்த்தரின் கோலும், கர்த்தரின் தடியும் அவர்களை தேற்றுகின்றது. ''கர்மேலின் நடுவிலே தனித்து வன வாசமாயிருக்கிற உமது சுதந்திரமான மந்தையாகிய உம்முடைய ஜனத்தை உம்முடைய கோலினால் மேய்த்து அருளும்'' என்று மீகா தீர்க்கதரிசியின் புத்தகம் 7:14-வது வசனத்தின் முன் பகுதி கூறுகின்றது. பாவங்களை விட்டு தள்ளி வாழும் தனிமை பயம் தருவது இல்லை. தைரியம் தருகின்றது. தவறான ஐக்கியங்களை தவிர்த்து வாழும் தனிமை சிறுமையில் முடிவது இல்லை. மகிமையில் முடிகின்றது. இஸ்ரவேல் சுகமாய் தனித்து வாசம் பண்ணுவான் என்று உபாகம புத்தகம் 33:28-வது வசனம் துவங்குகின்றது. ''துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான்'' என்று முதலாவது சங்கீதம் முதல் இரண்டு வசனங்கள் கூறுகின்றன.

யாக்கோபின் தூளை எண்ண தக்கவன் யார்? இஸ்ரவேலின் காற்பங்கை எண்ணுகிறவன் யார்? நீதிமான் மரிப்பது போல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவு போல் இருப்பதாக என்றான். (எண். 23:10)

ஆபிரகாமின் சந்ததியை யாரால் எண்ண முடியும் என்று பிலேயாம் பாடுகின்றான். தூள் போன்று அடர்த்தி நிறைந்தவர்களை துல்லிபமாக யாரால் அறிந்து கொள்ள முடியும் என்று கூறுகின்றான். அது கர்த்தர் அன்று ஒரு நாள் ஆபிரகாமிற்கு அளித்த வாக்குத்தத்தம் ஆகும். ஆதியாகம புத்தகம் 13:16-வது வசனம், ''உன் சந்ததியை பூமியின் தூளை போல பெருக பண்ணுவேன். ஒருவன் பூமியின் தூளை எண்ண கூடுமானால் உன் சந்ததியும் எண்ணப்படும்'' என்று கூறுகின்றது.

நீதிமான் மரிப்பது போல் நான் மரிப்பேனாக என்று பிலேயாம் கூறுகின்றான். நீதிமான்களை சபிக்க வந்தவன் நீதிமான்களை போன்று வாழவும் சாகவும் விரும்புகின்றான். உயர்ந்த விருப்பமும் தாழ்ந்த செய்கையும் உடைய பிலேயாம் நீதிமான் மரிப்பது போன்று மரிக்கவில்லை. அவனது வாழ்வின் முடிவு சோகத்தில் முடிந்தது. 116-வது சங்கீதம் 15-வது வசனம், ''கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது'' என்று கூறுகின்றது. நீதிமொழிகளின் புத்தகம் 14:32-வது வசனம், ''துன்மார்க்கன் தன் தீமையிலே வாரி கொள்ள படுவான். நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கை உள்ளவன்'' என்கிறது. 23-வது சங்கீதம் 5-வது வசனம், ''என் சத்துருக்களுக்கு முன்பாக எனக்கு நீர் ஒரு பந்தியை ஆயத்த படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர். என் பாத்திரம் நிரம்பி வழிகிறது'' என்று அறிவிக்கின்றது.

முதலாவது உரையில் பாலாக் பலன் எதுவும் அடையவில்லை. பிலேயாமிற்கு அமோக வரவேற்பு கொடுத்து அழைத்து வந்தவன் அசந்து போய் விட்டான்.

அப்பொழுது பாலாக் பிலேயாமை நோக்கி: நீர் எனக்கு என்ன செய்தீர்; என் சத்துருக்களை சபிக்கும்படி உம்மை அழைப்பித்தேன்; நீர் அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தீர் என்றான். (எண். 23:11)

நீர் சொல்லுகின்றபடி செய்வதற்கு நான் ஆயத்தம் என்று கூறினீர். ஆனால் நான் எதிர் பார்க்கின்றவைகளை செய்வதற்கு நீர் ஆயத்தமாக இல்லை என்று பாலாக் ஆச்சரிய படுகின்றான்.

பிரித்து எடுக்கப்பட்ட ஜனங்களை கண்ணால் கண்டு அவர்களுக்கு சாபம் இட வேண்டும் என்று உனக்கு வெள்ளியும் பொன்னும் கூலியாக நான் கொடுத்தேன். அதற்கு மாறாக நீர் அவர்களை பார்த்து ஆசீர்வாதம் கூறுகின்றாய். நீ எனக்கு என்ன செய்தாய் என்று பாலாக் பிலேயாம் மீது எரிச்சல் அடைகின்றான். அதற்கு பிலேயாம் கூறிய பதிலை கேளுங்கள்.

அதற்கு அவன் கர்த்தர் என் வாயில் அருளினதையே சொல்லுவது என் கடமை அல்லவா என்றான். (எண். 23:12)

22:38-வது வசனத்தில் இதனை பிலேயாம் ஏற்கெனவே தெரியப்படுத்தி விட்டான். பிலேயாம் சாபம் இடா விட்டால் தனக்கு ஆபத்து வந்து விடும் என்று பாலாக் நினைக்கின்றான். சாபம் இட்டு விட்டால் தனக்கு ஆபத்து நேரிடும் என்பதை கர்த்தருடைய தூதனானவர் மூலமாக பிலேயாம் கண்டு விட்டான். கர்த்தரை நடுவாக வைத்த ஒரு கூட்டாக அது அமையவில்லை. எனவே ஒருமனப்பாடு அவர்கள் நடுவில் வரவில்லை. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுதல் துவங்கி விட்டது. பாலாக் பிலேயாமை பிறிதொரு இடத்திற்கு எடுத்து செல்லுகின்றான்.

முதல் இடம் தனக்கு சாதகமாக இல்லை. அடுத்த இடம் பிலேயாம் ஜனங்களை சபிக்க ஏற்ற இடமாக அமைந்துவிடும் என்று நினைக்கின்றான். இடமாற்றம் செய்வதால் நினைத்தது நடந்துவிடும் என்று யோசிக்கின்றான்.

24.4 பிஸ்காவின் கொடுமுடியில் இருந்து பிலேயாமின் இரண்டாம் ஆசீர்வாதம்

பின்பு பாலாக் அவனை நோக்கி: நீர் அவர்களை பார்க்கத்தக்க வேறொரு இடத்திற்கு என்னோடே கூட வாரும்; அங்கே அவர்கள் எல்லாரையும் பாராமல், அவர்களுடைய கடைசி பாளயத்தை மாத்திரம் பார்ப்பீர்; அங்கே இருந்து எனக்காக அவர்களை சபிக்க வேண்டும் என்று சொல்லி, அவனை பிஸ்காவின் கொடு முடியில் இருக்கிற சோப்பீமின் வெளியிலே அழைத்து கொண்டு போய், ஏழு பலிபீடங்களை கட்டி, ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டு கடாவையும் பலியிட்டான். (எண். 23:13-14)

பிறிதொரு இடம் செல்லுகின்றோம். எனக்காக அவர்களை சபிக்க வேண்டும் என்று பாலாக் வேண்டுகின்றான். நான் உனக்கு கொடுத்து இருக்கும் கூலிக்கு நான் கேட்டு கொண்டதை நீ செய்தே தீர வேண்டும் என்று கூறுகின்றான். யோபுவின் புத்தகம் 4:8-வது வசனம், ''அநியாயத்தை உழுது தீவினையை விதைத்தவர்கள் அதையே அறுக்கிறார்கள்'' என்று எடுத்து கூறுகின்றது. அநியாயத்தை உழும் அரசனாக பாலாக் இருந்தான். அதன் விளைவுகளை அவனே அறுக்கவும் இருக்கின்றான். பிஸ்காவின் கொடுமுடிக்கு பிலேயாமை எடுத்து சென்றான். அந்த பிஸ்காவின் கொடிமுடியை பின்னர் பாலாக் இழந்து போனான்.

அதே கொடு முடியில் இருந்து மோசே கானான் முழுவதையும் கண்ணால் கண்டான். அந்த கிருபையை கர்த்தர் மோசேயிடம் கொடுத்து விட்டார். உபாகம புத்தகம் 34:1-3 வசனங்கள்: ''பின்பு மோசே மோவாபின் சமனான வெளிகளில் இருந்து எரிகோவிற்கு எதிரான நேபோ மலையில் இருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறினான். அப்பொழுது கர்த்தர் அவனுக்கு தாண் மட்டும் உள்ள கீலேயாத் தேசம் அனைத்தையும், நப்தலி தேசம்



பிஸ்காவின் கொடுமுடி

நேபோ மலை

அனைத்தையும், எப்பிராயீம் மனாசே என்பவர்களின் தேசத்தையும், கடைசி சமுத்திரம் வரைக்கும் உள்ள யூதா தேசம் அனைத்தையும், தென் புறத்தையும் சோவார் வரைக்கும் உள்ள பேரீட்சை மரங்களின் பட்டணம் என்னும் ஊர் முதல் கொண்டு எரிகோவின் பள்ளத்தாக்காகிய சமனான பூமியையும் காண்பித்தார்''. தன்னை மட்டும் பின்பற்றி தனியாக வாசம் செய்த விசுவாச கூட்டத்தை சபிக்க முயன்ற பாலாக் தனக்கு இருக்கும் அனைத்தையும் இழக்க இருக்கின்றான். பிறரை கெடுக்க முற்படுகிறவர்கள் கேடு காண்கிறார்கள். பாலாக் முதல் இடத்தில் 7 பலிபீடங்களை கட்டினான். பிலேயாமின் கட்டளையின் படி கட்டினான். இரண்டாவது இடத்திலும் மேலும் 7 பலிபீடங்களை கட்டு என்று பிலேயாம் பாலாக் அரசனுக்கு ஆணை கொடுக்கின்றான்.

அரசன் பிலேயாமின் சேவகனாக மாறிவிட்டான். பிலேயாம் விட்ட ஆணைக்கு அடி பணிகின்றான். சாபம் இட்டால் போதும் என்பதை எதிர்பார்த்து ஒரு அடிமை போன்று பாலாக் செயல் ஆற்றுகின்றான்.

அப்பொழுது பிலேயாம் பாலாகை நோக்கி: இங்கே உம்முடைய சர்வாங்க தகனபலியண்டையில் நில்லும் நான் அங்கே போய் கர்த்தரை சந்தித்து வருகிறேன் என்றான். (எண். 23:15)

பாலாக் எந்த இடத்தில் நிற்க வேண்டும் என்பதையும் பிலேயாம் தீர்மானிக்கின்றான். அரசனின் சொந்த இடத்தில், எந்த இடத்தில் நிற்க வேண்டும் என்பதை அரசனால் தீர்மானிக்க முடியவில்லை. இதயம் பயம் கொள்ளும் வேளையில் தீர்மானம் எடுக்கும் மனப்பக்குவம் வருவது இல்லை. கர்த்தர் பிலேயாமின் உள் உணர்வை அறிவார். பிலேயாமின் மனம் இரு மனம். அவனது சிந்தனை கர்த்தரில் நிலைவரப்படாத ஒரு சிந்தனை. மனிதனின் இதய எண்ணங்களை கர்த்தர் தூரத்தில் இருந்து அறிகின்றவர். கர்த்தர் பிலேயாமின் வாயில் ஆசீர்வாதமான வார்த்தை மட்டுமே பிறக்க வேண்டும் என்று கட்டளை கொடுக்கின்றார்.

கர்த்தர் பிலேயாமை சந்தித்து, அவன் வாயிலே வசனத்தை அருளி: நீ பாலாகின் இடத்திற்கு திரும்பி போய், இவ்விதமாய் சொல்ல கடவாய் என்றார். அவனிடத்திற்கு அவன் வருகிற போது, அவன் மோவாபின் பிரபுக்களோடும் கூட தன்னுடைய சர்வாங்க தகனபலி அண்டையிலே நின்று கொண்டிருந்தான்; பாலாக் அவனை நோக்கி: கர்த்தர் என்ன சொன்னார் என்று கேட்டான். (எண். 23:16-17)

கர்த்தர் என்ன சொன்னார் என்று பாலாக் மிகவும் ஆவலுடன் பிலேயாமை நோக்கி கேட்கின்றான். அவனது மனம் அதிக பதட்டம் அடைகின்றது. இடத்தை மாற்றியதால் பிலேயாமின் வார்த்தையும் மாறி விடும் என்று நினைத்தான். தனக்கு சாதகமாக பிலேயாமின் வார்த்தையும் மாறி விடும் என்று நினைத்தான். தனக்கு சாதகமாக பிலேயாம் பேசட்டும் என்று, கர்த்தர் என்ன சொன்னார் என்று கேட்கிறான். இதயம் மாறாமல் இடம் மட்டும் மாறுவதால் பயன் அடைவது இல்லை. நீதிமொழிகளின் புத்தகம் 11:20-வது வசனம், ''மாறுபாடுள்ள இதயம் உடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள். உத்தம மார்க்கத்தாரோ அவருக்கு பிரியமானவர்கள்'' என்று கூறுகின்றது. நீதிமொழிகள் 16-வது அதிகாரம் 9-வது வசனம், ''மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும். அவனுடைய நடைகளை உறுதி படுத்துகிறவரோ கர்த்தர்'' என்று உரைக்கின்றது.

அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்து உரைத்து: பாலாகே, எழுந்திருந்து கேளும். சிப்போரின் குமாரனே, எனக்கு செவி கொடும். (எண். 23:18)

எண்ணாகம புத்தகம் 23-வது அதிகாரம் 18 முதல் 24 வசனங்களில் பிலேயாமின் இரண்டாவது உரை இடம் பெறுகின்றது. பாலாக் அரசனின் அழைப்பின் பேரில் வருகை தந்தான். ஆயினும் அரசனின் மன விருப்பப்படி வசனம் தரவில்லை.

தூரத்தில் பள்ளத்தாக்கில் மோசேயும் இஸ்ரவேல் ஜனங்களும் பாளயம் இறங்கி இருக்கின்றார்கள். மலை உச்சியிலோ அவர்களுக்கு எதிராக சதி நடந்து கொண்டு இருக்கிறது. ஆனால் கர்த்தரோ அங்கேயும் இருக்கிறார். சதியை தமது ஆளுகைக்குள் வைத்து கொள்ளுகிறார்.

18-வது வசனத்தில் இரண்டாவது உரையின் துவக்கம் காண படுகின்றது. அக சோர்பு கொண்டு உட்கார்ந்து இருக்கும் அரசனை பார்த்து பிலேயாம் பேசுகின்றான். பாலாக்கே நான் கூறுவதை உட்கார்ந்து அல்ல, எழும்பி நின்று நீ கேட்க வேண்டும் என்று கூறுகின்றான். தூய்மை என்பது தவறும் வேளையில் சக்கரவர்த்தியும் ஒரு சாதாரண மனிதன் போல காண படுகின்றான்.

செவிகளை கூர்மையாக்கி குமாரனே எனக்கு செவி கொடும் என்கிறான். செவிகளை கூர்மையாக்கி நான் கூறுவதை கேள் என்று கூறுகின்றான். தொடர்ந்து சர்வ வல்லமை உள்ள கர்த்தரை பற்றிய மூன்று குறிப்புகளை கூறுகின்றான்.

பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாது இருப்பாரா? (எண். 23:19)

பிலேயாம் பாலாக்கை நோக்கி கர்த்தருடைய குணாதிசயங்களை பற்றி பேசுகின்றான். மனிதன் பொய் பேசுகிறவன் என்று கூறுகின்றான். கர்த்தர் பொய் பேசுகிறவர் அல்ல என்று விளக்குகின்றான். மனிதனின் மனம் மாறும் தன்மை உள்ளது. கர்த்தர் மாறாதவர் என்று கூறுகின்றான். மனிதன் வாக்குறுதிகள் காப்பாற்ற படுவது இல்லை. கர்த்தரின் வாக்குத்தத்தங்கள் அனைத்தும் நிச்சயமாக நிறைவேறும் என்றும் கூறுகின்றான். சாமுவேல் தீர்க்கதரிசி எழுதிய முதலாவது புத்தகம் 15:29-வது வசனத்தை பாருங்கள். ''இஸ்ரவேலின் ஜெய பலமானவர் பொய் சொல்லுகிறதும் இல்லை, தாம் சொன்னதை பற்றி மனஸ்தாபம் படுகிறதும் இல்லை. மனம் மாற அவர் மனுஷன் அல்ல என்றான். யோபுவின் புத்தகம் 23:13-வது வசனம், ''அவரோ என்றால் ஒரே மனமாய் இருக்கிறார். அவரை திருப்ப தக்கவர் யார்? அவருடைய சித்தத்தின்படி எல்லாம் செய்வார்'' என்று உரைக்கின்றது.

கர்த்தருடைய குணாதிசயங்களை எடுத்து கூறியவன் கர்த்தரிடம் தான் பெற்ற கட்டளைகளை எடுத்து கூறுகின்றான்.

இதோ, ஆசீர்வதிக்க கட்டளை பெற்றேன் அவர் ஆசீர்வதிக்கிறார், அதை நான் திருப்ப கூடாது. (எண். 23:20)

கர்த்தரால் ஆசீர்வதிக்க படுகிறவர்களை மனிதன் சபித்தாலும் கர்த்தரின் ஆசீர்வாதங்கள் திரும்ப பெற்று கொள்ள படுவது இல்லை என்று பிலேயாம் கூறுகின்றான். பாலாக்

அரசனிடம் வெள்ளியும் பொன்னும் பெற்றான். கர்த்தாதி கர்த்தரிடம் வசனமும் வார்த்தையும் பெற்றான். பொன்னும் பொருளும் அல்ல, கர்த்தரின் வசனமே வல்லமை பெற்றது என்பதை பிலேயாம் உணர்ந்து விட்டான். மனிதனின் சலுகைகள் தற்காலிகம். கர்த்தரின் கிருபையோ நிரந்தரம். தேவனுடைய கிருபை வரங்களும் அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே என்று பரிசுத்த பவுல் ரோமருக்கு எழுதிய நிரூபம் 11:29-வது வசனத்தில் கூறுகின்றார்.

அவர் யாக்கோபிலே அக்கிரமத்தை காண்கிறதும் இல்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை; அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார்; ராஜாவின் ஜயகெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது. (எண். 23:21)

கானான் நோக்கி சென்று கொண்டு இருக்கும் பிரித்து எடுக்கப்பட்ட அந்த ஜனங்கள் அக்கிரமம் எதுவும் செய்யாதவர்கள் அல்ல. குற்றம் இல்லாதவர்களும் அல்ல. ஆயினும் அவர் யாக்கோபிலே அக்கிரமத்தை காண்கிறதும் இல்லை. இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை என்று பிலேயாம் கூறுகின்றான். அக்கிரமம், குற்றம் உடையவர்களாக இருந்தாலும் அவைகள் அனைத்தையும் ஒப்பு கொண்டவர்களாகவும் அவர்கள் இருக்கின்றார்கள். கர்த்தர் உணர்த்திய பொழுது தங்கள் குற்றங்களை ஒப்பு கொண்டார்கள். தங்கள் அக்கிரமங்களை அறிக்கை செய்தார்கள். செய்த பாவங்களை கர்த்தரிடம் அறிக்கை செய்த பின்னர் பழைய பாவங்களை கர்த்தர் கணக்கிற்கு எடுக்கிறவர் அல்ல. சங்கீதம் 103:12, ''மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்'' என்று கூறுகின்றது. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 38:17-வது வசனத்தில், ''இதோ சமாதானத்திற்கு பதிலாக மகா கசப்பு வந்து இருந்தது. என் ஆத்துமாவை நேசித்து அழிவின் குழிக்கு விலக்கினீர். என் பாவங்களை எல்லாம் உமது முதுகுக்கு பின்னாக எறிந்து விட்டீர்'' என்று பார்க்கிறோம். தொடர்ந்து ஏசாயா 43:25-வது வசனத்தில் இருந்து ''நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்து போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்'' என்று கர்த்தர் கூறுவதை அறிந்து கொள்கிறோம்.

உத்தம மனஸ்தாபப்பட்டு, உண்மையாக மனம் திரும்பி அறிக்கை இட்ட பின்னர் கடந்த கால பாவங்களை கர்த்தர் மனதில் வைக்கின்றவர் அல்ல. பாவ அறிக்கை செய்த பின்னர் பாவமே செய்யாதவர்கள் போன்று கர்த்தர் ஜனங்களை காண்கின்றார். மீகா தீர்க்கதரிசியின் புத்தகம் 7:18,19-வது வசனங்கள், ''தமது சுதந்திரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தை பொறுத்து, மீறுதல்களை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார். அவர் திரும்ப நம்மேல் இரங்குவார். நம்முடைய அக்கிரமங்களை விலக்கி நம்முடைய பாவங்களை எல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டு விடுவார்'' என்று அறிவிக்கின்றன. கானானில் பிரவேசிக்க யோர்தானை கடக்க வேண்டும். யோர்தானை கடந்து செல்லுவதற்கு முன்னதாக கர்த்தருக்கு முன் குற்றம் அற்றவர்களும் மாசு அற்றவர்களுமாக காணப்பட வேண்டும். அந்த கிருபையை ஜனங்கள் பெற்று விட்டார்கள் என்று பிலேயாம் கூறுகின்றான். தேவனாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார் என்று இயம்புகின்றான்.

தேவன் அவர்களை எகிப்திலிருந்து புறப்பட பண்ணினார் காண்டாமிருகத்துக்கு ஒத்த பெலன் அவர்களுக்கு உண்டு. (எண். 23:22)

தேவனாகிய கர்த்தர் ஒருவரே அவர்களை அடிமைத்தன வாழ்வில் இருந்து வெளியேற்றி கொண்டு வந்தவர் என்று 22-வது வசனத்தில் விளக்குகின்றான். அந்த ஜனங்களின் பெலன் பரிசுத்தராகிய கர்த்தருடைய பெலன் என்று கூறுகின்றான்.

யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறி சொல்லுதலும் இல்லை; தேவன் என்னென்ன செய்தார் என்று கொஞ்சம் காலத்திலே யாக்கோபையும் இஸ்ரவேலையும் குறித்து சொல்லப்படும். (எண். 23:23)

கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து வாழும் மக்களை மந்திரங்கள் தாக்குவது இல்லை என்று பிலேயாம் கூறுகின்றான். குறி சொல்லுதல் அவர்களை பாதிக்க போவதும் இல்லை என்று கூறுகின்றான். பிலேயாம் பாலாக் அரசனுக்கு உதவி செய்யவில்லை. அறிவு புகட்டுகின்றான். நீதிமொழிகளின் புத்தகம் 21:30-வது வசனம், ''கர்த்தருக்கு விரோதமான ஞானமும் இல்லை. புத்தியும் இல்லை. ஆலோசனையும் இல்லை. யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை'' என்று விளம்புகின்றது. இஸ்ரவேலுக்கு விரோதமான குறி சொல்லுதலும் இல்லை என்று பிலேயாம் கூறுகின்றான். விரோதமான என்று வருகின்ற வார்த்தையின் சரியான பொருள் யாக்கோபிற்கு எதிராக, யாக்கோபிற்கு உள்ளாக, யாக்கோபிற்கு மேலாக என்றெல்லாம் பொருள் கொள்ளும்; அவ்வாறு மந்திரங்களும் இல்லை, குறிகளும் இல்லை என்பது ஆகும். தேவனாகிய கர்த்தர் ஜனங்கள் நடுவில் பிரசன்னமாக இருக்கின்றார். நாம் எடுக்கும் முயற்சிகள் பலிப்பது இல்லை என்று பிலேயாம் கூறுகின்றான். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 8:10-வது வசனத்தில், ''ஆலோசனை செய்யுங்கள். அது அபத்தம் ஆகும். வார்த்தையை வசனியுங்கள். அது நிற்காது. தேவன் எங்களோடே இருக்கிறார்'' என்பதை அறிந்து கொள்கிறோம். தேவன் நம்மோடு இருக்கிறார் என்ற நிலைக்கு வந்தவர்களுக்கு எதிராக மந்திரமும் இல்லை. குறிகளும் இல்லை என்று பிலேயாம் தெளிவு படுத்துகின்றான்.

அந்த ஜனம் துஷ்ட சிங்கம் போல எழும்பும்; பால சிங்கம் போல நிமிர்ந்து நிற்கும்; அது தான் பிடித்த இரையை பட்சித்து, வெட்டுண்டவர்களின் இரத்தத்தை குடிக்கும் மட்டும் படுத்து கொள்வதில்லை என்றான். (எண். 23:24)

எந்த நோக்கத்திற்காக கர்த்தர் அந்த ஜனங்களை தெரிந்து எடுத்தாரோ அந்த நோக்கம் நிறைவேறும் வரை பிரித்து எடுக்கப்பட்ட ஜனங்கள் இளைப்பாறுவது இல்லை என்று கூறுகின்றான். கடந்த கால பாவங்கள் கணக்கிற்கு எடுக்கப்படுவது இல்லை என்பவன், நடந்து செல்லும் அவர்களை மந்திரங்கள் பாதிப்பது இல்லை என்றவன், அவர்கள் தலை குனிந்து நடந்து செல்லுகின்றவர்கள் அல்ல, பயந்து நடந்து செல்லுகின்றவர்களும் அல்ல, பால சிங்கம் போன்று நிமிர்ந்து செல்லுகின்றார்கள் என்று கூறுகின்றான். நம்மால் என்ன செய்ய முடியும் என்பதே பிலேயாமின் முடிவு. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 58:11-வது வசனம், ''கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவை திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தை போலவும் வற்றாத நீரூற்றை போலவும் இருப்பாய்'' என்று விளம்புகின்றது.

பாலாக் அரசன் நினைத்தது இடம் பெறவில்லை. கர்த்தர் நினைத்தது தடை ஆகவும் இல்லை. கர்த்தர் துணை என்று வாழும் ஜனங்களுக்கு எதிராக பிலேயாம் துணை என்று

வந்த அரசன் செயல் இழந்தான். அரசன் பிலேயாமை பார்த்து கூறுவதை 25-வது வசனத்தில் வாசிக்கின்றோம்.

அப்பொழுது பாலாக் பிலேயாமை நோக்கி: நீர் அவர்களை சபிக்கவும் வேண்டாம், அவர்களை ஆசீர்வதிக்கவும் வேண்டாம் என்றான். (எண். 23:25)

ஆசீர்வதிக்கவும் வேண்டாம். எதுவும் கூற வேண்டாம் என்று கட்டளை இடுகின்றான். பரிசுத்த ஜனங்களை சபிக்க கர்த்தர் அனுமதி தரவில்லை என்று கூறும் உனக்கு அவர்களை ஆசீர்வதிக்கவும் அனுமதி இல்லை என்று கூறுகின்றான். பிலேயாம் அதற்கு இசைவு தெரிவிக்கவில்லை.

அதற்கு பிலேயாம் பாலாகை பார்த்து: கர்த்தர் சொல்லுகிறபடி எல்லாம் செய்வேன் என்று உம்மோடே நான் சொல்லவில்லையா என்றான். (எண். 23:26)

நீர் சொல்லுகிறபடி நான் செய்ய முடியாது. கர்த்தர் சொல்லுகிறபடி மட்டுமே நான் பேச முடியும் என்று மூன்றாவது முறையாக பிலேயாம் கூறுகின்றான். ஆயினும் பிலேயாம் தான் கூறுவதில் உறுதியாக நிற்கவில்லை. பாலாக் மூன்றாவது இடம் ஒன்றை காட்டுகின்றான். இன்னும் ஒரு முறை இட மாற்றம் செய்து பார்ப்போம். அந்த இடம் சபிக்க தூண்டும் இடமாக இருக்க முடியும் என்று பாலாக் கருதுகின்றான்.

24.5 பேயோரின் கொடுமுடியில் இருந்து பிலேயாமின் மூன்றாவது ஆசீர்வாதம்

அப்பொழுது பாலாக் பிலேயாமை நோக்கி: வாரும், வேறொரு இடத்திற்கு உம்மை அழைத்து கொண்டு போகிறேன். நீர் அங்கே இருந்தாவது எனக்காக அவர்களை சபிக்கிறது தேவனுக்கு பிரியமாயிருக்கும் என்று சொல்லி, அவனை எஷிமோனுக்கு எதிராயிருக்கிற பேயோரின் கொடுமுடிக்கு அழைத்து கொண்டு போனான். (எண். 23:27-28)

சற்று முன்னதாக பிலேயாமை பிஸ்காவின் கொடுமுடிக்கு எடுத்து சென்றான். இதனை 14-வது வசனத்தில் படித்தோம். பிஸ்கா என்றால் தரிசன சிகரம் என்று பொருள். 28-வது வசனத்தில் பேயோரின் கொடுமுடிக்கு எடுத்து செல்லுகின்றான். பேயோரின் கொடுமுடி என்பது பாவத்தின் சிகரம் என்பது ஆகும்.

தரிசன சிகரத்தில் இருந்து பாலாக் பிலேயாம் என்ற இருவரும் பாவத்தின் சிகரத்திற்கு வருகின்றார்கள். கானானின் தரிசனம் உறுதியாக இருக்கும் வரை கர்த்தர் ஜனங்களின் துணையாக இருக்கின்றார். ஆனால் தரிசனத்தில் அவர்கள் உறுதி இழந்து விட்டால் கர்த்தர் அகன்று விடுவார். அவர்கள் பெலனும் அகன்று போகும். தரிசனத்தில் தடுமாற்றம் காண்பதற்கு ஏற்ற சிகரம் பேயோர் சிகரம் என்பதை இருவரும் கண்டு விட்டார்கள். இதே இடத்தில் கர்த்தருடைய ஜனங்கள் கொடுமையான பாவம் செய்ய இருக்கின்றார்கள். மிகவும் கடுமையாக தண்டிக்கப்படவும் இருக்கின்றார்கள். மாம்ச பெலவீனத்தில் யாக்கோபின் மக்கள் விழுந்து விட்டால் கர்த்தரின் ஆசீர்வாதம் தானாக விலகி விடும் என்பதே பிலேயாம் பாலாக் அரசனுக்கு புகட்டும் மறைவான ஆலோசனை ஆகும். கானானின் தரிசனத்தில் இருந்து

அவர்களது கவனத்தை திருப்புவதற்கு, காம விகாரம் என்ற பாவத்திற்கு நேராக அவர்களுடைய மனதை திருப்பி விடுவதற்கு பிலேயாம் போதகம் செய்தான். பேயோரின் கொடுமுடியில் பிலேயாம் சபிக்கவில்லை. ஆசீர்வாதமான வார்த்தைகளை மட்டுமே ஜனங்களை பார்த்து கூற இருக்கின்றான். ஆயினும் அதே இடத்தில் ஜனங்கள் பெரும் பாவம் செய்வதற்கு வழியும் வகையும் செய்து விட்டான். 25-வது அதிகாரத்தில் இந்த விபரத்தை பார்க்க இருக்கின்றோம்.

அப்பொழுது பிலேயாம் பாலாகை நோக்கி: இங்கே எனக்கு ஏழு பலிபீடங்களை கட்டி, இங்கே எனக்கு ஏழு காளைகளையும் ஏழு ஆட்டு கடாக்களையும் ஆயத்தம் பண்ணும் என்றான். பிலேயாம் சொன்னபடி பாலாக் செய்து, ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டு கடாவையும் பலியிட்டான். (எண். 23:29-30)

பேயோரின் கொடுமுடியிலும் 7 பலிபீடங்கள் கட்டப்பட்டன. பலி மிருகங்கள் படைக்க பட்டன. மன கிலேசம் கொண்ட பாலாக் பலிபீடங்களை கட்டி பலி இடுகிறான்.

இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம் என்று பிலேயாம் கண்டபோது, அவன் முந்தி செய்து வந்தது போல நிமித்தம் பார்க்க போகாமல், வனாந்தரத்திற்கு நேராக தன் முகத்தை திருப்பி, தன் கண்களை ஏறெடுத்து, இஸ்ரவேல் தன் கோத்திரங்களின் படியே பாளயம் இறங்கி இருக்கிறதை பார்த்தான். தேவ ஆவி அவன் மேல் வந்தது. (எண். 24:1-2)

அந்த உயரமான சிகரத்தில் இருந்து கண்களை ஏறெடுத்து பார்க்கிறான். இஸ்ரவேல் மக்கள் கர்த்தரால் சீனாய் மலையில் மோசேக்கு கொடுக்க பட்ட ஒழுங்கின் படியே கோத்திரவாரியாக பாளயம் இறங்கி இருப்பதையும் அவர்கள் நடுவே ஆசரிப்பு கூடாரத்தையும் அதில் மேகம் இறங்கி இருப்பதையும் காண்கிறான். அதோடு கூட கடைசி பாளயம் எது என்றும் கண்டு கொண்டான். பின்னர் தனது மூன்றாவது உரையை துவங்குவதற்கு பிலேயாம் ஆயத்த படுகின்றான்.

அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்து உரைத்து: பேயோரின் குமாரனாகிய பிலேயாம் சொல்லுகிறதாவது, கண் திறக்க பட்டவன் உரைக்கிறதாவது, தேவன் அருளும் வார்த்தைகளை கேட்டு, சர்வவல்லவரின் தரிசனத்தை கண்டு தாழ விழும் போது, கண் திறக்க பட்டவன் விளம்புகிறதாவது, (எண். 24:3-4)

மீட்கப்பட்ட ஜனங்கள் வாசம் பண்ணும் விதம் கண்டு பிலேயாம் ஆச்சரிய படுகின்றான். ஒழுங்கும் கிரமமுமாக அவர்களது கூடாரங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. மேன்மையும் மகிமையுமாக அவர்கள் நடுவில் ஆசரிப்பு கூடாரம் நிறுத்தப்பட்டு உள்ளது. தூய்மையும் உண்மையும் நெற்றியில் தொனிக்கிறது. அன்பும் ஐக்கியமும் அத்தனை குடும்பங்களையும் கோத்திரங்களையும் நிறைக்கின்றது.

யாக்கோபே, உன் கூடாரங்களும், இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்! (எண். 24:5)

''இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது'' என்று 133-வது சங்கீதம் முதல் வசனம் கூறுகின்றது. யாக்கோபே உன்



பாலாம் இஸ்ரவேலரின் பாளயத்தை பார்க்கிறான்

கூடாரங்கள் அழகானவை என்று கூறுகின்றான். யாக்கோபே என்பது ஒவ்வொரு தனி நபர்களையும் குறிக்கின்றது. கூடாரம் என்பது ஒவ்வொரு குடும்பங்களையும் குறிக்கின்றது. பரிசுத்தம் என்பதை நடுவாக வைத்து வாழும் பொழுது, தனி நபர்கள் கனி நிறைந்த வாழ்வு நடத்துகின்றார்கள். குடும்பங்கள் சமாதானம், சந்தோஷம் பெற்று மகிழ்கின்றன. இஸ்ரவேலே உன் வாசஸ்தலங்களும் அழகானவை என்று கூறுகின்றான். விசுவாசிகளும் விசுவாச குடும்பங்களும் தூய்மை, உண்மை போற்றி வாழும் பொழுது இஸ்ரவேல் என்ற முழு சபையும் சாட்சியாக தெரிகின்றது என்பதை பிலேயாம் பார்த்து விட்டான். பரவசப்பட்டு பாடுகின்றான். விசுவாசிகளின் அன்பும், ஐக்கியமும் அந்த அனுபவத்திற்குள் வராத ஒருவனுக்கு ஆச்சரியமாக தெரிகின்றது. வளமும் செழிப்பும் பெற்ற நிலப்பரப்பு. சுகமும் நலமும் கொண்ட ஜனப்பெருக்கு. உடன்படிக்கை நடுவாக கொண்ட அர்ப்பணிப்பு. மூன்றும் பெற்று பரிசுத்த ஐக்கியமாக கர்த்தரின் திரு சித்தமாக உலக இரட்சிப்பின் திட்டத்தின் கூட்டமாக நின்று கொண்டு இருக்கும் பிரித்து எடுக்கப்பட்ட ஜனங்களை பிலேயாம் பார்த்து விட்டான். பாலாக் அரசனுக்கு அது அச்சம் தருகின்றது. பிலேயாமின் கண்களுக்கு அது ஆச்சரியம் தருகின்றது.

சங்கீதம் 28:8, 9 ஆகிய வசனங்கள். ''கர்த்தர் அவர்களுடைய பெலன்; அவரே தாம் அபிஷேகம் பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர். தேவரீர் உமது ஜனத்தை இரட்சித்து உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும். அவர்களை போஷித்து அவர்களை என்றென்றைக்கும் உயர்த்தியருளும்''.

> ***அவைகள் பரவி போகிற ஆறுகளை போலவும், நதி ஓரத்திலுள்ள தோட்டங்களை போலவும், கர்த்தர் நாட்டின சந்தன மரங்களை போலவும், தண்ணீர் அருகே உள்ள கேதுரு விருட்சங்களை போலவும் இருக்கிறது.*** *(எண். 24:6)*

கர்த்தர் மீது பற்று வைத்து வாழும் அவர்களுக்கு பற்றா குறை ஏற்படுவது இல்லை என்பது கூறப்படுகின்றது. ஜீவ தண்ணீர் நிரம்ப பெற்று வழிந்தோடும் ஜீவியத்தில், நிறைவு பெற்று வாழும் மக்களாக தூய்மையின் பாதையில் செல்லும் மக்கள் இருக்கின்றார்கள் என்பதை பிலேயாம் பார்த்து விட்டான்.

அவர்களுடைய நீர் சால்களில் இருந்து தண்ணீர் பாயும்; அவர்கள் வித்து திரளான தண்ணீர்களில் பரவும்; அவர்களுடைய ராஜா ஆகாகை பார்க்கிலும் உயருவான்; அவர்கள் ராஜ்யம் மேன்மை அடையும். (எண். 24:7)

பரிசுத்த ஜனங்களின் சந்ததி தடையின்றி தழைக்கும், திரளாக பெருகும் என்று 7-வது வசனத்தில் கூறுகின்றான். திரளான கூட்டமாக விசுவாசிகளின் கூட்டம் வளரும் என்று ஆபிராம் என்ற பெயர் ஆபிரகாம் என்று மாற்ற பட்டது. ஆதியாகம புத்தகம் 17:5-வது வசனம், ''இனி உன் பெயர் ஆபிராம் என்னப்படாமல் நான் உன்னை திரளான ஜாதிகளுக்கு தகப்பனாக ஏற்படுத்தின படியால் உன் பேர் ஆபிரகாம் என்னப்படும்'' என்று கூறுகின்றது.

மீட்கப்பட்ட ஜனங்களின் அரசன் ஆகாக் என்ற அரசனை விட ஆற்றல் மிக்கவன் என்றும் 7-வது வசனத்தில் கூறப்படுகின்றது. ஆகாக் என்பது அமலேக்கியர்களின் சக்கரவர்த்திகளை குறிக்கும் பொதுவான பெயர் ஆகும். யாத்திராகமம் புத்தகம் 17:8-13 வசனங்களில் யோசுவாவின் தலைமையில் அமலேக்கியர்கள் தோல்வி கண்டார்கள். மோசேயின் கை உயர்ந்து இருந்த வேளையில் யோசுவாவின் வெற்றி புது உயரங்கள் கண்டது. ஜெபம், ஆராதனை, அர்ப்பணிப்பு தொடரும் வரை ஆகாக் போன்ற அசூரர்கள் எதிரிட்டு வந்தாலும் வெற்றி வழங்குவார் என்று பிலேயாம் கூறுகின்றான். பின் ஒரு நாள் ஆகாக் என்ற அமலேக்கிய அரசனை சவுல் என்ற இஸ்ரவேலின் அரசன் உயிரோடு பிடித்தான் என்பது சாமுவேல் தீர்க்கதரிசியின் முதல் புத்தகம் 15:8-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. ''அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாகை உயிரோடே பிடித்தான்; ஜனங்கள் யாவரையும் பட்டயக் கருக்கினாலே சங்காரம் பண்ணினான்''.

தேவன் அவர்களை எகிப்தில் இருந்து புறப்பட பண்ணினார்; காண்டாமிருகத்துக்கு ஒத்த பெலன் அவர்களுக்கு உண்டு; அவர்கள் தங்கள் சத்துருக்களாகிய ஜாதிகளை பட்சித்து, அவர்கள் எலும்புகளை நொறுக்கி, அவர்களை தங்கள் அம்புகளாலே எய்வார்கள். (எண். 24:8)

அவர்களை எகிப்தில் இருந்து புறப்பட பண்ணியவர் இறுதி இடமான கானான் பூமி வரை நடத்தி செல்லுவார் என்று பிலேயாம் கூறுகின்றான்.

சிங்கம் போலவும் துஷ்ட சிங்கம் போலவும் மடங்கி படுத்து கொண்டு இருக்கிறார்கள்; அவர்களை எழுப்புகிறவன் யார்? உங்களை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்க பட்டவன், உங்களை சபிக்கிறவன் சபிக்க பட்டவன் என்றான். (எண். 24:9)

உங்களை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப் பட்டவன். உங்களை சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று பிலேயாம் எடுத்து கூறுகின்றான். அவனுடைய மூன்றாவது உரை நான் உங்களை சபிக்க போவது இல்லை என்று முடிகின்றது. எனவே இனிமேல் பாலாக் பிறிதொரு குறிகாரனை அழைத்து வரலாம். என்னை தவிர்த்து பிறிதொருவன் உங்களை சபிக்க கூலிக்கு அமர்த்த படலாம். அவன் கர்த்தரின் ஜனத்தை சபித்தால் உடனே சபிக்க படுவான் என்று பிலேயாம் கூறுகின்றான்.

ஆதியாகம புத்தகம் 27:29-வது வசனத்தில் ஈசாக்கு இதே ஆசீர்வாதத்தை யாக்கோபை பார்த்து, ''உன்னை சபிக்கிறவர்கள் சபிக்க பட்டவர்களும் உன்னை

ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்க பட்டவர்களுமாய் இருப்பார்கள்'' என்று சொல்லி ஆசீர்வதித்தான்.

அப்பொழுது பாலாக் பிலேயாமின் மேல் கோபம் மூண்டவனாகி, கையோடே கைதட்டி, பிலேயாமை நோக்கி: என் சத்துருக்களை சபிக்க உன்னை அழைத்து அனுப்பினேன்; நீயோ இந்த மூன்று முறையும் அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தாய். (எண். 24:10)

பிலேயாம் திரும்பவும் அவர்களை ஆசீர்வதித்ததை பாலாக் கண்டான். அப்பொழுது பாலாக் வருந்துகிறான், புலம்புகின்றான். கூக்குரல் இடுகின்றான். தூய்மை உண்மை காத்து வாழும் மக்கள் மீது பொறாமை. அந்த மக்கள் வாழட்டும் என்ற பிலேயாம் மீது கோபம். யோபுவின் புத்தகம் 5:2-வது வசனத்தை பாருங்கள். ''கோபம் நிர்மூடனை கொல்லும். பொறாமை புத்தி இல்லாதவனை அதம் பண்ணும்''.

ஆகையால் உன் இடத்துக்கு ஓடிப்போ உன்னை மிகவும் கனம் பண்ணுவேன் என்றேன். நீ கனம் அடையாதபடிக்கு கர்த்தர் தடுத்தார் என்றான். (எண். 24:11)

கை எடுத்து வணங்கி வரவேற்றவன் கை தட்டி கூப்பிடுகின்றான். பிலேயாமே ஓடி வா, ஓடி வா என்று இரண்டு முறை ஆள் அனுப்பியவன் உடனே ஓடிப் போ என்று கட்டளை கொடுக்கின்றான். பெரும் வரவேற்பு மடல் வாசித்து வரவேற்றவன் தூஷித்து துரத்தி விடுகின்றான். பணத்தை நடுவாக வைத்து பிறக்கும் உறவுகள் வளர்ச்சி காண்பது இல்லை.

பாவ கூட்டுகள் துவக்கத்தில் இனிக்கின்றது. முடிவில் கசக்கின்றது. உற்சாகமான வரவேற்பு, இடைவிடாத வாக்கு வாதம், மனம் உடைந்த வழி அனுப்பு. தூய்மை, உண்மை என்ற தடத்தில் செல்லும் மக்களுக்கு தீய சக்திகள் தீமை செய்ய கர்த்தர் அனுமதிக்க வில்லை. எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 17:7,8 ஆகிய வசனங்கள், ''கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீர் அண்டையிலே நாட்ட பட்டதும், கால்வாய் ஓரமாக தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதை காணாமல் இலை பச்சையாய் இருக்கிறதும், மழை தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தம் இன்றி தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தை போல் இருப்பான்.

எண்ணாகம புத்தகம் 24:12-16-வது வசனங்களில் பிலேயாம் பாலாக் என்ற அரசனுக்கு ஏற்ற பதில் கொடுக்கின்றான். ஓடிப் போ என்று கூறியவனுக்கு பிலேயாம் இன்னும் கூற வேண்டிய அநேக விளக்கங்கள் இருக்கின்றன. எனவே பிலேயாம் உடனே விரைந்து ஓடி விட வில்லை.

24.6 பேயோரின் கொடுமுடியில் இருந்து பிலேயாமின் நான்காவது ஆசீர்வாதம்

அப்பொழுது பிலேயாம் பாலாகை நோக்கி: பாலாக் எனக்கு தன் வீடு நிறைய வெள்ளியும் பொன்னும் கொடுத்தாலும், நான் என் மனதாய் நன்மையாகிலும் தீமையாகிலும் செய்கிறதற்கு கர்த்தரின் கட்டளையை மீற கூடாது; கர்த்தர் சொல்வதையே சொல்வேன் என்று, நீர் என்னிடத்திற்கு அனுப்பின ஸ்தானாபதிகளிடத்தில் நான் சொல்லவில்லையா? (எண். 24:12-13)

பாலாக்கின் சொற்படி செய்வதைவிட கர்த்தருடைய தூதனானவர் கூறிய எச்சரிப்பின்படி தன் உயிரை காத்து கொள்வதே சால சிறந்தது என்று பிலேயாம் முடிவு செய்தான். தன் உறைவிடம் நிரம்ப வெள்ளியும் பொன்னும் பெற்றும், உயிர் பாதிக்கப்பட்டு போனால் பலன் என்ன? குறி சொல்லுவதை விட கர்த்தர் மட்டும் சொல்லுவதை கூறுவதே மிகவும் முறையானது என்பதை பிலேயாம் அறிந்து விட்டான். கர்த்தரின் கட்டளையை மீறவே மாட்டேன் என்று கூறுகின்றான். கர்த்தர் மீது இருந்த பயத்தினால் கூறினான். உருவிய பட்டயம் பிடித்து அவன் கண் முன் வந்து நின்ற தூதனை பிலேயாம் பார்த்து விட்டான். அந்த காட்சி அவன் மனத்திரையை விட்டு நீங்கவே இல்லை.

இதோ, நான் என் ஜனத்தாரிடத்திற்கு போகிறேன்; பிற்காலத்திலே இந்த ஜனங்கள் உம்முடைய ஜனங்களுக்கு செய்வது இன்னதென்று உமக்கு தெரிவிப்பேன் வாரும் என்று சொல்லி, (எண். 24:14)

ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 41:28-வது வசனம், ''நான் பார்த்தேன். அவர்களில் அறிவிக்கிறவன் ஒருவரும் இல்லை. நான் கேட்கும் காரியத்துக்கு பிரதி உத்திரம் கொடுக்கத்தக்க ஒரு ஆலோசனைக் காரனும் அவர்களில் இல்லை'' என்று கூறுகிறது. பிற்காலத்தில் இடம் பெற இருக்கும் நிகழ்ச்சிகளை பாலாக் அரசனுக்கு பிலேயாம் அறிவிக்க நாடுகின்றான். பாலாக் கேட்கவில்லை. ஆயினும் பிலேயாம் கூறுவதற்கு தயங்கவும் இல்லை. சபித்துவிடு என்று கூறும் மக்கள் இன்று உன்னிலும் ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள். நாளை உன்னையே ஆளப்போகின்றவர்கள் என்று கூறுகின்றான்.

15 முதல் 19 வசனங்களில் இடம் பெறும் நான்காவது உரையில் ஆசீர்வாதம், எச்சரிப்பு, தீர்க்கதரிசனம் ஆகிய மூன்றும் இடம் பெறுகின்றன.

அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: பேயோரின் குமாரன் பிலேயாம் சொல்லுகிறதாவது, கண் திறக்கப்பட்டவன் உரைக்கிறதாவது, தேவன் அருளும் வார்த்தைகளை கேட்டு, உன்னதமானவர் அளித்த அறிவை அறிந்து, சர்வவல்லவரின் தரிசனத்தை கண்டு, தாழ விழும்போது, கண் திறக்கப்பட்டவன் விளம்புகிறதாவது; (எண். 24:15-16)

இந்த வசனங்கள் பிலேயாம் உணர்ச்சியின் உச்ச கட்டத்தில் இருப்பதை காட்டுகின்றன. ஓர் நீண்ட அறிமுகம் தன்னை பற்றி செய்கின்றான். தான் கூறப்போவது உன்னதமானவர் அளித்த அறிவு என்று பிலேயாம் கூறுகின்றான். தானியேல் கண்ட தரிசனத்திற்கு ஒப்பான வசனங்களை பிலேயாம் இப்பொழுது கூற இருக்கின்றான். உலகின் ஓட்டம் விசுவாசிகளின் கூட்டத்தை நடுவாக வைத்து இருக்கின்றது என்பதை பிலேயாம் கூற இருக்கின்றான். உபாகம புத்தகம் 32:8-வது வசனம், ''உன்னதமானவர் ஜாதிகளுக்கு சுதந்திரங்களை பங்கிட்டு ஆதாமின் புத்திரரை வெவ்வேறாய் பிரித்த காலத்தில் இஸ்ரவேல் புத்திரருடைய தொகைக்கு தக்கதாய் சர்வ ஜனங்களின் எல்லைகளை திட்டம் பண்ணினார்'' என்று கூறுகின்றது. உன்னதமானவர் கொடுத்த அறிவை அறிந்து பிலேயாம் பேச துவங்குகின்றான். ''கர்த்தர் ஞானத்தை தருகிறார். அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 2:6-வது வசனம் கூறுகின்றது. உன்னதமானவர் அளித்த அறிவு மட்டுமல்ல, சர்வ வல்லவரின் தரிசனத்தை கண்டவன் என்றும் தன்னை பற்றி கூறுகின்றான். கர்த்தருடைய தூதனானவரின் காட்சி அவன் கண் முன் நின்று கொண்டே இருக்கின்றது. அவர் கையில் இருக்கும் உருவிய பட்டயம் அவனை நோக்கி நின்று கொண்டே இருக்கின்றது.

கர்த்தரின் சொல் மீறி பேசும் பொழுது பட்டயம் பேசும் என்பதை பிலேயாம் நன்கு அறிவான். முதலாவது கழுதை அவனை பார்த்து பேசியது. தொடர்ந்து கர்த்தரின் தூதனானவர் பேசினார். அதனை தொடர்ந்து கர்த்தரின் தூதனானவரின் கையில் இருக்கும் பட்டயம் பிலேயாமை பார்த்து அமைதலாக பேசி கொண்டே இருக்கின்றது. பட்டயம் என்பது கர்த்தரின் வசனத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. எபிரேயர் நிரூபம் 4:12-வது வசனத்தில், ''தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இரு புறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவ குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது'' என்று அறிந்து கொள்ளுகிறோம். பிலேயாமின் சிந்தனைகளை அறிந்த கர்த்தர் தனது சிந்தனைகளை அவன் அறிந்து கொள்ள கண்களை திறந்தார். பிலேயாமின் கண்கள் திறக்கப்பட்ட உடன் அவன் கண்கள் கண்டவை கர்த்தருடைய தூதனானவரும் அவர் கையில் வைத்து இருந்த பட்டயமும் ஆகும். சங்கீதம் 11:18-வது வசனம், ''உமது வேதத்தில் உள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களை திறந்தருளும்'' என்று வேண்டி கொள்ள பணிக்கின்றது.

24.7 பிலேயாம் கொடுக்கும் முன் அறிவிப்பு

அவரை காண்பேன், இப்பொழுது அல்ல; அவரை தரிசிப்பேன், சமீபமாய் அல்ல; ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலில் இருந்து எழும்பும்; அது மோவாபின் எல்லைகளை நொறுக்கி, சேத் புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும். (எண். 24:17)

எண்ணாகம புத்தகம் 24-வது அதிகாரம் 17-வது வசனத்தில் பிலேயாம் கூறிய நான்காவது உரை இடம் பெறுகின்றது. ஆசீர்வாதம், தீர்க்கதரிசனம் என்ற இரண்டும் நான்காவது உரையில் இடம் பெறுகின்றது.

17-வது வசனத்தில் மேசியாவை பற்றிய தீர்க்கதரிசனத்தை பிலேயாம் கூறுகின்றான். பிலேயாம் உண்மை உள்ளவனாக இல்லாவிடினும் அவன் கூறும் தீர்க்கதரிசனம் உண்மை உள்ளதாக இருக்கின்றது. காரணம் அவை கர்த்தரால் அவன் வாயில் போடப்பட்ட வார்த்தைகள் ஆகும். பிலேயாமில் சுய வார்த்தைகள் இல்லை. கர்த்தாதி கர்த்தரை உன்னதமானவர், சர்வ வல்லவர் என்று பிலேயாம் அழைத்தான். அவன் கூறியபடியே கர்த்தர் உன்னதமானவர், சர்வ வல்லவர். கர்த்தர் உன்னதமானவராகவும், சர்வ வல்லவராகவும் இருப்பதினால் பிலேயாமின் வாயில் சாபங்கள் வரவில்லை. 17-வது வசனத்தில் வரும் காலத்தில் ராஜாவாக வர இருக்கும் தாவீது என்பாரை பற்றியும் புதிய ஏற்பாட்டு நாட்களில் ராஜாதி ராஜாவாக வர இருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றியும் பிலேயாம் கூறுகின்றான். அவரை காண்பேன் என்றான். அது தாவீது ராஜாவை குறிக்கின்றது. அது ராஜாதி ராஜாவான இயேசுவை குறிக்கின்றது. நாள் ஒன்று வரும் என்று கூறுகின்றான். உலகத்தின் பாவங்களை போக்கும் தேவ ஆட்டு குட்டியான இயேசுவை குறித்து கொடுக்கப்படும் முன் அறிவிப்பு அது. பிலேயாம் அறிவிற்கு ஆயிரத்து அறுநூறு வருடங்களுக்கு பின்னர் இடம் பெற்றது தீர்க்க தரிசனமாக கொடுக்க படுகிறது. ஒரு நட்சத்திரம் யாக்கோபில் இருந்து உதிக்கும் என்றான். இயேசுவாகிய நட்சத்திரத்தை அது குறிக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 22:16-வது வசனம், ''சபைகளில் இவைகளை உங்களுக்கு ஒரு சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய என் தூதனை அனுப்புவேன்.

நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாய் இருக்கிறேன் என்றார்'' என்று உரைக்கின்றது.

இயேசுவாகிய நட்சத்திரத்தை பார்ப்பதற்கு கிழக்கில் இருந்து வந்த சாஸ்திரிகளை கர்த்தருடைய நட்சத்திரம் வழி நடத்தியது. ''கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தை கண்டு அவரை பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்'' என்று பரிசுத்த மத்தேயு 2:2-வது வசனம் கூறுகின்றது. ஒரு செங்கோல் இஸ்ரவேலில் இருந்து எழும்பும் என்றான். ஆதியாகம புத்தகம் 49:10-வது வசனத்தில் இதே விபரத்தை தான் கடந்து செல்லுவதற்கு முன்னர் யாக்கோபு தன் பிள்ளைகளை பார்த்து கூறினான். பாருங்கள். ''சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதே இல்லை.. நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதே இல்லை. ஜனங்கள் அவர்களிடத்தில் சேருவார்கள்''.

24.8 ஏதோம், சேயீருக்கு நேரான பிலேயாமின் ஐந்தாவது தீர்க்கதரிசன பாடல்

ஏதோம் சுதந்தரமாகும், சேயீர் தன் சத்துருக்களுக்கு சுதந்தரமாகும் இஸ்ரவேல் பராக்கிரமம் செய்யும். யாக்கோபிலிருந்து தோன்றும் ஒருவர் ஆளுகை செய்வார் பட்டணங்களில் மீதியானவர்களை அழிப்பார் என்றான். (எண். 24:18-19)

மோவாப் அரசனான பாலாக் என்பவனை நோக்கி பிலேயாம் இந்த தீர்க்கதரிசனங்களை கூறுகின்றான். தூய பாதையில் செல்லுகின்றவர்கள் முன்னர் தீமை என்பது நிற்பது இல்லை என்பதற்கு அடையாளமாக மோவாபின் எல்லைகள் நொறுக்கப்படும் என்று மோவாபின் அரசனிடம் பிலேயாம் கூறுகின்றான். அவர்களை சபிக்கவும் வேண்டாம். ஆசீர்வதிக்கவும் வேண்டாம் என்று கேட்டு கொண்டவன் முன்னர் அவர்களை ஆசீர்வதித்தான். பாலாக் அரசனை சபித்தான். மோவாப் அரசனின் பெருமை ஒடுங்கியது. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 16:6-ல், ''மோவாபின் பெருமையையும் அவன் மேட்டிமையையும் அவன் அகங்காரத்தையும் அவன் உக்கிரத்தையும் குறித்து கேட்டோம். அவன் மெத்த பெருமைக்காரன்; ஆனாலும் அவன் வீம்பு செல்லாது'' என்று பார்க்கிறோம். தாவீது என்ற அரசன் காலத்தில் மோவாப் அமைதியானது. ''மோவாபியர் தாவீதை சேவித்து அவனுக்கு கப்பம் கட்டுகிறவர்கள் ஆனார்கள்'' என்று சாமுவேல் தீர்க்கதரிசி எழுதிய 2-வது புத்தகம் 8:2-வது வசனம் கூறுகின்றது.

பிலேயாம் தொடர்ந்து பேசுகின்றான். மோவாபின் எல்லையில் வாழ்ந்த சேத் புத்திரர் அவர்களை சேவிக்கும் நாட்கள் வரும் என்று கூறுகின்றான். ஏதோம் சுதந்திரமாகும். சேயீர் சுதந்தரமாகும் என்பதை 18-வது வசனத்தில் காண்கின்றோம். ஏதோம் என்பது மக்களை குறிக்கும் பெயர். சேயீர் என்பது ஏதோமியர் வாழ்ந்த இடத்தை குறிக்கும் பெயர். ஏதோமியர் எல்லோரும் தாவீதை சேவிக்கிறவர்கள் ஆனார்கள் என்று சாமுவேல் தீர்க்கதரிசியின் இரண்டாவது புத்தகம் 8-வது அதிகாரம் 14-வது வசனம் கூறுகின்றது.

யாக்கோபில் இருந்து தோன்றும் ஒருவர் ஆழுகை செய்வார் என்று பிலேயாம் கூறுகிறான். பரிசுத்தர் பின்னாக செல்லும் மக்களை சபித்து அனுப்பிய பாலாக் அரசனிடம் பரிசுத்தம் ஆழுகை செய்யும் என்று பிலேயாம் கூறுகின்றான். 72-வது சங்கீதம் 10, 11 ஆகிய வசனங்கள், ''தர்ஷீசின் ராஜாக்களும் தீவுகளின் ராஜாக்களும் காணிக்கைகளை

கொண்டு வருவார்கள். ஷேபாவிலும் சேபாவிலுமுள்ள ராஜாக்கள் வெகுமானங்களை கொண்டு வருவார்கள். சகல ராஜாக்களும் அவரை பணிந்து கொள்ளுவார்கள். சகல ஜாதிகளும் அவரை சேவிப்பார்கள்'' என்று கூறுகிறது. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 11:10-வது வசனம், ''அக்காலத்திலே ஜனங்களுக்கு கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்து கேட்பார்கள். அவருடைய தாபர ஸ்தலம் மகிமையாய் இருக்கும்'' என்று விளம்புகிறது. 72-வது சங்கீதம் 17,18,19 ஆகிய வசனங்களில் ''அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும். சூரியன் உள்ள மட்டும் அவருடைய நாமம் சந்தான பரம்பரையாய் நிலைக்கும்; மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்க படுவார்கள்; எல்லா ஜாதிகளும் அவரை பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்; இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவரே அதிசயங்களை செய்கிறவர். அவருடைய மகிமை பொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரம் உண்டாவதாக. பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்து இருப்பதாக. ஆமென்! ஆமென்!'' என்று பார்க்கிறோம்.

24.9 அமலேக்கிற்கு எதிரான பிலேயாமின் ஆறாவது பாடல்

மேலும், அவன் அமலேக்கை பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: அமலேக்கு முந்தி எழும்பினவன்; ஆனாலும் அவன் முடிவிலே முற்றிலும் நாசமாவான் என்றான். (எண். 24:20)

பிலேயாம் கூறும் ஆறாவது உரையில் ஆறாவது தீர்க்க தரிசனம் இடம் பெற்று கொண்டு இருக்கின்றது. 17-வது வசனத்தில் மேசியாவை பற்றிய முன் அறிவிப்பு கொடுத்தவன் 18-வது முதல் 24வசனங்களில் முழங்கால் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும் என்று முன் உரைக்கின்றான். மோவாப் ஏதோம் என்பவர்களை பற்றி 17, 18-வது வசனங்களில் பேசியவன் 20 முதல் 24 வசனங்களில் அமலேக்கு கேனியர், அசூர், ஏபேர் என்ற நான்கு விதமான மக்களை குறித்து பேசுகின்றான்.

பிலேயாம் பாலாக் அரசனை மட்டும் பார்த்து பேசவில்லை. அமலேக்கு என்பவனையும் பார்த்து பேசுகின்றான். அமலேக்கு முந்தி எழும்பியவன் என்று கூறுகின்றான். காலத்தில் மூத்தவனாக இருந்தாலும் கடைசி வரை நிற்காதவன் என்று கூறுகின்றான். முடிவு பரியந்தம் நிலைத்து இருப்பவனே இரட்சிக்க படுவான் என்று பரிசுத்த மத்தேயு 10:22-வது வசனம், 24:13-வது வசனம், பரிசுத்த மாற்கு 13:13-வது வசனம் ஆகிய அனைத்து வசனங்களும் கூறுகின்றன. முந்தினோர் அநேகர் பிந்தினோர் ஆவார்கள். பந்தய ஓட்டத்தில் கர்த்தரின் உலக இரட்சிப்பின் திட்டத்தை அறியாததினால் அமலேக்கு முந்தி எழும்பினாலும் முடிவு வரை தங்கவில்லை. பரிசுத்தராகிய தேவனை பின்பற்றுவதில் முந்தியவர் யார், பிந்தியவர் யார் என்பதைவிட முடிவு பரியந்தம் நின்றவர் யார் என்பதே வற்புறுத்தி கூறப்படுகின்றது. கர்த்தருக்கு கீழ்ப்படிய அமலேக்கு முந்தி எழும்பவில்லை. ஆனால் கீழ்படிந்து கானான் நோக்கி சென்று கொண்டு இருந்த மக்களை முந்தி வந்து தாக்கியவன் அமலேக்கு என்பவன் ஆவான். யாத்திராகமம் புத்தகம் 17:8-13 வசனங்களில் இந்த விபரம் கொடுக்கபட்டு உள்ளது. சவுல் தாவீது எசேக்கியா என்பவர்கள் நாட்களில் அமலேக்கு மிகவும் தாழ்மை படுத்த பட்டான் என்பதை 1 சாமுவேலின் புத்தகம் 15:7,8 ஆகிய வசனங்களிலும் 27:8-வது வசனத்திலும் 1 நாளாகம புத்தகம் 4:41-43 வசனங்களிலும் நாம் பார்க்கலாம்.

24.10 கேனியன், அசீரியருக்கு எதிராக பிலேயாமின் ஏழாவது தீர்க்கதரிசனம்

அன்றியும் அவன் கேனியனை பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: உன் வாசஸ்தலம் அரணிப்பானது; உன் கூட்டை கன்மலையில் கட்டினாய். ஆகிலும் கேனியன் அழிந்து போவான்; அசூர் உன்னை சிறை பிடித்து கொண்டு போக எத்தனை நாள் செல்லும் என்றான். (எண். 24:21-22)

அமலேக்குவை பார்த்து பேசிய பிலேயாம் 21-வது வசனத்தில் கேனியர்களை பார்த்து பேசுகின்றான். மீதியானியர் கேனியர் என்றவர் ஒருவரோடு ஒருவர் இணைந்தவர் ஆவார். ஓரேப் என்ற பர்வதத்தின் அருகில் வாழ்ந்த மோசேயின் மாமனார் எத்திரோ என்பார் யாத்திராகம புத்தகம் 3:1-ல் மீதியான் என்றும், நியாயாதிபதிகளின் புத்தகம் 1:16-வது வசனத்தில் கேனியன் என்றும் அழைக்கப்படுகின்றான். இவர்கள் நடுவில் ஒரு சிலர் யோசுவாவின் தலைமையில் வாக்குத்த பூமி வந்து அடைந்தாலும் மற்றவர்கள் பின் தங்கி விட்டார்கள். அன்றியும் அவன் கேனியனை பார்த்து தன் வாக்கியத்தை எடுத்து உரைத்து உன் வாசஸ்தலம் அரணிப்பானது. உன் வீட்டை கன்மலையில் கட்டினாய். மிகவும் பாதுகாப்பாக வாழ்ந்தாலும் மனிதனால் கிடைக்க பெறும் பாதுகாப்பு நிரந்தரம் அல்ல என்று பிலேயாம் கூறுகின்றான். ஆகிலும் கேனியன் அழிந்து யோவான் என்று 22-வது வசனத்தின் முன் பாகம் கூறுகின்றது. ''கர்த்தர் நகரத்தை காவாராகில் காவலாளர் விழித்து இருக்கிறது விருதா'' என்று 127-வது சங்கீதம் 2-வது வசனம் கூறுகின்றது. எனக்கு செவி கொடுக்கிறவன் எவனோ அவன் விக்கினம் இன்றி வாசம் பண்ணி ஆபத்திற்கு பயப்படாமல் அமைதியாய் இருப்பான் என்று நீதிமொழிகளின் புத்தகம் முதல் அதிகாரம் 33-வது வசனம் கூறுகின்றது. அசூர் என்ற ஜனம் கேனியரை சிறை பிடிப்பார்கள் என்று பிலேயாம் கூறுவதை 22-வது வசனத்தின் பின் பகுதியில் பார்க்கின்றோம். அசீரியரை குறிக்கும் கிரேக்க பதம் அசூர் என்பது ஆகும். நோவாவின் குமாரன் சேம் வம்சத்தில் வந்தவர் அசூர் என்று ஆதியாகம புத்தகம் 10-வது அதிகாரம் 22-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது.

பின்னும் அவன் தன் வாக்கியத்தை எடுத்து உரைத்து: ஐயோ, தேவன் இதை செய்யும் போது யார் பிழைப்பான் (எண். 24:23)

பிலேயாம் தொடர்ந்து பேசுகின்றான். வெகு தூரத்தில் இருப்பதை பற்றிய துல்லிப தீர்ப்பு கூறுகின்றான். இதுவரை பாலாக், அமலேக்கு, கேனியர் என்பாரை பார்த்து பேசியவன் இப்பொழுது பூமியில் உள்ள அனைத்து குடிகளையும் பார்த்து பேசுகின்றான். கர்த்தரின் தீர்ப்பு நாளில் யார் பிழைப்பார் என்று கூறுகின்றான். வெளிப்படுத்தின விஷேசம் 6:17-வது வசனம். அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்து விட்டது. யார் நிலை நிற்க கூடும் என்றார்கள். நோவாவின் குமாரன் யாப்பேத் வழியில் வந்த சித்தீமை அறிமுகப்படுத்தி பிலேயாம் 24-வது வசனத்தில் பேசுகின்றான்.

சித்தீமின் கரை துறையிலிருந்து கப்பல்கள் வந்து, அசூரை சிறுமை படுத்தி, ஏபேரையும் வருத்த படுத்தும்; அவனும் முற்றிலும் அழிந்து போவான் என்றான். (எண். 24:24)

சித்தீம் ரோம சாம்ராஜ்யத்தை குறிக்கின்றது. தானியேல் தீர்க்கதரிசி கண்ட நான்காவது தரிசனத்தில் சித்தீமில் இருந்து புறப்படும் கப்பல்களை பற்றி குறிப்பிட்டு உள்ளதை

தானியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் 11-வது அதிகாரம் 30-வது வசனத்தில் காண்கின்றோம். ஏபேரின் வம்சத்தை வருத்தும் என பிலேயாம் கூறுகின்றான். நோவாவின் குமாரன் சேம் என்பவனின் வம்சத்தில் வந்தவன் ஏபேர் என்று ஆதியாகம புத்தகம் 10-வது அதிகாரம் 21-வது வசனம் கூறுகின்றது. ஏபேர் என்ற பதத்தில் இருந்து எபிரேயர் என்ற சொல் பிறந்தது. ஏபேரின் நாட்களில் பூமியில் ஏகோபித்து வாழ்ந்து வந்த ஜனங்கள் வித்தியாசம் வித்தியாசமான இடங்களுக்கு திரும்பி சென்றார்கள் என்று ஆதியாகம புத்தகம் 10-வது அதிகாரம் 25-வது வசனம் கூறுகின்றது. ''ஏபேருக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள். ஒருவனுக்கு பேலேகு என்று பெயர். ஏனெனில் அவனுடைய நாட்களில் பூமி பகுக்க பட்டது.''

24.11 பிலேயாம் திரும்பி தன் இடம் நோக்கி செல்கின்றான்

பின்பு பிலேயாம் எழுந்து புறப்பட்டு, தன் இடத்துக்கு திரும்பினான்; பாலாகும் தன் வழியே போனான். (எண். 24:25)

எண்ணாகம புத்தகம் 22:7-வது வசனத்தில் துவங்கிய பிலேயாமின் உரை 24:24-வது வசனத்தில் பரிசுத்த ஜனங்களுக்கு லாபமாக பாலாக் மன்னனுக்கு சாபமாக முடிகின்றது. உபாகம புத்தகம் 23-வது அதிகாரம் 5-வது வசனம், ''உன் தேவனாகிய கர்த்தர் பிலேயாமுக்கு செவி கொடுக்க சித்தமில்லாமல் உன் தேவனாகிய கர்த்தர் உன் மேல் அன்பு கூர்ந்த படியினால் உன் தேவனாகிய கர்த்தர் அந்த சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாற பண்ணினார்''. யோசுவாவின் புத்தகம் 24:10-வது வசனம், ''பிலேயாமுக்கு செவி கொடுக்க எனக்கு சித்தம் இல்லாததினாலே அவன் உங்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தான். இவ்விதமாய் உங்களை அவன் கைக்கு தப்புவித்தேன்'' என்று உரைக்கின்றது. 37-வது சங்கீதம் 25-முதல் 27 வசனங்கள், ''நான் இளைஞனாயிருந்தேன். முதிர் வயது உள்ளவனுமானேன். ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை. அவன் நித்தம் இரங்கி கடன் கொடுக்கிறான். அவன் சந்ததி ஆசீர்வதிக்கப்படும். தீமையை விட்டு விலகி நன்மை செய். என்றென்றைக்கும் நிலைத்து இருப்பாய்'' என்று பகிர்கின்றன.

பாலாக் பிலேயாம் என்ற இருவரும் மனம் விரும்பி கூடினார்கள். மனம் முறிந்து திரும்புகின்றார்கள் என்று எண்ணாகம புத்தம் 24:25-வது வசனம் கூறுகின்றது. பிலேயாமின் ஏழு உரைகள் அவர்கள் உறவிற்கு முற்று புள்ளி வைத்து விட்டது.

முதலாவது உரையில் பரிசுத்தம் என்பதற்கு அழைக்க பட்டவர்களை பற்றி பிலேயாம் பேசினான். பரிசுத்தம் என்பது தனித்து நிற்கும். அந்த பாதையில் செல்லுகின்றவர் செழித்து வாழுவார். சபிக்கவே முடியாது என்று கூறினான். முதல் உரை 23-வது அதிகாரம் 7-10 வசனங்களில் இடம் பெற்று உள்ளது.

பிலேயாம் கூறிய இரண்டாவது உரையில் பரிசுத்தம் என்பதற்கு அழைத்தவரை பற்றி பேசுகின்றான். கர்த்தர் பொய் உரையாதவர், நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். செய்த தவறுகளை குறித்து மெய்யாக மனம் வருந்துகின்றவர்களை நேசிக்கிறவர். இழந்து போன ஆசீர்வாதங்களை கூட்டி வழங்குகின்றவர் என்று கூறினான். 23-வது அதிகாரம் 18-24 வசனங்களில் பிலேயாம் கொடுத்த இரண்டாவது உரை இடம் பெறுகின்றது.

மூன்றாவது உரையில் பரிசுத்தமாக வாழும் மக்களின் ஜக்கியம் மிகவும் மதுரமானது என்றும், அவர்கள் தங்கும் இடம் ஏதேன் தோட்டம் போன்று வளம் நிறைந்த இடம் என்றும், அவர்களின் நல்வாழ்வை நாடுகின்றவர்கள் பேர் வாழ்வு பெற்று வாழுவார்கள் என்றும் கூறுகின்றான். 24-வது அதிகாரம் 5-9 வசனங்களில் பிலேயாம் கொடுத்த மூன்றாவது உரை இடம் பெறுகின்றது.

நான்காவது உரையில் பரிசுத்தருக்கு பின்னாக செல்லும் மக்களின் பாதையில் தோல்விகள் என்பது இல்லை என்றும் அந்த பாதையில் அனைவரும் சேர்ந்து கொள்ள அழைக்க படுகின்றார்கள் என்றும் கூறுகின்றான். 24:17-24 வசனங்களில் நான்காவது உரை இடம் பெறுகின்றது.

முதல் மூன்று உரைகளும் பாலாக் கேட்டதினால் கிட்டியது. நான்காவது உரை பாலாக் ஓடு என்ற பின்னரும் பிலேயாம் நின்று மிகவும் நிதானமாக கொடுத்த உரை ஆகும். எண்ணாகம புத்தகம் 22-வது அதிகாரம் 18-வது வசனத்தில் பிலேயாம், என் தேவனாகிய கர்த்தர் என்று கூறுகின்றான். கர்த்தரை மிகவும் உண்மையாக பின்பற்றியவர்களில் ஒருவன் காலேப் என்பவன் ஆவான். அவன் யோசுவாவின் புத்தகம் 14-வது அதிகாரம் 8-வது வசனத்தில் என் தேவனாகிய கர்த்தர் என்று கூறுகின்றான். உத்தமமும் உண்மையுமாக தூய்மையின் பாதையில் சென்ற காலேப் போன்றவர்கள் பயன்படுத்தும் சொற்றொடரை பிலேயாம் பயன்படுத்துகின்றான். ஆயினும் பிலேயாம் கர்த்தருக்கு முற்றிலுமாக தன்னை அர்ப்பணித்தவன் அல்ல. மீட்க பட்டவர்களின் பதங்களை பயன் படுத்தினாலும் அவன் இதயம் பண்படுத்தப்பட வில்லை. இதயத்தில் சுத்தம் உள்ளவன் அல்ல. அவன் கூறும் வார்த்தைகள் அவனுக்கும் கர்த்தருக்கும் உள்ள இனிய உறவினால் பிறந்த வார்த்தைகள் அல்ல. கர்த்தரின் பட்டயம் அவன் கண் முன் நிற்பதினால் பிறந்து கொண்டு இருக்கும் வார்த்தைகள் ஆகும். இதயத்தில் இருந்து புறப்பட்டு வந்த வார்த்தைகள் அல்ல. கர்த்தர் வாயில் போட்டு வந்த ஆசீர்வாதங்கள் ஆகும்.

எண்ணாகம புத்தகம் 24-வது அதிகாரம் 14-வது வசனத்தில் பிற்காலத்தில் இடம் பெற இருக்கும் நிகழ்ச்சிகளை கூற போகின்றேன் என்று அவன் கூறினாலும் வேத புத்தகத்தில் வரும் ஏசாயா, எரேமியா போன்ற ஒப்பற்ற தீர்க்கதரிசிகளுடன் ஒப்பிட பட்டவன் அல்ல. கண் திறக்க பட்டவன் என்று அவன் அவ்வப்போது கூறுகின்றான். பாலாக் அரசனுக்கு பிடித்தமான வார்த்தைகளை பிலேயாம் கூறுவதற்கு முயற்சி செய்யும் போது எல்லாம் பட்டயத்துடன் நின்று கொண்டு இருக்கும் தூதனானவரை பார்ப்பதற்கு அவனுடைய கண்கள் திறக்க படுகின்றன. தனது வாழ்நாள் முழுவதும் கண்கள் திறக்க பட்டவனாக தரிசனத்திற்கு மேல் தரிசனம் கண்டவனாக பிலேயாமின் வாழ்வு அமையவில்லை. அவனுடைய கண்கள் 22-வது அதிகாரம் 31-வது வசனத்தில் திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட அவனுடைய கண்கள் எண்ணாகம புத்தகம் 24-வது அதிகாரம் 25-வது வசனத்தில் மூடப்பட்டது அதனை தொடர்ந்து அவன் சந்தித்தது மரணமே ஆகும். நீதிமான் போன்று தான் மரிக்க வேண்டும் என்று 23-வது அதிகாரம் 10-வது வசனத்தில் பிலேயாம் கூறினாலும் அவன் பெற்ற கூலியின் பெயர் அநீதத்தின் கூலி என்று பரிசுத்த பேதுரு எழுதிய இரண்டாம் நிரூபம் 15-வது வசனம் கூறுகின்றது. ஜனங்களை சபித்து விடு என்று வந்த அரசனின் கட்டளைக்கு அடி பணிய மறுத்ததற்கு காரணம் தூதனானவர் மீது இருந்த அச்சமே தவிர கர்த்தர் மீது இருந்த பாசம் அல்ல. சபிப்பதினால் பரிசுத்த ஜனங்களை அழிக்க முடியாது என்று பிலேயாம் கண்டு விட்டான். ஆனால் பாவ ஆழியில் விழுந்து விடுவதற்கு பள்ளங்கள் தோன்றா விட்டால்

பரிசுத்த வழியை இழந்து போவார்கள் என்பதையும் அறிந்து விட்டான். கர்த்தரின் கோபம் தீ பற்றி எரிவதற்கு ஏற்ற ஒரு போதகத்தை கொடுத்தவன் பிலேயாம் ஆகும். வெளிப்படுத்தின விசேஷம் 2-வது அதிகாரம் 14-வது வசனத்தில் இந்த குறிப்பு கூறப்பட்டு உள்ளது. ''வேசித்தனம் பண்ணுவதற்கு எதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாக போடும்படி பாலாக் என்பவனுக்கு போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தை கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்தில் உண்டு என்று பெர்கெமு சபைக்கு நேராக கர்த்தர் கூறுகின்றார்.''

பின்பு பிலேயாம் எழுந்து புறப்பட்டு தன் இடத்திற்கு திரும்பினான். பாலாகும் தன் வழியே போனான் என்று எண்ணாகம புத்தகம் 24-வது அதிகாரம் 25-வது வசனம் கூறுகின்றது. கர்த்தருடைய தூதனானவரை தரிசித்தும் கண் திறக்க பட்டவன் என்று அறிவித்தும் அவன் இதயம் தூய்மை காணாமல் புறப்பட்டு செல்லுகின்றான். மீதியானியர் என்ற மக்களுடன் சேர்ந்து கர்த்தரின் ஜனத்தை எதிர்த்து போரிடுவதற்கு செல்லுகின்றான். அப்பொழுது இடம் பெற்ற சண்டையில் பிலேயாம் உயிர் இழந்தான். பேயோரின் குமாரனாகிய பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்று போட்டார்கள் என்று எண்ணாகம புத்தகம் 31-வது அதிகாரம் 8-வது வசனத்தின் கடைசி வரிகள் கூறுகின்றன. கர்த்தருடைய தூதனானவர் கையில் கண்ட பட்டயத்திற்கு அவன் முற்றிலும் கீழ்படியவில்லை. வேத வசனமாகிய ஆவியின் பட்டயத்திற்கு அடிபணிய மறுக்கும் வாழ்வுகள் வருத்தமே காண்கின்றன என்பதற்கு பிலேயாமின் மரணம் அடையாளமாக நிற்கின்றது. பரிசுத்தராகிய தேவனை பின்பற்றும் மக்கள் தொடர்ந்து முன் செல்லுவதற்கு தடைகளை கொண்டு வந்தவன் பிலேயாம். முன்னோக்கி செல்லுகின்றவர்களை பின்வாங்க செய்தவன் பிலேயாம். அவனை நினைத்து கொள்ளுங்கள். மிகவும் கவனத்துடன் முன்னேறி செல்லுங்கள் என்று மீகா தீர்க்கதரிசி கூறுகின்றார். மீகாவின் புத்தகம் 6:5-வது வசனம், ''என் ஜனமே மோவாபின் ராஜாவாகிய பாலாக் பண்ணின யோசனை இன்னதென்றும் பேயோரின் குமாரனாகிய பிலேயாம் அவனுக்கு பிரதியுத்திரமாக சொன்னது இன்னது என்றும் சித்தீம் தொடங்கி கில்கால் மட்டும் நடந்தது இன்னது என்றும் நீ கர்த்தருடைய நீதிகளை அறிந்து கொள்ளும்படி நினைத்துக்கொள்'' என்று கூறுகின்றது.

அத்தியாயம் - 25
மோவாபின் பெண்களால் வஞ்சிக்கபட்ட இஸ்ரவேலர்

25.1 பேயோரில் இருந்து ஆசை வலை வீசபட்டது



மோவாப் சமவெளி

பிலேயாம், பாலாக் என்பவர்களின் சூழ்ச்சியினாலே கானான் நோக்கி சென்று கொண்டு இருந்த மக்களில் சிலர் காம விகாரம் என்ற பாதை நோக்கி சென்று விட்டனர். இதனை 25-வது அதிகாரத்தில் பார்க்க இருக்கின்றோம். கடந்த நான்கு அதிகாரங்களில் பாலாக், பிலேயாம் என்ற இருவரும் எதையும் செய்ய முடியாத நிலைக்கு வந்தார்கள் என்பதை நாம் பார்த்தோம். சபித்து வெல்ல முடியாதவர்களை வஞ்சித்து வென்று விடலாம் என்பதே பிலேயாம் போதித்த போதனை ஆகும். பிலேயாமின் போதனையின்படி இச்சை என்ற ஒரு வலை கர்த்தரை நடுவாக வைத்து வாழும் மக்களின் நடுவிலே வீசப்பட்டது. அதனை தொடர்ந்து மக்கள் மீது கர்த்தருடைய கோபம் பற்றி எரிய துவங்கியது. அதன் விளைவாக கானான் காண வேண்டியவர்களில் 24 ஆயிரம் மக்கள் மரணத்தை கண்டார்கள்.

இஸ்ரவேல் சித்தீமிலே தங்கி இருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ண தொடங்கினார்கள். அவர்கள் தங்கள் தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்ணும்படி ஜனங்களை அழைத்தார்கள்; ஜனங்கள் போய் புசித்து, அவர்கள் தேவர்களை பணிந்து கொண்டார்கள். (எண். 25:1-2)

21 முதல் 24 அதிகாரங்கள் வரை பிலேயாமின் நான்கு உரைகளிலும் மிகவும் ஆச்சரியமான ஜனங்களாக காண பட்டவர்கள், அற்புதமான எதிர்காலம் காத்து கொண்டிருக்க கண்டவர்கள், 25-வது அதிகாரத்தில் பின்வாங்கி சென்றார்கள். சித்தீமில் தங்கினார்கள். பெரும் தீங்கில் மூழ்கினார்கள். நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராக இருங்கள் என்பதே லேவியராகம புத்தகத்தில் கர்த்தரால் அவர்களுக்கு கொடுக்க பட்ட கட்டளை

சித்தீம் சமவெளி

ஆகும். நடந்து சென்று கொண்டு இருக்கும் நேரங்களில் சோதனைகளை சுலபமாக கடந்து சென்று விடுகின்றார்கள். ஆனால் தங்கி இருக்கும் நேரங்களில் எல்லாம் பின் தங்கி செல்லுகின்றார்கள். சுறுசுறுப்புடன் இயங்காமல் தேங்கி நிற்கும் வாழ்வுகள் துருப்பிடித்து தேய்ந்து விடுகின்றன. பரிசுத்த லூக்கா என்பவர் எழுதிய சுவிசேஷம் 13-வது அதிகாரம் 24, 25, 26-வது வசனங்களில் ''அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டு புறப்படும் போது வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டு அடையாமல் நான் விட்டு வந்த என் வீட்டிற்கு திரும்பி போவேன் என்று சொல்லி அதில் வரும் போது அது பெருக்கி ஜோடிக்கப்பட்டு இருக்க கண்டு திரும்பி போய் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளை கூட்டி கொண்டு வந்து உட்புகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலமையிலும் அவன் பின்னிலமை அதிக கேடு உள்ளதாய் இருக்கும் என்றார்'' என்று காண்கிறோம்.

நீண்ட பிரயாணத்திற்கு பின்னர் ஜனங்கள் யோர்தான் நதிக்கு மேற்கு புறமாக சித்தீம் என்ற இடத்தில் தங்கி இருந்தார்கள். அப்பொழுது பின் தங்கி போனார்கள். முன்னதாக சீனாய் மலை அடிவாரத்தில் தங்கிய நாட்களிலும் தொடர்ந்து காதேஸ் என்ற இடத்தில் நீண்ட காலம் தங்கிய நாட்களிலும் கானானின் தரிசனம் அவர்களுக்கு மங்கியதாகவே காண பட்டது. அவர்கள் தங்கி இருக்கும் சித்தீம் என்ற இடம் எரிகோ பட்டணத்தில் இருந்து 7 மைல் மேற்காகவும், சவக்கடலில் இருந்து 6 மைல் வடக்காகவும் இருக்கின்றது. எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரம் 49-வது வசனம் கூறுவது போன்று யோர்தானை சார்ந்த மோவாபின் சமனான வெளிகளில் அவர்கள் பெத் எசிமோத்தை தொடங்கி ஆபேல் சித்தீம் மட்டும் பாளயம் இறங்கி இருந்தார்கள். தங்கி இருந்த இடம் நீர் வளம் நில வளம் நிறைந்த இடம் ஆகும். சித்தீம் என்பது அழகிய நந்தவனம் என்று அழைக்கப்பட்ட ஒரு பூமி ஆகும். சீனாய், பாரான், சீன் என்ற மூன்று வனாந்திரங்களை சிரமம் எடுத்து நடந்து கடந்து வந்த ஜனங்கள் இனிமேல் யோர்தான் என்ற நதியை கடந்து செல்ல வேண்டும். அதற்கு முன்னதாக சற்று ஓய்வு பெற்று கொள்ளவும் இம்மட்டும் நடத்தி வந்த கர்த்தருக்கு மனமார்ந்த நன்றி கூறவும் நந்தவனம் வந்து அடைந்தார்கள்.

பெத் எசிமோத், ஆபேல் சித்தீம், பாகால் பேயோர்

ஆவிக்குரிய வாழ்வு புது வளர்ச்சி காண வேண்டிய இடத்தில் வஞ்சிக்க பட்டு பின் வாங்கி போனார்கள். மோவாபின் பெண்களிடம் வேசித்தனம் பண்ணினார்கள் என்று முதல் வசனம் கூறுகின்றது. மோவாப் என்ற வம்சம் பாவத்தில் பிறந்த வம்சம் ஆகும். தகப்பனுக்கும் மகளுக்கும் ஏற்பட்ட உறவில் உதித்த வம்சம் ஆகும். ஆதியாகம புத்தகம் 19-வது அதிகாரத்தில் இந்த விவரம் கொடுக்கப்பட்டு உள்ளது. மோவாப் என்பதற்கு தகப்பனின் வம்சம் என்று பொருள். மோவாபிய பெண்கள் கானான் நோக்கி சென்ற ஜனங்களை வசீகரித்தார்கள். அதே மோவாபிய பெண்கள் பின் ஒரு நாள் ஞானத்தில் சிறந்தவன் என்று அழைக்கப்பட்ட சாலொமோன் அரசனையும் பாவத்தில் தவறி விழ செய்தார்கள். தன் வாயினால் சாபம் இட்டு சபிக்க முடியாதவர்களை, மோவாபிய பெண்கள் வாயினால் பாவம் மூட்டி சாபம் ஆக்கினான் பிலேயாம். தன்னால் வெல்ல முடியாத மக்களை அவர்களின் சொந்த

பெலவீனத்தினால் வென்று விடலாம் என்பதை பிலேயாம் அறிந்து விட்டான். ''பேயோரின் சங்கதியிலே பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய் துரோகம் பண்ண காரணமாய் இருந்தவர்கள் இவர்கள்தானே; அதினால் கர்த்தரின் சபையிலே வாதையும் நேரிட்டதே'' என்று எண்ணாகம புத்தகம் 31:16-வது வசனம் கூறுகின்றது. ''வேசித்தனம் பண்ணுவதற்கு ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாக போடும்படி பாலாக் என்பவனுக்கு போதனை செய்த பிலேயாம்'' என்று வெளிப்படுத்தின விசேஷம் 2-வது அதிகாரம் 14-வது வசனம் கூறுகின்றது. பிலேயாமை பற்றி பரிசுத்த வேத புத்தகத்தில் வரும் கடைசி குறிப்பு அதுவே ஆகும். கானானில் கடைசி படியில் ஏறினார்கள். முற்றும் கீழ்படிய தவறினார்கள். பாசு படிந்த பாறைகளில் ஒரு சிறு கவன குறைவும் வழுக்கி விழ செய்கின்றது. விசுவாச வாழ்வில் விழிப்புடன் இல்லாதவரின் வழிப்பயணம் முற்று பெறுவது இல்லை. பரிசுத்த பேதுரு எழுதிய முதலாம் நிரூபம் 5-வது அதிகாரம் 8-வது வசனம், ''தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள். விழித்து இருங்கள். ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றி திரிகிறான்,'' என்று எச்சரிக்கின்றது

இப்படி இஸ்ரவேலர் பாகால் பேயோரை பற்றி கொண்டார்கள்; அதனால் இஸ்ரவேலர் மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது. (எண். 25:3)

25-வது அதிகாரம் முதல் வசனத்தில் பரிசுத்தம் என்பதற்கு அழைக்கப்பட்ட ஜனங்கள் அசுத்தத்தில் விழுந்தார்கள். இரண்டாவது வசனத்தில் கர்த்தரை நடுவாக வைத்து வாழ்ந்த ஜனங்கள் கர்த்தரை புறக்கணித்து வாழ ஆரம்பித்தார்கள். பத்து கற்பனைகளில் 2-வது கற்பனையும் 7-வது கற்பனையும் மீற பட்டது. கர்த்தருடன் இருந்த உறவு முறிக்க பட்டது. தேவ துரோகம் செய்தார்கள். தேவ கோபம் கண்டார்கள். ஜனங்களின் பின் வாங்குதல் கர்த்தரை வருத்த படுத்தியது. ஓசியா தீர்க்கதரிசி தனது நூலின் 9:10-வது வசனத்தில் கர்த்தருடைய இதய வேதனையை குறிப்பிட்டு காட்டுகின்றான். ''வனாந்தரத்தில் திராட்சை குலைகளை கண்டு பிடிப்பது போல், இஸ்ரவேலை கண்டு பிடித்தேன்; அத்தி மரத்தில் முதல்

பாகால் பேயோர்

பாகால் பேயோர் வணக்கம்

தரம் பழுத்த கனிகளை போல உங்கள் பிதாக்களை கண்டு பிடித்தேன்; ஆனாலும் அவர்கள் பாகால் பேயோர் அண்டைக்கு போய், இலட்சையானதற்கு தங்களை ஒப்புவித்து தாங்கள் நேசித்தவைகளை போல தாங்களும் அருவருப்பு உள்ளவர்கள் ஆனார்கள்''.

25.2 இச்சையில் விழுந்த இஸ்ரவேலர் மேல் கர்த்தரின் கோபம்

கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலை விட்டு நீங்கும்படி நீ ஜனங்களின் தலைவர் எல்லாரையும் கூட்டி கொண்டு, அப்படி செய்தவர்களை சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கி போடும் படி செய் என்றார். (எண். 25:4)

கர்த்தர் தீர்ப்பு வழங்குகின்றார். பிலேயாமின் வஞ்சகத்தில் விழுந்தவர்களுக்கு கொஞ்சமும் இரக்கம் பாராட்ட படவில்லை. சூரியனுக்கு எதிராக தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். அனைவர் கண்களுக்கும் முன்பாக, எவ்வித ஒளிவும் மறைவும் இல்லாமல், நியாயம் பாராட்டப்பட வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை அனைவரும் கண்டு கொள்ள வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். வேசித்தனம் செய்தவர்களுக்கு தேவ தண்டனையும் மற்றவர்களுக்கு தேவ எச்சரிப்புமாக அந்த காட்சி இடம் பெற வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். ஜன்ங்களுக்கு என்று கர்த்தரால் குறிக்கப்பட்ட தலைவர்கள் கர்த்தர் கூறிய தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்று கூறுகின்றார்.

சித்தீமில் இஸ்ரவேலரின் பாளயமும் ஆசரிப்பு கூடாரமும் கிழக்கு நோக்கி அமைக்க பட்டு இருந்தது. அவர்களுக்கு வட கிழக்காக பாலாக் நின்று தீர்க்க தரிசனம் கூறிய பேயோரின் கொடுமுடி அமைந்திருந்தது. அங்கேதான் இஸ்ரவேல் மக்கள் சென்று மோவாபின் தேவனான பாகால் பேயோருக்கு பண்டிகை கொண்டாடி, அவர்கள் பெண்களுடன் சோரம் போனார்கள்.

அப்படியே மோசே இஸ்ரவேலின் நியாயாதிபதிகளை நோக்கி: நீங்கள் அவரவர் பாகால் பேயோரை பற்றி கொண்ட உங்கள் மனிதரை கொன்று போடுங்கள் என்றான். (எண். 25:5)

மோசே நியாயாதிபதிகள் அனைவரையும் அழைத்து குற்றம் செய்தவர்களுக்கு கர்த்தர் கூறிய தண்டனையை நிறைவேற்றுங்கள் என்று 5-வது வசனத்தில் கட்டளை இடுகின்றான். பாவம் செய்தவர்கள் 2 முறைகளில் தண்டிக்க படுகின்றார்கள். சிலர் நியாயாதிபதிகளால் தண்டிக்க படுகின்றார்கள். பலர் கர்த்தர் அனுப்பிய வாதையினால் தண்டிக்க படுகின்றார்கள். வாதை வந்ததை பற்றி இங்கு குறிக்கப்படவில்லை என்றாலும், வாதையினால் மாண்டவர்களை குறித்து பின்னால் அறிகின்றோம். இரண்டு தண்டனைகளையும் சகிக்க முடியாத மோசே ஆசரிப்பு கூடாரம் நோக்கி ஓடுகின்றான். மோசேயின் சபையார் அனைவரும் ஆசரிப்பு கூடாரத்தின் முன்னின்று அழுது கொண்டு இருக்கின்றார்கள் என்பதை 6-வது வசனத்தில் பார்க்கின்றோம்.

அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் அனைவரும் ஆசரிப்பு கூடார வாசலுக்கு முன்பாக அழுது கொண்டு நிற்கையில், அவர்கள் கண்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் ஒரு

மீதியானிய ஸ்திரீயை தன் சகோதரரிடத்திலே அழைத்து கொண்டு வந்தான். (எண். 25:6)

செய்த பாவங்களை மன்னியும். கொடுத்த தண்டனைகளை ரத்து செய்யும் என்று அவர்கள் ஜெபம் செய்து கொண்டு இருக்கும் போது ஒரு கொடூர சம்பவம் இடம் பெறுகின்றது. பாவ செயல் செய்வதற்கு இருவர் சென்று கொண்டு இருக்கிறார்கள். கர்த்தாவே மன்னியும் என்று கண்ணீருடன் ஜெபம் ஏறெடுக்கப்பட்டு கொண்டு இருக்கும் அதே நேரத்தில் துணிகரமான பாவம் செய்வதற்கு அவர்களுடைய கண்களுக்கு முன்பாக இரண்டு பேர் சென்று கொண்டு இருந்தார்கள்.

இருவரில் ஒருவன் கானான் நோக்கி செல்லும் கூட்டத்தை சேர்ந்தவன். சிமியோன் கோத்திரத்தை சேர்ந்தவன். உயர்ந்த பொறுப்பில் இருந்தவன். அவனுடன் சென்ற பெண் மீதியான் இனத்தை சேர்ந்தவள்.

அதை ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் கண்ட போது, அவன் நடு சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியை தன் கையிலே பிடித்து, இஸ்ரவேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம் பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய், இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவி போக அவர்களை குத்தி போட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்று போயிற்று. அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்து நாலாயிரம் பேர். (எண். 25:7-9)

ஆசரிப்பு கூடாரத்திற்கு முன்பாக இடம் பெற்ற ஜெபத்தில் மோசேயுடன் தரித்து இருந்தவர்களில் ஒருவன் பெயர் பினெகாஸ் என்பது ஆகும். அவன் முதல் பிரதான ஆசாரியனாக இருந்த ஆரோனுக்கு பிறந்த எலெயாசார் என்பவனின் மகன் ஆகும்.

எலெயாசாரின் மகன் பினெகாஸ் வேசித்தனம் பண்ணுபவர்களை கொன்றான்

எலெயாசார் ஆரோனின் இடத்தில் பிரதான ஆசாரியனான பொழுது எலெயாசாரின் மகன் பினெகாஸ் கர்த்தருக்கு பரிசுத்தம் என்று தன் வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்ந்தான். தவறு செய்தவர்களை தூக்கில் இடுங்கள் என்று 5-வது வசனத்தில் மோசே கொடுத்த கட்டளையை பெற்றவர்களில் பினெகாசும் ஒருவன். தன் தகப்பனாகிய எலெயாசாரின் காலத்திற்கு பின்னர் பிரதான ஆசாரியன் என்ற பட்டத்திற்கு வர

வேண்டியவன் பினெகாஸ். கானான் பிரவேசிக்க வேண்டிய வேளையில் பாவம் பிரவேசித்து விட்டதே என்று ஜெபத்தில் பங்கு பெற்று கொண்டு இருந்தான். ஜெபத்தை அலட்சியம் செய்து மோசேயின் கண்களுக்கு முன்பாக மீதியான் இனத்தை சேர்ந்த ஒரு பெண்ணுடன் தனது கூடாரம் நோக்கி சென்று கொண்டிருக்கும் ஒரு எபிரெயனை பினெகாசின் கண்கள் பார்த்து விட்டன.

கர்த்தருடைய பரிசுத்தம் காக்கப்பட வேண்டும் என்று அவன் இதயம் வாஞ்சித்தது. தவறு செய்கின்றவர்களை தண்டியுங்கள் என்று மோசே கூறிய கட்டளையை அவன் மனம் நினைவு கூர்ந்தது. கையில் ஈட்டியுடன் அந்த இருவரையும் பின் தொடர்ந்தான். அவர்கள் இருவர் இருந்த கூடாரத்தின் உள் பகுதியில் பிரவேசித்தான். அவன் கையில் இருந்த ஈட்டி அந்த இருவர் வயிற்றையும் ஊடுருவி தரையில் தட்டியது. பழைய ஏற்பாட்டு நாட்களில் பாவம் செய்தவர்களுக்கு உடனடியாக பரிசு கிடைத்தது. தாங்க முடியாத பரிசாக கிடைத்த பரிசு இருந்தது. பரிசுத்தத்தை காக்கும் பணியில் பினெகாஸ் உறுதியுடன் நின்றது பரிசுத்தராகிய தேவனால் அங்கீகரிக்க பட்டது. பினெகாஸ் எடுத்த நடவடிக்கையின் விளைவாக வாதை நிறுத்த பட்டது. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்று போயிற்று என்று 8-வது வசனம் முற்றுப் பெறுகின்றது. அந்த வாதையால் செத்தவர்கள் கொஞ்சம் அல்ல. இருபத்தி நாலாயிரம் பேர் என்று பார்க்கிறோம். அத்தனை பேர் பாகால் பேயோருக்கு எடுத்த பண்டிகைகளில் பங்கு பெற்றிருந்தனர்.

106-வது சங்கீதம் 29,30,31-வது வசனங்களை பார்ப்போம். ''தங்கள் கிரியைகளினால் அவருக்கு கோபம் மூட்டினார்கள். ஆகையால் வாதை அவர்களுக்குள் புகுந்தது. அப்பொழுது பினெகாஸ் எழுந்து நின்று நியாயம் செய்தான். அதினால் வாதை நிறுத்த பட்டது. அது தலைமுறை தலைமுறையாக என்றைக்கும் அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.

> ***கர்த்தர் மோசேயை நோக்கி: நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்தி வைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர் மேல் உண்டான என் உக்கிரத்தை திருப்பினான். ஆகையால், இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையை கட்டளை இடுகிறேன். அவன் தன் தேவனுக்காக பக்தி வைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காக பாவநிவிர்த்தி செய்த படியினால், அவனுக்கும் அவனுக்கு பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்கு உரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார். (எண். 25:10-13)***

முன்னர் வாதை என்பது வந்த நேரங்களில் ஆரோன் தூப கலசம் கையில் எடுத்து பாவ நிவிர்த்தி செய்வது உண்டு. ஆனால் பினெகாஸ் தூப கலசம் கையில் எடுத்ததில்லை. பரிசுத்தம் என்பதை இதயத்தில் எடுத்தான். கையில் தூபகலசம் எடுத்து நிற்பதைவிட இதயத்தில் பரிசுத்தம் பெற்று வாழ்வதே கர்த்தரின் பார்வையில் கண்ணியம் பெறுகின்றது.

கர்த்தர் அளித்த தண்டனையினால் மரித்தவர்கள் மொத்தம் 24 ஆயிரம் பேர். 1கொரிந்தியர் 10-வது அதிகாரம் 8-வது வசனத்தை பார்ப்போம். ''அவர்களில் சிலர் வேசித்தனம் பண்ணி ஒரே நாளில் 23 ஆயிரம் பேர் விழுந்து போனார்கள். அது போல நாமும்

வேசித்தனம் பண்ணாது இருப்போமாக. எண்ணாகம புத்தகம் 25-வது அதிகாரம் 9-வது வசனத்தில் மரித்தவர்கள் 24 ஆயிரம் நபர் என்றும், பரிசுத்த பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதலாவது நிரூபம் 10-வது அதிகாரம் 8-வது வசனத்தில் மரித்தவர்கள் 23 ஆயிரம் பேர் என்றும் கூற படுகின்றது. 4,5 ஆகிய வசனங்களில் நியாயாதிபதிகளால் தூக்கில் இடப்பட்டவர்கள் ஆயிரம் பேர் என்றும், கர்த்தர் அனுப்பிய வாதையினால் செத்தவர்கள் 23 ஆயிரம் பேர் என்றும் இவ்வாறு மொத்தம் 24 ஆயிரம் மக்கள் மரித்தார்கள் என்றும் ஒரு குறிப்பு கூறுகின்றது.

மீதியானிய ஸ்திரீயோடே குத்துண்டு செத்த இஸ்ரவேல் மனிதனுடைய பேர் சிம்ரி; அவன் சல்லூவின் குமாரனும், சிமியோனியரின் தகப்பன் வம்சத்தில் ஒரு பிரபுவுமாய் இருந்தான். (எண். 25:14)

பினெகாசின் ஈட்டியினால் இறந்த மனிதனை பற்றிய மேல் விபரம் 14-வது வசனத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது. யாக்கோபின் 2-வது மகன் சிமியோன் என்பவன் வம்சத்தில் வந்தவன். பிரபுக்களில் ஒருவன். செல்வமும் சிறப்பும் பெற்றவன். ஜெப வேளையில் பாவம் செய்வதற்கு புறப்பட்டவன். அவனுடன் பாவத்திற்கு உடந்தையாக சென்ற பெண்ணை பற்றிய மேல் விவரம் 15-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது.

குத்துண்ட மீதியானிய ஸ்திரீயின் பேர் கஸ்பி, அவள் சூரின் குமாரத்தி, அவன் மீதியானியருடைய தகப்பன் வம்சத்தாரான ஜனங்களுக்கு தலைவனாய் இருந்தான். (எண். 25:15)

கஸ்பி என்ற பெயருக்கு வஞ்சிக்கிறவள் என்று பொருள் ஆகும். பிரசங்கியின் புத்தகம் 7-வது அதிகாரம் 26-வது வசனம். ''கண்ணிகளும் வலைகளுமாகிய நெஞ்சமும், கயிறுகளுமாகிய கைகளுமுடைய ஸ்திரீயானவள் சாவிலும் அதிக கசப்புள்ளவள் என்று கண்டேன்; தேவனுக்கு முன்பாக சற்குணனாய் இருக்கிறவன் அவளுக்கு தப்புவான்; பாவியோ அவளால் பிடி படுவான்.'' தங்களை நேசிக்கும் கர்த்தரை சீக்கிரமாக புறக்கணித்தார்கள். பாகால் பேயோரை வரவழைத்தார்கள். எனவே கேடு அடைந்தார்கள். இச்சை நிறைந்து துர் இச்சைக்கு இடமாக உடலை பயன் படுத்தினார்கள். வேசித்தனம் செய்தார்கள். பெரும் கேடு கண்டார்கள்'' என்று கூறுகின்றது. பரிசுத்த பவுல் கொரிந்தியர் என்பாருக்கு எழுதிய முதலாவது நிரூபம் 6-வது அதிகாரம் 18-வது வசனம், ''வேசித்தனத்திற்கு விலகி ஓடுங்கள். மனுஷன் செய்கிற எந்த பாவமும் சரீரத்திற்கு புறம்பாயிருக்கும். வேசித்தனம் செய்கிறவனோ தன் சுய சரீரத்திற்கு விரோதமாய் பாவம் செய்கிறான்'' என்று எச்சரிப்பு விடுக்கிறது. தொடர்ந்து 1 கொரிந்தியர் 3-வது அதிகாரம் 16, 17 ஆகிய வசனங்கள், ''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்'' என்று கூறுகின்றன.

25.3 மீதியானியர் தண்டிக்க படுகின்றனர்

கர்த்தர் மோசேயை நோக்கி: மீதியானியரை நெருக்கி, அவர்களை வெட்டி போடுங்கள். பேயோரின் சங்கதியிலும் பேயோரின் நிமித்தம் வாதை உண்டான நாளிலே குத்துண்ட அவர்கள் சகோதரியாகிய கஸ்பி என்னும்

மீதியான் பிரபுவினுடைய குமாரத்தியின் சங்கதியிலும், அவர்கள் உங்களுக்கு செய்த சர்ப்பனைகளினால் உங்களை மோசம் போக்கி நெருக்கினார்களே என்றார். (எண். 25:16-18)

கர்த்தர் திட்டவட்டமாக மோசேயுடன் பேசுகிறார். கர்த்தருக்கு விரோதமாக இஸ்ரவேல் மக்களை பாவம் செய்ய தூண்டிய மீதியானியர் நிச்சயமாகவே அழிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார். இதனை மோசே பினெகாஸ் மூலமும் யோசுவா மூலமும் நிறைவேற்றுவதை நாம் பின்னால் பார்க்க இருக்கின்றோம்.

தொகுதி - 8
கானானுக்குள் பிரவேசிக்க ஜனங்களை ஆயத்தபடுத்தும் கர்த்தர்

அத்தியாயம் - 26
கானானை பங்கிட இரண்டாவது கணக்கெடுப்பு

26.1 நாற்பது வருட பிரயாணத்திற்கு பின் இரண்டாவது கணக்கெடுப்பு

அந்த வாதை தீர்ந்தபின்பு, கர்த்தர் மோசேயையும் ஆரோனின் குமாரனும் ஆசாரியனுமாகிய எலெயாசாரையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையாரையும் அவர்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படி இருபது வயது முதல் அதற்கு மேற்பட்ட இஸ்ரவேலிலே யுத்தத்திற்கு புறப்பட தக்கவர்கள் எல்லாரையும் எண்ணுங்கள் என்றார். (எண். 26:1-2)

மோசே எடுக்கும் இரண்டாவது கணக்கெடுப்பு

எண்ணாகம புத்தகம் 26-வது அதிகாரத்தில் இரண்டாவது புள்ளி விவர கணிப்பு எடுக்க படுகின்றது. சுமார் 38 வருடங்களுக்கு முன்னர் கானான் செல்லும் மக்களின் தொகை கர்த்தருடைய கட்டளையின்படி சீனாய் மலையில் எழுதப்பட்டது. அதன் விபரத்தை எண்ணாகம புத்தகம் 1,2,3 ஆகிய அதிகாரங்களில் நாம் படித்தோம். எண்ணாகம புத்தகம் 26-வது அதிகாரத்தில் 38 வருடம் இடைவெளிக்கு பின்னர் இரண்டாவது புள்ளி விவர கணிப்பு இப்பொழுது எடுக்கப்படுகின்றது. இரண்டாவது கணக்கு எடுப்பில் ஒரு புதிய தலைமுறை காணப்படுகின்றது. முதலாம் தலைமுறை முற்றிலும் மறைந்துவிட்டது. எனவே இரண்டாவது கணக்கு எடுப்பு புதிய தலைமுறையினரை கணக்கு பார்க்கின்றது. மேலும் அது சீனாய் வனாந்தரத்தில் இருந்து புறப்பட்டவர் எத்தனை பேர், இப்பொழுது கானானுக்குள் நுழைய காத்திருப்போர் எத்தனை பேர் என்பதை பகுத்து சுட்டி காட்டுகின்றது.



எலெயாசருடன் மக்களிடம் பேசும் மோசே

அன்று ஒரு நாள் கானான் என்பது நமக்கு உரியது அல்ல என்ற செய்தியை 10 நபர்கள் பரப்பினார்கள். விட்டு வந்த இடத்திற்கு திரும்பி செல்லுவோம் என்ற முடிவிற்குள் அனைவரும் வந்தார்கள். அந்த முடிவிற்குள் வந்த அனைவரும் இப்பொழுது இல்லை. தாங்கள் விட்டு வந்த இடத்திற்கு அவர்கள் திரும்பி செல்லவில்லை. உலகை விட்டு கடந்து சென்று விட்டார்கள். தரிசித்து அல்ல, விசுவாசித்து செல்லுகின்றோம் என்ற யோசுவா, காலேப் என்ற இருவரையும் அன்று இகழ்ந்தார்கள். இகழ்ந்தவர்கள் இப்பொழுது இல்லை. ஆனால் விசுவாசித்த யோசுவா, காலேப் ஆகியவர்கள் தொடர்ந்து வாழ்கின்றார்கள். அன்று காணப்பட்ட அந்த சந்ததி மோசேயை மதிக்கவில்லை. கர்த்தரை துதிக்கவில்லை. எனவே கானான் காணவில்லை. தன்னை மதிக்காதவர்களை கர்த்தரும் மதிப்பதில்லை. கர்த்தரை மதிக்காத எவரும் இரண்டாவது புள்ளி விவர கணக்கில் இடம் பெறவில்லை என்பதை அறிய இருக்கின்றோம். அவிசுவாசம் கொண்ட அனைவரும் அகன்று போனார்கள். தொடர்ந்து மிரியாமும் கடந்து போனாள். ஆரோனும் அடக்கம் பண்ணப்பட்டான். கடந்த கணக்கு எடுப்பில் மோசேயுடன் ஆரோன் இருந்தான். இப்பொழுது ஆரோன் இல்லை. ஆரோனின் இடத்தில் அவனுடைய மகன் எலெயாசார் இருக்கின்றான். கடந்த 38 ஆண்டுகளில் எத்தனையோ மாற்றங்கள் இடம் பெற்று விட்டன.

அப்பொழுது மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் எரிகோவின் அருகே இருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோவாபின் சமனான வெளிகளிலே அவர்களோடே பேசி: கர்த்தர் மோசேக்கும் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரருக்கும் கட்டளை இட்டிருக்கிற படியே இருபது வயது முதல் கொண்டு இருக்கிறவர்களை எண்ணுங்கள் என்றார்கள். (எண். 26:3-4)

கர்த்தர் கூறியபடி 20 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் எத்தனை என்று எண்ண தொடங்கினார்கள். கோத்திரம் கோத்திரமாக எண்ண தொடங்கினார்கள். முதலாவது பிறந்தவன் ரூபன். எனவே கணக்கு எடுப்பு ரூபன் கோத்திரத்தில் துவங்கியது. இதன் விவரம் 5 முதல் 15 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. மூத்த மகனாக பிறந்தாலும் பரிசுத்தம் என்பதில் மூத்து பிறக்கவில்லை. ஆதியாகம புத்தகம் 35:22-வது வசனத்திலும், 49:4-வது வசனத்திலே ரூபன் என்பவனின் பின் வாங்குதல் காணப்படுகின்றது.

26.2 ரூபன் பாளயத்தினரின் கணக்கெடுப்பு

ரூபன் கோத்திரம்

ரூபன் இஸ்ரவேலின் மூத்த குமாரன்; ரூபனுடைய குமாரர், ஆனோக்கியர் குடும்பத்துக்கு தகப்பனான ஆனோக்கும், பல்லூவியர் குடும்பத்துக்கு தலைவனான பல்லூவும், எஸ்ரோனியர் குடும்பத்துக்கு தகப்பனான எஸ்ரோனும், கர்மீயர் குடும்பத்துக்கு தகப்பனான கர்மீயுமே. இவைகளே ரூபனியரின் குடும்பங்கள். அவர்களில் எண்ண பட்டவர்கள் நாற்பத்து மூவாயிரத்து எழுநூற்று முப்பது பேர். பல்லூவின் குமாரன் எலியாப். எலியாபின் குமாரர் நேமுவேல், தாத்தான், அபிராம் என்பவர்கள்; இந்த தாத்தான் அபிராம் என்பவர்களே சபையில் பேர் பெற்றவர்களாய் இருந்து, கர்த்தருக்கு விரோதமாக போராட்டம் பண்ணி, கோராகின் கூட்டாளிகளாகி, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக விவாதம் பண்ணினவர்கள். பூமி தன் வாயை திறந்து, அவர்களையும் கோராகையும் விழுங்கினதினாலும், அக்கினி இருநூற்று ஐம்பது பேரை பட்சித்ததினாலும், அந்த கூட்டத்தார் செத்து, ஒரு அடையாளமானார்கள். கோராகின் குமாரரோ சாகவில்லை. (எண். 26:5-11)

கர்த்தருக்கு விரோதமாகவும், பெற்ற தகப்பனுக்கு விரோதமாகவும் ரூபன் துரோகம் செய்தான். மேலும் மோசேக்கு எதிராக புறப்பட்டு வந்த தாத்தான், அபிராம் என்பவர்கள் ரூபன் கோத்திரத்தை சேர்ந்தவர்களே ஆகும். தாத்தான், அபிராம் என்ற இருவரும் பரிசுத்தத்தில் வேகம் கொள்ளாமல் பதவியில் மோகம் கொண்டார்கள். கோராகின் கூட்டத்துடன் சேர்ந்து பாதாளம் சென்றார்கள். இரண்டாவது கணக்கு எடுப்பில் ரூபன் கோத்திரம் முதல் இடம் பெறவில்லை. முதல் கணக்கு எடுப்பில் ரூபனின் கோத்திரத்து எண்ணிக்கை 46,500 என்பது ஆகும். இரண்டாவது கணக்கு எடுப்பில் மொத்த எண்ணிக்கை 43,730 என்பது ஆகும். 2,770 ஆண்கள், இரண்டாவது கணிப்பில் குறைந்து விட்டார்கள். ரூபனின் கோத்திரத்தில் 4 குடும்பங்கள் இருந்தன. ஆயினும் ரூபனின் கோத்திரம் வளர்ச்சி பெறவில்லை. பாவம் என்பது வளர்ச்சி தருவது இல்லை.

சிமியோன் கோத்திரம்

சிமியோனுடைய குமாரரின் குடும்பங்களாவன: நேமுவேலின் சந்ததியான நேமுவேலரின் குடும்பமும், யாமினியின் சந்ததியான யாமினியரின் குடும்பமும், யாகீனின் சந்ததியான யாகீனியரின் குடும்பமும், சேராகின் சந்ததியான சேராகியரின் குடும்பமும், சவுலின் சந்ததியான சவுலியரின் குடும்பமுமே. இவைகளே சிமியோனியரின் குடும்பங்கள். அவர்கள் இருபத்து ஈராயிரத்து இருநூறு பேர். (எண். 26:12-14)

அடுத்தாற்போல் எண்ணப்பட்ட கோத்திரம் சிமியோனின் கோத்திரம் என்பது ஆகும். 12 முதல் 14 வசனங்களில் சிமியோன் கோத்திரம் எண்ணப்படுகின்றது. சிமியோன் இரண்டாவது பிறந்த மகன் என்பதை ஆதியாகமம் 29:33-வது வசனம் காட்டுகின்றது. இரண்டாவது கணக்கு எடுப்பில் இரண்டாவது பிறந்த மகன் பெரும் இழப்பு காண்கின்றான். 38 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற முதல் கணக்கு எடுப்பில் சிமியோன் கோத்திரத்து

ஆண்களின் மொத்த எண்ணிக்கை 59,300 என்பது ஆகும். இப்பொழுது இடம் பெறும் இரண்டாவது கணக்கு எடுப்பில் ஆண்களின் எண்ணிக்கை 22,200 என்பதே ஆகும். 37,100 ஆண்கள் சிமியோன் கோத்திரத்தில் குறைந்து விட்டார்கள். அதற்கு காரணம் பரிசுத்தம் என்பது மறைந்து விட்டதே ஆகும்.

எண்ணாகம புத்தகம் 25-வது அதிகாரத்தில் மோவாபிய பெண்களுடன் தவறாக நடந்த மக்கள் அனைவரும் சிமியோன் கோத்திரத்தை சேர்ந்தவர்களே ஆகும். கஸ்பி என்ற பெண்ணினால் வஞ்சிக்கப்பட்டு பினேகாசின் ஈட்டிற்கு இரையாகி போன சிம்ரி என்பவன் சிமியோன் கோத்திரத்து தலைவன் என்பதை நாம் கண்டோம். தூய்மை, உண்மை என்பதில் தவறிய தலைவர்கள் கொண்ட கோத்திரம் மேன்மை காணவில்லை. பாவம் என்பதே கோத்திரங்களை வளர விடவில்லை, சிறுகவே செய்தது. சிமியோன் கோத்திரம் சிறுத்து போனது. 5 குடும்பங்கள் பெற்ற சிமியோன் கோத்திரம் அதிகம் இழந்தது.

காத் கோத்திரம்

> *காத்துடைய குமாரரின் குடும்பங்களாவன: சிப்போனின் சந்ததியான சிப்போனியரின் குடும்பமும், ஆகியின் சந்ததியான ஆகியரின் குடும்பமும், சூனியின் சந்ததியான சூனியரின் குடும்பமும், ஒஸ்னியின் சந்ததியான ஒஸ்னியரின் குடும்பமும், ஏரியின் சந்ததியான ஏரியரின் குடும்பமும், ஆரோதின் சந்ததியான ஆரோதியரின் குடும்பமும், அரேலியின் சந்ததியான அரேலியரின் குடும்பமுமே. இவைகளே காத் புத்திரரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ண பட்டவர்கள் நாற்பது ஆயிரத்து ஐந்நூறு பேர். (எண். 26:15-18)*

தொடர்ந்து காத் கோத்திரம் எண்ண படுகின்றது. 7 குடும்பங்கள் கொண்ட காத் கோத்திரம் இரண்டாவது கணக்கு எடுப்பில் குறைந்து விட்டது. முதல் கணக்கு எடுப்பில் 45,650 பேர் எண்ண பட்டார்கள். இரண்டாவது கணக்கு எடுப்பில் 40,500 பேர் மட்டுமே தொகை இடப்பட்டார்கள். 5,150 ஆண் மக்கள் குறைந்து போனார்கள். காத் என்பவன் யாக்கோபிற்கு பிறந்த 7-வது மகன் ஆகும். இதனை ஆதியாகம புத்தகம் 30-வது அதிகாரம் 11-வது வசனத்தில் பார்க்கலாம்.

மேலே கூற பட்ட ரூபன், சிமியோன், காத் என்ற மூன்று கோத்திரத்தாரும் ஆசரிப்பு கூடாரத்தின் தென்புறமாக பாளயம் இறங்க வேண்டும் என்று எண்ணாகமம் 2:2-16 வசனங்களில் பார்த்தோம். அவர்களது கூட்டு எண்ணிக்கை பிரயாணம் துவங்குகையில் 1,51,400 ஆக இருந்தது. இப்பொழுது 38 வருடங்களுக்கு பின்னர் 1,06,430 ஆக குறைந்து விட்டது.

26.3 யூதா பாளயத்தினரின் கணக்கெடுப்பு

யூதா கோத்திரம்

> *யூதாவின் குமாரர் ஏர் ஓனான் என்பவர்கள்; ஏரும் ஓனானும் கானான் தேசத்தில் செத்தார்கள். (எண். 26:19)*

நான்காவதாக எண்ணப்பட்ட கோத்திரம் யூதா கோத்திரம் என்பது ஆகும். ஆதியாகம புத்தகம் 29-வது அதிகாரம் 35-வது வசனத்தில் யூதா 4-வதாக பிறந்த குமாரன் என்று

கூறப்படுகின்றது. யூதா கோத்திரத்து இரண்டாவது கணக்கு எடுப்பு 19 முதல் 22 வசனங்களில் இடம் பெறுகின்றது. ஆதியாகம புத்தகத்தில் 5 குடும்பங்கள் யூதா கோத்திரம் பெற்று இருந்தது. ஆனால் அதில் முதல் இரண்டு குடும்பங்கள் அழிந்து போய் விட்டன. மூத்த மகன் முறை தவறி நடந்தபடியினால் முற்றிலும் அழிக்க பட்டான் என்பதை ஆதியாகம புத்தகம் 38:7-வது வசனம் எடுத்து கூறுகின்றது. யூதாவின் மூத்த மகனாகிய ஏர் என்பவன் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாதவனாய் இருந்ததினால் கர்த்தர் அவனை அழித்து போட்டார்.

ஓனான் என்ற யூதாவின் அடுத்த மகனும் கர்த்தரால் அழிக்க பட்டான் என்று ஆதியாகமம் 38:8-10 வசனங்கள் கூறுகின்றன. ''தன் வித்தை தரையிலே விழ விட்டு கெடுத்தான். அவன் செய்தது கர்த்தரின் பார்வைக்கு பொல்லாததாய் இருந்ததினால் அவனையும் அவர் அழித்து போட்டார்.'' குடும்ப வாழ்வில் செலவு செய்யப்பட வேண்டிய வித்தை சுயமாக செலவு செய்தான். கர்த்தரால் அழிக்க பட்டான். குடும்ப வாழ்விற்கு என்று மிகவும் கிருபையாக கர்த்தரால் மனிதனுக்கு கொடுக்க பட்டு இருக்கும் சலுகைகளை முறை தவறி அனுபவிக்கும் மனிதர்கள் முற்றிலுமாக அழிக்க படுகின்றார்கள். ஏர், ஓனான் என்ற யூதாவின் முதல் இரண்டு குமாரர்களும் செத்தார்கள் என்று இந்த வசனம் கூறுகின்றது. என்று, எப்படி அழிக்க பட்டார்கள் என்பது கூறவில்லை. நடத்தை என்பது கெட்டு போகும் பொழுது அழிவு என்பது என்று, எப்படி வரும் என்று ஒருவரும் அறிவது இல்லை. ''அடிக்கடி கடிந்து கொள்ள பட்டும் தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடுதியிலே நாசம் அடைவான்'' என்று நீதிமொழிகளின் புத்தகம் 29:1-வது வசனம் கூறுகின்றது.

> ***யூதாவுடைய மற்ற குமாரரின் குடும்பங்களாவன: சேலாவின் சந்ததியான சேலாவியரின் குடும்பமும், பாரேசின் சந்ததியான பாரேசியரின் குடும்பமும், சேராவின் சந்ததியான சேராவியரின் குடும்பமுமே. பாரேசுடைய குமாரரின் குடும்பங்களாவன: எஸ்ரோனின் சந்ததியான எஸ்ரோனியரின் குடும்பமும், ஆமூலின் சந்ததியான ஆமூலியரின் குடும்பமுமே. இவைகளே யூதாவின் குடும்பங்கள் அவர்களில் எண்ணப்பட்டவர்கள் எழுபத்து ஆறாயிரத்து ஐநூறு பேர். (எண். 26:20-22)***

எண்ணாகம புத்தகம் 26-வது அதிகாரம் 20,21 ஆகிய வசனங்களில் யூதா கோத்திரத்தில் 5 வாரிசுகள் பிறந்தன என்று காண்கின்றோம். பாவம் செய்ததினால் முதல் இரண்டு வாரிசுகள் அழிந்து போயின. மூன்று ஆண் மக்கள் பாவ வழியில் செல்லவில்லை. அவர்களுடைய குடும்பங்கள் இரண்டாவது கணக்கு எடுப்பில் காண படுகின்றன. இந்த மூன்று குடும்பங்களில் ஒன்று பாரேஸ் என்ற குடும்பம் ஆகும். பாரேஸ் என்ற இவருடைய குடும்பத்தின் வழியில் கல்வாரி நாயகர் பிறந்தார்.

யூதாவின் ஐந்து பிள்ளைகளில் பாரேஸ் என்ற மகனின் குடும்பம் மட்டும் 21-வது வசனத்தில் குறிப்பிட்டு காட்ட படுகின்றது. பாரேஸ் என்பவரின் குடும்பத்தில் உலக இரட்சகரான கர்த்தராகிய இயேசு உதிக்க இருக்கின்றார் என்பதே அதற்கு காரணம் ஆகும். பாரேஸ் என்ற பெயர் பரிசுத்த மத்தேயு என்பவர் எழுதிய சுவிசேஷம் முதல் அதிகாரம் வரை தொடருவதற்கு இருக்கின்றது. பாரேஸின் மகன் எஸ்ரோனின் சந்ததி 21-வது வசனத்தில் அறிமுகம் படுத்தப்படுகின்றது. அந்த சந்ததியில் தாவீது அரசன் பிறந்தான். தாவீது வம்சத்தில் இயேசு பிறந்தார். ரூத்தின் புத்தகம் 4:18-22 வசனங்கள். ''பேரேசுடைய சந்ததியின் வரலாறு: பேரேஸ் எஸ்ரோமை பெற்றான். எஸ்ரோம் ராமை பெற்றான். ராம்

அம்மினதாபை பெற்றான். அம்மினதாப் நகசோனை பெற்றான். நகசோன் சல்மோனை பெற்றான். சல்மோன் போவாசை பெற்றான். போவாஸ் ஓபேதை பெற்றான். ஓபேத் ஈசாயை பெற்றான். ஈசாய் தாவீதை பெற்றான்.''

''ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு'' என்று புதிய ஏற்பாட்டு நூலின் முதல் புத்தகத்தின் முதல் வசனம் துவங்குகின்றது. மனுக்குலத்தின் பாவத்திற்கு பரிகாரம் செய்கின்றவர் ஒரு நாள் வரப் போகின்றார் என்பதையே எண்ணாகம புத்தகம் 26-வது அதிகாரத்தில் இடம் பெற்று கொண்டு இருக்கும் கணக்கு எடுப்பு முன் கூட்டி அறிமுகம் படுத்துகின்றது.

முதல் கணக்கு எடுப்பில் யூதா கோத்திரத்தின் எண்ணிக்கை 74,600 ஆகும். இரண்டாவது கணக்கு எடுப்பில் 76,500 ஆகும். யூதா கோத்திரத்தில் 1900 பேர் அதிகம் ஆனார்கள். ஐந்து வாரிசுகளில் இரண்டு வாரிசு வரிசையில் காண படவில்லை என்ற போதிலும் பாவங்ளை அகற்றி வாழ்ந்த மூன்று குடும்பங்கள் மூலமாக யூதா கோத்திரம் வளர்ச்சி கண்டது. யூதாவை குறித்து ஓசியா தீர்க்கதரிசி கூறுவதை கேளுங்கள். ''யூதாவோவெனில் இன்னும் தேவனோடே அரசாண்டு, பரிசுத்தவான்களோடே உண்மையாய் இருக்கிறான்.'' (ஓசியா 11:12b).

இசக்கார் கோத்திரம்

> *இசக்காருடைய குமாரரின் குடும்பங்களாவன: தோலாவின் சந்ததியான தோலாவியரின் குடும்பமும், பூவாவின் சந்ததியான பூவாவியரின் குடும்பமும், யாசூபின் சந்ததியான யாசூபியரின் குடும்பமும், சிம்ரோனின் சந்ததியான சிம்ரோனியரின் குடும்பமுமே. இவைகளே இசக்காரின் குடும்பங்கள். அவர்களில் எண்ண பட்டவர்கள் அறுபத்து நாலாயிரத்து முன்நூறு பேர். (எண். 26:23-25)*

ஐந்தாவதாக எண்ண பட்ட கோத்திரம் இசக்கார் கோத்திரம் என்பது ஆகும். 23 முதல் 25 வசனங்களில் இசக்கார் கோத்திரம் கணக்கு எடுப்பில் பங்கு பெறுகின்றது. இசக்கார் யாக்கோபின் 9-வது மகன் ஆகும். முதலாவது தொகை எடுப்பில் இசக்கார் கோத்திரத்து எண்ணிக்கை 54,400 ஆகும். இப்பொழுது 64,800 ஆகும். 9,900 ஆண்கள் அதிகம் பெற்றனர். அநீதி தவிர்த்து வாழ்ந்த கோத்திரமாக இசக்கார் கோத்திரம் வாழ்ந்து வளர்ந்தது. இசக்காரின் கூடாரங்களில் சந்தோஷம் காணப்படும் என்று மோசே வாழ்த்துவதை உபாகம புத்தகம் 33:18-வது வசனத்தில் காண்கிறோம்.

செபுலோன் கோத்திரம்

> *செபுலோனுடைய குமாரரின் குடும்பங்களாவன: சேரேத்தின் சந்ததியான சேரேத்தியரின் குடும்பமும், ஏலோனின் சந்ததியான ஏலோனியரின் குடும்பமும், யாலேயேலின் சந்ததியான யாலேயேலியரின் குடும்பமுமே. இவைகளே செபுலோனியரின் குடும்பங்கள். அவர்களில் எண்ணப்பட்டவர்கள் அறுபது ஆயிரத்து ஐநூறுபேர். (எண். 26:26-27)*

அடுத்ததாக எண்ணப்பட்ட கோத்திரம் செபுலோன் கோத்திரம் என்பது ஆகும். யாக்கோபின் 10-வது மகனாக செபுலோன் பிறந்தான். முதல் கணக்கு எடுப்பில் 57,400

எண்ணிக்கை பெற்றவன் இரண்டாவது கணக்கு எடுப்பில் 60,500 எண்ணிக்கை பெற்றான். 3,100 பேர் அதிகம் பெற்று செபுலோன் கோத்திரம் வளர்ச்சி கண்டது.

யூதா கோத்திரத்தின் தலைமையில், இசக்கார், செபுலோன் என்ற கோத்திரங்களாக சேர்ந்து மூன்று கோத்திரங்களும் இஸ்ரவேல் ஜன திரள் பிரயாணம் பண்ணுகையில் யூதாவின் கொடி பிடித்து முதலாக செல்ல வேண்டியவர்கள். அவர்கள் சூரியன் உதிக்கும் திசையில் கீழ்புறமாகிய கிழக்கே பாளயம் இறங்க வேண்டும் என்று எண்ணாகமம் 2:3-வது வசனத்திலே பார்த்தோம். யூதா, ரூபன் தலைமையில் ஆறு கோத்திரங்கள் தெற்கும் கிழக்குமாக பாளயம் இறங்கிய பின், லேவி கோத்திரத்தார் ஆசரிப்பு கூடாரத்தை இவர்களுக்கு நடுவாக கொண்டு வந்து பாளயத்தின் நடுவாக அதனை அமைப்பார்கள். யூதா கோத்திரம் ஆசரிப்பு கூடார வாயிலுக்கு நேராக, மோசே, ஆரோன் ஆகியவர்கள் தங்கள் குடும்பத்தோடு தங்கும் கூடாரங்களுக்கு பின்னாக இருக்கும். இந்த பாளயத்தின் தொகை முதலாம் கணக்கெடுப்பில் 1,86,400 ஆக இருந்தது. கானான் பூமிக்குள் பிரவேசிப்பதற்கு முன்னால் அவர்கள் பாளயத்தின் யுத்த சன்னத்தினரான புருஷர்கள் 2,01,800 ஆக வளர்ந்து விட்டார்கள்.

26.4 எப்பிராயீம் பாளயத்தினரின் கணக்கெடுப்பு

மனாசே கோத்திரம்

யோசேப்புடைய குமாரரான மனோசே எப்பிராயீம் என்பவர்களின் குடும்பங்களாவன: மனாசேயினுடைய குமாரரின் குடும்பங்கள் மாகீரின் சந்ததியான மாகீரியரின் குடும்பமும், மாகீர் பெற்ற கிலெயாதின் சந்ததியான கிலெயாதியரின் குடும்பமும், கிலெயாத் பெற்ற ஈயேசேரின் சந்ததியான ஈயேசேரியரின் குடும்பமும், ஏலேக்கின் சந்ததியான ஏலேக்கியரின் குடும்பமும், அஸ்ரியேலின் சந்ததியான அஸ்ரியேலரின் குடும்பமும், சேகேமின் சந்ததியான சேகேமியரின் குடும்பமும், செமீதாவின் சந்ததியான செமீதாவியரின் குடும்பமும், ஏப்பேரின் சந்ததியான ஏப்பேரியரின் குடும்பமுமே. ஏப்பேரின் குமாரனான செலொப்பியாத்திற்கு குமாரர் இல்லாமல், குமாரத்திகள் மாத்திரம் இருந்தார்கள். இவர்கள் நாமங்கள் மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவைகள். இவைகளே மனாசேயின் குடும்பங்கள்; அவர்களில் எண்ண பட்டவர்கள் ஐம்பது ஈராயிரத்து எழுநூறு பேர். (எண். 26:28-34)

7-வதாக எண்ணப்படும் கோத்திரம் மனாசே கோத்திரம் என்பது ஆகும். யோசேப்பின் முதல் மகனாக மனாசே பிறந்தான் என்று ஆதியாகம புத்தகம் 46:20-வது வசனம் கூறுகின்றது. முதலாவது தொகை எடுப்பில் 32,200 பேராக இருந்தவர் இரண்டாவது எண்ணிக்கையில் 52,700 பேராக மாறி விட்டார்கள். 20,500 பேர் மனாசே கோத்திரத்தில் அதிகம் ஆனார்கள். எட்டு குடும்பங்கள் பெற்று மனாசேயின் கோத்திரம் அனைத்து கோத்திரங்களையும் விட அதிகமான வளர்ச்சியை கண்டது.

எப்பிராயீம் கோத்திரம்

எப்பிராயீமுடைய குமாரரின் குடும்பங்களாவன: சுத்தெலாகின் சந்ததியான சுத்தெலாகியரின் குடும்பமும், பெகேரின் சந்ததியான பெகேரியரின்

குடும்பமும், தாகானின் சந்ததியான தாகானியரின் குடும்பமும், சுத்தெலாக் பெற்ற ஏரானின் சந்ததியான ஏரானியரின் குடும்பமுமே. இவைகளே எப்பிராயீம் புத்திரரின் குடும்பங்கள். அவர்களில் எண்ண பட்டவர்கள் முப்பத்து ஈராயிரத்து ஐந்நூறு பேர், இவர்களே யோசேப்பு புத்திரரின் குடும்பங்கள். (எண். 26:35-37)

8-வதாக எண்ணப்பட்ட கோத்திரம் எப்பிராயீம் கோத்திரம் என்பதை நாம் காண்கின்றோம். யோசேப்பின் 2-வது மகன் எப்பிராயீம் என்று ஆதியாகம புத்தகம் 50:23-வது வசனம் கூறுகின்றது. முன்பு 40,500 எண்ணிக்கை பெற்றவர் இப்பொழுது 32,500 பேராக காண படுகின்றார்கள். 8000 பேர் குறைவு கண்டார்கள். ஓசியா தீர்க்கதரிசியின் புத்தகம் 8:11-13 வசனங்களில் ''எப்பிராயீம் பாவம் செய்வதற்கு ஏதுவாய் பலிபீடங்களை பெருக பண்ணினார்கள். ஆதலால் பலிபீடங்களே அவர்கள் பாவம் செய்வதற்கு ஏதுவாகும் என வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதி கொடுத்தேன்; அவைகளை அந்நிய காரியமாக எண்ணினார்கள். எனக்கு செலுத்தும் பலிகளின் மாமிசத்தை அவர்கள் பலி இட்டு புசிக்கிறார்கள். கர்த்தர் அவர்கள் மேல் பிரியமாய் இரார்'' என்று கூறுவதை காண்கிறோம். அவர்களில் சிலர் எகிப்து தேசத்திற்கே திரும்பி போய் இருக்கலாம் என்றும் அறிகிறோம்.

பென்யமீன் கோத்திரம்

பென்யமீனுடைய குமாரரின் குடும்பங்களாவன: பேலாவின் சந்ததியான பேலாவியரின் குடும்பமும், அஸ்பேலின் சந்ததியான அஸ்பேலியரின் குடும்பமும், அகிராமின் சந்ததியான அகிராமியரின் குடும்பமும், சுப்பாமின் சந்ததியான சுப்பாமியரின் குடும்பமும், உப்பாமின் சந்ததியான உப்பாமியரின் குடும்பமும், பேலா பெற்ற ஆரேதின் சந்ததியான ஆரேதியரின் குடும்பமும், நாகமானின் சந்ததியான நாகமானியரின் குடும்பமுமே. இவைகளே பென்யமீன் புத்திரரின் குடும்பங்கள்: அவர்களில் எண்ண பட்டவர்கள் நாற்பத்து ஐயாயிரத்து அறுநூறு பேர். (எண். 26:38-41)

9-வதாக எண்ணப்பட்டவர் பென்யமீன் கோத்திரம் என்று அறிகின்றோம். பென்யமீன் யாக்கோபின் கடைசி மகன் ஆகும். 35,400 பேர் கண்ட கோத்திரம் இரண்டாவது கணக்கு எடுப்பில் 45,600 பேர் கொண்டது. 10,200 பேர் அதிகம் பெற்றனர். 7 குடும்பங்கள் கொண்ட அந்த கோத்திரம் வளர்ச்சியில் 2-வது இடத்தை பெற்று கொண்டது.

எப்பிராயீம் தலைமையில் மனாசே, பென்யமீன் கோத்திரங்களோடு சென்ற மூன்றாவது சேனை ஆசரிப்பு கூடாரத்தின் மேற்கு புறமாக பாளயம் இறங்க வேண்டும் என்பதையும், அவர்களின் எண்ணிக்கை சீனாய் மலையில் புறப்படுகையில் 1,08,100 என்றும் எண்ணாகமம் 2:18-24 வசனங்களில் பார்த்தோம். இப்பொழுது அது 1,30,800 ஆக வளர்ந்து உள்ளது.

26.5 தாண் பாளயத்தினரின் கணக்கெடுப்பு

தாண் கோத்திரம்

தாணுடைய குமாரரின் குடும்பங்களாவன: சூகாமின் சந்ததியான சூகாமியரின் குடும்பமே; இவைகள் தாணின் குடும்பம். சூகாமியரின் வம்சங்களில் எண்ணப்பட்டவர்கள் எல்லாரும் அறுபத்து நாலாயிரத்து நானூறு பேர். (எண். 26:42-43)

தொடர்ந்து 10-வதாக எண்ணப்பட்ட கோத்திரம் தாண் கோத்திரம் என்பது ஆகும். ஆதியாகம புத்தகம் 30:6-வது வசனத்தில் தாண் யாக்கோபிற்கு பிறந்த 5-வது மகன் என்று கூறப்படுகின்றது. முதல் கணக்கு எடுப்பில் 62,700 பேராக இருந்தவர் இரண்டாவது எண்ணிக்கையில் 64,400 பேராக மாறி விட்டார்கள். 1700 பேர் அதிகம் பெற்றனர்.

ஆசேர் கோத்திரம்

ஆசேருடைய குமாரரின் குடும்பங்களாவன: இம்னாவின் சந்ததியான இம்னாவியரின் குடும்பமும், இஸ்வியின் சந்ததியான இஸ்வியரின் குடும்பமும், பெரீயாவின் சந்ததியான பெரீயாவியரின் குடும்பமும், பெரீயா பெற்ற ஏபேரின் சந்ததியான ஏபேரியரின் குடும்பமும், மல்கியேலின் சந்ததியான மல்கியேலியரின் குடும்பமுமே. ஆசேருடைய குமாரத்தியின் பேர் சாராள். இவைகளே ஆசேர் புத்திரரின் குடும்பங்கள். அவர்களில் எண்ண பட்டவர்கள் ஐம்பத்து மூவாயிரத்து நானூறு பேர். (எண். 26:44-47)

11-வதாக எண்ணப்பட்ட கோத்திரம் ஆசேர் கோத்திரம் என்பதை 44 முதல் 47 வசனங்களில் வாசிக்கின்றோம்.

ஆதியாகமம் 30:13-வது வசனத்தில் யாக்கோபின் 8-வது மகனாக பிறந்தவன் ஆசேர் என்று பார்க்கின்றோம். 5 குடும்பங்கள் கொண்ட ஆசேர் கோத்திரத்தின் முதல் தொகை 47,500 என்பது ஆகும். இரண்டாவது கணக்கு எடுப்பில் தொகை 53,400 என்பது ஆகும். 11,900 பேர் அதிகம் கண்டனர்.

நப்தலி கோத்திரம்

நப்தலியினுடைய குமாரரின் நாமங்களாவன: யாத்சியேலின் சந்ததியான யாத்சியேலியரின் குடும்பமும், கூனியின் சந்ததியான கூனியரின் குடும்பமும், எத்செரின் சந்ததியான எத்செரியரின் குடும்பமும், சில்லேமின் சந்ததியான சில்லேமியரின் குடும்பமுமே. இவைகளே நப்தலியின் குடும்பங்கள்; அவர்களில் எண்ண பட்டவர்கள் நாற்பத்து ஐயாயிரத்து நானூறு பேர். (எண். 26:48-50)

12-வதாக கடைசியாக எண்ணப்பட்ட கோத்திரம் நப்தலி கோத்திரம் என்பது ஆகும். நப்தலி கோத்திரம் 4 குடும்பங்கள் கொண்டது. நப்தலி யாக்கோபின் 6-வது மகன் என்று ஆதியாகமம் 35:25-வது வசனம் கூறுகின்றது. முதல் கணக்கு எடுப்பில் நப்தலி

கோத்திரத்தின் தொகை 53,400 ஆகும். இப்பொழுது 45,400 ஆகும். 8000 பேர் குறைந்து காணப்படுகின்றனர்.

26.6 சுதந்தரிக்க போகும் தேசத்தில் சுதந்திரம் பங்கிட வேண்டிய முறை

இஸ்ரவேல் புத்திரரில் எண்ணப்பட்டவர்கள் ஆறு லட்சத்து ஓராயிரத்து எழுநூற்று முப்பது பேராய் இருந்தார்கள். கர்த்தர் மோசேயை நோக்கி: இவர்களுடைய பேர்களின் இலக்கத்திற்கு தக்கதாய் தேசம் இவர்களுக்கு சுதந்தரமாக பங்கு இடப்பட வேண்டும். அநேகம் பேருக்கு அதிக சுதந்தரமும் கொஞ்சம் பேருக்கு கொஞ்ச சுதந்தரமும் கொடுப்பாயாக; அவர்களில் எண்ணப்பட்ட இலக்கத்திற்கு தக்கதாக அவரவர்களுக்கு சுதந்தரம் கொடுக்கப்பட வேண்டும். (எண். 26:51-54)

சீனாய் வனாந்தரத்தில் இருந்து புறப்படுகையில் இஸ்ரவேலின் யுத்தவீரரின் எண்ணிக்கை 603550 (எண். 2:32) என்று பார்த்தோம். கானானுக்குள் புகும் முன்னர் மோவாப் சமவெளியில் அவர்கள் எண்ணிக்கை 601730 என்று பார்க்கிறோம். மொத்தத்தில் எண்ணிக்கையில் 1820 பேர் குறைவு பெற்றனர். 12 கோத்திரங்களே எண்ணப்பட்டன. யூதா, இசக்கார், செபுலோன், மனாசே, பெஞ்சமின், தாண், ஆசேர் ஆகிய 7 கோத்திரங்கள் வளர்ச்சி கண்டன. ரூபன், சிமியோன், காத், எப்பிராயீம், நப்தலி ஆகிய ஐந்து கோத்திரங்கள் வளர்ச்சி இழந்தன. 54-வது வசனத்தில் கோத்திரங்களின் எண்ணிக்கைக்கு தக்கதாக கானான் பூமியின் இடம் பிரிக்கப்பட வேண்டும் என்று கூற படுகின்றது. அநேகம் பேருக்கு அதிகம் இடம் கொடுக்கப்பட வேண்டும் என்று கூற படுகின்றது. கோத்திரம் கோத்திரமாக இடம் ஒதுக்கப்பட்ட பின்னர் தங்களுக்கு என்று குறிக்கப்பட்ட இடங்களில் கோத்திரங்களின் குடும்பங்கள் தங்க வேண்டும்.

ஆனாலும் சீட்டு போட்டு, தேசத்தை பங்கிட வேண்டும்; தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களுக்கு உரிய நாமங்களின் படியே சுதந்தரித்து கொள்ள கடவர்கள். அநேகம் பேர்களாயினும் கொஞ்சம் பேர்களாயினும் சீட்டு விழுந்தபடியே அவரவர்களுடைய சுதந்தரங்கள் பங்கிடப்பட வேண்டும் என்றார். (எண். 26:55-56)

எந்த குடும்பம் எந்த குறிப்பிட்ட இடத்தில் தங்க வேண்டும் என்பதை சீட்டு போட்டு தெரிந்து கொள்ள வேண்டும் என்று காண்கின்றோம். சீட்டு போடுதல் என்பது ஊரீம் தும்மீம் என்பவைகளை உபயோகித்தல் என்பது ஆகும். ஊரீம் என்றால் 'ஆம்' என்றும், தும்மீம் என்றால் 'இல்லை' என்றும் பொருள்படும். பிரதான ஆசாரியனின் வஸ்திரத்தில் இருந்த நியாயவிதி மார்ப்பதக்கத்தில் ஊரீம் தும்மீம் வைக்கப்பட்டு இருந்தது. ''நியாயவிதி மார்ப்பதக்கத்திலே ஊரீம் தும்மீம் என்பவைகளை வைப்பாயாக; ஆரோன் கர்த்தருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கும் போது அவைகள் அவன் இருதயத்தின் மேல் இருக்க வேண்டும்'' என்று யாத்திராகம புத்தகம் 28:30-வது வசனத்தின் முன் பகுதி கூறுகின்றது.

கர்த்தருக்கு பிரியமானது எது என்பதை பரிசோதித்து பார்க்கும் இதயம் பெற்றவராக கர்த்தரை விசுவாசிக்கின்றவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காக ஆரோனின் இருதயத்தின் மேல் ஊரீம் தும்மீம் என்பவைகள் வைக்க பட்டன. உள்ளதை உள்ளது என்றும், இல்லதை

இல்லது என்றும் கூறும் மனசாட்சியை இருதயத்தில் பெற்றவராக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு அடையாளமாக ஊரீம் தும்மீம் என்பவைகள் ஆரோனின் இருதயத்தின் மேல் வைக்கப்பட்டது. பரிசுத்த புருஷன் வசமாய் உன்னுடைய ஊரீம் தும்மீம் என்பவைகள் இருப்பதாக என்று உபாகம புத்தகம் 33-வது அதிகாரம் 8-வது வசனத்தின் பின்பகுதி கூறுகின்றது.

பழைய ஏற்பாட்டு காலங்களில் ஊரீம் தும்மீம் என்பவைகள் கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு பிரதான ஆசாரியனால் பயன் படுத்த பட்டது. ஒவ்வொரு குடும்பத்தின் தேவைக்கும் தக்கதாக கானானின் ஆசீர்வாதம் பகிர்ந்து கொடுக்க பட்டது. யாருக்கும் அதிகம் கொடுக்க படவில்லை. எவருக்கும் குறைவாகவும் கொடுக்க படவில்லை. எனவே பொறாமை முறுமுறுப்பு என்பவைகள் இடம் பெறவில்லை. தன்னை உண்மையும் உத்தமமுமாக பின்பற்றி வந்தவர்களுக்கு எவ்வித குறைவும் வைக்காமல் கர்த்தருடைய கிருபையில் பகிர்ந்து கொடுக்க படுகின்றது. பரிசுத்த பவுல் கொரிந்தியர் என்பாருக்கு எழுதிய 2-வது நிரூபம் 9:8-வது வசனம். ''மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணம் உடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயும் இருக்கும்படியாக தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருக செய்ய வல்லவராய் இருக்கிறார்.

26.7 கர்த்தருடைய சேவையாளரான லேவி கோத்திர கணக்கெடுப்பு

எண்ண பட்ட லேவியரின் குடும்பங்களாவன: கெர்சோனின் சந்ததியான கெர்சோனியரின் குடும்பமும், கோகாத்தின் சந்ததியான கோகாத்தியரின் குடும்பமும், மெராரியின் சந்ததியான மெராரியரின் குடும்பமும் லேவியின் மற்ற குடும்பங்களாகிய லிப்னீயரின் குடும்பமும், எப்ரோனியரின் குடும்பமும், மகலியரின் குடும்பமும், மூசியரின் குடும்பமும், கோராகியரின் குடும்பமுமே. (எண். 26:57-58a)

எண்ணாகமம் 21:1-56 வசனங்களில் இடம் பெற்ற இரண்டாவது கணக்கு எடுப்பினில் 12 கோத்திரங்களின் விவரங்கள் கொடுக்க பட்டது. 12 கோத்திரங்களும் விசுவாச கோத்திரங்களாக இருந்தாலும் ஊழியம் செய்வதற்கு என்று பிரத்தியேக படுத்தப்பட்ட கோத்திரங்கள் அல்ல. ஆசரிப்பு கூடாரத்தின் பணி செய்வதற்கு அவர்கள் எடுத்து வந்த கோல்கள் எதுவும் துளிர்க்கவில்லை. லேவி கோத்திரம் மட்டுமே கர்த்தருடைய ஊழியம் செய்வதற்கு பிரத்தியேக படுத்தப்பட்ட கோத்திரம் ஆகும். எனவே பிரத்தியேகமான முறையில் லேவி கோத்திரம் எண்ண படுகின்றது. இதற்கு முன்னர் எண்ணப்பட்ட 12 கோத்திரங்களும் கானான் என்ற பூமியில் தங்களுக்கு என்று இடம் பெற்று கொள்ள இருக்கின்றார்கள். அவர்களுடைய எண்ணிக்கைக்கு தக்கதாக இடம் ஒதுக்கீடு செய்ய பட்டது. எனவே 12 கோத்திரங்களின் எண்ணிக்கை மிகவும் அவசிய பட்டது.

கானான் செல்லும் பொழுது எவ்வித இடமும் லேவியர்கள் பெற்று கொள்ள போவது இல்லை என்பது முன்னதாக அறிவிக்க பட்டது. இடம் ஒதுக்கீடு என்பதற்காக லேவியர்கள் எண்ண படவில்லை. எனவே 12 கோத்திரங்களின் மொத்த தொகையில் லேவியர்களுடைய தொகை சேர்க்க படவில்லை. 62-வது வசனத்தின் பின் பாகத்தை பார்ப்போம். இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்க படாத படியினால் அவர்கள் இஸ்ரவேல் புத்திரரின் இலக்கத்திற்கு உட்படவில்லை.

லேவியரின் கோத்திரம் மூன்று குடும்பங்கள் கொண்டது. லேவியின் குமாரர் தங்கள் நாமங்களின்படியே கெர்சோம், கோகாத், மெராரி என்பவர்கள் என்று எண்ணாகமம் 3:17-வது வசனம் கூறுகின்றது.

கோகாத் அம்ராமை பெற்றான். அம்ராமுடைய மனைவிக்கு யோகெபேத் என்று பேர்; அவள் எகிப்திலே லேவிக்கு பிறந்த குமாரத்தி; அவள் அம்ராமுக்கு ஆரோனையும், மோசேயையும் அவர்கள் சகோதரியான மிரியாமையும் பெற்றாள். ஆரோனுக்கு நாதாபும் அபியூவும் எலெயாசாரும் இத்தாமாரும் பிறந்தார்கள். நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியை கொண்டு வந்த போது, செத்து போனார்கள். (எண். 26:58b-61)

லேவியின் குடும்பத்தில் பிறந்தவர்களில் ஆரோனின் குடும்பம் மட்டுமே ஆசரிப்பு கூடாரத்தில் முன்னாக சென்று ஊழியம் செய்வதற்கு அழைக்க பட்டது. மற்ற அனைவரும் ஆசரிப்பு கூடாரத்தை சுற்றிலும் உள்ள பணிகளை நிறைவேற்ற எதிர்பார்க்க பட்டார்கள். மேலும் பிரயாணம் செய்யும் சமயங்களில் ஆசரிப்பு கூடாரத்தை கழற்றவும் சுமக்கவும் வேண்டும். இரண்டாவது கணக்கு எடுப்பில் ஆரோனும் முதல் இரண்டு குமாரர்களும் நினைவு கூறப்படுகின்றார்கள்.

நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியை கொண்டு வந்த போது செத்து போனார்கள். முன்பு யூதாவின் முதல் இரண்டு குமாரர்கள் ஜீவியத்தில் பரிசுத்தம் இழந்து செத்தார்கள் என்று பார்த்தோம். இப்பொழுது ஆரோனின் முதல் இரண்டு குமாரர்களும் ஊழியத்தில் பரிசுத்தம் இழந்து செத்தார்கள் என்று பார்க்கின்றோம். இதன் விவரம் லேவியராகம புத்தகம் 10-வது அதிகாரத்தில் தெளிவாக கொடுக்கப்பட்டு உள்ளது.

அவர்களில் ஒரு மாதத்து ஆண்பிள்ளை முதலாக எண்ண பட்டவர்கள் இருபத்து மூவாயிரம் பேர்; இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்கு சுதந்தரம் கொடுக்க படாத படியினால், அவர்கள் இஸ்ரவேல் புத்திரரின் இலக்கத்திற்கு உட்படவில்லை. மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் எரிகோவின் அருகே இருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோவாபின் சமனான வெளிகளில் இஸ்ரவேல் புத்திரரை எண்ணுகிற போது இருந்தவர்கள் இவர்களே. (எண். 26:62-63)

முதலாவது கணக்கு எடுப்பில் லேவியின் கோத்திரத்து மொத்த எண்ணிக்கை 22,000 என்பது ஆகும். இதனை 3:39-வது வசனத்தில் பார்க்கலாம். இரண்டாவது கணக்கு எடுப்பில் லேவி கோத்திரத்தின் எண்ணிக்கை 23,000 என்பது ஆகும். இதன் விவரத்தை 62-வது வசனத்தில் பார்க்கின்றோம். 1000 பேர் லேவி கோத்திரம் அதிகம் கண்டது.

26.8 புதிய தலைமுறை

முன்பு மோசேயும் ஆசாரியனாகிய ஆரோனும் சீனாய் வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரரை எண்ணும் போது இருந்தவர்களில் ஒருவனும் இவர்களுக்குள் இல்லை. (எண். 26:64)

சுமார் 38 வருடங்களுக்கு முன்னர் கர்த்தர் கூறிய தீர்ப்பு முற்றிலுமாக நிறைவேறி விட்டது. சுமார் 6 இலட்சம் ஜனங்களை பார்த்து கர்த்தர் கூறிய தீர்ப்பு அது ஆகும்.

வனாந்தரத்தில் சாகவே சாவார்கள் என்று கர்த்தர் அவர்களை குறித்து சொல்லி இருந்தார்; எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், நூனின் குமாரனாகிய யோசுவாவும் தவிர, வேறொருவரும் அவர்களில் மீதியாய் இருக்கவில்லை. (எண். 26:65)

கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து வாழ்ந்த மோசேயுடன் காலேப் யோசுவா என்ற இருவர் தவிர எவரும் இரண்டாவது கணக்கு எடுப்பில் காண படவில்லை. அன்று கர்த்தர் கூறிய தீர்ப்பு எண்ணாகம புத்தகம் 14:30-வது வசனத்தில் காணப்படுகின்றது. ''எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களை குடியேற்றுவேன் என்று ஆணையிட்டு கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பது இல்லை.'' அந்த தேவ தீர்ப்பு கடந்த 38 வருடங்களில் பூர்த்தி ஆனது. கடைசியாக எரிகோவுக்கு எதிரே மோவாப் சமவெளியில் 24,000 பேர் வாதையினால் செத்தார்கள். அந்த தலைமுறையில் கண்ட சுமார் ஆறு லட்ச மக்கள் வனாந்தரத்தில் முடிவு கண்டார்கள். அவர்கள் பெற்ற பிள்ளைகள் இரண்டாம் கணக்கு எடுப்பில் கலந்து கொண்டார்கள். கையோடே கை கோர்த்தாலும் துஷ்டன் தண்டனைக்கு தப்பான். நீதிமான்களுடைய சந்ததியோ விடுவிக்கப்படும் என்று நீதிமொழிகளின் புத்தகம் 13:21-வது வசனம் கூறுகின்றது.

செலோப்பியாத்தின் குமாரத்திகள் மோசேயிடம் வருகிறார்கள்

பாவத்திற்கு விலகி வாழ்கின்றவர்கள் பரிபூரணம் காண்கின்றார்கள் என்பதை பார்க்கின்றோம். பிரசங்கியின் புத்தகம் 8-வது அதிகாரம் 12,13 ஆகிய வசனங்களை வாசிப்போம். ''பாவி நூறு தரம் பொல்லாப்பை செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி அவருக்கு முன்பாக பயந்து இருப்பவர்களே நன்றாய் இருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன். துன்மார்க்கனோ நன்றாய் இருப்பது இல்லை. அவன் தேவனுக்கு முன்பாக பயப்படாது இருக்கிறபடியால் நிழலை போல் இருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடித்து இருப்பது இல்லை.'' இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டது முதல் 40 வருடங்கள் உருண்டு ஓடின. கர்த்தருடைய கட்டளைகளுக்கு மலர்ந்த முகத்துடன் அடிபணியாதவர்களுடைய வாழ்வு வாடி போயின.

எபிரெயர் நிரூபம் 3-வது அதிகாரம் 7 முதல் 14 வசனங்கள். ''ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே, இன்று அவருடைய சத்தத்தை கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபம் மூட்டின போதும் சோதனை நாளிலும் நடந்தது போல உங்கள்

இருதயங்களை கடின படுத்தாது இருங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னை சோதித்து என்னை பரீட்சை பார்த்து நாற்பது வருஷ காலம் என் கிரியைகளை கண்டார்கள். ஆதலால், நான் அந்த சந்ததியை அரோசித்து அவர்கள் எப்பொழுதும் வழுவி போகிற இருதயம் உள்ள ஜனம் என்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்கள் என்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பது இல்லை என்று என்னுடைய கோபத்திலே ஆணை இட்டேன் என்றார். சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கு ஏதுவான அவிசுவாசம் உள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்கு உள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டு போகாதபடிக்கு இன்று என்னப்படும் அளவும் நாடோறும் ஒருவருக்கு ஒருவர் புத்தி சொல்லுங்கள். நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றி கொண்டு இருப்போம் ஆகில் கிறிஸ்துவின் இடத்தில் பங்கு உள்ளவர்களாய் இருப்போம்''.

26.9 குமாரர் இல்லையாயின் குமாரத்திகளுக்கு சுதந்தரம்

செலோப்பியாத்தின் குமாரத்திகளின் வழக்கு

சுமார் ஆறு இலட்சம் மக்கள் கொண்ட ஒரு பெரிய சபையில் ஒரே ஒரு குடும்பத்தில் இடம் பெற்ற ஒரு நிகழ்ச்சி மிகவும் சிறப்பித்து கூற படுகின்றது. இதற்கு முன்னதாக எண்ணாகம புத்தகம் 15:32-36 வசனங்களில் ஓய்வு நாளிலே விறகு பொறுக்கி கொண்டு இருந்த ஒரே ஒரு மனிதனை குறித்து கூறப்பட்டது. இப்பொழுது ஒரே ஒரு குடும்பத்தை குறித்து 27-வது அதிகாரம் 1 முதல் 11 வசனங்களில் கூறப்படுகின்றது.

தாய் தகப்பன் இல்லாத ஒரு குடும்பம் அது. ஆண் வாரிசும் இல்லாத ஒரு குடும்பம் அது. ஐந்து பெண் பிள்ளைகள் மட்டும் உள்ள அந்த குடும்பம் மோசேயின் முன் வந்து நிற்கின்றது. அவர்கள் மோசேயை பார்த்து பேசுகின்றார்கள்.

> *யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் குடும்பங்களில், மனாசேயின் குமாரனாகிய மாகீரின் மகனான கிலெயாத்துக்கு பிறந்த ஏபேருக்கு புத்திரனாய் இருந்த செலோப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவர்கள் வந்து, ஆசரிப்பு கூடார வாசலிலே மோசேக்கும், ஆசாரியனாகிய எலெயாசாருக்கும், பிரபுக்களுக்கும், சபை அனைத்திற்கும் முன்பாக நின்று: எங்கள் தகப்பன் வனாந்தரத்தில் மரணம் அடைந்தார்; அவர் கர்த்தருக்கு விரோதமாக கூடின கோராகின் கூட்டத்தாரில் சேர்ந்தவர் அல்ல, தம்முடைய பாவத்தினாலே மரித்தார் அவருக்கு குமாரர் இல்லை. (எண். 27:1-3)*

இரண்டாவது கணக்கு எடுப்பில் மிகவும் அதிகமான வளர்ச்சி பெற்றது மனாசே கோத்திரம் ஆகும். ஆயினும் அந்த கோத்திரத்தில் தாய் தகப்பன் இல்லாமல் மனம் தளர்ச்சி கொண்ட ஐந்து பெண் பிள்ளைகள் அறிமுகம் செய்ய படுகின்றார்கள். இந்த குடும்பம் முதல் முதலாக எண்ணாகம புத்தகம் 26-வது அதிகாரம் 33-வது வசனத்தில் அறிமுகம் படுத்த பட்டது. 27-வது அதிகாரம் 1 முதல் 11 வசனங்களில் விரிவான விபரம் இந்த குடும்பத்தை பற்றி நமக்கு தரப்படுகின்றது.

அப்பா, அம்மா இல்லாத குடும்பத்தில் ஓர் ஆண் வாரிசும் இல்லா விட்டாலும் பிறந்த ஐந்து பெண் பிள்ளைகளும் மிகவும் பெருந்தன்மை பெற்ற பிள்ளைகளாக காண படுகின்றனர். கர்த்தர் மீது அன்பும், மோசே மீது மதிப்பும், வாழ்கையில் அடக்கமும் அமைதியும் கொண்ட பிள்ளைகளாக காண படுகின்றார்கள். தாய் தகப்பன் இல்லை என்றாலும் தாயையும் தகப்பனையும் கனம் பண்ணும் பிள்ளைகளாக காண படுகின்றார்கள். தங்களுடைய மன பாரத்தை தாங்கள் விசுவாசிக்கும் கர்த்தர் இடமும், கர்த்தருடைய ஊழியக்காரனான மோசே இடமும் மட்டுமே பகிர்ந்து கொள்ளுவதற்கு முடிவு செய்தனர். அந்த ஐந்து பிள்ளைகளின் அக போராட்டத்தை மோசேயும் பிரதான ஆசாரியனான எலெயாசாரும் மிகவும் கரிசனையுடன் கேட்டார்கள். தங்கள் தகப்பன் வனாந்தரத்தில் காலமானார் என்றார்கள். காலேப், யோசுவா போன்று தொடர்ந்து வாழும் பாக்கியம் தங்கள் தகப்பனுக்கு கிட்டவில்லையே என்ற மன பாரத்துடன் மோசேயிடம் பேச துவங்கினார்கள். நீண்ட நாள் வாழ வாய்ப்பு இல்லாமல் போனாலும் கோராகின் பாவத்திற்கு உட்படாத ஒரு வாழ்க்கையை தங்கள் தகப்பன் நடத்தினார் என்றும் சாட்சி கூறுகின்றார்கள். கர்த்தருக்கு விரோதமாக பேசும், செயலாற்றும் மனிதர்களுடன் தங்கள் தகப்பன் கூட்டு சேர்ந்ததே இல்லை என்றும் சாட்சி கொடுக்கின்றார்கள். அவர்கள் தகப்பன் கோராகுவின் கூட்டத்தில் இணையாதவர் என்று எடுத்து கூறுகின்றார்கள். கர்த்தருக்கு கீழ்படியாத கோராகுவின் கூட்டத்திற்கு கிடைத்த தேவ தண்டனையை 38 வருடங்களுக்கு பின்னரும் ஐந்து பிள்ளைகளும் மனதில் மங்காமல் வைத்து கொண்டு இருக்கின்றார்கள். தேவ கோபத்தில் தகப்பன் சாகவில்லை. தம்முடைய பாவத்தில் மரித்தார் என்று கூறுகின்றார்கள். அனைத்து மனிதர்களை போன்று பாவத்தின் சம்பளமான மரணத்தை எங்கள் தகப்பனும் சந்தித்தார் என்பதே அதன் பொருள் ஆகும். தங்கள் தகப்பனின் நேர்மை உண்மை அனைத்தையும் பற்றி ஓர் முகவுரை கொடுத்த பின்னர் தாங்கள் வந்த நோக்கம் என்ன என்பதையும் எடுத்து கூறுகின்றார்கள்.

> ***எங்கள் தகப்பனுக்கு குமாரன் இல்லாததினால், அவருடைய பேர் அவருடைய வம்சத்தில் இல்லாமல் அற்று போகலாமா? எங்கள் தகப்பனுடைய சகோதரருக்கு உள்ளே எங்களுக்கு காணியாட்சி கொடுக்க வேண்டும் என்றார்கள். (எண். 27:4)***

எங்கள் தகப்பனுக்கு குமாரர் இல்லாததினாலே அவருடைய பேர் அவருடைய வம்சத்தில் இல்லாமல் அற்றுப்போகலாமா என்று கேட்கின்றார்கள். ஆண் வாரிசு இல்லை என்று கானானின் ஆசீர்வாதம் எங்கள் குடும்பத்திற்கு தடையாக வேண்டாம் என்று வேண்டி கொண்டார்கள். தகப்பனின் பெயர் நிலைக்க கானானின் சுதந்திரம் தங்கள் குடும்பத்திற்கும் கிடைக்க வேண்டும் என்று கேட்டு கொண்டார்கள்.

> ***மோசே அவர்களுடைய நியாயத்தை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு போனான். (எண். 27:5)***

ஆண் பெண் என்ற அடிப்படையில் அல்ல. பரிசுத்தம் விசுவாசம் என்ற அடிப்படையில் வருங்கால மேன்மைகள் வரையறுக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் இதய வாஞ்சை. மோசே அவர்களுடைய நியாயத்தை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு போனான் என்று 5-வது வசனம் கூறுகின்றது. கர்த்தருடன் நெருங்கி ஜீவிக்கிறவனாகவும் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ச்சி பெற்றவனாகவும் மோசே இருந்தாலும் நியாயம் எது என்று அறிவதற்கு கர்த்தருடைய சமூகத்தை மட்டுமே தேடி கொண்டான். நீதிமொழிகளின் புத்தகம் 3-வது அதிகாரம் 5,6-வது வசனங்கள். ''உன் சுய புத்தியின் மேல் சாயாமல் உன் முழு

இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாய் இருந்து, உன் வழிகளில் எல்லாம் அவரை நினைத்து கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வை படுத்துவார்''.

ஜனங்களின் பெரிய தேவைக்காக கர்த்தரின் முகத்தை நோக்கி பார்ப்பது போன்று ஒரு சிறிய எளிய குடும்பத்தின் கவலையை போக்கவும் மோசே கர்த்தரின் சமூகத்தை நோக்கி பார்த்தான். செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு சொல்ல வேண்டியது என்ன என்பதை கர்த்தர் மோசேயிடம் தெளிவாக கூறுகின்றார்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: செலோப்பியாத்தின் குமாரத்திகள் சொல்லுகிறது சரிதான்; அவர்களுக்கு அவர்கள் தகப்பனுடைய சகோதரருக்கு உள்ளே சுதந்தரம் கொடுக்க வேண்டும்; அவர்கள் தகப்பன் பின் வைத்த சுதந்தரத்தை அவர்களுக்கு கிடைக்கும்படி செய்வாயாக. (எண். 27:6-7)

தாய் தகப்பன் இல்லாத பிள்ளைகளுக்கு கர்த்தர் பரம தகப்பனாக இருக்கிறார் என்று பரிசுத்த வேதம் கூறுகின்றது. 68-வது சங்கீதம் 5,6 ஆகிய வசனங்கள், ''தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்தில் இருக்கிற தேவன் திக்கற்ற பிள்ளைகளுக்கு தகப்பனும் விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாய் இருக்கிறார். தேவன் தனிமையானவர்களுக்கு வீடு வாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார். துரோகிகளோ வறண்ட பூமியில் தங்குவார்கள்'' என்று கூறுகின்றன.

தங்கள் தகப்பனின் பெயர் அழிந்துவிடக்கூடாது என்று கேட்ட பிள்ளைகளுக்கு கர்த்தர் என்றும் அழியாத ஆசீர்வாதத்தை வழங்குகின்றார். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 56-வது அதிகாரம் 4,5 ஆகிய வசனங்கள், ''என் ஓய்வு நாட்களை ஆசரித்து, எனக்கு இஷ்டமானவைகளை தெரிந்து கொண்டு என் உடன்படிக்கையை பற்றி கொள்ளுகிற அண்ணகர்களை குறித்து கர்த்தர் சொல்லுகிறது என்ன என்றால், நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும் என் மதில்களுக்கு உள்ளும், குமாரருக்கும் குமாரத்திகளுக்கும் உரிய இடத்தையும் கீர்த்தியையும் பார்க்கிலும் உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன், என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்'' என்று கூறுகிறார். தொடர்ந்து, எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 49-வது அதிகாரம் 11-வது வசனத்தை வாசிப்போம்.''திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி. நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக''.

கர்த்தர் வழங்கும் ஆசீர்வாதங்கள் ஆண் பெண் என்று பார்த்து கொடுக்க படுவது அல்ல. வேண்டி கொள்ளும் அனைவருக்கும் அருள படுவது என்பதை 8 முதல் 11 வசனங்கள் எடுத்து கூறுகின்றன.

மேலும், நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: ஒருவன் குமாரன் இல்லாமல் மரித்தால், அவனுக்கு உரிய சுதந்தரத்தை அவன் குமாரத்திக்கு கொடுக்க வேண்டும். அவனுக்கு குமாரத்தியும் இல்லாது இருந்தால், அவனுக்கு உரிய சுதந்தரத்தை அவன் சகோதரனுக்கு கொடுக்க வேண்டும். அவனுக்கு சகோதரரும் இல்லாது இருந்தால், அவனுக்கு உரிய சுதந்தரத்தை அவன் தகப்பனுடைய சகோதரருக்கு கொடுக்க வேண்டும். அவன் தகப்பனுக்கு சகோதரர் இல்லாது இருந்தால், அவனுக்கு உரிய சுதந்தரத்தை அவன்

வம்சத்திலே அவனுக்கு கிட்டின உறவின் முறையானுக்கு சுதந்தரமாக கொடுக்க வேண்டும்; இது, கர்த்தர் மோசேக்கு கட்டளை இட்டபடியே, இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயவிதி பிரமாணமாய் இருக்க கடவது என்று சொல் என்றார். (எண். 27:8-11)

தேவனிடத்தில் பட்ச பாதம் இல்லை என்று ரோமர் நிரூபம் 2-வது அதிகாரம் 13-வது வசனம் கூறுகின்றது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 10-வது அதிகாரம் 34,35 ஆகிய வசனங்கள், ''அப்பொழுது பேதுரு பேச தொடங்கி தேவன் பட்ச பாதம் உள்ளவர் அல்ல என்றும், எந்த ஜனத்திலாகிலும் அவருக்கு பயந்து இருந்து நீதியை செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்து இருக்கிறேன்'' என்று எடுத்து கூறுகின்றன.

தாய் தகப்பன் இல்லாத ஐந்து பெண் பிள்ளைகளின் தாயாகவும் தகப்பனாகவும் கர்த்தர் இறங்கி வந்தார். அவர்களுடைய சுதந்திரம் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்றார். மோசேயின் காலத்திற்கு பின்னர் யோசுவாவின் தலைமையில் ஜனங்கள் கானானில் பிரவேசித்தார்கள். அனைவருக்கும் வசிப்பதற்கு ஏற்ற இடங்கள் அப்பொழுது கொடுக்க பட்டன. கர்த்தர் எங்கள் துணை என்று வாழ்ந்த தாய் தகப்பன் அற்ற அந்த ஐந்து பெண் பிள்ளைகளுக்கும் கர்த்தர் கூறிய பிரகாரம் ஆசீர்வாதம் யோசுவாவினால் கொடுக்க பட்டது. யோசுவாவின் புத்தகம் 17-வது அதிகாரம் 4-வது வசனத்தை வாசிப்போம். ''அவர்கள் ஆசாரியனாகிய எலேயாசாருக்கும் நூனின் குமாரனாகிய யோசுவாவுக்கும் பிரபுக்களுக்கும் முன்பாக சேர்ந்து வந்து எங்கள் சகோதரர் நடுவிலே எங்களுக்கு சுதந்தரம் கொடுக்கும்படி கர்த்தர் மோசேக்கு கட்டளை இட்டார் என்றார்கள். ஆகையால் அவர்கள் தகப்பனுடைய சகோதரர்கள் நடுவே கர்த்தருடைய வாக்கின்படி அவர்களுக்கு சுதந்தரம் கொடுத்தான்.'' உபாகம புத்தகம் 10-வது அதிகாரம் 18-வது வசனம். ''அவர் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயம் செய்கிறவரும் அந்நியன் மேல் அன்பு வைத்து அவனுக்கு அன்ன வஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக்கிறார்''. 146-வது சங்கீதம் 7-வது வசனம் முதல் வாசிப்போம். ''அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயம் செய்கிறார். பசியாய் இருக்கிறவர்களுக்கு ஆகாரம் கொடுக்கிறார். கட்டுண்டவர்களை கர்த்தர் விடுதலை ஆக்குகிறார். குருடரின் கண்களை கர்த்தர் திறக்கிறார். மடங்கடிக்க பட்டவர்களை கர்த்தர் தூக்கி விடுகிறார். நீதிமான்களை கர்த்தர் சிநேகிக்கிறார். பரதேசிகளை கர்த்தர் காப்பாற்றுகிறார். அவர் திக்கற்ற பிள்ளைகளையும் விதவையையும் ஆதரிக்கிறார். துன்மார்க்கனின் வழியையோ கவிழ்த்து போடுகிறார். கர்த்தர் சதா காலங்களிலும் அரசாளுகிறார். சீயோனே, உன் தேவன் தலைமுறை தலைமுறையாகவும் ராஜரீகம் பண்ணுகிறார் அல்லேலூயா''.

அத்தியாயம்-27
மோசேக்கு அடுத்த தலைவன் யோசுவா

27.1 மோசேக்கு கானானை கண்களினால் காண மட்டும் வாய்ப்பு

பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இந்த அபாரீம் மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுத்த தேசத்தை பார். (எண். 27:12)

அபாரீம் மலை தொடர்

அபாரீம் மலை யோர்தான் நதிக்கு கிழக்கு பகுதியில் இருக்கிறது. அபாரீம் என்றால் 'ஒருவரும் கண்டு இராத' மலை என்று பொருள். ஒருவரும் கண்டு இராத மலையில் ஏறி கானானை கண்ணால் கண்டு கொள் என்று கர்த்தர் மோசேயிடம் கூறுகின்றார். அபாரீம் மலைகள் என்பது நேபோ பர்வதம் இருக்கும் மலைதொடர் என்று உபாகம புத்தகம் 32-வது அதிகாரம் 49-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. ''நீ எரிகோவிற்கு எதிரான மோவாப் தேசத்தில் உள்ள இந்த அபாரீம் என்னும் மலைகளில் இருக்கிற நேபோ பர்வதத்தில் ஏறி நான் இஸ்ரவேல் சந்ததியாருக்கு காணியாட்சியாக கொடுக்கும் கானான் தேசத்தை பார்''. கண்கள் மூடும் முன் கானான் பார்த்து விடும் கிருபை கொடுக்க படுகின்றது.

அற்புத அடையாளங்கள் மூலம் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பண்ணி, சீனாய் வனாந்தரத்தில் கற்பனைகளும் கட்டளைகளும் கொடுத்து, கர்த்தர் வந்து இறங்க ஆசரிப்பு கூடாரமும் கொடுத்து, பாரான் வனாந்தரத்தின் பயங்கரங்களையும், விசுவாசம் குன்றிய மக்களையும் கடந்து, சீன் வனாந்தரம் கொண்டு வந்து, மோவாப் சமவெளியில் பாளயம் இறங்கி, என்று சுதந்தரமாக இஸ்ரவேல் என்ற தேசத்தை உருவாக்கி கொடுக்க போகிறாரோ, அதை பார்க்க கர்த்தர் கொடுக்கும் கிருபையை நன்றியோடு பெற்று கொள்ள மலை ஏற வேண்டும் மோசே.

புதிய ஏற்பாட்டு நூலில் அப்போஸ்தலர் நடபடிகைகளின் புத்தகம் 7-வது அதிகாரம் இறுதி வசனங்களில் தென்படும் ஸ்தேவான் என்ற பரிசுத்தவான் தன் கண்கள் மூடுவதற்கு முன்னர் கர்த்தராகிய இயேசுவை கண்ணால் கண்டு கொள்ளும் கிருபை கொடுக்க பட்டது. விசுவாசிகளுக்கு மரணம் இடம் பெறுவதற்கு முன்னர் விசுவாச கண்கள் கொண்டு பரம கானான் கண்டு கொள்ளும் கிருபை கொடுக்க படுகின்றது.

நீ அதை பார்த்த பின்பு, உன் சகோதரனாகிய ஆரோன் சேர்க்க பட்டது போல, நீயும் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்க படுவாய், (எண். 27:13)

நேபோ பர்வதத்தில்
மோசேயின் நினைவுசின்னம்

ஆரோன் சேர்க்கப்பட்டது போன்று மோசேயும் சேர்க்கப்பட இருக்கின்றான். உயிர் நீர்த்த பின்னர் உயிர்த்து எழும்பும் நாளுக்கு என்று காத்து கொண்டு இருக்கும் விசுவாசிகளின் வரிசையில் மோசே சேர்த்து கொள்ளப்பட இருக்கின்றான்.

சேர்த்து கொள்ள படுதல் என்பது ஒரு தனி சிறப்பு பெற்ற வார்த்தை ஆகும். விசுவாசிகளின் முடிவை மரணம் என்று அழைக்காமல் சேர்த்து கொள்ளப்படுதல் என்று பரிசுத்த வேதம் கூறுகின்றது. சேர்க்கப்படுதல் என்பதின் பொருள் வாழ்க்கையை தொடருதல், உடலை இழந்த நிலையில் உயிரோடு இருத்தல். ஏற்கெனவே உலகை விட்டு பிரிந்து உடலோடு உயிர்த்து எழும்பும் நாளுக்காக காத்து கொண்டு இருக்கும் பரிசுத்தவான்களின் கூட்டத்தில் சேர்ந்து கொள்ளுதல் என்பது ஆகும். உயிர்தெழும்பும் நாளுக்கு என்று சற்று முன்னதாக கடந்து சென்ற ஆரோனுடன், மோசேயும் சேர்த்து கொள்ள படுவதற்கு இருக்கின்றான் என்ற முன் அறிவிப்பு காத்தரால் மோசேக்கு கொடுக்க படுகின்றது.

உலகை கடந்து சென்று காத்து நிற்கும் பரிசுத்தவான்களுடன் மோசே சேர்த்து கொள்ள படுவதற்கு முன்னர் மோசேயின் கடந்த கால வாழ்வில் அவன் செய்த பாவம் கர்த்தரால் ஞாபகம் படுத்த படுகின்றது. செய்த பாவம் மன்னிக்க பட்டு விட்டாலும் தேவ தீர்ப்பு கூற படுகின்றது. தவறு செய்த பின்னர் விளைவும் அறுக்க படுகின்றது.

சபையார் வாக்குவாதம் பண்ணின சீன் வனாந்தரத்தில் தண்ணீருக்கு அடுத்த விஷயத்தில் அவர்கள் கண்களுக்கு முன்பாக என்னை பரிசுத்தம் பண்ண வேண்டிய நீங்கள் என் கட்டளையை மீறினீர்களே என்றார். இது சீன் வனாந்தரத்தில் காதேஸ் ஊர் அருகே உண்டான மேரிபாவின் தண்ணீருக்கு அடுத்த காரியமே. (எண். 27:14)

மோசேயின் தவறு எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் கூறப்பட்டது. குடிநீர் அவசிய பட்டது. கன்மலையை பார்த்து பேசு, தண்ணீர் புறப்பட்டு வரும் என்று கர்த்தர் கட்டளை கொடுத்தார். கர்த்தர் கூறும் வார்த்தைகளில் ஒரு சிறிய வார்த்தையையும் தவறாமல் கடைபிடித்து வந்த மோசே எண்ணாகம புத்தகம் 20-வது அதிகாரத்தில் தவறி விட்டான். கன்மலையை பார்த்து பேசவில்லை. கையில் இருந்த கோலை வைத்து மோசே இரண்டு

முறை கோபத்தில் அடித்து விட்டான். மோசேயின் அனுபவம், அந்தஸ்து இரண்டும் கர்த்தரால் கணக்கிற்கு எடுக்க படவில்லை. மோசே செய்த பாவம் அவனது அந்திம நேரம் வரை அவனை தொடருகின்றது. தனக்காக தன்னையே தத்தம் செய்து உழைத்த ஒரு ஊழியன் என்று மோசேயின் பாவத்தை பார்க்காதவர் போன்று கர்த்தர் அமைதியாக இருந்து விடவில்லை. பாவத்தை பார்க்க மாட்டாத சுத்த கண்ணரிடம் பார பட்சம் என்பது இல்லை.

தவறு செய்தவர் எவராக இருந்தாலும் அதன் பொருட்டு வரும் விளைவுகளை தனிப்பட்ட வாழ்வில் அடைந்தே தீர வேண்டும் என்பது தெளிவு படுத்த படுகின்றது. எபிரெயர் நிரூபம் 2-வது அதிகாரம் 2-வது வசனம். ''எந்த செய்கைக்கும், கீழ்படியாமைக்கும் நீதியான தண்டனை வரவே செய்யும்'' என்று பார்க்கிறோம். இழைத்த பிழைகளுக்காக என்னை தண்டிப்பீர் என்றால் என்னால் அதை தாங்கவே முடியாது என்று தாவீது அரசன் 39-வது சங்கீதம் 11-வது வசனத்தில் வேண்டிக்கொள்ளுகின்றார். ''அக்கிரமத்தின் நிமித்தம் நீர் மனுஷனை கடிந்து கொண்டு, தண்டிக்கிற போது அவன் வடிவை பொட்டரிப்பை போல் அழிய பண்ணுகிறீர்; நிச்சயமாக எந்த மனுஷனும் மாயையே'' என்று காண்கிறோம்.

கர்த்தர் தனக்கு தந்த தண்டனையை தன்னால் தாங்கவே முடியாது என்று ஆதியாகம புத்தகம் 4-வது அதிகாரம் 13-வது வசனத்தில் காயீன் என்றவன் கதறினான். ''அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடியாது.'' காயீன் வேண்டுதலை கர்த்தர் கேட்டார். தண்டனையை தளர்த்தி கொடுத்தார். தண்டனை தளர்த்த பட்டது. ஆனால் தண்டனை தவிர்க்க படவில்லை.

மோசேக்கு கர்த்தர் கொடுத்த தண்டனை மோசேயை சோர்ந்து போக செய்யவில்லை. பணியில் மேலும் தொடர செய்தது. கர்த்தரை வெறுக்க செய்யவில்லை. மேலும் கர்த்தரை அதிகமாக நேசிக்க செய்தது. ''இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான்; ஆகையால் சர்வ வல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும்,'' என்று யோபுயின் புத்தகம் 5-வது அதிகாரம் 17-வது வசனம் கூறுகின்றது.

பாவத்தை தவிர்த்து வாழவும், தம்மை மட்டும் சார்ந்து வாழவும், நியாயத்தீர்ப்பு நாளுக்கு தப்பித்து கொள்ளவும் விசுவாசிகளுக்கு உலக வாழ்வில் தண்டனைகளும் தரப்படுகின்றன என்று பரிசுத்த வேதம் கூறுகின்றது. நான் தண்டிக்க பட்டேன். நான் இனி பாவம் செய்ய மாட்டேன் என்று யோபுவின் புத்தகம் 34:31-வது வசனம் கூறுகின்றது. எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 10:24-வது வசனம். ''கர்த்தாவே என்னை தண்டியும். ஆனாலும் நான் அவமாய் போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே அல்ல. மட்டாய் தண்டியும்.''

கானான் என்ற நிறைவும் செழிப்பும் உள்ள பூமியில் பிரவேசிப்பதற்கு கர்த்தர் தனக்கு அனுமதி தரவில்லையே என்று மோசே கர்த்தரை கோபித்து கொள்ளவில்லை. மகிழ்ச்சியுடன் ஏற்று கொண்டான். அதற்கு ஏற்ப கர்த்தர் மோசேயை பன் மடங்கு கனம் பண்ணினார்.

கர்த்தராகிய இயேசு வாழ்ந்த புதிய ஏற்பாட்டு நாட்களில் கானான் தேசத்தில் கால் வைக்கும் கிருபையை மோசே பெற்றான். கானானில் மிக அதிக உயரமான எர்மோன் மலையில் இயேசு மறுரூபம் அடைந்தார். அந்த ஒப்பற்ற அனுபவத்தில் மோசேயும் கலந்து கொண்டான் என்று பரிசுத்த மாற்கு என்பவர் எழுதிய சுவிசேஷம் 9:4-வது வசனம் கூறுகின்றது. எண்ணாகம புத்தகம் 27-வது அதிகாரத்தில் கானானுக்கு அப்பால் இருக்கும் அபாரீம் மலையில் நின்று மோசே கானானை கண்டான். பரிசுத்த மாற்கு 9-வது அதிகாரத்தில்

மோசே கானானின் உள்ளாகவே இருக்கும் உயர்ந்த மலையில் நின்று இயேசுவுடன் கானானை கண்டான். தேவ கோபத்தினால் மோசே தண்டிக்க படவில்லை. பாவங்களை குறித்து சற்றும் மனம் வருந்தாமல் வாழ்ந்து கொண்டு இருந்த கோராகு என்பவனின் கூட்டத்தார் மீது தேவ கோபம் வந்தது. அவர்கள் தேவ கோபத்தினால் தண்டிக்க பட்டார்கள். ஆனால் தவறை உணர்ந்து ஒப்பு கொண்ட மோசேயின் மீது தேவ அன்பின் தண்டனை வந்தது. 103-வது சங்கீதம் 10-வது வசனம். ''அவர் நம்முடைய பாவங்களுக்கு தக்கதாக நமக்கு செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்கு தக்கதாக நமக்கு சரிக்கட்டாமலும் இருக்கிறார்''.

அபாரீம் மலையில் நின்று கானான் என்ற பூமியை மோசே கண்ணால் கண்டு கொள்ள இருக்கின்றான். காலால் செல்ல முடியாது. உன் கண்ணால் மட்டுமே காண்பதற்கு முடியும் என்று கர்த்தர் மோசேயுடன் கூறி விட்டார்.

தனக்கு கானான் மூடப்பட்டதை குறித்து கர்த்தரிடம் எவ்வித கேள்வியும் மோசே கேட்கவில்லை. மோசே முறுமுறுக்கவே இல்லை. தனக்காக கர்த்தரிடமோ மனிதர்களிடமோ வாதாடும் ஒரு ஊழியக்காரனாக மோசே வாழவில்லை. தனக்காக அல்ல. கர்த்தருடைய சபைக்காக மட்டுமே பேசும் ஊழியக்காரனாக காண படுகின்றான். கர்த்தர் சீக்கிரமாக ஏற்ற ஒரு தலைமையை பரிசுத்த சபைக்கு ஏற்படுத்தி தரும்படி பணிவுடன் கேட்கின்றான். இன்னும் ஆறு மைல்கள் நடந்தால் கானானுக்குள் அவன் பிரவேசித்து விடலாம். ஆனால் அவன் அதை கேட்கவில்லை. வயது சென்ற வேளையிலும் கர்த்தரின் முகம் நோக்கி அபாரீம் மலைகளில் ஏறுகின்றான்.

27.2 அடுத்த தலைவன் தேர்ந்தெடுக்கப்பட மோசேயின் ஜெபம்

அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: கர்த்தருடைய சபை மேய்ப்பன் இல்லாத மந்தையை போல் இராதபடிக்கு, (எண். 27:15-16)

மோசேயிடம் கர்த்தர் கொடுத்த அதிகாரம் மோசேயின் முடிவு நேரம் வருவதற்கு முன்னதாக கர்த்தரால் திரும்பவும் பெற்று கொள்ளப்பட இருக்கின்றது. மோசேயின் வேளை நெருங்கி வந்து கொண்டு இருக்கின்றது. கர்த்தருடைய வேலையோ ஓங்கி வளர்ந்து கொண்டு இருக்கின்றது. எனவே அனைத்து ஜனங்களின் நல் வாழ்விற்கு ஒரு அதிகாரி ஆயத்தம் செய்யப்பட வேண்டும் என்று மோசே கேட்கின்றான். தனது இடத்தில் ஒரு அதிகாரியை கர்த்தர் நியமிக்க வேண்டும் என்று மன்றாடுகின்றான்.

அந்தச் சபைக்கு முன்பாக போக்கும் வரத்துமாய் இருக்கும் படிக்கும், அவர்களை போகவும் வரவும் பண்ணும் படிக்கும், மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள் மேல் அதிகாரியாக ஏற்படுத்த வேண்டும் என்றான். (எண். 27:17)

கர்த்தருடைய சபை மேய்ப்பன் இல்லாத மந்தையை போல் இராதபடிக்கு என்று 16-வது வசனத்தில் மோசே தன்னுடைய ஜெபத்தை துவங்குகின்றான். ஆட்டு மந்தைக்கு ஒரு மேய்ப்பன் எவ்வளவு அவசியமோ அது போன்று மீட்கப்பட்ட ஜனங்களுக்கு ஒரு அதிகாரி அவசியம் என்று வேண்டுகின்றான். ஆடுகளுக்கு புல் உள்ள இடங்களை கண்டு பிடித்து கொடுத்து அதன் பசி அகற்றும் அதிகாரி தேவை. ஆடுகளுக்கு முன்பாக நடந்து சென்று சிறந்த புல் தரைகளை கண்டு பிடித்து கொடுத்து ஆடுகளின் பசியை போக்கும் அதிகாரி தேவை. ஆடுகளை கொன்று விடுவதற்கு ஓடி வரும் துஷ்ட மிருகங்களின்

பிடிகளுக்கு மந்தையை பத்திரமாக பாதுகாக்கும் அதிகாரி ஒருவன் தேவை என்று மோசே ஜெபிக்கின்றான். மோசே ஜெபித்தது போன்று புதிய ஏற்பாட்டின் காலத்தில் கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களை ஜெபிக்கும்படி கேட்டு கொண்டார்.

புதிய ஏற்பாட்டின் காலத்திலே கிராமம் கிராமமாக நன்மை செய்கின்றவராக சுற்றி திரிந்த உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் மேய்ப்பனின் அவசியத்தை வலியுறுத்தி பேசினார். மேய்ப்பன் இல்லாத இடங்களில் ஜனங்கள் தொய்ந்து போவார்கள் என்று பரிசுத்த மத்தேயு என்பார் எழுதிய சுவிசேஷம் 9:36-வது வசனத்தில் இயேசு கூறினார். அன்புடனும் அறிவுடனும் நடத்தும் மேய்ப்பர் தேவை என்று மோசே கேட்டு கொண்டு இருப்பதை படிக்கின்றோம். அந்த சபைக்கு முன்பாக போக்கும் வரத்துமாய் இருக்கும் படிக்கும் அவர்களை போகவும் வரவும் பண்ணும் படிக்கும் மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள் மேல் அதிகாரியாக ஏற்படுத்த வேண்டும் என்றான். அதிகாரியாக தான் நீடிக்க கர்த்தர் சித்தம் கொள்ளவில்லை என்பதை அறிந்த மோசே அதை குறித்து சற்றும் கவலைப்படவே இல்லை. தான் சேர்க்க படுவதற்கு முன்னதாக அந்த அதிகாரி நியமிக்க பட்டுவிட வேண்டும் என்று ஜெபிக்கின்றான். தன்னையோ தனது நலன்களையோ அல்ல, ஜனங்களை நடுவாக வைத்து சபைக்கு ஒரு அதிகாரி அதி சீக்கிரம் தேவை என்று கூறுகின்றான்.

பொறுப்பு எடுக்கும் அந்த அதிகாரிக்கு ஐந்து அத்தியாவசியமான பண்புகள் அவசியம் என்றும் 17-வது வசனத்தில் எடுத்து கூறுகின்றான். தெரிந்து எடுக்கப்படும் அதிகாரி சபைக்கு முன்பாக போக்கும் வரத்துமாய் இருக்க வேண்டும் என்பதே மோசேயின் முதலாவது நிபந்தனை. ஜனங்கள் அனைவருக்கும் மிகவும் அறிமுகம் ஆனவனாக அதிகாரி இருக்க வேண்டும் என்று கூறுகின்றான். ஜனங்களின் தேவையை நன்கு அறிந்தவனாக, ஜனங்கள் முறையிடுவதற்கு முன்னதாகவே அவர்களுடைய தேவைகளை சந்தித்து விடுகின்றவனாக தெரிந்தெடுக்கப்படும் அதிகாரி இருக்க வேண்டும் என்று மோசே கூறுகின்றான்.

இரண்டாவதாக அவன் ஜனங்களின் கண்களுக்கு முன்பாக போக்கும் வரத்துமாய் இருக்க வேண்டும் என்று கூறுகின்றான். இதுவரை எப்பொழுதும் ஜனங்கள் இருக்கும் இடங்களுக்கு அருகே அடிக்கடி நடந்து சென்று கொண்டு இருந்த மோசே இப்பொழுது வயோதிபத்தின் காரணமாக அடைபட்டு கிடக்கும் ஓர் நிலைக்கு வந்து விட்டான். மோசேயின் முதுமை ஜனங்கள் இருக்கும் இடங்களுக்கு செல்லுவதற்கு ''போக்கு வரத்துமாய் இருக்க கூடாது'' என்று மோசே கூறுவதை உபாகம புத்தகம் 31:2-வது வசனத்தில் பார்க்கின்றோம். ''அதிகாரியாக தெரிந்து எடுக்கப்பட போகிறவன் போக்கும் வரத்தும் உள்ளவனாக இருக்க தக்க உடல் வலிமை பெற்றவனாக இருக்க வேண்டும் என்று மோசே கூறுகின்றான். வயதில் குறைந்தவனாக இருந்தாலும் வாழ்க்கையில் சிறந்தவனாக இருந்தால் போதும் என்று கூறுகின்றான். தெரிந்து எடுக்கப்படும் அதிகாரி தான் போக்கும் வரத்தும் உள்ளவனாக இருப்பது மட்டும் அல்ல, தன்னுடைய ஜனங்களையும் போகவும் வரவும் உற்சாகம் படுத்துகின்றவனாக இருக்க வேண்டும் என்று அடுத்தால் போல் கூறுகின்றான். தங்களுடைய குறைகளை, தங்களின் கவலைகளை அதிகாரியிடம் சென்று பகிர்ந்து கொள்ளுவதற்கு போகவும் வரவும் ஜனங்களுக்கு வழி திறக்கின்றவனாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றான்.

மூன்றாவதாக தன்னுடைய பொறுப்பில் நியமிக்கப்பட இருக்கின்றவன் ஒரு புருஷனாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றான். கர்த்தருடைய சபையை எடுத்து

நடத்துகின்றவர் ஒரு ஆண் மகனாக இருக்க வேண்டும் என்பதே மோசேயின் மூன்றாவது ஜெபம் ஆகும்.

நான்காவதாக எடுத்து நடத்தும் மனிதனை அதிகாரி என்று அழைக்க வேண்டும் என்று ஜெபிக்கின்றான். தெரிந்து எடுக்கப்படும் மனிதன், அவனுடைய பொறுப்பை அவன் உணர்ந்து கொள்ளும் பெயர் அவனுக்கு கொடுக்க படவேண்டும் என்று கேட்கின்றான். குடும்பமும் சபையும் சந்தோஷமாக வாழ்வதற்கு ஏற்ற சகாயம் செய்யும் அதிகாரியாக அவன் இருக்க வேண்டும் என்று கூறுகின்றான். பரிசுத்த பவுல் கொரிந்தியர் என்பாருக்கு எழுதிய இரண்டாவது நிரூபம்1:24-வது வசனத்தின் முன் பகுதியை பார்ப்போம். ''உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாய் இராமல் உங்கள் சந்தோஷத்திற்கு சகாயராய் இருக்கிறோம்.'' ஜனங்களை வருத்த படுத்துகிறவனாக அல்ல, ஜனங்களின் வருத்தங்களை நீக்கி அவர்களை சந்தோஷம் படுத்துகின்றவனாக தெரிந்து எடுக்கப்படும் அதிகாரி இருக்க வேண்டும் என்று கேட்கிறான். அன்பும் அறிவும் உள்ள ஒரு மீட்பனாக அவன் இருக்க வேண்டும் என்று கேட்கின்றான். எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 3:15-வது வசனத்தில் ''உங்களுக்கு என் இருதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்களை கொடுப்பேன்; அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்'' என்று கர்த்தர் கூறுவதை காண்கிறோம்.

மோசேயின் ஐந்தாவது நிபந்தனையாக அந்த அதிகாரியை கர்த்தர் ஒருவரே கண்டு பிடித்து ஏற்படுத்த வேண்டும் என்று கூறி முடிக்கின்றான். ஏற்படுத்த வேண்டும் என்பதின் சரியான பொருள் வேலை நியமன கடிதம் கொடுக்கின்றவர் கர்த்தராக இருக்க வேண்டும் என்பது ஆகும். சபை மக்களின் சந்தோஷத்தை நடுவாக வைத்து துரைத்தனம் செய்யும் அதிகாரியை தன்னால் கண்டு பிடிக்க முடியாது என்பதை மோசே ஒப்பு கொள்ளுகின்றான். எல்லா மனிதரின் இருதயங்களின் இரகசியங்களையும் அறிந்த கர்த்தர் ஒருவரே தூய்மை, உண்மை, உத்தமம் நிறைந்தவன் யார் என்று கண்டு கொள்ள முடியும் என்று மோசே முடிக்கின்றான். கர்த்தருடைய சபையை கண்காணிப்பதற்கு மனிதர் அல்ல கர்த்தரே அதிகாரியை நியமிக்க வேண்டும் என்று கேட்டு கொண்டான். மேலும் 17-வது வசனத்தில் மோசே கர்த்தாதி கர்த்தருடைய குணாதிசயங்களில் மிகவும் முக்கியமான ஒரு குணாதிசயத்தை குறிப்பிட்டு காட்டுகின்றான். மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் என்று கர்த்தருடைய குணாதிசயத்தை குறிப்பிட்டு பேசுகின்றான். உயிர் பெற்று ஊர்ந்து செல்லும், மிதந்து செல்லும், பறந்து செல்லும், நடந்து செல்லும் அனைத்து உயிர்களுக்கும் அரசனே என்று கர்த்தரை மோசே கூப்பிடுகின்றான்.

எண்ணாகம புத்தகத்தில் இரண்டு இடங்களில் கர்த்தாதி கர்த்தரை மோசே இவ்விதமாக அழைக்கின்றான். கர்த்தருடைய குணாதிசயத்தை மோசே எண்ணாகமத்தில் குறிப்பிட்ட இந்த குறிப்பு பரிசுத்த வேத புத்தகத்தில் வேறு எந்த இடத்திலும் இடம் பெறவில்லை. கர்த்தாதி கர்த்தருடைய குணாதிசயங்களை நன்றாக அறிந்த ஒரு மனிதனாக, ஒரு ஊழியக்காரனாக, சபையின் அதிகாரியாக மோசே காணப்பட்டான். கர்த்தர் மோசேயிடம் முகம் முகமாக பேசினார் என்றும், கர்த்தரின் சாயலை மோசே காண்கின்றான் என்றும் எண்ணாகம புத்தகம் 12-வது அதிகாரம் 8-வது வசனத்தில் பார்த்தோம். கர்த்தரின் குணாதிசயங்களை கண்கூடாக காணும் கிருபை பெற்ற மோசே கர்த்தரின் குணாதிசயத்தை துல்லிபமாக குறிப்பிடுகின்றான். மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் என்று தன்னை தரை மட்டும் தாழ்த்தி வேண்டுகின்றான். சகல பிராணிகளின் ஜீவனும் மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையில் இருக்கிறது என்று யோபுவின் புத்தகம் 12:10-வது வசனம் கூறுகின்றது.

கர்த்தருடைய சபையை 40 வருடங்கள் மோசே நியாயம் விசாரித்தான். பொறுப்பில் தொடர்ந்து நீடிக்க முதுமை தடை செய்கின்றது. மோசேயின் வேளை வந்து விட்டது. நல்ல மேய்ப்பனிடம் சபைக்கு ஏற்ற ஒரு மேய்ப்பன் தாரும் என்று கெஞ்சுகின்றான். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 40:11-வது வசனத்தில் ''மேய்ப்பனை போல தமது மந்தையை மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளை தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்'' என்று பார்க்கிறோம்.

அவருடைய ஜெபத்திற்கு கர்த்தர் ஏற்ற ஒரு உத்தரவு கொடுப்பதை எண்ணாகம புத்தகம் 27:18-23 வசனங்களில் பார்க்கிறோம்.

27.3 புதிய தலைவனை கர்த்தர் தெரிந்து கொள்கிறார்

கர்த்தர் மோசேயை நோக்கி: ஆவியை பெற்று இருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்து கொண்டு, அவன் மேல் உன் கையை வைத்து, அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்கு கட்டளை கொடுத்து, இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்கு கீழ்ப்படியும் படிக்கு, உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்கு கொடு. (எண். 27:18-20)

மோசே ஜெபித்து முடித்தவுடனே மோசேயின் ஜெபத்திற்கு பதில் கிடைத்தது. அவனுடைய உயிர் சீக்கிரமாக பிரியப் போகின்றது என்று கர்த்தர் மோசேயிடம் முன்னதாக கூறிவிட்டார். உடனே மோசே இன்னும் உயிருடன் வாழும் மற்ற உயிர்களின் நல் வாழ்வை கருதி ஜெபித்தான். உடனடியாக மோசேயின் ஜெபத்திற்கு பதில் பிறந்தது. மற்றவர்களின் நல்வாழ்விற்காக ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் கர்த்தரின் சமுகத்தில் ஆவலுடன் உடனடியாக ஏற்று கொள்ளப்படுகின்றது. மோசே ஐந்து குறிப்புகள் கொடுத்து ஜெபித்தான். ஐந்து அரிய பண்புகள் பெற்ற அதிகாரி ஒருவர் அவசியம் என்று கேட்டு கொண்டான். அந்த அதிகாரியை கர்த்தர் கண்டு பிடித்து தர வேண்டும் என்று ஜெபித்தான். கர்த்தர் உடனடியாக கண்டு பிடித்து கொடுத்தார். 18-வது வசனத்தில் கர்த்தர் அந்த அதிகாரி யோசுவா என்று அறிவித்து விட்டார். கர்த்தர் யோசுவாவை கண்டு எடுத்தமைக்கு காரணம் என்ன என்பதும் கூறப்படுகின்றது.

யோசுவா, ஆவியை பெற்ற ஒரு மனிதன் என்று கர்த்தர் கூறுகின்றார். தான் ஆவியை பெற்ற மனிதன் என்று யோசுவா தன்னை பற்றி கூறவே இல்லை. ஆனால் ஆவியை பெற்ற மனிதன் யோசுவா என்று கர்த்தர் சாட்சி கொடுக்கின்றார். எண்ணாகம புத்தகம் 15-வது அதிகாரத்தில் கர்த்தருடைய ஆவியானவர் தெரிந்து எடுக்கப்பட்ட 70 மூப்பர்கள் மீது இறங்கி வந்தார். அவர்களில் யோசுவாவும் ஒருவன் ஆவான். கடந்த 38 வருடங்கள் தன் மீது கிருபையாக இறங்கிய கர்த்தருடைய ஆவியானவருக்கு முற்றிலுமாக கீழ்படிந்து யோசுவா வாழ்ந்து வந்து கொண்டு இருக்கின்றான். கர்த்தருடைய சபையை கண்காணிப்பதற்கு கர்த்தருடைய சத்தம் கேட்கும் இருதயம் அதிகாரிக்கு தேவை. கர்த்தருடைய ஆவியானவரால் முற்றிலுமாக உள்ளம் நிரப்பப்படும் பொழுது மட்டுமே கர்த்தரின் மெல்லிய சத்தத்தை தெள்ளம் தெளிவாக உள்ளம் அறிந்து கொள்ளும். ''மனுஷனில் உள்ள ஆவியே அன்றி, மனுஷரில் எவன் மனுஷனுக்கு உரியவைகளை அறிவான்? அப்படி போல தேவனுடைய ஆவியே அன்றி ஒருவனும் தேவனுக்கு உரியவைகளை அறிய மாட்டான்'' என்று பரிசுத்த பவுல் கொரிந்தியர் என்பாருக்கு எழுதிய 2-வது நிரூபம் 2:13-வது வசனம் கூறுகின்றது.

மாம்சமான அனைத்து ஆவிகளுக்குள்ளும் தேவனாகிய கர்த்தர் தமது ஆவியை பெற்ற யோசுவாவை தெரிந்து எடுத்தார். மாம்சமான அனைத்து உயிர்களின் நல் வாழ்வை கருதும் கர்த்தர் தம்மை போல் சிந்திக்கும் சிந்தை பெற்ற ஒரு மனிதனை தெரிந்து எடுத்தார். ஆண் மகன் அதிகாரியாக வர வேண்டும் என்று மோசே ஜெபித்தான். அது போன்று ஆவியை பெற்று இருக்கிற புருஷனாகிய யோசுவா என்று கர்த்தர் கூறினார். யோசுவாவை மோசேயின் இடத்தில் அமர்த்தும் முறையையும் கர்த்தர் மிகவும் தெளிவாக எடுத்து கூறுகின்றார். முதலாவது மோசே தனது கையை யோசுவாவின் மேல் வைக்க வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார்.

பலியாக வெட்டப்படும் மிருகங்களின் தலைமீது பலியிட வருகின்றவன் கைகளை வைக்க வேண்டும் என்று லேவியராகம புத்தகத்தில் நாம் பார்த்தோம். அது போன்று யோசுவா தன்னை ஜீவ பலியாக கர்த்தருக்கும் கர்த்தருடைய சபைக்கும் தத்தம் செய்ய வேண்டும். மேலும் கைகளை வைத்தல் என்பது ஆசீர்வதித்தல் என்பதும் ஆகும். கர்த்தர் தன்னை ஊழியத்தில் எவ்வாறு ஆசீர்வதித்தாரோ அது போன்று உன்னையும் ஆசீர்வதிப்பாராக என்று மோசே யோசுவாவின் மீது தன் கைகளை வைக்க வேண்டும்.

தொடர்ந்து ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் அனைத்து சபை மக்களுக்கும் முன்பாக யோசுவாவை மோசே நிறுத்த வேண்டும். மோசே அனைவருக்கும் முன்பாக யோசுவாவை நிறுத்துவது யோசுவாவின் மீது மோசேக்கு பூரண நம்பிக்கை இருக்கின்றது என்பதை தெரிவிக்கின்றது. மேலும் யோசுவாவை சபைக்கு முன்பாக நிறுத்துவதற்கு கர்த்தரின் அனுமதி தனக்கு உண்டு என்பதையும் குறிக்கின்றது. யோசுவா மோசேயின் இடத்தை பெறுவதற்கு கர்த்தர் சம்மதம் தெரிவித்து விட்டார் என்பதை ஜனங்கள் கண்டு யோசுவாவின் சொற்படி செய்வதற்கு ஜனங்கள் தங்களை முற்றிலுமாக ஒப்பு கொடுக்க வேண்டும்.

மேலும் ஜனங்கள் முற்றிலுமாக யோசுவாவின் சொற்படி நடப்பதற்கு மோசே தனது கனத்தில் கொஞ்சம் யோசுவாவிற்கு கொடுக்க வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். மோசேயின் முழு கனத்தையும் யோசுவா பெற்று கொள்ள முடியாதவனாக இருக்கின்றான். ''ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசினார்'' என்று யாத்திராகம புத்தகம் 33:11-வது வசனம் கூறுகின்றது. அந்த மேன்மை யோசுவாவிற்கு கொடுக்க படவில்லை. கர்த்தரின் சித்தம் என்ன என்பதை கண்டு கொள்ளுவதற்கு மோசே ஆசாரியனாகிய ஆரோனிடம் ஓடவில்லை. எலெயாசாரை எதிர்பார்க்கவில்லை. கர்த்தரிடம் மோசே நேரடியாக சென்றான். ஆனால் யோசுவா கர்த்தரின் சித்தம் அறிந்து கொள்ளுவதற்கு ஆசாரியனாகிய எலெயாசாரிடம் செல்ல வேண்டும். ஊரீம், தும்மீம் என்றவைகளை பயன் படுத்தி கர்த்தரின் ஆலோசனையை பெற்று கொள்ள வேண்டும். இதனை 21-வது வசனத்தின் முன் பகுதியில் பார்க்கின்றோம்.

> *அவன் ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக நிற்க கடவன்; அவன் நிமித்தம் அந்த ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்க கடவன்; அவருடைய கட்டளையின் படியே, அவனும் அவனோடே கூட இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் போகவும் அவருடைய கட்டளையின் படியே வரவும் வேண்டியது என்றார். (எண். 27:21)*

கனம் என்ற வார்த்தை அதிகாரம் என்பதையும் குறிக்கின்றது. மோசே தன் அதிகாரத்தை யோசுவாவினிடம் ஒப்படைக்க வேண்டும். இதுவரை நியாயத்தை பெற்று கொள்ள ஜனங்கள் மோசேயை நோக்கி வருவது உண்டு. இனிமேல் யோசுவாவை தேடி ஜனங்கள் செல்ல இருக்கின்றார்கள். தான் புறக்கணிக்க பட்டவனாக மோசே தன்னை கருத கூடாது. எவ்வித தனிமை உணர்ச்சியும் மோசேக்கு வர முடியாது.

நியாயவிசாரணைக்காக ஜனங்கள் யோசுவாவை நோக்கி செல்லுகின்றார்களே, தங்களிடம் வரவில்லையே என்று மோசேயின் மனம் புண்பட கூடாது. கர்த்தர் கூறியபடி மோசே மனம் உவந்து அனைத்தையும் செய்ய ஆரம்பித்து விட்டான்.

> *மோசே தனக்கு கர்த்தர் கட்டளை இட்டபடியே யோசுவாவை அழைத்து கொண்டு போய், அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபை அனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவன் மேல் தன் கைகளை வைத்து, கர்த்தர் தனக்கு சொன்னபடியே அவனுக்கு கட்டளை கொடுத்தான். (எண். 27:22-23)*

மோசே யோசுவாவை எலெயாசாருக்கும் ஜனங்களுக்கும் முன்பாக நிறுத்தும் பொழுது கூறிய கூற்று உபாகம புத்தகம் 31:7,8 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. ''பின்பு மோசே யோசுவாவை அழைத்து இஸ்ரவேலர் எல்லாரும் பார்த்து இருக்க அவனை நோக்கி: பலம் கொண்டு திட மனதாய் இரு. கர்த்தர் இவர்களுக்கு கொடுப்பேன் என்று இவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்திற்கு நீ இந்த ஜனத்தை அழைத்து கொண்டு போய் அதை இவர்கள் சுதந்தரிக்கும்படி செய்வாய். கர்த்தர்தாமே உனக்கு முன்பாக போகிறவர். அவர் உன்னோடே இருப்பார். அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை. உன்னை கைவிடுவதும் இல்லை. நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்''.

பூமியில் உள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணம் உள்ளவனாய் மோசே இருந்தான் என்று எண்ணாகம புத்தகம் 12:3-வது வசனம் சாட்சி கூறுகின்றது. முதுமை கண்டும் மோசேயின் கண்கள் மங்கி போகவில்லை. உடல் தளர்ந்து விடவும் இல்லை என்று உபாகம புத்தகம் 34:7-வது வசனம் எடுத்து உரைக்கின்றது. ஆவி ஆத்துமா சரீரம் அனைத்திலும் அதி சிறந்து விளங்கினாலும் அனைத்து மனிதர்களுக்கும் வரும் முடிவு மோசேயின் வாழ்வில் இடம் பெற இருக்கின்றது. மோசேயின் இடத்தில் நிறுத்தப்பட பிறிதொரு மோசே இல்லை என்று கர்த்தர் கவலை படவில்லை. ஆரோன் சேர்க்க பட்டது போன்று வேளை வரும் பொழுது நீயும் சேர்க்க படவேண்டும் என்று கூறி விட்டார். ஆரோனின் இடத்தில் எலெயாசாரை நிறுத்தியது போன்று உன் இடத்தில் யோசுவாவை நிறுத்து என்று கட்டளை கொடுத்தார். அவ்விதமே மோசே செய்தான். தனி நபர்களை சார்ந்து அல்ல, கர்த்தர் மீது உண்மையும் உத்தமமுமாய் அன்பு கூரும் அனைவரையும் சார்ந்து கர்த்தாதி கர்த்தருடைய பணி தொடர்ந்து சென்று கொண்டே இருக்கின்றது.

அத்தியாயம் - 28
பலிகளும், அவை குறிக்க பட்ட நாட்களும்

28.1 தினந்தோறும் செலுத்த வேண்டிய சுகந்த வாசனையான தகனபலி

கர்த்தர் மோசேயை நோக்கி: எனக்கு சுகந்த வாசனையாக, தகனபலிகளுக்கு அடுத்த காணிக்கையையும் அப்பத்தையும், குறித்த காலத்தில் எனக்கு செலுத்தும் படிக்கு கவனமாய் இருக்க கடவீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளை இடு. (எண். 28:1-2)

பாகால் பேயோரின் வணக்கத்திற்கு பரிசுத்தரின் மக்கள் வஞ்சிக்கபட்டு இழுக்கபட்டு விட்டார்கள். அதனால் கர்த்தரின் கோபம் எழும்பி 24,000 பேரை பட்சித்தது. இனிமேலும் அவர்கள் சுதந்தரிக்க போகிற தேசத்திலே சோரம் போகாமல் இருக்கும் படிக்கு கர்த்தர் மோசேயின் மூலம் அவர்கள் தன்னை ஆராதிக்க வேண்டிய முறைகளை வலியுறுத்துகிறார்.

ஆகவே எண்ணாகம புத்தகம் 28, 29, 30 ஆகிய மூன்று அதிகாரங்களிலும் பலி, ஆராதனை, பொருத்தனை என்பவைகளை பற்றிய விபரங்கள் கொடுக்கப்பட்டு உள்ளன. அந்த விபரங்கள் அனைத்தும் ஏற்கெனவே லேவியராகம புத்தகத்தில் முன்பு மிகவும் விரிவாக கூறப்பட்டவைகளே ஆகும். ஆயினும் இன்னும் ஒரு முறை மிகவும் சுருக்கமாக ஆனால் திட்டவட்டமாக எண்ணாகம புத்தகத்தின் மூன்று அதிகாரங்களில் கர்த்தர் அவைகளை எடுத்து கூறுகின்றார்.

பலி என்பது பாவ அறிக்கை, பாவ மன்னிப்பு, ஒப்புரவு ஆகுதல் என்பதை குறிக்கின்றது. ஆராதனை என்பது பரிசுத்த பாதையில் செல்லுவதற்கு கொழுந்து விட்டு எரியும் வாஞ்சையை எடுத்து காட்டுகின்றது. பொருத்தனை என்பது பரிசுத்தராகிய தேவன் மீது கொண்ட பற்று பாசம் எத்தனை அதிகம் என்பதை தெரிவிக்கின்றது. பலி, ஆராதனை, பொருத்தனை என்பவை வாழ்வில் நீடிக்காமல் கானான் என்ற பூமியில் காண போகும் சுபிட்சம், சந்தோஷம் என்பவைகள் நீடிக்க முடியாது என்பது தெளிவு படுத்த படுகின்றது.

கானான் அடைந்து விட்டோம் என்று கர்த்தரையும், கர்த்தருடைய பிரமாணங்களையும் அலட்சியம் செய்ய முடியாது என்பவை இந்த மூன்று அதிகாரங்களிலும் விரிவாக விளக்கி கூறப்படுகின்றது. அடிமைத்தன வாழ்வில் இருந்து சுதந்தர பூமிக்கு இழுத்து கொண்டு வந்த கர்த்தரை இழந்து விட்டால் மீண்டும் அடிமைத்தனத்தில் விழுந்து விடுவார்கள். கானான் செல்லுவதற்கு முன்பு கர்த்தர் எச்சரிக்கின்றார். விரும்பியது கிடைத்து விட்டது என்று கர்த்தர் விரும்பும் பரிசுத்த வாழ்க்கை புறக்கணிக்க படவே முடியாது என்பதை திட்டவட்டமாக புகட்ட இன்னும் ஒரு முறை பலி ஆராதனை பொருத்தனை என்ற விபரங்கள் கொடுக்க படுகின்றன.

யாத்திராகம புத்தகம் 29-வது அதிகாரம் 38 முதல் 41 வசனங்களிலும் லேவியராகம புத்தகம் 1 முதல் 7 அதிகாரங்களிலும் தொடர்ந்து 23-வது அதிகாரத்திலும் கர்த்தர் பலி, ஆராதனை, பொருத்தனை என்பவைகள் பற்றி எடுத்து கூறினார். அதனை பழைய தலைமுறையை சேர்ந்த மக்கள் கேட்டார்கள். இப்பொழுது இருக்கும் புதிய தலைமுறையை சேர்ந்த மக்கள் அதன் முக்கியத்துவத்தை இன்னும் ஒரு முறை அறிந்து கொள்ள வேண்டும் என்று கர்த்தர் மீண்டும் ஒரு முறை அறிவிக்கின்றார்.

கடந்த 38 ஆண்டுகளில் அவர்கள் இடம் விட்டு இடம் சென்று கொண்டே இருந்தார்கள். கானான் சென்ற பின்னர் அமர்ந்து இருந்து ஆராதிக்கும் வாய்ப்பு பெற்று கொள்ளுவதற்கு இருக்கின்றார்கள். சகலமும் ஒழுங்கும் கிரமமுமாய் நடைபெற வேண்டும் என்று எதிர்பார்க்கும் கர்த்தர் பலிமுறைகளை பற்றிய ஒழுங்குகளை ஒழுங்கும் கிரமமுமாய் 28-வது அதிகாரத்தில் கூறுகின்றார்.

கானான் என்ற பூமிக்கும், அவர்களுக்கும் தற்பொழுது பாளயம் இறங்கி இருக்கும் மோவாப் சமவெளிக்கும் நடுவாக இருப்பது யோர்தான் என்ற நதி மட்டுமே ஆகும். அற்புதமாகவும் அதி சீக்கிரமாகவும் அதனை தாண்டி விடுவதற்கு கர்த்தர் உதவி செய்ய இருக்கின்றார். அதன் பின்னர் எண்ணற்ற புற போராட்டங்கள் தொடர்ந்து அவர்களுக்கு எதிராக வர இருக்கின்றன. அகத்தில் அமைதி நிலவி விட்டால் எதிராக வரும் புற போராட்டங்கள் வெற்றியில் முடியும். உள்ளான மனிதனில் வல்லமையாக பெலப்பட்டு விட்டால் புறம்பாக வரும் சங்கடங்கள் சந்தோஷத்தில் முடிந்து விடும்.

> *மேலும் நீ அவர்களை நோக்கி: நீங்கள் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய தகனபலி என்னவென்றால்: நித்திய சர்வாங்க தகனபலியாக நாடோறும் ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டு குட்டிகளை பலியிட வேண்டும். காலையில் ஒரு ஆட்டு குட்டியையும், மாலையில் ஒரு ஆட்டு குட்டியையும் பலியிட்டு, போஜனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கானதும் இடித்து பிழிந்த காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும் செலுத்த கடவீர்கள். இது சீனாய் மலையிலே கட்டளை இடப்பட்ட நித்திய சர்வாங்க தகனபலி. இது கர்த்தருக்கு சுகந்த வாசனைக்கான தகனபலி. காற்படி திராட்சரசம் ஒரு ஆட்டு குட்டிக்கு அடுத்த பானபலி; பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு அந்த இரசம் பானபலியாக வார்க்க படக்கடவது. (எண். 28:3-7)*

கானானில் மகிழ்ந்து வாழ்வதற்கு கர்த்தரை மட்டுமே சார்ந்து வாழ வேண்டும். அதற்கு உதவும் பலிகள், பண்டிகைகள், ஆராதனைகள் 28, 29 ஆகிய அதிகாரங்களில் முதலாவதாக தர படுகின்றன. நான்கு பலிகள் பற்றிய விபரம் சுருக்கமாக சுட்டி காட்ட படுகின்றது. முதலாவது இடம் பெறும் பலி தினம் தோறும் செலுத்தப்படும் பலி ஆகும். இரண்டாவது இடம் பெறும் பலி வாரம் தோறும் செலுத்தப்படும் பலி ஆகும். மூன்றாவது வரும் பலி மாதம் தோறும் இடம் பெற வேண்டிய ஒன்று ஆகும். நான்காவது பலி வருடம் தோறும் வரும் நிகழ்ச்சி ஆகும். பரிசுத்த சபையாரின் பலி ஆராதனை பற்றிய ஒரு சபை நாட்காட்டி 28, 29 ஆகிய இரண்டு அதிகாரங்களிலும் கர்த்தரால் கொடுக்க படுகின்றது. சபை நாட்காட்டியில் குறிப்பிட்டபடி அவைகள் அனுசரிக்கப்பட வேண்டும் என்று 2-வது வசனத்தின் பின் பகுதி கூறுகின்றது. குறித்த காலத்தில் எனக்கு செலுத்தும்படிக்கு கவனமாக இருக்க கடவீர்கள் என்று கூறப்படுகின்றது. குறித்த காலத்தில் முறைப்படி நிறைவேற்றப்பட வேண்டிய முதலாவது பலி அன்றாடம் செலுத்தப்பட வேண்டிய பலி என்பது ஆகும். அதன் விபரம் 1 முதல் 8 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. போஜனபலி, பானபலி ஆகிய இரண்டு பலிகளுடன் இணைந்து வரும் அந்த பலிகளின் பெயர் சுகந்த வாசனையான தகனபலி என்று பார்க்கின்றோம். காலையிலும் மாலையிலும் தவறாமல் இடம் பெற வேண்டிய பலி என்று அறிந்து கொள்ளுகின்றோம்.

காலையின் போஜனபலிக்கும் அதின் பானபலிக்கும் ஒப்பாகவே மாலையில் மற்ற ஆட்டு குட்டியையும் கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலியாக செலுத்த கடவீர்கள். (எண். 28:8)

முற்றிலும் அக்கினி சம்பந்தப்பட்ட பலி தகனபலி ஆகும். பலியாக இடப்படும் மிருகம் முற்றிலுமாக எரிக்கப்பட்டு போகும் பலி தகனபலி ஆகும். முற்றிலுமாக தன்னை கர்த்தருக்கும் கர்த்தருடைய பிரமாணங்களுக்கும் தத்தம் செய்கிறேன் என்று முடிவு செய்கின்றவர்கள் செலுத்தும் பலி தகனபலி என்பது ஆகும். எவ்விதமான தட்டு தடைகள் இன்றி மீட்கப்பட்ட ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் கர்த்தருடைய சமூகம் வந்து தங்களை அர்ப்பணிக்க வேண்டும். தூய்மை, உண்மை, அன்பு என்ற பாதைக்கு தங்களை நாள் விடாமல் அர்ப்பணிக்க வேண்டும். 55-வது சங்கீதம் 17-வது வசனம், ''அந்தி சந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம் பண்ணி முறையிடுவேன். அவர் என் சத்தத்தை கேட்பார்,'' என்று கூறுகின்றது.

தகனபலி ஒரு ஜெப தூபமாக கர்த்தருடைய சமூகத்தை சேருகின்றது. கருத்துடன் கர்த்தரை பின்பற்ற அதிகாலையிலும் அந்திம நேரத்திலும் விண்ணப்பம் ஏறெடுக்க படுகின்றது. 141-வது சங்கீதம் 2-வது வசனம், ''என் விண்ணப்பம் உமக்கு முன்பாக தூபமாகவும், என் கையெடுப்பு அந்தி பலியாகவும் இருக்கக்கடவது'' என்று கூறுகின்றது.

தன்னை முற்றிலுமாக கர்த்தருக்கு ஒப்பு கொடுக்கும் மனிதன் கர்த்தருடன் சமாதானம் பெற்ற மனிதன் என்பதை தெரிவிக்க போஜனபலி சேர்க்க படுகின்றது என்பதை 5-வது வசனத்தில் இருந்து அறிந்து கொள்ளுகின்றோம். அவர்களுடைய வாழ்வு கர்த்தருக்கு முற்றிலுமாக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வாக இருக்க வேண்டும். கர்த்தருடன் பூரண சமாதானம் பெற்ற வாழ்வாக இருக்க வேண்டும். இதற்கு ஆதாரமாக தகனபலி போஜனபலி என்பது செலுத்த பட்டது. தொடர்ந்து பானபலி என்பதும் செலுத்த படுகின்றது. வாழ்நாள் முழுவதும் கர்த்தருடைய மகிமைக்காகவே நான் வாழுவேன், வாழ்க்கை படுவேன் என்பதை வலியுறுத்தி கூறுவதற்கு பானபலியும், தகனபலியுடன் சேர்ந்து கொடுக்கப்படுகின்றது.

கர்த்தருக்காக தனிப்பட்ட வாழ்வில் சாட்சியாக நிற்பதற்கு பானபலி அடையாளமாக கொடுக்கப்பட்டு உள்ளது. முற்றிலுமாக கர்த்தருக்கு தன்னை அர்ப்பணித்தது உடன் நின்று விடாமல் கர்த்தரிடம் பெற்ற சமாதானத்தை தன் இதயத்தில் இறுக வைத்து பூட்டிவிடாமல் பானபலியாக வாழ்க்கை ஊற்றப்படுகின்றது.

இருதயத்தில் பெற்ற விசுவாசம் வாயினால் அறிவிக்க படுகின்றது என்பதை பான பலி தெரிவிக்கின்றது. பெற்ற கிருபைகளை மற்றவர்களுக்கும் வாரி வழங்கும் உற்சாகமும் இடம் பெறுகின்றது. விசுவாசம், ஊழியம் என்பதின் மேல் பரிசுத்த பவுலின் வாழ்வு நாள் தோறும் வார்க்கப்பட்டு போனது என்று பிலிப்பியர் நிரூபம் 7:17-வது வசனம் கூறுகின்றது. ''நான் இப்பொழுதே பான பலியாக வார்க்கப்பட்டு போகிறேன்'' என்று பரிசுத்த பவுல் 2 தீமோத்தேயு 4:6-வது வனத்தில் கூறுகின்றார்.

கானான் என்ற பூமியில் பெற்று கொள்ள இருக்கும் நிறைவும் செழிப்பும் உங்களுக்கு மட்டும் அல்ல, அனைவருக்கும் அள்ளி கொடுக்கப்பட வேண்டிய தேவனுடைய ஆசீர்வாதம் என்பதை தெரிவிக்க பானபலி என்பது நாள் தோறும் இடம் பெறுகின்றது. கர்த்தருக்கு தங்களை முற்றிலுமாக ஒப்பு கொடுத்த வாழ்வு ஒவ்வொரு நாளும் காக்கப்பட வேண்டும்.

அதற்கு ஜெபம், விண்ணப்பம், ஸ்தோத்திரம் என்பது காலையும், மாலையும் கருத்துடன் ஏறெடுக்கப்பட வேண்டும். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் அவர்களை தொடர்ந்து தாங்கும். எல்லா மனிதருக்கும் பயனாகும் ஒரு வாழ்வு அவர்களுக்கு கிடைக்கும்.

1 முதல் 8 வசனங்களில் அன்றாடம் செலுத்தப்பட வேண்டிய பலி தகனபலி என்று கூறப்பட்டது. முற்றும் ஒப்புக்கொடுத்தல் என்பதை காட்டும் பலியாக தகனபலி காணப்படுகின்றது. அவ்விதமான ஒரு அனுபவம் ஒவ்வொருவரும் அன்றாட வாழ்வில் நிரந்தரம் காண வேண்டும்.

28.2 வாரந்தோறும் செலுத்த வேண்டிய சர்வாங்க தகனபலி

ஓய்வு நாளிலோ போஜனபலிக்காக ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டு குட்டிகளையும், பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவையும், அதின் பானபலியையும் செலுத்த கடவீர்கள். நித்தமும் செலுத்தும் சர்வாங்க தகனபலியும் அதின் பானபலியும் அன்றி ஒவ்வொரு ஓய்வு நாளிலும் இந்த சர்வாங்க தகனபலியும் செலுத்த படவேண்டும். (எண். 28:9-10)

9, 10 ஆகிய வசனங்களில் தகனபலியும் அத்துடன் இணைந்து நிற்கும் போஜனபலி, பானபலி என்பதும் ஓய்வு நாள் தோறும் இரண்டு மடங்கு அதிக அளவில் செலுத்தப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. அன்றாடம் செய்யும் ஜெபம் ஸ்தோத்திரம் என்பவைகள் ஓய்வு நாளில் இரு மடங்கு பெருக வேண்டும் என்று பொருள் படுகின்றது. ஓய்வு நாள் ஆசரிப்பு மிகவும் முக்கியமானது என்று யாத்திராகம புத்தகம் 20:8-11 வசனங்களில் கட்டளையாக கொடுக்க பட்டது. கானான் கண்ட மன மகிழ்ச்சி நீடிக்க வேண்டுமானால் ஓய்வு நாளை மன மகிழ்ச்சியுடன் கடைபிடிக்க வேண்டும் என்று அறிய படுகின்றது. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 58-வது அதிகாரம் 13,14 ஆகிய வசனங்களில் ''என் பரிசுத்த நாளாகிய ஓய்வு நாளிலே உனக்கு இஷ்டமானதை செய்யாதபடி உன் காலை விலக்கி, உன் வழிகளின் படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதை செய்யாமலும், உன் சொந்த பேச்சை பேசாமலும் இருந்து, ஓய்வு நாளை மன மகிழ்ச்சியின் நாள் என்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமை உள்ள நாள் என்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மன மகிழ்ச்சியாய் இருப்பாய். பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறி இருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபினுடைய சுதந்தரத்தால் உன்னை போஷிப்பேன். கர்த்தருடைய வாய் இதை சொல்லிற்று'' என்று கர்த்தர் வாக்கு கொடுக்கிறார்.

அன்றாடம் செலுத்தும் பலியில் காலையும் மாலையும் வாழ்க்கையை கர்த்தருக்கு ஒப்பு கொடுக்கும் நிகழ்ச்சி இடம் பெறுகின்றது. ஓய்வு நாளில் அதனை இரு மடங்கு கொடுக்கும் பலியில் ஒப்பு கொடுப்பதுடன் சாட்சி பகருதலும், பெற்ற நன்மைகளை அறிவித்தலும், ஆனந்த சத்தம் இடுதலும் இடம் பெறுகின்றது. ஓய்வு நாளின் பாட்டு என்று 92-வது சங்கீதம் தலைப்பு பெற்று உள்ளது. அந்த ஓய்வு நாளின் பாட்டாகிய சங்கீதம் 1-4 வசனங்களை பார்ப்போம். ''கர்த்தரை துதிப்பதும், உன்னதமானவரே, உமது நாமத்தை கீர்த்தனம் பண்ணுவதும், பத்து நரம்பு வீணையினாலும், தம்புருவினாலும், தியானத்தோடு வாசிக்கும் சுரமண்டலத்தினாலும், காலையிலே உமது கிருபையையும், இரவிலே உமது சத்தியத்தையும்

அறிவிப்பதும் நலமாய் இருக்கும். கர்த்தாவே உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர், உமது கரத்தின் கிரியைகளின் நிமித்தம் ஆனந்த சத்தம் இடுவேன்,'' என்று ஓய்வு நாளின் பாட்டு பாடுகிறார்கள்.

28.3 மாதந்தோறும் செலுத்தப்பட வேண்டிய சர்வாங்க தகனபலி

உங்கள் மாத பிறப்புகளில் நீங்கள் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டு கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டு குட்டிகளையும் செலுத்த கடவீர்கள். போஜனபலியாக ஒவ்வொரு காளைக்கு பத்தில் மூன்று பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவையும், போஜனபலியாக ஒரு ஆட்டு கடாவுக்கு பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவையும், போஜனபலியாக ஒவ்வொரு ஆட்டு குட்டிக்கு பத்தில் ஒரு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவையும் கர்த்தருக்கு சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக செலுத்த கடவீர்கள். அவைகளுக்கு ஏற்ற பானபலிகள் திராட்சரசத்தில் காளைக்கு அரைப்படியும், ஆட்டு கடாவுக்கு படியில் மூன்றில் ஒரு பங்கும், ஆட்டு குட்டிக்கு காற்படி ரசமுமாய் இருக்கவேண்டும். இது வருஷ முழுவதும் மாதம் தோறும் செலுத்தப்பட வேண்டும். நித்தமும் இடப்படும் சர்வாங்க தகனபலியும் அதின் பானபலியும் அன்றி, பாவநிவாரண பலியாக கர்த்தருக்கு ஒரு வெள்ளாட்டு கடாவும் செலுத்த படவேண்டும். (எண். 28:11-15)

ஓய்வு நாளின் ஆசரிப்பை பொறுத்து கானானின் மகிழ்ச்சி நீடிக்க இருக்கின்றது என்று கூறப்படுகின்றது. தொடர்ந்து 11 முதல் 15 வசனங்களில் கானான் சென்ற பின்னர் மாதத்தின் முதல் நாள் மிகவும் சிறப்பான முறையில் தகனபலி, போஜனபலி, பானபலி என்பவைகள் இடம் பெற வேண்டும் என்று கூறப்படுகின்றது. மாதம் முழுவதும் குற்றம் இல்லாத வாழ்க்கை நடத்துவதற்கு மாதத்தின் முதல் நாளில் முற்றிலுமாக ஒப்பு கொடுத்துவிட வேண்டும் என்று கூற படுகின்றது. தினம் தோறும், தொடர்ந்து ஓய்வு நாள் தோறும், ஆட்டு குட்டிகள் பலியாக செலுத்த பட்டன. ஆனால் மாத பிறப்பில் இடம் பெறும் பலிமுறையில் இரண்டு காளைகளும் ஒரு ஆட்டு கடாவும் ஏழு ஆட்டு குட்டிகளும் இடம் பெறுகின்றன. மாதத்தின் துவக்கம் தூய்மையாக இருந்தால் மாதத்தின் அனைத்து நாட்களும் பெரும் பலன் தரும். இதனை வலியுறுத்த பலிகளின் எண்ணிக்கை அதிகமானது. தங்களின் சாமர்த்தியத்தினால் அல்ல, முற்றிலுமாக கர்த்தரை சார்ந்து வாழ்வதில் மட்டுமே மாதம் முழுவதும் குடும்பம் வெற்றியோடு செல்ல முடியும் என்பதை எடுத்து காட்ட மாதத்தின் முதல் நாள் ஜெபம் விண்ணப்பம் ஸ்தோத்திரம் என்பதற்கு பிரத்தியேக படுத்தப்படுகின்றது.

அத்தியாயம் - 29

வருடாந்திர பண்டிகைகளும் செலுத்த வேண்டிய பலிகளும்

29.1. முதலாம் மாதம் பதினாலாம் தேதி, எழு நாட்கள் பஸ்கா பண்டிகை

முதலாம் மாதம் பதினாலாம் தேதி கர்த்தருக்கு உரிய பஸ்கா. அந்த மாதம் பதினைந்தாம் தேதி பண்டிகை நாள்; ஏழு நாளளவும் புளிப்பில்லாத அப்பம் புசிக்க வேண்டும். முதலாம் நாளில் பரிசுத்த சபை கூடுதல் இருக்க வேண்டும்; அன்றை தினம் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. (எண். 28:16-18)

16-வது வசனம் முதல் 31-வது வசனம் வரை வருடம் தோறும் அனுசரிக்க வேண்டிய பண்டிகைகளும், பண்டிகை சம்பந்தப்பட்ட பலிகளும் கொடுக்கப்பட்டு உள்ளன. பஸ்கா பண்டிகை, புளிப்பு இல்லாத அப்ப பண்டிகை, முதற்பலன் படைப்பு பண்டிகை என்ற மூன்று பண்டிகைகளும் கானானின் ஆசீர்வாதம் தொடர்ந்து நீடிக்க அத்தியாவசியாமான பண்டிகைகள் என்று அறிவிக்கப்படுகின்றன.

நாள் தோறும், வாரம் தோறும், மாதம் தோறும் என்று மட்டும் அல்ல அவர்களுக்கும் கர்த்தருக்கும் உள்ள வாழ்க்கை வாழ் நாள் முழுவதும் நீடிக்க வேண்டிய வாழ்க்கை என்பதை குறிக்க வருடம் தோறும் இடம் பெற வேண்டிய மூன்று முக்கிய ஆராதனைகள் கொடுக்க படுகின்றன. வருடம் தோறும் இடம் பெறும் முதல் ஆராதனை பஸ்கா ஆசரிப்பு என்பது ஆகும். பஸ்கா ஆசரிப்பு யாத்திராகம புத்தகம் 12-வது அதிகாரத்தில் அறிமுகம் படுத்த பட்டது. தொடர்ந்து லேவியராகம புத்தகம் 23-வது அதிகாரத்திலும் கொடுக்கப்பட்டது. எண்ணாகம புத்தகம் 9:1-14 வசனங்களிலும் இன்னும் ஒரு முறை கூறப்பட்டது. இப்பொழுது புதிய தலைமுறைக்கு மீண்டும் கூறப்படுகின்றது. பஸ்கா என்பது ஒரு குடும்ப பண்டிகை ஆகும். அடிமைத்தன வாழ்வில் இருந்து ஒரு குடும்பமாக கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய குடும்பங்களையும் அற்புதமாக மீட்டு கொண்டார் என்பதை நினைவு கூறும் ஒரு ஆசரிப்பு தங்கள் சுய முயற்சியினால் அல்ல, கர்த்தரின் சுத்த கிருபையினால் அடிமை என்ற நிலை மாறி கானானில் சுதந்தரமாக வாழ்கின்றோம் என்று குடும்பம் குடும்பமாக அனுசரிக்க வேண்டிய பண்டிகை பஸ்கா பண்டிகை ஆகும். மரணத்தின் பிடியில் இருந்து பஸ்கா ஆட்டு குட்டியின் இரத்தத்தினால் குடும்பம் தப்பி பிழைத்தது என்று கர்த்தரை துதிக்கும் ஆசரிப்பு பஸ்கா ஆசரிப்பு ஆகும். அன்றாட வேலைகளை அகற்றி கொண்டாடப்பட வேண்டிய பண்டிகை பஸ்கா பண்டிகை ஆகும்.

அப்பொழுது நீங்கள் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டு கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டு குட்டிகளையும், அவைகளுக்கு ஏற்ற போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காக பத்தில் மூன்று பங்கையும், ஆட்டு கடாவுக்காக பத்தில் இரண்டு பங்கையும், ஏழு ஆட்டு குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக பத்தில் ஒரு பங்கையும், உங்கள் பாவநிவிர்த்திக்கு என்று பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்த கடவீர்கள். காலையிலே நித்தமும் செலுத்தும்

சர்வாங்க தகனபலியையும் அன்றி இவைகளையும் செலுத்த கடவீர்கள். இந்த பிரகாரம் ஏழு நாளளவும் நாடோறும் கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலி செலுத்த கடவீர்கள்; நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இதையும் செலுத்த வேண்டும். ஏழாம் நாளிலே பரிசுத்த சபை கூடுதல் இருக்க வேண்டும் அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. (எண். 28:19-25)

பண்டிகை கொண்டாடும் ஏழு நாட்களும் ஜனங்கள் விசேஷித்த பலியை செலுத்த வேண்டும். அப்பொழுது அன்றாட பலியும் நின்றுவிட கூடாது. முதல் நாளும் 7ம் நாளும் பரிசுத்த சபையாய் கூட வேண்டும்.

29.2 ஏழு வாரங்கள் சென்ற பின்னர் முதற்கனி படைக்கும் பண்டிகை

அந்த வாரங்களுக்கு பின் நீங்கள் கர்த்தருக்கு புதிய போஜனபலியாக முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை நாளிலும் பரிசுத்த சபை கூடுதல் இருக்க வேண்டும், அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. அப்பொழுது நீங்கள் கர்த்தருக்கு சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டு கடாவையும், ஒரு வயதான ஏழு ஆட்டு குட்டிகளையும், அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவில் ஒரு காளைக்காக பத்தில் மூன்று பங்கையும், ஒரு ஆட்டு கடாவுக்காக பத்தில் இரண்டு பங்கையும், ஏழு ஆட்டு குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக பத்தில் ஒரு பங்கையும், உங்களுக்காக பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்த கடவீர்கள். நித்திய சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இவைகளையும் செலுத்த கடவீர்கள். இவைகள் பழுதற்றவைகளாய் இருக்க வேண்டும். (எண். 28:26-31)

பஸ்கா ஆசரிப்பு ஆராதனையை தொடர்ந்து வருடம் தோறும் அனுசரிக்கப்பட வேண்டிய இரண்டாவது ஆராதனை முதற்கனி செலுத்தும் பண்டிகை என்று காணப்படுகின்றது. முதற்கனி படைக்கும் பண்டிகையை அறுப்பின் பண்டிகை என்றும், சேர்ப்பின் பண்டிகை என்றும் யாத்திராகம புத்தகம் 23:16-வது வசனம் அழைக்கின்றது. மேலும் முதற்கனி படைக்கும் பண்டிகை வாரங்களின் பண்டிகை என்றும் அழைக்க படுகின்றது. பஸ்கா பண்டிகை அனுசரிக்க பட்டு ஏழு வாரங்கள் சென்ற பின்னர் இடம் பெறும் பண்டிகை முதற்கனி படைக்கும் பண்டிகையாக இருப்பதினால் வாரங்களின் பண்டிகை என்றும் அழைக்கப்படுகின்றது. முதற்கனி படைக்கும் பண்டிகை புதிய ஏற்பாட்டு நூல்களில் பெந்தேகோஸ்தே பண்டிகை என்று அழைக்கப்படுவதை அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தம் 2:1-வது வசனத்திலும், 20:16-வது வசனத்திலும், 1 கொரிந்தியர் 16:8-வது வசனத்திலும் பார்க்கலாம்.

பாவம் என்ற அடிமைத்தனத்தில் இருந்து மனு மக்களை மீட்கும் பஸ்கா ஆட்டு குட்டியாக தேவ குமாரன் ஒரு நாள் தோன்றுவார் என்பதை கானானில் அவர்கள் அன்று ஆசரிக்கும் பஸ்கா பண்டிகை முன்னதாக அறிவிக்க இருக்கின்றது. குடும்பம் குடும்பமாக மரணத்திற்கு தப்பி

பிழைக்க அவர்களுக்கு அன்று பஸ்கா ஆட்டு குட்டியின் இரத்தம் உதவி செய்தது போன்று பின் ஒரு நாள் மனுமக்கள் அனைவரும் குடும்பம் குடும்பமாக மரணத்திற்கு தப்பி நித்திய ஜீவன் பெற்று கொள்ள தேவ ஆட்டு குட்டி சிலுவையில் அடிக்க படுவார் என்பதை பஸ்கா பண்டிகை நினைவு ஊட்டுகின்றது. பஸ்காவாகிய கிறிஸ்து அடிக்கப்பட்டு 50-வது நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வருவார் என்பதை தெரிவிக்க வாரங்களின் பண்டிகை அல்லது பெந்தேகோஸ்தே பண்டிகை என்பது இடம் பெறுகின்றது. மீட்கப்பட்ட ஜனங்கள் வருடம் முழுவதும் பழுதற்ற வாழ்வு நடத்துவதற்கு பழுதற்ற முறையில் பழுதற்ற பலிகள் கொண்டு வந்து பலிகளும் ஆராதனைகளும் தொடர்ந்து இடம் பெற்று கொண்டே இருக்க வேண்டும் என்பதை எண்ணாகம புத்தகம் 28 -வது அதிகாரம் எடுத்து கூறுகின்றது.

வருடத்தின் துவக்கம் முதல் முடிவு வரை தேவனாகிய கர்த்தரின் கண்கள் நன்மைக்கு ஏதுவாக கர்த்தருடைய ஜனங்கள் மீது இருப்பதற்கு வருடத்தின் அனைத்து நாட்களும் ஜெபம், ஸ்தோத்திரம், ஆராதனை என்பவைகள் தொடர்ந்து செல்ல வேண்டும். காலையிலும் மாலையிலும் கர்த்தரை கருத்துடன் தேட வேண்டும். இதனை எண்ணாகம புத்தகம் 28 -வது அதிகாரம் எடுத்து கூறுகின்றது. தானியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் 6-வது அதிகாரம் 10-வது வசனம். ''தானியேலோவென்றால், அந்த பத்திரத்திற்கு கையெழுத்து வைக்க பட்டது என்று அறிந்த போதிலும் தன் வீட்டுக்குள்ளே போய் தன் மேல் அறையிலே எருசலேமிற்கு நேராக பல கணிகள் திறந்து இருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்கால் படியிட்டு ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான்''.

29.3 ஏழாவது மாதத்தின் முதல் நாள் எக்காளம் ஊதும் பண்டிகை

எண்ணாகம புத்தகம் 29-வது அதிகாரத்தில் வருடம் தோறும் இடம் பெற வேண்டிய பண்டிகையின் விபரங்கள் தொடர்ந்து கொடுக்கப்பட்டு உள்ளன. வாழ்நாள் முழுவதும் தூய்மையில் உறுதி காண்பதற்கும், உண்மையில் நிலைத்து ஓங்குவதற்கும் ஐந்து முக்கிய பண்டிகைகளும் அதன் ஆராதனை முறைகளும் தரப்பட்டு உள்ளன. 28-வது அதிகாரத்தில் அன்றாடம் நிலைத்து நிற்பதும் வாரம் தோறும் சாட்சி பகருவதும் மாதம் தோறும் கனி தருவதுமான ஆராதனை முறைகள் அறிமுகம் செய்யப்பட்டன. மேலும் வருடம் தோறும் கொண்டாட பட வேண்டிய இரண்டு முக்கிய பண்டிகைகளும் கொடுக்க பட்டன. முதலாவது பண்டிகை முதலாம் மாதம் 15-ம் நாள் துவங்குவது. இரண்டாம் பண்டிகை அது முடிந்து ஏழு வாரங்களில் தொடங்குவது. இப்பொழுது வருடத்தில் வரிசையாக வரபோகும் மூன்று பண்டிகைகளை குறித்து கூற படுகிறது.

> *ஏழாம் மாதம் முதல் தேதி பரிசுத்த சபை கூடும் நாளாய் இருக்கக்கடவது; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; அது உங்களுக்கு எக்காளம் ஊதும் நாளாயிருக்க வேண்டும். அப்பொழுது நீங்கள் கர்த்தருக்கு சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டு கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டு குட்டிகளையும், அவைகளுக்கு அடுத்த போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காக பத்தில் மூன்று பங்கையும், ஆட்டு கடாவுக்காக இரண்டு பங்கையும், ஏழு ஆட்டு குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக ஒரு பங்கையும், உங்கள் பாவநிவிர்த்திக்கான பலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்தி,*

மாத பிறப்பின் சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும், தினம் தோறும் இடும் சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும், அவைகளின் முறைமைக்கு ஏற்ற பானபலிகளையும் அன்றி, இவைகளையும் கர்த்தருக்கு சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக செலுத்தக்கடவீர்கள். (எண். 29:1-6)

29-வது அதிகாரத்தில் முடிவு பரியந்தம் நிலைத்து நிற்க உதவியாக அமையும் மூன்று பண்டிகைகள் இடம் பெறுகின்றன. மூன்று பண்டிகைகளும் திஸ்ரீ என்று அழைக்கப்பட்ட ஏழாவது மாதத்தில் இடம் பெறுகின்றன. திஸ்ரீ மாதம் ஏத்தானின் மாதம் என்றும் இராஜாக்களின் புத்தகம் 7:2-வது வசனத்தில் கூறப்பட்டு உள்ளது. ''இஸ்ரவேல் மனுஷர் எல்லாரும் ஏழாம் மாதமாகிய ஏத்தானின் மாத பண்டிகையிலே இராஜாவாகிய சாலொமோனிடத்தில் கூடி வந்தார்கள்'' என்று அந்த வசனம் கூறுகின்றது. எபிரெய மக்கள் இரண்டு விதமான நாட்காட்டிகளை பயன்படுத்தி வந்தார்கள். ஒன்று சபை நாட்காட்டி என்பது ஆகும். மற்றொன்று வருட நாட்காட்டி என்பது ஆகும். சபை நாட்காட்டியில் நிசான் என்ற மாதம் முதல் மாதம் என்று கர்த்தரால் கூறப்பட்டதை யாத்திராகம புத்தகம் 12:2-வது வசனத்தில் பார்க்கின்றோம். திஸ்ரீ மாதம் என்பது சபை நாட்காட்டியில் ஏழாவது இடம்பெறும் மாதம் ஆகும். ஆனால் வருட நாட்காட்டியில் முதலாவது இடம் பெறும் மாதம் ஆகும். திஸ்ரீ மாதத்தின் முதல் நாள் எக்காளம் ஊதப்படுகின்றது.

லேவியராகம புத்தகம் 23:24,25 ஆகிய வசனங்களிலும் எண்ணாகம புத்தகம் 10:1-10 வசனங்களிலும் பழைய தலைமுறையினருக்கு எக்காள பண்டிகையின் விபரம் தெளிவாக எடுத்து கூறப்பட்டது.

எண்ணாகம புத்தகம் 29-வது அதிகாரத்தில் புதிய தலைமுறையினருக்கு அதன் அவசியம் தெரிவிக்க படுகின்றது. எக்காளம் மூன்று முக்கிய விபரங்களை அனைத்து மக்களுக்கும் அறிவிக்கின்றது. பாவம் கொடுமையானது என்பதை முதலாவது அறிவிக்கின்றது. பாவத்தின் கொடுமையை போக்க பிராய சித்தம் என்பது அவசியம் என்று அறிவிக்கின்றது. பிராய சித்தத்தின் மூலம் பெற்று கொண்ட பாவ மன்னிப்பு என்பது காக்கப்படுவதற்கு பரிசுத்த ஆவியானவரின் நிறைவு மிகவும் அவசியம் என்று முன் அறிவிக்கின்றது.

29-வது அதிகாரத்தில் ஏழாவது மாதத்தின் மூன்று நாட்கள் முக்கியப்படுத்தி கூறப்படுகின்றது. ஏழாவது மாதத்தின் முதல் நாள் முக்கியமானது என்று முதல் வசனம் கூறுகின்றது. அன்று அனைவரின் கவனத்தையும் கவரக்கூடிய எக்காளம் ஊதப்படுகின்றது. ஏழாவது மாதத்தின் பத்தாவது நாளும் முக்கியமானது என்று 7-வது வசனம் கூறுகின்றது. அன்று செய்த பாவங்களுக்கு பிராய சித்தம் செய்யும் ஆராதனை துவங்குகின்றது. ஏழாவது மாதத்தின் பதினைந்தாவது நாளும் மிகவும் முக்கியமானது என்று 12-வது வசனம் கூறுகின்றது. அன்று கூடார பண்டிகையின் துவக்கம் இடம் பெறுகின்றது. இவ்விதமாக சபை நாட்காட்டியில் ஏழாவதாக வரும் திஸ்ரீ என்ற மாதம் எக்காளம் ஊதும் பண்டிகை, பாவ நிவிர்த்தி ஆராதனை பண்டிகை, கூடார பண்டிகை என்ற மூன்று முக்கிய நிகழ்ச்சிகள் இடம் பெறும் மாதமாக மாறிற்று. 29:1-6 வசனங்களில் எக்காள பண்டிகை பற்றிய விளக்கம் இன்னும் ஒரு முறை தரப்படுகின்றது. அந்த பண்டிகையில் இடம் பெறும் பலிகள் அனைத்தும் அக்கினி சம்பந்தப்பட்ட பலிகளே ஆகும்.

பாவத்தை வெறுத்து, பரிசுத்தம் வாஞ்சித்து முன் வருகின்றவர்கள் அனைவரையும் வரவழைப்பதற்கு எக்காளம் ஊதப்படுகின்றது. ஊதப்படும் எக்காளம் ஆட்டு கொம்பில் செய்யப்பட்ட எக்காளம் ஆகும். மனுக்குலத்து மாந்தர் அனைவருக்கும் பலி ஆடாக மாற இருக்கும் தேவ ஆட்டு குட்டியை முன்னதாக நினைவூட்டும் எக்காளமாக தெரிகின்றது. பாவம் செய்து விட்டு பின்னர் மனம் பாரம் கொண்டு வருத்தத்துடன் வாழும் மக்கள் அனைவரையும் அந்த எக்காளம் அழைத்தது. அதே போன்று இயேசுவும் இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில் அழைத்தார். பரிசுத்த மத்தேயு என்பார் எழுதின சுவிசேஷம் 11:28-30 வசனங்கள் இயேசுவின் அழைப்பை எடுத்து கூறுகின்றன. ''வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும், மன தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்று கொண்டு என்னிடத்தில் கற்று கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்.''

திஸ்ரீ மாதம் முதல் நாள் முழங்கப்படும் எக்காளம் பாவத்தை விட்டு வெளியே வாருங்கள், பாவ நிவிர்த்தி ஆராதனைக்கு ஆயத்தம் ஆகுங்கள் என்று கூறும் எக்காளம் மட்டும் அல்ல, எச்சரிக்கும் எக்காளமாகவும் காண படுகின்றது. பாவத்தை வெறுத்து பரிசுத்தமான வாழ்க்கை வாழ தயங்கி விட்டால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு நாள் ஒன்றும் தொடர்ந்து வருகின்றது என்று எக்காளம் கூறுகின்றது. பாவத்திற்கு தப்பி பிழைப்பதற்கு ஒரு வழி காட்டும் எக்காளமாகவும் தெரிகின்றது. ஆனால் மனதை கல்லாக்கி வாழ்க்கையை பாழாக்கி விட்டால் தேவ நியாயத்தீர்ப்பு நாள் ஒன்றும் இடம் பெறுவதற்கு இருக்கின்றது என்று எச்சரிக்கும் எக்காளமாகவும் இருக்கின்றது. இருதயத்தை பரிசோதித்து பார்க்க தூண்டும் பண்டிகையாக எக்காள பண்டிகை காண படுகின்றது. எக்காளம் ஏழு நாட்கள் ஊதப்படுகின்றன. மனம் திரும்புவதற்கு ஏற்ற கால அவகாசம் கர்த்தரால் கொடுக்க படுகின்றது. அந்த கிருபையின் நாட்களை அலட்சியம் செய்து விட்டால் தவணையின் நாட்கள் முற்று பெறும். தண்டனையின் நாட்கள் துவங்க இருக்கும். இதனை திஸ்ரீ மாதம் முதல் நாள் முழங்கும் எக்காளம் எங்கும் தெரிவிக்கின்றது. பரிசுத்த மத்தேயு என்பார் எழுதிய சுவிசேஷம் 24:29-31-வது வசனம் ''அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் ஒளியை கொடாது இருக்கும். நட்சத்திரங்கள் வானத்தில் இருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷ குமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதை பூமியில் உள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்''.

29.4 ஏழாம் மாதம் பத்தாம் நாள் பாவ நிவிர்த்தி ஆராதனை பண்டிகை

இந்த ஏழாம் மாதம் பத்தாம் தேதி உங்களுக்கு பரிசுத்த சபை கூடும் நாளாய் இருக்கக்கடவது; அதிலே நீங்கள் யாதொரு வேலையும் செய்யாமல், உங்கள் ஆத்துமாக்களை தாழ்மை படுத்தி, கர்த்தருக்கு சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டு கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டு குட்டிகளையும், அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்கு

பத்தில் மூன்று பங்கையும், அந்த ஒரு ஆட்டு கடாவுக்காக இரண்டு பங்கையும், ஏழு ஆட்டு குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக பத்தில் ஒரு பங்கையும், பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்தி, பாவநிவாரண பலியையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் அன்றி, இவைகளையும் செலுத்த கடவீர்கள். (எண். 29:7-11)

ஒவ்வொரு வருடமும் ஏழாம் மாதம் பத்தாம் நாள் சபை கூடிவர வேண்டும். அந்த நாளில் வேலை எதுவும் செய்யலாகாது. ஆனால் ஜனங்கள் தங்கள் ஆத்துமாக்களை தாழ்மை படுத்த வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். அது பாவ நிவிர்த்தி நாளானதால் அவர் உபவாசம் இருந்து, தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபபட்டு துக்கித்து, கர்த்தரின் மன்னிப்பை பெற புலம்ப வேண்டும்.

29.5 ஏழாம் மாதம் பதினைந்தாம் நாள் ஏழுநாள் கூடார பண்டிகை

ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி உங்களுக்கு பரிசுத்த சபை கூடும் நாளாய் இருக்கக்கடவது; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; ஏழுநாள் கர்த்தருக்கு பண்டிகை ஆசரிக்க கடவீர்கள். (எண். 29:12)

அதே மாதம் 15-ம் நாளும் பண்டிகை ஆசரிக்க வேண்டும். அன்று சபை கூடுதலும் இருக்க வேண்டும். இந்த பண்டிகையே லேவியராகமத்தில் கூறப்பட்ட கூடார பண்டிகை ஆகும்.

முதல் நாள் செலுத்த வேண்டிய பலி

நீங்கள் கர்த்தருக்கு சுகந்த வாசனையுள்ள சர்வாங்க தகனபலியாக பதின்மூன்று காளைகளையும், இரண்டு ஆட்டு கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டு குட்டிகளையும், அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே அந்த பதின்மூன்று காளைகளில் ஒவ்வொன்றிற்காக பத்தில் மூன்று பங்கையும், அந்த இரண்டு ஆட்டு கடாக்களில் ஒவ்வொன்றிற்காக இரண்டு பங்கையும், பதினான்கு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக ஒரு பங்கையும், நித்திய தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலியையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்த கடவீர்கள். (எண். 29:13-16)

இங்கு பலியாக செலுத்தபடும் மிருகங்களின் எண்ணிக்கை இரு மடங்காக கூடி இருப்பதை காண்கிறோம்.

இரண்டாம் நாள் செலுத்த வேண்டிய பலி

இரண்டாம் நாளிலே பன்னிரண்டு காளைகளையும், இரண்டு ஆட்டு கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டு குட்டிகளையும், காளைகளும் ஆட்டு கடாக்களும் ஆட்டு குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்கு தக்கதாக முறைமையின்படி அவைகளின்

போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜன பலியையும், அவைகளின் பானபலியையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்த கடவீர்கள். (எண். 29:17-19)

இரண்டாவது நாளில் ஒரு காளை குறைவாக பலியிடபடுகிறது. ஒவ்வொரு நாளும் இவை பாவ நிவாரண பலியாக படைக்க படுகின்றது.

மூன்றாம் நாள் செலுத்த வேண்டிய பலி

மூன்றாம் நாளிலே பதினொரு காளைகளையும், இரண்டு ஆட்டு கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டு குட்டிகளையும், காளைகளும் ஆட்டு கடாக்களும் ஆட்டு குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்கு தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலியையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்த கடவீர்கள். (எண். 29:20-22)

மூன்றாம் நாளில் பதினொரு காளைகள் பலியிடபடுகின்றன. முதல் நாளில் பதின்மூன்று காளைகளை பலியிட வேண்டும் என்று பார்க்கிறோம்.

நான்காம் நாள் செலுத்த வேண்டிய பலி

நான்காம் நாளிலே பத்து காளைகளையும், இரண்டு ஆட்டு கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டு குட்டிகளையும், காளைகளும் ஆட்டு கடாக்களும் ஆட்டு குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்கு தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலியையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்த கடவீர்கள். (எண். 29:23-25)

காளைகளின் எண்ணிக்கை ஒன்று ஒன்றாக குறைந்து 'பத்து' என்ற எண்ணிக்கை வந்து சேர்ந்து இருக்கிறது.

ஐந்தாம் நாள் செலுத்த வேண்டிய பலி

ஐந்தாம் நாளிலே ஒன்பது காளைகளையும், இரண்டு ஆட்டு கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டு குட்டிகளையும், காளைகளும் ஆட்டு கடாக்களும் ஆட்டு குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்கு தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்த கடவீர்கள். (எண். 29:26-28)

ஐந்தாம் நாள் செலுத்த வேண்டிய காளைகள் ஒன்பது.

ஆறாம் நாள் செலுத்த வேண்டிய பலி

ஆறாம் நாளிலே எட்டு காளைகளையும், இரண்டு ஆட்டு கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டு குட்டிகளையும், காளைகளும் ஆட்டு கடாக்களும் ஆட்டு குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்கு தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலிகளையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்த கடவீர்கள். (எண். 29:29-31)

ஆறாம் நாள் செலுத்த வேண்டிய காளைகள் எட்டு.

ஏழாம் நாள் செலுத்த வேண்டிய பலி

ஏழாம் நாளிலே ஏழு காளைகளையும், இரண்டு ஆட்டு கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டு குட்டிகளையும், காளைகளும் ஆட்டு கடாக்களும் ஆட்டு குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்கு தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜன பலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜன பலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்த கடவீர்கள். (எண். 29:32-34)

ஏழாம் நாளில் ஏழு காளைகளை பலி இடுகிறார்கள். மற்ற பலிகள் யாவற்றிலும் மாற்றம் எதுவும் இல்லை. இந்த ஏழு காளைகளோடு சேர்ந்து மொத்தம் 70 காளைகள் கூடார பண்டிகையின் போது பலி இடப்பட வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். எழுபது என்னும் எண்ணிக்கை, வேதாகமத்தில் ஒரு விசேஷித்த இடம் பெற்றது. நோவாவின் ஆண் வாரிசுகளும், அவர்களது ஆண் வாரிசுகளும் சேர்ந்து எழுபது பேர் ஆவார்கள் (ஆதி. 10). அந்த எழுபது பேரும் பூமியின் எழுபது தேசங்களுக்கு வித்தானார்கள் (ஆதி. 10:32).

கூடார பண்டிகை என்பது ஒரு அறுப்பின் பண்டிகை ஆகும். அதை சேர்ப்பின் பண்டிகை என்றும் கூறலாம். வருடம் தோறும் கொண்டாடப்படும் பண்டிகைகளில் முதலில் வரும் முதற்கனி பண்டிகை வாற்கோதுமை அறுப்பு காலமாகிய வசந்த காலத்தில் கொண்டாடப்பட வேண்டும். வாரங்களின் பண்டிகை கோதுமை அறுப்பு காலமாகிய வேனிற் காலத்தில் கொண்டாடப்பட வேண்டும். சேர்ப்பின் பண்டிகை என்பது திராட்சை, அத்தி, ஒலிவ, பேரீட்சை, மாதுளம் முதலிய பழங்கள் அறுவடை செய்யும் காலமாகிய இலையுதிர் காலத்தில் கொண்டாடப்பட வேண்டும்.

இஸ்ரவேலின் ஒவ்வொரு அறுவடை பண்டிகையும் ஆழமான தீர்க்க தரிசனமாக அமைகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அறுவடையை ஆத்தும ஆறுவடை பரலோக இராஜ்யத்தில் சேர்க்கப்பட காத்து கொண்டிருப்பதற்கு ஒப்பிடுகிறார். அப்போஸ்தலனாகிய பரிசுத்த லூக்காவின் சுவிசேஷம் 10-ம் அதிகாரம் 1,2 வசனங்களில் ''இவைகளுக்கு பின்பு கர்த்தர் வேறே எழுபது பேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும்

இடங்களுக்கும் அவர்களை தமக்கு முன்னே இரண்டு இரண்டு பேராக அனுப்பினார்'' என்று பார்க்கிறோம். அந்த எழுபது பேரும் பிதாவின் அறுவடைக்காக வேலைகாரர்களாய் கர்த்தரால் அனுப்ப படுகிறார்கள்.

அறுவடை என்பது கடைசி காலங்களோடு இணைக்கபட்டு வருவதை நாம் அநேக இடங்களில் காணலாம். ஆகவே கூடார பண்டிகை என்ற பண்டிகை கடைசி காலங்களையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மணவாளனாக, தனது மனையாட்டியாகிய சபைக்காக திரும்ப வரபோவதையும் குறிக்கிறது. சபை என்பது எல்லா தேசங்களில் இருந்தும் சேர்க்க படும் விசுவாசிகளை குறிக்கிறது (வெளி. 7:9-10). இஸ்ரவேல் தேசம், முதலாக தோன்றிய 70 தேசங்களில் இருந்து, 70 தேசங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க பிரித்து எடுக்கபட்ட தேசம் ஆகும் (ஆதி. 12:1-3). கானானில் இருந்து யாக்கோபு எகிப்திற்கு அழைத்து சென்றவர்கள் 70 பேர். இஸ்ரவேல் மக்களின் 12 கோத்திரத்தாரும் ஆதியில் தோன்றிய 70 தேசங்களுக்கு ஆசீர்வாதம் கொண்டு வருபவர்களாக தேசங்களுக்கும் தேவனுக்கும் நடுவில் நிற்கின்றார்கள். ஒருவர் அவர்களுக்கு போய் சொல்லாவிட்டால் தேசங்கள் கர்த்தரை அறிவதில்லை. ஆகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது 70 சீஷர்களை அவரை குறித்து அறிவிக்க அனுப்புகிறார்.

29.6 எட்டாம் நாள் விசேஷித்த ஆசரிப்பும் செலுத்த வேண்டிய பலிகளும்

எட்டாம் நாள் உங்களுக்கு விசேஷித்த ஆசரிப்பு நாளாய் இருக்கக்கடவது; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. அப்பொழுது நீங்கள் கர்த்தருக்கு சுகந்த வாசனையுள்ள தகனமான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டு கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டு குட்டிகளையும், காளையும் ஆட்டு கடாவும் ஆட்டு குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்கு தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டு கடாவையும் செலுத்த கடவீர்கள். உங்கள் பொருத்தனைகளையும், உங்கள் உற்சாக பலிகளையும், உங்கள் சர்வாங்க தகனபலிகளையும், உங்கள் போஜன பலிகளையும், உங்கள் பானபலிகளையும், உங்கள் சமாதானபலிகளையும் அன்றி, நீங்கள் உங்கள் பண்டிகைகளிலே கர்த்தருக்கு செலுத்த வேண்டியவைகள் இவைகளே என்று சொல் என்றார். கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியெல்லாம் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்னான். (எண். 29:35-40)

எட்டாவது நாளில் ஒரே ஒரு காளை பலியிடபடுகிறது. அது சேர்த்து கொள்ள பட்ட கர்த்தருடைய மக்கள் அவருக்குள், அவரோடு கூட நித்திய நித்தியமாக வாழ போவதை குறிக்கின்றது.

அத்தியாயம் - 30

கர்த்தருக்கு பண்ணிய பொருத்தனைகளை குறித்த கட்டளை

30.1 ஆண் மக்கள் கர்த்தருக்கு செய்யும் பொருத்தனைகள்

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் தலைவரை நோக்கி: கர்த்தர் கட்டளை இடுவது என்னவென்றால்: ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தை செய்யும்படி ஆணை இட்டு தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தி கொண்டாலும், அவன் சொல் தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படி எல்லாம் செய்ய கடவன். (எண். 30:1-2)

எண்ணாகம புத்தகம் 30-வது அதிகாரம் மனிதனின் இயலாத தன்மையையும் அந்த நேரங்களில் அவன் எடுக்கும் முடிவுகளையும் பற்றி கூறுகின்றது.

ஆபத்து தன்னை நோக்கி வரும் பொழுது செய்வது அறியாது கர்த்தரை நோக்கி மனிதன் பார்க்கிறான். கர்த்தரின் சகாயம் தனக்கு அவசிய படுவதால் கர்த்தரை பிரிய படுத்துவதற்கு பொருத்தனைகள் செய்கிறான். ஆணைகள் இடுகிறான். எண்ணாகம புத்தகம் 6-வது அதிகாரத்தில் நசரேய விரதம் என்பதை பற்றி பார்த்தோம். அதிலும் பொருத்தனை பற்றிய தகவல் கொடுக்கப்பட்டது. ஆனால் எண்ணாகமம் 30-வது அதிகாரம் பொருத்தனை என்பதையும் ஆணையிடுதல் என்பதையும் தெளிவாக்கி தருகின்றது. ஆதியாகம புத்தகத்தில் யாக்கோபின் வாழ்வில் ஆபத்து வந்தது. அவனது உயிருக்கே ஆபத்து வந்து விட்டது. உயிர் பிழைப்பதற்காக வீட்டை விட்டு தொலை தூரம் ஓடினான். உயிருக்கு வந்த பயமும், தாய் மேல் இருந்த பாசமும் அவன் இருதயத்தை கனத்த இதயமாக மாற்றி விட்டது. முன் பின் தெரியாத திசை நோக்கி ஓடும் அவனுக்கு, உண்பதற்கு உணவு கொடுக்க தாய் இல்லை. உடுக்க வஸ்திரம், உறங்குவதற்கு இடம் எது என்பதும் தெரியவில்லை. தனித்து விடப்பட்ட அவன் தனக்கு வந்த ஆபத்தை கர்த்தரிடம் கூறி தயவு பெறுவதற்கு முடிவு செய்தான். ஆதியாகம புத்தகம் 28:20-22 வசனங்களில் ''அப்பொழுது யாக்கோபு தேவன் என்னோடே இருந்து நான் போகிற இந்த வழியிலே என்னை காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்கு தந்து, என்னை என் தகப்பன் வீட்டிற்கு சமாதானத்தோடு திரும்பி வரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்கு தேவனாய் இருப்பார். நான் தூணாக நிறுத்தின இந்த கல் தேவனுக்கு வீடாகும். தேவரீர் எனக்கு தரும் எல்லாவற்றிலும் உமக்கு தசம பாகம் செலுத்துவேன் என்று சொல்லி பொருத்தனை பண்ணி கொண்டான்'' என்று பார்க்கிறோம்.

எண்ணாகம புத்தகம் 21:2-வது வசனத்தில் ஜனங்கள் அனைவரும் சேர்ந்து கர்த்தருக்கு பொருத்தனை செய்து ஆபத்தில் இருந்து விடுவிக்க பட்டார்கள் என்பதை பார்க்கலாம். நியாயாதிபதிகள் 15-வது அதிகாரத்தில் யெப்தா என்பவர் ஒரு பொருத்தனை செய்தார். குழந்தை பாக்கியம் இல்லாமல் வருந்தி கொண்டு இருந்த அன்னாள் என்ற பெண், சாமுவேல் தீர்க்கதரிசியின் முதலாம் புத்தகம்1:15-வது வசனத்தில் ஒரு பொருத்தனை செய்து ஜெபித்தாள். ஆண் மகவு பெற்றாள். ஆபத்து நேரங்களிலும் தேவன் மனிதரால் சந்திக்கப்பட முடியாத நேரங்களிலும் மட்டும் அல்ல, தேவனாகிய கர்த்தர் மீது அன்பும் பாசமும் அதிகரிக்கும் நேரங்களிலும் பொருத்தனைகள் செய்ய பட்டன. ஆணைகள்

இடப்பட்டன. சங்கீதம் 132:2-5 வசனங்களில் ''அவன் நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும் யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணும் மட்டும் என் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பதும் இல்லை. என் படுக்கையாகிய கட்டிலின் மேல் ஏறுவதும் இல்லை. என் கண்களுக்கு நித்திரையையும் என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதும் இல்லை என்று கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவருக்கு பொருத்தனை பண்ணினான்'' என்று தாவீது அரசன் செய்த பொருத்தனையை பார்க்கிறோம்.

பொருத்தனைகள் என்பது தானே தன் மீது சுமத்தி கொள்ளுவது ஆகும். கர்த்தர் கேட்பது இல்லை. பரிசுத்தம், அன்பு, உண்மை என்ற பரலோக எதிர்பார்ப்புகளை மட்டுமே கர்த்தர் கேட்கிறார். அவரை பிரியப்படுத்த பிறிதொன்றும் கர்த்தர் கேட்பது இல்லை. ஆயினும் பொருத்தனை செய்து கர்த்தரை பிரியப்படுத்தி தங்களது ஆபத்துக்களை கடந்து செல்ல, தேவைகளை பெற்று கொள்ள தீர்மானிக்கும் பொழுது அவை நிறைவேற்றப்பட வேண்டிய முறை என்ன என்பது 30-வது அதிகாரத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது.

ஆண் மக்கள் பொருத்தனை செய்து விட்டால் அதனை திரும்ப பெற முடியாது என்று தெளிவாக வசனங்கள் கூறுகின்றன. செய்த பொருத்தனையை நிறைவேற்றியே தீர வேண்டும் என்று எதிர் பார்க்க படுகின்றது. உபாகம புத்தகம் 23:21-23 வசனங்களில் ''நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பொருத்தனை பண்ணி இருந்தால், அதை செலுத்த தாமதம் செய்யாதே. உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார். அது உனக்கு பாவம் ஆகும். நீ பொருத்தனை பண்ணாது இருந்தால் உன் மேல் பாவம் இல்லை. உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும். உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் நீ பொருத்தனை பண்ணி சொன்ன உற்சாக பலியை செலுத்தி தீர்ப்பாயாக'' என்று பார்க்கிறோம். பிரசங்கியின் புத்தகம் 5:4,5 ஆகிய வசனங்கள், ''நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணி கொண்டால் அதை செலுத்த தாமதியாதே. அவர் மூடரில் பிரியப்படுகிறது இல்லை. நீ நேர்ந்து கொண்டதை செய். நீ நேர்ந்து கொண்டதை செய்யாமல் போவதை பார்க்கிலும் நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம்'' என்று கண்டிக்கின்றது.

30.2 திருமணம் ஆகாத பெண்ணின் பொருத்தனை

தன் தகப்பன் வீட்டிலிருக்கிற ஒரு பெண் பிள்ளை தன் சிறுவயதிலே கர்த்தருக்கு பொருத்தனை பண்ணி யாதொரு காரியத்தை செய்யும்படி தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தி கொண்டால், அவள் செய்த பொருத்தனையையும், அவள் பண்ணி கொண்ட நிபந்தனையையும் அவளுடைய தகப்பன் கேட்டும் அவளுக்கு ஒன்றும் சொல்லாது இருப்பானானால், அவள் செய்த எல்லா பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தி கொண்ட நிபந்தனையும் நிறைவேற வேண்டும். அவள் செய்த பொருத்தனைகளையும், அவள் செய்யும்படி தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தின நிபந்தனையையும் அவளுடைய தகப்பன் கேட்கிற நாளில் அவன் வேண்டாம் என்று தடுத்தால், அது நிறைவேற வேண்டியதில்லை. அவளுடைய தகப்பன் வேண்டாம் என்று தடுத்தபடியால் கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார். (எண். 30:3-5)

திருமணம் ஆகும் வரை மகள் தகப்பனை தலையாக கொண்டு இருக்கிறாள். அவள் பொருத்தனை செய்வதற்கு தகப்பனின் சம்மதம் அவசியம் தேவை படுகின்றது. உணர்ச்சி வசப்பட்டு, முதிர்ச்சி இழந்து பொருத்தனைகள் இடம் பெறாமல் இருக்க தகப்பனின் உதவி அவசியப்பட்டது.

30.3 திருமணம் ஆன பெண்ணின் பொருத்தனை

அவள் பொருத்தனை பண்ணும் போதும், தன் உதடுகளை திறந்து தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தி கொள்ளும் போதும், அவளுக்கு புருஷன் இருந்தால், அப்பொழுது அவளுடைய புருஷன் அதை கேட்டிருந்தும், அதை கேள்விப்படுகிற நாளில் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருந்தால், அவளுடைய பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தின நிபந்தனையும் நிறைவேற வேண்டும். அவளுடைய புருஷன் அதை கேட்கிற நாளில் அவன் வேண்டாம் என்று தடுத்து, அவள் செய்த பொருத்தனையும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தி கொண்ட நிபந்தனையும் செல்லாதபடி செய்தானேயானால், அப்பொழுது கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார். (எண். 30:6-8)

6 முதல் 8 வசனங்களில் திருமணமான பெண் எடுக்கும் பொருத்தனைகளின் விபரம் கொடுக்கப்பட்டு உள்ளது. திருமணம் ஆகும் முன்னர் செய்த பொருத்தனைகளை திருமணம் செய்த பின்னர் கணவனிடம் கூறி கணவனின் சம்மதம் பெற்று கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. திருமணம் ஆன பின்னர் எடுக்கும் பொருத்தனைகளை கணவனை கலந்து எடுக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. கணவனை நிராகரித்து கர்த்தருக்கு பொருத்தனைகள் அவசியப்படவில்லை என்பது தெளிவு படுத்த படுகின்றது. கணவன் மனைவி நடுவில் உயர்ந்த அளவு நம்பிக்கை நீடித்து நிலைக்க வேண்டும்.

ஒரு விதவையாவது, தள்ளப்பட்டு போன ஒரு ஸ்திரீயாவது தன் ஆத்துமாவை எந்த நிபந்தனைக்கு உட்படுத்தி கொள்கிறாளோ அந்த நிபந்தனை நிறைவேற வேண்டும். (எண். 30:9)

9-வது வசனத்தில் கணவனை இழந்த பெண் விதவை ஆகும் பொழுது எடுக்கும் பொருத்தனைகள் அனைத்திற்கும் அவளே பொறுப்பாளியாக மாறி விடுகின்றாள். விதவையானவள் எடுக்கும் பொருத்தனைகளில் இருந்து பின் வாங்கவே முடியாது என்று அந்த வசனம் கூறுகின்றது.

அவள் தன் புருஷனுடைய வீட்டில் யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தை செய்யும்படி ஆணையிட்டு தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தி கொண்டாலும், அவளுடைய புருஷன் அதை கேட்டும் அவளுக்கு அதை வேண்டாமென்று தடுக்காமல் மவுனமாயிருந்தால், அவள் செய்த எல்லா பொருத்தனைகளும், அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்கு உட்படுத்தின எல்லா நிபந்தனைகளும் நிறைவேற வேண்டும். அவளுடைய புருஷன் அவைகளை கேட்ட நாளில் அவைகளை செல்லாதபடி பண்ணினால், அப்பொழுது அவள் செய்த

பொருத்தனைகளும், அவள் தன் ஆத்துமாவை உட்படுத்தின நிபந்தனையை குறித்து அவள் வாயிலிருந்து புறப்பட்டதொன்றும் நிறைவேற வேண்டியதில்லை; அவளுடைய புருஷன் அவைகளை செல்லாதபடி பண்ணினதினாலே கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார். (எண். 30:10-12)

10 முதல் 12 வசனங்களில் ஆணையிடுதல் பற்றிய விளக்கம் தரப்படுகின்றது. பொருத்தனை மட்டும் அல்ல. கணவனின் சம்மதம் இல்லாமல் ஆணையிடுவதும் தடை செய்ய படுகின்றது.

எந்த பொருத்தனையையும், ஆத்துமாவை தாழ்மை படுத்தும்படி செய்யப்பட்ட எந்த ஆணையையும், அவளுடைய புருஷன் ஸ்திரப்படுத்தவும் கூடும், செல்லாதபடி பண்ணவும் கூடும். அவளுடைய புருஷன் ஒருநாளும் அவளுக்கு ஒன்றும் சொல்லாது இருந்தானாகில், அவன் அவளுடைய எல்லா பொருத்தனைகளையும், அவள் பேரிலிருக்கிற அவளுடைய எல்லா நிபந்தனைகளையும் ஸ்திர படுத்துகிறான். அவன் அதை கேட்ட நாளிலே அவளுக்கு ஒன்றும் சொல்லாமல் போனதினால், அவளை ஸ்திரப்படுத்துகிறான். (எண். 30:13-14)

பொருத்தனை செய்வதற்கு சம்மதம் தெரிவித்த பின்னர் கணவன் மனைவியை உற்சாகப்படுத்த வேண்டும் என்று வசனம் கூறுகின்றது. அவளுடைய பொருத்தனைகளை திரும்ப பெற்று கொள்ள முடியாது. மனைவியின் பொருத்தனை முற்று பெறாமல் நிறுத்தி விடுவதற்கு கணவன் உத்தரவு கொடுக்க முடியாது என்பதை 14-வது வசனம் கூறுகின்றது.

அவன் அவைகளை கேட்டபின்பு செல்லாதபடி பண்ணினால், அவளுடைய அக்கிரமத்தை அவன் சுமப்பான் என்றார். புருஷனையும் ஸ்திரீயையும், தகப்பனையும் தகப்பனுடைய வீட்டில் சிறு வயதில் இருக்கிற அவன் குமாரத்தியையும் குறித்து, கர்த்தர் மோசேக்கு விதித்த கட்டளைகள் இவைகளே. (எண். 30:15-16)

ஆபத்தின் நடுவிலே, தேவையின் காரணத்தினாலே, அன்பின் பெருக்கினாலே செய்யும் அனைத்து பொருத்தனைகளிலும் கர்த்தர் உண்மையை எதிர்பார்க்கிறார். 50-வது சங்கீதம் 14,15 ஆகிய வசனங்களை பார்ப்போம். ''நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளை செலுத்தி, ஆபத்து காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய்''.

அத்தியாயம் - 31

மக்களை பாவத்தில் விழ செய்த மீதியானியர் மீது தீர்ப்பு

31.1 மோசேக்கு கர்த்தர் கொடுத்த கடைசி பணி, மீதியானுக்கு விரோதமாக யுத்தம்

கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் புத்திரர் நிமித்தம் மீதியானியர் இடத்தில் பழிவாங்குவாயாக. அதன் பின்பு உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்க படுவாய் என்றார். (எண். 31:1-2)

மீதியான் என்ற மக்கள் மூலமாக பரிசுத்தம் பாதிக்கப்பட்ட விபரத்தை 25-வது அதிகாரத்தில் நாம் கண்டோம். பரிசுத்தம் பாதிக்கப்படும் பொழுது சிரம் என்பது, எவ்வித ஈவு இரக்கமும் இன்றி, கால தாமதமும் இன்றி, இரண்டாம் சிந்தனையும் இன்றி, செயல் படுகின்றது. கர்த்தர் பரிசுத்தர். கர்த்தருடைய சபை பரிசுத்தமானது. பரிசுத்தம் என்பதை பாதிக்க எழும்பும் அனைத்தையும் சிரம் பாதிக்கின்றது.

மீதியானியர் மீது கர்த்தர் வாங்கும் பழி என்பதே எண்ணாகம புத்தகம் 31-வது அதிகாரம் ஆகும். ''பழி வாங்குதல் எனக்கு உரியது. நானே பதில் செய்வேன்'' என்று ரோமர் நிரூபம் 12-வது அதிகாரம் 19-வது வசனத்தின் முன் பகுதி கூறுகின்றது. ''ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாய் இருக்கும்'' என்று எபிரெயர் நிரூபம் 10:31-வது வசனம் கூறுகின்றது. ''நீங்கள் பழி வாங்காமல் கோபாக்கினைக்கு இடம் கொடுங்கள்'' என்று ரோமர் நிரூபம் 12-வது அதிகாரம் 19-வது வசனத்தின் பின் பகுதி கூறுகின்றது.

31-வது அதிகாரம் 2-வது வசனத்தில் மீதியானியர் மேல் பழி வாங்கு என்று மோசேயிடம் கர்த்தர் கூறுகின்றார். ஏனெனில் அவர்கள் செய்தது கர்த்தருக்கு விரோதமான பாவம். வெறும் மனிதர்களுக்கு விரோதமானது அல்ல. ஏனெனில் வேசித்தனம் என்னும் பாவத்தினால் ஜனங்களுடைய உடல் மட்டுமன்றி, ஆத்துமாவும் கெட்டு போனது.

உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கபடுவாய் என்பது உலக பிரகாரமாக மரித்து போவதை குறித்தாலும், வேறு உலகத்தில் உயிரோடு இருக்கும் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு ஒருவனாக சேர்த்து கொள்ள படுவதை குறிக்கின்றது.

அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: கர்த்தர் நிமித்தம் மீதியானியர் இடத்தில் பழி வாங்கும் பொருட்டு, உங்களில் அவர்கள் மேல் யுத்தத்திற்கு போகத்தக்கதாக மனிதரை பிரித்தெடுங்கள். இஸ்ரவேலுடைய எல்லா கோத்திரங்களிலும் ஒவ்வொரு கோத்திரத்தில் ஆயிரம் பேரை யுத்தத்திற்கு அனுப்ப வேண்டும் என்றான். அப்படியே இஸ்ரவேலராகிய அநேகம் ஆயிரங்களில், ஒவ்வொரு கோத்திரத்தில் ஆயிரம் ஆயிரம் பேராக பன்னீராயிரம் பேர் யுத்த சன்னத்தராய் நிறுத்த பட்டார்கள். மோசே அவர்களையும் ஆசாரியனாகிய எலெயாசாரின் குமாரன் பினேகாசையும் யுத்தத்திற்கு அனுப்புகையில், அவன் கையிலே பரிசுத்த தட்டு முட்டுக்களையும், தொனிக்கும் பூரிகைகளையும் கொடுத்து அனுப்பினான். (எண். 31:3-6)

அந்த சம்பவம் சேனை தலைவர்களின் பொறுப்பில் கொடுக்கப்படவில்லை. பிரதான ஆசாரியனின் பொறுப்பில் விடப்பட்டது. பொன் ஆயுதங்கள் கொண்டு அல்ல, தொனிக்கும் வெள்ளி பூரிகைகள் கொண்டு முன் செல்கின்றார்கள். அவற்றை கர்த்தருக்காக வைராக்கியம் பராட்டிய பினெகாசின் கைகளில் மோசே கொடுத்து அனுப்புகிறான்.

பினெகாஸாகிய வருங்கால பிரதான ஆசாரியனிடம் மோசே ஆசரிப்பு கூடாரத்தின் சாமான்களையும் கொடுத்து அனுப்புகிறான். ஏனெனில் இது கர்த்தருடைய யுத்தம். ஆகவே அவரே முன்னின்று நடத்துகிறார். அது ஒரு அசாதாரண யுத்தம்! பொதுவான யுத்த கட்டுபாடுகளுடன் அல்ல (உபா. 20:10). அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்த பாவிகள். ஆகவே மீதியானியருடன் சமாதானம் என்ற பேச்சிற்கே இடமில்லை. அவர்கள் பாவமாகிய பாத்திரம் நிரம்பி வழிகின்றது. யோசுவா தலைவனாக இருந்திருக்கலாம் என்றாலும் அவன் பெயர் இங்கு கொடுக்கபடவில்லை. கர்த்தரே சேனைகளின் தலைவனாக முன்னே செல்கிறார்.

> *கர்த்தர் மோசேக்கு கட்டளை இட்டபடியே அவர்கள் மீதியானியருடன் யுத்தம் பண்ணி, புருஷர்கள் யாவரையும் கொன்று போட்டார்கள். அவர்களை கொன்று போட்டதும் அன்றி, மீதியானியரின் ஐந்து ராஜாக்களாகிய ஏவி, ரேக்கேம், சூர், ஊர், ரேபா என்பவர்களையும் கொன்று போட்டார்கள். பேயோரின் குமாரனாகிய பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்று போட்டார்கள். (எண். 31:7-8)*

5 இராஜாக்கள் கர்த்தருடைய ஜனங்களை எதிர்த்து வந்தார்கள். அவர்களோடு இஸ்ரவேலரை வேசித்தனத்தில் விழச்செய்து வெல்ல வழி சொல்லி கொடுத்த பிலேயாமும் வந்தான். யாவரும் விழுந்தார்கள்.

> *அன்றியும் இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரின் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் சிறைபிடித்து, அவர்களுடைய மிருக ஜீவன்களாகிய ஆடு மாடுகள் யாவையும், மற்ற ஆஸ்திகள் யாவையும் கொள்ளையிட்டு, அவர்கள் குடியிருந்த ஊர்கள், கோட்டைகள் யாவையும் அக்கினியால் சுட்டெரித்து, தாங்கள் கொள்ளையிட்ட பொருளையும் தாங்கள் பிடித்த நரஜீவன் மிருக ஜீவன் அனைத்தையும் சேர்த்து, சிறை பிடிக்கப்பட்ட மனிதரையும், மிருகங்களையும், கொள்ளை இட்ட பொருள்களையும் எரிகோவின் அருகேயுள்ள யோர்தானுக்கு இக்கரையில் மோவாபின் சமனான வெளிகளிலுள்ள பாளயத்திலிருந்த மோசேயின் இடத்துக்கும், ஆசாரியனாகிய எலெயாசாரின் இடத்துக்கும், இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் இடத்துக்கும் கொண்டு வந்தார்கள். (எண். 31:9-12)*

அத்து மீறிய தவறு எண்ணாகம புத்தகம் 25-வது அதிகாரம் 1 முதல் 13 வசனங்களில் இடம் பெற்றது. அதில் பங்கு பெற்ற அனைத்து ஆண்களும் வாதையில் செத்தார்கள். சுமார் 24 ஆயிரம் பேர் மரித்தார்கள். 31-வது அதிகாரத்தில் அதற்கு உடந்தையாக இருந்த மீதியான பெண்கள் தேவ தீர்ப்பு பெறுகின்றார்கள். அவர்களை தூண்டி எழுப்பிய அரசர்களும் பிலேயாமும் சாகின்றார்கள். மகா சங்கரிப்பு மீதியானியர் மத்தியில் உண்டாயிற்று. சிறை பிடித்த மனிதர், மிருகங்கள், பொருள்கள் யாவையும் மோசேயின் இடத்தில் கொண்டு வருகிறார்கள்.

மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சபையின் பிரபுக்கள் எல்லாரும் அவர்களை சந்திக்க பாளயத்திற்கு வெளியே புறப்பட்டு போனார்கள். அப்பொழுது மோசே யுத்தத்திலிருந்து வந்த ஆயிரம் பேருக்கு தலைவரும், நூறு பேருக்கு தலைவருமாகிய சேனாபதிகள் மேல் கோபம் கொண்டு, அவர்களை நோக்கி: ஸ்திரீகள் எல்லாரையும் உயிரோடே விட்டு விட்டீர்களா? பேயோரின் சங்கதியிலே பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய் துரோகம் பண்ண காரணமாய் இருந்தவர்கள் இவர்கள் தானே; அதினால் கர்த்தரின் சபையிலே வாதையும் நேரிட்டதே. ஆகையால் குழந்தைகளில் எல்லா ஆண் பிள்ளைகளையும், புருஷ சம்யோகத்தை அறிந்த எல்லா ஸ்திரீகளையும் கொன்று போடுங்கள். ஸ்திரீகளில் புருஷ சம்யோகத்தை அறியாத எல்லா பெண் பிள்ளைகளையும் உங்களுக்காக உயிரோடே வையுங்கள். (எண். 31:13-18)

தேவ நியாயத்தீர்ப்பில் பார பட்சம் என்பது இல்லை. பாவம் தொடர்ந்து பிடிக்கின்றது. பாவத்தின் சம்பளம் மரணம் என்று ஆகுகின்றது. மீதியானியர்களின் ஐந்து அரசர்களான ஏவி, ரேக்கேம், சூர், ஊர், ரேபா என்பவர்கள் சாகடிக்க படுகின்றார்கள். அந்த ஐவரில் சூர் என்பவனின் மகள்தான் கஸ்பி என்பவள். ''குத்துண்ட மீதியானிய ஸ்திரீயின் பெயர் கஸ்பி. அவள் சூரியின் குமாரத்தி'' என்று எண்ணாகமம் 25-வது அதிகாரம் 15-வது வசனம் கூறுகின்றது. நேராக வெல்ல முடியாதவர்களை சூழ்ச்சி செய்து வெல்ல முடியும் என்பதே பிலேயாமின் போதனை ஆகும். ''வேசித்தனம் பண்ணுவதற்கு ஏதுவான இடறலை போடும்படி பாலாக் என்பவனுக்கு போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தை கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்தில் உண்டு'' என்று வெளிப்படுத்தின விசேஷம் 2-வது அதிகாரம் 14-வது வசனத்தின் பின் பகுதி கூறுகின்றது. அது பிலேயாம் கூலிக்காக செய்த வஞ்சகம் என்று யூதா நிரூபம் 11-வது வசனம் கூறுகின்றது.

''என் ஜனமே, மோவாபின் ராஜாவாகிய பாலாக் பண்ணின யோசனை இன்னதென்றும் பேயோரின் குமாரனான பிலேயாம் அவனுக்கு பிரதியுத்திரமாக சொன்னது இன்னதென்றும், சித்தீம் தொடங்கி கில்கால் மட்டும் நடந்தது இன்னது என்றும் நீ கர்த்தருடைய நீதிகளை அறிந்து கொள்ளும்படி நினைத்து கொள்'' என்று மீகா தீர்க்கதரிசியின் புத்தகம் 6-வது அதிகாரம் 5-வது வசனம் கூறுகின்றது. காலங்கள் மாறினாலும் கர்த்தருடைய நீதி மாறுவது இல்லை. அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் பிலேயாமின் மனம் மாறவில்லை. கழுதை பேசியும் மனம் திருந்தவில்லை. தூதனானவர் முன் வந்து நின்றும் முற்றும் ஒப்பு கொடுக்கவில்லை. கர்த்தருடைய நீதி பிலேயாமின் மீது வந்தது. பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்று போட்டார்கள் என்று எண்ணாகம புத்தகம் 31-வது அதிகாரம் 8-வது வசனம் முற்று பெறுகின்றது. நீதிமான் மரிப்பது போல் நான் மரிப்பேனாக என்று விரும்பியவன் ஒரு பாவியாக மரித்தான். 23, 24 ஆகிய அதிகாரங்களில் ஏழு பாடல்கள் பாடினான். 25-வது அதிகாரம் 1 முதல் 8 வசனங்களில் பெரும் பாதகம் செய்தான். 31-வது அதிகாரம் 8-வது வசனத்தில் சாகடிக்க பட்டான். கழுதை தப்பியது. பிலேயாம் தப்பவில்லை. பாவம் செய்கிற ஆத்துமா சாகும் என்பதற்கு 31-வது அதிகாரம் மாதிரியாக மாறிவிட்டது.

பின்பு நீங்கள் ஏழு நாள் பாளயத்திற்கு புறம்பே தங்குங்கள். நர ஜீவனை கொன்றவர்களும், வெட்டுண்டவர்களை தொட்டவர்களுமாகிய நீங்கள் யாவரும் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் உங்களையும் உங்களால் சிறை பிடிக்க பட்டவர்களையும் சுத்திகரித்து, அந்தப்படியே எல்லா

வஸ்திரத்தையும், தோலால் செய்த கருவிகளையும், வெள்ளாட்டு மயிரினால் நெய்தவைகளையும், மர சாமான்களையும் சுத்திகரிக்க கடவீர்கள் என்றான். (எண். 31:19-20)

மனிதரை கொன்றவர்களும் கொல்லபட்டவர்களை தொட்டவர்களும் சுத்திகரிக்கபட வேண்டும். சிறைபிடிக்க பட்டு கொண்டு வந்த பெண்களும் சுத்திகரிக்கப்பட வேண்டும். வஸ்திரங்கள், கருவிகள் யாவும் சுத்திகரிக்க பட வேண்டும். இல்லாவிடின் அநேக நோய்கள் பரவ ஏதுவாகும். அதுபோலவே ஆத்துமாவும் சுத்திகரிக்க படாவிட்டால் ஆத்துமாவும் நோய் காணும்.

ஆசாரியனாகிய எலெயாசாரும் யுத்தத்திற்கு போய் வந்த படைவீரரை நோக்கி: கர்த்தர் மோசேக்கு கட்டளை இட்ட விதி பிரமாணம் என்ன என்றால்: அக்கினிக்கு நிற்க தக்கவைகளாகிய பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, தகரம், ஈயம் ஆகிய இவைகள் எல்லாம் சுத்தமாகும்படிக்கு, அவைகளை அக்கினியிலே போட்டு எடுக்க கடவீர்கள்; தீட்டு கழிக்கும் தண்ணீராலும் அவைகள் சுத்திகரிக்கப்பட வேண்டும் அக்கினிக்கு நிற்க தகாதவைகளை எல்லாம் தண்ணீரினால் சுத்தம் பண்ண கடவீர்கள். ஏழாம் நாளில் உங்கள் வஸ்திரங்களை தோய்க்க வேண்டும். அப்பொழுது சுத்தமாயிருப்பீர்கள்; பின்பு நீங்கள் பாளயத்திற்குள் வரலாம் என்றான். (எண். 31:21-24)

யுத்தத்திற்கு சென்றவர்கள் பாளயத்திற்குள் வருவதற்கு முன் அசுத்தங்கள் யாவும் களையப்பட வேண்டும். உலோக பொருட்கள் தீயினாலும் மற்றவை நீரினாலும் சுத்திகரிக்கப்பட வேண்டும். சுத்தம் என்பது பரிசுத்தரையும் அவர் வாசம் பண்ணும் இடத்தையும் அணுகும் போது பாதுகாக்கப்பட வேண்டியது.

31.2 கொள்ளை இட்டதை மோசே பங்கிடுதல்

கர்த்தர் மோசேயை நோக்கி: பிடித்து கொண்டு வரப்பட்ட மனிதரையும் மிருகங்களையும் நீயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சபையினுடைய பிதாக்களாகிய தலைவரும் தொகை பார்த்து, கொள்ளையிட பட்டதை இரண்டு பங்காக பங்கிட்டு யுத்தத்திற்கு படை எடுத்து போனவர்களுக்கும் சபையனைத்திற்கும் கொடுங்கள். மேலும் யுத்தத்திற்கு போன படை வீரரிடத்தில் கர்த்தருக்காக மனிதரிலும் மாடுகளிலும் கழுதைகளிலும் ஆடுகளிலும் ஐநூற்றிற்கு ஒரு பிராணி வீதமாக பகுதி வாங்கி, அவர்களுடைய பாதி பங்கில் எடுத்து, கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கும் படைப்பாக ஆசாரியனாகிய எலெயாசாருக்கு கொடுக்க வேண்டும். இஸ்ரவேல் புத்திரரின் பாதி பங்கிலோ மனிதரிலும், மாடுகள் கழுதைகள் ஆடுகளாகிய சகலவித மிருகங்களிலும், ஐம்பதிற்கு ஒன்று வீதமாய் வாங்கி, அவைகளை கர்த்தருடைய வாசஸ்தலத்தின் காவலை காக்கும் லேவியருக்கு கொடுக்க வேண்டும் என்றார். கர்த்தர் மோசேக்கு கட்டளை இட்டபடியே, மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் செய்தார்கள். (எண். 31:25-31)

யுத்த வீரர்கள் மீதியானியர் இடத்தில் கொள்ளை இட்டு கொண்டு வந்த பொருட்கள் யாவும், சபையார் யாவருக்கும் அவரவரது தகுதிக்கு தக்கவாறு பங்கு இடப்பட வேண்டும் என்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். மோசேயும் எலெயாசாரும் அதற்கு கீழ்படிந்து அப்படியே செய்தார்கள் என்று பார்க்கிறோம்.

படைவீரர் கொள்ளை இட்ட பொருளில், ஆறுலட்சத்து எழுபத்தையாயிரம் ஆடுகளும், எழுபத்தீராயிரம் மாடுகளும், அறுபத்து ஓராயிரம் கழுதைகளும் மீதியாய் இருந்தது. புருஷ சம்யோகத்தை அறியாத ஸ்திரீகளில் முப்பத்து ஈராயிரம்பேர் இருந்தார்கள். (எண். 31:32-35)

சபையார் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தது போக மீதியாய் இருந்தவைகளையும் மிக கவனமாக கணக்கு எடுத்து வைக்கிறார்கள்.

யுத்தம் செய்ய போனவர்களுக்கு கிடைத்த பாதி பங்கின் தொயைாவது: ஆடுகள் மூன்று லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து ஐந்நூறு. இந்த ஆடுகளிலே கர்த்தருக்கு பகுதியாக வந்தது அறு நூற்று எழுபத்து ஐந்து. மாடுகள் முப்பத்து ஆறாயிரம் அவைகளில் கர்த்தருக்கு பகுதியாக வந்தது எழுபத்திரண்டு. கழுதைகள் முப்பதினாயிரத்து ஐந்நூறு, அவைகளில் கர்த்தருக்கு பகுதியாக வந்தது அறுபத்து ஒன்று. நரஜீவன்களில் பதினாறாயிரம் பேர்; அவர்களில் கர்த்தருக்கு பகுதியாக வந்தவர்கள் முப்பத்திரண்டு பேர். கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கும் அந்த பகுதியை, மோசே கர்த்தர் தனக்கு கட்டளை இட்டபடியே, ஆசாரியனாகிய எலெயாசாரிடத்தில் கொடுத்தான். (எண். 31:36-41)

மாடுகளையும், கழுதைகளையும், மனிதரையும் கூட ஒழுங்கும் கிரமமுமாக பங்கிட்டார்கள்.

அவர்கள் கொண்டு வந்த 675,000 ஆடுகளில் பாதி எண்ணிக்கையான 337,500 ஆடுகள் யுத்த வீரரையும் மீதம் பாதியான 337,500 ஆடுகள் பொது மக்களையும் சேரும். வீரர்கள் ஐநூற்றிற்கு ஒன்றை எடுத்து, அதாவது 675 ஆடுகளை எடுத்து கர்த்தருக்காக எலெயாசாருக்கு கொடுக்க வேண்டும். அதுபோல் பொதுமக்கள், தங்களது ஆடுகளில் ஐம்பதில் ஒன்றை எடுத்து லேவியருக்கு கொடுக்க வேண்டும். ஆகவே லேவியரின் பங்கு 6750 ஆடுகள் ஆகும். இவ்விதமாக கர்த்தர் கொள்ளை பொருள்கள் யாவருக்கும் சேரும்படி பங்கிட்டு கொடுத்தார்கள்.

யுத்தம் பண்ணின பேர்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் மோசே பாதி பாதியாக பங்கிட்டதின் படியே, சபையாருக்கு வந்த பாதி பங்காவது: ஆடுகளில் மூன்று லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து ஐநூறு, மாடுகளில் முப்பத்து ஆறாயிரம், கழுதைகளில் முப்பது ஆயிரத்து ஐந்நூறு, நரஜீவன்களில் பதினாறு ஆயிரம் பேருமே. இஸ்ரவேல் புத்திரரின் பாதி பங்குக்கு வந்த இந்த நரஜீவன்களிலும் மிருகங்களிலும் மோசே ஐம்பதுக்கு ஒன்று வீதமாக எடுத்து, அவைகளை கர்த்தர் தனக்கு கட்டளை இட்டபடியே, கர்த்தருடைய வாசஸ்தலத்தின் காவலை காக்கிற லேவியருக்கு கொடுத்தான். (எண். 31:42-47)

கொள்ளையாக கொண்டு வந்த வகைகளின் பங்கீடு விபரம்

கொள்ளை பொருட்கள்	யுத்தத்தில் கிடைத்த மொத்த எண்ணிக்கை	12000 வீரர்களுக்கு கொடுக்கபட்ட மொத்த எண்ணிக்கை (பாதி தொகையில் இருந்து, ஆசாரியருக்கு 500-ல் ஒன்றை கொடுத்த பின் உள்ளது.	ஆசாரியருக்கு கொடுக்கபட்ட மொத்த எண்ணிக்கை	சுமார் 590,000 இஸ்ரவேல் குடும்பத்தினருக்கு கொடுக்கபட்ட மொத்த எண்ணிக்கை (50-ல் ஒன்று லேவியருக்கு கொடுத்த பின் உள்ளது.	சுமார் 23,000 லேவியருக்கு கொடுக்கபட்ட மொத்த எண்ணிக்கை	மொத்த கொள்ளை பொருள்
ஆடுகள்	675,000	336,825	675	330,750	6,750	675,000
மாடுகள்	72,000	35,928	72	35,280	720	72,000
கழுதைகள்	61,000	30,439	61	29,890	610	61,000
மீதியானிய கன்னிகைகள்	32,000	15,968	32	15,680	320	32,000

மக்களுக்கு பிரித்து கொடுத்த மிருக ஜீவன்களிலும் நர ஜீவன்களிலும் இருந்து ஐம்பதில் ஒன்றை மோசே கர்த்தர் கட்டளை இட்ட படியே ஆசரிப்பு கூடாரத்தையும் ஜனங்களையும் பாதுகாக்கும் லேவியருக்கு கொடுத்தான்.

31.3 தலைவர்களின் விசேஷித்த நன்றி நவிலும் காணிக்கை

பின்பு ஆயிரம் பேருக்கு தலைவரும் நூறு பேருக்கு தலைவருமான சேனாபதிகள் மோசேயினிடத்தில் வந்து, உமது ஊழியக்காரராகிய நாங்கள் எங்கள் கையின் கீழ் இருக்கிற யுத்த மனிதரை தொகை பார்த்தோம். அவர்களுக்குள்ளே ஒரு ஆளும் குறையவில்லை. ஆகையால், கர்த்தருடைய சந்நிதியில் எங்கள் ஆத்துமாக்களுக்காக பாவநிவிர்த்தி செய்யும் பொருட்டு, எங்களுக்கு கிடைத்த பொற்பணிகளாகிய பாதசரங்களையும், அஸ்தகடகங்களையும், மோதிரங்களையும், காதணிகளையும், காப்புகளையும், கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வந்தோம் என்றார்கள். (எண். 31:48-50)

என்ன அருமையான ஒரு அர்ப்பணிப்பு! மீதியானியரை நிர்மூலமாக்கி விட்டார்கள். ஆனால் அவர்களில் பன்னீராயிரம் யுத்த வீரர்களில் ஒரு மனிதன் கூட பாதிக்க படவில்லை என்று எண்ணி, கர்த்தருக்கு காணிக்கை படைக்கிறார்கள்.

ஆயிரம் பேருக்கு தலைவர்கள் 12 பேர் ஆவார்கள். 100 பேருக்கு தலைவர்கள் 120 பேர் ஆவார்கள். இவர்கள் யாவரும் சேர்ந்து மோசேயிடம் வருகிறார்கள். அவர்கள் கொள்ளையாக கொண்டு வந்த பொன்னும் நகைகளும் இன்னும் பிரித்து கொடுக்க படவில்லை. அவை யாவற்றையும் நன்றியோடு மோசேயிடம் கொண்டு வருகிறார்கள்.

இவ்வளவு திரளான மீதியானியரையும், மோவாபியரையும் அவர்கள் கொன்று குவித்து இருந்தாலும், வென்று வாகை சூடி இருந்தாலும், கொள்ளையாய் இழுத்து கொண்டு வந்தாலும், மிகவும் குறைவான 12,000 வீரர்களே கொண்ட அவர்கள் சேனையில் ஒருவரை கூட அவர்கள் இழந்து போகவில்லை. அது கர்த்தரின் பாதுகாப்பே அன்றி வேறு ஒன்றுமில்லை. அந்த கர்த்தருக்கு நன்றி சொல்ல அவர்கள் வந்தார்கள்.

அப்பொழுது மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சகலவித வேலைப்பாடான பணிதிகளான அந்த பொன் ஆபரணங்களை அவர்களிடத்தில் வாங்கினார்கள். இப்படி ஆயிரம் பேருக்கு தலைவரானவர்களாலும் நூறு பேருக்கு தலைவரானவர்களாலும் கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கும் காணிக்கையாக செலுத்த பட்ட பொன் முழுவதும் பதினாறாயிரத்து எழுநூற்று ஐம்பது சேக்கல் நிறையாயிருந்தது. (எண். 31:51-52)

ஒரு பெரிய அளவில் யோர்தானை கடக்கும் முன் பொன் ஆபரணங்களை ஆசாரியர்களின் பொறுப்பில் கர்த்தருக்காக கொடுத்தார்கள்.

யுத்தத்திற்கு போன மனிதர் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்காக கொள்ளை இட்டிருந்தார்கள். அந்த பொன்னை மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் ஆயிரம் பேருக்கு தலைவரானவர்களின் கையிலும், நூறு

பேருக்கு தலைவரானவர்களின் கையிலும் வாங்கி, இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபக குறியாக ஆசரிப்பு கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்து வைத்தார்கள். (எண். 31:53-54)

24 வசனங்கள் வரை பரிசுத்தரின் யுத்தம் இடம் பெறுகின்றது. 25 முதல் 54 வசனங்கள் வரை பங்கிடுதல் இடம் பெறுகின்றது. தவறு செய்கின்றவர்களின் சேமிப்புகள் கர்த்தரை சேவிக்கின்றவர்களின் சொந்தம் ஆகின்றது. பிரசங்கியின் புத்தகம் 2-வது அதிகாரம் 26-வது வசனம், ''தேவன் தமது பார்வைக்கு நல்லவனாய் இருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார்; பாவம் செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனாய் இருக்கிறவன் வசமாய் வைத்து விட்டு போகும் பொருட்டு சேர்த்து

கிறிஸ்துவுக்கு முன் 15-ம் நூற்றாண்டான
மோசேயின் காலத்தை சேர்ந்த மீதியானிய நகைகள்



குவித்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்து இருக்கிறார்'' என கூறுகின்றது. ஆறு இலட்சத்து எழுபத்து ஐயாயிரம் ஆடுகளும், எழுபத்து இரண்டாயிரம் மாடுகளும், அறுபத்து ஒன்று ஆயிரம் கழுதைகளும் அவர்கள் சொந்தம் ஆயின. மேலும் பெற்ற காதணிகள், பொன் ஆபரணங்கள் அனைத்தும் பதினாயிரத்து எழு நூற்று ஐம்பது சேக்கல் என்று 52-வது வசனம் கூறுகின்றது.

எகிப்தில் இருந்து புறப்படும் பொழுது பெற்ற கால் நடைகளை விட அதிகம் பெற்றார்கள். எகிப்தை விட்டு வெளியேறும் பொழுது பெற்ற பொன் ஆபரணங்களை விட கானானுக்குள் பிரவேசிக்கும் பொழுது பெற்றது அதிகம் ஆயிற்று. பாலாக் பொன்னும் பொருளும் கொடுத்து பிலேயாமை சபிக்க கூறினான். சாபத்திற்கு பதிலாக ஆசீர்வாதமும், பிலேயாம் பெற்றதை விட மேலாகவும் பெற்று கர்த்தரை நடுவாக வைத்து வாழும் மக்கள் முன் செல்லுகின்றார்கள்.

தொகுதி - 9
இஸ்ரவேல் மக்களுக்கு யோர்தானின் இருபுறமும் சுதந்தரம்

அத்தியாயம் - 32
யோர்தானின் கிழக்கு பகுதியிலும் இஸ்ரவேலருக்கு சுதந்திரம்

32.1 யோர்தானை கடக்க விரும்பாத ரூபன், காத் கோத்திரங்கள்

யோர்தான் கடந்து செல்லும் நேரம் நெருங்கி வந்த வேளையில் ரூபன், காத் என்ற இரு கோத்திரங்களும் மனாசேயின் பாதி கோத்திரமும் மனம் மாறுகின்றார்கள். யோர்தான் கடந்து கானான் செல்லுவதை விட இருக்கும் இடத்தில் இருந்து விடுவதே நல்லது என்ற முடிவுக்குள் வருகின்றார்கள். எண்ணாகம புத்தகம் 32-வது அதிகாரம் பன்னிரண்டு கோத்திரங்களில் இரண்டரை கோத்திரங்கள் ரூபன், காத், மனாசேயின் பாதி கோத்திரம் கானான் சுதந்தரத்தில் பங்கு காணவில்லை என்பதை கூறுகின்றது. ஆடு மாடுகள் அதிகம் ஆயின. யோர்தான் நதியை கடப்பது கடினம் ஆனது.

> *ரூபன் புத்திரருக்கும் காத் புத்திரருக்கும் ஆடு மாடுகள் மிகவும் திரளாய் இருந்தது. அவர்கள் யாசேர் தேசத்தையும் கீலேயாத் தேசத்தையும் பார்த்த போது, அது ஆடுமாடுகளுக்கு தகுந்த இடமென்று கண்டார்கள். (எண். 32:1)*

ரூபன் புத்திரருக்கும், காத் புத்திரருக்கும் ஆடுமாடுகள் மிகவும் திரளாய் இருந்தது. அவர்கள் யாசேர் தேசத்தையும் கிலேயாத் தேசத்தையும் ஆடுமாடுகளுக்கு தகுந்த இடம் என்று கண்டார்கள். ஆனால் தங்கள் ஆத்துமாவிற்கு உகந்த இடம் இல்லை என்பதை காணவில்லை. அவர்கள் எடுத்த தீர்மானம் ஆடு மாடுகளை நடுவாக வைத்த தீர்மானம். கண்களின் இச்சையை நடுவாக வைத்த தீர்மானம். ஜீவியத்தின் பெருமையை நடுவாக வைத்த தீர்மானம். நிலத்தின் செழுமையை நடுவாக வைத்த தீர்மானம். ஆனால் கர்த்தரையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் நடுவாக வைத்த தீர்மானம் இல்லை.

யாசேர், கீலேயாத் என்ற இரு நாடுகளையும் இஸ்ரவேல் மக்கள் முழுமையாக வென்று விட்டனர். அங்கு இருந்த எமோரியரை வென்று விட்டனர். அர்னோன் நதிக்கும் யாப்போக் நதிக்கும் இடையில் உள்ள யோர்தானுக்கு கிழக்கே உள்ள இடங்கள் வளமை நிறைந்த புல்வெளிகளை கொண்டவை. மேலும், ஒரே பாளயத்தில் இருந்த ரூபன் புத்திரரும், காத் புத்திரரும் முக்கியமாக மந்தைகள் மேய்ப்பதை முக்கிய வேலையாக கொண்டு இருந்தனர். அவர்கள் பேசி முடிவு எடுக்க ஒரே பாளயம் வழிவகுத்தது.

> *ஆகையால் ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் வந்து, மோசேயையும் ஆசாரியனாகிய எலெயாசாரையும் சபையின் பிரபுக்களையும் நோக்கி: கர்த்தர் இஸ்ரவேல் சபைக்கு முன்பாக முறிய அடித்த அதரோத், தீபோன்,*

யாசேர், நிம்ரா, எஸ்போன், எலெயாலெ, சேபாம், நேபோ, பெயோன் என்னும் பட்டணங்களை சேர்ந்த நாடானது ஆடு மாடுகளுக்கு தகுந்த இடம். (எண். 32:2-3)

அதரோத் (Ataroth), தீபோன் (Dibon), யாசேர் (Jazer) என்ற பட்டணங்கள் எமோரியரின் பட்டணங்கள் ஆகும். சீகோன் மன்னனை முறியடித்த பின் அந்த பட்டணங்கள் இஸ்ரவேல் மக்கள் வசம் ஆயின. யாசேர் பட்டணத்தை சுற்றி உள்ள இடங்கள் யாசேர் தேசமாக மாறியது. அது சீகோன் மன்னனின் தலைநகராகிய எஸ்போனில் இருந்து 15 மைல்கள் தூரமே உள்ளது. நிம்ரா (Nimrah), எஸ்போன் (Heshbon), எலெயாலெ (Elealeh),சேபாம் (Shebam), நேபோ (Nebo), பெயோன் (Beon) என்ற பட்டணங்களும் அந்த நாட்டை சேர்ந்தவையே. நிம்ரா என்ற பட்டணம் பெத் நிம்ரா என்றும் அழைக்கபட்டது (எண். 32:36). நிம்ரா அங்கே உள்ள தண்ணீருக்கு மிகவும் பெயர் பெற்றது. அது சோவாருக்கு வடக்கே, எஸ்போனுக்கு ஒரு மைல் அருகாக அமைந்து இருந்தது. சேபாம் என்பது சிம்ரா என்றும் அழைக்கபட்டது (எண். 32:36). இந்த பட்டணம் திராட்சை தோட்டங்களுக்கு பெயர் பெற்றது. இதுவும் எஸ்போனுக்கு அருகிலேயே இருந்தது. நேபோ என்ற பட்டணத்தின் அருகே இருக்கும் மலையில்தான் மோசே ஏறினான். அவனுடைய நினைவு சின்னம் அங்கேதான் உள்ளது (உபா. 34:6). பெயோன் என்னும் பட்டணம் பாகால் மெயோன் அல்லது பெத் பாகால் மெயோன் என்ற பட்டணமாக இருக்கலாம் என்று கருத படுகின்றது (எண். 32:38). இங்கே பாகால் கோவில் இருந்திருக்கலாம் என்றும் கருதபடுகிறது. இங்கு கூறபட்டிருக்கும் ஒன்பது பட்டணங்களும் கீலேயாத்திற்கு தெற்காகவே உள்ளன. நெருக்கமான பாளயங்களில் நாற்பது வருடங்களாக நெருக்கமாக வாழ்ந்த மக்களுக்கு இந்த விசாலமும் செழுமையுமான இடம் கவர்ச்சியாக தெரிந்தது ஆச்சரியமானது அல்ல.

2,3 வசனங்களில் அவர்கள் கற்பனையில் ஏற்கெனவே பதிந்து விட்ட ஒன்பது பட்டணங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு உள்ளன. 4-வது வசனத்தில் மறுபடியும் ஆடுமாடுகளை நோக்கி பார்க்கின்றார்கள். மோசேயிடம் சென்று தங்கள் விருப்பத்தை தெரிவிக்க முடிவு செய்கின்றார்கள்.

உமது அடியாருக்கு ஆடுமாடுகள் உண்டு. உம்முடைய கண்களில் எங்களுக்குத் தயை கிடைத்ததானால், எங்களை யோர்தான் நதிக்கு அப்புறம் கடந்து போக பண்ணீராக. இந்த நாட்டை உமது அடியாருக்கு காணியாட்சியாக கொடுக்க வேண்டும் என்றார்கள். (எண். 32:4-5)

உம்முடைய கண்களில் எங்களுக்கு தயை கிடைத்ததானால் எங்களை யோர்தான் நதிக்கு அப்புறம் கடந்து போக பண்ணீராக என்று உரையை துவங்கினார்கள்.

யோர்தானை தாண்டாமல் கானானின் மகிமை கிடைப்பது இல்லை. யோர்தானை தாண்டுவதற்கு எங்களை தூண்டவே வேண்டாம் என்று கூறினார்கள்.

32.2 மோசேயின் எச்சரிப்பு

அப்பொழுது மோசே காத் புத்திரரையும், ரூபன் புத்திரரையும் நோக்கி: உங்கள் சகோதரர் யுத்தத்திற்கு போகையில், நீங்கள் இங்கே இருப்பீர்களோ? கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுத்த தேசத்திற்கு அவர்கள் போகாத

படிக்கு, நீங்கள் அவர்கள் இருதயத்தை திடனற்று போக பண்ணுகிறது என்ன? (எண். 32:6-7)

6-வது வசனம் முதல் 15-வது வசனம் வரை மோசே அவர்களுக்கு கொடுக்கும் பதில் கொடுக்கப்பட்டு உள்ளது. எங்கள் அனைவருடனும் சேர்ந்து யோர்தான் கடந்து செல்ல மறுப்பீர்கள் என்றால் உங்கள் தயக்கம் அனைவருக்கும் கலக்கம் தரும். உங்கள் முடிவு அனைவரது முடிவாக மாறிவிடும். திடமாக இருக்கும் மற்றவர்களும் திடன் அற்று போவார்கள் என்று மோசே கூறுகின்றான். கால் நடைகளுடன் யோர்தானை கடந்து செல்லுவோம் என்றும் கூற அவர்களால் முடியவில்லை. அவைகளை வெறுத்து தள்ளவும் மனம் இல்லை. அவர்களுடைய தயக்கத்திற்கு காரணம் பயம் என்பதை மோசே அறிந்து விட்டான். கர்த்தரை நடுவாக வைத்து வாழ்கின்றவர்களுக்கு யோர்தான் அச்சம் தருவது இல்லை. ஆனந்தமே தரும். இரு கோத்திரங்கள் இதயத்தில் திடம் இழக்கின்றன. இதை பார்க்கும் மற்ற கோத்திரங்களும் மனம் உடைந்து போவார்கள் என்று மோசே கூறுகின்றான்.

அந்த தேசத்தை பார்ப்பதற்கு நான் உங்கள் பிதாக்களை காதேஸ் பர்னேயாவில் இருந்து அனுப்பின போது அவர்களும் இப்படியே செய்தார்கள். அவர்கள் எஸ்கோல் பள்ளத்தாக்கு மட்டும் போய், அத்தேசத்தை பார்த்து வந்து, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் தங்களுக்கு கொடுத்த தேசத்துக்கு போகாத படிக்கு அவர்கள் இருதயத்தை திடனற்று போக பண்ணினார்கள். (எண். 32:8-9)

அன்று பன்னிரெண்டு நபர்களில் பத்து நபர்கள் உரைத்த துர்ச்செய்தி 38 வருடங்கள் வனாந்தரத்தில் வருத்தம் காண செய்தது என்றான் மோசே.

அதினால் கர்த்தர் அந்நாளிலே கோபம் மூண்டவராகி: உத்தமமாய் என்னை பின்பற்றின கேனேசியனான எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, எகிப்திலிருந்து வந்தவர்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்ட மனிதர்களில் ஒருவரும் என்னை உத்தமமாய் பின்பற்றாத படியால், அவர்கள் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணை இட்டு கொடுத்த தேசத்தை காண்பதில்லை என்று ஆணை இட்டு இருக்கிறார். அப்படியே கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலின் மேல் மூண்டது. கர்த்தருடைய சமுகத்தில் பொல்லாப்பு செய்த அந்த சந்ததியெல்லாம் நிர்மூலமாகும் மட்டும் அவர்களை வனாந்தரத்திலே நாற்பது வருஷம் அலைய பண்ணினார். இப்பொழுதும் இதோ இஸ்ரவேலர் மேலிருக்கும் கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்தை இன்னும் அதிகரிக்க பண்ணும்படி, நீங்கள் உங்கள் பிதாக்களின் ஸ்தானத்திலே பாவமுள்ள பெரும் கூட்டமாய் எழும்பி இருக்கிறீர்கள். நீங்கள் அவரை விட்டு பின்வாங்கினால், அவர் இன்னும் அவர்களை வனாந்தரத்தில் இருக்க பண்ணுவார். இப்படி நீங்கள் இந்த ஜனங்களை எல்லாம் அழிய பண்ணுவீர்கள் என்றான். (எண். 32:10-15)

அன்று கர்த்தர் கோபம் கொண்டது போன்று உங்கள் தீர்மானத்தினால் இன்னும் ஒரு முறை கர்த்தர் கோபம் கொள்வார் என்று மோசே கூறுகின்றான். பின்வாங்கும் மனம்

உடையவர்களை விட்டு கர்த்தர் கடந்து சென்று விடுவார் என்று கூறுகின்றான். இறுதி விளைவு அனைவரும் கானான் காணாமல் கண் மூடுவதே ஆகிவிடும் என்றான்.

> *அப்பொழுது அவர்கள் அவன் சமீபத்தில் வந்து: எங்கள் ஆடு மாடுகளுக்காக தொழுவங்களையும், எங்கள் பிள்ளைகளுக்காக பட்டணங்களையும் இங்கே கட்டுவோம். நாங்களோ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் ஸ்தானத்திலே கொண்டு போய் சேர்க்குமளவும், யுத்த சன்னத்தராய் தீவிரத்தோடே அவர்களுக்கு முன்பாக நடப்போம். எங்கள் பிள்ளைகள் இத்தேசத்து குடிகளின் நிமித்தம் அரணான பட்டணங்களிலே குடியிருக்க கேட்டு கொள்ளுகிறோம். இஸ்ரவேல் புத்திரர் யாவரும் தங்கள் தங்கள் சுதந்தரத்தை சுதந்தரித்து கொள்ளும் வரைக்கும், நாங்கள் எங்கள் வீடுகளுக்கு திரும்புவதில்லை. யோர்தானுக்கு இப்புறத்தில் கிழக்கே எங்களுக்கு சுதந்தரம் உண்டான படியினாலே, நாங்கள் அவர்களோடே கூட யோர்தானுக்கு அக்கரையிலும், அதற்கு அப்புறத்திலும் சுதந்தரம் வாங்க மாட்டோம் என்றார்கள். (எண். 32:16-19)*

ரூபன் காத் கோத்திரத்தார் இரண்டாம் சிந்தனை செய்கின்றார்கள். கானான் செல்வதற்கும் மனம் இல்லை. கர்த்தருடைய கோபத்தை ஏற்று கொள்ளுவதற்கும் மனம் இல்லை என்று அவர்கள் கூறும் பதில் 16 முதல் 19 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. ஆடு, மாடுகள் மனைவி பிள்ளைகள் அனைவரும் யோர்தான் கடக்க வேண்டாம். யோர்தானின் கிழக்காகவே இருக்கட்டும். கோத்திரத்தின் ஆண்கள் அனைவரும் அனைவருடனும் சேர்ந்து யோர்தானின் மேற்காக சென்று மற்ற பத்து கோத்திரங்களையும் குடியேற்றி வைத்து விட்டு திரும்பவும் யோர்தானுக்கு கிழக்காக வந்து விடட்டும் என்று கூறுகின்றார்கள். கானானை எட்டி பார்த்து விட்டு திரும்பவும் விட்டு வந்த இடத்திற்கு திரும்ப சென்று விடுவோம் என்று கூறுகின்றார்கள். ரூபன் காத் கோத்திரத்து மக்களுக்கு கானானின் சுதந்திரம் அவசியம் இல்லை என்று 19-வது வசனத்தில் கூறி விட்டார்கள். கானான் என்ற பூமியை, மற்றும் உள்ள பத்து கோத்திரங்கள் பெற்று கொள்ளுவதற்கு தங்களுக்கு தடை இல்லை என்றும் அவர்களுக்கு உற்ற உதவி நாங்கள் செய்வோம் என்றும் கூறுகின்றார்கள். அவர்களின் பிடிவாதமான பதிலை மோசே ஏற்று கொண்டான்.

32.3 யோர்தானுக்கு கிழக்கே கீலேயாத் தேசத்தை சுதந்தரிக்க தீர்மானம்

> *அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: நீங்கள் இந்த வார்த்தையின் படியே செய்து, கர்த்தருடைய சமுகத்தில் யுத்த சன்னத்தராகி, கர்த்தர் தம்முடைய சத்துருக்களை தம்முடைய முகத்திற்கு முன்னின்று துரத்திவிடும் அளவும், நீங்கள் யாவரும் அவருடைய சமுகத்தில் யுத்த சன்னத்தராய் யோர்தானை கடந்து போவீர்களானால், அத்தேசம் கர்த்தருக்கு முன்பாக வசப்படுத்த பட்ட பின்பு, நீங்கள் திரும்பி வந்து, கர்த்தருக்கு முன்பாகவும், இஸ்ரவேலருக்கு முன்பாகவும், குற்றமில்லாது இருப்பீர்கள். அதற்கு பின்பு இந்த தேசம் கர்த்தருக்கு முன்பாக உங்களுக்கு சுதந்தரமாகும். நீங்கள் இப்படி செய்யாமல் போனால், கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தவர்களாய் இருப்பீர்கள். உங்கள் பாவம் உங்களை தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள். உங்கள்*

பிள்ளைகளுக்காக பட்டணங்களையும், உங்கள் ஆடு மாடுகளுக்காக தொழுவங்களையும் கட்டி, உங்கள் வாய் மொழியின் படியே செய்யுங்கள் என்றான். (எண். 32:20-24)

யோர்தானை கடப்பதற்கு எங்களை வற்புறுத்த வேண்டாம் என்று இரு கோத்திரங்கள் மோசேயை வற்புறுத்தினார்கள். உயர்ந்த தீர்மானங்கள் இதய பூர்வமாக எடுக்கப்பட வேண்டும். சுமத்தப்பட முடியாது என்பதை மோசே அறிந்து விட்டான். ரூபன், காத் கோத்திரத்தார் மூலமாக கர்த்தர் கோபம் கொண்டால் அதற்கு மற்ற கோத்திரத்தார் காரணம் அல்ல என்று மோசே தெளிவு படுத்தினான். உங்கள் பாவம் உங்களை தொடர்ந்து பிடிக்கும் என்று மோசே கூறுவதை 23-வது வசனத்தில் வாசிக்கின்றோம். 24-வது வசனத்தில் உங்கள் வாய் மொழியின் படியே செய்யுங்கள் என்றான். நீங்கள் எடுக்கும் முடிவு உங்களுடைய சொந்த முடிவு என்று கூறிவிட்டான். அதனால் வரும் லாப நஷ்டங்களுக்கு மற்ற ஜனங்கள் பொறுப்பு அல்ல. பாதிக்கப்பட போகின்றவர்கள் நீங்களே என்று கூறிவிட்டான்.

32.4 கடமை தவறாத கோத்திரங்களுக்கு கீலேயாத் தேசம்

அப்பொழுது காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் மோசேயை நோக்கி: எங்கள் ஆண்டவன் கட்டளை இட்டபடியே உமது ஊழியக்காரராகிய நாங்கள் செய்வோம். எங்கள் பிள்ளைகளும் எங்கள் மனைவிகளும், எங்கள் ஆடு மாடு முதலான எங்களுடைய எல்லா மிருக ஜீவன்களோடும், இங்கே கீலேயாத்தின் பட்டணங்களில் இருப்பார்கள். உமது ஊழியக்காரராகிய நாங்களோ எங்கள் ஆண்டவன் சொன்ன படியே, ஒவ்வொருவரும் யுத்த சன்னத்தராய், கர்த்தருடைய சமுகத்தில் யுத்தத்திற்கு போவோம் என்றார்கள். (எண். 32:25-27)

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மோசேக்கு நன்றி கூறுகின்றார்கள். எங்கள் சொந்த முடிவிற்கு எங்களை விட்டமைக்காக நன்றி என்று கூறுகின்றார்கள். எங்கள் ஆண்டவனே என்று மோசேயை புகழ்ந்து கூறினார்கள். சொந்த முடிவு எடுக்கின்றவர்களுக்கு எந்த உதவியும் செய்ய முடியாதவனாக மோசே இருக்கின்றான். கர்த்தரை நடுவாக வைத்து முடிவு எடுக்கின்றவர்களுக்கு அனைத்து உதவிகளும் செய்ய கூடியவனாக மோசே இருக்கின்றான்.

32.5 மனாசேயின் பாதி கோத்திரத்திற்கு யோர்தானுக்கு கிழக்கே பங்கு

அப்பொழுது மோசே அவர்களுக்காக ஆசாரியனாகிய எலெயாசாருக்கும், நூனின் குமாரனாகிய யோசுவாவுக்கும், இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திர பிதாக்களாகிய தலைவர்களுக்கும் கட்டளை இட்டு: காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் அவரவர் கர்த்தருடைய சமுகத்தில் யுத்த சன்னத்தராய் உங்களோடே கூட யோர்தானை கடந்து போனால், அத்தேசம் உங்களுக்கு வசப்பட்ட பின்பு, அவர்களுக்கு கீலேயாத் தேசத்தை சுதந்தரமாக கொடுக்க கடவீர்கள். உங்களோடேகூட யுத்த சன்னத்தராய் கடந்து போகாது இருந்தார்களேயானால், அவர்கள் உங்கள் நடுவே கானான் தேசத்திலே சுதந்தரம் அடைய கடவர்கள் என்றான். காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் பிரதியுத்தரமாக: உம்முடைய ஊழியக்காரராகிய நாங்கள் கர்த்தர் எங்களுக்கு சொன்னபடியே செய்வோம். யோர்தானுக்கு இக்கரையிலே

எங்கள் சுதந்தரத்தின் காணியாட்சி எங்களுக்கு உரியதாகும்படி நாங்கள் கர்த்தருடைய சமுகத்தில் யுத்த சன்னத்தராய் கானான் தேசத்திற்கு போவோம் என்றார்கள். (எண். 32:28-32)

மோசே இணங்குகிறான். தான் கர்த்தரின் சந்நிதியில் சேர்த்து கொள்ள படுவதற்கு முன் பிரதான ஆசாரியனாகிய எலெயாசாருக்கும், தனது பொறுப்பை எடுத்து கொள்ள இருக்கும் யோசுவாவுக்கும் அதை குறித்து கட்டளை கொடுக்கிறான்.

அப்பொழுது மோசே காத் புத்திரருக்கும், ரூபன் புத்திரருக்கும், யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் பாதி கோத்திரத்தாருக்கும், எமோரியருடைய ராஜாவாகிய சீகோனின் ராஜ்யத்தையும், பாசானுடைய ராஜாவாகிய ஓகின் ராஜ்யத்தையும், அவைகளை சேர்ந்த தேசங்களையும் அவைகளின் எல்லையை சுற்றிலுமுள்ள பட்டணங்களையும் கொடுத்தான். (எண். 32:33)

ரூபன், காத் கோத்திரத்துடன் பின் தங்கி இருந்து விடுவதற்கு மனாசே கோத்திரத்தில் ஐம்பது சதவிகித மக்கள் தீர்மானம் எடுப்பதை இங்கு நாம் பார்க்கின்றோம். இவர்கள் பாசான் தேசத்தில் குடியேறினார்கள்.

32.6 மூன்று பிரிவாக தேசம் பகிர்ந்து கொடுக்கபடுகிறது

பின்பு காத் சந்ததியார் தீபோன், அதரோத் ஆரோவேர், ஆத்ரோத், சோபான், யாசேர், யொகிபேயா, பெத் நிம்ரா, பெத் தாரன் என்னும் அரணான பட்டணங்களையும் ஆட்டு தொழுவங்களையும் கட்டினார்கள். ரூபன் சந்ததியார் எஸ்போன், எலெயாலெ, கீரியத்தாயீம், பெயர்கள் மாற்றப்பட்ட நேபோ, பாகால் மெயோன், சீப்மா என்பவைகளை கட்டி, தாங்கள் கட்டின பட்டணங்களுக்கு வேறே பேர்களை கொடுத்தார்கள். மனாசேயின் குமாரனாகிய மாகீரின் புத்திரர் கீலேயாத்திற்கு போய், அதை கட்டி கொண்டு, அதிலிருந்த எமோரியரை துரத்தி விட்டார்கள். அப்பொழுது மோசே கீலேயாத்தை மனாசேயின் குமாரனாகிய மாகீருக்கு கொடுத்தான். அவர்கள் அதிலே குடியேறினார்கள். மனாசேயின் குமாரனாகிய யாவீர் போய், அவர்களுடைய கிராமங்களை கட்டிக்கொண்டு, அவைகளுக்கு யாவீர் என்று பேரிட்டான். நோபாக் போய், கேனாத்தையும் அதன் கிராமங்களையும் கட்டி கொண்டு, அதற்கு தன் நாமத்தின்படியே நோபாக் என்று பேரிட்டான். (எண். 32:34-42)

காத் சந்ததியார் யாசேர் தேசத்தையும் அதில் உள்ள பட்டணங்களையும் தங்களுக்காக பெற்று அந்த பட்டணங்களின் மக்களை துரத்தி விட்டு, அவைகளை சுதந்தரித்து கொண்டார்கள். ரூபன் கோத்திரத்தார் யோர்தானுக்கு கிழக்கே தெற்கே உள்ள இடங்களை பெற்று கொண்டார்கள். கீலேயாத் தேசத்தை மனாசேயின் பாதி கோத்திரமாக மனாசேயின் குமாரர்களாகிய யாவீரும், நேபோக்கும் பெற்று கொண்டு தங்கள் பெயரை பட்டணங்களுக்கு சூட்டினார்கள்.

34 முதல் 42 வசனங்களில் கானானின் கிழக்கு பகுதியில் இரண்டரை கோத்திரங்கள் நிரந்தரம் கண்டார்கள். கானானின் அருகே வந்தும் அதன் ஆசீர்வாதம் காணவில்லை.

வாக்குத்தத்த பூமி, பரிசுத்த பூமி என்ற கானானுக்கு புறம்பாக மாறினார்கள். ஆசரிப்பு கூடாரத்தை விட்டு அதிக தூரம் சென்று விட்டார்கள். ஐக்கியத்தை இழந்தார்கள். அனைத்து ஆசீர்வாதங்கள் பெற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை பெற்று கொள்ளவில்லை. யோர்தானின் அக்கரைக்கு செல்ல ஆர்வம் வரவில்லை. அதன் இக்கரையில் கண்கள் பதிந்து விட்டன. கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் கானான் காணாதபடிக்கு அவர்களை குருடாக்கிற்று. 1 யோவான் 2-வது அதிகாரம் 16-வது வசனம். ''மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்தில் உள்ளவைகள் எல்லாம் பிதாவினால் உண்டானவைகள் அல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்''. பரிசுத்த லூக்கா 21-வது அதிகாரம் 34-வது வசனம். ''உங்கள் இருதயங்கள் பெரும் திண்டியினாலும், வெறியினாலும், லௌகீக கவலைகளினாலும் பாரம் அடையாத படிக்கும் நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாய் இருங்கள்.''



ரூபன், காத், மேலும் மனாசேயின் பாதி கோத்திர சுதந்திரங்கள்

எகிப்தில் இருந்து புறப்பட்டு நாற்பது ஆண்டுகள் வனாந்தரம் சுற்றி யோர்தானின் ஓரம் வரை வந்தவர்கள் ஆடு மாடுகளால் மனம் பாரம் கொண்டார்கள். கானானை நாட வேண்டியவர்கள் யோர்தானை தாண்டவில்லை. ஆதியாகம புத்தகம் 15-வது அதிகாரம் 18

முதல் 21 வசனங்களில் ஆபிரகாமின் சந்ததிக்கு கொடுக்கப்பட்ட உயர்ந்த ஆசீர்வாதங்களையும் ரூபன், காத் மனாசேயின் பாதி கோத்திரத்தார் இழந்து போனார்கள். கொலோசேயர் நிரூபம் 3-வது அதிகாரம் 1,2 ஆகிய வசனங்கள். ''நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்தது உண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்தில் உள்ள மேலானவைகளையே தேடுங்கள். பூமியில் உள்ளவைகளை அல்ல. மேலானவைகளையே நாடுங்கள்.'' பதினாயிரம் பேரிலும் சிறந்தவராக இயேசு மாறும்பொழுது இம்மைக்குரியவைகள் இன்பமாக மாறுவது இல்லை.

அத்தியாயம் - 33
இஸ்ரவேலரின் பிரயாண தொகுப்பு

33.1 மோசே இஸ்ரவேலர் பிரயாணங்களை குறித்து எழுதுகிறான்

மோசே ஆரோன் என்பவர்களுடைய கையின் கீழ் தங்கள் தங்கள் சேனைகளின்படியே எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரருடைய பிரயாணங்களின் விவரம்: மோசே தனக்கு கர்த்தர் கட்டளை இட்டபடியே அவர்கள் புறப்பட்ட பிரகாரமாக அவர்களுடைய பிரயாணங்களை எழுதினான்; அவர்கள் ஒவ்வொரு இடங்களில் இருந்து புறப்பட்டு பண்ணின பிரயாணங்களாவன: (எண். 33:1-2)

நாற்பது வருடங்களுக்கு முன்னர் அடிமைத்தன வாழ்வில் இருந்து வெளி வந்தது முதல் யோர்தான் நதி ஓரம் வந்து சேரும் வரை நடந்து வந்த பாதைகள், கடந்து வந்த அனுபவங்கள், தங்கி தாபரித்த இடங்கள் அனைத்தும் எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரத்தில் கூறப்படுகின்றது. அடிமைத்தன வாழ்வு வேண்டவே வேண்டாம் என்று அன்று அழுதார்கள். அடிபட்டு வாழும் வாழ்வு வேண்டாம் என்று கர்த்தரை நோக்கி கதறினார்கள். அவர்களின் கண்ணீரை கர்த்தர் கண்டார். தேவன் அவர்களுக்கு சகாயம் பண்ணினார். எவராலும் கைகொடுக்க முடியாதவர்களுக்கு கர்த்தர் கைகொடுத்தார். வெறும் ஜனங்களாக இருந்தவர்கள் கர்த்தரின் ஜனங்களாக மாறினார்கள். பஸ்கா ஆட்டுகுட்டியின் இரத்தம் வாசல் நிலைகளில் பெற்றதினால் மற்றவர்கள் பெற்றிராத கிருபைகளை பெற்று கொண்டார்கள். சங்கார தூதனுடைய சக்திக்கும் மேலான சக்தி அவர்கள் கண்டார்கள். சங்கீதம், சந்தோஷம் கொண்டு அடிமைத்தன வாழ்வை விட்டு வெளியே வந்தார்கள். அவர்கள் பெற்ற மீட்பு அற்புதமான மீட்பாகி விட்டது.

மோசே ஆரோன் என்பவர்களின் தலைமையில் பார்வோனின் இரும்பு பிடியில் இருந்து வெளியே வந்தார்கள் என்பதையும் மோசே ஆரோன் என்பவர்களின் கையின் கீழ் தங்கள் தங்கள் சேனைகளின்படியே எகிப்தில் இருந்து புறப்பட்டார்கள் என்பதையும் 33-வது அதிகாரம் முதல் வசனம் கூறுகின்றது. மோசே ஆரோன் என்பவர்களின் கையால் உமது ஜனங்களை ஒரு ஆட்டு மந்தையை போல வழி நடத்தினீர் என்று 77-வது சங்கீதம் 20-வது வசனம் கூறுகின்றது. 430 வருஷம் முடிந்த அந்த தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட்டது என்று யாத்திராகம புத்தகம் 12-வது அதிகாரம் 41-வது வசனம் கூறுகின்றது.

430 வருட கால அடிமைத்தனத்தில் இருந்து மீட்க பட்டோம் என்ற மகிழ்ச்சியில் வெற்றியின் கீதம் பெற்று முன் நடந்து வந்தவர்களை தடுத்து நிறுத்துவதற்கு செங்கடல் முன்னாக வந்து நின்றது. அதே சமயத்தில் பழைய வாழ்க்கைக்கு பிடித்து இழுப்பதற்கு அவர்களுக்கு பின்னாக பார்வோனின் பட்டாளம் நெருங்கி வந்தது. முன்னாக தடை நிற்க கண்டார்கள். பின்னாக சோதனை இழுக்க கண்டார்கள்.

மீட்பின் அனுபவம் என்பது மிகவும் புதிதாக அவர்களுக்கு இருந்தது. புதிதாய் பிறந்த குழந்தைகளை போன்று இருந்த அவர்கள் கர்த்தரை நோக்கி கண்ணீர் விட்டார்கள். கர்த்தர்

அவர்கள் ஜெபத்தை கேட்டார். செங்கடல் இரண்டாக பிளந்து நின்றது. மனிதனின் மீட்புக்கு இயற்கை இசைந்து கொடுத்தது. மீட்பின் பாதை மிகவும் அற்புதம் நிறைந்த பாதை என்பதையும் கர்த்தருடைய வழி நடத்துதல்கள் மிகவும் ஆச்சரியமானது என்பதையும் கொஞ்சம் கொஞ்சமாக புதிதாய் பிறந்த அவர்களுக்கு தெரிய வைத்தார். ''உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதை பார்த்து துன்மார்க்கருக்கு வரும் பலனை காண்பாய்'' என்று 91-வது சங்கீதம் 7,8 ஆகிய வசனங்கள் கூறுகின்றன.

மிகவும் பக்கத்தில் நெருங்கி வந்த பார்வோனின் சேனைகள் செங்கடலில் மூழ்கி போயின. அதனை அவர்கள் கண்கள் கண்டன. கர்த்தரின் கிருபை பெற்ற ஜனங்கள் கடல் நீர் காலில் படாமல் செங்கடலில் நடந்து சென்றார்கள். அது அவர்களின் ஆரம்ப அனுபவமாக மாறியது. இருக்கிறவராக இருக்கிறேன் என்றவர் மீட்பின் யாத்திரையில் பங்கு எடுப்பதற்கு முன் வரும் அநேகர்களுடைய அனைத்து தேவைகளையும் சந்திப்பதற்கு ஏற்றவராய் இருக்கிறார் என்பது ஆரம்பத்தில் விளக்கப்பட்டது. உபத்திரவங்களும் ஏராளம் என்பதை அறிந்து கொள்ளுங்கள் என்று செங்கடல் அனுபவம் அவர்களுக்கு முன் அறிவித்தது. பூரண அர்ப்பணிப்பு, தற்கட்டுப்பாடு இரண்டும் இருந்து விட்டால் துன்பங்கள் இன்பமாக மாற்றப்படும், ஜெபங்கள் உடனுக்கு உடன் கேட்கப்படும், அற்புதங்களும் அதிசயங்களும் அன்றாட வாழ்வின் நிகழ்ச்சி ஆகும் என்று தெரிவிக்க பட்டது. செங்கடல் போன்று புதிய புதிய தடைகள் வரும் பொழுது கர்த்தரை நோக்கி பாருங்கள் என்பது ஜனங்களுக்கு புகட்டப்பட்டது. பார்வோனின் சேனை போன்று பழைய பாவங்களும் பாவ ஆசைகளும் கானான் நோக்கி செல்லும் ஜனங்களுக்கு பின்னாக வந்து கொண்டே இருக்கும். பாவங்கள் களைய பட்டாலும் ஆசைகள் துரத்தவே செய்யும் என்று எச்சரிப்பு கொடுக்க பட்டது. இனிமேல் அவர்கள் முன்னானவைகளை நாட வேண்டும். பின்னானவைகளை மறக்க வேண்டும். அதற்கு கர்த்தர் முன்னும் செல்ல வேண்டும், பின்னும் செல்ல வேண்டும் என்ற ஒரு ஒழுங்குக்குள் அவர்கள் வந்து விட்டார்கள்.

கர்த்தர் உங்கள் முன்னே போவார். இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களை காக்கிறவராய் இருப்பார் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 52-வது அதிகாரம் 12-வது வசனத்தின் பின் பகுதி கூறுகின்றது. முன்னாக செங்கடல் தெரிந்தாலும் பின்னாக சேனைகள் வந்தாலும் கர்த்தர் முன்னும் பின்னும் இருந்து வழி நடத்தும் பொழுது அவர்கள் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை என்பது கற்பிக்கப்பட்டது. அவர்களை அடிமைத்தன வாழ்வில் இருந்து இழுத்து வந்த கர்த்தர் உண்மை உள்ளவர், தங்களை மீட்டு கொண்ட கர்த்தர் வாக்குத்த பூமிக்கு அழைத்து செல்லவும் வல்லவராக இருக்கிறார் என்ற ஒரே நம்பிக்கையுடன் நடந்து சென்றார்கள்.

கானான் செல்லும் பாதை எப்படிப்பட்ட பாதை என்பது தெரியாது. வழியில் வருகின்றவர்களை எப்படி சமாளிப்போம் என்றும் தெரியாது. அவர்களின் பிரயாணம் கர்த்தர் மீது விசுவாசமும், மோசே மீது நம்பிக்கையும் கொண்ட பிரயாணம் ஆகும். அழைத்தவர் உண்மை உள்ளவர். கைவிடவே மாட்டார் என்ற மன உறுதியுடன் ஜனங்கள் நடந்து சென்றார்கள். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 42-வது அதிகாரம் 16-வது வசனம், ''குருடர்களை அவர்களை அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்கு தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்து கொண்டு வந்து அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும்,

கோணலை செவ்வையும் ஆக்குவேன். இந்த காரியங்களை நான் அவர்களுக்கு செய்து அவர்களை கைவிடாது இருப்பேன்'' என்று கர்த்தர் கூறுகிறார்.

முன்பின் தெரியாத பாதையாக இருந்தாலும் கர்த்தரின் பின்னாக செல்லுவதினாலே பகலில் மேகஸ்தம்பமும் இரவில் அக்கினி ஸ்தம்பமும் கொடுக்கப்பட இருக்கின்றது. பிரயாணத்தில் ஏற்படும் பசி, களைப்பு அகற்ற தூதர்கள் சாப்பிடும் மன்னா தயார் ஆகுகின்றது. அடிமைத்தன வாழ்வில் அவர்கள் பெற்ற எஜமான் பார்வோன் ஆகும். மீட்கப்பட்ட வாழ்வில் அவர்கள் பெற்ற எஜமான் பரிசுத்தராகிய தேவனாகும். அவர்களுக்கும் தேவனுக்கும் இருக்கும் உறவு பத்து கற்பனை என்ற உடன்படிக்கை உறவாக மலர இருக்கின்றது. மேக ஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பம், மன்னா, உடன்படிக்கை பெட்டி, ஆசரிப்பு கூடாரம் அனைத்தும் பெற்று நடந்து வந்தார்கள். ஓடி ஓடி நடந்த காலங்களும் உண்டு. வாடி வதங்கி உட்கார்ந்த காலங்களும் உண்டு. துதித்து பாடிய நாட்களும் உண்டு. பழித்து பேசிய நேரங்களும் உண்டு. கர்த்தரை விட்டு தூரம் சென்றாலும் கர்த்தர் அவர்களை விட்டு தூரம் செல்லவே இல்லை. 38 வருடங்களும் முற்றும் முடிய இரட்சிக்கிறவராகவே கர்த்தர் அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார்.

12 கோத்திரங்களும் 12 அணிகளாக 12 கொடிகள் பெற்று சென்றார்கள். ஆயினும் ஒரே குடும்பம் போன்று சென்றார்கள். அவர்களில் ஆறு இலட்ச மக்கள் ஆண்கள். மற்றும் அவர்கள் குடும்பங்கள் குழந்தைகள் ஆடு மாடுகள் அனைத்துடனும் அவர்கள் சென்றார்கள். அவர்களின் தொகை மிகவும் பெரிய தொகையாக இருந்தாலும் அவர்களின் ஐக்கியம் பாதிக்க படவில்லை. அவர்கள் நடுவில் மலர்ந்த அன்பு மறையவில்லை. அன்பும் ஐக்கியமும் கொண்டு நாற்பது வருடங்கள் நடந்து நடந்து சென்றார்கள். ஒருவருக்கு ஒருவர் எவ்வித வித்தியாசமும் பாராட்டவில்லை. ஒருவர் மீது ஒருவருக்கு கோபம், போட்டி, பொறாமை, கசப்பு என்ற எவ்வித தீய உணர்வுகளும் உருவாகவில்லை. அதற்கு காரணம் அன்பு நிறைந்த கர்த்தரின் தலைமையில் அவர்கள் நடந்து சென்றார்கள். எவ்வித பார பட்சமும் கர்த்தரிடம் இல்லை. அனைவருக்கும் சம அன்பும், சம நீதியும் செலுத்தும் யாவே என் யேகோவாவாகிய கர்த்தர் அந்த நீண்ட பிரயாணத்தில் அவர்கள் துண்டு பட்டு விடாதபடிக்கு காத்து கொண்டார். ஒருவரை ஒருவர் அடிகின்றவர்களாக அல்ல, ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துகின்றவர்களாக அவர்கள் நடந்து சென்றார்கள்.

எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரம் மிகவும் நேர்த்தியான ஓர் அதிகாரம். இம்மட்டும் நடத்திய கர்த்தரை மோசே நோக்கி பார்க்கின்றான். மோசே கர்த்தர் தனக்கு கட்டளை இட்டபடியே அவர்கள் புறப்பட்ட பிரகாரமாக அவர்களுடைய பிரயாணங்களை எழுதினான் என்று 2-வது வசனம் கூறுகின்றது.

மோசே கர்த்தர் கட்டளையிட்டபடி எழுதினான். ஆரம்பம் முதல் யோர்தானின் ஓரம் வந்து சேரும் வரை வாழ்க்கை பிரயாணத்தில் இடம் பெற்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் நினைத்து நினைத்து மோசே எழுதினான். அவனுடைய அனைத்து வேலைகள் நடுவிலும் மோசே உட்கார்ந்து எழுதினான். கர்த்தருடைய வழி நடத்துதல்களை எழுதுவதற்கு அவனுக்கு மனமும் இருந்தது. நேரமும் இருந்தது. அன்று அவன் எழுதி வைத்த அந்த ஐந்து ஆகமங்களும் பரம கானான் நோக்கி செல்லும் அனைவருக்கும் இன்றும் அதிக பயன் உள்ளதாக இருக்கின்றது.

40 வருட பிரயாணத்தில் மோசே கண்ட அனுபவம் கர்த்தர் கைவிடுவது இல்லை என்பதே ஆகும். ஜனங்களின் தன்மைகள் ஏற்ற தாழ்வு கொண்ட தன்மையாக இருந்தாலும் கர்த்தர் அவர்களை விட்டு விலகி செல்லவே இல்லை. கர்த்தர் தங்களை ஒரு போதும் கைவிடவில்லை என்ற நன்றி உணர்வுடன் மோசே பின் திரும்பி பார்க்கின்றான்.

40 ஆண்டுகளும் கர்த்தர் அருளி செய்த சொல்லி முடியாத நன்மைக்கு என்னத்தை செலுத்துவேன் என்று நன்றி உணர்வுடன் எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரத்தை மோசே எழுதுகின்றான். ஏறத்தாழ 120 வயதில் 120 வருடங்களை சிந்தையில் கொண்டு வருகின்றான். அதில் கடைசி 40 வருடங்கள் அநேக உபத்திரவங்களை அவன் கடந்து சென்ற வருடங்கள் ஆகும். ஒவ்வொரு உபத்திரவமும் அவனையும் அவனுடைய தலைமையில் வழி நடத்தப்பட்டு வந்த ஜனங்களையும் சுத்த பொன்னாக மாற்றி விட்டது. இதுவரை வாழ்கையில் நடந்தவைகள் அனைத்தும் நன்மைக்காகவே நடந்தன என்ற மன உணர்வுடன் மோசே கர்த்தரை போற்றுகின்றான். 33-வது அதிகாரத்தில் வழி நடந்து வந்த இடங்களை இடம் இடமாக குறிப்பிட்டு பிரிக்கின்றான். அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகின்றவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம்'' என்று ரோமர் நிரூபம் 8-வது அதிகாரம் 28-வது வசனம் கூறுகின்றது.

யோர்தான் நதி ஓரமாக நின்று இம்மட்டும் நடத்தியவரை மோசே துதிக்கின்றான். கானான் முன்னாக நிற்கின்றது. அதற்கு நேராக கண்களை பதித்து இம்மட்டும் நடத்தியவர் இனிமேலும் நடத்துவார் என்று துதிக்கின்றான். என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி; என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகங்காரங்களையும் மறவாதே என்று துதிக்கின்றான்.

> ***முதலாம் மாதத்தின் பதினைந்தாம் தேதியிலே அவர்கள் ராமசேசை விட்டு புறப்பட்டார்கள்; பஸ்காவுக்கு மறு நாளிலே, எகிப்தியர் எல்லாரும் பார்க்க, இஸ்ரவேல் புத்திரர் பெலத்த கையுடன் புறப்பட்டார்கள். அப்பொழுது எகிப்தியர் கர்த்தர் தங்களுக்குள்ளே சங்கரித்த தலைச்சன் பிள்ளைகளை எல்லாம் அடக்கம் பண்ணினார்கள். அவர்கள் தேவர்களின் பேரிலும் கர்த்தர் நீதி செலுத்தினார். பின்பு இஸ்ரவேல் புத்திரர் ராமசேசிலிருந்து புறப்பட்டு போய், சுக்கோத்திலே பாளயம் இறங்கினார்கள். (எண். 33:3-5)***

அடிமைத்தன வாழ்வில் இருந்து அற்புதமாக மீட்கப்பட்டு எகிப்தில் இருந்து வெளியேறிய நாள் முதலாம் மாதத்தின் பதினைந்தாம் தேதி ஆகும். முதலாம் மாதம் என்பது ஆபிப் மாதம் என்பது ஆகும். ஆபிப் மாதத்தின் இந்த நாளிலே நீங்கள் புறப்பட்டீர்கள் என்று யாத்திராகம புத்தகம் 13-வது அதிகாரம் 4-வது வசனம் கூறுகின்றது. வருட நாட்காட்டியில் ஆபிப் மாதம் என்பது ஏழாவது மாதம் ஆகும். ஆபிப் மாதத்தை பாபிலோனியர் நிசான் மாதம் என்றும் அழைத்தார்கள். ஆபிப் அல்லது நிசான் என்ற மாதம் வருட நாட்காட்டியில் ஏழாவது மாதமாக இருந்தது. அந்த மாதம் அடிமை வாழ்வில் இருந்து அற்புத விடுதலை பெற்ற மாதமாக மாறி விட்டது. எனவே சபை நாட்காட்டியில் ஆபிப் அல்லது நிசான் என்ற மாதம் வருடத்தின் முதல் மாதமாக மாறியது. யாத்திராகம புத்தகம் 12-வது அதிகாரம் 2-வது வசனத்தில் ''இந்த மாதம் உங்களுக்கு பிரதான மாதம். இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாய் இருப்பதாக.'' இதனை குறித்து கர்த்தர் மோசே மூலம் கூறுகின்றார். விடுதலை

உணர்வுடன் வருடம் பிறப்பதாக, பொதுவான நாட்காட்டியில் ஏழாவது மாதமாக இருக்கும் ஆபிப் மாதம் முதல் மாதமாக மாறுவதாக என்று கர்த்தர் கட்டளை இட்டார்.

மனிதன் மனிதனுக்கு அடிமையாகி வாழ்வதற்கு கர்த்தர் விரும்பவில்லை. புறப்பட்டு வந்த ஜனங்கள் ஒன்று திரண்டு அணி வகுத்து புறப்பட்ட இடம் ராம்சேஸ் என்ற இடம் என்று மூன்றாவது வசனம் கூறுகின்றது. ராம்சேஸ், இஸ்ரவேல் மக்கள் தங்கி இருந்த கோசேன் சமவெளியின் தலைநகராகும். அதுவே இன்றைய எகிப்தின் தலைநகரமாகிய கெய்ரோ என்று கருதப்படுகிறது.

அந்த இடத்தில் தான் அவர்கள் கண்ட துன்பம் உச்ச நிலை கண்டது. அயராது உழைத்தாலும் பெற்றது அடியும் உதையுமே ஆகும். பாடு பட்ட இடம் இப்பொழுது பாட்டு பாடும் இடமாக மாறியது. அடி பட்ட இடம் கொடி ஏற்றும் இடமாக மாறியது. எகிப்தியர் எல்லாரும் பார்க்க பலத்த கையுடன் புறப்பட்டார்கள். கைகளை பரலோகத்திற்கு நேராக உயர்த்தி அசைத்து ஆர்ப்பரித்து புறப்பட்டார்கள். எகிப்தியர் எல்லாரும் அதனை பார்த்து கொண்டு இருந்தார்கள். அவர்கள் ஒளித்து கொண்டு எகிப்தில் இருந்து ஓடவில்லை. ஒடுக்கியவர்கள் கண் விழித்து பார்த்தார்கள். கர்த்தருடைய ஜனங்கள் அவர்கள் கண்களுக்கு முன்பாக நடந்து சென்றார்கள்.

கர்த்தர் தரும் விடுதலை ஒளிவு மறைவு இல்லாத விடுதலை. மலையின் மேல் இருக்கும் பட்டணம் மறைந்து இருக்க மாட்டாது. அவர்களை வாட்டி வதைத்தவர்கள் பதபதைத்து நின்றார்கள். செயல் இழந்து பார்த்தார்கள். இதுவரை யார் முன் கைக்கட்டி நின்றார்களோ அவர்களுக்கு முன்னாக கை அசைத்து சென்றார்கள். அவர்களை கை நீட்டி அடித்தவர்கள் கை கட்டி நின்றார்கள். கர்த்தரின் பலத்த கை அவர்களை அழைத்து சென்றது.

அப்பொழுது எகிப்தியர் செய்து கொண்டு இருந்த வேலை என்ன என்பது 4-வது வசனத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது. ''அப்பொழுது எகிப்தியர் கர்த்தர் தங்களுக்குள்ளே சங்கரித்த தலைச்சன் பிள்ளைகளை எல்லாம் அடக்கம் பண்ணினார்கள்'' என்று பார்க்கிறோம். இந்த விபரம் இதற்கு முன்னதாக யாத்திராகம புத்தகத்தில் கூறப்படவில்லை. 40 வருடங்களுக்கு பின்னதாக மோசே எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரத்தை எழுதுகின்றார். அப்பொழுது அன்று நடந்த விபரம் அவருடைய ஞாபகத்திற்கு வருகின்றது. இதுவரை ஒடுக்கியவர்கள் அடங்கி போனார்கள். கர்த்தரின் கோபம் வெளி பட்டது. வீடு வீடாக சங்கார தூதன் தலை பிள்ளைகளை கொள்ளை கொண்டான் என்பது மோசேயின் நினைவில் வருகின்றது. மரண ஊர்வலம் நடந்ததும் கண்ணிற்கு தெரிகின்றது. விடுதலை பெற்று ஜனங்கள் சென்ற ஊர்வலமும் அவன் கண் முன்னால் வருகின்றது.

பிரயாணம் ராம்சேசில் துவங்கியது. பலத்த கையுடன் துவங்கியது. அற்புதமான ஆரம்பம் அது. அதிசயமான விடுதலை அது. கர்த்தரை நோக்கி கண்ணீருடன் புலம்பினார்கள். கர்த்தர் வழிநடத்த கெம்பீரத்துடன் புறப்பட்டு செல்லுகின்றார்கள். கர்த்தர் மீது பாரங்களை வைக்கும் பொழுது கண்ணீர் மகிழ்ச்சியாக மாறுகின்றது.

3 முதல் 49-வது வசனம் வரை அவர்கள் புறப்பட்ட இடமான ராமசேசில் இருந்து யோர்தான் ஓரம் வரை 40 வருடங்கள் கடந்து சென்ற முக்கிய இடங்களின் பெயர் விவரங்கள் கொடுக்க பட்டு உள்ளன. புறப்பட்ட இடம் முதல் யோர்தான் வந்து சேரும் வரை அவர்கள் செய்த பிரயாணம் நான்கு கட்டங்களாக எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரத்தில் பிரித்து

கூறப்படுகின்றது. அன்று ராமசேசில் இருந்து புறப்பட்டவர்கள் எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரத்தில் யோர்தான் நதியின் கிழக்கு ஓரம் வந்து விட்டார்கள். கடந்து வந்த இடங்கள் மொத்தம் 40 இடங்கள் என்ற விபரம் கொடுக்கப்படுகின்றது. கடந்து சென்ற வருடங்களும் 40 ஆகும்.

33.2 ராமசேசில் இருந்து சீனாய் மலை அடிவாரம் வரை

சுக்கோத்தில் இருந்து புறப்பட்டு போய், வனாந்தரத்தின் எல்லையில் இருக்கிற ஏத்தாமிலே பாளயம் இறங்கினார்கள். ஏத்தாமிலிருந்து புறப்பட்டு போய், பாகால்செபோனுக்கு எதிராக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடிக்கு திரும்பி, மிக்தோலுக்கு முன்பாக பாளயம் இறங்கினார்கள். ஈரோத்தை விட்டு புறப்பட்டு, சமுத்திரத்தை நடுவாக கடந்து வனாந்தரத்திற்கு போய், ஏத்தாம் வனாந்தரத்திலே மூன்று நாள் பிரயாணம்பண்ணி, மாராவிலே பாளயம் இறங்கினார்கள். மாராவிலிருந்து புறப்பட்டு, ஏலிமுக்கு போனார்கள். ஏலிமிலே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்ச மரங்களும் இருந்தது. அங்கே பாளயம் இறங்கினார்கள். ஏலிமிலிருந்து புறப்பட்டு, சிவந்த சமுத்திரத்தின் அருகே பாளயம் இறங்கினார்கள். சிவந்த சமுத்திரத்தை விட்டு புறப்பட்டு போய், சீன் வனாந்தரத்திலே பாளயம் இறங்கினார்கள். சீன் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு போய், தொப்காவிலே பாளயம் இறங்கினார்கள். தொப்காவிலிருந்து புறப்பட்டுப்போய், ஆலூசிலே பாளயமிறங்கினார்கள். ஆலூசிலிருந்து புறப்பட்டு போய், ரெவிதீமிலே பாளயம் இறங்கினார்கள். அங்கே ஜனங்களுக்கு குடிக்கக தண்ணீர் இல்லாதிருந்தது. ரெவிதீமிலிருந்து புறப்பட்டு போய், சீனாய் வனாந்தரத்திலே பாளயம் இறங்கினார்கள். (எண். 33:6-15)

நான்கு கட்டமாக அவர்களின் பிரயாணம் பிரிக்கப்படுகின்றது. முதல் கட்டத்தில் ராமசேசில் இருந்து சுக்கோத் என்ற இடம் வந்து சீனாய் மலை அடிவாரத்தில் சேர்ந்தார்கள். 11 இடங்களை கடந்து சென்ற பின்னர் முதல் கட்ட பிரயாணம் முடிவு பெற்றது. இதன் விபரம் முதல் 15 வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. ஒரு வருடம், ஒரு மாதம் இருபது நாட்கள் சீனாய் வனாந்தரத்திலே தங்கி இருந்தார்கள்.

முதலாம் இடம்-சுக்கோத்.

இன்றும் எகிப்து தேசத்திற்குள் உள்ள இடம். இங்கு உள்ள பரந்த சமவெளியில் கூடாரங்கள் போட்டு தங்கினார்கள்.

2ம் இடம்-ஏத்தாம்.

இது சீனாய் வனாந்தரத்தின் எல்லையில் உள்ள இடம். ஆனால் பெரிய ராஜபாதை அவ்வழியே சென்றதால், எகிப்தியர் விரைந்து குதிரைகளில் வந்து அவர்களை மேற்கொண்டு விடுவார்கள் என்று கர்த்தர் அவர்களை திரும்பி வேறு பாதை எடுக்க பணித்தார்.

3ம் இடம்-ஈரோத்.

ஈரோத் என்னும் இடம், இன்றைய நுவெய்பா என்ற மணல் பகுதியான இடம் என்று கருத படுகின்றது. இங்குதான் இஸ்ரவேல் மக்கள் செங்கடலின் அகாபா என்னும் பகுதியை கடந்து இருக்க கூடும் என்று கருத படுகின்றது (யாத். 14:1-2).

4ம் இடம்-ஏத்தாம் வனாந்தரம்.

சமுத்திரத்தை கடந்ததும் ஏத்தாம் வனாந்தரத்தில் மூன்று நாட்களும் பிரயாணம் பண்ணி மாராவில் வந்து பாளயம் இறங்கினார்கள். மாராவின் தண்ணீர் கசப்பாக இருந்ததினால் அவர்கள் முறுமுறுத்தார்கள். கர்த்தர் அதை இனிப்பாக மாற்றி கொடுத்தார்

5ம் இடம்-ஏலிம்.

இது ஒரு பாலைவனச் சோலை. இங்கே 12 ஊற்றுகளும் 70 பேரீட்சை மரங்களும் இருந்தன. கர்த்தரின் பார்வைக்கு செம்மையானவைகளை அவர்கள் செய்தால் வியாதியும் உபாதையும் அவர்களிடம் வர விட மாட்டேன் என்று கர்த்தர் கூறுகிறார்.

6ம் இடம்-சிவந்த சமுத்திரம் அருகே.

இந்த இடத்தில் இஸ்ரவேல் மக்கள் பாளயம் இறங்கினதை குறித்து வேறு எங்கும் கூறுப்படவில்லை. இந்த இடத்திற்கு கிழக்கேயே சீனாய் மலை இருந்தது.

7ம் இடம்-சீன் வனாந்தரம்.

எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட்ட இரண்டாம் மாதம் 15-ம் தேதியில் சீன் வனாந்தரத்தில் பாளயம் இறங்கினார்கள் (யாத். 16:1-3). ஆனால் இறைச்சி இல்லை என்று முணுமுணுத்தார்கள். அப்பொழுது கர்த்தர் அவர்களுக்கு வானத்தில் இருந்து வந்த அப்பமாகிய மன்னாவை கொடுத்தார்.

8ம் இடம்-தொப்கா.

இந்த இடத்தை குறித்து யாத்திராகம புத்தகத்தில் ஒன்றும் எழுதப்படவில்லை. .

9வது இடம்-ஆலூஸ்.

இந்த இடத்தில் பாளயம் இறங்கியதை குறித்தும் யாத்திராகம புத்தகத்தில் கூறப்படவில்லை.

10-வது இடம்-ரெவிதீம்.

இங்கு தண்ணீர் இல்லை. மோசே ஒரு கோலை எடுத்து பாறையில் அடிக்க, தண்ணீர் பாய்ந்து வந்தது.

11-வது இடம்-சீனாய் வனாந்தரம்.

இந்த இடத்தில்தான் மோசே 10 கற்பனைகளையும், கட்டளைகளையும் கர்த்தர் இடத்தில் இருந்து பெற்று கொண்டான்.

33.3 சீனாய் மலை அடிவாரம் முதல் காதேஸ் பர்னேயா வரை

சீனாய் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு போய், கிப்ரோத் அத்தாவிலே பாளயம் இறங்கினார்கள். கிப்ரோத் அத்தாவிலிருந்து புறப்பட்டு போய்,

ஆஸரோத்திலே பாளயம் இறங்கினார்கள். ஆஸரோத்திலிருந்து புறப்பட்டு போய், ரித்மாவிலே பாளயம் இறங்கினார்கள். ரித்மாவிலிருந்து புறப்பட்டு போய், ரிம்மோன் பேரேசிலே பாளயம் இறங்கினார்கள். ரிம்மோன்பேரேசிலிருந்து புறப்பட்டு போய், லிப்னாவிலே பாளயம் இறங்கினார்கள். லிப்னாவிலிருந்து புறப்பட்டு போய், ரீசாவிலே பாளயம் இறங்கினார்கள். ரீசாவிலிருந்து புறப்பட்டு போய், கேலத்தாவிலே பாளயம் இறங்கினார்கள். கேலத்தாவிலிருந்து புறப்பட்டு போய், சாப்பேர் மலையிலே பாளயம் இறங்கினார்கள். சாப்பேர் மலையிலிருந்து புறப்பட்டு போய், ஆரதாவிலே பாளயம் இறங்கினார்கள். ஆரதாவிலிருந்து புறப்பட்டு போய், மக்கெலோத்திலே பாளயம் இறங்கினார்கள். மக்கெலோத்திலிருந்து புறப்பட்டு போய், தாகாத்திலே பாளயம் இறங்கினார்கள். தாகாத்திலிருந்து புறப்பட்டு போய், தாராகிலே பாளயம் இறங்கினார்கள். தாராகிலிருந்து புறப்பட்டு போய், மித்காவிலே பாளயம் இறங்கினார்கள். மித்காவிலிருந்து புறப்பட்டு போய், அஸ்மோனாவிலே பாளயம் இறங்கினார்கள். அஸ்மோனாவிலிருந்து புறப்பட்டு போய், மோசெரோத்திலே பாளயம் இறங்கினார்கள். மோசெரோத்திலிருந்து புறப்பட்டு போய், பெனெயாக்கானிலே பாளயம் இறங்கினார்கள். பெனெயாக்கானிலிருந்து புறப்பட்டு போய், கித்காத் மலையிலே பாளயம் இறங்கினார்கள். கித்காத் மலையிலிருந்து புறப்பட்டு போய், யோத்பாத்தாவிலே பாளயம் இறங்கினார்கள். யோத்பாத்தாவிலிருந்து புறப்பட்டு போய், எப்ரோனாவிலே பாளயம் இறங்கினார்கள். எப்ரோனாவிலிருந்து புறப்பட்டு போய், எசியோன் கேபேரிலே பாளயம் இறங்கினார்கள். (எண். 33:16-35)

இரண்டாவது கட்ட பிரயாணம் சீனாய் மலை அடிவாரம் துவங்கியது, எசியோன் கேபேரில் முடிந்தது. 20 வித்தியாசமான இடங்களை இரண்டாவது கட்டத்தில் கடந்து சென்றார்கள் என்று இந்த வசனங்களில் மோசே எழுதி இருப்பதை பார்க்கிறோம். எண்ணாகமம் 11,12,13 அதிகாரங்களில் இந்த இடங்கள் அநேகமாக எழுத்தில் விட்டுவிடபட்டிருப்பதை காண்கிறோம். இப்பொழுது மரிக்கும்முன் எல்லாவற்றையும் எழுதி வைத்து விட மோசே வாஞ்சிக்கிறார். பிராயாணத்தில் இரண்டாவது கட்டம் பற்றி தகவல் 16 முதல் 35 வசனங்களில் காணப்படுகின்றது. பாளயம் இறங்கி திரும்பவும் புறப்பட்ட இடங்களை ஒவ்வொன்றாக காண்போம். சீனாய் வனாந்தரத்தில் பாளயம் இறங்கி இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் 20-ம் தேதியில் இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்தில் இருந்து தங்கள் பிரயாண வரிசையாய் புறப்பட்டார்கள் என்று பார்க்கிறோம் (எண். 10:11-22).

12-வது இடம்-கிப்ரோத் அத்தாவா.

இங்கு வரும்முன், ஜனங்கள் முறை இட்டதை கர்த்தர் கேட்ட பொழுது அவருடைய கோபம் பற்றி எரிந்து, அவருடைய அக்கினி பாளயத்தின் கடைசியில் இருந்த சிலரை பட்சித்தது. மோசே அந்த இடத்திற்கு தபேரா என்று பெயரிட்டான் (எண். 11:1-2). பின்னர் அவர்களுக்குள் இருந்த அந்நிய ஜனங்கள் மாமிசத்தின் மேல் இச்சை உள்ளவர்கள் ஆனார்கள் (எண். 11:4). கர்த்தர் அவர்களுக்கு காடைகளை கொடுத்தார் (எண். 11:31). அவர்கள் அதை சுவைத்து சாப்பிடும் முன்னே வாதை மூண்டது. அங்கே அவர்களை அடக்கம்

பண்ணினார்கள். இச்சித்தவர்களின் கல்லறை இருந்த இடத்திற்கு கிப்ரோத் அத்தாவா என்று மோசே பேரிட்டான். அங்குதானே எழுபது தலைவர்கள் மேல் கர்த்தர் தம் ஆவியை ஊற்றினார்.

13-வது இடம்-அஸரோத்.

அஸரோத்தில் தான் மோசேயின் மனைவியாகிய எத்தியோப்பிய ஸ்திரீயினால் ஆரோனும் மிரியாமும் மோசேக்கு விரோதமாக கலகம் பண்ணினார்கள்.

14-வது இடம்-ரித்மா.

ரித்மாவை குறித்து அவர்கள் பிரயாணம் பண்ணுகையில் குறிப்பிடபடவில்லை. ஆனால் அது பாரான் வனாந்தரத்தில் உள்ளது என்று அறிகிறோம் (எண். 12:16).

15-வது இடம்-ரிம்மோன் பேரேஸ்.

ரிம்மோன் பேரேஸ் என்றால் மாதுளம் மரங்கள் நிறைந்த இடைவெளி என்று பொருள். நீர் அரித்ததால் பூமியில் உண்டான இடைவெளி ஆகும்.

16-வது இடம்-லிப்னா.

லிப்னா என்னும் பட்டணம் சீனாய் வனாந்தரத்தில் உள்ளதாக இருக்கலாம். இது 'வெண்மை' என்ற பொருள் கொண்டது.

17-வது இடம்-ரீசா.

ரீசா என்றால் பாளடைந்த இடங்களின் குவியல் (heap of ruins) என்று பொருள் படும்.

18-வது இடம்-கேலத்தா

கேலத்தா என்றால் அஞ்சனம் (antimong) என்னும் மூலகம் இருக்கும் இடம் என்று பொருள் படும்.

19-வது இடம்-சாப்பேர் மலை.

சாப்பேர் என்றால் 'பிரகாசம்' அல்லது 'அழகு' என்று பொருள் படும்.

20-வது இடம்-ஆரதா.

ஆரதா என்றால் பயம் அல்லது பயப்பட கூடியது என்று பொருள்படும்.

21-வது இடம்-மக்கெலொத்.

மக்கெலொத் என்றால் சபை (assemblies) என்று பொருள்படும்.

22-வது இடம்-தாகாத்.

தாகாத் என்றால் 'கீழே' என்று பொருள் படும்.

23-வது இடம்-தாரா.

தாரா என்றால் 'காட்டு ஆடு (Ibex, Wild Goat)' என்று பொருள்படும்.

24-வது இடம்-மிக்தா.

மிக்தா என்றால் 'இனிப்பு' என்று பொருள்படும். அரேபியாவில் உள்ள 'மோசா'-வாக இருக்கலாம் என்று கருதுகின்றார்கள்.

25-வது இடம்-அஸ்மோனா.

அஸ்மோனா என்றால் 'கொழுமையானது' என்று பொருள்படும்.

26-வது இடம்-மோசெரோத்.

இந்த இடமே மோசெரா என்று உபாகமம் 10:6-ல் குறிக்க பட்டுள்ள இடம் என்றும், இது ஓர் மலையில் ஆரோன் இறந்த இடம் என்றும் கருதுகிறார்கள்.

27-வது இடம்-பெனெயாக்கான்.

இந்த இடம் பேரோத் என்றும் அழைக்கபட்டது (உபா. 10:6).

28-வது இடம்-கித்காத் மலை.

இந்த இடம் உபாகமம் 10:7ல் குத்கோதா என்று கூறபட்டுள்ளது. 'கித்காத் குகை' என்றும் பொருள்படும்.

29-வது இடம்-யோத்பாத்தா.

யோத்பாத்தா என்றால் 'நன்மையானது' என்று பொருள்படும். இங்கு பழைய இரும்பு கால கோட்டை ஒன்று உள்ளது. அங்குள்ள நீரூற்றுகள் மக்களுக்கு தண்ணீர் கொடுத்திருக்கலாம். மீதியானியரின் மண்பாண்டங்களும் கண்டு எடுக்கபட்டிருக்கிறது.

30-வது இடம்-எப்ரோனா.

எப்ரோனா என்றால் 'பாதை' (passage) என்று பொருள்படும். அது மலைகளில் இருந்து கடலுக்கு இறங்கி போகும் பாதையில் எசியோன் கேபேருக்கு எதிராக உள்ளது.

31-வது இடம்-எசியோன் கேபர்.

எசியோன் கேபர் என்ற இடம் சிவந்த சமுத்திரத்தின் அகாபா கடல் முனையில் அமைந்துள்ளது. இந்த பகுதியில் எசியோன் கேபரில் இருந்து காதேஷ் சென்றார்கள் என்று கூறபடுகிறது. ஆனால் உபாகமம் 2:8ல் காதேசில் இருந்து எசியோன் கேபர் வந்ததாக பார்க்கிறோம். அராபியர் இதற்கு பொன் துறைமுகம் என்று பெயரிட்டு இருக்கிறார்கள். ஏனெனில் இங்கு இருந்துதான் சாலொமோன் இராஜா ஓபீரின் தங்கத்திற்காக கப்பல்களை அனுப்பினான். அகாபா கடலை இஸ்ரவேல் மக்கள் கடந்த இடத்தின் இருபுறமும் ஞாபக தூண்களையும் நாட்டினான்.

33.4 காதேஸில் 38 வருடங்கள்

இந்த இடத்தில் இஸ்ரவேலர் அலைந்து திரிந்து 38 வருடங்களை கழித்தார்கள். அந்நாட்களில் எகிப்தில் இருந்து புறப்பட்ட யோசுவா, காலேபை தவிர 20 வயதிற்கு மேற்பட்ட யாவரும் வனாந்தரத்தில் மரித்தார்கள். இந்த வருடங்களை குறித்து குறிப்பு எதுவும் மோசே எழுதவில்லை. ஆகவே இவை அமைதியான வருடங்களாக கருதபடுகின்றன. 38 வருடங்களுக்கு பின் மிரியாமும் மரித்தாள்.

32-வது இடம்-காதேஸ்.

எசியோன் கேபேரிலிருந்து புறப்பட்டு போய், காதேசாகிய சீன் வனாந்தரத்திலே பாளயம் இறங்கினார்கள். (எண். 33:36)

பிரயாணத்தின் மூன்றாவது கட்டம் 36-வது வசனத்தில் காணப்படுகின்றது. எசியோன் கேபேரில் இருந்து புறப்பட்டு போய் காதேசாகிய சீன் வனாந்தரத்திலே பாளயம் இறங்கினார்கள்.

33.5 காதேசில் இருந்து மோவாப் சமவெளி வரை

காதேசிலிருந்து புறப்பட்டு போய், ஏதோம் தேசத்தின் எல்லையில் இருக்கிற ஓர் என்னும் மலையிலே பாளயம் இறங்கினார்கள். அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோன் கர்த்தருடைய கட்டளையின் படியே ஓர் என்னும் மலையின் மேல் ஏறி, அங்கே இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட்ட நாற்பதாம் வருஷம் ஐந்தாம் மாதம் முதல் தேதியிலே மரணம் அடைந்தான். ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரணம் அடைந்த போது, நூற்றிருபத்து மூன்று வயதாயிருந்தான். (எண். 33:37-39)

32-வது இடம்-ஓர் என்னும் மலை.

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டு 39வருடங்கள் உருண்டோடி விட்டன. காதேசில் 38 வருடங்கள் கழிந்தன. 40 வருடம் 4 மாதங்கள் கடந்த சமயம் ஆரோன் மரணம் அடைந்தான். அவன் வயது 123 ஆகும்.

பிரயாணத்தின் இறுதி கட்டம் காதேசில் துவங்கியது. யோர்தானின் கிழக்கு பகுதியில் உள்ள மோவாபின் சமனான வெளிகளில் முற்றியது. 9 இடங்களை நான்காவது கட்ட பிரயாணத்தில் கடந்து சென்றார்கள். முதல் கட்ட பிரயாணத்தில் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் பலனாக பெற்ற மீட்பும் சீனாய் மலை அடிவாரத்தில் காத்து இருந்து பெற்று கொண்ட உடன்படிக்கையும் இடம் பெற்றது.

2,3,4-வது பிரயாண கட்டங்களில் அநேக உபத்திரவங்களை கடந்து செல்லும் அனுபவங்கள் இடம் பெற்றது. மீட்பு, காத்திருப்பு, கடின உழைப்பு என்ற மூன்று நிலைகளை ஒன்று ஒன்றாக நான்கு கட்டங்களிலும் கடந்து சென்றார்கள். இறுதியில் கானான் அருகில் வந்து விட்டார்கள். யோர்தானின் ஓரத்தில் நின்றார்கள்.

எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரத்தில் கொடுக்கப்பட்டு உள்ள 40 இடங்களில் ஒவ்வொரு இடங்களிலும் அவர்கள் வாழ்க்கை பிரயாணத்தில் இடம் பெற்ற நிகழ்ச்சிகள் கொடுக்க படவில்லை. இடம் மட்டுமே கொடுக்கப்பட்டு உள்ளது. ஆனால் 12 கோத்திரங்கள் 70 மூப்பர்கள் கொண்ட ஒரு அமைப்பு மீட்கப்பட்ட ஜனங்களின் அமைப்பு என்பதை காட்டுவதற்கு ஏலீம் என்ற இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி கூறப்படுகின்றது. 9-வது வசனம். ''மாராவில் இருந்து புறப்பட்டு ஏலீமுக்கு போனார்கள். ஏலீமிலே பன்னிரெண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீட்சை மரங்களும் இருந்தது. அங்கே பாளயம் இறங்கினார்கள்''. பன்னிரெண்டு நீரூற்றுகள் என்பது பன்னிரு கோத்திரங்களை சுட்டி காட்டியது. எழுபது பேரீட்சை மரங்கள் என்பது எழுபது மூப்பர்களை சுட்டி காட்டியது. அதுவே அவர்கள் அமைப்பாக ஆயிற்று. நிர்வாக அமைப்பு மட்டும் அல்ல, தங்கள் ஆத்துமாக்களை தாழ்த்தி பாவங்களை அகற்றி பரிசுத்தமான வாழ்வு நடத்துவதற்கு பிரதான ஆசாரியனும் ஆசரிப்பு கூடாரமும் அவசியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆரோன் என்பவனின் விபரமும் இந்த பிரயாண இடங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. காதேஸ் என்ற இடத்தில் துவங்கிய அவர்களது பிரயாணம் யோர்தான் நதியின் கிழக்கு பகுதியில் உள்ள

மோவாபின் சமனான வெளிகளில் முற்றியது. 9 இடங்களை நான்காவது கட்ட பிரயாணத்தில் கடந்து சென்றார்கள். முதல் கட்ட பிரயாணத்தில் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் பலனாக பெற்ற மீட்பும் சீனாய் மலை அடிவாரத்தில் காத்து இருந்து பெற்று கொண்ட உடன்படிக்கையும் இடம் பெற்றது.

நாற்பது வருட காலத்தில் நாற்பது இடங்களில் தங்கி தாபரித்தார்கள். பாவங்கள், தோல்விகள், தேவ கோபங்கள் அனைத்தும் இடம் பெற்றன. ஆனால் அவைகள் விரிவாக இங்கு கூறப்படவில்லை. காரணம் கர்த்தர் அவர்களை மன்னித்து விட்டார். மன்னிக்க பட்ட பாவங்களை கர்த்தர் மறுபடியும் நினைவில் வைத்து கொண்டு இருக்கின்றவர் அல்ல. பரிசுத்தம் உள்ளவர்கள் இன்னும் பரிசுத்தம் ஆகட்டும் என்பதற்கு ஏற்ப குறிப்புகள் மட்டும் எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரத்தில் கொடுக்கப்பட்டது.

கர்த்தருடைய ஜனங்களின் நிர்வாகம் சிறந்த நிர்வாகமாக இருந்தது என்பது நினைவு கூறப்படுகின்றது. கர்த்தருடைய ஜனங்கள் பரிசுத்தத்திற்கு மேல் பரிசுத்தத்தில் பெருகட்டும் என்பதற்கு ஆரோன் ஆசரிப்பு கூடாரம் நினைவு கூறப்படுகின்றது. ஜனங்களின் சரீர பிரகாரமான தேவைகளை சந்திக்க ஏற்ற நிர்வாக அமைப்பு இருந்தது என்றும், ஆத்துமாவின் தேவையை சந்திக்க ஆசாரியர், ஆசரிப்பு கூடாரம் அனைத்தும் ஏற்ற முறையில் இருந்தது என்றும் மோசே கூறுகின்றார். கர்த்தரால் அவர்களின் தகுதிக்கு மிஞ்சிய இரக்கங்கள் கொடுக்க பட்டன. அவர்கள் வேண்டி கொண்டதற்கும் நினைத்ததற்கும் அதிகமான கிருபைகள் அருள பட்டன. நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை. உன்னை கைவிடுவதும் இல்லை என்று வாழ்க்கை பிரயாணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் காணப்பட்டது. கோணல் நிறைந்த பாதைகள் வழியாக, மாறு பாடுகள் நிறைந்த மனிதர்கள் கடந்து வந்தார்கள். பற்பல பாடுகள் அனுபவித்து வந்த அவர்களை கர்த்தர் முன்னாகவும் நின்று காத்தார், பின்னாகவும் நின்று காத்து கொண்டார்.

சீனாய் அடிவாரத்தில் சீர்படுத்தி, காதேஸ் பகுதிகளில் ஸ்திரபடுத்தி, பலப்படுத்தி, யோர்தானின் ஓரத்தில் நிலை நிறுத்தி விட்டார். நன்றி உணர்வுடன் மோசே நாற்பது வருட பிரயாண சரித்திரத்தை எழுதுகின்றான். யோர்தான் அருகில் வரை வந்து சேர செய்தவர் யோர்தானை கடந்து செல்லவும் கானான் கண்டு களிகூரவும் உதவி செய்வார் என்று மோசே எழுதுகின்றான். கர்த்தர் மீது பெரும் நம்பிக்கை உணர்வுடன் கடந்து செல்ல வேண்டிய பாதைகளை மோசே முன் நோக்கி பார்க்கின்றான். இம்மட்டும் நடத்தியவர் நடத்துவார். முன்னும் பின்னும் நின்று நடத்துவார். தேவன் நம்மோடு இருக்கின்றார். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 49-வது அதிகாரம் 10-வது வசனத்தை பார்ப்போம். ''அவர்கள் பசியாய் இருப்பது இல்லை. தாகமாய் இருப்பது இல்லை. உஷ்ணமாகிலும் வெயிலாகிலும் அவர்கள் மேல் படுவது இல்லை. அவர்களுக்கு இரங்குகிறவர் அவர்களை நடத்தி அவர்களை நீர் ஊற்றுகளிடத்திற்கு கொண்டு போய் விடுவார்''.

உத்தமமாக தம்மை பின்பற்றுகின்றவர்களை கர்த்தர் இம்மையிலும் கைவிடுவதில்லை. மறுமையிலும் கைவிடுவது இல்லை.

அந்த நாட்களிலே கானான் தேசத்தின் தென் திசையில் குடியிருந்த கானானியனாகிய ஆராத் என்னும் ராஜா இஸ்ரவேல் புத்திரர் வருகிறதை கேள்வி பட்டான். ஓர் என்னும் மலையை விட்டு புறப்பட்டு போய், சல்மோனாவிலே பாளயம் இறங்கினார்கள். சல்மோனாவில் இருந்து

புறப்பட்டு போய், பூனோனிலே பாளயம் இறங்கினார்கள். பூனோனிலிருந்து புறப்பட்டு போய், ஓபோத்திலே பாளயம் இறங்கினார்கள். ஓபோத்திலிருந்து புறப்பட்டு போய், மோவாபின் எல்லையிலுள்ள அபாரீமின் மேடுகளிலே பாளயம் இறங்கினார்கள். அந்த மேடுகளைவிட்டு புறப்பட்டு போய், தீபோன்காத்திலே பாளயம் இறங்கினார்கள். தீபோன்காத்திலிருந்து புறப்பட்டு போய், அல்மோன் திப்லத்தாயிமிலே பாளயம் இறங்கினார்கள். அல்மோன் திப்லத்தாயிமிலிருந்து புறப்பட்டு போய், நேபோவுக்கு எதிரான அபாரீம் மலைகளிலே பாளயம் இறங்கினார்கள். அபாரீம் மலைகளிலிருந்து புறப்பட்டு போய், எரிகோவின் அருகே யோர்தானை சார்ந்த மோவாபின் சமனான வெளிகளிலே பாளயம் இறங்கினார்கள். யோர்தானை சார்ந்த மோவாபின் சமனான வெளிகளில் அவர்கள் பெத் எசிமோத்தை தொடங்கி, ஆபேல் சித்தீம் மட்டும் பாளயம் இறங்கி இருந்தார்கள். (எண். 33:40-49)

33-வது இடம்-சலமோனா.

இது ஏதோம் தேசத்தின் அருகில் உள்ள இடமாக இருக்கலாம். மோசே வெண்கல சர்ப்பத்தை ஏற்றிய இடமாகவும் இருக்கலாம்.

34-வது இடம்-பூனோன்.

இது இதுமியா தேசத்தில் உள்ள ஒரு இடம். வேறு எங்கேயும் குறிப்பிடபடவில்லை.

35-வது இடம்-ஓபோத்.

எண்ணாகமம் 21:10-ல் இதை குறித்து காண்கிறோம்.

36-வது இடம்-அபாரீமின் மேடுகள்.

சவக்கடலுக்கு அருகில் பல குன்றுகள் உள்ளதால் இந்த பெயர் பெற்றது.

37-வது இடம்-திபோன் காத்.

அர்னோன் நதியின் ஓரமாக உள்ள இடம் திபோன் காத் ஆகும்.

38-வது இடம்-அல்மோன் திப்லத்தாயிம்.

இது மோவாபியரின் இடத்தில் உள்ள பட்டணம்.

39-வது இடம்-அபாரீம் மலைகள்.

இந்த மலைகளில்தான் யோர்தான் நதிக்கு எதிரே நேபோ கன்மலை உள்ளது. இந்த கன்மலையில் ஏறி மோசே வாக்குதத்த பூமியை பார்த்தான். அங்கே மோசே மரித்தான்.

40-வது இடம்-மோவாபின் சமனான வெளிகள்.

இது சவக்கடலின் முடிவில் உள்ள பெத்-எசிமோத் என்னும் இடத்தில் இருந்து ஆபேல் சித்தீம் என்னும் இடம் வரை பரந்து கிடக்கும் சமவெளி. இங்குதான் எரிகோவிற்கு எதிராக இஸ்ரவேல் மக்கள் பாளயம் இறங்கி இருந்தார்கள். இது யோர்தான் நதி ஓடும் வளமான இடம்.

கானானின் வாசல் திறந்து இருக்கின்றது. வளமும் செழிப்பும் நிறைந்து நிற்கின்றது. மனம் போல் வாழ்வோம் என்று முடிவு செய்து விட வேண்டாம் என்று கூறப்படுகின்றது.

பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை மறந்து விட வேண்டாம் என்று திட்டவட்டமாக கூறப்படுகின்றது.

> *எரிகோவின் அருகே யோர்தானை சார்ந்த மோவாபின் சமனான வெளிகளிலே கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்ன என்றால்: நீங்கள் யோர்தானை கடந்து, கானான் தேசத்தில் போய் சேரும் போது, அத்தேசத்து குடிகளை எல்லாம் உங்களுக்கு முன்பாக துரத்தி விட்டு, அவர்களுடைய எல்லா சிலைகளையும் வார்ப்பிக்க பட்ட அவர்களுடைய எல்லா விக்கிரகங்களையும் அழித்து, அவர்கள் மேடைகளை எல்லாம் நிர்மூலமாக்கி, தேசத்தில் உள்ளவர்களை துரத்தி விட்டு, அதிலே குடி இருக்க கடவீர்கள். அந்த தேசத்தை சுதந்தரித்து கொள்ளும்படி அதை உங்களுக்கு கொடுத்தேன். (எண். 33:50-53)*

எண்ணாகம புத்தகம் 33-வது அதிகாரம் 50 முதல் 56 வசனங்களில் வாக்குத்தத்த பூமியில் வருத்தம் இல்லாமல் வாழ்வதற்கு உரிய அனைத்து வழிமுறைகளும் கொடுக்க படுகின்றன. கர்த்தருடைய சந்தோஷம் என்பது நிறைவாக இருப்பதற்கு பரிசுத்தம் பரிபூரணமாக காக்கப்பட வேண்டும் என்பதே கர்த்தர் கூறும் வழி முறை ஆகும்.

பரிசுத்தம் என்றால் பிரித்து எடுக்கப்படுதல் என்று பொருள் ஆகும். அடிமைத்தன வாழ்வில் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட தன்மையை கானான் செல்லும் பொழுது காத்து கொள்ள வேண்டும் என்று இந்த வசனங்களில் கர்த்தர் கூறுகின்றார். கர்த்தர் பரிசுத்தர். அவரை பின்பற்றும் ஜனங்கள் பரிசுத்தம் காக்க வேண்டும். மோவாப் மண்ணில் தங்கி இருந்த நாட்களில் மோவாபிய பெண்களுடன் பின்வாங்கி போனார்கள். கானான் சென்ற பின்னரும் அவ்விதம் நடந்து விட்டால் கானான் புல் உள்ள இடமாக தெரிவது இல்லை. முள்ளும் குறுக்கும் உள்ள இடமாக மாறி போகும் என்று கர்த்தர் முன்னதாக எச்சரிக்கின்றார். கர்த்தரை நடுவாக வைத்ததாக அவர்களுடைய ஆராதனை முறைகள் இருக்க வேண்டும் என்பது கர்த்தரால் விளக்கப்படுகின்றது.

50 முதல் 53 வசனங்களில் இந்த குறிப்புகள் காணப்படுகின்றன. பத்து கற்பனைகளில் முதலாவது கற்பனை முக்கியமானது என்று கர்த்தர் கூறுகின்றார். கர்த்தர் ஒருவரே ஆராதிக்கப்பட வேண்டியவர் என்பதை தெளிவாக எடுத்து கூறுகின்றார். அதை அலட்சியம் செய்யவே வேண்டாம் என்று எச்சரிக்கின்றார். பரிசுத்தம் என்பதை பின்பற்றுவதற்கு தடையாக இருக்கும் உறவுகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும் என்று 55-வது வசனத்தில் கூறப்படுகின்றது. அதில் தவறி விட்டால் மகிழ்ச்சியான பூமி மரண பூமியாக மாறும் என்று எச்சரிக்கப்படுகின்றார்கள். ''மரணத்திற்கு ஏதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்படிதலுக்கானாலும், எதற்கு கீழ்படியும் படி உங்களை அடிமைகளாக ஒப்பு கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்படிகிற அடிமைகளாய் இருக்கிறீர்கள் என்று அறியீர்களா'' என்று ரோமர் நிருபம் 6-வது அதிகாரம் 16-வது வசனம் கூறுகின்றது.

33.6 யோர்தானை கடக்கும் முன்னதாக சுதந்தரங்களை பங்கிட ஆலோசனை

வரும் காலங்களை ஆக்குவதும், அமைப்பதும் கானானில் காண போகும் செல்வமும் சிறப்பும் அல்ல, உள்ளத்தின் உண்மையும் தூய்மையுமே என்று தெளிவு படுத்த படுகின்றது.

கானானின் சுதந்தரம் பெற்றாலும் இதோ நான் கர்த்தருக்கு அடிமை என்று வாழ்வதே சால சிறந்தது என்று கூறுகின்றார். பரிசுத்தம் பாதிக்கும் எவ்வித கூட்டுகளிலும் இணைந்து விட வேண்டாம். கர்த்தரை மட்டும் நடுவாக வைத்து வாழ்ந்து விடுங்கள் என்று கூற படுகின்றது. பரிசுத்தம் என்பதில் ஐக்கியம் வைப்பதற்கு தடையாக இருக்கும் எதிலும் ஐக்கியம் வைத்து விட வேண்டாம் என்பது தெளிவு படுத்த படுகின்றது.

பரிசுத்த பவுல் கொரிந்தியர் என்பாருக்கு எழுதிய இரண்டாவது நிரூபம் 6-வது அதிகாரம் 14,15 ஆகிய வசனங்களில் ''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்க படாது இருப்பீர்காக. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தம் ஏது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவு ஏது? அவிசுவாசியுடனே விசுவாசிக்கு பங்கு ஏது?

> *சீட்டு போட்டு, தேசத்தை உங்கள் குடும்பங்களுக்கு சுதந்தரங்களாக பங்கிட்டு, அதிக ஜனங்களுக்கு அதிக சுதந்தரமும், கொஞ்ச ஜனங்களுக்கு கொஞ்ச சுதந்தரமும் கொடுக்க கடவீர்கள். அவரவர்க்கு சீட்டு விழும் இடம் எதுவோ, அவ்விடம் அவரவர்க்கு உரியதாகும். உங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களின் படியே சுதந்திரம் பெற்று கொள்ள கடவீர்கள். நீங்கள் தேசத்தின் குடிகளை உங்களுக்கு முன்பாக துரத்தி விடாமல் இருப்பீர்களானால், அப்பொழுது அவர்களில் நீங்கள் மீதியாக வைக்கிறவர்கள் உங்கள் கண்களில் முள்ளுகளும் உங்கள் விலாக்களிலே கூர்களுமாய் இருந்து, நீங்கள் குடியிருக்கிற தேசத்திலே உங்களை உபத்திரவம் படுத்துவார்கள். அன்றியும், நான் அவர்களுக்கு செய்ய நினைத்ததை உங்களுக்கு செய்வேன் என்று சொல் என்றார். (எண். 33:50-56)*

54-வது வசனத்தில் கானான் பூமியை கோத்திரங்களுக்கு எவ்விதம் பங்கீடு செய்ய வேண்டும் என்று கூறப்படுகின்றது. சீட்டு போட்டு பங்கு இட வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். இந்த விபரம் ஏற்கெனவே 26-வது அதிகாரம் 52 வசனங்கள் முதல் 56 வசனங்கள் வரை எடுத்து கூறப்பட்டது. பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. கானானும் அதின் செழிப்பும் கர்த்தர் தந்தது. கர்த்தருக்கு கனம் கொடுத்து வாழ்ந்து விட்டால் மனம் மகிழ்ந்து வாழ்வீர்கள் என்பதே 33-வது அதிகாரத்தின் இறுதி வசனங்கள் தரும் செய்தி ஆகும். சீட்டு போட்டு பங்கிடுதல் என்பது ஊரீம் தும்மீம் என்பவைகளை பயன்படுத்தி தீர்மானித்தல் என்பது ஆகும். பழைய ஏற்பாட்டு காலங்களில் சீட்டு போட்டு கர்த்தருடைய சித்தத்தை தெரிந்து கொண்டார்கள். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் உயிர்தெழுதல் இடம் பெற்ற பின்னர், பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்த படும் விசுவாசிகளின் கூட்டம் கர்த்தருடைய வசனங்கள் மூலமாக தீர்மானங்களை எடுக்கின்றார்கள்.

அத்தியாயம் - 34

கானான் தேசத்தின் எல்லைகள் கணிக்க படுகின்றன

34.1 கானான் தேசத்தின் எல்லைகள்

கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளை இட்டு சொல்ல வேண்டியது என்னவென்றால்: கானான் தேசம் அதின் எல்லைகள் உட்பட உங்களுக்கு சுதந்தரமாக கிடைக்க போகிறது; நீங்கள் கானான் தேசத்தில் சேரும் போது, (எண். 34:1-2)

கானான் தேசத்திற்குள் இந்த பெரிய கூட்ட மக்கள் நுழையும்போது, இத்தனை நாளும் அவர்களுடன் வந்த மோசே அவர்களோடு இருக்க போவது இல்லை. ஆகவே கடைசி ஆயத்தங்களை மோசே செய்கிறான். கானானின் எல்லைகளை கர்த்தர் சொல்ல எடுத்து கூற போகின்றான். இந்த தேசத்தை நான் உங்களுக்கு சுதந்தரமாக கொடுக்க போகிறேன். நீங்கள் செய்ய வேண்டியது என்ன என்று கர்த்தர் திட்ட வட்டமாக கூறுகின்றார்.

34.2 தெற்கு எல்லை: உப்புக் கடல் - அக்ராபீம் மேடு

34-வது அதிகாரத்தில் கானானின் எல்கைகள் குறித்து காட்ட படுகின்றன. அவர்கள் எகிப்தில் தங்கி இருந்த நாட்களில் ஒரு சிறிய நிலப்பரப்பில் வாழ்ந்து வந்தார்கள். கானானின் சுதந்தரம் பெரும் நிலப்பரப்பு உடையதாக காண படுகின்றது. கானான் என்ற வாக்குத்தத்த பூமியின் நான்கு பகுதிகளும் எந்த அளவை கொண்டது என்பது 1 முதல் 15 வசனங்களில் குறித்து கூறப்படுகின்றது.



வாக்குதத்த பூமியின் தெற்கு எல்லை



கோத்திர வாரியாக பெற போகிற (சுதந்தரம்) பூமி

உங்கள் தென் புறம் சீன் வனாந்தரம் தொடங்கி ஏதோம் தேசத்தின் ஓரம் மட்டும் இருக்கும் கிழக்கே இருக்கிற உப்பு கடலின் கடைசி தொடங்கி உங்கள் தென் எல்லையாயிருக்கும். உங்கள் எல்லை தெற்கிலிருந்து அக்கராபீம் மேடுகளை சுற்றி, சீன் வனாந்தரம் வரையில் போய், தெற்கிலே காதேஸ் பர்னேயாவுக்கும், அங்கேயிருந்து ஆத்சார் அதாருக்கும், அங்கேயிருந்து அஸ்மோனாவுக்கும் போய், அஸ்மோனாவிலிருந்து எகிப்தின் நதி வரைக்கும் சுற்றி போய் கடலில் முடியும். (எண். 34:3-5)

வாக்குத்தத்த பூமியின் தெற்கு எல்கை உப்புக்கடல் துவங்கி அக்கராபீம் மேடுகள் வரை நீடிக்கும் என்று 3 முதல் 5 வசனங்கள் கூறுகின்றன. இஸ்ரவேலின் தேசமாக மாற போகும் கானான் தேசத்தின் தெற்கு எல்லை முதலில் குறிக்க படுகின்றது. இது முக்கியமாக எகிப்து தேசத்தில் இருந்து இஸ்ரவேல் தேசத்தை பிரிக்க போகும் எல்லை ஆகும்.

34.3 மேற்கு எல்லை: மத்திய தரைகடல்

மேல் திசைக்கு பெருங்கடலே உங்களுக்கு எல்லை அதுவே உங்களுக்கு மேல் புறத்து எல்லையாய் இருக்கும். (எண். 34:6)

அதன் மேற்கு எல்கை மத்திய தரைக்கடல் என்று 6-வது வசனம் கூறுகின்றது. மேல் புறம் அந்த எல்லை துவங்கி ஆமாத்துக்கு எதிராக வந்து சேரும் மட்டும் இருக்கிற பெரிய சமுத்திரமே. இஸ்ரவேல் மக்கள் கடல் என்று கூறும் 'சவக்கடல்', 'கலிலேயா கடல்' என்னும் நீர் பரப்புகள் எல்லாம் உண்மையில் பெரிய குளங்களே. கானான் தேசத்தின் மேற்கே மத்திய தரைகடல் உள்ளது. இதனையே பெருங்கடல் என்று கூறினார். இது மேல் புறம் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் 47-வது அதிகாரம் 20-வது வசனமும் கூறுகின்றது.

34.4 வடக்கு எல்லை: பெருங்கடல் - ஓர் மலை - ஆத்சார் ஏனான்

உங்களுக்கு வட திசை எல்லை பெருங்கடல் தொடங்கி, ஓர் என்னும் மலையை உங்களுக்கு குறிப்பாக வைத்து, ஓர் என்னும் மலை தொடங்கி, ஆமாத்திற்கு போகிற வழியை குறிப்பாக வைத்து, அங்கேயிருந்து அந்த எல்லை சேதாத்திற்கு போய், அங்கேயிருந்து அது சிப்ரோனுக்கு போய், ஆத்சார் ஏனானிலே முடியும் அதுவே உங்களுக்கு வட புறத்து எல்லையாய் இருக்கும். (எண். 34:7-9)

கானான் பூமியின் வடக்கு எல்கை பெருங்கடல் துவங்கி ஓர் என்னும் மலை வந்து ஆத்சார் ஏனான் மட்டும் வந்து முடியும் என்று பார்க்கிறோம். இங்கு கூறப்படும் ஓர் என்னும் மலை, வாக்குதத்த பூமியின் வடபுறமாக லீபனோனுக்கு அருகே உள்ள மலை ஆகும்.

34.5 கிழக்கு எல்லை: ஆத்சார் ஏனான் - கின்னரேத்

உங்களுக்கு கீழ் திசை எல்லைக்கு ஆத்சார் ஏனானிலிருந்து சேப்பாமை குறிப்பாக வைத்து, சேப்பாமில் இருந்து எல்லையானது ஆயினுக்கு கிழக்கிலுள்ள ரிப்லா பரியந்தமும், அங்கே இருந்து கின்னரேத் கடல் பரியந்தமும் அதன் கீழ்கரை ஓரமாய், அங்கே இருந்து யோர்தான் பரியந்தமும் போய், உப்பு கடலில் முடியும். இந்த சுற்று எல்லைகளை

உடைய தேசமே உங்களுக்கு உரிய தேசம் என்று சொல் என்றார். (எண். 34:10-12)

ஆத்சார் ஏனானில் இருந்து கின்னரேத் கடல் வரை உங்களுடைய கிழக்கு எல்கை என்று கர்த்தர் கூறுகின்றார்.



வாக்குதத்த பூமியின் எல்லைகள்

இங்கே யோர்தானுக்கு கிழக்கே சுதந்தரம் ஏற்கெனவே பெற்று கொண்ட இரண்டரை கோத்திரங்களின் இடங்களை காணலாம்.

34.6 நிலம் பங்கிட படல்

அப்பொழுது மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: ஒன்பதரை கோத்திரத்தாருக்கு கொடுக்கும் படி கர்த்தர் கட்டளை இட்டதும், நீங்கள் சீட்டு போட்டு சுதந்தரித்து கொள்ள வேண்டியதுமான தேசம் இதுவே. ரூபன் புத்திரர் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படியும், காத் புத்திரர் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படியும், தங்கள் சுதந்தரத்தை பெற்று கொண்டதும் அல்லாமல், மனாசேயின் பாதி கோத்திரத்தாரும் தங்கள் சுதந்தரத்தை பெற்று கொண்டார்கள். இந்த இரண்டரை கோத்திரத்தாரும் சூரிய உதய திசையாகிய கிழக்கே எரிகோவின் அருகேயுள்ள யோர்தானுக்கு இப்புறத்திலே தங்கள் சுதந்தரத்தை பெற்று கொண்டார்கள் என்றான். (எண். 34:13-15)

அந்த மீட்கப்பட்ட ஜனங்களுக்கு முன்பாக வாக்குத்தத்த பூமி பெரும் நிலப்பரப்பு உள்ள பூமியாக தெரிகின்றது. கானானின் எல்கை 160 மைல்கள் நீளமும் 50 மைல்கள் அகலமும் கொண்டதாக அமைந்தது. 12 கோத்திரங்களில் ரூபன் காத் கோத்திரமும் மனாசே கோத்திரத்தில் பாதி கோத்திரமும் பின் தங்கி விட்டார்கள். ஒன்பதரை கோத்திரங்களுக்கு ஓர் பெரும் நிலப்பரப்பு பங்கிடப்பட இருக்கின்றது.

மேலும் கர்த்தர் மோசேயை நோக்கி: உங்களுக்கு தேசத்தை பங்கிட்டு கொடுக்கும் மனிதரின் நாமங்களாவன: ஆசாரியனாகிய எலெயாசாரும், நூனின் குமாரனாகிய யோசுவாவுமே. அன்றியும், தேசத்தை பங்கிடும்படி ஒவ்வொரு கோத்திரத்தில் ஒவ்வொரு தலைவனையும் தெரிந்து கொள்ளுங்கள். அந்த மனிதருடைய நாமங்களாவன: யூதா கோத்திரத்துக்கு எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், சிமியோன் புத்திரரின் கோத்திரத்துக்கு அம்மியூதின் குமாரனாகிய சாமுவேலும், பென்யமீன் கோத்திரத்துக்கு கிஸ்லோனின் குமாரனாகிய எலிதாதும், தாண் புத்திரரின் கோத்திரத்துக்கு யொக்லியின் குமாரனாகிய புக்கி என்னும் பிரபுவும், யோசேப்பின் குமாரனாகிய மனாசே புத்திரரின் கோத்திரத்துக்கு எபோதின் குமாரனாகிய அன்னியேல் என்னும் பிரபுவும், எப்பிராயீம் புத்திரரின் கோத்திரத்துக்கு சிப்தானின் குமாரனாகிய கேமுவேல் என்னும் பிரபுவும், செபுலோன் புத்திரரின் கோத்திரத்துக்கு பர்னாகின் குமாரனாகிய எலிசாப்பான் என்னும பிரபுவும், இசக்கார் புத்திரரின் கோத்திரத்துக்கு ஆசானின் குமாரனாகிய பல்த்தியேல் என்னும் பிரபுவும், ஆசேர் புத்திரரின் கோத்திரத்துக்கு செலோமியின் குமாரனாகிய அகியூத் என்னும் பிரபுவும், நப்தலி புத்திரரின் கோத்திரத்துக்கு அம்மியூதின் குமாரனாகிய பெதாக்கேல் என்னும் பிரபுவுமே என்றார். கானான் தேசத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரங்களை பங்கிட்டு கொடுக்கிறதற்கு கர்த்தர் கட்டளை இட்டவர்கள் இவர்களே. (எண். 34:19-29)

12 கோத்திரங்களின் இடங்கள்

ஒன்பதரை கோத்திரங்களுக்கு நிலபரப்பு பங்கிடப்படுவதற்கு நடுவர் குழு ஒன்று அமைக்க படுகின்றது. சம நீதி வழங்க படுவதற்கு நடுவர் குழுவில் உறுப்பினர்கள் சம அளவில் தெரிந்து எடுக்க படுகின்றார்கள். ஒவ்வொரு கோத்திரத்தில் இருந்தும் ஒரு பிரதிநிதி தெரிந்து எடுக்க படுகின்றார். நடுவர் குழுவின் தலைவர்களாக ஆசாரியனாகிய எலெயாசாரும் யோசுவாவும் தெரிந்து எடுக்க படுகின்றார்கள்.

கோத்திரம் கோத்திரமாக கூறப்பட்டு அதன் பிரதிநிதி யார் என்பதும் கூற படுகின்றது. யூதா கோத்திரத்தில் துவங்க பட்டு நப்தலி கோத்திரத்தில் முடிகின்றது. ஆனால் எண்ணாகமம் 1,7 அதிகாரங்களில் நாம் பார்த்த கோத்திர தலைவர்கள் இன்று இல்லை. அவர்கள் குமாரரும் தெரிந்து எடுக்கபடவில்லை. கர்த்தரை பணியாதவர்கள் மாண்டு போனார்கள்.

தலைவர்கள்: ஆசாரியனாகிய எலெயாசார், நூனின் குமாரனாகிய யோசுவா.

கோத்திரங்களும் அதின் தலைவர்களும்

எண்	கோத்திரம்	எண்ணாகமம் 1, 7ம் அதிகாரங்களில் நியமிக்கபட்ட தலைவர்கள்	எண்ணாகமம் 34-ம் அதிகாரத்தில் நியமிக்கபட்ட தலைவர்கள்
1	யூதா	அம்மினதாபின் குமாரன் நகசோன்	எப்புன்னேயின் குமாரன் காலேப்
2	இசக்கார்	ஆவாரின் குமாரன் எந்தனெயேல்	பர்னாகின் குமாரன் எலிசாப்பான்
3	செபுலோன்	ஏலோனின் குமாரன் எலியாப்	பர்னாகின் குமாரன் எலிசாப்பான்
4	ரூபன்	சேதேயூரின் குமாரன் எலிசூர்	-
5	சிமியோன்	சூரிஷதாயின் குமாரன் செலூமியேல்	அம்மியூதின் குமாரன் சாமுவேல்
6	காத்	தேகுவேலின் குமாரன் எலியாசாப்	
7	எப்பிராயீம்	அம்மியூதின் குமாரன் எலிஷாமா	சிப்தானின் குமாரன் கேமுவேல்
8	மனாசே	சூரின் குமாரன் கமாலியேல்	எபோதின் குமாரன் அன்னியேல்
9	பென்யமீன்	கீதெயோனின் குமாரன் அபிதான்	கிஸ்லோனின் குமாரன் எலிதாத்
10	தாண்	அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர்	யொக்லியின் குமாரன் புக்கி
11	ஆசேர்	ஓகிரானின் குமாரன் பாகியேல்	செலோமியின் குமரன் அகியூத்
12	நப்தலி	ஏனானின் குமாரன் அகீரா	அம்மியூதின் குமாரன் பெதாக்கேல்

சிமியோன் கோத்திரம் கானான் பூமியின் தெற்கு கோடியை பெற்றது. நப்தலி கோத்திரம் கானான் பூமியின் வடக்கு கோடியை பெற்றது.

தெற்கில் இருந்து வடக்கு வரை எந்த வரிசையில் கானான் சீட்டு போட்டு பங்கிட பட்டதோ அதே வரிசையில் கோத்திரங்களின் பெயர்களும் முறைப்படி கூற படுகின்றது. யூதா கோத்திரத்தின் பிரதிநிதியாக காலேப் தெரிந்து எடுக்க பட்டார். நடுவர் குழுவின் தலைவராக யோசுவா தெரிந்து எடுக்க பட்டார். காலேப் யோசுவா என்ற இரு பெயர்களும் ஆரம்பத்தில் இருந்து நீடித்து கொண்டு வருகின்றன. கானானை சுற்றி பார்க்க கோத்திரத்திற்கு ஒருவராக பன்னிருவர் சென்றார்கள். பங்கிடும் நேரம் வந்தது. ஆனால் பன்னிருவரில் பத்து பேர் இல்லை. அதற்கு காரணம் அவர்களுடைய அவிசுவாசமே ஆகும். விசுவாசியாதவர்கள் தேவனுடைய மகிமையை காண்பது இல்லை. கானானை சென்று பார்த்து வந்த பன்னிரெண்டு நபர்களில் 10 நபர்கள் இப்பொழுது இல்லை. அவிசுவாசத்தினால் கானானில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை இழந்து போனார்கள். யோசுவாவும் காலேபும் பழைய தலைமுறையை சேர்ந்தவர்களாய் இருந்தாலும் விசுவாச வீரர்களாக வாழ்ந்ததினால் தொடர்ந்து வாழ்ந்து கொண்டே இருக்கின்றார்கள். ''நீடித்த நாட்களால் யோசுவாவும் காலேபும் கனம் பண்ண பட்டார்கள். கானானின் இரட்சிப்பை கண்டு அடைந்தார்கள். விசுவாசத்தினால் நீதிமான்கள் பிழைக்கின்றார்கள். எபிரெயர் நிரூபம் 11-வது அதிகாரம் 1,2 ஆகிய வசனங்கள், ''விசுவாசமானது நம்பப்படுகிறவர்களின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாய் இருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்,'' என்று கூறுகின்றது.

யூதா கோத்திரத்தின் பிரதிநிதியாக காலேப் நின்றான். எலெயாசார் ஆரோனின் இடத்தில் நின்றான். யோசுவா மோசேயின் இடத்தை பெற்றான். தூய்மை உண்மை காத்து நடப்பவர்கள் உயர்வுகளை தேடி ஓட வேண்டியது இல்லை. உயர்வுகள் அவர்களை தேடி ஓடி வருகின்றன. இறுதி வரை எலெயாசாரும், யோசுவாவும், காலேபும் கொடுக்கப்பட்ட பொறுப்புகளில் மிகவும் உண்மையாக இருந்தார்கள். பெற்ற அதிகாரங்களை அவர்கள் துர்ப்பிரயோகம் செய்யவில்லை. பெற்ற பொறுப்புகளை கர்த்தரின் கட்டளையின்படியே நிறை வேற்றினார்கள்.

ரூபன் காத் கோத்திரமும் மனாசே கோத்திரத்தில் பாதி கோத்திரமும் பங்கீட்டில் இடம் பெறவில்லை. காரணம் அவர்கள் யோர்தானை தாண்டவில்லை. யோர்தானை வெற்றியுடன் கடந்து செல்லாதவர்கள் கானானின் மகிமையை காண்பதும் இல்லை. யோர்தான் நதியை தாண்டும்படி எங்களை வற்புறுத்த வேண்டாம் என்று அவர்கள் மோசேயை கேட்டு கொண்டார்கள். கர்த்தர் காட்டும் மகிமையில் பங்கு அடைவதற்கு மனிதர்கள் அழைக்க படுகின்றார்கள். ஆனால் வற்புறுத்த படுவது இல்லை. அவரவர் தீர்மானம் என்பதே மோசேயின் முடிவு. ரூபன், காத் கோத்திரங்களும் மனாசே பாதி கோத்திரமும் பின்வாங்கி போய்விட்டது. யோர்தானை தாண்டவில்லை. ரூபன், காத், மனாசேயின் பாதி கோத்திரம் பாதி வழியில் நின்று விட்டார்கள். கடைசி வரை கர்த்தரை பின்பற்றவில்லை. ''நீ மரண பரியந்தம் உண்மையாய் இரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்கு தருவேன்,'' என்று வெளிப்படுத்தின விசேஷம் 2-ம் அதிகாரம் 10-வது வசனத்தின் பின் பகுதி கூறுகின்றது. 1 கொரிந்தியர் 9-வது அதிகாரம் 24,25 ஆகிய வசனங்கள், ''பந்தய சாலையில் ஓடுகிறவர்கள் எல்லாரும் ஓடுவார்கள். ஆகிலும் ஒருவனே பந்தயத்தை பெறுவான் என்று அறியீர்களா? நீங்கள் பெற்று கொள்ள தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்கு போராடுகிற யாவரும்

எல்லாவற்றிலேயும் இச்சை அடக்கமாய் இருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தை பெறும் படிக்கு அப்படி செய்கிறார்கள். நாமோ அழிவு இல்லாத கிரீடத்தை பெறும் படிக்கு அப்படி செய்கிறோம்'' என்று கூறுகின்றது. ஒன்பதரை கோத்திரங்களே கானான் கண்டார்கள். கர்த்தரை முற்றிலுமாக பின்பற்றியவர்கள் முடிவு பரியந்தம் நின்றார்கள். நிறைவும், செழிப்பும் உள்ள பூமி, கர்த்தர் ஒருவரை மட்டுமே நடுவாக கொண்ட பூமி. கர்த்தர் நடுவாக இருக்கும் வரை அவர்கள் குடும்பங்களுக்கு குறைவு என்பது வந்ததே இல்லை.

முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள். முடிவு பரியந்தம் நிலைத்து இருப்பவனே இரட்சிக்கப்படுவான்.

அத்தியாயம் - 35

லேவி கோத்திரத்தினருக்கு சுதந்தரம்

35.1 லேவியர்களின் குடியிருப்புக்கு பட்டணங்கள்

எரிகோவின் அருகே யோர்தானை சேர்ந்த மோவாபின் சமனான வெளிகளிலே கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணியாட்சியாகிய சுதந்தரத்திலே லேவியருக்கு குடி இருக்கும்படி பட்டணங்களை கொடுக்க வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளையிடு. அந்தப் பட்டணங்களை சூழ்ந்திருக்கிற வெளி நிலங்களையும் லேவியருக்கு கொடுக்க வேண்டும். அந்த பட்டணங்கள் அவர்கள் குடி இருப்பதற்கும், அவைகளை சூழ்ந்த வெளி நிலங்கள் அவர்களுடைய ஆடு மாடுகளுக்கும், அவர்களுடைய ஆஸ்திகளுக்கும், அவர்களுடைய சகல மிருக ஜீவன்களுக்கும் குறிக்க படவேண்டும். நீங்கள் லேவியருக்கு கொடுக்கும் பட்டணங்களை சூழ்ந்த வெளி நிலங்கள் பட்டணத்தின் மதில் தொடங்கி, வெளியிலே சுற்றிலும் ஆயிரம் முழம் தூரத்துக்கு எட்டவேண்டும். பட்டணம் மத்தியில் இருக்க, பட்டணத்தின் வெளிப்புறம் தொடங்கி, கிழக்கே இரணடாயிரம் முழமும், தெற்கே இரண்டாயிரம் முழமும், வடக்கே இரண்டாயிரம் முழமும் அளந்துவிடக்கடவீர்கள்; இது அவர்கள் பட்டணங்களுக்கு வெளி நிலங்களாய் இருப்பதாக. (எண். 35:1-5)

லேவியருக்கு தேசத்தில் ஒரு நிலபரப்பு சுதந்தரமாக கொடுக்க படவில்லை. ஆகவே அவர்கள் கானான் தேசம் முழுவதும் சிதறி இருப்பார்கள். அங்கே அவர்களுக்கு குடி இருக்க பட்டணங்கள் கொடுக்க பட்டன. பட்டணங்களை சுற்றிலும் சதுரமாக அல்லது வட்டமாக



லேவியரின் பட்டணத்தின் இருவிதமான தரைப்படம்

வெளிநிலமும் அவர்களுக்காக ஒதுக்க பட்டது. அதை சுற்றி 1000 முழம் நீளமாக நிலம் அளக்க பட்டு, நான்கு புறங்களும் 2000 முழம் கொண்ட சதுரமான நிலம் 1000 முழம் விட்டம் கொண்ட நிலம் பட்டணத்தை சுற்றி கொடுக்க பட்டது. அவற்றில் அவர்களது ஆடு, மாடுகள், தோட்டங்கள் யாவும் வைத்து கொள்ளலாம்.

> *நீங்கள் லேவியருக்கு கொடுக்கும் பட்டணங்களில் அடைக்கலத்துக்காக ஆறு பட்டணங்கள் இருக்க வேண்டும்; கொலை செய்தவன் அங்கே தப்பி ஓடி போகிறதற்கு அவைகளை குறிக்க கடவீர்கள்; அவைகளை அல்லாமல் நாற்பத்து இரண்டு பட்டணங்களை அவர்களுக்கு கொடுக்க வேண்டும். நீங்கள் லேவியருக்கு கொடுக்க வேண்டிய பட்டணங்கள் எல்லாம் நாற்பத்து எட்டு பட்டணங்களும், அவைகளை சூழ்ந்த வெளி நிலங்களுமே. நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் சுதந்தரத்திலிருந்து அந்த பட்டணங்களை பிரித்து கொடுக்கும் போது, அதிகமுள்ளவர்கள் இடத்தில் இருந்து அதிகமும், கொஞ்சம் உள்ளவர்களிடத்தில் இருந்து கொஞ்சமும் பிரித்து கொடுக்க வேண்டும். அவரவர் சுதந்தரித்து கொண்ட சுதந்தரத்தின்படியே தங்கள் பட்டணங்களில் லேவியருக்கு கொடுக்க கடவீர்கள் என்றார். (எண்.35:1-8)*

லேவியருக்கு காணியாட்சி கிடையாது என்று ஏற்கெனவே கர்த்தர் கூறிவிட்டார். ஆனால் அவர்கள் தங்குவதற்கு 12 கோத்திரங்களின் காணியாட்சியில் இருந்தும் ஒவ்வொன்றின் தகுதிக்கு ஏற்றவாறு 48 பட்டணங்களை லேவியர் வாழ கொடுக்க வேண்டும் என்று கட்டளை இடுகின்றார். லேவியர்கள் மக்களின் சரீர, ஆன்மீக நல்வாழ்விற்கு பொறுப்பானவர்களானதால் அந்த பட்டண்ங்களில் 6 பட்டணங்கள் அடைக்கல பட்டணங்களாக வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார்.

கோத்திரங்கள் ஒவ்வொன்றும் கானான் என்ற பூமிக்கு செல்லும் பொழுது எந்த இடத்தில் தங்க வேண்டும் என்பதை குறித்து 34 -வது அதிகாரம் கூறியது. எண்ணாகம புத்தகம் 35-வது அதிகாரம் 1 முதல் 8 வசனங்களில் கானான் சேரும்பொழுது லேவியர்கள் எந்த இடத்தில் தங்க வேண்டும் என்று கூற படுகின்றது. மற்ற கோத்திரங்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்யும் பொழுது அவர்களுடைய மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

லேவி கோத்திரம் தங்குவதற்கு ஒதுக்கப்படும் இடத்தின் அளவு அவர்களின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில் அல்ல. அவர்கள் கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தின் அடிப்படையில் லேவியர்கள் தங்கும் இடங்கள் குறிக்க படுகின்றன. ஆரோன் குடும்பத்திற்கு ஆசாரிய ஊழியம் கொடுக்க பட்டது. லேவி குடும்பத்தில் பிறந்த கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்களுக்கு ஆசாரியர்களுக்கு உதவி செய்யும் ஊழியம் கொடுக்கப்பட்டது. மல்கியா தீர்க்கதரிசியின் புத்தகம் 2-வது அதிகாரம் 7-வது வசனத்தில் ''ஆசாரியனுடைய உதடுகள் அறிவை காக்க வேண்டும். வேதத்தை அவன் வாயில் தேடுவார்களே. அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்'' என்று காண்கிறோம். ஆசாரியருக்கு உதவியாளர்களாக இருக்கும்படி அழைக்கப்பட்ட லேவியர்கள் ஜனங்களுக்கு வேதத்தை போதிக்க வேண்டும். பரிசுத்தம், அன்பு, உண்மை காத்து வாழ்வதற்கு ஜனங்களுக்கு லேவியர்கள் உதவி செய்ய வேண்டும். ஆசரிப்பு கூடாரம் சம்பந்தப்பட்ட வேலைகளை லேவியர்கள் நிறைவேற்ற

வேண்டும். அதன் பணி மூட்டுகளை அவர்கள் பாதுகாக்க வேண்டும். லேவியர்களுக்கு இரண்டு பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. ஆசரிப்பு கூடாரத்திலும் பொறுப்புகள் உண்டு. சபை மக்கள் நடுவிலும் பொறுப்புகள் உண்டு. கர்த்தர் பரிசுத்தர். ஆகையால் அவரை தொழுது கொள்ளுகின்றவர்கள் பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும். இதனை கடை பிடிக்க உடன்படிக்கை பெட்டி நடுவாக இருந்தது. கர்த்தர் சிநேகிக்கும் பரிசுத்தம், பரிசுத்த பூமியான கானான் என்ற பூமியில் காக்கப்படவில்லை என்றால் அது கர்த்தருக்கு விரோதமான துரோகம் என்பது ஆகும். நன்மை செய்தவர்களுக்கு தீமை செய்வது துரோகம் என்பது ஆகும். அற்புதமான அடிமை வாழ்வை அகற்றி, செங்கடலை பிளந்து, மன்னாவை பொழிந்து, அக்கினி மேக ஸ்தம்பங்கள் அருளி செய்து, யோர்தான் கடந்து கானான் காண்பதற்கு வாய்ப்பு அளிக்கும் கர்த்தர் பரிசுத்தம் உள்ளவர். அவர் எதிர் பார்க்கும் ஒன்றே ஒன்று பரிசுத்தம் என்பதே ஆகும். கர்த்தர் அவர்களுக்கு செய்த நன்மைகள் மிகவும் ஏராளம். பரிசுத்தமான பாதையில் ஜனங்கள் நடந்து செல்லும் வரை கர்த்தர் மகிழ்ச்சி அடைவார். ஜனங்களும் ஆசீர்வதிக்க பட்டவர்களாக இருப்பார்கள். கர்த்தர் ஆசீர்வதிக்கிறவராகவும் ஜனங்கள் ஆசீர்வதிக்க பட்டவர்களாகவும் இருப்பதற்கு தூய்மையும் உண்மையும் காக்கப்பட வேண்டும். அந்த பொறுப்பு லேவியர்களுக்கு கொடுக்க பட்டது. அது லேவியருடன் கர்த்தர் செய்த உடன்படிக்கை என்று மீகா தீர்க்கதரிசியின் புத்தகம் 2-வது அதிகாரம் 8-வது வசனத்தின் பின் பகுதி கூறுகின்றது. முழு மனதுடன் லேவியர்கள் கர்த்தருடைய ஊழியத்தை ஜனங்கள் நடுவில் நிறைவேற்ற வேண்டும்.

25 வயதில் லேவியர்களின் பணி துவங்கியது. 50 வயதில் முடிந்தது. 25 வருடங்கள் கடினமாக அவர்கள் உழைக்க வேண்டும். ஆத்தும பெலன், சரீர பெலன், மன பலன் அனைத்தும் கொண்டு லேவியர்கள் பிரயாசப்பட வேண்டும். இந்த விபரம் எண்ணாகம புத்தகம் 8-வது அதிகாரம் 24,25 ஆகிய வசனங்களில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டு உள்ளது. லேவியர்களின் பணி மிகவும் முக்கியமான பணி. அவர்கள் பெற்ற பணியை நிறைவேற்றுவதற்கு ஏற்ற வசதிகள் எண்ணாகம புத்தகம் 35-வது அதிகாரம் 1 முதல் 8 வசனங்களில் கொடுக்கப்படுகின்றது.

மற்ற கோத்திரங்களுக்கு கானான் பூமி பங்கிட்டு கொடுக்கப்பட்டது. அந்த பங்கீட்டில் லேவி கோத்திரம் சேர்க்கப்படவில்லை. லேவியர்களின் பங்கு கர்த்தர் ஒருவரே ஆகும். உபாகம புத்தகம் 10-வது அதிகாரம் 8,9 ஆகிய வசனங்களை பாருங்கள் ''அக்காலத்திலே கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியை சுமப்பதற்கும் இந்நாள் வரைக்கும் நடந்து வருகிறது போல கர்த்தருடைய சந்நிதியிலே நின்று அவருக்கு ஆராதனை செய்வதற்கும் அவர் நாமத்தை கொண்டு ஆசீர்வதிப்பதற்கும் கர்த்தர் லேவியின் கோத்திரத்தை பிரித்து எடுத்தார். ஆகையால் லேவிக்கு அவன் சகோதரரோடே பங்கும் சுதந்தரமும் இல்லை. உன் தேவனாகிய கர்த்தர் அவனுக்கு சொன்னபடி கர்த்தரே அவனுக்கு சுதந்தரம்.'' தொடர்ந்து எண்ணாகம புத்தகம் 18-வது அதிகாரம் 20-வது வசனத்தில் ''பின்னும் கர்த்தர் ஆரோனை நோக்கி அவர்களுடைய தேசத்தில் நீ ஒன்றையும் சுதந்தரித்து கொள்ள வேண்டாம். அவர்கள் நடுவே உனக்கு பங்கு உண்டாயிருக்கவும் வேண்டாம். இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும் உன் சுதந்திரமுமாய் இருக்கிறேன்,'' என்று பார்க்கிறோம்.

லேவியர் உண்ண உணவும், உடுக்க வஸ்திரமும் பெற்று கொள்ளுவதற்கு சபை மக்கள் தங்களுக்கு கர்த்தர் கொடுத்த அனைத்து வரவுகளில் இருந்தும் தசமபாகம் செலுத்தினார்கள். இதோ லேவியின் புத்திரர் ஆசரிப்பு கூடாரத்தின் பணிவிடையை செய்கிற அவர்களுடைய

வேலைக்காக, இஸ்ரவேலருக்கு உள்ளவை எல்லாவற்றிலும் தசம பாகத்தை அவர்களுக்கு சுதந்தரமாக கொடுத்தேன் என்று எண்ணாகம புத்தகம் 18-வது அதிகாரம் 21-வது வசனம் கூறுகின்றது. உண்ண உணவும் உடுக்க வஸ்திரமும் மட்டும் அல்ல, தங்குதற்கு இடமும் கொடுக்கப்படுவதை 35-வது அதிகாரம் 1 முதல் 8 வசனங்கள் எடுத்து உரைக்கின்றன. நீங்கள் லேவியருக்கு கொடுக்க வேண்டிய பட்டணங்கள் எல்லாம் 48 பட்டணங்களும் அவைகளை சூழ்ந்த வெளிநிலங்களுமே என்று 7-வது வசனம் கூறுகின்றது. அந்த 48 பட்டணங்களும் ஜனங்கள் பெற்று கொண்ட நிலங்களில் இருந்து எடுத்து கொடுக்க பட்டது. நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் சுதந்தரத்தில் இருந்த அந்த பட்டணங்களை பிரித்து கொடுங்கள் என்று 8-வது வசனம் துவங்குகின்றது. வருமானத்தில் இருந்து தசமபாகமும், பெற்ற நிலத்தில் இருந்து தங்குவதற்கு இடமும் ஜனங்கள் லேவியரின் குடி இருப்பிற்காக கொடுத்தார்கள். யூதா சிமியோன் பென்யமின் கோத்திரத்தார் தாங்கள் பெற்ற பூமியில் இருந்து 13 பட்டணங்களை கொடுத்தார்கள். அந்த பட்டணங்களில் ஆசாரியர்கள் அதாவது ஆரோனின் சந்ததியினர் குடியேறினார்கள். லேவியின் வம்சத்தில் வந்த கெர்சோன் கோகாத் மெராரி என்ற மூன்று குடும்பத்து மக்களும் வசிப்பதற்கு மற்ற கோத்திரங்கள் உற்ற உதவிகளை செய்தார்கள். யோர்தானுக்கு கிழக்காக தங்கிவிட்ட ரூபன், காத், கோத்திரமும், கானானில் பிரவேசித்த செபுலோன் கோத்திரத்தாரும் மெராரி குடும்பத்தார் தங்குவதற்கு தங்கள் தங்கள் நிலங்களில் இருந்து பன்னிரெண்டு பட்டணங்களை கொடுத்தார்கள். கோகாத் புத்திரரின் குடும்பங்கள் வாழ்வதற்கு எப்பிராயீம் தாண் கோத்திரங்களும் கானானில் பிரவேசித்த மனாசேயின் கோத்திரத்தில் பாதி கோத்திரத்தாரும் 10 பட்டணங்களை பரிசாக கொடுத்தார்கள். கெர்சோனியரின் குடும்பம் வாழ்வதற்கு இசக்கார், ஆசேர், நப்தலி கோத்திரத்தாரும் யோர்தானுக்கு கிழக்காக தங்கிவிட்ட மனாசேயின் பிள்ளைகளும் 13 பட்டணங்களை வழங்கினார்கள்.

ஆசாரியர்கள் பெற்று கொண்டது 13 பட்டணங்கள். மெராரி குடும்பம் பெற்று கொண்டது 12 பட்டணங்கள். கோகாத் புத்திரர் பெற்று கொண்டது 10 பட்டணங்கள். கெர்சோன் குடும்பத்திற்கு 13 பட்டணங்கள். மொத்தம் 48 பட்டணங்கள் அவர்கள் ஊழியத்திற்கு என்று கொடுக்கப்பட்டன. அத்துடன் பட்டணங்களை சுற்றி 1000 முழம் அளந்து வெளி நிலங்களும் கொடுக்கப்பட்டது. சுமார் 207 ஏக்கர் நிலப்பரப்பு லேவியர்களின் குடியிருப்பு வகைக்கு என்று மற்ற கோத்திரங்களினால் பரிசாக கொடுக்கப்பட்டது. ஜனங்களின் நடுவில் லேவியர்கள் தங்கினார்கள். ஜனங்கள் ஊழியர்களை தேடி வருவதற்கும், லேவியர்கள் ஜனங்களை எளிதாக தேடி செல்லுவதற்கும் ஏதுவாக ஜனங்களின் நடுவில் லேவியர்கள் தங்கினார்கள்.

தேவைகள் உடனுக்கு உடன் சந்திக்கப்படுவதற்கு தேவையான இடங்கள் லேவியர்கள் தங்கும் இடமாக மாறியது. தாங்கள் பெற்ற தசமபாகத்தில் லேவியர்கள் ஆசாரியர்களுக்கு தசமபாகம் செலுத்தினார்கள் என்று எண்ணாகம புத்தகம் 18-வது அதிகாரம் 28-வது வசனத்தில் கூறப்பட்டது. வரவை ஆசாரியர்களின் தேவைகளை சந்திக்க லேவியர்கள் பகிர்ந்து கொண்டார்கள். அது போன்று தாங்கள் பெற்ற பட்டணங்களை பாவம் செய்த மனிதர்களின் தேவையை சந்திப்பதற்கு லேவியர்கள் பகிர்ந்து கொண்டார்கள். தேவ கோபத்திற்கு ஏதுவான பாவம் செய்தவர்களை நியாயம் விசாரிக்கும் நாள் வரைக்கும் தங்க வைப்பதற்காக தாங்கள் பெற்ற பட்டணங்களை பகிர்ந்து கொண்டார்கள்.

லேவியர்கள் பெற்ற பட்டணங்கள் மொத்தம் 48. அதில் 6 பட்டணங்களை கொலை செய்தவர்கள் நியாயம் விசாரிக்கப்படும் வரை தங்கி தாபரிக்க லேவியர்கள் கொடுத்து விட்டார்கள். அந்த 6 பட்டணங்களுக்கும் அடைக்கல பட்டணங்கள் என்று பெயரும் சூட்டினார்கள். இதயத்தில் வஞ்சகம் அல்லது வர்மம் வைத்து கொலை செய்வது திட்டம் இட்டு செய்யப்படும் கொலை என்பது ஆகும். ஆனால் கை பிசகாய் இடம் பெற்ற கொலையில் சம்பந்தப்பட்டவன் ஆறு அடைக்கல பட்டணங்களில் ஒரு பட்டணத்திற்குள் ஓடி சென்று பட்டணத்து தலைவர்களிடம் தான் செய்த குற்றத்தை கூற வேண்டும். பட்டணத்து தலைவர்கள் நியாயம் விசாரிக்கப்படும் நாள் வரும் வரைக்கும் அவன் தங்குவதற்கு அடைக்கல பட்டணத்தில் இடம் கொடுக்க வேண்டும். லேவியர்கள் பெற்று கொண்ட 48 பட்டணங்களில் 6 பட்டணங்கள் அடைக்கல பட்டணங்களாக, தெரியாமல் கொலை செய்துவிட்ட குற்றவாளிகளை ஆதரிக்க அர்ப்பணிக்க பட்டன. இந்த பட்டணங்களில் லேவியர்கள் குடியேறினார்கள்.

அவைகளை அல்லாமல் 42 பட்டணங்களை அவர்களுக்கு கொடுக்க வேண்டும். லேவியர்களின் பணி மகத்துவமான பணி ஆகும். பாவம் என்பது கானான் என்ற பூமியில் பிரவேசித்து விடாதபடிக்கு வேலி அடைக்க வேண்டும். வாழும் பூமி வளம் மிக்க பூமியாக இருப்பதற்கு கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் ஜனங்கள் தொழுது கொள்ள வேண்டும். ஓய்வு நாளை மிகவும் பரிசுத்தமாக ஜனங்கள் ஆசரிக்க வேண்டும். பெற்ற தகப்பனையும் பெற்ற தாயையும் பிள்ளைகள் தூஷிக்க கூடாது. அன்பு செலுத்தி ஆதரிக்க வேண்டும். கொலை குற்றம் இடம் பெறலாகாது. விபசாரம், வேசித்தனம், களவு, கொள்ளை, தீ வைத்தல் போன்ற தீய செயல்கள் இடம் பெறவே முடியாது. பொய் சாட்சிகள் இருக்க முடியாது. மற்றவர்களின் உடமைகளை வஞ்சித்தும் வற்புறுத்தியும் எடுத்து கொள்ளவும் முடியாது. அவைகள் அனைத்தும் பாவம் என்பது ஆகும்.

பாவம் மனிதர்களை வாழ விடுவது இல்லை. எனவே பாவம் பிரவேசியாமல் லேவியர்கள் தடுத்து நிறுத்த வேண்டும். வேலி போன்று தடுத்து நிறுத்த வேண்டும். ஜனங்கள் நடுவில் லேவியர்கள் தங்க வேண்டும். உடன் படிக்கையை காத்து கொள்ள வேண்டும். மல்கியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் 2-வது அதிகாரம் 4-வது வசனம், ''லேவியோடே பண்ணின என் உடன்படிக்கை நிலைத்திருக்கும் படிக்கு இந்த கட்டளையை உங்கள் இடத்திற்கு அனுப்பினேன் என்கிறதை அப்பொழுது அறிந்து கொள்வீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்'' என்று கூறுகிறது.

லேவியர்கள் அனைவரும் கர்த்தருடைய ஊழியத்தை கவனத்துடன் செய்வதற்கு தசமபாகங்களும் தங்குவதற்கு பட்டணங்களும் கொடுக்கப்பட்டன. பரிசுத்த சபை பரிசுத்தத்திற்கு மேல் பரிசுத்தம் அடைவதற்கு அனைத்து வசதிகளும் லேவியர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டது. கர்த்தர் தமது ஊழியக்காரர்களின் சரீர பிரகாரமான தேவைகளை சந்திப்பதற்கு காரணம் ஜனங்களின் ஆத்தும தேவைகளை முற்றிலுமாக சந்திப்பதற்காகவே ஆகும். பிழைப்பிற்கு அடுத்த அலுவல்களின் முழு நேர ஊழியர்களாக அழைக்கப்பட்ட லேவியர்கள் சிக்கி விடாதபடிக்கு அனைத்து வழி முறைகளும் கர்த்தரால் அவர்களுக்கு வகுக்கப்பட்டது.

கானான் என்ற வளமும் வாய்ப்பும் உள்ள பூமியில் அவர்கள் பிரவேசிப்பதற்கு முன்னதாக ஜனங்கள் எச்சரிக்க பட்டது போன்று ஆசாரியர்களும், லேவியர்களும் எச்சரிக்க

படுகின்றார்கள். ஜனங்களுக்கு குடி இருப்பு வசதிகள் செய்து கொடுக்க பட்டது போன்று ஊழியக் காரர்களுக்கும் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்க படுகின்றது. தாம் தெரிந்து கொண்ட ஜனங்கள் தம்மை அறியும் அறிவில் வளர்ந்து வாழ்வதற்கு கர்த்தர் லேவியர்களை தெரிந்து கொண்டார். புதிய பூமியும் புதிய ஆசீர்வாதமும் புதிய சந்தானங்களும் பெற்று வாழ்வதற்கு ஜனங்களை தெரிந்து கொண்டார். ஜனங்களுக்கு சேவை செய்வதற்கு ஊழியர்களை தெரிந்து கொண்டார். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 66-வது அதிகாரம் 21,22 ஆகிய வசனங்களை பார்ப்போம். ''அவர்களிலும் சிலரை ஆசாரியராகவும், லேவியராகவும் தெரிந்து கொள்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பது போல உங்கள் சந்ததியும் உங்கள் நாமமும் நிற்கும் என்று கர்த்தர் சொல்லுகின்றார்.''

35.2 தெரியாமல் கொலை செய்தவருக்கு அடைக்கல பட்டணங்கள்

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: நீங்கள் யோர்தானை கடந்து, கானான் தேசத்தில் பிரவேசிக்கும் போது, கைப்பிசகாய் ஒருவனை கொன்று போட்டவன் ஓடி போய் இருக்க தக்க அடைக்கல பட்டணங்களாக சில பட்டணங்களை குறிக்க கடவீர்கள். கொலை செய்தவன் நியாய சபையிலே நியாயம் விசாரிக்க படும் முன் சாகாமல், பழி வாங்குகிறவன் கைக்கு தப்பி போயிருக்கும்படி, அவைகள் உங்களுக்கு அடைக்கல பட்டணங்களாய் இருக்க கடவது. (எண். 35:9-12)



அடைக்கல பட்டணத்தில்
தஞ்சம் புகும் கொலைகாரன்

கொலை என்ற குற்றம் செய்தவர்கள் மகா பெரிய பாதகம் செய்தவர்கள் என்று இந்த வசனங்கள் தெரிவிக்கின்றன. பத்து கற்பனைகளில் ஆறாவது கற்பனை கொலை செய்யாது இருப்பாயாக என்பது ஆகும். திட்டமிட்டு செய்யப்படும் கொலைகள், பொங்கி வரும் கோபத்தின் முடிவாக இடம் பெறும் கொலைகள் அனைத்தையும் அந்த கற்பனை தடை செய்கின்றது.

35-வது அதிகாரத்தில் கை பிசகாய் இடம் பெற்ற கொலை ஒன்று கூற படுகின்றது. கை பிசகாய் பிறிதொருவனை கொன்று விட்டவன் நியாயப்பிரமாணத்தின்படி உடனடியாக கொலை செய்யப்பட வேண்டாம் என்று அறிவிப்பு கொடுக்க படுகின்றது. அவன் நியாயம் விசாரிக்கப்பட வேண்டும் என்றும், நியாயம் விசாரிக்கப்படும் நாள் வரைக்கும் அவன் அருகில் இருக்கும் அடைக்கல பட்டணங்களில் ஒரு பட்டணத்திற்குள் ஓடி தஞ்சம் புகுந்து கொள்ள வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.



6 அடைக்கலப் பட்டணங்கள்

கைபிசகாய் ஒருவனை கொன்று போட்டவன் ஓடி போய் இருக்க தக்க அடைக்கல பட்டணங்களாக சில பட்டணங்களை குறிக்கடவீர்கள் என்று அந்த வசனம் கூறுகின்றது. ஆறு பட்டணங்கள் அடைக்கல பட்டணங்களாக ஒதுக்கப்பட்டன. அதில் மூன்று பட்டணங்கள் யோர்தான் நதிக்கு கிழக்காக அமைந்தன. அவைகள் பேசேர், ராமோத், கோலான் என்பவைகள் ஆகும். மூன்று பட்டணங்கள் யோர்தானுக்கு மேற்கு பகுதியில் அமைந்தன. அவைகள் கேதேஸ், சீகேம், எபிரோன் என்ற பட்டணங்கள் ஆகும். யோசுவாவின் புத்தகம் 20-வது அதிகாரம் 7 முதல் 9 வசனங்களில் ''அப்படியே அவர்கள் நப்தலியின் மலை தேசமான கலிலேயாவில் உள்ள கேதேசையும், எப்பிராயீமின் மலை தேசத்தில் உள்ள சீகேமையும் யூதாவின் மலை தேசத்தில் உள்ள எபிரோனாகிய கீரியாத் அர்பாவையும் ஏற்படுத்தினார்கள். எரிகோவில் இருக்கும் யோர்தானுக்கு அக்கரையான கிழக்கிலே ரூபன் கோத்திரத்திற்கு இருக்கும் சம பூமியின் வனாந்தரத்தில் உள்ள பேசேரையும், காத் கோத்திரத்திற்கு இருக்கும் கிலேயாத்தில் உள்ள ராமோத்தையும், மனாசே கோத்திரத்திற்கு இருக்கும் பாசானில் உள்ள கோலானையும் குறித்து வைத்தார்கள். கை பிசகாய் ஒருவனை கொன்றவன் எவனோ அவன் சபைக்கு முன்பாக நிற்கும் வரைக்கும் பழி வாங்குகிறவன் கையால் சாகாதபடிக்கு ஓடி போய் ஒதுங்கும்படி இஸ்ரவேல் புத்திரர் யாவருக்கும் அவர்கள் நடுவே தங்குகிற பரதேசிக்கும் குறிக்கப்பட்ட பட்டணங்கள் இவைகளே'' என்று பார்க்கிறோம்.

கொலை என்பது கொடிய குற்றம் ஆனதால் பழி என்பது தாமதிக்கவே கூடாது என்று யாத்திராகம புத்தகம் 21-வது அதிகாரம் 24,25 ஆகிய வசனங்கள் தெரிவித்தன.

கண்ணுக்கு கண், பல்லுக்கு பல், கைக்கு கை. காலுக்கு கால், சூட்டுக்கு சூடு, காயத்திற்கு காயம், தழும்புக்கு தழும்பு பழி கொடுக்க வேண்டும் என்று அந்த வசனங்கள்

எச்சரித்தன. எனவே கொலை என்பது இடம் பெற்றவுடனே பழி வாங்குகின்றவர் துடித்து எழும்புகின்றார். கொலை செய்தவன் எங்கு இருந்தாலும் பழி வாங்குகின்றவர் கண்களுக்கு அவன் மறைவாக செல்லவும் முடியாது, அவர்கள் கைகளிலிருந்து அவன் தப்பவும் முடியாது.

தெரிந்து செய்யப்பட்ட கொலை, தெரியாமல் செய்யப்பட்ட கொலை என்று பழி வாங்குகிறவர் பார்ப்பது இல்லை. துடித்து எழும்புகின்றார். கை பிசகாய் செய்து விட்டவன் பழி வாங்குகிறவர் கைக்கு தப்பி பிழைக்கவும், நியாயாதிபதிகள் முன் நிறுத்தப்படும் வரை உயிரோடு இருக்கவும் அடைக்கல பட்டணம் நோக்கி ஓடி விட வேண்டும். 35-வது அதிகாரத்தில் 12-வது வசனத்திலும் மற்றும் வசனங்களிலும் பழி வாங்குகிறவன் என்று வரும் வார்த்தையின் சரியான பொருள் சங்கார தூதன் என்பதே ஆகும். மனிதனை கொலை செய்கிறவனை பழி வாங்குவது மனிதனின் பொறுப்பு அல்ல. கர்த்தரே பொறுப்பு எடுக்கின்றார். கர்த்தர் பழி வாங்குகின்றார். உயிரை கொடுத்தவருக்கே உயிரை எடுப்பதற்கும் உரிமை உண்டு.

பொறாமை, முன்பகை, கசப்பு, எரிச்சல், கோபம், ஆசை, இச்சை என்ற பற்பல தீய உணர்ச்சிகளினால் உந்த தள்ளப்பட்டு பரிசுத்த பூமி என்று அழைக்கப்படும் கானான் தேசத்திலும் கொலை என்பது இடம் பெற்று விட்டால் ஆசீர்வதிக்கும் கர்த்தர் பழி வாங்கும் கர்த்தராக மாறி விடுவார் என்பதே செய்தி. ஆதியாகம புத்தகம் 9-வது அதிகாரம் 5-வது வசனத்தில் ''உங்களுக்கு உயிராய் இருக்கிற உங்கள் இரத்தத்திற்காக பழி வாங்குவேன். சகல ஜீவ ஜந்துக்கள் இடத்திலும் மனுஷன் இடத்திலும் பழி வாங்குவேன். மனுஷனுடைய உயிருக்காக அவனவன் சகோதரன் இடத்தில் பழி வாங்குவேன்'' என்று கர்த்தர் கூறுவதை பார்க்கிறோம். ''பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்'' என்று பரிசுத்த மத்தேயு என்பார் எழுதிய சுவிசேஷம் 26-வது அதிகாரம் 52-வது வசனத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறினார். ''நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக'' என்று ஆதியாகம புத்தகம் முதல் அதிகாரம் 26-வது வசனத்தில் கர்த்தர் கூறினார். ''தேவனுடைய சாயலின்படி உண்டாக்க பட்ட மனுஷன்'' என்று யாக்கோபின் நிரூபம் 3-வது அதிகாரம் 9-வது வசனம் கூறுகின்றது.

தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன், தமது சாயலின்படி சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தீர்க்க ஆயுசு பெற்று, அனைத்து நன்மைகளும் பெற்று உலகத்தில் வாழ வேண்டும் என்பதே கர்த்தரின் விருப்பம். பாவம் என்பது இருதயத்தில் இருப்பிடம் பதித்து, கோபம் கொண்டு மனிதன் மனிதனை கொலை செய்யும் பொழுது ஆசீர்வதிக்கும் கர்த்தர் பழி வாங்கும் கர்த்தராக மாறுகின்றார். உபகாரம் செய்யும் கர்த்தர் சங்கார தூதனாக மாறுகின்றார்.

எண்ணாகம புத்தகம் 35-வது அதிகாரம் அந்த புத்தகத்தின் கடைசி அதிகாரத்திற்கு முந்தின அதிகாரம் ஆகும். அதில் பல முக்கிய எச்சரிப்புகள் ஜனங்களுக்கு கொடுக்க படுகின்றது. பலிகள், ஆசரிப்பு கூடாரம் என்பவைகள் அனைத்தும் அறிமுக படுத்திய ஆண்டவர் பழிக்கு பழிகள், என்றும் அதற்கு தப்பும் வழிகள் எவை என்றும் கூறுகின்றார்.

கொலை செய்யும் வரை வீரன் போல் தெரிந்தவன் கொலை செய்தவுடன் பயப்படுகின்றான். பிறன் உயிரை பயமின்றி பறித்தவன் தன் உயிரை பத்திர படுத்த பார்க்கின்றான். பயந்து ஓடுகின்றான். பழி வாங்குகின்றவன் அவனை துரத்துகின்றான். சங்கார தூதன் அவனை விரட்டுகின்றான்.

பரிசுத்த வேத புத்தகத்தில் பழி வாங்குகிறவன் என்று பழைய ஏற்பாட்டு நூலில் வரும் அந்த வார்த்தையின் எபிரெய சொல் 'கோயல்' என்பது ஆகும். 'கோயல்' என்ற எபிரெய வார்த்தையின் சரியான பொருள் 'உயிரை மீட்டு கொள்ளுகிறவன்' என்பது ஆகும். தனக்கு மிகவும் பிரியமானவர் பாதிக்கப்படும் பொழுது ஓடி வந்து உதவி செய்யும் இனத்தான் என்பது ஆகும். தம்மால் சிருஷ்டிக்க பட்ட அனைத்து உயிர்களையும் உயிர் போன்று நேசிக்கும் கர்த்தர் மனிதன் மனிதனை கொலை செய்யும் பொழுது ஓடி வருகின்றார். பழி வாங்குகின்றார். பழி வாங்குதல் மனிதனுக்கு உரியது அல்ல. கர்த்தருக்கே உரியது ஆகும். பரிசுத்த பவுல் ரோமா புரியாருக்கு எழுதின நிரூபம் 12-வது அதிகாரம் 19-வது வசனம். ''பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்கு உரியது. நானே பதில் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' என்று எழுதியிருக்கிறபடியால் நீங்கள் பழி வாங்காமல் கோபாக்கினைக்கு இடம் கொடுங்கள். எபிரெயர் நிரூபம் 10-வது அதிகாரம் 30,31 ஆகிய வசனங்களில் ''பழிவாங்குதல் எனக்கு உரியது. நானே பதில் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயம் தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னார் என்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாய் இருக்குமே'' என்று பார்க்கிறோம்.

கை பிசகாய் கொன்றவனுக்கு ஒரு தவணை கொடுக்க படுகின்றது. அவன் கை பிசகாய் கொன்றது உண்மையே என்று நிரூபிக்கப்படும் வரை சங்கார தூதன் காத்து கொண்டு இருக்க வேண்டும். திட்டம் இட்டு அல்ல, தெரியாமல் கைபிசகாய் கொன்று விட்டேன் என்று கூறுகின்றவன் ஆறு அடைக்கல பட்டணங்களில் ஒரு பட்டணத்திற்குள் பிரவேசித்துவிட வேண்டும். தஞ்சம் கேட்க வேண்டும். யோசுவாவின் புத்தகம் 20-வது அதிகாரம் 1 முதல் 4 வசனங்கள், ''கர்த்தர் யோசுவாவை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், அறியாமல் கை பிசகாய் ஒருவனை கொன்றவன் ஓடிப்போய் இருக்கும்படி நான் மோசேயை கொண்டு உங்களுக்கு கற்பித்த அடைக்கல பட்டணங்களை உங்களுக்கு ஏற்படுத்தி கொள்ளுங்கள். அவைகள் உங்களுக்கு இரத்தப்பழி வாங்குகிறவனுடைய கைக்கு தப்பி போயிருக்க தக்க அடைக்கலமாய் இருக்கும். அந்த பட்டணங்களில் ஒன்றிற்கு ஓடி வருகிறவன் பட்டணத்தின் ஒலிமுக வாசலில் நின்று கொண்டு அந்த பட்டணத்தினுடைய மூப்பர்கள் செவிகள் கேட்க தன் காரியத்தை சொல்வானாக. அப்பொழுது அவர்கள் அவனை தங்களிடத்தில் பட்டணத்திற்குள்ளே சேர்த்து கொண்டு தங்களோடே குடியிருக்க அவனுக்கு இடம் கொடுக்க கடவர்கள்'' என்று கூறுகின்றன.

பழி வாங்குகின்றவன் அவனை தொடர்ந்து அடைக்கல பட்டணம் வருவான். அப்பொழுது பழி வாங்குகிறவனிடம் கால அவகாசம் கேட்க வேண்டும். உடனடியாக சாகடிக்க வேண்டாம் நியாய விசாரணை இடம் பெறும் வரை விட்டு வையுங்கள். கைபிசகாய் செய்து விட்டான் என்று பட்டணத்தின் மூப்பர்கள் கெஞ்ச வேண்டும். யோசுவாவின் புத்தகம் 20-வது அதிகாரம் 5-வது வசனத்தில் ''பழி வாங்குகிறவன் அவனை தொடர்ந்து வந்தால் அவன் பிறனை முற்பகையின்றி அறியாமல் கொன்றதினால் அவனை இவன் கையில் ஒப்பு கொடாது இருக்க வேண்டும்'' என்று பார்க்கிறோம்.

கர்த்தர் மகா அன்பு உள்ளவர். மகா நீதியும் உள்ளவர். கர்த்தர் மகா தயவு நிறைந்தவர். மகா தீர்ப்புகளும் வழங்குகின்றவர். இரத்தத்திற்கு இரத்தபழி வாங்குகின்றவர். காரணம் இரத்தம் இரத்தத்தை கூப்பிடுகின்றது. ஆதியாகம புத்தகம் 4-வது அதிகாரம் 9,10 ஆகிய வசனங்களில் ''கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்.

அதற்கு அவன் நான் அறியேன். என் சகோதரனுக்கு நான் காவலாளியோ? என்றான். அதற்கு அவர் என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தினுடைய சத்தம் பூமியில் இருந்து என்னை நோக்கி கூப்பிடுகிறது'' என்று கூறுகின்றார்.

வெளிப்படுத்தின விஷேசம் 6-வது அதிகாரம் 9,10 ஆகிய வசனங்களில் ''அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்த போது தேவ வசனத்தின் நிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியின் நிமித்தமும் கொல்ல பட்டவர்களுடைய ஆத்துமாக்களை பலிபீடத்தின் கீழே கண்டேன். அவர்கள் பரிசுத்தமும் சத்தியமும் உள்ள ஆண்டவரே தேவரீர் பூமியின் மேல் குடி இருக்கிறவர்கள் இடத்தில் எங்கள் இரத்தத்தை குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமலும் பழி வாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டு கூப்பிட்டார்கள்'' என்று பார்க்கிறோம். 58-வது சங்கீதம் 10,11 ஆகிய வசனங்கள், ''பழி வாங்குதலை நீதிமான் காணும்போது மகிழுவான். அவன் தன் பாதங்களை துன்மார்க்கனுடைய இரத்தத்திலே கழுவுவான். அப்பொழுது மெய்யாய் நீதிமானுக்கு பலன் உண்டு என்றும், மெய்யாய் பூமியிலே நியாயம் செய்கிற தேவன் உண்டு என்றும் மனுஷன் சொல்லுவான்'' என்று கூறுகிறது. 9-வது சங்கீதம் 16-வது வசனத்தின் முன்பாகம். ''கர்த்தர் தாம் செய்த நியாயத்தினால் அறியப்படுகிறார்'' என்று கூறுகின்றன.

எண்ணாகம புத்தகம் 35-வது அதிகாரத்தில் கொலை என்பது மிகவும் கொடூரமான ஒரு குற்றம் என்றும் அதை செய்தவனின் இரத்தம் சங்கார தூதனின் பங்காக மாறும் என்றும் கூறப்படுகின்றது. கானான் என்ற பூமி கர்த்தரால் கொடுக்க படுகின்றது. அந்த பரிசுத்த பூமியில் கர்த்தர் கூறும் வழி முறைப்படி நடப்பதற்கு ஏற்ற ஆலோசனைகளும் எச்சரிப்புகளும் தரப்படுகின்றன.

நீங்கள் கொடுக்கும் பட்டணங்களில் ஆறு பட்டணங்கள் அடைக்கலத்துக்காக இருக்க வேண்டும். யோர்தானுக்கு இப்புறத்தில் மூன்று பட்டணங்களையும், கானான் தேசத்தில் மூன்று பட்டணங்களையும் கொடுக்க வேண்டும் அவைகள் அடைக்கல பட்டணங்களாம். கைப்பிசகாய் ஒருவனை கொன்றவன் எவனோ, அவன் அங்கே ஓடி போய் இருக்கும்படிக்கு, அந்த ஆறு பட்டணங்களும் இஸ்ரவேல் புத்திரருக்கும் உங்கள் நடுவே இருக்கும் பரதேசிக்கும், அந்நியனுக்கும் அடைக்கல பட்டணங்களாய் இருக்க வேண்டும். (எண்.35:13-15)

கர்த்தருடைய நியாயம் இஸ்ரவேல் மக்களுக்கும், பரதேசிக்கும், அந்நியனுக்கும் வேறுபட்டது அல்ல, நியாயம் யாவருக்கும் ஒன்றே என்று வேதம் கூறுகிறது. கொலை குற்றம் மகா பெரிய பாவம் என்றாலும், அவனுக்கும், அவன் தெரியாமல் இதை செய்திருக்கும் பொழுது நியாயம் கிடைக்க அவகாசம் தர படுகின்றது.

இயேசு கிறிஸ்துவோ தெரிந்தோ, தெரியாமலோ செய்த பாவங்களுக்கும் மன்னிப்பு கொடுக்க நமக்காக பாவமானார். நமக்காக அடிக்க பட்டார். நமது தண்டனையை தன்மேல் ஏற்று கொண்டு நமக்கு அடைக்கல பட்டணமானார்.

35.3 கொலை பாதகனை குறித்த கட்டளைகள்

ஒருவன் இருப்பு ஆயுதத்தினால் ஒருவனை வெட்டினதினால் அவன் செத்து போனால், வெட்டினவன் கொலை பாதகனாய் இருக்கிறான். கொலை

பாதகன் கொலை செய்யப்பட வேண்டும். ஒருவன் ஒரு கல்லை எடுத்து, சாக தக்கதாக ஒருவன் மேல் எறிகிறதினாலே அவன் செத்து போனால், கல்லெறிந்தவன் கொலை பாதகனாயிருக்கிறான், அவன் கொலை செய்யப்பட வேண்டும். ஒருவன் தன் கையில் ஒரு மர ஆயுதத்தை எடுத்து, சாக தக்கதாக ஒருவனை அடித்ததினால் அவன் செத்து போனால், அடித்தவன் கொலை பாதகனாய் இருக்கிறான். கொலை பாதகன் கொலை செய்யப்பட வேண்டும். பழி வாங்க வேண்டியவனே கொலை பாதகனை கொல்ல வேண்டும். அவனை கண்ட மாத்திரத்தில் அவனை கொன்று போடலாம். ஒருவன் பகையினால் ஒருவனை விழ தள்ளினதினால் ஆயினும், பதுங்கி இருந்து அவன் சாக தக்கதாய், அவன் மேல் ஏதாகிலும் எறிந்ததினால் ஆயினும், அவனை பகைத்து, தன் கையினால் அடித்ததினால் ஆயினும், அவன் செத்து போனால், அடித்தவன் கொலை பாதகன், அவன் கொலை செய்யப்பட வேண்டும். பழி வாங்குகிறவன் கொலை பாதகனை கண்ட மாத்திரத்தில் கொன்று போடலாம். (எண்.35:16-21)

ஒருவன் ஒரு ஆயுதத்தையாவது அல்லது மற்ற ஏதாவது ஒன்றை வைத்து ஒருவனை கொலை செய்ய வேண்டும் என்ற திட்டத்தோடு கொலை செய்தால் அவன் கொலை பாதகனாவான். நிச்சயமாகவே அவன் கொல்லப்பட வேண்டும். அவனை கொன்று போடுகிறவன் ஒரு அதிகாரி அல்ல, அவன் பழி வாங்குகிற உறவினன் ஆவான். ஏதும் கூற வாய்ப்பு கொடுக்காமல், ஒரு கொலை பாதகனை பார்த்த மாத்திரத்தில் ஒரு பழி வாங்குகிறவன் கொன்று போடலாம் என்று மோசேயின் நியாயவிதி பிரமாணம் கூறியது.

ஒருவன் பகை ஒன்றும் இல்லாமல் சடுதியில் ஒருவனை தள்ளி விழ பண்ணினதினால் ஆயினும், பதுங்கி இராமல் யாதொரு ஆயுதத்தை அவன் மேல் பட எறிந்ததினால் ஆயினும், அவனுக்கு பகைஞனாய் இராமலும், அவனுக்கு தீங்கு செய்ய நினையாமலும் இருக்கையில், ஒருவனை கொன்று போடத்தக்க ஒரு கல்லினால் அவனை காணாமல் எறிய, அது அவன் மேல் பட்டதினால் ஆயினும், அவன் செத்து போனால், அப்பொழுது கொலை செய்தவனையும் பழிவாங்குகிறவனையும் சபையார் இந்த நியாயப்படி விசாரித்து, கொலை செய்தவனை பழி வாங்குகிறவனுடைய கைக்கு தப்புவித்து, அவன் ஓடி போயிருந்த அடைக்கல பட்டணத்துக்கு அவனை திரும்ப போகும்படி செய்ய கடவர்கள். பரிசுத்த தைலத்தினால் அபிஷேகம் பெற்ற பிரதான ஆசாரியன் மரணமடையும் மட்டும் அவன் அதிலே இருக்க கடவன். (எண்.35:22-25)

கொலை குற்றம் செய்தவனுக்கும், இரத்தபழி வாங்க துடிக்கும் கோயல் என்பாருக்கும் நடுவில் அடைக்கல பட்டணம் இடம் பெறுகின்றது. அடைக்கல பட்டணம் என்பதின் சரியான பொருள் 'வரவேற்கும் வாசல்கள்' என்பது ஆகும். தெரியாமல் செய்து விட்டேன் என்று மனம் வருந்தி ஓடி வருகின்றவனை வரவேற்கும் வாசல்களாக ஆறு அடைக்கல பட்டணங்கள் கொடுக்க பட்டன. ஓடி வந்தவனை வரவேற்கின்றவர்கள் சபையார் என்று 24-வது வசனம் கூறுகின்றது. ஓடி வந்தவனையும் பழிக்கு பழி வாங்குகிறவனையும் சபையார் சந்திக்கின்றார்கள். ஓடி வந்தவனுடைய முன்கால நடத்தை பரிசீலனை செய்ய படுகின்றது. முன் கால நடத்தையில் முரண்பாடுகள் இல்லை. அவன் செய்த குற்றம்

அறியாமல் செய்த குற்றம் என்பதை சபையார்கள் ஒப்பு கொள்ளுகின்றார்கள். நியாயாதிபதியின் முன்னர் அவனை நிறுத்துவதற்கு கால அவகாசம் தரும்படி பழிவாங்க துடிகின்றவரை பார்த்து சபையார் கெஞ்சுகின்றார்கள். உபாகம புத்தகம் 19-வது அதிகாரம் 4 முதல் 6 வசனங்களை பார்ப்போம். ''கொலை செய்து அங்கே ஓடி போய் உயிரோடு இருக்க தக்கவன் யார் என்றால் தான் முன்னே பகைத்திராத பிறிதொருவனை மனது அறியாமல் கொன்றவன்தானே. ஒருவன் விறகு வெட்ட மற்றொருவனோடே காட்டில் போய் மரத்தை வெட்ட தன் கையில் இருந்த கோடரியை ஓங்கும் போது இரும்பானது காம்பை விட்டு கழன்று மற்றவன் மேல் பட்டதினால் அவன் இறந்து போனால் இரத்த பழிக்காரன் தன் மனம் எரிகையில் கொலை செய்தவனை வழி தூரமாய் இருக்கிறதினாலே பின் தொடர்ந்து பிடித்து அவனை கொன்று போடாத படிக்கு இவன் அந்த பட்டணங்கள் ஒன்றில் ஓடி போய் உயிரோடு இருப்பானாக. இவன் அவனை முன்னே பகைக்காத படியினால் இவன் மேல் சாவுக்கான குற்றம் சுமரவில்லை.'' இரத்தபழி வாங்க துடிக்கும் சங்கார தூதனின் மனம் எரிகின்றது. சபையாரின் வேண்டுதலை சங்கார தூதன் ஐந்து நிபந்தனைகளின் பேரில் ஏற்று கொள்ளுகின்றான்.

ஆனாலும் கொலை செய்தவன் தான் ஓடி போயிருக்கிற அடைக்கல பட்டணத்தின் எல்லையை விட்டு வெளிப்பட்டிருக்கும் போது, பழி வாங்குகிறவன் கொலை செய்தவனை அடைக்கல பட்டணத்துக்கு வெளியே கண்டு பிடித்து கொன்று போட்டால், அவன் மேல் இரத்தப்பழி இல்லை. (எண்.35:26-27)

முதல் நிபந்தனை 26, 27 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டு உள்ளது. உயிர் தப்பி ஓடியவன் அடைக்கல பட்டணத்தை விட்டு வெளியே செல்ல முடியாது. வரவேற்கும் வாசல்களை விட்டு வெளியே வந்து விட்டால் பழிக்கு பழி வாங்குகிறவர் அவனை வரவேற்பார். அவனுக்கு உயிர் பிச்சை கொடுத்து வரவேற்கும் வாசல்களை அவன் உதாசீனம் செய்யும் நாளில் உயிர் இழப்பான். கோயல் அவனை சந்திப்பார். மனம் எரிந்து கொண்டு இருக்கின்றவர் மனம் கொதித்து வருவார். அப்பொழுது சபையார் குறுக்கிட முடியாது. வழி விட வேண்டும். கெஞ்ச முடியாது, வருந்த மட்டுமே முடியும். வரவேற்கும் வாசல்கள் கொடுத்த வாய்ப்பை பயன் படுத்த வேண்டும் என்பதே முதல் நிபந்தனை.

கொலை செய்தவன் பிரதான ஆசாரியன் மரணமடையும் மட்டும் அடைக்கல பட்டணத்தில் இருக்க வேண்டும்; பிரதான ஆசாரியன் மரணமடைந்த பின்பு, தன் சுதந்தரமான காணியாட்சிக்கு திரும்பி போகலாம். (எண்.35:28)

இரண்டாவது நிபந்தனை 28-வது வசனத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது. வரவேற்பு வாசல்களில் பிரவேசித்தவன் நியாயம் விசாரிக்கப்படும் நாள் வருவதற்கு முன்னதாக பிரதான ஆசாரியனின் இறுதி நாள் வந்து விட்டால் அவன் விடுதலை செய்ய படலாம் என்று வசனம் கூறுகின்றது. பிரதான ஆசாரியன் மரணம் அடைவதற்கு முன்னதாக நியாயம் விசாரிக்க பட வேண்டும். பிரதான ஆசாரியனின் உயிர் குற்றம் செய்தவனின் உயிருக்கு நிரந்தர அடைக்கலம் தருகின்றது.

இவைகள் உங்கள் வாசஸ்தலங்களில் எங்கும் உங்கள் தலைமுறை தோறும் உங்களுக்கு நியாயவிதி பிரமாணமாய் இருக்க கடவது. (எண். 35:29)

கானான் தேசத்தை சுதந்தரிக்கும் முன் மோசே மூலம் கர்த்தர் மக்களுக்கு நியாயவிதி பிரமாணங்களை திட்டவட்டமாக கொடுக்கிறார். நியாயவிதி பிரமாணம் என்பது சட்டத்தின்படி பூர்த்தி செய்யப்பட வேண்டிய நியமங்கள் என்பது ஆகும். கர்த்தரை தேவனாக கொண்ட மக்கள் சட்டத்தின்படி நடந்து கொள்ள வேண்டிய முறைகளை கடைபிடிக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகின்றது.

எவனாகிலும் ஒரு மனிதனை கொன்று போட்டால், அப்பொழுது சாட்சிகளுடைய வாக்கு மூலத்தின் படியே அந்த கொலை பாதகனை கொலை செய்ய கடவர்கள்; ஒரே சாட்சியை கொண்டு மாத்திரம் ஒரு மனிதன் சாகும்படி தீர்ப்பு செய்யலாகாது. (எண். 35:30)

மூன்றாவது நிபந்தனை 30-வது வசனத்தில் கூறப்படுகின்றது. அவன் உண்மையில் நிரபராதிதானா என்பதை ஒரே ஒரு நபரின் சொல் கேட்டு முடிவு செய்ய வேண்டாம் என்பதே ஆகும்.

ஒரே ஒருவர் கூறும் சாட்சியின் அடிப்படையில் முடிவு செய்யாமல் இரண்டு மூன்று நபர்களின் சாட்சிகள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். உபாகம புத்தகம் 17-வது அதிகாரம் 6-வது வசனம், ''சாவுக்கு பாத்திரமானவன் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் கொலை செய்ய பட கடவன். ஒரே சாட்சியினுடைய வாக்கினால் அவன் கொலை செய்ய படலாகாது என்று கூறுகின்றது.

சாகிறதற்கு ஏற்ற குற்றம் சுமந்த கொலை பாதகனுடைய ஜீவனுக்காக நீங்கள் மீட்கும் பொருளை வாங்க கூடாது அவன் தப்பாமல் கொலை செய்யப்பட வேண்டும். (எண்.35:31)

நான்காவது நிபந்தனை 31-வது வசனத்தில் தரப்படுகின்றது. குற்றம் செய்தவனின் உயிரை காப்பாற்ற பணம் பயன்படுத்த பட முடியாது என்பது ஆகும். சாகிறதற்கு ஏற்ற குற்றம் சுமந்த கொலை பாதகனுடைய ஜீவனுக்காக நீங்கள் மீட்கும் பொருளை வாங்க கூடாது. அவன் தப்பாமல் கொலை செய்யப்பட வேண்டும். பணம் கொடுத்து நியாயம் செய்யும் மனிதர்களின் மனதை வெல்ல கூடாது என்பது நான்காவது நிபந்தனை ஆகும். பழி வாங்குகிறவர் கர்த்தர் ஆகும். அவர் கண்களுக்கு மறைவானது ஒன்றுமே இல்லை. கர்த்தரின் கண்களை பண கற்றைகள் குருடாக்குவது இல்லை. யோபுவின் புத்தகம் 6-வது அதிகாரம் 22,23 ஆகிய வசனங்கள், ''எனக்கு ஏதாகிலும் கொண்டு வாருங்கள் என்றும், உங்கள் ஆஸ்தியில் இருந்து எனக்கு யாதொரு வெகுமானம் கொடுங்கள் என்றும், அல்லது சத்துருவின் கைக்கு என்னை தப்புவியுங்கள், வல்லடிக்காரரின் கைக்கு என்னை நீங்கலாக்கி மீட்டு விடுங்கள் என்றும் நான் சொன்னது உண்டோ'' என்பதை கூறுகின்றன.

கொலை செய்தவனை பழி வாங்க துடிக்கின்றவர் கையில் இருந்து மீட்டு கொள்ளுவதற்கு ஒருவராலும் முடியாது என்று 49-வது சங்கீதம் 8-வது வசனம் கூறுகின்றது. ''எவ்விதத்தினாலாவது அவனை மீட்டு கொள்ளவும் அவன் நிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்கு கொடுக்கவும் கூடாதே''.

தன் அடைக்கல பட்டணத்துக்கு ஓடி போனவன் ஆசாரியன் மரணமடையாததற்கு முன்னே தன் நாட்டிற்கு திரும்பி வரும்படி நீங்கள் அவனுக்காக மீட்கும் பொருளை வாங்க கூடாது. (எண்.35:32)

ஐந்தாவது நிபந்தனை 32-வது வசனத்தில் தரப்படுகின்றது. கோயல் அல்லது சங்கார தூதன் கொடுக்கும் நிபந்தனைகளை சபையார் மாற்ற முடியாது என்பது ஐந்தாவது நிபந்தனை ஆகும். பிரதான ஆசாரியனின் மரணம் இடம் பெறுவதற்கு முன்னதாக சபையார் முயற்சி செய்து குற்றம் செய்தவனை விடுதலை செய்ய கூடாது என்று அந்த வசனம் கூறுகின்றது.

அறியாமல் செய்து விட்டேன் என்று மனம் உடைந்து வருகின்றவனுக்கு வரவேற்பு வாசல்கள் காத்து கொண்டு இருக்கின்றன. ஆயினும் சபையார் வரவேற்பு வாசல்கள் வழங்கும் சலுகைகளை துர்பிரயோகம் செய்ய முடியாது. இரத்த பழி வாங்குவதற்கு துடி துடித்து வரும் சங்கார தூதன் கொடுக்கும் அத்தனை நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். கை பிசகாய் செய்யவில்லை. திட்டமிட்டு செய்த கொலை என்பதற்கு விமோசனம் இல்லை. பழிக்கு பழி வாங்கும் கோயல் அவனை உடனடியாக சாகடிக்கின்றார். இந்த விபரம் 21-வது வசனத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது. 16 முதல் 20 வசனங்கள் வரை திட்டமிட்ட கொலைகள் என்பதின் விபரம் கொடுக்கப்பட்டு உள்ளது.

> ***நீங்கள் இருக்கும் தேசத்தை பரிசுத்த குலைச்சல் ஆக்காது இருங்கள்; இரத்தம் தேசத்தை தீட்டு படுத்தும். இரத்தம் சிந்தினவனுடைய இரத்தத்தினாலே ஒழிய, வேறொன்றினாலும் தேசத்திலே சிந்துண்ட இரத்தத்திற்காக பாவ நிவிர்த்தி இல்லை. நீங்கள் குடியிருக்கும் என் வாசஸ்தலமாகிய தேசத்தை தீட்டு படுத்த வேண்டாம். கர்த்தராகிய நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே வாசம் பண்ணுகிறேன் என்று சொல் என்றார். (எண். 35:33-34)***

எண்ணாகம புத்தகம் 14-வது அதிகாரம் 7,8 ஆகிய வசனங்களில் யோசுவாவும் காலேபும் கானான் தேசம் மிகவும் நல்ல தேசம், பாலும் தேனும் ஓடுகிற தேசம் என்று கூறினார்கள். ஆயினும் மனிதன் மனிதனை கொலை செய்யும் பொழுது அந்த நல்ல தேசம் புனிதம் இழக்கும். தீட்டு உள்ள தேசமாக மாறிவிடும் என்று எண்ணாகம புத்தகம் 35-வது அதிகாரம் 33,34 ஆகிய வசனங்கள் கூறுகின்றன.

கர்த்தர் வாசம் செய்யும் இடம் ஆசரிப்பு கூடாரம் மட்டும் அல்ல, தேசம் முழுவதும் கர்த்தர் வாசம் பண்ணுகிறார் என்று கூறப்படுகின்றது. கொலை தேசத்தை களை இழக்க செய்யும் என்பது தெரிவிக்கப்படுகின்றது. பாலும் தேனும் ஓடும் பூமி, கொலையும் இரத்தமும் காணும் பொழுது பாழான பூமியாக மாறி விடும். நிறைவும் செழிப்பும் உள்ள பூமி, கொலைகள் பெருகி விட்டால் குறைவும் வறட்சியும் கண்டு விடும். ஆரவாரத்துடன் கானான் தேசத்தில் பிரவேசித்தவர்கள் அழுகையுடன் வாழ வேண்டிய நிலை வந்து விடும். ஆசரிப்பு கூடாரத்தில் இருந்த அலங்காரங்கள் அனைத்தும் கொலைகள் விழும் பொழுது அலங்கோலம் கண்டு விடும். எனவே இரத்தம் சிந்த வேண்டாம் என்று கர்த்தர் கூறுகின்றார்.

அவ்விதமான குற்றம் இடம் பெறும் பொழுது சபையார் அனைவரும் பாவ அறிக்கை செய்ய வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். உபாகம புத்தகம் 21-வது அதிகாரம் 1 முதல் 8 வசனங்களில், ''உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு சுதந்தரிக்க கொடுக்கும் தேசத்தில் கொலை செய்ய பட்டு கிடக்கிற ஒருவனை வெளியிலே கண்டு அவனை கொன்றவன் இன்னான் என்று தெரியாது இருந்தால், உன் மூப்பரும், உன் நியாதிபதிபதிகளும் புறப்பட்டு போய் கொலை செய்ய பட்டவனை சுற்றிலும் இருக்கும் பட்டணங்கள் மட்டும் அளப்பார்களாக. கொலை செய்ய பட்டவனுக்கு சமீபமான பட்டணத்து மூப்பர் வேலையில்

பண் படாததும் நுகத்தடியில் பிணைக்க படாததுமான ஒரு கிடாரியினை பிடித்து, உழுது விதையாத தரிசான பள்ளத்தாக்கிலே அதை கொண்டு போய் அந்த பள்ளத்தாக்கிலே அதின் தலையை வெட்டி போட கடவர்கள். உன் தேவனாகிய கர்த்தர் தமக்கு ஆராதனை செய்யவும் கர்த்தருடைய நாமத்திலே ஆசீர்வதிக்கவும் லேவியின் குமாரராகிய ஆசாரியரை தெரிந்து கொண்டபடியால் அவர்களும் அத்தருணத்தில் வந்து இருக்க வேண்டும். அவர்கள் வாக்கின்படியே சகல வழக்கும் சகல காய சேதமும் தீர்க்கப்பட வேண்டும். கொலை செய்ய பட்டவனுக்கு சமீபமான பட்டணத்தின் மூப்பர் எல்லாரும் பள்ளத்தாக்கிலே தலை வெட்டப்பட்ட கிடாரியின் மேல் தங்கள் கைகளை கழுவி எங்கள் கைகள் அந்த இரத்தத்தை சிந்தினதும் இல்லை, எங்கள் கண்கள் அதை கண்டதும் இல்லை. கர்த்தாவே நீர் மீட்டு கொண்ட உமது ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் குற்றம் இல்லாத இரத்த பழியை சுமத்தாமல் உமது ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் கிருபை உள்ளவராய் இரும் என்று சொல்வார்களாக. அப்பொழுது இரத்த பழி அவர்களுக்கு நிவிர்த்தி ஆகும்.''

ஆசாரிப்பு கூடாரம் எத்தனை புனிதமானதோ அது போன்று அவர்கள் வாழும் பூமி முழுவதும் புனிதமானது. தூய்மை என்பது தொழுது கொள்ளும் இடத்துடன் முடிந்துவிட வேண்டாம். தங்கி தாபரிக்கும் இடம் எல்லாம் நின்று நிலவட்டும் என்பதே 35-வது அதிகாரம் தரும் செய்தி ஆகும்.

அத்தியாயம் - 36

கோத்திரங்களின் சுதந்தரம் காக்கபட வேண்டும்

36.1 குமாரத்திகளின் சுதந்தரம் கோத்திர சுதந்தரத்தை பாதிக்கலாகாது

குடும்பங்கள் நல்வாழ்வு பெற்று வாழட்டும் என்று கர்த்தர் வாழ்த்தும் அதிகாரமாக எண்ணாகம புத்தகம் 36-வது அதிகாரம் அமைந்து உள்ளது. எண்ணாகம புத்தகம் முதல் அதிகாரம் ஆறு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் கொண்ட ஒரு சமூகத்தை எடுத்து காட்டியது. எண்ணாகம புத்தகத்தின் கடைசி அதிகாரமான 36-வது அதிகாரம் ஐந்தே ஐந்து உறுப்பினர்கள் உள்ள ஒரு குடும்பத்தை எடுத்து காட்டுகின்றது.

குடும்பங்கள் நல்வாழ்வு பெற்று வாழ்ந்து விட்டால் சமுதாயம் சந்தோஷம் பெற்று வாழ்ந்து விடும் என்று எண்ணாகம புத்தகம் இறுதி அதிகாரம் பறை சாற்றுகின்றது. ஒரு சமுதாயமாக புறப்பட்டு வந்தார்கள். குடும்பம் குடும்பமாக தங்க இருக்கின்றார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான இட வசதிகள் ஒழுங்கு செய்ய படுகின்றன. ஒவ்வொரு குடும்பத்தின் தலைவர்களும் தங்கள் மனைவி பிள்ளைகள் சார்பினில் மோசேயின் முன்னாக வந்து நின்று கொண்டு இருக்கின்றார்கள். தங்கள் சொந்த குடும்பத்தின் வரும் காலங்களை குடும்பத்தின் தாய் தகப்பன்மார்கள் ஒழுங்கு செய்கின்றார்கள். ஆனால் ஒரே ஒரு குடும்பத்தில் குடும்ப தலைவனும் இல்லை குடும்ப தலைவியும் இல்லை. அந்த குடும்பம் முதல் முதலாக எண்ணாகம புத்தகம் 26-வது அதிகாரம் 29-வது வசனத்தில் அறிமுகம் செய்ய பட்டது. பின்னர் 27-வது அதிகாரம் 1 முதல் 11 வசனங்களில் மோசே எலெயாசார் என்பவர்கள் முன்னாக நிறுத்த பட்டது. இப்பொழுது அதே குடும்பம் எண்ணாகம புத்தகத்தின் கடைசி அதிகாரத்தை தொகுக்கின்றது. அந்த குடும்பத்தின் விபரத்துடன் எண்ணாகம புத்தகம் நிறைவு பெறுகின்றது. செலோப்பியாத்தின் குடும்பமே அந்த குடும்பம் ஆகும். அவர்கள் செலோப்பியாத் பெற்ற ஐந்து குமாரத்திகள் ஆகும். அவன் பெற்ற பிள்ளைகளும் குணசாலியான பிள்ளைகள் ஆகும். பெற்றோர் இன்றி வாழ்ந்தாலும் வனாந்தரத்து பிரயாணத்தை வெற்றியுடன் கடந்து வந்த பிள்ளைகள் ஆகும்.

27-வது அதிகாரத்தில் கானானின் சுதந்தரம் தங்களுக்கும் வேண்டும் என்று மோசேயை பார்த்து முறை இட்டார்கள். அவர்களின் இதய வாஞ்சை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று கர்த்தர் கட்டளை இட்டார். அந்த விபரம் ஒரு முகவுரையாக 36-வது அதிகாரத்தின் ஆரம்ப வசனங்களில் கொடுக்கப்படுகின்றது.

> *யோசேப்பின் குமாரனுடைய வம்சத்தாரில் மனாசேயின் குமாரனாகிய மாகீருக்கு பிறந்த கீலேயாத்தின் வம்ச பிதாக்களான தலைவர் சேர்ந்து, மோசேக்கும் இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களில் தலைவராகிய பிரபுக்களுக்கும் முன்பாக வந்து, அவர்களை நோக்கி: சீட்டு போட்டு, தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாக கொடுக்கும் படி எங்கள் ஆண்டவனுக்கு கர்த்தர் கட்டளை இட்டாரே; அன்றியும், எங்கள் சகோதரனாகிய செலொப்பியாத்தின் சுதந்தரத்தை அவன் குமாரத்திகளுக்கு கொடுக்க வேண்டும் என்றும் எங்கள் ஆண்டவனுக்கு கர்த்தராலே கட்டளை இடப்பட்டதே. (எண். 36:1-2)*

மனாசேயின் குமாரனாகிய மாகீருக்கு பிறந்தோராகிய பாதி கோத்திரத்தார் யோர்தானுக்கு கீழ் பகுதியிலேயே தங்கிவிட முடிவு செய்தார்கள். அவர் யோர்தானுக்கு கிழக்கு புறம் உள்ள தேசங்களின் வட பகுதியை சுதந்தரித்து கொண்டார்கள். அவர்களது குடும்பங்கள் பட்டணங்களில் தங்கி இருக்கையில் அவர்கள் யுத்த சன்னத்தராகிய ஆண்மக்கள் யோர்தானை மற்ற கோத்திரத்தினருடன் தாண்டி சென்று கானான் தேசத்தை வெல்ல உதவி செய்ய வேண்டும் என்று கர்த்தர் பணித்து இருந்தார். செலோப்பியாத்தின் குமாரத்திகளால் அவர்கள் சுதந்தரத்திற்கு பங்கம் விளைந்து விடுமோ என்று அவர்கள் மனதில் கேள்வி எழும்பிற்று.

செலோப்பியாத்தின் பிள்ளைகளுக்கும் வாக்குத்த பூமியில் பங்கு கொடுக்க வேண்டும் என்று கர்த்தர் கட்டளை இட்டார். 27-வது அதிகாரத்தில் யோர்தானின் கிழக்கான பூமியில் செலோப்பியாத்தின் ஐந்து பிள்ளைகளுக்கும் பங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டது. இப்பொழுது 36-வது அதிகாரத்தில் ஐந்து பிள்ளைகளின் திருமணங்களும் ஒழுங்கு செய்யப்படுகின்றது. செழிப்புடன் வாழ்வதற்கு நிலங்கள் பெற்று கொண்டாலும் நிறைவுடன் வாழ்வதற்கு குடும்பமும் அவசியம் என்பது உணர்த்தப்படுகின்றது. பொன்னும் மண்ணும் பெற்றும் குடும்பம் என்பதை பெற்று கொள்ளவில்லை என்றால் முழுமை என்பது இல்லை என்று உணர்த்தப்படுகின்றது. ஆதாம் ஏவாள் என்பவர்களின் நல் வாழ்விற்காகவே ஏதேன் என்ற தோட்டம் அமைக்கப்பட்டது. குடும்பங்கள் மகிழ்ந்து வாழ்வதற்காகவே பாலும் தேனும் ஓடும் பூமி கொடுக்கப்படுகின்றது.

செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு மனாசேயின் பாதி கோத்திர பங்கில் இருந்து பங்கு கொடுக்க வேண்டும் என்று கர்த்தர் கட்டளை இட்டார். இந்த பாதி கோத்திரம் யோர்தானின் கிழக்கு பகுதியில் போக வேண்டிய கோத்திரம். செலோப்பியாத் கீலேயாத்தின் குடும்பத்தை சேர்ந்தவன்.

பெண்களுக்கு கானானின் சுதந்திரத்தில் பங்கு கொடுப்பது மனாசேயின் பாதி கோத்திரத்திற்கென்று ஒதுக்கப்பட்ட நிலபரப்பை பாதித்து விடுமே என்று கீலேயாத்தின் பிரபுக்கள் கவலை கொண்டு மோசேயின் முன் ஒன்று சேர்ந்து வந்து, தாங்கள் வந்த காரியத்தை குறித்து பேச்சை தொடங்குகிறார்கள். அது பெண் பிள்ளைகளுக்கு சுதந்தரத்தில் பங்கு கொடுப்பதை குறித்தது.

செலோப்பியாத்தின் பிள்ளைகள் திருமணம் செய்ய வேண்டும். அவர்கள் பெற்ற சுதந்தரம் அவர்கள் வாரிசுகளுக்கு வழி வழியாக செல்ல வேண்டும். மனாசே கோத்திரத்தை சேர்ந்தவராக செலோப்பியாத்தின் குடும்பம் இருந்ததினால் மனாசே கோத்திரத்தின் பெரியவர்கள் அனைவரும் பெற்றோர் இல்லாத ஐந்து பிள்ளைகளின் சார்பில் மோசேயை சந்திக்க புறப்பட்டு வந்தார்கள். மனாசே கோத்திரத்தில் பாதி கோத்திரத்தார் யோர்தானை தாண்டவில்லை. கர்த்தர் காட்டும் பூமியில் அவர்கள் பிரவேசிக்க விரும்பாவிட்டாலும் கர்த்தரை விட்டு சற்றும் பின் வாங்கவில்லை. அந்த பாதி கோத்திரம் மிகுந்த பாசமும் பண்பும் உள்ள கோத்திரமாக காணப்பட்டது. தாய் தகப்பன் இல்லாத குடும்பத்திற்கு கோத்திரத்தை சேர்ந்த பெரியவர்கள் ஏற்ற உதவி செய்வதற்கு முன் வந்தார்கள்.

ஐந்து பிள்ளைகளும் பெற்று கொண்ட இடம் மிகவும் செழிப்பான இடம். அந்த இடங்களை கைப்பற்றி கொள்ள பிறிதொருவன் பெற்றோர் இல்லாத பிள்ளைகளை வஞ்சித்து

விடலாம். ஐந்து பிள்ளைகளும் குடும்ப வாழ்வு பெற்று கொண்டால் நிறைவும் பாதுகாப்பும் பெற்று வாழ்வார்கள் என்பதே மனாசே கோத்திரத்து பெரியவர்களின் முடிவு.

> *இப்படி இருக்க, இவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய வேறொரு கோத்திரத்தின் புத்திரருக்கு மனைவிகள் ஆனால், அந்த குமாரத்திகளுடைய சுதந்தரம் எங்கள் பிதாக்களுடைய சுதந்தரத்தில் இருந்து நீங்கி, அவர்கள் உட்படுகிற கோத்திரத்தின் சுதந்தரத்தோடே சேர்ந்து போகும்; இப்படி எங்கள் சுதந்தரத்துக்கு சீட்டினால் விழுந்த பங்கில் இராமல் அற்று போகுமே. இஸ்ரவேல் புத்திரருக்கு யூபிலி வருஷம் வந்தாலும், அவர்களுடைய சுதந்தரம் அவர்கள் உட்பட்டு போன கோத்திரத்தின் சுதந்தரத்தோடே சேர்ந்து போகும்; இப்படி எங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்தில் இருந்து அது நீங்கி போகுமே என்றார்கள். (எண். 36:3-4)*

1 முதல் 4 வசனங்களில் ஐந்து பிள்ளைகளின் சார்பில் மனாசே கோத்திரத்து தலைவர்கள் மோசேயின் முன்னாக வந்து நிற்கின்றார்கள். 27-வது அதிகாரத்தில் பிள்ளைகள் நேராக சென்று மோசேயின் முன்னாக நின்றார்கள். தங்களுக்காக அல்ல. தங்கள் தகப்பனுக்காக ஐந்து பிள்ளைகளும் மோசேயை 27-வது அதிகாரத்தில் சந்தித்து பேசினார்கள். அவர்களுடைய தனிப்பட்ட தேவையை சந்திக்க தாங்களாக ஒன்றும் செய்யவில்லை. கோத்திரத்தின் பெரியவர்கள் பேசுவதற்கு முன் வந்தார்கள். அது கர்த்தருடைய கிருபையே ஆகும்.

யோபுவின் கைவிடப்பட்ட நிலமையில் கை கொடுப்பதற்கு ஒருவரும் முன் வரவில்லை. ''என் சஞ்சலம் நிறுக்கப்பட்டு என் நிர்ப்பந்தம் எல்லாம் தராசிலே வைக்க பட்டால் நலமாய் இருக்கும். அப்பொழுது அது கடற்கரை மணலை பார்க்கிலும் பாரமாய் இருக்கும். ஆகையால் என் துக்கம் சொல்லி முடியாது'' என்று யோபு சத்தமிட்டார் என்பதே யோபுவின் புத்தகம் 6-வது அதிகாரம் 2,3 ஆகிய வசனங்களில் கூறப்படுகின்றது. ''ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்'' என்று கலாத்தியர் நிரூபம் 6-வது அதிகாரம் 2-வது வசனம் கூறுகின்றது.

செலோப்பியாத்தின் ஐந்து பிள்ளைகளின் இதயத்திலும் இருந்த கவலையை அறிந்து கொள்ளவும் அந்த குறைகளை நிறைவாக்கவும், தாயும் இல்லை தகப்பனும் இல்லை. ஆனால் பரிசுத்தவான்கள் இருந்தார்கள். விவாகம் பண்ணவும் பிள்ளைகளை பெறவும் வீட்டை நடத்தவும் பரிசுத்த பவுல் கட்டளை கொடுப்பதை 1 தீமோத்தேயு 5-வது அதிகாரம் 14-வது வசனத்தில் காண்கின்றோம்.

கை கொடுக்க பெற்றோர் இல்லாத பிள்ளைகளுக்கு சபையின் பெரியவர்கள் உதவி செய்வதற்கு முன் வந்தார்கள். பெற்றோர் இல்லாத பிள்ளைகளின் வருங்காலங்களை ஆசீர்வாதமாக மாற்றி கொடுக்க கோத்திரத்தின் பெரியவர்கள் பிரயாசம் எடுத்தார்கள். திருச்சபை என்ற குடும்பத்தில் ஒருவர் பாரங்களை ஒருவர் சுமக்க வேண்டும் என்பது விளக்கப்படுகின்றது. ஆண்கள் இல்லாத குடும்பங்களின் சொத்துக்கள் வஞ்சிக்கப்பட்டு போவதற்கு கர்த்தர் அனுமதி கொடுப்பது இல்லை என்பதும் விளக்க படுகின்றது.

கடந்த அதிகாரமான 35-வது அதிகாரத்தில் மனிதன் மனிதனின் உயிரை அபகரிப்பது கொடிய குற்றம் என்று கூறப்பட்டது. 36-வது அதிகாரத்தில் மனிதன் மற்றவரின் சொத்துக்களை அபகரிப்பது பெரும் குற்றம் என்பது தெரிவிக்க படுகின்றது. செலோப்பியாத்தின் சுதந்தரம் அவனது ஐந்து பிள்ளைகளுக்கும் உரித்தாகி விடுவதற்கு உற்ற உதவிகளை கோத்திரத்தின் தலைவர்கள் செய்கின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கை கோத்திரங்களுக்கு அப்பால் கட்டப்படாமல் கோத்திரத்திற்கு உள்ளாக கட்டப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்த படுகின்றது.

ஏனெனில் அந்த ஐந்து பெண் பிள்ளைகளும் வேறு கோத்திரத்து ஆண்களை திருமணம் செய்தால், அந்த பெண்களுக்கு மனாசே கோத்திரத்தில் கொடுக்க படும் சுதந்திரம் அடுத்த கோத்திரத்திற்கு போய் விடும். அதை தடுக்க மோசேயிடம் வேண்டுகின்றார்கள்.

கர்த்தர் அருளும் ஆசீர்வாதம் நிலைத்து நீடிப்பதற்கு கர்த்தர் மீது விசுவாசம் உள்ளவர்களுடன் அவர்களின் வாழ்க்கை இணைய வேண்டும் என்று கூறப்படுகின்றது.

> *அப்பொழுது மோசே கர்த்தருடைய கட்டளையின் படியே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: யோசேப்பு புத்திரரின் கோத்திரத்தார் சொல்லுகிறது சரியே. கர்த்தர் செலொப்பியாத்தின் குமாரத்திகளை குறித்த காரியத்தில் கட்டளை இடுகிறதாவது: அவர்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களை விவாகம் செய்யலாம். ஆனாலும், தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் மாத்திரம் அவர்கள் விவாகம் செய்ய வேண்டும். இப்படியே இஸ்ரவேல் புத்திரரின் சுதந்தரம் ஒரு கோத்திரத்தை விட்டு, வேறு கோத்திரத்துக்கு போகாதிருக்கும்; இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்திலே நிலை கொண்டிருக்க வேண்டும். (எண். 36:5-7)*

ஐந்து பெண் பிள்ளைகளுக்கும் தகப்பனும் இல்லை. தாயும் இல்லை. அதனை ஆதாயப்படுத்தி மற்றவர்கள் பிள்ளைகளின் விருப்பத்திற்கு மாறான துணைகளை வற்புறுத்த வேண்டாம் என்பது கர்த்தரால் கூறப்படுகின்றது. அவர்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களை விவாகம் செய்யலாம் என்று 6-வது வசனத்தில் கர்த்தர் கூறுகின்றார். அவர்கள் இஷ்டமானவர்களை திருமணம் செய்யலாம் என்பதின் பொருள் பிள்ளைகள் தங்கள் மனம் போல் தீர்மானங்களை எடுத்து கொள்ளலாம் என்பது அல்ல. கர்த்தரை பிரிய படுத்தும் தீர்மானம் செய்வதே அவர்கள் இஷ்டமாக இருக்க வேண்டும் என்பதே ஆகும். தாயும் இல்லை. தகப்பனும் இல்லை என்றாலும் நான் உன்னை கைவிடுவது இல்லை என்று கூறும் கர்த்தர் அவர்களுக்கு உண்டு.

ஐந்து பெண் பிள்ளைகளும் தூய்மை, உண்மை என்பவை காத்து இம்மட்டும் வாழ்ந்து வந்தார்கள். அதன் விளைவாக ஏராளமான ஆசீர்வாதங்களை கர்த்தருடைய கட்டளையின்படி பெற்று கொண்டார்கள்.

மிகவும் முக்கியமான தீர்மானம் செய்யும் நேரம் இப்பொழுது வந்து விட்டது. கர்த்தரை கனம் செய்வதில் கருத்து பதிக்கின்றார்களா அல்லது கர்த்தருக்கு சித்தம் இல்லாத தெரிந்தெடுப்புகளை செய்வதற்கு ஆயத்தம் படுகின்றார்களா என்பதை கர்த்தர் அறிந்து கொள்ளும் நேரம் வந்து விட்டது. கண்களின் இச்சையின்படியும், உள்ளத்தின் ஆசையின்

படியும், சுய விருப்பத்தின் படியும் மண வாழ்விற்குள் பிரவேசித்து விட்டால் கர்த்தர் விலகி விடுவார். உடைமைகள் பறி போகும். சுதந்தரம் இழக்கப்படும். கானான் என்ற பூமி முள்ளும் குறுக்கும் ஆகும். ஆசை என்பது கண்ட ஆரம்பங்கள் இனிப்பாக தெரிந்தாலும் காலத்தின் ஓட்டத்தில் கசப்பாகவே முடியும். கர்த்தர் மீது இஷ்டம் உள்ளவர்களே பிள்ளைகளின் இஷ்டமாக மாறவேண்டும் என்பதே கர்த்தர் கூறும் செய்தி ஆகும்.

தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் மாத்திரம் அவர்கள் விவாகம் செய்ய வேண்டும் என்று 6-வது வசனம் கூறுகின்றது. விசுவாசிகள் விசுவாசிகளுடன் மட்டுமே இணைய வேண்டும் என்பதே அதன் பொருள் ஆகும். அவர்களின் தெரிந்தெடுப்பு அவர்கள் பெற்ற செல்வம் சிறப்பு என்பவைகளை நடுவாக வைத்து அல்ல, சொத்து சுகம் என்பவைகளை நடுவாக வைத்தும் அல்ல, பரிசுத்தராகிய கர்த்தர் ஒருவரை மட்டும் நடுவாக வைத்து இடம் பெற வேண்டும் என்பதே கர்த்தருடைய கட்டளை. விசுவாச வாழ்வினில் நடந்து செல்லும் அவர்கள் அந்த பரிசுத்தமான பாதையில் பாதம் பதிக்காதவர்களுடன் இணைய முடியாது என்பதே 6-வது வசனத்தின் தகவல் ஆகும். கர்த்தர் வீட்டை கட்ட வேண்டும். அவர்களின் இஷ்டம் போல் கட்ட முடியாது என்பதே கர்த்தர் கூறும் செய்தி ஆகும். செலோப்பியாத்தின் பிள்ளைகள் மிகவும் கண்ணியமானவர்கள். கர்த்தரை தாயாகவும், தகப்பனாகவும் ஏற்று கொண்டவர்கள். கர்த்தர் சொல்லுவதற்கு முற்றிலுமாக கீழ்படிந்தார்கள்.

> ***இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களின் சுதந்தரத்தை அனுபவிக்கும்படி, இஸ்ரவேல் புத்திரருடைய ஒரு கோத்திரத்திலே சுதந்தரம் அடைந்திருக்கிற எந்த குமாரத்தியும் தன் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் ஒருவனுக்கு மனைவியாக வேண்டும். சுதந்தரமானது ஒரு கோத்திரத்தை விட்டு வேறொரு கோத்திரத்தை சேர கூடாது; இஸ்ரவேல் புத்திரருடைய ஒவ்வொரு கோத்திரமும் தன்தன் சுதந்தரத்திலே நிலை கொண்டிருக்க வேண்டும் என்று கட்டளை இட்டிருக்கிறார் என்றான். கர்த்தர் மோசேக்கு கட்டளை இட்டபடியே செலொப்பியாத்தின் குமாரத்திகள் செய்தார்கள். (எண். 36:8-10)***

கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே செலோப்பியாத்தின் குமாரத்திகள் செய்தார்கள் என்று வசனம் கூறகின்றது. நீதிமொழிகளின் புத்தகம் 31:10-31-ம் வசனம் வரை ஒரு நல்ல பெண்மணியின் குணாதிசயங்களை குறித்து கூறப்பட்டுள்ளது. ''குணசாலியான ஸ்திரீயை கண்டு பிடிப்பவன் யார். அவளுடைய விலை முத்துக்களை பார்க்கிலும் உயர்ந்தது. அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும். அவன் சம்பத்து குறையாது. அவள் உயிரோடு இருக்கிற நாள் எல்லாம் அவனுக்கு தீமையை அல்ல. நன்மையையே செய்கிறாள். ஆட்டு மயிரையும் சணலையும் தேடி தன் கையினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள். அவள் வியாபார கப்பல்களை போல் இருக்கிறாள். தூரத்தில் இருந்து தன் ஆகாரத்தை கொண்டு வருகிறாள். இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரம் கொடுத்து தன் வேலைக்காரிகளுக்கு படி அளக்கிறாள். ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள். தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்ச தோட்டத்தை நாட்டுகிறாள். தன்னை பெலத்தால் இடை கட்டி கொண்டு தன் கைகளை பலப்படுத்துகிறாள். தன் வியாபாரம் பிரயோஜனம் உள்ளது என்று அறிந்து இருக்கிறாள். இரவிலே அவள் விளக்கு அணையாது இருக்கும். தன் கைகளை ராட்டினத்தில் வைக்கிறாள். அவள் விரல்கள் கதிரை பிடிக்கும். சிறுமையானவர்களுக்கு தன் கையை திறந்து ஏழைகளுக்கு தன் கரங்களை

நீட்டுகிறாள். தன் வீட்டார் அனைவருக்கும் இரட்டைப்புரை உடுப்பு இருக்கிறதால் தன் வீட்டாரின் நிமித்தம் குளிருக்கு பயப்படாள். இரத்தின கம்பளங்களை தனக்கு உண்டு பண்ணுகிறாள். மெல்லிய புடவையும் இரத்தாம்பரமும் அவள் உடுப்பு. அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர்பெற்றவனாயிருக்கிறான். மெல்லிய புடவைகளை உண்டு பண்ணி விற்கிறாள். கச்சைகளை வர்த்தகரிடத்தில் ஒப்புவிக்கிறாள். அவள் உடை பலமும் அலங்காரமுமாய் இருக்கிறது. வருங்காலத்தை பற்றியும் மகிழுகிறாள். தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள். தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்கிறது. அவள் சோம்பலின் அப்பத்தை புசியாமல் தன் வீட்டு காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாய் இருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி, அவளை பாக்கியவதி என்கிறார்கள். அவள் புருஷனும் அவளை பார்த்து அநேகம் பெண்கள் குணசாலிகளாய் இருந்தது உண்டு, நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளை புகழுகிறான். சௌந்தரியம் வஞ்சனை உள்ளது, அழகும் வீண், கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீயே புகழ படுவாள். அவள் கைகளின் பலனை அவளுக்கு கொடுங்கள். அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளை புகழ கடவது.''

36.2 கீழ்படிந்த செலோப்பியாத்தின் பிள்ளைகள்

> *செலோப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள், திர்சாள், ஒக்லாள், மில்காள், நோவாள் என்பவர்கள் தங்கள் பிதாவின் சகோதரருடைய புத்திரரை விவாகம் பண்ணினார்கள். அவர்கள் யோசேப்பின் குமாரனாகிய மனாசே புத்திரரின் வம்சத்தாரை விவாகம் பண்ணினபடியால், அவர்களுடைய சுதந்தரம் அவர்கள் பிதாக்களின் வம்சமான கோத்திரத்தோடே இருந்தது. (எண். 36:11-12)*

செலோப்பியாத்தின் பிள்ளைகள் தங்கள் கைகளின் பலனை கண்டார்கள். மனாசே குடும்பத்து மக்களின் வாசனை அவர்களை புகழ்ந்தன. யோர்தானுக்கு இப்புற பூமியில் செலோப்பியாத்தின் குமாரத்திகள் செல்வமும் செல்வாக்கும் பெற்று வாழ்ந்தார்கள். பரிசுத்தராகிய கர்த்தரை தங்கள் பரம தகப்பனாக பெற்று வாழ்ந்தார்கள். இஷ்டம் போல் தீர்மானம் எடுக்கவில்லை. கர்த்தரின் சித்தம் போல் தீர்மானம் செய்தார்கள். ஏற்ற துணைகள் கண்டார்கள். அனைத்து ஆசீர்வாதங்களும் பெற்று வாழ்ந்தார்கள். கர்த்தர் அவர்கள் வீட்டை கட்டினார்.

> *எரிகோவின் அருகே யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள மோவாபின் சமனான வெளிகளில் கர்த்தர் மோசேயை கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்கு விதித்த கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே. (எண். 36:13)*

இஸ்ரவேல் மக்கள் மோவாபின் சமவெளிகளில் சில காலங்கள் தங்கி இருக்கையில், மோசே மரித்த பின்பும் எப்படி எப்படி அவர்கள் கர்த்தருக்கு உண்மை உள்ளவர்களாய், அவர் தமக்காக உலகில் இருந்து பிரித்து எடுத்து கொண்ட சந்ததியாராக இருக்க வேண்டும் என்று அவர்களை பல விதங்களில் ஆயத்தம் செய்கிறார்.

அத்தியாயம் - 37
எண்ணாகம புத்தகம் தரும் ஆசீர்வாதங்கள்

37.1 கர்த்தர் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிறார்

எண்ணாகம புத்தகம் தரும் செய்தி கர்த்தர் துவங்குகிறவராகவும் முடிக்கின்றவராகவும் இருக்கின்றார் என்பதே ஆகும். வாழ்க்கை பிரயாணம் மிகவும் கடினமானது என்றும், ஆனால் கர்த்தரின் துணை கொண்டு முடிய கூடியது என்றும் எண்ணாகம புத்தகம் அறிவிக்கின்றது.

வாழ்க்கை என்பது வருங்காலங்களை நடுவாக வைத்து இயங்குகின்றது. எண்ணாகம புத்தகம் முதல் அதிகாரம் முதல் வசனம் முதல் 10-வது அதிகாரம் 10-வது வசனம் வரை இந்த விபரம் அறிவிக்கப்பட்டது. எதிர்கால இலக்கு கானான் என்பது ஆகும். இலக்கை நோக்கி ஓடுவதற்கு அணிகள் வகுக்கப்பட்டன. வருங்காலங்களை நடுவாக வைத்து உருவாகும் வாழ்கை இலகுவானது அல்ல. கடினமானது ஆகும். வருங்கால இலக்கு கண்ணால் காண முடியவில்லை. அது கர்த்தர் அருளிய வாக்குதத்தங்களை மட்டுமே சார்ந்து நிற்கின்றது. வருங்காலத்தை நடுவாக வைத்து நிகழ்கால அட்டவணை தயார் செய்வதற்கு விசுவாசம் என்ற எழுத்தாணி தேவை படுகின்றது. நெஞ்சத்தில் விசுவாசம் கண்டு விட்டால், விசுவாச கண்களுக்கு கானான் தெரிந்து விடும். அந்த பரம சந்தோஷம் கண் எதிராக தெரியும் பொழுது கடந்து செல்லும் பாதைகள் கடினமான பாதைகளாக தெரிவது இல்லை. அவர் தமக்கு முன் வைத்து இருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று எபிரேயர் நிரூபம் 12-வது அதிகாரம் 2-வது வசனம் கூறுகின்றது.

நாளைய தினம் கிரீடம் அணிவதற்கு இன்றைய தினம் சிலுவை சுமக்க வேண்டும் என்று எதிர்பார்க்க படுகின்றது. வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமி கைக்கு எட்டும் தூரத்தில் இல்லை. தொலை நோக்கு காட்சி பெற்றவர்கள் மட்டுமே வருங்கால நன்மைகளை காண்பதற்கு முடியும். கானான் சென்று வந்த பன்னிரு நபர்களில் 10 பேர் தொலை நோக்கு காட்சி இழந்து விட்டார்கள். கர்த்தர் ஆபிரகாமிற்கு வாக்குக்கொடுத்த பூமி அவர்கள் கண்களுக்கு கெட்ட இடமாக தெரிந்தது. எகிப்திற்கு திரும்பி செல்லுவதே மேலானது என்ற முடிவு பிறந்தது. வருங்கால அட்டவணை இல்லாதவர்களுக்கு பின் வாங்கும் சிந்தனைகள் இருக்கின்றது.

புசிப்போம் குடிப்போம் நாளைக்கு சாவோம் என்றவர்களுக்கு இன்றைய தினமும் இனிதாக அமையவில்லை. நாளைய தினமும் விடியவில்லை. பின்வாங்கும் சிந்தனை கொண்டவர்கள் வனாந்தரத்தில் வாழ்க்கையை முடித்து கொண்டார்கள். கண்களை ஏறெடுத்து பார்க்காமல் வருங்காலங்களை வரவேற்க முடியாது. கர்த்தரின் மீது விசுவாசம் இல்லாமல் கர்த்தரை பின்பற்றவும் முடியாது. எபிரெயர் நிரூபம் 11-வது அதிகாரம் 6-வது வசனம், ''விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டு என்றும், அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்'' என்று கூறுகிறது. எபிரேயர் நிரூபம் 11-வது அதிகாரம் 1,2 ஆகிய வனங்கள். ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாய் இருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள். விசுவாச கண்கள் கொண்டு அன்று

ஆபிரகாம் கண்ட கானான் என்ற பூமிக்கு அவனுடைய சந்ததியார்கள் கால்களால் நடந்து செல்லுகின்றார்கள்''. எபிரெயர் நிரூபம் 11-வது அதிகாரம் 13-வது வசனத்தை பார்ப்போம். ''இவர்கள் எல்லாரும் வாக்குத்தத்தம் பண்ண பட்டவைகளை அடையாமல் தூரத்திலே அவைகளை கண்டு நம்பி அணைத்து கொண்டு பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள்''.

வருங்காலத்தை நடுவாக வைத்து எண்ணாகம புத்தகம் துவங்கியது. எண்ணாகம புத்தகம் முதல் 10 அதிகாரங்களில் வருங்காலத்தை நடுவாக வைத்து ஜனங்கள் அனைவரும் ஆயத்தம் ஆனார்கள். எண்ணாகம புத்தகத்தில் 36 அதிகாரங்கள் உண்டு. அதில் 10 அதிகாரங்கள் வாழ்க்கை பயணம் இனிதாக முடிய காத்திருக்கும் அதிகாரங்களாக மாறி விட்டன. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 40-வது அதிகாரம் 31-வது வசனம், ''கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புது பெலன் அடைந்து கழுகுகளை போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்பு அடையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள்'' என்று கூறுகின்றது.

கர்த்தர் காட்டும் பூமிக்கு செல்லுவதற்கு எண்ணாகம புத்தகம் முதல் 10 அதிகாரங்களிலும் கர்த்தர் வாழ்க்கையின் நடுவாக இருக்கும் அனுபவத்தை பெற்று கொண்டார்கள். அவர்கள் அனைவரது கூடாரங்களும் ஆசரிப்பு கூடாரத்தை நடுவாக கொண்டு நிறுத்த பட்டன.

அவர்களின் அன்றாட வாழ்வு ஆசரிப்பு கூடாரத்தில் இடம் பெறும் ஆராதனைகளை நடுவாக கொண்டு இடம் பெற்றது. கர்த்தர் அவர்கள் நடுவர் ஆனார். அவர்களை வருங்காலத்திற்கு உள்ளாக நடத்தியது மேக ஸ்தம்பமும் அக்கினி ஸ்தம்பமுமே ஆகும். தாங்களாக தங்களுக்கு வருங்காலங்களை தேடி கொள்ளவில்லை. கர்த்தருடைய தூதனானவர் வரும் காலங்களுக்கு அவர்களை அழைத்து சென்றார். அழைத்து சென்ற வழியில் அவர்கள் அக சோர்பும் கொண்டார்கள். அக மகிழ்வும் கொண்டார்கள், பாடுகள் மட்டுக்கு மிஞ்சிய பொழுது தொலை நோக்கும் காட்சி மங்கியது. பாடுகளுக்கு அப்பால் இருக்கும் இளைப்பாறும் இடத்தை காணாமல் பாய்களின் மேல் கண்களை பதித்தார்கள். ''இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை உள்ளவர்களாய் இருந்தால், எல்லா மனுஷரை பார்க்கிலும் பரிதபிக்க தக்கவர்களாய் இருப்போம்,'' என்று 1கொரிந்தியர் 15-வது அதிகாரம் 19-வது வசனம் கூறுகின்றது.

வருங்கால மகிமையை மறந்த நேரங்களில் ஜனங்கள் எகிப்திற்கு திரும்பி போவோம், நமக்கு என்று ஒரு தலைவனை தெரிந்து எடுப்போம் என்று கூறினார்கள். இம்மைக்கு உரியவைகளை பற்றி மட்டுமே பேசினார்கள். நாங்கள் முன்பு சாப்பிட்ட காய்கறிகள் எங்கே? உணவு வகைகள் எங்கே என்று மோசேயை பார்த்து கேட்டார்கள். தனக்கு கர்த்தர் கொடுத்த தூர தரிசனத்தை இழந்த நேரத்தில் மீரியாம் மோசே மீது பொறாமை கொண்டாள். பொறாமை பெருமை என்ற பாவங்கள் வருங்காலத்தின் மீது வாஞ்சை கொண்டவர்களின் வாழ்க்கை அட்டவணையில் காணப்படுவது இல்லை. மேலானவைகளை நாடுகின்றவர்கள் கீழானவைகளை குறித்து கவலை படுவதும் இல்லை. கோராகுவின் கண்களும் தொலை நோக்கு கண்களாக இல்லை. மோசே ஆரோன் என்பவர்களிடம் அவன் கூறிய அனைத்தும் இம்மைக்கு உரிய உயர்வுகளை பற்றியதே ஆகும். தாத்தான், அபிராம் என்றவர்களும் மோசேயின் தலைமையை உதாசீனம் செய்தார்கள். கானான் வெறுக்க பட்டது. விட்டு வந்த இடத்தின் நன்மைகள் நினைக்க பட்டது. கர்த்தரின் தூதன் வருங்காலத்தின் மேன்மைக்கு

நேராக வழி நடத்தும் பொழுது கீழ்படிந்து செல்ல வேண்டும். கீழ்படிதல் மறையும் பொழுது சிட்சைகள் வெளிப்பட்டன. எபிரெயர் நிரூபம் 12-வது அதிகாரம் 11 முதல் 13 வசனங்களில் ''எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய் காணாமல் துக்கமாய் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனை தரும். ஆகையினால் நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி முடமாய் இருக்கிறது பிசகி போகாமல் சொஸ்தமாகும்படிக்கு உங்கள் பாதங்களுக்கு வழிகளை செவ்வைப்படுத்துங்கள்'' என்று பார்க்கிறோம்.

இம்மைக்கு உரிய வாழ்வு தருவது பாவ சந்தோஷம். தூர காட்சி பெற்று கொண்ட பொழுது மோசே பாவம் தரும் சந்தோஷங்களை விட பரம சந்தோஷத்திற்கு தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தான். எபிரெயர் நிரூபம் 11-வது அதிகாரம் 24 முதல் 26 வசனங்கள், ''விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவன் ஆனபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதை பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாய் இருந்து எகிப்தில் உள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியம் என்று எண்ணினான்'' என்று கூறுகின்றன.

தரிசனம் பெற்றவர்களின் பிரயாணம் எண்ணாகம புத்தகத்தில் இடம்பெறுகின்றது. கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை பரிபூரணமாக ஏற்று கொண்டவர்களின் வழி பயணம் எண்ணாகம புத்தகத்தில் இடம் பெற்றது. பின்னானவைகளை மறப்பதற்கும் முன்னானவைகளை பார்ப்பதற்கும் அவர்கள் அழைக்க பட்டார்கள். அவர்கள் துல்லிபமாக பார்க்க முடியாதவைகளை பிலேயாம் மிகவும் துல்லிபமாக பார்த்து உரைத்தான். சர்வ வல்லவரின் தரிசனத்தை கண்டு உரைக்கிறேன் என்றான். அவரை காண்பேன். அவரை தரிசிப்பேன் என்றான். ஒரு நட்சத்திரம் யாக்கோபில் இருந்து உதிக்கும், ஒரு செங்கோல் எழும்பும் என்றான். அவை அனைத்தும் வருங்கால மேன்மைகளே ஆகும். வாக்குதத்த பூமிக்கும் அதிக தூரமானவைகளே ஆகும். கர்த்தராகிய இயேசுவை காட்டுவதே ஆகும்.

மனிதர்களை நாளைய தினங்களுக்கு எடுத்து செல்ல என் பின்னே வாருங்கள் என்று கர்த்தராகிய இயேசு அழைத்தார். இதயங்கள் ஆயத்தமாக இருந்தால் இயேசு ஆயத்தம் செய்து வைத்து இருக்கும் வாசஸ்தலம் இளைப்பாறும் ஸ்தலமாக மாறி விடும்.

எண்ணாகம புத்தகத்தின் யாத்திரை மிகவும் கடினமான யாத்திரையாகவே இருந்தது. ஆயினும் கர்த்தருடைய தூதனானவரின் சத்தத்திற்கு கீழ்படிந்தவர்களுக்கு கடினமான யாத்திரை மகிழ்ச்சியான யாத்திரையாக நிறைவு பெற்றது.

யோசுவா, காலேப், பினேகாஸ், செலோப்பியாத்தின் ஐந்து பிள்ளைகள் மற்றும் அநேகர் விசுவாச வீரர்களாக வெற்றியுடன் கடந்து சென்றார்கள். பாவத்தின் கட்டுகள் நீக்கப்பட்ட பின்னர் வாழ்வில் வரும் இக்கட்டுகள் அனைத்தும் வருங்கால மேன்மைக்காக மட்டுமே இடம் பெறுகின்றன. ரோமர் நிரூபம் 8-வது அதிகாரம் 28-வது வசனம், ''அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்க பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்து இருக்கிறோம்'' என்று கூறுகிறது. விசுவாச எட்டுக்கள் எடுத்து வைத்தவர்கள் அனைவரும் கானானில் பிரவேசித்தார்கள். தூர காட்சியை காத்து கொண்ட அனைவரும் கானானின் மாட்சியை

கண்டு மகிழ்ந்தார்கள்'' என்று கூறுகின்றது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 20-வது அதிகாரம் 22 முதல் 24 வசனங்களில் ''இப்பொழுது நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமிற்கு போகிறேன். அங்கே எனக்கு நேரிடும் காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறது என்று பரிசுத்த ஆவியானவர் பட்டணம் தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையும் குறித்து கவலைப்படேன். என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். என் ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்கவும் தேவனுடைய கிருபையின் சுவிஷேசத்தை பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்'' என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகின்றார். 2 தீமோத்தேயு 4:7,8 ஆகிய வசனங்களில் ''நல்ல போரரட்டத்தை போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தை காத்து கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டு இருக்கிறது. நீதி உள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்கு தந்தருளுவார். எனக்கு மாத்திரம் அல்ல. அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதை தந்தருளுவார்'' என்று பவுல் கூறுவதை பார்க்கிறோம்.

37.2 கர்த்தர் மனித வாழ்வில் அற்புத கிரியைகள் செய்கிறவராய் இருக்கிறார்

எண்ணாகம புத்தகத்தில் கர்த்தரின் அற்புத கிரியைகளை பார்க்கின்றோம். கர்த்தர் அற்புத கிரியைகள் செய்து ஜனங்களை கானான் என்ற பூமி காண செய்தார். விசுவாச வாழ்வினில் கர்த்தர் ஐந்து முறைகளில் அற்புதமாக கிரியை செய்கிறார் என்பதை எண்ணாகம புத்தகம் தெரிவிக்கின்றது.

கர்த்தருக்கு அடிமை என்று வாழ்க்கை ஒப்படைக்கப்பட்ட பின்னர் அசுத்தங்கள் அனைத்தும் அற்புதமாக அழிக்க படுகின்றன. எவ்வித இரண்டாம் சிந்தனையும் இன்றி பாவங்கள் மனதார வெறுக்க படுகின்றன. பாவ ஆசைகளுக்கு வடிவம் கொடுக்க படவில்லை. நல் விருப்பங்களால் இதயங்கள் நிறைந்து வழிகின்றன. அந்த உயர்ந்த அனுபவம் பெற்றவர்கள் அனைவரும் கானான் கண்டார்கள். பாவம் காணப்பட்ட நாட்களில் பிரயாணம் தடை பட்டது. பிரயாண நோக்கம் தடை பெறவில்லை. கால தாமதம் ஏற்பட்டது. ஆனால் காட்சி மங்கவில்லை. 38 வருடங்கள் வீண் போயின. ஆயினும் முடிவு பரியந்தம் நிலைத்து நின்றவர்கள் முன் ஏகினார்கள். தங்களில் பாவம் அழிக்க படுவதற்கு இடம் கொடுக்க மறுத்தவர்கள் அழிக்க பட்டார்கள். கர்த்தரின் அக்கினி, கர்த்தர் அனுப்பிய வாதைகள், பினேகாசின் ஈட்டி என்று பற்பல முறைகளில் தங்கள் பாவங்களை மறைத்தவர்கள் வாழ்வு அடையாமல் போனார்கள். அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் பாவத்தை வெறுக்க கால தாமதம் செய்தவர்கள் காணாமல் போனார்கள்.

கர்த்தர் செய்த இரண்டாவது கிரியை பாவத்தை முற்றிலுமாக வெறுத்து தள்ளியவர்கள் பரிசுத்தத்திற்கு மேல் பரிசுத்தம் அடைவதற்கு வாய்ப்பு கொடுத்தார். மன்னா, மேக ஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பம், உடன்படிக்கை பெட்டி, பிரதான ஆசாரியன் ஆகிய அனைத்தின் மூலமாகவும் கர்த்தரை அறியும் அறிவில் வளருவதற்கு வாய்ப்பு அருளினார். கொஞ்சத்தில் உண்மையாக இருந்தவர்களை அநேகத்தின் மேல் அதிகாரிகளாக வைத்தார். எலெயாசார் ஆரோனின் இடத்தை பெற்றார். யோசுவா மோசேயின் இடத்தை பெற்று கொண்டார். பினேகாஸ் சிறப்பு விருதுகளை பெற்று கொண்டார்.

கர்த்தரை உத்தமத்துடன் பின்பற்றியவர்கள் மீது ஆசீர்வாதத்திற்கு மேல் ஆசீர்வாதம் ஊற்றப்பட்டது. உத்தமமாய் என்னை பின்பற்றின காலேப் என்று கர்த்தர் கூறினார். நூனின் குமாரனாகிய யோசுவா என்று கர்த்தர் கூறினார். பினேகாசுடன் என் சமாதானத்தின் உடன்படிக்கை என்றார். செலோப்பியாத்தின் பிள்ளைகளின் இதயத்தில் பிறந்த நல் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறட்டும் என்று கட்டளை கொடுத்தார். வாழ்க்கை பிரயாணத்தில் தம்மை உத்தமமாக பின்பற்றிய அனைவர் வாழ்க்கையிலும் கர்த்தர் அற்புத கிரியைகள் செய்தார். 2 நாளாகம புத்தகம் 16-வது அதிகாரம் 9-வது வசனத்தின் முன் பாகம், ''தம்மை பற்றி உத்தம இருதயத்தோடு இருக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமி எங்கும் உலாவி கொண்டு இருக்கிறது'' என்று கூறுகின்றது.

கர்த்தரின் மூன்றாவது கிரியை எண்ணாகம புத்தகத்தில் கொடுக்க படுகின்றது. திட்டவட்டமான ஒழுங்கு முறைக்குள் தம்மை விசுவாசிக்கின்றவர்களை கர்த்தர் வழி நடத்துவதே கர்த்தர் செய்த மூன்றாவது அற்புத கிரியை ஆகும். யாக்கோபே, உன் கூடாரங்களும் இஸ்ரவேலே உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள் என்று பிலேயாம் சாட்சி கூறினான். கர்த்தர் உயர்ந்த ஒழுக்க நெறிகளை தம்மை பின்பற்றிய ஜனங்களுக்கு கற்று கொடுத்தார். பரிசுத்தம் நிலவும் இடங்களில் சுத்தமும் காணப்பட்டது. உபாகம புத்தகம் 23-வது அதிகாரம் 14-வது வசனம், ''உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும் உன் சத்துருக்களை உனக்கு ஒப்பு கொடுக்கவும் உன் பாளயத்திற்குள்ளே உலாவி கொண்டு இருக்கிறார். ஆகையால் அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தை கண்டு உன்னை விட்டு போகாதபடிக்கு உன் பாளயம் சுத்தமாய் இருக்க கடவது'' என்று கூறுகின்றது.

பரிசுத்தராகிய கர்த்தரின் பின்னாக சென்ற ஜனம் சகல ஒழுக்கத்தையும் ஏற்று கொண்டு கிரமமாக சென்றார்கள். அதிகாலையில் அவர்கள் எழும்பி தீர வேண்டும். துரிதமாக எழும்பியவர்கள் மட்டுமே மன்னாவை பெற்று கொண்டார்கள். ஆராதனை கூடம் நோக்கி பலி செலுத்த வந்த நேரங்களில் முழு ஆயத்தத்துடன் வந்தார்கள். மேக ஸ்தம்பம் மேலாக எழும்பும் நேரத்தில் பிரயாணம் துவங்க வேண்டும். கர்த்தர் காட்டும் இடங்களில் மட்டுமே தங்கி இளைப்பாற வேண்டும். பிரதான ஆசாரியன், ஆசாரியன், லேவியர் அனைவருக்கும் உரிய வேலைகளும் ஒழுங்குகளும் அவர்களுடைய வேலை நியமன கடிதத்தில் கொடுக்கப்பட்டது.

எந்த வயதில் பொறுப்பு எடுக்க வேண்டும், எந்த வயதில் ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் குறித்து காட்டப்பட்டது. வெறுமையான வாழ்வுகளை கர்த்தர் நிரப்பி சென்றார். ஒழுங்கும் கிரமமும் இல்லாத வாழ்வுகளை கர்த்தர் நிரப்பி சென்றார். வாக்குத்தத்த பூமி நோக்கி நடந்தவர்களுக்குள் எவ்வித குழப்பமும் வரவில்லை. தகவல்கள் எதுவும் கிடைப்பதற்கு தாமதப்படவில்லை. கட்டுப்பாடுகள் அற்புதமாக இருந்தன. கர்த்தரின் கிரியை அற்புதமானது. உபாகம புத்தகம் 2-வது அதிகாரம் 7-வது வசனம், ''உன் தேவனாகிய கர்த்தர் உன் கை கிரியைகளில் எல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார். இந்த பெரிய வனாந்தர வழியாய் நீ நடந்து வருகிறதை அறிவார். இந்த நாற்பது வருஷமும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருந்தார். உனக்கு ஒன்றும் குறைவு படவில்லை என்று சொல் என்றார்'' என்பதை கூறுகின்றது. உபாகம புத்தகம் 8-வது அதிகாரம் 4-வது வசனம், ''இந்த நாற்பது

வருஷமும் உன்மேல் இருந்த வஸ்திரம் பழையதாய் போகவும் இல்லை. உன் கால் வீங்கவும் இல்லை'' என்று எடுத்து காட்டுகிறது.

அற்புதமாக கர்த்தர் செய்த நான்காவது கிரியை வழி நடந்து சென்ற அவர்களுக்கு திட்டவட்டமான வழி நடத்துதல்களை கொடுத்தார். கர்த்தரின் கட்டளையை மீறி அவர்கள் ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆதியாகம புத்தகம் 17-வது அதிகாரம் 8-வது வசனத்தில் கர்த்தர் அன்று ஆபிரகாமிற்கு கொடுத்த வாக்குத்தத்திற்கு நேராக அவர்களை வழி நடத்தி சென்றார். வழியில் பலர் நின்று விட்டார்கள். அவரை உத்தமமாக பின்பற்றியவர்களுக்கு கர்த்தரின் வழி நடத்துதல்கள் நின்று விடவில்லை. கானான் சென்ற பன்னிருவரில் பத்து பேர் வழி நடக்க வேண்டாம் என்றாலும் வழி நடத்திய கர்த்தரின் கட்டளை மாறவில்லை. பிலேயாமிற்கு கூலி பேசி பாலாக் முயற்சி செய்தாலும் கர்த்தரின் வழி நடத்துதல்கள் பிலேயாமின் வாயில் வந்தன. பற்பல அரசர்கள் எதிர் கொண்டு வந்தாலும் வாசல்கள் கதவை திறந்தன. அநாதி கதவுகளின் நிலைகள் உயர்ந்தன. மகிமையின் அரசனாக யாவே என்ற யேகோவா வழி நடத்தினார்.

முன்பின் தெரியாத வனாந்தர பாதையில் கர்த்தர் மேய்ப்பராக இருந்து புல்லும் நீரும் இருக்கும் இடம் வழியாக நடத்தினார். அவர்களை சந்திக்க புறப்பட்டு வந்த சத்துருக்களை விருந்தாக மாற்றி வழி நடத்தினார். நன்மையும் கிருபையும் அவரது வழி நடத்துதலுக்கு தங்களை ஒப்படைத்தவர்களை நித்தமும் பின்பற்றியது. வழுவாதபடி வழி நடத்தினார். முடிவு பரியந்தம் வழி நடத்தினார். எபிரெயர் நிரூபம் 7-வது அதிகாரம் 25-வது வசனம். மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடு இருக்கிறவராகையால் அவர்கள் முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயும் இருக்கிறார்.

எண்ணாகம புத்தகத்தில் கர்த்தர் பாராட்டிய ஐந்தாவது அற்புத கிரியை மனம் உடைந்தவர்களை மன்னித்து வாழ வைத்தது ஆகும். ஆரோனும் மீரியாமும் அத்து மீறி தவறு செய்தார்கள். மோசேக்கு முன் வந்து முறை தவறி பேசினார்கள். கர்த்தரின் பார்வையில் தவறு செய்தோம் என்று உணர்ந்தார்கள். கர்த்தர் அவர்களை அழித்து விடவில்லை. பிரதான ஆசாரியன் பதவியை பறித்து விடவில்லை. அவர்கள் இருவரையும் கர்த்தர் மன்னித்து வாழ வைத்தார். 86-வது சங்கீதம் 5-வது வசனம் கூறுவதாவது, ஆண்டவரே நீர் நல்லவரும் மன்னிக்கிறவரும் உம்மை நோக்கி கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாய் இருக்கிறீர் என்பதாகும்.

மனம் வருந்தி வருகிறவர்கள் அனைவருக்கும் மன்னிப்பு உண்டு என்பதற்கு ஏற்ப பலிகள் அனைத்தையும் கர்த்தர் ஆயத்தம் செய்து கொடுத்தார். அளவுக்கு மீறி ஜனங்கள் பாவம் செய்த நேரத்தில் கர்த்தரின் கோபம் பொங்கியது. தேவ நியாயத்தீர்ப்பு நெருங்கியது. அந்த தருணத்திலும் கூட மோசேயின் கெஞ்சுதலை கேட்டு கர்த்தர் மன்னித்தார். எண்ணாகம புத்தகம் 14-வது அதிகாரம் 17 முதல் 20 வசனங்கள், ''ஆகையால் கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர் என்றும் அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும் குற்றம் உள்ளவர்களை குற்றமற்றவர்களாக விடாமல் பிதாக்கள் செய்த அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர் என்றும் நீர் சொல்லி இருக்கிறபடியே உன் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக. உமது கிருபையினுடைய மகத்துவத்தின்படியேயும் எகிப்தை விட்டது முதல் இந்நாள் வரைக்கும்

இந்த ஜனங்களுக்கு மன்னித்து வந்ததின்படியேயும் இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும் என்றான். அப்பொழுது கர்த்தர் உன் வார்த்தையின்படியே மன்னித்தேன் என்றார்'' என்பதை கூறுகின்றன.

அற்புத கிரியைகள் செய்து கர்த்தர் தம்மை விசுவாசிக்கின்ற ஜனங்களை நடத்தினார். முடிவு பரியந்தம் நடத்தினார். இரக்கமும் அன்பும் கொண்டு நடத்தினார். தம்மை விசுவாசிக்கின்றவர்களை கர்த்தர் நேசிக்கின்றார். பாவத்தை வெறுக்கிறவராகவும், பாவம் செய்கிறவர்களை நேசிக்கின்றவராகவும் கர்த்தர் இருக்கிறார். தம்மை நோக்கி வந்தவர்களை கர்த்தர் சேர்த்துக்கொண்டார். எவரையும் கர்த்தர் இகழ்ந்தது இல்லை. கானான் கண்டு அடைந்ததற்கு காரணம் மோசேயின் சாமர்த்தியம் அல்ல. ஜனங்களின் சாதுரியமும் அல்ல. கர்த்தரின் மகா இரக்கமே ஆகும்.

37.3 எண்ணாகம புத்தகம் தந்த ஆசீர்வாதங்களை அலட்சியம் செய்தவர்கள் யார்?

பத்து வேவுகாரர்கள்

எண்ணாகம புத்தகம் தந்த ஆசீர்வாதங்களை அலட்சியம் செய்தவர்கள் யார் யார் என்பதை இங்கு பார்ப்போம். கானானை உளவு பார்க்க சென்ற 10 நபர்கள்: ஆசீர்வாதமான இடத்தை கண்ணால் கண்டும், அலட்சியம் செய்த பத்து நபர்கள் எண்ணாகம புத்தகத்தில் உண்டு. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் வம்சத்தில் வந்தவர்களுக்கு நிறைவும் செழிப்பும் நிறைந்த பூமி கர்த்தரால் கொடுக்க பட்டது. ஆதியாகம புத்தகம் 17-வது அதிகாரம் 8-வது வசனத்தில் ''நீ பரதேசியாய் தங்கி வருகிற கானான் தேசம் முழுவதையும் உனக்கும் உன் பின்வரும் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாக கொடுத்து நான் அவர்களுக்கு தேவனாய் இருப்பேன் என்றார்'' என்று பார்க்கிறோம்.

அவர்களுக்கு பின் வரும் சந்ததி எழும்பியது. கர்த்தர் அருளிய வாக்கு நிறைவேறும் வேளையும் வந்தது. கானான் பூமி கை எட்டும் தூரம் வந்தார்கள். யாக்கோபின் பிள்ளைகள் பன்னிரெண்டு பேர் ஆகும். ஒவ்வொரு பிள்ளையின் குடும்பத்தின் சார்பில் ஒரு நபர் தெரிந்து எடுக்க பட்டார். மிகவும் தொலைவில் இருந்து மனைவி பிள்ளைகளுடன் கர்த்தரின் வழி நடத்துதலின்படி வளமும் செழிப்பும் உள்ள பூமி அருகில் நெருங்கி வந்து விட்டோம். பன்னிரெண்டு கோத்திரங்கள் சார்பில் பன்னிரெண்டு நபர்களை தெரிந்து எடுத்து வாழ போகும் பூமியை பார்த்து வர சொல்லுவோம் என்ற முடிவிற்குள் வந்தார்கள். யூதா கோத்திரத்தின் சார்பில் சென்ற காலேப் என்பாரும் எப்பிராயீம் கோத்திரத்தை சேர்ந்த யோசுவா என்ற இருவரும் சென்று வந்த இடம் கர்த்தர் தந்த இடம் என்று கூறினார்கள். மற்ற பத்து கோத்திரத்தின் பிரதிநிதிகளும் அதனை மறுத்து விட்டார்கள். ஒருமித்து பேசவில்லை. கர்த்தருடைய நாமம் ஒருமித்து உயர்த்தப்படவும் இல்லை.

பத்து பேர் அறிவை பயன்படுத்தினார்கள். இரண்டு பேர் விசுவாசம் என்ற கேடயத்தை கையில் எடுத்து கொண்டார்கள். பத்து பேர் பயம் தரும் செய்திகளை பரப்பினார்கள். இரண்டு பேர் நம்பிக்கை ஊட்டும் தகவல்களை தந்தார்கள். பத்து பேர் பின் நோக்கி பார்த்தார்கள். இரண்டே இரண்டு பேர் முன் நோக்கி பார்த்தார்கள்.

பத்து நபர்களின் செய்தி துர்ச்செய்தி ஆனது. இரண்டே இரண்டு பேர் செய்தி நற்செய்தி ஆனது. பெரும்பான்மையான மக்கள் துர்ச்செய்திக்கு துணை நின்றார்கள். மோசே ஆரோன்

என்பவர்களும் மாசு மறு அற்ற குழந்தைகளும் பாலகர்களும் நற்செய்திக்கு துணை நின்றார்கள். அறிவிலும் அனுபவத்திலும் சிறந்தவர்களுக்கு கர்த்தர் ஆபிரகாமிற்கு கொடுத்த வாக்குத்தத்தம் அறிவில் பதியவில்லை. விசுவாசத்தில் உறுதியாக இருந்த இரண்டே இரண்டு பேரின் இதயத்தில் பதிந்தது. கர்த்தரின் ஆசீர்வாதங்களை அறிவு அலட்சியம் செய்தது. விசுவாசம் இரு கை ஏந்தி வாங்கி கொண்டது. கானான் சென்று உலாவி வந்த பத்து பேர் யோர்தானின் ஓரம் உலாவவில்லை. யோர்தானை தாண்டவும் இல்லை. கானான் சுதந்தரிக்கப்படவில்லை. ஆதலால் அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்க கூடாமல் போனார்கள் என்று எபிரெயர் நிரூபம் 3-வது அதிகாரம் 19-வது வசனம் கூறுகின்றது.

கோராகு

எண்ணாகம புத்தகம் தரும் ஆசீர்வாதங்களை அலட்சியம் செய்த அடுத்த நபர் கோராகு என்பவன் ஆவான். கர்த்தரால் வரும் நன்மைகளை துட்சமாக நினைத்தவர்களில் ஒருவன் கோராகு ஆகும். மோசே ஆரோன் என்பவர்களின் தகப்பனாகிய அம்ராம் என்பவரின் உடன் சகோதரனுக்கு பிறந்தவன் கோராகு. யாத்திராகம புத்தகம் 6-வது அதிகாரம் 21-வது வசனத்திலும், எண்ணாகம புத்தகம் 16-வது அதிகாரம் முதல் வசனத்திலும் கோராகுவின் உதயம் கூறப்பட்டு உள்ளது. மோசேயின் மாமன். மோசேயை விட வயதில் மூத்தவன். மோசேயினால் மதிக்க பட்டவன். கர்த்தரை அவமதித்தவன். கானானை அலட்சியம் செய்தான். ஆசரிப்பு கூடார வேலையில் ஆரோனுக்கு அடுத்த நிலையில் இருந்தான். ஆரோனின் நிலைக்கு வந்துவிட வேண்டும் என்று விரும்பினான். பரிசுத்தத்திற்கு மேல் பரிசுத்தம் பெற்று கொள்ள கர்த்தரை கோராகு பின்பற்ற வில்லை. பதவிக்கு மேல் பதவிகளை கைப்பற்ற கர்த்தரை பின்பற்றினான். தாழ்மையின் பள்ளத்தாக்கில் பிரியப்படவில்லை. பெருமையின் சிகரத்தில் குடியேறினான். அவன் பெற்ற பணி மிகவும் மேலான பணி. அவனது தகுதிக்கும் மிஞ்சிய பணி என்பது எண்ணாகம புத்தகம் 4-வது அதிகாரம் 1 முதல் 20 வசனங்களில் தரப்பட்டது. அவனோ மோசேயை மிஞ்சி பேசுகிறாய் என்று குற்றம் சாட்டினான். பெருமை என்ற செதிள்கள் கண்களை மூடும் பொழுது கண்முன் திறந்து நிற்கும் பாதாளம் தெரிவது இல்லை. கோராகுவின் தரிசனம் கானான் பூமி அல்ல. ஆரோனின் நாற்காலியே ஆகும். ஆபிரகாம் பெற்ற வாக்குதத்தம் வசீகரிக்கவில்லை. ஆரோன் உடுத்தியிருந்த வஸ்திரம் வசீகரித்தது.

யோசேப்பின் பலவர்ண அங்கி உடன் பிறந்தவர் அன்பை மங்க செய்தது. ஆரோனின் அழகிய வஸ்திரம் மாமனின் மனதை கசப்பாக்கியது. பெற்று கொண்டதில் திருப்தி இல்லாதவர்கள் பெற்று கொள்ளப்போவது ஒன்றும் இல்லை. பெற்ற பதவியை சட்டை செய்யாத கோராகு கர்த்தரின் சாபத்தை நிறைவாக பெற்றான். இருக்கும் நன்மைகளுக்கு கர்த்தரை துதிக்கும் இதயம் இல்லாதவர் இருப்பவைகளையும் இழந்து போவார்கள். கோராகு அனைத்தையும் இழந்தான். அவன் பெற்ற பிள்ளைகள் கூட அவனை இழந்தார்கள். கர்த்தரும் அவனை இகழ்ந்தார். கர்த்தரால் இருமாப்பு புகழப்படுவது அல்ல. இகழப்படுவதே ஆகும்.

கர்த்தர் தந்த பொறுப்பில் கருத்து பதிக்காதவன் கையில் தங்குவது ஒன்றுமே இல்லை. உள்ளவன் எவனோ அவனுக்கு கொடுக்கப்படும். பரிபூரணமும் அடைவான். இல்லாதவன் இடத்தில் இருந்து உள்ளதும் எடுத்து கொள்ளப்படும். கோராகு அழைக்கப்பட்ட அழைப்பில் நிலைத்து நிற்கவில்லை. அழைப்பில் அமைதி பெறாத மனிதனின் உயிரை பாதாளம் அழைத்து கொண்டது. ஊழியத்திற்கு உதவியாக இருக்க பதவிகள் கொடுக்கப்படுகின்றன.

பதவிகளை கைப்பற்ற ஊழியம் கொடுக்கப்படவில்லை என்பதை பாதாளம் படித்துக்காட்டியது. கானான் காண வேண்டியவன் பாதாளம் கண்டான்.

தாத்தான், அபிராம்

எண்ணாகம புத்தகம் தந்த ஆசீர்வாதங்களை அலட்சியம் செய்த மற்றும் இரு நபர்கள். தாத்தான், அபிராம் என்பவர்கள் ஆகும். தாத்தான் என்பவரும் வனாந்தர பிரயாணத்தில் தோற்று போனவர்களில் ஒருவன் ஆகும். கோராகு ஆசரிப்பு கூடாரத்து பணிகளில் ஆசை கொண்டான். தாத்தான் நிர்வாக பொறுப்புகளில் பிரியம் கொண்டான். மூத்து பிறந்த ரூபன் குடும்பத்தில் பிறந்து விட்டதினால் வயதின் அடிப்படையில் சிந்திக்க தொடங்கினான். கர்த்தர் தரும் உயர்வுகள் வயதின் அடிப்படையில் அல்ல. வாழ்க்கையில் பெறும் தூய்மையின் அடிப்படையில் அமைகின்றது. ஏலி என்ற பெரியவருக்கு சாமுவேல் என்ற சிறியவன் கர்த்தர் கூறும் செய்திகளை எடுத்து கூறுகின்றான். சவுல் என்ற பெரியவருக்கு தாவீது என்ற சிறியவன் பிசாசு விரட்டுகின்றான். கர்த்தரின் பார்வையில் பெரியர் சிறியவர் என்று அல்ல. தூயவர் என்பதே முதல் இடம் பெறுகின்றது. முட்செடியின் தரிசனம் பெற்ற மோசே தாத்தானைவிட வயதில் சிறியவனாக இருந்தாலும் தரிசனத்தில் பெரியவனாக இருந்தான்.

தாத்தானின் கண்கள் பதவியை ஏறெடுத்து பார்த்தன. மோசேயின் கண்கள் கானானை ஏறெடுத்து பார்த்தன. எங்கள் கண்களை நீ பிடுங்க பார்க்கின்றாய் என்று தாத்தான் மோசேயை குற்றம் சாட்டினான். அதை கேட்டு பூமியே நடுங்கியது. தன் தகப்பன் ரூபனின் சார்பில் நின்றவன் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபின் சார்பில் சென்று கொண்டு இருக்கும் மோசேயை புரிந்து கொள்ளவில்லை. குடும்ப பாசம் குறுக்கிடும் வேளைகளில் கர்த்தருடைய வேலைகள் பாதிக்க படுகின்றன. தாத்தானுடன் கூட்டு சேர்ந்தவர் அபிராம் என்பவர் ஆவார். அவர் தாத்தானின் சகோதரன் ஆகும். அண்ணண் செய்வது தவறு என்று அறிந்தும் கூட்டு சேர்ந்து கொண்டான். தாத்தான் அபிராம் இருவரும் இருமாப்பு கொண்டார்கள். மோசேயின் தலைமையை புறக்கணித்து விட்டார்கள். மோசே கூப்பிட்டும் வரமாட்டோம் என்றார்கள்.

எண்ணாகம புத்தகம் 10-வது அதிகாரத்தில் மோசே தன் மனைவியின் சகோதரனான ஓபாவை கூப்பிட்டான். நீ எங்களோடே வா. உனக்கு நன்மை செய்வோம் என்று ஓபாவை கூப்பிட்டான். மோசேயின் அழைப்பை ஓபா ஏற்று கொண்டான். தாத்தான் அபிராம் என்றவர்கள் மோசேயின் அழைப்பை ஏற்று கொள்ளவில்லை. மோசேயின் அழைப்பு நன்மை தரும் அழைப்பு. கானானை காண செய்யும் அழைப்பு. பரலோக அழைப்பை அலட்சியம் செய்தவருக்கு பாதாளம் முன் வந்து அழைப்பு அனுப்பியது. 106-வது சங்கீதம் 17-வது வசனம், ''பூமி பிளந்து தாத்தானை விழுங்கி அபிராமின் கூட்டத்தை மூடிப்போட்டது'' என்று கூறுகின்றது.

சிம்ரி

எண்ணாகம புத்தகம் அளித்த ஆசீர்வாதங்களை அலட்சியம் செய்த அடுத்த நபர் சிம்ரி என்பவன் ஆகும். யோர்தான் வரை நடந்து வந்தான். ஆயினும் விபசாரம் செய்வதற்கு ஒரு மோவாபிய பெண்ணுடன் நடந்து சென்று விட்டான். மோசே மற்றும் அனைவரும் அழுது ஜெபம் செய்து கொண்டு இருக்கும் வேளையில் அனைவர் பார்வைக்கும் முன்பாக துணிந்து சென்றான். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியார்களை விலக்கி காத்து கொள்ளும் என்று ஜெபித்து கொண்டு இருந்தவர்கள் முன்பாக அவன் துணிந்து நடந்தான்.

சிம்ரி ஒரு சாதாரண மனிதன் அல்ல. சிமியோன் கோத்திரத்தில் மிகவும் பெரியவன். செல்வமும் சிறப்பும் பெற்றவன். பிரபுக்கள் வரிசையை சேர்ந்தவன். இதயத்தில் மிகவும் சிறியவன். கர்த்தர் சிநேகிக்கும் பரிசுத்தத்தை சிநேகிக்காதவன். கர்த்தர் காட்டும் பாதையை புறக்கணித்தவன். கர்த்தர் அவனை புறக்கணித்தார். பாவம் அவனுக்கு தந்த இன்பம் சாவில் முடிந்தது. பாவத்தின் சம்பளம் மரணம் ஆயிற்று. சிம்ரி கானான் காணவில்லை.

அவிசுவாசம் இலக்கை இழக்க செய்கிறது

அவிசுவாசத்தினால் பன்னிருவர்களில் பத்துபேர் பிரவேசிக்கவில்லை. பதவி ஆசையினால் கோராகு தாத்தான் அபிராம் என்றவர்கள் கானான் காணவில்லை. இச்சை இதயத்தை கவர்ந்ததினால் கானானின் மகிமையை சிம்ரியும் காணவில்லை. ஆசை இச்சை அவிசுவாசம் கொண்டவர்கள் கண்டது சாபமே ஆகும்.

யோசுவாவும் காலேபும் மன்றாடி கேட்டும் மற்ற பத்து நபர்கள் மனம் மாறவில்லை. மோசேயின் அன்பான அழைப்பு வந்தும் கோராகுவின் கூட்டத்தார் எழும்பி வரவில்லை. கர்த்தரின் ஜனம் மிகவும் கண்ணீரோடு ஜெபித்து கொண்டு இருப்பதை கண்ணால் கண்டும் சிம்ரியின் மனம் திருந்தவில்லை. நிறைவும் செழிப்புமான பூமி அனைவருக்கும் காத்து கொண்டு இருந்தது. தூய்மை, உண்மை, தாழ்மை கொண்டு வாழ்ந்தவர்கள் விரைந்து சென்றார்கள். மற்றவர்கள் மறைந்து போனார்கள். எடுக்கும் தீர்மானங்களை பொறுத்து வாழ்வில் சிறப்பும் சீரழிவும் அமைகின்றது. நீதிமொழிகளின் புத்தகம் 6-வது அதிகாரம் 20 முதல் 24 வசனங்கள், ''என் மகனே உன் தகப்பன் கற்பனையை காத்துக்கொள். உன் தாயின் போதகத்தை தள்ளாதே. அவைகளை எப்பொழுதும் உன் இருதத்திலே அணிந்து அவைகளை உன் கழுத்திலே கட்டி கொள். நீ நடக்கும் போது அது உனக்கு வழி காட்டும். நீ படுக்கும் போது அது உன்னை காப்பாற்றும். நீ விழிக்கும் போது அது உன்னோடே சம்பாஷிக்கும். கட்டளையே விளக்கு. வேதமே வெளிச்சம். போதக சிட்சையே ஜீவ வழி. அது உன்னை துன்மார்க்க ஸ்திரீக்கும் இச்சகம் பேசும் நாவு உடைய பர ஸ்திரீக்கும் விலக்கி காக்கும்'' என்று அறிவு புகட்டுகின்றன.

1கொரிந்தியர் 9-வது அதிகாரம் 25-வது வசனத்தில் ''பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சை அடக்கமாய் இருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தை பெறும்படிக்கு அப்படி செய்கிறார்கள். நாமோ அழிவு இல்லாத கிரீடத்தை பெறும்படிக்கு அப்படி செய்கிறோம்'' என்று பார்க்கிறோம்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய்
வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாண
வரிசைகளாய் புறப்பட்டார்கள்.....

அவர்கள் பிரயாணம் பண்ணி,
எரிகோவின் கிட்ட இருக்கும்
யோர்தானுக்கு இக்கரையிலே
மோவாபின் சமனான வெளிகளில்
பாளயமிறங்கினார்கள்.

(எண். 12:10; எண். 22:10)

Contact Address:

Kairos Multimedia Private Limited,
49C, Bryant Nagar,1st Street,
Tuticorin - 628 008,
Tamil Nadu, India.
Phone No. 0461-4002913, 94444-80250
Email: kairosmultimedia.india@gmail.com

Price Rs.500/-